வெளியீடு—24—3—1973]
Issued—24—3—1973]

தமிழ்நாடு சட்டப் பேரவை நடவடிக்கைகள்
TAMIL NADU LEGISLATIVE ASSEMBLY DEBATES

# பணித்துறை வெளியீடு
## OFFICIAL REPORT

சனிக்கிழமை 1973 பிப்ரவரி 3
**Saturday 3rd February 1973**

தொகுதி XXX—எண் 1
**Volume XXX—No. 1**

©
தமிழ் நாடு அரசு
1973
GOVERNMENT OF TAMIL NADU
1973

சட்டப் பேரவைத் துறை
சென்னை-9.
*Legislative Assembly Department*
*Fort St. George, Madras-9*

விலை 50 காசுகள்]
PRICE 50 PAISE]

61590

# Tamil Nadu Legislative Assembly Debates

SEVENTH SESSION OF THE FIFTH LEGISLATIVE ASSEMBLY UNDER THE CONSTITUTION OF INDIA

*3rd, 5th to 8th February* 1973.

VOLUME XXX (Nos. 1 TO 5).

TABLE OF CONTENTS.

*Saturday, 3rd February* 1973.


| | PAGES |
|---|---|
| Personnel of the Government of Tamil Nadu ... | i–iv |
| Principal Officers of the Tamil Nadu Legislative Assembly ... ... ... ... ... | vi |
| List of the Members of the Tamil Nadu Legislative Assembly with their Constituencies ... ... | ix–xvi |
| 1. Obituary references— | |
| Thiru M. Sadayan, Thirumathi V. Lakshmi Ammal and Thiru T. S. Arunachalam, ex-M.L.A's ... ... ... ... ... | 1–2 |
| 2. Condolence Resolutions— | |
| (i) Demise of Thiru C. Rajagopalachari ... | |
| (ii) Demise of Thiru P. Gopal, M.L.A. ... | 2–43 |
| 3. Papers laid on the Table ... ... ... ... | 43–47 |

*Monday, 5th February* 1973.


| | PAGES |
|---|---|
| 1. Questions and Answers ... ... ... ... | 49–78 |
| 2. Announcements— | |
| (i) Walk-out by certain Members before the Governor's Address on 2nd February 1973 ... ... ... ... ... | 78–79 |
| (ii) Business of the House ... ... ... | 79 |
| (iii) Non-Consideration of Adjournment Motions | 80 |
| (iv) Panel of Chairmen ... ... ... ... | 80 |
| 3. Point of Order— | |
| Resolution for removal of Deputy Speaker ... | 80–90 |
| 4. Resolution for the removal of the Deputy Speaker from his office ... ... ... | 91–198 |
| 5. Papers laid on the Table ... ... ... ... | 198–199 |


*Tuesday, 6th February* 1973.


| | |
|---|---|
| 1. Questions and Answers ... ... ... ... | 207–240 |
| 2. Privilege Matters— | |
| (i) Walk-out by certain Members before the Governor's Address ... ... ... | 240–250 |
| (ii) Reported remarks of Thiru M. G. Ramachandran, M.L.A. that the 'House is dead' ... ... ... ... ... | 250–266 |
| 3. Adjournment Motion— | |
| Rise in price of yarn in Thiruppur, Coimbatore and Salem and the consequent hardship to weavers ... ... ... ... ... | 267–280 |
| 4. Minister's Statement— | |
| Correction to an answer given on 21st August 1972 by the Hon. Minister for Harijan Welfare ... ... ... ... ... | 281 |




*Tuesday, 7th February 1973—cont.*


| | PAGES |
|---|---|
| 5. Point of Order— | |
| Admission of amendments to be moved on the day of moving the motion of Thanks to Governor's Address ... ... ... ... | 282–283 |
| 6. Discussion on the Governor's Address—*cont.* ... | 283–329 |
| 7. Papers laid on the Table ... ... ... ... | 330 |


*Wednesday, 7th February* 1973.


| | |
|---|---|
| 1. Obituary reference— | |
| Thiru P. V. Sriramulu, Ex-M.L.A. ... ... | 355 |
| 2. Questions and Answers ... ... ... ... | 355–397 |
| 3. Adjournment Motion— | |
| Serious situation arising due to power cut ... | 397–426 |
| 4. Presentation of Report— | |
| Report on the action taken on the recommendation of the Estimates Committee on 'Information and Publicity Department' ... | 427 |
| 5. Discussion on the Governor's Address—*cont.* ... | 427–489 |
| 6. Papers laid on the Table ... ... ... ... | 489–490 |


*Thursday, 8th February* 1973.


| | |
|---|---|
| 1. Questions and Answers ... ... ... ... | 497–524 |
| 2. Adjournment Motion— | |
| Closure of WIMCO Match Factory causing hardship to workers ... ... ... ... | 524–526 |
| 3. Presentation of Report— | |
| Report on the action taken on the recommendations of the Estimates Committee on 'Agriculture Department' ... ... ... | |

**6. மாண்புமிகு திரு ப. உ. சண்முகம் (வருவாய்த் துறை அமைச்சர்)** கீழ்க்கண்ட துறைகளுக்குப் பொறுப்பு வகிப்பார் :— வருவாய், வருவாய்த் துறை வாரியம், மாவட்ட வருவாய் நிறுவனங்கள், மாவட்டத் துணை ஆட்சித் தலைவர்கள், வணிக வரிகள், மதுவிலக்கு, ஆயத்தீர்வை.

**7. மாண்புமிகு திரு. செ. மாதவன் (தொழில் துறை அமைச்சர்)** கீழ்க்கண்ட துறைகளுக்குப் பொறுப்பு வகிப்பார் :— தொழில்கள், ஆலைத்துணிகள், நூல், கைத்தறி, சுரங்கங்கள், கனிப்பொருள்கள், இரும்பு-உருக்குக் கட்டுப்பாடு, வேலை வாய்ப்பும்-பயிற்சியளித்தலும், கம்பெனிகள், சட்டம், நீதி மன்றங்கள், சிறைச்சாலைகள்.

**8. மாண்புமிகு திரு. எஸ். ஜே. சாதிக் பாட்சா (பொதுப் பணித் துறை அமைச்சர்)** கீழ்க்கண்ட துறைகளுக்குப் பொறுப்பு வகிப்பார் :—பொதுப்பணிகள், சிறு பாசனச் சிறப்புத் திட்டங்கள் உள்பட சிறுபாசனம், நெடுஞ்சாலைகள், முகம்மதியர் அறக் கட்டளைகள்.

**9. மாண்புமிகு திரு. சி. பா. ஆதித்தனார் (கூட்டுறவுத் துறை அமைச்சர்)** கீழ்க்கண்ட துறைகளுக்குப் பொறுப்பு வகிப்பார் :— கூட்டுறவு, துறைமுகங்கள், வேளாண்மை மறுநிதி உதவி, மண்வளப் பாதுகாப்புத் திட்டங்கள் நீங்கலாக வேளாண்மை இயக்கத்தின் வேளாண்மைப் பொறியியற் பிரிவு, பயண அனுமதிச் சீட்டுகள், சரக்குகளின் விலைகள்-வழங்கல் குறித்த சட்டம்.

**10. மாண்புமிகு திரு. அ. பெ. தர்மலிங்கம் (வேளாண்மைத் துறை அமைச்சர்)** கீழ்க்கண்ட துறைகளுக்குப் பொறுப்பு வகிப்பார் :—

**11. மாண்புமிகு திரு. மன்னை ப. நாராயணசாமி (உணவுத் துறை அமைச்சர்)** கீழ்க்கண்ட துறைகளுக்குப் பொறுப்பு வகிப்பார் :—உணவு, உணவு உற்பத்தி, கதர்-கிராமத் தொழில்கள், கிராமத் தொழில்கள் திட்டம்.

**12 மாண்புமிகு திரு. க. இராசாராம் (பின்தங்கிய வகுப்பினர் நலத் துறை அமைச்சர்)** கீழ்க்கண்ட துறைகளுக்குப் பொறுப்பு வகிப்பார் :—பின்தங்கிய வகுப்பினர் நலன், சுற்றுலா, வீட்டு வசதி-இட வசதிக் கட்டுப்பாடு.



**13. மாண்புமிகு திரு. ஓ. பி. இராமன் (மின்சாரத் துறை அமைச்சர்)** கீழ்க்கண்ட துறைகளுக்குப் பொறுப்பு வகிப்பார் :— மின்சாரம், கடன் கொடுத்தல் (கிராமவாசிகள் கடன்பட்டிருத்தல்) குறித்த சட்டம், சீட்டுகள் குறித்த சட்டம், காடுகள், சின்கோனா.

**14. மாண்புமிகு திரு. ச. இராமச்சந்திரன் (போக்குவரத்துத் துறை அமைச்சர்)** கீழ்க்கண்ட துறைகளுக்குப் பொறுப்பு வகிப்பார் :—போக்குவரத்து, நாட்டுடைமையாக்கப்பட்ட போக்குவரத்து, மோட்டார் வண்டிகள் வரி.

**15. மாண்புமிகு திரு. மு. கண்ணப்பன் (அறநிலையத் துறை அமைச்சர்)** கீழ்க்கண்ட துறைகளுக்குப் பொறுப்பு வகிப்பார் :— அறக்கட்டளைகள், பால்வழங்கு துறை, முன்னாள் இராணுவ வீரர்கள், பூதான-கிராமதான இயக்கங்கள், பால்பெருக்குத் திட்டம், தமிழ்நாடு பாற்பண்ணை வளர்ச்சிக் கழகம் ஆகியவை நீங்கலாக பால் உற்பத்தி.

# PERSONNEL OF THE GOVERNMENT OF TAMIL NADU

## GOVERNOR OF TAMIL NADU

**THIRU KODARDAS KALIDAS SHAH**

---

### *Members of the Council of Ministers.*

1. THE HON. DR. M. KARUNANIDHI, (Chief Minister)-in-charge of Public, Finance, Planning, General Administration, matters relating to Indian Civil Service and Indian Administrative Service Officers, District Revenue Officers, Police, Elections, Information and Public Relations, Cinematograph Act, Newsprint control, Tamil Nadu Drainage and Water-supply Board, Slum Clearance Board, Film Technology, Operation Flood Project and Tamil Nadu Dairy Development Corporation and Youth Service Corps.

2. THE HON. DR. V. R. NEDUNCHEZHIYAN, (Minister for Education and Local Administration)-in-charge of Education including Technical Education, Official Language, Legislature, Municipal Administration, Community Development, Panchayats and Panchayat Unions.

3. THE HON. THIRU K. ANBAZHAGAN, (Minister for Public Health)-in-charge of Public Health, Medicine and Animal Husbandry.

4. THE HON. THIRU N. V. NATARAJAN, (Minister for Labour)-in-charge of Labour, Stationery and Printing, Government Press, Prosperity Brigade, Legislation on Weights and Measures, Statistics and Registration.

5. THE HON. THIRUMATHI SATYAVANIMUTHU, (Minister for Harijan Welfare)-in-charge of Harijan Welfare, Women's and Children's Welfare, Fisheries, Beggars' Home, Orphanages, Approved Schools and Vigilance Service, Indians Overseas, Refugees and Evacuees.

6. THE HON. THIRU P. U. SHANMUGAM, (Minister for Revenue)-in-charge of Revenue, Board of Revenue, District Revenue Establishment, Deputy Collectors, Commercial Taxes, Prohibition and Excise,

*Thursday, 8th February 1973*—cont.


| | PAGES |
|---|---|
| 4. Discussion on the Governor's Address—*cont.* ... | 526, 527–601 |
| 5. Request for half-hour Debate ... ... ... | 526–527 |
| 6. Papers laid on the Table ... ... ... .. | 601–602 |


## தமிழ்நாடு அரசின் ஆளுநரும், அமைச்சரவையும்

தமிழ்நாடு ஆளுநர்.

மேதகு திரு. கோதர்தாஸ் காளிதாஸ் ஷா

---

அமைச்சரவையின் உறுப்பினர்கள்.

1. மாண்புமிகு டாக்டர் மு. கருணாநிதி (முதலமைச்சர்) கீழ்க்கண்ட துறைகளுக்குப் பொறுப்பு வகிப்பார் :—பொதுத் துறை, நிதி, திட்டம், பொது நிர்வாகம், இந்திய சிவில் பணியாளர் தொகுதி (ஐ.சி.எஸ்.), இந்திய ஆட்சிப் பணியாளர் தொகுதி (ஐ.ஏ.எஸ்.) அதிகாரிகள், மாவட்ட வருவாய்த் துறை அதிகாரிகள், காவல் துறை, தேர்தல்கள், செய்தி, விளம்பரம், திரைப்படச் சட்டம், பத்திரிகைக் காகிதக் கட்டுப்பாடு, தமிழ்நாடு கழிவுநீர்-குடிநீர் வாரியம், குடிசை மாற்று வாரியம், திரைப்படத் தொழில் நுட்பவியல், பால் பெருக்குத் திட்டம், தமிழ்நாடு பாற்பண்ணை வளர்ச்சிக் கழகம், இளைஞர் அணி.

2. மாண்புமிகு டாக்டர் இரா. நெடுஞ்செழியன் (கல்வி-உள்ளாட்சித் துறை அமைச்சர்) கீழ்க்கண்ட துறைகளுக்குப் பொறுப்பு வகிப்பார் :—தொழில் நுட்பக் கல்வி உட்பட கல்வி, ஆட்சிமொழி, சட்ட மன்றம், நகராட்சி நிர்வாகம், சமுதாய நல வளர்ச்சி, ஊராட்சிகள், ஊராட்சி ஒன்றியங்கள்.

3. மாண்புமிகு திரு. க. அன்பழகன் (மக்கள் நல்வாழ்வுத் துறை அமைச்சர்) கீழ்க்கண்ட துறைகளுக்குப் பொறுப்பு வகிப்பார் :—பொதுச் சுகாதாரம், மருத்துவம், கால்நடை வளர்ப்பு.

4. மாண்புமிகு திரு. என். வி. நடராசன் (தொழிலாளர் நலத் துறை அமைச்சர்) கீழ்க்கண்ட துறைகளுக்குப் பொறுப்பு வகிப்பார் :—தொழிலாளர், எழுதுபொருள் அச்சுத் துறை, அரசு அச்சகம், சிரணி, எடைகள்-அளவைகள் குறித்த சட்டம், புள்ளி விவரம், பத்திரப் பதிவு.

5. மாண்புமிகு (திருமதி) சத்தியவாணிமுத்து (அரிசன நலத் துறை அமைச்சர்) கீழ்க்கண்ட துறைகளுக்குப் பொறுப்பு வகிப்பார் :—அரிசன நலம், மகளிர்-சிறுவர் நலம், மீனளம், இரவலர்கள் விடுதி, அனாதை இல்லங்கள், சீர்திருத்தப் பள்ளிகள், கண்காணிப்புப் பணிகள், வெளிநாட்டில் வாழும் இந்தியர்கள், அகதிகள், இடம் பெயர்ந்தவர்கள்.

7. THE HON. THIRU S. MADHAVAN, (Minister for Industries)-in-charge of Industries, Taxtiles, Yarn, Handloom, Mines and Minerals, Iron and Steel Control, employment and Training, Companies, Law, Courts and Prisons.

8. THE HON. THIRU S. J. SADIQ PASHA, (Minister for Public works)-in-charge of Public Works, Minor irrigation including special Minor Irrigation Programme Works, Highways and Waqfs.

9. THIRU HON. THIRU Si. Pa. ADITANAR, (Minister for Co-operation)-in-charge of Co-operation, Ports, Agricultural Refinance, Agricultural Engineering Wing of the Directorate of Agriculture except Soil Conservation Schemes, Passports and Prices and Supplies of Goods Act.

10. THE HON. THIRU A. P. DHARMALINGAM, (Minister for Agriculture)-in-charge of Agriculture.

**11. THE HON. THIRU MANNAI P. NARAYANASWAMY,** (Minister for Food)-in-charge of Food, Food Production, Khadi and Village Industries and Rural Industries Project.

12. THE HON. THIRU K. RAJARAM, (Minister for Backward classes)-in-charge of Backward Classes, Tourism, Housing and Accommodation Control.

13. THE HON. THIRU O. P. RAMAN, (Minister for Electricity)-in-charge of Electricity, Legislation on Money Lending, Rural Indebtedness, Legislation on Chits, Forests and Cinchona.

14. THE HON. THIRU S. RAMACHANDRAN, (Minister for Transport)-in-charge of Transport, Nationalised Transport and Motor Vehicles Tax.

15. THE HON. THIRU M. KANNAPPAN, (Minister for Religious Endowments)-in-charge of Religious Endowments, Ex-Servicemen, Bhoodan, Gramdan and Milk excluding Operation, Flood Project and Tamil Nadu Dairy Development Corporation,



## தமிழ்நாடு சட்டப் பேரவையின் முக்கிய அலுவலர்கள்.

### பேரவைத் துணைத் தலைவர்.

மாண்புமிகு திரு. பெ. சீனிவாசன், எம்.ஏ.,பி.எல்.

### மாற்றுத் தலைவர்கள் பட்டியல்.

திரு. பழனிவேல் ராஜன்.
திரு. என். கணபதி.
திரு. நா. வீராசாமி.
திரு. கே. ஏ. வகாப்.
திரு. ஏ. சுவாமிதாஸ்.
திரு. நா. காசிராமன்.

### சட்டப் பேரவைச் செயலாளர்.

திரு. கா. ஆ. நடராசன், எம்.ஏ., பி.எல்.

### கூட்டுச் செயலாளர்.

திரு. மா. சண்முகசுப்பிரமணியம், பி.ஏ., பி.எல்.

### துணைச் செயலாளர்.

திரு. சி. கு. இராமசாமி, பி.ஏ., பி.எல்.

### உதவிச் செயலாளர்கள்.

திரு. த. இராதாகிருஷ்ணன் (எஸ்டேட் அதிகாரி).
திரு. கோ. இராகவன்.
திரு. பெஞ்சமின் நெல்சன், பி.ஏ.
திரு. கே. பாலகுரு, பி.ஏ.

### விவாதப் பதிப்பாளர்.

திரு. கே. சுந்தரராசன்.

தொகுதிகள் உள்ளிட்ட தமிழ் நாடு சட்டப் பேரவை

உறுப்பினர்களின் (அகர வரிசைப்படி தயாரிக்கப்பட்ட) பட்டியல்.

| தொடர் எண்ணும் உறுப்பினர்களின் பெயரும். (1) | தொகுதி. (2) |
|---|---|
| 1 அண்ணாமலை, திரு. சி.வி. எம். .. .. | காஞ்சிபுரம். |
| 2 அபுசாலி, திரு. எம். ஏ. .. .. .. | புவனகிரி. |
| 3 அப்துல் ஜப்பார், திரு. வா. மை .. .. | அரவக்குறிச்சி. |
| 4 அரங்கண்ணல், திரு. இராம. .. .. | எழும்பூர். |
| 5 அழகமுத்து, திரு. து. ப. .. .. (அரசாங்க தலைமைக் கொறடா). | உப்பிலியப்புரம். |
| 6 அழகர்சாமி, திரு. சோ. .. .. .. | கோவில்பட்டி. |
| 7 அழகுத் தேவர், திரு. எஸ். .. .. | சாத்தூர். |
| 8 அனந்தநாயகி, திருமதி த. ந. .. .. | மயிலாப்பூர். |
| 9 அன்பழகன், மாண்புமிகு திரு. க. (அமைச்சர்). | புரசைவாக்கம். |
| 10 அன்புச்செழியன், திரு. நீ. .. .. | பெரியகுளம். |
| 11 ஆண்டி என்ற குருசாமி, திரு. கு. .. | ஸ்ரீவில்லிபுத்தூர் (செ. வ.) |
| 12 ஆதித்தனார், மாண்புமிகு திரு. சி. பா. (அமைச்சர்). | ஸ்ரீவைகுண்டம். |
| 13 ஆலடி அருணா, திரு. வி. .. .. | ஆலங்குளம். |
| 14 ஆல்டா எம். பௌலர், திருமதி .. | நியமன உறுப்பினர். |
| 15 ஆறுமுகம், திரு. அ. .. .. .. | எடப்பாடி. |
| 16 ஆறுமுகம், திரு. எஸ். .. .. | வீரபாண்டி. |
| 17 ஆறுமுகம், திரு. சி. .. .. .. | மதுராந்தகம். |
| 18 இரத்தினசபாபதி, திரு. மு. .. .. | விளாத்திக்குளம். |
| 19 இராசகோபால், திரு. க. மு. .. .. | உத்திரமேரூர். |
| 20 இராசகோபால், திரு. வீ. .. .. | வந்தவாசி. |
| 21 இராசமாணிக்கம், திரு. அ. .. .. | நாகப்பட்டினம். |
| 22 இராசமாணிக்கம், திரு. கு. .. .. | ஆடுதுறை. |
| 23 இராசரத்தினம், திரு. டி. .. .. | ஸ்ரீபெரும்புதூர். |
| 24 இராசாராம், மாண்புமிகு திரு. க. (அமைச்சர்). | சேலம்-2. |
| .. .. | பெரம்பலூர் (செ.வ.) |
| 25 இராசு, திரு. ஜே. எஸ். .. .. .. | தண்டராம்பட்டு. |
| 26 இராதாகிருட்டிணன், திரு. எம். .. | பரங்கிமலை. |
| 27 இராமச்சந்திரன், திரு. எம். ஜி. | பண்ருட்டி. |
| 28 இராமச்சந்திரன், மாண்புமிகு திரு. ச. (அமைச்சர்). | |

| தொடர் எண்ணும் உறுப்பினர்களின் பெயரும். (1) | தொகுதி. (2) |
|---|---|
| 29 இராமநாதன், திரு. சி. .. .. | அறந்தாங்கி. |
| 30 இராமலிங்கம், திரு. இரா. .. .. | தூத்துக்குடி. |
| 31 இராமலிங்கம், திரு. செ. .. .. | கடலாடி (செ.வ.). |
| 32 இராமன், மாண்புமிகு திரு. ஓ. பி. (அமைச்சர்). | மேலூர் தெற்கு (செ.வ.). |
| 33 இராமன், திரு. மூ. .. .. .. | கண்டமங்கலம் (செ.வ.). |
| 34 இராஜாங்கம், திரு. என். .. .. | குறிஞ்சிப்பாடி (செ.வ.). |
| 35 இராஜாப்பிள்ளை, திரு. வீ. கே. .. .. | கன்னியாகுமரி. |
| 36 இளங்கோவன், திரு. கோ. .. .. | திருவையாறு. |
| 37 இளஞ்செழியன், திரு. வீ. சா. .. .. | விராலிமலை. |
| 38 எட்டியப்பன், திரு. பூ. .. .. .. | பெரணமல்லூர். |
| 39 எட்மண்ட், திரு. க. உரொ. .. .. | திருச்செந்தூர். |
| 40 கணபதி, திரு. என். .. .. .. | பாபநாசம். |
| 41 கணபதி, திரு. டி. .. .. .. | நாங்குனேரி. |
| 42 கணேசன், திரு. எல். .. .. | ஒரத்தநாடு. |
| 43 கணேசன், திரு. சி. .. .. .. | குற்றாலம். |
| 44 கண்ணப்பன், மாண்புமிகு திரு. மு. (அமைச்சர்). | கிணத்துக்கடவு. |
| 45 கண்ணன், திரு. எம். ஆர். .. .. | பேஸின் பிரிட்ஜ். |
| 46 கதிரவன், திரு. கா. மு. .. .. .. | தென்காசி. |
| 47 கந்தசாமி, திரு. கே. .. .. .. | உசிலம்பட்டி. |
| 48 கந்தசாமி, திரு. கே. பி. .. .. .. | சாத்தான்குளம். |
| 49 கந்தசாமி, திரு. எம். .. .. .. | குளித்தலை. |
| 50 கந்தப்பன், திரு. செ. .. .. .. | திருச்செங்கோடு. |
| 51 கரிவேங்கடம், திரு. மா. வெ. .. .. | பாலக்கோடு. |
| 52 கருணாநிதி, மாண்புமிகு டாக்டர் மு. (முதல் அமைச்சர்). | சைதாப்பேட்டை. |
| 53 கருணாநிதி, திரு. தாழை மு. .. .. | திருவாரூர் (செ.வ.) |
| 54 கருணாநாதன், திரு. சோ. .. .. | கூனூர். |
| 55 கருப்பையா, திரு. ஆ. .. .. .. | கங்கைகொண்டான் (செ.வ) |
| 56 காசிராமன், திரு. நா. .. .. .. | கும்பகோணம். |
| 57 காதர் பாஷா என்ற வெள்ளைச்சாமி .. | முதுகளத்தூர். |
| 58 காமாட்சி, திரு. கு. .. .. .. | திருவரம்பூர். |
| 9 கார்த்திசன், திரு. வீ. .. .. .. | இராதாபுரம். |



| தொடர் எண்ணும் உறுப்பினர்களின் பெயரும். (1) | தொகுதி. (2) |
|---|---|
| 60 காவேரிமணியம், திரு. சொ. .. .. | திருப்பரங்குன்றம். |
| 61 காளிமுத்து, திரு. கா. .. .. .. | சிவகாசி. |
| 62 கிட்டப்பா, திரு. என். .. .. .. | மாயூரம். |
| 63 கிருட்டிணன், திரு. நா. .. .. .. | பேரணாம்பட்டு. |
| 64 கிருஷ்ணமூர்த்தி, திரு. வி. .. .. | நெல்லிக்குப்பம். |
| 65 கிருஷ்ணமூர்த்தி, திரு. வ. .. .. | திருச்சிராப்பள்ளி-1. |
| 66 கிருஷ்ணன், திரு. கே. ஆர். .. .. | ஊத்தங்கரை. |
| 67 குப்பல் ராமகிருஷ்ணன், திரு. கே. எஸ். | மதுரை (கிழக்கு). |
| 68 குமாரசாமி, திரு. அ. சே. .. .. | திருக்கோயிலூர். |
| 69 குமாரசாமி, திரு. கே. என். .. .. | பல்லடம். |
| 70 குருசாமி, திரு. நா. வெ. .. .. | ஆண்டிப்பட்டி. |
| 71 கேசவலு, திரு. தே. .. .. .. | கள்ளக்குறிச்சி. |
| 72 கோதண்டராமய்யா, திரு. கே. எஸ். .. | உதனப்பள்ளி. |
| 73 கோபால், திரு. எம். .. .. .. | குன்னத்தூர் (செ. வ.) |
| 74 கோபால், திரு. கே. பி. .. .. .. | கம்பம். |
| 75 கோவிந்தசாமி, திரு. வி. செ. .. .. | காவேரிப்பட்டினம். |
| 76 கோவிந்தராசன், திரு. ஆர். .. .. | கடலூர். |
| 77 கோவிந்தராசன் துரை, திரு. .. .. | கந்தர்வகோட்டை. |
| 78 கோவிந்தன், புலவர் கா. .. .. | செய்யாறு. |
| 79 கோவை செழியன், திரு. .. .. | காங்கேயம். |
| 80 சகாதேவன், திரு. எஸ். .. .. | செஞ்சி. |
| 81 சங்குமுத்து தேவர், திரு. ச. .. .. | அம்பாசமுத்திரம். |
| 82 சதாசிவம், திரு. செ. .. .. .. | ஆண்டிமடம். |
| 83 சண்முகசுந்தரம், திரு. அ. ப. .. .. | பொள்ளாச்சி. |
| 84 சண்முகம், மாண்புமிகு திரு. ப. உ. (அமைச்சர்). | திருவண்ணாமலை. |
| 85 சண்முகம், திரு. பெரி. .. .. .. | திருவாடானை. |
| 86 சண்முகம், திரு. மு. .. .. .. | விழுப்புரம். |
| 87 சத்தியமூர்த்தி, திரு. மு. .. .. | புதுக்கோட்டை. |
| 88 சத்தியவாணிமுத்து, மாண்புமிகு திருமதி (அமைச்சர்). | பெரம்பூர் (செ.வ.) |
| 89 சத்தியேந்திரன், திரு. எம்.எஸ். கே. .. | இராமநாதபுரம். |
| 90 சம்பத், திரு. டி. வி. .. .. .. | செம்பனார் கோவில். |
| 91 சாதிக் பாட்சா, மாண்புமிகு திரு. எஸ். ஜே. (அமைச்சர்). | உடுமலைப்பேட்டை. |

| தொடர் எண்ணும் உறுப்பினர்களின் பெயரும். (1) | தொகுதி. (2) |
|---|---|
| 92 சாரதி, திரு. மா. பா. | வேலூர். |
| 93 சிதம்பரம், திரு. சித. | காரைக்குடி. |
| 94 சிவப்பிரகாசம், திரு. தி. சி. ஆ. | சேரன்மகாதேவி. |
| 95 சிவபெருமாள், திரு. கோ. | அரியலூர். |
| 96 சிறைமீட்டான், திரு. தொ. க. | பரமக்குடி (செ.வ.). |
| 97 சீனிவாசன், மாண்புமிகு திரு. பெ. (துணைத் தலைவர்). | விருதுநகர். |
| 98 சீனிவாசன், திரு. தொ. ப. | போளூர். |
| 99 சின்னசாமி, திரு. அ. | செயங்கொண்டம் (செ.வ.) |
| 100 சின்னசாமி, திரு. ஆர். | தர்மபுரி. |
| 101 சின்னசாமி திரு. மு. | மொடக்குறிச்சி. |
| 102 சின்னசாமி, திரு. வ. | ஏற்காடு (ஆ. வா.) |
| 103 சின்னராசு, டாக்டர் ச. அ. | ஹளூர் (செ. வ.) |
| 104 சின்ன வெள்ளையன், திரு. சி. | சேந்தமங்கலம் (ஆ. வா.) |
| 105 சுந்தரம், திரு. ஒ. என். | திண்டுக்கல். |
| 106 சுப்பிரமணியம், திரு. எ. | சிங்கநல்லூர். |
| 107 சுப்பிரமணியம், திரு. எஸ். கே. | சத்யமங்கலம். |
| 108 சுப்பிரமணியம், திரு. கே. எம். | தியாகராயநகர். |
| 109 சுப்பிரமணியன், திரு. மா. | ஈரோடு. |
| 110 சுப்பிரமணியன், திரு. வீ. | உளுந்தூர்பேட்டை. |
| 111 சுப்பு, திரு. க. | ராஜபாளையம். |
| 112 சுப்பையா, திரு. ஆ. கு. | கோட்டூர் (செ. வ.) |
| 113 சுப்பையா, திரு. கே. வி. | ஆலங்குடி. |
| 114 சுப்பையா, திரு. ச. | சங்கரன்கோயில் (செ. வ.) |
| 115 சுப்பையா, திரு. எ. ஆர். | கடயநல்லூர். |
| 116 சுருளிவேல், திரு. மு. | போதிநாயக்கனூர். |
| 117 சுரேந்திரன், திரு. எம். | மேட்டூர். |
| 118 சுவாமிதாஸ், திரு. எ. | பத்மநாபபுரம். |
| 119 செபமாலை, திரு. கோ. | மங்களூர் (செ. வ.) |
| 120 ஜெயராமன், திரு. இ. | சேலம்-1. |
| 121 செல்லத்துரை, திரு. வீ. | ஓமலூர்.(செ. வ.) |
| 122 செல்லையா, திரு. குழ. | பேராவூரணி. |
| 123 செல்வராஜ், திரு. எம். | விருத்தாசலம், |
| 124 சேதுராமன், திரு. சி, | சிவகங்கை, |



| தொடர் எண்ணும் உறுப்பினர்களின் பெயரும். (1) | தொகுதி. (2) |
|---|---|
| 125 சோணையா, திரு. த. | மானாமதுரை. |
| 126 சோமசுந்தரம், திரு. ந. | வலங்கைமான்.(செ. வ.) |
| 127 சௌடி சுந்தரபாரதி, திரு. எம். | அருப்புக்கோட்டை. |
| 128 சௌந்தரபாண்டியன், திரு. பெ. | கிருஷ்ணராயபுரம் (செ.வ.) |
| 129 டென்னிஸ், திரு. என். | கிள்ளியூர். |
| 130 தங்கமணி, திரு. கே. டி. கே. | மதுரை மேற்கு. |
| 131 தர்மலிங்கம், மாண்புமிகு திரு. அ. பெ. (அமைச்சர்). | திருச்சிராப்பள்ளி-2. |
| 132 தருமலிங்கம், திரு. ந. | ரிஷிவந்தியம் (செ.வ.) |
| 133 நவமணித்தேவர், திரு. வி. | சேடப்பட்டி. |
| 134 திம்மராயக்கவுண்டர், திரு. டி. சி. | நாட்றாம்பள்ளி. |
| 135 தியாகராசன், திரு. அ. | திருமயம். |
| 136 தியாகராசன், திரு. இ. எஸ். | திருத்தணி. |
| 137 திருப்பதி, திரு. கு. | மதுரை (சென்ட்ரல்). |
| 138 துரைசாமி திரு. எ. க. | குடியாத்தம். |
| 139 துரைசாமி, திரு. சு. | திருப்பூர். |
| 140 துரைமுருகன், திரு. | காட்பாடி. |
| 141 துரைராஜ், திரு. சு. ம. | திருவள்ளூர் (செ.வ.) |
| 142 தூயமணி, திரு. மே. சி. | மேட்டுப்பாளையம். |
| 143 தேவராசன், திரு. எம். | உதகமண்டலம். |
| 144 தேவேந்திரன், திரு. அ. | நன்னிலம் (செ. வ.) |
| 145 தோப்பூர் திருவேங்கடம், திரு. | கணியம்பாடி. |
| 146 நடராசன், திரு. ஈ. எம். | அந்தியூர். |
| 147 நடராசன், திரு. எஸ். | தஞ்சாவூர். |
| 148 நரசிம்மன், திரு. எ. சி. | ஆரணி. |
| 149 நல்லசாமி, திரு. எஸ். | கரூர். |
| 150 நாகராஜன், திரு. க. | வடமதுரை. |
| 151 நாகலிங்கம், திரு. பா. | பொன்னேரி (செ.வ.) |
| 152 நாச்சிமுத்து, திரு. நா. | ஒட்டஞ்சத்திரம். |
| 153 நாச்சியப்பன், திரு. எ. எம். டி. | ஆத்தூர். |
| 154 நாச்சியப்பன், திரு. ந. | சங்கராபுரம். |
| 155 நாராயணசாமி, திரு. மா. வே. | திருவொற்றியூர். |
| 156 நெடுஞ்செழியன், மாண்புமிகு டாக்டர் இரா. (அமைச்சர்). | திருவல்லிக்கேணி. |

| தொடர் எண்ணும் உறுப்பினர்களின் பெயரும். (1) | தொகுதி. (2) |
|---|---|
| 157 நெடுமலை, திரு. இரா. | ராசிபுரம். |
| 158 பத்மநாபன், திரு. பொ. | திருநெல்வேலி. |
| 159 பத்மாவதி, திருமதி. ஏ. கோ. | முகையூர். |
| 160 பரந்தாமன், திரு ஆ. | கடம்பத்தூர். |
| 161 பரமசிவம், திரு. எம். | தாரமங்கலம். |
| 162 பலராமன, திரு. என். எஸ். | அரக்கோணம். |
| 163 பழனிசாமி, திரு. நா. | பொங்கலூர். |
| 164 பழனிசாமி, திரு. என். கே. | பெருந்துறை. |
| 165 பழனிசாமி, திரு. மு. | வெள்ளக்கோயில். |
| 166 பழனிச்சாமி, புலவர். சி. | பழனி (செ.வ.) |
| 167 பழனியப்பன், டாக்டர் ச. மு. | கோபிசெட்டிபாளையம். |
| 168 பழனியம்மாள், திருமதி வி. ப. | தாராபுரம். |
| 169 பழனிவேலன், திரு. க. | வரகூர். |
| 170 பழனிவேலன், திரு. மு. | நாமக்கல். |
| 171 பழனிவேலு, திரு. பி. | ஆத்தூர். |
| 172 பழனிவேல் ராஜன், திரு. | தேனி. |
| 173 பன்னீர் செல்வம், திரு. எம். | ஆம்பூர் (செ. வ.) |
| 174 பாண்டுரங்கம், திரு. சி. | செங்கம் (செ. வ.) |
| 175 பாலகிருட்டிணன், திரு. கு. | மன்னார்குடி. |
| 176 பாலசுந்தரம், திரு. வை. | அச்சரபாக்கம் (செ.வ.). |
| 177 பாலையா, திரு. ஏ. | கௌச்சல். |
| 178 பெரியசாமி, திரு. கு. | கொடவாசல். |
| 179 பெரியசாமி, திரு. தி. ஒ. | அவிநாசி. |
| 180 பெருமாள், திரு. செ. | காட்டுமன்னார்கோயில். |
| 181 பெருமாள், திரு. ஏ. ஆர். | காரியப்பட்டி. |
| 182 பொம்மன், திரு. கு. அ. | கூடலூர் (செ. வ.) |
| 183 பொன் சொக்கலிங்கம், திரு. பி. | சிதம்பரம். |
| 184 பொன்னப்ப நாடார், திரு. ஆர். | விளவங்கோடு. |
| 185 பொன்னுமலை, திரு. தி. | பனைமரத்துப்பட்டி. |
| 186 பொன்னுரங்கம், திரு. ஏ. எம். | சோளிங்கபுரம். |
| 187 மணலி கந்தசாமி, திரு. சி. | திருத்துறைப்பூண்டி. |
| 188 மணியன், திரு. பி. எஸ். | சோழவந்தான். |
| 189 மதியழகன், திரு. கே.ஏ. | ஆயிரம் விளக்கு. |
| 190 மருதாசலம், திரு. என், | பேரூர் (செ. வ.). |



| தொடர் எண்ணும் உறுப்பினர்களின் பெயரும். (1) | தொகுதி. (2) |
|---|---|
| 191 மலைக்கண்ணன், திரு. வீ. | இளையாங்குடி. |
| 192 மலைச்சாமி, திரு. பெ. | மேலூர் வடக்கு. |
| 193 மன்னியப்பன், திரு. சி. | கிருஷ்ணகிரி. |
| 194 மாணிக்கம், திரு. என். | பென்னகரம். |
| 195 மாணிக்கவாசகம், திரு. இரா. | தொண்டாமுத்தூர். |
| 196 மாதவன், மாண்புமிகு திரு. செ. (அமைச்சர்). | திருப்பத்தூர். |
| 197 மாரிமுத்து, திரு. ஏ. ஆர். | பட்டுக்கோட்டை. |
| 198 மாரிமுத்து, திரு. மூ. | தலைவாசல் (செ.வ.) |
| 199 மீனாட்சிசுந்தரம், திரு. மா. | வேதாரண்யம்.. |
| 200 முகமது கோதர் முகைதீன், திரு. எஸ். | மேலப்பாளையம். |
| 201 முத்தமிழ்ச் செல்வன், திரு. வெ. ந. | லால்குடி. |
| 202 முத்து, திரு. வ. | சங்கரி (செ. வ.) |
| 203 முத்துசாமி, திரு. ப. | வேடசந்தூர். |
| 204 முத்துச்செல்வன், திரு. பு. செ. | முசிறி. |
| 205 முத்துவேல், திரு. ந. | வானூர். (செ. வ.) |
| 206 முத்தையா, திரு. கே. கே. | கடலூர். |
| 207 முத்தையா, திரு. எம். | ஒட்டப்பிடாரம் (செ. வ.) |
| 208 முருகையன், திரு. எஸ். | கலசப்பாக்கம். |
| 209 முனியாண்டி, திரு. ஆ. | நிலக்கோட்டை (செ. வ.) |
| 210 முனு ஆதி, திரு. மு. | திருப்போரூர். |
| 211 முனுசாமி, திரு. ரா. ரா. | மேல்மலையனூர். |
| 212 மொய்தீன், திரு. திருப்பூர் ஏ. எம். | துறைமுகம் (சென்னை நகரம்.) |
| 213 மோசஸ், திரு. ம. | நாகர்கோயில். |
| 214 ரங்கநாதன், திரு. கே. | கோயம்புத்தூர் (கிழக்கு). |
| 215 ராமசாமி, திரு. இ. | வால்பாறை. |
| 216 ராமசாமி, திரு. ஜி. | திருப்பத்தூர். |
| 217 ராமராசன், திரு. வ. க. | பவானிசாகர் (செ. வ.) |
| 218 ராஜா, திரு. ஏ. எம். | பவானி. |
| 219 ராஜாராம், திரு. ஜி. | திண்டிவனம். |
| 220 ரெத்தினசாமித் தேவர், திரு. மு. சி. ஆ. | திருமங்கலம். |
| 221 லத்தீப், திரு. எம். ஏ. | வாணியம்பாடி. |
| 222 வகாப், திரு. கே. ஏ. | ராணிப்பேட்டை. |

| தொடர் எண்ணும் உறுப்பினர்களின் பெயரும். (1) | தொகுதி. (2) |
|---|---|
| 223 வடிவேலு, திரு. சீ. க. | தொட்டியம். |
| 224 வடிவேல், திரு. எஸ். | சீர்காழி (செ. வ.) |
| 225 விசுவநாதன், திரு. செ. கோ. | செங்கல்பட்டு. |
| 226 வீராசாமி, திரு. நா. | ஆற்காடு. |
| 227 வெங்கடசாமி, திரு. பி. | ஹோசூர். |
| 228 வெள்ளத்துரை, திரு. அ. | வாசுதேவநல்லூர். |
| 229 வேதாசலம், திரு. மு. | வண்ணாரப்பேட்டை (சென்னை நகரம்). |
| 230 வேலப்பன், திரு. சி. வே. | கபிலமலை. |
| 231 வேழவேந்தன், திரு. கா. | கும்மிடிபூண்டி. |
| 232 ஜேம்ஸ், திரு. ஜே. | திருவட்டார். |
| 233 ஜோதி வெங்கடாசலம், திருமதி. | ஸ்ரீரங்கம் (செ. வ.) |
| 234 ஹாண்டே, டாக்டர், எச். வி. | பார்க் டவுன் (சென்னை நகரம்). |
| 235 வெற்றிடம் | கோயம்புத்தூர் (மேற்கு). |

பேரவை நடவடிக்கைகளில் பங்குகொள்ள உரிமை பெற்றவர்கள்.

1 மாண்புமிகு திரு. என். வி. நடராசன்—அமைச்சர்.

2 மாண்புமிகு திரு. மன்னை ப. நாராயணசாமி—அமைச்சர்.

3 திரு. கோவிந்த் சாமிநாதன்—தலைமை வழக்கறிஞர்.

# தமிழ்நாடு சட்டப் பேரவை.

*சனிக்கிழமை, 1973 பிப்ரவரி 3.*

சென்னை செயின்ட் ஜார்ஜ் கோட்டையிலுள்ள சட்டப் பேரவை மண்டபத்தில் முற்பகல் 10.00 மணி அளவில் மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர் திரு. பெ. சீனிவாசன் அவர்கள் தலைமையில் பேரவை கூடியது.

## 1. நீத்தார் நினைவுக் குறிப்பு.

**முன்னாள் உறுப்பினர்கள் திரு. எம். சடையன், திருமதி வி. லெட்சுமி அம்மாள், திரு. டி. எஸ். அருணாசலம் ஆகியோர் மறைவு குறித்து.**

**மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர் :** மல்லப்புரம் ஒதுக்கப்பட்ட தொகுதியிலிருந்து தேர்ந்தெடுக்கப்பட்டு, அன்றைய ஒருங்கிணைந்த சென்னை மாநில சட்டப் பேரவையில் 1952-ஆம் ஆண்டிலிருந்து 1956-ம் ஆண்டு வரை உறுப்பினராக இருந்த திரு. எம். சடையன் அவர்கள் 18—12—1972-ம் நாளன்று மறைந்ததைக் குறித்தும் ;

சேரன்மாதேவி பொது கிராமப்புறத் தொகுதியிலிருந்து தேர்ந்தெடுக்கப்பட்டு, அன்றைய ஒருங்கிணைந்த சென்னை மாநில சட்டப் பேரவையில் 1937-ம் ஆண்டிலிருந்து 1939-ம் ஆண்டு வரையிலும், பின் 1946-ம் ஆண்டிலிருந்து 1952-ம் ஆண்டு வரையிலும் உறுப்பினராக இருந்த திருமதி வி. லெட்சுமி அம்மாள் அவர்கள் 25—1—73-ம் நாளன்று மறைந்ததைக் குறித்தும் ;

திருச்சிராப்பள்ளி-ஸ்ரீரங்கம் நகரங்களின் பொது நகர்ப்புறத் தொகுதியிலிருந்து தேர்ந்தெடுக்கப்பட்டு, அன்றைய ஒருங்கிணைந்த சென்னை மாநில சட்டப்பேரவையில் 1946-ம் ஆண்டிலிருந்து 1952-ம் ஆண்டு வரை உறுப்பினராகவும், பின் 1957-ம் ஆண்டிலிருந்து 1972-ம் ஆண்டு வரை சட்டமன்ற மேலவை உறுப்பினராகவும் இருந்த திரு. டி. எஸ். அருணாசலம் அவர்கள் 28—1—73-ம் நாளன்று மறைந்ததைக் குறித்தும்.

இப்பேரவையின் சார்பில் இரங்கலையும், ஆழ்ந்த வருத்தத்தையும் அன்னார்களை இழந்துவிட்ட குடும்பத்தினர்களுக்கு நான் தெரிவித்துக்கொள்கிறேன்.

மறைந்தவர்களுக்கு மரியாதை அளிக்கும் வகையில் மாண்புமிகு உறுப்பினர்கள் அனைவரும் எழுந்து ஒரு நிமிடம் மவுனமாக நிற்கும்படி வேண்டிக் கேட்டுக்கொள்கிறேன்.

மாண்புமிகு உறுப்பினர்கள் அனைவரும் எழுந்து ஒரு நிமிடம் மவுனமாக நின்றனர்.

## 2. இரங்கல் தீர்மானங்கள்.

### திரு. இராஜாஜி அவர்கள் மறைவு குறித்தும், உறுப்பினர் திரு. பி. கோபால் அவர்கள் மறைவு குறித்தும்.

**மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர்:** நமது நாட்டின் தலைசிறந்த மூத்த தலைவர்களுள் ஒருவராய் விளங்கிய மூதறிஞர் இராஜாஜி அவர்கள் 25—12—1972-ம் நாளன்று மறைந்த செய்தியை இப்பேரவைக்கு மிகுந்த வருத்தத்துடன் தெரிவித்துக்கொள்கிறேன். அன்னாரின் மறைவுக்கு பேரவையின் இரங்கலையும் வருத்தத்தையும் தெரிவிக்கும் இரங்கல் தீர்மானத்தைப் பேரவை முன்னவர் அவர்கள் கொண்டு வருவார்கள்.

மேலும், கோயம்புத்தூர் மேற்குத் தொகுதியிலிருந்து தேர்ந்தெடுக்கப்பட்டு, 1971-ம் ஆண்டு முதல் இப்பேரவையின் உறுப்பினராக இருந்த திரு. பி. கோபால் அவர்கள் 28—12—72-ம் நாளன்று மறைந்த செய்தியை இப்பேரவைக்கு தெரிவித்துக்கொள்கிறேன். அன்னாரின் மறைவுக்கு பேரவையின் இரங்கலைத் தெரிவிக்கும் தீர்மானத்தை பேரவை முன்னவர் அவர்கள் முன்மொழிவார்கள்.

**மாண்புமிகு டாக்டர் இரா. நெடுஞ்செழியன்:** பேரவைத் துணைத் தலைவர் அவர்களே,

"இந்திய நாட்டின் தலைசிறந்த மூத்த தலைவர்களுள் ஒருவராய், அரசியல் அறிஞராய், எதையும் ஆழ்ந்து சிந்திக்கும் தன்மை பெற்றவராய், சிறந்த நிர்வாகத் திறன் பெற்றவராய் விளங்கியவரும், இந்திய விடுதலைப் போராட்டத்தில் மகாத்மா



காந்தி அடிகளுடன் உறுதுணையாக விளங்கியவரும், இம் மாநிலத்தின் முதல் அமைச்சராக இரு முறையும், இந்திய அமைச்சராகவும், இந்தியாவின் முதல் இந்திய கவர்னர் ஜெனரலாகவும், மேற்கு வங்க ஆளுநராகவும் பல பதவிகள் வகித்து சிறந்த தொண்டாற்றியவரும், நம் எல்லோருடைய அன்பையும், நன் மதிப்பையும் பெற்றவருமான மூதறிஞர் இராஜாஜி அவர்கள் 25—12—1972-ம் நாளன்று மறைவு எய்தியமை குறித்து இப்பேரவை தனது ஆழ்ந்த அனுதாபத்தையும், ஆறாத் துயரத்தையும் தெரிவிப்பதோடு அன்னாரது மறைவால் வருந்தும் அவரது குடும்பத்தினருக்கு தனது ஆழ்ந்த இரங்கலைத் தெரிவித்துக்கொள்கிறது."

அடுத்து, "கோயம்புத்தூர் மேற்குத் தொகுதியிலிருந்து தேர்ந்தெடுக்கப்பட்டு, இப்பேரவையின் தி.மு.க. கட்சியின் உறுப்பினராக இருந்தவரும், இனிய பண்பும், தொண்டாற்றும் உள்ளமும், செயல்திறனும் கொண்டவருமான திரு. பி. கோபால் எம்.எல்.ஏ., அவர்கள் 28—12—1972-ம் நாளன்று மறைந்தமை குறித்து இப்பேரவை தனது ஆழ்ந்த துயரத்தைத் தெரிவித்துக்கொள்கிறது. அன்னாரது மறைவால் வருந்தும் அவரது குடும்பத்தினருக்கு இப்பேரவை தனது ஆழ்ந்த பரிவையும் இரங்கலையும் தெரிவித்துக் கொள்கிறது."

நம் நாட்டிலுள்ள எல்லோருடைய பேரன்பையும், பெருமதிப்பையும் பெற்று விளங்கிய மூதறிஞர் இராஜாஜி அவர்கள் மறைவு எய்தியது குறித்து இந்த நாட்டு மக்கள் எத்துணை ஆற்றொணாத் துயரை எய்தினார்கள் என்பதை இந்த நாடு அறியும். இந்த மன்றம் நன்கு அறியும். பல்வேறு வகைப்பட்ட அறிவுத் திறன் கொண்டு திகழ்ந்தவர் இராஜாஜி அவர்கள். இன்றைய ஜனநாயகத்திற்கு ஒரு வலிமை மிகுந்த சக்தியை வழங்கிக்கொண்டு திகழ்ந்து வந்தார்கள் என்பதை எல்லோரும் நன்றாக உணர்வார்கள். இப்படி அரசியல் உலகத்திற்கே ஒரு பெரும் வழிகாட்டியாகத் திகழ்ந்த இராஜாஜி அவர்களது மறைவு இந்தியாவுக்கே, அதிலும் குறிப்பாகத் தமிழகத்திற்கு மிகுந்த வருத்தத்தை அளித்திருக்கிறது என்பதை நாம் அனைவரும் நன்கு உணர்வோம்.

பொதுவாக, எல்லோரிடத்திலும் சில சில திறன்கள்தான் இருக்கும். ஒரு சிலரிடத்தில்தான் எல்லாவகையான அறிவுத் திறன், ஆற்றல் திறன், பண்பாட்டுத் திறன் எல்லாம் அமைந்திருக்கும். அத்தகைய ஒரு சிலரிலே ஒருவராகத் திகழ்ந்து

[டாக்டர் இரா. நெடுஞ்செழியன்] [1973 பிப்ரவரி 3

வந்தவர் இராஜாஜி. நிறைவாழ்வு பெற்று, 94 ஆண்டுகள் வாழ்ந்து, எல்லோருடைய நன்மதிப்பையும், அன்பையும் பெற்று, எல்லோருடைய பாராட்டுதலையும், போற்றுதலையும் பெற்று மிகச் சிறந்து விளங்கியவர் இராஜாஜி. அவரது கருத்துக்களில் வேறுபாடு கொண்டவர்கள் பலர் உண்டு. அவரது கருத்தோடு வாதிட்டவர்கள் பலர் உண்டு. ஆனால், அவரிடத்தில் நன்மதிப் பையும், பேரன்பையும் யாரும் இழந்ததில்லை.

நாடு விடுதலை எழுச்சிப்பெற்று சுதந்திரப் போராட்டத்தில் அண்ணல் காந்தியடிகளின் தலைமையில் ஈடுபட்டிருந்தபோது அண்ணல் காந்தியடிகளுக்கு உறுதுணையாக நின்றவர் இராஜாஜி அவர்கள். அண்ணல் காந்தியடிகள் நடத்திய ஒவ்வொரு போராட்டத்திலும் இராஜாஜி அவர்கள் முன்னணியில் நின்று பணியாற்றிய வரலாறு எதிர்காலச் சந்ததியினர்களுக்கு ஒரு எடுத்துக்காட்டாகும். அண்ணல் காந்தியடிகளுக்கு பண்டித ஜவஹர்லால் நேரு அவர்கள் படைத்தலைவராகத் திகழ்ந்தார்கள் என்றால் காந்தியடிகளுக்கு சிறந்த ஆலோசனை கூறும் சிறந்த அமைச்சராக இராஜாஜி அவர்கள் திகழ்ந்தார்கள் என்று கூற முடியும். எந்த முக்கிய பிரச்சினை ஏற்பட்டபோதிலும், எந்தச் சிக்கல் ஏற்பட்ட போதிலும் அண்ணல் காந்தியடிகள் இராஜா ஜியைக் கலந்தே முடிவு எடுத்திருக்கிறார்கள். இராஜாஜி அவர்களைப்பற்றி அண்ணல் காந்தியடிகள் கூறும்போது, "the keeper of my conscience" என்பதாக, தம்முடைய மனச் சாட்சியின் பாதுகாவலராக இராஜாஜி விளங்கினார்கள் என்பதாகக் குறிப்பிட்டிருக்கிறார்கள். எந்த விஷயத்தில் ஐயப்பாடு ஏற்பட்டாலும் அல்லது சிக்கல் ஏற்பட்டாலும், முட்டுக்கட்டை நிலை ஏற்பட்டாலும் அவற்றுக்கு ஏற்றதொரு விளக்கத்தைப் பெற இராஜாஜியின் உறுதுணையான ஒத்துழைப்பையும், ஆலோசனை களையும் அண்ணல் காந்தியடிகள் பெற்றிருக்கிறார் என்பதனை வரலாற்றில் இருந்து நாம் காணலாம்.

காந்தியடிகளது போராட்டத்திற்கு மாறுபட்ட போராட்டக் குழுக்கள் அமைந்த காலங்களிலும் மகாத்மா காந்தி அவர்களது அருகில் இருந்து காந்தியின் போராட்டம், காந்தியின் கொள்கை வெற்றிபெறுகின்ற அளவில் இராஜாஜி அவர்கள் பணியாற்றியிருக் கிறார்கள். மனிதாபிமானம் கொண்டவராகவும், மன உறுதி கொண்டவராகவும், தாம் கொண்ட கொள்கையை நிலைநாட்டுவதில்



1973 பிப்ரவரி 3] [டாக்டர் இரா. நெடுஞ்செழியன்]

அழுத்தந்திருத்தமான மனப்பான்மை காட்டக்கூடியவராகவும் அவர் திகழ்ந்தார். எதிலும் ஆடாமலும் அசையாமலும், வளையா மலும் நீளாமலும், பணியாமலும் வீழாமலும் கொண்ட கருத்தை நிறைவேற்றுவதில் மிக உறுதி படைத்தவராகத் திகழ்ந்து வந்தார்கள் என்பதை அரசியல் வரலாற்றில் காணும்போது

"நிலையிற் றிரியா தடங்கியான் தோற்றம்
மலையினும் மாணப் பெரிது."

என்பதாக வள்ளுவப் பெருந்தகையார் வகுத்த இலக்கணத்திற்கு இலக்கியமாக அவர் திகழ்ந்தார் என்பதை உணர முடிகிறது. சிறந்த அரசியல் ஜனநாயக மரபுகளை, ஜனநாயகப் பண்பாடுகளை நிலைநாட்டுவதற்குத் தொடர்ந்து பாடுபட்டு வந்தார்கள். ஒரு ஜனநாயகப் பண்புகள் வெற்றி பெற்றால்தான், ஜனநாயக மரபுகள் பண்பாடுகள் வெற்றி அடைவதைப் பொறுத்தே இருக்கிறது. ஜனநாயகப் பண்புகள் வெற்றிபெற்றால்தான், ஜனநாயகப் மரபுகள் வெற்றிபெற்றால்தான் நல்ல பலன் நாட்டிக்குக் கிடைக்கும் என்பதை வற்புறுத்தி அதற்கேற்றவகையில் திகழ்ந்து வந்தார்கள்.

ஜனநாயகத்திலே மிக மிகப் பொறுமை வேண்டும். ஜனநாய கத்திலே கடைப்பிடிக்கப்படவேண்டிய பொறுமைக்கேற்ப தன்னுடைய கருத்துக்களிலும், கொள்கைகளிலும் யார் மாறு பட்டிருந்தாலும், தன்னுடைய கருத்துக்களைப் பொறுமையோடு எடுத்துரைத்து, மற்றவர்களின் கருத்துக்களைத் தன் உள்ளத்திலே வாங்கி, அதற்கேற்ற அளவுக்கு விடை பகர்கின்ற அளவுக்கு எண்ணத் திட்பமும், அறிவுத் திட்பமும் பெற்றிருந்து மற்ற அரசியல்வாதிகளுக்கு ஒரு நல்ல எடுத்துக்காட்டாக விளங்கினார்கள் என்பதையும் நாம் அவருடைய வாழ்க்கையிலே காணலாம். தன்னுடைய கருத்துக்களுக்கு மாறுபட்ட கருத்துக்களைக் கொண்டவர்களாக இருந்தாலும், மாறுபட்ட கருத்துக்களைச் சொல்கிறவர்களாக இருந்தாலும் தன்னுடைய நிலையிலே நிலை குலைந்துவிடாமலும், ஆத்திரப்படாமலும் மிகப் பொறுமையாக தன்னுடைய வாதத்தை எடுத்து வைக்கின்ற நல்ல முறையினை அரசியலிலே கடைப்பிடித்து மற்றவர்களுக்கு ஒரு எடுத்துக் காட்டாகத் திகழ்ந்தார்கள். அந்தக் காலத்திலேயே தமிழகத்தின் முன்னேற்றத்திற்காகப் பாடுபட்டவர்களில் சிறந்தவர்களில் ஒருவராகவும், அரசியல் விழிப்புணர்ச்சியோடு நாட்டிற்காக அயராது பாடுபட்ட பெரியார், திரு. வி. க., வரதராஜுலு நாயுடு

ஆகியோரது பெயர்களோடு இராஜாஜி அவர்களின் பெயரும் இணைந்து காணப்படுகின்ற அளவுக்கு, அரசியலில் சிறந்த வீரராகவும், போர் வீரருக்குரிய உறுதிப்பாட்டினைப் பெற்றிருந்தவராகவும், அரசியல்வாதிக்குரிய அறிவாற்றல், சிந்தனைத் திறன் பெற்றிருந்தவராகவும் வாழ்ந்தார்கள்.

ஜனநாயகத்தை வளர்ப்பதற்குச் சிறந்த பேச்சாற்றல் திறனும், எழுத்தாற்றல் திறனும் உறுதுணையாக உள்ள கருவிகளாகும். ஜனநாயகத்தில் நல்ல கருத்துக்களை உருவாக்கக்கூடியவை சொல்வன்மையும், எழுத்து வன்மையும் ஆகும். அந்த அளவிலே கருத்துக்களைச் சிறந்த முறையிலே எடுத்துவைக்கக்கூடிய எழுத்தாற்றலும், சொல்லாற்றலும் ஒருங்கே பெற்றிருந்தார்கள் என்பதையும் நாம் எல்லாம் கண்டிருக்கிறோம்.

பிறருடைய உள்ளத்தைக் கவர்ந்க்க அளவிற்கும், ஈர்க்கின்ற தன்மையிலும், சொல்லக்கூடிய கருத்துக்களை நகைச்சுவையோடு விட் அன்ட் ஹ்யூமர் என்று ஆங்கிலத்திலே சொல்லப்படுகின்ற நிலையில் மகிழ்ச்சியுணர்வையும் சேர்த்து ஊட்டுகிற சொற்களைப் பயன்படுத்துகின்ற ஆற்றல் பெற்றவர்கள் ஒரு சிலர். அந்தத் திறனை நாம் பேரறிஞர் அண்ணா அவர்களிடம் கண்டிருக்கிறோம். அந்த முறையிலே இராஜாஜி அவர்களும் அரசியலிலே தன்னுடைய வாதத் திறமைக்கு மிகச் சிறப்பாக அந்த முறையைக் கையாண்டார்கள். கருத்துக்களை ஆணித்தரமாகச் சொல்லவேண்டுமென்ற முறையிலே உவமைகளையும், உருவகங்களையும் பயன்படுத்தியவர்கள் பெரும்பாலும் இலக்கிய வல்லுநர்கள்தான். அவர்களும்கூட கவிதைகளிலும், தங்களுடைய எழுத்துக்களிலும்தான் உவமைகளையும், உருவகங்களையும் எடுத்துக் கூறுவார்கள். ஆனால் பேச்சிலேயும்கூட உவமைகளையும், உருவகங்களையும் தன்னுடைய வாதத் திறமைக்குத் துணையாகப் பயன்படுத்தியவர்களில் இராஜாஜி அவர்களும் ஒருவர். அவ்வாறு பயன்படுத்தியதன் மூலம் அவர்கள் சிறந்த இலக்கிய வித்தகர் ஆகவும் திகழ்ந்தார்கள்.

மனதிலே குழப்பம் இல்லாமலிருந்தால்தான் ஒருவர் சொல்லக் கூடிய கருத்துக்களையும் குழப்பம் இல்லாமல் சொல்லமுடியும். உள்ளத்திலே ஒளியுண்டாயின் வாக்கிலும் ஒளியுண்டு என்று பாரதியார் கூறியதற்கேற்ப சொல்கின்ற கருத்துக்கள், உள்ளத்திலே தோன்றியவைதான் என்ற அளவுக்குக் கருத்துக்களை ஒன்றோடொன்று மோதாமல் வெளிப்படுத்துகின்ற வகையில்



மற்றவர்கள் என்னென்ன சொல்வார்கள் என்பதை முன்னமேயே கண்டறிந்து, அதற்கு ஈடுகொடுக்கின்ற அளவுக்கு உவமைகளையும், சிறு சிறு கதைகளையும், எடுத்துக்காட்டுகளையும் எடுத்துவைக்கக் கூடிய அளவிலே பல ஆற்றல்களையும் ஒருங்கே பெற்றிருந்த தன்மையைப் பெற்றிருந்தார்கள்.

நாட்டுக்கே எடுத்துக்காட்டாகவும், நாட்டு மக்கள் ஏற்றுக் கொண்ட தலைவர்களிலே ஒரு பெரும் தலைவராகவும், காந்தியடிகளுக்கு வலதுகரம்போன்று விளங்கி, காந்தியடிகள் வடநாட்டிலே எந்த எந்தப் போராட்டங்களுக்குத் தலைமைதாங்கி நடத்தினார்களோ, அவற்றிற்கு ஒத்த போராட்டங்களைத் தென்னாட்டிலேயும் நடத்திக் காட்டியவராகவும் விளங்கினார்கள். வடநாட்டிலே காந்தியடிகள் தண்டி யாத்திரை நடத்தியபொழுது இராஜாஜி அவர்கள் இங்கே கோடிக்கரையிலே அதே போராட்டத்தை நடத்திக் காட்டினார்கள். காந்தியடிகள் அங்கே சபர்மதி ஆஸ்ரமம் ஏற்படுத்தி நடத்தியதைப்போல், தென்னாட்டிலே இராஜாஜி அவர்களும் திருச்செங்கோட்டிலே காந்தி ஆஸ்ரமத்தைத் தொடங்கினார்கள். ஆகவே, தென்னாட்டுப் பகுதியிலே விடுதலைப்போரில் தலைமைதாங்கி நடத்தியவர்களில் இராஜாஜி சிறந்து விளங்கினார்கள்.

இராஜாஜி அவர்கள் ஆட்சிப் பொறுப்பை ஏற்றபொழுது ஆட்சிப் பொறுப்பை ஏற்கின்றவர்களுக்கு என்ன என்ன இலக்கணங்கள் வேண்டுமோ அவையெல்லாம் ஒருசேர அமையப் பெற்றவராய், சிறந்த ஆட்சியாளராய், சிறந்த அறிவாற்றல் மிக்கவராய், வன்மை மிக்கவராய், நிர்வாகியாய்த் திகழ்ந்தார்கள். நாட்டிலே மிகப் பெரிய பதவி என்று சொல்லப்படுகின்ற குடியரசுத் தலைவர் பதவிக்குச் சமமாக உள்ள பதவியில் இந்தியாவினுடைய முதல் இந்திய கவர்னர் ஜெனரலாகவும், கடைசி இந்திய கவர்னர் ஜெனரலாகவும் விளங்கி பெரும் பெரும் பொறுப்புக்களை ஏற்றுப் பணியாற்றி வந்து இருக்கிறார்கள்.

மாநில ஆளுநராகவும், முதலமைச்சராகவும், பதவிப் பொறுப்புக்களை ஏற்று இந்தப் பேரவை மண்டபத்திலேயே அவர்களுடைய உருவப்படம் அமைக்கப்பெற்று அதன்கீழே ' ' Great are his head and heart ' என்று பொறிக்கப்படுகின்ற அளவுக்கு அப்பொழுதே மிகப்பெரியவராகக் கருதப்பட்டவர், ' உறுதி

வாய்ந்தவர் என்று நீண்டநாட்களுக்கு முன்னாலேயே அவர்களைப் பற்றி எடுத்துச் சொல்லியிருக்கிறார்கள். இந்திய அரசியலை உருவாக்கியவர்களில் மிக முக்கியமானவராகவும், இந்திய அரசியலைத் தொடர்ந்து இருந்து பார்க்கக்கூடிய வாய்ப்பைப் பெற்றிருந்தவராகவும் இருந்தார்கள்.

பண்டித நேரு அவர்கள் இராஜாஜி அவர்களுடைய பண்புகளையும், ஆற்றல் திறன்களையும், அவர்களுடைய அரசியல் பணியைப்பற்றியும் சுருக்கமாகவும் தெளிவாகவும் தெரிவித்திருக்கிறார்கள்.

'Rajaji is a person of strong convictions and strong beliefs who has adhered to them. All our minds did not function quite critically in the presence of the Mahatma because of our faith in him. But Rajaji was different. He never allowed his mind to be swept away. Whatever happened, he came to his own conclusions. Rajaji whether he sometimes disagreed with us or agreed with us, brought his extraordinarily keen intellectual mind to bear on every question that came before and where he disagreed he would like every question to be discussed thoroughly'

என்ற வகையிலே பண்டித ஜவஹர்லால் நேரு அவர்கள் தெரிவித்து இருக்கிறார்கள். தான் கொண்ட கொள்கையை, கருத்தை நிலை நாட்டுவதிலே கண்டிப்பாகவும் பிடிவாதமாகவும் இருந்தார்கள். காந்தியடிகள் கருத்துக்கு மாறான கருத்தைக் கொண்டவர்கள்கூட காந்தியடிகளிடத்திலே இருக்கின்ற மரியாதை காரணமாக தங்கள் கருத்துக்களைத் தெரிவிக்காவிட்டாலும், இராஜாஜி அவர்கள் தன்னுடைய கருத்துக்களை எடுத்துச் சொல்வதிலே மிக உறுதியாக, தைரியமாக இருந்தார். காந்தியடிகளுக்கு மாறுபட்ட கருத்தைக் கொண்டிருந்தாலும் அதை பிறர் ஏற்றுக்கொள்கிறார்களோ இல்லையோ, தன்னுடைய கருத்தைத் தெரிவிப்பதிலே உறுதியாக இருந்தார் என்று நேரு அவர்கள் எடுத்துச் சொல்லியிருக்கிறார்கள்.

இப்படிப் பல்வேறு சிறப்புக்களைப்பெற்று இந்திய அரசியலிலும் தமிழக அரசியலிலும் பெரும் தொண்டாற்றி, தமிழகத்திலே பிறந்து, தமிழகத்திலே வாழ்ந்து மறைந்த சிறந்த அரசியல் வாதியாக விளங்கியவர்—அவருடைய அறிவுத் திறனிலும், ஆற்றல் திறனிலும் யாரும் மாறுபட்ட கருத்துக்கொண்டவர் இல்லை—ஒருவர் சொல்வதை மற்றவர்கள் கண்மூடித்தனமாக ஏற்றுக் கொள்ளக்கூடாது என்பதையும் அவர்கள் எடுத்துச் சொல்லி





வந்திருக்கிறார்கள். அந்தவகையிலே மாறுபட்டவர்கள் பலர் இருந்தாலும் அவர்களுடைய அறிவுத்திறனை, ஆற்றலைக் குறைத்து மதிப்பிடுவதில்லை. அப்படிப்பட்ட நிலையில் அவரை இழந்தது மிகமிகப் பேரிழப்பாகும். அவர்களுடைய பேரிழப்பு குறித்த தீர்மானத்தை நான் முன்மொழிந்திருக்கிறேன்.

மற்றும் இந்த அவையிலே உறுப்பினராக இருந்து, எல்லோருடைய நல்ல அன்பையும், எல்லோருடைய பாராட்டுதலையும் பெற்ற அருமை நண்பர், கோவை மேற்கு தொகுதியிலிருந்து தேர்ந்தெடுக்கப்பட்ட நண்பர், கோபால் அவர்கள் எதிர் பாராத வகையில் திடீரென்று மறைந்தது எல்லோருக்கும் பெரும் துக்கத்தையும், துயரத்தையும் அளிக்கிறது. அவர் எல்லோரும் விரும்பப்படும் இனிய பண்புகள் நிறைந்தவர். எதையும் ஆரவாரமில்லாமல், அமைதியாக, அடக்கமாகச் செய்ய வேண்டுமென்ற சிறந்த பண்பின் உறைவிடமாக இருந்தவர். கருத்து வேறுபாடுகள் கொண்டிருந்தாலும் மாற்றுக் கட்சியினரும் விரும்பத்தக்க அளவில் அவர்கள் தொகுதியிலே பணியாற்றி வந்தார்கள் என்பதற்கு அவர் மறைந்த நாளன்று சுடுகாட்டிலே எல்லா அரசியல் கட்சியைச் சேர்ந்தவர்களும் பேசும்பொழுது அவருடைய இனிய பண்புகளைப் பற்றி குறிப்பிட்டது சான்றாக அமைந்திருந்தது. கட்சி மாச்சரியங்களுக்குச் சிறிதும் ஆட்படுத்திக்கொள்ளாமல் தொகுதி மக்கள் அத்தனைபேருக்கும் உறுப்பினராக நின்று, யார் எந்தப் பணியைத் தன்மூலம் செய்ய வேண்டுமென்று விரும்பினாலும் உறுப்பினராக இருந்து தன்னுடைய கடமையைச் சிறப்புற ஆற்றி வந்தார். கடுமையாக இல்லாமல், கடுஞ்சினங்கொள்ளாமல், எதிலும் ஆத்திரப்படாமல் அவசரப்படாமல், அமைதியாக, அடக்கமாகத் தன்னுடைய பணிகளை நிறைவேற்றி வந்தார் என்பதை எல்லோரும் ஒப்புக் கொள்வார்கள். அப்படிப்பட்ட சிறந்த பண்பிற்கு உரிய ஒருவராகத் திகழ்ந்து தம்முடைய கடமைகளை இடையூறு இல்லாமல் ஆற்றி, மற்றவர்களின் நல்ல மதிப்பையும் பெற்று, 'என் கடன் பணி செய்து கிடப்பதே' என்ற மூதுரைக்கேற்ப தன்னுடைய பணிகளைச் சிறப்புற ஆற்றி வந்த அவர்கள் திடீரென்று மறைந்தது நமக்கெல்லாம் பெருந்துக்கத்தையும் துயரத்தையும் அளிக்கிறது. அவருடைய இழப்பால் நாம் எல்லோரும் வருந்த வேண்டியவர்களாக இருக்கிறோம். அவர் களுடைய குடும்பத்தினருக்கு இந்தப் பேரவை தனது ஆழ்ந்த

பரிவையும் இரங்கலையும் தெரிவித்துக் கொள்கிறது என்ற தீர்மானத்தையும் முன்மொழிந்திருக்கிறேன்.

**திரு. ஆர். பொன்னப்ப நாடார் :** கனம் உதவி சபாநாயகரவர்களே, மறைந்த மாபெரும் தலைவர் இராஜாஜி அவர்களுக்காகக் கொண்டுவரப்பட்டிருக்கும் இரங்கல் தீர்மானத்தைப் பற்றி ஒரு சில வார்த்தைகள் எங்கள் கட்சியின் சார்பில் பேசுவதற்குக் கடமைப்பட்டிருக்கிறேன்.

பல தலைவர்களின் வரிசையில் உத்தமத் தலைவர் இராஜாஜி அவர்கள் இடம் பெற்றிருக்கிறார் என்று கூறினால் அது மிகையல்ல. இந்திய அரசியல் வானிலே பிரகாசிக்கின்ற நல்லதொரு நட்சத்திரமாக, ஒளிமிக்க தலைவராகச் செயலாற்றி வந்தார்கள். விடுதலை வீரராகத் திகழ்ந்தார்கள். நல்ல பெரும் பொறுப்பையெல்லாம் அவர்கள் வகித்து, சீரான அரசியலை எப்பொழுதும் தந்த ஒரு மாமேதை இராஜாஜி என்பதை நாம் உணர்வோம். அவர்கள் அழுத்தந்திருத்தமான கருத்துக்களை அரசியலிலே எப்பொழுதும் மேற்கொண்டவர்கள் என்பதை நான் எடுத்துக்கூற வேண்டிய அவசியமில்லை. தன்னுடைய கருத்தை ஆழமாகச் சிந்தித்து, அதைத் திறமையாகவும், ஆற்றல் மிக்க சொற்களாலும் தெரிவிப்பதிலே அவர் என்றும் சங்கடப்பட்டதில்லை. வெறுப்பின்றி அவருடைய கருத்துக்களை எப்பொழுதும் கூறுவதிலே அவர் தலைசிறந்த தலைவராக இருந்தார். எழுத்துத் திறமையும், பேச்சுத் தன்மையும் கொண்டவர்கள். நகைச்சுவையோடு பேசுவதிலும் முனைந்திருந்தார்கள் என்பதைக் கண்கூடாகக் கண்டிருக்கிறோம்.

அவர் இந்திய விடுதலைப் போராட்டத்திலே என்னென்ன சீரிய செயல்களையெல்லாம், பணிகளையெல்லாம், தொண்டுகளையெல்லாம் ஆற்றியிருக்கிறார்கள் என்பதை விவரமாக இங்கே நான் கூற வேண்டிய அவசியமில்லை. விடுதலைப் போராட்டத்திலே காந்திஜிக்கு வலதுகரமாகயிருந்து உதவிய தலைவர். அவருடன் மாறுபட்ட கருத்துக்களைக்கூட சில நேரங்களில் தெரிவித்திருக்கிறார்கள். கடைசியாக நடந்த 1942 போராட்டத்திலே தன்னுடைய அழுத்தந்திருத்தமான கருத்தை அவர்கள் பயமின்றி கூறியிருக்கிறார்கள் என்பது நாம் எல்லோரும் உணர்ந்ததாகும். அத்தகைய தலைவர்கள் நமது அரசியலுக்கு





மிகவும் தேவையாக இருக்கிறார்கள். தான் நினைத்ததை, உண்மை என்று உணர்ந்த கருத்தை உடனடியாக எடுத்துக்கூறும் திறம் படைத்தவர்கள். நாட்டுப் பிரிவினை, பாகிஸ்தான் பிரிவினை வேண்டுமென்ற கருத்தைக் கொண்டிருந்தாலும் அதையும் ஆணித்தரமாகக் கூறினார்கள். பலர் அதையும் வன்மையாகக் கண்டித்தார்கள், எதிர்த்தார்கள். ஆனால் இராஜாஜி அவர்கள் அதைக் கவனிக்கவில்லை. அதற்கெல்லாம் மதிப்புக் கொடுத்துத் தான் அவர்களுடைய கருத்தை அளித்தார்கள்.

அதுமட்டுமல்லாமல், 1937-லே முதன்முதலாக காங்கிரஸ் இந்த மன்றத்திலே அதிகாரத்திற்கு வந்தபொழுது முதலமைச்சராக, பிரதம அமைச்சராக அவர்கள் சீரிய பணியாற்றினார்கள். அப்பொழுதுதான் அவர்கள் மது விலக்கையும், கடன் நிவாரணச் சட்டத்தையும், விற்பனை வரியையும் நம்முடைய சென்னை இராஜ்யத்திற்கு அன்றைக்குத் தந்தார்கள். அது மட்டுமல்லாமல், அவர்கள் காந்திஜியின் நிர்மாணக் கொள்கையிலே அபரிமிதமான நம்பிக்கை கொண்டிருந்தார்கள். மது விலக்கு இருக்க வேண்டுமென்று முதலிலே, சேலத்தில், அவர்கள் பிறந்த ஜில்லாவில் உருவாக்கப்பட்டது என்பதும் நம்முடைய ஞாபகத்திலே இருக்கிறது.

அதற்குப் பிறகு அவர்கள் பெரும் பொறுப்பை ஏற்றிருக்கிறார்கள். இந்தியாவில் முதல் கவர்னர் ஜெனரலாக, இந்தியன் கவர்னர் ஜெனரலாக இருந்தார்கள். அவர்களைப்போல நல்ல நிர்வாகத் திறமையுடைய தலைவர் இந்த நாட்டிற்கு மிகமிகத் தேவையாக இருந்தது நாம் எல்லோரும் அறிந்த ஒரு உண்மையாக இருக்கும். கவர்னர் ஜெனரல் பதவியில் மட்டுமல்ல, கவர்னராக, முதலமைச்சராக, பெரும் அரசியல் ஞானியாக இருந்தார்கள். அத்தகைய தலைவரை இழந்ததால் நமக்கெல்லாம் ஒரு பேரிழப்பு, தமிழகத்திற்கு—ஏன் இந்தியாவிற்கே ஒரு பேரிழப்பு ஏற்பட்டிருக்கிறது.

அதுமட்டுமல்ல, அவர்கள் அழுத்தமான கருத்துக்களைக் கொண்டிருந்தார்கள் என்பதை நாம் சிந்திக்கும்பொழுது, பி.சி.ஜி.யைப் பொறுத்தவரையில், அணுகுண்டைப் பொறுத்த வரையில் தடை செய்வதைப் பற்றி ஆழமான கருத்தைக் கொண்டிருந்தார்கள். அவர் அமெரிக்க தேசத்திற்குச் சென்று

[திரு. ஆர். பொன்னப்ப நாடார்] [1973 பிப்ரவரி 3

வெள்ளை மாளிகையிலே, அணுகுண்டு தடை செய்வதைப்பற்றிப் பேச அனுமதிக்கப்பட்ட சமயம் ஐந்து நிமிஷங்கள் என்று ஆரம்பத்திலே இருந்தது. ஆனால் ஒரு மணி நேரத்திற்கும் கூடுதலாக அந்தப் பிரச்னையின்மீது உரையாடி நல்ல கருத்துக்களை வழங்கியிருக்கிறார்கள் என்றால் அவரை உலக அரசியல் ஞானி என்று சொன்னால் அது மிகையாகாது. அத்தகைய தலைவர்கள் நமக்கிடையில் தோன்றுவது கடினமாக இருக்கும். அவர்களைப் பொறுத்த அளவிலே இங்கே எழுதப்பட்டிருக்கிறது. Great are his head and heart என்று. நல்ல திறமை மிக்கவராக இருந்தார்கள், நல்ல வெள்ளை உள்ளம் படைத்தவராக இருந்தார்கள்.

அதுமட்டுமல்ல, சுயராஜ்யா பத்திரிகையில் நல்ல கருத்துக்களையெல்லாம் அழகாக எடுத்துக் கூறியிருக்கிறார்கள். பலருக்கும் அந்தக் கருத்துக்களோடு ஒத்துப் போக முடியாமல் இருக்கலாம். ஆனாலும் பயமின்றி அந்தக் கருத்துக்களை வெளியிட்ட அந்த உத்தமத் தலைவருக்கு அஞ்சலி செலுத்த நாம் கடமைப்பட்டவர்களாவோம். அவர்கள் இட்டுச் சென்ற பாதையிலே, காட்டிய பாதையிலே நாம் நடப்பதுதான் சாலச் சிறந்ததாக இருக்கும். அத்தகைய ஒளி விளக்காகத் திகழ்ந்த அவர்களின் ஆத்மா சாந்தியடைய எல்லாம் வல்ல இறைவனை மன்றாடிக் கேட்டுக் கொள்கிறேன்.

அடுத்து, நம்மோடு உறுப்பினராக இருந்த திரு. பி. கோபால் அவர்கள், கோவை மேற்கு தொகுதியிலிருந்து தேர்ந்தெடுக்கப்பட்ட அன்னார் இந்த மன்றத்திலே உறுப்பினராகச் செயலாற்றி வந்தார்கள். அவர்கள் ஒழுக்கமுள்ள, அடக்கமுள்ள நல்ல உறுப்பினராக இருந்தார்கள். அவர்கள் நம்மை விட்டுப் பிரிந்ததால் நாம் ஆருத்துயரத்திலே இருக்கிறோம். அன்னாருடைய குடும்பத்திற்கும் எங்கள் கட்சியின் சார்பில் மனப்பூர்வமான இரங்கலைத் தெரிவித்து, என்னுடைய வார்த்தைகளை இதோடு முடித்துக்கொள்கிறேன்.

**திரு. கே. டி. கே. தங்கமணி:** உதவி சபாநாயகரவர்களே, சபைக்கு முன்னால் கொண்டுவரப்பட்டிருக்கும் இரண்டு தீர்மானங்களையும் ஆதரித்து எங்களுடைய கட்சியின் சார்பாகச் சில வார்த்தைகளைச் சொல்லலாம் என்று நினைக்கிறேன்.



1973 பிப்ரவரி 3] [திரு. கே. டி. கே. தங்கமணி]

இராஜாஜி அவர்களைப் பொறுத்தவரையில் எவ்வளவோ சொன்னாலும்கூட அதெல்லாம் தகும். சில விஷயங்களை மட்டும் இன்றைக்கு நம்மால் சொல்ல முடியும். இந்தத் தீர்மானத்தைப் பிரேரிக்கும்பொழுது இராஜாஜி அவர்களுடைய சரித்திரத்தைப் பற்றியெல்லாம் ஓரளவிற்குத் தெரிவித்தார்கள். எனக்கு ஞாபகம் இருப்பது, முதலில் டாக்டர் பி. வரதராஜுலு நாயுடு அவர்கள் மதுரையில் நடந்த பொதுக்கூட்டத்தில் கைது செய்யப்பட்டவுடன் அவருடைய கேசுக்காக வாதாட சேலம் சக்கரவர்த்தி இராஜகோபாலாச்சாரியார் வருகிறார்கள் என்று எல்லோரும் அறிவித்தார்கள். அன்றைக்கு அவருடைய வாதத்திறமையைப் புகழாதவர்கள் இல்லை என்று சொல்ல முடியும்.

அதற்குப் பிறகு சர்க்கரைச் செட்டியார் 79-வது ஆண்டு நிறைவு விழா சமயத்தில் மூத்த தலைவர்களெல்லாம் இருந்து அவரைப் பாராட்ட வேண்டுமென்ற நிலையிலே டாக்டர் பி. வரதராஜுலு நாயுடு அவர்களும், இராஜாஜி அவர்களும் கலந்து கொண்டார்கள். பெரியார் அவர்கள் அன்றைக்கு உடல்நிலை சரியாக இல்லாததால் வர முடியவில்லை.

அன்றைக்கு இராஜாஜி அவர்கள் தன்னுடன் இருந்த டாக்டர்
வரதராஜுலு நாயுடு அவர்களைப் பற்றியும், சர்க்கரைச் செட்டியார் மு.ப. 10-30
அவர்களைப் பற்றியும், பெரியார் அவர்களைப் பற்றியும் ரொம்பப் பெருமையாக எடுத்துச் சொன்னார்கள். சாதாரணமாக இராஜாஜி அவர்கள் மற்றவர்களைப் புகழ்ந்து பேசுவதில்லை, தன்னைக் குறைத்து மற்றவர்களைப் பற்றிப் பேசுவதில்லை என்ற கருத்து இருக்கும் காரணத்தால், இதை எடுத்துச் சொன்னேன். எந்த இடத்தில், எந்த நேரத்தில் தன்னோடு பணியாற்றியவர்களைப் பற்றிப் பெருமையாகச் சொல்ல வேண்டுமோ, அந்த நேரத்தில் எல்லாம் பெருமையாகச் சொல்லியிருக்கிறார்கள் என்பதற்காகத் தான் இதைக் குறிப்பிட்டேன்.

வேதாரண்யம் சத்தியாகிரகத்தின்போது மதுரை கல்லூரி மாணவர்கள் எல்லாம் கலந்து கொண்டு சிறை சென்றார்கள். துணிச்சலாக தனக்கு மனத்தில் பட்டதைச் சொல்லக் கூடியவர் என்பதை இந்த நாடு மட்டுமல்ல, உலகமே ஏற்றுக் கொண்டிருக்கிறது. இதே சபையில்தான் "Communists are my enemy No. 1" என்று சொன்னார்.

அவரிடத்தில் நேரடியாக விவாதிக்கும்போது விஷயங்களை எல்லாம் நேரடியாக எதிர்ப்பதாக இருந்தால்கூட முடியும் என்ற வகையில் சிறந்த பண்பாளராக இருந்து காட்டினார். He was a gallant enemy.

அட்மினிஸ்ட்ரேஷன் சம்பந்தமாகக் குறைபாடுகள் இருக்கிறது என்றால் அதை எதிர்த்து இயக்கம் நடத்தலாம். He always stood for a very clean administration அந்த இயக்கம் எந்தக் காரணத்தாலும் தாழ்ந்து போகக்கூடாது என்று சொல்லியிருக்கிறார்கள், keep the stir up என்று. I can only characterise him as a modern conservative.

இன்றைக்கு **நவீன முறையில் ஏற்கனவே** இருந்த பல காரியங்களை **எல்லாம் மனத்தில் கொண்டு** அதற்கேற்றபடி செயல்பட வேண்டுமென்ற உத்தமராகத்தான் இருந்திருக்கிறார்கள். மதுரையில் இருந்து வரக்கூடிய எங்களைப் போன்றவர்களுக்கெல்லாம் மதுரைக் கோயிலைத் திறந்து வைத்து எவ்வளவு பெரிய சாதனையைச் சாதித்தார்கள் என்பதைப் பற்றி இந்த சபையில் முன்னரே கூறியிருக்கிறேன். இராஜாஜி அவர்கள் அரசியலுக்கு வந்து, மதுரைக் கோயிலைத் திறந்து வைக்காமல் இருந்திருந்தால் என்னைப் போன்றவர்கள் மதுரைக் கோயிலுக்குப் போக முடியாத நிலைமைதான் இருந்திருக்கும். அரிசன மக்களுக்கும், பின்தங்கிய மக்களுக்கும் எல்லாக் கோயில்களையும் திறந்து வைக்க வேண்டுமென்று முதல் முதலாக சட்டசபையில் நடவடிக்கை எடுத்தவரும் அவரே என்பதைத் தெரிவிக்க விரும்புகிறேன்.

இங்கு முதலமைச்சராக இருந்த நேரத்தில் பண்ணையாள் பாதுகாப்புச் சட்டத்தைக் கொண்டு வந்தபோது அன்றைக்குப் பேசிய பிரசங்கம் இன்றைக்கும் ஞாபகத்தில் இருக்கிறது. If you do not see the times, you will go to ruins என்று, அன்றைக்கே நிலப்பிரபுக்கள் எதிர்க்கக்கூடிய சிறந்த மசோதாவைக் கொண்டு வந்தபோது சட்டமன்றத்தில் பேசியது மாத்திரமல்ல, நிலப்பிரபுக்கள் மத்தியிலும் பேசினார்கள். அவர்கள் கம்யூனிஸ்டுகளை எதிரிகள் என்று பேசினாலும் கம்யூனிஸ்டுகளை எந்த அளவுக்கு மதித்தார்கள் என்பதை நாங்கள் எல்லாம் பலமுறை அவர்களுடன் பேசும்போது உணர்ந்திருக்கிறோம்.





முதல் முதலாக வத்தலகுண்டில் நடந்த ஜமீந்தார் ஒழிப்பு மாநாட்டில் முத்துராமலிங்கத் தேவர் அவர்களும், ஜீவானந்தம் அவர்களும் பேசினார்கள். ஜீவானந்தத்தின் பிரசங்கத்தைக் கேட்டு 'யார் இந்த எரிமலை மனிதர்?' என்று கேட்டார்கள். சாகிற வரை எரிமலை மனிதனாகவே இருக்கிறேன் என்று ஜீவானந்தம்கூடக் கூறினார்.

இராஜாஜி அவர்கள் சிறந்த அறிவாளி என்பதை இந்திய நாட்டு மக்கள் மட்டுமல்லாது உலகத்தில் இருப்பவர்கள் எல்லோரும் அறிந்திருக்கிறார்கள். அத்தகைய சிறந்த தலைவருடைய, சமாதானத்தை விரும்புகின்ற தலைவருடைய இரங்கல் தீர்மானத்தை ஆதரிப்பதில் எங்களுடைய கட்சி பெருமைப்படுகிறது என்று தெரிவித்துக் கொள்கிறேன்.

அடுத்து, திரு. கோபால் அவர்களைப் பற்றி எனக்கும் ஓரளவு தெரியும். இன்று கூட கோவையில் இருந்து கோபால் சம்பந்தமாகத் தீர்மானம் கொண்டுவரப்பட வேண்டுமென்று கோரியிருக்கிறார்கள். நமக்குள்ளே எவ்வளவோ மாச்சரியங்கள் இருந்தால்கூட, கட்சி மாச்சரியம் இல்லாமல் எல்லோருக்கும் ஆதரவாகச் செயல்பட்ட சிறந்த சட்டமன்ற உறுப்பினர் என்று எங்கள் கட்சித் தலைவர்கள் எல்லோரும் சொல்லியிருக்கிறார்கள். இன்று கூட அவர் தங்கியிருந்த வீட்டைப் பார்த்தால், எவ்வளவு எளிய வாழ்க்கை வாழ்ந்தார் என்பதைப் புரிந்துகொள்ள முடியும். அவருடைய துணைவியார் இன்றைக்கும் ஆசிரியராகத்தான் பணியாற்றி வருகிறார். அவர் நகரவை உறுப்பினராக இருந்து அதில் கூட கட்சி மாச்சரியம் இல்லாமல் செயல்பட்டவர். அவர் சட்டமன்றத்திற்கு வரும்போதுகூட தலையைக் குனிந்து கொண்டே வருவார், அப்படியே யாரிடத்திலும் பேசாமல் போய் விடுவார். ஏதாவது கேட்டால்தான் பதில் சொல்வார். விவசாயப் போராட்டம் நடந்த நேரத்தில் அவர் தாக்கப்பட்டார். அதைப் பற்றி அவரிடத்தில் கேட்டேன். எதிர்த்துப் பேசிய காரணத்தால், இது நடந்தது என்ற அளவிலேதான் பதில் சொன்னார். வேறு ஒன்றும் கூறவில்லை. அந்த அளவுக்கு பண்புள்ள ஊழியரை நாம் இழந்திருக்கிறோம். அவருக்காக வந்திருக்கக்கூடிய இரங்கல் தீர்மானத்தையும் ஆதரிக்கிறேன் என்று கூறி முடித்துக் கொள்கிறேன்.

[1973 பிப்ரவரி 3

திரு. ஏ. ஆர். பெருமாள்: அவைத் தலைவர் அவர்களே, இந்தியாவின் மிகப் பெரிய தலைவரும், அரசியல் மேதையுமான இராஜாஜி அவர்கள் மறைவுக்காகக் கொண்டு வந்திருக்கக்கூடிய இரங்கல் தீர்மானத்தை ஆதரித்து எங்களுடைய கட்சியின் சார்பாக சில கருத்துக்களைச் சொல்ல விரும்புகிறேன். 1960-ம் ஆண்டிலிருந்து 1970-ம் ஆண்டு வரை, ஏறத்தாழ பத்தாண்டுக் காலம், மறைந்த எங்களது தலைவர் தேவரும், இப்போது எங்கள் தலைவராக இருக்கும் மூக்கையாத் தேவரும் இராஜாஜி அவர்களோடு சேர்ந்து பார்வார்டு பிளாக் கட்சி அரசியல் உறவைக் கொண்டிருந்தது. சுதந்திராக் கட்சியைத் தொடங்கியபோது 1960-ல் இருந்து 1962-ம் ஆண்டு வரை இராஜாஜி அவர்களோடு சேலம், கோவை, தஞ்சை போன்ற மாவட்டங்களில் நான் சுற்றுப் பயணம் செய்திருக்கிறேன். அவருக்குச் சமதையாகச் சொல்லுகிறேன் என்று யாரும் தவறாக எண்ணிவிட வேண்டாம். அவரோடு சாதாரணத் தொண்டனாகச் சென்றேன். அப்போது அவருடைய பழக்கவழக்கங்களை, அன்றாட நடைமுறைக் காரியங்களைக் கவனிக்கக்கூடிய கட்டுப்பாடான முறைகளை எல்லாம் நன்றாகத் தெரிந்திருக்கிறேன்.

இராஜேந்திரப் பிரசாத் அவர்கள் மறைவதற்கு முன்பு அன்று இராஜாஜி அவர்களுக்கு மாதம் ஒன்றுக்கு ஆயிரம் ரூபாய் பென்ஷன் வந்து கொண்டிருந்தது. அந்த நேரம் இராஜாஜி அவர்களைப் பற்றி நாட்டில் 'ஆயிரம் ரூபாய் பென்ஷனை வாங்கிக் கொண்டு இப்படி எதிர்ப்பாகப் பேசலாமா?' என்று பேசி வந்தார்கள். அன்று அவருடைய தோல பெட்டியில் நிறைய மருந்துகளும், மாத்திரைகளும் இருந்தன. நான் பக்கத்தில் இருந்தேன். அப்போது சொன்னார் 'ஆயிரம் ரூபாய் பென்ஷன் வாங்குகிறேன் என்று சொல்லுகிறார்கள். மருந்துக்கே 800 ரூபாய் ஆகிறது' என்று. என்னைப் போன்றவர்கள் அதைத் தெரிந்து கொள்ள வேண்டுமென்பதற்காகச் சொன்னார். எந்த ஒரு காரியமாக இருந்தாலும் மிகவும் முறையாகச் செய்து வந்தார். தனிப்பட்ட வாழ்க்கையானாலும், அரசியல் துறையானாலும், இலக்கியத் துறையானாலும், சமுதாயத் துறையானாலும், எந்தத் துறையிலும் தனக்கு எனத் தனிப்பாதை வகுத்துக் கொண்டு, தனக்கென தனிக் கருத்தை வைத்துக் கொண்டு, அந்தக் கருத்தை நாடு எந்த அளவுக்கு ஏற்றுக் கொள்கிறது, ஏற்றுக்



1973 பிப்ரவரி 3] [திரு. ஏ. ஆர். பெருமாள்]

கொள்ளவில்லை என்பதைப் பற்றிக் கொஞ்சம் கூட கருதாமல் தானே எடுக்கிற முடிவைத் துணிவோடு சொல்லுகிற மிகப் பெரிய அறிவாளியாக இராஜாஜி அவர்கள் திகழ்ந்தார்கள். அதனால்தான் மகாத்மா காந்தியடிகளையே, தேசத்தின் தந்தை என்று போற்றப்படுகின்ற தலைவரையே தன்னுடைய கருத்துக்குச் சாதகமாகத் திருப்பக்கூடிய ஆற்றல் படைத்தவராக இருந்தார். இந்தியாவை வெட்டுவது பசுவை வெட்டுவது போலாகும். அப்படி இந்தியா பிரிவதாக இருந்தால் அது என்னுடைய பிணத்தின் மீதுதான் நடக்கும் என்று பேசிய காந்தியடிகளைப் பிரிவினைக்கு ஒத்துக் கொள்ள வைத்தவர் இராஜாஜி என்பது எல்லா அரசியல்வாதிகளுக்கும் தெரியும்.

வெளிநாட்டிலிருந்து வருகின்ற அரசியல் தலைவர்கள் ஜவகர்லால் நேருவைச் சந்தித்து, வல்லபாய் பட்டேலைச் சந்தித்து, ராஜேந்திர பிரசாத்தை சந்தித்து மற்ற அரசியல் தலைவர்களை எல்லாம் சந்தித்து சென்னைக்கு வந்து இராஜாஜியைச் சந்தித்துவிட்டுப் போகும்போது அந்த வெளிநாட்டினர் சொல்லுகின்ற கருத்து 'இராஜாஜி அவர்களைச் சந்தித்துப் பேசிய பிறகு தான் இந்தியாவில் இருக்கும் அரசியல் நிலைமையைத் தெளிவாகப் புரிந்து கொள்ள முடிகிறது' என்பதாகும்.

அப்படி எந்த ஒரு கருத்தையும் சொல்கிற முறையில் தெளிவாகவும், கேட்கக் கூடியவர்கள் எளிமையாகப் புரிந்து கொள்ளக்கூடிய அளவிலும் வலிமையான கருத்துக்களைச் சொல்லக் கூடிய தலைவராக அவர்கள் இருந்தார்கள். அப்பேர்ப்பட்ட தலைவர் அரசியல் துறையில் மாத்திரமல்ல, தேவர் அவர்களைப் போல் ஆன்மீகத் துறையிலும் அவர்கள் சிறந்து விளங்கினார்கள். தேவர் அவர்கள் ஆன்மீகத் துறையில் தலைவராக இருந்து வெறும் பேச்சாளராக மட்டும் இருந்து விட்டார்கள். ஆனால் இராஜாஜி அவர்கள் எழுத்து வடிவத்திலும் இலக்கியத் துறையில் பல்வேறு நூல்களை எழுதியிருக்கிறார்கள். அதுவும் இந்தியாவில், நம்முடைய சமயக் கருத்துப்படி மண் ஆசை, பெண்ணாசை, பொன்னாசை என்ற மூன்று ஆசைகளையும் வெறுத்தவன் ஞானி என்று தத்துவம் சொல்கிறதல்லவா, அந்த மூன்று ஆசைகளில் மண் ஆசை, பெண்ணாசை, பொன்னாசை என்ற மூன்று ஆசைகளில் பொன்னைக் கொடுத்து மண் வாங்கலாம், மண்ணைக்கொடுத்து பொன் வாங்கலாம், ஆனால்

[திரு. ஏ. ஆர். பெருமாள்] [1973 பிப்ரவரி 3

மண்ணையும் பொன்னையும் பொது ஆசையாக்கி காஞ்சனம் என்று பெயர் வைத்தார்கள். பெண் ஆசைக்கு காமம் என்று பெயர் வைத்தார்கள். காமத்தின் பெயரால் இராமாயணத்தையும், காஞ்சனத்தின் பெயரால் மாகபாரதத்தையும், சக்கரவர்த்தி திருமகன், வியாசர் விருந்து என்ற இருபெரும் காப்பியங்களை தமிழகத்திற்குத் தந்தவர் இராஜாஜி அவர்களாவார்.

அப்படி எந்த ஒரு துறையானாலும் சரி, தனக்கென சிறப்பான தொரு பாதையை வகுத்துக்கொள்ள அவர்களது மூளை பலம் அவர்களுக்கு உதவியாக இருந்தது. அதே நேரத்தில் எவ்வளவு கருத்து மாறுபாடு கொண்டவர்களாக இருந்தாலும் சரி, தன்னை எவ்வளவு எதிர்த்துப் பேசியவர்களாக இருந்தாலும் சரி, தன்னை எவ்வளவு கண்டனத்திற்குரியவராக ஆக்கியிருந்தவர்களானாலும் சரி அவர்களை நேரடியாகப் பார்க்கிறபோது, நேரடியாகப் பழகுகிற சந்தர்ப்பம் வரும்போது, நேரடியாகப் பேசக்கூடிய வாய்ப்பு கிடைக்கும்போது மிக உயர்ந்த பாசத்தோடும் அன்போடும், அடக்கத்தோடும், பண்போடும் பேசிப் பழகுவதிலும், வழி காட்டுவதிலும் இந்தியாவின் பண்பாட்டினை, தமிழ் சமுதாயத்தின் பண்பாட்டினைக் காப்பாற்றும் சிறந்த தலைவராக இராஜாஜி அவர்கள் விளங்கி வந்தார்கள்.

அப்பேர்ப்பட்ட தலைவர், அவர்கள் வாழ்ந்து வந்த 95 ஆண்டுக் காலத்தில் அறுபது ஆண்டுகளுக்கும் மேலாக அரசியல் துறையிலானாலும் சரி, கல்வி, சமுதாயத் துறையில் பணி புரிந்த காலத்திலும் சரி, இலக்கியத் துறையில் எழுதுகிற காலத்திலும் சரி அவர்கள் பல்வேறு கருத்துக்களைக் கூறி வந்திருக்கிறார்கள். அந்தக் கருத்துக்கள் முழுமையையும் நாம் ஏற்றுக் கொண்டிருக்கிறோமா என்றால், இல்லாமல் இருக்கலாம். அவர்கள் கூறி வந்த கருத்துக்களில் நமக்கு முரண்பட்ட கருத்துக்கள் இருக்கலாம். இருந்தாலும், அவர்கள் கூறி வந்த கருத்துக்களில் பெரும்பாலான கருத்துக்கள் சிறந்த கருத்துக்களாகும் என்பதோடு இந்தியச் சமுதாயம், தமிழ் சமுதாயம் பன்னெடுங் காலம் நல்ல முன்னேற்றம் பெறக்கூடிய அளவிற்குள்ள கருத்துக் களாகும், அவர்கள் வாழ்விற்கு வளம் அளிக்கக்கூடிய கருத்துக் களாகும், நமது பண்பாட்டிற்கு, நமது நாகரிகத்திற்கு, நம் பண்பிற்கு, நம் கலாசாரத்திற்கு உரம் அளிக்கக் கூடிய கருத்துக்களாக இருந்து வந்தன என்பதை எவராலும் மறுக்க



1973 பிப்ரவரி 3] [திரு. ஏ. ஆர். பெருமாள்]

முடியாது. அப்பேர்ப்பட்ட மாபெரும் தலைவரோடு பார்வேர்ட் ப்ளாக் கட்சி பத்து ஆண்டுகளாக, 1960 முதல் 1970 வரை சுதந்திராக் கட்சியோடு தொடர்பு வைத்திருந்தது. அவர்கள் தேவர் அவர்களோடு பத்தாண்டுக் காலம் தொடர்பு வைத்துக் கொண்டிருந்தார்கள். 1962-ம் ஆண்டுத் தேர்தலில் தேவர் அவர்களும் இராஜாஜி அவர்களும் தொடர்ந்து சேர்த்து சுற்றுப் பயணம் செய்தார்கள். பத்தாண்டுக் காலம் இராஜாஜி அவர்களோடு நெருங்கிய தொடர்பு வைத்துக் கொண்டு அவர்களை நாங்கள் எங்கள் தலைவராக ஏற்றுக்கொண்டிருந்தோம். 1963-ல் தேவர் அவர்கள் மறைந்ததற்குப் பின்னால் எங்களது மாபெரும் தலைவராக, எங்களது வழிகாட்டியாக இராஜாஜி அவர்கள் இருந்து வந்தார்கள். இன்று எங்கள் தலைவராக இருக்கும் திரு. மூக்கையா தேவர் அவர்கள் இராஜாஜி அவர்கள் மீது தனி அன்பு வைத்திருந்தார்கள். இராஜாஜி அவர்கள் மறைவு கேட்டு திரு. மூக்கையா தேவர் அவர்கள் பெரும் துயரத்திற்கு உள்ளானார்கள். கருத்து மாறுபாடு ஏற்பட்டு கட்சியிலிருந்து பிரிந்து சென்று விட்டிருந்தாலும் இராஜாஜி அவர்கள் மீது தனிப் பற்றும் பாசமும் வைத்திருந்தார்கள் திரு. மூக்கையா தேவர் அவர்கள். இராஜாஜி அவர்கள் மறைவு கேட்டு கண் கலங்கித் துடித்துக் கொண்டிருந்தார்கள். இராஜாஜி அவர்களின் மறைவு, மாபெரும் தலைவரான இராஜாஜி அவர்கள் நம்மை விட்டு பிரிந்துவிட்டது தமிழ் சமுதாயத்திற்கு மட்டுமல்ல, பாரத சமுதாயத்திற்கே ஏற்பட்ட மிகப் பெரிய இழப்பாகும். அவர்களது இழப்பு ஈடுகட்ட முடியாத இழப்பாகும்—இது சாதாரணமாகச் சொல்லக்கூடிய வார்த்தைகள் அல்ல, வெறும் சம்பிரதாயப் பேச்சல்ல.

இராஜாஜி அவர்களின் மறைவு உண்மையிலேயே ஈடுகட்ட முடியாத பெரும் இழப்பாகும். இராஜாஜிக்கு ஈடான ஒரு அரசியல் தலைவரை அரசியல் உலகம் இனிமேல் காண முடியுமா என்பது ஐயப்பாட்டிற்குரியதாகும். அப்பேர்ப்பட்ட தலைவரை இழந்து தவிக்கிற அவர்தம் குடும்பத்தாருக்கும், அவர்களது இயக்கத்தில் தொடர்பு கொண்டிருக்கும் தொண்டர்களுக்கும் எனது கட்சியின் சார்பாக எங்கள் ஆழ்ந்த அனுதாபத்தைத் தெரிவித்துக் கொள்கிறேன்.

[திரு. ஏ. ஆர். பெருமாள்] [1973 பிப்ரவரி 3

அத்துடன், கோவை மேற்குத் தொகுதியைச் சேர்ந்த திரு. ப. கோபால் அவர்களின் மறைவு குறித்தும் என் கட்சி சார்பாக சில கருத்துக்களைச் சொல்ல விரும்புகிறேன். பேரறிஞர் அண்ணா அவர்கள் வழங்கிய கடமை, கண்ணியம், கட்டுப்பாடு என்ற மூன்று கொள்கைகளை உள்ளத்தில் உறுதியோடு ஏற்றி வைத்து, அண்ணா அவர்கள் எந்த அரசியல் நாகரீகத்தைக் கற்றுத் தந்தார்களோ, அந்த அரசியல் நாகரிகப்படி அண்ணா அவர்கள் வகுத்துத் தந்த புதிய பாணியின் அடிப்படையில் மக்களுக்குத் தொண்டாற்றி வந்த, அறிவு நிறைந்த, அடக்கம் நிறைந்த, தொகுதி மக்களின் நல்லெண்ணத்தைப் பெற்ற ஒரு சிறந்த உறுப்பினரை, திரு. கோபால் அவர்களை இழந்திருக்கிறோம். திரு. கோபால் அவர்களின் மறைவால் வாடி நிற்கும் அவர்தம் குடும்பத்தாருக்கும் என் கட்சியின் சார்பாக ஆழ்ந்த அனுதாபத்தைத் தெரிவித்து விடைபெறுகிறேன். வணக்கம்.

**திருப்பூர் திரு. ஏ. எம். மொய்தீன்:** பேரவை உப தலைவர் அவர்களே, இராஜாஜி அவர்களின் பெயராலும், திரு. கோபால் அவர்களின் பெயராலும் கொண்டுவரப்பட்டுள்ள இரங்கற் தீர்மானத்தை, அவை முன்னவர் அவர்கள் பிரேரேபித்துள்ள தீர்மானத்தை ஆதரிக்குமுகத்தான் நான் சில வார்த்தைகளைச் சொல்ல உங்கள் முன் நிற்கிறேன். மனிதன் உயிரோடு இருக்கும் போது மனிதனை அளவுகோல் வைத்துத்தான் சிந்திக்கிறான். மனிதன் இறந்த பிறகுதான் மனிதப் பண்போடு மனிதனைச் சிந்திக்கிறான். இது உலக இயற்கை. ஒரு மனிதனைப் பற்றிச் சிந்திக்கும்போது உயிரோடு இருக்கும்போது சிந்திப்பதற்கும் இறந்ததற்குப் பிறகு சிந்திப்பதற்கும் வித்தியாசம் உண்டு. இறந்ததற்குப் பிறகு சிந்திக்கும் சிந்திப்பு இருக்கிறதே அது மனிதப் பண்போடு சிந்திக்கும் சிந்திப்பாக இருக்கிறது. நான் முஸ்லீம் லீக் கட்சியின் தலைவன் என்ற முறையில் இங்கு பேசினாலும் நான் மிகத் தாழ்மையாகக் குறிப்பிட்டுக்கொள்ள விரும்புகிறேன், நான் ஒரு மனிதன் என்ற முறையில்தான் இந்த இரங்கற் தீர்மானத்தை ஆதரித்துப் பேசுகிறேன். நான் இராஜாஜி அவர்களைப் பற்றி, சுதந்திராக் கட்சித் தலைவர் என்ற முறையில் பேசாமல் அவர்களை ஒரு பேரறிஞர் என்ற முறையில் நான் இங்கு பேச ஆசைப்படுகிறேன். மனிதர்கள் தோன்றுவார்கள், இறப்பார்கள். ஆனால் இறந்ததற்குப் பிறகு மனிதர்களைப்



1973 பிப்ரவரி 3] [திருப்பூர் திரு. ஏ. எம். மொய்தீன்]

புகழ்வது மட்டுமல்ல, அவர்களிடத்திலிருந்து சில பண்பாடுகளைப் பெற வேண்டியிருக்கிறது. அந்தப் பண்பாட்டிற்கு இலக்கணமாக இராஜாஜி அவர்கள் திகழ்ந்திருக்கிறார்கள் என்று நான் துணிந்து சொல்வேன். ஒன்று என் நினைவிற்கு வருகிறது. அரசியலில எதிர்த்தேதான் அவர்கள் அதிகமாக நீந்தியிருக்கிறார்கள். எது தனக்கு சரி என்று படுகிறதோ, எது நியாயம் என்று தான் கருதுகிறாரோ, அதை கட்சியின் எல்லைக்கோடு என்றல்ல, அதைத் தாண்டி நிற்கிற பெரும் பலம், எதைப்பற்றியும் சிந்திக்காமல் தன்னுடைய கருத்துக்களை மக்களுக்காகச் சொல்வதில் முதன்மை வகித்திருக்கிறார்கள் என்று சொன்னால் அது மிகையாகாது.

நாட்டுப் பிரிவினை உச்சக்கட்டத்தில் இருந்தபோது, மதிப்பு மிக்க சர்தார் வல்லபாய் பட்டேல் அவர்கள் பூமி பிளந்து தூள் தூளானாலும், வானம் இடிந்து பொடிப் பொடியானாலும் நான் அதற்கு இணங்க மாட்டேன் என்று சொன்ன நேரத்தில் மிகத் துணிந்து பிரிய வேண்டியதுதான், அந்தக் கட்டத்திற்கு அது வந்துவிட்டது, நிச்சயமாகப் பிரியத்தான் வேண்டும் என்று சொன்னபோது அவர்களுக்கு நாட்டில் ஏற்பட்ட எதிர்ப்பு கொஞ்சநஞ்சமல்ல. அதையும் அவர்கள் சமாளித்தார்கள்.

இன்னொன்றும் என் நினைவிற்கு வருகிறது. காலேஜ் மாணவர்களால் ஒரு கூட்டம் கூட்டப்பட்டது. பேரறிஞர் அண்ணா அவர்களுக்கும், எனக்குக் குறிப்பாகத் தெரிகிற படம் என்னிடம் இருப்பதால் சொல்கிறேன், திரு. நெடுஞ்செழியன் அவர்களும் அந்தக் கூட்டத்திற்கு வந்திருந்தார்கள். அந்தக் கூட்டத்திற்கு இராஜாஜி அவர்களும் வந்திருந்தார்கள். அப்போது ஒரு சம்பவம் நடந்தது. இராஜாஜி அவர்கள் பேசுவதற்கு எழுந்திருக்கும் சில நிமிடங்களுக்கு முன்பு--எல்லா மாணவர்களும் என்று நான் நினைக்கிறேன்—மாணவர்கள் அவர்களிடம் சென்று கேட்டார்கள் "ஐயா, நீங்கள் முன்பு இந்தியை ஆதரித்தீர்களே, இப்போது எதிர்க்க வந்திருக்கிறீர்களே, ஏன்?" என்று கேட்டார்கள். வாய் பேசி மூடுவதற்கு முன்பு அவர்கள் சொன்னார்கள், அப்போது அது எனக்கு சரி என்று பட்டது, அதைச் சொன்னேன், இப்போது எது எனக்கு சரி என்று படுகிறதோ அதைச் சொல்கிறேன். சொல்லும் உரிமையோ[illegible]

[திருப்பூர் திரு. ஏ. எம். மொய்தீன்] [1973 பிப்ரவரி 3

நான் சொல்கிறேன், கேட்கும் உரிமையோடு நீங்கள் கேளுங்கள், தீர்ப்பு அளிப்பது உங்கள் உரிமை என்று சொன்னார்கள். இதிலிருந்து நாம் புரிந்து கொள்வது என்னவென்றால், ஒரு மனிதன் அவனுக்கு எது சரி என்று நினைக்கிறானோ அதைச் சொல்வது என்பதாகும். கட்சி வாதம் அவர் பேசவே இல்லை, எப்போதுமே கருத்தைச் சொல்லி இருக்கிறார். கட்சியின் கருத்தையும் சொல்லியிருக்கிறார். ஆனால் அவர் கட்சி வாதம் பேசவில்லை. கட்சி வாதத்திற்கு அவர் தன்னை பலியாக்கிக் கொண்டதேயில்லை. கட்சியின் கருத்து ஒரு பக்கம் இருந்தாலும், ஒன்றில் நியாயம் இருக்குமானால் உடனே அதை ஏற்றுக்கொள்ளும் தன்மை அவரிடத்தில் இருந்தது. இதையெல்லாம் அரசியல் ஈடுபாடுடைய, அரசியலோடு தொடர்புடைய, அரசியலில் வருங்காலத்தில் பெரிய பெரிய பங்கு பெறும் நம்முடைய அணி சிந்தித்துப் பின்பற்ற வேண்டிய செயலாகும் என்று கூறிக்கொள்வேன்.

அவர் 1930-ல் ஒரு போராட்டத்தை நடத்தினார். அந்தப் போராட்டத்தில் பங்கு பெறுவதற்காக நான் திருப்பூரிலிருந்து வந்திருந்தேன். அப்போது எனக்கு உடல் நலம் இல்லாமல் இருந்தது. மிக நோய் வாய்ப்பட்டு இருந்தேன். பனியோ அதிகமாக இருந்தது. உப்பு காய்ச்சுகிற இடத்திற்கு நானும் போய் இருந்தபோது இருமிக் கொண்டிருந்தேன். எனக்கு டி.பி. என்று அவர் கருதி விட்டார். கூப்பிட்டுச் சொன்னார், தம்பி நீ வந்ததே போதும். நீ போராட்டத்தில் பங்கு பெற்றதாகக் கருதுகிறேன், நீ வீடு திரும்பலாம் என்று சொன்னார். அவர் சொல்லியதற்குப் பிறகும் நான் ஒளிந்து இருந்து, வேறு ஒருவரிடத்திலிருந்து கொடியைப் பிடுங்கி சென்று கொண்டிருந்த போது, பின்னாலிருந்து பார்த்து விட்டு "நான் உனக்கு முன்பே சொல்லி விட்டேன், நீ போகலாம்" என்று சொல்லிவிட்டார். தொண்டர்களைப் பிடித்துக்கொண்டு வந்து, கூட்டம் சேர்த்து தன்னுடைய கட்சியின் பலத்தைக் காட்டுகிற இன்றைய சூழ்நிலையில், வருகின்றவர்களையும் "வேண்டாம், நீ நோய்வாய்ப் பட்டிருக்கிறாய், தம்பி, பரவாயில்லை பணி தான் முக்கியமே தவிர, மற்றவை முக்கியமல்ல" என்று எடுத்துக்காட்டும் பண்பு இருக்கிறதே, அது இப்போது இருக்கும் அரசியல் வாதிகளுக்கு மிகமிகத் தேவை என்று கருதுகிறேன்.



1973 பிப்ரவரி 3] [திருப்பூர் திரு. ஏ. எம். மொய்தீன்]

இன்னொன்று அவர்களிடத்திலேயிருந்து கற்றுக்கொள்ள வேண்டியது—நேச மனப்பான்மை எந்த நேரத்தில் எது தேவையோ, அதற்கு இணங்குவதும், அதைக் கேட்பதிலும் அவர் எப்போதுமே தயக்கப்பட்டதில்லை. எங்களுடைய அருமைத் தலைவர் காயிதே மில்லத் அவர்களிடத்திலே தன்னுடைய மந்திரி சபையை நிலைப்படுத்துவதற்காக உதவி கேட்கிறபோது சொன்னார்—இரண்டு கிழவர்களும் சந்தித்தார்கள். நான் அப்போது உடன் இருந்தேன்—"நான் உங்களின் பலத்தை நாடி வந்திருக்கிறேன்". எங்கள் தலைவருக்கு இருந்த அடக்கத்தில், 'பலம் உங்களுடையது அதிகம், அதில் நாங்கள் சேர்ந்து கொள்ளவேண்டுமென்கிறீர்களா' என்று சொன்னார். அதற்கு அவர் 'உங்களுடையது தான் ஊன்றுகோல், உங்களுடைய உதவி தேவை' என்று சொன்னார். எங்கள் தலைவர் பின்னரும் சொன்னார். 'உதவி என்று சொல்லாதீர்கள், ஆதரவு' என்று சொல்லுங்கள். மறுபடியும் சொன்னார், மீண்டும் சொன்னார், "இப்போது உங்கள் உதவி தான் தேவை" இந்த நாட்டிற்கும், எங்களுக்கும், என்னுடைய மந்திரி சபையைக் காப்பாற்றுவதற்கும் உங்கள் பலம் உதவியாக இருக்கும் என்று சொன்னார். அதுதான் அரசியல் பண்பு. நாங்கள் வேலூரில் முஸ்லீம் லீக் மாநாடு ஒன்றை நடத்தினோம். அந்த மாநாட்டிற்கு அவரை அழைத்தோம். நாங்கள் அழைத்த போது, 'முஸ்லீம் லீக் மாநாட்டிற்கா, நானா' என்று கேட்டார். 'ஆமாம், நீங்கள்தான் வரவேண்டுமென்று' சொன்னோம். அவராகவே சொன்னார், "வாஸ்தவம்தான், ஒரு சமயம் என்னுடைய மந்திரிசபையை காப்பாற்றுவதற்காக மட்டுமல்ல என்னுடைய மானத்தைக் காப்பாற்றுவதற்காகவும் உதவியாக இருந்த உங்கள் கூட்டத்தில் வந்து நன்றி சொல்வது என்னுடைய கடமை, வருகிறேன்" என்று. அவர் அந்த மாநாட்டிற்கு வந்தபோது அந்த மாநாட்டை நடத்துகிறவர்கள் அவருக்கு அதற்குள்ளாக தொப்பியைப் போட ஆரம்பித்து விட்டார்கள், அவருடைய தலையில் துருக்கி குல்லாயைப் போட்டுவிட்டார்கள், அங்கேயிருந்த நம்முடைய அரசியல் பண்பாளர்கள். அதைப் பார்த்துவிட்டு மிகச் சாதாரணமாகச் சொன்னார் 'எனக்குப் பக்கத்தில் இருக்கிற இஸ்மாயில் சாகிப் தலைக்குத் தொப்பி போட்டுக் கொண்டிருக்கிறார். அவருக்கு தொப்பியும் இருக்கிறது, அந்த உள்ளமும் ஒன்றாக இருக்கிறது. நான் தொப்பி மட்டும்தான் போட்டுக்கொண்டிருக்கிறேன், உள்ளம் வேறாக இருக்கிறது.' அந்தத் [illegible]

[திருப்பூர் திரு. ஏ. எம். மொய்தீன்] [1973 பிப்ரவரி 3

சொல் நாகரீகம், உள் உணர்வு, அந்தப் பண்பு வேண்டும். அந்தப் பண்பைப் பின்பற்றுவதுதான் அரசியல் வாதிகளின் முக்கியமான நாகரீகமாக இருக்கவேண்டும். அவர் அந்த மாநாட்டில் பேசுகிற போது சொன்னார். அவருடைய குறிப்பிலிருந்து சொல்கிறேன் —அதைக்கொண்டு வந்திருக்கிறேன். "ஒரு ஜனநாயகப் பண்பு நிலைத்து நிற்க வேண்டுமானால், ஒரு ஜனநாயகம் வளர்ந்து வருவதற்கு ஆதரவு கொடுத்து பெருமைப்படுத்துவது" என்று சொன்னார். அது எவ்வளவு பொருத்தமானது இந்த நேரத்தில் என்பதை தயவுசெய்து சிந்திக்க வேண்டுமென்று கேட்டுக்கொண்டு, அந்தப் பெருமகனின் மறைவு இந்தத் தமிழ்நாட்டிற்கு மட்டுமல்ல, இந்தியாவிற்கு மட்டுமல்ல, உலகத்திற்கே ஒரு நஷ்டம். அந்தத் துணிவுள்ள மனிதனை நாம் இழந்தது ஒரு பெரும் பேரிழப்பு. அந்தப் பேரிழப்பு ஈடு செய்யமுடியாதது மட்டுமல்ல. எப்போதுமே நிறைவு செய்ய முடியாதது.

எதையுமே சாதாரண பாஷையில் சொல்லி மக்களுக்கு விளங்க வைக்கும் தன்மையுடையவர். அந்தப் பெருமகனாரை இழந்த துக்கத்தில், நான் முன்பு சொன்னதுபோல் கட்சியின் சார்பில் மட்டுமல்ல, தனிப்பட்ட மனிதன் என்ற முறையில் பங்கு பெற்று, அந்த பெருமகனார் ஆத்மா சாந்தியடைய வேண்டும் என்று நான் பிரார்த்திப்பதோடு, அவருடைய பிரிவால் வாடுகின்ற அவருடைய குடும்பத்தாருக்கும் என்னுடைய ஆழ்ந்த அனுதாபத்தை என் சார்பிலும், என் கட்சியின் சார்பிலும் தெரிவித்துக் கொள்கிறேன்.

அடுத்ததாக, என்னுடைய அருமை நண்பர் கோவை கோபால் அவர்கள் மறைவு குறித்து ஒரு சில வார்த்தைகள் கூற விரும்புகிறேன். அவரிடத்தில் எனக்கு அரசியல் தொடர்பு உண்டு. ஏனென்றால் நான் அந்த ஜில்லாவில் இருப்பதால். அவர் ஒரு அடக்கம் மிக்கவர், கட்சிப் பணியில் பற்றும் பாசமும் மிக்கவர், மிக்க தூய்மையானவர். இங்கே பேசிய நம்முடைய கம்யூனிஸ்ட் கட்சித் தலைவர் மாண்புமிகு தங்கமணி அவர்கள் சொன்னார். 'அவர் தலை குனிந்து வருவார், மௌனமாகப் போவார்' என்று. அவர் சொன்னதை ஏற்றுக் கொள்கிறேன். தலை குனிந்து வருவார், உண்மைதான், ஆனால் அவர் உள்ளம் தலை நிமிர்ந்து இருந்தது. கொள்கையின் வேராக இருந்தார். அண்ணாவின் தோழர்களில் ஒருவராக இருந்தார், அவருடைய



1973 பிப்ரவரி 3] [திருப்பூர் திரு. ஏ. எம். மொய்தீன்]

அன்புத் தம்பிகளில் ஒருவராக இருந்தார். அரசியலின் பெயரால் பணத்தை ஆற்றிவிட்டு, அவருடைய மனைவியையும், மற்றவர்களையும் இனிமேல் உழைத்துச் சாப்பிடுங்கள் என்ற அளவில் விட்டு விட்டு, ஒரு அரசியல் சூழ்நிலையிலிருந்து தன்னை மறைத்துக்கொண்டு விட்ட அந்தப் பெருமகனுக்கு என் உளமார அஞ்சலியைச் செலுத்தி, எங்கள் கட்சியின் சார்பாக அனுதாபத்தைத் தெரிவித்துக் கொண்டு இந்த இரங்கல் தீர்மானங்களை ஆதரித்து என்னுடைய உரையை முடித்துக்கொள்கிறேன்.

* DR. H. V. HANDE : Mr. Deputy Speaker, Sir, in support of the two condolence resolutions before us, viz., the passing away of revered Rajaji, one of our greatest leaders and also in support of the resolution with regard to the passing away of my distinguished colleague Mr. P. Gopal of Coimbatore West Constituency, I rise to offer my remarks.

Mr. Gopal was a distinguished friend of mine and I think one of those rare specimens of politicians who worked his way into the political career in an unobtrusive manner without any show or without any pomp. It was a sad experience for me when I heard that we had lost one of our distinguished colleagues of the Assembly. When I was in Coimbatore recently I met quite a number of my party members. Unanimously there was only one opinion, that Mr. Gopal was not only a distinguished member of the Legislative Assembly but that he conducted his political life even outside the Assembly with rare distinction and dignity and also he had earned a name that he was totally incorruptible. He did மு.ப.
things in an incorruptible manner. The net result was that when 11-00
he passed away, Mr. Gopal has not left any property for his family. This is what every one of my friends was telling me when I was in Coimbatore. Practically he has not left any property for his family. He has not left anything for them to use, or to the use the proverbial term, he has left them on the streets. I only hope and trust that the public will realise how much sacrifice an honest politician has to make in these hard days. On behalf of the Swatantra Party, Sir, I associate myself with the condolence resolution moved on the passing away of Thiru Gopal.

Now, Sir, I come to the most painful part of today's deliberations, namely, associating myself with the Resolution on the

passing away of the greatest among greatest persons that mankind has seen in the last quarter of a century, I would say. Revered Rajaji was my distinguished leader. In 1964, after I won from the Graduates' Constituency, I had the unique opportunity of going to Bazullah Road and then meeting Rajaji and requesting him to take me as one of his political 'Sishyas'. Then he put me a number of searching questions and finally after he was satisfied with me that I may be able to do something in the manner in which he would like things to be done, he selected me as one of his students in politics.

As far as I am concerned, it is not just the loss of a great leader or the loss of one of the greatest of mankind. For me, it is a personal loss. From 1964 onwards, till the end of Rajaji's physical extinction, I would say, I was by his side. I was pulled up, I was corrected, I was chided and I was guided by him, and then I was shaped into a politician or whatever it is. In other words, he selected me finally as one of his students; but the most endearing attachment he showed me was something which I had received only from my father. That way too, it is a great loss to me.

Whenever I used to go to Rajaji to see him and talk to him, I used to choose a particular time as for 'Dharma Darsan', sometime between 12-30 and 12-45 or so. Whenever he knows that I am outside, or when he is told I have come there, he invariably used to call me even though no appointment had been fixed earlier and he used to like my businesslike way. He always liked one thing in me and that was the quickness with which I used to finish my interviews with him. Always he used to ask me what was happening in the Assembly. So to say, I was a link between the Assembly and Rajaji during the past eight years. In fact, I may be excused if I say something personal. During one of these days, I had gone to him with a friend of mine and he asked me who that friend was; I told him his name and then he told my friend 'Do not desert Hande; because he speaks my voice in the Assembly'. I was not aware of this for a long time. It was only after Revered Rajaji passed away and when I was giving a speech during a condolence meeting, this of friend of mine was weeping and narrated this instance and said that Rajaji had



a soft corner for Dr. Hande. I feel very sad that many of us have not lived up to his expectations: all of us know the standard he expected of us.

Our distinguished friend Mr. Mohideen said about measuring Rajaji with the proper yardstick only after his passing away and he mentioned it beautifully in his own manner. But the tragedy of it all is that when such great men are alive we do not do anything; only after the passing away of such great men we start measuring them. Whether it is Jesus Christ or the Buddha or the Mahatma or Rajaji, we have always been committing this mistake. That is how I feel.

Just imagine a great man like Rajaji who has lived for 94 years
doing the things which he has done. In his 80th year he had
the guts and courage to start a political party. Whether that
political party has come up to his expectations in quantity and
quality is altogether a different matter. Here was a great man
who had the courage in his old age of 80 years to start a political
party, writing almost to all leaders in different parts of India,
assembling them in one place and then telling them, 'Let us
carry on the Cross, let us safeguard the rights of men so that the
fundamental human rights are properly upheld'. It is to pro-
pagtae that ideal that he started the Swantantra Party. And then
being told by my friend, distinguished Prof. Ranga. I distinctly
remember the comments that were made then. Prof. Ranga
started saying, "our policies should be mass-based". Revered
Rajaji stated that our policies should be broad-based, Rajaji
immediately said in his own penchant manner. cutting him short,
'Look here, Mr. Ranga. our policies may be or may not be
mass-based. I am not concerned: but our policies will be defi-
nitely broad-based'. There is vast difference between mass-based
and broad-based policies. Our policy should be to convert the
masses into the elite. Even recently when somebody told Rajaji
that the political climate, political atmosphere in the State is very
serious, even when he was ill, he corrected him and said 'Do not
say it is serious, say it is confusing'. This is the way he looked at
things even during the last moments of his life. His mind was
always clear and he was clear about what he was saying.

Another peculiarity about Rajaji is that though he had held several posts—he was the Governor-General, in this very hall, he

was the Prime Minister as it was used to be called in those days with Mr. Prakasam as one of his lieutinents; he was the Chairman of the Salem Municipality, he was the Governor of West Bengal—he held all of them with a distinction. What is the distinction between Rajaji and others ? He had distinguished himself in several ways. One clear distinction was whatever the post that Rajaji occupied, he gave lustre to the post so that later on when persons came to occupy that post, they had a pride that they were holding the post which Rajaji held.

Sometime ago, I met the Chairman of the Salem Municipality. He was saying, 'you must particularly remember that I am occupying the post today which was held some decades ago by no less a person than Rajaji'. That was the pride of the man. The same is the case with any post, whether it was Chief Minister's post, Governor's post or the highest post of the country, everyone was proud of it as that was once occupied by Rajaji. Even Mountbatten was proud of the fact that he had occupied the post which was later filled by Rajaji. In other words, even Britishers here at that time, in the Pre-Independence days, when many were saying constantly that this country does not deserve independence, after they had gone, many have said openly that this is a country which has produced Rajaji and who can say this country does not deserve independence which has produced a luminary like Rajaji and what more one wants ? That is how they have mentioned about Rajaji and the country.

Then again, all of us are agreed today that we have strayed from the path of Mahatma Gandhi. Recently, 3 or 4 days back, on the 30th of January, I heard a number of people saying that Mahatma Gandhi had shown us the right path but many of us have strayed away from that path. Many times I feel very sad that this is so. It is a fact that Mahatma Gandhi showed us the right path and he showed us several things and we have forgotten them. But what is the remedy? I used to think about the remedial measure. I have asked myself many times this question. The last link we had with Mahatma Gandhi was Rajaji ; literally the last link he was. Sometimes I also feel that it is the lost-link: we have lost that link. Then again, I remind myself that though the last link has become a lost-link, the lasting link between this



generation and Mahatma Gandhi is again Rajaji—whatever teaching that Rajaji has left for us. So, the lost-link is definitely the lasting link and so if we want to propagate and further the ideals of the Mahatma, we have to see whatever has been said by Rajaji. We have to approach in that spirit whatever Rajaji has been saying with regard to Mahatma.

With regard to Rajaji himself, I would with the permission of the Chair like to quote a small letter written to Revered Rajaji by Mahatma Gandhi on 16th July 1925 :—

"My dear C.R.,

Somehow or other I need your letter to feel that all is well with you. My position is this. My body and mind are living in a world by which I remain unaffected, but in which I am being tried. My soul is living in a world physically away from me and yet a world by which I am and want to be affected. You are a part of that world and perhaps the nearest to me. My innermost being wants your approbation of what I am doing and thinking. I may not always succeed in getting it, but it craves for your verdict.

Now you understand exactly why I want to hear from you apart from many other reasons. You must let me have, if it is only a post card a week. Mahadev, Devdas, Pyarelal should keep you posted with what is going on.

And you must keep well ...........

Yours lovingly,
Mahatma Gandhi."

That is what Mahatma Gandhi has written to Rajaji sometime ago. Even Mahatma Gandhi was not sure he could always count on Rajaji's approbation for whatever he did.

It is sometimes told that we have to raise some monuments for revered Rajaji. I agree with every one that such monuments have to be raised. In fact, I had discussed with our Hon. Chief Minister sometime ago that we must raise a monument for Rajaji at or near Gandhi Mantapam. My distinguished friend, Mr. Venkatasami, who is Deputy Leader of our Party, he hails from the birth place of Rajaji, he had written to me a letter that the house where

Rajaji was born in Thorappalli must be taken over by Government and must be converted into a national monument. In fact he had written to me that a college must be started in Hosur in honour of Rajaji. Several suggestions have been pouring in to do something to perpetuate the memory of Rajaji. I feel that whatever we do, we must not do merely because it will satisfy us. But let us ask ourselves what would have satisfied Rajaji most, if he had been alive and suppose we had asked him "Sir, what would please you most", he would straightaway have given the answer that the only thing that would please him most is that we should try to emulate the teachings of Mahatma Gandhi. That is what he would say "please follow the teachings of Mahatma Gandhi". I would therefore say that the greatest monument that can be erected for Rajaji is to follow Rajaji's teachings. Though he was the best among all politicians, let us not forget that a lot of criticisms were directed against Rajaji when he was alive, completely forgetting that he has done so many good things which had never been done by any politician in this country.

Who was the first person to propagate inter-caste dining? The distinguished lady member, Thirumathi Jothi Venkatachalum who had been a Minister under Rajaji knows that he was the first to bring in inter-caste dining. It is all easy now. But at that time, it was impossible. The people of the country were not in favour of inter-caste dining, the communal barrier was so strong. It was at that time that Rajaji began this inter-caste dining. Before Mahatmaji started the Harijan movement, Rajaji started not only this inter-caste dining but he was the first to say that Harijans should be treated as equals and also be allowed to enter the temple and worship just as others. Of course, such a thing is the fashion of the day. But at that time there was such a fierce opposition to his Harijan temple entry programme. But Rajaji never feared the opposition. Even his house in Salem Agraharam was threatened to be set-fire to but he never feared and went on with his programme of Harijan uplift undaunted. Now things have moved up and not only Harijans enter and worship but they are even considered for appointment as Archakas.

Next was prohibition. He laid great emphasis on it. He brought it at the time of British rule, when opposition was so



strong for prohibition. If he was convinced of a measure, he brought it fearlessly. There is difference between Rajaji advocating prohibition and myself or others advocating it. He could not watch people suffering. When Rajaji went out on his drive he saw the sufferings of the people due to alchoholism and when he returned home, he used to weep over their sufferings. He felt the pulse of the people and said and did things. He did not say anything for the sake of oratory. Even when Viet Nam war was going on and there was experimental testing of atomic weapons, Rajaji felt very bitter over it and said that such things should be stopped. Any suffering whether it was in our country or elsewhere made him unhappy. Human suffering was a thing which he could not endure. Whether it is warfare, or testing of atomic weapons, he raised his voice against it. Once I had the privilege of talking to Rajaji, I asked him "Sir, we are going to declare your birthday week as democracy week". So many things we do for our party propaganda. He laughed and said that "I feel that the one good thing I had done is the bringing in of the Agricultural Debt Relief Bill". If it was possible for Rajaji to feel that agriculturists were all indebted at that time, how much more be would be feeling now at the lot of agriculturists? Countless number of agriculturists are grateful to Rajaji today. Imagine how he brought in the Tanjore Pannayal Protection Act. It is all right that we talk about it easily now. In the teeth of so much opposition at that time, he brought in that measure, for the benefit of the pannayals.

Once he was convinced that a measure was necessary, he never feared the opposition, he introduced that measure for the sake of the people at large. In regard to labour problems, he was always on the side of workers. We know how during a labour dispute he took up the side of the workers against the management.

The hon. Member Thiru A. R. Perumal also mentioned about the yeoman service rendered by Rajaji through his writings and his translation of the famous epics of Ramayana and Mahabaratha. He wanted that the people should improve their quality of mind and he wanted the people should be of higher quality and hence he wrote those books. Therefore it is our duty to live up to his expectations. That is the best way in which we can honour his memory.

[டாக்டர் எச். வி. ஹாண்டே] [1973 பிப்ரவரி 3

Finally, what can I, a humble han, say anything about Rajaji ? Have I got the requirements to talk about Rajaji ? For that matter have I or anybody here can boldly say he has the requirements to talk about, Rajaji ? Only Rajaji himself can talk about himself. I have just taken one line from the speech that Rajaji made at a particular meeting on February 5, 1948 on the death of Mahatma Gandhi. This is from Rajaji's speech made by him at the Calcutta University when he was Governor of West Bengal. I shall read just one line :—

" Lastly what we have to do is to deserve to have possessed, even for a brief time, the man that has passed away ". Let me say this. We must see whether we deserve to have possessed Rajaji. We all know how Rajaji treated his friends. When Mohamed Ismail passed away, one of the best obituaries written about Mr. Ismail was by Rajaji. But who is now there to write such obituary about Rajaji ? That is why I have taken the last line of the speech made by Rajaji on Gandhiji's death. Let us see whether we deserve to have possessed Rajaji. If Rajaji had been alive, he would have objected to my saying this but because he is not here probably I make bold and say this. What we have to do is to deserve to have possessed that brave and valiant man, who has passed away. Let us try to see that we deserve to have possessed such a great man of not only Tamil Nadu, not only India but of the whole world. With these words, I support on behalf of my party—on behalf of every one of us, there is no question of party in this—the condolence resolution that has been brought forward on the death of revered Rajaji. Thank you.

**திரு. ஏ. ஆர். மாரிமுத்து :** மதிப்பிற்குரிய அவையின் உதவித் தலைவர் அவர்களே, நாட்டின் சுதந்திரப் போராட்டத்திலே அறி வாற்றலோடும், திறமையோடும், உறுதியோடும் போராட்டத்தை வெற்றிகரமாக நடத்தி சுதந்திரத்தை வாங்கித் தந்த முதுபெரும் தலைவர்களுள் ஒருவரான இராஜாஜி அவர்கள் இன்றைக்கு நம்மை விட்டுப் பிரிந்து விட்டார்கள். அவர்கள் நம்மிடையே இல்லை யென்றாலும் அவர்கள் நாட்டிற்கு ஆற்றிய பணி, அவர்கள் தெரி வித்த கருத்துக்கள் இவையெல்லாம் சேர்ந்து தனக்குப் பின்னாலே ஒரு பெரும் சரித்திரத்தை உருவாக்கி மறைந்திருக்கிறார்கள். அவர் களுடைய செயல்கள், சேவா உணர்வுகள், நேர்மை, தைரியம்



1973 பிப்ரவரி 3] [திரு. ஏ. ஆர். மாரிமுத்து]

இவையெல்லாம் நமக்கும் வருங்காலத்திலே இருக்கின்ற அரசியல் வாதிகளுக்கும் பெரும் எடுத்துக்காட்டாக விளங்கும் என்பதிலே சந்தேகம் இல்லை.

எவ்வளவுதான் முற்போக்கான கருத்துக்களாக இருந்தாலும் காலப்போக்கை அனுசரித்துத்தான் சில கருத்துக்களை வெளியிட முடியும், கொண்டுவர முடியும். அம்மாதிரி இருக்கின்றபோது, 35 ஆண்டுகளுக்கு முன்னாலேயே நாட்டிலே கல்வி வளர்ச்சி இல்லாத காலத்திலே, அரசியல் விழிப்புணர்ச்சியில்லாத காலத்திலே, பெரும் மாற்றங்களைச் செய்வதற்கு தைரியமாக முன்வந்தவர்கள் இராஜாஜி அவர்கள். எனக்கு முன்னாலே பேசிய தலைவர்கள் எல்லாம் இங்கே குறிப்பிட்டார்கள். ஆலயப் பிரவேசம், தீண்டாமை ஒழிப்பு எல்லாம் அந்தக் காலத்திலே ஒத்துக்கொள்ள முடியாதவையாக இருந்தன. ஆனால் இராஜாஜி அவர்கள் அவ்வளவு எதிர்ப்புகளையும் சமாளித்து அவற்றைக் கொண்டுவந்து, திறமை யோடு, தைரியத்தோடு, நிறைவேற்றினார்கள், என்றால் எந்தக் காலத்திலே அதைச் செய்தார்கள் என்பதை வைத்துத்தான் நாம் பாராட்ட வேண்டும்.

அவர்கள் ஆட்சிப் பொறுப்பை ஏற்றபொழுது, மதுவிலக்கைக் கொண்டுவந்தது ஒரு பெரிய காரியம் ஆகும். சுதந்திரப் போராட்ட காலத்திலே கட்சியை உருவாக்குவதற்கு காந்தி யடிகள் மக்களிடையே செய்துவந்த முக்கியமான பிரச்சாரம் மதுவிலக்கு ஆகும். அந்த முறையிலே இராஜாஜி அவர்கள் ஆட்சிக்கு வந்ததும், மிகத் திறமையோடு, தைரியமாக மதுவிலக்கு சட்டத்தை முதன்முதலாகக் கொண்டுவந்து நிறைவேற்றினார்கள் இராஜாஜி அவர்கள்.

அதே சமயத்திலே பல விவசாயக் குடும்பங்கள் கடன் தொல்லை களுக்குள்ளாகி அவர்கள் சொத்தேதும் இல்லாத நிலையிலே தெரு விலே விடப்படுகின்ற நிலையிலே இருந்தபொழுது இராஜாஜி அவர்கள் கொண்டுவந்த கடன் நிவாரணச் சட்டத்தினால்தான் அவர்கள் அன்றைக்குப் பாதுகாக்கப்பட்டார்கள். அன்றைய தினம் அதற்கு பெரும் பணக்காரர்கள் எல்லாம் கடுமையான எதிர்ப்புகள் தெரிவித்தாலும்கூட இராஜாஜி அவர்கள் திறமை யாகவும், தைரியமாகவும் அந்தச் சட்டத்தைக் கொண்டுவந்து நிறைவேற்றினார்கள்.

[திரு. ஏ. ஆ. மாரிமுத்து] [1973 பிப்ரவரி 3

அந்த முறையிலே, பண்ணை அடிமை முறையைப் போக்குவதற் காகவும் இராஜாஜி அவர்கள் பண்ணையாள் பாதுகாப்புச் சட்டத் தையும் கொண்டுவந்தார்கள். ஒரு விவசாயக் கூலி ஒரு நிலப் பிரபுவினால் அடிமையாகக் கருதப்பட்டு வந்த நேரம், ஒரு நிலப் பிரபுவிற்குச் சொந்தமான பண்ணையைவிட்டு வேறொரு பண் ணைக்குப் போகக்கூட உரிமை கிடையாது, விவசாயிக்கு அப்படிப் பட்ட நேரம். திருவாரூர் தேர் இழுப்பதற்காக ஒவ்வொரு பண்ணையாரும் குறிப்பிட்ட ஆட்களை அனுப்பவேண்டுமென்ற முறை இருந்தது. 500 பேர்களை வைத்துக்கொண்டு தேரை இழுக்கச் சொல்லி சாட்டையை வைத்துக்கொண்டு தேர் இழுக்கச் சொன்ன சம்பவம் சீக்கிரமாக மறந்துவிடக்கூடியதல்ல. அந்தச் சமயத்திலேதான் பண்ணையாள் பாதுகாப்புச் சட்டம் என்ற ஒரு சட்டத்தை இராஜாஜி அவர்கள் கொண்டுவந்து விவ சாயிகளைப் பாதுகாத்தார்கள்.

இராஜாஜி அவர்கள் பிற்காலத்திலே கொஞ்சம் மாறுபட்ட கருத்தைக் கொண்டிருந்தாலும் தொடக்கத்திலே அபேதவாதம் பற்றி அதிகமான கருத்துக்களைத் தெரிவித்து இருக்கிறார்கள். அவர்கள் சிறையிலிருந்தபொழுது தான் செய்த பிரசங்கங்களை யெல்லாம் தொகுத்து அபேதவாதம் என்ற நூலை எழுதினார்கள். அந்தப் புத்தகத்தை நான் படித்த பிறகுதான் சோசலிஷக் கருத் துக்கள் என்னை ஈர்த்தன என்பதை நான் இந்த நேரத்திலே சொல்லிக்கொள்ள விரும்புகிறேன்.

எந்தப் பெரிய விஷயத்தையும் மிக எளிய நடையிலே மக்க ளுக்குப் புரிய வைக்கக்கூடிய வகையிலே தெரிவிக்கக்கூடிய திறமை இராஜாஜி அவர்களிடத்திலே இருந்தது. அது ஒரு பெரும் ஆற்றல். அது இராஜாஜி அவர்களிடத்திலே இருந்தது. தங்கள் கருத்துக்களை கடைசிவரைக்கும் விடாப்பிடியாக வைத்துக்கொண்டிருக்கிறவர்கள் ஒரு சிலர்தான் இருந்தார்கள், அவர்களிலே இராஜாஜி அவர்களும் ஒருவர். காந்தியடிகள் மகாத்மா என்று போற்றப்பட்டு அவர்கள் செல்வாக்கின் உச்ச கட்டத்திலே இருந்த காலம், அப்பொழுது இந்தியப் பிரிவினை கூடாது என்ற கருத்து பலமாக இருந்த நேரம். பாகிஸ்தான் பிரிந்தாகவேண்டும் என்று இராஜாஜி அவர்கள் தன் னுடைய கருத்தைக் கிளப்பினார்கள். பெரும் புயல் கிளம்பியது.



1973 பிப்ரவரி 3] [திரு. ஏ. ஆர். மாரிமுத்து]

அவர்கள் கூறிய கருத்து காந்தியடிகளின் கருத்துக்கு விரோத மானது என்றாலும்கூட கடைசிவரைக்கும் அழுத்தந்திருத்தமாக அவர்கள் சொல்லிவந்தார்கள். மாறுபாடான கருத்து இருக் கிறது என்பதால் அவர்கள் கட்சியை விட்டுத்தான் வெளியே போனார்களே தவிர, கொள்கையை விட்டுக்கொடுக்கவில்லை. கடைசிவரைக்கும் உயிர் போகிற நிலையிலும்கூட அவர்கள் கருத்தை விடாமல் பிடித்துக்கொண்டிருந்தார்கள். உலகத்திலே ஒரு சிலர்தான் அப்படி இருக்கமுடியும். அப்படிப்பட்ட சிலரிலே இராஜாஜி அவர்களும் ஒருவராகத் திகழ்ந்தார்கள்.

" ஊழி பெயரினும் தாம்பெயரார் சான்றாண்மைக்கு
ஆழி எனப்படு வார் "

என்று குறள் கூறுகின்றது. அதற்கேற்ப, புயலடித்தாலும் சரி, சமுத்திரமே பொங்கினாலும் சரி, தன்னுடைய கருத்தை விட்டுக் கொடுக்காமல் சொல்லிக் கொண்டிருந்தார்கள். 60 வயதானாலே சிந்தனை சக்தி குறைவு என்று சொல்வார்கள். கருத்துத் தெளிவு இருக்காது என்று கூறுவார்கள். ஆனால் அவர்கள் 94 வயது ஆன லும் கடைசி வரைக்கும் சிந்தனை சக்தி குறையாமல், கருத்துத் தெளிவு அற்ற நிலைமை ஏற்பட்டது கிடையாது. மறைந்த இராஜாஜி அவர்களின் குடும்பத்திற்கு எங்கள் கட்சியின் சார் பிலே அனுதாபத்தைத் தெரிவித்துக்கொள்வதோடு, நம்மிடையே பணியாற்றி வந்த நேர்மையான அரசியல்வாதியான பண்புமிக்க காலஞ்சென்ற கோவை மேற்குப் பகுதி உறுப்பினராக இருந்த கோபால் அவர்கள் மறைவிற்கும் என்னுடைய கட்சியின் சார்பாக அனுதாபத்தை நான் தெரிவித்துக் கொள்கிறேன். வணக்கம்.

**திரு. ஒ. எஸ். தியாகராசன் :** பெருமதிப்பிற்குரிய அவைத் தலைவர் அவர்களே, மறைந்த மூதறிஞர் இராஜாஜி அவர் களுக்கு அஞ்சலி தெரிவிக்கும் தீர்மானத்தை நான் ஆதரித்து என்னுடைய கருத்துக்களைச் சொல்ல விரும்புகிறேன். இந்த நாட்டிலே 94 ஆண்டுகள் வாழ்ந்து ஒரு பெரிய அரசியல் பாரம் பரியத்தை விட்டுவிட்டு அவர்கள் சென்று இருக்கிறார்கள். அவர் கள் விடுதலைப் போராட்டத்திலே பெரிதும் ஈடுபட்டார்கள். விடுதலை பெற்ற இந்தியாவின் கவர்னர் ஜெனரலாக பணியாற்றி னார்கள். இந்திய அமைச்சராகவும் சுமிராகத்தின் முதல்வராகவும் பணியாற்றி நல்ல தொண்டைச் செய்திருக்கிறார்கள் என்பதை

[திரு. இ. எஸ். தியாகராசன்] [1973 பிப்ரவரி 3

நாம் இந்த நேரத்திலே இங்கே நினைவுகூறக் கடமைப்பட்டிருக்கிறோம்.

அவர்கள் 1953-ஆம் ஆண்டிலே முதலமைச்சராக இருந்த பொழுது எங்கள் பகுதியைப் போன்ற—திருத்தணிபோன்ற—பகுதிகள் தமிழகத்துடன் சேரவேண்டுமென்ற முறையில் அதற்காக ஒரு எல்லைக் கமிஷன் உருவாக்க வேண்டுமென்று இந்திய அரசோடு போராடி பெரிதும் அதற்காகப் பாடுபட்டு எல்லைக் கமிஷன் அமைக்க ஏற்பாடு செய்து தமிழகத்திலே நாங்கள் எல்லாம் இணைவதற்கு வாய்ப்பு ஏற்படுத்தித் தந்தார்கள் என்பதை நான் நினைவுபடுத்த இந்த நேரத்திலே கடமைப்பட்டிருக்கிறேன். அத்தகைய பெரும் தியாகி, நாடு போற்றிய பெருமதிப்பிற்குரிய நல்லவர் இன்று நம்மிடத்தில் இல்லை. மறைந்த அந்தப் பெருந்தகையின் ஆன்மா சாந்தியடைய வேண்டுமென்று இறைவனை வேண்டிக் கொள்கின்றேன்.

அதுமட்டுமல்லாமல், நம்மோடு இருந்த, இரண்டாண்டுக் காலமேதான் சட்டமன்றப் பணியை ஏற்று வந்த கோபால் அவர்கள் பிரிந்திருக்கிறார்கள். அவர்களுடைய குடும்பத்திற்குத் தமிழரசுக் கழகத்தின் சார்பில் என்னுடைய ஆழ்ந்த அனுதாபத்தைத் தெரிவித்துக் கொள்கின்றேன்.

**மாண்புமிகு டாக்டர் மு. கருணாநிதி :** மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவரவர்களே, பேரவையின் முன்னவர் அவர்கள் கொண்டுவந்துள்ள இரங்கல் தீர்மானங்களையொட்டி அனைத்துக் கட்சிகளைச் சார்ந்தவர்களும் கருத்துக்களை எடுத்துக் கூறியிருக்கின்றார்கள். மறைந்த பெரியவர், மூதறிஞர் இராஜாஜி அவர்கள் இந்த நாட்டின் கருவூலமாகவும், இந்தியப் பெருநாட்டில் மட்டுமல்லாமல் அனைத்துலக நாடுகளின் அன்பையும், மரியாதையையும் பெற்றவர்களாகவும் திகழ்ந்தவராவார்கள். அவர்களுடைய மறைவு ஈடுசெய்ய முடியாத இழப்பு என்பதை நாம் உணர்கின்றோம்.

தன்னுடைய வாழ்நாளில் மிகப்பெரும் பகுதியை பொதுவாழ்விற்காக வழங்கிவிட்டு, அந்தப் பொதுவாழ்விலே மிகுந்த துணிச்சலான கருத்துக்களையெல்லாம் நாட்டிற்கு எடுத்துச் சொல்லியவர்களாகவும், சொன்ன கருத்துக்களைச் செயற்படுத்திக் காட்டியவர்களாகவும், கருத்து மாறுபாடுகள், கட்சி மாச்சரியங்கள் எவ்வளவு



1973 பிப்ரவரி 3] [டாக்டர் மு. கருணாநிதி]

தான் குறுக்கிட்டாலும் அவைகள் மற்றவர்களோடு பழகுவதற்கு, நட்புரிமை காட்டுவதற்கு இடையூறாக இருத்தல் ஆகாது என்ற உயர்ந்த பண்பைக் கடைப்பிடித்தவர்களாகவும் மறைந்த இராஜாஜி அவர்கள் விளங்கினார்கள். அவர்களுக்கும், உத்தமர் காந்தியாருக்கும் இருந்த தொடர்பினையும், பண்டித ஜவஹர்லால் நேருவிற்கும் இராஜாஜி அவர்களுக்கு இருந்த நட்பினையும், இந்தியாவினுடைய தேசியப் போராட்ட இயக்கத்திலே கலந்து கொண்ட கடமை வீரர்களுக்கும், இராஜாஜி அவர்களுக்கும் இருந்த தொடர்பினையும் இங்கு பேசிய அனைவரும் குறிப்பிட்டிருக்கிறார்கள்.

தமிழகத்தைப் பொறுத்தவரையில் பேரறிஞர் அண்ணா அவர்களிடத்திலே மூதறிஞர் இராஜாஜி அவர்கள் கொண்டிருந்த தொடர்பு பாராட்டத்தக்கதாய், போற்றத்தக்கதாய், அனைவரும் சிலாகித்துப் பேசத்தக்கதாய் அமைந்திருந்தது. அந்தக் காரணத்தினால்தானோ என்னவோ, அண்ணா அவர்களின் நினைவு நாளைக் கொண்டாடக்கூடிய இந்த நாளில் இந்த மன்றத்திலே இராஜாஜி அவர்களுக்கு அனுதாபம் தெரிவிக்கும் நிகழ்ச்சியும் இணைந்திருக்கிறதோ என்று நாம் எண்ணிட வேண்டியிருக்கிறது. அப்படிப்பட்ட பொருத்தமான அளவில், மனம் விட்டுப் பேசக்கூடிய அரசியல் பெருந்தகையாளராய் மூதறிஞர் இராஜாஜி அவர்கள் விளங்கினார்கள்.

அவர்களுடைய பொதுவாழ்க்கையிலே ஏற்பட்ட எத்தனையோ கஷ்ட நஷ்டங்களையெல்லாம் எப்படிச் சமாளித்தார்கள் என்பதை இங்கே இரங்கல் தீர்மானத்திலே பேசியவர்கள் விளக்கமாகக் குறிப்பிட்டிருக்கிறார்கள். எதையும் ஆராய்ந்து பார்த்து முடிவெடுப்பதிலே இராஜாஜி அவர்கள் வல்லவர் என்பதற்கு அவர்களுடைய வாழ்க்கைச் சரித்திரத்திலே பல எடுத்துக்காட்டுகள் இருக்கின்றன. ஈகை, இரக்கம் இவைகளைக் காட்டும் நோக்கிலேயும் கூடச் சற்று ஆராய்ச்சியிலேயே ஈடுபட்டுத்தான் அதை அவர்கள் காட்டுவார்கள் என்பதற்கு அவர்களுடைய வாழ்க்கை வரலாறு ஒரு எடுத்துக்காட்டாக அமைந்திருக்கிறது.

அவர் வழக்கறிஞராகப் பணியாற்றிய காலத்தில் ஒருநாள் திடீரென்று பாலக்காட்டிலிருந்து ஒரு குடும்பத்தினர் அவருடைய இல்லத்திற்கு வந்தார்கள். அவர் வழக்கறிஞர் பணிக்காகப்

[டாக்டர் மு. கருணாநிதி] [1973 பிப்ரவரி 3

புறப்பட்ட நேரத்தில் அவர்கள் குறுக்கிட்டு "நாங்கள் பாலக்காட்டிற்குச் செல்ல வேண்டும். திடீரென்று கையிலிருந்த பணம் பறிபோய்விட்டது. பாலக்காட்டிலே நான் ஆசிரியராகப் பணியாற்றுகிறேன். எங்கள் குடும்பத்தினர் பாலக்காட்டிற்குச் செல்ல புகைவண்டிக்கான டிக்கெட் எடுப்பதற்குப் பணம் தேவை" என்று கேட்டார்களாம். உடனடியாக மூதறிஞர் இராஜாஜி அவர்கள், "மாலையில்தான் உங்களுக்கு இரயில். அதுவரையில் வீட்டிலே சாப்பிட்டு இருக்கலாம்" என்று கூற அவர்களும் மனமகிழ்ச்சியோடு ஏற்றுக்கொண்டார்கள். அவர்களை இல்லத்திலே அமர வைத்துவிட்டு, கோர்ட்டுக்குச் செல்ல வேண்டிய இராஜாஜி அவர்கள் கோர்ட்டிற்குச் செல்லாமல் அஞ்சலகத்திற்குச் சென்று, அங்கிருந்து பாலக்காட்டிற்குத் தொடர்பு கொண்டார்கள். பாலக்காட்டில் ஹரிஹரன் என்ற ஆசிரியர் இருக்கிறாரா என்று கேட்டு, அப்படி ஹரிஹரன் என்ற ஆசிரியர் பாலக்காட்டிலே கிடையாது என்று தெரிந்து கொண்டு, நேரே கோர்ட்டிற்குப் போய் அங்கே அவர்களைப்பற்றி ஒரு வழக்கைக் கொடுத்து, அங்கிருந்து காவலர்கள் வந்து பாலக்காட்டுக்காரரைக் கைது செய்து நீதிமன்றத்திற்கு அழைத்துச் சென்றார்கள். அங்கே வழக்கறிஞர் இராஜாஜி அவர்கள் அந்த ஏமாற்றுக்காரர்கள் மீது வழக்கைத் தொடராமல், நீதிபதி அவர்கள் சினம் கொண்டு 200 ரூபாய் அபராதம் விதிக்க, இராஜாஜி அவர்கள், 200 ரூபாயை அவர்களால் கட்ட முடியாது, கொஞ்சம் குறையுங்கள் என்று கேட்டு, பிறகு 50 ரூபாய் அபராதம் என்று விதித்தார்கள். அதைப் பார்த்த அந்தப் பாலக்காட்டு ஹரிஹரன் என்பவர் 50 ரூபாய் கட்டக்கூடிய அந்தஸ்து இருந்தால் உங்கள் வீட்டிற்கு வந்து நான் ஏன் ஏமாற்றப் போகிறேன் என்று சொன்னதற்கு, மறுபடியும் இராஜாஜி அவர்கள் வாதாடி, அந்த அபராதத்தை 10 ரூபாயாகக் குறைத்து நீதிபதி உத்தரவு போட்டு விட்டு உள்ளே போன பிறகு, அந்த பத்து ரூபாயை இராஜாஜி அவர்களே கட்டி விட்டு, 'இனிமேல் இப்படி யாரையும் ஏமாற்றாதீர்கள்' என்று சொன்னதாக வாழ்க்கைச் சரித்திரத்தில் படித்துப் பார்த்தேன். இப்படி ஈகை, இரக்கம் காட்ட வேண்டிய நேரத்திலேயுங்கூட அவர்கள் ஆராய்ந்துதான் சில முடிவுகளை எடுப்பார்கள். அப்படி எதிலும் ஆராய்ந்து முடிவெடுக்கும் அறிஞர் பெருமகனாகத் திகழ்ந்த இராஜாஜி அவர்கள் இன்றைக்கு நம்மிடத்திலே இல்லை.



1973 பிப்ரவரி 3] [டாக்டர் மு. கருணாநிதி]

இங்கே முன்னவர் அவர்களும், மற்றும் அனைத்துக் கட்சித்
தலைவர்களும் எடுத்துக் காட்டியதைப்போல், அவர்கள் கட்சி,
கருத்து வேறுபாடுகளுக்கு அப்பால் ஒரு தனி அன்பை அனைவரி
டத்திலும் காட்டுவார்கள். அவர்களுடைய இறுதிக் காலத்தில்
இன்றைய ஆளுங்கட்சிக்கும், அவருடைய கொள்கைகளுக்கும்,
அவர் கட்சிக்கும் இருந்த தொடர்பு அனைவருக்கும் தெரிந்த ஒன்று
தான். ஆனாலும் அவர்கள் நோய்வாய்ப்பட்டிருக்கிறார்கள், வீட்
டிலே திடீரென்று அவருக்கு நோய் ஏற்பட்டுவிட்டது என்ற செய
தியை அறிந்ததும், நானும் நம்முடைய கல்வியமைச்சர் நாவலர்
அவர்களும் அவர்களுடைய இல்லத்திற்குக் காலையிலே ஓடோடிச்
சென்றோம். அவர்கள் தன்னுடைய நோய்ச் செய்தியைக் கேள்விப்
பட்டு நாங்கள் வந்ததாகக் கருதாமல் திருமணத்திற்கு அழைப்ப
தற்காக வந்திருக்கிறோம் என்று கருதி, 'நேற்றே வாழ்த்து
அனுப்பிவிட்டேன், உடல் நலம் சரியில்லை, வருவதற்கு முடிய
வில்லை. ஆகவே, பொறுத்துக்கொள்ள வேண்டும்' என்று குறிப்பிட்
டார்கள். பிறகு மருத்துவ மனையில் அவர்கள் சேர்க்கப்பட்ட
பொழுது, நானும், கல்வியமைச்சரவர்களும், மற்றவர்களும் பார்த்த
பொழுது என்னுடைய கரங்களைப் பிடித்துக் கொண்டு அவர்கள்
சொன்ன வார்த்தை, அவருடைய மக்களும், பேரப்பிள்ளையும்,
மருத்துவர்களும் சூழ்ந்திருந்த இடத்தில் சொன்ன வார்த்தை,
இன்றைக்கும் என்னுடைய நெஞ்சிலே பதிந்துதான் இருக்கிறது.
'நம்முடைய நட்பை யாராலும், எந்தக் காலத்திலேயும் நீக்க
முடியாது' என்று குறிப்பிட்டார்கள். என்னுடைய கையைப்
பிடித்துக் கொண்டு, 'உங்களை நான் கடைசி வரையில் கைவிட்டு
விடமாட்டேன்' என்று சொன்னார்கள். இது 10, 12 ஆண்டுக் கால
மாக அவர்களுடன் பழகிய நேரத்தில், அவர்களுடைய பாச உணர்
வினை, உள்ள உணர்ச்சிகளைப் புரிந்து கொண்ட எங்களுக்குத் தெளி
வாகத் தெரியும். 62-ம் ஆண்டு நடந்த பொதுத் தேர்தலில் முன்
னேற்றக் கழகத்திற்கும், சுதந்திராக் கட்சிக்கும் தேர்தல் உடன்
பாடு ஏற்பட முடியாமல் கடைசி நேரத்திலே உடைந்துவிட்டது
என்றாலும், சில இடங்களில் அவர்கள் முன்னேற்றக் கழகத்தின்
வெற்றிக்காகத் தேர்தல் பிரச்சாரத்தில் ஈடுபட்டார்கள். அப்படி
ஈடுபட்ட இடங்களில் ஒன்று 62-ம் ஆண்டு தஞ்சாவூரிலே என்னு
டைய தொகுதியாகும்.

[டாக்டர் மு. கருணாநிதி] [1973 பிப்ரவரி 3

தனிப்பட்ட முறையிலேயும், கட்சி ரீதியிலேயும் அண்ணா அவர்களிடத்திலும், இன்றைக்கு அமைச்சர்களாக வீற்றிருக்கின்ற அனைவரிடத்திலும் அவர்கள் காட்டிய அன்பும், பரிவும் எத்தனை ஆண்டுக் காலமானாலும் எங்களால் மறந்துவிடக்கூடிய ஒன்றல்ல என்பதைத் தெரிவித்துக் கொள்கிறேன்.

அவர்கள் தமிழ்நாட்டினுடைய அரசியல் விமர்சனங்களை மாத்திரமல்ல, இந்திய ப்பெருநாட்டுக்கான அரசியல் கருத்துக்களை மாத்திரமல்ல, அனைத்துலகத்திற்குத் தேவையான கருத்துக்களை எல்லாம் கூறியிருக்கிறார்கள். அனைத்து உலகத்திலும் பிரச்சினைகள் எழுகிற நேரத்தில் அதைப்பற்றி இராஜாஜி அவர்கள் என்ன சொல்லுகிறார்கள் என்று உலகம் கூர்மையாகக் கவனித்துக் கொண்டிருந்தது என்று சொன்னால் யாரும் அதை மறுத்துவிட முடியாது. அப்படிப்பட்ட பெருந்தகையாளர் இன்று நம்மிடத்தில் இல்லை என்பது பெரும் குறை. பெரியவர்கள் மறைந்து விடுகிறார்கள் என்றாலும், அவர்கள் தங்களுடைய கொள்கைகளால், கோட்பாடுகளால், பண்பால், பழக்க வழக்கத்தால், பழகுகின்ற எளிமை, இனிமை ஆகியவற்றால் என்றென்றும் நம்முடைய உள்ளங்களிலே நிறைந்து விடுகிறார்கள்.

அவர்களுக்கு நினைவாலயம் ஒன்று எழுப்புவது குறித்தும், சிலை அமைப்பது பற்றியும் டாக்டர் ஹாண்டே அவர்கள் கேட்டார்கள். வருகிற 15-ம் நாள் அன்று இந்தியாவின் குடியரசுத் தலைவர் அவர்கள் கிண்டியில், கவர்னர் மாளிகைத் தோட்டத்தில், காந்தியடிகள் மண்டபத்திற்கு அருகாமையில் இராஜாஜி அவர்களுடைய நினைவாலயத்திற்கான அடிக் கல்லை நாட்ட இருக்கிறார்கள். அந்த நினைவாலயத்திலே இராஜாஜி அவர்களுடைய திருவுருவச் சிலையும் அமைக்கப்பட இருக்கிறது. அதற்கான அடிக்கல் நாட்டு விழாவும் அன்றைக்கே நடைபெற இருக்கிறது. அவர்கள் பிறந்த இல்லம் ஓசூரில் தொரப்பள்ளி என்ற இடத்தில் இருக்கிறது. அந்த இல்லத்தை அரசு வாங்கி மூதறிஞர் இராஜாஜி அவர்களின் நினைவுச் சின்னமாக ஆக்கும் முயற்சிகளிலும் அரசு ஈடுபட்டிருக்கிறது என்பதைத் தெரிவித்தக் கொள்கிறேன். அதை அரசு வாங்குகிறது என்று கேள்விப்பட்டு, உரியவர்கள் என்று சொல்லிக் கொண்டிருப்பவர்கள் அதிக விலை தரவேண்டுமென்று கேட்டுக் கொண்டிருக்கிறார்கள். அவர்களும் அது இராஜாஜி அவர்களுக்கு நினைவுச் சின்னமாக அமைவதால் தகுந்த அக்கறை காட்டுவார்கள் என்று நம்புகிறேன்.



1973 பிப்ரவரி 3] [டாக்டர் மு. கருணாநிதி]

இராஜாஜி அவர்கள், தமிழகத்திற்கு, இந்தியாவுக்கு, அனைத்து உலகத்திற்கு வழிகாட்டியாக இருந்தார்கள். இங்கு பேசிய பலரும் குறிப்பிட்டார்கள். அதுவிலக்குப் பிரச்சினையில் இராஜாஜி அவர்கள் காட்டிய தீவிரத்தை எடுத்துச் சொன்னார்கள். அந்தத் தீவிரத்திற்கு மதிப்பளிக்கும் வகையில், மரியாதை செலுத்துகின்ற வகையில் தமிழ்நாட்டில் மாத்திரமல்ல, அகில இந்தியாவிலும் மதுவிலக்குக் கொள்கையைக் கொண்டு வருவார்களானால், இந்திய அரசு அந்த முயற்சியிலே ஈடுபடுமானால் அதற்கு முதலில் கை கொடுக்கின்ற அரசாக நம்முடைய தமிழக அரசு இருக்கும் என்பதை இராஜாஜி அவர்களுடைய பெயரால் எடுத்துக் காட்டக் கடமைப்பட்டிருக்கிறேன்.

இந்த இரங்கல் தீர்மானத்திற்கிடையே நம்முடைய அருமை நண்பரும், இந்த மாமன்றத்தில் முன்னேற்றக் கழக உறுப்பினருமாக இருந்த திரு. கோபால் அவர்களின் மறைவுக்காகக் கொண்டு வரப்பட்ட இரங்கல் தீர்மானத்தின் மீதும் அனைத்துக் கட்சித் தலைவர்களும் கருத்துக்களை எடுத்துச் சொன்னார்கள். கோபால் அவர்கள் மறைந்த பிறகு அவருடைய குடும்பம் எப்படி இருக்கிறது, குழந்தை குட்டிகள் எப்படிக் கஷ்டப்படுகின்றன, அவருடைய மனைவி ஆசிரியர் தொழில் செய்து குடும்பத்தை நடத்துகின்ற கஷ்டத்தில் இருக்கிறார்கள் என்பதைப் பற்றியெல்லாம் நம்முடைய மாண்புமிகு திரு. கே. டி. கே. தங்கமணி அவர்கள் சொன்னார்கள். கோபால் அவர்களுடைய வாழ்க்கை, முன்னேற்றக் கழகத்தின் வாழ்க்கைக்கு எடுத்துக்காட்டு என்பதையும் இங்கு தெரிவித்து, அப்படிப்பட்ட அருமை நண்பர் கோபால் அவர்கள் இன்றைக்கு மறைந்துவிட்ட நிலையில் அவருடைய குடும்பத்தைக் காப்பாற்றுவதற்கான பொறுப்பை அரசின் சார்பாக இல்லாவிட்டாலும், கழகத்தின் சார்பாக நாங்கள் ஏற்றுக் கொண்டிருக்கிறோம் என்பதையும் எடுத்துக் கூறி கோபால் அவர்களுடைய குடும்பத்தினருக்கு ஆழ்ந்த அனுதாபத்தைத் தெரிவித்துக் கொள்கிறேன்.

மூதறிஞர் இராஜாஜி அவர்கள் குடும்பத்தாருக்கு ஆழ்ந்த அனுதாபம் தெரிவிக்கிறோம் என்று சொல்லுவதில் பொருள் இருப்பதாகத் தெரியவில்லை. ஒருவருக்கொருவர் ஆறுதல் கூறிக் கொள்ளும் காரியமாகத்தான் அது இருக்கிறது. இராஜாஜி

அவர்கள் மறைவுக்காக இரங்கல் தெரிவிப்பதும், அனுதாபம் கூறுவதும் தனிப்பட்ட ஒரு குடும்பத்திற்கு மட்டும் செய்யப்படுவது அல்ல. தமிழகத்தில் இருக்கும் எல்லா மக்களுக்கும், இந்தியப் பெருநாட்டில் இருக்கும் எல்லா மக்களுக்கும், இராஜாஜியின்பால் அன்பும், மதிப்பும் கொண்ட அனைத்துலக நாடுகளில் இருக்கும் அரசியல் மேதைகளுக்கும் தெரிவிக்க வேண்டிய அனுதாபமாகத்தான் அது இருக்கும் என்பதைத் தெரிவித்து இந்த அளவில் அமைகிறேன், வணக்கம்.

**மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர் :** மாண்புமிகு முதல்வர் அவர்களும், பேரவை முன்னவர் அவர்களும், மற்றக் கட்சித் தலைவர்களும் மறைந்த இராஜாஜி அவர்கள் பற்றியும் மறைந்த திரு. கோபால் பற்றியும் இங்கே கருத்துக்களைக் கூறி இரங்கலைத் தெரிவித்தார்கள். இங்கிலாந்து நாட்டு பெட்ரண்ட் ரஸ்ஸல் அவர்கள் இருபெரும் வல்லரசுகளுக்கிடையே சமாதானம் நிலவ வேண்டுமென்ற கருத்தைக் கூறி வந்தார். அவருக்குப் பின்னர் அந்தச் சமாதானப் பணியை ஓரளவுக்கு ஆற்றி வந்தவர் இராஜாஜி அவர்கள். அவர் தமிழகத்தில் பிறந்து, இந்திய அரசியலில் சிறந்து விளங்கிய பிறகு கடைசிக் காலம் வரை ஏறத்தாழ பத்துப் பதினைந்து ஆண்டுக் காலமாக உலகப் பெருந் தலைவராக, உலகப் பெரும் தத்துவ ஞானியாக வாழ்ந்து வந்தார் என்பதைப் பெருமையோடு நினைவூட்டிக் கொள்கிறேன். அத்தகைய மூதறிஞரை இழந்து வாடும் அவருடைய குடும்பத்தாருக்கு இப் பேரவையின் சார்பாக நான் என்னுடைய இரங்கலையும், ஆழ்ந்த வருத்தத்தையும் தெரிவித்துக் கொள்கிறேன்.

கடந்த இரண்டு ஆண்டுக் காலமாக இந்த மாமன்றத்தில் உறுப்பினராகப் பணியாற்றிய கோவை மாவட்டத்தைச் சேர்ந்த மதிப்பிற்குரிய கோபால் அவர்கள் எவ்வளவு எளிமையானவர், இனிமையானவர், அண்ணாவின் கொள்கைகளில் ஆழ்ந்த பற்றுள்ளவர் என்பது பற்றிப் பேசிய பலரும் எடுத்துக் கூறினார்கள். அறிஞர் அண்ணா கடைப்பிடித்த அமைதியை அப்படியே தம்முடைய உள்ளத்தில் ஏந்தி இந்த மாமன்றத்திலே பணியாற்றினார். அத்தகைய நண்பரை, தம்முடைய தொகுதி மக்களுக்கும், மற்றவர்களுக்கும் நல்ல முறையில் பணியாற்றிய நண்பரை இந்த மன்றம் இழந்திருக்கிறது. அன்னாரை இழந்து வாடும்



குடும்பத்தாருக்கும் நான் இப் பேரவையின் சார்பாக என்னுடைய வருத்தத்தையும், இரங்கலையும் தெரிவித்துக் கொள்கிறேன்.

இந்த இரண்டு இரங்கல் தீர்மானங்களையும் ஏற்றுக்கொள்ளும் முகத்தான் மாண்புமிகு உறுப்பினர்கள் ஒரு நிமிடம் மவுனமாக எழுந்து நிற்க வேண்டுமென்று கேட்டுக் கொள்கிறேன்.

(மாண்புமிகு உறுப்பினர்கள் அனைவரும் எழுந்து ஒரு நிமிடம் மவுனமாக நின்றனர்.)

**மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர் :** மறைந்த மூதறிஞர் இராஜாஜி அவர்களுக்கும், திரு. பி. கோபால் அவர்களுக்கும் மரியாதை தெரிவிக்கும் வகையில் இப் பேரவையின் இன்றைய நிகழ்ச்சிகளை இன்று இத்துடன் முடித்துக் கொண்டு பேரவையை ஒத்தி வைக்கிறேன். பேரவை மீண்டும் 5—2—1973 திங்கட்கிழமை காலை 9 மணி அளவில் கூடும். வணக்கம்.

பின்னர் பேரவை முற்பகல் 11.48-க்கு ஒத்திவைக்கப்பட்டது.

## 3. பேரவைமுன் வைக்கப்பட்ட ஏடுகள்.

### A. *Statutory Rules and Orders.*

+ 1. Notification issued with G. O. Ms. No. 2026, Rural Development and Local Administration, dated the 25th September 1972, in regard to draft amendments to the rules relating to the reservation of appointments to the Backward Classes, Scheduled Castes and Scheduled Tribes in the services under Municipal Councils. [Laid on the Table of the House under section 304 (d) of the Tamil Nadu District Municipalities Act, 1920 (Tamil Nadu Act V of 1920).]

+ 2. Notification issued with G. O. Ms. No. 2316, Rural Development and Local Administration, dated the 2nd November 1972, in regard to extension of term of office of the members of the Tamil Nadu Khadi and Village Industries Board for a further period of one month from the 3rd November 1972. [Laid on the Table of the House under section 29 (3) of the Tamil Nadu Khadi and Village Industries Board Act, 1959 (Tamil Nadu Act 18 of 1959).]

+ 3. Notification issued with G.O. Ms. No. 489, Co-operation, dated the 22nd November 1972, in regard to an amendment to the Tamil Nadu Co-operative Land Development Banks (Miscellaneous Provision) Rules, 1970 [Laid on the Table of the House under section 38-A (2) of the Tamil Nadu Co-operative Land Development Banks Act, 1934 (Tamil Nadu Act X of 1934).]

+ 4. Notification issued with G. O. Ms. No. 2198, Public (Services-A), dated the 4th September 1972, in regard to an amendment to the Tamil Nadu Public Service Commission Regulations, 1954 for inclusion of the temporary posts of Assistant Supervisors of Industrial Co-operatives in Tamil Nadu Industries Subordinate Service, within the Commission's purview. [(Laid on the Table of the House under Article 320 (5) of the Constitution of India).]

+ 5. Notification issued with G.O. Ms. No. 11Q39, Home, dated the 19th April 1972, in regard to exemption from payment of tax in respect of mini bus bearing registration No. GTE 748, belonging to the National Institute of Design, Ahmedabad during the stay in Tamil Nadu. [(Laid on the Table of the House under section 11 (2) of the Tamil Nadu Motor Vehicles Taxation Act, 1931 (Tamil Nadu Act III of 1931).]

+ 6. Notification issued with G. O. Ms. No. 2278, Rural Development and Local Administration, dated the 27th October 1972, in regard to extension of term of office of all the members of the Mettur Township Committee as a whole up to the midnight of the 3rd February 1972. [Laid on the Table of the House under section 304 (*d*) of the Tamil Nadu District Municipalities Act, 1920 (Tamil Nadu Act V of 1920).]

+ 7. Notification issued with Memo. No. 113872-J2/72-3, Revenue, dated the 3rd November 1972, in regard to an amendment to the Revenue Department Notification II-1 No. 1061 of 1965, published at pages 1-6 of Part II—Section 1 of the *Tamil Nadu Government Gazette* Extraordinary, dated the 15th March 1965. [(Laid on the Table of the House under section 73 (5) of the Tamil Nadu Inam Estates (Abolition and Conversion into Ryotwari) Act, 1963 (Tamil Nadu Act 26 of 1963).]

+ 8. Notification issued with G. O. R. No. 2275, Revenue, dated the 13th October 1972, in regard to exemption from liability to entertainments tax to the film show organised by the Principal, Voorhees College, Vellore on 17th October 1972 at 10-30 a.m. to raise funds for the developmental plans of the College. [Laid on the Table of the House under section 16 (4) of the Tamil Nadu Entertainments Tax Act, 1939 (Tamil Nadu Act X of 1939).]



+ 9. Notification issued with G. O. Ms. No. 258, Excise and Prohibition, dated the 20th September 1972 in regard to amendment to the Madras Denatured Spirit Methyl Alcohol and Varnish (French Polish) Rules, 1959 and the Madras Distillery Rules, 1960. [Laid on the Table of the House under section 34 (5) of the Tamil Nadu Excise Act, 1971 (Tamil Nadu Act 34 of 1971).]

+ 10. Notification issued with G. O. Ms. No. 2351, Home, dated the 13th September 1972, in regard to exemption from payment of tax leviable in respect of the Ambulance Van bearing registration number TMP 821 belonging to the Blue Cross of India, Madras. [Laid on the Table of the House under section 11 (2) of the Tamil Nadu Motor Vehicles Taxation Act, 1931 (Tamil Nadu Act III of 1931).]

+ 11. Notification issued with G.O. Ms. No. 2352, Home, dated the 13th September 1972, in regard to exemption from payment of tax leviable in respect of the vehicle bearing registration No. TMC 3861, belonging to Sri Kanchi Kamakoti Sankaracharyar Swami Mutt. [Laid on the Table of the House under section 11 (2) of the Tamil Nadu Motor Vehicles Taxation Act, 1931 (Tamil Nadu Act III of 1931).]

% 12. Notification issued with G. O. Ms. No. 2102, Rural Development and Local Administration, dated the 3rd October 1972, in regard to an amendment to the Tamil Nadu Panchayat Establishment (Appointment and Punishment) Rules, 1965. [Laid on the Table of the House under section 199 (2) of the Tamil Nadu Panchayats, Act, 1958 (Tamil Nadu Act XXXV of 1958).]

% 13. Notification issued with Memo. No. 141600/CT. II (2)/ 70-1, Revenue, dated the 23rd March 1971, in regard to list of persons convicted under the Tamil Nadu General Sales Act, 1959, for the quarter ended 30th September 1970. [Laid on the Table of the House under section 53 (5) of the Tamil Nadu General Sales Tax Act, 1959 (Tamil Nadu Act I of 1959).]

% 14. Notification issued with G. O. Ms. No. 375, Food, dated the 3rd October 1972, in regard to inclusion of Agro-chemicals in the Schedule to the Tamil Nadu Warehouses Act, 1951. [Laid on the Table of the House under section 27 (4) of the Tamli Nadu Warehouses Act, 1951 (Tamil Nadu Act XV of 1951).]

% 15. Notification issued with G. O. Ms. No. 2198, Agriculture, dated the 19th August 1972, in regard to declaration of notified market area for Theni market in respect of paddy, cotton, groundnut and chillies. [Laid on the Table of the House under section 29 (4) of the Tamil Nadu Agricultural Produce Markets Act, 1959 (Tamil Nadu Act 23 of 1959).]

% 16. Notification issued with G.O. Ms. No. 460, Revenue, dated the 16th February 1972, in regard to an amendment to rule 18 of the Tamil Nadu Village Officers Service Rules, 1970. [Laid on the Table of the House under section 4 (3) of the Tamil Nadu Proprietary Estates Village Service and the Tamil Nadu Hereditary Village Offices (Repeal) Act, 1968 (Tamil Nadu Act 20 of 1968).]

*B. Reports, Notifications and Other Papers.*

+ 1. Notifications issued with G.O. Ms. No. 603, Industries, dated the 5th April 1972, in regard to certain amendments to the Madras Bricks (Control of Price and Supply) Order, 1966.

+ 2. Notification issued with G. O. Ms. No. 2861, Revenue, dated the 1st November 1972, in regard to an amendment to the table of Fees, published with the late Judicial Department Notification No. 177, at pages 316-319 of Part I of the *Fort St. George Gazette*, dated the 30th March 1909, as subsequently amended.

+ 3. Notification issued with G.O. Ms. No. 2956, Revenue, dated the 15th November 1972, in regard to remission of stamp duty chargeable under the Indian Stamp Act, 1899 in respect of the settlement deed to be executed by the Archbishop of Madurai in favour of the De-hasalle College, Karumathur of Madurai district.

+ 4. Notification issued with G.O. Ms. No. 2753, Revenue, dated the 20th October 1972, in regard to an amendment to the Revenue Department Notification II-1 No. 2901 of 1972, published at page 659 of Part II—Section 1 of the *Tamil Nadu Government Gazette*, dated the 21st June 1972.



+ 5. Notification issued with G.O. Ms. No. 2705, Revenue, dated the 13th October 1972, in regard to remission of stamp duty chargeable under the Indian Stamp Act, 1899, in respect of the mortgage deed to be executed by Thiru K. S. Chandrasekharan, I.A.S., in connection with the additional house building advance sanctioned to him by the Government of Orissa.

+ 6. The Tamil Nadu Societies Registration Bill, 1972 (L.A. Bill No. 53 of 1972).

% 7. Notification issued with G.O. Ms. No. 3146, Revenue, dated the 30th November 1972 in regard to an amendment to the Table of Fees published with late Judicial Department Notification No. 177, at pages 316–319 of Part I of the *Fort St. George Gazette*, dated the 30th March 1909, as subsequently amended.

% 8. Notification issued with G.O. Ms. No. 3015, Revenue, dated the 20th November 1972, in regard to an amendment to the table of fees, published with the late Judicial Department Notification No. 177, at pages 316–319 of Part I of the *Fort St. George Gazette*, dated the 30th March 1909, as subsequently amended.

%9. The Tamil Nadu Stage Carriages and Contract Carriages (Acquisition) Ordinance, 1973 (Tamil Nadu Ordinance No. 1 of 1973).

10. Fifth Annual Report of the Tamil Nadu Vigilance Commission, for the period from 1st April 1970 to 31st March 1971.

@ 11. Governor's Address to the Members of the Legislature on 2nd February 1973. (English and Tamil.)

---

+ Despatched to Members on 4th January 1973.
% Despatched to Members on 22nd January 1973.
@ Circulated to Members on 2nd February 1973.

# தமிழ்நாடு சட்டப் பேரவை.

---

## திங்கட்கிழமை, 1973 பிப்ரவரி 5.

சென்னை செயின்ட் ஜார்ஜ் கோட்டையிலுள்ள சட்டப் பேரவை மண்டபத்தில் காலை 9 மணி அளவில் மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர் திரு. பெ. சீனிவாசன் அவர்கள் தலைமையில் பேரவை கூடியது.

### 1. வினாக்கள்—விடைகள்.

### வெள்ளிக்குறியிட்ட வினாக்கள்.

*New scheme for school syllabi.*

* 1 *Q*.—Dr. H. V. HANDE : Will the Hon. the Minister for Education and Local Administration be pleased to state—

(*a*) whether the panel of new syllabus headed by Mr. E. R. Savarirayan has submitted any report to the Government; and

(*b*) if so, the details thereof?

மாண்புமிகு டாக்டர் இரா. நெடுஞ்செழியன் : (அ) & (ஆ) திரு. ஆர். செவரிராயன் தலைமையில் பள்ளிப் பாடத்திட்ட திருத்தக் குழு எதுவும் அமைக்கப்படவில்லை.

பள்ளிப்பாடத்திட்டக் குழுக்களால் தயாரிக்கப்பட்ட புதிய பாடத்திட்ட வரைவுகள் 1 முதல் 5 வகுப்புகளுக்கு 1971 நவம்பரிலும், 6 முதல் 8 வகுப்புகளுக்கு 1972 சனவரியிலும் தமிழ் நாடு அரசிதழில் வெளியிடப்பட்டுள்ளன. புதிய பாடத் திட்டம் 1–5 வகுப்புகளில் கணக்கு அறிவியல் தவிர, மற்ற எல்லாப் பாடங்களுக்கும் 1972–73 முதல் நடைமுறைக்கு வந்துள்ளது.

திரு. ஆர். பொன்னப்ப நாடார் : தலைவர் அவர்களே, இந்தப் பாடத் திட்டங்களையெல்லாம் ஹைஸ்கூல் வகுப்புகளுக்கும் அமுல் செய்வதற்கு ஏதாவது பரிந்துரை இருந்ததா? அப்படியிருந்தால், அதன் விவரங்கள் என்ன? அது எப்பொழுது நடைமுறையில் வரும்?

**மாண்புமிகு டாக்டர் இரா. நெடுஞ்செழியன்:** தலைவர் அவர்களே, 9 முதல் 11 வகுப்புகளுக்குரிய பாடத்திட்டங்களும் விரைவில் மாற்றியமைக்கப்பட இருக்கின்றன. அதற்காகத் தனிக் குழுக்கள் அமைக்கப்பட்டிருக்கின்றன.

DR. H. V. HANDE : Sir, is it a fact that a short-term training programme is also going to be instituted for the teachers and whether an in-service programme for teachers who are going to undertake this new syllabi is going to be started and whether schemes have been drawn up, whether the staff have been recruited and whether the Government have taken into consideration the steps to be taken as per the recommendations to see to it that the number of students in each class is restricted to the minimum as suggested by this Committee?

**மாண்புமிகு டாக்டர் இரா. நெடுஞ்செழியன்:** தலைவர் அவர்களே, 1 முதல் 5 வகுப்புகளில் கணக்கு, அறிவியல் தவிர, மற்றப் பாடங்கள் நடைமுறைக்குக் கொண்டுவரப்பட்டுள்ளன. கணக்கு, அறிவியல் பாடங்களை மட்டும் ஆசிரியர்களுக்கு எப்படிக் கற்றுக் கொடுக்க வேண்டும் என்று மறு பயிற்சி அளிக்கப்பட வேண்டியிருக்கிறது. ஆகையால்தான் வரும் ஆண்டில் கொண்டு வருவதற்குப் பல்வேறு பள்ளிகளிலிருந்து ஆசிரியர்கள் தேர்ந்தெடுக்கப்பட்டு இப்பொழுது முறைப்படி அவர்களுக்கு மறு பயிற்சி அளிக்கும் ஏற்பாடுகள் மேற்கொள்ளப்பட்டிருக்கின்றன. மறு பயிற்சி அளிக்கப்பட்டதற்குப்பிறகு அந்தப் பாடத் திட்டம் நடைமுறைக்குக் கொண்டுவரப்படும்.

DR. H. V. HANDE : Sir, may I know whether the Government has also taken into consideration the need to completely re-organise the entire teaching in High Schools from the first standard to the eleventh standard in view of the fact that out-dated things are ingrained in the text-books and in view of the fact that there is need for modernising the entire teaching procedure to suit the need of the hour?

**மாண்புமிகு டாக்டர் இரா. நெடுஞ்செழியன்:** தலைவர் அவர்களே, மாண்புமிகு உறுப்பினர் கூறுகிற கருத்தின் அடிப்படையில்தான் இப்பொழுது மாற்றியமைக்கப்பட்டிருக்கிறது. பாடத் திட்டங்கள் கடைசியாக 1965-இல் திருத்தியமைக்கப்பட்டன. இப்பொழுது காலத்தினுடைய தேவைக்கு ஏற்ப நவீன முறைகளைக் கையாளுவதற்கு மாணவர்களுக்கு எப்படிப்பட்ட



கருத்துக்களைப் பயிற்றுவிக்கவேண்டும் என்ற கருத்தின் அடிப்படையில்தான் 1 முதல் 11 வகுப்புகள் வரை பாடத் திட்டங்கள் படிப்படியாக மாற்றப்பட்டு வருகின்றன 1 முதல் 5 வரையிலுள்ள வகுப்புகளிலும் மாற்றியமைக்கப்பட்டிருக்கின்றன. அதேபோன்று 6 முதல் 8 வகுப்புகளுக்கும் பாடத் திட்டங்கள் மாற்றியமைக்கப்பட்டிருக்கின்றன. 9 முதல் 11 வகுப்புகளுக்குப் பாடத் திட்டங்களை மாற்றுவதற்கு குழுக்கள் அமைக்கப்பட்டிருக்கின்றன. அவர்களுடைய அறிக்கைகள் வந்தபிறகு அவற்றையொட்டிப் படிப்படியாக நடவடிக்கைகள் முறையாக மேற்கொள்ளப்படும்.

**திரு. கே. ஏ. வகாப்:** கல்லூரிப் பாடத் திட்டங்களில் மாற்றம் செய்யும் செயற்குறிப்பு அரசுக்கு ஏதேனும் உண்டா? அப்படியென்றால், கிழக்கு ஜெர்மனியில் செய்வதுபோன்று, கல்லூரிகளில் மாணவர்களைச் சேர்ப்பதற்கு முன்பாக, அங்கே மதிப்பெண்களின் அடிப்படையில் இல்லாமல், அவர்கள் நாட்டின் நலனில் எவ்வளவு அக்கறை உள்ளவர்கள் என்பதைக் கருத்தில்கொண்டு, மாணவர்களையும் பேராசிரியர்களையும் கலந்து பிறகு சேர்த்துக்கொள்ளக்கூடிய முறை இருப்பதாகக் கூறுகிறார்கள். அப்படிப்பட்ட முறையெல்லாம் இந்தப் பாடத்திட்ட அடிப்படையில் கொண்டுவர அரசு முன்வருமா?

**மாண்புமிகு டாக்டர் இரா. நெடுஞ்செழியன்:** தலைவர் அவர்களே, கல்லூரிப் பாடத் திட்டங்களைப் பொறுத்தவரையில், அதற்கான குழுக்களை அரசு அமைக்க இயலாது. பல்கலைக் கழகம்தான் அமைக்க வேண்டும். பல்கலைக்கழகம், கல்லூரிப் பாடத் திட்டங்களை மாற்றியமைப்பதற்குப் பல்வேறு குழுக்களை அண்மையில் அமைத்திருக்கிறார்கள். அவர்கள் சீர்திருத்தித் தந்த பாடத்திட்டங்களின் அடிப்படையில் புத்தகங்கள் வெளியிடும் பொறுப்பைப் பாட புத்தகக் குழு மேற்கொண்டிருக்கிறது. பல்கலைக்கழகம் தக்கபடி நடவடிக்கை எடுத்து வருகிறது. அகில இந்தியப் பல்கலைக்கழகத் துணை வேந்தர்கள் மாநாட்டில் பல தீர்மானங்கள் நிறைவேற்றி அதை நடைமுறைக்குக் கொண்டுவர வேண்டும் என்று சொல்லியிருக்கிறார்கள். அந்த அடிப்படையில் பல்கலைக்கழகம் தக்க முடிவுகளை எடுத்துவரும்.

**திரு. கே. என். குமாரசாமி:** தலைவர் அவர்களே, 6 முதல் 11 வகுப்பு வரை பாடத் திட்டங்களில் மாற்றம் செய்யப்பட்டதாக அமைச்சர் அவர்கள் சொன்னார்கள். 6 முதல் 11 வகுப்பு

வரைக்கும் தொழிற்கல்வி போதிப்பதற்குச் செய்யவேண்டிய முறைகள் ஆராயப்பட்டிருக்கின்றனவா என்று அறிய விரும்புகிறேன்.

**மாண்புமிகு டாக்டர் இரா. நெடுஞ்செழியன் :** தலைவர் அவர்களே, எல்லாப் பள்ளிகளிலும் எல்லா வகுப்புகளிலும் தொழில் கல்வி புகுத்த வழி இல்லை. ஆனால், பைஃபர்கேட்டட் கோர்ஸ் என்ற முறையில் சிலபல இடங்களில் தனித்தனியாகத் தொழிற்துறைப் பற்றிய கல்வியைப் பயில வழிகள் ஏற்பட்டிருக்கின்றன. சில இடங்களில் ஜூனியர் டெக்னிகல் ஸ்கூல்ஸ் ஏற்படுத்தப்பட்டு பாலிடெக்னிக்கில் சேருவதற்கு உதவி செய்யும் முயற்சிகள் மேற்கொள்ளப்பட்டிருக்கின்றன. ஆனால், எல்லாப் பள்ளிகளிலும் அந்தத் தனிப் பிரிவு வைக்கப்படவில்லை. ஆனால், பாடத்திட்டங்களில் அறிவியல், கணக்கு போன்றவை நவீன காலத்திற்கேற்ப மாற்றியமைக்கப்பட்டிருக்கின்றன. ஆகவே தான் அதிலே ஆசிரியர்கள் எப்படிக் கற்றுக்கொடுக்கவேண்டும் என்பதற்கு மறு பயிற்சி அளிக்கப்பட்டு வருகிறது.

**திரு. சௌடி எஸ். சுந்தர பாரதி :** தலைவர் அவர்களே, இந்தப் பாடத் திட்டங்களையெல்லாம் புதிய அடிப்படையில் மாற்றியமைப்பதற்கு குழு ஏற்படுத்தக்கூடிய காலத்தில், என்ன என்ன அடிப்படையில் இந்தப் புதிய பாடத் திட்டங்களைச் சமர்ப்பிக்க வேண்டும் என்று அந்தக் குழுவுக்கு ஏதேனும் பரிந்துரை தரப்பட்டதா, அந்தப் பரிந்துரையின் அடிப்படையில் சொல்லப்பட்ட கருத்துக்கள் யாவை என்று அறிய விரும்புகிறேன்.

**மாண்புமிகு டாக்டர் இரா. நெடுஞ்செழியன் :** அந்தந்தப் பாடங்களில் வல்லுநர்கள் தேர்ந்தெடுக்கப்பட்டு, பாடத் திட்டங்களைக் கவனிக்கவேண்டும் என்று சொல்லியிருக்கிறோம். அவர்கள் எந்த எந்த அடிப்படையில் ஆராய வேண்டும் என்பதுபற்றிய விவரக் குறிப்பு இல்லை. தனிக் கேள்வி போட்டால், அந்த விவரக் குறிப்பு தரலாம்.

## *New courses in technology*

* 2 Q.—THIRU N. DENNIS : Will the Hon. the Minister for Education and Local Administration be pleased to state—

(*a*) whether there are proposals to start new courses of study in technical institutions in this State; and

(*b*) if so, the details thereof?



**மாண்புமிகு டாக்டர் இரா. நெடுஞ்செழியன் :** (அ) ஆம்.

(இ) இதுபற்றிய அறிக்கையொன்று @ பேரவையின் முன் வைக்கப்பட்டுள்ளது.

THIRU N. DENNIS : Sir, may I know whether more and more self-employment-oriented courses would be started which would be a step to solve the unemployment problem?

**மாண்புமிகு டாக்டர் இரா. நெடுஞ்செழியன் :** தலைவர் அவர்களே, அதுபற்றிய குறிப்புகள் இல்லை. தனிக் கேள்வி போட்டால், அதுபற்றி ஏதாவது நடவடிக்கை எடுக்கப்பட்டிருக்கிறதா என்று ஆராய்ந்து சொல்லலாம்.

**திரு. மு. சண்முகம் :** கிராமப் புறங்களில் விவசாயக் குடும்பப் பிள்ளைகளுக்கு விவசாயத் தொழிலில் பயிற்சி அளிப்பதற்கு ஏற்படுத்தப்பட்டிருக்கும் பயிற்சிச்சாலைகளுடன் கிராமப் புறங்களில் சிறு தொழில்கள் நுட்பப் பயிற்சியும் அளிப்பதற்கு இணைந்த திட்டத்தை அரசு கொண்டுவருமா என்று அறிய விரும்புகிறேன்.

**மாண்புமிகு டாக்டர் இரா. நெடுஞ்செழியன் :** இப்பொழுது பாலிடெக்னிக்குகள் பெரும்பாலும் சிறு தொழில்களிலே பயிற்சி பெறுவதற்கு ஏற்ற வகையில்தான் அமைக்கப்பட்டு அப்படிப்பட்ட தனிப் பயிற்சி அளிக்கப்பட்டு வருகிறது. அதைத் தவிர,

1. Agricultural Engineering.
2. Welding Technology.
3. Hospital Equipment Technology.
4. A course in Cosmetology at the Government Polytechnic for Women, Madras.
5. A certificate course in Commercial Banking at the Government Polytechnic for Women, Madras.
6. Diploma course in Electronic (Instrument Technology) at the Government Polytechnic for Women, Madurai.
7. A courses in Commerical Practive at the Virudhunagar Vellaichamy Nadar Polytechnic, Virudhunagar.
8. A course in Laundry Technology as an elective in the Technical High School attached to the Central Polytechnic, Adyar, Madras.

@ 200-202 ம் பக்கங்களில் முதல் இணைப்பாக அச்சிடப்பட்டுள்ளது.

9. A diploma course in Commercial Practice at the Nachimuthu Polytechnic, Pollachi.

10. A certficate Course for Head Gardeners of one year duration with an in-take of 20 students at the Central Polytechnic, Madras.

என்று வேறு சில குறிப்பிட்டபிரிவுகள் மட்டும் தேவையான அளவுக்குப் புகுத்தப்பட்டிருக்கின்றன. அந்த வகைகளில் எங்கெங்கு என்ன தேவை இருக்கிறதோ, அதைக் கருத்திற்கொண்டு புதிய வகுப்புகள் ஆரம்பிக்கப்படுகின்றன.

*Laying of roads in Hosur and Denkanikota taluks*

* 3 Q.—THIRU B. VENKATASWAMY: Will the Hon. the Minister for Education and Local Administration be pleased to state—

(a) whether any master plan to lay roads in Hosur and Denkanikottah taluks in Dharmapuri district is pending with the Government; and

(b) if so, the reason for the delay in sanctioning the same?

**மாண்புமிகு டாக்டர் இரா. நெடுஞ்செழியன்:** (அ) & (இ) தேன்கனிக் கோட்டை வட்டத்தில், சாலைகள் அமைப்பதற்கான பெரிய திட்டம் ஏதும் அரசின் பரிசீலனையில் இல்லை. ஹோசூர் வட்டத்தில் ரூ. 75 லட்சம் செலவில் சாலைகள் அமைப்பதற்கான செயல் குறிப்பு ஒன்று ஏனைய சாலைகள் திட்டத்தின் கீழ் அரசினால் ஆய்வு செய்யப்பட்டது. நிதிப் பற்றாக்குறை காரணமாக அதற்கு ஒப்பளிக்கப்படவில்லை.

THIRU B. VENKATASWAMY: Sir, Hosur and Denkanikottah have been long-neglected areas and they are also hilly areas. May I know from the Hon. Minister whether at least in the next year the Government will sanction roads from Anchetty to Kottayyur (via) Urigam and Thaggatti in the Anchetty Firka and other most important areas. The people there cannot walk and only elephants are walking in that area. So, may I request the Hon. Minister to implement the master plan and see that the people there are able to walk on the roads safely?

**மாண்புமிகு டாக்டர் இரா. நெடுஞ்செழியன்:** தர்மபுரி மாவட்டத்தில் புதுச்சாலைகளைச் செப்பனிடுவதற்கு 75 லட்சம் ரூபாய் திட்டத்தை தலைமைச் செயலாளர் அவர்கள் முதலில் அனுப்பிவைத்தார்கள். ஒதுக்கப்பட்ட நிதியிலிருந்து அதைச் செய்ய முடியாத காரணத்தினால், அது ஒத்திவைக்கப் பட்டிருக்கிறது. நிதிவசதி ஏற்படுகிற காலத்தில் அதைச் செய்யலாம் என்ற அளவிற்குச் சொல்லியிருக்கிறார்கள். ஆனால், அது தவிர வறட்சியால் பாதிக்கப்பட்டு, நிவாரணத் திட்டத்தின் கீழ் வருவாய் துறை இலாகா மத்திய அரசின் அனுமதியோடு சாலை அபிவிருத்திக்காக 60 லட்சம் ரூபாய் தர்மபுரி மாவட்டத்திற்கு ஒரு சிறப்புத் திட்டத்திற்கு ஒப்புதல் அளித்துள்ளது. அதில் இது அடங்கியிருக்கிறதா இல்லையா என்று தெரியவில்லை. இத் திட்டத்தின் கீழ், தொடங்கப்பட்டுள்ள 183 சாலைகளில் 13 தவிர மற்ற வேலைகள் தொடங்கப்பட்டு விட்டதாக கூறப்படுகிறது. அதில் இது அடங்கவில்லை என்றால், நிதி வசதி ஏற்படும்போது கவனிக்கப்படும். ஆனால் செயற்குறிப்பு பரிசீலனையில் இருந்து வருகிறது.

THIRU K. S. KOTHANDARAMIAH: Sir, last year some roads were laid in the hilly areas of Hosur and Denkanikotta under the Crash Programme, but they are not metalled. As they are hilly areas there is scope for soil erosion and they have been damaged. So. may I konw whether the metalling of the roads would be ordered, so that the amount spent on it would not become a waste and the roads also would become useful?

**மாண்புமிகு டாக்டர் இரா. நெடுஞ்செழியன்:** அதுபற்றி, மாண்புமிகு உறுப்பினர் அவர்கள் கூறுகிற கருத்துக்கள் ஆராயப் பட்டு கவனத்தில் கொள்ளப்பட்டு அது நடைமுறைப்படுத்தப் படும். அதுபற்றிய விவரங்கள் இல்லை. விவரங்களை ஆராய்ந்து கண்டு அதை நிறைவேற்றுவதற்குத் தக்க முயற்சிகள் எடுக்கலாம்.

THIRU B. VENKATASWAMY: The answer given by the Hon. Minister states that sufficient funds are not available in the State. May I know whether our Government have requested the Central Government to lay roads in the hilly areas like Anchetty.

**மாண்புமிகு டாக்டர் இரா. நெடுஞ்செழியன்:** வறட்சி நிவாரணப் பணியின்கீழ் நிதி ஒதுக்கப்பட்டிருக்கிறது. 183 திட்டங்கள் மேற்கொள்ளப்பட்டிருப்பதில் 13 திட்டங்கள் தவிர, மற்ற வேலைகள் தொடங்கப்பட்டுள்ளதாக கூறப்பட்டிருக்கிறது. அதில் இவை அடங்கியதாகத் தெரியவில்லை. நிதிவசதி ஏற்படும்போதுதான் அது கவனிக்கப்படும் என்று கூறப்பட்டிருக்கிறது.

[1973 பிப்ரவரி 5

### சென்னை ஸ்டான்லி மருத்துவமனை.

*4. வினா—திரு. கே. ஏ. வகாப் : மாண்புமிகு மக்கள் நல்வாழ்வுத் துறை அமைச்சர் தயவு செய்து கீழ்க்கண்ட வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) சென்னை ஸ்டான்லி மருத்துவமனையில் 'பி' கிளாஸ், 'ஏ' கிளாஸ் அறைகளை விஸ்தரிக்கும் செயற்குறிப்பு அரசிடம் உள்ளதா ?

(இ) ஆம் எனில், எப்போது ?

**மாண்புமிகு திரு. க. அன்பழகன் :** (அ) & (இ) இது பற்றிய செயற்குறிப்பு மருத்துவக் கல்வி இயக்குநரின் பரிசீலனையில் உள்ளது.

**திரு. கே. ஏ. வகாப் :** பொதுவாக வெளி நர்ஸிங் ஹோம்களில் ட்ரீட்மென்ட் செய்வதை விட அரசாங்க மருத்துவமனைகளில் நல்லபடி ட்ரீட்மென்ட் செய்யப்படுவதால், அதிக மக்கள் அங்கு செல்ல முயற்சி எடுத்துக்கொண்டிருக்கிறார்கள். ஆகவே, அப்படி வருகிற நோயாளிகளுக்கு வசதி அளிக்கக்கூடிய வகையில் ஸ்டான்லி மருத்துவ மனை மட்டுமல்ல சென்னையில் உள்ள பெரிய மருத்துவமனைகளில் இந்த விஸ்தரிப்புத் திட்டத்தினை பெரிய அளவில் செய்ய அரசு முன்வருமா ?

**மாண்புமிகு திரு. க. அன்பழகன் :** நிதி நிலைமை இடம் தருவதற்கு ஏற்பத்தான் கட்டடச் செலவிற்கு நிதி ஒதுக்கிட முடியும். ஏற்கனவே புற நோயாளிகளுக்காகக் கட்டப்பட்ட கட்டிடப் பகுதியின் மேலே ஒரு மாடி கட்டமுடியுமா என்பதும் அப்படி கட்டப்படுமானால், அதில் எவ்வளவு அறைகள் இடம் பெற முடியும் என்றும் பொறியியல் துறையிடம் கேட்கப்பட்டிருக்கிறது. அவர்கள் எளிதாக இயலும் என்று தெரிவித்தால் அரசு அதற்கான திட்டத்தினை எடுத்துக்கொள்ள முயற்சி செய்யும்.

**திரு. ஜே. ஜேம்ஸ் :** சில டிஸ்ட்ரிக்ட் ஹெட்குவார்ட்டர்ஸ் ஆஸ்பத்திரிகளில் தற்போது 'பி' கிளாஸ் பே வார்ட் கூட இல்லாமல் இருக்கிறது. உதாரணமாக, நாகர்கோவில் டிஸ்ட்ரிக்ட் ஹெட்குவார்ட்டேர்ஸ் ஆஸ்பத்திரியில் 'பி' கிளாஸ் பே வார்ட் இல்லை. இந்தக் குறையைப் போக்குவதற்கு அரசாங்கம் நடவடிக்கைகள் மேற்கொள்ளுமா ?



1973 பிப்ரவரி 5]

**மாண்புமிகு திரு. க. அன்பழகன் :** முறையாகப் பதில் சொல்வதானால் தனியாகக் கேள்வி போடவேண்டுமென்று தெரிவிக்க முடியும். இருந்தாலும் இந்தக் கருத்தை மட்டும் தெரிவிக்க விரும்புகிறேன். அதற்கான கட்டிடம் கட்ட நிலம் பெறவேண்டுமென்று அரசு முயற்சித்தது. ஏறத்தாழ ஏழு லட்சம் ரூபாய் அளவிற்கு விலை கொடுத்து இடம் பெறவேண்டியிருக்கிறது. இடம் வாங்குவதற்கு ஏழு லட்சம் ரூபாய் என்றால், மருத்துவமனைக் கட்டடம் போன்றவற்றிற்கு 10 லட்சம் ரூபாய் தேவையாகும். அந்த அளவில் அந்தத் திட்டம் இன்னும் ஏற்றுக்கொள்ளப்படவில்லை.

**மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர் :** இவ்வளவு தெளிவாகப் பதில் சொன்னால் துணைக் கேள்விகள் அதிகமாகும்.

### சென்னை பொது மருத்துவமனை.

*5. வினா—திரு. என். கிட்டப்பா : மாண்புமிகு மக்கள் நல்வாழ்வுத் துறை அமைச்சர் தயவுசெய்து கீழ்க்கண்ட வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) 1967-68-ஆம் ஆண்டில் சென்னை ஜெனரல் ஆஸ்பத்திரிக்கு (General Hospital) சிகிச்சைக்காக வருகை தந்த வெளி நோயாளிகள் (அவுட் பேஷன்ட்ஸ்) எத்தனை பேர் ?

(இ) அங்குள்ள வெளி நோயாளிகள் பிரிவு எத்தனை மணி நேரம் வேலை செய்கிறது ?

(உ) எந்த நேரத்தில் எத்தனை மணி முதல் எத்தனை மணி வரை ?

**மாண்புமிகு திரு. க. அன்பழகன் :** (அ) 8,31,465 பேர்.

(இ) தினசரி 2 மணி நேரம்.

(உ) காலை 7 மணி முதல் 9 மணி வரை.

**திரு. என். கிட்டப்பா :** இப்போது ஒதுக்கப்பட்டிருக்கும் நேரம் மிகக் குறைவாக இருக்கிற சூழ்நிலையையொட்டி, அப்படிக் கருதப்படுவதால், அந்த நேரத்தை இன்னும் அதிகப்படுத்த அரசு ஆவன செய்ய முன்வருமா ?

**மாண்புமிகு திரு. க. அன்பழகன் :** இந்த நேரம் பொது மக்களுக்கு வசதியான நேரம் என்று கருதப்பட்டு வைக்கப்பட்ட நேரம். அந்த இரண்டு மணி நேரத்தில் அங்கு வருகிற

அனைவருக்கும் அவர்கள் மருத்துவப் பரிசோதனை பெற்றுக் கொள்வதற்கும் மருந்து பெறுவதற்கான சீட்டுகள் வழங்கப்படுகின்றன. அந்த இரண்டு மணி நேரத்தில் ஏறத்தாழ 4,800 பேர்களில் இருந்து 5,000 பேர்கள் வரை வருகிறார்கள். அப்படி சீட்டுப் பெற்றுக்கொண்ட 4,800, 5,000 பேர்களும் நல்லமுறையில் பரிசோதிக்கப்பட்டு புற நோயாளிகள் என்ற முறையில் மருந்து வழங்கி திருப்பி அனுப்புவதற்கு 9 மணி வரை மட்டும் அல்ல, கிட்டத்தட்ட பகல் 1 மணி வரை கூட ஆகிறது அதுவரையில் அவர்கள் கவனிக்கப்படுகிறார்கள். இன்னும் நேரத்தை அதிகப் படுத்தவேண்டுமென்று சொன்னால், அந்தப் பொது மருத்துவ மனையில் இருக்கிற இடத்தைப் பொறுத்து கவனிக்கப்பட வேண்டும், போக்குவரத்து முதலிய பல்வேறு தொல்லைகள் மிகுந்திருக்கிற ஒரு பகுதி இது என்ற அளவில் இப்படி அதிகப் படுத்துவது நல்லதல்ல என்றும் அரசாங்கம் கருதுகிறது.

DR. H. V. HANDE: Sir, will the Government accept my suggestion? It is better, from the traffic point of view to allow the out-patients departments to work for 24 hours under a shift system so that the load on the hospital would also be less?

THE HON. THIRU K. ANBAZHAGAN: Sir, the policy of the Government is to have out-patients examined at a particular time as far as possible. For emergency cases, all the 24 hours the hospital is providing a section.

**திரு. இராம. அரங்கண்ணல் :** மாநகராண்மைக் கழகத்திற்குச் சொந்தமாக பல்வேறு பகுதிகளில் ஏராளமான மருத்துவ விடுதிகள் இருக்கின்றன. அவைகளை எல்லாம் அரசாங்கமே ஏற்று, அந்த மருத்துவ விடுதிகளை அரசாங்கமே ஏற்று நடத்துமானால் அவுட் பேஷன்ட்ஸ் சிரமம் குறையும் அல்லவா ?

**மாண்புமிகு திரு. க. அன்பழகன் :** மாநகராட்சி மன்றம் அதை ஒத்துக்கொண்டு அரசாங்கத்தினிடத்தில் வழங்குவதற்குச் சம்மதிக்குமானால் அரசாங்கம் ஏற்றுக்கொள்ள முயற்சிக்கும்.

**திரு. ஜே. ஜேம்ஸ்:** ஜெனரல் ஆஸ்பத்திரிக்கு இப்போது தினசரி 4,800-ல் இருந்து 5,000 பேர்கள் வரை அவுட் பேஷன்ட்ஸ் வருகிறார்கள் என்று அமைச்சர் அவர்கள் கூறினார்கள். இப்போதே அந்தப் பிரிவிற்குச் செல்கிற மருத்துவர்கள் இவ்வளவு அவுட் பேஷன்ட்களையும் சரிவரப் பார்த்து அவர்களுக்கு சரிவர சிகிச்சை



கொடுப்பதற்கு இயலாமல் இருக்கிற ஒரு நிலை இருக்கிறது. ஆகவே, இந்தப் பிரிவுக்கு அதிகப்படியான மருத்துவர்களை நியமிக்க அரசாங்கம் ஆவன செய்யுமா ? என்று அறிய விரும்புகிறேன்.

**மாண்புமிகு திரு. க. அன்பழகன் :** இப்போது வேலை செய்கிற டாக்டர்களைக்கூட எனக்குத் தெரியும். எனவே டாக்டர்கள் காணவில்லை என்ற குறைபாடு இல்லை. இடவசதி பெருக்கப்படவேண்டுமென்ற எண்ணம் இருக்கிறது. எந்த அளவிற்கு இடவசதியைப் பெருக்கமுடியும் என்பது மருத்துவமனை இருக்கிற இடத்தைப் பொறுத்தது.

### பஞ்சாயத்து யூனியன் மருந்தகங்கள்.

***6. வினா—திரு. எஸ். கணேசன் :** மாண்புமிகு மக்கள் நல் வாழ்வுத் துறை அமைச்சர் தயவு செய்து கீழ்க்கண்ட வினாவுக்கு விடையளிப்பாரா—

நடப்பாண்டில் தஞ்சை மாவட்டத்தில் எத்தனை பஞ்சாயத்து யூனியன் ஆஸ்பத்திரிகளை அரசு ஏற்க திட்டமிடப்பட்டுள்ளது ?

**மாண்புமிகு திரு. க. அன்பழகன் :** இம் மாவட்டத்தில் ஆறு பஞ்சாயத்து யூனியன் மருந்தகங்களை அரசு ஏற்கனவே ஏற்றுள்ளது கடந்த ஆண்டில். இந்த ஆண்டில் அவை செயல் முறைக்கு வரும்.

**திரு. எஸ். கணேசன் :** ஒன்றியங்களுக்குச் சொந்தமான மருத்துவமனைகளை அரசாங்கமே ஏற்றுக்கொள்வதில் ஏதாவது விதிமுறைகள் அனுசரிக்கப்படுகிறதா ? எல்லா ஒன்றிய மருத்துவ மனைகளையும் வருகிற ஆண்டில் அரசே ஏற்றுக்கொள்வதற்கு முன் வருமா ?

**மாண்புமிகு திரு. க. அன்பழகன் :** ஒன்றிய மருத்துவமனைகள் என்றிருந்த காரணத்தினாலும், எடுத்துக்கொள்ளப்பட்ட மருத்துவ மனைகள் தற்போது ஒன்றியங்களினால் நடத்தப்பட்ட காரணத்தினாலும், அவ்வாறு விடையளிக்கப்பட்டிருக்கிறது. ஆனால் இவை எல்லாம் மாவட்ட ஆட்சி மன்றங்கள் இருந்த காலத்தில் தொடங்கப்பட்ட மருத்துவமனைகளாகும். அப்போது தொடங்கப் பட்டவை ஏறத்தாழ 225 உள்ளன. அவற்றை ஆண்டுக்கு 40 வீதம் எடுக்க முயற்சிக்கவேண்டுமென்று கடந்த ஆண்டு கருதப்பட்டது. அந்த அடிப்படையில் எடுக்கப்பட்டிருக்கிறது. அவற்றிற்கு

கட்டடங்கள் இருக்கவேண்டும். சுற்றுப் பகுதியில் இடம் இருக்க வேண்டும். மேலும் தேவையானால் அந்தக் கட்டடத்தில் இப்போது வசதியில்லை என்றால், புது வசதிகளைச் செய்து தரவும் ஒன்றியம் ஊராட்சி முன்வரவேண்டும். அப்படி அமைகிற இடமாகப் பார்த்து, இடவசதியைப் பார்த்து மருந்தகங்கள் அரசினரால் எடுக்கப்பட்டுள்ளன.

### காச நோயாளிகளுக்கு உதவி.

*7. வினா—திரு. தி. சி. ஆ. சிவப்பிரகாசம் : மாண்புமிகு மக்கள் நல்வாழ்வுத் துறை அமைச்சர் தயவு செய்து கீழ்க்கண்ட வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) க்ஷயரோக வியாதியால் கஷ்டப்படும் ஏழைகளுக்கு சர்க்கார் உதவிப்பணம் கொடுத்திருக்கிறதா ?

(இ) ஆம் எனில், எந்த அடிப்படையில் எவ்வளவு பணம் கொடுக்கப்படுகிறது ?

**மாண்புமிகு திரு. க. அன்பழகன் :** (அ) ஆம்.

(இ) மருத்துவமனையில் தங்கி சிகிச்சைபெறும் பிணியாளராக இல்லாமல், வெளியிலிருந்து வந்து சிகிச்சைபெறும் பிணியாளராக தொடர்ந்து ஒரு மருத்துவமனையில் சிகிச்சை பெறும் ஒவ்வொரு காசநோயாளிக்கும் சில நிபந்தனைகளுக்குட்பட்டு ஓராண்டு காலத்திற்கு உதவித்தொகை மாதம் ரூபாய் 20 வீதம் கொடுக்கப்படுகிறது.

**திரு. தி. ச. ஆ. சிவப்பிரகாசம் :** தலைவரவர்களே, தற்சமயம் அரசாங்கம் கொடுக்கும் பணம் சத்துணவு வாங்கிச் சாப்பிடுவதற்குப் போதுமானதாக இல்லை என்பதை அரசு அறியுமா ?

**மாண்புமிகு திரு. க. அன்பழகன் :** தலைவரவர்களே, 1967 வரையில் ரூ. 10 தான் கொடுக்கப்பட்டு வந்தது. அதற்குப் பின்னர் தான் 1967-க்கு முன்னால் இருந்த காலகட்டம் அங்கத்தினர்கள் அறிவார்கள். ரூ. 10 போதாது என்று ரூ. 20 ஆக கொடுக்கப்பட்டது. இது உதவித் தொகையாகத்தான் கொடுக்கப்படுகிறது. புறப் பிணியாளர்கள் தொடர்ந்து காச நோய்க்கு மருந்தைப் பெற்றுச் சாப்பிடுவதற்கு ஊக்கம் அளிக்கப்படுகிற வகையில் தான் இந்தப் பணம் கொடுக்கப்படுகிறது. அவர்கள் 1½ ஆண்டு



காலத்திற்கு தவறாமல் இந்த மருந்தைச் சாப்பிடவேண்டியிருக்கிறது. இது உதவித் தொகையே தவிர, உணவுக்குச் செலவாகும் முழுத்தொகையும் அல்ல. அப்படி வழங்குவதற்கும் இயலாது.

**திரு. ஆர். பொன்னப்ப நாடார் :** இந்த காச நோயாளிகளுக்குக் கொடுக்கப்படுகிற உதவித் தொகை 1967-ல் பிக்ஸ் செய்யப்பட்டது என்று அமைச்சர் அவர்கள் கூறினார்கள். அதை அதிகப்படுத்த வேண்டுமென்று ஏதாவது பரிந்துரை நாகர்கோவிலில் உள்ள டி.பி. மருத்துவ மனையிலிருந்து வந்துள்ளதா ? அப்படி வந்திருந்தால் அதன் விவரம் என்ன என்பதை அமைச்சர் அவர்கள் அறிவிப்பார்களா ?

**மாண்புமிகு திரு. க. அன்பழகன் :** தலைவரவர்களே, நாகர்கோவில் மருத்துவமனையைப் பொறுத்தவரையில் உள் நோயாளிகளுக்கு வழங்கும் சிகிச்சை முக்கியத்துவம் பெறும். இது ஒவ்வொரு மாவட்ட மருத்துவ மனையிலும், வட்ட மருத்துவ மனையிலும் உள்ள புற பிணியாளர்களுக்கும்--டோமிசைல்ட் கிமோதராபி என்னும் வகையில் வீட்டிலிருந்து சிகிச்சை பெறும் பிணியாளர்களுக்கும் கொடுக்கப்படுகிறது. தமிழ்நாட்டில் நோயாளிகள் ஏழு லட்சம் மக்கள் இருக்கிறார்கள். அவர்களில் ஒரு ஆண்டு வருமானம் ரூ. 1,500 அளவுக்கு மேல் இல்லை என்று சான்றிதழ் பெற்று விண்ணப்பிப்பவர்கட்கு இந்த உதவித் தொகை வழங்கப்படுகிறது. அவர்கள் ஏழ்மை நிலைமை காரணமாக பாதிக்கப்படாமல் தொடர்ந்து இந்த மருத்துவ சிகிச்சை பெற்று குணம் அடையவேண்டுமென்ற அடிப்படையில் இந்தத் தொகை உதவித் தொகையாக் கொடுக்கப்படுகிறது.

### புள்ளி விவர இன்ஸ்பெக்டர்கள்.

*8. வினா—திரு. கே. ஏ. வகாப் : மாண்புமிகு தொழிலாளர் நல அமைச்சர் தயவு செய்து கீழ்க்கண்ட வினாக்களுக்கு விடையளிப்பாரா :

(அ) 1972-ம் ஆண்டு, ஜனவரி, பிப்ரவரி மாதங்களில் சர்வீஸ் கமிஷன் மூலமாக புள்ளி விவர இன்ஸ்பெக்டர்கள் (Statistical Inspectors) என்ற பதவிக்கு இன்டர்வியூக்கு அழைக்கப்பட்டவர் எத்தனை பேர் ?

(இ) அதில் தேர்ந்தெடுக்கப்பட்டவர் எத்தனை பேர் ?

(உ) அதில் முஸ்லீம்கள் எத்தனை பேர் ?

**மாண்புமிகு திரு. என். வி. நடராசன்:** (அ) புள்ளிவிவர இன்ஸ்பெக்டர் பதவிக்கு 1972 ஜனவரி, பிப்ரவரித் திங்களில் தமிழ்நாடு அரசு அலுவலர் தேர்வு ஆணைக்குழு நேர்முகத் தேர்வு எதுவும் நடத்தவில்லை

(இ) & (உ) இவ்வினாக்கள் எழவில்லை.

THIRU R. PONNAPPA NADAR: May I know from the Hon. Minister Whether eleven Statistical Inspectors from among the Travancore-Cochin transferrd personnel have been recently reverted and if so, may I know the reasons therefor for their reversion?

**மாண்புமிகு திரு. என். வி. நடராசன்:** தலைவரவர்களே, தனிக் கேள்வி போட்டால், விவரம் அளிக்கப்படும்.

*Allotment of mechanised boats*

* 9 *Q.*—THIRU A. SWAMIDHAS: Will the Hon. the Minister for Harijan Welfare be pleased to state—

(*a*) the number of persons who have not been allotted mechanised fishing—boats in Kanyakumari district although they have paid the necessary deposits for the same; and

(*b*) when mechanised boats will be allotted to them?

**மாண்புமிகு திருமதி சத்தியவாணிமுத்து:** (அ) 274.

(இ) சீட்டுக் குலுக்கித் தெரிந்தெடுக்கும் முறை மூலமாக மீனவத் தொகுதியினருக்கு படகுகள் ஒதுக்கப்படுகின்றன. மேற் சொன்ன நடைமுறைக்கு இணங்க, இனிவரும் ஆண்டுகளில், மேற்சொன்ன 274 விண்ணப்பதாரர்களுக்கும் படகுகள் ஒதுக்கப் படும்.

**திரு. ஏ. சுவாமிதாஸ்:** சார், சீட்டு குலுக்கும் முறைப்படி படகுகள் ஒதுக்கப்படுவதாக அமைச்சர் அவர்கள் சொன்னார்கள். இதனால் 2—3 ஆண்டுகளுக்கு முன்பு மனு செய்தவர்களுக்குக் கூட படகு கிடைக்க வாய்ப்பில்லாமல் போய் விடுகிறது. அதை மாற்றி, அவர்கள் விண்ணப்பித்த தேதியை கணக்கில் எடுத்துக் கொண்டு சீனியாரிட்டி பேசிஸில் படகுகள் வழங்க அரசு ஏற்பாடு செய்யுமா?



**மாண்புமிகு திருமதி சத்தியவாணிமுத்து:** ஏற்கனவே அந்த முறை இருந்தது. சரியாக அமல்படுத்தப்படவில்லை என்ற காரணத்தாலும், மீனவச் சமுதாய மக்கள் பெருங்குறை தெரிவித்த தாலும், இந்தப் புதிய முறையை அரசு இப்போது கையாண்டு வருகிறது.

*Drought relief measures.*

* 10 *Q.*—THIRU K. T. K. THANGAMANI:
THIRU N. KITTAPPA:
THIRU D. S. A. SIVIPRAKASAM: Will the Hon. the Minister for Revenue be pleased to state—

(*a*) whether the Revenue Board Members who toured the districts during August-September 1972 to study the drought conditions, have submitted their reports to the Government; and

(*b*) if so, the relief given to the various areas, so affected?

**மாண்புமிகு திரு. ப. உ. சண்முகம்:** (அ) ஆம்.

(இ) பாதகமான பருவ நிலையினால் பாதிக்கப்பட்ட வறட்சிப் பகுதிகளில் ஏற்கனவே உள்ள பொதுக் குடிநீர்க் கிணறுகளை ஆழப் படுத்த உடனடி நிவாரண நடவடிக்கையாக ரூபாய் 25 லட்சம் செலவிட வருவாய்த்துறையின் 10—9—1972 நாளிட்ட 2415-ஆம் எண் ஆணையின் வாயிலாக அரசு ஒப்பளிப்பு வழங்கியது. மேலும், இப்பகுதிகளில் அரசுக்குச் செலுத்தப்பட வேண்டிய கடன்கள், நிலவரி, வேளாண்மை வருமான வரி வசூலிப்பதை 31—12—1972 வரை தள்ளிவைக்கும்படியும் அரசு ஆணையிட்டது.

பின்னர். 29—9—1972-ஆம் நாள் நடைபெற்ற மாவட்ட ஆட்சித் தலைவர்கள் மாநாட்டில் எடுக்கப்பட்ட முடிவின் அடிப்படையில், பாதகமான பருவ நிலைகளினால் பாதிக்கப்பட்ட வறட்சிப் பகுதிகளில் நிவாரணப் பணிகளுக்காக கூடுதலாக ஒரு கோடி ரூபாய் நிதி ஒதுக்குவதற்கு வருவாய்த்துறையின் 5—10—1972-ஆம் நாளிட்ட 2626-ஆம் எண் ஆணையில் அரசு ஒப்பளிப்பு வழங்கி யுள்ளது.

**திரு. கே. டி. கே தங்கமணி:** சார், ரெவின்யூ போர்டு மெம்பர்கள் தங்களுடைய பரிந்துரையில் கோவில்பட்டி, மற்றும் பல இடங்களைச் சுற்றிப் பார்த்து தனியாக ஆலோசனை கொடுத்து இருக்கிறார்களே, அந்த ஆலோசனை முழுவதையும் அரசு ஏற்றுக் கொண்டு விட்டதா, அதன் மீது அரசு எடுத்த நடவடிக்கை என்ன?

**மாண்புமிகு திரு. ப. உ. சண்முகம் :** தலைவரவர்களே, ரெவின்யூ போர்டு மெம்பர்கள் மொத்தமாக ஆலோசனை தந்து இருக்கிறார்கள். அந்த ஆலோசனையின் அடிப்படையில் மாவட்ட வாரியாக எவ்வளவு பணம் ஒதுக்கலாம், எவற்றிற்காக ஒதுக்கலாம் என்று பார்த்து அரசாங்கம் பணம் ஒதுக்கியிருக்கிறது. அவர்களுடைய ஆலோசனைப்படி ஆங்காங்கு நான் சொல்லிய மேற்கண்ட சலுகைகள் அளிக்கப்பட்டிருக்கின்றன.

**திரு. என். கிட்டப்பா :** தலைவரவர்களே, ரெவின்யூ போர்டு மொத்தமாக ஆலோசனை தந்து இருக்கின்றது என்று அமைச்சர் அவர்கள் சொன்னார்கள். தஞ்சை மாவட்டத்திற்கு ஏதாவது செய்யவேண்டுமென்று பரிந்துரை செய்து இருக்கிறார்களா? அப்படிச் செய்து இருந்தால், அந்த மாவட்டத்திற்கு வழங்கப் பட்டிருக்கிற தொகை எவ்வளவு?

**மாண்புமிகு திரு. ப. உ. சண்முகம் :** தலைவரவர்களே, ஏற்கனவே ரூ. 25 லட்சம் ஒதுக்கியபோது தஞ்சை மாவட்டத்திற்கு ரூ. 1 லட்சம் ஒதுக்கலாம் என்று அந்த வாரியத்தினர் சொன்னதன் அடிப்படையில் ஒதுக்கியிருக்கிறோம். பின்னர் ஒதுக்கிய ரூ. 1 கோடியில் தமிழ்நாடு பூராவிற்கும் இன்னின்ன காரியங்களுக்குப் பணம் ஒதுக்கவேண்டுமென்று சிபார்சு செய்து இருக்கிறார்கள். அந்த அடிப்படையில் பணம் ஒதுக்கப்பட்டிருக்கிறது.

**திரு. தி. ச. ஆ. சிவப்பிரகாசம் :** தலைவரவர்களே, நெல்லை மாவட்டத்தில் எந்தெந்தப் பகுதிகள் வறட்சியால் பாதிக்கப் பட்டிருக்கிறது என்பதை அரசு அறிவிக்குமா? நெல்லை மாவட்டத்திற்கு ஒதுக்கப்பட்ட தொகை எவ்வளவு என்பதை அறியலாமா?

**மாண்புமிகு திரு. ப. உ. சண்முகம் :** தலைவரவர்களே, மாவட்ட வாரியாக எவ்வளவு தொகை ஒதுக்கப்பட்டது என்ற தகவல் என்னிடத்தில் இல்லை. முதலில் ஒதுக்கிய ரூ. 25 லட்சத்தில் நெல்லை மாவட்டத்திற்கு ஒரு லட்சம் ரூபாய் ஒதுக்கப்பட்டது. அதற்குப் பிறகு இன வாரியாக பணம் ஒதுக்கப்பட்ட, இன்னின்ன பகுதிகளில் இன்னின்ன வறட்சி நிவாரணப் பணி செய்ய வேண்டுமென்று வாரியம் சொல்லிய ஆலோசனையை அரசு அப்படியே ஒப்புக்கொண்டிருக்கிறது.





**திரு. கே. டி. கே. தங்கமணி :** தலைவரவர்களே, ஒரு கோடி ரூபாய் ஒதுக்கப்பட்டது என்று சொன்னார்கள். அந்த ஒரு கோடி ரூபாயும் செலவழிக்கப்பட்டு விட்டதா, அல்லது இன்னும் எந்தெந்த மாவட்டத்திற்கு எவ்வளவு தொகை ஒதுக்கப்பட் டிருக்கிறது என்று சொல்வார்களா ?

**மாண்புமிகு திரு. ப. உ. சண்முகம் :** நாம் ஒதுக்கிய ஒரு கோடி ரூபாயும் செலவழிக்கப்பட்டு விட்டது. மத்திய அரசாங்கம் ரூ. 1½ கோடி வரையில் செலவழிக்கலாம் என்று சொல்லியிருக் கிறார்கள். மொத்தமாக இன்னும் கணக்கு பூர்த்தியாகவில்லை என்று கருதுகிறேன். மேற்கொண்டு தகவல் என்னிடத்தில் இல்லை.

## கௌரவ மாஜிஸ்டிரேட்டுகள்

***11 வினா திரு. கே. ஏ. வகாப் :** மாண்புமிகு தொழில் துறை அமைச்சர் தயவுசெய்து கீழ்க்கண்ட வினாக்களுக்கு விடையளிப் பாரா—

(அ) தமிழகத்தில் கௌரவ மாஜிஸ்டிரேட்டுகள் தற்போது எத்தனை பேர் உள்ளனர் ?

(இ) அவர்களுக்குச் சட்டப் பயிற்சி அளிக்கும் செயற் குறிப்பு ஏதேனும் அரசிடம் உள்ளதா ?

**மாண்புமிகு திரு. செ. மாதவன் :** (அ) பேரவை முன் விவர அறிக்கை @ ஒன்று வைக்கப்பட்டுள்ளது.

(இ) கௌரவ மாஜிஸ்டிரேட்டுகளுக்குச் சட்டப் பயிற்சி அளிப்பதற்கான செயற்குறிப்பு ஏதும் தற்போது இல்லை.

**திரு. கே. ஏ. வகாப் :** தலைவரவர்களே, இந்த கௌரவ நீதிபதிகளும் நீதி வழங்குவதில் முக்கிய பங்கு வகிப்பதால் அவர்களுக்குச் சட்டப் பயிற்சி அளித்தால் நல்லது என்பதை அரசு கருதி நடவடிக்கை மேற்கொள்ளுமா ?

---

@ 203–206 ஆம் பக்கங்களில் இரண்டாம் இணைப்பாக அச்சிடப்பட்டுள்ளது.)

**மாண்புமிகு திரு. செ. மாதவன்** : தலைவரவர்களே, சட்டப் பயிற்சி உள்ளவர்கள் நீதி மன்றங்களில் பணிபுரிகிறார்கள். இப்படி மக்கள் பிரதிநிதிகள்தான் பல இடங்களில் நியமிக்கப்படுகிறார்கள். நீதி மன்றங்களில் வழக்குகள் குறைக்கப்பட வேண்டுமென்ற அடிப்படையில் வைக்கப்பட்டிருக்கிறது. இது எல்லா கிராமங்களிலும் இருக்கிறது. ஆண்டுதோறும், அல்லது 3 ஆண்டுக்கொரு முறை இவர்கள் பதவிக் காலம் மாற்றப்படுவதால், அவர்களுக்கு நிரந்தரமாகச் சட்டப் பயிற்சி அளிப்பது என்பது முடியாத காரியம்.

THIRU R. PONNAPPA NADAR : There is an Honorary First Class Magistrate's Court at Kuzhithurai and the local Bar Association in Kuzhithurai has passed a resolution recently urging the abolition of that court and instead of that they had requested for a second class Stipendiary Magistrate's Court there. May I know whether any action has been taken on the resolution passed by the Bar Association of Kuzhithurai? If any action had been taken, it may be let known to the House.

**மாண்புமிகு திரு. செ. மாதவன்** : இப்போது என்னிடத்தில் தகவல் இல்லை. எதிர்க்கட்சித் தலைவர் சொன்னதைப் பரிசீலிக்கலாம்.

**திருமதி ஜோதி வெங்கடாசலம்** : தலைவர் அவர்களே, இங்கு வைத்திருக்கின்ற அறிக்கையின் பிரகாரம் ஜுவினைல் கோர்ட்டுக்கு ஒரு மாஜிஸ்டிரேட் போட்டிருக்கிறார்கள். இதற்கு முன்பாக இருந்தவர்கள் எத்தனை பேர்கள், எவ்வளவு மாஜிஸ்டிரேட் போடப்பட்டிருக்கிறார்கள், எந்த அடிப்படையில் என்று அறிய விரும்புகிறேன்.

**மாண்புமிகு திரு. செ. மாதவன்** : ஜுவினைல் கோர்ட்டு ஆங்காங்கு நிறுவப்பட்டிருக்கிறது. ஒவ்வொரு முறையும் எத்தனை பேர்கள் தேவைப்படுகிறார்கள் என்று ஸிடி பிரசிடென்ஸி மாஜிஸ்ட்ரேட் சிபார்சு செய்கிறார்களோ, அதை நாம் அனுமதிக்கிறோம். இந்தப் புள்ளி விவரங்களைப் பொறுத்த அளவுக்கு எத்தனை பேர்கள் கேட்டார்கள், எத்தனை பேர்கள் போடப்பட்டது என்ற விவரம் தற்பொழுது என்னிடம் இல்லை.





## ஓடப்பேரிக் கால்வாய் நீர்த்தேக்கம்

* 12 வினா—**திரு. கா. வேழவேந்தன்** : மாண்புமிகு பொதுப் பணித்துறை அமைச்சர் தயவுசெய்து கீழ்க்கண்ட வினாவுக்கு விடையளிப்பாரா—

கும்முடிப்பூண்டித் துணை வட்டம், ஈகுவார்பாளையம் அருகில் ஓடப்பேரிக் கால்வாயின் மேல் கட்டப்பட வேண்டிய சிறிய நீர்த்தேக்க அணைத் திட்டம் தற்போது எந்நிலையிலுள்ளது?

**மாண்புமிகு திரு. எஸ். ஜே. சாதிக் பாட்சா** : இத்திட்டம் பாசனத் தலைமைப் பொறியாளரின் ஆய்வில் உள்ளது.

**திரு. கா. வேழவேந்தன்** : இந்தத் திட்டத்தின் மதிப்பீடு என்ன ? தண்ணீர் வீணாகப் போய்க் கொண்டிருக்கிறது. கொஞ்சம் விரைவாக இந்தத் திட்டத்தைச் செயல்படுத்த இயலுமா? இந்தத் திட்டத்தை இந்த ஆண்டு எடுத்துக்கொள்வதற்கு அரசு உத்தரவிடுமா ?

**மாண்புமிகு திரு. எஸ். ஜே. சாதிக் பாட்சா** : இந்தத் திட்டம் இப்பொழுது பரிசீலனையில் இருந்துவருகிறது. இந்தத் திட்டம் இயலக்கூடும் என்று தெரிய வந்தால் இதற்கு மதிப்பீடு ரூ. 2 லட்சம் ஆகலாம் என்று எதிர்பார்க்கப்படுகிறது. திட்டம் பரிசீலனைக்குப் பிறகு அரசுக்கு வந்தவுடன் உரிய நடவடிக்கை எடுக்கப்படும்.

## கிழக்குக் கடற்கரைச் சாலை

* 13 வினா—**திரு. அ. இராசமாணிக்கம்** : மாண்புமிகு பொதுப் பணித்துறை அமைச்சர் தயவுசெய்து கீழ்க்கண்ட வினாவுக்கு விடையளிப்பாரா—

கிழக்குக் கடற்கரைச் சாலைக்காக உத்தேசிக்கப்பட்டுள்ள வழி, நாகூர், நாகப்பட்டினம் நகரம் வழியாகச் செல்லவில்லையென்பது உண்மையா ?

**மாண்புமிகு திரு. எஸ். ஜே. சாதிக் பாட்சா** : உத்தேச கிழக்கு கடற்கரை சாலை அமைப்பு நாகூர், நாகப்பட்டினம் நகர்புறங்களின் வழியே செல்லுகிறது.

**திரு. அ. இராசமாணிக்கம் :** இந்தச் சாலையின் அகலத்தை நோக்கத்தில் கொண்டு, அந்த ஊரில் இட நெருக்கடி இருக்கின்ற காரணத்தினால் நகரத்திற்குப் புறத்தே போக இந்த அரசு ஆவன செய்யுமா ?

**மாண்புமிகு திரு. எஸ். ஜே. சாதிக் பாட்சா :** அதைப்பற்றி மாண்புமிகு உறுப்பினர் அரசுக்கு எழுதி அனுப்பினால், பரிசீலிக்கலாம்.

## *Sunflower cultivation.*

* 14 Q.—Thiru N. K. PALANISWAMY : Will the Hon. the Minister for Agriculture be pleased to state whether there is any proposal to encourage the growth of sunflower in this State?

**மாண்புமிகு திரு. அ. பெ. தர்மலிங்கம் :** ஆம்.

**திரு. ஆ. கு. சுப்பையா :** சூரியகாந்தி செடி வளர்ப்பதற்கு தஞ்சை மாவட்டத்தில் ஏதாவது விசேஷமாக நடவடிக்கை எடுக்கப்பட்டிருக்கிறதா ?

**மாண்புமிகு திரு. அ. பெ. தர்மலிங்கம் :** இந்தத் திட்டத்தைப் பொறுத்தமட்டில் கோவை, தஞ்சாவூர், திருச்சி, இராமநாதபுரம், மதுரை, செங்கற்பட்டு, வட ஆற்காடு, தென் ஆற்காடு, சேலம் ஆகிய எல்லா மாவட்டங்களிலும் 160 ஹெக்டார் பரப்பு அளவுக்கு 320 விளக்கப் பாத்திகள் ஆங்காங்கு நிறுவுவதற்கு ஒரு திட்டம் தயாரிக்கப்பட்டிருக்கிறது.

**திரு. ஏ. ஆர். மாரிமுத்து :** சென்ற ஆண்டு பருத்தி அதிகமாகப் பயிரிடுங்கள் என்று தஞ்சை மாவட்டத்தில் மிக வேகமாக பிரசாரம் செய்யப்பட்டது. நாங்கள் எல்லாம் மிக அதிக லாபம் வரும் என்று எதிர்பார்த்தோம். அதனால் பருத்தி போட்டோம். ஆனால் பஞ்சை வாங்குவதற்கு ஆள் கிடையாது. அதைப் போல் இப்பொழுது சூரிய காந்தி பயிரிடுங்கள் என்று பிரசாரம் செய்யப்படுகிறது. அம்மாதிரி அதிகமாக உற்பத்தி செய்யும் பொருள் விற்பனை ஆவதற்கு அரசு ஏதாவது ஏற்பாடு செய்யுமா ?

**மாண்புமிகு திரு. அ. பெ. தர்மலிங்கம் :** சென்ற ஆண்டு தஞ்சை மாவட்டத்தில் 10,000 ஏக்கரில் பி. ஆர். எஸ். 72 பருத்தி சாகுபடி செய்யப்பட்டது அது விற்கப்படவில்லை என்று



சொன்னதன் காரணத்தினால் இந்த ஆண்டு அதை வாங்குவதற்கு 3 இடங்களில் டெக்ஸ்டைல் கார்ப்பரேஷன் மூலமாக வாங்குவதற்கு மூன்று கூடங்கள் ஏற்பாடு செய்யப்பட்டிருக்கிறது. குறைந்தபட்சம் நல்ல ரகத்திற்கு ரூ. 200 வழங்க வேண்டும் என்று ஒரு தீர்மானம் போடப்பட்டு அதற்கு வேண்டிய ஏற்பாடு செய்யப்பட்டிருக்கிறது. சூரிய காந்தியை எந்த அளவுக்கு விளம்பரம் செய்து உற்பத்தியைப் பெருக்கவேண்டும் என்று சொல்லுகிறோமோ, அந்த அளவுக்கு வாங்கும் சக்தியை அதிகரிப்பதற்கும் முயற்சி எடுக்கப்பட்டு வருகிறது.

Dr. H. V. HANDE : Sir, the Hon. Minister has stated that attempts have been made to sell it. May I know whether the Government have at their disposal any agency which will extract sunflower oil and also whether there is any ageny which has made a market survey of the consumer's needs? May I request the Hon. Minister to give all the details?

**மாண்புமிகு திரு. அ. பெ. தர்மலிங்கம் :** தனியாக அதன் விவரங்கள் இப்பொழுது என்னிடம் இல்லை. ஆனாலும், அதனை வாங்குவதற்குத் தனியாக கூட்டுறவுத் துறை மூலம் ஏற்பாடு செய்யலாமா என்று அரசு பரிசீலனை செய்து கொண்டிருக்கிறது.

**திரு. எஸ். வடிவேல் :** சூரிய காந்தி பயிர் செய்வதற்கு அரசு பெரும் வகையில் ஏதாவது உதவி அளிக்கிறதா என்று அறிய விரும்புகிறேன்.

**மாண்புமிகு திரு. அ. பெ. தர்மலிங்கம் :** ஒரு ஹெக்டாருக்கு ரூ. 300 வீதம் உதவித் தொகை வழங்கப்படுகிறது. அதைப் போலவே இந்தத் திட்டத்தின் கீழ் விவசாயத்திற்கு ஊக்கம் அளிக்கும் வகையில் ஏக்கர் ஒன்றுக்கு ரூ. 11 பெருமானம் உள்ள சிறிய பொட்டலங்கள் விதைகள் சுமார் 2 லட்சம் ஏக்கருக்கு இலவசமாக வழங்கப்படும். அத்துடன் இந்தத் திட்டத்தின் கீழ் வரும் உழவர்களுக்கு ஹெக்டார் ஒன்றுக்கு ரூ. 150 என்ற விகிதத்தில் கூட்டுறவு வங்கிகள் மூலம் 60,000 ஹெக்டார்களுக்கு குறுகிய காலக் கடன்கள் வழங்குவதற்காக ஏற்பாடு செய்யப்பட்டிருக்கிறது.

## மிளகாய் ஏற்றுமதி

* 15 வினா—திரு. என். கிட்டப்பா : மாண்புமிகு வேளாண்மைத் துறை அமைச்சர் தயவுசெய்து கீழ்க்கண்ட வினாவுக்கு விடையளிப்பாரா—

தமிழகத்திலிருந்து வெளிநாடுகளுக்கு மிளகாய் ஏற்றுமதி தற்போது செய்யப்படுகின்றதா?

**மாண்புமிகு திரு. அ. பெ. தர்மலிங்கம் :** ஆம்.

திரு. என். கிட்டப்பா : எந்த நாடுகளுக்கு ஏற்றுமதி செய்யப் படுகிறது என்பதனையும், அதனாலே ஆண்டு ஒன்றுக்கு எவ்வளவு நமது அரசுக்கு வருமானம் கிடைக்கிறது என்பதனையும் அறிவிக்க இயலுமா ?

**மாண்புமிகு திரு. அ. பெ. தர்மலிங்கம் :** மிளகாய் அன்னியச் செலாவணி ஈட்டக்கூடிய ஒரு முக்கியமான வணிகப் பயிர். 1967—68-ம் ஆண்டில் 69,81,890 கிலோ அனுப்பப்பட்டிருக்கிறது. அதனுடைய மதிப்பு ரூ. 2,00,38,032. 1968—69-ல் 93,36,862 கிலோ அனுப்பப்பட்டிருக்கிறது. அதனுடைய மதிப்பு ரூ. 1,23,80,921. 1969-70-ல் 14,44,260 கிலோ அனுப்பப்பட்டிருக்கிறது. அதனுடைய மதிப்பு ரூ. 79,26,915. 1970—71-ல் 21,80,674 கிலோ அனுப்பப் பட்டிருக்கிறது. அதனுடைய மதிப்பு ரூ. 1,12,88,774.

**திருமதி ஜோதி வெங்கடாசலம் :** தலைவர் அவர்களே, மிளகாய் வெளிநாடுகளுக்கு அனுப்புகின்ற காரணத்தினால் நமக்கு உள்நாட்டில் கிடைக்கக்கூடிய மிளகாயின் விலை அதிகமாகி விடுகிறது. 'charity begins at home' என்று சொல்வார்கள். இங்கு கிடைக்கக்கூடிய மிளகாயின் விலை அதிகமாகி விடுகிறது. ஆகவே, உள்நாட்டில் போதிய அளவுக்கு நியாயமான விலைக்கு மிளகாய் கிடைக்கின்ற அளவுக்கு ஏற்பாடு செய்துவிட்டு, பிறகு மிகுதியை வெளிநாடுகளுக்கு அனுப்புவதற்கு அரசு முன்வருமா ?

**மாண்புமிகு திரு. அ. பெ. தர்மலிங்கம் :** ஏற்றுமதி, இறக்குமதி நம்மிடத்தில் இல்லை. இது அன்னியச் செலாவணி ஈட்டக்கூடிய பொருளாக இருக்கின்ற காரணத்தினால் இதை நாம் கட்டுப் படுத்துவதற்கு இப்பொழுது இயலாது.





**திருமதி ஜோதி வெங்கடாசலம் :.** தலைவர் அவர்களே, ஏற்றுமதி செய்து அன்னியச் செலாவணி கிடைப்பதைப் பற்றி ஆட்சேபனை இல்லை. ஆனால் மற்ற நாடுகளில், சிலோன், தாய்லாந்து போன்ற நாடுகளிலெல்லாம் மிளகாய் ஏற்றுமதி செய்கின்றார்கள். அவர்களுக்கு இம்போர்ட்டு லைசென்ஸ் கிடைக்கிறது, அதனால் அந்த விலையைச் சரிக்கட்டுவதற்கு வாய்ப்பு ஏற்படுகிறது. இதைப் பற்றி ஸ்பைஸஸ் எக்ஸ்போர்ட் பிரமோஷன் கவுன்சில் கூட எழுதி யிருக்கிறார்கள். ஆகையினால் இதை நாம் அனுப்பி கிடைக்கக் கூடிய செலாவணியை வைத்துக்கொண்டு, அதற்குரிய தொகை யிலிருந்து, அதிகப்படியாக ஒன்றும் நமக்குக் கிடைத்து விடுவதில்லை, நமக்குக் கிடைத்த செலாவணியைக் கொண்டு உள்நாட்டில் இருக்கக்கூடிய மற்ற விலைவாசியைக் கட்டுப்படுத்து வதற்கு அரசு முன்வரவேண்டும் என்று கூறிக்கொள்கிறேன்.

**மாண்புமிகு திரு. அ. பெ. தர்மலிங்கம் :** நான் முதலிலேயே குறிப்பிட்டேன் இது அன்னியச் செலாவணிப் பயிர் என்று. மத்திய சர்க்காரிலிருந்து இதற்கு வேண்டிய ஏற்பாடுகள் செய்ய வேண்டுமே தவிர, நாம் அதற்கு வேண்டிய சிபார்சுதான் செய்யலாம்.

## *Tourist buses to hill stations.*

* 16 Q.—THIRU N. DENNIS : Will the Hon. the Minister for Backward Classes be pleased to state :

(a) whether it is a fact that the Tamil Nadu Tourism Development Corporation Limited is conducting tours to hill stations; and

(b) if so, the details thereof?

**மாண்புமிகு திரு. க. இராசாராம் :** (அ) மலை வாழ் இடங்களுக்கு தமிழ்நாடு சுற்றுலா நிறுவனம் சுற்றுப் பயணங்களுக்கு ஏற்பாடு செய்யவில்லை; ஆனால் நீலகிரி மாவட்டத்தில் மட்டும் கோடையில் உல்லாசப் பயணிகள் சுற்றிப் பார்க்க ஏற்பாடு செய்கிறது.

(இ) தமிழ்நாடு சுற்றுலா வளர்ச்சிக் கழகத்தின் போக்கு வரத்துப் பிரிவு இரண்டு உல்லாசப் பயண பேருந்துகள் வசங்கி உதகையில் மூன்று சுற்றுப் பயணங்களுக்கு 1972 ஆம் ஆண்டு கோடையில் ஏற்பாடு செய்தது. அதன் விபரம்

**பயணம் . 1—உதகை—முதுமலை**

**ஒருவருக்குக் கட்டணம் ரூ. 25.**

"கோல்ப்லிங்க்—இந்துஸ்தான் புகைப்படத் தொழிற்சாலை—சந்திநல்லா—கிளன்மோர்கன்—தேயிலைத்தோட்டத் தொழிற்சாலை—பைகாரா அணை—நடுவட்டம்—கூடலூர் (காபி தோட்டம்)—முதுமலை சரணாலயம்—ஜெயதேவ் அவின்யூ—தெப்பக்காடு—யானை முகாம்—சுற்றுலா மாளிகை, உதகை".

**பயணம் 2—உதகையில் சுற்றுலா**

**ஒருவருக்குக் கட்டணம் ரூ. 5.**

"சுற்றுலா மாளிகை—தாவரப்பூங்கா—சாரிங்கிராஸ்—குதிரைப் பந்தய மைதானம்—ஏரி (30 நிமிடங்கள்)—கண்டல்—ஃபிங்கர் போஸ்ட்—வென்லாக் படுகை—இந்துஸ்தான் புகைப்படத் தொழிற்சாலை—தமிழகம்—சுற்றுலா மாளிகை".

**பயணம் 3—உதகை—வெலிங்டன்—கூனூர்—கோத்தகிரி.**

**ஒருவருக்குக் கட்டணம் ரூ. 5.**

"சுற்றுலா மாளிகை—பள்ளத்தாக்கு—அருவங்காடு—வெலிங்டன்—சிம்ஸ் பூங்கா—கூனூர்—கோத்தகிரி—சுற்றுலா மாளிகை, உதகை".

சென்னை நகரில் தற்போது இக்கழகம் கீழ்க்கண்ட சுற்றுப் பயணங்களை நடத்தி வருகிறது.

1. சென்னை—காஞ்சீபுரம்—திருக்கழுக்குன்றம்—மாமல்லபுரம்—வேடந்தாங்கல்—சென்னை.

(இந்தச் சுற்றுப்பயணம் தினமும் உண்டு—ஒருவருக்குக் கட்டணம் ரூ. 18.)

2. திங்கள், செவ்வாய் ஆகிய நாட்களில் சென்னை நகரைச் சுற்றிப் பார்ப்பது—ஒருவருக்குக் கட்டணம் ரூ. 5.

THIRU N. DENNIS : May I know whether the tours will be conducted on no profit basis so as to enable the persons of low income groups to participate and get the benefit of such tours?

**மாண்புமிகு திரு. க. இராசாராம்:** தலைவரவர்களே, சுற்றுலா நிறுவனம் இலாபத்திற்காக இயங்கக்கூடிய ஒரு நிறுவனமாகும். ஆகவே, இலாப நஷ்டத்தைப் பார்க்காமல்—இலாபம் இல்லாமல் இயங்க வேண்டும் என்பதை ஏற்றுக்கொள்வதற்கில்லை.



**மின் இணைப்பு**

* 17 வினா—திரு. கே. ஏ. வகாப் : மாண்புமிகு மின்சாரத் துறை அமைச்சர் தயவுசெய்து கீழ்க்கண்ட வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) வடார்க்காடு மாவட்டத்தில் எல்லா கிராமங்களுக்கு மின் இணைப்பு அளிக்கப்பட்டு விட்டதா?

(இ) இல்லையெனில் இன்னும் எத்தனை கிராமங்களுக்கு அளிக்கப்படவேண்டும்?

**மாண்புமிகு திரு. ஓ. பி. இராமன்:** (அ) ஆம்.

(இ) இந்த வினாவுக்கு இடமில்லை.

DR. H. V. Hande rose.

MR. DEPUTY SPEAKER : Your question must relate to North Arcot district.

DR. H. V. HANDE : I am aware of it. I am talking only about North Arcot district. Are the Government aware that while it is said electricity connection is given to most of the villages of North Arcot, due to the power cut in most of the places in North Arcot district electricity connection for even pumpsets is not being given with the result the crop is withering. May I know whether Government are aware of the fact because of inadquante power supply, crop is withering and may I know what are the steps taken by Government to see that this is immediately rectified?

**மாண்புமிகு திரு. ஓ. பி. இராமன்:** தலைவரவர்களே, வடார்க்காடு மாவட்டத்தில் எல்லா கிராமங்களுக்கும் மின் இணைப்பு அளிக்கப்பட்டுவிட்டதா என்பது கேள்வி. அதற்கு 'ஆம்' என்று பதில் சொன்னேன். மாண்புமிகு உறுப்பினர் அவர்கள் இப்போது இருக்கின்ற சூழ்நிலையை வைத்துக் கொண்டு மின்சாரம் எல்லா கிராமங்களுக்கும் கொடுக்கப்படவில்லை என்று சொல்கிறார்கள். இன்றைக்கு அகில இந்தியாவிலுமே மின்சாரப் பற்றாக்குறை ஏற்பட்டிருக்கிறது என்பதை அனைவரும் அறிவார்கள். தமிழ் நாட்டிலே சென்ற ஆண்டு பருவமழை பொய்த்துவிட்டதால் மின்சாரப் பற்றாக்குறை ஏற்பட்டிருக்கிறது. இருந்தாலும்

உள்ளதை வைத்து, நல்ல முறையில் மின்சாரம் விநியோகிக்கப்பட்டு வருகிறது. தமிழகத்தில் 25 சதவீதம் மின்சார வெட்டு இருந்தது. இப்போது அது 40 சதவீதமாக உயர்த்தப்பட்டிருக்கிறது. இருந்தாலும் சிறந்த முறையில் விநியோகம் செய்ய அதிகாரிகள் ஆலோசித்து வருகிறார்கள்.

THIRU R. PONNAPPA NADAR : May I know from the Hon. Minister whether speedy steps will be taken to see that agricultural pumpsets are not devoid of power?

**மாண்புமிகு திரு. ஓ. பி. இராமன் :** தலைவரவர்களே, அதைப் பற்றித்தான் சொன்னேன். விவசாயிகளுக்கு கிட்டத்தட்ட ஆறு மணி நேரம் மின்சாரம் கொடுப்பதற்கு உறுதியளிக்கப்பட்டிருக்கிறது. ஆனால் கடந்த மூன்று நாட்களாக அதில் சில சிக்கல்கள் ஏற்பட்டிருக்கின்றன. அதைத் தவிர்ப்பதற்கு நடவடிக்கை எடுக்கப்பட்டு வருகிறது. இருந்தாலும் இப்போது ஆந்திர மாநிலத்தில் ஸ்டிரைக் நடைபெறுவதால், நிலக்கரி நமக்கு போதிய அளவு கிடைக்காத நிலை ஏற்பட்டிருக்கிறது என்பதையும் தெரிவித்துக்கொள்கிறேன்.

* 18 வினா—திரு. கே. ஏ. வகாப் : மாண்புமிகு மின்சாரத் துறை அமைச்சர் தயவுசெய்து கீழ்க்கண்ட வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) நிறுவனங்களுக்கும், வீடுகளுக்கும் மின்சார இணைப்பைப் பெற எலக்ட்ரிகல் (E.B.) லைசென்ஸ் பெற்றவர்கள் தான் செய்ய வேண்டுமென்றும், அப்படி மீறி செய்பவர்கள் தண்டனைக்குள்ளாவார்கள் என்றும் விதிகள் ஏதேனும் உள்ளனவா ?

(இ) ஆம் எனில், அப்படி அதற்காக தண்டிக்கப்பட்டவர்கள் சென்ற 1970—71-ம் ஆண்டில் எத்தனை பேர் ?

**மாண்புமிகு திரு. ஓ. பி. இராமன் :** (அ) ஆம்.

(இ) சேலம் மாவட்டத்தில் நான்கு பேர்களின் மேல் வழக்குத் தொடுக்கப்பட்டு தண்டிக்கப்பட்டனர்.

**திரு. கே. ஏ. வகாப் :** தலைவரவர்களே, இப்படி சில நிறுவனங்களில் மின்சார இணைப்புக் கொடுப்பதற்கு, லைசென்ஸ் பெற்றவர்கள் லைசென்ஸ் பெறாதவர்களுக்கு கையெழுத்துப்





போட்டுக் கொடுத்திருப்பதாகத் தெரிகிறது. அது முறையல்ல. ஆகவே, அப்படிப்பட்டவர்களின்மீது அரசாங்கம் நடவடிக்கை எடுக்குமா ?

**மாண்புமிகு திரு. ஓ. பி. இராமன் :** லைசென்ஸ் பெற்றவர்கள் தான் இந்தப் பணியில் ஈடுபடலாம். மற்றவர்கள் தண்டிக்கப்படுவார்கள் என்று விதிகள் இருக்கின்றன. அதன்படி தண்டிக்கப்படுவார்கள்.

### பெரியபாளையம் துணை மின் நிலையம்

* 19 வினா—திரு. கா. வேழவேந்தன் : மாண்புமிகு மின்சாரத் துறை அமைச்சர் தயவுசெய்து கீழ்க்கண்ட வினாவுக்கு விடையளிப்பாரா—

திருவள்ளூர் பெரியபாளையம் துணை மின் நிலையத்தினை 110 K.V. மின் நிலையமாக மாற்றியமைக்கும் திட்டம் எப்போது நிறைவேற்றப்படும் ?

**மாண்புமிகு திரு. ஓ. பி. இராமன் :** 110 கே. வி. துணை மின் நிலையம் பெரியபாளையத்திலிருந்து 13 கி.மீ. தூரத்தில் உள்ள பஞ்சட்டியில் அமைக்கப்பட இருக்கிறது. இம்மின்நிலைய வேலை 1973—74 எடுத்து முடிக்கத் திட்டமிடப்பட்டுள்ளது.

### *Theft of idols.*

* 20 Q.—THIRU K. T. K. THANGAMANI : Will the Hon. the Minister for Religous Endowments be pleased to state—

(*a*) whether it is a fact that idols are being stolen by foreign agents and persons outside the State;

(*b*) if so, the steps taken to prevent the theft; and

(*c*) the value of idols stolen in 1971 and the value of the idols recovered?

**மாண்புமிகு திரு. மு. கண்ணப்பன் :** (அ) கோயில் சிலைகள் சில சமயங்களில் களவாடப்படுகின்றன. ஆனால் எப்பொழுதும் அயல்நாட்டினராலும், வெளிமாநிலத்தினராலும் களவாடப்படுவதில்லை.

(இ) இந்து சமய அறநிலைய ஆட்சித்துறை ஆணையரும், காவல்துறை அலுவலர்களும் கோயில் சிலைகள் களவாடலைத்

தடுக்க எடுத்துக்கொண்டுள்ள முக்கிய நடவடிக்கைகள் பின்வருமாறு:—

(1) சிலைகள் களவைப் பற்றிய தகவலை உடனுக்குடன் காவல் துறையினருக்கு அறிவித்தல்.

(2) கோவில்களில் உள்ள சிலைகளின் புகைப்படத் தொகுப்புகளை வைத்தல்.

(3) தொல்பொருள்களை விற்பனை செய்வோரின் நடவடிக்கைகளைக் கண்காணித்தல்.

(4) ஓய்வுபெற்ற காவல்காரர்களை கோவில்களில் காவலர்களாக நியமித்தல்.

(5) சிலை களவாடலுக்கு யாருடைய கவனக்குறைவு காரணமாயிருந்ததோ, அந்த ஆலய ஊழியரின்மீது கடும் நடவடிக்கை எடுத்தல்.

(6) தொல்பொருள் மதிப்புள்ள சிலைகள் எங்கெல்லாம் பார்வைக்கு வைக்கப்படும் காலத்து சிறப்பு பாதுகாப்பு ஏற்பாடுகள் அமைத்தது.

(உ) 1971 ஆம் ஆண்டில் களவாடப்பட்ட சிலைகளின் மதிப்பு ரூ. 2,47,810.

கைப்பற்றப்பட்ட கோவில் சிலைகளின் மதிப்பு ரூ. 2,33,880.

**திரு. கே. டி. கே. தங்கமணி:** என்னுடைய கேள்வியிலே இம்மாதிரி களவாடியவர்களைப் பொறுத்தவரையில் வெளிநாட்டு ஏஜெண்டுகள், வெளி மாநிலங்களைச் சேர்ந்தவர்கள் இருக்கிறார்களா என்று கேட்டிருந்தேன். அதற்கு நேரடியாகப் பதில் சொல்லவில்லை. சிலைகள் திருட்டில் ஈடுபட்டவர்களில் வெளிநாட்டு ஏஜெண்டுகள் உண்டா, வெளி மாநிலங்களைச் சேர்ந்தவர்கள் உண்டா என்பதை அறிய விரும்புகிறேன்.

**மாண்புமிகு திரு. மு. கண்ணப்பன்:** தலைவர் அவர்களே, அயல்நாட்டு ஏஜெண்டுகள், வெளி மாநிலங்களைச் சேர்ந்தவர்கள் சிலைகள் திருட்டில் ஈடுபட்டிருக்கிறார்களா என்று கேட்டார்கள். இல்லை என்று பதில் சொல்லப்பட்டிருக்கிறது.



**திரு. கே. டி. கே. தங்கமணி:** வெளிநாட்டு ஏஜெண்டுகள் தனிப்பட்ட முறையில் இங்குள்ள சிலைகளைத் திருடியிருக்கிறார்களா? அல்லது நம்முடைய இன்வெஸ்டிக்கேஷனில் வெளிநாட்டைச் சேர்ந்தவர்கள் சில சிலைகளைத் திருடியதாக தெரிய வந்திருக்கிறதா?

**மாண்புமிகு திரு. மு. கண்ணப்பன்:** வெளிநாட்டிலுள்ளவர்களாலோ அல்லது வெளி மாநிலங்களைச் சேர்ந்தவர்களாலோ கோவில் சிலைகள் களவாடப்படவில்லை என்பதைத் தெளிவாகச் சொல்லிக்கொள்கிறேன்.

**திரு. ஆர். பொன்னப்ப நாடார்:** தலைவரவர்களே, சென்னை மாநகரிலே ஒரு சிலர் கோவில் சிலைகள் களவு குற்றத்தில் ஈடுபட்டதாக கைது செய்யப்பட்டிருக்கிறார்களா? அது சம்பந்தமாக வழக்குத் தொடரப்பட்டிருக்கிறதா? அப்படியானால் அதுபற்றிய விபரங்கள் என்ன என்பதை அறிய விரும்புகிறேன்.

**மாண்புமிகு திரு. மு. கண்ணப்பன்:** தலைவரவர்களே, எங்கெங்கு கோவில் சிலைகள் திருடப்பட்டிருக்கின்றனவோ அந்த இடங்களில் எல்லாம் வழக்குகள் பதிவு செய்யப்பட்டிருக்கின்றன. குற்றவாளிகளைக் கண்டுபிடிப்பதற்கு உடனடியாக நடவடிக்கை எடுக்கப்பட்டு வருகிறது. குறிப்பாக சென்னை மாநகரைப் பற்றிய விபரம் என்னிடம் இல்லை.

**திரு. நா. வீராசாமி:** தலைவரவர்களே, நம்முடைய நாட்டிலே இருக்கக்கூடிய சிலைகள் நாகரிகம், பண்பாடு, சிறந்த சிற்ப வேலைப்பாடுகள் நிறைந்ததாக இருப்பதனாலேயே, அதிலே மோகம் கொண்ட வெளிநாட்டிலுள்ளவர்கள் ஒரு சிலைக்கு 75 லட்சம் ரூபாய் கூட கொடுத்து வாங்கத் தயாராக இருக்கிறார்கள். ஆகையால் நாமாகவே அம்மாதிரியான சிற்பங்களைச் செய்து வெளிநாடுகளில் விற்பனைச் செய்தால், நாம் சிற்பிகளையும் ஊக்கப்படுத்தினவர்கள் ஆவோம்; அதே நேரத்தில் அந்நியச் செலாவணியும் நிறையக் கிடைக்கும். அதற்கு அரசாங்கம் உடனடியாக நடவடிக்கை எடுக்குமா?

**மாண்புமிகு திரு. மு. கண்ணப்பன்:** நாகரீகமும் பண்பாடும் நிறைந்த சிலைகளை இப்போதும் சிற்பிகள் செய்துகொண்டுதான் வருகிறார்கள். அந்தத் துறையிலே ஈடுபட்டிருப்பவர்களுக்கு

[1973 பிப்ரவரி 5

அரசாங்கம் ஊக்கமளித்து வருகிறது. ஆனால் வெளிநாட்டுக்காரர்கள் ஆயிரம், ஐந்நூறு ஆண்டுகளுக்கு முன்னால் உள்ள சிலைகளை அந்தக் காலத்திலேயே இந்த அளவுக்கு நாகரீகம், பண்பாடு வளர்ந்திருக்கிறதே என்ற ஆர்வத்தால், பழங்காலத்துச் சிலைகளை வாங்குவதற்கு விலைமதிக்க முடியாத பொருள்களை ஈடாகக் கொடுக்கத் தயாராக இருக்கிறார்கள்.

**திரு. எம். சுரேந்திரன் :** சார், மற்றப் பொருட்களைத் திருடுவதற்கும் கோவில் சிலைகளைத் திருடுவதற்கும் வேறுபாடு உண்டு. சிலர் பொருளீட்டுவதற்காகத் திருடலாம்; சிலர் பக்தியினால் திருடலாம். ஆகவே, இந்தத் திருட்டுகள் என்ன காரணத்தினால் நடைபெறுகின்றன என்பதை மனோதத்துவ ரீதியிலே கண்டுபிடிக்க நடவடிக்கை எடுக்கப்படுமா ?

**மாண்புமிகு திரு. மு. கண்ணப்பன் :** தலைவரவர்களே, மாண்புமிகு உறுப்பினர் அவர்கள் சிலைகள் பொருளீட்டுவதற்காகவும் திருடப்படலாம் ; பக்தியினாலும் திருடப்படலாம் என்று சொன்னார்கள். ஆகவே, திருட்டு நடைபெறுவதற்கான காரணம் அவர்களது கேள்வியிலேயே அடங்கி இருக்கிறது.

**மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர் :** வினாக்கள்—விடைகள் முடிவுற்றன.

[குறிப்பு : ஓர் உரையின் தொடக்கத்தில் வெள்ளிக்குறி (*) இடப்பட்டிருந்தால் அவ்வுரை உறுப்பினரால் சரிபார்க்கப்பட்டது என்பதைக் குறிக்கும்.]

## 2. அறிவிப்புகள்

### (அ) 2—2—1973 ஆம் நாள் ஆளுநர் அவர்கள் பேருரையை நிகழ்த்துமுன் சில உறுப்பினர்கள் வெளிநடப்பு செய்தது குறித்து.

MR. DEPUTY SPEAKER : Hon. Members are aware that on 2nd February 1973 when the Governor rose to address the hon. Members of both the Houses assembled together under Article 176 of the Constitution, hon. Members Thiruvalargal K. T. K. Thangamani, M. G. Ramachandran and A. R. Marimuthu, made certain statements and then accompanied by the Members of their parties staged a walk-out.



1973 பிப்ரவரி 5] [பேரவைத் துணைத் தலைவர்]

In this connection I wish to draw the attention of hon. Members to Rule 12 of the Tamil Nadu Legislative Assembly Rules which says that " When the Houses of the Legislature are assembled together under Article 175 or 176 or when the members of the Assembly alone have assembled, under Article 175 of the Constitution, no member shall obstruct or interrupt the Address either before or after the Address or during its duration with any speech or point of order or in any other manner; and such obstruction or interruption shall be regarded as a gross breach of order of the House and shall be dealt with by the Speaker as such at the next sitting of the Assembly."

I request hon. Members to note the words " next sitting of the Assembly ". The word ' sitting ' has been defined in the Rules as follows :—

" Sitting " means the meeting of the Members of the House for transaction of business on any day from its commencement till the House rises for the day.

Hon. Members are also aware that the next sitting of the House is only to-day, after the incident, as the House adjourned after passing the Condolence Resolution on the 3rd instant.

However, in view of the fact that to-day has been fixed for the discussion of the resolution for the removal of the Deputy Speaker from his office, the matter mentioned above will be taken up to-morrow.

### (ஆ) பேரவை அலுவல் குறித்து

**மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர் :** அடுத்து, பேரவைக்கு ஓர் அறிவிப்பு.

2—2—1973-ம் நாள் நடைபெற்ற அலுவல் ஆய்வுக் குழு கூட்டத்தில் எடுத்த முடிவின்படி பேரவையின் நடப்புக் கூட்டத் தொடரின் நிகழ்ச்சி, ஏற்கெனவே உறுப்பினர்களுக்கு அச்சிட்டு அனுப்பியுள்ளவாறு நடைபெறும்.

[1973 பிப்ரவரி 5

### (இ). ஒத்திவைப்புத் தீர்மானங்கள் எடுத்துக் கொள்ளப்படாதது குறித்து

MR. DEPUTY SPEAKER: I have received notices of a number of adjournment motions and they are under examination. However, in view of the importance of the nature of the business set for to-day, I do not propose to take up any of them to-day.

### (ஈ) மாற்றுத் தலைவர்கள் பட்டியல்

மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர்: பேரவைக்கு மற்றுமோர் அறிவிப்பு. பேரவையின் விதி 6, உள்விதி (1)-ன் படி, கீழ்க்கண்ட உறுப்பினர்களைப் பேரவையின் மாற்றுத் தலைவர்களாக நான் நியமிக்கிறேன் :—

(1) திரு. பழனிவேல் ராஜன்

(2) திரு. என். கணபதி

(3) திரு. நா. வீராசாமி

(4) திரு. கே. ஏ. வகாப்

(5) திரு. ஏ. சுவாமிதாஸ்

(6) திரு. நா. காசிராமன்.

### 3. நடைமுறைக் கேள்வி

### பேரவைத் துணைத் தலைவரைப் பதவி நீக்கம் செய்யக் கோரி கொடுக்கப்பட்ட தீர்மானத்தை எடுத்துக் கொள்வதற்கு முன் எழுப்பப்பட்ட பிரச்சினைகள்.

MR. DEPUTY SPEAKER: The next item on the Agenda is the resolution for the removal of the Deputy Speaker from his office.

DR. H. V. HANDE: Sir, on a point of order.........

MR. DEPUTY SPEAKER: I will finish my announcement.

According to Article 181 of the Constitution, when a resolution for the removal of the Deputy Speaker is discussed I cannot preside over the House. According to Rule 54 of the Assembly Rules "the person presiding shall read the resolution to the Assembly" and proceed further in the matter.

I think the point of order which the hon. Member wants to raise, relates to this matter.



DR. H. V. HANDE: Mr. Deputy Speaker, you have just now mentioned that the next item is the resolution for the removal of the Deputy Speaker from his office. Before that you have announced the Panel of Chairmen. When the resolution is taken up, somebody else would be sitting in the Chair and he has to be selected from the panel of chairmen. Who is going to sit there? That is an important point to be discussed. Then, the second point is, when we are going to speak on this resolution, where is the guarantee that you are not going to switch off the mikes as was done earlier.

MR. DEPUTY SPEAKER: The hon. Member must resume his seat.

(The hon. Member, Dr. H. V. Hande did not resume his seat.)

When I am on my feet the hon. Member must resume his seat. He must obey the Chair.

DR. H. V. HANDE: You are on your feet.

MR. DEPUTY SPEAKER: Yes, but you must obey the Chair and observe the rules.

DR. H. V. HANDE: I want an assurance that you are not going to switch off the mikes.

MR. DEPUTY SPEAKER: You must know one thing. It is not the duty of the Speaker to switch off or switch on the mike. There is one operator who will do that work.

DR. H. V. HANDE: I want to know whether any instructions have been given to switch off the mike when we speak......

MR. DEPUTY SPEAKER: Nobody has given any such instruction.

According to Rule 54 of the Assembly Rules, "the person presiding shall read the resolution to the Assembly" and proceed further in the matter. In view of this provision, there is no point of order.........

THIRU K. T. K. THANGAMANI: You cannot prevent a point of order.........

MR. DEPUTY SPEAKER : First of all, you allow the Chair to speak.........

(THIRU R. PONNAPPA NADAR rose.)

Let the hon. Member, Thiru Ponnappa Nadar, speak now.

THIRU R. PONNAPPA NADAR: The point of order raised by Dr. Hande relates to a matter of procedure which you are going to adopt in this House. When the motion for the removal of the Deputy Speaker is to be discussed, Rule 54 will have to be observed. The Deputy Speaker has only announced the panel of chairmen and who is going to preside when the next item is taken up for discussion, has not been announced, and there should be some consensus regarding that. Another guarantee which has been sought by Dr. Hande is that the use of the mike should not be restricted as was done on a former occasion. I do not want to repeat what has happened on 2nd December 1972. We are now in 1973 and I think the House and all the officers will co-operate with us and treat the Opposition with respect. If the Opposition is not treated with respect, I do not think any useful purpose would be served. I think rule 54 may be implemented and the person presiding for the next item may be announced. That is a thing on which we want clarification at the moment.

THIRU K. T. K. THANGAMANI : Sir, I will only elaborate the point of order raised by Dr. Hande. In the House when anybody is speaking, it is perfectly within the right of another Member to get up and interrupt him (THE HON. THIRU K. ANBAZHAGAN : Only when he yields.) In the Lok Sabha all that is required is that he should get permission before he gets up and when makes a speech no power on earth can switch off his mike. If the Speaker asks me not to advance any argument, then I am perfectly within my right to accede to it. But I do not think that this House can be controlled by some operator or somebody who operates the mike and prevent me from speaking. I would like to have clarification on that point.

The second point which I want to raise is that I have given notices of several privilege motions. A privilege motion cannot lie for months together, Yesterday also I gave notice of a privilege



motion and I do not know what has happened to it. If you give me permission for leave, I would move it.

MR. DEPUTY SPEAKER : Which privilege motion?

THIRU K. T. K. THANGAMANI : This does not relate to a matter which occurred during this sitting now. I am invoking the privilege for something which has happened inside the precincts of the House on a particular occasion.

Privilege is not a personal matter. It concerns the entire House. So, whenever a privilege motion is given, it had to be given top priority and on that basis I would insist to know what has happened to my privilege motion. I would like to known from the Chair whether my privilege motion would be taken up or not.

**திரு. நா. வீராசாமி :** தலைவர் அவர்களே, டாக்டர் ஹாண்டே அவர்களும் திரு. தங்கமணி அவர்களும் இந்த மன்றத்திலே மைக் ஆப்பரேட் செய்யப்படுவதைப் பற்றி இங்கே பேசினார்கள். மைக்கைப் பொறுத்தவரையில் ஒரு நேரத்தில் ஒரு மைக் தான் வேலை செய்யக் கூடிய அளவுக்கு இந்த மன்றத்திலே பொருத்தப் பட்டிருக்கிறது. சபாநாயகராகிய நீங்கள் . . .

**மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர் :** நான் சொல்ல வேண்டியதை நீங்கள் சொல்கிறீர்கள். நீங்கள் உட்காருங்கள். மாண்புமிகு அமைச்சர் திரு. க. இராசாராம் அவர்கள்.

**மாண்புமிகு திரு. க. இராசாராம் :** பேரவைத் துணைத் தலைவர் அவர்களே, மாண்புமிகு கே. டி. கே. தங்கமணி அவர்கள் இங்கே பாராளுமன்ற சம்பிரதாயத்தைப் பற்றி எடுத்துச் சொன்னார்கள். அவர்கள் 5 ஆண்டு காலம் பாராளுமன்றத்திலே உறுப்பினராக இருந்தவர்கள். நான் 9 ஆண்டு காலமாக பாராளுமன்றத்திலே உறுப்பினராக இருந்தவன் என்ற முறையில் என்னுடைய அனுபவத்தை எடுத்துச் சொல்ல விரும்புகிறேன். பாராளுமன்றத்தில் சபாநாயகர் பேசுகின்ற நேரத்தில் வேறு எந்த மைக்கும் வேலை செய்யாது. அது விஞ்ஞானம் தெரிந்தவர் களுக்குத் தெரியும். இது சாதாரண விஷயம். இப்பொழுது கூட மாண்புமிகு பொன்னப்ப நாடார் அவர்கள் பேசினார்கள். மைக் வேலை செய்தது. மாண்புமிகு ஹாண்டே அவர்கள்

பேசினார்கள், மைக் வேலை செய்தது. ஒரே நேரத்தில் 7 மைக்குகள் வேலை செய்யவேண்டுமென்றால், இது சந்தைக் கடையா, சட்டசபையா என்று சந்தேகம் வந்துவிடும். ஆகவே, பாராளுமன்றத்தில் அவர் குறிப்பிட்ட மாதிரி சம்பிரதாயம் இல்லை. பாராளுமன்றத்தில் சபாநாயகர் அழைப்பவரைத் தவிர வேறு எவரும் பேசுகிற சம்பிரதாயம் இல்லை. யார், யார், அவருடைய அனுமதியின்பேரில் பேசுகிறார்களோ அவர்களுடைய மைக் தான் வேலை செய்யும்.

MR. DEPUTY SPEAKER : The Hon. Law Minister wants to say something.

T

**திரு. கே. டி. கே. தங்கமணி :** லோக் சபாவைப் பற்றிச் சொன்னார்கள். I am really enlightened அங்கிருக்கிற விஷயம் என்னவென்று சொன்னால், தனிப்பட்ட ஒவ்வொருவருக்கும் மைக் ஆப் பண்ணுவது என்ற நிலைமை கிடையாது. நாம் எழுந்து நின்று பேசினால், சபை பூராவும் மைக் அப்சார்ப் செய்து, பேசுவது கேட்கும். இங்கு என்ன நிலைமை ? நான் எழுந்து பேசவேண்டுமென்று நினைத்தால். . . இப்பொழுதே போய்விட்டது.

**மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர் :** சுவிச்சை பிரஸ் பண்ணிவிட்டு பேசுங்கள். நீங்கள் உங்கள் பாயிண்ட் ஆப் ஆர்டரிலே என்ன பேச வேண்டுமென்று விரும்புகிறீர்கள் ?

**திரு. கே. டி. கே. தங்கமணி :** (குறுக்கிட்டு) நான், டெப்புட்டி ஸ்பீக்கர் சொல்வதைக் கேட்டுப் பேசுவதா ? அல்லது சபையினர் சொல்வதைக் கேட்டுப் பேசுவதா ?

**மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர் :** நீங்கள் டெப்புட்டி ஸ்பீக்கருக்காகப் பேசப் போகிறீர்களா ? அல்லது சபையினருக்காகப் பேசப் போகிறீர்களா ? நீங்கள் என்னைப் பார்த்துப் பேசுங்கள்.

**திரு. கே. டி. கே. தங்கமணி :** நான் கேள்வி கேட்டால் கூட சபாநாயகரைப் பார்த்துத் தான் கேட்கிறேன், அதுதான் வழக்கம். அந்தப் பண்பை ஆரம்பத்திலிருந்தே கைப்பற்றிக் கொண்டு வருகிறவன் என்ற முறையில் சபையில் இருப்பவர்களுக்காகச் சொல்வதில்லை.



தனிப்பட்ட ஒவ்வொருவருக்கும் மைக் ஆப்பரேட் பண்ணுவது என்ற முறை இன்றைக்கு லோக் சபாவில் கிடையாது. சபாநாயகர் எழுந்து நின்று பேசுகிறபொழுது, சமீபத்தில்கூட, மேற்கு வங்காளத்து விஷயத்தை எடுத்துக்கொள்ள வேண்டுமென்பதற்காக 24 உறுப்பினர்கள் எழுந்துநின்று 2 மணி நேரம் தாவா பண்ணி, பிறகு அந்த விஷயத்தை எடுத்துக் கொண்டிருக்கிறார். மைக் ஆப் பண்ணியிருந்தால் அதை விவாதத்திற்கு எடுத்துக் கொண்டிருக்க முடியாது. முதலில் சபாநாயகர் அனுமதிக்கவில்லை. 2 மணி நேரம் உறுப்பினர்கள் தாவா பண்ணியபிறகு, கடைசியிலே விவாதத்திற்கு எடுத்துக் கொண்டார்கள். ஏனென்றால், அங்கு மைக் அமைப்பு முறை, இருக்கக் கூடிய ஆப்பரேஷன் முறை, வேண்டாதவர்களுக்கு நிறுத்துவது என்ற முறை இல்லை என்பதை தெரிவித்துக் கொள்கிறேன். அதனால் தான் ரொம்ப கடமைப்பட்டிருக்கிறேன் திரு. ராஜாராமுக்கு. நான் தெரிவித்துக்கொள்வது என்னவென்றால், தனிப்பட்ட ஒவ்வொருவருக்கும் மைக் என்ற முறை இல்லை.

DR. H. V. HANDE : Only one point.

MR. DEPUTY SPEAKER : It relates to your point of Order ?

DR. H. V. HANDE : Yes. With all respect to the Chair, I would submit that I did not want to disrespect the Chair at all. My only point is that when we get up to speak in this House, there is a system by which one human being immediately controls in the manner in which he likes it. There is no democratic method by which when a person gets up, the mike is switched on automatically. That is the whole dufficulty. So we would like to get a clarification from the Deputy Speaker whether the person controlling the mike is getting any instruction (that is my point) and acts...

MR. DEPUTY SPEAKER : That is not a new point. I am sensitive enough. The hon. Member need not go on repeating the same thing.

DR. H. V. HANDE : May I know whether it would be possible for the Deputy Speaker to give an assurance that when a person gets up to speak, there is an automatic method by which the mike is switched on?

(THIRU N. Veerasami rose)

MR. DEPUTY SPEAKER : Let the Hon. Minister for Law say what he wants.

**மாண்புமிகு திரு. செ. மாதவன் :** தலைவர் அவர்களே, இப்பொழுது இரண்டு ஒழுங்குப் பிரச்சினைகள் எழுப்பப் பட்டிருக்கின்றன. ஒன்று ஒலிபெருக்கியைப் பற்றி. அது இன்றைக்கு ஒரு அக்கடமிக் டிஸ்கஷன் என்றுதான் கருதுகிறேன். ஆனால் எங்களைப் பொறுத்த அளவுக்கு இந்த மன்றத்திலே யார் பேசவேண்டும், யார் பேசுவதற்கு அனுமதிக்கப்பட வேண்டும் என்று நிர்ணயிப்பது, முடிவு செய்வது, மன்றத்தினுடைய தலைவர் அவர்களுடைய உரிமையாகும். அவர் யாரைப் பேச அனுமதிக்கின்றார்களோ அவருக்குத் தான் ஒலிபெருக்கித் தரப்பட வேண்டுமே தவிர, எல்லோருமே எழுந்திருந்து ஒரே சமயத்தில் பேச விரும்பினால் சட்டசபை நடைமுறையில் சரிவர நடக்காது என்பதை மட்டும் நான் தெரிவித்துக்கொள்கிறேன். இது பெரிய பிரச்சினை இல்லை. அதிலே சூடாக விவாதத்தைக் கிளப்ப வேண்டாமென்று கருதுகிறேன்.

அடுத்து, இப்பொழுது யார் தலைமை வகிப்பது என்பதுதான். ஒரு சட்டப் பிரச்சினை கிளப்பப்பட்டிருக்கிறது. இதிலே கூட கட்சி வேறுபாடு கிடையாது. பாரம்பரியத்தை எடுத்துக் கொண்டால் அதுதான் பொருத்தம் என்று நினைக்கிறேன். அரசியல் அமைப்புச் சட்டத்திலே விளக்கமாக இருக்கிறது. அரசியல் அமைப்பு சட்டம் 181-வது பிரிவின்படி, யார் மீது நம்பிக்கையில்லையென்று Removal notice. இருக்கிறதோ அவர் சபையினுடைய தலைமையிலே இருக்கக் கூடாது அரசியல் அமைப்பு சட்ட 180-வது பிரிவிலே யார் யார் இந்த மன்றத்தை நடத்திச் செல்லலாம் என்பதை தெரிவித்திருக்கிறார்கள். தலைவர், அவர் இல்லாத இடத்திலே துணைத் தலைவர், அவரும் இல்லாத இடத்திலே பேனல் ஆப் சேர்மன்-இல் ஒருவர், அவரும் இல்லாத



இடத்திலே இந்த மன்றத்திலேயே ஒருவரைத் தேர்ந்தெடுக்கலாம். அதற்கு இந்த மன்றத்திலேயே விதிகள் நிறைவேற்றப்படலாம் என்று அரசியல் அமைப்பு சட்டத்திலே சொல்லப்பட்டிருக்கிறது.

நம்முடைய பேரவை விதி 6-ன்படி, தலைவர், துணைத் தலைவர் பேனல் ஆப் சேர்மனை அறிவித்தபிறகு, அவர்களிலே யார் தலைவராலோ, துணைத் தலைவராலோ கேட்டுக்கொள்ளப் படுகிறார்களோ, அவர் இந்த மன்றத்தினுடைய தலைமையை ஏற்கலாம்

At the commencement of every session or from time to time, as the case may be, the Speaker may nominate from amongst the Members of the Assembly a panel of not more than six Chairmen, any one of whom may preside over the Assembly in the absence of the Speaker and the Deputy Speaker when so requested by the Speaker or, in his absence, by the Deputy Speaker. என்று 6-வது விதி கூறுகிறது.

பேனல் ஆப் சேர்மனிலே யாரை இப்பொழுது தலைமை ஏற்க வேண்டுமென்று இந்த மன்றத்தினுடைய துணைத் தலைவர் கேட்கின்றாரோ அவர் இந்த மன்றத்தினுடைய தலைமையை ஏற்று நடத்தலாம் என்பதுதான் அரசியல் அமைப்பு சட்டத்திலே, நம்முடைய விதிகளிலே கூறப்பட்டிருக்கிறது. இந்த நல்ல பாரம்பரியத்தை நாமும் பின்பற்ற வேண்டுமென்று கேட்டுக்கொள்கிறேன். இதிலே கட்சி வேறுபாடோ, கட்சி மாச்சரியங்களோ எங்களுக்குக் கிடையாது என்று தெரிவித்துக் கொள்கிறேன்.

**மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர் :** ஒலி பெருக்கியைப் பற்றிக் குறிப்பிட்டார்கள். ஒலி பெருக்கியை கன்ட்ரோல் செய்வது யார் என்ற கேள்வி கேட்ட தோரணையின் காரணமாக, ஆப்பரேட்டர்தான் கன்ட்ரோல் செய்கிறார் என்று சொன்னேன். இங்கே தலைமை வகிக்கிறவர் யாராக இருந்தாலும், அவர்கள் தான் இவற்றையெல்லாம் ஒழுங்குமுறையிலே வைத்திருப்பார்கள். பாராளுமன்ற பேரவைத் தலைவர் அவர்கள் பேசும்பொழுது மற்றவர்களுடைய ஒலிபெருக்கியும் வேலை செய்யலாம். அது பாராளுமன்றத்திலே இருக்கிறதா. என்ற கருத்து வேறுபாடு எழுந்தது. பாராளுமன்றத்திலே எவ்வளவு பெரிய இடம் இருக்கிறது, எவ்வளவு நாற்காலிகள் இருக்கின்றன என்றால்,

அதே போல் இங்கும் கொடுக்க வேண்டுமென்று விதிமுறைகள் இல்லை. தமிழ் நாடு சட்டசபையைப் பொறுத்த வரையிலும், தலைமை வகிப்பவர் பேசும்போது, அமைச்சர்களுடைய ஒலி பெருக்கிக் கூட வேலை செய்யாது. இங்கே இரைச்சல் குறைவாக இருக்க வேண்டும், மோதல் தவிர்க்கப்பட வேண்டும், அமைதியான நிலைமை ஏற்பட வேண்டும், யார் பேசினாலும் எல்லோருக்கும் கேட்க வேண்டுமென்ற நியதிகள் அடிப்படையில் இந்த ஏற்பாட்டை வைத்திருக்கிறோம். இதிலே எந்தவிதமான சூழ்ச்சியோ, சர்வாதிகாரமோ, அல்லது வேறு ஏதோ தந்திரமோ இல்லை இது வழி வழியாக சட்டமன்றம் தோன்றிய நாள்முதல் எந்தக் கட்சி ஆட்சியில் இருந்தாலும், யார் சபாநாயகராக இருந்தாலும் கடைப்பிடித்து வருகிற முறை.

ஆகவே, இதிலே ஒழுங்குப் பிரச்சினை எழுப்பியது தேவையில்லை என்று தெரிவித்துக்கொள்கிறேன்.

அடுத்து, இந்த அவையிலே யார் தலைமை வகிக்க வேண்டும் என்பது பற்றி இந்திய அரசியல் சட்டத்தின் 181 (1), (2) விதிகளின் கீழ் மிகத் தெளிவாக "பேனல் ஆப் சேர்மென்" ஆக இருப்பவர்கள் தான் தலைவராக வர முடியும் என்றிருக்கிறது. அதையே தான் இங்கே மாண்புமிகு சட்ட அமைச்சர் அவர்கள் எடுத்துக் காட்டினார்கள், ஆக, நம்முடைய பேரவையின் 54-வது விதியின்படி இங்கே தலைமை வகிக்கின்றவர் இந்த விஷயத்தை பரிசீலனைக்கு எடுத்துக்கொள்வார். அந்த முறைப்படி "பேனல் ஆப் சேர்மென்"-லே இருக்கும் திரு. பழனிவேல் ராஜன் அவர்கள் சட்டசபையின் தலைவருடைய இருக்கையிலே அமர்ந்து பேரவை நடவடிக்கைகளைத் தொடர்ந்து நடத்த வேண்டுமென்று கேட்டுக்கொள்ளுகிறேன்.

**திரு. ஜே. ஜேம்ஸ்:** பாயின்ட் ஆப் ஆர்டர்.

**மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர்:** "நோ பாயின்ட் ஆப் ஆர்டர்" . . .

**திரு. ஜே. ஜேம்ஸ்:** தலைவரவர்களே, இந்த அவையின் முன்னாலே "ரிமூவல் ஆப் டெபுடி ஸ்பீக்கர்" சம்மந்தமாக இரண்டு பேர் கொடுத்த நோட்டீஸ்கள் இருக்கின்றன. இதைப் போலவே நானும் நோட்டீஸ் கொடுத்திருக்கிறேன். அந்த விபரம் இந்த நிகழ்ச்சி நிரலிலே இல்லை. ஒருவேளை அந்தத்



தீர்மானத்திற்கு 14 நாட்கள் ஆகவில்லை என்ற காரணத்தினால் அந்தத் தீர்மானம் எடுத்துக் கொள்ளப்படவில்லையா என்பதை அறிய விரும்புகிறேன். அப்படி என்று சொன்னால் இந்தத் தீர்மானம் 14 நாட்கள் விதிக்கு இணங்க . . .

MR. DEPUTY SPEAKER: It is not a point of order. The hon. Member is treading on a wrong path..................

THIRU J. JAMES: You please permit me to speak. I am talking on a relevant matter.

MR. DEPUTY SPEAKER: What is the relevant matter?

THIRU R. PONNAPPA NADAR: I want to make a submission once again. The Hon.Member wants to raise a point of order and my request is that he should not be treated as a school boy and asked to stop in the middle. Even if it is not a point of order, the Deputy Speaker can very well say that there is no point of order. So I submit that the right conferred on the Members should not be taken away by the Deputy Speaker and we protest against it emphatically.

MR. DEPUTY SPEAKER: Let the hon.Member proceed. . .

**திரு. ஜே. ஜேம்ஸ்:** ஒருவேளை 14 நாட்கள் ஆகவில்லை என்ற காரணத்தினால் அந்தத் தீர்மானம் எடுத்துக்கொள்ளப்படவில்லையா? அப்படி என்று சொன்னால் அந்த 14 நாட்கள் இந்த சட்டமன்ற தொடர் கூட்டத்திலே ஒரு நாள் வந்து, இந்தச் சட்டமன்றக் கூட்டம் முடிவதற்குள் அந்தக் தீர்மானம் எடுத்துக் கொள்ளப்படுமா என்பதை அறிய விரும்புகிறேன் அப்படி நான் கூறுவதற்கு ஒரு காரணம் இருக்கிறது. ஏற்கனவே இதுபோன்ற ஒரு தீர்மானம் இந்த அவையிலே எடுத்துக்கொள்ளப்பட்டு விவாதிக்கப்பட்டுவிட்டது என்ற காரணத்தினால் என்னுடைய தீர்மானம் எடுத்துக்கொள்ளப்பட முடியாது என்று கூற ஒரு வாய்ப்பிருக்கிறது. எனவே, இது சம்பந்தமான ஒரு தீர்ப்பை தலைவர் அவர்கள் வழங்க வேண்டுமென்று கேட்டுக்கொள்ளுகிறேன்.

DR. H. V. HANDE: I have also given notice of a motion against the Deputy Speaker. May I know whether that also would be taken into consideration. ?

THIRU K. T. K. THANGAMANI : What has happened to my privilege motion. I am still waiting for an answer.

**மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர்**: அப்படிப்பட்டவைகளையும், உரிமைப் பிரச்சினைப் பற்றி எல்லாம் சட்டப் பேரவையின் தலைவர் அவர்களுடைய அறையிலே கேட்க வேண்டும் என்றிருக்கிறது. எனவே, அதை எல்லாம் இங்கே வைத்து விவாதிப்பது சரியல்ல. நாளைக்கு அதைப் பற்றிய முடிவுகளை இங்கே பேரவைத் தலைவர் இருக்கையில் இருப்பவர் சொல்லுவார்கள். திரு. ஜேம்ஸ் அவர்களும், திரு. ஹாண்டே அவர்களும் கொடுத்திருக்கிற நோட்டீஸ் சம்பந்தமாக இங்கே பேசினார்கள். அவர்களே, தங்களுடைய பேச்சிலேயே அதற்குரிய பதிலைச் சொல்லியிருக்கிறார்கள். பதினைந்து நாட்கள் ஆகவில்லை என்ற காரணத்தினாலே அது எடுக்கப்படவில்லையா? என்றார்கள். உண்மையாகவே அதுதான் காரணம். சட்டமன்ற விதிகளின்படி அவைகளின் மீது நடவடிக்கை எடுக்கப்படும். என் மீது பதவி நீக்கத் தீர்மானத்தைக் கொடுத்துவிட்டு, நான் இன்னமும் இந்த நாற்காலியை விட்டு நகரவிடாமல் இருக்கச் செய்யும் நிலைமைகள் எனக்கே வேடிக்கையாக இருக்கிறது. ஆகவே, திரு. பழனிவேல் ராஜன் அவர்கள் தலைமை வகித்து பேரவையின் நடவடிக்கைகளை நடத்த வேண்டுமென்று கேட்டுக்கொள்கிறேன். (துணைத் தலைவர் அவர்கள் தம் இருக்கையை விட்டு இறங்கி, திரு. பழனிவேல் ராஜன் அவர்கள் பேரவைத் தலைவர் இருக்கையில் அமர்ந்தார்.)

**திரு. வி. கிருஷ்ணமூர்த்தி**: தலைவரவர்களே, சட்டசபை செத்துவிட்டது என்று சொன்ன எம்.ஜி.ஆர். கட்சியைச் சார்ந்தவர்கள் வந்திருக்கிறார்களே, அவர்கள் அந்தக் கட்சியில்தான் இருக்கிறார்களா, அல்லது வேறு கட்சியில் சேர்ந்து வந்திருக்கிறார்களா?

THIRU G. R. EDMUND : Sir, I want to know whether there is any recognised party as M.G.R. Party or Anna D.M.K.? Also may I know whether the D.M.K. can be called Karunanidhi D.M.K.?

MR. CHAIRMAN (THIRU PALANIVEL RAJAN) : That is not a valid point.



## 4. பேரவைத் துணைத் தலைவரைப் பதவியில் இருந்து நீக்கக் கோரும் தீர்மானம்.

MR. CHAIRMAN (THIRU PALANIVEL RAJAN): The hon. Member, Thiru K. T. K. Thangamani has given notice of a resolution for the removal of the Deputy Speaker from his office. Since the Deputy Speaker cannot preside over this House on this occasion, as a Member of the Panel of Chairmen, I now take up the resolution. It runs as follows :—

'This House resolves to remove the Deputy Speaker of the Assembly from his office, for his undemocratic and unconstitutional acts on 2nd December 1972.'

இந்தத் தீர்மானத்தின் தமிழாக்கம். "2—12—1972-ம் நாளன்று மாண்புமிகு துணைத் தலைவர் அவர்கள் ஜனநாயகத்திற்கு விரோதமாகவும், அரசியல் சட்டத்திற்கு விரோதமாகவும் நடந்து கொண்டதால் இந்த மன்றம் அவரை பதவியிலிருந்து நீக்குகிறது" என்ற தீர்மானத்தை திரு. கே. டி. கே. தங்கமணி அவர்கள் கொடுத்திருக்கிறார்கள்.

பேரவை விதி 54-இன் கீழ் இந்தத் தீர்மானத்திற்குக் குறைந்த பட்சம் 35 மாண்புமிகு உறுப்பினர்கள் ஆதரவு கொடுத்தால்தான் இந்தத் தீர்மானத்தை நாம் விவாதத்திற்கு எடுத்துக்கொள்ள முடியும் என்பதை இந்த மன்றத்திலே இருப்பவர்கள் நன்றாக தெரிந்திருப்பார்கள். அந்த முறையிலே சட்டப் பேரவை விதி 54-ன் கீழ் இந்தத் தீர்மானத்தைப் படிக்கிறேன்.

'This House resolves to remove the Deputy Speaker of the Assembly from his office, for his undemocratic and unconstitutional acts on 2nd December 1972.'

இந்தத் தீர்மானத்தை முன்மொழிய அனுமதி அளிப்பதற்கு ஆதரவாக இருக்கும் மாண்புமிகு உறுப்பினர்கள் அவரவர் இருக்கையிலே அருள்கூர்ந்து எழுந்து நிற்க வேண்டுமென்று கேட்டுக்கொள்ளுகிறேன்.

(35 உறுப்பினர்கள் எழுந்து நின்றனர்)

**மாண்புமிகு மாற்றுத் தலைவர் (திரு. பழனிவேல் ராஜன்)**: 35 மாண்புமிகு உறுப்பினர்கள் அனுமதி அளிக்க ஆதரவு கொடுத்திருப்பதால் இந்தத் தீர்மானம் விவாதத்திற்கு எடுத்துக் கொள்ளப்படும் என்று அறிவிக்கிறேன்.

[மாற்றுத் தலைவர்] [1973 பிப்ரவரி 5

மாண்புமிகு உறுப்பினர் திரு. எ. ஆர். மாரிமுத்து அவர்கள் 1—1—1973-ஆம் நாளன்று இதே கருத்து, இதே வாசகம் உள்ள ஒரு தீர்மானத்தைக் கொடுத்திருக்கிறார்கள். நம்முடைய சட்ட மன்ற விதி 72-ன் கீழ் ஒரு கூட்டத் தொடரில் ஒரே கருத்துள்ள தீர்மானம் ஒன்றுதான் விவாதிக்கப்படவேண்டுமென்று இருப்பதால் திரு. எ. ஆர். மாரிமுத்து அவர்கள் தீர்மானத்திற்கு அனுமதி மறுக்கிறேன். இப்பொழுது திரு. கே. டி. கே. தங்கமணி அவர்கள் தம் தீர்மானத்தை முன்மொழிந்து பேசுவார்கள்.

அதற்கு முன்பு, மாண்புமிகு உறுப்பினர்களுக்கு, இந்த மன்றத்தின் மாற்றுத் தலைவர் என்ற முறையில், நான் ஒரு வேண்டுகோளை விடுக்க விரும்புகிறேன். நம்முடைய சட்டமன்ற விதிகளில் 67-வது விதியை நான் மாண்புமிகு உறுப்பினர்களின் கவனத்திற்குக் கொண்டுவர விரும்புகிறேன்.

67-வது விதிப்படி,

A member while speaking must not—

(i) give his opinion about or refer to any matter on which a judicial decision is pending ;

(ii) make a personal charge against a member ;

(iii) use offensive expression about the conduct or proceedings of the Parliament or any State Legislature or of the other House ;

(iv) reflect upon the conduct of the President or Governor or any Court of Justice ;

(v) use the Governor's or President's name for the purpose of influencing a debate ; or

(vi) use his right of speech for the purpose of obstructing the business of the Assembly.

இந்த விதிகளின் அடிப்படையிலே, மிக உயர்ந்த முறையில் விவாதம் நடைபெறுவதற்கு மாண்புமிகு உறுப்பினர்கள் உதவ வேண்டும்.

THIRU R. PONNAPPA NADAR : Without making any aspersion on the Chair, may I submit that the Chair may just rise up and make an announcement instead of sitting and reading it.

MR CHAIRMAN (THIRU PALANIVEL RAJAN) : When I make an announcement, I will rise up.



1973 பிப்ரவரி 5] [மாற்றுத் தலைவர்]

இப்பொழுது மாண்புமிகு உறுப்பினர் திரு. கே. டி. கே. தங்கமணி அவர்களை தீர்மானத்தை முன்மொழிந்து பேச அழைக்கிறேன்.

**திரு. கே. டி. கே. தங்கமணி:** தலைவர் அவர்களே, 'மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர் 2—12—' 72 ஆம் நாளன்று ஜனநாயக மரபிற்கும் அரசியலமைப்பிற்கும் முரணாக நடந்து கொண்டமைக்காக அவரைப் பதவியிலிருந்து நீக்க இப்பேரவை தீர்மானிக்கிறது' என்ற தீர்மானத்தை நான் முன்மொழிகிறேன்.

DR. H. V. HANDE : I am seconding it.

**திரு. கே. டி. கே. தங்கமணி:** பொதுவாக, சபாநாயகர் பேரிலோ அல்லது உதவி சபாநாயகர் பேரிலோ அவரைப் பதவியிலிருந்து நீக்கவேண்டும் என்ற தீர்மானம் சட்ட மன்றத்திலோ, நாடாளுமன்றத்திலோ சாதாரணமாகக் கொண்டுவரப்படுவதில்லை. அப்படிக் கொண்டுவர வேண்டிய நிலைமை ஏற்பட்டால் அதற்குத் தக்க காரணங்கள் இருக்க வேண்டும். அந்தக் காரணங்கள் அசாதாரணமான காரணங்களாக இருக்கவேண்டுமென்பதுதான் கிட்டத்தட்ட பார்லிமெண்டரி நடைமுறையிலே வந்து இருக்கக் கூடிய மரபாக இருக்கிறது. ஆகவே, தாங்கள் என்னைக் கேட்கலாம், எந்த நோக்கத்தோடு இந்தத் தீர்மானத்தைக் கொண்டு வந்திருக்கிறீர்கள் என்று. அரசியல் சட்டத்திலே சாதாரணமாக சபாநாயகரையோ, உதவி சபாநாயகரையோ நீக்கவேண்டுமென்று சொன்னால் சில நியதிகள் இருக்கவேண்டுமென்று குறிப்பிட்டிருக்கிறார்கள். அரசியல் சட்டத்திலே, சபாநாயகரையோ, உதவி சபாநாயகரையோ நீக்கவேண்டுமென்றுசொன்னால், அரசியல் சட்டம் விதி 179 (சி) யின்படி

He may be removed from his office by a resolution of the Assembly passed by a majority of all the then members of the Assembly.

Provided that no resolution for the purpose of clause (c) shall be moved unless at least fourteen day's notice has been given of the intention to move the resolution.

என்று சொல்லப்பட்டிருக்கிறது. அதற்கு பின்னாலே

(i) At any sitting of the Legislative Assembly, while any resolution for the removal of the Speaker from his office is under

[1973 பிப்ரவரி 5

consideration, the Speaker, or while any resolution for the removal of the Deputy Speaker from his office is under consideration, the Deputy Speaker, shall not, though he is present, preside and the provisions of clause (2) of Article 180 shall apply in relation to every such sitting as they apply in relation to a sitting from which the Speaker, or as the case may be, the Deputy Speaker is absent.

என்று சொல்லப்பட்டிருக்கிறது. ஸ்பீக்கர் என்று சொல்லும் பொழுது டெபுடி ஸ்பீக்கருமே.

இப்படி 179, 181 ஆகிய விதிகளில் ஸ்பீக்கர், டெபுடி ஸ்பீக்கர் யாரையாவது நீக்கவேண்டுமென்று சொன்னால் கவனிக்க வேண்டிய விஷயங்கள் என்று அரசியல் சட்டத்திலே குறிப்பிட்டிருக்கிறார்கள். இப்படி அரசியல் சட்டத்திலே நாடாளுமன்ற ஸ்பீக்கரை நீக்க என்ன என்ன விதிகள் எல்லாம் இருக்கின்றனவோ அதே விதிகள்தான் இந்தச் சட்ட மன்றத்திற்கும் இருக்கின்றன. நான் இதை முன்னாலேயே சொல்லிக்கொள்வதற்குக் காரணம், அரசியல் சட்டத்திலேயே, ஸ்பீக்கரையோ அல்லது டெபுடி ஸ்பீக்கரையோ விலக்குவது என்பது சரியல்ல. அப்படி விலக்குவதற்கு வரக்கூடிய அளவுக்கு ஒரு சட்டமன்றத்திலே ஏற்பட்டுவிட்டது என்றால் சட்ட மன்றத்திலே ஏதோ கோளாறு இருக்கிறது என்பதை உணர்த்துவதற்காகத்தான் இம்மாதிரி வைத்திருக்கிறார்கள். 14 நாட்கள் நோட்டீஸ் பற்றியோ, டெபுடி ஸ்பீக்கர் என்ன பதிலளிக்கப் போகிறார் என்பதைப் பற்றியோ அல்லது மெஜாரிட்டி இருக்குமா என்பதைப் பற்றியோ உள்ள சர்ச்சைக்குள் நான் இறங்க விரும்பவில்லை.

1954 ஆம் வருஷத்தில் நாடாளுமன்றத்திலே, சிறப்பாகப் பணியாற்றிய ஸ்பீக்கர் என்ற பெயர்பெற்ற மாவ்லங்கர் பேரிலே பல எதிர்க்கட்சி உறுப்பினர்கள்—பொதுவாக ஸ்பீக்கர் அல்லது டெபுடி ஸ்பீக்கர் மீது நம்பிக்கையில்லை என்ற தீர்மானத்தை எல்லா இடங்களிலுமே எதிர்க்கட்சிகளைச் சேர்ந்த உறுப்பினர்கள் தான் கொண்டு வருவார்கள்—புகார்கள் கொண்டுவந்தார்கள். ஆனால் ஆளுங்கட்சியைச் சேர்ந்தவர்களேகூட கொண்டுவரக்கூடிய விசித்திரமான சம்பவத்தை இங்கேதான் பார்த்திருக்கிறோம், நான் பார்த்த வரையிலும் எதிர்க்கட்சிகளைச் சேர்ந்தவர்கள்தான்



1973 பிப்ரவரி 5] [திரு. கே. டி. கே. தங்கமணி]

ஸ்பீக்கர் பேரிலோ அல்லது டெபுடி ஸ்பீக்கர் பேரிலோ நம்பிக்கை இல்லை என்ற தீர்மானத்தைக் கொண்டுவருவார்கள் அப்படி நம்பிக்கையில்லாத் தீர்மானத்தைக் கொண்டு வந்தார்கள்.

ஒருஅரசாங்கத்தின்மீது நம்பிக்கையில்லை என்று சொன்னால்

We express no confidence in the Council of Ministers presided over by the Chief Minister. என்று சொல்லிவிடலாம். ஆனால் ஸ்பீக்கரைப் பொறுத்தவரையிலே என்ன காரணத்தினால் அவர் வெளியேறவேண்டுமென்பதை ஸ்தூலமாகச் சொல்லவேண்டுமென்று தெளிவாகச் சொல்லியிருக்கிறார்கள். காரணம், ஸ்பீக்கரோ அல்லது டெபுடி ஸ்பீக்கரோ அந்த விவாதத்திற்குப் பதில் சொல்லக் கடமைப்பட்டிருக்கின்றார்கள். நோட்டீஸை கையிலே கொடுத்து திடீரென்று அவர் பதில் சொல்ல வேண்டுமென்று இல்லாமல் நோட்டீஸைக் கொடுத்தபிறகு எந்தவிதமாக அதற்கு அவர் பதில் சொல்லவேண்டுமென்று தயார்படுத்திக் கொள்வதற்காகத்தான் அந்த ஏற்பாட்டை வைத்திருக்கிறார்கள். 1954-ஆம் வருஷத்திலே மாவ்லங்கர் மீது எஸ். எஸ். மோரேயும் இன்னும் பல உறுப்பினர்களும் நாடாளுமன்றத்திலே கொண்டு வந்தார்கள். அந்த நம்பிக்கையில்லாத் தீர்மானம் வரும் பொழுது ஒரு 'பாயின்ட் ஆஃப் ஆர்டர்' எழுப்பப்பட்டது. இன்றைக்கு கேபினட் அமைச்சராக இருக்கும் திரு. ரகுராமையா அவர்கள், 'இன்றைக்கு இந்த நம்பிக்கையில்லாத் தீர்மானம் கொண்டுவரப்படுவது என்னென்ன காரணங்களால் என்று தெளிவாகச் சொல்லப்படவில்லையே, அப்படி இருப்பது சரியா' என்ற பிரச்சினையை எழுப்பினார்கள். அன்றைக்கு டெபுடி ஸ்பீக்கராக இருந்த திரு. அனந்தசயனம் ஐயங்கார் அவர்கள்

"charges must be specific and concrete."

என்று சொல்லியிருக்கிறார்கள். ஸ்பெசிஃபிக்காக, கான்க்ரீட்டாக மு.ப.
இருக்க வேண்டுமென்று சொல்லியிருக்கிறார்கள். நான் குறிப்பிட்ட 10-30
விஷயத்திற்குப் பதில் சொல்ல டெபுடி ஸ்பீக்கர் விரும்பினால் தயார் செய்துகொள்ள வசதி செய்து கொடுக்க வேண்டுமென்ற முறையில்தான் நான் இந்த விஷயத்தைக் கூறுகிறேன்.

**திரு. நா. வீராசாமி:** பாயின்ட் ஆஃப் ஆர்டர், சார். தலைவரவர்களே, துணை சபாநாயகர் மீது நம்பிக்கையில்லை என்ற தீர்மானம் கொண்டுவந்துவிட்டு, அதை ஆதரித்த எம்.ஜி.ஆர். தலைமையில் உட்கார்ந்திருந்த கட்சிக்காரர்கள் இந்த விவாதம்

[திரு. நா. வீராசாமி] [1973 பிப்ரவரி 5

தொடங்கியவுடன் அத்தனைபேரும் வெளியேறிவிட்டார்கள். அவர்கள் 'வாக்-அவுட்' செய்தார்களா என்ன என்று தெரியவில்லை.

MR. CHAIRMAN (THIRU PALANIVEL RAJAN) : It is not a point of order.

THIRU K. T. K. THANGAMANI : Sir, I want protection from the Chair so that I may be allowed to speak without interruption.

MR. CHAIRMAN (THIRU PALANIVEL RAJAN) : Every Member is entitled to raise a point of order.

THIRU R. PONNAPPA NADAR : MR. Chairman, Sir, before proceeding with the discussion, I would like to have another ruling from the Chair.

Regarding the right of the Deputy Speaker to participate in the proceedings, I want to refer to Article 181 (2) of the Constitution which states—

'The Speaker shall have the right to speak in, and otherwise to take part in the proceedings of, the Legislative Assembly while any resolution for his removal from office is under consideration in the Assembly and shall, notwithstanding anything in article 189, be entitled to vote only in the first instance on such resolution or any other matter during such proceedings but not in the case of an equality of votes.'

This provision gives the right to speak only for the Speaker alone. Now that the resolution for the removal of the Deputy Speaker is under discussion, may I know whether the Deputy Speaker has got any constitutional right to participate in the proceedings and that is a matter on which I want a ruling from the Chair.

MR. CHAIRMAN (THIRU PALANIVEL RAJAN) :I am glad that the hon. Member has raised this point of order. The hon. Member has quoted the relevant Article 181 (2) where there is reference only to the word 'Speaker'. Whereas the Speaker is not normally entitled to participate in the proceedings, the Deputy Speaker is entitled to participate in the proceedings as a Member of the House. I think, the Deputy Speaker, if not for any other reason by way of personal explanation, is entitled to participate in the debate.



1973 பிப்ரவரி 5]

திரு. கே. டி. கே. தங்கமணி : ஆகவேதான் இந்தக் காரணங்களை வைத்து அவர்கள் பேசுவதற்கு தயாராக இருக்கவேண்டுமென்று என்னுடைய இந்தத் தீர்மானத்தை கொடுத்திருக்கிறேன், ரிமூவ் செய்யவேண்டும் என்று மட்டும் கொடுத்திருக்கிறேன்.

MR. CHAIRMAN (THIRU PALANIVEL RAJAN): How long does the hon. Member want?

I learn that the hon. Member agreed in the meeting of the Business Advisory Committee to finish the discussion today itself. . . .

THIRU K. T. K. THANGAMANI : I will speak till 11 o' clock.

MR. CHAIRMAN (THIRU PALANIVEL RAJAN): As the mover of the Resolution, I am prepared to give a little more time to the hon. Member.

திரு. கே. டி. கே. தங்கமணி : ஆகவே, என்னுடைய இந்தத் தீர்மானத்திலே ஒன்று, 2-ஆம் தேதி நடந்த சம்பவம். இரண்டாவது அவர்கள் டெபுடி ஸ்பீக்கராக இருக்கும் காலத்திலே சில காரியங்களை அவர்கள் செய்ததை ஆதாரபூர்வமாக வைத்திருக்கிறேன். இந்த இரண்டையும் மட்டும் சொல்லலாம் என்று நினைக்கிறேன்.

இரண்டாம் தேதி நிகழ்ச்சியைப் பொறுத்தவரையில், ஏற்கனவே நவம்பர் மாதம் 13-ஆம் தேதியன்று சட்டசபை ஒற்றி வைக்கப்பட்டது. அன்றைக்கிருந்த சபாநாயகர் டிசம்பர் மாதம் 5-ஆம் தேதி சட்டசபை கூட வேண்டுமென்று அறிவித்திருந்தார்கள். ஆனால் அதற்கிடையில் சபையை இடைக்காலமாக கவர்னர் அவர்கள் கலைத்து 2 ஆம் தேதி கூட வேண்டும் என்று ஏற்பாடு செய்திருந்தார்கள். அப்படி 2-ஆம் தேதி சபை கூடியது. தங்களுக்குத் தெரியும் சார், அன்றைக்கு சபை கூடியது 11 மணிக்கு. 11-லிருந்து 12 மணி வரையில் கேள்வி நேரம். கேள்வி நேரம் ஆரம்பிப்பதற்கே முக்கால் மணி நேரம் ஆகிவிட்டது. பல உரிமைப்பிரச்னைகள் எழுப்பப்பட்டன. பதினொன்றே முக்கால் மணியிலிருந்து 12 மணி வரையிலும் கால் மணிநேரம் தான் கேள்வி நேரமானது. ஒரு மணிநேரம்தான் கேள்வி நேரம் என்று முறையிலே, ஒரு மணி நேரம்தான் நம்முடைய விதியிலே அனுமதித்திருக்கிறார்கள் என்ற முறையிலே 12 மணிக்கு கேள்வி

நேரம் முடிந்தது. அதைத்தான் 'ஸீரோ அவர்' என்று சொல்லுவார்கள். அந்த 'ஸீரோ அவரில்' தான் சில ஒத்தி வைப்புப் பிரேரணைகள், பிரிவிலேஜ் மோஷன்கள் போன்ற இப்படிப் பட்டவைகள் எடுக்கப்படும்.

இன்றைக்கு அந்த ரிகார்டுகளை எடுத்துப்பார்த்தால், வந்திருந்த நோட்டீஸ்களைப் பார்த்தால் தெரியும், இந்த அமைச்சரவையின் பேரில் நம்பிக்கையில்லை என்ற தீர்மானத்தைப் பல உறுப்பினர்கள் கொடுத்திருந்தார்கள். என்னுடைய பெயரில் ஒரு நம்பிக்கையில்லாத் தீர்மானம் இருந்தது. திரு. எம். ஜி. இராமச்சந்திரன் அவர்கள் பெயரிலே ஒரு நம்பிக்கையில்லாத் தீர்மானம் இருந்தது. திரு. ஜேம்ஸ் அவர்கள் பெயரிலே ஒரு நம்பிக்கையில்லாத் தீர்மானம் இருந்தது. திருமதி அலந்துநாயகி அம்மையார் அவர்கள் பெயரிலே ஒரு நம்பிக்கையில்லாத் தீர்மானம் இருந்தது. டாக்டர் ஹாண்டே அவர்கள் பெயரிலே ஒரு நம்பிக்கையில்லாத் தீர்மானம் இருந்தது. இந்த நம்பிக்கையில்லாத் தீர்மானங்கள் வந்திருக்கின்றன என்று சபாநாயகரவர்கள் அறிவித்தார்கள். அப்படி அவர்கள் அறிவித்தபிறகு, இன்றைக்கு நீங்கள் எப்படி இந்தத் தீர்மானத்தை ஆதரிக்கக் கூடியவர்கள் எழுந்து நில்லுங்கள் என்று கூறினீர்களோ அதேமாதிரி அன்றைக்கு எழுந்து நில்லுங்கள் என்று சொன்னார்கள். இந்தச் சபாநாயகர் ரிமூவல் தீர்மானத்திற்கு 15 சதவிகிதம் என்று வைத்திருக்கிறோம். அதைக்கூட திருத்தலாம். மற்ற சட்டமன்றங்கள், நாடாளு மன்றத்தில் 10 சதவிகிதம் தான் இருக்கிறது. அமைச்சரவை மீதான நம்பிக்கையில்லாத் தீர்மானத்திற்கே 10 சதவிகிதம் என்றால் சபாநாயகர் ரிமூவலுக்கு 15 சதவிகிதம் என்பது அவசியமில்லை.

ஆனால் அன்றைக்கு, 10 சதவிகிதம் என்ற முறையில் 24 பேர் இருந்தால் போதும். அன்றைக்கு சபாநாயகர் அறிவித்து, 35 பேர் எழுந்து அந்தத் தீர்மானத்திற்கு ஆதரவாக நின்றோம். பிறகு திரு. எம். ஜி. இராமச்சந்திரன் அவர்களின் தீர்மானத்தை எடுத்துக் கொள்கிறேன் என்று அறிவித்து பேசுவதற்கு திரு. எம். ஜி. இராமச்சந்திரனை சபாநாயகர் அழைத்தார். எம். ஜி. இராமச்சந்திரன் பேச ஆரம்பித்த கொஞ்ச நேரத்தில் திடீரென்று அவருடைய மைக் நிறுத்தப்பட்டது. அதற்குப்பிறகு சபாநாயகரின் டேபிள்மீது இருந்த மணியை ஆளுங்கட்சியின்





கொறடாவாக இருக்கும் திரு. அழகமுத்து அவர்கள் எடுத்துக் கொண்டு போனார்கள். அதற்குப்பிறகு இரண்டு உறுப்பினர்கள்—அவர்களுடைய பெயர் எனக்குத் தெரியவில்லை—சபாநாயகர் முன்னாலிருந்த பேப்பரை இழுத்தார்கள். அப்பொழுது சபாநாயகர் விடாமல் நிறுத்த அவருடைய கண்ணாடியில் கைபட்டு கண்ணாடி உடைந்தது. இந்த நேரத்தில்தான் திடீரென்று, இதுவரையிலே நமக்குத் தெரியாத ஒரு புதுமை நடந்தது. பக்கத்தில் நாற்காலியைக் கொண்டுவந்து போட்டார்கள். பிறகு உதவி சபாநாயகரை நாற்காலிக்குக் கொண்டு வந்தார்கள். நான் அப்பொழுது உதவி சபாநாயகராக இருந்திருந்தால், நான் ஆங்கிலத்தில் சொல்வதைத் தமிழில் மொழி பெயர்த்துச் சொல்கிறேன். ஏன் சொல்கிறேன் என்றால், நான் It is not fair என்று சொன்னதை இது அழகு அல்ல என்று சொன்னதாக எடுத்துக்கொண்டு எங்கள் கட்சிக்கு அழகைக் கற்றுக் கொடுக்க வேண்டியதில்லை என்ற கருத்தில் முதலமைச்சரவர்கள் முன்பு சொன்னார்கள்.

Sometimes I am very diffident about translating English. நான் உதவி சபாநாயகராக இருந்தால் என்று அது ஒரு முறை என்று சொல்கிறேன், நான் கண்டிப்பாக உட்கார்ந்திருக்க மாட்டேன். அதற்குக் காரணம், அந்த சபாநாயகர் ரிமூவல் சம்பந்தமாக அரசியல் சட்டத்தில் என்னென்ன கொடுக்கப் பட்டிருக்கிறதோ அப்படி இருக்க வேண்டும். பதினான்கு நாட்கள் நோட்டீஸ் கொடுக்கப்பட வேண்டுமென்றிருந்தால் 14 நாட்கள் நோட்டீஸ் கொடுக்கப்பட்டு, சபாநாயகர் ரிமூவல் தீர்மானம் உறுப்பினர்கள் யாருக்கும் கொடுக்கப்படவில்லை. அரசியல் சட்டம் தெளிவாகச் சொல்கிறது, 14 நாள் நோட்டீஸ் கொடுக்க வேண்டும் என்று இங்கு கூட நம் விதிகளிலே தீர்மானத்தை சர்குலேட் செய்ய வேண்டும் என்று இருக்கிறது.

According to the rules, I must be given notice and that is a right conferred upon me. By saying that a date will be fixed by the Hon. the Leader of the House or the Speaker will then indicate the date, a Member's right is restricted.

அப்படி ரெஸ்ட்ரிக்ட் செய்திருக்கிறது. அதைக்கூட, பிறகு 'அஃபிஷியல் ரிப்போர்ட்டை'-ப் பார்த்தேன். நம்முடைய லீடர் ஆஃப் தி ஹவுஸ் எழுந்து அந்த விதியைக்கூட, [illegible]

அரசியல் சட்டத்திலே இருக்க வேண்டுமென்று இருக்கிறதோ அதுகூட வேண்டாமென்ற நிலையில் அவரை உட்கார வைத்து நடந்த சம்பவம் வருந்தத்தக்க சம்பவம்.

இன்று வரையிலும் ஆளும் கட்சியில் இருக்கக்கூடிய ஆளும் கட்சித் தலைவரோ, அல்லது முதலமைச்சரோ அல்லது பொறுப்பிலுள்ள யாருமோ அந்தச் சம்பவத்திற்கு வருத்தம் தெரிவித்ததாகத் தெரியவில்லை. அந்தச் சம்பவம் எவ்வளவு மோசமான முறையில் நடந்தது, மைக் நிறுத்தப்பட்டது என்பவை பற்றியெல்லாம் அன்றைக்கு பி.பி.சி.-யில் கூடச் சொன்னார்கள். 'இதுவரையில் உலகத்தில் நடக்காத அதிசயம் இந்தியாவில் தென்கோடியில் நடந்தது; சட்ட மன்றத்தில் ஒரே சமயத்தில் இரண்டு கூட்டங்கள் நடந்தன' என்று இலண்டன் பி.பி.சி.-யில் சொன்னார்கள். அன்றைக்கு 1½ மணியோடு சபை முடிந்ததா என்றால் இல்லை. இரண்டு மணிக்குப் பிறகும் பேசினார்கள். அன்று இங்கிருக்கக் கூடிய எதிர்க்கட்சிகள்—எங்கள் கட்சி, அண்ணா திராவிட முன்னேற்றக் கழகம், ஸ்தாபன காங்கிரஸ், ஆளும் காங்கிரஸ், சுதந்திரக் கட்சி ஆகிய ஐந்து கட்சிகளைச் சேர்ந்த உறுப்பினர்களும் வெளியே சென்றோம். ஜனநாயகத்திற்கு விரோதமாக நடந்தது, அரசியல் சட்டத்திற்கு விரோதமாக நடந்தது என்று அறிக்கை விட்டு அடுத்த 4-ம் தேதி எல்லாக் கட்சிகளைச் சேர்ந்தவர்களும் சபையைப் பகிஷ்கரித்தோம். எதற்காக இதை எல்லாம் சொல்லுகிறேன் என்றால் சட்ட விரோதமாக அன்றைக்குச் சபையை நடத்துவதற்குக் காரண கர்த்தாவாக, இன்றைக்கு உதவி சபாநாயகராக இருப்பவர், இருந்தார் என்பதுதான் என்னுடைய குற்றச்சாட்டு. நடந்த சம்பவங்களைப் பின்னால் ரெக்டிஃபை பண்ணி இருக்கலாம்.

When a person who has to control the proceedings, if he takes a position of no return, then where is the protection to the House?

மறுநாளாவது உதவி சபாநாயகராக இருப்பவர் வெளியே சென்றிருக்கக் கூடிய கட்சிகளை அழைத்தாரா? அந்தக் கட்சிகள் இங்கு வராமல் போனாலும் பிசினஸ் அட்வைசரி கமிட்டிக்காவது அழைத்தாரா? பார்ட்டிஸான் முறையிலே—அப்படிக் கூடச் சொல்ல முடியாது. ஒரு வெறுப்பை மனத்திலே கொண்டு எதிர்க்கட்சியினர் எல்லாம் எதிரிகள்—எனிமீஸ் என்ற





எண்ணத்திலே செயல்பட்டார்கள். நாங்கள் தேர்தல் காலத்திலே உடன்பாடு ஏற்பட்டு ஜெயித்திருக்கலாம். ஆனால் நான் இங்கே—

But I am here in my own right not at the mercy of Government or Deputy Speaker or Speaker.

இங்கே வந்து உட்கார்ந்திருக்கும்போது எனக்குப் பாதுகாப்புக் கொடுக்கப்பட வேண்டும். நாங்கள் ப்ரொட்டெஸ்ட் பண்ணி வெளியே சென்றிருந்தாலும் ஏன் வெளியே சென்றீர்கள் என்று கேட்கவேண்டியவர் டெபுடி ஸ்பீக்கராக இருந்தால் அவருக்கு சிறு வயதாக இருக்கலாம். ஆனால் இந்தப் பண்புகள் எல்லாம் அவருக்குத் தெரிந்திருக்க வேண்டும்.

**மாண்புமிகு மாற்றுத் தலைவர் (திரு. பழனிவேல்ராஜன்) :** எங்கே கேட்க வேண்டுமென்று சொல்லுகிறீர்கள்?

61590

**திரு. கே. டி. கே. தங்கமணி :** Deputy Speaker can always communicate to leaders. If communication has been sent to Leaders of opposition parties and if he had sent the communication, I would have been thankful.

ஏன் நீங்கள் பகிஷ்காரம் செய்கிறீர்கள் என்று கம்யூனிகேஷன் அனுப்பக் கூடாதா? பிசினஸ் அட்வைசரி கமிட்டி கூட்டத்திற்குக் கூட அழைப்பு கிடையாது. எங்களை ஹவுஸை விட்டு வெளியேற்றி விட்டீர்களா? அந்த முறையில் அன்று நடந்த சம்பவம் மிகமிக மோசமான முறையில் நடந்த சம்பவமாக ஆகிவிட்டது.

இன்னொரு விஷயம். பல பிரிவிலேஜ் மோஷன்கள் கொடுத்திருந்தேன். 13-ம் தேதியன்று எந்த வெளியாட்களும் அனுமதிக்கப்படவில்லை. நாடாளுமன்ற உறுப்பினர்களும், மேலவை உறுப்பினர்களும் மட்டும்தான் இருந்தார்கள். அன்றைக்கு டென்ஸ் சிச்சுவேஷன் இருந்தது. சபாநாயகர் சபையை ஒத்திவைத்து விட்டார். ஒத்தி வைத்த பிறகு நாங்கள் வெளியே சென்றோம். வெளியே போகிறபோது—அவர் மேலவை உறுப்பினராக இருக்கலாம்; இந்தப் பேரவையைப் பொறுத்தவரை அவர் வெளியார் தான் 'இன் தி பிரிசிங்ட்ஸ் ஆப் தி ஹவுஸ்' அவர் வெளியார்தான். அவர் வெளியே போகிற எங்களை 'த்ரொட்டன்' பண்ணினார். அந்த மேலவை உறுப்பினர் ரொம்பக் கேவலமான முறையில் ஏசி சத்தம் போட்டார். நம்முடைய சீஃப் மினிஸ்டர் பி.ஏ. அவரை இழுத்துக் கொண்டு போகவேண்டி வந்தது.

[திரு. கே. டி. கே. தங்கமணி] [1973 பிப்ரவரி 5

அப்போது உடல் நலம் குன்றி இருந்த மனைவி கந்தசாமி 'உதைத்துவிடுவார் போலிருக்கிறதே' என்று பயப்பட வேண்டியிருந்தது. அவைக்கு ஒரு விசிட்டராக வந்திருக்கக் கூடியவர் இங்கிருக்கக்கூடிய உறுப்பினர்களை மிரட்டுவது, தாக்குவது எவ்வளவு பெரிய மோசமான விஷயம் என்பதைப் பற்றி ப்ரிவிலெஜ் மோஷன் கொடுத்திருந்தேன். அந்தப் பிரிவிலெஜ் மோஷன் என்ன ஆயிற்று என்று தெரியவில்லை. எடுத்துக் கொள்வதற்கான எந்த முயற்சியும் இல்லை. அதே மாதிரி 13-ம் தேதி சட்டமன்றம் கூடுவதற்கு முன்னால் பத்திரிகையாளர்கள் முதலமைச்சரைக் கேட்டிருக்கிறார்கள், அதற்கு நமது முதலமைச்சர் அவர்கள் கூறுகிறார்கள்—

"அமளி துமளி எதுவும் நடக்காது என்று கருதுகிறேன். அது சட்ட ரீதியாக நடந்தாலும்—எந்த ரீதியாக நடந்தாலும் அதைச் சமாளிக்கும் உறுதியும் நம்பிக்கையும் ஆளும் கட்சிக்கு உண்டு"

என்று முதலமைச்சர் அவர்கள் பத்திரிகை நிருபர்களுக்குச் சொன்னார்கள்.

12—11—72 வெளியூர் 13—11—72 முரசொலியில் இது வந்திருக்கிறது.

சபையில் இருக்கக்கூடியவர்களை மிரட்டக்கூடிய முறையில் சபைக்குப் பாதுகாப்புக் கொடுக்க வேண்டிய முதலமைச்சர் குறிப்பிட்டிருக்கிறார்.

It is a clear case of privilege.

சீஃப் மினிஸ்டர் பேரிலேயே இரண்டு, மூன்று ப்ரிவிலேஜ் மோஷன்கள் கொடுத்திருக்கிறேன். அன்றைக்குப் பூராவும் முரசொலி பத்திரிகையில் வந்த செய்தியை வைத்துத்தான் கொடுத்திருக்கிறேன். மற்றப் பத்திரிகைகளில் வந்தால் காரணங்களைச் சொல்லலாம். முரசொலி பத்திரிகை ஆளும் கட்சிக்குச் சாதகமான பத்திரிகை. ஆளும் கட்சியின் முக்கியமான தலைவர் ஒருவர் ஆசிரியராக இருக்கிறார். அதற்கு முன்னால் முதல்வரே ஆசிரியராக இருந்த பத்திரிகை. அந்தப் பத்திரிகையில் வந்த செய்தியை வைத்து ஒரு பிரிவிலெஜ் மோஷன் கொடுத்திருக்கிறேன். Your privilege motion has been disallowed. என்று எழுதியிருக்கிறார்கள்.



1973 பிப்ரவரி 5]

**திரு. நா. வீராசாமி:** பாயிண்ட் ஆப் ஆர்டர், சார் ப்ரிவிலெஜ் மோஷன்கள் சபாநாயகரிடம் கொடுத்த பிறகு, அதை எடுத்துக் கொள்வதா இல்லையா என்பது அறையிலே சபாநாயகரால் தீர்மானிக்கப்படுகிறது. இப்போது துணைச் சபாநாயகர் மீது நம்பிக்கை இல்லை என்ற தீர்மானத்தின் மீது பேசும்போது அந்த பிரிவிலேஜ் மோஷன்களைப் பற்றியெல்லாம் பேசுவது முறைதானா, விதி முறைகளுக்கு உட்பட்டதா என்பதைப் பற்றி தலைவர் அவர்கள் தீர்ப்பளிக்க வேண்டுமென்று கேட்டுக் கொள்கிறேன்.

மாண்புமிகு மாற்றுத் தலைவர் (திரு. பழனிவேல் ராஜன்): அதிகாரபூர்வமான நடவடிக்கைகள் பற்றி இங்கு பேசுவதில் தவறு இல்லை என்று தீர்ப்புக் கூறுகிறேன்.

**திரு. கே. டி. கே. தங்கமணி:** டெபுடி ஸ்பீக்கர் மேல் நம்பிக்கையில்லாத் தீர்மானம் வந்திருப்பதால் இதெல்லாம் அம்பலத்திற்கு வருகிறது.

THIRU M. A. LATHEEF : The contention of MR Veerasami is this. A privilege motion has been given against certain persons viz. one person not being a member of the House and some persons who are members of this House. Now the hon. Member Thiru K. T. K. Thangamani is certainly entitled to say that he has given certain notices of privilege to the Deputy Speaker long before but they had not been taken up on some grounds or attribute some motives to the Deputy Speaker; to that extent he is entitled to make a charge against the Deputy Speaker. But to reveal the contents of privilege motions which have not been admitted by the Deputy Speaker would be risky. The Deputy Speaker has already said that it would be discussed in his Chamber. In these circumstances if the contents of the privilege motions are revealed during the course of the deliberations on the removal of Deputy Speaker, I submit that it is not within the ambit of parliamentary procedure and I am afraid that the hon. Member Thiru K. T. K. Thangamani is transgressing the limit especially when the Chair himself has given a specific ruling so far as this point is concerned.

MR. CHAIRMAN (THIRU PALANIVEL RAJAN): I have permitted the hon. Member Thiru K. T. K. Thangamani to refer only to one privilege motion for which the hon. Deputy Speaker has not given permission. I now give a specific ruling

that the hon. Member Thiru K. T. K. Thangamani should not raise privilege issues which have not been decided by the Hon. Deputy Speaker.

THIRU K. T. K. THANGAMANI : I have got half a dozen motions which have been disallowed by the Hon. Deputy Speaker. I am not referring to those which have been disallowed.

MR. CHAIRMAN (THIRU PALANIVEL RAJAN) : Please do not refer to issues which are still pending decision with the Deputy Speaker.

THIRU K. T. K. THANGAMANI : I am much obliged. The privilege motion which I referred to is the first for which I had given notice and which has been disallowed.

அதேமாதிரி ஹைகோர்ட்டில் விவாதம் நடக்கிறபோது அந்த விவாதத்தில்

I know certain protection is given to the advocates. ஆனால் அவர்களும் எல்லை மீறிப் போக முடியாது; எம். கே. நம்பியார் அவர்கள்

'Referring to the adjournment of the House on 13th November 1972 by the Speaker, he is alleged to have said the following :—

The adjournment was made by the Speaker in "furtherance of some ulterior adventure". There must be some "ulterior consultations" and the adjournment was "deliberately made".'

என்று பத்திரிக்கையில் செய்தி வந்திருக்கிறது. இதை எடுத்துக் குறிப்பிட்டு

'There was some "motive" for adjournment . . . What happened was only an eye-wash. The adjournment was a device adopted for something else. It was made to gain time for more defection. The adjournment was a pretence "with some ulterior purpose". It was done "with ulterior purpose".'

This is calling in question the proceedings in the House. This occurred recently and there is *prima facie* case for breach of privilege.

என்று எழுதியனுப்பி இருந்தேன். அதுவும் ரிஜெக்ட் செய்யப்பட்டது. சில முக்கியமான விஷயங்களைப் பற்றி மட்டும்



சொல்கிறேன். நம்முடைய சபையில் நடந்த விஷயங்களைப் பற்றி வெளியில் சபையில் நடந்ததைப் பற்றிக் கேவலமாகவோ அல்லது சபையில் பேசுகிறவர்களை மிரட்டக்கூடிய முறையிலோ . . .

**மாண்புமிகு மாற்றுத் தலைவர் (திரு. பழனிவேல் ராஜன்):** சபையில் நடந்த விஷயங்களைப் பற்றி வெளியில் விமர்சனம் செய்வது சரியல்ல என்பதை ஏற்றுக்கொள்கிறேன். ஆனால், உறுப்பினர் அவர்கள் நீதிமன்றத்தில் வழக்கு போட்டால் அதற்கு எதிர்வாதம் செய்வதற்கு வழக்கறிஞர்கள் போகத்தான் வேண்டும். எப்படி இந்த மன்றத்தில் இம்மன்ற உறுப்பினர்களுக்கு உரிமை இருக்கிறதோ அதேபோல் அங்கு நீதிமன்றத்திலும் நம் முதல் அமைச்சர் அவர்கள் சார்பில் அல்லது மற்றவர்கள் சார்பில் வழக்கறிஞர்கள் ஆஜரானால், நிச்சயமாக அவர்களுக்கும் சில உரிமைகள் உண்டு. அந்த உரிமையைப் பறிக்க நமக்கு அதிகாரம் இல்லை என்று கூறிக் கொள்கிறேன்.

**திரு. கே. டி. கே. தங்கமணி :** அதேமாதிரி சீப் மினிஸ்டர் பேரில் இரண்டு மூன்று விஷயங்கள் உள்ளன. அவற்றின் விவரங்களுக்குள் நான் போகவில்லை. சீப் மினிஸ்டர் பேரில் கொடுத்த நான்கு ப்ரிவிலேஜ் மோஷன்களில், குறிப்பாக அட்வொகேட் பேரில் கொடுத்த ப்ரிவிலேஜ் மோஷனின் பேரிலும் எந்தவிதக் காரணமும் இல்லாமல்—நான் ப்ரிவிலேஜ் மோஷன் கொடுத்துவிட்டு ஸ்பீக்கர் ரூமிற்குச் சென்று பேச வேண்டுமா என்று எனக்குத் தெரியாது. சாதாரணமாக ஒரு ப்ரிவிலேஜ் மோஷனிற்கு நோட்டீஸ் கொடுத்தாகிவிட்டது என்றால் சந்தேகம் இருந்தது என்றால் என்னைக் கூப்பிட்டுக் கேட்பார்கள். ப்ரிவிலேஜ் மோஷனிற்கு நோட்டீஸ் கொடுத்துவிட்டு அவர் பின்னால் அவர் ரூமிற்குப் போய் நான் நோட்டீஸ் கொடுத்திருக்கிறேன், எப்படியாவது அதைக் கொண்டு வாருங்கள் என்று போய் கேட்கவேண்டியதில்லை என்று நினைக்கிறேன். விதிப்படி கொடுத்திருக்கிறேன். முறைப்படி ப்ரிவிலேஜ் மோஷன் தயாரித்து விதிப்படி கொடுத்திருக்கிறேன். இதற்கப்பாற்பட்டு ஏதாவது இருக்கிறதா பாருங்கள் என்று கேட்போம். சந்தேகம் இருந்தால் கூப்பிட்டுக் கேட்பார்கள்.

MR. CHAIRMAN (THIRU PALANIVEL RAJAN) : He has given the decision.

THIRU K. T. K. THANGAMANI : He has given the decision, but I say that it is arbitrary.

அவ்வளவு காஷுவலாக எடுத்திருக்கிறார்கள். Privilege motion is an important issue.

ஒரு ப்ரிவிலேஜ் இஷ்யூ-வைக் கிளப்புகிறோம் என்றால் சபை பூராவையும் பாதுகாக்க வேண்டுமென்ற நோக்கத்தோடுதான் ப்ரிவிலேஜ் மோஷன் கொடுக்கப்படுகிறதே தவிர என்னை யாரோ தாக்கிவிட்டார்கள் என்பதற்காக அல்ல. என்னை ஒருவர் தாக்கலாம், அதேமாதிரி தாக்குதல் மற்றவர்களுக்கு வரக்கூடாது ; மேலும் இங்கு அழுத்தமாகவும் தைரியமாகவும் பேசுவதற்கு தடை செய்யும் அளவில் வெளியிலே யாரும் மிரட்டக் கூடாது என்பதற்காக . . .

I do not know whether I have made my point clear.

சமீபத்தில் கூட க்ளேஸ் ஹாஸ்டலில் நடந்த சம்பவம் பற்றி ஒரு ப்ரிவிலேஜ் மோஷன் குறித்து நோட்டீஸ் கொடுத்திருந்தேன். முதல் அமைச்சர் அவர்கள் கொடுத்த அறிக்கைக்கு மறுநாள் அந்த அறிக்கைக்கு மாறாக அங்கிருந்த ஹெட் மாஸ்டரும், ப்ரின்ஸிப்பாலும் கொடுத்த அறிக்கை இருக்கிறது என்று ப்ரிவிலேஜ் மோஷன் கொடுத்தேன். இரண்டு அறிக்கைகள் இருக்கின்றன. அதைப்பற்றி எந்தவிதமான விவாதமும் நடத்த சந்தர்ப்பம் கொடுக்காத அளவிற்கு டெபுடி ஸ்பீக்கர் அதை ரிஜெக்ட் செய்து விட்டார்கள் என்பதையும் தெரிவித்துக் கொள்கிறேன். இன்னொரு விஷயம். ஒரு நம்பிக்கையில்லாத் தீர்மானம் கொடுத்திருக்கிறேன். ஏற்கனவே ஆரம்பிக்கிறபோதே சொன்னேன். இரண்டாம் தேதி அன்று ஒரு நம்பிக்கையில்லாத் தீர்மானம் கொடுத்திருந்தோம், ஐந்து பேர்கள் கொடுத்திருந்தோம். நான் கொடுத்திருந்த தீர்மானத்தின் வாசகம் இது.

'This House expresses its disapproval of the policy of the Government in tackling the demand for Enquiry Commission and stepping down of the Ministry through the action of the Ministers and their utterances in public since 8th October 1972 leading to deterioration in the law and order situation causing fear in the minds of the people about safety to peace and property.'

**இதுதான் நான் கொடுத்திருந்த நம்பிக்கையில்லாத் தீர்மானம். இந்த நம்பிக்கையில்லாத் தீர்மானம் ரொம்ப நாட்களுக்கு முன்பே**



கொடுக்கப்பட்டது. அப்படி கொடுக்கப்பட்ட பிறகு எனக்கு கடிதம் வருகிறது. டெபுடி ஸ்பீக்கர் என்ன எழுதுகிறார் என்றால் உங்கள் நம்பிக்கையில்லாத் தீர்மானத்தை எடுத்துக்கொள்ளவில்லை, காரணம் என்னவென்று சொன்னால் ஒரு நம்பிக்கைத் தீர்மானத்தை முதல் அமைச்சர் அவர்கள் இங்கு கொண்டு வந்துவிட்டார்கள், நம்பிக்கைத் தீர்மானம் என்றாலும் நம்பிக்கையில்லாத் தீர்மானம் என்றாலும் ஒன்றுதானே, அந்த நம்பிக்கைத் தீர்மானம் வந்து முடிந்துவிட்ட காரணத்தினால் உங்களுடைய நம்பிக்கையில்லாத் தீர்மானத்தை எடுக்கவில்லை என்று சொல்லியிருக்கிறார்கள். நான் அறிய விரும்புவது, இந்த நம்பிக்கையில்லாத் தீர்மானத்தை எப்போது கொடுத்தோம், நம்பிக்கைத் தீர்மானம் எப்போது வந்தது என்பதாகும். நம்பிக்கையில்லாத் தீர்மானம் கொடுத்து ரொம்ப நாளைக்குப் பிறகுதான் இந்த நம்பிக்கைத் தீர்மானமே கொடுக்கப்பட்டிருக்கிறது. அதற்கு ஒரு பெரிய வியாக்கியானத்தை நம் செயலாளர் அனுப்பியிருக்கிறார்— ஸ்பீக்கர் அனுப்பினார்—செயலாளர் அனுப்பினால் ஸ்பீக்கர் அனுப்பியதுபோல்தான். நம் செயலாளரைப் பற்றி நான் கொஞ்சம் சொல்லத்தான் வேண்டும். இங்கு சபையில் சபாநாயகர் அவர்களையும் உறுப்பினர்களையும் பாதுகாக்க வேண்டிய பொறுப்பு அல்லது அவர்களுக்கு ஆதரவு கொடுக்க வேண்டிய பொறுப்பு செயலாளருடையது. செயலாளர் திடீரென்று முதல் அமைச்சரின் செயலாளராக மாறிவிட்டார்.

I am making that charge definitely and deliberately.

MR. CHAIRMAN (THIRU PALANIVEL RAJAN) : I particularly appeal to the hon. Member not to make remarks against the staff for the simple reason that they have no right to reply. After all, they are all silent witnesses to what is happening in the Assembly. I would invite the attention of the hon. Member to the fact that though they are under the administrative control of the Speaker they are the servants of the House. As a matter of fact, the hon. Member, Thiru Thangamani knows that the Secretary in the British Parliament is called 'Clerk of the House'. So, I would request the hon. Member only to refer to the Deputy Speaker and other persons who have got the right of reply.

**THIRU K. T. K. THANGAMANI : But what has happened? Here is the letter received from the Secretary signed by him.**

The letter runs as follows:—

'I am directed to inform you that the question involved in a "Motion of Confidence" or a "Motion of No Confidence" is substantially the same, namely, whether or not the Council of Ministers commands the confidence of the majority of members of the Assembly, and therefore, when the majority of members of the Assembly have recorded a decision on a "Motion of Confidance" then a "Motion of No Confidence" in the same session is not admissible in terms of the provisions of Rule 72, inasmuch as the question raised in such a "Motion of No Confidence" is the same as whether or not the Ministry commands the confidence of the majority of the members in the Assembly. I am also to add that though you tabled the "Motion of No Confidence" you were not present in the House to ask for leave to move the motion. Hence, the "No Confidence Motion" given notice of by you was disallowed.

**மாண்புமிகு மாற்றுத் தலைவர் (திரு. பழனிவேல் ராஜன்):** *நீங்களே அந்தக் கடிதத்தைப் படிக்கும்போது* I am directed *என்று படித்தீர்கள். செயலாளர் அவர்களின் கடிதத்தைப் படிக்கும்போது* I am directed *என்று படித்தீர்கள். மேலே ஒருவர் சொல்லி அவர்கள் எழுதியிருக்கிறார்கள். ஆகவே, துணைச் சபாநாயகர் அல்லது சபாநாயகரைப் பற்றிச் சொல்லலாமே தவிர இங்கு வேலை பார்க்கிற அதிகாரிகளைப்பற்றிச் சொல்லக் கூடாது.*

**திரு. கே. டி. கே. தங்கமணி:** *இரண்டாம் தேதி நடந்ததைப் பற்றிச் சொல்லாமல் போனால்* the picture will not be complete. I have nothing against him. But at least in the Lok Sabha I have never seen the Prime Minister sending for the Secretary. I have not seen the Secretary speaking to the Prime Minister. But here novel things are happening. Thiru Natarajan may be the Secretary to-day and tomorrow somebody may come. But he must be under the control of whoever presides so that the interests of the Members will be protected.

MR. CHAIRMAN (THIRU PALANIVEL RAJAN): The point for discussion now is whether the Speaker or any person can act in his individual capacity or according to the wishes of the majority of the House. The hon. Member need not drag the Secretary in this discussion.



THIRU K. T. K. THANGAMANI: I may say that our Deputy Speaker has made the Secretary function as Secretary to the Chief Minister. I can put it that way.

THIRU M. A. LATHEEF: On a point of order, Sir.

THIRU K. T. K. THANGAMANI: I will conclude shortly.

MR. CHAIRMAN (THIRU PALANIVEL RAJAN): If the point of order is about something in your speech, you must allow him. He may object to something. He may be allowed one or two minutes. I shall give you that one or two minutes extra for you. You yourself said that when a member raises a point of order, it is his democratic right. You should not accuse me later on that I am preventing persons from exercising that right. So, let Thiru M. A. Latheef raise his point of order.

THIRU K. T. K. THANGAMANI: It is a guideline for us. We will try to use it when others are speaking.

THIRU M. A. LATHEEF: It is not within the right of the hon. Member to make charges against the Deputy Speaker, especially when a removal motion against the Deputy Speaker is before the House, that the Deputy Speaker has allowed a responsible officer of this House to function not as an officer of the House but as a servant of a particular individual. Such a thing is out of reason and should not be accepted by this House. Casting an aspersion against a person who is responsible for the executive activities of this House is not proper and so it should be expunged.

MR. CHAIRMAN (THIRU PALANIVEL RAJAN): I may tell the hon. Member that Thiru K. T. K. Thangamani is not making the charge against the Secretary but saying that he had acted on the directive of the Deputy Speaker. The Deputy Speaker is going to be allowed by me to reply to the discussion. So, I do not think it need be expunged.

THIRU M. A. LATHEEF: Even though the hon. Member is saying that it had been done on the directive of Deputy Speaker, yet he is making a charge directly against an officer of the House. To say that the Secretary converted himself to be cowed down or act according to the discretion of a particular individual in the discharge of his official duties is casting aspersion on an officer of

the House. There is no difference between direct and indirect observation. He has directly hit against a responsible officer of the House and I, as a responsible Member of the House, take strong exception to it. I submit that in the interest of healthy democracy, it should be expunged.

MR. CHAIRMAN (THIRU PALANIVEL RAJAN): I have permitted the hon. Member to make an indirect reference for the simple reason that the Deputy Speaker and the Hon. Leader of the House are going to reply to the debate.

THIRU K. T. K. THANGAMANI: I think I need not get instruction of how to make a speech.

MR. CHAIRMAN (THIRU PALANIVEL RAJAN): That you should not object.

THIRU K. T. K. THANGAMANI: I now conclude, Sir.

* திரு. ஏ. ஆர். மாரிமுத்து : மதிப்பிற்குரிய தலைவரவர்களே, இன்றையதினம் சபையிலே இந்த அவையின் உதவித் தலைவரை பதவியிலிருந்து விலக்கவேண்டுமென்ற தீர்மானத்தைப் பற்றி விவாதிக்கின்ற நேரத்தில் என்னுடைய கருத்தைச் சொல்ல விரும்புகிறேன். இந்த அவையிலே உள்ள உறுப்பினர்கள் அனைவருக்கும் அவர்களுடைய கருத்துக்களை எடுத்துச் சொல்வதற்கு உரிமை உண்டு என்பதை எல்லோரும் ஒப்புக் கொள்வார்கள் என்று நான் நம்புகிறேன்.

டிசம்பர் 2-ம் தேதி நடந்த சம்பவம் தான் இந்தத் தீர்மானத்தை இந்த அவையிலே விவாதிப்பதற்கான ஒரு சூழ்நிலையை ஏற்படுத்தி இருக்கின்றது. அதன் அடிப்படையிலே தான் இன்றையதினம் நாம் இதைப்பற்றி விவாதிப்பதற்கு அனுமதித்து இருக்கிறோம். டிசம்பர் 2-ம் தேதி அன்று சபை தொடங்கி அலுவல்கள் நடந்து கொண்டிருந்தபோது திடீரென்று எதிர்க்கட்சியில் பேசிக் கொண்டிருந்தவர்களுடைய ஒலிபெருக்கி நிறுத்தப்பட்டு, வேறு ஒரு சபை இந்த அவையிலே நடந்தது என்பதை அனைவரும் அறிவர். அது வெளியே உள்ளவர்களுக்கும் தெரியும். அன்றைய தினம் நடைபெற்ற இந்த அவை நடவடிக்கை குறிப்புகளை பார்க்கிறபோது அம்மாதிரி இரண்டு அவைகள் நடந்ததாக இல்லவே இல்லை. ஆனால் அப்படி நடந்தது என்பது உண்மை.



அதை யாரும் மறுக்க முடியாது. அப்படி நடப்பதற்குக் காரணமாக இந்த அவையின் உதவித் தலைவர் இருந்தார் என்ற காரணத்திற்காகத்தான் அவர் பேரிலே இந்தத் தீர்மானத்தைக் கொண்டு வந்திருக்கிறோம்.

சாதாரணமாக ஒரு அவைத் தலைவரையோ அல்லது உதவித் தலைவரையோ நினைத்தபோதெல்லாம் மாற்றுவதற்கு, வெளியேற்றுவதற்கு தீர்மானங்கள் கொண்டுவரப்படுவது இல்லை. இந்த அவையிலே இதுதான் முதல் தடவை என்று கருதுகிறேன். 2-ம் தேதி நடந்த சம்பவம்—முன்னாலே பேசிய மதிப்பிற்குரிய கே. டி. கே. தங்கமணி குறிப்பிட்டது போல்—உலகத்திலே உள்ள பாராளுமன்றங்கள் எதிலுமே நடைபெற்று இராத ஒரு சம்பவம்.

இந்த அவைத் தலைவராக இருந்த மதிப்பிற்குரிய மதியழகன் அவர்களை அவைத்தலைவர் பதவியிலிருந்து வெளியேற்றுவதற்காக இந்த அவையிலுள்ள உறுப்பினர்களுக்கு தீர்மானம் கொண்டு வருவதற்கு உரிமை உண்டு. அதை மறுப்பதற்கோ அல்லது கூடாது என்று கூறுவதற்கோ யாருக்குமே தனியான உரிமை கிடையாது. அதை முடிவு செய்ய வேண்டியது இந்த அவை தான். 182 பேர் இந்த அவைத்தலைவர் வெளியேற வேண்டுமென்று விரும்புகிறபோது அவர் எப்படியிருக்க முடியும் என்ற வாதத்தைக் கிளப்பலாம். ஆனால் நான் சொல்வது 182 பேர் சேர்ந்து அவர் தலைவராக இருக்கக்கூடாது என்று சொல்வதை, குறைந்த எண்ணிக்கையில் உள்ள உறுப்பினர்கள் எப்படி மாற்றி, அவரே தலைவராக இருக்க வேண்டுமென்று கூற முடியும்? அந்த உரிமை எதிர்த்தரப்பில் இருக்கும் எங்களுக்குக் கிடையாது. அவர் தலைவராக நீண்டகாலம் இருக்கவேண்டுமென்று நாங்கள் விரும்பவும் இல்லை. நீங்கள் கொண்டு வந்த தீர்மானத்தை இந்த அவை நிறைவேற்றினால் அவர் வெளியேற வேண்டியதுதான். அதிலே உங்களுக்கும், எங்களுக்கும் எந்த விதமான கருத்து வேறுபாடும் கிடையாது.

ஆனால், அவரை வெளியேற்றுவதற்கு எடுத்துக்கொண்ட புரொசிஜர் அந்த முறை தவறானது என்பது தான் என்னுடைய வாதமே தவிர அவரை எப்படி நீங்கள் அவைத்தலைவர் பதவியிலிருந்து விலக்கலாம் என்பது அல்ல. அவைத் தலைவராக இருக்கின்றவர் பேரிலே விலகவேண்டுமென்று ஒரு தீர்மானத்

வருமானால், அதற்கு ஒரு தேதி குறிப்பிட்டு, அந்தக் குறிப்பிட்டத் தேதியில் வேறு ஒருவர் அந்த இடத்திலே உட்கார்ந்து அந்தத் தீர்மானத்தை நிறைவேற்றுவதற்கான நிலை விதிமுறைகளில் இருக்கிறது. அன்றையதினம் 2-ம் தேதி அவை நடந்து கொண்டு இருந்தபோது, அவர் அரசின் பேரில் கொண்டு வரப்பட்ட நம்பிக்கை இல்லாத் தீர்மானத்தை இந்தச் சபை விவாதிக்க வேண்டுமென்று கூறுவதற்கு முன்பாக, அவர் பேரில் வந்திருக்கும் தீர்மானத்தை அலுவல் ஆய்வுக்குழுவில் வைத்து தேதி குறிப்பிடுகிறேன் என்று குறிப்பிட்டார். அதை இந்த அரசு பொறுத்துக் கொண்டிருக்கலாம். ஏனெனில் பெரும்பான்மையான உறுப்பினர்கள் அவர்கள் பக்கத்தில் இருக்கிறபோது அந்தத் தீர்மானம் ஒன்றும் இல்லாமல் போய்விட முடியாது. அன்றையதினம் நிறைவேற்றப் படலாம், அல்லது 2 தினங்கள் கழித்து நிறைவேற்றப்படலாம். அவசரப்பட்டு ஒரு முறைகேடான செயலை இந்த அவையிலே ஏற்படுத்த வேண்டுமா? இந்தச் சட்டமன்றத்திற்கே ஒரு இழுக்கு ஏற்படும் நிலை 2-ம் தேதி ஏற்பட்டது என்பதை நான் வருத்தத் தோடு குறிப்பிடாமல் இருக்க முடியாது. நாங்கள் வேண்டாம் என்று கூறுகிறபொழுது எப்படி அவர் சபைத் தலைவராக இருக்கலாம், என்று பேசலாம். ஆனால் அதற்கான முறைப்படி அவர்கள் வெளியேற்றப்படவேண்டும். அவ்வளவுதான் என்னைப் பொறுத்த அளவில், என்னுடைய கட்சியைப் பொறுத்த அளவில் நாங்கள் கூறுவது. அவையிலே ஒரு ஜனநாயக அமைப்பு செயல்பட வேண்டும். ஆகையினால் அதற்கான விதிமுறைகளை நிச்சயம் நாம் அனுசரிக்க வேண்டும். விதிமுறைக்குப் புறம்பாக எந்தக் காரியம் நடந்தாலும், அதை யார் செய்தாலும் தவறு தான். உங்கள் கையில் அதிகப்படியான உறுப்பினர்கள் இருக்கிறார்கள் என்ற காரணத்தினால், அவையினுடைய விதிகளுக்குப் புறம்பாக அரசு இயங்குமானால் அது தவறுதான். யார் செய்தாலும் தவறு தவறுதான். ஆகவே, அந்த முறையில் அரசுத் தரப்பிலே மிக மோசமான முறையிலே அன்றையதினம் நடவடிக்கை எடுத்தார்கள் என்பதை நான் வருத்தத்தோடு தெரிவித்துக்கொள்கிறேன். அவைத் தலைவராக இருந்த மதிப்பிற்குரிய மதியழகன் அவர்கள் இந்த அரசின் பேரில் கொண்டு வரப்பட்ட நம்பிக்கையின்மை தீர்மானத்தின் மீது பேசுவதற்கு மதிப்பிற்குரிய இந்தச் சட்டப் பேரவை உறுப்பினர் திரு. எம். ஜி. இராமச்சந்திரன் அவர்களைக் கூப்பிட்டு, அவர்கள்



பேச ஆரம்பித்தார்கள். பிறகு இந்தச் சபையிலே அவையின் முதல்வர் மதிப்பிற்குரிய மாண்புமிகு கல்வி அமைச்சர் அவர்கள் இடை மறித்து ஒரு தீர்மானத்தை முன்மொழிந்தார்கள். அப்படி முன்மொழிவது எந்த விதிக்குப் பொருத்தமானது என்பதை என்னால் புரிந்துகொள்ளவே முடியவில்லை. அதே சந்தர்ப்பத்திலே இந்த அவையிலே பேசிக்கொண்டிருந்த உறுப்பினர்களின் ஒலிபெருக்கி துண்டிக்கப்பட்டு, அவர்கள் பேச முடியாமல் தடுக்கப்பட்டது, அன்றைய நடவடிக்கைகளை நாம் கூர்ந்து பார்க்கும்பொழுது முன்கூட்டியே திட்டமிட்டு இம்மாதிரி ஒரு சம்பவம் நடைபெறுவதற்கான முன்ஏற்பாடுகளைச் செய்துகொண்டு ஆளும் கட்சியைச் சார்ந்தவர்கள் இங்கு வந்திருந்தார்கள் என்று தான் நான் முடிவுக்கு வரமுடிகிறது.

எனக்கு முன்னால் பேசிய மதிப்பிற்குரிய உறுப்பினர் திரு. கே. டி. கே. தங்கமணி அவர்கள் குறிப்பிட்டது போல, இந்தச் சட்டப் பேரவையினுடைய அலுவலர்கள் சரியான முறையிலே அவர்களுடைய மனச்சாட்சியோடு இயங்குவதற்கு முடியாமல், இந்தச் சபையின் அவைத்தலைவருக்கு வேண்டிய உதவியைச் செய்ய முடியாமல், ஆளும் கட்சியைச் சார்ந்த அமைச்சர்கள், குறிப்பாக நமது மாண்புமிகு முதல் அமைச்சர் அவர்கள் தான் சொல்வதைக் கேட்கும்படியாக, அவைத்தலைவர் அவர்கள் சொல்வதைக் கேட்காமல், இவர்கள் தங்கள் பக்கம் அரசு சொல்வதைக் கேட்கும்படியான சூழ்நிலை அன்றையதினம் ஏற்பட்டதை நாம் பார்க்கிறோம். அதன் காரணமாக ஒலி பெருக்கியை இயக்கிக்கொண்டிருந்த ஆபரேட்டர் அப்பொழுது பேசிக் கொண்டிருந்த மதிப்பிற்குரிய திரு எம். ஜி. இராமச் சந்திரன் அவர்களுடைய ஒலிபெருக்கியை வேலை செய்யாமல் தடுத்திருக்கிறார்.

அவை முன்னவர் மாண்புமிகு நெடுஞ்செழியன் மதிப்பிற்குரிய உதவித்தலைவர் அவர்கள் தலைமை வகிக்கவேண்டும் என்ற தீர்மானத்தை முன்மொழிந்தபொழுது, அந்தத் தீர்மானத்தை ஆமோதித்தபொழுது யார் தலைவராக இருந்தார் என்பது அந்த நடவடிக்கை குறிப்பில் இல்லவே இல்லை. அந்தத் தீர்மானத்தை முன்மொழிந்த பிறகு, அதை ஆமோதித்த பிறகு தான் டெப்யுடி ஸ்பீக்கர் தலைமை வகிக்க முடியும். ஆனால், அந்தத் தீர்மானத்தை முன்மொழிந்தபொழுது இங்கு அவைத் தலைவராக இருந்தவர்

[திரு. ஏ. ஆர். மாரிமுத்து] [1973 பிப்ரவரி 5

யார்? அந்த அவைத்தலைவர் இந்தச் சபையினுடைய அனுமதியை வாங்கிக்கொடுத்தாரா? இல்லை. தானாக எதேச்சையாக எழும்பி தான் முன்கூட்டியே தயார் செய்து வைத்திருந்த ஒரு ஸ்டேட்மெண்டை இங்கே படித்தார்கள் அவையின் முன்னவர் அவர்கள். படித்தவுடனே டெப்யூடி ஸ்பீக்கர் அவர்கள் போய் அவர்களுடைய நாற்காலியில் உட்கார்ந்தார்கள். இதை இந்தச் சபை அனுமதித்ததா, இந்தத் தீர்மானத்தை இந்தச் சபை ஆமோதிக்கிறதா என்று எந்தத் தலைவர் கேட்டார், அப்பொழுது தலைமை வகித்தவர் யார், எந்தத் தலைவர் சபையின் அனுமதியை வாங்கிக் கொடுத்தார்? எதுவுமே கிடையாது. ஒன்றுமே இல்லை. இது விதிக்கு முரணானது, நடைமுறைக்கு முரணானது என்று சொல்வதைத் தவிர வேறு என்ன சொல்ல முடியும், தயவுசெய்து யோசித்துப் பார்க்க வேண்டும். ஏன் இப்படி அவசரப்பட்டு முறைகேடான காரியங்களைச் செய்ய வேண்டும்? உங்கள் கையில் தான் நிறைய உறுப்பினர்கள் இருக்கிறார்களே? முறைப்படி காரியத்தைச் செய்து அதை நிறைவேற்றி இருக்க முடியுமே? ஏன் அதில் தயக்கம் காட்ட வேண்டும்? ஏன் முறைகேடான முறையில் இயங்க வேண்டும்? அதற்கு நீங்கள் தான் பதில் சொல்ல வேண்டும். இம்மாதிரியான செயல் தங்களிடத்திலே பலம் இருக்கிறது என்ற காரணத்திற்காக ஒரு தரப்பில், ஆட்சியாளர்கள் தரப்பில், ஏற்படுமேயானால், இன்னொரு தரப்பிலும் அந்த முறைகேடான செயல் நடப்பதை யாரும் தடுத்து நிறுத்த முடியாது. ஒன்றினுடைய விளைவுகள் மற்றொரு விளைவை உண்டாக்கும்.

ஆகையினாலே நான் கேட்டுக் கொள்கிறேன், இந்த அவையினுடைய கௌரவம் பாதிக்கப்படாமல் நடக்க வேண்டியதில் ஆட்சித் தரப்பில் இருப்பவர்கள் அதிக அக்கறை காட்டவேண்டும். நடைமுறையிலே இந்த அவையிலே எதிர்த்தரப்பில் இருக்கக் கூடியவர்களுக்கு அதே மாதிரி அக்கறை ஏற்படுத்தக்கூடிய அளவுக்கு இருக்கவேண்டும். இதற்கு மாறாக நமது மதிப்பிற்குரிய உதவித் தலைவர் அவர்கள் இருந்தார் என்பதை அவர் மறுக்க முடியாது.

ஒன்று நான் சொல்ல விரும்புகிறேன். இந்த அவையினுடைய தலைவராக இருந்தாலும், உதவித் தலைவராக இருந்தாலும், அவைத் தலைவராக அல்லது உதவித் தலைவராகத் தேர்ந்தெடுக்கப்பட்ட உடனேயே அவர்கள் கட்சியினுடைய கண்ணோட்டத்தைவிட்டு



1973 பிப்ரவரி 5] [திரு. ஏ. ஆர். மாரிமுத்து]

அவர்கள் எல்லா உறுப்பினர்களுக்கும் பொதுவான தலைவராக
இருக்கவேண்டும். அப்படியிருக்கும்பொழுது, இந்த அவையிலே
இருக்கிற பெரும்பான்மையான கட்சியான முன்னேற்றக்
கழகத்தைச் சார்ந்த அமைச்சர்களோ அல்லது உறுப்பினர்களோ,
யாரோ கூறினார்கள் என்ற காரணத்திற்காக, குறிப்பாக அவை
முன்னவர் மாண்புமிகு கல்வி அமைச்சர் அவர்கள் ஒரு தீர்மானத்
தைப் பிரேரேபித்தார் என்ற ஒரு காரணத்திற்காக உதவித்
தலைவர் அவர்கள் தலைமை தாங்கி இன்னொரு சபை இந்த அவை
யிலே நடத்தினது ரொம்ப வருந்தத்தக்க ஒன்று, கண்டிக்கத்
தக்க ஒன்று.

அடுத்தபடியாக, . . .

(திரு. நா. வீராசாமி தலைமை)

உதவித் தலைவர் அவர்கள் அன்றையதினம் எதிர்தரப்பில் இருப்பவர்களைப் பேச முடியாமல் தடுத்தார்கள். யாரையுமே பேச அனுமதிக்கவில்லை. எதிர் தரப்பிலே யார் என்ன சொன்னார்கள் என்று, நாங்கள் பேசுவதே யார் காதிலும் விழாமல் அரசுத் தரப்பில் இருந்தவர்கள் பேசியபொழுது ஒலிப் பெருக்கியின் வால்யூமை அதிகப்படுத்தி நாங்கள் பேசியது எதுவுமே யார் காதிலும் விழாத அளவுக்கு அன்றைக்கு இந்த அவையிலே ஒரு நிலைமையை ஏற்படுத்தினார்கள். (குறுக்கீடு). வால்யூம் ரொம்ப அதிகப்படுத்தப்பட்டது. நாங்கள் என்ன சத்தம் போட்டாலும், கேட்கவே இல்லை. எங்கள் பக்கத்தில் இருந்தவர்களுடைய காதுகளில் கூட விழ முடியாமல் தடுத்துவிட்டார்கள். இதற்குக் காரண கர்த்தாவாக இருந்தவர் உதவித் தலைவர் அவர்கள் தான். அதே சந்தர்ப்பத்தில் இந்த அவையிலே உதவித் தலைவர் இருந்த பொழுது மற்றொரு பக்கத்தில் ஒரு அவை நடந்து கொண்டிருந்ததே, அதையாவது கட்டுப்படுத்துவதற்கு சக்தி படைத்தவர்களாக அவர்கள் இல்லை. அதை அவர்கள் நிறுத்தி விட முடியவில்லை. இங்கே ஒரு பக்கத்தில் சபை நடக்கிறது, இன்னொரு பக்கத்தில் ஒரு முறைகேடான சபை நடந்து கொண்டிருக்கிறது, அப்படி இன்னொரு சபை நடப்பதை தடுப்பதற்குச் சக்தி அற்ற நிலையில் அவர்கள் இருந்தார்கள். ஆகவே, இந்த நிலையிலே மதிப்பிற்குரிய உதவித் தலைவர் அவர்கள் இந்த

சபையினுடைய பாரம்பரியத்திற்கும், கௌரவத்திற்கும் இழுக்கான முறையில் ஒரு செயலைச் செய்து, எல்லோருக்கும் மன சங்கடமான நிலையை இந்த அவையிலே ஏற்படுத்தியிருக்கிறார்கள்.

ஆகவே, தலைவர் அவர்களே, எந்தக் காரணம் எப்படி இருந்தாலும், முறைகேடான செயல் இந்த அவையிலே நடைபெற்று இந்த அவையினுடைய கௌரவம் பாதிக்கப்படக்கூடிய நிலை ஏற்பட்டதற்கு இந்த அவையினுடைய உதவித் தலைவர் காரணமாக இருந்தார் என்ற காரணத்திற்காக அவர் இந்த அவையின் உதவித் தலைவர் பதவியிலிருந்து நீக்கப்பட வேண்டும், அதற்கு இந்த அவையினுடைய உறுப்பினர்கள் ஆதரவு கொடுக்க வேண்டும் என்று, அவைத்தலைவர் அவர்களே, உங்கள் மூலமாக நான் கேட்டுக்கொண்டு, என்னுடைய உரையை முடிக்கிறேன். வணக்கம்.

* **திரு. கா. வேழவேந்தன் :** மாண்புமிகு சட்டப் பேரவையின் மாற்றுத் தலைவரவர்களே, இங்கே முன்மொழியப்பட்டிருக்கிற, மதிப்பிற்குரிய கே. டி. கே. தங்கமணி அவர்களின் தீர்மானத்தை மிகக் கடுமையாக எதிர்த்து என்னுடைய கருத்துக்களைச் சொல்ல விரும்புகிறேன்.

ஜனநாயகப் பாரம்பரியத்தைப் பற்றி பேசிக்கொண்டிருப்பவர்கள் இன்றையதினம் இந்தத் தீர்மானத்தை . . .

THIRU R. PONNAPPA NADAR: Sir, I would like to raise a point of order. Sir, the proceedings commenced with the Hon. Member Thiru Pazhanivelrajan as Chairman and now there is a change and suddenly you, Mr. Chairman, have taken the Chair. True it is, you are one of the hon. Members who have been empanelled as Chairman. But whether it would be in order when the proceedings are going on that there should be so frequent changes like this. That is the point I would like you to give a ruling from the Chair, Sir.

**மாண்புமிகு மாற்றுத் தலைவர் (திரு. நா. வீராசாமி) :** திரு. பொன்னப்ப நாடார் அவர்கள் ஒரு பாயின்ட் ஆஃப் ஆர்டரை இங்கே எழுப்பி, வேறொரு மாற்றுத் தலைவர் தலைமை வகிக்கலாமா என்று கேட்கிறார்கள். இந்த விவாதத்தை ஆரம்பிப்பதற்கு முன்னால் 'பானல் ஆஃப் சேர்மென்' அறிவிக்கப்பட்டிருக்கிறது.





அந்தப் பட்டியலில் அறிவிக்கப்பட்டவர்கள் பேரவையில் தலைமை தாங்கி நடத்த அனுமதிக்கப்பட்டிருக்கிறார்கள். நம்முடைய சட்டமன்ற விதி 6 (1)-ன் படி

"At the commencement of every session or from time to time, as the case may be, the Speaker may nominate from amongst the members of the Assembly a panel of not more than six Chairmen any one of whom may preside over the Assembly in the absence of the Speaker and the Deputy Speaker when so requested by the Speaker or in his absence by the Deputy Speaker or in his absence also by the Chairman presiding: . . ."

THIRU R. PONNAPPA NADAR: So, it is one among the panel. Thank you, Sir.

* **திரு. கா. வேழவேந்தன் :** தலைவரவர்களே, நான் இந்தத் தீர்மானத்தைக் கடுமையாக எதிர்த்துக் கூறுவதற்கான காரண காரியங்களை முதலிலே சொல்ல விரும்புகிறேன்.

எந்தக் கட்சிக்காரர்கள் ஜனநாயகத்தைப் பற்றிப் பேசிக் கொண்டிருக்கிறார்களோ, அவர்களே இந்தத் தீர்மானத்தைக் கொண்டு வந்ததன் மூலமாக மிகப்பெரிய ஜனநாயகப் படுகொலையை இங்கே செய்துகொண்டிருக்கிறார்கள். முதன்முதலாக 234 பேர்களை உறுப்பினர்களாகக் கொண்ட இந்த மன்றத்தில், சட்டமன்ற விதிகளின்படி 35 பேராவது குறைந்தபட்சம் ஆதரவு தெரிவித்தால் தான் இப்படிப்பட்டத் தீர்மானத்தை எடுத்துக்கொள்ள வேண்டும். அதற்காகவே இன்றைக்கு புதுக்கட்சியைச் சேர்ந்த சிலர், திடீரென்று கட்சியை எப்படி ஆரம்பித்தார்களோ அதேபோன்று திடீரென்று இந்த அவையிலே வந்து, இந்தத் தீர்மானத்திற்கு உயிர் கொடுத்துவிட்டு வெளியே போய் விட்டார்கள். 'சட்டமன்றம் செத்துப் போய்விட்டது, சட்டமன்றத்திற்கு உயிர் இல்லை' என்று சொன்னவர்கள் இன்றையதினம் வியப்பூட்டும் வகையிலே திடீரென்று வந்து இந்தத் தீர்மானத்திற்கு உயிரூட்டிவிட்டு வெளியேறி இருக்கிறார்கள் என்பதை, இந்திரா காங்கிரஸ் கட்சியைச் சேர்ந்தவர்கள் சொன்னார்களே, அதைப் போல உலகத்திலேயே காணாத, வியப்பான முறையிலே, சட்டமன்ற பாரம்பரியத்திலே இதுவரை நடைபெறாத வகையிலே நடந்துகொண்டிருக்கிறார்கள் என்பதை தற்காலிகத் தலைவரவர்களே, உங்கள் மூலமாக நான் சுட்டிக்காட்ட விரும்புகிறேன்.

[திரு. கா. வேழவேந்தன்] [1973 பிப்ரவரி 5

இன்றைக்கு துணைச் சபாநாயகர் மேல் இந்த நம்பிக்கையின்மைத் தீர்மானத்தை இங்கே கொண்டு வந்திருக்கிறார்கள். துணைச் சபாநாயகர் என்ன தவறு செய்தார்? எப்படி முறைகேடாக நடந்துகொண்டார் என்பதற்கான காரண காரியங்களை இந்தத் தீர்மானத்தைக் கொண்டு வந்தவர்கள் விளக்கவில்லை. இந்தப் பிரச்சினை உயர்நீதி மன்றத்தின் ஆழ்ந்த பரிசீலனைக்கு வந்து, வழக்கறிஞர்கள் அதுபற்றிய காரண காரியங்களை எடுத்துச் சொல்லி, அதன் பின்னால் உயர்நீதி மன்றம் தன் தீர்ப்பை ரிசர்வ் செய்து இருப்பதால், நான் மேலும் அதைப் பற்றிச் சொல்ல முடியாத நிலையில் இருக்கிறேன் என்பதை மாண்புமிகு உறுப்பினர்களின் கவனத்திற்குக் கொண்டுவர விரும்புகிறேன்.

இரண்டாந்தேதி நடவடிக்கைக் குறிப்பை நீங்கள் பார்த்தால், யார் ஜனநாயகத்தின் அடிப்படையிலே நடந்துகொண்டார்கள் என்பதற்கான எடுத்துக்காட்டு நன்றாக விளங்கும். எடுத்த எடுப்பிலேயே அவை முன்னவர் அவர்கள் இரண்டாந்தேதி சபாநாயகர் வந்து உட்கார்ந்த உடன், 'முக்கியமான பிரச்னைகள் இருக்கின்றன. ஆகவே, கேள்வி நேரத்தை ஒத்தி வைக்கவேண்டும்' என்ற தீர்மானத்தைக் கொண்டு வந்தார்கள். இந்தத் தீர்மானத்தைக் கொண்டு வருவதற்குள்ளேயே அன்றைய சபாநாயகர் தற்காலிகத் தலைவரவர்களே, நீங்கள் இன்று உட்கார்ந்து இருக்கிறீர்களே அந்த இடத்தில் அமர்ந்துகொண்டு, அவை முன்னவர் அவர்களைப் பேசவிடாமல் செய்தது மட்டுமல்ல; அந்தத் தீர்மானத்தை ஓட்டுக்கு விட வேண்டுமென்று சொன்னார். அது எப்படிப்பட்ட பாரம்பரியம் என்பது மாண்புமிகு உறுப்பினர்களுக்குத் தெரியும். பெரும்பான்மையான உறுப்பினர்கள் இந்தத் தீர்மானத்தை ஆதரித்தும், சிலர் கேள்வி நேரத்தை எடுத்துக் கொள்ள வேண்டும் என்றும் வாக்களித்தார்கள். உடனே முன்னாள் சபாநாயகர் மிக்க மகிழ்ச்சியோடு 'அவை முன்னவர் தீர்மானம் தோற்றது' என்று சொல்லி, கேள்வி நேரத்தை எடுத்துக் கொள்ள வேண்டுமென்று சொன்னார்.

இன்றைக்கு ஜனநாயகத்தின் குரல்வளையை நசுக்கிக் கொண்டிருக்கிறோம் என்று சொல்கிறவர்களுக்கு ஒன்றைத் தெளிவுபடுத்த விரும்புகிறேன். இந்த மன்றத்திலே முதலமைச்சராக இருக்கக்கூடிய டாக்டர் கலைஞர் அவர்கள் உடனடியாகச் சொன்னார்கள், 'கேள்விகளைக் கண்டிப்பாக எடுத்துதான் தீர



1973 பிப்ரவரி 5] [திரு. கா. வேழவேந்தன்]

வேண்டுமானால் எடுத்துக் கொள்ளுங்கள்' என்று. உடனே கேள்விக்குப் பதில் சொல்லவும் தயாராகி விட்டார்கள் முதலமைச்சரவர்கள். இது ஜனநாயகத்தை மீறிய செயல் என்று யாராவது சொல்லமுடியுமா? அவை முன்னவர் அவர்கள் கொண்டுவந்த தீர்மானத்திற்கு எதிராக, எதிர்க்கட்சிகளோடு சேர்ந்து, 'கேள்வி நேரத்தை ஒத்திவைக்கக் கூடாது' என்று முன்னாள் சபாநாயகரான மதியழகன் அவர்கள் சொன்ன உடனேயே அந்தக் கருத்தை ஏற்றுக்கொண்டு, கேள்விக்குப் பதில் சொல்லத் தொடங்கிய நல்ல மரபிலே தான் இரண்டாந்தேதிய நிகழ்ச்சிகள் தொடங்கி இருக்கின்றன என்பதை இந்த மன்றத்திலே தெரிவித்துக்கொள்கிறேன்.

அதற்குப் பின்னால் என்ன நடந்தது என்பது உங்களுக்கு நன்றாகத் தெரியும். இந்த அவையிலே முறைப்படி அன்றிருந்த சபாநாயகர் மீது நம்பிக்கை இல்லை என்ற தீர்மானம் வந்தது. அதற்கு முன்பே கூட, அன்றைய சபாநாயகர் மீது நம்பிக்கை இல்லை என்று இந்த மன்றத்திலே இருக்கிற 185-க்கு மேற்பட்ட உறுப்பினர்கள் கையெழுத்திட்டு அனுப்பி இருக்கிறார்கள். ஆனால் ஜனநாயகத்தைப்பற்றி கூரைமேல் ஏறி பேசிக் கொண்டிருப்பவர்கள் என்ன செய்தார்கள்? நம்பிக்கை இல்லாத் தீர்மானத்தை எடுத்துக்கொள்ளாமல், இங்கே அமர்ந்து கொண்டிருந்தார்கள்.

இப்போது துணைத் தலைவர் மீது இன்று நம்பிக்கை இல்லாத் தீர்மானம் வந்திருக்கிறது. அவர்கள் விரும்பினால் அதைத் தள்ளிப் போட்டிருக்கலாம். ஆனால் அரசியல் நாகரீகத்தை பேரறிஞர் அண்ணா அவர்களிடத்தில் இருந்து கற்றுக்கொண்ட துணைத் தலைவர் அவர்கள் அந்தத் தீர்மானத்தை எடுத்துக்கொண்டது மட்டுமல்ல; கேள்வி நேரத்தை எவ்வளவு விரைவாக முடிக்க முடியுமோ அவ்வளவு விரைவாக முடித்துவிட்டு, 'என்மீது இந்த மன்றத்திற்கு நம்பிக்கை இருக்கிறதா இல்லையா என்பதை அவை முடிவு செய்யட்டும்' என்று சொல்லி வெளியே போயிருக்கிறார்கள்.

ஆனால் முன்னாள் சபாநாயகர் மதியழகன் என்ன செய்தார் என்பது உங்களுக்குத் தெரியும். தன்மேல் நம்பிக்கை இல்லாத் தீர்மானம் வந்திருக்கிறது என்று தெரிந்த பின்னாலும், நாற்காலியிலே ஒட்டிக்கொண்டு 'நான் வெளியேற மாட்டேன்' என்று பிடிவாதமாக அமர்ந்துகொண்டிருந்தார். அவை முன்னவர்

அவர்களின் தீர்மானம் வந்தவுடன் ஓட்டுமொத்தக் குரலில் அந்தத் தீர்மானத்தை ஆதரிக்கிறோம் என்று சொன்ன பிறகு, தன் மேல் நம்பிக்கை இருக்கிறதா இல்லையா என்பதை இந்திய அரசியல் சட்டத்தின்படியும், நம்முடைய சட்டமன்ற விதிகளின்படியும் ஓட்டெடுப்பின் மூலம் அறிந்தவுடனே வெளியேறியிருக்க வேண்டும். ஆனால் அதற்குப் பதிலாக தன்மீது நம்பிக்கை இல்லாத் தீர்மானம் கொண்டுவரப்பட்டு, அந்தத் தீர்மானம் விவாதிக்கப்படுவதை முன்னாள் சபாநாயகர் விடாப்பிடியாக தன்னுடைய ஆசனத்தில் உட்கார்ந்து, கேட்டுக்கொண்டிருந்தார். இன்னும் சொல்லவேண்டுமானால், துணைச் சபாநாயகருக்கு வேறு நாற்காலி போடக்கூடாது என்றெல்லாம் சொல்லப்பட்டது. இந்த மன்றத்தின் உறுப்பினன் என்ற வகையிலே, இந்த ஜனநாயக நாட்டிலே இருக்கிற குடிமகன் என்ற அளவிலே, ஒரு கருத்தை சொல்ல நான் விரும்புகிறேன். எப்பொழுது சபாநாயகர் மீது நம்பிக்கையில்லை என்ற தீர்மானம் வந்திருக்கிறதோ, அவர் மீது அது பற்றி விவாதிக்கப்படுகிறதோ அப்பொழுது அவரே நாகரீகமாக வெளியேறவேண்டும். அந்த இடத்தை அவர் காலி செய்யவில்லை என்றால், எந்த இடத்திலாவது ஒருவர் உட்கார்ந்து கொண்டு காரியங்களை நடத்தியாக வேண்டும்.

மு.ப.
11-30 இன்னும் சொல்லப்போனால், உலகத்திலே இருக்கிற ஜனநாயகத்தைப்பற்றி எல்லாம் இங்கே பேசப்படுகிறது—சாதாரணமாக அது பாராளுமன்றக் கூட்டமாக இருந்தாலும், சட்ட மன்றக் கூட்டமாக இருந்தாலும் அந்தக் கூட்டத்தினுடைய மெஜாரிட்டி என்ன நினைக்கிறதோ அந்தக் கூட்டத்தின் பெருவாரியினர் யாரை நியமிக்கிறார்களோ அவரை வைத்துக்கொண்டு கூட்டத்தை நடத்துவது என்பது சாதாரண ஒரு எளிய விதியாகும். அந்த வகையிலேதான் முன்னாள் சபாநாயகரின் மீது கொண்டு வரப்பட்ட நம்பிக்கையில்லாத் தீர்மானத்தை துணைச் சபாநாயகர் அவர்கள் இந்த அவையின் ஒரு பகுதியிலே உட்கார்ந்து கொண்டு நடத்தினார்கள்.

முறைப்படி, விதிகளின்படி என்ன சொல்லப்படுகிறது என்றால், யார் அங்கே பிரசைடிங் ஆபிசராக உட்கார்ந்துகொண்டு யாரை பேச அழைக்கிறார்களோ அவர்களுக்குத்தான் ஒலிபெருக்கி அனுமதிக்கப்படும். அந்தத் தீர்மானத்திலே கலந்து கொண்டு பேசிய எனக்கு ஒலிபெருக்கி வேலை செய்தது. அதே நேரத்திலே





திருமதி அனந்தநாயகிக்கு வேலை செய்யவில்லை என்றால். காரணம் அந்த பிரசைடிங் ஆபீசரிடம் நான் பேசுகிறேன் என்று அவர் சொல்லவில்லை என்பது தான். அப்படி சொல்லி இருப்பார்களேயானால், நிச்சயமாக அவருடைய ஒலிபெருக்கி கூட வேலை செய்திருக்கும். ஆனால், என்ன நடந்தது? எந்தத் துணைச் சபாநாயகர் உட்கார்ந்து பெயரை கூப்பிட்டாரோ, அவருக்கு எதிராக பேசப்படுகின்ற பேச்சாளரை தலைவர் அவர்கள் பேசச் செய்து, இருவரும் கூட இருந்தே பேசிக் கொண்டிருந்தார்கள். இப்பொழுது கூட நான் இங்கே பேசிக் கொண்டிருக்கிறேன். யாராவது நான் பேசுவதை விரும்பாதவர்கள் வேறு விவகாரங்களிலே கலந்து கொள்ள வேண்டுமென்று நினைப்பவர்கள் இந்த அவையிலே எழுந்து பேசிக் கொண்டிருப்பார்களேயானால், அங்கே இருக்கக் கூடிய ஒலிபெருக்கி கூட சப்தம் போடவேண்டும் என்ற நிலைமை வந்தால் என்ன ஆவது? அது ஜனநாயக முறையாக இல்லாமல் சந்தைக் கடையாக மாறும். அந்த வகையிலேதான் பிரசைடிங் ஆபிசராக இருந்த துணைத் தலைவர் தன்னிடம் பேச வேண்டுமென்று பெயர் கொடுத்தவர்களின் பெயரைக் கூப்பிட்டார். அந்தத் தீர்மானம் நிறைவேறியிருக்கிறது. டிசம்பர் மாதம் 2-ஆம் தேதிய நடவடிக்கைகளைப் பார்த்தால் தெரியும், இங்கே இருக்கும் எ. ஆர். பெருமாள் அவர்கள் பேரவை முன்னவர் முன்மொழிந்த தீர்மானத்தை ஓட்டெடுப்பு மூலமாக முடிவு செய்யவேண்டுமென்று சொல்லி, அதன்மீது 176 பேர்கள் எழுந்து நின்று இந்த மன்ற சபாநாயகர் மீது நம்பிக்கை இல்லை என்று சொன்னதற்குப் பிறகு தான் இந்த அவை அன்று கலைந்திருக்கிறது. ஆகவே, எல்லாம் முறைப்படி நடந்திருக்கிறது என்று நீதி மன்றத்திலே நாங்கள் விவாதிப்பதோடு மட்டுமல்லாமல், இது எல்லாம் மக்கள் மன்றத்திற்கும் தெரிந்திருப்பதால், இந்தத் தீர்மானத்தைக் கொண்டு வந்து இந்த அவையின் பொன்னான நேரத்தை வீணாக்குவதை கண்டித்து அமைகிறேன்.

THIRU R. PONNAPPA NADAR: Mr. Chairman, I rise to support the Motion of No-Confidence which has been tabled against the Deputy Speaker of this Assembly. There are many valid points in support of the motion and I would seriatim refer to them in this Honourable House. First I may say that on the 2nd December 1972, there had been parallel proceedings and that has

not been controverted by any one, but it has been confirmed by the printed proceedings circulated to us. Usually, the proceedings of the House, the Official Report, is covered by Rule 234 of our Assembly Rules. With your permission, Sir, I may be permitted to read that rule and that rules says :

'An Official Report of the proceedings of the Assembly shall be published under the supervision of the Secretary and shall be made available to every member.'

True it is, the official report has now been printed and made available to the members: but the procedure to be adopted for printing and the procedure that precede the printing have not been complied with in the instant case. I was present here on that day and I think it should be round about 2 o'clock when I left the Chamber. I know what transpired inside this House and I was an eye witness. But even if we should say that something wrong had transpired inside this House, that does not find a place in the official report which has been printed and circulated to us. Several times I rose up and said that the proceedings then taking place under the chairmanship of the Deputy Speaker was not regular, valid and as per the Constitution and Rules. But curiously enough, Sir, nothing of it finds a place in the officia lreport of that day. I have been reading it and I can say this much. It may be contended that that there is only one proceedings so far as this Assembly is concerned. Sir, we were sitting in the opposition and had been saying so many things and witnessing what transpired on that fateful day. It is a disgrace to democracy and I would say that democracy has been raped inside this House and on the floor of this House on that day and the Deputy Speaker was a silent spectator of all that happened here. He could not do anything and he has been acting according to the dictates of the ruling party. It may be argued that they are the party-men; but even though the Speaker and the Deputy Speaker have been elected at the behest of the ruling party, they have also to discharge a Constitutional function and responsibility. The question whether the Deputy Speaker has done so is a matter which has to be considered. I say that there has been violation of procedure and rules have been violated in its abundance. It has been flagrantly violated and on that score, the Deputy Speaker has no power to continue to hold his office. That is my first contention, Sir.



[Thiru R. Ponnappa Nadar]

The proceedings have been edited and purposely done so, at the behest of the ruling party. What is printed as having transpired inside this House on that day is a misnomer, if I may use that expression. Sir, we have been denied the right to speak. The Deputy Speaker called certain members to speak, but nobody was audible, as there was quite a large volume of the mike inside the House and what was said by hon. Members were not audible except for what is printed in these proceedings, and whatever was said from the Opposition benches has been characterised as '*Koochal Kuzhappam*' in this official report. Are we school-boys just to raise '*Koochal Kuzhappam*'? That is a question which I would put before this House. Sir, we were treated as school-boys on that day. Not only were we treated as school-boys, there was so much of officialdom and there has been so much of executive interference in the legislative work inside this House that we could not function as Opposition. That is the reason why I say, cry halt to all these undemocratic methods. I would once again reiterate that the Rules and Constitutional provisions have been violated very flagrantly.

Sir, I would just invite the attention of this House to a rule regarding strangers, that is, rule 238 of our Assembly Rules. That rule says:

'The admission to the Assembly Chamber of strangers and officials during the sittings of the Assembly shall be regulated in accordance with regulations made by the Speaker.'

Now, Sir, what happened on the 2nd of December is a question which I am going to ask for an answer. We approached the office for visitors' pass. But we were told that no visitors' pass would be issued. I then approached the Secretary and asked him whether permission had been denied to any visitors and the Secretary said that he was powerless, because he had been asked not to entertain any visitors. But when I entered this House, there were in the visitors' galleries numerous persons. I say and I charge the Government that a large number of D.M.K. partymen were in the galleries and inside the House, that is, inside the precincts of this House. What were they doing? Many members of the Upper House were sitting, of course in the seats allotted to them. But what did they do? That is the question which I am going to answer. One hon. Member, I do not want to mention his name,

an hon. Memer of the Upper House, a Senior Member of the Upper House, a top member of the Ruling Party had been behaving not quite properly inside the precincts of this House. He was saying things and members of the opposition were threatened and terrorised by him. He used certain words which I do not want to repeat in this House. Does it speak well of the ruling party? I say and charge that the ruling party has been responsible for all this lawlessness and untoward incidents inside this House on that day.

We could not discharge our functions as legislators with an amount of ease and freedom which we should enjoy. Sir, such a thing should not be repeated and it does not speak well and it does not augur well so far as democracy is concerned.

Now the whole proceedings that has happened on 2nd December 1972 has been questioned in the High Court and I do not want to enter into details. Sir, what has been done on the 2nd December is another matter which has to be considered by the Members of this House.

The resolution for the removal of the Speaker did not have the requisite number of days of notice and that is the next point which I am going to urge. Fourteen days ' clear notice is mandatory. After the prorogation of the House and after resummoning 14 days will have to be reckoned with. Now so far as the Constitutional provision is concerned, Article 179 (c) and the proviso are mandatory. It says—

A member holding office as Speaker or Deputy Speaker of an Assembly—

(c) may be removed from his office by a resolution of the Assembly passed by a majority of all the then members of the Assembly :

Provided that no resolution for the purpose of clause (c) shall be moved unless at least fourteen days ' notice has been given of the intention to move the resolution . . '

So, if 14 days ' notice is not complied with, it is a flagrant violation of the Constitution. Also on that particular day, a chair has been specially brought and the Deputy Speaker was sitting and conducting parallel proceedings. It is unheard of in the history of



democracy that such parallel proceedings should happen inside the Tamil Nadu Legislative Assembly. The Tamil Nadu Legislative Assembly has been known for its impartiality and integrity and it was considered to be a model Legislature.

I think, Sir, this is not West Bengal or any other State Legislature where there would be frequent quarrels. But here on 2nd December 1972 parallel proceedings were conducted and two Presiding Officers were here and this does not speak well of us. The Speaker had expunged the proceedings conducted by the Deputy Speaker and the Deputy Speaker in turn was expunging the proceedings conducted by the Speaker. But all these things are curiously enough absent in the official report that has been printed and circulated to us. Sir, the whole proceedings may be stated to be sacrosanct because we prayed in the court that Article 212 of the Constitution is supreme. I would invite the attention of the hon. Members to Article 212 of the Constitution. What does it say? It says—

' (1) The validity of any proceedings in the Legislature of a Legislature shall not be called in question on the ground of any alleged irregularity of procedure.

(2) No officer or member of the Legislature of a State in whom powers are vested by or under this Constitution for regulating procedure or the conduct of business, or for maintaining order, in the Legislature shall be subject to the jurisdiction of any court in respect of the exercise by him of those powers. '

The proceedings which transpired after 12 o'clock on 2nd December has been engineered and hatched by certain officers and that is a charge which I am going to level. At the behest of the ruling party that was hatched. I would say that because of the immunity granted under Article 212 the whole procedure has been violated.

What prevented the ruling party from following the procedure now adopted, in the case of the removal of the Speaker on 2nd December 1972? According to me, it was the ' No Confidence Motion ' against the Ministry that had been discussed on that day and that was going on, and on the ' No Confidence Motion ' several Members spoke. Members belonging to A.D.M.K.. Dr. Hande, Thiru K. T. K. Thangamani. Thiru J. James and many other

Members participated in the discussion but there is absolutely nothing in the printed record. There was mention only 'koochal' and 'kuzhappam'. This has been done because there is a legal immunity that anything happening inside the House cannot be questioned in a court of law. But does it speak well of the functioning of democracy? I would say that the ruling party in conjunction with the Deputy Speaker has hatched this conspiracy. The villain of the piece is the Deputy Speaker who has walked into the trap of the ruling party.

THIRU N. GANAPTHY : On a point of order. The hon. the Leader of the Congress (O) Party, in the course of his speech, used the expression 'villain of the piece'. Is it parliamentary?

THIRU R. PONNAPPA NADAR : I think my hon. Friend has read Shakespeare's novels and there such roles were depicted and there are certain Members who have acted that role. Perhaps that has entered into the minds of the hon. Member who has raised the point of order.

So far as the proceedings are concerned, I would even now contend that it is not valid and binding. The whole thing is illegal. The proceedings that transpired after 12 o'clock will have to be ignored. That is my next point. We are awaiting the ruling of the court in regard to this matter and I do not want to say anything more about it.

Sri, the ruling party has been contending that the motion for the removal of the Deputy Speaker has been taken up without delay. But has the provision of Article 181 (2) of the Constitution been complied with, is the next point to be considered. Article 181 (2) says—

'The Speaker shall have the right to speak in, and otherwise to take part in the proceedings of, the Legislative Assembly while any resolution for his removal from office is under consideration in the Assembly and shall, notwithstanding anything in Article 189, be entitled to vote only in the first instance on such resolution or any other matter during such proceedings but not in the case of an equality of votes.'



This has not been complied with. You have got the brute majority but you have taken the oath to uphold the dignity of the Constitution. The officers who have been responsible for this, have not upheld the glorious traditions. They have not followed the principles enunciated in the Constitution.

I think the Deputy Speaker has not followed the rules of how to conduct parliamentary proceedings. There has been violation of the relevant Articles of the Constitution. The Speaker has not been given an opportunity to speak. He has not been asked whether he is willing to speak on the motion. Of course there were parallel proceedings but in the records the speeches made by members of the Opposition are not at all found. If a perusal of the report of 2nd December is made, it is only a mockery as it were because it is an edited speech that has been printed. I say this with all the responsibility that I can command and I say that this sort of thing should not be repeated. Once it has happened. It is most unbecoming of Members of this House to be treated like this. The Opposition will have to be fearless. They should be treated with all the respect they deserve. But what happened? They were not at all properly treated.

One other incident I have to refer to. After some of us were dispersing, from the corridor leading to Chief Minister's room, and also from another corridor, chapals were hurled at certain individuals. Does this speak well of us? That is what I want to ask. The Hon. Chief Minister was just saying in this House that somebody connected with some party, that is the organising secretary of the A.D.M.K. was showing chapals on somebody and that was the reason why there has been rain of chapals, on the persons passing along. Does this speak well of Tamil Nadu Assembly? Does it speak well of the Ruling Party? Such kind of treatment is unknown in parliamentary history. In British Parliament we have heard the Speaker had been manhandled. We have been protected. We thought that the Speaker here would have been manhandled by members of the ruling party on that day. But thank God, nothing happened inside the House. But what has happened subsequently? As soon as the Speaker entered the Chamber, his board had been removed by the ruling party. Simply because his name is there, what is the harm? Does it speak well of the officers to remove the board at that time, before the gazette

[Thiru R. Ponnappa Nadar] *[1973 பிப்ரவரி 5*

notification has been made? All these things had happened. These are things which should not be tolerated by any civilised society. That is the point I want to make. These things should not be repeated. That is the reason why we say the Deputy Speaker has failed to discharge his duties, his functions enshrined in the Constitution. He has on the other hand violated the Constitution. So I maintain he has no right to continue in office and that be should be removed. When you are holding lofty principles enunciated by Anna and when this Government has given the motto 'vaimaye vellum' may I ask, "are you following that principle? The principle enunciated by your leader" I again say that the rights and duties of members will have to be protected. To-day D.M.K. is in power. Tomorrow some other party may come to power. In maintaining democratic values, we have failed in an abundant measure. So I say that the Deputy Speaker has vacated the confidence reposed in him by the members of the House. So it is, we say that he should be removed. With these words I conclude.

**மாண்புமிகு மாற்றுத் தலைவர் (திரு. நா. வீராசாமி) :** மாண்புமிகு உறுப்பினர்களுக்கு ஓர் அறிவிப்பு. இன்னும் 10 உறுப்பினர்கள் பேச இருக்கிறார்கள். அதற்குப் பின்னாலே அவை முன்னவர் பேச வேண்டியிருக்கிறது. அதற்குப் பின்னாலே, துணைத் தலைவர் பதில் சொல்ல கடமைப்பட்டிருக்கிறார். அதற்கு அடுத்து தீர்மானத்தைக் கொண்டுவந்த திரு. தங்கமணி அவர்கள் பேச இருக்கிறார்கள். எனவே, இனி பேச இருக்கிற உறுப்பினர்கள் 5 நிமிடத்திற்கு மேல் போகாமல், தயவு செய்து அதற்குள் முடித்துக்கொள்ளவேண்டுமென்று கேட்டுக்கொள்கிறேன்.

THIRU R. PONNAPPA NADAR : May I make a submission? The number of speakers from the Ruling Party may be limited.

**மாண்புமிகு மாற்றுத் தலைவர் (திரு. நா. வீராசாமி):** எதிர்க் கட்சி உறுப்பினர்கள் 8 பேர் பேசுகிறார்கள், ஆளும் கட்சி உறுப்பினர்கள் இரண்டு பேர் பேசுகிறார்கள். அந்த இரண்டு பேரிலே ஒருவர் பேசிவிட்டார். இன்னும் ஒருவர்தான் பேச இருக்கிறார். எதிர்க்கட்சி உறுப்பினர்களுக்கு நிறைய வாய்ப்பு இருக்கிறது. ஒவ்வொருவரும் 5 நிமிடத்தில் பேசி முடிக்கவேண்டுமென்று கேட்டுக் கொள்கிறேன்.



*1973 பிப்ரவரி 5]*

**திருமதி த. ந. அனந்தநாயகி :** இங்கு எதிர்க்கட்சி உறுப்பினர்கள் எண்ணிக்கையிலே குறைவாக இருக்கிறார்கள். நேரத்தையும் குறைவாகக் கொடுத்தால், எப்படி கருத்துக்களைக் கூறமுடியும்?

**மாண்புமிகு மாற்றுத் தலைவர் (திரு. நா. வீராசாமி):** சட்ட மன்றத்தில்தான் எண்ணிக்கை குறைவே தவிர, கொடுக்கின்ற வாய்ப்பில் எதிர்க்கட்சிகளுக்குதான் அதிகம்.

**திரு. எம். ஏ. லத்தீப்:** மாண்புமிகு மாற்றுத் தலைவரவர்களே, நம்முடைய துணைத் தலைவர் அவர்களுக்கு விரோதமாக கொண்டு வரப்பட்டிருக்கிற இந்த பதவி விலக்கல் தீர்மானத்தை நான் கடுமையாக ஆட்சேபித்து ஒருசில கருத்துக்கள் சொல்லிட விழைகின்றேன். இந்த விலக்கல் தீர்மானத்தைக் கொண்டு வந்தவர்கள் இந்தத் தீர்மானத்திற்கு, சபையினுடைய மரபுப்படி, போதிய எண்ணிக்கையைப் பெறுவதற்காக அவர்கள் பட்ட பாடு இருக்கின்றதே, அது பெரும்பாடாக இருக்கிறது. அவர்கள் பட்ட பாடு சாதாரண பாடு அல்ல. செத்தவர்களை எல்லாம் கூட உயிர்ப்பித்து அவர்கள் இந்த அவைக்குக் கொண்டு வந்திருக்கிறார்கள். பரிதாபத்திற்குரிய அந்த நிலையைக் கண்டு. . .

**திருமதி த. ந. அனந்தநாயகி:** செத்தவர்களை கொண்டு வந்தார்கள் என்றால், எந்த அங்கத்தினர், செத்தவரைத்தோண்டி, உயிர்ப்பித்துக் கொண்டு வந்திருக்கிறார்கள். அர்த்தம் தெரியாமல் செத்தவர் என்று சொன்னால் என்ன பொருள் என்று கேட்கிறேன்.

**திரு. ஏ. ஆர். பெருமாள்:** ஆன் எ பாயிண்ட் ஆப் ஆர்டர். எங்களைப் பொறுத்த அளவில், சட்டமன்றம் செத்து விட்டது என்று அவர்கள் கூறிய காரணத்தினால் செத்தவர்கள் வந்தார்கள் என்று அர்த்தத்தில் கூறியிருப்பார் என்று கருதுகிறேன்.

**திரு. எம். ஏ. லத்தீப்:** தலைவர் அவர்களே, தங்களுடைய தீர்ப்பினைச் சொல்வதற்கு முன்னதாக என்னுடைய கருத்தையும் சொல்ல விழைகின்றேன். இந்த அவையிலே நான் செத்தவர்கள் என்று சொன்னதைப் பற்றி, மாண்புமிகு உறுப்பினர் அம்மையார் அவர்கள் எழுப்பிய ஆட்சேபத்தை நான் வரவேற் கின்றேன். அவர்களுடைய இந்த நல்ல எண்ணத்தை [illegible]

பாராட்டுகின்றேன். இருப்பவர்களைப் பற்றி, செத்தவர்கள் என்று சொல்லலாமா என்று அவர் எடுத்துக்கொண்டிருக்கிற கவலையைப்பற்றி இந்த நேரத்தில் நான் பாராட்ட கடமைப் பட்டிருக்கிறேன். ஆனால், இந்த அவையே செத்து விட்டது என்று சொல்லப்பட்ட நேரத்தில் இவர்களெல்லாம் எங்கே இருந்தார்கள் என்று கேட்க ஆசைப்படுகிறேன். இந்த அவையே செத்து விட்டது என்று சொன்னார்கள்.

**திரு. ஆர். பொன்னப்ப நாடார்:** ஆன் எ பாயின்ட் ஆப் ஆர்டர், சார், இந்த அவை செத்து விட்டது என்று யாரோ வெளியிலே கூறியிருக்கிறார்கள். ஆதலால், இந்த மன்றத்திலே இருக்கின்றவர்கள், உரிமைப் பிரச்சினை, எழுப்பவில்லையென்ற வகையிலே இவர் கூறியிருக்கிறார். இந்தமாதிரி யாராவது சொல்லியிருந்தால், அதை இந்த அவை உரிமைக் குழுவிலே கொண்டு வருவது பொருந்தமாக இருக்கும். ஆதலால், இப் பொழுது விவாதத்திலே அதைக் கொண்டு வருவது நியாயமல்ல என்று கூற விரும்புகிறேன்.

**மாண்புமிகு மாற்றுத் தலைவர் (திரு. நா. வீராசாமி):** மாண்புமிகு எதிர்க்கட்சித் தலைவர் திரு. பொன்னப்ப நாடார் அவர்கள் கருத்து வரவேற்கத்தக்கது. லத்தீப் அவர்கள் பேசும்பொழுது செத்தவர்கள் என்று சொன்னது, இந்த மன்றம் செத்து விட்டது என்று சொன்னவர்களை என்று கருதுகிறேன். இருந்தாலும் அவர்களை செத்தவர்கள் என்று குறிப்பிட வேண்டாம். பாவம், வாழட்டும்.

**திரு. எம். ஏ. லத்தீப்:** தலைவர் அவர்களே, இந்த அளவுக்கு இந்த மன்றத்தினுடைய கவனத்தை, அதிலும் குறிப்பாக என் பெருமதிப்பிற்குரிய பொன்னப்ப நாடார் அவர்களெல்லாம் அவர்களுடைய கருத்துக்களைச் சொல்வதற்கு நான் சொன்ன கருத்து உதவியது என்ற முறையில் அதை மேலும் தொடராமல் விட்டுவிட்டு, அந்த வார்த்தையை யாரையும் செத்தவர்களாக நினைத்துச் சொல்லவில்லை; செத்தவர்கள் என்று தாங்களாகவே அறிவித்துக் கொண்டவர்கள்தான் இந்தத் தீர்மானத்திற்காக 35 பேர்களைக் கொண்டு வரக் கூடிய நிலையிலே பெரும் பாடுபட்டு இந்தத் தீர்மானத்தைக் கொண்டு வந்திருக்கிறார்கள் என்று நான் தெரிவித்துக்கொள்ள ஆசைப்படுகிறேன்.





தலைவர் அவர்களே, இன்றைக்கு சில உறுப்பினர்கள் இந்த அவைக்கு வந்து விட்டு சென்றிருக்கிறார்கள். நான் கூட நினைக்கிறேன், அந்தக் கட்சியினுடைய தலைவராக இருக்கிறவர் இந்த அவைக்குச் செல்ல வேண்டுமென்று அழைக்கப்பட்ட நேரத்தில், 'அந்த அவை தான் செத்து விட்டது, நான் அங்கு போக மாட்டேன்' என்று சொல்லியிருக்கக் கூடும். அப்படிச் சொல்லியிருந்தும், 'இல்லை, இல்லை, வாழ்கிறது, நாங்கள் போய் பார்த்து வருகிறோம்' என்று சிலர் வந்து விட்டு, இந்த அவை வாழ்கிறது என்று தெரிந்துகொண்டு, திரும்பி அவர்களுடைய தலைவரிடம் சென்று, அந்த அவை வாழ்கிறது, இந்நேரம் வாழ்ந்து கொண்டிருக்கிறது, நாஙகள் கூட அங்கே சென்று அவை வாழ்கிறதா என்று பார்த்து, வாக்களித்துவிட்டு வருகிறோம், நீங்கள் அதுமாதிரி சொன்னால் நாங்கள் அதை ஏற்றுக்கொள்ள மாட்டோம்" என்று இங்கே இருக்கிற சில உறுப்பினர்கள் சொல்லாமல் சொல்லியதற்கு நான் அவர்களைப் பாராட்ட கடமைப்பட்டிருக்கிறேன். தலைவர் அவர்களே, இப்பொழுது இருக்கின்ற பிரச்சினை நம்முடைய துணைத் தலைவர் அவர்கள் இரண்டாம் தேதி நடந்துகொண்ட முறையைப் பற்றி நம்முடைய கம்யூனிஸ்ட் கட்சித் தலைவர் என்னுடைய சீனியர் திரு கே. டி. கே. தங்கமணி பல கருத்துக்களைத் தெரிவித்தார்கள் மற்றொரு சீனியர் ஆன திரு. பொன்னப்ப நாடார் அவர்களும் அவர்களுக்கே உரிய சட்ட நுணுக்கங்களோடு சில கருத்துக்களைத் தெரிவித்தார்கள். நான் அவர்களுக்கு கடுமையான மறுப் நண்
பாகவோ, அல்லது கண்டிப்பாகவோ இதைச் சொல்லவில்லை, பகல்
என்னுடைய சீனியர்கள் என்ற முறையிலே நான் சில நுணுக்கங் 12-00
களை நான் ஒரு ஸ்டூடன்ட் ஆப் லா என்ற முறையிலே சில கேள்வி களை எழுப்ப விழைகிறேன்.

எனக்கு நன்றாக ஞாபகம் இருக்கிறது. கடந்த கூட்டத் தொடருக்கு முன்பு நடைபெற்ற கூட்டத்தில் அமைச்சரவைமீது நம்பிக்கையில்லாத் தீர்மானத்தை கொண்டுவந்தார்கள். அந்தத் தீர்மானம் வந்தபொழுது அப்பொழுது சபாநாயகராக திரு. மதியழகன் அவர்கள் இந்த நாற்காலியிலே உட்கார்ந்துகொண் டிருந்தார்கள். அந்தத் தீர்மானத்தை எந்த நாள் எடுத்துக் கொள்ளலாம் என்பதைப்பற்றிச் சட்டமன்றம்தான் குறிப்பிட வேண்டும். எந்த நாள் எடுத்துக்கொள்ளலாம் என்று கேட்ட

பொழுது நம்முடைய மாண்புமிகு முதல்வர் கலைஞர் அவர்கள் சொன்னார்கள், ஜனநாயகத்திற்கு ஒரு நல்ல இலக்கணத்தை வகுப்பது போல் எடுத்துச்சொன்னார்கள், இந்த அவையிலே இந்த அமைச்சரவைக்கு எதிராக நம்பிக்கையில்லை என்று கூறுகின்ற தீர்மானம் வந்திருக்கிறது, இந்நிலைமையிலே வேறு எந்தக் காரியத்தையும் எடுத்துக்கொள்வது சரியல்ல, முதன் முறையாக அவர்கள் அன்றைக்குச் சொன்னார்கள், அந்த நம்பிக்கையில்லாத் தீர்மானத்தை இன்றைக்கே எடுத்துக் கொள்ளலாம் என்று அந்த நேரத்திலேயே அவர்கள் தலைவரைக் கேட்டுக்கொண்டார்கள். அந்த அடிப்படையிலே அமைச்சரவைமீது கொண்டுவரப்பட்ட நம்பிக்கை இல்லாத் தீர்மானத்தை எடுத்துக்கொள்வதைப்பற்றி அத்தகைய கருத்தை அவர்கள் சொல்லியிருக்கும்பொழுது இந்தச் சபையை நடத்திச்செல்கின்ற தலைவர், தமக்கு விரோதமாக பெரும்பான்மையான உறுப்பினர்கள் கையெழுத்திட்டு அறிவிப்புத் தந்து, தாம் பதவி விலகவேண்டுமென்று கோரியிருக்கிற நேரத்தில் அந்தத் தீர்மானத்தை எடுத்துக் கொள்ள மறுப்பது எப்படி சபையினுடைய மரபாகும் என்பதைத் தெரிந்து கொள்ள விரும்புகிறேன். (மணியடிக்கப்பட்டது) பத்து நிமிடங்கள் எனக்குக் கொடுக்கவேண்டும்.

திரு. எம். ஏ. லத்தீப் : இன்னும் பத்து நிமிடங்களாவது நிமிடத்தில் முடித்துக்கொள்ளுங்கள்.

திரு. எம். ஏ. லத்தீப்: இன்னும் பத்து நிமிடங்களாவது தரவேண்டும்.

மாண்புமிகு மாற்றுத் தலைவர் (திரு. நா. வீராசாமி) : திரு. லத்தீப் அவர்கள் விவரம் தெரிந்தவர்கள், ஒரு நிமிடத்திற்குள் முடித்துக்கொள்ளலாம்.

திரு. எம். ஏ. லத்தீப்: நான் உட்கார்ந்துவிடவேண்டுமென்றால் உட்கார்ந்துவிடுகிறேன். கருத்துக்களைச் சொல்லவேண்டும். ஆகவே, நேரம் தரவேண்டும்.

இந்த மன்றத்தினுடைய மெஜாரிட்டி ஒபினீயன் என்ன என்பதைப் பார்த்து நடந்துகொள்ள வேண்டும் என்பதற்காகத்தான் சொன்னேன். திரு. வேழவேந்தன் அவர்கள் நல்ல முறையில் பதில் அளித்தார்கள். நான் ஒன்றைத் தெரிவித்துக்கொள்ள விரும்புகிறேன். என்பதைப் பார்த்து





தெரிவித்துக்கொள்ள விரும்புகிறேன். சபாநாயகர் என்று அன்றைக்கு யார் இருந்தார்களோ, யார் அன்றைக்கு சட்டமன்றத்தால் அனுமதியளிக்கப்பட்டார்களோ, அவர்கள் அழைத்த உறுப்பினர்களுக்கு ஒலிபெருக்கி வேலை செய்தது. இந்த நிலைமையை மறந்துவிட்டு ஏதோ இரண்டு மன்றங்கள் நடந்தன, பேரலல் அசெம்பிளி நடந்தது என்று சொல்வது எல்லாம் உண்மைக்குப் புறம்பானது. அப்படிச் சொல்வது இந்த மன்றத்தினுடைய உயர்வுகளையும் சிறப்புகளையும் தாழ்த்திவிடும் என்பதைத் தெரிவித்துக் கொள்கிறேன். அவை என்பது எது ? அவை என்றால் உறுப்பினர்கள் மட்டும்தான் அவையா ? உறுப்பினர்களாக இருந்துகொண்டு, எக்ஸிக்யூடிவ் ஆக இருக்கும் அமைச்சர்களும் சேர்ந்துதான் அவையா என்பதைப் பார்க்கவேண்டும்.

In Democracy, in Parliamentary Democracy, the Legislature is the body which enacts rules and which also enacts Acts and all the Bills are piloted by the Executive and without the Executive, the Legislature is simply a legal body without life. Without the Executive the Legislature can only be a constitutional body without life. That is the constitutional body, no doubt, but the soul and that which gives life to the legislature is the executive, because all the Bills are piloted only by the executive. Therefore without there being an executive, there cannot be any legislative work and there cannot be any potential character of the legislative work. So, therefore, on that particular day, with the backing of the majority of the members present here in this House, the entire Executive from the Chief Minister to all others stood on a particular side and that was presided over by the Deputy Speaker who was duly proposed by the Leader of the House. Well, the Leader of the House is one who leads and not the one who is led. That is the essential character of a leader and it is the business of the Leader to see that the House is led towards meeting the democratic aspirations and accordingly the Leader of the House led this House towards the fulfilment of the democratic aspirations, subject to the backing of the majority of the members in this House. So, therefore, if anybody thinks or says that there was a parallel Assembly, it was an Assembly without the executive. How can there be an Assembly without there being an executive which has to pilot Bills or move resolutions. On that day the resolution moved was proposed by the Leader of the House and under the

relevant provisions of the rules. Therefore all the rules are made by the House, all the rules are changed by the House, all the rules are modified by the House, all the rules are regulated, rationalised and altered by the House. The House alone is the competent authority to see that rules are framed to govern the activities of the House. that rules are framed in such a manner and handled in such a manner as to further the cause of democracy and further the legislative activity according to the aspirations of the people of the State. So, therefore, I submit, Mr. Chairman, that what happened on the 2nd of December was only a step to save democracy, a step to prevent the murder of democracy by the then Speaker, the Respected Mr. K. A. Mathialagan who against the wishes of this House and against the proposal of the Leader of the House occupied the Chair without there being any sanction of the House. So it is the business of the leader of the House to do such things as to regulate the House in a proper manner.

If on the other hand the Leader of the House had not done so then, he would have failed in his duty cast on him by the relevant provisions of the rules. That is my submission, Mr. Chairman. What I submit is this. Let us not indulge in bickerings and do things which will create a wrong impression about this House in the minds of the public at large. There was no parallel House and as such, I submit that the way in which the House was conducted on the 2nd December was perfectly constitutional, perfectly valid and was within the legal limit and I submit that is the only thing which I would like to submit.

Finally, the question was raised by my learned Friend, Thiru Marimuthu as to how a Presiding Officer can be elected without there being any other person who could conduct the election. I would invite his attention to clause 2 of Article 180 which says :

"180 (2): During the absence of the Speaker from any sitting of the Assembly the Deputy Speaker or, if he is also absent, such person as may be determined by the rules of procedure of the Assembly, or, if no such person is present such other person as may be determined by the Assembly, shall act as Speaker".

So, in the case of the Deputy Speaker or in the case of any person from the panel of Chairmen, the then Presiding Officer can ask him to occupy the Chair. Suppose nobody is available when he leaves





the Chair. Option is given to the House under sub-clause (2) of Article 180 of the Constitution to have a new Chairman elected by the House on the spot. Then during that time who is to preside? It is under the same provision of the constitution, the Honourable the Leader of the House proposed the name of the Deputy Speaker to occupy the Chair to perform the duties of the then Speaker, Thiru Mathialagan, who had flagrantly violated the Constitution, murdered democracy and he also questioned the very sanctity of the House. Therefore, I oppose this resolution moved by the learned and respected leader of the Communist Party, Thiru K. T. K. Thangamani.

**திருமதி த. ந. அனந்தநாயகி:** தலைவரவர்களே, தமிழகத்திலே அரசியல் கட்சிகள்தான் இரண்டாகப் பிளக்கின்றன என்றால் டிசம்பர் மாதம் 2-ஆம் தேதி சட்டசபைகூட இரண்டாகப் பிளக்கப்பட்டு, சபாநாயகர் கதியும் அப்படி ஆகிவிட்டதே என்று தமிழக மக்கள் பார்த்துக் கொண்டிருக்கிறார்கள். ஏனென்றால் தமிழகத்திற்கு என்றைக்கும் ஒரு பண்பாடு உண்டு, மரபைக் கட்டிக் காக்கின்ற பண்பாடு உண்டு. சென்னையிலே உள்ள சபாநாயகர் என்று சொன்னால் பிற மாநிலங்களிலே உள்ள சபாநாயகர்களைவிட உயர்ந்தவர், மரபைக் கட்டிக் காப்பவர் என்ற நல்ல பெயரை எடுத்து வந்தார்கள். இன்றைக்கு அந்த நிலை கிடையாது என்ற நிலையில் இந்தத் தீர்மானத்தை நாங்கள் ஆதரிக்கிறோம்.

அதுமட்டுமல்ல, கனம் துணை சபாநாயகரவர்களின் நன்மைக்காகத்தான் இப்படிக் கொண்டு வந்திருக்கிறோம். மறந்துகூட அந்த இடத்திற்கு நீங்கள் போகாதீர்கள் 1967-லிருந்து அந்தப் பதவியை வகித்து வந்தவர் அமைச்சராகிவிட்டார். பிறகு வந்தவர் மறுபடியும் மக்களால் தேர்ந்தெடுக்கப்பட்ட பிறகும்கூட மரபைக் காப்பாற்றுவதற்காகக்கூட சபாநாயகராகப் போடப்படவில்லை. பிறகு வந்தவருக்கு என்ன ஆயிற்று என்பது தெரியும். லத்தீப் அவர்கள் சொன்னதுமாதிரி கான்ஸ்டிட்யூஷன் புரொவிஷன் If the Speaker is absent, the Deputy Speaker can preside. If the Deputy Speaker is absent some other person elected can preside. என்று இருக்கிறது. அன்றைக்கு என்ன அவர் ஆப்சென்டா அவர் இருப்பது உங்களுக்குத் தெரியாமல் போய்விட்டார் அவ்வளவு பெரிய உருவமாக உட்கார்ந்திருந்தாரே, அது தெரியாமல்

போய்விட்டதா? அவர் ஆப்செண்டாக இருந்தார் என்றால் சரி. அவர் இருக்கும்பொழுதே சர்வ சாதாரணமாக துணை சபாநாயகர் நடத்துவது வேடிக்கையாக இருக்கிறது. இன்றைக்கு 180 பேர் உங்கள் பக்கம் இருக்கின்றபொழுது இந்தச் சட்டசபையின் மரபைக்காகக்க வேண்டிய பொறுப்பு உங்களுக்கு அதிகமாக இருக்கிறது. சாதாரண மெஜாரிட்டியாக இருந்தால்கூடப் பரவாயில்லை இன்றைக்கு நாங்கள் 'ரெகக்னேஸ்ட் ஆப்போசிஷன்' என்றுகூட ஒரு கட்சி அந்தஸ்து இல்லாமல் எதிர்க்கட்சிகளாக இருக்கும் பொழுது மரபைக் காக்க வேண்டிய பொறுப்பு உங்களுக்கு அதிகமாக உள்ளது.

உங்களிடம் 180 பேர் இருப்பதால் எதை வேண்டுமானாலும் செய்யலாம், சட்டசபை விதிகளையே தூக்கியெறிந்துவிட்டு செய்யலாம் என்றால் ஜனநாயகம் உங்கள் கையிலே என்ன பாடுபடுகிறது என்பதை மக்கள் எடைபோடாமல் இருக்க மாட்டார்கள். எனக்கு முன்னால்பேசிய ஸ்தாபன காங்கிரஸ் கட்சித் தலைவர் அவர்கள் கூறியதைப்போன்று, கூச்சலும், குழப்பமும் என்று அச்சிட்டிருக்கிறார்கள். இது நேர்மையா, நியாயமா என்று கேட்க ஆசைப்படுகிறேன். 180 பேர் உங்கள் பக்கம் இருக்கும்பெழுது சபாநாயகரை சரியான முறையில் நீக்கியிருக்கலாமே. ஏன் அவசரம் காட்ட வேண்டும்? ஏன் இந்தச் சதித் திட்டம் என்று புரியவில்லை. சட்ட அமைச்சரவர்கள்கூட எங்கேயோ பேசியதாகப் பார்த்தேன், மைலாப்பூரிலே சதித் திட்டம் தீட்டினார்கள், அந்தச் செய்தி எங்களுக்கு வந்துவிட்டது, நாங்கள் திடீரென்று தயாராகிவிட்டோம் என்று பேசியிருப்பதாகப் பார்த்தேன். யார் என்ன சதி தீட்டினார்கள்? எண்ணிக்கையிலே அதிக எண்ணிக்கை பலம் உள்ள நீங்கள் 14 நாட்கள் நோட்டீசைக் கொடுத்து, எதிர்க்கட்சிகாரர்களுக்கும் அந்தத் தீர்மானத்தை அனுப்பி, பிறகு எல்லோரையும் விவாதிக்கச் செய்து, அந்த சபாநாயகர் ஏன் நம்பிக்கையை இழந்தார், என்ன நம்பிக்கையை இழந்தார் என்று விவாதித்து இருந்தால் பின்னால் வரும் சபாநாயகர்களும் தவறு செய்யாமல் இருப்பதற்கு வாய்ப்புகள் இருக்கும். அந்த வாய்ப்பை நீங்கள் கொடுக்கவில்லை. யார்மேல் குற்றம் சொல்கிறீர்களோ,

'principles of natural justice and equity'

என்பதற்கு ஏற்றாற்போல், அவர் இந்தக் காரணம் சரியா, தவறு





என்று கூறுவதற்கு அரசியல் சட்டத்திலே

'he has the right to reply.'

என்று இருப்பதையும் மறந்தீர்கள். இப்படி அரசியல் சட்டத்தின் முறையையும் தூக்கியெறிந்துவிட்டு, சபை விதிகளையும் தூக்கியெறிந்துவிட்டு 180 பேர் கையில் இருப்பதால் நாங்கள் எதை வேண்டுமானாலும் செய்வோம் என்று ஜனநாயகத்தைப் படுகொலை செய்தால் அதைப்பற்றி ஆளுங்கட்சினர் சிந்திக்க வேண்டும். இது மக்களுக்கும் ஒரு நல்ல பாடம். இப்படி 180 பேரை ஒரே கட்சியில் அனுப்பினால் நாளைக்கு சபாநாயகரின் உரிமையைக்கூடப் பாதுகாக்க முடியாது என்ற அவலநிலை ஏற்பட்டுவிடும் என்று மக்களுக்கு ஒரு நல்ல பாடம்.

சபாநாயகர் என்றால் பாரபட்சம் இல்லாதவர்.

without fear or favour

பயமின்றி, தம் கடமையைச் செய்து, நல்ல மரபை ஏற்படுத்த வேண்டும் என்ற நிலையில் இருக்கும்பொழுது இப்படி ஆளுங்கட்சியினருக்கு எண்ணிக்கை பலம் இருக்கிறது என்பதால், சபாநாயகர் சீட்டிலே உட்கார்ந்து இருக்கும்பொழுது அவர் ஆப்சென்ட் என்று மற்றொருவரைக் கொண்டுவந்து உட்கார வைப்பது, அவருக்கு மைக்கைக் கொடுத்து நீ நடத்தப்பா என்று சொன்னால் இதுதான் ஜனநாயகத்தைப் பாதுகாக்கக்கூடிய முறையா என்று கேட்க விரும்புகிறேன்.

கவர்னரை வைத்து திருப்பிக் கூட்டினீர்கள். அன்றைக்கே அவசரச் சட்டம் போட்டிருக்கலாமே, பஞ்சாபிலே போட்டது மாதிரி. அஜெண்டாவிலேயே, சபாநாயகரின்மீது நம்பிக்கையில்லாத் தீர்மானத்தை எடுத்துக் கொள்ள வேண்டுமென்று போட்டிருந்தால் கட்டாயம் அதைதான் எடுத்துக் கொண்டிருக்க முடியும். கவர்னர் மெசெஜ் அனுப்புகிறார்கள். 'எனி அதர் பிசினெஸ்' என்று எட்டாவதாக இருப்பதை முதலிலே கொண்டு வருகிறீர்கள். சட்டசபை விதிகளை சஸ்பெண்ட் செய்து நடத்துவோம் என்று சொல்கிறீர்கள். இன்றைக்கு சட்டசபையில் புரொசீஜரைக் கேட்க நீதிமன்றத்திற்கு அதிகாரமில்லை. ஏனென்றால் நாம் அந்த மரபுகளைக் காப்பாற்றுவோம் என்று நீதிமன்றம்கூட புரொசீஜரில் தலையிடக்கூடாது என்று அரசியல் சட்டத்திலே கூறியிருக்கிறார்கள். இது எதைக் காட்டுகிறது? இது நமக்குள்ள பெருமையைக் காட்டுகிறது. நீதிமன்றத்திற்குக் கேட்பதற்கு அதிகாரம் இல்லை என்று சொல்லும்பொழுது இந்த

மன்றத்தின் விதிமுறைகள் நன்றாகப் பாதுகாக்கப்பட வேண்டும், ஒழுங்காகச் செய்ய வேண்டுமென்ற பண்பாட்டோடு நாம் நடந்து கொள்ள வேண்டாமா?

நூற்று எண்பது பேர் இருப்பதால் உடனடியாக எழுந்து 'ரூல் 53 சஸ்பென்ஷன்' என்று சொல்வதா? ஸ்பீக்கர் மேல் நம்பிக்கையில்லாத் தீர்மானம் கொடுத்திருந்தால் அது எந்த அங்கத்தினருக்கும் வரவில்லை, அது ஆபீசில் இருந்தது, அது வந்திருந்தால் எதிர்க்கட்சியிலே உள்ள நாங்களும் உங்களோடு சேர்ந்து, அவர் அநியாயம் செய்திருந்தார் என்றால் உங்களோடு சேர்ந்து ஓட்டுப்போட்டிருப்போம். நல்ல சபாநாயகரைத் தேர்ந்தெடுங்கள் என்று சொல்லியிருப்போம். ஆனால் நீங்கள் சபாநாயகர் என்ன தவறு செய்தார் என்றே சொல்லவில்லையே. நூற்று எண்பது பேர்கள் விருப்பப்பட்டார்கள் என்பதற்காகக் காரணம் இல்லாமல் செய்தால் எப்படி? அவர் பாரபட்சமாக நடந்துகொண்டார், இந்தத் தவறுகளையெல்லாம் செய்தார், இதை நீங்களும் புரிந்துகொள்ளுங்கள் என்று பேச வைத்திருந்தால் சரியாக இருந்திருக்கும். எங்களுக்குப் பிடிக்கவில்லை, வேண்டாம் என்றால் அது ஜனநாயகமா? எனக்கு ஒருவரைப் பிடிக்காத காரணத்தால் அவர் போய்விடவேண்டும். பிடித்தால் உட்கார வேண்டும் என்று செய்வது? ஒரு பழமொழி சொல்வார்கள், பிடித்து வைத்தால் பிள்ளையார், வழித்துப்போட்டால் சாணி என்று, அதுபோல அதிகாரத்தைக் கையிலே வைத்துக்கொண்டு இப்படிச் செய்தால் அது ஜனநாயகத்தைப் படுகொலை செய்வதைத் தவிர வேறல்ல என்று வெளியில் சொல்வதைக் கேட்கிறோம்.

சட்டசபை விதிகளின்படி பார்த்தால் 181 (2) ஆர்ட்டிகிளிலே சபாநாயகருக்கு விவாதத்திலே பதில் சொல்வதற்கு வாய்ப்பிருக்கிறது, அந்த வாய்ப்பை நீங்கள் கொடுத்தீர்களா? நீங்கள் செய்த நடவடிக்கைகளைப் பார்த்தால் எப்படியிருக்கிறது? முதலில் சபாநாயகரை நீக்கிவிட்டுத்தான் பிறகு துணை சபாநாயகரை உட்கார வைக்க வேண்டும். நீங்கள் முதலில் அந்தத் தீர்மானத்தைக் கொண்டு வந்திருக்க வேண்டும், ஆனால் பிறகு கொண்டு வந்திருக்கிறீர்கள். இப்படியெல்லாம் துக்ளக் மாதிரி முன்னும் பின்னுமாக அவசரத்தில், ஆத்திரத்தில் முடிவுகளை எடுத்திருக்கிறீர்கள். அச்சடிப்பதிலேயும் கூச்சல் குழப்பம் என்று



போட்டு எதிர்க்கட்சியிலே உள்ள எங்களுடைய மதிப்பைக் குறைப்பது என்றால் எங்களுக்கு என்ன பாதுகாப்பு இருக்கிறது?

(திரு. பழனிவேல் ராஜன் தலைமை).

எண்ணிக்கையில் நாங்கள் குறைவு. உங்களுக்கு புரூட்டல் மெஜாரிட்டி இருக்கிறது என்பதற்காக நீங்கள் எதை வேண்டுமானாலும் செய்யலாமா? இதை நீதி மன்றம் கேட்க முடியாது, அந்த அளவிற்குப் பெருத்த அதிகாரத்தைக் கொடுத்திருக்கிறார்கள். அதை எவ்வளவு கண்ணியமாகக் காப்பாற்ற வேண்டும்? ஜனநாயகத்திற்குப் புறம்பாகப் போகாமல், எதிர்க்கட்சிகளுக்கும் நம்பிக்கையுள்ள வகையில் நடப்பதுதான் நல்ல ஜனநாயக உணர்வுள்ள கட்சியின் லட்சியமாக, இலட்சணமாக இருக்க வேண்டும். அதைவிட்டு, எண்ணிக்கையை நிறைய வைத்திருக்கிறோம் என்பதற்காக எதை வேண்டுமானாலும் செய்யலாம், சட்டசபை நடவடிக்கைகளின் ரிப்போர்ட்டை எப்படி வேண்டுமானாலும் டைப் அடிக்கலாம், அச்சிடலாம் என்றால் நாளைக்கு யாரும் சபாநாயகராக வருவதற்கே பயப்படுவார்கள். எனக்குக் கூட ஒரு சந்தேகம். திரு. சீனிவாசன் அவர்கள் உள்ளத்திலேகூட பயந்து கொண்டிருப்பார்கள், நாளைக்கு அந்த சீட்டிலே இருந்தால் என்னவாகுமோ என்று உள்ளத்திலே பயந்து கொண்டிருப்பார்கள், ஆனால் வெளியிலே தெரியவில்லை என்று கருதுகிறேன்.

யார் இனி சபாநாயகராக வந்தாலும் பாரபட்சமற்ற முறையில், அச்சமில்லாமல், நியாயமான முறையில் பணியாற்ற முடியும் என்ற உணர்வு சாகடிக்கப்பட்டு விட்டது என்பது உண்மையிலேயே வருந்தத்தக்கது. துணைச் சபாநாயகர் அவர்கள் சட்டப் படிப்பு படித்தவர்கள். சட்டத்திற்கு மதிப்புக் கொடுக்க வேண்டியவர். 'மெஜாரிட்டி இதைச் செய்' என்று சொன்னாலும் மனச்சாட்சிக்கு விரோதமாக அவர் இதைச் செய்திருக்கக்கூடாது. நியாயமான முறையில் சட்டத்திற்கு உட்பட்டே அவரை எப்படி வேண்டுமானாலும் நீங்கள் நீக்கியிருக்கலாம். ஒழுங்கான முறையில் செய்திருக்கலாம். இங்கிலாந்தில் ஒரு தவறைச் செய்தால்கூட சட்டப்படி செய்வார்கள். ஒரு நாயைக் கொல்ல--
call it bad and then kill it என்று சொல்வார்கள். ஆனால் நீங்கள் மரபைக் காப்பாற்றவில்லை. அவசரக் கோலத்தில் அள்ளித் தெளித்துவிட்டீர்கள். சரி நடக்கட்டுமே, மைலாப்பூரில் நடந்தால் என்ன?

மாம்பலத்தில் நடந்தால் என்ன? உங்களுக்கு எண்ணிக்கை பலம் இருக்கும் வரையில் எந்தச் சதியும் எதுவும் செய்துவிட முடியாது. அதைவிட்டு சர்வாதிகார முறையில் ஜனநாயகத்தைத் தங்களுடைய விருப்பத்திற்கேற்றவாறு திருப்பிக் கொள்ளுவது கொஞ்சம்கூட நல்லது அல்ல.

எங்களுக்குப் பாரபட்சமற்ற சபாநாயகர் தேவை. ஆனால் ஆளுகின்றவர்களுடைய விருப்பத்திற்கேற்ப நியாயத்தைத் தூக்கி எறிந்தவர் சபாநாயகராக இருந்தால் எப்படி எதிர்க்கட்சியினராகிய எங்களுக்கு நியாயம் கிடைக்க முடியும்? நாங்களே எண்ணிக்கையில் குறைவு. எந்த நியாயத்தை அவரிடமிருந்து நாங்கள் எதிர்பார்க்க முடியும்? அன்று நடந்து கொண்ட முறை அவமானம் தரத்தக்கதாகும். எந்தக் காலத்தில் இப்படி சபாநாயகர் போர்டு தூக்கி எறியப்பட்டது? எந்தக் காலத்தில் இப்படி உடனே கார் பிடுங்கப்பட்டது, வீட்டைக் காலி செய் என்று சொல்லப்பட்டது? எந்தக் காலத்திலே எனக்கு வீட்டைக் கொடு, காரைக் கொடு என்று சபாநாயகர் கோர்ட்டிலே போய் கேட்க வேண்டிய அவமானம் ஏற்பட்டது? (சிரிப்பு. ஆரவாரம்) அவரை அந்தக் கதிக்கு ஆளாக்கியது நீங்கள்தானே. அவரைச் சபாநாயகராக ஆக்கியதும் நீங்கள்தானே. உங்களுடைய அரசியல் அறிவை எப்படி எடை போடுவது? அவரைச் சபாநாயகராக்கிய நீங்களே இப்படி அவசரப்பட்டு காரைப் பிடுங்குவது, வீட்டைப் பிடுங்குவது என்பது கேலிக் கூத்தாக இருக்கிறது. ஆகவே, துணைச் சபாநாயகர் அவர்களே, நீங்கள் இந்தப் பதவியை மீண்டும் ஏற்காமல் இருப்பது நல்லது. அப்படி ஏற்காமல் நீங்கள் ஒத்துழைப்பீர்களானால் எங்களுடைய ஜனநாயகத் தீர்மானமும் வெற்றி பெறும் என்று கூறி என்னுடைய வார்த்தைகளை முடித்துக் கொள்கிறேன்.

**திரு. என். கணபதி:** மாண்புமிகு அவைத் தலைவர் அவர்களே, எதிர்க்கட்சியிலிருந்து கொண்டு வந்திருக்கக்கூடிய இந்த விசித்திரமான தீர்மானத்தை எதிர்த்து என்னுடைய கருத்துக்களைச் சொல்ல விரும்புகிறேன்.

ஜனநாயகம், ஜனநாயகம் என்று வாய் கிழியப் பேசுகின்ற எதிர்க்கட்சி நண்பர்கள் தங்கள் ஜனநாயகப் பாரம்பரியத்தை எவ்வளவு தூரம் காப்பாற்றி இருக்கிறார்கள் என்பதை ஒருமுறை



சிந்தித்துப் பார்க்க வேண்டும். எனக்கு முன்னால் தீர்மானத்தை ஆதரித்துப் பேசிய திருமதி அனந்தநாயகி அம்மையார் அவர்கள் ஒரு கட்சியின் சார்பில் தேர்தலுக்கு நின்று அந்தக் கட்சியிலிருந்து வேறு ஒரு கட்சிக்கு மாறி, முன்னால் அவரைத் தேர்ந்தெடுத்த கட்சியினர் அவர் வீட்டு முன்னால் மறியல் செய்தபோது, பதவியை விட்டுவிடு என்று வீட்டு முன்னால் மறியல் செய்தபோது, போலீஸ் பாதுகாப்பை நம்முடைய கலைஞர் அவர்கள் மூலம் பெற்றுக்கொண்டு அந்தப் பதவியில் இருந்து கொண்டிருப்பவர் தான் ஜனநாயகத்தைப் பற்றி . . . .

**திருமதி த. ந. அனந்தநாயகி:** போலீஸ் பாதுகாப்பை முதலமைச்சர் மூலமாகத்தான் பெறுவார்கள். உங்கள் அப்பா வீட்டுச் சொத்தைக் கொடுத்த மாதிரிப் பேசுகின்றீர்களே.

**மாண்புமிகு மாற்றுத் தலைவர் (திரு. பழனிவேல் ராஜன்):** மாண்புமிகு உறுப்பினர் திருமதி அனந்தநாயகி அவர்கள் கோபம் வந்தாலும் வார்த்தைகளை அளந்து பேச வேண்டுமென்று கேட்டுக் கொள்கிறேன். 'உங்கள் அப்பா வீட்டுச் சொத்தா?' என்ற முறையில் சொல்லுவது முறையல்ல.

THIRUMATHI T. N. ANANDANAYAKI: That is quite parliamentary and I can challenge it. You can refer it to any committee.

MR. CHAIRMAN (THIRU PALANIVEL RAJAN): It may be parliamentary but it is not proper.

**திரு. என். கணபதி:** தலைவர் அவர்களே, நம்முடைய உறுப்பினர் அவர்கள் தந்த விளக்கத்திற்கு நன்றி. ஜனநாயக நாட்டில் இருக்கின்ற அதிகாரிகள் எல்லாம் மக்களுடைய சேவகர்கள். சாதாரண ஒரு பிரஜை போலீஸ் பாதுகாப்பு வேண்டுமென்றால் நேரடியாகப் போலீஸ் ஸ்டேஷனுக்குச் சென்று சொன்னால் பாதுகாப்புக் கொடுக்கிறார்கள். ஆனால் நம்முடைய சட்டமன்ற உறுப்பினர் முதலமைச்சர் முன்னால் இருக்கிறார் என்ற காரணத்தால் முதலமைச்சரிடத்தில் பாதுகாப்புக் கேட்டார்கள் என்றுதான் சொல்ல வந்தேன் தவிர . . .

THIRUMATHI T. N. ANANDANAYAKI: That is the privilege of a member.

திரு. என். கணபதி : அது உறுப்பினர்களின் உரிமை என்று சொல்லுகிறார். அதைத்தான் குறிப்பிட்டேன். ஒரு கட்சியில் இருந்து வெற்றி பெற்று இன்னொரு கட்சிக்குப் போய் அந்தப் பதவியில் இருந்து கொண்டே ஜனநாயகத்தைக் காப்பாற்றுவதாகச் சொல்லுவதுதான் விசித்திரமாக இருக்கிறது.

அவர் யாருடைய நடவடிக்கையை ஆதரித்துப் பேசுகின்றார் என்பதையும் சற்று யோசித்துப் பார்க்க வேண்டும். கட்சியை விட்டுக் கட்சி மாறியும் பதவியை விட்டுவிடாமல் ஒட்டிக் கொண்டிருக்கும் மாண்புமிகு உறுப்பினரும், 185 சட்டமன்ற உறுப்பினர்கள் கையெழுத்துப் போட்டு பதவியை விட்டு விலகு என்று கேட்டுக்கொண்ட நேரத்திலும் பதவியை விட்டு விலகாமல் அட்டை போல் ஒட்டிக் கொண்டிருந்த அந்த மதியழகனும் 'பதவியை விட்டு விலகாத சாதி' என்ற முறையில் ஆதரிக்கிறாரா என்பதைத் தெரிந்து கொள்ள விரும்புகிறேன்.

இவர்கள் பேசுகின்ற பேச்சுக்கள்—'ஜனநாயகத்தைக் காப்போம்', 'அவையின் உரிமையைக் காப்போம்' என்று இடும் முழக்கங்கள் எல்லாம் வெத்து வேட்டாக இருக்கிறதே தவிர, அவற்றை மனப்பூர்வமாகச் சொல்லும் சொல்லாக எடுத்துக் கொள்ளத் தேவையில்லை.

சட்டப் பேரவைத் தலைவர்கள் எவ்வளவு பெரிய பாரம்பரியத்தில் இந்தச் சபையின் தலைவர்களாக இருந்தார்கள் என்பதைச் சற்றுச் சிந்தித்துப்பார்க்க வேண்டும். ஆங்கில நாட்டில் பாராளுமன்றம் தோன்றி ஏறக்குறைய 700 ஆண்டுகள் ஆகின்றன. இந்த 700 ஆண்டுகளில் சபாநாயகர் கவுரவக் குறைவாக அல்லது சட்டவிரோதமாக, ஜனநாயகத்திற்கு விரோதமாக நடந்தார் என்ற நிலைமை கிடையாது. சபாநாயகருக்கு இருக்கின்ற உரிமைகளைப் பயன்படுத்தி சபையை நடக்கவொட்டாமல் தடுத்தார் என்ற நிலைமை கிடையாது. சபாநாயகரின் உரிமையைப் பயன்படுத்தித் தேர்ந்தெடுக்கப்பட்ட மக்களின் பிரதிநிதிகள் அவையில் அமைதியாகக் கூடி நாட்டு மக்களின் பிரச்சினைகளைக் கவனிக்கக்கூடிய நிலைமையை அழிக்கின்ற அந்த நிலைமை எந்த நாட்டிலும் ஏற்பட்டது கிடையாது. நம்முடைய துரதிருஷ்டம் இந்தத் தமிழக சட்டப் பேரவையில் இப்படி ஒரு சபாநாயகர் வந்து சேர்ந்தார் என்று வருத்தப்படக்கூடிய நிலைமை ஏற்பட்டிருக்கிறது. இந்தச்





சூழ்நிலையை உருவாக்கிய அந்தச் சபாநாயகரை, ஜனநாயகப் பாரம்பரியத்தைக் கெடுத்த சபாநாயகரை, அந்தப் பதவியில் உட்கார்ந்து கொண்டு தன்னுடைய பதவியைத் துஷ்பிரயோகம் செய்த சபாநாயகரை விலக்குவதற்கு சபையின் பெரும்பான்மை உறுப்பினர்கள் எடுத்துக்கொண்ட நடவடிக்கை தவறு என்ற அளவில் பேசுகின்றார்கள். இப்படி அவர்கள் பேசுகின்ற நேரத்தில் எனக்கு எழுகின்ற சந்தேகம் எல்லாம் முன்னாள் சட்டப் பேரவைத் தலைவர் மதியழகன் சொல்லுகின்ற ஜனநாயகத்தைத்தான் தங்களுடைய ஜனநாயகம் என்று அவர்கள் ஏற்றுக் கொண்டிருக்கிறார்களா என்பதைத்தான் நான் தெரிந்துகொள்ள விரும்புகிறேன்.

இங்கிலாந்து நாட்டின் 700 ஆண்டு ஜனநாயகப் பாரம்பரியத்தில் நடந்த ஒரே ஒரு நிகழ்ச்சியை மாத்திரம் உங்களுக்குக் கவனப்படுத்த விரும்புகிறேன். இரண்டாம் தேதியன்று இந்தச் சபையில் எடுத்த நடவடிக்கை நல்லது, ஜனநாயக உரிமையைப் பாதுகாக்கக்கூடியது என்பதை இந்த நேரத்தில் தெரிவிக்கக் கடமைப்பட்டிருக்கிறேன். 1881-ம் ஆண்டு ஏறக்குறைய நூற்றுக்கு மேற்பட்ட உறுப்பினர்கள் பேசுகின்ற இங்கிலாந்து நாட்டுப் பாராளுமன்றத்தில், ஐரிஷ் நாட்டைச் சேர்ந்த மெம்பர்கள் பேசுகின்ற விவாதத்தில் நேரம் வரையறுக்க முடியாத நிலைமை இருந்தது. 1881 ஜனவரி 31-ம் தேதி பாராளுமன்றம் கூடுகிறது. தொடர்ந்து நிகழ்ச்சிகள் நடந்துகொண்டே இருக்கின்றன. பிப்ரவரி 2-ம் தேதி மாலை 4 மணி வரை பாராளுமன்றம் நடந்து கொண்டே இருக்கிறது. 41 மணி நேரம் தொடர்ந்து பாராளுமன்றம் நடந்த நேரத்தில் ஒரு அரசியல் நெருக்கடி ஏற்படுகிறது. இருக்கின்ற பாராளுமன்ற விதிமுறைகளின்படி பார்த்தால் ஐரிஷ்காரர்கள் சேர்ந்துகொண்டு பேசிக் கொண்டிருப்பதை, பாராளுமன்ற நடவடிக்கைகளைத் தடுத்துக் கொண்டிருப்பதை 'நிறுத்துவதற்கு விதிமுறைகளின்படி ஒன்றும் செய்ய முடியாத நிலை. அந்த நிலையில் சபாநாயகர் விதிமுறைகளுக்கு உட்படாத ஒரு செயலைச் செய்கிறார். என்ன செய்தார்? 'அடுத்து எந்த உறுப்பினரையும் பேச நான் அழைக்கவில்லை. இப்போது அரசாங்கத் தீர்மானத்தை வாக்கெடுப்புக்கு விடுகிறேன்' என்ற முறையில் நடவடிக்கை எடுத்தார். ஆகவே, நெருக்கடி ஏற்படுகிற நேரத்தில், 13-ம் தேதியன்று சபாநாயகர் மீது நம்பிக்கையில்லாத் தீர்மானம் இருக்கிறது

[திரு. என். கணபதி] [1973 பிப்ரவரி 5

என்று தெரிந்தும், அந்தத் தீர்மானம் நிறைவேறவொட்டாமல் தடுப்பதற்காக அன்றைக்குச் சபையை ஒத்திப் போட்டுவிட்டார். பிறகு டிசம்பர் மாதம் 2-ம் தேதி அவை கூடும்போது வேறு ஒரு நம்பிக்கையில்லாத் தீர்மானம் இருக்கிறது என்று தெரிந்தும், 185 உறுப்பினர்கள் கையெழுத்துப் போட்டு சபாநாயகர்மீது நம்பிக்கை இல்லை என்று தெரிவித்தும் அவர் டிசம்பர் 2-ம் தேதி சபாநாயகர் ஆசனத்தில் அமர்ந்து கொண்டு அந்தத் தீர்மானம் வரவொட்டாமல், அரசாங்க அலுவல்கள் நடைபெறவொட்டாமல், மக்களுக்குச் செய்யவேண்டிய சட்டதிட்டங்கள் நிறைவேற வொட்டாமல், கவர்னர் ஆற்றிய பேருரை பற்றித் தீர்மானம் நிறைவேற்றவொட்டாமல், தடுப்பு நடவடிக்கை எடுத்துக்கொண்
பி.ப 12-30 டிருந்தார் என்பதை யாரும் மறுக்க முடியாது.

தான் பதவியில் இருக்கவேண்டும், தனக்கிருக்கிற பதவியையும், அதிகாரத்தையும் பயன்படுத்தி இந்த சபையை நடக்கவொட்டாமல் செய்ய வேண்டுமென்று—இங்கு ஏதோ ஆளும் கட்சியினர் சதி செய்து அவர்களை நீக்கினார்கள் என்று சொன்னார்கள். எதிர்க்கட்சிக்காரர்களும், சபாநாயகரும் சேர்ந்து கொண்டு அன்றையதினம் சதி செய்து தமிழ்நாட்டு சட்டமன்றத்தையே கலைக்கக்கூடிய நிலையை உருவாக்கிய சதிக்கு உடந்தையாக இருந்தவர்கள் இங்கிருக்கிற எதிர்க்கட்சிக்காரர்கள்தான் என்பதை இந்த நேரத்தில் நான் தெரிவித்துக்கொள்ளக் கடமைப்பட்டிருக்கிறேன். அப்படிச் சதி செய்து மக்களால் தேர்ந்தெடுக்கப்பட்ட பெரும்பான்மை உறுப்பினர்களால் அமைக்கப்பட்டதொரு அரசை அகற்ற, பெரும்பான்மை உறுப்பினர்களைக் கொண்டு ஒரு கட்சி சட்டமன்றத்தை நடத்த முடியாத ஒரு நிலையை உருவாக்க எதிர்க்கட்சிக்காரர்களும் சபாநாயகர் அவர்களும் சேர்ந்து செய்த ஒரு சதியை முறியடிக்கக் கூடிய விதத்தில் மாண்புமிகு துணைத் தலைவர் அவர்களே. நீங்கள் ஜனநாயக பாரம்பரியத்தைக் காப்பாற்றுகிற வகையில் அன்றைய தினம் நடந்துகொண்டிருக்கிறீர்களே, அதற்காக அகில உலகமும் உங்களைப் போற்றிக் கொண்டிருக்கிறது என்பதை மாத்திரம் இந்த நேரத்தில் இங்கு தெரிவித்துக்கொள்ள நான் கடமைப்பட்டிருக்கிறேன்.

திரு. சஞ்சீவி ரெட்டி அவர்கள் மக்கள் அவைத் தலைவராக இருந்தபோது, அவர்கள் 1968-ல் பாராளுமன்றத்தில் - லோக்சபாவில் தலைவராக இருந்தபோது, அப்போது நடைபெற்ற பேரவைத்



1973 பிப்ரவரி 5] [திரு. என். கணபதி]

தலைவர்கள் மாநாட்டில் கலந்துகொண்டு ஒன்றைச் சொல்லியிருக்கிறார்கள். யாருக்கு சபை அலுவல்களையும் உரிமைகளையும் பாதுகாக்கக்கூடிய அதிகாரம் இருக்கிறதென்றால் அது அவைக்குத்தான் உண்டு—அவைக்குத்தான் உண்டு என்று கூறுகிற நேரத்தில் அது அவையிலுள்ள பெரும்பான்மை பலம் மிக்க அந்தக் கட்சிக்குத்தான் உண்டு என்பதை அவர்கள் சபாநாயகராக இருந்த நேரத்தில் வலியுறுத்திச் சொல்லியிருக்கிறார்கள். அவர்கள் சொல்லியதெல்லாம்,

No Presiding Officer can ignore that it is the privilege of the House and House alone to decide how long it should sit and what business it should transact.

எவ்வளவு நேரம் அது இருக்கவேண்டும், எந்தெந்த அலுவல்களை அது பார்க்க வேண்டும் என்பதெல்லாம் அவைக்கு உள்ள உரிமையே தவிர சபாநாயகருக்குள்ள உரிமை அல்ல என்பதைச் சொல்லியிருக்கிறார்கள். பாரம்பரியம் மிக்க சபாநாயகர்கள், இங்கிலாந்து நாட்டிலுள்ள பாரம்பரியமிக்க சபாநாயகர் அன்றைய தினம் மன்னன் வந்து கேட்ட நேரத்தில், சார்லஸ் மன்னன் வந்து சபாநாயகர் அவர்களிடம் உறுப்பினர்களைக் காட்டிக் கொடு என்று கேட்டபோது, சபாநாயகர் அவர்கள் எனக்கு கண் கிடையாது, எனக்கு காது கேட்காது, சபை என்ன சொல்கிறதோ அதுதான் எனக்குச் சட்டம், ஆகவே இப்போது எதையும் சொல்வதற்கில்லை என்று அன்றையதினம் ஜனநாயக பாரம்பரியத்தை அவர்கள் காப்பாற்றினார்கள். அப்படி சபை என்ன கருதுகிறதோ, சபையில் உள்ள பெரும்பான்மையினர் என்ன உத்தரவிடுகிறார்களோ அதை நிறைவேற்றுவதற்காகத்தான் இங்கு சபாநாயகர் இருக்கிறாரே தவிர, அதை எதிர்த்து, அதைக் குலைப்பதற்கு, அதைக் குலைப்பதற்காகச் சதி செய்வதற்கு சபாநாயகர் இல்லை என்பதை நாம் எல்லோரும் நன்கு உணர்ந்து கொள்ளவேண்டும். அதை உணர்ந்த காரணத்தில்தான் தாங்கள்—அன்றையதினம் அவை முன்னவர் முன்மொழிந்து—தலைமை ஏற்று இப்போது ஜனநாயகத்தைக் காப்பாற்றியிருக்கிறீர்கள் என்பதை மாத்திரம் இந்த நேரத்தில் தெரிவித்துக்கொள்ள விரும்புகிறேன்.

இன்னும் ஒன்று. இங்கு பேசிய உறுப்பினர்கள் எல்லாம் ஏதோ அன்றையதினம் தலைமை ஆசனத்தில் அமர்ந்திருந்த மதியழகன் அவர்கள் ஏதோ பேச விரும்பியதைப் போலவும், தனக்கு எதிராக

வந்துள்ள தீர்மானத்திற்கு அவர்கள் சமாதானம் சொல்ல விரும்பியதைப் போலவும், அதற்கு நாம் ஏதோ மறுத்ததைப் போலவும் இங்கு பேசிக்கொண்டிருக்கிறார்கள். அன்றையதினம் ஆசனத்தில் அமர்ந்திருந்த மதியழகன் அவர்கள் இங்கு நடைபெற்ற நிகழ்ச்சிகளைப் பற்றிக் கவலைப்படவில்லை. அவர் பார்த்துக் கொண்டிருந்தது எல்லாம் அங்கு உட்கார்ந்திருந்த அவர் அருமை நண்பர்—இன்று சட்டசபை செத்துவிட்டது என்று சொல்லி விட்டுப் போய் விட்டாரே அந்த நண்பரைப் பார்த்துக்கொண்டிருந்தார். அதற்குப் பக்கத்தில் அவருக்கு ஆலோசனைச் சொல்லிக் கொண்டிருந்த நண்பர்களைப் பார்த்துக் கொண்டிருந்தார். அவர்கள் என்ன சொன்னார்களோ அதைக் கேட்டுக்கொண்டிருந்தாரே தவிர "இங்கு கொண்டுவரப்பட்டிருக்கிற தீர்மானத்தில் நானும் பங்கு கொண்டு என் கருத்துக்களைச் சொல்ல விரும்புகிறேன், அரசியல் அமைப்புச் சட்டத்தில் எனக்குத் தரப்பட்டிருக்கும் உரிமையைப் பயன்படுத்தி நான் பதில் சொல்லவேண்டும், நான் அதன்மீது வாக்களிக்கவேண்டும்" என்று அவர் கேட்டிருந்தால் இங்குள்ள பெருந்தன்மை மிகுந்த உறுப்பினர்கள் நிச்சயமாக அதற்கு ஒப்புக் கொண்டிருப்பார்கள். ஆனால் அவர் அதைச் செய்யவில்லை. இங்குள்ள பெரும்பான்மை உறுப்பினர்களை அவர் அச்சமென மதித்தார். கோர்ட்டுக்குச் சென்ற பிறகு மட்டும் தன் பதவியைக் காப்பாற்றிக் கொள்ள முடியாவிட்டாலும் தனக்கு கார் கிடைத்தால் போதும் அல்லது பங்களா கிடைத்தால் போதும், இன்னும் கொஞ்ச நாட்களுக்கு அனுபவிக்கலாமே என்ற ஆசையில் கோர்ட்டுக்கு சென்ற போது முதலில் நடந்த வாதத்தில் எடுத்துச் சொல்லும்போது இதைப்பற்றி அதிகம் சொல்லாமல் வேறு பிரச்னைகளை எடுத்துச் சொல்லி, நீதிமன்றத்தில் ஒத்துக் கொள்ளாமல் போனபோது இந்த வாதத்தை எடுத்துச் சொன்னார்கள். நான் அப்போது சபையிலிருந்தேன். என்னை பாதுகாத்துக் கொள்ளக் கூடிய சந்தர்ப்பம், பேச்சு உரிமை தரப்படவில்லை, நான் வாக்களிக்கும் உரிமை எனக்குத் தரப்படவில்லை, என்று எடுத்துச் சொன்னார்கள். அப்போது நீதிபதி அவர்கள் கேட்டார்கள், உங்கள் பிரமாணப் பத்திரத்தில், அஃபிடவிட்டில் எங்கே அதைக் குறிப்பிட்டிருக்கிறீர்கள் என்று கேட்டார்கள். அப்படி கேட்டவுடன் அவருக்காக ஆஜரான வழக்கறிஞர் அஃபிடவிட்டை தடவித் தடவிப் பார்த்து, துருவித் துருவிப் பார்த்து, அந்தப் பிரச்னை எழுப்பப்படவில்லை எனக்கண்டு மறுநாள் நல்ல அஃபிடவிட்





போடுகிறோம் என்று சொல்லி, மறுநாள் காலையில் வேறு அஃபிடவிட் போட்டு, அதில் எனக்கு அந்த உரிமை தரப்படவில்லை என்று கூறி, பிறகு தன் வழக்கு நிற்கமுடியாது, கார் அல்லது வீடாவது நிற்கவேண்டுமென்ற காரணத்தினால் பின் யோசனையின் மூலம் இப்படிப்பட்ட ஒரு பிரச்னையைக் கிளப்பி யிருக்கிறார்கள், அவர் விரும்பியிருந்தால் நிச்சயமாக அவர் இங்கு பதில் சொல்லி யிருக்கலாம், அவர் ஆசைப்பட்டிருந்தால் நிச்சயமாக அவர் வாக்களித்திருக்கலாம். ஆனால் இங்கிருப்பவர்களெல்லாம், ஏதோ இன்றையதினம் செத்துவிட்டது, செத்துவிட்டது என்று சொல்கிறார்களே அதேபோல் அன்றையதினம் நாம் செத்துவிட்டதாகக் கருதித்தான் அவர் அங்கு 30,35 பேர்களை வைத்துக் கொண்டு ஒரு நிலைமையை ஏற்படுத்திக்கொண்டிருந்தாரே தவிர அவர் விரும்பி யிருந்தால் நிச்சயமாக அவருக்கு நல்ல வாய்ப்பு கிடைத்திருக்கும். பதில் சொல்லியிருக்கலாம். பல்வேறு பிரச்னைகளை அவர் அந்தப் பதவியில் இருந்துகொண்டு எடுத்துச் சொல்லிக் கொண்டிருந்தார். அவர் தன் பதிலை சொல்லியிருக்கலாம் விரும்பியிருந்தால் என்று தெரிவித்துக்கொண்டு பேரவைத் துணைத் தலைவர் அவர்களே, உங்களுக்கு என் பாராட்டுதல்களை இந்த நேரத்தில் தெரிவித்துக் கொண்டு, ஸ்பீக்கர் ப்ரான்ட்-க்கு, அந்த ஜரிஜ்காரருக்கு கிடைத்த பரிசை உங்களிடம் சொல்லிக்கொண்டு முடித்துக்கொள்கிறேன்.

He performed his task with quiet resolve, bolstered by his conviction as to its necessity and by the knowledge that his action would command the overwhelming support of the House.

வரலாற்றுச் சிறப்புமிக்க நிகழ்ச்சியை நடத்திய அந்த ஸ்பீக்கருக்குக் கிடைத்த பாராட்டுரையை, அதே பாராட்டுரையை தங்களுக்கு நான் வழங்கி, ஜனநாயகப் பாரம்பரியத்தைக் காப்பாற்றிய தங்களுக்கு என்றென்றும் தமிழ்நாடும் ஜனநாயக உலகமும் கடமைப்பட்டிருக்கிறது என்று கூறிக்கொண்டு என் உரையை முடித்துக்கொள்கிறேன். வணக்கம்.

* **திரு. ஜே. ஜேம்ஸ்:** தலைவர் அவர்களே, சட்டசபை முன் வைக்கப்பட்டிருக்கிற தீர்மானத்தை, அதாவது துணைத் தலைவர் அவர்களை பதவியில் இருந்து நீக்கவேண்டும் என்று வந்திருக்கிற தீர்மானத்தை ஆதரித்து என் கருத்துக்களைக் கூற விரும்புகிறேன்.

தலைவரானாலும் சரி, துணைத் தலைவரானாலும் சரி அவர்களை பதவியில் இருந்து நீக்க வேண்டும் என்று தீர்மானம் கொண்டு

[திரு. ஜே. ஜேம்ஸ்] [1973 பிப்ரவரி 5

வருவதும் அதை முன்னிட்டு உரையாற்றுவதும் உண்மையிலேயே வேதனைக்குரிய ஒன்றுதான். இருந்தாலும் கடந்த டிசம்பர் 2-ம் தேதி இந்த மன்றத்தில் நடந்த நிகழ்ச்சிகளைப் பொறுத்தமட்டில் இந்த மன்றத்தில் ஒரு தீர்மானத்தைக் கொண்டு வந்து, அன்று இந்த மன்றத்தை நடத்திய துணைத் தலைவர் அவர்களை பதவியிலிருந்து நீக்குவதைத் தவிர வேறு வழி இல்லை என்ற காரணத்தினால் கடமையை உணர்ந்து இந்த நாட்டில் ஜனநாயகம் கெட்டுவிடாத முறையில் அதைப் பாதுகாக்கவேண்டுமென்று இது போன்ற நிகழ்ச்சிகள் மேலும் இந்த மன்றத்தில் நடைபெறக் கூடாது என்பதை எடுத்துக்காட்டுகிற முறையில் இந்தத் தீர்மானத்தை ஆதரித்து சில வார்த்தைகள் கூற விரும்புகிறேன். உண்மையிலே திரு. சீனிவாசன் அவர்கள் எனக்கு நெருங்கிய நண்பர். இருந்தாலும்கூட அன்றையதினம் துணைத் தலைவராக அவர் மேற்கொண்ட, ஆற்றிய செயல்கள் எல்லாம் எந்தளவிற்கு இந்த நாட்டில் ஜனநாயகத்தைப் படுகொலை செய்வதற்குக் காரணமாக இருந்தன என்பதைக் கண்டுதான் நான் வேதனைப்படுகிறேன்.

சாதாரணமாக பாராளுமன்றமானாலும் சரி அல்லது இந்த தமிழ்நாடு சட்டமன்றமானாலும் சரி இம்மாதிரியான தீர்மானம் இதுவரையிலும் வரவில்லை என்று நினைக்கிறேன். 1954-ல் பாராளு மன்றத்தில் ஒரு தீர்மானம் வந்ததேதவிர வேறு தீர்மானம் சட்ட மன்றத் தலைவரையானாலும் சரி அல்லது துணைத் தலைவரை யானாலும் சரி மாற்றுவதற்கான தீர்மானம் வரவில்லை என்று நினைக் கிறேன். பாராளுமன்றத்தில் அன்று வந்த தீர்மானம் கூட ஒத்தி வைப்புத் தீர்மானங்கள் பல தள்ளுபடி செய்யப்பட்டன. ஒரு சில ஒத்திவைப்புத் தீர்மானங்களைத்தான் ஸ்பீக்கர் அனுமதித்தார், பல கேள்விகளை அனுமதிக்கவில்லை என்ற சாதாரணக் காரணங்களுக் காகத்தான் அங்கு தலைவர் அவர்களின்மீது நம்பிக்கையில்லாத் தீர்மானம் கொண்டுவரப்பட்டது.

ஆனால் இன்றையதினம் இந்தச் சபையிலே வைக்கப் பட்டிருக்கிற தீர்மானம் மிகவும் முக்கியமான தீர்மானம். ஜனநாயகத்தை படுகொலை செய்யக் காரணமாக இருந்த உதவித் தலைவர் மீண்டும் அந்தப் பதவியில் நீடிக்கத் தகுதியுடையவரா என்ற காரணத்தை முன்னிட்டுத்தான், அவரைப் பதவிலிருந்து



1973 பிப்ரவரி 5] [திரு. ஜே. ஜேம்ஸ்]

நீக்கவேண்டுமென்ற முறையில் இந்தத் தீர்மானம் கொண்டு வரப் பட்டிருக்கிறது. அன்றையதினம் நடைபெற்ற நிகழ்ச்சியைப் பற்றி எனக்கு முன்பு பேசிய மாண்புமிகு நண்பர்களும், தலைவர் களும் எடுத்துக் கூறினார்கள். இந்தச் சபையில் ஒரே நேரத்தில் இரண்டு பேரல்ல ப்ரொசிடிங்ஸ் நடைபெற்று இருக்கிறது என்பதை யாரும் மறுத்துக் கூறவில்லை. அன்றைய தினம் சபைத் தலைவர் அவர்கள் நடவடிக்கைகளை நடத்திக் கொண்டிருக்கிற போது திடீரென்று மாய நாற்காலி கொண்டு வரப்பட்டது. அந்த நாற்காலி அதோ அந்த இடத்தில் அமைக்கப்பட்டு—துணைத் தலைவர் அவர்களை அமரச் செய்தார்கள். அந்த இடத்தில் தான் டிசம்பர் 2-ம் தேதி ஜனநாயகம் சட்டமன்றத்திலே படுகொலை செய்யப்பட்டது. இந்த அரசைக் கேட்டுக்கொள்கிறேன், வருங் கால சந்ததியினர் இந்த மாதிரிச் செயலைச் செய்யாமலிருக்க அதே இடத்தில் ஒரு நினைவுச் சின்னத்தை ஏற்படுத்தவேண்டும். அப்படிச் செய்தால் இனிமேல் இந்த மாதிரியான நடவடிக்கைகள் நடக் காமல் இருப்பதற்கு ஏதுவாக இருக்கும் என்று கேட்டுக் கொள் கிறேன்.

ஒரு வேளை சட்டமன்றத் தலைவர் முறை தவறி நடந்து இருக் கலாம். 180 அங்கத்தினர்களை வைத்துக்கொண்டு சபைத் தலைவரை விலக்க வன்முறை கையாளப்பட வேண்டுமா? நம்முடைய விதிமுறைகளின் அடிப்படையில் அவரை மாற்ற வழியில்லையா என்று கேட்டுக்கொள்ள ஆசைப்படுகிறேன். 2-ம் தேதியன்று சட்டசபைத்தலைவர் அங்கே ஆசனத்தில் அமர்ந்து இருக்கிற போது, துணைத்தலைவர் மாய ஆசனத்தில் அமர்ந்து இருக்க, இரண்டு சட்டசபை நடைபெற்றது. பாராளுமன்றத்தில் சாதாரண மாக சபைத் தலைவர் இருக்கிறபோது நிச்சயமாக துணைத் தலைவர் அவர் பக்கத்தில் அமர மாட்டார். நம்முடைய பாராளுமன்றத் தலைவர் கூட இந்த நிகழ்ச்சியைக் கேள்விப்பட்டு ஒரு கருத்தைத் தெரிவித்தார்கள். 'எனது துணைத்தலைவர் எனது பக்கத்தில் அமரும் நிகழ்ச்சி சரித்திரத்தில் நிச்சயமாக நடக்காது' என்று சொன்னார்கள்

"The Deputy Speaker takes the Chair in the House of Commons during the unavoidable absence of the Speaker. Even that is only after the Clerk of the Commons informs to the House of the Speaker's unavoidable absence.

என்று ஹவுஸ் ஆப் காமன்ஸ் நடவடிக்கை குறிப்பில் இருக்கிறது.

[திரு. ஜே. ஜேம்ஸ்] [1973 பிப்ரவரி 5

ஆனால் நமது தமிழ்நாட்டு சட்டசபையில் நடந்தது என்ன? சபாநாயகர் இருக்கையில் அமர்ந்திருக்கிறபோது துணைத் தலைவர் மைய நாற்காலியில் அமர்ந்து இருந்து சபையை நடத்தியிருக்கிறார்கள் என்று சொன்னால் நிச்சயமாக அது தமிழகத்தில், திராவிட முன்னேற்றக்கழக ஆட்சியில் ஒரு வரலாறு காணாத நிகழ்ச்சியாக இருக்கிறது என்று சுட்டிக்காட்ட விரும்புகிறேன். வரலாறு காணாத நிகழ்ச்சி என்று குறிப்பிடும் போது முதலமைச்சர் அவர்களுக்கு ஆவேசம் வருவது உண்டு, இதற்கு முன்னால் இது போன்ற ஒரு வார்த்தை உபயோகப்படுத்தியபோது ஆத்திரத்தோடு அதற்கு பதில் கூறினார்கள். இப்போது அதை ஏற்றுக் கொள்வார்கள் என்று நினைக்கிறேன். இது போன்று ஒரு நிகழ்ச்சி நமது தமிழகத்தில் தான் நடந்து இருக்கிறது. இந்தியாவிலே வேறு எங்காவது நடந்து இருக்கிறதா என்பதை முதலமைச்சர் அவர்கள் சற்றுச் சிந்தித்துப் பார்க்கவேண்டும். இந்த மன்றத்திற்கு தலைவர், உதவித் தலைவர் தான் உத்தரவாதம் என்று இருந்தாலும் கூட, ஆட்சி பொறுப்பில் இருப்பதால் முதலமைச்சர் அவர்களுக்கும் உத்தரவாதம் இருக்கிறது என்பதை நினைவூட்ட விரும்புகிறேன். இது ஒரு சரித்திரம் காணாத வரலாறு காணாத நிகழ்ச்சி என்பதைச் சுட்டிக்காட்ட விரும்புகிறேன்.

அன்றையதினம் நடந்த நிகழ்ச்சிகளைப் பார்க்கிறபோது எதிர்க்கட்சியில் இருக்கிறவர்களுக்கு உரிமைகள் அளிக்கப்படவில்லை. அது மட்டுமல்ல அன்றையதினம் நான் கூட அரசு மீது கொண்டு வந்த நம்பிக்கை இல்லாத் தீர்மானத்தின் மீது உரையாற்றினேன். அதற்கு எனக்கு மைக் வசதி கொடுக்கப்படவில்லை. அன்று நான் ஆற்றிய உரை அச்சடித்து வெளியிடப்பட்டிருக்கிற நடவடிக்கை ஏட்டில் காணப்படவில்லை. அன்று ஸ்பீக்கர் மீது கொண்டு வந்த தீர்மானமானது எடுத்துக்கொள்வதற்குத் தகுதி வாய்ந்த தீர்மானமாக இல்லாதிருந்தும் கொண்டு வந்தார்கள். ஆனால் இன்று நான் கொடுத்த தீர்மானத்திற்கு 14 நாட்கள் ஆகவில்லை என்ற காரணத்தைக் காட்டி அதை எடுத்துக் கொள்வதற்கு முடியாது என்ற தீர்ப்பைத் துணைத் தலைவர் அவர்கள் வழங்கியிருக்கிறார்கள். அன்றைக்கு ஒருவிதமான தீர்ப்பு இன்றைக்கு அதற்கு முரண்பாடான தீர்ப்பு துணைத் தலைவர் கூறியிருக்கிறார் என்று சொல்லிக் கொள்கிறேன். இதை இந்த மன்றம் கவனித்துக்கொண்டு தான் இருக்கிறது என்றும் கூறிக்கொள்கிறேன்.



1973 பிப்ரவரி 5] [திரு. ஜே. ஜேம்ஸ்]

சட்டசபைத் தலைவர் தலைமை தாங்கி சட்டசபையை நடத்திக் கொண்டிருக்கிறபோது, துணைத்தலைவர் நடத்திக்கொண்டிருந்த சட்டசபை நடவடிக்கைகளை நாடு ஏற்றுக்கொள்ளாது. திராவிட முன்னேற்றக் கழகக் காரியாலயமாக சட்டமன்றத்தை மாற்றிக் கொண்டார், அதற்குத் தலைமை வகித்தார் என்று தான் கூறிக் கொள்வேன். அத்தோடு மட்டுமல்ல, அன்றையதினம் சட்டசபை காரியதரிசி உள்பட எல்லா நிர்வாகத்தினரையும் சட்டவிரோதமான செயல்களுக்கு ஒத்துழைக்க வைக்கத்தான் என்று கூறிக் கொள்கிறேன்.

அது மட்டுமல்ல, துணைத் தலைவர் அன்று சுயமாகச் செயல்படுவதற்கு இந்த அரசு அனுமதிக்கவில்லை என்று இந்த அரசு மீது குறை கூற விரும்புகிறேன். ஒரு வேளை துணைத்தலைவர் தவறு செய்து இருந்தாலும், அதற்கு மூல காரணம் இந்த அரசு என்பதையும் இந்தச் சந்தர்ப்பத்தில் கூறிக்கொள்ள விரும்புகிறேன்.

2—12—1972 அன்று சட்டமன்றத்தில் வன்முறை தூண்டி விடப்பட்டது. சபைத் தலைவர் அவர்களை மாற்றுவதற்கு வன்முறையைத் தூண்டி விட வேண்டுமா என்பதை அரசாங்கம் சற்றுச் சிந்திக்க வேண்டும். இந்த அரசாங்கத்தை மாற்றுவதற்கு மக்கள் வன்முறையைக் கையாண்டால் என்ன ஆகும் என்பதை அரசு சிந்திக்கவேண்டும். 180 அங்கத்தினர்கள் பலம் கொண்ட ஆட்சியாக இருந்தாலும் கூட நியாயமான முறையில், சட்டவிதிமுறைகளின்படி சபாநாயகரை நீக்க வழி இல்லாமல் வன்முறையைத் தூண்டி விட்டு நடத்திய அந்தச் செயல், இந்த நாட்டு மக்களுக்கு அவர்களையும் வன்முறையில் ஈடுபடுவதற்கு வழிகாட்டியாக இருக்கிறது இந்த அரசு என்று எடுத்துக்காட்ட விரும்புகிறேன்.

கடைசியாக, நான் ஒன்றைச் சொல்ல விரும்புகிறேன். சட்டமன்றத்தலைவர், துணைத்தலைவர் ஆகியவர்களை மதிக்கும் பாரம்பர்யம் உள்ளவன் நான். இந்தச் சட்டமன்றத்தில் மதிப்பிற்குரிய மதியழகன் அவர்கள் ரெவின்யூ மினிஸ்டராக இருந்தபோது, அன்றிருந்த எதிர்க்கட்சித் தலைவர் திரு. கருத்திருமன் அவர்கள் வீடு கூறினார்கள், அன்னார் லஞ்சத்தில் ஈடுபட்டு இருக்கிறார்கள், வாங்கியிருக்கிறார்கள் என்று குறை கூறினார்கள். அந்தக்குறை சொல்வதற்குக் காரணமும் காட்டினார்கள். அதற்கு அப்புறம்

[திரு. ஜே. ஜேம்ஸ்] [1973 பிப்ரவரி 5

இந்த அரசு அவர்களைச் சபாநாயகர் பதவிக்குத் தேர்ந்தெடுத்த போது நாங்கள் ஏற்றுக்கொண்டோம். அதற்குத் தலை வணங்கினோம், அவர்களிடத்தில் மரியாதையாக நடந்து கொண்டோம் என்பதையும் கூறிக்கொள்கிறேன்.

சட்டசபைத் தலைவர், சட்டசபைத் துணைத்தலைவர் ஆகிய இருவரும் இந்த சட்டமன்றத்திற்கு ஜனநாயகத்தின் முதல் குழந்தை, இரண்டாவது குழந்தையாக இருக்கிற நிலை இருக்கிறது. ஒரு குழந்தை தனது தாயை எந்த விதத்தில் கொலை செய்கிறதோ, அந்த முறையில் அன்று இருந்த துணைத் தலைவர் ஜனநாயகத்தை படுகொலை செய்தார் என்ற குறையைக் கூறி, அப்படிப்பட்ட பெரும் குற்றத்தைச் செய்த துணைத் தலைவர் அவர்களைப் பதவி யிலிருந்து நீக்க அல்லாது வேறு மாற்றுவழி இல்லை என்று கூறி இந்தத் தீர்மானத்தை ஆதரித்து முடிக்கிறேன்.

**திரு. ஏ. ஆர். பெருமாள் :** பேரவையினுடைய மாண்புமிகு மாற்றுத் தலைவரவர்களே, மாண்புமிகு கம்யூனிஸ்ட் கட்சித் தலைவர் திரு. கே. டி. கே. தங்கமணி அவர்கள் கொண்டு வந்திருக்கக் கூடிய ‘ துணைச் சபாநாயகர் பதவி நீக்கத் ’ தீர்மானத்தை எதிர்த்து, இந்தத் தமிழ்நாடு சட்ட மன்ற வரலாற்றின் பெருமை யையும், ஜனநாயகப் பாரம்பர்யத்தையும் காப்பாற்றித் தந்த துணைச் சபாநாயகர் அவர்களையும் பாராட்டி என்னுடைய கருத்துக் களைச் சொல்ல ஆசைப்படுகிறேன்.

இங்கே பேசியவர்கள் 2-ம் தேதி ஏதோ ஜனநாயகப் படுகொலை நடந்து விட்டதாகச் சொன்னார்கள். நானும் அன்று சபையில் இருந்தேன். ஜனநாயகப் படுகொலை ஒன்றும் நடக்கவில்லை. மாறாக, ஜனநாயகப் படுகொலை நடக்க இருந்தது, தவிர்க்கப்பட்டு, ஜனநாயகம் பாதுகாக்கப்பட்டது. இன்றைக்கு தமிழ்நாட்டு அரசியலில் எந்தத் தவறை யார் செய்கிறார்களோ. எந்தக் குற்றத்தை யார் அதிகமாகச் செய்கிறார்களோ, அவர்களே, அந்தத் தவறைச் செய்யக்கூடியவர்களே, மற்றவர்கள் அந்தத் தவற்றைச் செய்கிறார்கள் என்று குற்றம் சாட்டுகிற அரசியல் இன்றைக்கு நடைமுறையில் இருக்கிறது. ஜனநாயகப் படுகொலை செய்தவர்கள் யார்? அங்கேயிருந்த சபாநாயகர் இங்கே வந்தார், உட்கார்ந்தார். உடனே ஒருவர் பாயின்ட் ஆப் ஆர்டர் என்றார். இந்த நாட்டு மக்கள் அரசாங்கத்தின் மீது நம்பிக்கை இழந்து



1973 பிப்ரவரி 5] [திரு. ஏ. ஆர். பெருமாள்]

விட்டார்கள், இது தான் பாயின்ட் ஆப் ஆர்டர் என்றார். ஆமாம் இது பாயின்ட் ஆர்டர் தான், தேர்தல் நடத்துங்கள் என்று சொல்லி விட்டு ஒத்தி வைத்து விட்டுப் போய்விட்டார். (சிரிப்பு)

இது ஜனநாயகத்தை பால் ஊட்டி வளர்த்த அம்சம் என்று ஒப்புக்கொள்கிறீர்களா? இது ஜனநாயகத்தை அமுது ஊட்டி வளர்த்த கொள்கையா? அது தான் ஜனநாயகப் படுகொலை. மக்களால் தேர்ந்தெடுக்கப்பட்டு வந்தவர்கள் 185 பேர்கள் கையெழுத்துப் போட்டு சபாநாயகர் நீக்கப்படவேண்டும் என்று தீர்மானத்தைப் போட்டு, தீர்மானம் 2-ம் தேதியன்று சட்டமன்றம் கவர்னர் அவர்களால் கூட்டப்பட்டு வருகிறது. அம்மையார் அவர்கள் சொன்னார்கள். 8-வது விஷயமாக இருப்பதை ஏன் முதலில் எடுத்துக்கொள்ளவேண்டும் என்று கேட்டார்கள்? 8-வது விஷயத்தை ஏன் முதலில் எடுத்துக்கொள்ளவேண்டும் என்று கேட்கிறபொழுதே, சர்க்கார் மீது நம்பிக்கை இல்லை என்ற தீர்மானத்தை ஏன் முதலில் எடுத்துக் கொள்ளவேண்டும் என்று நான் திருப்பிக் கேட்கிறேன். இப்படியெல்லாம் இரண்டாம் தேதி யன்று நடைபெற்ற நடவடிக்கைகள் அத்தனையும் எதுவும் எந்த சட்டத்திற்கும் புறம்பான செயல் அல்ல, எதுவும் ஜனநாயகத் திற்குப் புறம்பான செயல் அல்ல. தமிழ் நாட்டில் ஜனநாயகம் படுகொலை செய்யப்படுவதிலிருந்து பாதுகாக்கப்பட்டிருக்கிறது.

நான் ஒன்றைக் கற்பனையாகக் கேட்கிறேன். தமிழ்நாடு சட்ட மன்றத்தின் பாரம்பரியம் பாதுகாக்கப்படவேண்டும், ஜனநாயகம் பாதுகாக்கப்படவேண்டும் என்பதற்காக சபாநாயகர் பதவி யிலிருந்து நீக்கப்படவேண்டும் என்று 185 பேர்கள், தேர்ந்தெடுக்கப் பட்ட உறுப்பினர்கள் கையெழுத்துப்போட்டு தீர்மானம் கொடுத்து விட்டு இங்கே உட்கார்ந்துகொண்டிருக்கும்பொழுது, சபாநாயகர் சர்க்கார் மீது நம்பிக்கை இல்லை என்ற தீர்மானத்தை விவாதத் திற்கு விடுகிறார். நீங்கள் பேசுகிறீர்கள். கற்பனை நிகழ்ச்சி, எப்படி நடக்கும் என்று சிந்தித்துப் பாருங்கள். நீங்கள் பேசு கிறீர்கள். சர்க்கார் மீது நம்பிக்கை இல்லை என்று பேசுகிறீர்கள். கடைசியில் தீர்மானம் குரல் வோட்டுக்கு விடப்படுகிறது. பெரும் பாலானவர்கள் அந்தத் தீர்மானத்தை எதிர்க்கிறோம் என்று சொல்கிறோம். நாங்கள் இல்லை என்று சொல்கிறோம். நீங்கள் எல்லாம் ‘ ஆம் ’ என்று சொல்கிறீர்கள். ஆதரிப்போர் அதிகமாக

இருக்கிறார்கள், இல்லை என்று சொல்பவர்கள் குறைவாக இருக்கிறார்கள். எனவே, சர்க்கார்மீது நம்பிக்கை இல்லை, சர்க்கார் ராஜிநாமா செய்யவேண்டும் என்று சொல்லிவிட்டு சபாநாயகர் போய்விடுகிறார் என்று வைத்துக்கொள்வோம். கற்பனையாகத் தான் சொல்கிறேன். எப்படி இருக்கும்? தமிழ் நாட்டில் ஜனநாயகம் படுகொலை செய்யப்பட்டிருக்கிறது என்று பேசுகிறார்களே அவர்கள் சிந்தித்துப் பார்க்கவேண்டும்.

அத்தனை பேர்களும் இங்கே உட்கார்ந்துகொண்டிருக்கும் பொழுது, பிரச்னைகள் பற்றி விவாதிப்பதற்கு எந்த வித முறையிலும் இடம் அளிக்காத முறையில் ஒழுங்குப் பிரச்னை என்று கூறி ஒருவர் எழுப்ப, அதனை ஆமோதித்து, சட்டசபையை ஒத்திவைத்து விட்டுப் போய்விடுகிறார் சபாநாயகர். அப்படிப் பட்ட சபாநாயகர் இருக்கும்பொழுது நான் கற்பனையாகச் சொன்ன நிகழ்ச்சிகள் சட்டமன்றத்தில் நடக்காது என்ற உத்தரவாதம் எங்கே இருக்கிறது? ஜனநாயகத்தைக் கொலை செய்வதற்கு வாள் தீட்டிக் கொடுத்தவர்கள், கொலை செய்வதற்குத் தயாராக நிற்கின்றவர்கள். ஜனநாயகத்தைக் கொலை செய்யும் கோதாவில் அடி வைத்து கட்டாரியை வைத்துக் கொலை செய்தவர்கள், அவர்கள் ஜனநாயகத்தைப் பற்றிப் பேசுகிறார்கள். ஜனநாயகம் படுகொலை செய்யப்பட்டது நமக்குத் தெரியாதா? அந்த அளவுக்கு இருக்கக் கூடியவர்கள், தீர்மானம் கொண்டு வந்திருக்கக் கூடியவர்கள், அவர்களுக்குத் துணை இருக்கக் கூடியவர்கள் தமிழ் நாட்டில் ஜனநாயகம் மாத்திரம் அல்ல, இந்தியாவிலேயே ஜனநாயகத்தைப் பாதுகாப்பதில் எப்படி ஈடுபட்டுக் கொண்டிருந்தார்கள் என்பதெல்லாம் நமக்குத் தெரியாதா? ஜனநாயகத்தில் துளிக் கூட நம்பிக்கை இல்லாத இயக்கத்தைச் சார்ந்தவர்கள், ஜனநாயகத்தைப் படுகொலை செய்வதையே தொழிலாகக் கொண்டவர்கள் ஜனநாயகம் படுகொலை செய்யப்பட்டது என்று பேசுகிறார்கள்.

ஜனநாயகம் என்பது என்ன? தமிழ் நாட்டில் சட்டமன்றத்தில் திராவிட முன்னேற்றக் கழகம் ஆட்சிப் பொறுப்பை ஏற்றுக் கொண்டிருக்கிறது என்று சொன்னால், தமிழ்நாட்டு மக்களுடைய பெரும் பகுதி வாக்குகளைப் பெற்றுத் தான் திராவிட முன்னேற்றக் கழகம் ஆளும் பொறுப்பை ஏற்றுக்கொண்டிருக்கிறது. இந்த





அரசின் மீது நம்பிக்கை வைப்பதோ அல்லது நம்பிக்கையை இழப்பதோ அவரவர்களுடைய தனிப்பட்ட உரிமை. ஆனால், தனி நபருடைய செல்வாக்கை, தனி நபருடைய புகழை, தனி நபருடைய கவர்ச்சியை வைத்துக் கட்சியை வளர்க்கக்கூடாது, கட்சியின் வளர்ச்சிக்கு அதை உபயோகப்படுத்தக்கூடாது என்ற கொள்கையை அடிப்படைக் கொள்கையாகக் கொண்டது கம்யூனிஸ்டு கட்சி. ஒரு தனி நபருடைய செல்வாக்கு என்று இருந்தால் கூட தவறு இல்லை. தனி நபருடைய செல்வாக்கைப் பயன்படுத்தி மக்களுடைய ஆதரவைப் பெறுவது கூட தவறு இல்லை. ஆனால், சினிமா நடிகரின் செல்வாக்கை, சினிமா நடிகரின் கவர்ச்சியை பின் அணியாக வைத்து ஒரு அரசியல் கட்சியை உருவாக்குவது மிகப் பெரிய துர்ப்பாக்கியம். தமிழ் நாட்டில் ஜனநாயகத்திற்கு ஏற்படக்கூடிய மிகப் பெரிய ஊனம். அவர்கள் கூறுகிற குற்றச்சாட்டு உண்மைக்குப் புறம்பானது, நியாயத்திற்கு விரோதமானது.

2-ம் தேதியன்று தமிழ்நாட்டில் ஜனநாயகத்தை ஜனநாயக பாரம்பரியத்தை, பெருமையைப் பாதுகாத்து, ஜனநாயகக் கோட்பாடுகளையும், தன்மைகளையும் பாதுகாத்து, தமிழ் நாட்டில் ஜனநாயகம் படுகொலை செய்யப்படுவதைத் தடுத்து நிறுத்திய, ஜனநாயகம் குத்திக் கொலை செய்யப்பட இருந்ததை தடுத்து நிறுத்திய துணைச் சபாநாயகர் அவர்களைப் பாராட்டி, திரு. கே. டி. கே. தங்கமணி அவர்கள் கொண்டு வந்த தீர்மானத்தை எதிர்த்து விடைபெறுகிறேன். வணக்கம்.

DR. H. V. HANDE : Mr. Chairman, in seconding the resolution moved by the hon. Member Mr. Thangamani, I wish to offer a few remarks on behalf of our party.

Sir, the whole question has boiled down to an argument, whether the instances that took place in this House on the 2nd of December 1972 were a remedial measure for the instance that took place in this House on November 13th. That is the sum and substance of the speeches that have been made here in the last few hours. My submission is that the greatest misfortune that has happened to democracy in this House is handing over this House into the hands of the D.M.K. and bringing in the administration of the D.M.K. party and that is the misfortune for democracy. Ever since then,

practically, I would say without any fear of contradiction from the public at large that as far as we are concerned—whether it is Mathialagan or whether it is Sreenivasan that is not the question—I can say without fear of contradiction that ever since then, the series of events that have taken place categorically prove that there is no democracy at all here, and that the D.M.K. party is totally unfit for democracy. That is the biggest charge I make (Interruption) I know it will irritate you. But I cannot help. I have to speak the truth and like in the Kurukshetra, I have to speak the truth.

Now, the question is not whether it is Sreenivasan, whether Sreenivasan is good or bad, it is not the question of this House having confidence in Sreenivasan—so far as Sreenivasan is concerned, he is very innocuous man, he is a very good man and he is a friend of mine and I have nothing personally against Mr. Sreenivasan—but the question is entirely different. That is what many of us have missed. The question is how far the Speakers of the D.M.K. party who have successively sat in that Chair, how far they have been the stooges in the hands of the D.M.K. Party. Have we ever thought of that question? No. Whether it is Sreenivasan.........

Mr. CHAIRMAN (Thiru PALANIVEL RAJAN) : The hon. Member may add Mr.

Dr. H. V. HANDE : Yes. I have the greatest regard for him. So, whether it is Mr. Sreenivasan or whether it is Mr. Mathialagan or Mr. Pulavar Govindan or Mr. Aditanar, the tragedy is successively, if you analyse, the entire period can be taken up, after the D.M.K. party came to power, successively practically every hon. Member who sat in that Chair has defied Democracy in some way or other. That is my charge.

Mr. CHAIRMAN (Thiru PALANIVEL RAJAN) : One minute. I may kindly bring to the attention of the hon. Member that though he may make his comments about the Deputy Speaker and the Ex-Speaker, it will certainly be not proper for him to pass remarks against either Pulavar Govindan or Thiru Aditvan since the House had at no time expressed want of confidence against them.



Dr. H. V. HANDE : This is the first no-confidence motion against the Presiding Officer, I suppose. Whether it is first or second, according to me, it is the first no-confidence motion the House is possessed of. As far as the Speaker or the Presiding Officer is concerned, the ruling party itself has come forward with a no-confidence motion. Legally whether it was passed or not I would not go into that. But the fact remains that the ruling party itself has brought forward a no-confidence motion against the Speaker. Why? Why did they have to bring in such a motion? Because you allowed that Speaker or ex-Speaker—it is *sub judice* and it is for the Court to decide to take sides with the ruling party. We objected. Thirumathi Anandanayaki also objected that he should not participate in any party politics and that he should not take sides in political party affairs. We objected to all that. But the ruling party allowed him to participate and sit with the ruling party. Why go so far? Sometime ago, the Hon. Chief Minister was given an Honorary Degree in the Annamalai University. If you only read the speech of the then Speaker you will find fantastic encomiums had been paid by him, out of all proportion (Interruption). He wants me to read out that speech. That is not the point. My submission is that it clearly proves that the executive and the Chief Minister had struck such a terror into the minds of these Presiding Officers that the Presiding Officers were led to the conclusion that they cannot be presiding officers unless they sided with the D.M.K. Party. That is number one.

That is the whole point. You have forced the Speaker and the Deputy Speaker to become your spokesmen. Therefore, the charge is nothing personal against the distinguished Member, Thiru Srinivasan. The entire resolution is a tool for me to attack the D.M.K. Party, the Hon. Chief Minister and his Cabinet.

One of the hon. Members who opposed the resolution said that it was the Hon. the Leader of the House who could dictate things. Definitely not. There is the Presiding Officer to say that and we have to completely obey him. That has not been done. Therefore with all the anguish in my heart and in all sadness, I say this is the saddest day in this House that a lawful resolution to remove the Deputy Speaker from his office has been brought forward in

this House for discussion. Show me a single instance during the last several years when the ruling party or the Opposition was forced to bring the No Confidence Motion against the Presiding Officer. Has it ever taken place? But within the short span of five years, one resolution by the ruling party and another by the Opposition have been brought forward against the Presiding Officers. That does not speak well of the ruling party. That is the crux of the matter which I would like every one to remember.

The most important thing is that the Presiding Officer should be above politics. The Presiding Officer should not be a tool or pawn in the hands of the ruling party. Unless there is such a state of affairs, there cannot be clean proceedings. At least hereafter he should take a clue from that.

Coming to the proceedings of 2nd December 1972, I would like to know from the reply of the Deputy Speaker, how did the Chair come there just like the musical chair.

MR. CHAIRMAN (THIRU PALANIVEL RAJAN) : The chair is still there.

DR. H. V. HANDE : That chair will be utilised hereafter when the ruling party wants to remove any Presiding Officer. The point is that they had already planned to utilise this method. This is a novel method practised and utilised by our wonderful and distinguished members of the ruling party to unseat any Speaker or Deputy Speaker.

I would strike a note of warning to the Deputy Speaker. Be careful because that chair would be used against him also. This is a very fantastic thing which has no parallel in the history of any legislative body in the whole world. This has brought disgrace to our Assembly. There was a time when we were very proud that we were Members of the Assembly or the Council. Whenever we met in congregation we used to say that we were the Members of the Legislative Assembly and the Council. Now there is a blot on the august body and no longer can we say proudly that we are Members of the august body. Such a destruction of democracy has taken place in this House and I again charge that the ruling party is the main reason for this. Is it going to stop with this?



I know there is grumbling within the ruling party because of the
fascist method adopted by them. The executives want to control
the Chair. I predict in this House that within a few months, a
situation may arise when successively the Presiding Officers will
be removed not by the Opposition-because the Opposition cannot
remove him—but by the members of the ruling party. Therefore
it is that I warn that a situation may arise when the Presiding
Officers will be removed mercilessly. What is the remedy or
diagnosis? The whole sum and substance of it is that we have
today in Tamil Nadu a ruling party which is so fascist in tempera-
ment that any opposition by anybody within the ruling party will
not be tolerated. They take particular care to see that whatever
the Chief Minister or whatever his deputies decide on behalf of the
Chief Minister, shall be obeyed by the Chair. In other words,
the tragic spectacle that we have been seeing in this House is not
because of a particular person but it is because of the organisation,
the fascist D.M.K. These people are the products of the D.M.K.
Fascist Government and I repeat that the greatest misfortune of
the State is that we are forced to make a No-Confidence Motion
against the Deputy Speaker. I know that Mr. Srinivasan is an
innocent and harmless person and I have nothing personal against
him. The only solution is not the removal of Mr. Srinivasan but
the removal lock, stock and barrel of the D.M.K. Government.
That is the only solution for the State.

**மாண்புமிகு டாக்டர் இரா. நெடுஞ்செழியன் :** மாண்புமிகு
மாற்றுத் தலைவர் அவர்களே, மாண்புமிகு பேரவைத் துணைத்
தலைவர் அவர்களை பதவியிலிருந்து நீக்கம் செய்ய வேண்டுமென்ற
இந்த தீர்மானத்தை—எதிர்க்கட்சி உறுப்பினர் திரு. கே. டி. கே.
தங்கமணி அவர்கள் கொண்டுவந்திருப்பதை—நான் முழுக்க,
முழுக்க, அழுத்தந்திருத்தமாக எதிர்க்கின்றேன்.

ஒருசிலர் தன்மீது நம்பிக்கை இல்லை என்ற அடிப்படையில்
பதவி நீக்கத் தீர்மானத்தைக் கொண்டுவந்தாலும் அடுத்த
நிமிடமே அதை விவாதிக்க நான் தயாராக இருக்கிறேன் என்று
சொல்லி, வேறு விவாதங்களுக்கு இடமில்லாமல் முதலிலேயே
இந்தத் தீர்மானத்தை விவாதத்திற்கு எடுத்துக் கொண்ட துணைத்
தலைவரவர்களை நான் பாராட்டக் கடமைப்பட்டிருக்கிறேன்
(கைதட்டல்).

கவர்னர் உரை நடைபெருமல் இருந்திருந்தால் இந்தத் தீர்மானம் அன்றைக்கே விவாதத்திற்கு வந்திருக்கும். மறுநாள் இராஜாஜி அவர்களுக்கும் கோபால் அவர்களுக்கும் இரங்கல் தீர்மானம் நிறைவேற்றப்பட வேண்டியிருந்ததால் அன்றைக்கும் இந்தத் தீர்மானம் எடுத்துக்கொள்ளப்படவில்லை. ஆக, இந்த இரண்டு நாட்களிலும் துணைத் தலைவரவர்கள் எவ்வளவு துடி துடித்துக்கொண்டிருந்தார்கள் என்பதை நான் அறிவேன்.

இரண்டு நாள் தள்ளி வருகிறதே என்பதற்காக அவர்கள் துடி துடித்தார்கள். முதல் நாளே இந்த வாய்ப்பு ஏற்படுவதற்கு வழி யில்லாமல் இருந்ததால் இன்றைக்கு இந்தத் தீர்மானம் கொண்டு வரப்பட்டு, விவாதிக்கப்படுகிறது. 'யார் ஒருவர் தன்மீது நம்பிக்கை இல்லை என்று சொல்வதாக இருந்தாலும், அந்தப் பிரச்சனையைத் தீர்த்து வைக்காமல் நான் இந்த அதிகாரத்தில் இருக்க விரும்பமாட்டேன்' என்று சொல்லி, துணைத் தலைவர் அவர்கள் உடனடியாக இந்தப் பிரச்சனையை விவாதத்திற்கு எடுத்துக்கொண்டமைக்காக நான் அவர்களைப் பாராட்டுகிறேன்.

ஏன் இந்த நிலை ஏற்பட்டது என்று மாண்புமிகு உறுப்பினர்கள் கேட்டார்கள். முன்னாள் பேரவைத் தலைவராக இருந்த மதியழகன் அவர்கள் ஒரு 'எக்ஸ்ட்ராடினரி சிட்சுவேஷனில்' ஒரு 'எக்ஸ்ட்ராடினரி சொலூஷன்' வேண்டுமென்று, அவர்கள் 'எக்ஸ்ட்ராடினரி ஸ்பீக்கராக' இருந்து, ஒரு 'எக்ஸ்ட்ராடினரி' தீர்ப்பை வழங்கியதன் காரணமாக இங்கே ஒரு 'எக்ஸ்ட்ராடினரி' முறையை நாங்கள் கையாளவேண்டிய அவசியம் ஏற்பட்டது (கைத்தட்டலுடன் பலத்த சிரிப்பு). : இல்லாவிட்டால் அந்த முறையைக் கையாள வேண்டிய அவசியம் எங்கும் இருந்ததாக தெரியவில்லை என்றும், அது வரலாறு காணாதது, வரலாறு காணாதது என்றும் சொன்னார்கள். (சிரிப்பு) இந்த நாட்டினுடைய வரலாற்றில் இதுவரை காணாத வரலாறு காணாததுதான். ஒன்று தான். இதுவரை இருந்த ஆளும் கட்சியினர் ஆகட்டும், எதிர்க் கட்சியினர் ஆகட்டும் இந்த அவையின் மரபை காட்டுகின்ற பண்பிலே எவ்வளவு சிறந்து விளங்கி வந்திருக்கிறார்கள் என்பதை நான் சொல்லத் தேவையில்லை.

THIRU R. PONNAPPA NADAR: May I take it that an extra-ordinary method had been used on the floor of the House.





THIRU J. JAMES: That has been admitted.

**மாண்புமிகு டாக்டர் இரா. நெடுஞ்செழியன்**: காரணத்தைச் சொல்லுகிறேன். அது வேறு எங்கும் நடைபெருத, இந்த நாட்டின் வரலாற்றிலேயே காணாத ஒன்று என்று சொன்னார்கள். ஆனால், அப்படிப்பட்ட சூழ்நிலைகள், நெருக்கடி நிலைமைகள் ஏற்படுகின்ற நிலைமை பஞ்சாபிலே ஏற்பட்டது என்பதை இங்கே சுட்டிக்காட்டுகிறேன். அங்கே பேரவைத் தலைவர் அவர்கள் வீற்றிருக்கும் பொழுதே அப்படிப்பட்ட ஒரு நிலைமை ஏற்பட்டது. 15 ஆவது இடத்திலே உட்கார்ந்து கொண்டு துணைச் சபாநாயகர் அவர்கள் சபையின் நடவடிக்கைகளை நடத்தியது வரலாற்றின் அடிப்படையிலே இருக்கிறது.

அடுத்து, ஆளும் கட்சியினரே ஒரு பேரவைத் தலைவர் மீது நம்பிக்கையில்லாத் தீர்மானம் கொண்டு வருவது வரலாற்றில் உண்டா என்றும் கேட்டார்கள் இங்கே. உள்ளபடியே, பாராளுமன்ற முறையிலே உலகத்திற்கே எடுத்துக்காட்டாக விளங்கும் பிரிட்டிஷ் பாராளுமன்றத்திலே 1835 ஆம் ஆண்டு பாராளுமன்றத்தினுடைய சபாநாயகரை ஆளும் கட்சியினரே, ஆளும் கட்சியினருக்கு விரோதமாக அவர் பேசினார் என்பதற்காக, நீக்க வேண்டும் என்று ஒரு நம்பிக்கை இல்லாத் தீர்மானத்தை அவர் மீது கொண்டு வந்து, அந்தச் சபாநாயகரை பிரிட்டிஷ் பாராளுமன்றத்திலே இருந்து நீக்கிய வரலாறு உண்டு.

THIRUMATHI T. N. ANANDANAYAKI: The Hon. Minister is referring to an incident which took place in 1885. Does he mean that his party is in 1885, and not in 1972. Can we not improve?

**மாண்புமிகு டாக்டர் இரா. நெடுஞ்செழியன்**: தலைவரவர்களே, அதற்கு முன்னாலே இருந்தே--அதாவது 1840 ஆவது வருடசொச்சத்தில் இருந்தே நடைபெற்ற ஒன்றைத் தான் நம்முடைய இந்திய பாராளுமன்றம் கடைப்பிடித்து வருகிறது என்பதற்காகத் தான் அதைச் சொன்னேன். அப்பொழுதிருந்தே பிரிட்டிஷ் பாராளுமன்றம் கடைபிடித்ததைத்தான் இந்தியப் பாராளுமன்றம் கடைப் பிடித்து வருகிறது; அப்படித்தான் இந்திய பாராளுமன்றச் சட்டம் இருக்கிறது. அங்கே நடந்தது நம்முடைய சட்டதிட்டத்திலே இடம் கொடுக்கிறதா என்று பார்க்கிறோம். அப்படி

இடம் கொடுக்காத நிலைமையில், எல்லோரும் பெருமைப்படக்கூடிய பண்ணுவது பிரிட்டிஷ் பாராளுமன்றத்திலேதான். இங்கே ஏற்படுத்தப்பட்ட சூழ்நிலைகளை எடுத்துச் சொன்னார்கள். இந்த அவையைச் சேர்ந்த பெரும்பான்மையான உறுப்பினர்கள் அதாவது 185 பேர் அவைத் தலைவர் மீது நம்பிக்கை இல்லை என்ற கருத்தை தெரிவித்த பொழுதே—அதாவது நவம்பர் மாதம் 13-ஆம் தேதி இங்கே சட்டப் பேரவை நடைபெற்ற பொழுது, முன்னாள் சட்டப் பேரவைத் தலைவர் அவர்கள் குறிப்பிட்டார்கள், என் மீது நம்பிக்கையில்லாத் தீர்மானம் கொண்டு வரும் நிலையில் நான் அதற்கு பிறகு ஒரு நிமிடம் கூட இந்த நாற்காலியிலே இருக்க விரும்பவில்லை, நாளையே அந்தத் தீர்மானத்தை எடுத்துக்கொள்ளத் தயாராக இருக்கிறேன் என்று குறிப்பிட்டார்கள். ஆனால் அப்படி குறிப்பிட்ட அடுத்த ஒரு மணி நேரத்திற்குள்ளேயே இந்த அவையையே ஒத்திவைத்து விட்டு சென்று விட்டார்கள். உடனே அவையைக் கூட்ட வேண்டும், கூட்டவேண்டுமென்று எதிர் கட்சியினர்கூட சொன்னார்கள். கூட்டப்பட்ட அவை ஒரு மணி நேரத்திற்குள்ளேயே ஒத்தி வைக்கப்பட வேண்டிய நிலைமை ஏற்பட்டது. பல இடங்களிலே கூச்சல் குழப்பங்கள் ஏற்பட்டு, சபையை நடத்த முடியாத சூழ்நிலைகள் ஏற்படுத்தப்பட்டால், பாராளுமன்றம் ஆனாலும் சரி, அல்லது வேறு சட்ட மன்றம் ஆனாலும் சரி கால் மணி நேரம், அரை மணி நேரம், அரை நாள், ஒரு நாள் என்று தான் சபையை ஒத்தி வைத்திருக்கிறார்கள். ஆனால் ஒரு மாதம், பல நாட்கள் ஒத்திவைக்கும் நிலைமை இங்கே ஏற்பட்டது. அதற்குப் பிறகு மறுபடியும் 14 நாட்கள் இடைவெளி வரக்கூடிய அளவிலே பேரவைத் தலைவர் மீது நம்பிக்கையில்லாத் தீர்மானம் கொடுக்கப் பட்டது. குறிப்பிட்ட நான்கு பேர் முதலிலே கொடுத்தார்கள். அதைத் தொடர்ந்து பலர் கொடுத்திருக்கிறார்கள். டிசம்பர் 2-ம் தேதி பேரவை மறுபடியும் கூடுகிறது. அப்படி 14 நாட்கள் முடிந்து, தலைவர் அவர்களையும் முன்னவரையும் கலந்து கொண்டு அதை நடைமுறைப்படுத்த வேண்டும் என்று சட்ட திட்ட விதிகள் இருக்கின்றன. இரண்டாம் தேதி அவை கூடும் பொழுது, பெரும் பான்மையான உறுப்பினர்கள் அவர் மீது நம்பிக்கையின்மையை தெரிவித்த நம்பிக்கையில்லாத் தீர்மானம் வந்திருக்கிறது. இந்த அவையை நடத்துகின்ற தலைவர்மீதே நம்பிக்கையில்லாத் தீர்மானம் வந்திருக்கிறது.





உறுப்பினர் திரு. கே. டி. கே. தங்கமணி அவர்கள் சொன்னதைப் போல், எதிர்க்கட்சி உறுப்பினர்கள் இந்த அமைச்சரவை மீது நம்பிக்கையில்லாத் தீர்மானம் கொடுத்திருக்கிறார்கள். இதிலே எந்த நம்பிக்கையில்லாத் தீர்மானம் முதலிலே எடுக்கப்பட வேண்டும் என்று பார்ப்போமானால், இந்த அவையின் முன்னாள் தலைவர் மீது கொண்டுவந்த நம்பிக்கையில்லாத் தீர்மானத்தை தீர்த்துக் கொண்டுதான், அமைச்சரவை மீது கொண்டு வந்த தீர்மானத்தை எடுத்துக்கொள்ளவேண்டும். உள்ளபடியே இப் பொழுது துணைத் தலைவர்மீது நம்பிக்கையில்லாத் தீர்மானம் சட்டப்படி கொண்டு வந்ததும், துணைத்தலைவர் அவர்கள் உடனே எடுத்துக் கொள்ள அனுமதித்தார்.

மௌலங்கர் பற்றி எடுத்துச் சொன்னார்கள். அத்தனை பெரும் கூட கையெழுத்துப் போடவில்லை. ஒருவர் தலைவர் மீது நம்பிக்கையின்மை தெரிவித்தார் என்பதற்காக, அவ்வளவு பெரிய பாராளுமன்றத்திலே ஒருவர் நம்பிக்கையின்மை தெரிவித்தார் என்பதற்காக, நேருவும் மற்றவர்களும் அவருக்கு சமாதானமாக எடுத்துச் சொல்லி அதை பெரிதுபடுத்த வேண்டாமென்று சொல்லி அவைகளை எல்லாம் கூட "நீக்கினார்கள்" அவையின் குறிப்பிலே இருந்து என்பதைப் பார்க்கிறோம். ஆகவே, முன்னாள் சட்ட மன்றத் தலைவர் திரு. மதியழகன் அவர்கள் தானே எடுத்திருக்க வேண்டும் அந்த தீர்மானத்தை. அவர் மீதே நம்பிக்கையில்லை என்று இருக்கும் பொழுது அதை எடுக்காத நிலைமையில் அவர் இருந்தால்தான், இந்த அவையின் முன்னவர் என்ற முறையிலே அவையினுடைய அனுமதியோடு பணிகளை நான் ஆற்றவேண்டியிருந்தது.

அவையின் முன்னவருக்கு அதிலே என்ன அப்படி அக்கறை என்று கேட்டால், "லீடர் ஆப் தி அவுஸ்" என்ற முறையிலே—பிசினஸ் அட்வைசரி கமிட்டியிலே எந்தெந்த புரொசீடிங்ஸை எப்படி எப்படி எடுத்துக்கொள்ளலாம் என்று முடிவு செய்தாலும், அவையின் புரொசீடிங்ஸ் பற்றி வகைப்படுத்தித் தருபவன் நான் தான். அவைத் தலைவர் அவர்கள் அதை ஏற்று, அதை நடை முறைப்படுத்துவதுதான் அவருடைய கடமை. இன்றைக்கிருக்கும் புரொசீடிங்ஸ் ஆகட்டும், நாளைக்கு எடுத்துக்கொள்ளப்படும் புரொசீடிங்ஸ் ஆகட்டும், எதை எதை எடுத்துக்கொள்ள வேண்டு மென்று நான் அவையின் "லீடர் ஆப் தி அவுஸ்" என்ற மு

யிலே வகைப்படுத்திச் சொன்னதற்குப் பிறகுதான், ஸ்பீக்கர் அதை எல்லாம் ஏற்றுக்கொண்டு நடைமுறைப் படுத்தியிருக்கிறார்கள்.

THIRUMATHI T. N. ANANDANAYAKI : There is one point of clarification. I think the Business Advisory Committee has got the right to fix the proceedings of the legislature. I suppose the position will be clarified by the Hon. Leader of the House.

**மாண்புமிகு டாக்டர் இரா. நெடுஞ்செழியன் :** நான் முதலிலேயே சொன்னேன், பிசினஸ் அட்வைசரி கமிட்டியிலே தீர்மானிக்கிறபடி, அன்றுள்ள புரொசீடிங்ஸை வகைப்படுத்துவது இந்த அவையின் முன்னவர் என்ற முறையிலே நான் செய்கிறேன். அவைத் தலைவர் அவர்கள் அதை ஏற்றுக்கொண்டு நடைமுறைப்படுத்த வேண்டிய நிலையில் இருக்கிறார். அன்றைய நிலையில் பெரும்பான்மையான உறுப்பினர்கள் அந்தத் தலைவர் மீதே நம்பிக்கை இல்லை என்ற தீர்மானத்தை கொடுத்தபொழுது அந்தத் தீர்மானத்தை எடுத்துக்கொள்ளாமல் மற்றவர்கள் கொடுத்த தீர்மானத்தை எடுத்துக்கொள்கிறேன் என்று சொல்லுவது அவ்வளவு சரியல்ல. 10 நாளைக்குள்ளே நாள் குறிப்பிட வேண்டுமென்று தீர்மானம் கொண்டு வருவோமானால், இந்த அவையின் முன்னவரையும், எதிர்க் கட்சித் தலைவரையும் கேட்டுக்கொண்டு 10 நாளைக்குள் வைக்கவேண்டும். ஒவ்வொரு தடவையும் அப்படி கேட்டுத்தான் இதற்கு முன்பு கொண்டு வந்திருக்கிறார்கள். அன்றைக்கு யாரையும் கேட்காமல் யாருக்கும் தெரியாமல் அவைத் தலைவர் அவர்களுக்கு மட்டுமே தெரிந்திருக்கின்ற அளவிலே அதை ஏற்றுக்கொள்கிறேன் என்று வந்த பொழுது தான், இந்த அவையை ஏற்று நடத்துகின்ற தலைவர் மீதே நம்பிக்கையில்லாத் தீர்மானம் இருக்கும் பொழுது அதை எடுத்துக்கொள்ள வேண்டுமென்ற வகையிலே அந்தத் தீர்மானத்தை திரு. வீராசாமி அவர்கள் கொண்டு வந்த பொழுது அதன் மீது இந்த அவையின் முன்னவர் என்ற முறையிலே நான் பணியாற்ற வேண்டி வந்தது. என்றைக்கு ஒத்துழைக்கவேண்டிய பேரவை முன்னாள் தலைவர் ஒத்துழைக்காத நிலையில், அவர் மீதிருந்த நம்பிக்கையின்மை தீர்மானத்தின் மீது இந்த அவையின் சம்மதத்தை கேட்கக்கூடிய நிலைமை வந்ததும் துணைத்தலைவர் அவர்கள் சபையில் இன்னொரு இடத்திலே உட்கார்ந்து சபையை





நடத்த வேண்டிய நிலைமை வந்தது. அந்த நம்பிக்கையில்லாத் தீர்மானத்தை கொண்டு வரக்கூடிய நிலைமை அப்பொழுது எனக்கு ஏற்பட்டது.

சபைத் தலைவர் அவையிலே இருக்கும் பொழுதே அவர் மீது நம்பிக்கையில்லாத் தீர்மானத்தை கொண்டு வரலாமா என்று கேட்டால், வேறு எந்தத் தீர்மானம் வந்தாலும் அதை நடத்த அவருக்கு உரிமை இருக்கிறது. ஆனால், அவர் மீது நம்பிக்கை யில்லை என்று வந்தபொழுது அந்த இடத்திலே அவர் உட்காரக் கூடாது, வேறு ஒருவர் அங்கே உட்கார வேண்டும் என்ற அடிப் படையிலேதான் துணைத் தலைவர் இருந்து காரியங்களை ஆற்றினர். இப்பொழுது கூட பார்த்தீர்கள், துணைத்தலைவர் மீது நம்பிக்கை யில்லாத் தீர்மானம் கொடுத்தபொழுது, அவர் அந்த இடத் திலிருந்து இறங்கிவிட்டு, மாற்றுத் தலைவரை உட்கார வைத்து விட்டு காரியங்களை ஆற்றவேண்டிய நிலைமை வந்திருக்கிறது. எனவே, முன்னாள் சபாநாயகர் மீதே நம்பிக்கையில்லை என்று வரும்பொழுது அதை எடுக்கக் கூடிய நிலைமை இருக்க வேண்டு மானால், அவரே அந்த இடத்திலே இருந்து காரியங்களை ஆற்றக் கூடிய உரிமையை அவர் இழந்து விடுகிறார்.

ஆகையால், அவையின் முன்னவர் என்ற முறையில் அவையின் முழு சம்மதத்தையும், வாய்ப்பையும் பெற்று அத்தகைய ஒரு தீர்மானத்தைக் கொண்டுவர வேண்டிய பொறுப்பு எனக்கு ஏற் பட்டது.

DR. H. V. HANDE : Did we not decide in the Business Advisory Committee on the day to be allotted for the "no-confidence motion against the Deputy Speaker" and did we not allot 5th of February for discussion on that motion. I want to know why the Business Advisory Committee did not meet and allot a day for discussing the no-confidence motion against the Speaker likewise. That is the point I want to be clarified.

**மாண்புமிகு டாக்டர் இரா. நெடுஞ்செழியன் :** அவையின் முன்னவர் என்ற முறையில் ஒரு வார்த்தை கூட பேரவைத்தலைவர் என்னிடத்தில் சொல்லவில்லை. பிசினஸ் அட்வைசரி கமிட்டியில் இந்தத் தீர்மானத்தை என்றைக்கு எடுத்துக்கொள்ளலாம் என்பது பற்றி விவாதித்திருக்கலாம் என்பதுபோல இந்த அமைச்சரவை

அன்றைக்கே இரண்டு அவை நடந்ததாகச் சொன்னார்கள். அவை நடக்கும்பொழுது ஒருவர் பேசினாலோ, எழுந்து கூட பேசலாம் அவை நடவடிக்கைக் குறிப்பில் ஏறாது. சபாநாயகர் ஏற்றுக்கொள்ளாத பேச்சு எதுவும் அவை நிகழ்ச்சியில் சேராது. இந்த அவையினால் தேர்ந்தெடுக்கப்பட்டு துணைச் சபாநாயகர் நடத்தியதுதான் அவை நிகழ்ச்சி. மற்றவை சபை நடவடிக்கைக் குறிப்பில் இருந்து நீக்கப்படும் என்று அவர் உத்தரவிட்ட காரணத்தினால் அவை நீக்கப்பட்டன. இதைவிட கேவலமான நிலைமை ஏற்பட்டுவிடாதிருக்க, ஜனநாயகம் படுகொலை செய்யப் பட்டுவிடக்கூடாது என்பதற்காக அவையின் ஆணைக்குக் கட்டுப் பட்டு துணைத்தலைவர் அவைப் பொறுப்பை ஏற்று அவை நிகழ்ச்சிகளை மிகுந்த கௌரவத்தோடு பெருமைப்படத் தக்க வகையில் நடத்திக்கொடுத்திருப்பது மிகுந்த மகிழ்ச்சிக்குரியது என்பதை பெரும்பான்மையான உறுப்பினர்கள் சுட்டிக் காட்டினார்கள்.

அப்படி இல்லை என்றால் என்ன நடந்திருக்கும் ? ஒரு கற்பனை யாகச் சொன்னார்கள். கற்பனையாகக் கூட இல்லை. உண்மையாகவே அப்படித்தான் நடந்திருக்கும் என்பதை பத்திரிகையில் வந்த செய்தியைப் பின்னர் படித்துப்பார்த்தபோது நிர்மானிக்க வேண்டியதாக இருக்கிறது. அவையின் முடிவுப்படி அவைத் தலைமையை ஏற்று அவையை துணைத் தலைவர் நடத்திச் சென்ற போது, அவை நிகழ்ச்சியில் இருந்து இன்ன இன்ன பகுதிகள் நீக்கப்படும் என்று உத்தரவிட்டால் அந்த உத்தரவுப்படி அவை நீக்கப்படுகின்றன. ஆனால் அந்தப் பகுதிகளையும் சில பத்திரிகைகள் பிரசுரித்தன. ஒரு பத்திரிகையில்

'At about 2 p.m., Mr. Mathialagan rose from his seat and was heard to declare that the no-confidence motion against the ministry had been passed and the House had been adjourned. என்பதாகப் போட்டிருக்கிறார்கள். இந்த நிகழ்ச்சியை அவையில் யாரும் ஏற்றுக்கொள்ளவில்லை. (குறுக்கீடு) இது மெயில் பத்திரிகையில்தான் வந்திருக்கிறது.

THIRUMATHI T. N. ANANDANAYAKI: Even if the Speaker had said so, you can still take a poll; if he had left the Chair, then the Deputy Speaker could have taken the Chair and conducted the division. You need not be frightened with something from imagination. Should you not follow the procedure?





**மாண்புமிகு திரு. செ. மாதவன் :** மாண்புமிகு உறுப்பினர் அவை விதிகளைப் படித்திருந்தால் நன்றாக இருக்கும். ஓட்டு எப்படி எண்ணப்படவேண்டுமென்று தீர்மானிக்கிற பொறுப்பு தலைவருக்குத்தான் இருக்கிறது. அவரது தீர்ப்பு சரியோ தவறோ It is final and shall not be challenged என்றும் விதி இருக்கிறது.

**திரு. ஆர். பொன்னப்ப நாடார் :** 'போல்' எப்படி கேட்கப் பட்டு வருகிறது என்பதற்கு மரபு இருக்கிறது. வாய் மூலம் அளிக்கிற தீர்ப்பை ஏற்றுக்கொள்ளவேண்டும் என்பதில்லை என்பதை நான் இந்தச் சந்தர்ப்பத்தில் சுட்டிக்காட்ட விரும்பு கிறேன்.

**திரு. கே. டி. கே. தங்கமணி :** அமைச்சரவையின் மீது கொண்டு வரப்பட்ட நம்பிக்கையில்லாத் தீர்மானம் நிறைவேறிவிட்டதாக அவர் வாய்மூலம் தீர்ப்பளித்துவிட்டால் ஆளும் கட்சியினர் ராஜீநாமாச் செய்துவிடுவார்களா ? செய்ய வேண்டுமென்று நியதியா ? நாளைக்கே 170 பேர்களையும் அழைத்துக் கொண்டு ராஜ்பவன் போய் இந்த மந்திரிசபை தான் இருக்கிறது என்று சொல்ல மாட்டார்களா ? இதைப்போய் ஒரு வாதமாகச் சொல்வது தான் எனக்கு ஆச்சரியமாக இருக்கிறது.

**மாண்புமிகு மாற்றுத் தலைவர் (திரு. பழனிவேல் ராஜன்) :** சட்டமன்ற விதி 20-இன் கீழ் சட்ட மன்றம் தொடர்ந்து இரண்டு மணி வரைக்கும் நடக்கும் என்று தெரிவித்துக்கொள்கிறேன்.

**மாண்புமிகு டாக்டர் இரா. நெடுஞ்செழியன் :** எப்படி நடந்திருக்கக்கூடும் என்பதற்குச் சொன்னேன். அப்படி ஒரு தீர்ப்பைக் கொடுத்து இருந்தால், திரு. கே. டி. கே. தங்கமணி சொல்வது போல நாங்கள் நடந்துகொண்டோம் என்றால் மட்டும் சும்மா இருக்கப் போகிறார்களா ? சரியோ, தவறோ சபாநாயகரின் தீர்ப்புத்தான் முடிவானது என்பதை விற்புறுத்த சட்டப் புத்தகங்களை எல்லாம் எடுத்துக் கொண்டு வந்திருக்க மாட்டார்களா ? மாண்புமிகு முதல்வர் அவர்கள் குறிப்பிட்டது போல சட்டமன்றத்தின் மரபு, கௌரவம் காப்பாற்றப்பட வேண்டும் என்பதுதான் முக்கியம். நிலைமை வேறுவிதமாக நடந்திருந்தது என்றால் அதை நாங்கள் சமாளிக்கமாட்டோம்

[டாக்டர் இரா. நெடுஞ்செழியன்] [1973 பிப்ரவரி 5

1-30 பி.ப. என்பதில்லை. புயலேதான் வரட்டும். அதை நாங்கள் சமாளிப்போம் என்றுதான் முதல்வர் அவர்கள் சொல்லியிருக்கிறார்கள். இங்கே சமாளிக்கிறோம். எவ்வளவு குற்றச்சாட்டுகள் வந்தாலும் பதில் சொல்லமுடியும். உண்மையை நிலைநாட்ட சமாளிப்போம், நாங்கள் கொண்ட கருத்துக்களை நிலைநாட்டுகிற தன்மை எங்களுக்கு உண்டு என்ற நிலையிலே சமாளிப்போம் என்று சொன்னார்கள். எதையும் சமாளிக்க முடியும் என்று அவர்கள் சொன்னார்கள். முடியும் என்பது தெரியும். ஆனால், இப்படிப்பட்ட சூழ்நிலைகள் ஏற்பட்டதற்குப் பிறகு, இந்த சட்ட மன்றத்திலே புகுந்து, சட்டத்திலே புகுந்து விளையாட நினைத்தார்களே தவிர, ஒரு நேர்மையான ஜனநாயகத்தைக் கடைப்பிடிக்கவேண்டுமென்று நினைத்தார்களா ? 182-க்கு மேற்பட்டவர்கள் கையெழுத்துப் போட்டு கொடுத்திருக்கிறார்கள் என்பது தெரிந்தும் அவர் அவ்வாறு நடந்து கொண்டதால் நாம் இந்த நடவடிக்கைகளை மேற்கொள்ள வேண்டிய அவசியம் ஏற்பட்டிருக்கிறது. ஆகவே, இதிலே எந்தவித தவறும் இல்லை.

சபாநாயகரவர்களே, இந்த அவையா என்றால், மாண்புமிகு உறுப்பினர் கணபதி அவர்கள் தெரிவித்த மாதிரி இந்த அவைக்குத் தான் உரிமையுண்டு. 1968-ம் ஆண்டு நடைபெற்ற சபாநாயகர்கள் மகாநாட்டிலே சஞ்சீவ ரெட்டி அவர்கள் கூறிய கருத்துக்களை கணபதி அவர்கள் குறிப்பிட்டார்கள். அட்ஜோர்ன் செய்வதற்குக் கூட அவையைக் கேட்டுத்தான் செய்யவேண்டுமென்று அவர்கள் கூறியிருக்கிறார்கள். அவையினுடைய கருத்தை அறிந்து நடைபெறவேண்டும் என்பதுதான் சிறந்தது என்றெல்லாம் குறிப்பிட்டார்கள். இன்னும் அவற்றையெல்லாம் எடுத்துச் சொல்வதற்கு நேரமில்லை, ஆகவே அவற்றையெல்லாம் விட்டுவிடுகிறேன்.

எல்லாவற்றிலும் நல்லபெயர் ஏற்படுத்திய மாநிலம் இது என்றெல்லாம் குறிப்பிட்டார்கள். இந்த மாநிலத்தினுடைய நல்ல பெயரை, ஜனநாயகத்தைக் காப்பாற்றத்தான் அத்தகைய முறை கையாளப்பட்டிருக்கிறது.

ஏன் துணை சபாநாயகரைக் கூப்பிட்டீர்கள் என்றார்கள். நான் துணைச் சபாநாயகராக இருந்திருப்பேனேயானால், அப்படிச் செய்திருக்க மாட்டேன் என்று தங்கமணி அவர்கள் குறிப்பிட்டார்கள். அவர் உட்கார்ந்ததற்காக மாண்புமிகு சீனிவாசன்



1973 பிப்ரவரி 5] [டாக்டர் இரா. நெடுஞ்செழியன்]

அவர்களை நான் இப்பொழுது மனமாரப் பாராட்டுகிறேன். பிரிட்டனிலே கூட இந்த சபாநாயகர் பதவிக்கு வருவதற்கு ஒவ்வொருவரும் அஞ்சுவார்களாம் ஆரம்ப காலத்தில். பிடித்து இழுத்துக்கொண்டு வந்து உட்கார வைப்பார்களாம். அப்படி பிடித்து இழுத்துக்கொண்டு வந்து உட்கார வைக்கின்ற பழக்கத்தை ஒட்டித்தான் இப்பொழுது இரண்டு பேர் பிடித்துக்கொண்டு போய் உட்கார வைக்கிற வழக்கத்தைக்கொண்டு வந்திருக்கிறதே தவிர, வேறு அல்ல. இல்லாவிட்டால், அவர் ஓடிவிடுவாராம். அவர்கள் பிடித்து இழுத்து வருவார்களாம். அந்த அடிப்படையில்தான் இப்பொழுதும் பிடித்துக்கொண்டுபோய் உட்கார வைக்கவேண்டிய அவசியம் ஏற்படுகிறது. அவருக்குப்போய் உட்காரத் தெரியாதா ? இருந்தாலும் அந்த அடிப்படையிலேதான் இரண்டு பேர் பிடித்துக் கொண்டு போய் உட்கார வைக்கிற நிலை இருக்கிறது.

இதை ஏன் குறிப்பிடுகிறேன் என்றால், அன்றையதினம் ஜனநாயகக் கொலை நடைபெறவில்லை என்பதைச் சுட்டிக்காட்டத் தான். ஜனநாயகப் பண்புகள் காப்பாற்றப்பட வேண்டுமென்று தான் அவ்வாறு நடைபெற்றது. அவர்மீது நம்பிக்கையில்லையென்று தீர்மானம் கொடுக்கப்பட்ட உடனே, முறைப்படி அவர் மீது இருக்கிற நம்பிக்கையில்லாத் தீர்மானத்தை இந்த அவையில் கொண்டு வந்து, அதற்குப் பிறகு அமைச்சரவை மீது நம்பிக்கை யில்லையென்ற தீர்மானத்தைக் கொண்டு வந்திருக்கவேண்டும். அமைச்சரவை மீது நம்பிக்கையில்லையென்ற தீர்மானத்தைக் கொண்டு வருவதற்கு முன்னாலே, மூத்த தன்மை வாய்ந்த, முதன்மை பொருந்திய அந்தத் தீர்மானத்தை எடுத்து, அவரே ஒப்புக்கொண்டு, முதலிலே அதை எடுத்துக்கொண்டிருந்தால், இந்தப் பேரவையிலே ஒரு நாள் அல்ல, இரண்டு நாள் அல்ல, எத்தனை நாள் வேண்டுமானாலும் விவாதம் நடைபெற்றிருக்கக் கூடும். மாண்புமிகு உறுப்பினர்கள் பேசிய மாதிரி அவரும் அத் தீர்மானத்தின் மீது பேசியிருக்கலாம்.

நாங்கள் சொல்வது, சபாநாயகர் ஆளும் கட்சிக்கு எடுபிடி ஆளாக இருக்கவேண்டுமென்பதல்ல. ஆளும் கட்சியினுடைய நம்பிக்கையைப் பெற்றவர் சபாநாயகராக இருக்கவேண்டும். அது தான் எல்லா நாட்டிலும் இருப்பது. அதுதான் ஜனநாயகம். அன்றே அமைச்சரவை மீது குற்றம் சாட்டுகிறோம் என்று எதிர்க் கட்சியினர் சொன்னார்கள். நாங்கள் சபாநாயகரை எடுபிடி ஆளாக

நடத்த விரும்பவில்லை. ஒரு தடவை அனந்தநாயகி அம்மையார் கேட்ட கேள்விக்குக் கூட அவர் நான் கட்சி உறுப்பினராக இருக்கிறேன், அந்தத் தன்மையை விட்டு மாறவில்லையென்றார். சபாநாயகராக தேர்ந்தெடுக்கப்பட்டவர், கட்சிக்கு அப்பாற்பட்டவராக . . .

**திருமதி த. ந. அனந்தநாயகி :** நான் அப்பொழுது திருப்பித் திருப்பிச் சொன்னபொழுது, நீங்கள் தி.மு.கழக உறுப்பினராக இருப்பது தவறு என்று கூறி, ஏன் அன்றைக்கே அவரைக் கட்சியிலிருந்து நீக்குவதற்கு முயற்சி எடுக்கவில்லை? நீங்கள் மரபைக் காப்பதிலே ஏதாவது அக்கறை காட்டுகிறீர்களா என்று கேட்க விரும்புகிறேன்.

**மாண்புமிகு டாக்டர் இரா. நெடுஞ்செழியன் :** அப்பொழுதே மாண்புமிகு முதலமைச்சர் சொல்லியிருக்கிறார். முன்னாலே அவர் பொதுக் குழு உறுப்பினராக இருந்தார். அதிலே இருந்து எடுக்கப்பட்டார். செயற்குழு உறுப்பினராக இருந்தார். அதிலே இருந்து எடுக்கப்பட்டார். ஆட்சி மன்றக் குழுவிலே உறுப்பினராக இருந்தார். அதிலே இருந்து எடுக்கப்பட்டார். எந்தக் கட்சிக் கூட்டத்திலும், கட்சியினுடைய நடவடிக்கையிலும் அவரைச் சேர்ப்பதில்லை. எங்கள் கட்சி அதை மதித்து வந்தது. ஆகவே, கட்சிக்கு சிறப்பு சேர்ப்பதற்காக அவரைச் சேர்த்து வைத்துக் காரியங்களை நடத்த வேண்டுமென்ற நிலையில் எங்கள் கட்சி இல்லை. அவர் தான் நான் கட்சியில் இருக்கிறேன், என்னைக் கட்சியை விட்டு விலக்கி விடாதீர்கள், வெளியேற்றி விடாதீர்கள் என்று கேட்டுக்கொண்டார். ஆனால், அவர் ஒதுங்கித்தான் இருப்பார் என்று மாண்புமிகு முதலமைச்சர் அவர்கள் அப்பொழுதே குறிப்பிட்டார்கள் . . .

**டாக்டர் எச். வி. ஹாண்டே :** நான் சொல்வதெல்லாம், அன்றையதினம் அவர்கள் சொன்ன நேரத்திலே, மாண்புமிகு முதலமைச்சர் அவர்கள் எழுந்து தைரியமாக, கட்சியில் ஒதுங்கியிருப்பார்கள் என்று அன்றையதினமே சொல்லியிருந்தால் உண்மையாகப் பாராட்டி இருப்பேன். அன்றையதினம் மௌனமாக இருந்ததாக எனக்கு ஞாபகம்.

**மாண்புமிகு டாக்டர் இரா. நெடுஞ்செழியன் :** அசெம்பிளியிலேயே முதலமைச்சர் அவர்கள் குறிப்பிட்டார்கள்.



சபாநாயகராக அவர் தேர்ந்தெடுக்கப்பட்டவுடனே, பொதுக்குழு, செயற்குழு, ஆட்சிமன்றக்குழு, கட்சியினுடைய நடவடிக்கைகள், கட்சி மகாநாடு எதிலேயும் அவரைக் கலந்துகொள்ளவிடவில்லை. இந்தக் கழகம் அவரை எதிலும் ஏற்றுக்கொள்ளவில்லை. அவரைக் கலந்துகொள்ளச் செய்யவில்லை. ஆனால், இப்பொழுதுதான் அவர் வேறு கட்சியோடு தன்னை ஈடுபடுத்திக்கொண்டு இருக்கிறார். முன்னேற்றக் கழகத்தில் இருக்கிற வரையிலும் முன்னேற்றக் கழக நடவடிக்கையிலே அவரை ஈடுபடுத்த விரும்பவில்லை. சபாநாயகராக ஆனபிறகு அவரைக் கட்சி நடவடிக்கையிலே ஈடுபடுத்த வேண்டிய அவசியத்திலே நாங்கள் இல்லை. அப்படி ஆளைப் பிடித்து ஒரு கட்சியைச் சிறப்பாக எடுத்துச் செல்ல வேண்டியதில்லை. ஒருவர் சொன்னார், தம்பிங் மெஜாரிட்டி இருக்கிறது என்று. இன்னொருவர் சொன்னார், புரூட்டல் மெஜாரிட்டி இருக்கிறது என்று. இவ்வளவு பேர் இருக்கும்போது அந்த நிலையில் அவரை நம்ப வேண்டிய அவசியம் இல்லை. நாங்கள் எதிர்க்கட்சி வரிசையிலே இருந்தும் பணியாற்றியிருக்கிறோம், ஆளும் கட்சி வரிசையிலே இருந்தும் பணியாற்றி இருக்கிறோம். ஜனநாயக முறைகள், பாராளுமன்ற முறைகள் காப்பாற்றப்படவேண்டும். ஜனநாயக முறைகள் மட்டும் காப்பாற்றப்பட்டால் போதாது. ஜனநாயகப் பண்பாடுகளும் காப்பாற்றப்படவேண்டும்.

அவர்மீது நம்பிக்கையில்லையென்று தெரிவித்தபிறகு, அத் தீர்மானத்தை முதலில் எடுத்து முடித்த பிறகு, ஒருவர் மீது நம்பிக்கையில்லையென்று சொன்ன பிறகு, அதைத் தீர்த்தபிறகு மற்ற நம்பிக்கையில்லை பிரச்சினைகளையெல்லாம் இங்கே கொண்டுவருவதுதான் நியாயம். அதைச் செய்ய அப்பொழுதைய பேரவைத் தலைவர் மறுத்தார். அப்படி மறுத்த காரணத்தினால், அவருடைய கருத்துப்படி எக்ஸ்டிரா ஆர்டினரி சிச்சுவேஷன் இருந்ததால், அதற்கு எக்ஸ்டிரா ஆர்டினரி தன்மையிலேதான் நாம் தீர்வுகாண முடியும் என்ற நிலைமை இருந்த அளவுக்கு இம்மாதிரி நடந்திருக்கிறது. இராமன் இருக்கிற இடம் அயோத்தி என்பது பழமொழி. சபாநாயகர் உட்காருகிற இடம் தலைமைப் பீடம். அதே போல் டெபுடி ஸ்பீக்கர் உட்கார்ந்த இடம் தலைமை இடம். பஞ்சாபிலே டெபுடி ஸ்பீக்கர் 15-வது சீட்டிலே உட்கார்ந்து கொண்டு சபையை நடத்தி இருக்கிறார். அந்த நடவடிக்கை

முழுவதும் சுப்ரீம் கோர்ட்டால் ஏற்றுக்கொள்ளப்பட்டு தீர்ப்பு வழங்கப்பட்டதை நாம் அறிவோம்.

நாற்காலியைப் பற்றிச் சொன்னார்கள். ஏற்கனவே நீங்களெல்லாம் காணாத நாற்காலியா? இப்பொழுதும் இருக்கிற நாற்காலி சார்ஜென்ட் உட்கார்ந்து கொண்டிருக்கிற நாற்காலி. என்றைக்கும் இருக்கிற நாற்காலி. அந்த நாற்காலியிலே உட்கார வைக்கிற அவசியம் கூட இல்லை. இந்தச் சபையை இப்பொழுது உட்கார்ந்திருக்கிற இடத்திலே உட்கார்ந்துகொண்டுகூட நடத்தி இருக்கலாம். அந்த நாற்காலி இருப்பதனால் இழுத்துப் போட்டு உட்கார வைத்தோம். இதற்காகத் தேடிக்கொண்டு வரவில்லை.

**டாக்டர் எச். வி. ஹாண்டே :** நீங்கள் பஞ்சாபைவிட ஒருபடி மேலே இருக்கிறீர்கள். நாற்காலி விஷயத்தைப்பற்றிச் சொன்னீர்கள். அவர்கள் 13-ம் தேதி அவ்வாறு பண்ணியதற்காக, எக்ஸ்டிரா ஆர்டினரி சிச்சுவேஷனில் அவ்வாறு பண்ணியதற்காக, எக்டிரா ஆர்டினரி ரெமடி வேண்டுமென்று இவ்வாறு செய்தீர்களா? அந்த முறையை இன்றையதினம் நீங்களே ஒத்துக் கொள்கிறீர்களா?

Is it a confession of the Hon. the Leader of the House that an extraordinary method has been adopted? We want only a categorical answer. Yes or No for that.

**மாண்புமிகு டாக்டர் இரா. நெடுஞ்செழியன் :** நான், எக்ஸ்டிரா ஆர்டினரி நிலைமை என்று அவர் சொன்னதனாலே சொன்னேனே தவிர, அதற்குப் பிறகு விளக்கியதெல்லாம், சட்டப்படி காரியங்களைச் செய்திருக்கிறோம் என்பது தான். அதற்குச் சமாதானம் சொல்லத் தேவையில்லை. அதற்குப்பிறகு எடுத்துக் கொள்ளவேண்டிய நடவடிக்கைகள், சட்டப்படி, முறைப்படி எடுக்கப்பட்டிருக்கின்றன. அது சரியா, தவறு என்று விவாதிக்கத் தக்க அளவுக்கு இல்லை. இந்தப் பேரவையினுடைய உரிமைகளை, ஜனநாயகத்தைக் காப்பாற்றுவதற்காக எடுக்கப்பட்ட நடவடிக்கைகள் என்று சொன்னேனே தவிர. எக்ஸ்டிரா ஆர்டினரி சிச்சுவேஷன் ஏற்பட்டதனால் எக்ஸ்டிரா ஆர்டினரியாக நடந்தது என்று சொல்லவில்லை. எந்த ஆக்ஷனுக்கும் ஒரு ரீயாக்ஷன் உண்டு. (டாக்டர் எச். வி. ஹாண்டே குறுக்கீடு).

---



அன்று அவர் சேரைவிட்டு இறங்க மறுத்தார். அவர் ஒழுங்காக இறங்கிப்போயிருந்தால், இந்த நிலைமை வந்திருக்காது. நாம் கொஞ்சம் கடுமையாக இருக்கவேண்டுமென்று நினைத்திருந்தால், அவர் இறங்க மறுத்த உடன், காவல் துறையினரைக் கொண்டு அவரைத் தூக்கிக்கொண்டு போயிருக்கவேண்டும். அவரைத் தூக்கிக் கொண்டு போயிருந்தால் இன்னும் கொஞ்சம் கோபம் வந்திருக்கும், ஹாண்டேவுக்கு. ஆகவேதான் பண்பாடோடு நடந்துகொள்ளவேண்டும், முறையோடு நடந்துகொள்ளவேண்டுமென்றுதான் அவ்வாறு நடந்து கொண்டோம். இவ்வளவு நாள் எல்லோரிடமும் பழகியிருக்கிறோம். அவர் ஒழுங்காக நடந்து கொண்டிருந்தால், அன்று அதிகமாக நான் கத்தி பேசவேண்டிய நிலை உண்டானதைக்கூட, தவிர்த்திருக்கலாம். இவ்வளவும் உங்கள்மீது உள்ள அன்பின் காரணமாகத்தான் அவ்வாறு நடத்தப்பட்டது. எல்லாம் சட்டப்படிதான் நடந்தது என்று தெரிவித்து துணை சபாநாயகரை பதவி நீக்கம் செய்ய வேண்டுமென்று கொண்டு வந்த தீர்மானத்தை முழுக்க முழுக்க அழுத்தம் திருத்தமாக எதிர்த்து அமர்கின்றேன்.

**திருமதி த. ந. அனந்தநாயகி :** ஏற்கனவே காணாத நாற்காலி அல்ல, ஏற்கனவே இருந்த நாற்காலிதான் என்று அவர்கள் சொன்னார்கள். வாக்கெடுப்பின்போது அமைச்சராக இருக்கக் கூடிய எம்.எல்.ஸி.க்கள் உட்காருவதற்காகப் போடப்பட்ட நாற்காலி, இன்னும் அங்கேயேதான் இருக்கிறது என்று எல்லாம் அவர்கள் சொல்வதைப் பார்த்தால் அந்த நாற்காலியைக் காட்டி இனிமேல் வருகிற சபாநாயகருக்கும் உஷார் உஷார் என்று சொல்வதைப்போல் தான் இருக்கிறது.

**மாண்புமிகு டாக்டர் இரா. நெடுஞ்செழியன் :** அது கூட தவறு. அது சார்ஜண்ட்க்கு ஆகப் போடப்பட்டிருப்பது. சமயத்திலே எம்.எல்.ஸி.யாக இருக்கின்றவர்களும் உட்காருவதற்காக பயன் படுத்தப்படுகின்றது. இப்பொழுது அதற்குக்கூட அவசியமில்லை. நாம் நல்ல முறையைக் கடைப்பிடித்து வருகிறோம். எம்.எல்.ஸி யாக இருக்கின்றவர்கள் அங்கேபோய் உட்காராமல் இங்கேயே உட்கார்ந்து கொள்கிறார்கள். அவர்கள் போய் உட்காருவதில்லை. ஆகவே அது சார்ஜண்டுக்காக போடப்பட்ட நாற்காலி என்பதைத் தெரிவித்துக் கொள்கிறேன்.

[1973 பிப்ரவரி 5

***மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர் :*** இங்கே இதுவரை உதவிச் சபாநாயகர் பதவியிலிருந்து என்னை நீக்கவேண்டுமென்ற தீர்மானத்தை ஆதரித்தும் எதிர்த்தும் மாண்புமிகு உறுப்பினர்கள் பலர் பேசி இருக்கிறார்கள். இந்தத் தீர்மானத்தை ஆதரித்துப் பேசியவர்கள் சொன்ன கருத்துக்களில் முக்கியமாகச் சொல்லப் பட்டது, "வரலாற்றிலே இல்லாத ஒன்றை நீங்கள் நடத்திக் காட்டியிருக்கிறீர்கள்" என்பதாகும். "அன்றைக்கு நீங்கள் நடந்து கொண்டது பாராளுமன்ற நடைமுறையிலே இல்லாத ஒன்று, புதிய ஒன்றாக இருக்கிறது" என்று சொல்கிறார்கள். வரலாறு என்றால் உலகம் பிறந்த நாளிலிருந்து எழுதி வைத்த சட்டம் அல்ல, அன்றாடம் நடக்கின்ற நிகழ்ச்சிகள்தான் வரலாறாக உருப் பெறுகிறது. ஆகவே, அதுவும் ஒரு வரலாறாக இருந்துவிட்டுப் போகட்டுமே என்றுகூட நீங்கள் எடுத்துக்கொள்ளலாம்.

இலண்டன் பாராளுமன்ற உறுப்பினர்கள் குழு ஒன்று இங்கே வருகை தந்திருந்தது. அந்தக் குழுவினைச் சேர்ந்தவர்கள் என்னைச் சந்தித்தபொழுதுகூட வேடிக்கையாக ஒன்றைச் சொன்னார்கள். எங்கள் பாராளுமன்றத்தை மதர் ஆப் பார்லிமெண்ட் என்று புகழ்ந்து எங்கள் பாராளுமன்ற நடவடிக்கைகளையெல்லாம் நீங்கள் பின்பற்றினீர்கள். இனிமேல் நாங்கள் உங்களுடைய பாராளுமன்ற நடவடிக்கைகளைப் பின்பற்ற வேண்டியிருக்கும், அந்த அளவுக்கு துணிந்து பாராளுமன்ற நடவடிக்கைகளை நடத்தி வருகிறீர்கள் என்று பாராட்டினார்கள்.

இங்கே பேசிய அம்மையார் அவர்களும், டாக்டர் ஹாண்டே அவர்களும் அந்த நாற்காலிக்குப் போய்விடாதீர்கள் என்று சொன்னார்கள். ஏதோ நான் அந்தப் பதவியை மிகப் பெரிய பதவி என்று எண்ணிக் கொண்டிருப்பதைப்போலவும், அது போய்விடக் கூடாது என்று நான் நினைப்பதுபோலவும் எண்ணி அவர்கள் சொல்லியிருக்கலாம். திருமதி அனந்தநாயகி அம்மையார் அவர்கள் தன்னுடைய பதவியைக் காப்பாற்றிக்கொள்வதற்காக எப்படி யெல்லாம் போலீஸ் இலாகாவின் துணையை நாடினார்கள் என்பது எல்லோருக்கும் தெரியும் . . .

***திருமதி த. ந. அனந்தநாயகி:*** பதவியை நான் ஏன் காப்பாற்றிக் கொள்ளவேண்டும்? மக்கள் எல்லாம் சேர்ந்து எனக்கு ஓட்டுப் போட்டார்கள். நான் பணியாற்றி வருகிறேன். நீங்கள் எட்டுக்





கட்சியோடு சேர்ந்துகொண்டு தேர்தலுக்கு வந்தீர்கள். உங்களை விட்டு அவர்கள் பிரிந்துபோய்விட்டார்கள். இப்பொழுது நீங்கள் தேர்தலுக்கு நிற்பதுதானே.

***மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர் :*** இது பெரிய விஷயம் என்று நான் எடுத்துக் கொள்ளவில்லை. மக்கள் உங்களுக்கு ஓட்டுப் போட்டார்கள். ஓட்டுப் போட்ட மக்களே தான் உங்கள் வீட்டு முன்னாலே கூச்சல் போட்டார்கள் என்பதையும் மறந்துவிட வேண்டாம்.

இனிமேல் வரக்கூடிய ஸ்பீக்கர், டெபுடி ஸ்பீக்கர் எல்லாம் இப்படித்தான் தூக்கியெறியப்படுவார்கள் என்றெல்லாம் சொன்னார் கள். ஜனநாயக மரபை மதிக்காமல், மெஜாரிட்டி தத்துவத்தை எதிர்த்து, 30, 35 பேர்களை சேர்த்துக்கொண்டு சபையை நடத்தலாம் என்று ஒரு தலைவர் இருந்தால் அவரைத் தூக்கியெறிவதற்கு இதை விட அமைதியான, நியாயமான வழி இல்லை; இருந்தால் மாண்புமிகு உறுப்பினர்கள் சுட்டிக்காட்டலாம். மனச்சாட்சியைப்பற்றிச் சொன்னார்கள். மனச்சாட்சி அரசியலிலே இருக்கிற இடத்தை விட்டு இன்னொரு இடத்திற்குத் தாவும்பொழுது எங்கே போயிற்று? என்னைப் பொறுத்தவரையில், இங்கே குற்றஞ்சாட்டிப் பேசிய வர்கள். . .

***திருமதி த. ந. அனந்தநாயகி :*** அது எங்களுக்குள் குடும்பச் சண்டை மாதிரி. எங்கள் கட்சியில் பிளந்தோம். இப்பொழுது உங்கள் கட்சியும் பிளந்துவிட்டது. நீங்களும் தேர்தலுக்கு நில்லுங்கள், அவர்களும் நிற்கட்டும் மக்கள் தீர்ப்பு கொடுப்பார்கள். நாங்கள் ஒரு பெஞ்சிலிருந்து இன்னொரு பெஞ்சிற்கு தாவவில்லை, அங்கிருந்து இங்கு வந்திருக்கிறோம் அவ்வளவுதான்.

***மாண்புமிகு டாக்டர் மு. கருணாநிதி :*** அம்மையார் அவர்கள் இடையிலே ஒரு பெரிய சங்கடத்தைக் கிளப்பி விட்டார்கள். பழைய காங்கிரஸும் புதுக் காங்கிரஸும் ஒன்றுதான் என்று அம்மையார் சொல்வதை திரு. பொன்னப்ப நாடார் ஒத்துக்கொள் கிறார்களா? ஏன் என்றால் நான் வீடு செல்லும்பொழுது மனக் குழப்பத்தோடு செல்ல வேண்டியிருக்கும். குழப்பதைத் தீர்க்க வேண்டும்.

**திரு. ஆர். பொன்னப்ப நாடார் :** தங்களுடைய வலையிலே நான் சிக்கிக்கொள்ள மாட்டேன் என்பதை மாத்திரம் தெரிவித்துக் கொள்கிறேன்.

**மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர் :** அம்மையார் அவர்கள் குடும்பச் சண்டை என்று சொன்னார்கள். என்றைக்குக் குறுக்குச் சுவர் எழுப்பப்பட்டுவிட்டதோ அன்றைக்கே இந்தப் பக்கம், அந்தப் பக்கம் என்று ஆகிவிடுகிறது. நானும் நம்முடைய பழைய சபாநாயகர் செய்ததைப்போல் செய்திருந்தால் அதுதான் மனச்சாட்சி என்று எதிர்க்கட்சிக்காரர்கள் நினைப்பார்களானால் நான் அதற்காக ரொம்பவும் வருத்தப்படுகிறேன். அப்படி ஒரு வேளை எதிர்பார்த்திருக்கக் கூடும்.

பாராளுமன்ற ஜனநாயகத்திலே உயிர்நாடி, ஜனநாயகத் தத்துவத்தின் அடையாளமாக இருக்கிற சக்தி எது என்பதை எண்ணிப் பார்க்கவேண்டும். முதலமைச்சரா, பேரவை முன்னவரா, எதிர்க்கட்சித் தலைவரா, பேரவைத் தலைவரா என்பதை எண்ணிப் பார்க்கவேண்டும். ஜனநாயகத்தின் சின்னமாக அடையாளமாக யார் இருக்கிறார்கள் என்பதை எண்ணிப் பார்க்கவேண்டும். அது ஒரு பதவி அல்ல. ஜனநாயகத்தின் அடையாளமாக இருப்பது 'வில் ஆப் தி மெஜாரிட்டி' தான். மக்கள் பிரதிநிதிகளாகத் தேர்ந்தெடுக்கப்பட்டவர்களின் பெரும்பான்மை தான் இந்தப் பேரவையை இயக்குகிற சக்தி, இந்தப் பேரவையை உலகுக்கு அடையாளம் காட்டுகிற சக்தி, பேரவைக்கு வழிகாட்டுகிற ஒரு சக்தி என்பதுதான் நான் படித்த ஜனநாயகத் தத்துவம் ஆகும். இதை மாண்புமிகு உறுப்பினர்கள் ஒப்புக் கொள்வார்கள் என்று நினைக்கிறேன்.

பேரவைத் தலைவர்தான் அதிகாரம் செலுத்தமுடியும் என்ற முறையிலே டாக்டர் ஹாண்டே அவர்கள் சொன்னார்கள். அம்மையார் அவர்கள் சரித்திரம் படித்திருப்பார்கள் என்று நினைக்கிறேன். 1677 ஆம் ஆண்டில் இரண்டாவது சார்லஸ் மன்னன் ஆட்சி செய்த நேரத்திலே பிரிட்டிஷ் பாராளுமன்றத்தை ஒத்திவைக்க வேண்டும்—அங்கே அன்றைக்கு இருந்த சபாநாயகர், அவரும் ஒரு மாதிரியானவர்—என்றார். ஏதோ சக்கரவர்த்தி உத்திரவு போடுகிறார் என்று நினைத்து பாராளுமன்றத்தை ஒத்திவைத்து



விட்டார். ஆனால் தாமஸ் லி என்ற பாராளுமன்ற உறுப்பினர் அந்த சபாநாயகர் வெளியே போய்க்கொண்டிருந்தபொழுது

'The act of adjourning the House cannot be yours, Mr. Speaker, but the act of the House.'

என்று சொன்னார். பேரவையை ஒத்திவைக்கக்கூடிய அதிகாரம் உங்கள் கையிலே இல்லை, பேரவையினுடைய விருப்பம், தீர்மானம் தான் முக்கியமேதவிர, உங்களுடைய விருப்பம் அல்ல. ஆகவே சபையை தொடர்ந்து நடத்துவோம் என்று சொன்னார். அன்றைக்கு இருந்த பிரிட்டிஷ் மாட்சிமைதங்கிய சக்கரவர்த்திக் கெதிராகவே அன்றைக்கு செய்தார்கள் என்றால். . .

THIRUMATHI T. N. ANANDANAYAKI : The Hon. Deputy Speaker could have referred to rule 16 of the Assembly Rules. Why should he quote what happened in 1600? Here the Speaker or the Presiding Officer shall have power to adjourn the House.

MR. DEPUTY SPEAKER : With the consent of the majority of the House and with the consent of the Hon. Leader of the House and not according to his own will and pleasure.
ஆகவே இது இலண்டன் பாராளுமன்றம் பின்பற்றிய முறை. இதைத்தவிர நாம் நம்முடைய அரசியல் சட்டத்தில் எங்கே எடுத்துப் பார்த்தாலும் பெரும்பான்மையை எதிர்த்து சிறுபான்மையை ஆதரித்து அவைத் தலைவர் அல்லது துணைத்தலைவர் ஏற்றுக்கொள்ளவேண்டும் என்ற முறையை நாம் பார்க்கமுடியாது. அது மட்டுமல்ல. 1968 ஆம் ஆண்டு நடைபெற்ற சபாநாயகர்கள் மாநாட்டிலே, அப்பொழுது பாராளுமன்ற சபாநாயகராக இருந்த திரு. சஞ்சீவ ரெட்டி அவர்கள் தெளிவாகச் சொல்லியிருக்கிறார்கள். ஒரு பேரவைத் தலைவராக இருக்கிறவர், தன்னுடைய இடத்தைக் காப்பாற்றுவதற்காக, தனக்கு என்று ஒருசில அரசியல் கொள்கைகளை வைத்துக்கொள்ளக்கூடாது. தனக்கு என்று ஒரு சில சார்புகளை வைத்துக்கொள்ளக்கூடாது என்று சொல்லியிருக்கிறார். சபையை ஒற்றி வைக்கும் உரிமை தலைவருக்குத் தனியாகக் கிடையாது என்று சொல்லியிருக்கிறார்கள்.

டாக்டர் ஹாண்டே அவர்கள் வருத்தத்தோடு சொன்னார்கள். நான் அதை மெத்த வருத்தத்தோடும், மெத்த அனுதாபத்தோடும் கேட்டுக் கொண்டிருந்தேன். இங்கேயுள்ள மெஜாரிட்டியைப் பற்றிச் சொன்னார்கள். அதை வைத்துக்கொண்டுதான் [illegible]

யெல்லாம் செய்தீர்கள். மெஜாரிட்டிதான் காரணம் என்று சொன்னார்கள். என்மேல் அவருக்குள்ள நட்பைப்பற்றிக் கூடச் சொன்னார்கள். என்னைக் கருவியாக ஆளுங்கட்சியினர் பயன்படுத்துவதாகச் சொன்னார்கள். டாக்டர் ஹாண்டே அவர்கள் என்னைக் கருவியாகப் பயன்படுத்திக்கொண்டு ஆளுங்கட்சியின் மீதும், ஜனநாயகத்தின்மீதும் பழி சொல்லுகிறார்கள். டாக்டர் ஹாண்டே அவர்களும், மற்றவர்களும் சொல்லிய குறைபாடுகளை, வேதனைகளைப் போக்கக்கூடிய மார்க்கமாக அரசியல் சட்டத்தை மாற்றுவதுதான் நல்லது என்று கருதுகிறேன். ஜனநாயகம் என்பது மெஜாரிட்டியினரின் தீர்ப்பாக இருக்கக்கூடாது, இனிமேல் மைனாரிட்டியினர் சொல்படிதான் இருக்க வேண்டுமென்று மாற்றிவிட்டால் நிச்சயமாக இம்மாதிரி வராது.

காங்கிரஸ் கட்சித் தலைவர் திரு. பொன்னப்ப நாடார் அவர்கள் சில குற்றச்சாட்டுகளைக்கூடக் கூறினார்கள். நான் எப்படி இரண்டாம் தேதி நடந்துகொண்டேன் என்பதைப்பற்றிச் சொன்னார்கள். திரு. கே. டி. கே. தங்கமணி அவர்களும் சொன்னார்கள். இந்த நேரத்தில் நான் விரிவாகப் பேச வேண்டும், அப்படிப் பேசுவதற்கு ஆதாரம் இருந்தாலும்கூட, இன்றைக்கு இது சம்பந்தமான வழக்கு நீதி மன்றத்திலே இருக்கிறது, முடிவு இன்னும் சொல்லப்படாமல் இருக்கிறது. நீதி மன்றத்தைப் பற்றிக் கவலைப்பட வேண்டியதில்லை என்று பேசினாலும் பேசலாம். ஆனால் என்னைப் பொறுத்த வரையில் நீதிமன்றம், சட்டமன்றம் இந்த இரண்டும் இணைந்து செல்ல வேண்டுமென்று அரசியல் சட்டத்திலே கூறப்பட்ட கருத்தையும், பேரறிஞர்கள் பலரும் சொன்ன கருத்துகளையும் ஒட்டி நான் அதைப்பற்றி அதிகமாகப் பேசவில்லை.

இங்கே நான் இரண்டாம் தேதி நடவடிக்கைகளில் செய்தது சரியா என்பதைப்பற்றித் தெளிவாகச் சொல்ல விரும்புகிறேன். திருமதி அனந்தநாயகி அம்மையார் அவர்கள் கேட்ட கேள்விப்படி, நான் செய்தது மனச்சாட்சிப்படி சரியானதுதான். நான் யாருக்கும் பயந்துகொண்டு செய்ய வேண்டிய அவசியமில்லை, பயப்படவும் இல்லை. யாருடைய தயவு தாட்சண்யத்திற்காகவும் செய்யவில்லை. இந்தப் பேரவையின் பெரும்பான்மை என்ன சொல்கிறதோ, இந்தப் பேரவை ஜனநாயகத்திற்கு ஆதாரமாக எந்தக் கொள்கையைக் கொண்டிருக்கிறதோ அந்த அடிப்படையில்



இந்தப் பேரவை எந்த ஒரு தீர்மானத்தை முன் மொழிந்ததோ அதன்படி நான் சபை நடவடிக்கைகளை நடத்தினேன் என்பதை வலியுறுத்திக் கூறிக்கொள்ள விரும்புகிறேன். நாட்டின் பல பிரச்னைகளில் எடுக்கவேண்டிய முடிவை இந்தப் பேரவையின் கையில் விட்டிருக்கிறார்கள். இந்தப் பேரவை என்ன சொல்கிறதோ அதை நாடு ஏற்றுக்கொள்கிறது. இந்தப் பேரவையின் பெரும்பான்மை என்ன முடிவெடுக்கிறதோ அதன்படித்தான் யாரானாலும் நடப்பதற்குக் கடமைப்பட வேண்டும்.

டாக்டர் ஹாண்டே அவர்கள் பெரும்பான்மையைப்பற்றிச் சபித்தார்கள். அரசியல் கட்சியைச் சேர்ந்தவர்கள் மக்களைப் பார்த்து, அவர்களோடு பெரும்பான்மையைத் தீர்மானிக்கும் நேரத்தில் நீங்கள் அவர்களைப்பார்த்து, இங்கே எதையெல்லாம் சபித்தீர்களோ அதைப்பற்றியெல்லாம் அவர்களோடு பேசுங்கள், அவர்களோடு விவாதித்துப் பாருங்கள். அதைப்பற்றி ஒன்றுமில்லை. ஆனால் அது வெளியிலே தீர்மானிக்கப்பட வேண்டிய விவகாரம். இங்கு இந்தப் பேரவையில் உள்ள பெருன்பான்மைதான் கவனிக்கப்பட வேண்டும்.

திரு. தங்கமணி அவர்கள் அட்ஜேர்ன்மென்ட்மோஷனைப் பற்றிச் சொன்னார்கள். நான்கூட அதை சிம்பிளாகத் தள்ளுபடி செய்வது என்ற நிலையில்கூடச் செய்யவில்லை. பிரிவிலெஜ் இஷ்யூவைப்பற்றி பேரவைத்தலைவர் அறையிலே கட்டாயமாகச் சந்தித்துத் தீர வேண்டும், பின்னாலேயே திரிய வேண்டுமென்று இல்லை. தொலைபேசியில் கேட்டிருந்தாலும் சொல்லியிருப்பேன். அது பெரிய விவகாரம் இல்லை. உரிமைப்பிரச்னைகள் பல நேரங்களில் எடுத்துக் கொள்ளப்பட்டிருக்கின்றன. தள்ளுபடி செய்யப்பட்டும் இருக்கிறது. ஆனால் அதற்கான காரணம் என்ன என்பதை இப்பொழுது என்னால் சொல்ல முடியவில்லை. அவர்களை நேரிலே சந்திக்கும்பொழுது சொல்வதற்குத் தயாராக இருக்கிறேன்.

நான் இப்பொழுது நீண்ட நேரம் பேச விரும்பவில்லை. இங்கே பேசிய உறுப்பினர்களெல்லாம், தனிப்பட்ட முறையில் எந்தவிதமான விமர்சனத்திற்கும் இடமில்லாமல் பொதுவாக பேரவையின் நடவடிக்கைகளைப்பற்றித் தெரிவித்திருக்கிறார்கள். அதற்கு என்னுடைய நன்றியைத் தெரிவித்துக் கொள்கிறேன். ஆளுங் கட்சிக்கு ஆதரவான முறையிலே என்பதுகூட அல்ல, பேரவையின்

பெரும்பான்மை முடிவிற்கு ஆதரவாக, பெரும்பான்மை வகுக்கும் இலக்கணங்களையொட்டி பேரவையின் நடவடிக்கை அமைந்திருக்கிறது.

மைக்கைப்பற்றிக் காலையிலே பேசும்பொழுதும் சொன்னார்கள், இப்பொழுதும் பேசினார்கள். சட்டமன்ற முறைகளில் வேறு சட்ட மன்றங்களிலும் இப்படித்தான் இருக்க முடியும். ஒருவர் பேசும் பொழுது மற்றவர்கள் பேசாமல் பார்த்துக்கொள்வதுதான் நல்லது. இன்றைக்கு இந்தக் கட்சி ஆட்சியிலே இருந்தாலும், நாளைக்கு வேறு கட்சி ஆட்சிக்கு வந்தாலும் இதே முறையைத் தான் பின் பற்ற முடியும். ஓரேநேரத்தில் எல்லா ஒலிபெருக்கிகளும் வேலை செய்வதென்றால் நாம் சட்டசபை பேச்சுகளைக் கேட்க முடியாது, கோஷ்டி கானங்களைத்தான் கேட்க முடியும். அந்த வகையில் இந்த முறையை வைத்திருக்கிறோம்.

நானாக, பிடிவாதமாக எனக்குக் கொடுக்கப்பட்ட பதவியைப் பயன்படுத்தி பேரவையின் நடைமுறை விதிகளுக்கு விரோதமாகவோ, அரசியல் சட்டத்தில் வரையறுக்கப்பட்ட விதிகளுக்கு முரணாகவோ நம்முடைய சட்டமன்ற விதிமுறைகள் குறிப்பிட்டுக் காட்டியுள்ள விதிமுறைகளுக்கு முரணாகவோ எந்தத் தவறும் செய்யவில்லை என்பதை உறுதியுடனும், பணிவன்புடனும் தெரிவித்துக்கொண்டு இந்த விலக்கல் தீர்மானத்தை வற்புறுத்த வேண்டாமென்று கேட்டுக்கொண்டு முடிக்கின்றேன், வணக்கம். நன்றி.

**திரு. கே. டி. கே. தங்கமணி :** தலைவரவர்களே, நானும், உறுப்பினர் திரு. மாரிமுத்து அவர்களும் கொண்டுவந்துள்ள இந்த விலக்கல் தீர்மானத்தின் பேரில் நடந்த விவாதத்தில் கலந்து கொண்ட எல்லா உறுப்பினர்களுக்கும் நான் நன்றி சொல்லக் கடமைப்பட்டிருக்கிறேன். 12 உறுப்பினர்கள் வரையிலே இந்த விவாதத்திலே பங்கெடுத்தார்கள். அதில் 5 உறுப்பினர்கள் இந்தத் தீர்மானத்தை ஆதரித்துப் பேசினார்கள். உதவி சபாநாயகரவர்களும் சில விஷயங்களைச் சொன்னதற்கு நான் நன்றி செலுத்தக் கடமைப்பட்டிருக்கிறேன்.

சில முக்கியமான விஷயங்களை இந்த விவாதத்திலே சொல்ல வேண்டியது அவசியம் என்று கருதுகிறேன். நான் முதலிலே தீர்மானத்தைப் பிரேரேபித்த நேரத்தில் எந்த அளவிற்கு இந்தத்



தீர்மானத்தினுடைய கட்டுப்கோப்பிற்குள் நிற்க வேண்டுமோ அந்த அளவில் நின்றேன். இரண்டாம் தேதி நடந்த முழு அம்சத்திற்குள் நான் போகவில்லை. அந்தச் சம்பவத்தில் எப்படி உதவி சபாநாயகர் ஈடுபட்டார் என்பதை மத்தியமாக வைத்து எனக்கு எந்த அளவிற்குச் சாத்தியமோ அந்த அளவிற்குச் சொன்னேன்.

அதற்கடுத்து, அவர் உதவி சபாநாயகராகயிருந்து செய்த சில தீர்ப்புகள் ரொம்பவும் ஆர்பிட்ராரியாக இருந்தது என்ற குற்றச் சாட்டுகள் வந்தன. ஆனால் இரண்டாம் தேதி நடந்தது என்ன என்பதைப்பற்றி மீண்டும் ஒருமுறை, எதிர்க்கட்சியில் உள்ள உறுப்பினர்கள் பேசியதால் சொல்வதற்கு சந்தர்ப்பமாக ஏற்பட்டது என்பதைத்தான் பார்க்கிறேன். அப்படி வரும் பொழுது இரண்டாம் தேதி சம்பவத்தைப்பற்றிச் சில கருத்துக்கள் உடனடியாகப் பத்திரிகைகளில் வந்திருக்கின்றன. இந்து பத்திரிகை மிகவும் தீவிரமாக எழுதும் பத்திரிகை என்று சொல்ல முடியாது. அவர்களே தலையங்கம் எழுதியிருக்கிறார்கள். அதை முழுமையும் வாசிக்க விரும்பவில்லை. அதனுடைய அடிப்படை என்னவென்றால், இப்படி மெஜாரிட்டியை வைத்துக்கொண்டு இவர்கள் அவசரப்பட்டிருக்க வேண்டியது இல்லை, ஸ்பீக்கரை அன்றைக்கு வெளியேற்றக் காட்டிய அவசரம் இருக்கிறதே அது சரியல்ல என்று கோடிட்டுக் காட்டினார்கள். 9—12—1972-இல் தமிழ்நாடு காங்கிரஸ் கமிட்டி ஸ்தாபன காங்கிரசின் தீர்மானம், டிசம்பர் மாதம் 2-ஆம் தேதி கூடிய சட்டசபையில் ஆளுங் கட்சியினர் நடந்து கொண்ட முறை நீண்ட நெடுங்காலமாக வளர்க்கப் பட்டு வந்த சட்டசபை மரபுகளையும், பெருமைகளையும் தகர்த்தெறிந்துவிட்டது. ஸ்பீக்கரைப்பற்றி நிதானம் காட்டியிருக்கலாம். ஆட்சியினர் மீது கொண்டு வந்த நம்பிக்கையில்லாத் தீர்மான விவாதத்தை முடித்திருக்கலாம். நடந்து கொண்டமுறை ஏளனம் என்பதாக இப்படி பலவிதமாக அந்தத் தீர்மானம் போய்க் கொண்டிருக்கிறது. உடனடியாக சாதாரணமாக எங்கள் கட்சியோ, அல்லது அண்ணா திராவிட முன்னேற்றக் கழகமோ அல்லது ஆளும் காங்கிரஸ் கட்சியோ அந்த 2-ஆம் தேதியிலிருந்து 15-ஆம் தேதிவரையில் நடந்த கூட்டத்தைப் பகிஷ்காரம் செய்தோம். மற்றக் கட்சிக்காரர்களும், பொதுவான கருத்து உள்ளவர்களும் இம்மாதிரிதான் சொல்லியிருக்கிறார்கள்.

இதே விஷயம் நாடாளுமன்றத்தில் எழுப்பப்பட்டது. நாடாளுமன்றத்தில் அப்பொழுது சபாநாயகர், இப்பொழுது தமிழ்நாட்டு சபாநாயகர் இதை ஹைகோர்ட்டிற்குக் கொண்டு போகாமலிருந்தால் நான் சில கருத்துக்களைக் கூறுவேன் என்று கூறியிருக்கிறார்கள். ஆனால் அதேநேரத்தில். எனக்குக் கீழேயிருக்கும் டெபுடி ஸ்பீக்கர் திடீரென்று 'சேரை'க் கொண்டுவந்து போட்டுக்கொண்டு உட்காருவார் என்று நினைக்கவில்லை, ஏனென்றால் அம்மாதிரி நிலைமைகளுக்கு நமது நாடாளுமன்றம் போய்விடாது, அப்படிப் போவதற்கு மற்றக் கட்சிக்காரர்களும் விட மாட்டார்கள், எவ்வளவு தான் மெஜாரிட்டி இருந்தாலும் மெஜாரிட்டியாக இருக்கும் கட்சியினரும் அப்படிச் செய்ய மாட்டார்கள், அப்படிச் செய்ய எதிர்க் கட்சியிலேயிருப்பவர்களும் விட மாட்டார்கள் என்று அழுத்தந் திருத்தமாகச் சொன்னார்கள். அதற்கு மாறாக, மெஜாரிட்டி இருக்கிறது என்ற காரணத்தினால் இங்கு இந்த விஷயம் நடந்திருக்கிறது. அதைக்கூட நியாயப்படுத்த இன்றைக்கு நமது லீடர் ஆஃப் தி ஹவுஸ் முயற்சி செய்ததை நினைக்கும்பொழுது எனக்குச் சற்று வருத்தமாகவும் இருக்கிறது.

MR. CHAIRMAN (THIRU PALANIVEL RAJAN) :The time
பி.ப. 2–00 is 2'O Clock.

அவையின் அனுமதியுடன் பேரவை நிகழ்ச்சிகள் மேலும் 15 நிமிடத்திற்கு நீட்டிக்கப்படுகிறது.

**திரு. கே. டி. கே. தங்கமணி :** அவை முன்னவர் எடுத்துச் சொன்ன மேற்கோள்கள் எல்லாம் 'பார்லிமென்ட் இஸ் சுப்ரீம்' என்பதை நிலைநாட்டுவதற்காக ஏற்பட்ட நிகழ்ச்சிகள். இன்றைக்கு பார்லிமென்ட் சுப்ரீம் என்பது நடைமுறைக்கு வந்து விட்டது. அரசியல் சட்டத்திலேயே பார்லிமென்டுக்கு அதிகமான அதிகாரங்கள் தரப்பட்டிருக்கின்றன. 1971-ம் ஆண்டு தேர்தலுக்குப் பிறகு பார்லிமெண்ட் சுப்ரீம் என்பது உறுதிப்படுத்தப்பட்டுவிட்டது. சுப்ரீம் கோர்ட் செய்கிற திருத்தங்களையோ, தீர்ப்புகளையோ மாற்றுவதற்கு அதிகாரம் பார்லிமென்டுக்கு இருக்கிறது. அதே மாதிரிதான் சட்டசபையும் சுப்ரீம். அந்த மாதிரி வந்த விஷயத்தை வைத்துக் கொண்டு சபாநாயகரை ஏன் நீக்கினோம் என்பதற்காக வாதாடியதைப் பார்த்து எனக்குக் கொஞ்சம் ஆச்சரியமாகத் தான் இருந்தது.





இன்னொரு விஷயத்தையும் சொன்னார். அவர் சொன்னதை நான் புரிந்து கொண்ட அளவில் சொல்லுகிறேன். பார்லிமென்டில் மௌலங்கர் பேரில் நம்பிக்கையில்லாத் தீர்மானம் வந்தது. அதைப் பற்றி அப்போது கட்சிக் கூட்டத்திலேயே கிளப்பியதாகவும், அவர் உடனே போக முயற்சித்ததாகவும் கூறினார். அவர்கள் கட்சிக்குள்ளே அப்படி நடந்ததா இல்லையா என்பது பிரச்சினையல்ல. நாடாளுமன்றத்தில் அதைப் பற்றித் தீர்மானம் கொண்டுவரப்பட்டு அதை எடுத்துக் கொள்ளுவதற்கு 50 பேர் ஆதரித்து ஓட்டளித்து அதற்குப் பிறகு அதில் விவாதம் நடந்தது. அதிலே காரே பேசியிருக்கிறார், மூரே பேசியிருக்கிறார். ஜவஹர்லால் நேருவும் பேசியிருக்கிறார். அதற்குப் பிறகு அது வாக்கெடுப்புக்கு விடப்பட்டு வாய்ஸ் வோட்டில் நிறைவேற்றப்படவில்லை என்ற சம்பவம் நடந்திருக்கிறது. அந்த மாதிரித் தீர்மானம் கொண்டு வரப்பட்டதும், தீர்மானம் கொண்டுவரப்பட்ட போது யார் யார் என்னென்ன கருத்துக்கள் சொன்னார்கள் என்பதும் ரொம்ப அவசியம் என்பதைச் சொல்லக் கடமைப்பட்டிருக்கிறேன்.

இங்கு இப்போது சிலர் பேசியதைப் பொறுத்தவரை சுருக்கென்று சொல்ல விரும்பவில்லை.

I can only say that I am amazed at the extraordinary exhibition from Mr. Latheef.

அவ்வளவுதான் என்று சொல்லி நிறுத்திக் கொள்கிறேன். அதே மாதிரி இந்த விஷயத்தைப் பொறுத்தவரையில் அரசாங்கத்தைச் சேர்ந்தவர்கள் கைக்கருவிகளாக ஆகிவிட்டார்கள் என்று சொல்லுவது பொருத்தமாக இருக்கும் என்று கருதுகிறேன்.

We are really doing it against the autocratic party in power.

நான் 'கோட்' பண்ணுவது எல்லாம் கிட்டத்தட்ட நாடாளுமன்றத்தில் முக்கியமானவர்கள் பேசியதைச் சொல்லுகிறேன்.

'ஆட்டோகிராடிக்' முறையில் அன்று நடந்தது. என் ஞாபகத்தைப் பொறுத்தவரையில் 33 வருஷங்களுக்கு முன்னால் இதே போன்ற ஒரு சட்டமன்றம் இருந்தது. ஜெர்மனியில் இருந்தது. அந்தச் சட்டமன்றம் அன்றோடு செயலற்றுப் போய்விட்டது. அன்றைக்கு ஓட்டுப்போட மறுத்தவர்கள் பக்கத்தில் பிஸ்டலை வைத்து ஆளை நிறுத்தினார்கள். ஓட்டுப்போட்டு சான்சலராக ஹிட்லர் வந்துவிட்டார்.

**திரு. இராம. அரங்கண்ணல் :** ஆன் எ பாயின்ட் ஆப் ஆர்டர் சார். ஜெர்மனியில் இருந்த சட்டமன்றம் எப்படித் தேர்ந்தெடுக்கப் பட்டது என்பதும், இங்கே சட்டமன்ற உறுப்பினர்கள் மக்களால் தேர்ந்தெடுக்கப்பட்டவர்கள் என்பதையும் மறந்து விடக்கூடாது. அந்தச் சட்டமன்றத்தையும், இந்தச் சட்டமன்றத்தையும் ஒப்பிட்டுப் பேசுவது சரியா?

**திரு. கே. டி. கே. தங்கமணி :** வெய்மர் கான்ஸ்டிட்யூஷன்படி அமைக்கப்பட்டது அந்தச் சட்டமன்றம். இங்கு இந்தியன் கான்ஸ்டிட்யூஷன்படி தேர்ந்தெடுக்கப்பட்டிருக்கிறோம். அங்கே இருந்த சட்டமன்றத்தில் எல்லாக் கட்சியைச் சேர்ந்தவர்களும் இருந்தார்கள். சோஷலிஸ்ட் கட்சியினர் இருந்தார்கள்.

The national socialist party was in minority. There was the Communist Party, Socialist Party, Christian Socialist Party and ever so many parties were there.

அப்படி இருக்கிறபோது சான்ஸ்லர் தேர்தல் நடக்கிறது. அதிலே எல்லோரும் ஏகோபித்து ஆதரிக்க வேண்டுமென்று வற்புறுத்தப் பட்டு உள்ளே ஆட்களை நிறுத்தினார்கள். இங்கும் உள்ளே ஆட்களைக் கொண்டு வந்து அன்று வைத்திருந்தார்கள். 100 பேருக்கு மேற் பட்டவர்கள் ஆயுதங்களோடு இருந்தார்கள். சார்ஜென்டிடம் சொல்லி அவர்களை வெளியே போகச் சொன்னேன்.

MR. CHAIRMAN (THIRU (PALANIVEL RAJAN): The hon. Member may kindly remember that there are certain places where we are allowed to bring visitors. There is no harm in bringing them there.

**திரு. கே. டி. கே. தங்கமணி :** மெம்பர்கள் கூடியிருக்க வேண்டிய இடத்தில் 100 பேர் அன்றைக்கு வெளியிலிருந்து வந்திருந்தார்கள்.

**மாண்புமிகு மாற்றுத் தலைவர் (திரு. பழனிவேல் ராஜன்) :** உங்களைப் பார்க்கக்கூட 100 பேர் வந்து உட்காரலாம். சட்ட மன்றத்திற்குள்ளே உறுப்பினர்கள் உட்காரும் இடத்திற்கு வந்தால் ஆட்சேபணை செய்யலாம்.

**திரு. கே. டி. கே. தங்கமணி :** I am only on a limited point. What I am trying to make out is in 1933 there was an elected legislature





there and some people came from outside and forced the people to vote. That has not happened here. Thank God.

ஜெர்மனியில் இருந்த அந்தச் சட்டமன்றத்தில் ஓட்டுப் போட்டுவிட்டு வெளியே போகும்போது சிலரைச் சுட்டுவிட்டார் கள்: சில பேரை ஜெயிலில் போட்டார்கள். நீங்கள் எங்களை எல்லாம் உயிரோடு விட்டு வைத்திருக்கிறீர்கள். அந்தக் காரியத்தை நீங்கள் செய்தீர்கள் என்பதுதான் குற்றச்சாட்டு.

நம்முடைய கல்வியமைச்சர் அவர்கள் எக்ஸ்ட்ரார்டினரி சிச்சுவேஷன், ஆகவே, எக்ஸ்ட்ரார்டினரி நடவடிக்கை எடுத்துக் கொண்டோம் என்று ஒப்புக் கொண்டார்கள். அவர் உண்மையை ஒத்துக் கொண்டது பற்றி மகிழ்ச்சி.

அன்றைக்கு நீங்கள் உண்மையிலேயே நம்பிக்கையில்லாத் தீர்மானத்தைச் சந்தித்திருக்க வேண்டும். மெஜாரிடியைப் பொறுத்தவரை அரசியலில் நிலைமை அப்போதைக்கப்போது மாறும்; நீங்கள் அன்று அதைச் சந்திக்கத் தயாராக இல்லை. அதற்காக இன்னொரு தீர்மானத்தைக் கொண்டு வந்தீர்கள்.

**மாண்புமிகு டாக்டர் இரா. நெடுஞ்செழியன் :** தலைவர் அவர் களே, அதற்கு மூன்று மாதத்திற்கு முன்னால்தான் நம்பிக்கை யில்லாத் தீர்மானம் கொண்டுவரப்பட்டு இந்த அவை சந்தித்து தீர்ப்பையும் வழங்கியிருக்கிறது. நம்பிக்கை இல்லாத் தீர்மானத் தைச் சந்திக்க நாங்கள் ஆயத்தமாகத்தான் இருந்தோம். நீங்கள் சபைக்கு வரவில்லை.

**திரு. கே. டி. கே. தங்கமணி :** அன்றைக்கு நம்பிக்கையில்லாத் தீர்மானம் கொண்டுவர ஏன் ஆட்சேபித்தார்கள்? இரண்டாம் தேதி இரண்டு நம்பிக்கையில்லாத் தீர்மானங்கள் அவை முன் இருந்தன. ஒன்று அரசாங்கத்தின்மீது நம்பிக்கையில்லாத் தீர்மானம். இன்னொன்று சபாநாயகர் மீது நம்பிக்கையில்லாத் தீர்மானம். ஸ்பீக்கர் மேல் உள்ள நம்பிக்கையில்லாத் தீர்மானத்தை முதலில் எடுத்துக் கொள்வதா, அரசாங்கத்தின் மேல் இருக்கும் நம்பிக்கையில்லாத் தீர்மானத்தை முதலில் எடுத்துக் கொள்வதா என்ற விதிமுறைகள் பற்றி கூறுவது பேசி முடிவு செய்ய வேண்டிய ஒன்றாகும்.

[திரு. கே. டி. கே. தங்கமணி] [1973 பிப்ரவரி 5

இன்றைக்கு டெபுடி ஸ்பீக்கர் மேல் நம்பிக்கையில்லாத் தீர்மானம், இதற்காக 35 உறுப்பினர்களைச் சேர்ப்பதற்கு ரொம்ப சிரமமாகிவிட்டது. உங்களுக்கு அதிக நம்பர் இருக்கிறது என்ற எண்ணத்தில் நீங்கள் இருக்கிறீர்கள். இதைப் பற்றி அன்று அண்ணா அவர்கள் பேசிய பிரசங்கத்தை நீங்கள் நினைவுபடுத்திப் பாருங்கள். அன்று சி.எஸ். நீங்கள் இன்று சொல்லுவதைப் போல் 'எங்களுக்கு மெஜாரிட்டி இருக்கிறது' என்று சொன்னார். நம்பர் இரண்டும் மூன்றும் எட்டாகிவிடாது. இரண்டும் மூன்றும் ஐந்துதான்.

**மாண்புமிகு டாக்டர் மு. கருணாநிதி :** கேரள சட்டமன்றத்தில் நம்பர் இருக்கிறதா? இல்லையா? பெரும்பான்மை அடிப்படையில் முடிவுகள் எடுக்கிறார்களா அல்லது சிறுபான்மையோர் தீர்ப்புக்கு அமைச்சரவை உட்படுகிறதா?

**திரு. கே. டி. கே. தங்கமணி :** எங்கள் கட்சிக்கு அங்கு மெஜாரிட்டி கிடையாது. அங்கு ஏழு கட்சிக் கூட்டணி இருக்கிறது. அவர்கள் ஆட்சியை நடத்துகிறார்கள். அங்கே இந்த மாதிரியான காரியங்கள் நடந்தால் நாங்களே கண்டிப்பாகக் கண்டிப்போம்.

இங்கும் நாங்கள் மைனாரிட்டி, 35 பேருக்கே ரொம்பச் சிரமப்பட்டோம். தீர்மானத்தையே எடுத்துக் கொள்ள முடியாத நிலை ஏற்பட்டால் ஆளும் கட்சியினர் அதையே ஒரு பெரிய செய்தியாக்கி தீர்மானத்திற்கு 'லீவ்' கூடக் கிடைக்கவில்லை என்று கூறுவார்கள். நாடாளுமன்றத்திலும் பல கட்சிகள் இருக்கின்றன. அங்கு முக்கியமான விஷயங்களில் எல்லா எதிர்க்கட்சிகளும் ஒன்று சேர்ந்துகொள்ளுகின்ற நிலைமை இருக்கிறது. இங்குள்ள நிலைமை வருத்தப்படக்கூடிய நிலைமையில் இருக்கிறது. எதிர்க் கட்சியில் இருப்பவர்கள் பேரில் இன்னொரு எதிர்க்கட்சியே குற்றச் சாட்டு சொல்லும் நிலைமை இருக்கிறது. பிரிவிலேஜ் மோஷனை கொண்டு வருவார்கள் போல் இருக்கிறது. இப்படி புதிய புதிய மரபுகள் இந்த ஆட்சியிலேதான் ஏற்படுகின்றன. அப்பேர்ப்பட்ட ஒரு மரபை உண்டாக்கும் நிலையை ஆளும் கட்சி செய்து கொண்டிருக்கிறார்கள்.

**மாண்புமிகு மாற்றுத் தலைவர் (திரு பழனிவேல் ராஜன்):** நீங்கள் கேட்ட நேரம் ஆகிவிட்டது.



1973 பிப்ரவரி 5]

**திரு. கே. டி. கே. தங்கமணி :** எதிர்க்கட்சிகளாக இருந்து பல விஷயங்களை எதிர்க்கவேண்டிய சில நேரங்கள் வரத்தான் செய்யும். எல்லாவற்றையும் எல்லோரும் செய்து ஆளும்கட்சியை எதிர்க்கும் போது கண்டிப்பாக சில விஷயங்களைச் செய்யவேண்டிய அவசியம் ஏற்படும்.

**திரு. எம். ஏ. லத்தீப் :** தமிழ்நாட்டில்தான் எதிர்க்கட்சிகளாக இருக்கக்கூடிய சில கட்சிகள் எதிர்க்கட்சிகளுக்கே எதிர்க்கட்சிகளாக இருக்கக்கூடிய ஒரு நிலையை ஆளும் கட்சியினர் உருவாக்கியிருக்கிறார்கள், இத்தகைய மரபுகள் துரதிருஷ்டமானது என்ற கருத்தை மாண்புமிகு உறுப்பினர் திரு. கே. டி. கே. தங்கமணி அவர்கள் சொன்னார்கள். அவர் சார்ந்திருக்கிற ஸி.பி.ஐ. கட்சிகூட பாராளுமன்றத்தில் சில நிகழ்ச்சிகளில் இந்திரா காங்கிரஸை ஆதரிக்கும் நிலையும் இன்னும் சில நேரங்களில் அந்த சர்க்காரை எதிர்க்கக்கூடிய நிலையும் இருந்து வந்திருக்கின்றது. இப்போது கூட சமீபத்தில் கூட நடந்திருக்கின்றன என்பதை அவர்களது மேலான கவனத்திற்கு கொண்டுவர விரும்புகிறேன்.

அதே நேரத்தில் இங்கு நான் பேசிக்கொண்டிருந்தபோது எனக்குப் பின்னால் உட்கார்ந்து கொண்டு சொன்னார்கள். அதை இப்போது வெளிப்படையாகச் சொல்கிறார்கள். இரண்டு வித எதிர்க்கட்சிகள் இருக்கின்றன, ஒன்று உண்மையான எதிர்க் கட்சி, மற்றொன்று எதிர்பார்க்கிற கட்சி என்று. அப்படிச் சொல்வது யாரை நோக்கிச் சொல்கிறார்கள் என்பது எனக்குப் புரிகிறது. இருந்தாலும் சொல்கிறேன். முஸ்லீம் லீகைப் பொறுத்தவரையில். எங்கள் கட்சியைப் பொறுத்தவரையில் எதிர் பார்க்கிறது என்னவென்றால் ஜனநாயகத்தின் வெற்றியைத்தான் நாங்கள் எதிர்பார்க்கிறோமே தவிர ஜனநாயகக் கொலையை நாங்கள் எதிர்பார்க்கவில்லை. இன்று தமிழ் நாட்டில் முஸ்லிம் லீகைப் பொறுத்தமட்டில் ஆளுங்கட்சிக்கு ஒரு தோழமைக் கட்சிதான். ஆனால் இந்திய கம்யூனிஸ்ட் கட்சியும், இந்திரா காங்கிரஸ்காரர்களும் கேரளாவில் எங்களது கட்சிக்கு ஆட்சியில் பங்காளர்களாக இருக்கக் கூடியவர்கள். ஆதலால் அரசியல் துறையில் தி.மு.க.வை விட நெருக்கமாக இருக்கக் கூடிய அவர்களிடம் எதிர்பார்ப்போமே தவிர திராவிட முன்னேற்றக் கழகத்தினிடம் எதிர்பார்ப்போம் என்பது தவறான வாதம். ஜனநாயக அடிப்படையில் மட்டும் தான் முஸ்லிம் லீக் இயங்குமே தவிர ஜனநாயகத்தைக் கொலை

செய்கிற எந்தக் காரியத்திற்கும் அவர்கள் எங்கள், ஆட்சியில் பங்காளர்களாக இருந்தாலும் நாங்கள் ஆதரவு கொடுக்க மாட்டோம். அந்தப் பாரம்பரியத்தைத்தான் காயிதே மில்லத் அவர்களும், அப்துல் வகாப் ஜானி, பாஃபக்கி தங்கல் அவர்களும் தந்திருக்கிறார்கள். (ஹியர், ஹியர்.) அதை நண்பர் அவர்கள் நல்லமுறையில் உணர்ந்துகொள்ளவேண்டும் என்று சொல்லிக்கொள்கிறேன். நாங்கள் யாரிடத்திலும் எதையும் பிச்சை கேட்கத் தயாராயில்லை. இந்த சமுதாயத்தின் உரிமைகளை தட்டிக் கேட்போம் யாராகயிருந்தாலும் என்பதை நினைவுபடுத்த விரும்புகிறேன்.

**திரு. கே. டி. கே. தங்கமணி :** அவ்வளவு கோபப்பட்டிருக்க வேண்டிய அவசியமில்லை. கருத்து வேறுபாடுகள் இருக்கலாம். ஆளும் கட்சியின் நடவடிக்கைகளைப் பற்றி விமர்சனம் செய்யும் போது கூடியவரையில் எதிர்க்கட்சிக்காரர்களாக இருப்பவர்கள் ஒன்றாக இருந்தால் இன்னும் கொஞ்சம் ஆளும் கட்சியைத் திருத்துவதற்கு உதவிகரமாக இருக்கும். 35 பேர்களுக்கே ரொம்ப சிரமப்படவேண்டியிருந்தது. அந்த ஒரு பாயின்ட்க்காகச் சொன்னேன்.

**மாண்புமிகு மாற்றுத் தலைவர் (திரு. பழனிவேல் ராஜன்) :** நீங்கள் கேட்டது பத்து நிமிடங்கள். மணி இரண்டேகாலாகி விட்டது. மீண்டும் அவையைத் தொடர்ந்து நடத்த வைப்பது நன்றாகயிருக்காது.

**திரு. கே. டி. கே. தங்கமணி :** மைனாரிட்டிகளை இண்டல் செய்வதும், மைனாரிட்டிகளை கேவலமாகப் பேசுவதும், மைனாரிட்டீஸ் என்ன செய்யமுடியும் என்ற பார்வையும் மிகவும் தவறானவை என்று சுட்டிக்காட்ட விரும்புகிறேன். இத்தீர்மானத்தைக் கொண்டுவந்ததன் நோக்கத்தைப் பற்றிச் சொன்னேன். இந்தத் தீர்மானத்தை ஆதரிக்கவேண்டுமென்று கேட்டுக்கொள்கிறேன்.

**மாண்புமிகு மாற்றுத் தலைவர் (திரு. பழனிவேல் ராஜன்) :** பேரவையின் முன்னுள்ள கேள்வி :

"This House resolves to remove the Deputy Speaker of the Assembly from his office, for his undemocratic and unconstitutional acts on 2nd December 1972."



தீர்மானம் பேரவையின் முடிவிற்கு விடப்பட்டு, தோல்வியுற்றதாக அறிவிக்கப்பட்டது.

THIRU M. A. LATHEEF : Sir, I demand a poll.

தீர்மானம் மறுமுறையும் பேரவையின் முடிவிற்கு விடப்பட்டு, தோல்வியுற்றதாக அறிவிக்கப்பட்டது.

**திரு. திருப்பூர் ஏ. எம். மொய்தீன் :** டிவிஷன் எடுக்கவேண்டுமென்று விரும்புகிறேன்.

எண்ணிக் கணிக்கும் வாக்கெடுப்பு கோரப்பட்டு, உறுப்பினர்கள் கீழ்க்கண்டபடி வாக்களித்தனர் :—

**ஏற்போர்**

1. திரு. ஏ. ஆர். மாரிமுத்து
2. திருமதி த. ந. அனந்தநாயகி
3. திரு ஏ. சுப்பிரமணியம்
4. திரு. எம். சுரேந்திரன்
5. திரு. கே. என். குமாரசாமி
6. திரு. ஆர். பொன்னப்ப நாடார்
7. திருமதி ஜோதி வெங்கடாசலம்
8. திரு. கே. டி கே. தங்கமணி
9. டாக்டர் எச். வி. ஹாண்டே
10. திரு. ஜே. ஜேம்ஸ்
11. திரு. மணலி சி. கந்தசாமி
12. திரு. பி. வெங்கடசாமி
13. திரு. ஆ. கு. சுப்பையா
14. திரு. தி. ச. ஆ. சிவப்பிரகாசம்
15. திரு. எம். சத்தியமூர்த்தி
16. திரு. சோ. அழகர்சாமி
17. திரு. ஏ. சுவாமிதாஸ்
18. திரு. ஓ. என். சுந்தரம்

19. திரு. எஸ். வடிவேல்
20. திரு. என். வி. குருசாமி
21. திரு. என். டென்னிஸ்
22. திரு. என். மருதாசலம்
23. திரு. கு. அ. பொம்மன்
24. திரு. க. சுப்பு

**மறுப்போர்**

1. திரு. எஸ். ஆறுமுகம்
2. திரு. அ. ஆறுமுகம்
3. திரு. கு. ஆண்டி என்கிற குருசாமி
4. திரு. சி. வி. எம். அண்ணாமலை
5. திரு. க. மு. இராசகோபால்
6. திரு. மு. இரத்தினசபாபதி
7. திரு. சி. ஆறுமுகம்
8. திரு. கு. இராசமாணிக்கம்
9. திரு. டி. இராசரத்தினம்
10. திரு. அ. இராசமாணிக்கம்
11. திரு. ஆர். இராமலிங்கம்
12. திரு. சி. இராமநாதன்
13. திரு. எம். இராதாகிருஷ்ணன்
14. திரு. ஜே. எஸ். இராசு
15. திரு. மு. இராமன்
16. திரு. வீ. கே. இராஜாப்பிள்ளை
17. திரு. கோ. இளங்கோவன்
18. திரு. வீ. சா. இளஞ்செழியன்
19. மாண்புமிகு டாக்டர் மு. கருணாநிதி
20. மாண்புமிகு டாக்டர் இரா. நெடுஞ்செழியன்
21. மாண்புமிகு திரு. க. அன்பழகன்



22. மாண்புமிகு திருமதி சத்தியவாணிமுத்து
23. மாண்புமிகு திரு. ப. உ. சண்முகம்
24. மாண்புமிகு திரு. செ. மாதவன்
25. திரு. து. ப. அழகமுத்து
26. திரு. இராம. அரங்கண்ணல்
27. திரு. எஸ். முருகையன்
28. திரு. மு. சண்முகம்
29. திரு. செ. கந்தப்பன்
30. திரு. பூ. எட்டியப்பன்
31. திரு. என். கணபதி
32. திரு. டி. கணபதி
33. திரு. எல். கணேசன்
34. திரு. சி. கணேசன்
35. திரு. க. மு. கதிரவன்
36. திரு. கே. பி. கந்தசாமி
37. திரு. எம். கந்தசாமி
38. திரு. மா. வெ. கரிவேங்கடம்
39. திரு. தாழை மு. கருணாநிதி
40. திரு. கு. காமாட்சி
41. திரு. வீ. கார்த்திசன்
42. திரு. சொ. காவேரிமணியன்
43. திரு. வி. முத்து
44. திரு. என். கிட்டப்பா
45. திரு. ந. கிருட்டிணன்
46. திரு. வீ. கிருஷ்ணமூர்த்தி
47. திரு. கே. எஸ். குப்பல் இராமகிருஷ்ணன்
48. திரு. ஏ. எஸ். குமாரசாமி
49. திரு. கே. கேசவலு
50. திரு. எம். கோபால்

51. திரு. வீ. சி. கோவிந்தசாமி
52. திரு. வெ. கிருஷ்ணமூர்த்தி
53. திரு. கோவை செழியன்
54. திரு. எஸ். சகாதேவன்
55. திரு. செ. சதாசிவம்
56. மாண்புமிகு திரு. எஸ். ஜே. சாதிக் பாட்சா
57. மாணபுமிகு திரு. சி: பா. ஆதித்தனார்
58. மாண்புமிகு திரு. அ. பெ. தர்மலிங்கம்
59. மாண்புமிகு திரு. க. இராசாராம்
60. மாண்புமிகு திரு. ஓ. பி. இராமன்
61. மாண்புமிகு திரு. ச. இராமச்சந்திரன்
62. மாண்புமிகு திரு. மு. கண்ணப்பன்
63: திரு. எம். செல்வராஜ்
64. திரு. தோப்பூர் திருவேங்கடம்
65. திரு. டி. வி. சம்பத்
66. திரு. மா. பா. சாரதி
67. திரு. சித. சிதம்பரம்
68. திரு. அ. ப. சண்முகசுந்தரம்
69. திரு. பெரி. சண்முகம்
70. திரு. எம். எஸ். கே. சத்தியேந்திரன்
71. திருமதி: ஆல்டா எம். பௌலர்
72. திருமதி ஏ. கோ. பத்மாவதி
73. திருமதி வி. ப. பழனியம்மாள்
74. திரு. தொ. க. சிறைமீட்டான்
75. திரு. அ. சின்னசாமி
76. திரு. ஆர். சின்னசாமி
77. திரு. மு. சின்னசாமி
78. திரு. வ. சின்னசாமி
79. திரு. சி. சின்னவெள்ளையன்





80. திரு. எஸ். கே. சுப்பிரமணியன்
81. திரு. மா. சுப்பிரமணியன்
82. திரு. ச. சுப்பையா
83. திரு. வி. சுப்பிரமணியம்
84. திரு. எம். சுருளிவேல்
85. திரு. கோ. செபமாலை
86. திரு. கி. செயராமன்
87. திரு. வீ. செல்லத்துரை
88. திரு. த. சோணையா
89. திரு. நா. சோமசுந்தரம்
90. திரு. மு. மாரிமுத்து
91. திரு. டி. சி. திம்மராய கவுண்டர்
92. திரு. அ. தியாகராசன்
93. திரு. மா. மீனாட்சிசுந்தரம்
94. திரு. கு. திருப்பதி
95. திரு. ஏ. க. துரைசாமி
96. திரு. வே. ந. முத்தமிழ் செல்வன்
97. திரு. இ. எஸ். தியாகராசன்
98. புலவர் கா. கோவிந்தன்
99. திரு. கே. வி. சுப்பையா
100. திரு. கா. வேழவேந்தன்
101. திரு. சு. துரைசாமி
102. திரு. துரைமுருகன்
103. திரு. என். மாணிக்கம்
104. திரு. மே. சி. தூயமணி
105. திரு. ஏ. ஆர். சுப்பையா
106. திரு. ஈ. எம். நடராசன்
107. திரு. எஸ். நடராஜன்
108. திரு. ஏ. -சி. நரசிம்மன்

109. திரு. எஸ். நல்லசாமி
110. திரு. க. நாகராசன்
111. திரு. ப. நாகலிங்கம்
112. திரு. என். நாச்சிமுத்து
113. திரு. ஏ. எம். டி. நாச்சியப்பன்
114. திரு. ந. நாச்சியப்பன்
115. திரு. மா. வே. நாராயணசாமி
116. திரு. இரா. நைனுமலை
117. திரு. ஆ. பரந்தாமன்
118. திரு. ந. பழனிசாமி
119. புலவர் சி. பழனிச்சாமி
120. டாக்டர் ச. மு. பழனியப்பன்
121. திரு. கா. பழனிவேலன்
122. திரு. எஸ். காதர் பாட்சா என்ற வெள்ளைச்சாமி
123. திரு. சி. மன்னியப்பன்
124. திரு. வீ. பழனிவேலு
125. திரு. சி. பாண்டுரங்கம்
126. திரு. கு. பாலகிருஷ்ணன்
127. திரு. வை. பாலசுந்தரம்
128. திரு. கு. பெரியசாமி
129. திரு. எஸ். பெருமாள்
130. திரு. பி. எஸ். மணியன்
131. திரு. வீ. மலைக்கண்ணன்
132. திரு. ஏ. ஆர். பெருமாள்
133. திரு. திருப்பூர் ஏ. எம். மொய்தீன்
134. திரு. சௌடி எஸ். சுந்தரபாரதி
135. திரு. கே. ஏ. வகாப்
136. திரு. எம். ஏ. லத்தீப்
137. திரு. எஸ். அழகுத்தேவர்



138. திரு. வா. மை. அப்துல் ஜப்பார்
139. திரு. மு. முத்தையா
140. திரு. எம். ஏ. அபுசாலி
141. திரு. கே. கந்தசாமி
142. திரு. எஸ். முகமது கோதர் முகைதீன்
143. திரு. செ. கோ. விசுவநாதன்
144. திரு. என். இராஜாங்கம்
145. திரு. ப. முத்துசாமி
146. திரு. பு. செ. முத்துச்செல்வன்
147. திரு. ந. முத்துவேல்
148. திரு. ஆ. முனியாண்டி
149. திரு. ரா. ரா. முனுசாமி
150. திரு. கி. ரங்கநாதன்
151. திரு. இ. ராமசாமி
152. திரு. ஜி. இராமசாமி
153. திரு. வ. க. இராமராசன்
154. திரு. செ. ராமலிங்கம்
155. திரு. ஏ. எம். இராஜா
156. திரு. என். எஸ். பலராமன்
157. திரு. எஸ். கே. வடிவேலு
158. திரு. நா. வீராசாமி
159. திரு. மு. வேதாசலம்
160. திரு. அ. வெள்ளத்துரை

### நடுநிலை வகிப்போர்

எவருமில்லை

மாண்புமிகு மாற்றுத்தலைவர் (திரு. பழனிவேல் ராஜன்): மாண்புமிகு தங்கமணி அவர்களின் தீர்மானத்திற்கு ஆதரவு அளித்தவர்கள் 24 உறுப்பினர்கள். தீர்மானத்திற்கு எதிர்ப்பு

தெரிவித்தவர்கள் 160 உறுப்பினர்கள். ஆகவே, தீர்மானம் தோல்வியுற்றது என்று அறிவிக்கிறேன்.

பேரவையின் இன்றைய நிகழ்ச்சிகள் இத்துடன் முடிவுற்று, நாளைக் காலை 9 மணிக்கு மாண்புமிகு துணைத் தலைவர் அவர்கள் தலைமையில் பேரவை மீண்டும் கூடும்.

பின்னர் பேரவை 2.29 மணிக்கு ஒத்தி வைக்கப்பட்டது.

## 5. பேரவையின் முன் வைக்கப்பட்ட ஏடுகள்.

### *A. Statutory Rules and Orders*

+ 17. Notification issued with G.O. Ms. No. 2197, Public (Services-A), dated the 4th September 1972, in regard to an amendment to the Tamil Nadu Public Service Commission Regulations, 1954 for exclusion of the Posts of Translation Officers in the Tamil Nadu General Service from the Commission's purview. [Laid on the Table of the House under Article 320 (5) of the Constitution of India).]

+ 18. Notification issued with G.O. Ms. No. 2258, Home, dated the 30th August 1972 in regard to an amendment to the Tamil Nadu Cinemas (Regulation) Rules, 1957. [Laid on the Table of the House under section 10 (3) of the Tamil Nadu Cinemas (Regulation) Act 1955 (Tamil Nadu Act IX of 1955).]

+ 19. Notification issued with G.O. Ms. No. 1438, Labour and Employment, dated the 31st December 1972, in regard to date of commencement of the Tamil Nadu Labour Welfare Fund Act, 1972. [Laid on the Table of the House under section 41 (5) of the Tamil Nadu Labour Welfare Fund Act, 1972 (Tamil Nadu Act 36 of 1972).]

+ 20. Notification issued with G.O. Ms. No. 3136, Revenue, dated the 30th November 1972 in regard to an amendment to the Revenue Department Notification II-1 No. 1303 of 1965, published at page 526 of Part II—Section 1 of the *Tamil Nadu Government* Gazette, dated the 24th March 1965. [Laid on the Table of the House under section 26 (2) of the Tamil Nadu (Transferred Territory) Ryotwari Settlement Act, 1964 (Tamil Nadu Act 30 of 1964).]



21. Notification issued with G.O. Ms. No. 2412, Public (Services-A), dated the 4th October 1972 in regard to an amendment to the Tamil Nadu Public Service Commission Regulations, 1954 for inclusion of certain posts in Tamil Nadu State Transport Subordinate Service within the Commission's purview. [Laid on the Table of the House under Article 320 (5) of the Constitution of India).]

### *B. Reports, Notifications and Other Papers.*

+ 12. Notification issued with G.O. Ms. No. 3122, Revenue, dated the 28th November 1972 in regard to remission of stamp duty chargeable under the Indian Stamp Act, 1899 in respect of five endowment deeds to be executed by the Muslim Orphanage Committee in favour of Sadakathulla Appa College Managing Committee, Palayamkottai.

@ 13. Administrative Reforms Commission report on the speeding up of the clearances required for setting up of New Small Scale Industries.

---

+ Laid on the Table of the House on 3rd February 1973.

@ Despatched to Members on 1st February 1973.

## இணைப்பு 1.

[53ம் பக்கத்தில் 2-ஆம் எண்ணுள்ள வெள்ளிக் குறியிட்ட வினாவிற்குரிய விடையைக் காண்க.]

Statement showing the details regarding the new courses started during 1971–72 in the Engineering Colleges and Polytechnics in the State of Tamil Nadu.

I. *Engineering Colleges* :

(i) Part-time Degree Course for Diploma holders working in Industry were started in the following Engineering Colleges :

| *Name of College.* | *Intake.* |
|---|---|
| 1. College of Engineering, Guindy ... ... | 60 |
| 2. Government College of Technology, Coimbatore ... ... ... ... ... | 30 |
| 3. Government College of Engineering, Salem. | 30 |
| 4. Regional Engineering College, Trichirappalli ... ... ... ... ... | 30 |
| 5. P.S.G. College of Technology, Coimbatore. | 30 |
| 6. Alagappa Chettiar College of Engineering and Technology, Karaikudi ... ... | 30 |
| 7. Coimbatore Institute of Technology, Coimbatore ... ... ... ... | 30 |
| 8. Thiagarajar College of Engineering, Madurai ... ... ... ... ... | 30 |

(ii) A B.Sc. degree course in Applied Sciences 3 years duration at the College of Engineering, Guindy.

(iii) Post-Graduate courses at the following Engineering Colleges subject to concurrence of the Madras and Madurai Universities.



(*a*) *Government College of Technology, Coimbatore.*

(1) Post-Graduate course in Structural Engineering (Civil).

(2) Post-Graduate course in Machine Design (Mechanical).

(*b*) *Thiagarajar College of Engineering, Madurai.*

(1) Post-Graduate course in Structural Engineering (Civil).

(2) Post-Graduate course in Power Systems (Electrical).

II. *Polytechnics* :

(i) The following courses were started, from the academic year 1971–72 in the Polytechnics.

1. Agricultural Engineering.

2. Welding Technology.

3. Hospital Equipment Technology.

4. A course in Cosemetology at the Government Polytechnic for Women, Madras.

5. A certificate course in Commercial Banking at the Government Polytechnic for Women, Madras.

6. Diploma Course in Electronics (Instrument Technology) at the Government Polytechnic for Women, Madurai.

7. A course on Commercial Practice at the Virudhunagar S. Vellaichamy Nadar Polytechnic, Virudhunagar.

8. A course in Laundry Technology as an Elective in the Technical High School attached to the Central Polytechnic, Adyar, Madras.

9. A diploma course in Commercial Practice at the Nachimuthu Polytechnic, Pollachi.

10. A certificate course for Head Gardeners of One year duration with an intake of 20 students at the Central Polytechnic, Madras.

The following courses were introduced from 1972–73 :

| *Name of course.* | *Institution in which courses were introduced.* |
| --- | --- |
| 1. Post Diploma Course in Diesel Traction. | Government Polytechnic, Trichirapalli. |
| 2. Bionics Elective under electronic and communication Engineering. | College of Engineering, Guindy. |
| 3. Applied Mathematics (P. G. Course, | College of Engineering, Guindy. |
| 4. Applied Electronics. (P. G. Course). | College of Engineering, Guindy. |
| 5. Diploma Course in Prosthetics and Orthotics. | Central Polytechnic, Madras. |
| 6. Post Diploma Course in Metallurgy. | Central Polytechnic, Madras. |



## இணைப்பு 2

[65-ம் பக்கத்தில் 11-ஆம் எண்ணுள்ள வெள்ளிக் குறியிட்ட வினாவிற்குரிய விடையைக் காண்க.]

**Clause (*a*) : Statement showing the number of Honorary Presidency Magistrates in Madras City and Honorary Magistrates working in the districts of Tamil Nadu.**

| Name of District. | Number of Honorary Presidency Magistrates. | Special Honorary Presidency Magistrate who are empowered to sit singly and dispose of cases. | Juvenile Court. |
| --- | --- | --- | --- |
| (1) | (2) | (3) | (4) |
| **Madras City** .. .. | **195** | **28** (Out of this four have been appointed under section 14, Cr. P. C. also to preside over Railway Mobile Court.) | **1** |

| Serial number, name of districts. | Honorary First-Class Magistrates. | Honorary Second-Class Magistrates. | Honorary First-Class Bench Magistrates. | Honorary Second-Class Magistrates. | Special First-Class Railway Magistrates. | Juvenile Court. | Total. |
|---|---|---|---|---|---|---|---|
| (1) | (2) | (3) | (4) | (5) | (6) | (7) | (8) |
| 1 North Arcot .. | 2 | Nil. | Nil. | 10 | 2 | 4 | |
| 2 South Arcot .. | 1 | Nil. | Nil. | 38 | 2 | Nil. | |
| 3 Chingleput .. | Nil. | Nil. | Nil. | Nil. | Nil. | Nil. | |
| 4 Coimbatore .. | 6 | Nil. | Nil. | 30 | 2 | 15 | |
| 5 Kanyakumari .. | 1 | Nil. | Nil. | Nil. | Nil. | Nil. | |
| 6 Madursi .. .. | 3 | Nil. | 39 | 8 | 4 | 5 | |
| 7 Ramanathapuram. | Nil. | Nil. | Nil. | Nil. | Nil. | Nil. | |
| 8 Salem .. .. | 2 | Nil. | Nil. | Nil. | 1 | 1 | |
| 9 Dharmapuri .. | 1 | Nil. | Nil. | Nil. | Nil. | Nil. | |
| 10 Thanjavur .. | 5 | Nil. | Nil. | 1 | 1 | Nil. | |
| 11 Thiruchirappalli .. | 1 | Nil. | 3 | 41<br>+7 Honorary Third Class Bench Magistrates. | 3 | 3<br>Honorary Juvenile First-Class Magistrates. | |
| 12 Tirunelveli .. | 7 | Nil. | Nil. | Nil. | 1 | 1<br>(Both for Kanyakumari and Tirunelveli.) | |
| | 29 | Nil. | 42 | 128 | 16 | 29 | |



**பகுதி (அ).—சென்னை** மாநகரில் உள்ள மாநகர கௌரவ மாஜிஸ்டிரேட்டுகளின் **எண்ணிக்கையையும்** தமிழ் நாட்டு மாவட்டங்களில் பணியாற்றும் மாஜிஸ்டிரேட்டுகளின் எண்ணிக்கையையும் காட்டும் விவர அறிக்கை :—

| மாவட்டத்தின் பெயர். | மாநகர கௌரவ மாஜிஸ்டிரேட்டுகளின் எண்ணிக்கை. | ஒருவரே அமர்ந்து வழக்குகளை முடிவு செய்ய அதிகாரம் அளிக்கப்பட்டுள்ள மாநகர சிறப்புக் கௌரவ மாஜிஸ்டிரேட்டுகள். | இளங்குற்றவாளிகள் நீதி மன்றம். |
|---|---|---|---|
| (1) | (2) | (3) | (4) |
| சென்னை மாநகரம் .. .. | 195 | 28<br>(இவருள் நால்வர் கு. பு. கோ. 14-வது பிரிவின் கீழ் நியமிக்கப்பட்டுள்ளனர். ரயில்வே இயல் ஊர்தி நீதிமன்றத்திற்கும் இவர்கள் தலைமை தாங்கவேண்டும்.) | 1 |

1973 பிப்ரவரி 5]

| தொடர் எண்ணும், மாவட்டத்தின் பெயரும். (1) | கௌரவ முதல் வகுப்பு மாஜிஸ்திரேட்டுகள். (2) | இரண்டாம் வகுப்பு கௌரவ மாஜிஸ்திரேட்டுகள். (3) | சிறுவர் முதல் வகுப்பு கௌரவ மாஜிஸ்திரேட்டுகள். (4) | இரண்டாம் வகுப்பு கௌரவ மாஜிஸ்திரேட்டு ஆயங்கள். (5) | சிறப்பு முதல் வகுப்பு மாஜிஸ்திரேட்டுகள். (6) | இளங்குற்றவாளிகள் நீதிமன்றம். (7) | மொத்தம். (8) |
|---|---|---|---|---|---|---|---|
| 1 வட ஆற்காடு .. | 2 | இல்லை | இல்லை | 10 | 2 | 4 | |
| 2 தென் ஆற்காடு | 1 | இல்லை | இல்லை | 38 | 2 | இல்லை | |
| 3 செங்கற்பட்டு .. | இல்லை | இல்லை | இல்லை | இல்லை | இல்லை | இல்லை | |
| 4 கோயம்புத்தூர் | 6 | இல்லை | இல்லை | 30 | 2 | 15 | |
| 5 கன்னியாகுமரி .. | 1 | இல்லை | இல்லை | இல்லை | இல்லை | இல்லை | |
| 6 மதுரை .. .. | 3 | இல்லை | 39 | 8 | 4 | 5 | |
| 7 இராமநாதபுரம் .. | இல்லை | இல்லை | இல்லை | இல்லை | இல்லை | இல்லை | |
| 8 சேலம் .. .. | 2 | இல்லை | இல்லை | இல்லை | 1 | 1 | |
| 9 தருமபுரி .. | 1 | இல்லை | இல்லை | இல்லை | இல்லை | இல்லை | |
| 10 தஞ்சாவூர் .. | 5 | இல்லை | இல்லை | 1 | 1 | இல்லை | |
| 11 திருச்சிராப்பள்ளி | 1 | இல்லை | 3 | 41 (இத்துடன் 7 மூன்றும் வகுப்பு கௌரவ மாஜிஸ்டிரேட்டு ஆயம்). | 3 | 3 இளங்குற்றவாளிகள் நீதிமன்ற முதல் வகுப்பு மாஜிஸ்டிரேட்டுகள். | |
| 12 திருநெல்வேலி .. | 7 | இல்லை | இல்லை | இல்லை | 1 | 1 (கன்னியாகுமரிக்கும் திருநெல்வேலிக்கும் சேர்த்து). | |
| | 29 | இல்லை | 42 | 128 | 16 | 92 | |

## தமிழ்நாடு சட்டப் பேரவை

## செவ்வாய்க்கிழமை, 1973 பிப்ரவரி 6.

சென்னை செயின்ட் ஜார்ஜ் கோட்டையிலுள்ள சட்டப் பேரவை மண்டபத்தில் காலை 9 மணி அளவில் மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர் திரு. பெ. சீனிவாசன் அவர்கள் தலைமையில் பேரவை கூடியது.

### I. வினாக்கள்—விடைகள்

*Drainage Scheme for Tiruvotriyur*

வெள்ளிக் குறியிட்ட வினாக்கள்.

* 21 Q.—Dr. H. V. HANDE: Will the Hon. the Chief Minister be pleased to state—

(a) whether the Government have any proposal to implement a drainage scheme for Tiruvottiyur shortly; and

(b) if so, the details thereof?

மாண்புமிகு டாக்டர் மு. கருணாநிதி: (அ) ஆம்.

(இ) இத்திட்டம் அமைப்பதற்கு ரூ. 85.34 லட்சமும், பேணி வருவதற்கு ஆண்டு ஒன்றுக்கு ரூ. 2.26 லட்சமும் செலவாகக் கூடியதுமான திருவொற்றியூர் நகராட்சிக்கான வடிகால் திட்டத்திற்கு அரசு ஒப்புதல் அளித்துள்ளது. திட்டத்தை தமிழ்நாடு குடிநீர் வடிகால் வாரியம் செயல்படுத்தும்.

*Theft cases*

* 22 Q.—Thiru R. R. MUNUSWAMY: Will the Hon. the Chief Minister be pleased to state—

(a) whether the Government are aware of the increasing number of women thieves in Madras City in recent times; and

(b) if so, the action taken thereon?

மாண்புமிகு டாக்டர் மு. கருணாநிதி: (அ) ஆம்.

(இ) பெண் குற்றவாளிகள் வழக்கமாகப் புழங்குகிற திருமண வீடுகள் முதலிய இடங்களைக் கண்காணிக்குமாறு காவல்துறைப் பணியாளர்களுக்குக் காவல்துறைக் கமிஷனரால் சிறப்புக் கட்டளைகள் பிறப்பிக்கப்பட்டுள்ளன.

திரு. ஆ. பரந்தாமன் : தலைவர் அவர்களே, பொதுவாகவே, பெண்கள் பயந்த சுபாவம் உள்ளவர்கள். ஆனால், சில சினிமாப் படங்களில் கள்ளக்கூட்டத் தலைவிகளாகவும், கொள்ளைக்கூட்டத் தலைவிகளாகவும் நடிக்கக்கூடிய பாத்திரங்களைப் பெண்களுக்குக் கொடுத்திருக்கின்றார்கள். அதைத் தடுக்க அரசு முயலுமா ?

மாண்புமிகு டாக்டர் மு. கருணாநிதி : அது அந்தப் பாத்திரங்களில் நடிக்கின்ற பெண்கள் முடிவு செய்ய வேண்டிய விஷயம்.

டாக்டர் ச. மு. பழனியப்பன் : முதல் அமைச்சரவர்கள் பதில் சொல்லும்போது, பெண் குற்றவாளிகள் சென்னையில் அதிகமாக இருப்பதாகச் சொன்னார்கள். அப்படி அவர்கள் திருட்டு வேலையில் ஈடுபடும்போது எம்மாதிரியான பொருட்களை அதிகமாகத் திருடுகிறார்கள் ? அப்படித் திருடுவதைத் தடுக்க இந்த அரசு ஏதாவது திட்டம் வைத்திருக்கிறதா ?

மாண்புமிகு டாக்டர் மு. கருணாநிதி : அவர்கள் பொதுவாகவே திறந்து கிடக்கும் வீடுகளிலும், குறிப்பாகத் திருமண வீடுகளிலும் திருமணத்திற்கு வந்திருக்கிற பெண்களோடு கலந்து, அங்கே இருக்கின்ற நகைகளைத் திருடுவதுதான் பொதுவான திருட்டாக இருந்து வருகிறது. அவற்றைக் கண்டுபிடிக்கும் வகையில் குற்றவாளிகள் அதிகமாக இருக்கிறார்கள் என்று கணக்கிடும்போது அந்தக் குற்றங்களில் ஈடுபட்டவர்கள் அதிகமாகப் பிடிபட்டிருக்கிறார்கள் என்பதை நாம் உணர்ந்து கொள்ள வேண்டும். மேலும், இந்தப் பெண் குற்றவாளிகளைக் கண்டுபிடிப்பதற்கான முயற்சிகளைத் தீவிரமாக மேற்கொள்ள வேண்டும் என்று சென்னை நகரத்தைப் பொறுத்த வரையில் கமிஷனர் ஆணைகளைப் பிறப்பித்திருக்கிறார்.

திரு. நா. வீராசாமி : இப்படிப்பட்ட பெண் குற்றவாளிகளைக் கண்டுபிடிப்பதற்கு பெண் போலீஸ் அமைப்பது குறித்து நம்முடைய அரசாங்கத்திலே ஒரு தீர்மானம் இருந்ததா ? அந்தத் தீர்மானம் இருந்தால் அதை நிறைவேற்ற அரசாங்கம் ஏதாவது நடவடிக்கை எடுக்குமா ?

மாண்புமிகு டாக்டர் மு. கருணாநிதி : பெண் போலீசைப்பற்றி ஒரு யோசனை இந்த அரசுக்கு இருந்து வருகிறது. அது விரைவிலே முடிவு செய்யப்படாவிட்டாலும் காலப்போக்கில் முடிவு செய்யப்படும் என்பதைத் தெரிவித்துக்கொள்ளுகிறேன்.



திரு. கே. என். குமாரசாமி : உதவித் தலைவர் அவர்களே, பெண்களை வைத்துக் கள்ளக்கடத்தல் செய்யும் நிலைமை உருவாக்கப்பட்டுள்ளதே, அதை விரைவில் கண்டுபிடிக்க ஏதாவது நடவடிக்கை எடுக்கப்பட்டுள்ளதா ?

மாண்புமிகு டாக்டர் மு. கருணாநிதி : கடத்தல் காரியங்களில் ஈடுபடும்போது அந்தப் பெண்கள் கைது செய்யப்படுகிறார்கள். முதலிலேயே சந்தேகப்பட்டு இதுபோன்ற காரியங்களில் ஈடுபடுவது அவ்வளவு பொருத்தமாக இல்லாத காரணத்தால்தான் அவர்கள் அந்தக் காரியங்களுக்கு ஈடுபடுத்தப்படும்போது போலீசாரால் கைது செய்யப்படுகிறார்கள்.

## தொல்பொருள் ஆராய்ச்சித் துறை

* 23 வினு.—திரு. என். கிட்டப்பா : மாண்புமிகு கல்வி–உள் ஆட்சித்துறை அமைச்சர் தயவு செய்து கீழ்க்கண்ட வினுவுக்கு விடையளிப்பாரா :

தமிழக தொல்பொருள் ஆராய்ச்சித் துறையின் தமிழ் ஆராய்ச்சித் துறையில், தமிழ் ஆராய்ச்சி வல்லுநர்களும் கல்வெட்டு ஆராய்ச்சி வல்லுநர்களும் இடம் பெற்றுள்ளனரா ?

மாண்புமிகு டாக்டர் இரா. நெடுஞ்செழியன் : தொல்பொருள் ஆராய்ச்சித் தமிழ் ஆராய்ச்சி வல்லுநர் என்ற தனித்தொரு பதவி கிடையாது. கல்வெட்டு ஆய்வாளர் என்றும், அகழ்வாய்வாளர் என்றும் பதவிகள் உள்ளன. இவற்றில் பதவி வகிப்பவர்கள் தமிழில் திறன் பெற்றவராய் இருத்தல் வேண்டும் என்பது விதி.

## *Recruitment of teachers for elementary schools*

*24 Q.—THIRU N. K. PALANISWAMY : Will the Hon. the Minister for Education and Local Administration be pleased to state the number of teachers to be recruited for the elementary schcools in the State during 1972?

மாண்புமிகு டாக்டர் இரா. நெடுஞ்செழியன் : சுமார் 3,470 பேர்.

திரு. ஆர். பொன்னப்ப நாடார் : தலைவர் அவர்களே, ஆசிரியர் பயிற்சிபெற்று 30 வயதை எட்டியிருக்கின்ற பல ஆசிரியர்கள் வேலை இல்லாமல் திண்டாடிக் கொண்டிருக்கிறார்கள். குறிப்பாக, எங்கள் மாவட்டத்தில் ஒருசில ஆசிரியர்கள் உண்ணா நோன்பு மேற்கொண்டிருக்கின்றார்கள். அவர்களுக்கு ஏதாவது நிவாரணம் அளிக்க அரசாங்கம் நடவடிக்கை மேற்கொள்ளுமா ?

[1973 பிப்ரவரி 6

மாண்புமிகு டாக்டர் இரா. நெடுஞ்செழியன் : வேலைவாய்ப்பு ஏற்படும்போது அவர்களுக்கு, வயது குறித்து கூடுமானவரை சலுகை அளித்து வேலை தரப்பட்டிருக்கிறது. புதிதாக ஏற்படுத்துகிற அரசினர் பள்ளிகளிலும், வேலையிலிருந்து ஓய்வு பெறுகிறவர்கள், வேலையின்போது இறந்துவிடுபவர்கள் ஆகிய காலி இடங்களை நிரப்பும் வகையில் மூவாயிரம் சில்லரை இடங்கள் காலி ஏற்பட்டு நிரப்பப்பட்டிருக்கின்றன. இந்த ஆண்டு 5,000 இடங்கள் காலி ஏற்பட்டு, நிரப்பப்படக் கூடும். வருகின்ற ஆண்டுகளில்கூட, புதிதாக ஆசிரியர் பயிற்சி கொடுத்து உற்பத்தியாக்கும் எண்ணிக்கையை ஓரளவு குறைத்து, பயிற்சி பெற்று வேலையில்லாமலிருக்கும் அத்தனை பேருக்கும் வேலை வாய்ப்பு தேடித்தரும் முயற்சிகள் மேற்கொள்ளப்பட்டிருக்கின்றன. பி.டி. ஆசிரியர்களைப் பொறுத்து, மத்திய அரசு 900 பி.டி. ஆசிரியர்களுக்கு உயர்துவக்கப் பள்ளிகளில் தலைமை ஆசிரியர்களாக நியமனம் செய்யச் சொல்லி அதற்கான தொகை தருகிறார்கள். சென்ற ஆண்டு 900 பேர்களுக்கும் இந்த ஆண்டு 900 பேர்களுக்கும் தருகிறார்கள். அவர்களுக்கான சம்பளத்தை அவர்கள் தர இருக்கிறார்கள். 1973-ஆம் ஆண்டு கடைசிவரை தருவார்கள். அதற்குப் பிறகு நாம் பொறுப்புகளை ஏற்றுக்கொள்ள வேண்டிவரும். எந்த அளவு அதிகமாக வேலை வாய்ப்பு தேடுகிறோமோ அந்த அளவுக்கு வேலை வாய்ப்பின் அடிப்படையில் அவர்களை வேலைக்கு அமர்த்திப் பாதுகாப்பு தரும் முயற்சி மேற்கொள்ள முடியும்.

திரு. கே. டி. கே. தங்கமணி : சென்ற ஆண்டு பி.டி. ஆசிரியர்கள் 900 பேர்களுக்கு வேலை அளிக்கப்பட்டதாகவும், மத்திய அரசு நிதி உதவி அளிப்பதாகவும் சொன்னார்கள். அந்த 900 பேர்களும் வேலைக்கு எடுத்துக்கொள்ளப்பட்டார்களா? இந்த ஆண்டில் அம்மாதிரி எடுத்துக்கொள்ளப்படும் 900 பேர்களும் சென்ற ஆண்டில் எடுத்துக்கொள்ளப்பட்ட முறையிலேயே வேலைக்கு அமர்த்தப்படுவார்களா? அல்லது, நேரடியாகவே அந்த அரசே 900 ஆசிரியர்களையும் வேலைக்கு அமர்த்தி, ஆங்காங்கு அவர்கள் பிரித்து அனுப்பப்படுவார்களா?

மாண்புமிகு டாக்டர் இரா. நெடுஞ்செழியன் : 1971-72-ஆம் ஆண்டில் 300 ஆசிரியர்கள் பயன்படுத்தப்பட்டார்கள். அதற்குப் பிறகு 600 ஆசிரியர்கள் பயன்படுத்தப்பட்டார்கள். இந்த ஆண்டு 900 ஆசிரியர்களை நியமித்துக் கொள்வதற்கு அண்மையில் அனுமதி அளித்திருக்கிறார்கள். 900 ஆசிரியர்களை கூடுமானவரை அரசாங்க உயர்



1973 பிப்ரவரி 6]

துவக்கப் பள்ளிகளிலும், ஊராட்சி ஒன்றியத்தின் சார்பாக நடத்தப்படுகின்ற உயர்துவக்கப் பள்ளிகளிலும் ஓரளவுக்கு சலுகை அளித்து நியமித்துக்கொண்டு, அப்படியும் வேலை இல்லாத நிலை ஏற்பட்டால், தனியார்த் துறைப் பள்ளிகளிலும் வேலை வாய்ப்பு அளிக்கும் அத்தகைய கொள்கைதான் மேற்கொள்ளப்படும்.

திரு. ஆர். பொன்னப்ப நாடார் : இப்படி 30 வயதைத் தாண்டியவர்களுக்கு அவர்களுடைய இந்த வயது நிர்ணயத்தைத் தள்ளுபடி செய்வதற்கு அரசாங்கம் நடவடிக்கை மேற்கொள்ளுமா? மூன்று ஆண்டுக் காலம் அரசாங்கத்தின் பணியிலே ஈடுபட வேண்டும் என்று அவர்கள் கையெழுத்துப் போட்டிருக்கிறார்கள். அவ்வாறு அந்த உத்தரவாதத்தின் அடிப்படையில் வயது வரம்பை மாற்ற அரசாங்கம் முற்படுமா?

மாண்புமிகு டாக்டர் இரா. நெடுஞ்செழியன் : அப்படி வயது வரம்பு காரணமாக வேலை இல்லை என்ற நிலைமை இருந்தால், அது அவர்களுடைய குற்றம் ஆகாது. அந்த வகையில் அவர்களுக்கு வயது வரம்பைத் தளர்த்துவது கடினமாக இருக்காது என்று கருதுகிறேன். அவர்களுடைய விண்ணப்பம் முறைப்படி ஆராயப்படும்.

திரு. கே. டி. கே. தங்கமணி : சென்ற ஆண்டு 3,000 பேர்கள் வரையில் அமர்த்தப்பட்டார்கள் என்றும் இந்த ஆண்டு 5,000 பேர்கள் அமர்த்தப்பட்டார்கள் என்றும் சொன்னார்கள். இந்த ஐயாயிரத்தையும் அதிகமாக்குவது குறித்து ஏதாவது உத்தேசம் உண்டா?

மாண்புமிகு டாக்டர் இரா. நெடுஞ்செழியன் : அதற்குமேல் எண்ணிக்கையை அதிகமாக்குவதற்கு நிதி வசதி இடம் தரவில்லை. நிதி வசதி எவ்வளவு ஒதுக்கப்பட்டிருக்கிறதோ அந்த அளவில்தான் நியமிக்கப்பட இருக்கிறது. அதற்குமேல் நாம் அதிகமாக நியமிப்பதற்கு வழிவகை இல்லை.

திரு. ஏ. சுவாமிதாஸ் : சென்ற ஆண்டு அப்ரெண்டிஸ் டீச்சர்ஸ் என்ற ஒரு நிலையிலே ஆசிரியர்கள் வேலைக்கு எடுத்துக்கொள்ளப்பட்டார்கள். அது இப்பொழுது நிறுத்திவைக்கப்பட்டிருக்கிறது. தொடர்ந்து அப்ரெண்டிஸ் டீச்சர்ஸ் என்ற பணிக்கு ஆசிரியர்களை எடுத்துக்கொள்ளக்கூடிய திட்டத்தை அரசாங்கம் அமுல்படுத்துமா என்று அறிய விரும்புகிறேன்.

மாண்புமிகு டாக்டர் இரா. நெடுஞ்செழியன் : தொழில் பழகு திட்டத்தின்கீழ் தொடக்க நிலைப் பள்ளி, உயர்நிலைப் பள்ளி ஆகியவைகளில் 5,746 ஆசிரியர்களுக்கு வேலை வாய்ப்பு அளிக்கப்பட்டிருக்கிறது.

அவர்களை முதலில் நிலைப்படுத்துவதற்காக இருப்பவர்களைத்தான் எடுக்க வேண்டும் என்ற முறையில் இதுவரையில் 3,310 பேர்கள் முறையான ஆசிரியர்கள் பதவிகளில் அமர்த்தப்பட்டார்கள். மீதி 2,436 பேர்களும் முறைப்படி அமர்த்தப்படுகிற சூழ்நிலையில் இருக்கிறார்கள். ஆகவே, மேலும் தொழில் பழகு ஆசிரியர்கள் திட்டத்தை விரிவாக்குகின்ற எண்ணம் இல்லை. ஏற்கெனவே இருக்கிற 2,436 பேர்களுக்கும் நிலையான பதவி தருகிற முயற்சியில் ஈடுபடவேண்டியிருக்கிறது.

திரு. இ. எஸ். தியாகராஜன் : ஏற்கனவே 1970-ஆம் ஆண்டுக்கு முன்பு படித்தவர்களை மட்டும் இப்பொழுது ஆசிரியர்களாக எடுத்துக் கொண்டிருக்கிறார்கள். அதற்குப் பிறகு படித்தவர்களை ஆசிரியர்களாக எடுத்துக்கொள்வதற்கு அரசு ஆணையிடுமா?

மாண்புமிகு டாக்டர் இரா. நெடுஞ்செழியன் : முதலில் அப்படித்தான் ஆணையிட்டோம். பல இடங்களில் தனியார் பள்ளிகளில் இருப்பவர்கள், தங்களால் பயிற்றுவைக்கப்பட்டவர்கள் 1970, 1971, 1972-ஆம் ஆண்டு படித்து வந்தவர்களை நியமிக்கவில்லை என்று சொன்னதின் பேரில் அந்த விதி தளர்த்தப்பட்டது. நியாயமான அடிப்படையிலே 3. 4 ஆண்டுகளுக்கு முன்னால் பயிற்சி பெற்றவர்கள் வேலையற்று இருக்கும்போது, சென்ற ஆண்டு பயிற்சி பெற்றவர்களை விட அவர்களுக்குச் சலுகை அளிக்கவேண்டும் என்ற அடிப்படையில் முதலில் அந்த உத்தரவு இடப்பட்டிருக்கிறது. கூடுமான வரையில் அதிக நாட்கள் முன்பு பயிற்சி பெற்று நீண்ட நாட்களாக வேலையில்லாமல் இருப்பவர்களுக்கு வாய்ப்புத் தரவேண்டும் என்ற குறிக்கோள்தான் அரசாங்க அளவில் கடைப்பிடிக்கப்பட்டு வருகிறது. தனியார் துறையிலும் அது வற்புறுத்தப்பட்டு வருகிறது.

திரு. என். மருதாசலம் : கோவையில் பிச்சூரில் தனியார் பள்ளியில் 11 வாத்தியார்கள் வேலையிலிருந்து தள்ளப்பட்டு, அவர்கள் உண்ணாவிரதம் இருப்பது அரசுக்குத் தெரியுமா ?

மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர் : மூலக் கேள்விக்கும் இதற்கும் சம்பந்தம் இல்லை.

திரு. எஸ். வடிவேல் : நம்முடைய அமைச்சர் அவர்கள் பதில் கூறும்பொழுது அரசுக்கு நிதி பற்றாக்குறை இருப்பதன் காரணமாக ஆசிரியர் பயிற்சி பெற்றவர்களுக்கு வேலை தருவதற்கு சிரமம் என்று சொல்கிறார்கள். ஆசிரியர் பயிற்சி பெற்றவர்கள் பல்வேறு வகையில் கஷ்டப்பட்டு ஆசிரியர் பயிற்சி பெற்றார்கள். அரசு நிதி பற்றாக்குறை காரணமாக ஆசிரியர் பயிற்சி பெற்றவர்கள் வேலையில்லாமல் இருப்பது என்றால், வரவர வேலையில்லா திண்டாட்டம் நாளுக்கு நாள் வளர்ந்து கொண்டிருக்கிறது. ஆகவே, அவர்களுடைய வாழ்க்கை நிலைமையைப் பற்றி நன்றாக ஆராய்ந்து கூடியவிரைவில் அரசு அவர்களுக்கு வேலை கொடுப்பதற்கு முயற்சிக்குமா ?



மாண்புமிகு டாக்டர் இரா. நெடுஞ்செழியன் : முதலில் திட்டமிட்டு இருக்க வேண்டும். எவ்வளவு தேவை என்பதற்கு கணக்கு இல்லாமல், ஆசிரியர் பயிற்சி பள்ளிகளில் எண்ணிக்கை அவரவர்களுடைய விருப்பத்திற்கு ஏற்றபடி வளர்க்கப்பட்டு, பயிற்சி பெற்றவர்களுடைய எண்ணிக்கை அதிகமாகிவிட்டது. ஆனால் அவர்களை ஈர்த்துக் கொள்ளக் கூடிய அளவு குறைவாக இருக்கிறது. ஆண்டுக்கு ஆண்டு பட்ஜெட்டில் 2,500, 3,000 ஆசிரியர்கள் என்ற அளவுக்குத்தான் பணம் ஒதுக்கப்படுகிறது. 1971–72-ல் ஹையர் கிரேடு ஆசிரியர்கள் 3,000, செகண்டரி கிரேடு ஆசிரியர்கள் 2,000, பி.டி. ஆசிரியர்கள் 1,500 ஆக, 6,500 பதவிகள் அளவுக்குத்தான் பட்ஜெட்டில் தொகை ஒதுக்கப்பட்டது. அந்த அளவுக்கு ஆசிரியர்கள் ஏற்றுக்கொள்ளப்பட்டிருக்கிறார்கள். இவர்களை பயிற்சிப் பள்ளிகளில் சேர்த்துவிட்டு, பயிற்சி தந்துவிட்டு, வேலைக்கு எடுத்துக்கொள்வதற்கு இல்லாமல் போகக்கூடிய பற்றாக் குறையைப் போக்குவதற்கு இந்த ஆண்டு முதல் வகுப்பில் ஆசிரியர் பயிற்சிக்கு சேர்த்துக்கொள்ளவேண்டாம் என்று நிறுத்திவிட்டோம். ஆந்திராவிலும், கேரளாவிலும் முழுவதும் நிறுத்தப்பட்டிருக்கிறது. அடுத்த ஆண்டு மேற்கொண்டு இருக்கிற நிலைமையைப் பார்த்து எந்தக் கொள்கையை கடைப்பிடிக்க வேண்டும் என்று முடிவு எடுக்கவேண்டியிருக்கிறது. கூடுமானவரையில் பயிற்சி பெற்ற ஆசிரியர்களை வேலையில் அமர்த்த வேண்டும் என்ற நோக்கத்தைத்தான் அரசு கொண்டிருக்கிறது.

## பாம்பாற்றின் குறுக்கே பாலம்

* 25 வினா.—திரு. கே. ஏ. வகாப் : மாண்புமிகு கல்வி–உள்ளாட்சித் துறை அமைச்சர் தயவு செய்து கீழ்க்கண்ட வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) 19—10—1971-ல் நடந்த வடார்க்காடு மாவட்ட வளர்ச்சி மன்றக் கூட்டத்தில், திருப்பத்தூர் சிங்காரப்பேட்டையில் இருந்து எ. கே. மேட்டூர் செல்லும் பாம்பாற்றில் ஒரு பாலம் கட்ட ரூ. 1,40,000 தமிழ்நாடு அரசைக் கோரி தீர்மானித்துள்ளதா ?

(இ) ஆம் எனில், அதன் பேரில் அரசு எடுத்த முடிவு என்ன ?

[1973 பிப்ரவரி 6

மாண்புமிகு டாக்டர் இரா. நெடுஞ்செழியன் : (அ) ஆம்.

(இ) இவ்வேலையானது ஒப்புதல் அளிக்கப்பட்ட எந்தத் திட்டத்திலும் சேர்க்கப்படவில்லை. "இதர சாலைகள்" என்ற தலைப்பில் போதுமான நிதி ஒதுக்கீடு இல்லாததால் இவ்வேலையானது பின்வரும் திட்ட காலங்களில் பரிசீலிக்கப்பட வேண்டியதாக உள்ளது என்று மாவட்ட ஆட்சியாளருக்கு தெரிவிக்கப்பட்டது.

### குழந்தைகளுக்கான மருத்துவ மனைகள்

* 26 வினா.—திரு. கே. ஏ. வகாப் : மாண்புமிகு மக்கள் நல் வாழ்வுத்துறை அமைச்சர் தயவு செய்து கீழ்க்கண்ட வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) சென்னையில் எழும்பூரில் உள்ள குழந்தைகள் ஆஸ்பத்திரியில் சராசரி ஒரு நாளைக்கு எத்தனை குழந்தைகளுக்கு வைத்தியம் பார்க்கப்படுகிறது ?

(இ) தற்போது அதில் பணிபுரியும் டாக்டர்கள் எத்தனை பேர்?

மாண்புமிகு திரு. க. அன்பழகன் : (அ) 2,736 பேர்கள் தினந் தோறும் அங்கே மருத்துவ சிகிச்சை பெறுகிறார்கள்.

(இ) 53 டாக்டர்கள் பணியாற்றுகிறார்கள்.

திரு. கே. ஏ. வகாப் : எழும்பூரில் உள்ள குழந்தை ஆஸ்பத்திரியில் இன்னும் அதிகமாக குழந்தைகளைக் கொண்டு வருகிறார்கள். இருந்தாலும், போதிய கண்காணிப்பு செய்வதற்கு வசதியில்லை. டாக்டர்கள் குறைவு, இடவசதி குறைவு என்று கூறப்படுகிறது. இதையெல்லாம் அதிகப்படுத்தி விரிவுபடுத்துவதற்கு அரசாங்கத்தினிடம் திட்டம் இருக்கிறதா ?

மாண்புமிகு திரு. க. அன்பழகன் : எழும்பூரில் உள்ள குழந்தைகள் மருத்துவமனைக்கு மட்டும் அதிகமாக குழந்தைகளைக் கொண்டு வருகிறார்கள் என்று சொல்லக் கூடாது. வீட்டுக்கு வீடு அதிகமாகக் குழந்தைகளைக் கொண்டு வருகிறார்கள். தமிழ்நாட்டில் மட்டுமல்ல, ஏறத்தாழ இந்தியாவிலேயே குழந்தைகள் மருத்துவமனைகளில் மிகப் பெரிய அளவில் கட்டப்பட்டிருக்கிற மருத்துவமனை இது. ஒரு நாளைக்கு குழந்தைகள் மட்டும் 2,736 பேர்கள் சிகிச்சை பெறுகிறார்கள் என்று சொல்லப்படுகிறது. சென்னையிலுள்ள பொது மருத்துவ மனையில் பெரியவர்கள் ஒரு நாளைக்கு 5,000 பேர்கள் சராசரியாக வருகிறார்கள். அந்த அளவில் பாதிக்கு மேலே குழந்தைகள் மட்டும்



1973 பிப்ரவரி 6]

இந்த மருத்துவமனைக்கு வரக்கூடிய நிலைமை இருக்கிறது. இந்த மருத்துவமனை முன்னரே விரிவாக்கப்பட்டிருக்கிறது. இருந்தாலும், குழந்தைகளைப் பெறுகிறவர்கள், குழந்தைகளைப் பெற்றவர்கள் பெறுவதற்கு முன்னரும், பின்னரும் அதில் கவனம் எடுத்துக் கொள்ளவேண்டும்.

திரு. ஆ. பரந்தாமன் : எழும்பூரில் இருக்கிற மருத்துவமனையில் இந்தத் துறையிலே வல்லுநர்களும், இருக்கிற மருத்துவ நிபுணர்களும் ஒரே இடத்தில் தேங்கிக் கிடக்கிறார்கள். தமிழகத்தில் பல்வேறு பகுதிகளுக்கு அவர்களைப் பிரித்து அனுப்ப நடவடிக்கை எடுக்கப்படுமா என்று அறிய விரும்புகிறேன்.

மாண்புமிகு திரு. க. அன்பழகன் : இந்த மருத்துவமனை கல்விப் பயிற்சிக்குரிய மருத்துவமனை. இங்கே உள்ள மிகப் பெரிய நிபுணர்கள், பல பேர்களை குழந்தை வைத்தியத்தில் தேர்ச்சி பெறச் செய்து, நாடு முழுவதும் உள்ள மருத்துவ மனைகளில் அவர்கள் சென்று பணியாற்றுவதற்கு வாய்ப்பு அளிப்பவர்களாக இருக்கிறார்கள். பயிற்சி அளிக்கின்ற கல்வி நிலையத்தோடு தொடர்பு கொண்ட மருத்துவமனை இது என்ற காரணத்தினால் அவர்களையே பிரித்து அனுப்புவது இயலாத காரியம்.

* 27 வினா—திரு. கே. ஏ. வகாப் : மாண்புமிகு மக்கள் நல் வாழ்வுத்துறை அமைச்சர் தயவு செய்து கீழ்க்கண்ட வினாக்களுக்கு விடையளிப்பாரா :

(அ) வடார்க்காடு மாவட்டம், வேலூரில், குழந்தைகளுக்கென்று தனி ஹாஸ்பிட்டல் ஒன்று ஏற்படுத்தும் செயற்குறிப்பு அரசிடம் உள்ளதா ?

(இ) ஆம் எனில், எப்போது இத்திட்டம் செயல்படும் ?

மாண்புமிகு திரு. க. அன்பழகன் : (அ) ஏற்கனவே தனிப்பட்ட வார்டு உள்ளது.

(இ) இக் கேள்விக்கிடமில்லை.

திரு. கே. ஏ. வகாப் : இப்பொழுது கேட்கப்பட்ட கேள்வியின் அடிப்படையிலே அந்தந்த மாவட்டத்திலே இப்படிப்பட்ட குழந்தைகள் வைத்திய வசதி இருந்தாலும், சென்னையில் வருகிற குழந்தைகளைப் போலவே அவர்களுக்குள் அப்படிப்பட்ட வசதிகளை சிறிய அளவிலாவது செய்து, ஒரு சிறிய குழந்தைகள் மருத்துவ விடுதியை ஒவ்வொரு மாவட்டத் தலைநகரத்திலும் ஆரம்பிக்க அரசு முன்வருமா ?

[1973 பிப்ரவரி 6

மாண்புமிகு திரு. க. அன்பழகன் : அந்த அளவுக்கு இப்பொழுது மாவட்ட மருத்துவமனைகள் போதுமான அளவுக்கு பெரிய அளவில் கட்டப்படவில்லை என்ற நிலையும், சரியான பெரிய அளவில் கட்டுவதற்கு முயற்சி எடுத்துக்கொள்ள வேண்டும் என்ற நிலையும் இருக்கிறது. தனியாக குழந்தைகள் மருத்துவமனை கட்டுவது இப்பொழுது உள்ள சூழ்நிலையில் இயலாத காரியம். குழந்தைகள் வைத்தியத்தில் சிறப்பான பயிற்சி பெற்ற டாக்டர்கள் மாவட்ட மருத்துவ மனைகளில் இடம் பெறுவதற்கு அரசு ஆவன செய்து வருகிறது.

## திருச்சிராப்பள்ளி மாவட்ட மருத்துவ மனைக்குக் கூடுதல் கட்டடங்கள்.

* 28 வினா.—திரு. பெ. சௌந்தரபாண்டியன் : மாண்புமிகு மக்கள் நல்வாழ்வுத்துறை அமைச்சர் தயவு செய்து கீழ்க்கண்ட வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) திருச்சிராப்பள்ளி தலைமையிட மருத்துவமனையில் குருதி சேமிப்பு நிலையத்திற்கு கட்டடம் கட்ட அரசு எப்போது உத்தரவு இட்டது ?

(இ) தற்போது எந்த நிலையில் உள்ளது ?

மாண்புமிகு திரு. க. அன்பழகன் : (அ) : 1971–72 நிதி ஆண்டில் திருச்சிராப்பள்ளி தலைமையிட மருத்துவமனையில் குருதி சேமிப்பு நிலையத்திற்கு கட்டடம் கட்ட ஒப்புதல் வழங்கப்பட்டது.

(இ) அந்தக் கட்டடத்திற்கு மேற்கொள்ளப்பட்ட மதிப்பீடுகள் அதிகமாக இருந்ததன் காரணமாக அதன் செலவினத்தைக் குறைப்பதற்காக திருத்திய மதிப்பீடுகள் கேட்கப்பட்டுள்ளது. திருத்திய மதிப்பீடுகள் கிடைத்தவுடன் கட்டட வேலை தொடங்கும்.

## *Meat Laboratory at Madras*

* 29 Q.—THIRU R. R. MUNUSWAMY : Will the Hon. the Minister for Public Health be pleased to state—

(a) whether it is a fact that a Meat Laboratory has been opened at the Veterinary College, Madras; and

(b) if so, the details thereof?

மாண்புமிகு திரு. க. அன்பழகன் : (அ) ஆம்.

(இ) விவரமான அறிக்கை @ ஒன்று பேரவை முன் வைக்கப்பட்டுள்ளது.

@ 331-334-ம் பக்கங்களில் முதல் இணைப்பாக அச்சிடப்பட்டுள்ளது.



1973 பிப்ரவரி 6]

## மதுரை மத்திய சிறைக் கட்டடம்.

* 30 வினா.—திரு. பெ. சௌந்தரபாண்டியன் : மாண்புமிகு தொழில் துறை அமைச்சர் தயவு செய்து கீழ்க்கண்ட வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) மதுரை மத்திய சிறைச்சாலைக்கு போதுமான கட்டடங்கள் இல்லை என்பது உண்மையா ?

(இ) ஆம் எனில், கட்டடங்களை விரிவுப்படுத்த எடுக்கப்பட்டுள்ள நடவடிக்கை யாது ?

மாண்புமிகு திரு. செ. மாதவன் : (அ) ஆம்.

(இ) கட்டட வசதியைப் பெருக்கும் பொருட்டு, பொதுப் பணித் துறையினரை கலந்துகொண்டு, திட்ட அமைப்புப் படம், மதிப்பீடுகளுடன் அனுகுமாறு மதுரை மத்திய சிறைக் கண்காணிப்பாளரை சிறைத்துறைத் தலைவர் கேட்டுக்கொண்டுள்ளார்.

திரு. கே. டி. கே. தங்கமணி : மதுரையில் உள்ள சிறைச்சாலை மத்திய சிறைச்சாலையானாலும்கூட, ஜில்லா சிறைச்சாலைக்கு எந்த அளவுக்கு கட்டடம் இருக்கவேண்டுமோ அந்த அளவுக்கு கட்டடம் இருக்கவில்லை. அதற்கு அடுத்தாற்போலுள்ள அவுட் கார்டன் மட்டும் சேர்க்கப்பட்டிருக்கிறது. இப்பொழுது 9-வது பிளாக் பக்கத்தில் தோட்டத்திற்குப் பக்கத்தில் இடம் நிறைய இருக்கிறது. அதற்கு கட்டடம் கட்டுவதற்கு எவ்வளவு இந்த ஆண்டில் நிதி ஒதுக்கப்பட்டிருக்கிறது. எத்தனை ஆண்டுகளுக்குள் கட்டடம் விரிவுபடுத்துவது முடியும் என்பதை அறிய விரும்புகிறேன்.

மாண்புமிகு திரு. செ. மாதவன் : இப்பொழுது தான் பிளான்ஸ் அண்டு எஸ்டிமேட்ஸ் கேட்கப்பட்டிருக்கிறது. அவை வந்ததற்குப் பின்னாலே மற்ற விவரங்கள் பற்றி முடிவு எடுக்கப்படும்.

## உடல் ஊனமுற்றோருக்கு உதவித் தொகை

* 31 வினா.—திரு. சு. துரைசாமி : மாண்புமிகு தொழில் துறை அமைச்சர் தயவு செய்து கீழ்க்கண்ட வினாவுக்கு விடையளிப்பாரா—

பொருளாதார வசதி அற்ற உடல் ஊனமுற்றவர்களுக்கு உதவித் தொகை கொடுக்கும் செயற்குறிப்பு அரசு பரிசீலனையில் உள்ளதா ?

மாண்புமிகு திரு. செ. மாதவன் : அண்மையில் அமைக்கப்பட்டுள்ள உடல் ஊனமுற்றோர் நல மாநில வாரியத்தின் குறிக்கோள்களில் ஒன்றாக, உடல் ஊனமுற்றோர்க்கு நிதியுதவியளித்தல் என்பதை அரசு ஏற்கனவே சேர்த்துக்கொண்டுள்ளது.

[1973 பிப்ரவரி 6

திரு. சு. துரைசாமி : தலைவரவர்களே, பொருளாதார வசதியற்ற உடல் ஊனமுற்றவர்களுக்கு மாதந்தோறும் எவ்வளவு உதவித் தொகை அளிக்கப்படுகிறது ? இப்போது அளிக்கப்படவில்லை என்றால் இனிமேலாவது அளிப்பதற்கு திட்டம் ஏதேனும் உண்டா ?

மாண்புமிகு திரு. செ. மாதவன் : இப்போது எதுவும் வழங்கப் படவில்லை.

திரு. ஆர். பொன்னப்ப நாடார் : தலைவரவர்களே, இந்த மாதிரி உடல் ஊனமுற்றவர்களுக்குத் தேவையான விசேஷ பயிற்சி அளித்து, தொழிலிலே ஈடுபடுத்தவதற்கு ஏதாவது பரிந்துரை இருக்கிறதா ? அப்படியானால் அதன் விபரத்தை அமைச்சரவர்கள் அறிவிப்பார்களா?

மாண்புமிகு திரு. செ. மாதவன் : அப்படி சில அமைப்புகள் மூலமாக இந்த பயிற்சி கொடுக்கப்படுகிறது. அப்படி பயிற்சி அளிக்கும் நிறுவனங்களை ஊக்குவிக்கும் முகத்தான் ஆண்டுதோறும் விழா கொண்டாடி வருகிறோம். அப்படிப்பட்ட நிறுவனங்களில் சிறந்த நிறுவனங்களுக்கு பரிசுகளும் அளித்து ஊக்குவித்து வருகிறோம். உடல் ஊனமுற்றவர்களைத் தங்கள் நிறுவனங்களில் வேலைக்குச் சேர்த்துக்கொள்ளும் தனியார் நிறுவனங்களுக்கும் ஊக்க மளித்து வருகிறோம்.

திரு. கே. என். குமாரசாமி : தனியார் துறையிலே உடல் ஊன முற்றவர்களுக்கு வேலை வாய்ப்பை ஏற்படுத்திக் கொடுப்பதை சட்டப் பூர்வமாக அமுலுக்கு கொண்டுவர அரசாங்கம் நடவடிக்கை எடுக்குமா? தனியார் நிறுவனங்கள் உடல் ஊனமுற்றவர்களுக்கு விசேஷ சலுகை அளிக்க மறுப்பதால் அரசாங்கம் இந்த நடவடிக்கை எடுக்குமா?

மாண்புமிகு திரு. செ. மாதவன் : தனியார் துறையிலே இப்படிப் பட்டவர்களுக்கு வாய்ப்பு கொடுத்து வருகிறார்கள். இது அவர்களாகவே முன்வந்து செய்கின்ற உதவி. ஆகவே, அரசாங்கம் அதிலே தலையிட முடியாது. இருப்பினும் மத்திய அரசாங்கம் இதுபற்றி பரிசீலித்து வருகிறது. முடிவு தெரிந்த பின்னால் மேற்கொண்டு பரிசீலனை செய்யலாம்

திரு. வா. மை. அப்துல் ஜப்பார் : தலைவரவர்களே, உடல் ஊன முற்றவர்களுக்கு செயற்கை உறுப்புகளை பொருத்துவதற்கு அரசாங்கச் செலவில் செயற்கை உறுப்புகள் கொடுக்க ஏற்பாடு செய்யப்படுமா ?



1973 பிப்ரவரி 6]

மாண்புமிகு திரு. செ. மாதவன் : உடல் ஊனமுற்ற எல்லோருக்கும் செயற்கை உறுப்புகள் பொருத்த முடியாது. சிலருக்குத்தான் பொருத்த முடியும். அந்த உதவியை இப்போது நம்முடைய மருத்துவ மனைகளில்கூட செய்கிறார்கள். மேற்கொண்டு "ப்ரொப் போசல்" ஏதாவது வருமானால் அதுபற்றி பரிசீலனைச் செய்யப்படும்.

டாக்டர் ச. மு. பழனியப்பன் : உடல் ஊனமுற்றவர்கள் பட்டதாரிகளாக இருந்தால், வேலை தேடி தருவதில் அரசாங்கம் தனிக் கவனம் செலுத்துமா?

மாண்புமிகு திரு. செ. மாதவன் : உடல் ஊனமுற்ற எல்லோருக்கும் உதவி செய்ய முயற்சி எடுக்கப்பட்டு வருகிறது. பட்டதாரிகளாக இருந்தால் தனிக் கவனம் செலுத்தப்படும்.

திரு. சு. துரைசாமி : உடல் ஊனமுற்றவர்களுக்கு அரசாங்கத்தில் இப்போது வேலை வாய்ப்பு உதவி செய்யப்படவில்லை என்று சொன்னார்கள். இனிமேலாவது அந்த வாய்ப்பு கொடுக்கப்படுமா ? குமாஸ்தா போன்ற வேலைகளில் உடல் ஊனமுற்றவர்கள் அமர்த்தப் படுவார்களா ?

மாண்புமிகு திரு. செ. மாதவன் : எந்த எந்த இடங்களில் வேலை வாய்ப்பு கொடுக்க முடியுமோ அங்கெல்லாம் கொடுக்க முயற்சி செய்கிறோம். முழுமையாக கொடுக்க முடியாது. அவர்களுக்கு பண உதவி செய்வதைப்பற்றி பரிசீலனை செய்து, உதவி செய்வதற்கு உடல் ஊனமுற்றோர் நல வாரியத்திற்கு உரிமை கொடுத்திருக்கிறோம். தனியார் துறைகளில் அவர்களுக்கு வேலை வாய்ப்பு அளிக்கப்படுகிறது. வாய்ப்புள்ள இடங்களில் அரசாங்கத் துறைகளிலும் அவர்களுக்கு வேலை வாய்ப்பளிக்க முயற்சி செய்யப்படும்.

## குட்டை அமைப்புத் திட்டங்கள்

* 32 வினா—திரு. சு. துரைசாமி: மாண்புமிகு பொதுப்பணித் துறை அமைச்சர் அவர்கள் தயவு செய்து கீழ்க்கண்ட வினாக்களுக்கு விடையளிப்பாரா :

(அ) திருப்பூர் ஊராட்சி ஒன்றியம் சித்திவினாயகர் கோவிலுக்கு அருகிலும் சீரங்கம்பாளையம் தாண்டாக்கவுண்டன்புதூருக்கு அருகிலும் குட்டைகள் அமைக்கும் செயற்குறிப்பு அரசு பரிசீலனையில் உள்ளதா ?

(இ) ஆம் எனில், அதன் விவரம் என்ன ?

மாண்புமிகு திரு. எஸ். ஜே. சாதிக் பாட்சா : (அ) இல்லே.

(இ) இக்கேள்விக்கு இடமில்லே.

திரு. சு. துரைசாமி : அமைச்சரவர்கள் செயற்குறிப்பு எதுவும் பரிசீலனையில் இல்லே என்று சொன்னுர்கள். இப்போது இல்லா விட்டாலும்கூட, இனிமேலாவது அதை பரிசீலனை செய்து, எடுத்துக் கொள்ளுமா என்று அறிய விரும்புகிறேன்.

மாண்புமிகு திரு. எஸ். ஜே. சாதிக் பாட்சா : தலேவரவர்களே, சித்திவிநாயகர் கோவிலுக்கு அருகில் காளிபாளேயம் கிராமம் சர்வே எண் 303-ல் ஒரு குட்டை அமைப்பதுபற்றி பரிசீலிக்கப்பட்டதில், தெளிவான ஓடைப்போக்கு இல்லே என்றும், வடிநீர் பரப்பளவு மிகவும் குறைவாகக் காணப்படுகிறது என்றும், அக்குட்டை பட்டா நிலங்களிலே அமைக்கப்பட வேண்டியிருப்பதால், நிலம் கையகப் படுத்துவதில் ரூ. 15,000 செலவாகும் என்றும் தெரிவதால் அங்கே குட்டை அமைப்பது சாத்தியமில்லே.

தாண்டாகவுண்டனூருக்கு அருகில் ஒரு குட்டை அமைப்பது குறித்து, பரிசீலிக்கப்பட்டு, 1,67,000 ரூபாய் செலவில் திட்டம் ஒன்று தயாரிக்கப்பட்டு, சில விளக்கங்கள் பெறுவதற்காக வருவாய்த்துறை வாரியம் மேற்பார்வைப் பொறியாளருக்கு அனுப்பியிருக்கிறது. பதில் வந்தவுடன் அதில் தக்க நடவடிக்கை எடுக்கப்படும்.

* 33 வினு.—திரு. சு. துரைசாமி : மாண்புமிகு பொதுப்பணித் துறை அமைச்சர் தயவு செய்து கீழ்க்கண்ட வினுக்களுக்கு விடை யளிப்பாரா—

(அ) திருப்பூர் ஊராட்சி ஒன்றியம் S. F. No. 278 தொட்டிபாளேயம் கிராமத்தில் குட்டை அமைக்கும் வேலே எப்போது துவக்கப்படும் ?

(இ) மேற்படி வேலே முடிவு பெற எவ்வளவு நாட்கள் ஆகும் ?

மாண்புமிகு திரு. எஸ். ஜே. சாதிக் பாட்சா : (அ) திருப்பூர் ஊராட்சி ஒன்றியத்தில் தொட்டிபாளேயம் கிராமத்தில் S. F. No. 278-ல் குட்டை அமைக்கும் வேலே ஒன்றும் தற்பொழுது தொடங்குவதாக இல்லே.

(இ) இக்கேள்விக்கு இடமில்லே.



திரு. சு. துரைசாமி : தலேவரவர்களே, அவ்விடத்தில் இரண்டு மாதங்களுக்கு முன்னுல் பெய்த பெருமழையின் காரணமாக அந்த ஆற்றில் நிறைய தண்ணீர் வந்து, குட்டை எதுவும் இல்லாததால் பக்கத்தில் இருந்த 50 வீடுகள் அடித்துச் செல்லப்பட்டன. அந்த வீடுகளுக்கு அரசாங்கத்திலிருந்து 50 ரூபாய் வீதம் உதவித் தொகை வழங்கப்பட்டது. எனவே, உடனடியாக அந்தப் பகுதியில் ஒரு குட்டை அமைக்க அரசாங்கம் முன்வருமா?

மாண்புமிகு திரு. எஸ். ஜே. சாதிக் பாட்சா : அந்தத் திட்டத்திற்கு மதிப்பீடு ரூபாய் ஒரு லட்சத்து பத்தாயிரம். அது ஆதாயம் இல்லாதத் திட்டம் என்றுலும் அது பரிசீலிக்கப்பட்டு வருகிறது. அதுபற்றி முடிவு செய்யப்பட்டு, வருவாய்த்துறை மூலமாக கவனிக்கப் படும்.

*Tiruvarur Rice Bran Oil Mill*

* 34 Q.—THIRU N. DENNIS: Will the Hon. the Minister for Co-operation be pleased to state—

(a) whether it is a fact that the Rice Bran Oil plant at Tiruvarur has been making profits; and

(b) if so, the details thereof for the years 1970–71–72?

மாண்புமிகு திரு. சி. பா. ஆதித்தனுர் : (அ) ஆம்.

(இ) திருவாரூரில் அமைக்கப்பட்டிருக்கும் இந்த ஆலேயில் 1969–70-ஆம் ஆண்டில் ரூ. 2,00,000 நிகர லாபமும், 1970–71-ஆம் ஆண்டில் ரூ. 3,62,571.44 நிகர லாபமும், 1971–72-ஆம் ஆண்டில் இந்த ஆலேயில் ரூ. 2,29,725.52 நிகர லாபமும் கிடைத்திருக்கிறது.

திரு. என். டென்னிஸ் : தலேவரவர்களே, அதற்கு முதலீடு எவ்வளவு என்பதை அறிய விரும்புகிறேன்.

மாண்புமிகு திரு. சி. பா. ஆதித்தனுர் : முதலீடு மொத்தம் தோராயமாக 20 லட்சம் ரூபாய்; சரியாக ரூ. 19,75,000.

திரு. தோப்பூர் திருவேங்கடம் : இதுபோன்ற தொழிற்சாலேகளே கூட்டுறவுத் துறையில் அமைக்க அரசிடம் திட்டம் இருக்கிறதா ?

மாண்புமிகு திரு. சி. பா. ஆதித்தனுர் : தொழிற்சாலேகளே நிறுவ அரசிடம் திட்டம் இருக்கிறது. அது கூட்டுறவுத் துறையிலா அல்லது வேறு துறையிலா என்று முடிவு செய்யப்படவில்லே.

[1973 பிப்ரவரி 6

திரு. ஆ. பரந்தாமன் : இந்த தவிட்டு எண்ணெய்க்கு சந்தை நிலவரம் தற்போது எப்படி இருக்கிறது ?

மாண்புமிகு திரு. சி. பா. ஆதித்தனார் : சோப்பு செய்கிற இந்துஸ்தான் லிவர் போன்ற பெரிய கம்பெனிகள் பம்பாயிலிருந்து வந்து, இந்தத் தொழிற்சாலையின் வாசலுக்கே வந்து, வாங்கிக் கொண்டு போகிறார்கள்.

திரு. கே. கே. முத்தையா : தவிட்டிலிருந்து எடுக்கப்படுகிற எண்ணெய் பலகாரம் செய்வதற்குப் பயன்படுத்தப்படுகிறதா அல்லது எஞ்சின் வகைகளுக்கு பயன்படுத்தப்படுகிறதா ?

மாண்புமிகு திரு. சி. பா. ஆதித்தனார் : இந்த எண்ணெய் சுத்தப் படுத்தப்பட்டால் பலகாரங்கள் செய்வதற்கு பயன்படுத்தலாம். அதற்கு சுத்திகரிப்பு ஆலை நிறுவ வேண்டும். அது இப்போது முடியாது. ஆகவே, சுத்தப்படுத்தப்படாமல், சோப்பு செய்வதற்குப் பயன்படுத்தப்படுகிறது.

திரு. ஏ. எம். இராஜா : இந்த ஆலையில் ஒரு நாளைக்கு எவ்வளவு தவிடு பயன்படுத்தப்படுகிறது ? அதிலிருந்து எவ்வளவு எண்ணெய் உற்பத்தி செய்யப்படுகிறது ?

மாண்புமிகு திரு. சி. பா. ஆதித்தனார் : திருவாரூரில் உள்ள இந்த ஆலையில் நாள் ஒன்றுக்கு 30 டன் வரை தவிடு பயன்படுத்தப்படுகிறது. சராசரி ஒரு நாளைக்கு 2½ டன் எண்ணெய் உற்பத்தியாகிறது.

திரு. கே. என். குமாரசாமி : தலைவரவர்களே, தவிடு, பருத்திக் கொட்டை போன்ற மாட்டுத் தீவனங்களை இப்படி எண்ணெய் எடுப்பதற்குப் பயன்படுத்துவதால் மாட்டுத் தீவனம் பற்றாக்குறை ஏற்படக்கூடும். அப்படி பற்றாக் குறை ஏற்படும்போது மாட்டுத் தீவனங்களுக்கு என்ன செய்வது என்பதை அறிய விரும்புகிறேன்.

மாண்புமிகு திரு. சி. பா. ஆதித்தனார் : தவிட்டிலிருந்து எடுக்கப் படும் எண்ணெய் மாட்டுக்கோ, மனிதனுக்கோ நல்ல ஆகாரம் அல்ல. தவிட்டிலிருந்து எண்ணெய் எடுக்கப்பட்டப் பிறகு "டி ஆயில்டு கேக்" ஆகிறது. அது நல்ல விலைக்கு விற்கிறது.

திரு. சீ. க. வடிவேலு : அமைச்சரவர்கள் கொடுத்திருக்கிற விபரங்களைப் பார்க்கும்போது ஆண்டுக்காண்டு வருவாய் குறைந்து கொண்டே வருவதாகத் தெரிகிறது. இந்தக் குறையை நிவர்த்தி செய்ய அரசாங்கம் என்ன நடவடிக்கை எடுக்கப்போகிறது?



1973 பிப்ரவரி 6]

மாண்புமிகு திரு. சி. பா. ஆதித்தனார் : நான் சொன்ன விடையில் ஆண்டுக்காண்டு வருவாய் குறைவதாகச் சொல்லவில்லை. 1969-ல் இந்த நிறுவனம் தொடங்கப்பட்டது. அந்த ஆண்டில் ரூ. 2 லட்சம் என்றிருந்தது. அடுத்தாண்டு ரூ. 3 லட்சமாக பெருகியது. 1971–72-ல் ரூ. 2,29,000-ஆக குறைந்தது. அதற்குக் காரணம் தவிட்டின் விலை ஏறிவிட்டது. ஸ்பேர் பார்ட்ஸ் விலை ஏறிவிட்டது. ஊழியர்களின் சம்பளமும் ஏறியிருக்கிறது. அதனால் 1971–72-ல் லாபம் சிறிது குறைந்திருக்கிறது. ஆனால் 1972–73-ல் முன்புபோல அதிகரிக்கும் என்று எதிர்பார்க்கப்படுகிறது.

திருமதி த. ந. அனந்தநாயகி : தலைவர் அவர்களே, 72–73-ல் மு.ப. 9-30
லாபம் அதிகரிக்கும் என்று அமைச்சர் சொல்வது எந்தக் காரணத்தினால்? ஸ்பேர் பார்ட்ஸ் விலைகள் குறையக்கூடும் என்பதனாலா ? தவிடு விலை குறையும் என்பதனாலா ? தொழிலாளர் களுடைய கூலி விகிதம் குறையக்கூடும் என்பதனாலா ? எதனால் அப்படி எதிர்பார்க்கிறார் என்று அறிய விரும்புகிறேன்.

மாண்புமிகு திரு. சி. பா. ஆதித்தனார் : இவ்வாண்டு தவிர்த்திருக்கக் கூடிய வேறுசில செலவுகள் ஏற்பட்டிருக்கின்றன. அடுத்த ஆண்டு சரியான முறையில் கண்காணித்தால் அதைத் தவிர்க்க முடியும் என்கிற எண்ணத்தில்தான் சொன்னேன்.

## கூட்டுறவு மத்திய வீட்டு அடைமானச் சங்கம்

* 35 வினா—திரு. சு. துரைசாமி : மாண்புமிகு பின்தங்கிய வகுப்பினர் நல அமைச்சர் தயவு செய்து கீழ்க்கண்ட வினாக்களுக்கு விடையளிப்பாரா :

(அ) எல்.ஐ.சி. நிறுவனத்திடமிருந்து தமிழ்நாடு கூட்டுறவு மத்திய வீடு அடைமான சங்கத்திற்கு ரூ. 50 லட்சம் இந்த ஆண்டு அனுமதிக்கப்பட்டுள்ளதா ?

(இ) ஆம் எனில், அதன் விவரம் என்ன ?

மாண்புமிகு திரு. க. இராசாராம் : (அ) & (இ) தமிழ்நாடு கூட்டுறவு மத்திய வீட்டு அடைமானச் சங்கத்திற்கு, இந்திய ஆயுள் ஈட்டுறுதிக் கழகம் 1971–72-ஆம் ஆண்டிற்கு ரூ. 1.75 கோடி அனுமதி யளித்தது. இத்தொகை பூராவும் சங்கத்துக்கு கொடுக்கப்பட்டு விட்டது.

[1973 பிப்ரவரி 6

திரு. சு. துரைசாமி : இப்படிப்பட்ட சங்கங்களின் மூலமாக வீடு கட்ட 25 சத விகிதம் முன்பணம் கொடுக்க வேண்டும் என்கிறார்கள். நடுத்தர மக்களால் அப்படிக் கொடுக்க முடியவில்லை. ஆகவே, அந்த 25 சத விகிதம் என்பதை 10 சதவிகிதம் என்று குறைக்க அரசாங்கம் முன்வருமா ?

மாண்புமிகு திரு. க. இராசாராம் : கூட்டுறவுச் சங்கங்களின் மூலமாக வீடு கட்டுவது என்றால் அந்த வீட்டுக்காரர் 25 சத விகிதம் முன்பணம் கொடுக்கிற நிலை அகில இந்திய அடிப்படையில் அமைந்தது. அதைக் குறைப்பதற்கில்லை. வீட்டு வசதி வாரியத்தின் மூலம் வேறுவகைத் திட்டங்கள் இருக்கின்றன என்று தெரிவித்துக் கொள்கிறேன்.

THIRUMATHI T. N. ANANDANAYAKI : Sir, how long does it take to sanction loan for an application who has applied to the Central House Mortgage Society?

மாண்புமிகு திரு. க. இராசாராம் : அந்தக் கடன் 3 தவணைகளாகக் கொடுக்கப்படுகிறது. முதலில் தவணை பெற்று பேஸ் போட வேண்டும். அடுத்த தவணையில் கட்டடத்தின் ரூப் மட்டம் வரை கட்ட வேண்டும். மூன்றாவது தவணை பெற்று கட்டடத்தை முடித்து விடவேண்டும். இந்தக் கடனையும் காலதாமதமின்றியும் தந்து கொண்டிருக்கிறோம்.

திரு. கே. என். குமாரசாமி : வீட்டு வசதி வாரியத்தின் மூலமாக வீடு கட்டுவதற்கு முன்னால் மானியமாகத் தரப்பட்டு வந்ததே, அந்த மானியங்கள் நிறுத்தப்பட்டதன் காரணமாக இப்போது பலர் வீடு கட்ட முன்வரவில்லை. ஆகவே முன்போலவே மானியத்தை அளிக்க அரசு புனர் பரிசீலனை செய்யுமா என்று கேட்க விரும்புகிறேன்.

மாண்புமிகு திரு. க. இராசாராம் : அதற்குத் தனிக் கேள்வி போடும்படியாகக் கேட்டுக்கொள்கிறேன்.

திரு. சு. துரைசாமி : அமைச்சர் அவர்கள் பதில் சொல்லும்போது வீட்டுவசதி வாரியத்தில் வேறுவகைத் திட்டங்கள் இருக்கின்றன என்றார். அவை என்ன திட்டங்கள் என்பதை அறிவிக்க முடியுமா ?

மாண்புமிகு திரு. க. இராசாராம் : நாளைக்கு ஒரு ரூபாய் என்பதாக ஐந்து ஆண்டு காலத்திற்கு கட்டுகிறவர்களுக்கு வீடு என்கிற திட்டம், அப்புறம் பத்தில் ஒரு பங்கைக் கட்டிவிட்டு பாக்கியை தவணை முறையில் கட்டுகிற ஒரு திட்டம் ஆகியவை இருக்கின்றன.



1973 பிப்ரவரி 6]

திரு. ஆர். பொன்னப்ப நாடார் : இந்த மார்ட்கேஜ் பாங்குகள் மூலமாக அதிக பட்சம் எவ்வளவு லோன் கொடுக்கிறார்கள் ? குறைந்த பட்சம் எவ்வளவு லோன் கொடுக்கிறார்கள் என்கிற விவரத்தை அமைச்சர் அவர்கள் சொல்வார்களா ?

மாண்புமிகு திரு. க. இராசாராம் : எல்.ஐ.சி., எம்.ஐ.ஜி. ஸ்கீம்படி வீடு கட்ட பணம் குறைந்தபட்சம் பத்தாயிரம் ரூபாயும், அதிகபட்சம் 20 ஆயிரம் ரூபாயும் அளிக்கப்படுகிறது. அதிகபட்சம் இருபதாயிரம் என்பதைத்தான் 25 ஆயிரம் என்று உயர்த்த இப்போது தீர்மானிக்கப்பட்டு இருக்கிறது.

திருமதி த. ந. அனந்தநாயகி : செய்திச் சுருள்கள் மூலமாக எதை எதையோ படம் எடுத்துக் காட்டுவதைக் காட்டிலும் இதுபோன்ற எந்த எந்த வகையில் வீடு கட்ட பண உதவி பெற்று வீடு கட்டிக் கொள்ளலாம் என்பதைச் செய்திச் சுருள்கள் மூலமாகப் படம் எடுத்து மக்களுக்கு இந்த விவரங்களை எல்லாம் தெரியச் செய்வார்களா ?

மாண்புமிகு திரு. க. இராசாராம் : வீட்டு வசதி வாரியத்தின் மூலமாக அங்கங்கே விழாக்கள் நடக்கிறபோது இந்த விவரங்கள் எல்லாம் மக்களுக்குத் தெரியப்படுத்தப்படுகின்றன. பத்திரிகை வாயிலாகவும் தெரிவித்துக்கொண்டிருக்கிறோம்.

*Supply of power to Madras Aluminium Factory*

* 36 Q.—THIRU N. K. PALANISWAMY : Will the Hon. the Minister for Electricity be pleased to state whether electricity is supplied at a concessional rate to the Madras Aluminium Factory at Mettur?

மாண்புமிகு திரு. ஒ. பி. இராமன் : ஆம்.

திரு. கே. டி. கே. தங்கமணி : 72–73-ஆம் ஆண்டுக்கு மேட்டூர் அலுமினியம் பாக்டரிக்கு மின்சாரம் சப்ளை செய்யப்பட்ட காரணமாக நமது வாரியத்திற்கு எவ்வளவு நஷ்டம் என்பதை அறிய விரும்புகிறேன்.

மாண்புமிகு திரு. ஒ. பி. இராமன் : 1959–60-ஆம் ஆண்டு மேட்டூர் அலுமினியம் பாக்டரிக்கு அளிக்கப்படுகிற மின்சக்திக்கு முதல் 10 ஆயிரம் யூனிட் வரை 1.5 காசாகவும், அதற்கு மேற்பட்டு, 25 ஆயிரம் யூனிட் வரை 2.5 காசாகவும் வசூலிக்க தீர்மானிக்கப்பட்டது. இந்தச் சலுகை மூலம் எவ்வளவு இழப்பு என்பதற்குத் தனிக் கேள்வி போடவும்.

[1973 பிப்ரவரி 6

திரு. ஆர். பொன்னப்ப நாடார் : அலுமினியம் தொழிற்சாலை என்பது பவர் ஹங்கிரி தொழிற்சாலை என்று சொல்வார்கள். இதற்கு பல ஆண்டுகளுக்கு முன்பு மின்சார கட்டணச் சலுகை தீர்மானிக்கப்பட்டது என்றால் இப்போது அதைத் திருத்தி அமைக்க அரசாங்கமோ, போர்டோ நடவடிக்கை மேற்கொள்ளுமா ?

மாண்புமிகு திரு. ஓ. பி. இராமன் : இப்போது பரிசீலனை செய்து கொண்டிருக்கிறோம்.

திரு. ஏ. எம். இராஜா : அமைச்சர் அவர்கள் பதில் கூறும்போது யூனிட் ஒன்றை $1\frac{1}{2}$ காசுக்கும், $2\frac{1}{2}$ காசுக்கும் கொடுப்பதாகக் கூறினார்கள். அங்கு உற்பத்தியாகக்கூடிய அலுமினியத்தில் பெரும் பகுதியை மின்சார வாரியமே கன்ஸ்யூம் செய்வதாகத் தெரிகிறதே, இந்த அலுமினியத்தையும் குறைந்த ரேட்டில் மின்சார வாரியம் வாங்கிக்கொள்கிறதா ?

மாண்புமிகு திரு. ஓ. பி. இராமன் : எந்த அளவில் விற்கவேண்டும் என்பதற்கு அவர்களுக்கு ஒரு இலக்கணம் இருக்கிறது. அந்த அடிப் படையில்தான் அவர்கள் விற்கிறார்கள். நாம் வாங்கிக்கொள்கிறோம். நாம் அளிக்கிற மின்சாரச் சலுகைக்கும், வாங்கிக்கொள்கிற அலுமினி யத்திற்கும் சம்பந்தம் இல்லை.

திரு. கே. டி. கே. தங்கமணி : என்னுடைய மூலக் கேள்வியே " Whether electricity is supplied at a concessional rate to the Madras Aluminium Factory at Mettur " என்பதுதான். ஆகவே, அதனால் ஆண்டு ஒன்றுக்கு நமக்கு இவ்வளவு நஷ்டம் என்கிற கணக்கு பழைய வருடங்களுக்காவது இருக்காதா? அதை அறிவிக்க விரும்புகிறேன்.

மாண்புமிகு திரு. ஓ. பி. இராமன் : 1 கோடி ரூபாய் என்று மின்சார வாரிய பட்ஜெட்டின் போது சொன்ன நினைவு. குறிப்பிட்ட ஆண்டுக்கு எவ்வளவு என்று தனியாகக் குறிப்பிட்டுக் கேட்டால் பதில் சொல்ல முடியும்.

திரு. ஏம். சுரேந்திரன் : மின்சாரக் கட்டணச் சலுகை அளிப்பதனால் எவ்வளவு நஷ்டம் என்பதற்குத் தனிக் கேள்வி வேண்டும் என்றார்கள். அவர்களுக்கு எவ்வளவு யூனிட் கொடுக்கப்படுகிறது என்றாவது சொல்ல முடியுமா என்று அறிய விரும்புகிறேன்.



1973 பிப்ரவரி 6]

மாண்புமிகு திரு. ஓ. பி. இராமன் : எவ்வளவு யூனிட் கொடுக் கிறோம், எவ்வளவு இழப்பு ஏற்படுகிறது என்பதுபற்றித் தனிக் கேள்வி போட்டால், சொல்கிறேன்.

திருமதி த. ந. அனந்தநாயகி : 50–60-ல் கட்டணச் சலுகை நிர்ண யித்தார்கள் என்றால் அதற்குப் பிறகு 12 வருடங்கள் ஆகிவிட்டனவே. ஏன் அந்தக் கட்டணத்தை மாற்றி அமைக்க பரிசீலனை செய்யவில்லை? செய்யாமல் இருப்பதற்குக் காரணம் என்ன ?

மாண்புமிகு திரு. ஓ. பி. இராமன் : பின்னால் பரிசீலனை செய்யப் பட்டு கட்டணம் உயர்த்தப்பட்டிருக்கிறது. இப்போதும் உயர்த்து வதற்குப் பரிசீலனை செய்துகொண்டிருக்கிறோம்.

திரு. வி. கிருஷ்ணமூர்த்தி : விவசாயத்திற்கும், மற்றுமுள்ள தொழில்களுக்கு எல்லாம் அதிகமான கட்டணத்தை நாம் நிர்ணயித் திருக்கிறபோது யூனிட் $1\frac{1}{2}$ பைசா, $2\frac{1}{2}$ பைசா என்று இந்த அலுமி னியம் பாக்டரிக்குக் கொடுக்க தனிச் சலுகை 59–60-ல் ஏன் கொடுக்கப்பட்டது ? அந்தச் சமயத்தில் அந்தத் தனிப்பட்ட தொழில் அதிபர் அப்போதிருந்த ஆட்சியாளர்களின் கட்சியில் இருந்தார் என்பதாலா ? நமது அமைச்சரவை அதைப் பரிசீலனை செய்ததா ? நாம் நெய்வேலியில் இருந்தும், மற்ற இடங்களில் இருந்தும் 6.2 காசுக்கும், இப்போது 8 காசுக்கும் மின்சாரத்தை வாங்கும் நிலையில, குறைந்தபட்சம் 6 காசு என்ற அளவிலாவது அவர்களிடம் இருந்து கட்டணம் வசூலிக்க மின்சார வாரியம் நடவடிக்கை எடுக்குமா என்று தெரிந்துகொள்ள விரும்புகிறேன்.

மாண்புமிகு திரு. செ. மாதவன் : தலைவர் அவர்களே, இந்த அலுமினியத் தொழிற்சாலையைப் பொறுத்த அளவுக்கு முன்னாலே என்ன நோக்கத்தோடு செய்யப்பட்டது என்ற ஆராய்ச்சியை நான் செய்ய விரும்பவில்லை. ஆனால், அவர்கள் சொன்னதைப் போல, நாடு முழுவதும் அலுமினியத் தொழிற்சாலை எங்கெங்கே இருக் கிறதோ அங்கங்கே உற்பத்தி செலவு எவ்வளவு ஆகிறது என்பதைப் பொறுத்து இந்த விலையை நிர்ணயம் செய்கிறோம். விலையை அதிகப் படுத்தினால் இந்த தொழிற்சாலை நடைபெறுகின்ற வாய்ப்பு இருக்காது.

இரண்டாவது காரணம், இது வெளிநாட்டோடு தொடர்பு கொண்ட தொழிற்சாலை என்பதாலே அந்தத் தொழிற்சாலைக்கும் அரசுக்கும் ஒப்பந்தம் ஏற்படுகிறது. இப்பொழுது, இன்னும் அதிகமான விலையை நிர்ணயிக்க வேண்டுமென்ற முடிவை எடுத்து,

நாம் விலையை அதிகப்படுத்தி இருக்கிறோம். இதுவும் போதாது இன்னும் அதிகப்படுத்தலாம் என்று ஒப்பந்தத்திலே போட்டிருக்கிறோம். எவ்வப்பொழுது அதிகக் கட்டணம் வசூலிக்க முடியும் என்று தென்படுகிறதோ அவ்வப்பொழுதெல்லாம் விலையை உயர்த்துவதற்கு அந்த ஒப்பந்தத்திலே அதிகாரம் எடுத்திருக்கிறோம்.

தென் சென்னை மின் வழங்கு நிறுவனம்

* 37 வினா.—திரு. பெ. சௌந்தரபாண்டியன் : மாண்புமிகு மின்சாரத்துறை அமைச்சர் தயவு செய்து கீழ்க்கண்ட வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) திருச்சியிலுள்ள தென் மதராஸ் மின்சாரக் கார்ப்பரேஷனை அரசே எடுத்து நடத்தும் திட்டம் ஏதேனும் பரிசீலனையில் உள்ளதா?

(இ) ஆம் எனில், எப்போது செயலாக்கப்படும் ?

மாண்புமிகு திரு. ஓ. பி. இராமன் : (அ) ஆம்.

(இ) இந்த ஆண்டிற்குள் எடுக்கப்படும்.

திரு. கு. காமாட்சி : தலைவர் அவர்களே, இந்த நிறுவனம் நாட்டுடைமையாக்கப்படும் என்ற எண்ணம் ஏற்பட்ட காரணத்தினால், அது செய்ய வேண்டிய பணிகளை எல்லாம், முக்கியமான பணிகளைக் கூட தாமதப்படுத்தி வருகிறது என்பது அரசுக்குத் தெரியுமா ? அதைத் தடுக்க அரசு நடவடிக்கை எடுக்குமா என்று அறிய விரும்புகிறேன்.

மாண்புமிகு திரு. ஓ. பி. இராமன் : அதற்குந்தான் இந்த ஆண்டு அரசுடைமையாக்கப்படும் என்று கூறினேன்.

திருமதி டி. என். அனந்தநாயகி : தலைவர் அவர்களே, எல்லா கம்பெனிகளும் அரசுடைமையாக்கப்படுமா, அல்லது இந்த ஒரு கம்பெனி மட்டும்தான் அரசுடைமையாக்கப்படுமா ? எல்லாக் கம்பெனிகளையும் அரசுடைமையாக்க எவ்வளவு நாள் ஆகும் என்பதை அமைச்சரவர்கள் தெரிவிப்பார்களா ?

மாண்புமிகு திரு. ஓ. பி. இராமன் : தலைவர் அவர்களே, எல்லா கம்பெனிகளும் இந்த ஆண்டு அரசுடைமையாக்கப்படும்.

திரு. வி. கிருஷ்ணமூர்த்தி : தலைவர் அவர்களே, தெற்கேயுள்ள தஞ்சாவூர் திருச்சி மற்றுமுள்ள ஜில்லாக்களிலே தமிழ்நாடு மின்சார வாரியம் தன்னுடைய அலுவலகங்களை வைத்திருக்கிற காரணத்தினால்,



நீண்டகாலமாகவே இங்கே சட்டமன்றத்திலே, பல சட்ட மன்ற உறுப்பினர்கள் விரைவாக அந்த கம்பெனிகளை எடுத்துக்கொள்ள வேண்டும், அரசு இலாகாவின் மூலமாக, மின்சாரம் வழங்கவேண்டுமென்று கூறியும், ஏன் அதிகமான காலதாமதத்தை அரசாங்கம் அனுமதித்துக்கொண்டிருக்கிறது ? கூடிய விரைவிலே எல்லா கம்பெனிகளையும் எடுக்கக்கூடிய முறையில் ஒரு காலகட்டத்தை நம்முடைய அமைச்சரவர்கள் அறிவிப்பார்களா ?

மாண்புமிகு திரு. ஓ. பி. இராமன் : தலைவர் அவர்களே, அந்த காலகட்டம்தான் இந்த ஆண்டு முடிவதற்குள்ளாக என்று சொல்லியிருக்கிறேன்.

*Hit and Run accidents*

* 38 *Q*.—THIRU S. SANGUMUTHU THEVAR: Will the Hon. the Minister for Transport be pleased to state—

(*a*) whether the 'Hit and Run' accidents have been on the increase in Madras City in 1971;

(*b*) if so, the details thereof; and

(*c*) the action taken to prevent such accidents?

மாண்புமிகு திரு. ச. இராமச்சந்திரன் : (அ) ஆம்.

(இ) சென்னை மாநகரில் 1—1—1971 நாளிலிருந்து 31—12—1971 வரையில் "மோதி விட்டு ஓடிவிடும்" வண்டிகளினால் மொத்தம் 623 விபத்துக்கள் ஏற்பட்டன. கடந்த ஆண்டில் இதே கால அளவில் 31—12—1970 வரையில் 453 விபத்துக்களே ஏற்பட்டன.

(உ) "மோதிவிட்டு ஓடிவிடும்" வண்டிகளால் ஏற்படும் விபத்துக்களைத் தடுக்க, குறிப்பாக நெருக்கடி நேரங்களில் முறையான சுற்றுக்காவல் பணிபுரிகின்றனர்.

திருமதி த. ந. அனந்தநாயகி : தலைவர் அவர்களே, "மோதிவிட்டு ஓடிவிடும் வண்டிகள்" சாதாரண கார்களா ? அல்லது அரசாங்க பஸ்களா ? அப்படி ஓடிவிட்டால் அவர்களை பிடிப்பதே கிடையாதா? அவர்களுடைய நிலை என்ன என்பதை அமைச்சர் அவர்கள் விளக்குவார்களா ?

மாண்புமிகு திரு. ச. இராமச்சந்திரன் : மோதிவிட்டு யார் ஓடினாலும் அவர்களைப் பிடிப்பதற்கு எப்பொழுதும் அரசாங்கம்

[1973 பிப்ரவரி 6

தயங்குவது இல்லை, அது வண்டிகளாக இருந்தாலும் சரி, அரசாங்க பஸ்களாக இருந்தாலும் சரி. அந்த வகையிலே பார்க்கும்போது 623 கேஸ்களில், 105 கண்டு பிடிக்கப்பட்டு அதற்கான நடவடிக்கை களை அரசாங்கம் மேற்கொண்டிருக்கிறது.

திரு. ஏ. எம். இராஜா : தலைவர் அவர்களே, மோதி விட்டு ஓடுகின்ற வண்டிகளை எளிதில் கண்டு பிடிப்பதற்கு முடியாமலிருக்கிற காரணம் அந்த வண்டிகளிலே பொருத்தப்பட்டிருக்கிற நெம்பர் பிளேட்டுகள் எல்லா வண்டிகளிலும் ஒரே மாதிரியாக, ஒழுங்காக எழுதப்படவில்லை. சில வண்டிகளில், சில மாதிரியாக சின்னதாக எழுதியிருக்கிறார்கள். சில வண்டிகளிலே புரியாத அளவிலே எழுதி யிருக்கிறார்கள். இவற்றையெல்லாம் மாற்றி, எல்லா வண்டிகளிலும் ஒரே மாதிரியாக எழுத வேண்டுமென்று அரசு ஆணை பிறப்பிக்க முயலுமா என்று அறிய விரும்புகிறேன்.

மாண்புமிகு திரு. ச. இராமச்சந்திரன் : உறுப்பினர் சொன்ன யோசனை நல்ல யோசனை. ஆனால், வண்டிகளைப் பொறுத்தும் நெம்பர் சைஸ்களை மாற்ற வேண்டியிருக்கிறது. கார்களும் இருக் கின்றன, பெரிய வண்டிகளும் இருக்கின்றன. ஆகவே, அவைகளை எவ்வாறு முறைப்படுத்தலாம் என்பதைப் பற்றி அரசு பரிசிலனை செய்யும்.

## விரைவுப் பேருந்துகளுக்கு புதுநிறத் திட்டம்

* 39 வினா.—திரு. கே. ஏ. வகாப் : மாண்புமிகு போக்குவரத்துத் துறை அமைச்சர் தயவு செய்து கீழ்க்கண்ட வினாக்களுக்கு விடை யளிப்பாரா—

(அ) அரசாங்க எக்ஸ்பிரஸ் பஸ்களுக்கு இப்போது இருக்கும் சிகப்பு நிறத்தை மாற்றி வேறு நிறத்தில் செய்யும் செயற்குறிப்பு அரசிடம் உள்ளதா ?

(இ) ஆம் எனில், அதன் காரணம் என்ன ?

மாண்புமிகு திரு. ச. இராமச்சந்திரன் : (அ) அண்டு (இ) : 1972-லிருந்து விரைவுப் பேருந்துகளைக் கட்டுவதில் செய்யப்பட விருக்கிற மாற்றத்திற்கிணங்க, விரைவுப் பேருந்துகளை அனைத்தின் நிறத்தையும் சிவப்பு—வெளிர் மஞ்சள் நிறத்திலிருந்து பச்சை—வெளிர் மஞ்சள் நிறத்திற்கு மாற்ற முடிவு செய்யப்பட்டுள்ளது. பழைய விரைவுப் பேருந்துகளுக்கும் படிப்படியாக புது நிறத்திட்டம் செயலுக்குக் கொண்டு வரப்படும்.



1973 பிப்ரவரி 6]

திரு. கே. ஏ. வகாப் : தலைவர் அவர்களே, விரைவுப் பேருந்து களைப் பொறுத்தவரை, இந்த நிறமாற்றம் உதவியாக இருக்கிறது என்றாலும்கூட, சாதாரணப் பேருந்துகளிலே இந்த் நிறம் சிவப்பாக இருந்தாலும்கூட, அவைகளினுடைய பராமரிப்புத் தரம் குறைந்த நிலையிலே இருக்கிற காரணத்தினால் இப்பொழுது நிறைய பிரேக் டவுன் பராமரிப்புப் பிரிவினால் ஏற்படுகிறது என்பது அரசுக்குத் தெரியுமா ? அதைப் போக்க அரசு நடவடிக்கை எடுக்குமா ?

மாண்புமிகு திரு. ச. இராமச்சந்திரன் : தலைவர் அவர்களே, பரா மரிப்புத் தரத்தைப் பொறுத்தவரையில் படிப்படியாக அபிவிருத்திகள் மேற்கொள்ளப்பட்டிருக்கின்றன. பொதுவாக, விரைவுப் பேருந்து களைப் பொறுத்த அளவிலே மாண்புமிகு உறுப்பினர் சொன்ன அளவுக்கு பிரேக்டவுன்கள் இல்லை. ஆனால் மாவட்ட வழித்தடங்களை எடுத்திருக்கிற அரசாங்க போக்குவரத்தை பொறுத்தவரை, பரா மரிப்பை சீரமைக்கும் திட்டம் படிப்படியாக மேற்கொள்ளப்பட் டிருக்கிறது.

திரு. ஆர். பொன்னப்ப நாடார் : தலைவர் அவர்களே, மின்னல் வேக விரைவுப் பேருந்துகளிலே சீட்கள் திருத்தி அமைக்கப்பட்டிருக் கின்றன. ஆனால், பல பஸ்களில் பழைய சீட்டுகளே பொருத்தப்பட் டிருக்கின்றன. அதில் மாறுதல் செய்ய அரசு நடவடிக்கை மேற் கொள்ளுமா ? அதற்கு காலவரையறை நிர்ணயிக்கப்படுமா என்பதை அமைச்சரவர்கள் தெரிவிப்பார்களா ?

மாண்புமிகு திரு. ச. இராமச்சந்திரன் : தலைவர் அவர்களே, பொதுவாக, மின்னல் வேகப் பேருந்துகளில் சீட்களின் எண் ணிக்கையை குறைப்பதென, 40 இருக்கைகளே போதும் என்ற அள வுக்கு அரசு கொள்கை ரீதியாக முடிவெடுத்திருக்கிறது. ஆனால், ஒரே சமயத்திலே, புதிய சீட்களைப் பொருத்துவது என்பது இயலாத காரியம். பராமரிப்புக்காக நிற்கின்றபொழுது இந்த சீட்களை மாற்றி அமைக்க வேலை நடைபெறுகிறது.

திரு. கே. டி. கே. தங்கமணி : இப்பொழுது டயர் போதுமான அளவு கிடைக்காத காரணத்தினால், ரீட்ரீடிங் டயர்கள் போட்டு மின்னல் வேகவண்டிகள் கூட பிரேக் டவுன் ஆகிறதே. ஆகவே திட்டமிட்டு, கூடிய சீக்கிரத்திலே அந்த நிலைமையை சீரமைக்க ஏதாவது ஏற்பாடு உண்டா என்று அறிய விரும்புகிறேன்.

[1973 பிப்ரவரி 6

மாண்புமிகு திரு. ச. இராமச்சந்திரன் : தலைவர் அவர்களே, உறுப்பினர் தெரிவித்ததைப் போல, டயர்கள் போதுமான அளவுக்குக் கிடைக்காததனால், மிகுந்த கஷ்டத்திற்குப் போக்குவரத்து இலாகா ஆளாகியிருக்கிறது. இது சம்பந்தமாக மத்திய அரசுக்கும் கடிதம் மூலம் ஆயிரம் டயர்கள் சீக்கிரத்திலே கொடுக்க வேண்டுமென்று கேட்டு அவர்களும் அனுமதியளித்துள்ளார்கள். விரைவிலே நிலைமை சீரடையும் என்று நம்புகிறோம்.

திரு. ஆ. கு. சுப்பையா : தலைவர் அவர்களே, அமைச்சர் அவர்கள் விரைவுப் பேருந்துகளில் உள்ள சிவப்பு நிறத்தை மாற்றி பச்சை நிறம் அடிக்க முடிவு செய்யப்பட்டுள்ளதாகச் சொன்னார்கள். இப்பொழுது புதிதாக வந்துள்ள சோழன், பாண்டியன், சேரன் போக்குவரத்துக் கழகங்களில் இம்மாதிரியான பேருந்துகளிலே சிவப்பு நிறத்தை மாற்றுவதற்கு காரணம் என்ன என்று அறிய விரும்புகிறேன்.

மாண்புமிகு திரு. ச. இராமச்சந்திரன் : போக்குவரத்துக் கழகங்களைப் பொறுத்தவரையிலே இதுவரையிலும் எந்தவிதமான நிற மாற்றமும் ஏற்படவில்லை.

திருமதி த. ந. அனந்தநாயகி : தலைவர் அவர்களே, இந்த பேருந்துகளில் நிற மாற்றமே தேவையில்லை. காரணம், அதன்மூலமாக பல லட்சம் ரூபாய் செலவாகிறது. அந்த செலவைத் தவிர்க்க, பேருந்துகளில் அலுமினியம் உபயோகித்து, எக்ஸ்பிரஸ் பட்டை மாத்திரம் போட்டு ஓட்ட வழி செய்ய முடியுமா ? இப்படி நிற மாற்றம் செய்வதால், பல லட்சக்கணக்கான ரூபாய் செலவாகும் என்பது அரசுக்குத் தெரியுமா ?

மாண்புமிகு திரு. ச. இராமச்சந்திரன் : விரைவு வண்டிகளைப் பொறுத்தவரையிலே வேறுபாடு தெரிய வேண்டுமென்ற அடிப்படையிலே, அவைகளுக்கு பச்சை நிறம் பூச முடிவு செய்யப்பட்டுள்ளது. மாண்புமிகு உறுப்பினர் சொன்னதைப் போல, எந்தவிதமான நிறமுமே இல்லாமல்கூட பஸ்களை ஓட்டலாம். அதிலே என்ன சொல்கிறார்கள் என்றால், அதிலும் குறிப்பாக தமிழகத்தைப் பொறுத்தவரையிலே, கடற்கரை ஓரமாக இருக்கிற மாநிலமாதலால் உப்புக் காற்று வருமாதலால், அதனால் பஸ்களுக்கு பாதகம் ஏற்படுமோ என்று அஞ்சத்தக்க சூழ்நிலை இருக்கிறது.



1973 பிப்ரவரி 6]

திரு. ஆ. கு. சுப்பையா : தலைவர் அவர்களே, சமீபத்திலே அரசுடைமையாக்கப்பட்ட எஸ். ஆர். வி. எஸ். பஸ்கள், பல ஆண்டு காலமாக, 20, 25 ஆண்டு காலமாகவே சிவப்பு பெயின்டுடன் தான் ஓடிக் கொண்டிருந்தன. ஆனால், இப்பொழுது நீல பெயின்ட் அடித்திருக்கிறார்களே அதற்கு என்ன காரணம் என்று அறிய விரும்புகிறேன்.

மாண்புமிகு திரு. ச. இராமச்சந்திரன் : தலைவர் அவர்களே, தனிக் கேள்வி போடவும்.

திரு. சௌடி எஸ். சுந்தரபாரதி : சேரன், சோழன், பல்லவன், பாண்டியன் கழகங்களில் ஓடுகின்ற பஸ்களுக்கு, ஒவ்வொரு கழகத்துக்கும் தனித் தனி கலர் வைத்துக்கொள்ள ஆலோசனை சொல்லபபடுமா என்று அறிய விரும்புகிறேன்.

மாண்புமிகு திரு. ச. இராமச்சந்திரன் : தலைவர் அவர்களே, மாண்புமிகு உறுப்பினர் அனந்தநாயகி அவர்கள் குறிப்பிட்டதைப் போல, அவற்றிற்கு வர்ணம் பூசுவது என்றால் அதற்கு குறிப்பிடத்தக்க அளவு செலவு ஆகிறது என்பது மறுக்க முடியாத உண்மை. ஆகையினாலே, தனியார் நிறுவனங்களிடமிருந்து நாம் எடுக்கின்ற வண்டிகள் அப்படியே ஓட்டும் என்ற விதத்திலேதான் எந்தவிதமான நிற மாற்றத்தையும் ஏற்படுத்தாமல் இருக்கிறோம்.

திரு. எம். சுரேந்திரன் : சார், நிற மாற்றங்கள் வந்து கொண்டே இருக்கின்றன. ஆனால் தர மாற்றம் வரவில்லை என்பது அரசுக்குத் தெரியுமா ? இப்பொழுது வருகின்ற எக்ஸ்பிரஸ் பஸ்கள் எல்லாம் மிகுந்த அதிர்ச்சியுடன் ஓடிக்கொண்டிருக்கின்றன, அது மட்டுமல்லாமல் அந்த பஸ்களில் குடிநீர் வசதி இல்லாமல் இருக்கிறது. அந்த பஸ்கள் திடீர் திடீர் என்று பல இடங்களிலே நின்றுவிடுகின்றன. அப்படிப்பட்ட அனுபவம் எனக்கு ஏற்பட்டிருக்கிறது. இனிமேலாவது இப்படிப்பட்ட அனுபவம் ஏற்படாமல் இருக்கக்கூடிய முறையில் அரசாங்கம் நடவடிக்கை எடுக்குமா?

மாண்புமிகு திரு. ச. இராமச்சந்திரன் : பொதுவாக விரைவுப் பேருந்துகளைப் பொறுத்தவரையிலும் ஒரு வாரத்திற்கு கிட்டத்தட்ட 9 லட்சம் ரூபாய் வசூலாகிறது. அது மட்டுமல்ல, பயணம் செய்யும் பயணிகளின் எண்ணிக்கை 69 சத விகிதம் ஆகும். ஆகவே வண்டிகள் நிற்கின்றன அல்லது ஓடாமல் இருக்கின்றன என்று சொன்னால் இவ்வளவு பேர்கள் பயணம் செய்திருக்க மாட்டார்கள். இவ்வளவு

ரூபாய் வசூலாகியிருக்காது. கடந்த ஆண்டு வாரத்திற்கு 4 லட்சம் ரூபாய் அளவுக்கு இருந்த வசூல் நிலைமை மாறி இன்றைக்கு 9 லட்சம் ரூபாய் அளவுக்கு வந்துகொண்டிருக்கிறது. அது மட்டுமல்லாமல் எவ்வளவோ பெரிய ஆர்ப்பாட்டங்களுக்கிடையே, அதிர்ச்சிகளுக்கிடையே, கல்லடிகளுக்கிடையே இந்த ஆண்டு குறிப்பிட்ட லாபத் தொகை கொண்டுவரும் என்று எதிர்பார்க்கப்படுகிறது.

தரத்தைப்பற்றிச் சொன்னார்கள். போக்குவரத்துத் துறை மட்டுமல்ல, பொதுமக்களிடமும் கூட குறிப்பாக நம்மிடத்திலேயும்கூட தரம் வளர்ந்தால் நல்லது.

திரு. எம். சுரேந்திரன் : மனிதர்களுடைய தரத்தை உயர்த்துவதற்குத்தான் அரசாங்கம் இருக்கிறது. அரசாங்கம் நடத்துகின்ற துறைகளும் தரமாக நடத்தப்பட வேண்டுமென்பதுதான் விரும்புவது. எனவே அனுபவப்பூர்வமாக சொல்லப்படுகின்றவற்றை எடுத்துக்கொண்டு, அதைப்பற்றி நடவடிக்கை எடுக்க அரசாங்கம் முன்வருமா?

மாண்புமிகு டாக்டர் மு. கருணாநிதி : மாண்புமிகு உறுப்பினர் அவர்கள் கூறுகின்ற அனுபவப் பூர்வமான ஆலோசனைகளை ஏற்றுக்கொள்வதில் அரசுக்கு ஆட்சேபனையில்லை. மனிதர்களுடைய தரத்தை அரசாங்கம்தான் உயர்த்த வேண்டுமென்று சொன்னார்கள். இந்த அரசாங்கம் எவ்வளவு முயற்சிகளை எடுத்துக்கொண்டாலும் சில மனிதர்களுடைய தரத்தை உயர்த்த முடியவில்லை. அந்தத் தோல்வியை ஒப்புக்கொள்கிறோம்.

திரு. எ. சுவாமிதாஸ் : மின்னல் வேக விரைவு வண்டிகள், மற்றும் உள்ள விரைவு வண்டிகள் இரவு காலங்களிலேதான் ஓடிக்கொண்டிருக்கின்றன. அவற்றை ஓட்டுகின்ற டிரைவர்கள் அந்த வண்டிகளில் ஹெட் லைட்ஸ் எரிவதில்லை, பல்புகள் சரியாக இல்லை என்று சொல்கிறார்களே, நல்ல வெளிச்சத்தைக் கொடுக்கக்கூடிய பல்புகளைப் பொருத்துவதற்கு அரசாங்கம் ஆவன செய்யுமா ?

மாண்புமிகு திரு. ச. இராமச்சந்திரன் : தலைவர் அவர்களே, அப்படிப்பட்ட குறைபாடு இருக்குமானால் அரசாங்கம் நடவடிக்கை எடுக்கும்.

திரு. கே. டி. கே. தங்கமணி : தலைவர் அவர்களே, அரசாங்க பஸ்கள் லாபத்தில் ஓடுவதாக அமைச்சர் அவர்கள் சொன்னார்கள். பாண்டியன் போக்குவரத்து கார்ப்பரேஷனில் லாபம் எப்படியிருக்



கிறது ? ஸ்டேட் டிரான்ஸ்போர்டில் லாபம் எப்படியிருக்கிறது என்று சொல்ல முடியுமா ? பொதுவாக ஸ்டேட் டிரான்ஸ்போர்ட் கார்ப்பரேஷன், புதிதாக ஏற்படுத்தப்பட்டிருக்கின்ற கார்ப்பரேஷன்கள் இவையெல்லாம் லாபத்தில் ஓடுகின்றன என்று எடுத்துக் கொள்ளலாமா ?

மாண்புமிகு திரு. ச. இராமச்சந்திரன் : உறுப்பினர் அதற்குத் தனியாகக் கேள்வி போட்டால் பதில் சொல்ல முடியும். அரசாங்கப் போக்குவரத்தைப் பொறுத்தவரையில் இந்த ஆண்டு ஒரு கோடி ரூபாய் லாபம் வரும் என்று எதிர்பார்க்கிறோம்.

திரு. ப. முத்துசாமி : கடந்த ஆண்டுகளைக் காட்டிலும் அரசாங்கப் பேருந்துகளில் பிரேக் டவுன்கள் குறைந்து இருப்பது என்பது உண்மையா ? அதை மேலும் குறைப்பதற்கு அரசாங்கம் நடவடிக்கைகளை மேற்கொள்ளுமா ?

மாண்புமிகு திரு. ச. இராமச்சந்திரன் : மாண்புமிகு உறுப்பினர் அவர்கள் கூறுவதைப்போன்று பிரேக் டவுன்கள் இப்பொழுது குறைந்துதான் இருக்கின்றன. இடையிலே ஏற்பட்ட சிம்ஸன் வேலை நிறுத்தம், ரப்பர் தொழிற்சாலை வேலை நிறுத்தம் இவற்றின் காரணமாக போதுமான அளவுக்கு ஸ்பேர் பார்ட்ஸ் கிடைப்பதில் மிகுந்த கஷ்டம் இருந்தது. இப்பொழுது நிலைமை திருந்தி இருப்பதால் பிரேக் டவுன்கள் குறையும் என்ற நம்பிக்கை இருக்கிறது.

THIRU K. S. KOTHANDARAMIAH : Sir, I congratulate the Hon. Minister for Transport for introducing a number of buses in the Inter-State border areas and also long distance buses and also for providing more facilities. But may I know whether the Hon. Minister will take steps to improve the seating's and other facilities also?

மாண்புமிகு திரு. ச. இராமச்சந்திரன் : தலைவர் அவர்களே, மாண்புமிகு எதிர்க்கட்சித் தலைவர் அவர்களுடைய கேள்விக்குப் பதிலளித்ததைப்போல் நீண்ட தூர மின்னல் வேக பஸ்களிலே 2/2 என்ற வகையிலே 40 சீட்டுகள் போதும் என்று தீர்மானித்து அதை அமலுக்குக்கொண்டுவர நடவடிக்கை எடுக்கப்பட்டு வருகிறது. சில பஸ்களிலே அந்த வகையில் பொருத்தப்பட்டுவிட்டது, மீதியுள்ள பஸ்களிலும் பொருத்தப்படும்.

திரு. கு. அ. பொம்மன் : தலைவர் அவர்களே, மலைப் பிரதேசங்களிலே ஓடக்கூடிய பஸ்கள் எல்லாம் பழைய பஸ்களாக இருப்பதால் அடிக்கடி ஆங்காங்கே பிரேக் டவுன்கள் ஏற்படுகின்றன. ஆகவே, அதைத் தடுக்கக்கூடிய முறையிலே புதிய பஸ்களை விடுவதற்கு அரசாங்கம் ஏற்பாடு செய்யுமா ?

மாண்புமிகு திரு. ச. இராமச்சந்திரன் : இப்பொழுதுதான் நாம் பஸ்களை மேற்கொண்டு வருகிறோம். மாண்புமிகு உறுப்பினர் அவர்கள் நீலகிரி மாவட்டத்தைப் பற்றிக் குறிப்பிடுகிறார்கள் என்று நினைக்கிறேன். விரைவிலே புதிய பஸ்களைப் போடுவதற்கும், நல்ல முறையிலே பராமரிப்புச் செய்வதற்கும் சேரன் போக்குவரத்துக் கழகத்தால் நடவடிக்கை எடுக்கப்படும்.

திரு. த. சோனையா : தலைவர் அவர்களே, பாண்டியன் போக்குவரத்து கழகத்திலே பஸ்களுக்கு புதுமையான பாடி கட்டுகிறார்கள். ஒரு வண்டிக்கு ஏற்கனவே அதற்காக என்ன செலவழிந்ததோ அதில் இப்பொழுது புதிய முறையில் பாடி கட்டுவதன் காரணமாக 10 ஆயிரம் ரூபாய் குறைவாக ஆகிறது. அந்த முறையை சர்க்கார் வண்டிகளுக்கும் மற்ற போக்குவரத்து கழக வண்டிகளுக்கும் கொண்டுவர அரசு ஏற்பாடு செய்யுமா ?

மாண்புமிகு திரு. ச. இராமச்சந்திரன் : பல்வேறு போக்குவரத்து கழகங்களை ஏற்படுத்தியதற்குக் காரணமே திறமையிலும், சிக்கனத்திலும் போட்டி போடவேண்டுமென்பதுதான். அந்த வகையிலே பாண்டியன் போக்குவரத்துக் கழகம் செயல்பட்டு வருகிறது என்று மாண்புமிகு உறுப்பினர் அவர்கள் சொன்னதற்காக நன்றியைத் தெரிவித்துக் கொள்கிறேன்.

திரு. கே. கே. முத்தையா : நீண்ட தூரம் செல்லும் துரித வண்டிகளில் பயணம் செய்யும் பயணிகளுக்கு உதவியாக பணிப் பெண்களை அமைக்கும் திட்டம் அரசாங்கத்தின் பரிசீலனையில் இருக்கிறதா ?

மாண்புமிகு திரு. ச. இராமச்சந்திரன் : அத்தகைய உத்தேசம் இல்லை.

திரு. வை. பாலசுந்தரம் : தலைவர் அவர்களே, பஸ்களை எல்லாம் தேசியமயமாக்கிவிட்ட பிறகு சில பஸ் அதிபர்கள் நம்முடைய அரசு பஸ்களுக்கு இடையூறு செய்கிறார்கள் என்று செய்தி வருகிறதே அது உண்மையா ?



மாண்புமிகு திரு. ச. இராமச்சந்திரன் : நம்முடைய முதலமைச்சர் அவர்கள் ஏற்கனவே இந்த மன்றத்தில் ஒரு முறை தெரிவித்ததைப் போல இதை நாம் முற்றிலும் மறுப்பதற்கு இல்லை.

திரு. நா. வெ. குருசாமி : பாண்டியன் போக்குவரத்துக் கழகத்தின் பஸ்களுக்கு அரசாங்க டெப்போவில் செய்த பாடிகள் சரியில்லை என்பதால் இப்பொழுது டி.வி.எஸ்.-ல் போடப்படுகிறது என்று சொல்லப்படுவது உண்மையா ?

மாண்புமிகு திரு. ச. இராமச்சந்திரன் : டி.வி.எஸ். மீது அவர்களுக்கு இருக்கிற அனுதாபத்தை நான் பாராட்டுகிறேன்.

திருமதி த. ந. அனந்தநாயகி : பெயின்ட் அடிக்காமல் அலுமினியத்தோடு பஸ்களை ஓடவிட்டால் கடலிலிருந்து வீசக்கூடிய உப்புக் காற்று பட்டு அதனால் சேதம் ஏற்படும் என்று சொன்னார்கள். அப்படியானால் உப்புக் காற்று சென்னையிலேதான் வீசுகிறது. மதுரை, பொள்ளாச்சி, கோவை போன்ற இடங்களிலே உப்புக் காற்று இருக்கிறது? ஆகவே அப்படிப்பட்ட இடங்களிலாவது, டி.வி.எஸ். பஸ்கள் மாதிரி, அலுமினியத்தோடு, ஓடுவதற்கு அரசாங்கம் முன் வருமா ?

மாண்புமிகு திரு. ச. இராமச்சந்திரன் : அரசாங்கத் துறையைச் சேர்ந்த பஸ்கள் ஆயிரம் பஸ்கள் சென்னையிலே ஓடுகின்றன. ஆறு ஆயிரம் பஸ்கள் வரையில் மற்ற இடங்களிலே தனியார் பஸ்கள் ஓடுகின்றன. அங்கேயெல்லாம் மாற்றுவதாக இல்லை. இங்கே மாற்றுவது என்றால் ஏராளமான செலவு ஆகும்.

## *Executive Officers of temples*

* 40 Q.—Thiru S. SANGUMUTHU THEVAR : Will the Hon. the Minister for Religious Endowments be pleased to state—

(a) the total number of Executive Officers of temples, whose security deposits have not yet been refunded;

(b) the steps taken to refund their amount; and

(c) the cause for the delay in such refunds?

மாண்புமிகு திரு. மு. கண்ணப்பன் : (அ) 85 நிர்வாக அதிகாரிகள்

(ஆ) நிர்வாக அதிகாரிகளுக்குச் சேரவேண்டிய தொகையைத் திருப்பித் தருவதற்கு முன்பு அவர்கள் கட்டவேண்டிய தொகை ஏதேனும் உள்ளதா என்பது பற்றி அறிய வேண்டிய சமய நிறுவனங்

களில் தற்போதைய நிர்வாக அதிகாரிகளிடமிருந்தும் நிர்வாகத் துறை சார்நிலை அதிகாரிகளிடமிருந்தும் அறிக்கைகளை இந்து சமய—அறக்கட்டளைத்துறை ஆணையாளர் கேட்டுள்ளார். நிர்வாக அதிகாரிகளுக்குப் பிணையவைப்புத் தொகை திருப்பிக் கொடுக்கப்பட வேண்டியுள்ள நேர்வுகளில் அவர்கள் பணியாற்றிய சமய நிறுவனங்களின் தணிக்கை அறிக்கைகள் கணக்கையும், இதர ஆவணங்களையும் பரிசீலனை செய்த பின்னரே மேற்படி தொகை அவர்களுக்குக் கொடுக்கப்படலாம். அவர் பணி புரிந்த எல்லா சமய நிறுவனங்களைக் குறித்தும் அவர் கட்ட வேண்டிய தொகை முடிவு செய்யப்பட்ட பின்னர்தான் அவர்கள் கட்டவேண்டிய தொகை ஏதேனும் முடிவு செய்யப்பட்டிருப்பின் அத் தொகையினைப் பிணைய வைப்புத் தொகையிலிருந்து கழித்துக்கொண்டு எஞ்சியுள்ள தொகை திரும்பக் கொடுக்கப்படும். முடிவு பெறாமல் இருக்கும் நேர்வுகளை விரைவில் முடிக்க இந்து சமய—அறக்கட்டளை (நிர்வாகத்) துறை ஆணையாளர் முயற்சிகள் மேற்கொண்டு வருகிறார்.

(உ) நிர்வாக அதிகாரிகள் தங்கள் பதவிக் காலத்தில் பல சமய நிறுவனங்களில் பணியாற்றி வந்துள்ளதால், அவர்கள் கட்ட வேண்டிய தொகைகளை முடிவு செய்வதற்கு முன்பு, அத்தகைய சமய நிறுவனங்களின் தணிக்கை அறிக்கைகள் கணக்குகள் ஆகியவை பரிசீலிக்கப்பட வேண்டியிருக்கின்ற காரணத்தினால் நிர்வாக அதிகாரிகள்மீது இழப்புப் பொறுப்புத் தொகை வசூல் நடவடிக்கை சம்பந்தப்பட்ட துறை அதிகாரிகளால் தொடங்கப்பட்ட நேர்வுகளில் அவற்றின் முடிவையும் பிணைய வைப்புத் தொகையைத் திருப்பிக் கொடுப்பதற்காக எதிர்பார்க்க வேண்டியதாக உள்ளது.

<u>திரு. ச. சங்குமுத்து தேவர் :</u> தலைவரவர்களே, அவர்களுடைய பணிக்காலம் முடிவதற்குள்ளாக இம்மாதிரியான கணக்குகளைச் சரி பார்த்து அந்தத் தொகை அவர்களுக்கு விரைவில் கொடுப்பதற்கு இனிமேலாவது அரசு நடவடிக்கை எடுக்குமா ?

<u>மாண்புமிகு திரு. மு. கண்ணப்பன் :</u> தலைவரவர்களே, நிர்வாக அதிகாரிகளினுடைய பணிக்காலம் முடிவதற்கு முன்பாக கணக்குகளைப் பார்க்க முடியாது. ஏனென்றால் ஒவ்வொரு அதிகாரியும் பல சமய நிறுவனங்களில் பணியாற்றுகிறார்கள். அந்த நிறுவனங்களில் பணியாற்றுகின்ற நேரத்தில் ஏதாவது தவறு நடந்திருந்தால் அவர்கள் ஓய்வு பெற்ற பிறகுதான் அவைகளைப் பரிசீலனை செய்ய முடியும். அப்படிப் பரிசீலனை செய்வதை வேண்டுமானால் விரைவுப் படுத்த முயற்சியெடுக்கலாம்.



<u>திருமதி த. ந. அனந்தநாயகி :</u> சார், இந்த நிர்வாக அதிகாரிகளிடமிருந்து எவ்வளவு தொகை செக்யூரிட்டி டெபாசிட்டாக வாங்குகிறீர்கள் ? ஓய்வு எடுக்கப்போகிறார்கள் என்று தெரியும் பொழுது அதற்கு இரண்டு வருடங்களுக்கு முன்பே பல கோயில்களின் கணக்குகளில் தவறு இருக்கிறதா என்று பார்த்தால் ஓய்வு பெறுகின்றபொழுது இதைச் சரியாகக் கொண்டுவர முடியும். இல்லையென்றால் அவர் ஓய்வு எடுத்தபிறகு எல்லா அறநிலையக் கணக்குகளையும் பார்த்தபிறகு கொடுப்பது என்றால் ஓய்வு பெற்றவர் இந்த உலகத்தைவிட்டே ஓய்வெடுத்துக்கொண்டு விடுவார்கள். ஆகவே, ஓய்வு எடுப்பதற்கு முன், எப்பொழுது 55 வயது ஆகப்போகிறது என்று பார்த்து 53-வது வயதிலேயே எந்தெந்தக் கோயில்களில் வேலை செய்தார்களோ அந்தக் கோயில்களின் கணக்குகளைப் பார்த்து ஓய்வு பெற்றவுடன் அந்தத் தொகை கிடைப்பதற்கு வசதி செய்து கொடுப்பார்களா ? அந்த டெபாசிட் பணத்திற்கு ஏதாவது வட்டி கொடுக்க அரசாங்கம் முன்வருமா ?

<u>மாண்புமிகு திரு. மு. கண்ணப்பன் :</u> தலைவரவர்களே, 10,000 ரூபாய் வருமானம் உள்ள கோயில்களுக்கு 250 ரூபாய் பிணைய வைப்புத் தொகையாக இப்பொழுது வாங்கி வருகிறோம். அல்லது 500 ரூபாய் மதிப்புள்ள சொத்து. 10,000 ரூபாய்க்கு மேல் 30,000 ரூபாய் வரையில் வருமானம் உள்ள கோயில்களுக்கு 500 ரூபாய் செக்யூரிட்டி அல்லது 1,000 ரூபாய் மதிப்புள்ள சொத்து: 1,50,000 ரூபாய்க்குமேல் வருமானம் உள்ள கோயில்களுக்கு 4,000 ரூபாய் செக்யூரிட்டி டெபாசிட் அல்லது 8,000 ரூபாய் மதிப்புள்ள இயங்காச் சொத்து என்ற அளவிலே செக்யூரிட்டி டெபாசிட் இப்பொழுது வாங்கி வருகிறோம். உறுப்பினரவர்கள் குறிப்பிட்டதைப்போல் கடைசி இரண்டு ஆண்டுகள் இருக்கும்பொழுது ஏன் தணிக்கை செய்யக் கூடாது என்று கேட்கிறார்கள். ஆனால் அந்தத் தொகையைக் கொடுக்க வேண்டுமென்றால் கடைசி இரண்டாண்டுகள் பணியாற்றியதையும் சேர்த்துத்தான் கொடுக்க வேண்டும். ஏனென்றால் அந்தக் கடைசி இரண்டு ஆண்டுகளில்கூட ஏதாவது தவறு நடக்கும் என்ற சந்தர்ப்பம் இருப்பதால் முழுமையாகப் பரிசீலனை செய்து முடிந்ததற்குப் பிறகு அந்தத் தொகையைத் திருப்பிக் கொடுப்பதற்கான நிலை மேற்கொள்ளப்பட்டிருக்கிறது.

திரு. ஆர். பொன்னப்ப நாடார் : தலைவரவர்களே, இந்த நிர்வாக அதிகாரிகள் அமைப்பை கன்னியாகுமரியிலிருக்கின்ற ஆலயங்களுக்கும் விஸ்தரித்து இந்தச் சட்ட திட்டங்களை விஸ்தரிக்க அரசு வழிவகை செய்கிறதா ? அப்படியிருந்தால் விவரம் அறிவிப்பார்களா ?

மாண்புமிகு திரு. மு. கண்ணப்பன் : தலைவரவர்களே, தமிழ் நாட்டினுடைய மற்றப் பகுதிகளில் இருப்பதைப்போன்று கன்னியா குமரி மாவட்டத்திலும் இதே சட்டத்தை நீடிக்க நம்முடைய அரசு மத்திய அரசின் அனுமதியைக் கோரியிருக்கிறது. அந்த அனுமதி வர வில்லை, எதிர்பார்த்துக்கொண்டிருக்கிறோம்.

திரு. மு. முத்தையா : தலைவரவர்களே, தமிழ்நாட்டில் அரிசனங் கள் எத்தனைபேர் அதிகாரிகளாக நியமிக்கப்பட்டிருக்கிறார்கள் என்று அமைச்சரவர்கள் கூறுவார்களா ?

மாண்புமிகு திரு. மு. கண்ணப்பன் : தனியாகக் கேள்வி போடவும்.

மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர் : வினாக்கள்—விடைகள் முடிவுற்றன.

[குறிப்பு : ஓர் உரையின் தொடக்கத்தில் வெள்ளிக்குறி (*) இடப் பட்டிருந்தால் அவ்வுரை உறுப்பினரால் சரிபார்க்கப்பட்டது என்பதைக் குறிக்கும்].

## 2. ஒழுங்கமைதி மீறல் பிரச்னை.

*2—2—1973-ம் நாள் ஆளுநர் உரை நிகழ்த்துமுன் சில கட்சித் தலைவர்கள் சிறு உரை நிகழ்த்தி தம் கட்சி உறுப்பினருடன் வெளி நடப்பு செய்த நிகழ்ச்சியை உரிமைக் குழுவிற்கு அனுப்புதல்.*

MR. DEPUTY SPEAKER : Hon. Members will remember that yesterday I referred to certain incidents that took place on 2nd February 1973 when the Governor addressed members of the Tamil Nadu Legislature assembled together, and I said that I will take up the matter today.

On a previous occasion, on 25th January 1969 when a similar incident occurred and Thiru A. Balasubramaniam, Leader of the Communist-Marxist Group obstructed and interrupted the Address by the Governor to the Joint Session and staged a walk-out



accompanied by the members of his party, and the members of the C.P.I. the Socialist and Republican Parties, the matter was referred to the Committee of Privileges by the then Speaker.

Accordingly under rule 192 of the Tamil Nadu Legislative Assembly rules, I refer this matter suo motu to the Committee of Privileges for examination and report.

THIRU K. T. K. THANGAMANI : Before the matter is referred to the Committee of Privileges I want to make a submission.

MR. DEPUTY SPEAKER : You can make any submission you want to the Privileges Committee. You can make any statement or express your opinion in that Committee.

MR. THIRU K. T. K. THANGAMANI : In that case I will move an amendemnt that this matter may be discussed by the House itself. There is a provision for that in our Rules. Our Rule 189 says :—

"If the Speaker holds that the *prima facie* case exists, he may allow a motion to be made by any member that the alleged breach of Privilege be referred to the Committee of Privileges, or in the alternative, that it be dealt with by the House itself."

MR. DEPUTY SPEAKER : Where is the motion? How can you consider this as a motion?

THIRU K. T. K. THANGAMANI : Under Rule 189 you are making a motion.

MR. DEPUTY SPEAKER : I have given a ruling. I have come to a decision that this case may be referred to the Committee of Privileges. It is done *suo motu*. It is not a motion or suggestion.

THIRU K. T. K. THANGAMANI : In such a case I must be given an opportunity to say what I want, before the matter goes to the Privilleges Committee. It has happened in the past. In 1952 a similar question arose. An identical thing took place. When the Governor of Madras rose to address the Members of the Legisture, under Article 176 of the Constitution Hon. Thiru T. Prakasam, a member of the Legislative Council rose on a point of order and made a speech and left the place accompanied

[K. T. K. Thangamani] [1973 பிப்ரவரி 6

by some members. Subsequently on 13th May 1952, the Leader of the House (Council) moved a motion for admonition to the Member who interrupted the Governor's Address on the 6th May 1952. The motion was subsequently withdrawn by leave of the House. In 1954, the Madras Legislative Assembly Rules were amended and the following new rule (Rule 12) has been included. That Rule 12 states as follows:—

"12. When the Houses of the Legislature are assembled together under Article 175 or 176 or when the Members of the Assembly alone have, assembled, under Article 175 of the Constitution, no Member shall obstruct or interrupt the Address either before or after the Address or during its duration with any speech or point of order or in any other manner . . . .

மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர் : பிரிவிலேஜ் கமிட்டியிலே அதைப்பற்றி விவாதிக்கலாம்.

THIRU K. T. K. THANGAMANI : My contention is there is no breach of privilege.

மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர் : பிரிவிலேஜ் இருக்கிறதா இல்லையா என்பதை நீங்கள்.........

THIRU K. T. K. THANGAMANI : Merely because something is mentioned in the rules as privilege, it cannot be automatically referred to the Committee of Privileges. That is my contention. If anything, it is breach of order . . .

MR. DEPUTY SPEAKER : I quoted the precedent and said how the then Speaker had referred the matter to the Privileges Committee.

DR. H. V. HANDE : On a point of Order, Sir. According to the Rules of the Assembly, I am raising a relevant issue. There is a lot of substance in what Thiru K. T. K. Thangamani has said. There is Rule 189. I would request you, Sir, to carefully go through it. There, in the first case the Speaker must hold that there is a *prima facie* case. I suppose I am right. Then, if the Speaker holds that a *prima facie* case exists, he may let a motion to be moved by any Member that the alleged breach of privilege be referred to the Committee of Privileges or in the alternative the Speaker may leave the issue to be dealt with by the



1973 பிப்ரவரி 6] [Dr. H. V. Hande]

House itself. That is what the hon. Member Thiru K. T. K. Thangamani is arguing. There is no power whereby the Deputy Speaker can bring a motion on his own. He has not said so.

MR. DEPUTY SPEAKER : I have said it. The hon. Member should not misquote me.

DR. H. V. HANDE : So you have brought the motion *suo motu*. All right. I will now come to the point.

But according to the rules you can only bring it under rule 189. Therefore, I think there is a lot of substance in what Thiru Thangamani has stated. The House must decide whether it has to be referred to the Privileges Committee or not. So, I request the Deputy Speaker to function within the framework of the rules of the House and allow the House to take a decision.

THIRU K. T. K. THANGAMANI : Sir, on a point of clarification.

MR. DEPUTY SPEAKER : No clarification now.

THIRU K. T. K. THANGAMANI : Sir, on a point of order. You referred to the privilege issue relating to Thiru Balasubramaniam. Prior to that when the D.M.K. Members were in opposition, they were also walking out whenever the Governor rose to address. . . .

MR. DEPUTY SPEAKER : Now the hon. Member, Dr. Hande has referred to Rule 189 when he raised the point of order. But Rule 192 reads as follows :

'Notwithstanding anything contained in these rules, the Speaker may *suo motu* refer any question of privilege to the Committee of Privileges for examination, investigation or report.'

So, I have referred this matter under rule 192.

THIRU K. T. K. THANGAMANI : My point is that it might have happened in the case of Thiru Balasubramaniam who led the protest march when the Governor was addressing the House and I know that subsequently it went to the Privileges Committee which ultimately stated that that was no disrespect to the Governor and the matter was dropped.

I hear murmuring from the staff. Why should there be murmuring from the staff....

Thiru M. A. Latheef : Sir, on a point of order. The Chair has already given a ruling...

Mr. Deputy Speaker : Let the hon. Member resume his seat.

Thiru K. T. K. Thangamani : Sir, I want your protection.

Mr. Deputy Speaker : What is your contention?

Thiru K. T. K. Thangamani : My contention is that the procedure that was adopted when the Ruling Party was in Opposition decided not to attend the Governor's Address should be adopted in this case also. At that time discussion took place and ultimately the then Speaker asked the Leaders of Parties to speak. First the Leader of the House was asked to put forth proposals and then the leader of the D.M.K. late Thiru C. N. Annadurai spoke. Thiru M. Kalyanasundaram and other Members also spoke. Then the ruling was given by the then Speaker The Hon. Thiru Anbazhagan was also there at that time.....

The Hon. Thiru K. Anbazhagan : Sir, on a point of order. The hon. Member has no right to discuss the issue now. The Deputy Speaker has already given the ruling that the matter should be referred to the Committee of Privileges and that is final. Therefore the hon. Member discussing the issue now is itself another privilege issue, according to me though I am not moving a privilege issue against him. So, my point of order is that the hon. Member need not be permitted to discuss the whole issue on the pretext that it is a point of order. . .

Thiru K. T. K. Thangamani : Sir, on a point of order.

Mr. Deputy Speaker : You want to start a new argument......

Thiru K. T. K. Thangamani : In 1969 when the Marxist Party staged a walk-out that particular ruling was given and it was referred to the Privileges Committee. There is also a prior ruling given that the matter did not involve the question of breach of privilege of the House...



Mr. Deputy Speaker : If I remember correctly that case relates to absence but this is a walk-out. In 1969 the Leader of that Party and others walked out and later the matter was referred to the Privileges Committee by the then Speaker. So I am following a clear precedent and this is also the latest.

Thiru K. T. K. Thangamani : What I am saying is that there is a prior precedent......

Thiru M. A. Latheef : Sir, on a point of order......

Thiru N. Ganapathi : Sir, on a point of order......

Mr. Deputy Speaker : When I have already announced the decision that I am referring the matter to the Privileges Committee, what is the meaning of discussing it here? The hon. Member may discuss this point in the Committee itself.

Thiru K. T. K. Thangamani : My point is that your predecessor has ruled that it is not a question of privilege and it has to be dealt with by the House.

Mr. Deputy Speaker : Absence is different from obstruction and interference. This is a clear case. The concerned hon. Members came to the House and rose up when the Governor was about to start his speech. This is a clear one and we have got the precedent which happened in 1969 and so, I have referred the matter to the Privileges Committee. I will not allow any more argument.

Thiru K. T. K. Thangamani : I think I must be allowed the right to say that it should not be referred to the Committee...

(Thiru M. A. Latheef rose.)

Mr. Deputy Speaker : I have given my ruling. There cannot be a debate......

Thiru K. T. K. Thangamani : I want this matter to be re-opened.

Mr. Deputy Speaker : When I have given a ruling, it is not fair to have a discussion.

Thiru K. T. K. Thangamani : You have said yesterday that at the next sitting......

[1973 பிப்ரவரி 6

(Thiru N. Ganapathy and Thiru M. A. Latheef again rose.)

THIRU M. A. LATHEEF : One point of order, Sir. I want to be given an opportunity to raise my point of order.

THIRU N. GANAPATHY : I must be given a chance to speak on this.

MR. DEPUTY SPEAKER : Hon. Members may resume their seats. I have already given my ruling.

THIRU K. T. K. THANGAMANI : Ruling cannot be arbitrary. Without hearing us, the matter cannot be summarily referred to the Committee. . . .

மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர் : நீங்கள் தயவு செய்து உட்காருங்கள். மாண்புமிகு உறுப்பினர் அவர்கள் ஒன்றைத் தெரிந்துகொள்ள வேண்டும். உங்களுடைய பதிலைக் கேட்க வாய்ப்புத் தரவேண்டுமென்று கேட்கிறீர்கள். உரிமைக் கமிட்டிக்கு அனுப்புவதற்கு எனக்கு உரிமை இருக்கிறது. வெளியிலே உள்ள நீதி மன்றத்திற்கோ மற்றவற்றிற்கோ அனுப்பாமல் இந்த ஹவுசிலேயுள்ள கமிட்டிக்குத்தான் அதை அனுப்பியிருக்கிறோம். பிரிவிலேஜ் கமிட்டியிலே மாண்புமிகு உறுப்பினர்கள் இருக்கிறார்கள்; அதிலே அவர்கள் எவ்வளவு வேண்டுமானாலும் வாதிக்கலாம். அதைப்பற்றி இப்பொழுதே இங்கே விவாதிக்க ஆரம்பித்தால், நாளைக்கு எல்லா உரிமைப் பிரச்சினைகளின் மேலும் விவாதித்துக்கொண்டே போகும் நிலைமை ஏற்படும். நீங்கள் சொல்வது கவர்னர் பேருரைக்கு வராமல் புறக்கணித்ததையும், வந்துவிட்டு வெளிநடப்பு செய்ததையும் ஒன்றாக வைத்துப் பேசுகிறீர்கள். 1969-ஆம் ஆண்டு ஜனவரி மாதம் 25-ஆம் தேதி திரு. ஏ. பாலசுப்பிரமணியமும், வேறு சில கட்சிகளைச் சேர்ந்த உறுப்பினர்களும் வெளிநடப்பு செய்திருக்கிறார்கள். இந்தப் பிரச்னையை அன்றைக்கு உரிமைக் கமிட்டிக்கு அனுப்பி, நடவடிக்கை எடுத்திருக்கிறார்கள். அப்பொழுது இது உரிமைப் பிரச்னை இல்லை என்று தீர்ப்பளிக்கவில்லை. உரிமைப் பிரச்னைதான் என்று சொல்லி, கமிட்டிக்கு அனுப்பியிருக்கிறார்கள். அந்தப் பிரீசிடென்ட்டை வைத்துத்தான் நான் இதை பிரிவிலேஜ் கமிட்டிக்கு அனுப்புகிறேன் என்று தீர்ப்பளித்தேன். ஒவ்வொரு பிரச்னையிலேயும் இது மாதிரி விவாதத்தை உருவாக்கிக்கொண்டே போகலாம் உறுப்பினர் அவர்கள். நம்முடைய பேரவையின் லேட்டஸ்ட் பிரீசிடென்ட்டை எடுத்துக்காட்டி விதிப்படி தீர்ப்பளித்திருக்கிறேன் என்று நான்



1973 பிப்ரவரி 6] [பேரவைத் துணைத் தலைவர்]

சொல்லும்பொழுது, அதை மீறி இங்கே விவாதிக்கத் தொடங்குவது பொருத்தமாக இராது. அதை நான் திரு. தங்கமணி அவர்களுக்குச் சொல்ல வேண்டியதில்லை. இதைப்பற்றி மேலும் விவாதத்தை நான் அனுமதிக்கப் போவதில்லை.

THIRU K. T. K. THANGAMANI : With due respect to the Chair, let me make a submission.

(Thiru M. A. Latheef and Thiru N. Ganapathy again rose.)

MR. DEPUTY SPEAKER : I shall allow every one, but not at the same time. Thiru K. T. K. Thangamani.

திரு. கே. டி. கே. தங்கமணி : நேற்று தாங்கள்கூட கூறினீர்கள், இந்த அவையிலே 2-ஆம் தேதி நடந்த சம்பவத்தைப்பற்றி இங்கே கொண்டுவர இருக்கிறேன் என்று, அதன் அடிப்படையில்தான் அந்த மாதிரி நீங்கள் கொண்டுவரலாம் என்று........

மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர் : நேற்று நான் சொன்னேன், என் மீது பதவி நீக்கத் தீர்மானம் இருப்பதால் இதை நான் நாளை எடுத்துக்கொள்கிறேன் என்றுதான் சொன்னேனே தவிர, விவாதத்திற்கு எடுத்துக்கொள்கிறேன் என்று சொல்லவில்லை.

THIRU K. T. K. THANGAMANI : It cannot be an arbitrary announcement.
கமிட்டிக்கு அனுப்பக் கூடாது என்று சொல்லுவதற்கு எனக்கு உரிமை இருக்கிறது. நேற்று தாங்களேகூட இந்த விஷயத்தை இந்த அவையிலே சொல்லி இருக்கிறீர்கள். ஒரு முறையிலே இதைக் கமிட்டிக்கு அனுப்பலாம் அல்லது இந்த அவுசிலே விவாதிக்கலாம். ஏற்கனவே இந்த மாதிரி ஹவுசே விவாதித்து, இது ஒரு பிரிவிலேஜ் கிடையாது, "பிரீச் ஆப் காண்டக்ட்" என்பதுபற்றி எல்லாம் திரு. அண்ணாதுரை பேசியிருக்கிறார்கள், திரு கல்யாணசுந்தரம் பேசியிருக்கிறார்கள்.

மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர் : 189-ஆவது விதியின்கீழே இங்கே எடுத்து விவாதிக்கலாம், 192-வது விதியின்கீழ் இதை நானே கமிட்டிக்கு அனுப்பலாம் என்ற இரண்டு கருத்துக்களையும் உறுப்பினர் அவர்கள் சொல்லி நிறுத்திக் கொண்டிருக்கலாம். அப்பொழுதுதான் இதன்மீது தீர்ப்புச் சொல்ல என்னால் முடியும். நீங்கள் சொல்லுவதை நான் மதிக்கிறேன். 192-ஆவது பிரிவின்கீழ் இதை........

Thiru K. T. K. Thangamani rose.

THIRU V. KRISHNAMOORTHI : This cannot be allowed. Either the member should be asked to sit down or the procedure laid down in our rules should be followed. After the Deputy Speaker has given ruling, how can there be a debate?

திரு. கே. டி. கே. தங்கமணி : பிரைமா பேசி கேஸ் இல்லை என்று ப்ரூவ் பண்ணுவதற்கு இதை அனுமதிக்க வேண்டுமென்று கேட்டுக் கொள்ளுகிறேன்.

THIRU R. PONNAPPA NADAR : I should also be heard in the matter. Two procedures are contemplated in the Rules. Under Rule 189, if the Speaker holds......

MR. DEPUTY SPEAKER : I am afraid we are going into a discussion. I have given a ruling. I have quoted precedents when a similar matter had been decided upon and I have given a ruling that it shall go to the Privileges Committee. All other things can be discussed in the Committee of Privileges.

THIRU R. PONNAPPA NADAR : Only one point......

THIRU N. GANAPATHY : On a point of order Sir......

MR. DEPUTY SPEAKER : Let Thiru Ponnappa Nadar raise his point first.

THIRU R. PONNAPPA NADAR : On a previous occasion when there had been some proceedings against Mr. Martin, this House had discussed it on the floor of the House. That precedent is as much binding on us as your precedent. It has been pointed out at that time that the whole matter could be discussed on the floor of the House in view of the provisions contained under Rule 189. The House can discuss it on a motion by a member that it could be referred to Committee of Privileges. In the alternative it could be dealt with by the House itself. I think even though in this case a decision has been rendered, the House could discuss this matter because in regard to questions of breach of privilege, the House is paramount and supreme and so the House can discuss it and come to conclusions. I think there have been precedents when similar matters had been discussed in the House.



It has been stated that Thiru Balasubramaniam's case related to a matter where he staged a walk-out when His Excellency was making a speech. An hon. Member has distinguished it on the ground that it was a different matter. What I say is, the question of privilege is an important matter and it affects the dignity of the House and the rights of all members. So it is better that the whole matter is discussed here in the House. Today one party may be in power and tomorrow another party may come to power. In the interest of democracy and in the interest of safeguarding the privileges and rights of members. I think there is some force in the argument advanced by Thiru K. T. K. Thangamani regarding this matter. There can be no legal impediment in the matter being discussed on the floor of the House even though a decision has been rendered by the Deputy Speaker because the Deputy Speaker is an officer of the House and he can always take the House into confidence and the House can render its decision. That is my submission.

THIRU M. A. LATHEEF : On a point of Order, Sir. There should be strict obedience to the ruling from the Chair. There is difference between content and substance. Members should carefully note the difference between Rule 189 and Rule 192. Rule 189 comes in when the Speaker says there is *prima facie* case and allows a motion to be made by any member of the House that alleged breach of privilege be referred to Committee of Privileges. But here what has happened? Yesterday it was submitted by the Chair that the interruption by some members during the Governor's Address on 2nd February constituted a breach of order and he said that it will be taken up by the House the next day. Now the Chair has given the decision under Rule 192 that the matter be referred to Privileges Committee. I quite understand the point raised by Thiru K. T. K. Thangamani that it should be discussed in the House itself. மு. ப. 10-30

The hon. Member desires that it should be discussed in the House. After a definite ruling has been given by the Chair and the matter has already been referred to the Privilege Committee, it is only the Privileges Committee which can refer it back to the House recommending that this may be taken up for consideration of the House. Therefore, I submit that there is a basic difference between what is contained in rules 189 and 192. If any hon.

Member is aggrieved and if he wants that the matter should be discussed by the House, he should raise the matter in the Privileges Committee which alone is competent to refer the matter back to the House for full discussion.

MR. DEPUTY SPEAKER : I am sorry to notice that every hon. Member wants to teach the Chair. I know fully well what the rules say and I know how to interpret them. The hon. Members, Thiru Thangamani and Thiru Ponnappa Nadar have referred to Rule 189. Rule 189 does not stress upon taking the matter to the Privileges Committee but only Rule 192 which says—

'Notwithstanding anything contained in these rules, the Speaker may *suo motu* refer any question of privilege to the Committee of Privileges for examination, investigation or report.'

So, there is no point of order and my decision that the matter should be sent to the Privileges Committee stands as it is.

இன்னொன்றையும் நான் தெரிவித்துக் கொள்ள விரும்புகிறேன். இருக்கையில் இருந்து கொண்டு தலைவரைப் பற்றியோ அல்லது தலைமை வகிப்பவரைப் பற்றியோ எந்தவிதமான ரிமார்க்ஸ்-ம் பாஸ் செய்யக் கூடாது. அப்படி எனக்குக் கேட்கிற மாதிரி பல நேரங்களில் வருகின்றன. ஒலிபெருக்கியில் கேட்காததால் நடவடிக்கைக் குறிப்பு களில் உட்படாவிட்டாலும் அது சரியான பண்பல்ல என்று தெரி வித்துக்கொள்கிறேன்.

## 3. அவை உரிமைப் பிரச்னை

### திரு. எம். ஜி. இராமச்சந்திரன் "பேரவை செத்துவிட்டது" என பத்திரிகையாளரிடம் கூறியது குறித்து.

மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர் : அடுத்து, 184-வது விதியின்கீழ் அவை உரிமை மீறல் குறித்த முன்னறிவிக்கை ஒன்றை திரு. வீராசாமி அவர்கள் கொடுத்திருக்கிறார்கள். அதைப் பேரவை முன் நான் படிக்கிறேன்.





தமிழ் நாடு சட்டப்பேரவையின் 184-வது விதியின்கீழ் கீழ்க் கண்ட உரிமைப் பிரச்னையை பேரவையின் கவனத்திற்குக் கொண்டு வந்து உரிமைக் குழுவிற்கு அனுப்ப அனுமதி கோருகிறேன்.

"பேரவை உறுப்பினர் திரு. எம். ஜி. இராமச்சந்திரன் அவர்கள், 2—2—1973-ஆம் நாளன்று பேரவைக் கூட்டம் முடிவுற்றவுடன், பத்திரிகைச் செய்தியாளர்களிடம் பேசும்போது, கீழ்க்கண்டவாறு குறிப்பிட்டுள்ளதாக பத்திரிகைகளில் செய்தி வந்துள்ளது:—

"சட்டசபை செத்துவிட்டது—இனி அங்கு போக மாட்டோம் ........."சட்டசபை செத்துவிட்டது. இனி சட்டசபையே இல்லை."

மேற்கண்ட அவரது அறிக்கை பேரவையின் அடிப்படையான அமைப்பை மட்டுமல்லாமல் மக்களால் தேர்ந்தெடுக்கப்பட்ட உறுப் பினர்களையும், அவர்களது உரிமைகளையும் பாதிப்பதாகவும், அவமதிப் பதாகவும் அமைந்துள்ளது. ஆகவே, இவ்வுரிமைப் பிரச்னையை உரிமைக் குழுவிற்கு அனுப்ப வேண்டுகிறேன். இதேபோன்ற ஒரு முன்னறிவிக்கையை திரு. சுருளிவேல் அவர்களும் கொடுத்திருக் கிறார்கள். திரு. வீராசாமி அவர்கள் எப்படி இது அவை உரிமை மீறலின்கீழ் வரும் என்பதை விளக்கும்படி கேட்டுக்கொள்கிறேன்.

திரு. நா. வீராசாமி : தலைவர் அவர்களே, நான் கொடுத்திருக்கக் கூடிய உரிமைப் பிரச்சினை மீது சில கருத்துக்களைக் கூற விரும்பு கிறேன். ஜனநாயக நாடுகளில் சட்டமன்றங்கள் மக்களுடைய உரிமைகளைப் பாதுகாக்கவே அமைக்கப்பட்டுள்ளன. எனவே, சட்ட மன்றம் செத்துவிட்டது என்ற ஒரு வார்த்தையை உலக வரலாற்றி லேயே இப்போதுதான் முதன்முதலாகக் கேட்கிறோம். ஐயாயிரம் ஆண்டுகளுக்கு முன்னால் வாழ்ந்த மனிதன் காட்டுமிராண்டியாக இருந்தவன், துணி அணிவதற்குக் கூடத் தெரியாமல் இருந்தவன், உண்பதுபற்றிக்கூட ஒழுங்காகக் கற்றுக்கொள்ளாமல் இருந்தவன், தனக்கு ஒரு முறையை வகுத்துக்கொள்ள வேண்டும் என்று தன்னுடைய பகுத்தறிவைப் பயன்படுத்தி கொஞ்சம் கொஞ்சமாக முன்னேறி தன்னுடைய வளர்ச்சியை எப்படி எப்படி அமைத்துக் கொள்ளலாம் என்பதைப் பற்றிச் சிந்திக்க முயன்றவன் ஆட்சிமுறை களை எப்படி எப்படியோ அமைத்துக் கொண்டான். அதற்கு அடுத்த படியாகத்தான் இந்த உலகத்தில் நாடுகளும், அதற்கு என்று எல்லை களும் அந்த எல்லைக்குட்பட்டவர்கள் மன்னர்களாகவும் வந்தார்கள்.

[1973 பிப்ரவரி 6

<u>மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர் :</u> எனக்கு ரொம்பவும் பயமாக இருக்கிறது. ரொம்பப் பேர்கள் இதைப் பள்ளிக்கூடமாக நினைத்து பாடம் போதிக்க ஆரம்பித்துவிட்டார்கள்.

<u>திரு. நா. வீராசாமி :</u> அப்படிப்பட்ட மன்னர்களைக்கூட அவர்களுடைய ஆட்சி பிடிக்காத காரணத்தால் ஜனநாயக அமைப்புகளை உருவாக்கிக் கொள்ளவேண்டுமென்று எண்ணியவர்கள் ஆட்சி முறை ஒழுங்காக இருப்பதற்காக, மக்கள் ஆட்சியில் நேரடிப் பங்கு ஏற்கவும் மக்கள் எல்லோரும் நேரடிப் பங்கு ஏற்க முடியாத காரணத்தால் மக்கள் தங்கள், தங்கள் பிரதிநிதிகளைத் தேர்ந்தெடுத்து மேலும் மக்களின் நலன்கள், உரிமைகள் இவற்றைப் பாதுகாத்துக் கொள்ள முயன்றார்கள்.

THIRUMATHI T. N. ANANDANAYAKI : The hon. Member is speaking from the year 1,600 onwords.

<u>மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர் :</u> 1600-ல் இருந்து 1973-க்கு வருவதற்கு ரொம்ப நேரமாகும். நேரடியாக இன்றைய தினத்திற்கு வாருங்கள், பெப்ரவரி மாதத்திற்கு வாருங்கள்.

<u>திரு. நா. வீராசாமி :</u> 1341-ல் மேல் சபையையும், கீழ் சபையையும் அமைத்தார்கள். 1377-ல் அப்படி அமைக்கிற மன்றங்களுக்கு ஒரு சபாநாயகர் இருப்பார்கள் என்று சபாநாயகர் தேர்ந்தெடுக்கப் பட்டார்.

THIRUMATHI T. N. ANANDANAYAKI : Though the Chair has stated that the hon. Member should not speak from the year 1,600, he is still speaking on that.

<u>திரு. நா. வீராசாமி :</u> இந்த மன்றம் எப்படி வந்தது என்று சொல்ல வேண்டாமா ? எதற்காக இத்தகைய மன்றங்கள் உருவாக்கப் பட்டன என்று சொல்ல வேண்டாமா ? 700 ஆண்டுகளுக்கு முன்னால் இந்த மன்றத்தை உருவாக்கியவர் யார் ? மக்கள் எந்த எண்ணத்தின் அடிப்படையில் அதை உருவாக்கினார்கள் ? மன்னனின் கொடுங் கோன்மையைத் தாங்க முடியாமல் இப்படிப்பட்ட மன்றத்தை உருவாக்கிய பின்னர் அதில் மன்னனேகூட தலையிட்டால் அந்த மன்னனைக்கூட தூக்கில் போட்டிருக்கிறார்கள். ஆனால் நம் நாட்டி



லுள்ள நாடோடி மன்னர்கள் இந்த மன்றம் செத்துவிட்டது என்று சொன்னால் எப்படி அதைத் தாங்கிக் கொள்வது என்பதைத்தான் சிந்தித்துப் பார்க்க வேண்டுமென்று கேட்டுக்கொள்கிறேன். இந்த மன்றம் நாட்டு மக்களுடைய உரிமைகளைப் பாதுகாக்க, அவர்களுடைய எண்ணங்களை நிறைவேற்ற, ஜனநாயக அமைப்புகளைப் பாதுகாப்பதற்காகத்தான் இத்தகைய மன்றங்கள் செயல்பட்டு வருகின்றன. அப்படிச் செயல்படுவதின் மூலம் இந்தியத் துணைக் கண்டத்தில் வேறு எங்குமே கேட்டிராத முறையில் இன்றைய தினம் சட்டமன்றம் செத்துவிட்டது என்று மாண்புமிகு உறுப்பினர் திரு. எம். ஜி. இராமச்சந்திரன் அவர்கள் பெப்ரவரி 2-ம் தேதி.........

THIRUMATHI T. N. ANANDANAYAKI : Sir, on a point of order. Rule 188 says—

'When a member has with the consent of the Speaker raised a matter of privilege, the Speaker shall read the matter to the House and decide whether a *prima facie* case of breach of privilege has been made out or not therein.'

Where is the power for the hon. Member to make a speech right from 1600......

<u>திரு. நா. வீராசாமி :</u> மாண்புமிகு உறுப்பினர் சரியாகக் கவனிக்கவில்லை என்று நினைக்கிறேன். தாங்கள் அனுமதித்த பிறகுதான் நான் பேசுகிறேன்.

<u>மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர் :</u> அனுமதித்தால்கூட இவ்வளவு பின்னால் போவீர்கள் என்று நான் எதிர்பார்க்கவில்லை. என் கைக்கு எட்டாத தூரத்திற்குப் போய் விட்டீர்கள்

<u>திரு. நா. வீராசாமி :</u> சுருக்கமாகச் சொல்கிறேன். யாராவது இந்த மன்றத்திலுள்ள ஒரு தனிப்பட்ட உறுப்பினரைக் குறை கூறினாலோ அல்லது ஒரு உறுப்பினர் மீது குற்றம் சுமத்தினாலோ அவை எல்லாம் உரிமை மீறிய செயல்கள் என்று இந்த மன்றத்தில் பல முறை தீர்ப்புகள் வழங்கப்பட்டுள்ளன. அப்படியிருக்கும்போது இந்த மன்றத்திலுள்ள அத்தனை பேர்களையும் ஒன்றாகச் சேர்த்து செத்துவிட்டது என்று சொல்லும்போது அது அவர் தன்னையும் உள்ளடக்கிச் சொல்லியிருக்கிறார்கள் என்பதை அவர்கள் மறந்து விட்டார்கள் என்று நினைக்கிறேன். ஜனநாயக அடிப்படையில் தேர்ந்

தெடுக்கப்பட்ட உறுப்பினர்களைக் கொண்டு இந்த மன்றங்கள் ஜனநாயக முறைகளை மீறக் கூடாது என்பதற்காக நாம் விதிமுறைகளில் தெளிவாகச் சொல்லியிருக்கிறோம். இன்று மேஸ் பார்லிமெண்டரி ப்ராக்டீஸைத்தான் நாம் பின்பற்றி வருகிறோம். அதில் 140–141-ம் பக்கங்களில் தெளிவாகச் சொல்லியிருக்கிறார்கள்.

'In 1701 the House of Commons resolved that to print or publish any books or libels reflecting on the proceedings of the House is a high violation of the rights and privileges of the House and indignites offered to their House by words spoken or writings published reflecting on its character or proceedings have been constantly punished by both the Lords and the Commons upon the principle that such acts tend to obstruct the Houses in the performance of their functions by diminishing the respect due to them.

Reflections upon Members, the particular individuals not being named or otherwise indicated are equivalent to reflections on the House......'

என்று இங்கிலாந்து நாட்டு பாராளுமன்ற பாரம்பரியத்தைப் பற்றி அவர்கள் தெளிவாகச் சொல்லியிருக்கிறார்கள். எனவே, நான் இந்த மன்றத்தில் அவைத் தலைவரவர்களே, உங்களுக்குச் சொல்லிக் கொள்ள கடமைப்பட்டிருக்கிறேன், அந்தப் பேச்சு, அவர் சொன்ன ஸ்டேட்மெண்ட் இந்த அவையினுடைய உரிமையை மீறியிருக்கிறது. ஆகவே இதை—இந்த அவை உரிமை மீறல் பிரச்சினையை—அவையுரிமைக் குழுவிற்கு அனுப்பி வைக்கவேண்டுமென்று நான் முன்மொழிகிறேன்.

திரு. ஏ. எம். இராஜா : அதை நான் வழிமொழிகிறேன்.

DR. H. V. HANDE : I strongly oppose the motion brought forward by my distinguished friend for the following reasons :

I think the Assembly should cultivate the habit of not being over-sensitive to any remark made by an hon. Member outside the House or by anybody else outside the House. It is not necessary for the House to take up every point and discuss it here and say that privileges of this House had been encroached upon. Such sort of over-sensitiveness will definitely run counter



to the democratic traditions we want to build. The hon. Member Thiru N. Veerasami says that there is democratic tradition in this House and in this country and he went back to six or seven centuries before to illustrate his point. Let us take it for granted that we enjoy democratic rights in this House. So also there is the democratic right for a person to comment on the very demo cratic institution. Are we going to control a person who says that he has no faith in democracy. Just as we have faith in democracy, each person must be given the right to express his opinion with regard to the methods to be pursued in democracy or autocracy. Every person must have the right to express his or her view whether it is democracy or autocracy, whether we have multi-party system or one-party system. In this country we have multi-party system and whether democracy is useful for the country or not, a person has got the right to say what he feels regarding that. Are we going to stop that right?

"சட்டமன்றம் செத்து விட்டது" என்று உறுப்பினர் சொல்லக் கூடிய அடிப்படை உரிமையைத் தடுக்க நமக்கு என்ன உரிமை இருக் கிறது என்பதை ஆராய வேண்டும். ஒரு உறுப்பினர் என்ன வேண்டுமானாலும் சொல்லலாம். அப்படிச் சொன்னதற்காக நாம் ஆத்திரப்பட்டு இந்த மன்றத்தில் அதைப் பிரச்னையாக்கிப் பேச வேண்டிய தேவையில்லை என்பது என்னுடைய அடிப்படை வாதம். இப்படிப்பட்ட ஒரு வாதத்தைக் கிளப்பி தான் சட்டமன்றம் செத்து விட்டதா, உயிரோடு இருக்கிறதா என்பதை நாம் அறிவிக்க வேண்டு மென்ற நிலைமையில் இல்லை என்பதையும் நாம் புரிந்து கொள்ள வேண்டும். ஆகவே, இந்தப் பிரச்னையை உரிமைக் குழுவிற்கு அனுப்பத் தேவையில்லை என்று நான் சொல்லிக் கொள்கிறேன்.

ஆந்திர மாநிலத்தில் பார்த்தோம். பல சட்டமன்ற உறுப்பினர் கள் ராஜினமா செய்து விட்டு, சட்டமன்றத்தின்மீது எங்களுக்கு நம்பிக்கையில்லை என்று தெரிவித்ததைப் பார்த்தோம். ஒரு மனிதனுக்கு சட்டமன்றத்திலே நம்பிக்கையில்லை, உரிமையில்லை என்று சொல்வதற்கு உரிமையிருக்கிறது. ஒரு பத்திரிகையில் சட்டமன்றத்தில் எந்த விதமான உரிமையும் இல்லை, சட்டமன்றம் சரியாக இல்லை என்று சொல்லக்கூடிய உரிமை இருக்கிறது. அந்த உரிமையை நாம் தடுத்தால் என்ன ஆகும்? அது ஏகாதிபத்தியமாகத்தான் இருக்கும். ஜனநாயகத்தில் நம்பிக்கை இருக்கிற மாதிரி இருக்காது. மற்றவர்கள்

நம்மைப் பற்றி எதுவுமே சொல்லக் கூடாது, என்று சொன்னால் நம்மைப் பற்றி நாம் எப்படி புரிந்துகொள்ள முடியும்? நாம் எப்படி செயலாற்றுகிறோம் என்று ஒருவருக்குச் சொல்ல உரிமை இருக்கிறது. இல்லையென்றால் நாம் ஜனநாயகத்தில் நம்பிக்கை வைத்திருக்கிறோம் என்று எப்படி சொல்வது?

மாண்புமிகு டாக்டர் இரா. நெடுஞ்செழியன் : மாண்புமிகு டாக்டர் ஹாண்டே அவர்கள் "இந்த அவை செத்து விட்டது" என்று சொன்ன கருத்தை ஏற்றுக்கொள்கிறாரா? இந்த அவையைப் பற்றி விமர்சிக்க உரிமை இருக்கிறது. ஜனநாயகத்தில் அந்த உரிமை வழங்கப்பட்டிருக்கிறது. அதை பற்றிச் சொல்லவில்லை. "இந்த அவை செத்து விட்டது" என்று ஒருவர் சொல்லலாமா? அதை ஏற்றுக்கொள்கிறாரா?

டாக்டர் எச். வி. ஹாண்டே : இங்கே நாம் சண்டைப்போட்டுக் கொண்டிருக்கிற போது, நான் அவை செத்து விட்டது என்று எப்படி சொல்லமுடியும்?

I do not agree with what he has said. When I am talking and arguing important things, how can it be said that the House is dead? (laughter). I have never said that Assembly is dead. I am only talking now on the privilege issue.

மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர் : உங்கள் நன்மைக்காகவே சொல்கிறேன். என்ன வேண்டுமானாலும் பேசுவது என்று சொன்னால், நம் பேரவையை நாமே அவமதிப்பது போலாகும்.

டாக்டர் எச். வி. ஹாண்டே : மற்றவர்களுக்குச் சொல்வதற்கு உரிமையிருக்கிறது. நமக்கு அதை மறுக்க உரிமை இருக்கிறது.

Like Waltair I oppose every word of what you say and continue to maintain that we have the right to say that.

அந்தமாதிரி உரிமையிருக்க வேண்டுமென்று கேட்டுக்கொள்கிறேன்.

Therefore I feel that there is no *prima facie* case for referring this to the Committee of Privileges, even according to Rule 192.



திரு. நா. வீராசாமி : பேரவை செத்து விட்டது என்று எப்படி ஒரு உறுப்பினர் சொல்ல முடியும்?

Dr. H. V. Hande : I have made my position clear. Under Rule 189 the Deputy Speaker first must hold that there is a *prima facie* case. Then he may allow a Member to move a motion in the House that the matter be referred to the Committee of privileges. Under Rule 192, without this motion, he may *suo motu* refer it to the Committee of Privileges. Even then, before referring the matter to the Privileges Committee under Rule 192, the Deputy Speaker must satisfy himself that there is a *prima facie* case. He must decide whether there is a *prima facie* case. That is the point. Even then it should be by way of resolution. At the same time I maintain that it is the right of any member to talk about any Assembly in this world as he or she likes. That is the fundamental right of Speach of any Member. Then only it is democracy. In the interest of democracy, such freedom should not be curtailed. So I strongly oppose the resolution brought forward by Thiru N. Veerasami.

(The hon. Member Thiru V. Krishnamoorthi rose.)

(The hon. Member Thiru R. Ponnappa Nadar also rose.)

Mr. Deputy Speaker : I think the leaders of parties must talk first. But since Thiru Krishnamoorthi wants to speak first, he may now speak and then Thiru R. Ponnappa Nadar may speak afterwards.

திரு. வி. கிருஷ்ணமூர்த்தி : தலைவரவர்களே, டாக்டர் ஹாண்டே அவர்களுடைய விளக்கத்தின் மூலமாக மன்றங்களை விமர்சிக்கின்ற முறையில் ஒரு பயங்கரமான நிலையை ஏற்படுத்தியிருக்கிறார்கள். நாம் இவ்வளவு சென்சிடிவ்வாக இருக்கக்கூடாது என்று சொன்னார்கள். நம்முடைய சட்டமன்றத்தைப் பற்றி சில எல்லோ ஜர்னல்கள், சில அருவருக்கத்தக்க மனிதர்களுடைய பத்திரிகைகள் எழுதிவிட்டால், அதையெல்லாம் எடுத்துக் கொண்டு வந்து இந்த அவையினுடைய உரிமை பாதிக்கப்பட்டிருக்கிறது என்று சொல்ல வேண்டிய அவசியம் இல்லைதான். ஆனால் இந்த மன்றத்தில் ஒரு கட்சியின் தலைவராக இருக்கக்கூடியவர்—தெருவில் இருக்கும் யாரோ ஒருவர் சொல்லியிருந்தால் அதைப்பற்றி விமர்சிக்கத் தேவையில்லை. அதை ஒத்துக் கொள்ளலாம்—இந்த மன்றத்தின் மதிப்பைக் காப்பாற்றத் தவறி

யிருக்கிறார் என்பதோடு மட்டுமல்லாமல், இந்த மன்றத்தையே இழி படுத்துகிற மாதிரி பேசியிருக்கிறார். அதை எப்படி சாதாரணமா எடுத்துக்கொள்ள முடியும்? டாக்டர் ஹாண்டே அவர்கள் எம். ஜி. ஆர். அவர்களைக் காப்பாற்ற வேண்டுமென்பதற்காக அந்த அளவுக்குச் சொன்னால், அது இன்னும் கொஞ்சம் அவர்களை என்க ரேஜ் செய்வது போலாகும். அப்படிச் செய்ய வேண்டாம் என்று கேட்டுக்கொள்கிறேன்.

டாக்டர் எச். வி. ஹாண்டே : என்கரேஜ் செய்ய வேண்டுமென்பதற்காகப் பேசவில்லை. எம்.ஜி.ஆரைக் காப்பாற்ற வேண்டுமென்பதற்காகவும் பேசவில்லை. ஜனநாயகத்தைக் காப்பாற்ற வேண்டுமென்பதற்காகப் பேசினேன்.

திரு. வி. கிருஷ்ணமூர்த்தி : இந்த மன்றத்தில் ஏற்கனவே ஒரு முடிவு செய்யப்பட்டிருக்கிறது. "கல்கி" பத்திரிகையில் இந்த மன்றத்தை "கிழட்டு சபை" என்று சொன்ன காரணத்திற்காக, அதை விவாதத்திற்கு எடுத்துக்கொண்டு, அதை "பிரிவிலேஜ் கமிட்டிக்கு" அனுப்பியிருக்கிறார்கள். "கிழட்டு சபை" என்று எழுதியதற்கே அந்த நிலைமையென்றால், தமிழகத்தில் ஒரு கட்சியின் தலைவராக இருக்கக்கூடியவரும், இந்த சட்டமன்றத்தில் உறுப்பினராக இருக்கக் கூடியவரும் இந்தமாதிரி சொன்னால், அது தமிழகத்திலுள்ள வாக்காளப் பெருமக்களை அவமதிப்பது போலாகும். இந்த மன்றத்தை அவமதிப்பது போலாகும். இந்த மன்றம் செயல்படுகிற முறையை எதிர்ப்பது போலாகும்.

It is a gross breech of privilege.

இதைத் தங்களுடைய மேலான கவனத்திற்குக் கொண்டு வருகிறேன் இதை உரிமைக் குழுவிற்கு அனுப்புவது சாலச் சிறந்தது என்று தெரிவித்துக்கொள்கிறேன்.

மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர் : பேசுகின்ற உறுப்பினர்கள் சுருக்கமாக என்னென்ன பாயிண்ட்கள் என்று சொன்னால் நல்லது.

THIRU R. PONNAPPA NADAR : I would like to point one or two things. In the reported speech Thiru M. G. Ra chandran is supposed to have said

"சட்ட சபை செத்து விட்டது"



But I think we are fully alive and that is the reason why we are conducting such a vigorous discussion on the floor of the House. But are we to take action against such a remark, is the next point that I would canvass. It may be argued that it amounts to a reflection. Even if it is a reflection, I think it is a trifling matter on which this House need not be sensitive enough to take any action. That is the point which I am going to stress. Normally law does not take note of trifle things.

I think in a democratic State the right of freedom of speech is not very much curtailed and reasonable restriction can be there. But it is better that we ignore the alleged statement which has been purported to have been made by the hon. Member. On similar occasions when such statements had been published in the press, I think this House ignored all those things. As he is the founder of a new party, this House, with all magnanimity, can forget and forgive and no action need be taken on the reported speech which he has made. That is the only point which I wanted to make.

திரு. கே. டி. கே. தங்கமணி : நான் ரொம்பவும் சுருக்கமாகச் சொல்லலாம் என்று நினைக்கிறேன். ஒரு சபையைப் பற்றி சில கருத்துப்பட, சில பொருள்பட சொல்லியதுபற்றி எடுக்கப்பட்ட நடவடிக்கைகள் பற்றி பல சம்பவங்கள் இருக்கின்றன. 1970-ஆம் ஆண்டு தேர்தலுக்குப் பிறகு மேற்கு வங்காளத்தில் இரண்டு, மூன்று கட்சிகள் அந்தச் சட்டசபையை பகிஷ்கரித்து, அந்தச் சட்டசபை பிரயோசனம் கிடையாது என்று பகிரங்கமாக அறிக்கை விடுத்திருக்கிறார்கள். இதற்கு முன்னால் கவர்னர் உரையைகூட கேட்க மாட்டோம், ஏனென்று சொன்னால் அரசியல் சட்டத்தை நாங்கள் ஏற்றுக்கொள்ளவில்லை, கவர்னர் அமைப்பு ஏற்றுக்கொள்ளக்கூடியது அல்ல என்ற முறையில் கட்சி கூட்டத்தை பகிஷ்கரித்த நிலையும் இருக்கிறது. சமீபத்தில் ஆந்திராவைப் பொறுத்த வரையில் "சட்ட சபைக்கு நாங்கள் தேர்ந்தெடுக்கப்பட்ட முறையே சரியல்ல, வேறு முறையில் தேர்ந்தெடுக்கப்பட வேண்டும்" என்று சொல்லி, சட்ட சபையிலிருந்து ராஜிநாமா செய்து பகிரங்கமாக அறிக்கை விடக் கூடிய நிலையையும் பார்த்திருக்கிறோம். "அரசியல் சட்டம் எங்களுக்குப் பிடிக்கவில்லை" என்று அரசியல் சட்டத்திற்கே நெருப்பு வைத்த சம்பவங்கள் நம் நாட்டைப் பொறுத்த வரையில் ஏற்பட்டிருக்

கின்றன. ஆகவே, ஜனநாயகத்தில் வெளிநடப்பு செய்வது என்பது இப்பொழுது பல தடவை வந்துகொண்டிருக்கிறது. திரு. அனந்த சயனம் ஐயங்கார் அவர்கள் பலதடவை இதைப்பற்றி சொல்லியிருக்கிறார்கள். வெளிநடப்பு செய்வதற்கு முன்னால் தலைவர்கள் ஏன் வெளிநடப்பு செய்கிறார்கள் என்பதற்கான சில காரணங்களைச் சொல்கிறார்கள். அங்கே போய் உட்கார்ந்து அங்கே வேறு எந்தக் காரியத்தையும் எடுத்துப் பேசுவதற்கு முடியவில்லை என்று அழுத்தமாகப் பேசுவதையே அவர்களுக்குத் தெரிந்த முறையில் சொல்லியிருக்கிறார்கள். வெளியிலே இருந்துகொண்டு சட்டசபையை பாய்காட் செய்வதற்கான காரணங்களைச் சொல்லுகின்ற முறையில் அண்ணா தி.மு.க. தலைவர் அவர்கள் இந்த அறிக்கையை விடுத்திருக்கிறார்கள் என்று கூறிக்கொண்டு, நான் அமர்கிறேன்.

<u>மாண்புமிகு டாக்டர் மு. கருணாநிதி</u> : பேரவைத் துணைத் தலைவர் அவர்களே, மாண்புமிகு உறுப்பினர் திரு. வீராசாமி அவர்கள், திரு. எம். ஜி. இராமச்சந்திரன் அவர்கள் "இந்த அவை செத்து விட்டது" என்று பத்திரிகைகளுக்கு அளித்த அறிக்கையை ஒட்டி உரிமைப் பிரச்னை ஒன்றினை இங்கே கொண்டு வந்து, மாண்புமிகு எதிர்க்கட்சித் தலைவர்கள், மாண்புமிகு உறுப்பினர்கள் தங்களுடைய கருத்துக்களை இதிலே எடுத்துக் கூறியிருக்கிறார்கள். நம்முடைய டாக்டர் ஹாண்டே அவர்கள் "இந்தத் தீர்மானத்தை முழுமையாக எதிர்க்கின்றேன்" என்று குறிப்பிட்டார்கள். திரு. கே. டி. கே. தங்கமணி அவர்கள், அவர் அவருக்குத் தெரிந்த வார்த்தையை பயன்படுத்திவிட்டார் என்று குறிப்பிட்டு, அவருக்கு இப்படித்தான் சொல்லத் தெரியும் என்ற நிலையை இங்கே புலப்படுத்தியிருக்கிறார்கள். அதிலே உரிமைப் பிரச்னை இருக்கிறதா, இல்லையா என்கின்ற ஆராய்ச்சியில் நம்முடைய பொன்னப்ப நாடார் அவர்கள் சொல்லாவிட்டாலும், "மறப்போம் மன்னிப்போம்" என்று அவர்கள் கூறியதிலிருந்து, மன்னிப்பது என்பது குற்றம் செய்தவர்களைத்தான் மன்னிக்க முடியும். ஆகவே "மன்னிப்போம்" என்ற வார்த்தையை பயன்படுத்தியிருக்கிறார்கள். குற்றம் செய்தார், எனவேதான் மன்னிப்போம் என்று அவர்கள் கூறியதிலிருந்து, உரிமைப் பிரச்னை இருக்கிறது என்பதை அவர்கள் ஒத்துக்கொண்டிருக்கிறார்கள்.

இந்த அவை செத்துவிட்டதா, இல்லையா என்பதை நாடு நன்றாக உணர்ந்திருக்கிறது. டாக்டர் ஹாண்டே கூட அழகாகச் சொன்னார்கள். செத்து இருந்தால், எப்படிச் சண்டை போட முடியும் என்று



அவர்கள் கேட்டார்கள். திரு. எம். ஜி. இராமச்சந்திரன் அவர்களுக்கு டாக்டர் ஹாண்டே அவர்களே சரியான மறுப்பை இப்பொழுது அவையிலே கொடுத்திருக்கிறார்கள் என்று தான் நாம் எடுத்துக் கொள்ளவேண்டும். இது உயிரோடு இருக்கிறது. அது மாத்திர மல்ல. அவர்களே கூட நேற்று சில பேர்களை அனுப்பி உயிரோடு இருக்கிறதா, இல்லையா என்று பார்த்துவரச் சொல்லி, உயிரோடு இருக்கிறது என்ற செய்தியைத் தெரிந்துக்கொண்டிருக்கிறார்கள். ஆக, நேற்று ஒரு நாளைக்குக்கூட எம்.ஜி.ஆர். கட்சியினர்கள்—அண்ணா தி.மு.க.-வினர்கள் இந்த அவைக்கு வந்ததன் மூலம் இந்த சட்டசபை சாகவில்லை என்பதை அவர்களும் ஒரு வழியிலே ஒத்துக்கொண்டிருக்கிறார்கள். சில பேர் தங்களுக்கு ஏதாவது வந்துவிட்டால் அது உலகத்துக்கே வந்துவிட்டதாக கருதுகிற பரந்த நோக்கத்தைக் கொண்டிருக்கிறார்கள். அறிஞர் அண்ணா அவர்கள் ஒரு கதை சொல்வார்கள். ஒரு நரி நட்டாற்றில் அடித்துக்கொண்டு போகப் படும்பொழுது சத்தம் போட்டதாம். "உலகம் போயிற்று, உலகம் போயிற்று" என்று கத்தியதாம், உலகம் போயிற்று, உலகம் போயிற்று என்று கத்துகிறதே என்று கரையில் நின்றவன் அவசரமாக ஓடி அந்த நரியைக் காப்பாற்றி கரைக்குக் கொண்டு வந்து "உலகம் போயிற்று, உலகம் போயிற்று" என்று சொன்னாயே, ஏன்? என்று கேட்டானாம். நரி சொன்னதாம். "நான் ஆற்றோடு போய் செத்துப்போயிருந்தால், என்னைப் பொறுத்தவரையில் உலகம் போயிருக்கும் அல்லவா" என்று நரி சொன்னதாம். அதைப்போலவே சில பேர் தங்கள் தங்களைப் பொறுத்தவரையில் ஜனநாயகம் செத்துப் போய்விட்டது என்று, மற்றவர்களைப் பார்த்து, ஒரு அவையைப் பார்த்து "செத்துப்போய் விட்டது" என்று கூறுகிறார்கள்.

ஆகவே, இங்கே பேசியவர்களெல்லாம் எடுத்துக் காட்டியதில் ஒன்றை நான் ஒத்துக்கொள்கிறேன். இந்த அவையைப் பற்றி விமர்சிக்கின்ற உரிமை உறுப்பினர்களுக்கு இருக்கிறது. ஆனால் எந்த வகையில் விமர்சிக்க வேண்டும் என்பதை யாரும் மறந்துவிடக் கூடாது. மாண்புமிகு அவை முன்னவர் இங்கே கேட்டது போல, இந்த அவையே செத்துவிட்டது என்பதை நாம் எல்லோரும் ஏற்றுக் கொள்கிறோமா, நீங்கள் ஏற்றுக்கொள்கிறீர்களா என்று அவர்கள் இங்கே கேட்டார்கள். அதை யாரும் ஏற்றுக்கொள்ள தயாராக இல்லை.

[டாக்டர் மு. கருணாநிதி] [1973 பிப்ரவரி 6

திரு. வீராசாமி அவர்கள் கொண்டு வந்தது உரிமைப் பிரச்னைக்கு உரியது தான் என்பதை யாரும் மறுப்பதற்கு இல்லை. இருந்தாலும், நண்பர் எம். ஜி. இராமச்சந்திரன் அவர்கள் நடித்த ஒரு படத்தில்—நானே அதற்கு கதை எழுதியிருக்கிறேன்—"செத்து பிழைத்தவன்டா" என்று பாட்டு பாடியிருக்கிறார். இந்த அவையைப் பொறுத்த வரையில் நேற்று வரையிலே அவர்கள் செத்துப் பிழைத்திருக்கிறார்கள். பிழைத்தவர்கள் தொடர்ந்து வாழ்வார்களா, மறுபடியும் செத்து விட்டது என்று சொல்லி சபைக்கு வராமல் இருப்பார்களா என்று நமக்குப் புரியாது. இருப்பினும், திரு. பொன்னப்ப நாடார் அவர்கள் எடுத்துக் கூறியிருப்பது போல,—"ஃபர்கெட் அண்டு ஃபர்கிவ்" என்று சொன்னார்கள். "மறப்போம், மன்னிப்போம்" என்று சொன்னார்கள். அந்த வார்த்தைகளைக் கேட்ட நேரத்தில் என்னுடைய தலைவர் அண்ணா அவர்களின் ஞாபகம் தான் எனக்கு வருகிறது. பல நேரங்களில் அண்ணா அவர்களின் பயன்படுத்துகிற அந்தச் சொல் "மறப்போம், மன்னிப்போம்" என்பதாகும். குற்றம் உடையதாக இருந்தாலும், உரிமைப் பிரச்னைக்கு உரியதாக இருந்தாலும், இது உரிமைப் பிரச்னைக்கு உரியது அல்ல என்று டாக்டர் ஹாண்டே அவர்கள் வாதாடிய முறையில் வாதாடாமல், உரிமைப் பிரச்னைக்கு உரியது என்பதை ஒத்துக்கொண்டு, மறப்போம், மன்னிப்போம் என்ற அண்ணா அவர்களின் வாசகத்திற்கேற்ப, இந்த ஒரு முறை மறந்து, மன்னித்து உரிமைப் பிரச்னைக் குழுவிற்கு இதை அனுப்ப வேண்டாம் என்கின்ற கருத்தை மாண்புமிகு துணைத் தலைவர் அவர்களே, தங்களுக்குத் தெரிவித்துக்கொள்கிறேன். வணக்கம்.

திருமதி த. ந. அனந்தநாயகி : மிஸ்டர் டெப்யூடி ஸ்பீக்கர், சார், இந்தப் பிரச்னை உரிமைப் பிரச்னைக்கு உரியதா என்பதைப்பற்றி இங்கே பல கட்சியினர்கள் வாதாடிக்கொண்டிருக்கிறோம். ஒரு சட்ட சபை அங்கத்தினர் சட்டசபை செத்துவிட்டது என்று சொன்னது உரிமைப் பிரச்னை என்று கூறப்படுகிறது. சாதாரணமாக ஜனநாயகத்தில், எனக்கு முன்பு பேசியவர்கள் சொன்ன மாதிரி, இப்படிப் பட்ட வார்த்தைகளையெல்லாம் நாம் அதிகமாக பெரிதுபடுத்திக் கொண்டு இருக்க முடியாது. பத்திரிகைகளும், மற்றவைகளும் சரி, விளம்பரத்திற்காக ஜனநாயக இன்ஸ்டிடியூஷன் என்ற முறையில் வெளிவந்து கொண்டிருக்கின்றன. அங்கு, இங்கு இருக்கிற ஒன்று, இரண்டு வார்த்தைகள் தவறிப்போனால், அதைப் பெரிது படுத்திக் கொண்டு, அதற்கெல்லாம் உரிமைப் பிரச்னை என்று கொண்டுவந்து



1973 பிப்ரவரி 6]

கொண்டிருந்தால், கட்டாயம் ஜனநாயகத்தை நாம் எந்த அளவுக்கு விரும்புகிறோமோ அந்த அளவுக்கு அது இயங்க முடியாது. பிரிட்டிஷ் பார்லிமெண்டு பிரமுகர்கள்

"You should not be oversensitive".

என்று சொல்லியிருக்கிறார்கள். சட்டசபையில் நடப்பதெல்லாம் பத்திரிகைகளில் வெளிவர வேண்டும் என்று நாம் ஆசைப்படுகிறோம். வெளியிலே மக்களுக்குத் தெரிய வேண்டும் என்று ஆசைப்படுகிறோம். மக்கள் அதைப் படிக்கிறார்கள். ஒரு பத்திரிகை அதை ஒரு வார்த்தையில் சொல்லும், மறு பத்திரிகை வேறு வார்த்தையில் சொல்லும். ஒன்றிரண்டு வார்த்தைகளை வைத்துக்கொண்டு அதைப் பெரிது படுத்திக்கொண்டு இருக்கக் கூடாது.

செத்துவிட்டது என்று சொன்னால் நாம் எல்லோரும் செத்து விட்டோமா? சட்டசபை செத்துவிட்டதா? இல்லை. நாம் எல்லோரும் செத்துவிட்டது மாதிரியும், அதற்காக வருத்தப்படுகிற மாதிரியும் இதிலே ஒரு பிரிவிலேஜ் குவெஸ்சின் இருக்கிறது என்று கொண்டு வந்தால், ஜனநாயகத்தைப்பற்றி விமர்சிப்பதற்கு ஆள் இருக்கமாட்டார்கள், பத்திரிகைகள் இருக்காது. மக்கள் என்ன நடக்கிறது என்பதை தெரிந்துகொள்ள முடியாது. ஒரு சர்வாதிகாரி என்ற நோக்கம்தான் வளர இடம் ஏற்படும். மற்ற நோக்கம் ஏற்பட வாய்ப்பு இருக்க முடியாது. மற்றவர்கள் சொல்லியிருந்தாலும் அதைக் கொஞ்சம் காரமாக எடுத்துக்கொள்ளலாம். சட்டசபை அங்கத்தினர், அவருக்கு பொறுப்பு இருக்கிறது. மக்களால் தேர்ந்து எடுக்கப்பட்டவர் அவர். அவர் சொல்கிறார் என்றால், வேதனையின் அடிப்படையில் அந்த வார்த்தைகள் வெளிவருகின்றன. சட்டசபையின் மரியாதைக் குறைவான வார்த்தைகள் என்ற அளவில் அதைப்பற்றி யோசிக்கக் கூடாது. அவர் சட்டசபை அங்கத்தினர், உங்களுக்கும் எங்களுக்கும் பிரிவிலேஜில் எவ்வளவு ஆத்திரம் இருக்கிறதோ, எவ்வளவு அவசரமும், உரிமையும் இருக்கிறதோ அந்த உரிமை அந்த அங்கத்தினருக்கும் உண்டு. அவர் சட்டசபையின் ஒரு அங்கத்தினர். ஒரு சட்டசபை அங்கத்தினராக இருந்துகொண்டு சட்டசபை செத்து விட்டது என்று சொன்னால், 2-ம் தேதி நடந்த நிகழ்ச்சியின் காரணமாக ஜனநாயகம் செத்துவிட்டது என்று சொல்வதாக வைத்துக்கொள்ள வேண்டுமே ஒழிய, சட்டசபை செத்துவிட்டது என்று சொன்னால், சட்டசபைக்கு அவமரியாதை ஏற்படுத்தும் வார்த்தைகளாகவோ, சட்டசபையின் மதிப்பையோ,

மரியாதையையோ குறைக்கக்கூடிய வார்த்தைகளாகவோ நாம் எடுத்துக்கொள்ளக் கூடாது. இதையெல்லாம் குவெஸ்சின் ஆஃப் பிரிவிலேஜ் என்று சொன்னால் ஜனநாயகமே இயங்காது.

மு. ப. 11-00 இந்த மாதிரியாக எதிர்க் கட்சிக்காரர்கள் சொல்வதற்கு எல்லாம் பிரிவிலேஜ் மோஷன் கொண்டுவந்தால், எதிர்க் கட்சிக்காரர்கள் இங்கே எதையும் சொல்ல முடியாது; அவர்களுக்கு இங்கே வேலையும் இருக்க முடியாது. "செத்துப் போய்விட்டது" என்பது தரக் குறைவான வார்த்தை அல்ல; வருத்தப்படக்கூடிய ஒன்றும் அல்ல. ஆகவே, இதிலே பிரிவிலேஜ் மோஷனுக்கு ஒன்றும் இடம் இல்லை.

நாம் எல்லாவற்றிற்கும் ஒரு நல்ல வழிகாட்டியாக இருந்து வருகிறோம். மேலும் சென்னை சட்டசபை அங்கத்தினர்கள் பரந்த மனப்பான்மையுடன் நடந்துகொள்ளக் கூடியவர்கள்; சாதாரண விஷயங்களுக்கு எல்லாம் நடவடிக்கை எடுக்க மாட்டார்கள்; பரந்த எண்ணத்துடன் அதைப் புரிந்து கொள்வார்கள் என்ற எண்ணத்தை மற்ற மாநிலத்துக்காரர்கள் மனதிலே ஏற்படுத்த வேண்டும். எம். ஜி. ஆர். அவர்கள் சொன்னதில் பிரிவிலேஜ் மோஷன் கொண்டு வரக்கூடிய அளவுக்கு ஒன்றும் இல்லை. ஆகவே, அதை "மறப்போம் மன்னிப்போம்" என்று சொல்வதில் பொருளில்லை என்று தெரிவித்துக் கொள்கிறேன்.

(திரு. லத்தீப் எழுந்தார்)

மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர் : சுருக்கமாகப் பேசி விடுங்கள்.

திரு. எம். ஏ. லத்தீப் : பேரவைத் துணைத் தலைவரவர்களே, மாண்புமிகு உறுப்பினர் வீராசாமி அவர்கள் கொண்டுவந்துள்ள உரிமைப் பிரச்னைபற்றி பல உறுப்பினர்கள் தங்கள் கருத்துக்களைத் தெரிவித்தார்கள். நானும் என்னுடைய கருத்துக்களைத் தெரிவித்துக் கொள்ள விரும்புகிறேன்.

நம்முடைய மாண்புமிகு முதலமைச்சரவர்கள் தன்னுடைய பெருந் தன்மையினால் சில கருத்துக்களைச் சொல்லியிருக்கிறார்கள். என்னைப் பொறுத்த வரையில், நம்முடைய அனந்தநாயகி அம்மையார் அவர்கள் "செத்துப் போய்விட்டது" என்று சொன்னதில் தவறு இல்லை; உரிமையை மீறக்கூடியது ஒன்றும் இல்லை என்று சொன்னார்





கள். நான் அப்படியே அவர்களுடைய கருத்தை ஏற்றுக்கொள்வதற் கில்லை. ஏனென்றால் எம்.ஜி.ஆர். அவர்கள் சொன்னது "இந்தச் சபை செத்துப் போய்விட்டது" என்று.

There is difference between physical and constitutional death. This is a very serious point, Mr. Deputy Speaker.

Mr. DEPUTY SPEAKER : I am also very serious.

Thiru M. A. LATHEEF : I feel that this is a very serious and important matter and the House has got every right to express its opinion in a serious way. What Thiru M. G. Ramachandran had meant when he said the Assembly was dead was this. He did not refer to members as physically dead but he had said that the House itself is constitutionally dead. That means that we have not discharged our constitutional duties.

நமக்கு கொடுக்கப்பட்டிருக்கிற கடமைகளை உணர்ந்து இதுவரை யிலே இந்த அவை மக்களுக்கு நன்மை செய்கின்ற வகையிலே பணிபுரிந்திருக்கிற காரணத்தினால், "செத்துவிட்டது" என்று சொல்லி இருப்பதால், இது சாதாரணமாக அரசு சார்பிலே— ஆளும் கட்சியைச் சேர்ந்தவர்களை மாத்திரமல்ல; இந்த அவையிலே இருக்கிற அத்தனை பேரையும் பாதிக்கக்கூடியதாக இருக்கிற ஒரு எக்ஸ்பிரஷனாக இருக்கிறது. ஆகவே, இது நம்முடைய உரிமையைப் பாதிக்கக்கூடியதாக இருக்கிறது என்பதை மறுக்க முடியாது. ஆனால் அம்மையார் அவர்கள் "சபை செத்துப்போய் விட்டது" என்று சொன்னது தவறு அல்ல; அது ஏற்றுக்கொள்ளக் கூடிய ஒன்றுதான் என்று சொல்லி, மாண்புமிகு உறுப்பினர் வீராசாமி அவர்கள் கொடுத்துள்ள இந்த உரிமைப் பிரச்னைத் தீர்மானத்தை எதிர்த்தார்கள். இது உரிமையை பாதிக்கின்ற ஒன்றுதான் என்பதை நான் திட்டமாகத் தெரிவித்துக்கொள்கிறேன். ஆகவே, இந்தத் தீர்மானத்தை நான் மனப்பூர்வமாக ஆதரிக்கிறேன். இருப்பினும் நம்முடைய மாண்புமிகு முதலமைச்சரவர்களுடைய கருத்தினை நானும் ஏற்றுக்கொள்கிறேன் என்று சொல்லி, அமர்கிறேன்.

மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர் : இங்கே மாண்புமிகு உறுப்பினர் வீராசாமி அவர்கள் கொடுத்துள்ள உரிமைப் பிரச்னை பற்றிப் பேசும்போது அதை எதிர்த்து சில கருத்துக்களைப் பேரவை உறுப்பினர் சிலர் தெரிவித்தார்கள். டாக்டர் ஹாண்டே அவர்கள் குறிப்பிடும்போது, "ஒரு உறுப்பினர் என்ன வேண்டுமானாலும்

பேசலாம்; அதற்கு நாம் அனுமதிக்கத்தான் வேண்டும்; அதுதான் ஜனநாயகம்" என்று சொன்னார்கள். பேரவை உறுப்பினர்களுக்கு எந்தப் பிரச்னை பற்றியும், எவ்வளவு நேரம் வேண்டுமானாலும் "பாயின்ட் ஆஃப் ஆர்டர்" மூலம் பேசுவதற்கு நாம் அனுமதித்துக் கொண்டிருக்கிறோம். அண்மையில்கூட ஒரு பாயிண்ட் ஆஃப் ஆர்டர் பற்றி கிட்டத்தட்ட மூன்று மணி நேரம் பேசுவதற்கு அனுமதித்திருக்கிறோம். ஆகவே, நாம் கருத்துக்களைத் தெரிவிப்பதற்கு தாராளமாக அனுமதி அளித்திருக்கிறோம் என்பதில் யாருக்கும் சந்தேகம் இருக்க முடியாது.

ஆனால், இங்கே திரு. எம். ஜி. இராமச்சந்திரன் அவர்கள் மீது கொண்டுவந்திருக்கும் உரிமைப் பிரச்சினையைப் பார்க்கும்போது, அவரது பேச்சு எவ்வளவு அவமானமானது, வேதனை தரக்கூடியது என்பதைப் பேரவை உறுப்பினர்கள் சுட்டிக் காட்டியிருக்கிறார்கள். திரு. பொன்னப்ப நாடார் அவர்களும் அதுபற்றி கருத்துத் தெரிவித்திருக்கிறார்கள். அதிருப்தியைத் தெரிவிக்கின்ற வகையில் அவருக்கு பேசத் தெரிந்த முறை அதுதான் என்று திரு. கே. டி. கே. தங்கமணி அவர்கள் சொன்னார்கள். அதை ஒரு உவமையாகச் சொன்னால்கூட பரவாயில்லை. இந்த அவையின் உறுப்பினர்—ஒரு பத்துப்பேர் இருக்கிற கட்சிக்குத் தலைவராக இருப்பவர்—இப்படிச் சொல்வது சாதாரணமான விஷயமல்ல. அவருக்கு அதிருப்தி இருக்குமானால், அதை உரிய முறையிலே இந்த அவையிலே எடுத்துச் சொல்லியிருக்கலாம். அதிலே உரிமைப் பிரச்னைக்கு இடமிருக்காது. அப்படிச் செய்யாமல், இந்த அவைக்கு வெளியே, பேரவையை அவமதிக்கின்ற வகையிலே கெட்ட நோக்கோடு, ஜனநாயகத்திலே நம்பிக்கை இல்லாமல் "சபை செத்துப்போய் விட்டது" என்று சொன்னதால் அவர்மீது உரிமைப் பிரச்னை கொண்டுவந்திருப்பது சரியானதுதான். இந்தப் பேரவையில் இருக்கிற ஒரு உறுப்பினர் ஒரு பிரச்னைபற்றி பேசுவதற்கும் ஒரு கருத்தை முன்மொழிவதற்கும் உரிமை இருக்கிறது. அதேநேரத்தில் அவைக்கு வெளியிலே இந்தப் பேரவையைப்பற்றி பேசும்போது, "செத்துப் போய்விட்டது" என்று சொல்வது, ஜனநாயகமே செத்துவிட்டது என்று சொல்வதாக நான் கருதுகிறேன். ஆகவே, இது உரிமைப் பிரச்னைக்குரியதுதான். என்றாலும் மாண்புமிகு முதலமைச்சர் அவர்களும், திரு. பொன்னப்ப நாடார் அவர்களும், திரு. லத்தீப் அவர்களும் கூறிய கருத்துக்களை ஏற்று, திரு. எம். ஜி. இராமச்சந்திரன் அவர்களின் போக்கை வன்மையாகக் கண்டித்து, இந்தப் பிரச்னையை இத்துடன் முடிக்கிறேன்.



## 4. ஒத்திவைப்புத் தீர்மானம்.

### திருப்பூர், கோவை, சேலம் ஆகிய இடங்களில் நூல் விலை திடீர் ஏற்றமும் அதனால் நெசவாசளர் பாதிப்பும்.

MR. DEPUTY SPEAKER : Next is the adjournment motion given by Thiru N. K. Palanisamy. He has given a notice of the following adjournment motion :—

"The grave situation prevailing in Tiruppur, Coimbatore and Salem due to sudden increase in the prices of yarn resulting in decrease of wages of the weavers and the hardship caused to the weavers and their families."

DR. H. V. Hande has given a similar motion. Thiru A. R.Marimuthu, Thiru R. Ponnappa Nadar Thiru K. T. K. Thangamani have also given similar motions. Dr. Hande may speak first.

DR. H. V. HANDE : Sir, I have given note that the business of this House do stand adjourned to discus a matter of urgent public importance, viz., "the frustration and feeling of insecurity pervailing among handloom weavers on account of the rise in price of yarn and inadequate supply of yarn ". There are two areas in Salem which are actually connected with this problem. There is a very serious situation there where a number of people have been actually victimised on account of violence. This violence has resulted due to police ruthlessly pursuing these people to different parts of the City and then putting them in lock-up. My information is that nearly 90 persons have been actually kept in the lock-up because of this agitation. Also my information is that most of these people kept in the lock-up have not taken any active part in the agitation. I think the police became violent and lathi-charged these people. A bus had been burnt and the police came round and lathi-charged the innocent people. The poor handloom weavers had nothing to do with that. It is purely a question of law and order.

Secondly, these weavers have been finding it difficult to get yarn at controlled prices.

For instance, during Deepavali, 40-count yarn which was sold at Rs 58 is now sold at Rs. 72. The price of 60-court yarn which was Rs. 84 is now Rs. 100. Similarly the price of 80-court yarn which was sold at Rs. 115 is now sold at Rs. 130. In the case

of 100-court yarn the increase was from Rs. 148 to Rs. 160. In the last three months the percentage of increase in the price of yarn is 30 to 40. Therefore, the people who are actually in need of yarn are finding it difficult to get it at controlled price or cheap price at which they were getting before. What can the poor weavers do? They held protest meetings. When they hold protest meeting, the police come into the picture. Even to-day they are going to stage a protest meeting. Now the weavers are trouble on two sides, police and economic crisis. They are being tortured and it is not a small matter about which the House can be unconcerned. How-are they going to eke out their livelihood if they are able to get yarn at controlled or cheep price?

The Hon. Minister for Industries may plead that the Central Government should deal with the matter. Why not the State Government give a helping hand? Now, the weavers are getting only 25 per cent of the yarn requirements at controlled price from the co-operative organisations and 75 per cent of them do not get it at controlled price. You can give them cards showing the amount of yarn to be allotted to them. Why should you leave them at the mercy of unscrupulous persons? Is it not the duty of the State Government to come to their help instead of leaving it to the Central Government.

Sir, there are a large number of weavers in Madurai, Salem, Madras and other districts and they form the biggest section of the society. These people will not take this lying down. I am not trying to incite them. But I warn the Government that a situation may arise when there will be violence, there will be crisis and there will be bloodshed and innocent persons will be tortured.

[திரு. நா. வீராசாமி தலைமை)

So, I request the Government to do something immediately to solve this problem. It is not a party matter and if the House is adjourned we can review the matter and come to a decision The Hon. Chairman has got full powers of the Speaker and I think he will exercise his powers.

திரு. ஆர். பொன்னப்ப நாடார் : தலைவரவர்களே, இந்த முக்கியமான பிரச்னைமீது எங்கள் கட்சியின் சார்பாக கொண்டு வந்திருக்கிற ஒத்திவைப்புத் தீர்மானத்தை ஆதரித்து ஓரிரு கருத்துக்களை



—இது எப்படி ஒத்திவைப்பிற்கு உகந்தது என்ற கருத்தை மட்டும் கூற முற்படுகிறேன். விரிவான விவரங்களை எல்லாம் எனக்கு முன்னால் பேசிய டாக்டர் ஹாண்டே அவர்கள் எப்படி நூல் விலையானது விஷம்போல் ஏறி, இன்று அதிலே ஈடுபட்டிருக்கின்ற நெசவாளர்கள் பட்டினியிலே அவதிப்படுகிறார்கள் என்ற விவரங்களை எல்லாம் கூறினார்கள்.

பொதுவாக, கோயம்புத்தூர், சேலம், மதுரை போன்ற பல பகுதிகளிலே இருக்கிற இந்த நெசவாளப் பெருங்குடி மக்கள் வெகுவாக பாதிக்கப்பட்டிருக்கிறார்கள். அவர்கள் இன்னும் கஷ்டப்பட்டுக் கொண்டே இருக்கிறார்கள். 1967-லே இருந்த நூல் விலையைவிட அதிகமாக நூல் விலை இன்று ஏறியிருக்கிறது. இதன் காரணமாக பல இடங்களிலேயும் கிளர்ச்சி ஏற்பட்டது. சேலம் மாவட்டத்திலே நடந்த நிகழ்ச்சிகளைப் பற்றி எல்லாம் டாக்டர் ஹாண்டே அவர்கள் எடுத்துக் கூறினார்கள். சமூகவிரோதிகள் ஏதோ ஒரு பஸ்ஸுக்கு தீ வைத்தார்கள் என்ற காரணத்தினால் ஒன்றும் அறியாத அப்பாவிகளாக இருக்கின்ற நெசவாளர்களை அம்மாபேட்டை என்ற பகுதியிலேயும், பொன்னம்மாபேட்டையிலேயும் இருக்கிற நூற்றுக்கு மேலானவர்களின் பேரில் செக்ஷன் 301, 148 435-ன்கீழ் கேசுகளை ரிஜிஸ்டர் செய்திருக்கிறார்கள். ஏதோ கிளர்ச்சி போன்றவை எல்லாம் அவர்களுக்கு இருக்கிற கஷ்டத்தினால் ஏற்படுத்தப்பட்டது என்பதை நாம் எல்லாம் உணர வேண்டும். இன்று கூட்டுறவுத் துறையிலே 12 ஆலைகள் இருக்கின்றன. அதே மாதிரி சில்க் மில்ஸ் என்று 7 ஆலைகளை அரசாங்கம் ஏற்று நடத்தி இந்த நூலை உற்பத்தி செய்து கொண்டிருக்கிறார்கள். ஆனால், வெளி மார்க்கெட்டிலே அதாவது வெளிச் சந்தையிலே இவர்கள் நூலின் விநியோகம் செய்துகொண்டே இருக்கிறார்கள்.

இதிலே நான் ஒன்று கூற விரும்புகிறேன். நம்முடைய மாண்புமிகு தொழில் அமைச்சருடைய கவனத்திற்கு ஒன்று கொண்டுவர விரும்புகிறேன். இந்த வெளி மார்க்கெட்டிலே விற்பதை தற்காலிகமாக நிறுத்தம் செய்து, பெரும் பங்கினை நெசவாளர்களுக்கு அடையாளக் கார்டின் மூலமாக விநியோகம் செய்வதற்கு வேண்டிய ஏற்பாட்டினை செய்ய வேண்டுமென்று கேட்டுக்கொள்கிறேன். அடையாளக் கார்டை யாருக்கு கொடுக்க வேண்டும் என்று சொன்னால், தொழிலிலே ஈடுபட்டுக் கொண்டிருக்கிற அந்த நெசவாள தொழிலாளர்களுக்கு கொடுக்க வேண்டும். அது இல்லாமல் இப்பொழுது இருக்கின்ற நிறுவனங்களுக்கு கார்டை கொடுத்துவிட்டால் அவர்கள்

எல்லா தறிகளையும் ஊக்குவிக்கிறார்களா என்பதை பரிசிலனை செய்ய முடியாத நிலைமை ஏற்பட்டுவிடும். இதிலே மத்திய அரசாங்கம் என்ன சொன்னாலும் சரி, இப்பொழுது நூல் விலை அதிகமாக கூடி யிருக்கிறது.

அதே சமயத்திலே பஞ்சு விலை கூடி இருக்கிறதா, உற்பத்திச் செலவு அதிகமாக கூடியிருக்கிறதா என்பதை எல்லாம் பார்க்க வேண்டும். ஒருவேளை கூட்டுறவுத் துறையிலே இயங்குகின்ற 12 ஆலை நிர்வாகிகள் கூறக்கூடும் "கூப்பன் மார்க்கெட் சேல்ஸ்" எங்களுக்கும் வேண்டுமென்று. முதலாவதாக இந்த தொழிலாளர்களுடைய தேவையை பூர்த்தி செய்வது தான் அரசாங்கத்தினுடைய தலையாய கடனாகவும், சாலச்சிறந்த கருத்தாகவும் இருக்கும் என்பதை வலி யுறுத்த கடமைப்பட்டிருக்கிறேன். ஆக, இன்று எல்லா பகுதியிலேயும் இருக்கின்ற நெசவாளர்களின் கஷ்டங்களையும் தொல்லைகளையும் தீர்க்க அரசாங்கம் சுறு சுறுப்பாக நடவடிக்கை எடுப்பதற்கு இந்த அவையின் நடவடிக்கைகளை ஒரு மணி நேரம் ஒத்திவைத்து விவாதிக்க வேண்டுமென்று கேட்டுக்கொள்கிறேன். இது மிக முக்கியமான பிரச்னை; இலட்சக்கணக்கான தொழிலாளர்களை பாதிக்கக் கூடிய இந்த நெசவாளர்கள் பிரச்னையை சரிகட்ட அரசாங்கம் வேண்டியவை களை செய்ய வேண்டும்.

இன்று ஆளும் கட்சியாக இருப்பவர்கள் ஒரு காலத்திலே கைத்தறித் துணிகளை சுமையாக தூக்கிச் சென்று விற்றிருக்கலாம் அந்த நெசவாளர்களின் குறையினை போக்க; ஆனால் இன்று இருக் கின்ற நிலைமை வேறு என்பதை நாம் நன்கு உணர வேண்டும். பசியினால், பட்டினியினால் பாதிக்கப்பட்டிருக்கிற லட்சக்கணக்கான தொழிலாளர்களைக் காப்பாற்ற தீவிரமான நடவடிக்கை எடுக்க வேண்டும். அது இல்லாவிட்டால் பலவிதமான கிளர்ச்சியும், புரட்சி யும் ஏற்படும் என்றுதான் நாம் நினைக்க வேண்டியிருக்கிறது. அத்தகைய நிலைமை உருவாகாமல் இருக்க நெசவாளர்களுக்குத் தேவையான நூலை நியாயமான விலையில் கொடுப்பதற்கு ஆவன செய்ய வேண்டுமென்று கூறி என் வார்த்தைகளை முடித்துக் கொள்கிறேன்.

திரு. ஏ. ஆர். மாரிமுத்து : இன்று தமிழகத்தில் நெசவுத் தொழி லாளர்கள் எப்போதும் இல்லாத நிலைமையில் வெகுவாகப் பாதிக்கப் பட்டிருக்கிறார்கள் என்பதை நான் அமைச்சரவையின் கவனத்திற்குக் கொண்டுவருகிறேன். நூல் விலை ஏற்றத்தின் காரணமாக—ஒரு





ரூபாய், இரண்டு ரூபாய், ஐந்து ரூபாய், பத்து ரூபாய் தானே என்பதற்கல்ல—கிட்டத்தட்ட 50 சத விகிதம் நூல் விலை ஏற்றத்தின் காரணமாக அவர்கள் பாதிக்கப்பட்டிருக்கிறார்கள். அதனால் நூல் வாங்கி தொழிலைச் செய்ய முடியாமல் பட்டினி கிடக்க வேண்டிய அவல நிலையில் ஆயிரக்கணக்கான நெசவுத் தொழிலாளர்கள் இருக் கிறார்கள். இந்த நிலைமையைப் பார்த்துக்கொண்டு நாம் பேசாமல் இருக்கமுடியாது. அதற்கான காரியங்களை அரசு உடனடியாகச் செய்ய வேண்டும். அரசு உடனடியாகச் செய்ய வேண்டுமென்று நான் கூறுகிறபோது அதிலும் சிரமம் இருக்கலாம். எந்தச் சிரமம் இருந்தாலும் தொழில் செய்பவனை பட்டினியாகப் போட்டுவிட முடியாது. தொழிலாளர்களைக் காப்பாற்றுவதற்காக குறைந்தது— அவர்களுக்குக் கட்டுபடியாகக் கூடிய விலையில் எந்தஎந்த வகையில் நூல் சப்ளை செய்ய முடியும் என்பதை அரசு ஆலோசிக்க வேண்டும்.

அவர்கள் தங்களது சங்கங்கள் மூலமாக பல தீர்மானங்களைப் போட்டு அனுப்பியிருக்கிறார்கள். கூட்டுறவு நூற்பாலைகளில் உற்பத்தி யாகக் கூடிய நூல் முழுவதையும் அவர்களுக்கு கண்டிரோல் விலையில் கொடுக்க வேண்டும் என்று கேட்கிறார்கள். அதற்கு கனம் அமைச்சர் அவர்கள் பதில் சொல்லும்போது கூட்டுறவு நூற்பாலைகளில் உற்பத்தி செய்யப்படும் நூல் முழுவதையும் கொடுக்க முடியாது என்று கூறின தாகத் தெரிகிறது. அப்படிச் சொல்லிக் கழித்துவிட்டால் யார் அவர் களுக்கு ஆதரவு அளிப்பது ? அவர்களுடைய கஷ்டங்களை எதிர் தரப்பில் உள்ள நாங்கள் எடுத்துச் சொல்லலாம். ஆளும் கட்சியில் உள்ள உறுப்பினர்களும்கூட எடுத்துச் சொல்லலாம். அமைச்சர்கள் தான் இதைப்பற்றிச் சிந்தித்து தக்க நடவடிக்கை எடுத்தாக வேண்டும். அப்படி இல்லாது நாட்டில் கொந்தளிப்பு ஏற்பட அனுமதிக்க வேண்டுமா என்பதைச் சிந்திக்க வேண்டும். சேலத்தில் பட்டினி கிடக்கிற தொழிலாளர்கள் கூட்டங்கள், ஆர்பாட்டங்கள் நடத்தியிருக்கிறார்கள். அந்த நேரத்தில் எங்கோ ஒரு பஸ் கொளுத்த பட்டிருக்கிறது............

மாண்புமிகு மாற்றுத் தலைவர் (திரு. நா. வீராசாமி) : இந்தத் தீர்மானத்தை விவாதத்திற்கு எடுத்துக்கொள்கிறபோது அதை யெல்லாம் சொல்லலாம். இப்போது இதை ஏன் விவாதத்திற்கு எடுத்துக்கொள்ள வேண்டும் என்பதற்கான காரணங்களைச் சொன்னால் போதும்

திரு. ஏ. ஆர். மாரிமுத்து : சேலத்தில் நெசவாளர்களுடைய வீடுகளுக்குள் போலீசார் புகுந்து பெண்கள் எல்லாம் அடிக்கப்பட்டிருக்கிறார்கள். அரசாங்கம் நெசவாளர்களுடைய துன்பத்தைத் துடைக்க உடனே முன்வரவில்லை என்றால் சேலத்தில் நடந்த சம்பவங்கள் போல மற்ற மற்ற இடங்களிலும்கூட ஏற்படத்தான் செய்யும். இந்தச் சர்க்காரா இதுபற்றி கவனிப்பதா? இதை கவனிக்க வேண்டியது மத்திய சர்க்காரா என்று நாம் வாளா இருந்துவிட முடியுமா? இது நம்முடைய பொறுப்பு. எப்படியோ நம் மாநில நெசவாளர்களை நாம் காப்பாற்றியாகத்தான் வேண்டும்.

(மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர் தலைமை)

உடனடியாக நெசவாளர்களுக்கு நியாயமான விலையில் நூல் கிடைக்க தக்க ஏற்பாடு செய்யவேண்டும் என்று இந்த அரசை கேட்டுக் கொண்டு அமைகிறேன்.

திரு. கே. டி. கே. தங்கமணி : இந்த ஒத்திவைப்புத் தீர்மானத்தை ஏன் எடுத்துக்கொண்டாக வேண்டும் என்பதற்கு சிலவற்றைச் சொன்னால் பொருத்தமாக இருக்கும்.

இந்தத் தீர்மானம் கொண்டுவந்திருப்பதன் நோக்கமே ஒருவகையில் 1-ஆம் தேதி அன்று சேலத்தில் நடந்த சம்பவங்கள்தான். அதையொட்டி கைத்தறி நெசவாளர்களுடைய வீட்டில் புகுந்து 150 பேர்கள் கைது செய்யப்பட்டிருக்கிறார்கள். 87 பேர்கள் இன்னமும் சிறையில் காவலில் வைக்கப்பட்டிருக்கிறார்கள். இது எல்லாம் மிகவும் ஆத்திரமூட்டக்கூடிய செயல். அதன் காரணமாக கைத்தறி நெசவாளர்கள் ஒரு கமிட்டி அமைத்து அதற்குத் தலைவர் திரு. கே. எஸ். மாணிக்கம், கன்வீனர் திரு. கே. எஸ். அங்குமுத்து ஆகியவர்கள் இந்தப் பிரச்னை சம்பந்தமாக 15-ஆம் தேதிக்குள்ளாக ஒரு முடிவு ஏற்படவில்லை என்று சொன்னால் கோட்டைக்கு முன் மறியல், கலெக்டர் ஆபீஸ் முன் மறியல் என்பதாக செயல்முறையில் இறங்கத் தீர்மானித்து தெரியப்படுத்தியும் இருக்கிறார்கள். இந்த நெசவாளர்கள் சம்பந்தமாக நாட்டில் ஒரு கொந்தளிப்பு நிலைமை ஏற்படாது உடனடியாக அரசு தக்க பல நடவடிக்கைகளை எடுத்துக் கொண்டாக வேண்டும்.

நெசவாளர்கள் சம்பந்தப்பட்ட பிரச்னைகளைப் பரிசிலனை செய்ய அரசு சந்தானம் கமிஷனைப் போட்டிருக்கிறது. இந்த நிலையில் நெசவாளர்களது கேந்திர இடமாக இருக்கக்கூடிய சேலம் போன்ற





பகுதிகளில் நெசவாளர்கள்மீது அடக்குமுறைகளைக் கட்டவிழ்த்து விடுவது கொஞ்சம் கூடச் சரியானது அல்ல. உடனடியாக அடக்குமுறைகளைக் கைவிடுவது அவசியம். அவர்களது நியாயமான கோரிக்கைகளைச் செயல்படுத்த உடனடியாக நடவடிக்கை எடுக்க வேண்டும். நெசவாளர்களது பிரச்சினை பற்றி பலமுறை இந்த அவையிலேயே விவாதங்கள் நடந்திருக்கின்றன. அரசுக்குத் தேவையான ஆலோசனைகளை இந்த நேரத்தில் நாங்களும் கொடுக்கத் தயாராய் இருக்கிறோம். அந்தக் குழுவினரும் கொடுக்கத் தயாராய் இருக்கிறார்கள். ஆகவே, இந்த ஒத்திவைப்புத் தீர்மானத்தை ஏற்று இதுபற்றி 2 மணி நேரமாவது விவாதிப்பதற்கு ஏற்பாடு செய்தால் உதவியாக இருக்கும் என்று சொல்லிக்கொண்டு என் உரையை முடித்துக்கொள்கிறேன்.

மாண்புமிகு திரு. செ. மாதவன் : மாண்புமிகு மன்றத் துணைத் தலைவர் அவர்களே, இன்றைக்கு தமிழ்நாட்டில் கைத்தறி நெசவாளர்கள் நூல் விலையேற்றத்தால் அல்லல்படுகிற பிரச்னையை இந்த மன்றத்தின் கவனத்திற்குக் கொண்டுவந்ததற்காக மன்ற அங்கத்தினர்களுக்கு நான் முதலில் நன்றியைத் தெரிவித்துக்கொள்கிறேன்.

இதுபற்றி இந்த அவையில் அரசே ஒரு அறிக்கை வைப்பதாக இருந்தது. ஆயினும் இந்த ஒத்திவைப்புத் தீர்மானங்களின்மீது அந்தக் கருத்துக்களைச் சொல்வது பொருத்தமுடையதாக இருக்கும் என்று கருதித்தான் அந்த அறிக்கையைத் தனியாக வைக்கவில்லை. இந்தப் பிரச்னை உடனடியாக பரிகாரம் காணவேண்டிய ஒன்றாகும். என்றாலும், இது மாத்திரம் அல்ல—எந்தப் பிரச்னையாக இருந்தாலும் நிரம்ப வேகமாக, உணர்ச்சி வசப்பட்டு பேச வேண்டுமென்று டாக்டர் ஹாண்டே அவர்கள் கருதுகிறார்கள். நிச்சயம் இதில் அரசாங்கத்தைப் பொறுத்தவரையில் கட்சிக் கண்ணோட்டத்தில் இல்லாது நம் மாநில நெசவாளர்களுடைய பிரச்னை. அவர்களது துயர் உடனடியாகத் துடைக்கப்பட வேண்டும் என்கிற கருத்தில்தான் அரசு இதுபற்றி பரிசீலித்து வருகிறது. "இதற்கு நாங்கள் என்ன செய்ய முடியும்? மத்திய அரசாங்கம்தான் பொறுப்பு" என்று நாங்கள் சொல்லப்போவதாக ஊகித்துக்கொண்டு பேசும்போதே, "மத்திய அரசாங்கத்தின்மீது பழியைப் போட்டுவிடாதீர்கள்" என்றும் சொல்லிவிட்டார்கள். உண்மையில் இந்தப் பிரச்னையை நாம் இந்த நாட்டில் பொருளாதார கண்ணோட்டத்தோடு பரிசீலிப்பதுதான், விவாதிப்பதுதான் பொருத்தம் என்று கருதுகிறேன்.

[திரு. செ. மாதவன்] [1973 பிப்ரவரி 6

கைத்தறி நெசவாளர்களுக்குத் தேவையானது நூல். கண்டிரோல் விலைகூட இல்லை—ஒரு நியாயமான விலையில் நிரந்தரமாகக் கிடைக்க ஒரு உத்தரவாதம் ஏற்பட்டாக வேண்டும். அவ்வப்போது ஏற்படுகிற விலையேற்றங்களினால் நெசவாளர்கள் பாதிக்கப்படக் கூடாது என்பது தான் நமது அரசாங்கத்தின் கருத்தாகும். அதற்கான நடவடிக்கை அனைத்தையும் இந்த அரசு எடுக்கிறது என்பதை நான் தெரிவித்துக் கொள்கிறேன்.

இப்போது நூல் விலை ஏறியிருக்கிறது. அதை யாரும் மறுக்க முடியாது. அதுவும் விலை மிக அதிகமாக ஏறியிருக்கிறது. இது போன்ற விலையேற்றத்தை நிரந்தரமாகத் தடுக்க நாம் முயற்சி எடுக்க வேண்டும் என்பதுதான் இந்த அரசாங்கத்தின் பரிசீலனையில் இருந்து வருகிறது.

ஆயினும் உடனடிப் பிரச்னை கூட்டுறவு நூற்பாலைகள், அரசாங்கம் எடுத்துக்கொண்டிருக்கிற நூற்பாலைகள் ஆகியவற்றில் உற்பத்தி செய்யப்படும் நூல் அனைத்தையும் நெசவாளர்களுக்கு கட்டுபடியாகக் கூடிய நியாயமான விலைக்கு விநியோகிக்க வேண்டும் என்கிற கருத்து தெரிவிக்கப்பட்டது. அரசாங்கம் எடுத்துக்கொண்டிருக்கிற மில்களில் தயாராகும் நூல் அனைத்தையும் மத்திய அரசாங்கத்தின் அனுமதியின்றி கொடுப்பது என்பது இயலாத காரியம். கூட்டுறவுத் துறையில் இயங்குகின்ற நெசவாளர்கள் அனைவருக்கும் நாம் நூல் கொடுத்து விடுகிறோம். நியாயமான விலையில் கொடுப்பதற்கும் ஏற்பாடு செய்துவிடலாம். ஆனால் கூட்டுறவுத் துறைக்கு அப்பாற்பட்டு இருக்கிற மாஸ்டர் வீவர்ஸ் பிரச்சினைதான் நாம் தீர்க்க முடியாத பிரச்னையாக இருக்கிறது.

பொதுவாக, மொத்தம் எல்லா நெசவாளர்களுக்கும் நியாயமான விலையில் அரசாங்கமே நூல் சப்ளை செய்வது என்றால் தேவைப்படுகிற நூல் 16 ஆயிரம் பேல்ஸ். இத்துணையும் அரசாங்கம் எடுத்துக் கொண்டிருக்கிற மில்களில் இருந்து மட்டும் கொடுக்க முடியாது என்பதை நான் தெரிவித்துக்கொள்கிறேன். தமிழ்நாட்டிலுள்ள 200 நூற்பாலைகளில் உற்பத்தியாகும் நூல் அனைத்தும் நியாயமான விலையில் கொடுக்கப்பட வேண்டும் என்பது நல்ல முடிவாக இருக்க முடியும். அதே நேரத்தில் அவர்களுக்குத் தேவையான மூலப் பொருள்களும் அவர்களுக்கு நியாயமான விலையில் கிடைப்பதற்கு ஏற்பாடுகள் இருக்கவேண்டும். அவர்கள் உற்பத்தி செய்கிற நூலை



1973 பிப்ரவரி 6] [திரு. செ. மாதவன்]

மட்டும் நியாயமான விலையில் கொடுக்க ஏற்பாடு செய்வது இந்தப் பிரச்னைக்குத் தீர்வாக அமையும் என்று கருதுவது சரியல்ல, தவறு என்று கூறிக்கொள்ள விரும்புகிறேன்.

நிரந்தரமாக இந்தப் பிரச்னை நீடிக்கக் காரணம் தமிழ்நாடுதான் அதிகமான நூற்பாலைகளைக் கொண்டிருக்கிறது. ஆயினும் நூற்பாலைகளுக்குத் தேவையான பஞ்சு—பருத்தி வெளி மாநிலங்களில் இருந்தும், வெளி நாடுகளில் இருந்தும் பெற்றாக வேண்டிய சூழ்நிலை இருந்து வருகிறது. இங்கு உற்பத்தியாகக் கூடிய நூல்களுக்கும் சந்தை, வெளி மாநிலங்களைத்தான் எதிர்பார்த்திருக்கும் நிலை இருக்கிறது. இது தான் இந்த பிரச்சினையை பொறுத்த வரையில் நம் நாட்டுப் பொருளாதார அமைப்பாக இருந்து வருகிறது. இதுதான் அடிக்கடி சங்கடமான நிலையை கைத்தறிகளைப் பொறுத்த வரையில் உண்டாக்கிவிடுகிறது என்பதை இந்தச் சந்தர்ப்பத்தில் தெரிவித்துக்கொள்ள விரும்புகிறேன். இதற்கு நிரந்தரமான பரிகாரம் காண முடியவில்லை என்பதுதான் நம் முன்னாலே உள்ள கவலையெல்லாம். இந்த அரசாங்கத்தைப் பொறுத்த அளவுக்கு நிரந்தரமான பரிகாரம் காண முடியும் என்றால், அதற்கு ஒரே ஒரு வழி, தமிழ்நாட்டைப் பொறுத்த அளவுக்கு, தமிழ் நாட்டிலுள்ள கூட்டுறவுத் துறை, தனியார் துறை நெசவாளர்களுக்கு இவ்வளவு நூல் தேவை என்று கணக்கிட்டு அந்த நூலை மாநில அரசே பொறுப் பேற்று இந்த மாநிலத்திலுள்ள தனியார் துறை, கூட்டுறவுத் துறை, நம் அரசாங்கம் நடத்துகிற கூட்டுறவு ஆலைகள், இம்மூன்று தரப்பட்ட ஆலைகளிலே இருப்பவர்களுக்கு, கைத்தறி நெசவாளர்களுக்கு தேவையான நூலை, கொள்முதல் செய்து நியாயமான விலையில் கொடுக்க திட்டம் ஏற்பட்டால்தான் நிரந்தரமான பரிகாரம் காண முடியும்.

பஞ்சு விலை ஏறிவிட்டதால், நூல் விலை ஏறிவிடுகிறது. ஏற்றுமதிக்கு அதிக வாய்ப்பு இருக்கிற காரணத்தினால், நூல் விலை ஏறி விடுகிறது. மராட்டியத்திலே, குஜராத்திலே இவர்களுக்குச் சாதகமான சூழ்நிலை இருப்பதால், விலை ஏறிவிட்டது என்று சொல்வதற்கெல்லாம் நாம் முடிவு கட்ட வேண்டுமானால் இந்த ஒரு வழியைத் தவிர வேறு வழி இருக்க முடியாது என்பதை மாண்புமிகு உறுப்பினர்களுக்குப் பணிவன்பாகத் தெரிவித்துக்கொள்கிறேன்.

இப்பொழுது ஏற்பட்டிருக்கிற சூழ்நிலைக்கு முக்கியமான இரண்டு காரணம், ஒன்று மத்திய அரசாங்கம் ஏற்றுமதிக் கொள்கையிலே எடுக்கின்ற முடிவு. சில சமயம், ஏராளமான நூல்களை ஏற்றுமதி

செய்ய வாய்ப்புகள் தரப்படுகின்றன. உடனே விலை ஏறிவிடுகிறது. அண்மையிலே மின்சாரத் தட்டுப்பாடு காரணமாக, நூற்பாலைகள் மின்சாரத்தைக் குறைவாக உபயோகப்படுத்த வேண்டுமென்று ஏற்பாடு செய்தோம். அதன் காரணமாக, உற்பத்தி குறைகிறது, நூல் விலை ஏறியுள்ளது, அதனால் நெசவாளர்களுக்குப் பாதுகாப்பு இல்லை என்பதை நான் ஏற்றுக்கொண்டு மத்திய அரசாங்கத்திற்கு யோசனை தெரிவித்து உள்ளோம். அதைக் கூடத் தவறு என்று கருதக் கூடாது. இந்த அதிகாரத்தை எங்களுக்கு தாருங்கள். நெசவாளர்களைப் பொறுத்த அளவிலாவது நாம் நிரந்தரமான பரிகாரம் காண வேண்டுமென்றால், மாநில அரசே நூலைக் கொள்முதல் செய்து, நியாயமான விலையில் நெசவாளர்களுக்கு விற்கக் கூடிய அதிகாரத்தை எங்களுக்குத் தாருங்கள் என்று கேட்டிருக்கிறோம். முதலமைச்சரவர்கள் 11—8—1972 ஆம் தேதியன்று கடிதம் எழுதியிருக்கிறார்கள். என்னைப் பார்க்க வந்த நெசவாளர்களிடத்திலே, சட்டமன்ற உறுப்பினர்களிடத்திலே இதைத்தான் சொன்னேன். பழிபோட்டு தப்பித்துக்கொள்ள வேண்டுமென்று அல்ல. நியாயமான விலையில், தரலாம் என்பதற்கு அரசு எடுத்துள்ள முடிவு இது.

பல்வேறு கட்சிகளும், மத்திய அரசாங்கப் பொறுப்பிலே உள்ளவர்களிடத்திலே சொன்னால் எங்களுக்கு பலம் தரும் என்றுதான் நாங்கள் சொன்னோம். பழி போடுகிற நிலையிலே சொல்லவில்லை என்பதைத் தெரிவித்துக்கொண்டு, நிச்சயம் இந்த முடிவு எடுத்தால் நிரந்தரமான பரிகாரம் இதற்குக் காணமுடியும் என்பதையும் தெரிவித்துக்கொள்கிறேன்.

மற்ற பரிகாரங்களையெல்லாம் வேகமாகப் பேசலாம், பேசிவிட்டு வெளியே செல்லலாம். அவை நிரந்தரமான பரிகாரமாக இருக்கா. இதைத்தான் செய்ய வேண்டுமென்று அங்கத்தினர்கள் வற்புறுத்தினார்கள். அதை ஏற்றுக்கொண்டு, நேற்றே நம்முடைய கூட்டுறவுத் துறை நூற்பாலைகள், அரசாங்கம் நடத்துகின்ற ஆலைகளின் பொறுப்பாளர்கள் எல்லோரையும் அழைத்து, எப்படியாவது கூட்டுறவுத் துறைக்கு அதிகமாகக் கொடுக்காவிட்டாலும், கிட்டத்தட்ட 4,000 பேல்கள் கொடுக்க வேண்டுமென்று நாம் கொடுத்து வருகிறோம். அதை விட அதிகமாகக் கொடுக்க முடியாது. இருந்தாலும், சங்கடமான நிலையைத் தீர்க்க வேண்டுமென்ற ஒரே காரணத்திற்காக கொஞ்சம் அதிகமாக நம்முடைய அரசு கூட்டுறவு நூற்பாலைகளிடமிருந்து நூலை ஒதுக்கி, இந்த கூட்டுறவு நெசவாளர்களுக்குப்



பரிகாரம் காண வேண்டுமென்று நேற்று முடிவு எடுத்தோம். அது ஓரளவுக்கு நெசவாளர்களுடைய கஷ்டத்தைப் போக்கும் என்ற நம்பிக்கை எனக்கிருக்கிறது. (டாக்டர் ஹாண்டே குறுக்கீடு.)

அதே போல், கார்ட் சிஸ்டம், இதெல்லாம் நாம் ஏற்கனவே முடிவெடுத்து அறிவித்த செய்தி. இந்த அரசாங்கம் செய்ததைப் பாராட்டினார்களே அதற்காக நான் நன்றி தெரிவித்துக்கொள்கிறேன். நெசவாளர்களுக்கு எவ்வளவு நூல் தேவை என்பதும் நிலையற்ற முடிவாக இருந்து வருகிறது. அரசாங்கம் எல்லா தரப்பிலுள்ள நெசவாளர்களையும் கலந்து, பேசி, கூட்டுறவுத் துறை, தனியார் துறை, அதிலேயும் கைத்தறி துறை, விசைத்தறி துறை, எல்லோருக்குமே நிரந்தரமாக பரிகாரம் காண வேண்டுமென்பதற்காக திட்டம் தயாரிக்க கார்ட் சிஸ்டம், அட்டை வழங்குகிற முறை நல்லமுறை என்று ஏற்றுக்கொள்ளப்பட்டு, அதை எப்படி உருவாக்க வேண்டுமென்று இப்பொழுது முடிவெடுத்துள்ளோம். ஆகவே, விரைவிலே அந்த கார்ட் சிஸ்டத்தைக் கொண்டு வரமுடியும் என்று தெரிவித்துக்கொள்கிறேன்.

நாங்கள் சொல்வதை, மத்திய அரசாங்கத்தைப் பற்றி குறை கூறுவதாக நினைக்கக் கூடாது. காரணம், டாக்டர் ஹாண்டே அவர்கள் அவ்வாறு இருக்குமானால் அதிக அக்கறை காட்டுவார்கள். ஆனால், உண்மையான குறை என்னவென்றால் மத்திய அரசாங்கம் அக்கறையாக முடிவெடுக்கிறார்களா? அதிலே தொல்லை ஏற்படுகிறது. ஒருபக்கம் கைத்தறித் துறை, மறுபக்கம் ஆலை முதலாளிகள், அவர்களுடைய சங்கடம் எங்களுக்குப் புரிகிறது. ஆனால், முடிவெடுக்கும்போது தைரியமாக எடுக்கவேண்டும். இப்பொழுது அவர்கள் எடுத்திருக்கின்ற முடிவு, வாலண்டரி ஸ்கீம், யார்ன் பூல் ஸ்கீம், பம்பாயிலுள்ள டெக்ஸ்டைல் கமிஷனர், ஆலை முதலாளிகளை அழைத்து, இவ்வளவுதான் கொடுக்க வேண்டும். நீங்கள் வாலண்டரியாகக் கொடுங்கள் என்று உத்தரவு போடுகிறார்கள். நம்முடைய அரசாங்கத்திற்கு வாலண்டரியாக கொடுக்கச் சொல்லியிருக்கிறோம். அதை எப்படியாவது பயன்படுத்திக்கொண்டு நெசவாளர்களுக்குக் கொடுங்கள், இப்படி இங்கே ஒரு உத்தரவு. எதையாவது திட்டவட்டமாகச் செய்ய வேண்டும். நானே, தொலைபேசியிலே டெக்ஸ்டைல் கமிஷனரிடம் சொன்னேன். இப்படியெல்லாம் இக்கட்டான நிலையை அரசாங்கத்திற்குக் கொண்டு வராதீர்கள், திட்டவட்டமாகச் சொல்லுங்கள் என்று. நெசவாளர்களுக்கு இவ்வளவு தேவைப்படுகிறது, அதை நாங்கள் எடுத்து, உங்களிடத்திலே

ஒப்படைக்கிறோம். நீங்கள் விநியோகியுங்கள் என்று சொன்னால் நிலைமை சீராகும். எங்களிடத்திலே அந்த அதிகாரத்தைக் கொடுத்து, 200 நூற்பாலைகள் உள்ள இந்த தமிழ்நாட்டிலே கைத்தறி நெசவாளர் களுக்கு நூல் கொடுக்கக் கூடிய அந்த முடிவை அவர்கள் எடுக்க மாட்டேன் என்கிறார்கள். வாலண்டரி ஸ்கீம், யார்ன் பூல் ஸ்கீம் தோற்றுவிட்டது என்பதையும் நாங்கள் பிரதம மந்திரியிடம் கூறி யிருக்கிறோம். மத்திய அரசாங்கத்தை குற்றம் கூறுவதல்ல இது. இருக்கின்ற உண்மையான நிலை. தயவு செய்து விலையைக் குறைத்து கொடுங்கள் என்றால், அது நடக்கக்கூடிய காரியம் அல்ல. ஏற்றுமதிக்கு வாய்ப்பு இருக்கும்போது அவர்கள் விலையைக் கூட்டி விடுகிறார்கள். ஆகையால்தான் மத்திய அரசாங்கம் அந்த கொள்கையை மாற்றிக்கொள்ள வேண்டுமென்று கூறினேனே தவிர, நிச்சயம் குறைகூறத் தெரிவிக்கவில்லை.

இருந்தாலும், நெசவாளர்களுக்கு உடனடி பரிகாரம் காணும் வகையில் கொஞ்சம் நூல் கொடுக்கலாம் என்ற முடிவை எடுத்திருக் கிறோம். தமிழ்நாட்டிலேயுள்ள ஆலை சங்கத்தோடு தொடர்பு கொண்டு ஓரளவாவது இந்த கைத்தறி நெசவாளர்களுக்கு நூல் கிடைக்க அவர்கள் முன் வரவேண்டுமென்று கேட்டிருக்கிறோம். அதைத் தவிர வேறு பரிகாரம் இல்லை என்பதையும் தெரிவித்துக் கொண்டு, அரசாங்கத்தைப் பொறுத்தவரையில், இதிலே கருத்து வேறுபாடே கிடையாது, தேவையான அத்தனை பரிகாரங்களையும் எடுப்போம் என்று கூறி, இதன்மீது எல்லோரும் கருத்தைக் கூறி விட்டார்கள். அதற்கும் மேலே பெரிய விவாதம் தேவையில்லை யென்று கூறி, முடித்துக்கொள்கிறேன்.

DR. H. V. HANDE: I have mentioned another subject also along with this adjournment motion. Now that the Hon. Chief Minister is here, I think since it concerns law and order, he would give his reply. One bus had been burnt and about 80 to 90 people were beaten. I would be very happy if the Hon. Chief Minister were to give some sort of assurance that unnecessary police excesses would not take place. I hope and trust the Hon. Chief Minister would give some sort of such assurance. I had combined two issues in my notice, one coming within the purview of the Hon. Minister for Industries and the other coming under the purview of the Hon. Chief Minister. If the Hon. Chief Mnister were to come forward and give the assurance, it will be nice.



வன்முறைச் செயலிலே ஈடு
மாண்புமிகு டாக்டர் மு. கருணாநிதி : கொடுமைப்படுத்தப்படு
படாதவர்கள் எல்லாம், போலீசாரால் அவர்களுடைய கூற்றாகும்.
கிறார்கள் என்பது டாக்டர் ஹாண்டே பஸ்கள் எரிக்கப்படுவதும் வன்
ஆனால், கடந்த 2, 3 மாதங்களில் நடந்துகொண்டிருப்பதும், எதிர்க்
முறைச் செயல்கள் அளவுக்கு மீறி படாமல் இருப்பது
கட்சியிலே இருக்கின்றவர்களுடைய கண்களிலே அரசாங்கத்துக்கு
எனக்கு ஆச்சரியமாக இருக்கிறது. பொதுவாக, காரியங்கள்,
சங்கடம் அளிக்கவேண்டுமென்று நடைபெறுகின்ற அதற்கு மறை
அவை பற்றி எதிர்த்துப் பேசாமலேயே இருப்பது, சூழ்நிலையை உருவாக்கு
முகமான ஆதரவைக் கொடுத்து விடக்கூடிய இருக்க முடியாது.
கிறது என்பதை நான் குறிப்பிடாமல்

குறிப்பிட்டார்கள்.
சேலத்து சம்பவத்தைப்பற்றி அவர்கள் நிரபராதிகள்
அதிலே நிரபராதிகள் தண்டிக்கப்படக் கூடாது. என்கின்ற உறுதியை
நிச்சயமாக தண்டனைக்கு ஆளாகமாட்டார்கள் அதே நேரத்தில், எதைத்
தான் தெரிவித்துக்கொள்கிறேன். ஆனால், உடனே அரசினுடைய
கெடுத்தாலும், எந்த ஒரு கிளர்ச்சியானாலும் அவைகளைப் பாழ்
சொத்துக்கள், பொதுமக்களுடைய சொத்துக்கள், சிலருடைய முறைகளை
படுத்துவது என்கின்ற அளவுக்கு ஈடுபடுகின்ற பொறுப்பு இருக்
எதிர்க் கட்சியிலே இருப்பவர்களும் தங்களுக்குப் கடமைப்பட்டிருக்
கிறது என்கின்ற அளவிலே அவைகளைக் கண்டிக்கக் கண்டிக்கின்ற
கிறார்கள். வன்முறைச் செயல்களிலே ஈடுபடுகிறவர்களை கேட்டு
அந்த முயற்சியிலே எதிர்க்கட்சிகளும் ஈடுபட வேண்டுமென்று நிரபராதிகள்
கொள்வேன். அவர்களுக்கு நான் உறுதியளிப்பேன், என்று
யாரும் நிச்சயமாக நடவடிக்கைக்கு ஆளாகமாட்டார்கள்
தெரிவித்துக்கொள்கிறேன்.

உதவித் தலைவர் அவர்களே,
திரு. கே. என். குமாரசாமி : விளக்கத்தை நாம் ஏற்றுக்
விளக்கம் அளிக்கும்பொழுது அந்த இருக்கிற பிரச்னைக்கு
கொள்ளக் கடமைப்பட்டிருக்கிறோம். ஆனால் அரசின்கீழ் இருக்கின்ற
தாற்காலிகமாக தீர்வு காண தமிழக கார்ப்பரேஷன்
அதிகாரத்தின்கீழ் தமிழ்நாடு டெக்ஸ்டைல் ஆலைகள் நம்முடைய
மூலமாக எடுக்கப்பட்ட கிட்டத்தட்ட முப்பது செலவோடு கூடிய
அதிகாரத்தின்கீழ் இருப்பதாலே அங்கிருந்து நிலையில் வங்கி கைத்தறி
வட்டம் 5 சத விகிதத்துக்குமேலே இல்லாத ஏற்படுத்தினால் இந்தப்
பயாளர்களுக்குக் கொடுக்கக்கூடிய நிலைமையை இப்பொழுது 50 சத
பிரச்னையில் 90 சத விகிதம் தீர்ந்துவிடும்.

விகிதம் தான் நூல் அங்கிருந்து விநியோகிக்கப்படுகிறது. அப்படியில்லாமல் முழுவதும் நூலை விநியோகிக்கக்கூடிய முறையை ஏற்படுத்தினால்தான் பிரச்னைக்குத் தீர்வு காணமுடியும். இதை அமைச்சர் அவர்கள் கவனத்தில்கொண்டு கைத்தறி நெசவாளர்கள் வாழ வழி செய்ய வேண்டும், இது நீண்டகாலப் பிரச்னையாக இருந்துவருகிறது. எனவே, நம்மிடத்திலே உள்ள அதிகாரத்தைப் பயன்படுத்தி இந்தப் பிரச்னைக்குத் தீர்வு காண அரசு முன்வரவேண்டும் என்று கேட்டுக் கொள்கிறேன்.

<u>மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர்</u> : விளக்கம் கேட்காமல் ஒரு உரையையே ஆற்றிவிட்டீர்கள்.

<u>மாண்புமிகு திரு. செ. மாதவன்</u> : இதைப்பற்றி நான் என்னுடைய உரையிலேயே குறிப்பிட்டிருக்கிறேன். மறுபடியும் மறு-படியும் அப்படிப்பட்ட கருத்தைச் சொல்வதனால் 190 தனியார் ஆலைகளை ஊக்குவிக்கின்ற நிலைமைக்கு இடம் கொடுக்கிறார்கள். கூட்டுறவுத் துறைக்கு 4000 பேல்கள் வரையில் கொடுக்கப்படுகிறது, அரசாங்கத் துறைக்கு 3,500 பேல்கள் வரையில் கொடுக்கப்படுகிறது. கூட்டுறவுத் துறையில் இருக்கிற நெசவாளர்களுக்குத் தேவைப்படுவது 4,000 பேல்கள் ஆகும். ஆகவே, நம்முடைய ஆலைகளிலிருந்து கொடுக்கிறோம் கூட்டுறவுத் துறைக்கு அப்பாற்பட்டவற்றிற்குத் தேவைப்படுவது 16 ஆயிரம் பேல்கள் ஆகும். அதை நம்முடைய ஆலைகளிலிருந்து கொடுக்கச் சொல்கிற கருத்தைப் பரப்புவதே தவறு. கிட்டத்தட்ட 25 ஆயிரம் பேல்கள் வரையில் உற்பத்திச் செய்யக் கூடிய தனியார் துறையில் இருந்து வாங்கிக் கொடுப்பதுதான் சரியானது. நம்முடைய நூற்பாலைகளிலிருந்து வாங்கக்கூடாது. இதே கருத்தைத் திருப்பித் திருப்பிச் சொல்வதன்மூலம் ஏதோ இதில் செய்வதற்கு அரசாங்கம் முன்வரவில்லை என்ற தவறான கருத்தைப் பரப்ப இடம் ஏற்படுகிறது. நம்முடைய ஆலையிலிருந்து இன்னும் அதிகமாகக் கொடுக்க நாம் ஏற்பாடு செய்து வருகிறோம்.

<u>மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர்</u> : அமைச்சர் அவர்கள் அளித்த விளக்கத்திற்குப் பிறகு இந்த ஒத்திவைப்புத் தீர்மானத்திற்கு அவசியம் இல்லை என்று கருதி, இதற்கு நான் அனுமதி மறுக்கிறேன்.



## 5. அமைச்சரின் அறிக்கை

### 21—8—1972-ம் நாள் அளித்த விடையைச் சரிசெய்து மாண்புமிகு அரிசன நலத் துறை அமைச்சர் அளித்த அறிக்கை.

<u>மாண்புமிகு திருமதி சத்தியவாணிமுத்து</u> : தலைவர் அவர்களே, கடந்த 21—8—1972-ஆம் நாளன்று மாண்புமிகு உறுப்பினர் திரு. ஆ. கு. சுப்பையா அவர்கள், "பர்மா அகதிகளுக்காகக் கட்டப்படுகிற வீடுகளுக்கு மத்திய சர்க்கார் கடனைக் கொடுக்கிறார்கள். அதனால் சகல பர்மா அகதிகளுக்கும் வீடு கட்ட முடியாமல் இருக்கிறது. பாதித் தொகையை மானியமாகவும், பாதித் தொகையைக் கடனாகவும் மத்திய சர்க்கார் அளிக்கவேண்டும் என்று நமது சர்க்கார் சிபார்சு செய்யுமா"? என்று கேள்வி கேட்டார்கள். அதற்கு நான் பதில் அளிக்கும்பொழுது "மத்திய சர்க்கார் இப்போதே முழுத் தொகையையும் கடனைத் தருகிறபோது நாம் பாதித் தொகையைக் கடனை அளிக்கவேண்டும் என்று கேட்பதில் அர்த்தமில்லை என்று அந்த அரசு கருதுகிறது" என்று கூறியிருக்கிறேன். இப்பொழுது அதைச் சரி செய்து அறிக்கை அளிக்க விரும்புகிறேன். மத்திய அரசாங்கம் கிராமப் பகுதிகளிலே அவர்கள் வீடுகள் கட்டிக்கொள்வதற்காக 1,450 ரூபாய் கடனாகவும், 600 ரூபாய் மானியமாகவும், நகர்ப்புறப் பகுதிகளிலே ரூபாய் 4,100 கடனாகவும் தருகிறது என்று திருத்தி அந்தக் கேள்விக்குரிய பதிலை—இதைப் பற்றி ஒரு அறிக்கை@ மேஜை மீதும் வைக்கப்பட்டிருக்கிறது—இந்த அவைக்கு நான் தெரிவித்துக் கொள்கிறேன்.

## 6. ஆளுநர் பேருரைக்கு நன்றி கூறும் தீர்மானத்தின்மீது விவாதம்

<u>திரு. என். கணபதி</u> : மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர் அவர்களே, "1973-ஆம் ஆண்டு பிப்ரவரித் திங்கள் 2-ஆம் நாளன்று இரு அவைகளும் சேர்ந்த சட்டமன்றக் கூட்டத்தில் ஆளுநர் அவர்கள் உவந்தளித்த பேருரைக்கு* தமிழ்நாடு சட்டப் பேரவை உறுப்பினர்கள் பெரிதும் நன்றியுடையவர்களாவர்" என்ற தீர்மானத்தை நான் முன்மொழிகிறேன்.

---

@ 335—337 -ம் பக்கங்களில் இரண்டாம் இணைப்பாக அச்சிடப் பட்டுள்ளது.

* 337—344 ம் பக்கங்களில் மூன்றும் இணைப்பாக அச்சிடப்பட்டுள்ளது.

* 345—354 -ம் பக்கங்களில் ஆளுநர் பேருரையின் தமிழாக்கம் நான்காம் இணைப்பாக அச்சிடப்பட்டுள்ளது.

திரு. எஸ். முருகையன் : பேரவைத் துணைத் தலைவர் அவர்களே, ஆளுநர் அவர்கள் உரைக்கு நன்றி தெரிவிக்கும் முறையில் நண்பர் திரு. கணபதி அவர்கள் முன்மொழிந்த தீர்மானத்தை நான் வழிமொழிகிறேன்.

## 7. நடைமுறைக் கேள்வி.

### ஆளுநர் பேருரைக்கு நன்றி கூறும் தீர்மானத்தை முன்மொழியும் நாளன்று அதற்கான திருத்தங்களையும் முன்மொழிய அனுமதிப்பதுகுறித்து.

DR. H. V. HANDE : Sir, on a point of order, the practice in this House is to move the Motion of Thanks and then we move the amendments later. During the last two or three years, there has been great inconvenience for the Opposition Members in that all our amendments are clubbed together and then they are placed on the table of the House on the last day or last but one day of the discussion. When the Motion of Thanks is before the House, the amendments also must be before the House so that the Members can discuss both the Motion of Thanks and the amendments simultaneously. In one particular year I succeeded in having the amendment moved on the second day of the discussion on the Governor's Address. That was when the Minister for Co-operation, Thiru Aditanar, was the Speaker. On 13th February 1968 when my Party Member, Thiru Krishnaswami Gounder, started making his speech, I brought forward an amendment which was allowed to be placed before the House on the second day of the discussion on the Governor's Address. Now I have given notice of an amendment and if the Deputy Speaker permits, I will move it now itself. I have taken care to see that no unparliamentary word is used there. So I request that I may be permitted to move my amendment now.

THIRUMATHI T. N. ANANDANAYAKI : Sir, I also want to refer to one matter. For Demands for Grants we give notice of cut motions and they are all printed and placed on the table of the House but that is not followed in the case of the Governor's Address and so the Members of the Opposition are at a great disadvantage. Therefore, I suggest that the amendments that we have given notice of should be printed and placed on the table of the House so that the House may be benefited by the amendments





given notice of by Members. I have also got three amendments. So, I suggest that the Chair can fix a time-limit for giving notice of amendments.

திரு. கே. டி. கே. தங்கமணி : எங்கள் கட்சி சார்பாகவும் நாங்கள் இதிலே ஏற்கனவே சில அமெண்ட்மெண்ட்ஸ் கொடுத்திருக்கிறோம். அதை பார்மலாக மூவ் பண்ணுவதற்கு முடியாவிட்டாலும் அதை சர்க்குலேட் செய்தால் மாண்புமிகு உறுப்பினர்கள் எல்லோரும் பேசுவதற்கு வாய்ப்பாக இருக்கும் என்பதைத் தெரிவித்துக் கொள்கிறேன்.

DR. H. V. HANDE : Even in the case of Bills, we give notice of amendments and at the time of the consideration of the Bills, both the Bills and the amendments are before the House. It would also be advantageous to the Members of the ruling party who can speak on them also.

MR. DEPUTY SPEAKER : I must thank Dr. Hande for quoting certain precedents. But it cannot be done all of a sudden. These amendments must be scrutinised first. So I fix up the time as 1 O' Clock today. Before 1 O' Clock today, the amendments should be submitted and tomorrow, when we meet they will be circulated.

## 6. ஆளுநர் பேருரைக்கு நன்றிகூறும் தீர்மானத்தின்மீது விவாதம் —தொடர்ச்சி.

திரு. என். கணபதி : மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர் அவர்களே, திராவிட முன்னேற்றக் கழகம் ஆட்சிப் பொறுப்பை யேற்று ஆறுண்டுக் காலம் முடிந்து இன்றைய தினம் ஏழாவது ஆண்டிலே அடி வைக்கிறது. மாண்புமிகு மேதகு ஆளுநர் அவர்கள் நம்முடைய சட்டப்பேரவை, சட்ட மேலவை ஆக இரு அவைகளும் சேர்ந்த சட்டமன்றக் கூட்டத்தில் திராவிட முன்னேற்றக் கழக அரசின் கொள்கைகளையும், அது எதிர்காலத்தில் உருவாக்க இருக்கின்ற நல்ல திட்டங்களையும், மக்களுக்குச் செய்யக்கூடிய நல்ல நன்மைகளையும் மிகத் தெளிவாகத் தன்னுடைய உரையிலே குறிப்பிட்டிருக்கிறார்கள்.

முதன்முதலாக, நம்முடைய தமிழ்நாட்டின் தேசியச் சின்னமாகக் கருதப்பட்டு வந்த திரு. சக்கரவர்த்தி இராஜகோபாலாச்சாரியார் அவர்களின் மறைவிற்காகத் தன்னுடைய அனுதாபத்தைத் தெரிவித்துக்கொண்டு இருக்கிறார்கள்.

திரு. எஸ். முருகையன் : பேரவைத் துணைத் தலைவர் அவர்களே, ஆளுநர் அவர்கள் உரைக்கு நன்றி தெரிவிக்கும் முறையில் நண்பர் திரு. கணபதி அவர்கள் முன்மொழிந்த தீர்மானத்தை நான் வழி மொழிகிறேன்.

## 7. நடைமுறைக் கேள்வி.

ஆளுநர் பேருரைக்கு நன்றி கூறும் தீர்மானத்தை முன் மொழியும் நாளன்று அதற்கான திருத்தங்களையும் முன்மொழிய அனுமதிப்பதுகுறித்து.

DR. H. V. HANDE : Sir, on a point of order, the practice in this House is to move the Motion of Thanks and then we move the amendments later. During the last two or three years, there has been great inconvenience for the Opposition Members in that all our amendments are clubbed together and then they are placed on the table of the House on the last day or last but one day of the discussion. When the Motion of Thanks is before the House, the amendments also must be before the House so that the Members can discuss both the Motion of Thanks and the amendments simultaneously. In one particular year I succeeded in having the amendment moved on the second day of the discussion on the Governor's Address. That was when the Minister for Co-operation, Thiru Aditanar, was the Speaker. On 13th February 1968 when my Party Member, Thiru Krishnaswami Goundеr, started making his speech, I brought forward an amendment which was allowed to be placed before the House on the second day of the discussion on the Governor's Address. Now I have given notice of an amendment and if the Deputy Speaker permits, I will move it now itself. I have taken care to see that no unparliamentary word is used there. So I request that I may be permitted to move my amendment now.

THIRUMATHI T. N. ANANDANAYAKI : Sir, I also want to refer to one matter. For Demands for Grants we give notice of cut motions and they are all printed and placed on the table of the House but that is not followed in the case of the Governor's Address and so the Members of the Opposition are at a great disadvantage. Therefore, I suggest that the amendments that we have given notice of should be printed and placed on the table of the House so that the House may be benefited by the amendments



given notice of by Members. I have also got three amendments. So, I suggest that the Chair can fix a time-limit for giving notice of amendments.

திரு. கே. டி. கே. தங்கமணி : எங்கள் கட்சி சார்பாகவும் நாங்கள் இதிலே ஏற்கனவே சில அமெண்ட்மெண்ட்ஸ் கொடுத்திருக்கிறோம். அதை பார்மலாக மூவ் பண்ணுவதற்கு முடியாவிட்டாலும் அதை சர்க்குலேட் செய்தால் மாண்புமிகு உறுப்பினர்கள் எல்லோரும் பேசுவதற்கு வாய்ப்பாக இருக்கும் என்பதைத் தெரிவித்துக் கொள்கிறேன்.

DR. H. V. HANDE : Even in the case of Bills, we give notice of amendments and at the time of the consideration of the Bills, both the Bills and the amendments are before the House. It would also be advantageous to the Members of the ruling party who can speak on them also.

MR. DEPUTY SPEAKER : I must thank Dr. Hande for quoting certain precedents. But it cannot be done all of a sudden. These amendments must be scrutinised first. So I fix up the time as 1 O' Clock today. Before 1 O' Clock today, the amendments should be submitted and tomorrow, when we meet they will be circulated.

## 6. ஆளுநர் பேருரைக்கு நன்றிகூறும் தீர்மானத்தின்மீது விவாதம் —தொடர்ச்சி.

திரு. என். கணபதி : மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர் அவர்களே, திராவிட முன்னேற்றக் கழகம் ஆட்சிப் பொறுப்பை யேற்று ஆறாண்டுக் காலம் முடிந்து இன்றைய தினம் ஏழாவது ஆண்டிலே அடி வைக்கிறது. மாண்புமிகு மேதகு ஆளுநர் அவர்கள் நம்முடைய சட்டப்பேரவை, சட்ட மேலவை ஆக இரு அவைகளும் சேர்ந்த சட்டமன்றக் கூட்டத்தில் திராவிட முன்னேற்றக் கழக அரசின் கொள்கைகளையும், அது எதிர்காலத்தில் உருவாக்க இருக் கின்ற நல்ல திட்டங்களையும், மக்களுக்குச் செய்யக்கூடிய நல்ல நன்மை களையும் மிகத் தெளிவாகத் தன்னுடைய உரையிலே குறிப்பிட்டிருக் கிறார்கள்.

முதன்முதலாக, நம்முடைய தமிழ்நாட்டின் தேசியச் சின்னமாகக் கருதப்பட்டு வந்த திரு. சக்கரவர்த்தி இராஜகோபாலாச்சாரியார் அவர்களின் மறைவிற்காகத் தன்னுடைய அனுதாபத்தைத் தெரி வித்துக்கொண்டு இருக்கிறார்கள்.

அதன் பிறகு, இயற்கையின் சீற்றத்தினால் தென்னார்க்காடு, சேலம் போன்ற மாவட்டங்களில் கடுமையான சேதம் ஏற்பட்டதைக் குறித்தும், அந்த சேதத்தைக் குறித்து எடுக்கப்பட்ட நடவடிக்கைகளை குறித்தும் சிறப்பாகக் குறிப்பிட்டிருக்கிறார்கள்.

அதேபோன்று விவசாயத்தைப் பெருக்குவதற்கு, உர உற்பத்தியைப் பெருக்குவதற்கு, உரத்தை இறக்குமதி செய்ய மத்திய அரசு ஆவன செய்ய வேண்டுமென்றும் குறிப்பிட்டிருக்கிறார்கள்.

அதேபோன்று மின் சக்தி குறைந்து மின் வெட்டு ஏற்பட்டு தமிழ் நாட்டின் பொருளாதாரம் பாதிக்கக்கூடிய ஒரு நிலைமையைக் கருத்திற் கொண்டு அதற்காக நீண்டகாலப் பரிகாரம் காண வேண்டுமென்று எண்ணி நெய்வேலியிலே இன்னுமொரு சுரங்கத்தை உண்டாக்க வேண்டுமென்று மத்திய அரசைக் கேட்டுக்கொள்ளும் முறையிலேயும், அதேபோன்று கல்பாக்கத்திலும், மேட்டூரிலும், தூத்துக்குடியிலும் அனல் மின் நிலையங்களை உருவாக்குவதுபற்றியும் குறிப்பிட்டு இருக்கிறார்கள். இப்படிப் பல்வேறு சிறப்பான அம்சங்களைத் தன்னுடைய உரையிலே மேதகு ஆளுநர் அவர்கள் நம்முடைய அரசின் கொள்கைகளைப்பற்றியும், திட்டங்களைப்பற்றியும் சிறப்பாக எடுத்துக் கூறியதற்காக இன்றைய தினம் நாம் நம்முடைய நன்றியைத் தெரிவிக்கும் இந்தத் தீர்மானத்தை முன்மொழிந்து கொண்டிருக்கிறோம்.

திராவிட முன்னேற்றக் கழகம் ஆட்சிப் பொறுப்பையேற்று ஏறக்குறைய ஆறாண்டுகள் முடிந்து ஏழாவது ஆண்டில் அடி வைக்க இருக்கின்ற இந்த நாளில் கடந்த காலத்தில் திராவிட முன்னேற்றக் கழகம் என்னென்ன செய்திருக்கிறது என்பதை நாம் சற்றுச் சிந்தித்துப் பார்க்க வேண்டும். தேர்தல் நேரத்திலே சந்திக்கும் நேரத்தில் பல்வேறு வாக்குறுதிகளை அள்ளிவீசிவிட்டு வாக்குகளைப் பெற்ற பிறகு அந்த வாக்குகளை அளித்த வாக்காளப் பெருமக்களை மறந்துவிட்ட அந்த நிலையில் திராவிட முன்னேற்றக் கழகம் ஆட்சியை நடத்தவில்லை. ஜனநாயக நாட்டில் எல்லோரும் இந்நாட்டு மன்னர் என்று கருதும் கொள்கையின் அடிப்படையில், எல்லோரையும் உண்மையிலேயே இந்த நாட்டினுடைய மன்னர்களாக உருவாக்க வேண்டுமென்ற அடிப்படையில், எல்லோரும் சமதர்ம நல்வாழ்வு பெற வேண்டுமென்ற அடிப்படையில், எல்லோருடைய வாழ்க்கையும் ஒரே சீராக முன்னேற வேண்டுமென்ற அடிப்படையில் பல்வேறு திட்டங்





களை நம்முடைய நாட்டில் இந்த அரசு நிறைவேற்றிக்கொண்டிருக்கிறது. அதுபற்றி ஓரிரு நிலைமைகளை எடுத்துச் சொல்லக் கடமைப் பட்டிருக்கின்றேன்.

முன்னேற்றக் கழகம், குறிப்பாக இந்த அரசு விவசாயிகளுக்கு நல்ல நன்மைகளைச் செய்து விவசாய உற்பத்தியில் தீவிரமான அக்கறை செலுத்தி வந்திருக்கிறது. விவசாயிகளுக்குக் குறுகிய காலக் கடனாக 1966–67-இல் 31 கோடி ரூபாய் கொடுக்கப்பட்டது. குறுகிய காலக் கடன் அவர்கள் உரம் வாங்குவதற்கும், பல்வேறு விவசாய வேலைகளைக் கவனிப்பதற்கும், பூச்சி மருந்து தெளிப்பதற்கும், தங்களுடைய விவசாய உற்பத்தியைப் பெருக்குவதற்கும், அதன்மூலம் விவசாயிகள் தங்கள் வாழ்க்கைத் தரத்தை உயர்த்திக் கொள்வதற்கும் அந்தக் குறுகிய காலக் கடன் வழங்குகின்ற அந்த ஒரு திட்டத்தை முன்னேற்றக் கழகம் கடைப்பிடித்து வந்தது.

(திரு. நா. வீராசாமி—தலைமை)

நான் சார்ந்திருக்கிற பாபநாசம் தொகுதி விவசாயிகள் நிறைந்த தொகுதி. அந்தத் தொகுதியில் பல்வேறு நெருக்கடியான நேரங் களில் விவசாயத்திற்காக விவசாயிகள் படுகின்ற அல்லல்களைப் பார்த்த நேரத்தில் நமது அரசு எவ்வளவு நல்ல திட்டங்களை நிறை வேற்றி வருகிறது என்பதை என்னுடைய மனதால் பாராட்டாமல் இருக்க முடியவில்லை. குறுகிய காலக் கடனாக 1966–67-ல் 31 கோடி ரூபாய் கொடுக்கப்பட்டது. ஆனால் அதே காரியத்திற்காக 1972-73-இல் 65 கோடி ரூபாய் கொடுக்கின்ற அளவில் நாம் அந்த முன்னேற்றத்தைக் கண்டிருக்கிறோம். அதனால் விவசாயிகளுக்கு நன்மைகளைப் பெருக்கியிருக்கிறோம். நீண்டகாலக் கடன்கள் அவர்கள் கிணறுகளை வெட்டுவதற்கும், பல்வேறு பாசன வசதிகளைச் செய்து கொள்வதற்கும் அவர்களுக்கு ஒரு நல்ல திட்டத்தை வகுத்து 1966–67-ல் 4 கோடி ரூபாய் கொடுக்கப்பட்டிருந்தது. அதே திட்டத்தின்கீழ் 1972–73-ல் 35 கோடி ரூபாயை நாம் கொடுத்திருக்கிறோம்.

நாம் ஏழை விவசாயிகளை மட்டும் கவனிக்கவில்லை. விவசாயிகள் என்று சொல்லும் நேரத்தில் விவசாயக் கூலிகள், பெரும்பாலான தாழ்த்தப்பட்ட மக்கள் அரிசனக் காலனிகளில் இருக்கிறார்கள். அந்த அரிசன மக்கள் தங்கள் வாழ்க்கையில் முன்னேறி மற்ற உயர்ந்த

ஜாதிக்காரர்களைப்போல் நாட்டில், சமுதாயத்தில் உயர்ந்த இடத்தை பெறவேண்டுமென்று முன்னேற்றக் கழகம் பாடுபடுகிறது, இந்த அரசு பாடுபட்டு வருகிறது. தாழ்த்தப்பட்ட மக்கள், பிற்படுத்தப் பட்ட மக்கள் நல்ல விதமாக முன்னேறி சமுதாயத்தில் நல்ல இடத்தைப் பெற வேண்டுமென்ற அளவில் இந்த அரசு மிகவும் தீவிரமாக அக்கறை செலுத்தி பாடுபட்டு வருகிறது என்பதை மறுக்க முடியாது.

தாழ்த்தப்பட்டோருக்காக 1967-ஆம் ஆண்டு $3\frac{1}{2}$ கோடி ரூபாய் செலவு செய்யப்பட்டு வந்தது. ஆனால் அதே திட்டத்தின்கீழ் 1972-ம் ஆண்டில் $8\frac{1}{2}$ கோடி ரூபாய் செலவு செய்யும் அளவில் நாம் இப்பொழுது தாழ்த்தப்பட்டவர்களின் வாழ்க்கைக்காக அக்கறை செலுத்தி நல்ல முற்போக்குத் திட்டங்களை நிறைவேற்றுகிறோம். அதேபோன்று பிற்படுத்தப்பட்ட மக்களுக்காக 1967-இல் 1 கோடி ரூபாய் செலவு செய்து அவர்களின் முன்னேற்றத்தைக் காண முயன்றார்கள். ஆனால் இப்பொழுது 1972-இல் $4\frac{1}{2}$ கோடி ரூபாய் செலவு செய்து பிற்படுத்த மக்களையும் முன்னேற்றுகின்ற முறை களிலே ஈடுபட்டுக் கொண்டிருக்கிறோம். ஆண்டவன் சந்நிதானத்தில் எல்லோரும் சமம் என்று நம்முடைய வேத, வேதாந்தங்கள் எல்லாம் சொல்லும். ஆனால் இடையிலே இருக்கும் நந்திகள், நீ இங்கே வரக் கூடாது, ஆண்டவனைப் பார்க்கக் கூடாது என்று இருக்கும் நிலை. நந்தனார் கதையைப் பார்க்கிறோம், நந்தி குறுக்கே நின்று ஆண்டவனை பார்க்க முடியாத நிலையில் இருந்து பிறகு பார்க்கக்கூடிய முறையில் விலகிச் செல்கிறது. ஆனால் தாழ்த்தப்பட்ட மக்கள், தீண்டத்தகாத மக்கள் என்று கருதப்படுகின்றவர்கள் ஆண்டவன் சந்நிதானத்திற்குச் சென்று ஆண்டவனை வணங்குவதோடு மட்டுமல்லாமல் ஆண்டவ னுக்குத் தோத்திரம் சொல்லி மற்றவர்களுக்கு வக்காலத்து வாங்கு கின்ற பூசாரிகளாக, புரோகிதர்களாக இருக்கும் நிலைமையை நம்முடைய திராவிட முன்னேற்றக் கழக அரசுதான் சாதித்திருக்கிறது என்பதை மறந்துவிடக் கூடாது. அதற்கு முதல்படியாக உயர்ந்த ஜாதிக்காரர்கள்தான் அறங்காவலர்களாக எல்லாக் கோயில்களிலும் இருக்க வேண்டுமென்ற நிலையை மாற்றி அரிசனங்களும்கூட கட்டாய மாக இருக்க வேண்டுமென்ற ஒரு முன்னேற்றமான திட்டத்தைக் கொண்டுவந்து, இந்தத் திட்டத்தின்கீழ் பெரிய பெரிய கோயில் களில், அவர்கள் நினைத்துப் பார்க்க முடியாத கோயில்களில்கூட தாழ்த்தப்பட்ட மக்கள் அங்கே ஆண்டவனை வணங்கி, மற்றவர்கள்



வணங்குவதற்கும் வசதி செய்து கொடுக்கின்ற முயற்சிகளை எடுத்துக் கொள்ளும் நல்ல வழிவகைகளைத் திராவிட முன்னேற்றக் கழக அரசு செய்திருக்கிறது.

அதேமாதிரி நாம் கல்வியில் எவ்வளவு அக்கறை செலுத்தியிருக் கிறோம் என்பதைச் சற்றுச் சிந்தித்துப் பார்க்க வேண்டும். 1966–67-இல் பள்ளி மாணவர்களின் எண்ணிக்கை 13 லட்சத்து 4 ஆயிரம். ஆனால் 71–72-இல் 15 லட்சத்து 38 ஆயிரம் மாணவர்கள் பள்ளியிலே சென்று பாடம் படிக்கின்ற அளவில், கல்வி பயிலும் விதத்தில், தங்கள் அறிவை வளர்த்துக்கொள்ளும் நல்ல திட்டத்தை முன்னேற்றக் கழக அரசு செய்திருக்கிறது. 66–67-இல் கல்லூரி மாணவர்கள் 94,000 பேர்தான். ஆனால் 71–72-இல் கணக்கைப் பார்த்தால் ஏறக்குறைய 2 லட்சம் பேர் கல்லூரிகளுக்குச் சென்று கல்வி பயிலுவதற்கு வழி வகுத்திருக்கிறது என்றால் அப்படி நம்முடைய அரசு செய்துவருவதை நாம் சாதாரணமானது என்று தள்ளிவிடக்கூடிய நிலைமையில் இல்லை.

அதேபோல் சென்னையில் குடிசை வாழ் மக்கள், ஏழை மக்கள், தாழ்த்தப்பட்ட, பிற்படுத்தப்பட்ட மக்களும் சுகாதார வசதியோடு வாழவேண்டும், வாழ்க்கை வசதிகளோடு வாழவேண்டும், நல்ல சூழ் நிலைகளில் வாழவேண்டும் என்பதற்காகக் குடிசை மாற்று வாரியம் அமைக்கப்பட்டு இப்பொழுது ஏறக்குறைய 23,232 கட்டடங்களைக் கட்ட வேண்டிய நிலைமைகளை உருவாக்கும் அந்தத் திட்டத்தைத் தீட்டி அதை ஓரளவிற்கு நிறைவேற்றி இன்றைக்குக் கிட்டத்தட்ட 5,000 வீடுகள் கட்டி முடிக்கப்பட்டு இருக்கிறது. விரைவில் ந.ப.
எல்லோருக்கும் நல்ல வீடுகள் கட்டிக் கொடுக்கக்கூடிய நிலைமைகள் 12-00
உருவாகி இருக்கின்றன.

அதேபோல் குடிநீர்த் திட்டத்தை உருவாக்க, எல்லாக் கிராமங் களுக்கும், நகரங்களுக்கும் நல்ல குடிதண்ணீர் வசதி செய்து கொடுக்க, கிராம மக்கள் சுகாதார வாழ்வு வாழ நண்பர் கந்தப்பன் அவர்கள் தலைமையில் குடிநீர் வாரியம் சீராகப் பணியாற்றி வருகிறது.

சாதாரணமாக, கிராமங்களில் இருக்கக்கூடியவர்கள் முன்னேற்றத் திட்டங்களில் பங்கு கொள்ள முடியாத நிலைமை இருப்பதை மாற்றி இன்றைக்கு அவர்களுக்கும் எல்லா வசதிகளும் சேரக்கூடிய அளவுக்கு பல்வேறு திட்டங்களை நிறைவேற்றி வருகிறோம். மின்சார வசதியைப் பொறுத்தவரையில் 1967-72-இல் ஏறக்குறைய 18,036 அரிசனக் காலனிகளுக்கு மின்னொளி வழங்கியிருக்கிறோம். கிராமங்களைப்

பொறுத்தவரையில் 1967-72-இல் 38,000 கிராமங்களுக்கு மின்னொளி வழங்கி இருக்கிறோம். இன்னும் ஓராண்டுக் காலத்திற்குள் மீதி இருக்கும் மூவாயிரம் கிராமங்களுக்கும் மின்சாரம் வழங்கப்படும் நிலைமை இருக்கிறது.

இப்படிப் பல்வேறு திட்டங்களை நிறைவேற்றி வருகிற திராவிட முன்னேற்றக் கழக அரசை, கலைஞர் அரசை, நம்முடைய தமிழ் மக்களின் அரசை எப்படியாவது கவிழ்த்துவிட வேண்டுமென்ற சுய நலம் கொண்ட சிலர் மக்களிடம் ஏதேதோ சொல்லிக் குற்றம் குறை கூறிக்கொண்டு வருகிறார்கள். நம்முடைய நாட்டில் பணியாற்றக் கூடிய எதிர்க்கட்சிகள், செய்யத் தவறிய காரியங்கள் இது இது என்று சுட்டிக் காட்டி நாட்டு மக்களின் முன்னேற்றத்திற்கு உறுதுணையாக இருக்க வேண்டியவர்கள் எதிர்க்கட்சியின் அந்தப் பணியை மறந்து விட்டு—மறந்து விட்டு என்று கூடச் சொல்ல முடியாது—திராவிட முன்னேற்றக் கழக அரசின் மீது எந்தவிதமான குறையையும் எடுத்துச் சொல்ல முடியாத நிலைமையில் அவர்கள் இன்றையதினம் பல்வேறு விதமான முயற்சிகளில் ஈடுபட்டு வருகிறார்கள். அந்த முயற்சிகள் ஓரளவு முறியடிக்கப்பட்டு இன்றையதினம் நல்ல நிலைமை உருவாகி இருக்கிறது என்பதை நாம் எல்லோரும் மறந்துவிட முடியாது.

நம்மிலிருந்து பிரிந்து சென்ற சிலர் இந்த ஆட்சியைக் கவிழ்த்து விட வேண்மென்பதற்காக டில்லிக்குச் சென்று குற்றப் புகார் மனுவை கொடுக்கிறார்கள். அப்படிக் கொடுத்த புகார் மனுவை தமிழக அரசுக்கு டில்லியில் இருந்து அனுப்பி வைத்தார்கள். அப்படி அனுப்பி வைத்த புகார்களையும், அதற்குத் தரப்பட்ட சமாதானங் களையும் மாண்புமிகு முதல்வர் அவர்கள் சட்ட மன்றத்தில் கடந்த கூட்டத்தில் வைத்தார்கள். அவர்கள் இந்தப் புகார் மனுவைக் கொடுத்துவிட்டு "தமிழக அரசு டிஸ்மிஸ் செய்யப்பட்டு விடும், ஆட்சிப்பீடத்தில் இருந்து இறக்கிவிடப்படுவார்கள், தமிழக அரசு ஆட்சி செய்ய லாயக்கற்றது என்று மத்திய அரசு நடவடிக்கை எடுக்கும்" என்று நம்பத்தக்க விதத்தில் தமிழ் மக்களிடத்தில் தவறான பிரசாரத்தைச் செய்து வந்தார்கள். அவை எல்லாம் பொய்யாகக் கூடிய விதத்தில் நல்ல நிலைமை உருவாகி இருக்கிறது என்று இந்த நேரத்தில் தெரிவிக்கக் கடமைப்பட்டிருக்கிறேன்.

இருந்தாலும் ஒரே ஒரு வருந்தத்தக்க நிலைமை நம்முடைய நாட்டில் இருக்கிறது. நம்முடைய அரசியலமைப்புச் சட்டத்தின்படி மத்திய அரசும் மாநில அரசுகளும் தனித் தனி அதிகாரம் படைத்த



அரசுகள். அந்த அரசுகள் ஒன்றின் மேல் ஒன்று அதிகாரம் செலுத்த முடியாது. மத்திய அரசு மாநில அரசின்மேல் அதிகாரம் செலுத்துவ தற்குச் சட்டத்தில் இருக்கிற ஓரிரு விதிமுறைகளைத்தவிர வேறு துறை களில் அதிகாரம் செலுத்தக் கூடாது என்ற அளவுக்கு நம்முடைய நாட்டு அரசியலமைப்புச் சட்டம் இருக்கிறது. முன்னாள் தலைமை நீதிபதியாக இருந்த சுப்பராவ் என்பவர் 1963-ஆம் ஆண்டு சுப்ரீம் கோர்ட்டில் நடைபெற்ற வழக்கில் மேற்கு வங்காளத்திற்கும் மத்திய அரசுக்கும் இடையில் ஏற்பட்ட வழக்கில் கீழ்க்கண்டவாறு ஒரு கருத்தைச் சொன்னார்கள்.

The Indian Constitution accepts the federal concept and distribution of sovereign powers between co-ordinated constitutional entities i.e. Union and the States.

இந்திய அரசியலமைப்புச் சட்டம் பெடரல் கூட்டாட்சித் தத்து வத்தை ஏற்றுக் கொண்டிருக்கிறது என்பதைச் சொல்லிவிட்டு

The concept implies that one cannot encroach upon Governmental function or instrumentality of the other unless the Constitution expressly provided for such interference.

என்று கூறியிருக்கிறார். இந்த ஒரு கருத்தின் அடிப்படையில் மத்திய அரசு மாநில அரசின் விவகாரங்களில் தலையிடக் கூடாது, தலையிட முடியாது என்ற நிலைமைதான் அரசியலமைப்புச் சட்டத்திலே இருக்கிறது என்று தெளிவாக எடுத்துக் கூறினார்.

நம்முடைய அரசியலமைப்புச் சட்டத்தில் கூட்டாட்சித் தத்துவம் நிறைவேற்றப்பட்டிருக்கிறது. மத்திய அரசும், மாநில அரசும் தனித் தனி அரசுகளாகக் கருதப்பட வேண்டும். மாநில அரசில் மத்திய அரசு தலையிட அதிகாரம் அரசியலமைப்புச் சட்டத்தில் தரப்பட வில்லை. அப்படிப்பட்ட ஒரு நிலைமையில் எப்படியாவது மத்திய அரசு மாநில அரசு விவகாரத்தில் தலையிட்டு விசாரணைக் கமிஷன் நியமிக்கலாமா என்ற எண்ணத்தில் இருக்கக்கூடிய நிலைமையில் இருப்பது போல் இங்கு வருகிற மத்திய அமைச்சர்கள் தங்களுடைய கருத்துக்களைச் சொல்லிக்கொண்டிருக்கிறார்கள். மோகன் குமாரமங்கலம் வருகிறார், விசாரணைக் கமிஷன் பற்றி விரைவில் முடிவு எடுக்கப்படும் என்று கூறுகிறார். மிர்தா என்ற மத்திய அமைச்சர் திருவனந்தபுரத்தில் போய் மத்திய அரசுக்கு விசாரணைக் கமிஷன் அமைக்க அதிகாரம் இருக்கிறது என்று கூறுகிறார்.

[திரு. என். கணபதி] [1973 பிப்ரவரி 6

சி. சுப்பிரமணியம் வருகிறார்—விசாரணைக் கமிஷன் வைக்க மத்திய அரசுக்கு அதிகாரம் இல்லையென்றால் நீங்களே வைத்துக்கொள்ளுங் களேன் என்று சொல்லுகிறார். இதையெல்லாம் அவர்கள் சொல்ல உரிமை இருக்கிறதா என்பதை இந்த நாட்டில் இருக்கும் நாம் சிந்தித்துப் பார்க்க வேண்டும்.

நாம் ஜனநாயக நாட்டில் இருக்கிறோம். மக்களாட்சித் தத்துவத்தில் ஆட்சியை நடத்திக் கொண்டிருக்கிறோம். நமக்கு அரசுரிமை சாவரினிடி என்ற தனித் தன்மை பெற்றதாக இருக்கிறது. சாவரின் பீப்பிளாக இருக்கும் நம்மீது, இந்த மாநில அரசு மீது விசாரணை நடத்த மத்தியில் இருக்கும் அரசு வரப் போகிறது, வரப் போகிறது என்று மிரட்டும் அளவுக்கு மத்திய அமைச்சர்கள் நடந்து கொள்ளுவது சரியா என்று நாம் சிந்தித்துப் பார்க்க வேண்டும்.

அரசியலமைப்புச் சட்டப்படியானாலும் சரி, வேறு சட்டப்படியானாலும் சரி, மத்திய அரசு மாநில அரசுமீது விசாரணைக் குழு அமைக்க எந்த விதமான அதிகாரமும் இல்லை என்பதை இந்த நேரத்தில் அழுத்தந்திருத்தமாகத் தெரிவிக்கக் கடமைப்பட்டிருக்கிறேன். அப்படி வருகிற மத்திய அமைச்சர்கள் தங்கள் கட்சி ஆளும் மாநிலங்களில் என்ன நிலைமை இருக்கிறது என்பதைச் சிந்தித்துப் பார்க்க வேண்டும். ஒரிஸ்ஸாவில் ஆட்சி மாறக்கூடிய நிலைமை ஏற்பட்டிருக்கிறது. அங்கு முதலமைச்சராக இருக்கக்கூடிய திருமதி நந்தினி சத்பதி தன் பதவியைக் காப்பாற்றிக் கொள்ள பல்வேறு கஜகர்ணங்கள் செய்து, குட்டிக்கரணங்கள் போட்டு சர்க்கஸ் வேலை செய்து கொண்டிருக்கிறார். அங்கு ஏழாக இருந்த அமைச்சரவை 15 ஆகி, விரைவில் 21 ஆகப் போகிறது என்று சொல்லுகிறார்கள். மத்திய அமைச்சர் தீட்சித் ஒரிஸ்ஸாவுக்கும் டில்லிக்குமாக விமானத்தில் பறந்து கொண்டிருக்கிறார். அவர்களைப் பற்றி அந்த மாநில சுதந்திரக் கட்சித் தலைவர் கூறிய கருத்துக்களை நான் தெரிவிக்க கடமைப்பட்டிருக்கிறேன்.

"இந்திரா காந்தி அம்மையார் காங்கிரஸ் கட்சி ஒரிஸ்ஸா மாநிலத்தில் ஜனநாயகக் கொலையைச் செய்து கொண்டிருக்கிறது" என்று அறிக்கை வெளியிட்டிருக்கிறார்கள். அங்கு அமைக்கப்பட்ட அமைச்சரவையில் 15 பேரில் 6 பேர் கட்சி மாறிப் போனதால் அமைச்சர் பதவி பெற்றவர்கள். கட்சி மாறிப் போனவர்களுக்கு



1973 பிப்ரவரி 6] [திரு. என். கணபதி]

அமைச்சரவையில் இடம் கொடுத்து ஜனநாயகக் கொலையைச் செய்து ஆட்சியை நிலைநிறுத்தும் காரியத்தை அவர்களுடைய கட்சி செய்து கொண்டிருக்கிறது.

அடுத்து, சட்டம் ஒழுங்கு செத்துவிட்டது என்று மத்திய அமைச்சர்கள் கூறிக் கொண்டிருக்கிறார்கள். சட்டம் ஒழுங்கு அவர்கள் ஆட்சி செய்யும் உ.பி. மாநிலத்தில் எப்படி இருக்கிறது என்பதைப் பற்றி இந்தியன் எக்ஸ்பிரஸ் பத்திரிகை டிசம்பர் மாதம் 20-ஆம் தேதி என்ன எழுதியிருக்கிறது என்பதைத் தங்கள் அனுமதியோடு படித்துக் காட்ட விரும்புகிறேன்.

' A frightening situation. '

"பயங்கரமான நிலைமை" என்று தலைப்பிட்டு இந்தியன் எக்ஸ்பிரஸ் பத்திரிகை தலையங்கம் எழுதியிருக்கிறது.

' The law and order situation in Uttar Pradesh was never satisfactory. '

எப்போதுமே நல்ல விதமாக இருந்ததில்லை.........

' But it was never perhaps as bad as it is now. '

இப்போது மிகவும் மோசமாக இருக்கிறது என்று சொல்ல ஆரம்பித்து, சட்ட மன்றத்தில் உறுப்பினர்கள் சட்டம் ஒழுங்கு மிகக் கேவலமாக இருப்பதைப் பற்றிப் பேசியிருப்பதைச் சுட்டிகாட்டு கிறது.

' The members of the U. P. legislative were not overdrawing the picture when they said that it was no longer safe to travel by road after night-fall.

சட்டப் பேரவை உறுப்பினர்கள் பேசுகின்றார்கள். அவர்கள் பேசுவது மிகைப்படுத்திப் பேசுவதாகாது என்று குறிப்பிட்டுவிட்டு, இரவு நேரங்களில், இருள் குவிந்த பிறகு தெருவில் நடமாட முடியாத நிலைமை இருக்கிறது என்ற அளவுக்குப் பயங்கரமான நிலைமை இருப்பதைப் பற்றிச் சட்டப் பேரவை உறுப்பினர்கள் பேசியிருக்கிறார்கள்.

இப்படி மிக மோசமான நிலையில் சட்டம், ஒழுங்கு இவற்றைக் காப்பாற்ற முடியாத அரசு உத்தரப் பிரதேசத்தில் இருந்துகொண்டிருக்கிறது. ஹரியானாவைப் பார்க்கும்போது அங்கு திரு. பன்சிலால்

மீது பல்வேறு குற்றச்சாட்டுகள் சொல்லப்பட்டிருக்கின்றன. பிஹார் மாநிலத்தை எடுத்துப் பார்க்கிறபோது திரு. பி. சி. சேதி அவர்கள் தலைமையில் இயங்கும் அமைச்சரவையில் உள்ள மூன்று அமைச்சர்கள் மீது உயர்நீதி மன்றத்தில் விசாரணை நடந்து கொண்டிருக்கிறது.

திரு. ஏ. ஆர். மாரிமுத்து : பீஹார் மாநிலத்தில் திரு. சேதி அவர்கள் முதல் அமைச்சர் இல்லையே.

திரு. என். கணபதி : திரு. சேதி அவர்கள் எம். பி-யின் முதல் அமைச்சர் என்பது எனக்குத் தெரியும். இருந்தாலும், அவர்களது கட்சிக்காரர்கள் எவ்வளவுதூரம் என் பேச்சைக் கேட்டுக்கொண்டிருக்கிறார்கள் என்பதை அறிவதற்காக ஒரு தவறான தகவலைச் சொல்லி விட்டேன். எம்.பி.யின் முதல் அமைச்சர் திரு. சேதி என்பது எனக்குத் தெரியும். அவர் தலைமையில் இயங்கும் அமைச்சரவையில் உள்ள மூன்று அமைச்சர்கள்மீது உயர்நீதி மன்றத்தில் விசாரணை நடந்து கொண்டிருக்கிறது. உடனே அங்குள்ள சட்ட மன்றத்தில் ஒரு கேள்வி எழுப்பப்படுகிறது. இந்த மூன்று அமைச்சர்கள்மீது விசாரணை நடந்து கொண்டிருப்பதால் இந்த அமைச்சர்கள் ராஜிநாமா செய்வார்களா அல்லது செய்யச் சொல்லுங்கள் என்ற கேள்வி அச்சட்டமன்றத்தில் எழுப்பப்பட்டிருக்கிறது.

திரு. ஏ. ஆர். மாரிமுத்து : மதிப்பிற்குரிய உறுப்பினர் தவறான தகவல்களைக் கொடுத்துக்கொண்டிருக்கிறார்கள். மத்திய பிரதேசத்தில் பி. சி. சேதி அவர்கள் தலைமையில் இன்றையதினம் இயங்கக்கூடிய அமைச்சரவையில் உள்ள அமைச்சர்களின் பேரில் அல்ல குற்றச்சாட்டு முன்பிருந்த அமைச்சரவையில் இருந்தவர்கள் பேரில்தான் குற்றச்சாட்டு என்பதைத் தெரிவித்துக்கொள்கிறேன்.

திரு. செ. கந்தப்பன் : குற்றச்சாட்டுகள் இருப்பது இந்திரா காங்கிரஸ் கட்சியைச் சார்ந்தவர்கள்மீது என்று சொல்கிறார்கள்.

திரு. ஏ. ஆர். மாரிமுத்து : இன்றையதினம் உள்ள அமைச்சர் அவையைச் சார்ந்தவர்கள் என்று சொன்னார்கள், அதைத்தான் திருத்தினேன்.



திரு. என். கணபதி : மூன்று அமைச்சர்கள்மீது இப்போது ஆட்சியில் இருப்பவர்கள்மீது நீதி விசாரணை நடைபெறுவதைக் குறிப்பிட்டு அதுபற்றி சட்டமன்றத்தில் கேட்கப்பட்டு, அவர்கள் ராஜிநாமா செய்யமாட்டார்கள் என்ற அளவில்தான் திரு. பி. சி. சேதி அவர்கள் பேசியிருக்கிறார்கள்.

அதேபோல் பல்வேறு மாநிலங்களில் இந்திரா காங்கிரஸ் கட்சியைச் சேர்ந்தவர்கள், ஆட்சியில் இருக்கிறவர்கள் என்னென்ன செய்துள்ளார்கள் என்பதை எல்லாம் இந்த நாடு நன்கு அறியும். அப்படி தங்களுக்குள்ளே ஓட்டையை வைத்துக்கொண்டு, அவர்களுக்குள்ளே பலவித குற்றச்சாட்டுகளை வைத்துக்கொண்டு அப்பழுக்கற்ற ஆட்சி நடைபெற்று வரும் தமிழ்நாட்டைப் பார்த்து தாறுமாறாகப் பேசிவிட்டுப் போவது என்ற கொள்கையை வைத்துக்கொண்டிருக்கும் இந்திரா காங்கிரஸ் கட்சி அமைச்சர்களுக்கு என் கண்டனத்தைத் தெரிவித்துக்கொள்ள நான் கடமைப்பட்டிருக்கிறேன். தன் வீட்டை முதலில் திருத்திக் கொள்ளட்டும், பிறகு அடுத்த வீட்டு ஜன்னலைப் பார்க்கலாம் என்பதைத் தெரிவித்துக்கொள்கிறேன். இவர்கள் இப்படிச் செய்துவிட்டுப் போவது சில நேரங்களில் வருந்தத்தக்கதொரு நிலைமையை உருவாக்குகிறது. மத்திய மாநில அரசுகளில் உறவுகூட பாதிக்கக்கூடிய அளவில் நிலைமைகள் இருக்கின்றன என்பதை வலியுறுத்திக் கூறக் கடமைப்பட்டிருக்கிறேன்.

எதிர்க்கட்சிகள் இருக்க வேண்டியதுதான், குறைகள் இருந்தால் சட்டமன்றத்தில் விமர்சனம் செய்ய வேண்டியதுதான், குற்றச்சாட்டுகள் இருந்தால் எடுத்துச் சொல்லவேண்டியதுதான், திட்டங்களில் உள்ள ஓட்டை உடைசல்களைப் பற்றி விமர்சனம் செய்ய அவர்களுக்கு நல்ல உரிமை உண்டு. ஆனால் பலமான ஒரு கட்சி நாட்டில் ஆட்சி நடத்திக்கொண்டிருக்கும்போது அந்த ஆட்சியை ஜனநாயக முறையில் தேர்தலில் சந்தித்து ஆட்சிபீடத்தை விட்டு அகற்ற முடியாத ஒரு நிலையில் தங்களுடைய அதிகாரத்தைப் பயன்படுத்தி இந்த ஆட்சியைக் கவிழ்த்துவிடலாம் என்ற அளவிற்கு அவர்கள் நிச்சயமாக இறங்கமாட்டார்கள் என்ற நம்பிக்கை எனக்கு இருந்தாலும் அவர்களுடைய நடவடிக்கைகள் திருப்திகரமாக இல்லை என்பதை மட்டும் நான் இந்த நேரத்தில் தெரிவித்துக்கொள்ள கடமைப்பட்டிருக்கிறேன். இங்கு சட்டம் ஒழுங்கு கெட்டுவிட்டது என்ற வாதத்தைச் சொன்னார்கள். மற்ற மாநிலங்களில் சட்டம், ஒழுங்கு எந்த அளவிற்கு இருக்கிறது என்பதை மட்டும் தெரிவித்து[illegible]

கொள்ள விரும்புகிறேன். பீஹாரைப் பொறுத்தவரையில் அங்கு இருக்கிற ஐ.ஜி. அவர்கள் ஒரு பெரிய அறிக்கை கொடுத்திருக்கிறார்கள். அதற்கு தலைப்பு

'Steep rise in crimes in the year 1971–72'.

THIRUMATHI T. N. ANANDANAYAKI : Sir, on a point of order. I would like to know whether the hon. Member is speaking on the Governor's Address or on the administration of other States?

மாண்புமிகு மாற்றுத் தலைவர் (திரு. நா. வீராசாமி) இது என்ன பாயிண்ட் ஆஃப் ஆர்டரா ?

திரு. என். கணபதி : உறுப்பினர் அவர்களுக்கு நியாயமான சந்தேகம் வருகிறது. ஏனெனில், குற்றம் உள்ள நெஞ்சு குறுகுறுக்கும் என்பது நம் பழமொழி. அந்த பழமொழிப்படி அவர்கள் கட்சி ஆட்சி செய்கிற ஆட்சிபற்றி நான் சொல்லும்போது உடனே அவர்கள் பாய்ந்து பாய்ந்து எழுகிறார்கள். அவர்களைக் காப்பாற்ற அவர்கள் கடமைப்பட்டவர்கள் என்ற விதத்தில் அவர்களுக்கு நன்றி தெரிவிக்கக் கடமைப்பட்டிருக்கிறேன்.

இப்படி பல்வேறுவிதமான நிலைமைகள், பீஹாரைப் பொறுத்த வரையில் அங்குள்ள ஐ.ஜி. அவர்களே ஒரு ஸ்டேட்மென்ட் கொடுத்திருக்கிறார்கள். ஆந்திரப் பிரதேசத்தை எடுத்துப் பார்க்கும்போது அங்கு ஒரு நெருக்கடியான நிலை உருவாகியிருக்கிறது. பல்வேறு மாநிலங்களில், இந்திராக் காங்கிரஸ் கட்சியினர் ஆட்சி செய்யக்கூடிய பல்வேறு மாநிலங்களில் இத்தகைய நிலைமைகள் இருக்கும்போது தமிழகம் அமைதியாக இருக்கக்கூடாது என்ற எண்ணமோ என்னவோ, அவர்கள் கூடாத கூட்டு எல்லாம் கூடிக்கொண்டு ஆடாத ஆட்டமெல்லாம் ஆடிக்கொண்டிருக்கிறார்கள். அது அவர்களது எதிர்காலத்திற்கு நல்லதல்ல என்பதைத் தெரிவித்துக்கொள்ள விரும்புகிறேன்.

THIRUMATHI T. N. ANANDANAYAKI : Sir, it is unparliamentary to say that.

கூடாத கூட்டமெல்லாம் கூடி ஆடாத ஆட்டம் எல்லாம் ஆடிக் கொண்டிருக்கிறார்கள் என்று சொல்வது சரியல்ல.

It is not in good taste and it can easily be said about other parties. We have to maintain dignity.





திரு. என். கணபதி : நான் பொதுவாகச் சொன்னேன்.

மாண்புமிகு மாற்றுத் தலைவர் : (திரு. நா. வீராசாமி) : திருமதி அனந்தநாயகி அவர்கள் ஏதாவது சொல்லவேண்டுமென்றால் உறுப்பினர் அவர்கள் பேசியதற்குப் பிறகு சொல்வது நல்லது. இன்னும் 15 பேர்கள் பேசயிருக்கிறார்கள். இது என்ன பாயின்ட் ஆஃப் ஆர்டரா ?

திரு. என். கணபதி : ஜனநாயகம் பற்றி ஆங்கில அறிஞர் ஜென்னிங்ஸ் அவர்கள் சொல்கிற நேரத்தில் நம்முடைய நாட்டில் ஒரு பாராளுமன்ற ஆட்சி முறை இருக்கிற காரணத்தால், நம் நாட்டு மக்கள் சகிப்புத்தன்மை மிக்கவர்களாக இருக்கிற காரணத்தால் இங்கு ஆளும் கட்சித் தலைவர் இருக்கிறார். எதிர்க்கட்சித் தலைவர் இருக்கிறார், எதிர்க்கட்சித் தலைவர் என்னென்னவோ பேசுகிறார். அதைக் கேட்டுக்கொண்டிருக்கிறோம், ஆனால் மற்ற நாடுகளில் எதிர்க் கட்சித் தலைவர் என்ற பேச்சே இல்லை, அப்படி எதிர்க்கட்சித் தலைவர் என்பவர் இருந்தால் அவர் காராக்கிரஹத்தில் இருக்கிறார் அல்லது அரசியல் தியாகிகள் பட்டியலில் சேர்ந்து மேலே போய்விடுகிறார் என்று ஜனநாயக நாடுகள் பற்றி ஜென்னிங்ஸ் அவர்கள் தெளிவாகச் சொல்லியிருக்கிறார்கள்.

ஜனநாயகப் பாரம்பரியத்தோடு, நல்ல பண்போடு நம் கலைஞர் ஆட்சி நடந்துகொண்டிருக்கிறது. ஜனநாயக பாரம்பரியத்தை நாம் வைத்துக்கொண்டிருக்கும் காரணத்தால்தான் இந்த அவையில் எண்ணிக்கையில் மிகக் குறைவாக இருக்கிறோம் என்று தாங்களே கூறிக்கொள்கிற எதிர்க்கட்சி மிக அதிகமான நேரத்தை எடுத்துக் கொண்டு சர்க்காரைப் பற்றி விமர்சனம் செய்ய நல்ல வாய்ப்பு கிடைக்கிறது. சர்க்காரைப் பற்றி விமர்சனம் செய்வது மட்டுமல்ல விமர்சனம் செய்கிற நேரத்தில் சற்று கடுமையாகச் செய்வதற்குக்கூட நலல வாய்ப்பு கிடைக்கிறது.

அதேநேரத்தில் எதிர்க்கட்சியைச் சேர்ந்தவர்கள் சிலநேரங்களில் பொது மக்களின் கொந்தளிப்பிற்கு ஆளாகிற நேரத்தில் நம் அரசு தான் அவர்களைக் காப்பாற்றுவதற்கு வேண்டிய நல்ல நடவடிக்கைகளை எடுத்துக்கொள்கிறது. ஒரு சம்பவம் என் நினைவிற்கு வருகிறது. 1965-ல் இந்தி எதிர்ப்புப் போராட்டம் நடைபெற்றது. அப்போது எங்கள் கட்சியைச் சார்ந்த லட்சிய நடிகர் திரு. எஸ். எஸ். ராஜேந்

திரன் இந்த அவையில் ஒரு உறுப்பினராக இருந்தார்கள். அன்றைய தினம் அவர் வீட்டைச் சுற்றிக்கொண்டு அவர் வீட்டில் ஏற்றியிருந்த கறுப்புக் கொடியை அகற்றவேண்டும், அவர் வீட்டில் நுழைந்து தாக்கவேண்டும் என்று அன்றையதினம் இருந்த ஆளும்கட்சியினர் முனைந்தபோது அப்போது முதல் அமைச்சராக இருந்த திரு. பக்தவத்சலம் அவர்களிடம் எஸ்.எஸ்.ஆர். முறையிட்டபோது நாங்கள் என்ன பார்த்துக்கொள்வது பொது மக்களே பார்த்துக் கொள்வார்கள் என்று அன்றைய தினம் இருந்த முதல் அமைச்சர் அவர்கள் சொன்னார்கள். தான் செய்யவேண்டிய ஜனநாயகக் கடமையைச் செய்யாத முதல் அமைச்சரை அன்று பெற்றிருந்தோம். இன்றையதினம் திருமதி அனந்தநாயகி அவர்கள் போன்மூலம் முதல் அமைச்சர் அவர்களிடம் சொன்னநேரத்தில் உடனே பலத்த போலீஸ் பாதுகாப்பு போட்டு நல்லதொரு நிலையை உருவாக்கியிருக்கிறார்கள். இப்படி வேறுபட்ட நிலையை எடுத்துச் சொல்வதற்காகத் தான் இன்றைய தினம் உள்ள நம் ஆட்சியின் ஜனநாயகப் பண்பினை எடுத்துச் சொல்கிறேன்.

ஜனநாயக நாட்டில் எதிர்க்கட்சிகள் எல்லா உரிமைகளும் பெற்று இருக்கின்றன என்றாலும் ஒரே ஒரு கருத்தை மட்டும் சொல்லி என்னுடைய உரையை முடித்துக்கொள்ளலாம் என்று கருதுகிறேன். திராவிட முன்னேற்றக்கழகம் இன்னின்ன தவறு செய்தது என்பதைச் சுட்டிக் காட்டுங்கள். திராவிட முன்னேற்றக்கழகம் போட்ட திட்டங்களில் என்னென்ன குற்றங்கள், குறைகள் இருக்கின்றன என்பதை எடுத்துச் சொல்லுங்கள். திராவிட முன்னேற்றக்கழகம் நல்ல முற்போக்குத் திட்டங்களை நிறைவேற்றவில்லை என்பதைக் காரண காரியங்களோடு எடுத்துச் சொல்லுங்கள். நாங்கள் திருத்திக்கொள்கிறோம். எதிர்க்கட்சிகள் குறைந்த அளவு எண்ணிக்கையில் இருப்பதால் நீங்கள் சொல்வதை நாங்கள் கேட்பது இல்லை என்ற அளவில் நாங்கள் இந்த ஆட்சியை நடத்திக்கொண்டிருக்கவில்லை. சாதாரணமான ஒருவர் கருத்தைச் சொன்னாலும், அந்தக் கருத்து எப்படிப்பட்டது என்று பார்க்கிறோமே தவிர அதை அவர்கள் தானே சொன்னார்கள் என்று தட்டிக்கழிக்காமல் பல காரியங்களை திராவிட முன்னேற்றக்கழகம் செய்து கொண்டிருக்கிறது. அதை விட்டுவிட்டு, பல்வேறு நிலைமைகளில் இங்கே இருக்கின்ற அமைதியைக் குலைப்பதற்காகவும், இங்கே இருக்கின்ற நிலைமையை மாற்றுவதற்காகவும் இங்கே இருக்கின்ற நிலைமைக்கு களங்கம் ஏற்படும் விதத்தில் பல்



வேறு நிலைமைகளுக்கு ஆதரவாக இருக்கும் நிலைமைக்கு நீங்கள் இருந்தால், அது ஜனநாயக நாட்டிற்கு, ஜனநாயக நடைமுறைக்கு களங்கப்படுத்தப்படுகிற ஒரு நிலைமையை உருவாக்கும் என்று தெரிவித்துக்கொள்கிறேன்.

நல்ல பல திட்டங்களை நிறைவேற்றி வரும் திராவிட முன்னேற்றக் கழக அரசு, இந்த ஆண்டும் நல்ல முற்போக்குத் திட்டத்தை நிறைவேற்றும் விதத்தில் பல்வேறு விஷயங்களை ஆளுநர் அவர்களுடைய உரையில் தெரிவித்திருக்கிறார்கள். அந்த திட்டங்கள் நிறைவேறி, மேலும் மேலும் முன்னேற்றப் பாதையில் நாம் ஏறுநடை போட்டுச் செல்லவேண்டுமென்று கேட்டுக்கொள்கிறேன். ஏறுநடை போட்டு நாம் செல்லுகிறபோது தயவு செய்து தடைக்கற்களாக நிற்காதீர்கள். தூண்டுகோலாக இருங்கள். நல்ல பல பணிகளை ஆற்றிவருகின்ற திராவிட முன்னேற்றக்கழகத்திற்கும் இந்த அரசுக்கும் ஆக்கமும் ஊக்கமும் தாருங்கள் என்று கேட்டுக்கொள்கிறேன். ஜனநாயகத்தில் ஐந்து ஆண்டுக்கு ஒரு முறை தேர்தல் வரப்போகிறது. கூட்டணி சேர்ந்து தேர்தலில் போட்டியிடப்போகிறோம். போட்டியிடுகின்ற கட்சிகளுக்கு மக்கள் வோட்டளிக்கிறார்கள். யார் ஆளும் கட்சியாக வரவேண்டும், எதிர்க்கட்சியாக வரவேண்டுமென்பதை அவர்கள் தான் தீர்மானிக்கிறார்கள். அந்தத் தீர்மானத்தின் அடிப்படையில் தான் ஆட்சி நடைபெறுகிறது. அந்த நல்ல பண்பாட்டை காப்பாற்றுவோமாக என்று கேட்டுக்கொண்டு, குறுக்கு வழிகளை தயவு செய்து மறந்து விடுங்கள் என்று வேண்டுகோள் விட்டு, என் உரையை முடித்துக்கொள்கிறேன். வணக்கம்.

*திரு. மணலி சி. கந்தசாமி: மாண்புமிகு மாற்றுத்தலைவர் அவர்களே, மேதகு ஆளுநர் அவர்கள் இவ்வருஷ ஆரம்பத்தில் நிகழ்த்திய உரை மீது என்னுடைய கருத்துக்களைச் சொல்ல விரும்புகிறேன்.

இந்த உரையை மேலிருந்து கீழ் வரை பல முறை படித்துப் பார்த்தேன். இந்த ஆண்டிலே நடந்து இருக்கக்கூடிய பல்வேறு விஷயங்களை, தமிழகத்தில் ஏற்பட்டு இருக்கும் மாறுதலை, தமிழகத்தில் ஜனங்கள் மத்தியில் இருக்கக்கூடிய மறுமலர்ச்சியை அது சரிவர கணிப்பதாக இல்லை என்று நான் தெளிவாகச் சொல்லவேண்டியிருக்கிறது. மேலெழுந்த வாரியாக சில விஷயங்கள் சொல்லப்பட்டிருக்கிறதே தவிர ஒட்டு மொத்தமாக தமிழக மக்கள் வாழ்வில் மறுமலர்ச்சி ஏற்பட்டு இருக்கிறதா வாழ்க்கைத் தரம் உயர்ந்து இருக்

1973 பிப்ரவரி 6] [திரு. மணலி சி. கந்தசாமி]

கிறதா என்பதைப்பற்றியெல்லாம் கூறப்படவில்லை. துண்டு துக்கனு வாகக் கூறப்பட்டிருக்கிறது என்று நான் எடுத்துக்காட்ட விரும்பு கிறேன்.

இந்த ஒரு வருஷ காலத்தில் நடந்த பல்வேறு சம்பவங்களைப் பற்றிப் பத்திரிக்கையில் பார்த்தோம். விவசாயக்கிளர்ச்சி, துப்பாக்கிப் பிரயோகம், போலீஸ் அடக்குமுறை—அதிலே எது சரி, எது தப்பு என்று கூறவரவில்லை—நடந்து கொண்டே வருகிறது. நடந்துகொண்டே இருக்கிறது என்பதை யாரும் மறுக்க முடியாது. அதற்குப் பிறகு ஆளும் கட்சியில் பிளவு. அந்தப் பிளவு எந்த அளவுக் குப் பிளவு என்று நான் சொல்லத் தயாராக இல்லை. எங்கள் பின்னல் இருந்த ஊழியர்கள் பல பேர் விலகி இருக்கிறார்கள். அதன் காரணமாக ஆளும் கட்சியில் இருக்கிறவர்களுக்கும், புதிதாக ஏற்பட்ட திராவிட முன்னேற்றக்கழகத்திற்கும் பல விதமான மாச்சர்யங்கள், பல்விதமான நிகழ்ச்சிகள் நடந்து இருக்கின்றன. அதனுடைய உச்சக்கட்டம் தான் 2-ம் தேதி அசெம்பிளியில் நடந்த நிகழ்ச்சி. அது தமிழ்நாடு சட்டசபைக்கு களங்கம் ஏற்படுத்தும் விதத்தில் இருக்கிறது. நேற்றைய தினம் அவை முன்னவர் அவர்கள் பேசுகிறபோது விசேஷமான நிலைமை, விசேஷமான நடவடிக்கை எடுத்தோம் என்று சொன்னார்கள். சட்டமரபுக்கு முரணான விஷயம், அவ்விதமே நாங்களும் போகத்தான் வேண்டியிருந்தது என்று சொன்னார்கள்.

மாண்புமிகு டாக்டர் மு. கருணாநிதி: சட்டத்திற்கு முரண்பட்ட விதத்தில் போகத்தான்வேண்டுமென்று அவை முன்னவர் சொல்ல வில்லை என்பதை மாண்புமிகு உறுப்பினர் அவர்களுக்கு தெரிவித்துக் கொள்ள விரும்புகிறேன்.

திரு. மணலி சி. கந்தசாமி: மாண்புமிகு முன்னவர் அவர்கள் சபை மெஜாரிட்டியின் பிரதிபலிப்பாக நடந்து கொண்டிருக்கிறது என்று சொன்னார்கள். அன்றைக்கு இரண்டு சட்டசபை நடந்தது. அது சட்ட விதி முறைக்கு விரோதம் தானே?

மாண்புமிகு டாக்டர் மு. கருணாநிதி: அது உங்களுடைய அபிப் பிராயமாக இருக்கலாம். அவை முன்னவர் சொல்லவில்லை. தவறான தகவல் கூறுகிறீர்கள். அவை முன்னவர் முரண்பாடான முறையில் நடந்து கொண்டோம் என்று சொல்லவில்லை. அதைத் திருத்திக் கொள்வது நல்லது.



1973 பிப்ரவரி 6]

திரு. மணலி சி. கந்தசாமி: அவை முன்னவர் சொன்னது "எக்ஸ்டிரா-ஆர்டினரி சிச்சுவேஷன்" என்பதாகும்.

மாண்புமிகு டாக்டர் மு. கருணாநிதி: "எக்ஸ்டிரா-ஆர்டினரி" என்பதற்கு முரண்பாடு என்று அர்த்தமா?

திரு. மணலி, சி. கந்தசாமி: விசேஷமான நிலைமை, விசேஷமான நடவடிக்கை எடுத்தோம் என்று சொன்னார்கள்.

மாண்புமிகு டாக்டர் மு. கருணாநிதி: தாங்கள் அத்தோடு நிறுத்திக்கொள்ளவில்லை. முரண்பாடாக நடந்து கொண்டோம் என்று அவை முன்னவர் சொன்னதாகச் சொன்னீர்கள். அதற்காகத் தான் கூறினேன்.

(மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர் தலைமை)

திரு. மணலி சி. கந்தசாமி: விசேஷமான நிலைமையில் விசேஷ மான நடவடிக்கை எடுத்தோம் என்று சொன்னார்கள். நான் சொல்லாததைச் சொன்னதாகச் சொல்லத் தேவையில்லை என்று கேட்டுக்கொள்கிறேன். ஆளுநர் அவர்கள் இதையெல்லாம் கணக்கில் எடுத்துக்கொள்ளாமல் மேலெழுந்தவாரியாகத்தான் விஷயங்களைக் கூறியிருக்கிறார். இவற்றையும் கணக்கில் எடுத்துக்கொண்டு அறிக்கை தயாரித்து இருந்தால் நல்லது என்று சொல்லிக்கொள்கிறேன்.

இப்போது கூட பார்க்கலாம், பாளையங்கோட்டையில் நடந்த போலீஸ்காரர்களின் அதிகார துஷ்பிரயோகம், கிளைவ் ஹாஸ்டலில் நடந்து இருக்கும் விஷயம். பின்னல் அதற்கு அரசாங்கம் பரிகாரம் கண்டு இருந்தாலும், இப்படிப்பட்ட மனோபாவம் காவல் இலாகா விற்கு வரும்படியான நிலைமையேற்பட்டு இருக்கிறது என்பதைத் தெரிவித்துக்கொள்கிறேன். இப்போது உண்மையாக ஜுடிஷியல் என்கொயரி போட்டு இருக்கிறீர்கள். அதிகாரிகளைச் சஸ்பெண்ட் செய்து இருக்கிறீர்கள். நாகரீகமாக நடந்து கொண்டு வரும் அரசியல் சூழ்நிலையில், மிகவும் துடிப்பாக செயல்பட்டுவரும் மந்திரி சபையில் இன்றைக்கு இருக்கக்கூடிய சில அதிகாரிகள் இவ்வளவு கேவலமாக, மிலேச்சத்தனமாக காவல் துறையில் இயங்கிவருகிறார் கள் என்பதைச் சுட்டிக்காட்ட விரும்புகிறேன்.

திரு. செ. கந்தப்பன்: மாண்புமிகு உறுப்பினர் மணலி கந்தசாமி அவர்களைக் குறுக்கிட விரும்புகிறேன். அவர்கள் பேசுகிறபோது "மிலேச்சத்தனமாக" என்று கூறியிருக்கிறார்.. அதை அவர்கள் திரும்பப் பெற்றுக்கொண்டால் நல்லது.

திரு. மணலி சி. கந்தசாமி: காவல் துறையைப் பற்றிப் பேசுகிற போது சில குறிப்பிட்ட அதிகாரிகள் தான் இப்படியிருக்கிறார்கள் என்று சொன்னேன். இன்றையதினம் சில அதிகாரிகள் அறிவிழந்து இருக்கிறார்கள்.

I am not referring to the entire structure of the police organisation. I am only referring to certain Police Officer.

MR. DEPUTY SPEAKER: It is under a judicial enquiry. நீதி விசாரணையில் அது இருக்கிறபோது, அதுபற்றி நீங்கள் சொல்லாமல் இருந்தால் நல்லது.

THIRU MANALI KANDASWAMI: I am not going into the whole question. I am just referring to what has happened. I am not going into the question, who is right and who is wrong. I have got every right to refer to it.

THIRU S. KANDAPPAN: The hon. Member is indicting the Police......

THIRU MANALI KANDASWAMI: I am not indicting the Police. Certain things have happened. . . .

அதையெல்லாம் கணக்கில் எடுத்துக்கொண்டு அறிக்கை தரப்பட வில்லை. அதை நான் குறிப்பிடுகிறபோது, ஆளும் கட்சி பெரும்கட்சி யாக இருக்கிறோம் என்ற மனோபாவத்தில் அதைக் கணக்கில் எடுத் துக்கொள்ளாமல் இருப்பது நல்லது அல்ல என்பதைச் சுட்டிக்காட்ட விரும்புகிறேன். அதையெல்லாம் கணக்கில் எடுத்துக்கொள்ள வேண்டும்.

திரு. கணபதி அவர்கள் கூட பேசுகிறநேரத்தில் விசாரணைக் கமிஷன் குற்றச்சாட்டைப்பற்றி எடுத்துப் பேசியிருக்கிறார்கள். இன்றைக்கு நாம் தொங்கிக்கொண்டிருக்கிற நிலைமையில் இருக் கிறோம். சஸ்பென்சில் இருக்கிறோம். இரண்டு புகார் பட்டியல்கள் இன்றைக்கு ஹோம் மினிஸ்டிரியில் இருக்கிறது. பிரைமா-பேசியாக



குற்றம் இருக்கிறதா என்று பார்த்துக்கொண்டிருக்கிறார்கள். அதை யெல்லாம் வைத்துக்கொண்டு பார்க்கிறபோது, ஒரு தெளிவான நிலைமையேற்படுவதற்காக நாமே ஒரு நடவடிக்கையை மேற் கொண்டால் நல்லது என்று கூறிக்கொள்கிறேன். ஏனென்றால் அந்த பி.ப.
அம்மையார் தீர்ப்பு கொடுத்து மத்திய அரசு தலையிடுவதற்கு 12-30
உரிமை இருக்கிறதா என்றெல்லாம் சொல்லக்கூடிய பிரச்னையை இங்கு கிளப்புவதற்குப் பதிலாக, இப்படிப்பட்ட பதில் மறுக்கப்பட்டு விட்டது. பதில் மீது சந்தேகம் இருக்குமானால் நிச்சயமாக நாமே ஒரு விசாரணைக் கமிஷனைப் போட்டு விசாரிக்க முன்வருவதில் என்ன தவறு இருக்கிறது என்பதை என்னால் புரிந்துகொள்ள முடியவில்லை.

நான் இதில் நன்றாகத் தெளிவாக [illegible]றோம் [illegible] சொன்னால், இந்த ஆட்சி இரண்டு ஆண்டு கால[illegible] நல்ல மு[illegible] நடந்து கொண்டிருக்கிறது என்று சொன்[illegible], இந்தக் காலத்தில் [illegible] தவறு கள் நடந்திருக்கின்றன என்றாலும் அவைகளைத் திருத்திக்[illegible]வதற் கான வளர்ச்சிப் பாதையிலேதா[illegible] நாங்கள் செல்ல இ[illegible]றோம் என்று சொல்லக்கூடிய தன்னட[illegible]ம் தங்களுக்கு இருக்கிற[illegible] என்ற காரணத்தினால், இப்படிப்பட்ட [illegible]ரச்னையை மத்திய சர்க்கா[illegible]கையில் விட்டுவிட்டு—அங்கிருந்து வரக்[illegible] மந்திரிகள் தவறா[illegible]றையில் தலையிடுகிறார்கள் என்பதை நான் [illegible]த்துக்கொள்கிறேன் இப்படிப் பட்ட நிலைமைக்குக் கொண்டுபோய் [illegible]திலிட, [illegible]கேயே பரி காரம் காணக்கூடிய அளவில் ஒரு விசா[illegible]ஷன் .........

மாண்புமிகு டாக்டர் மு. கருணாநிதி: நம்முடைய பெரியவர் மணலி அவர்கள் கம்யூனிஸ்டு கட்சியைச் சேர்ந்தவர்கள் என்று நான் சொல்லித் தெரிய வேண்டியதில்லை. புதுவையிலே நடைபெறுகின்ற ஆட்சி கம்யூனிஸ்ட் கட்சியின் கூட்டோடு நடைபெறுகிறது. அங்கே அருமை நண்பர் சுப்பையா அவர்கள் அமைச்சர் அவையிலே வீற்றிருக் கிறார்கள். அங்கே இது போல சில புகார்கள் சொல்லப்பட்டன. அங்கே இருக்கிற பழைய காங்கிரஸ்காரர்களால் சில புகார்கள் சொல்லப்பட்டு, நீதி விசாரணை வைக்கவேண்டும் என்று கேட்கப் பட்டபொழுது, சுப்பையா அவர்கள் "துணிவு இருந்தால் சட்டசபை யில் சொல்லுங்கள், அங்கே பேசிக்கொள்ளலாம். ஆதாரம் இல்லாமல் எந்த விசாரணையும் வைக்க முடியாது" என்று குறிப் பிட்டிருக்கிறார்கள். நான் அதைப் பெரியவர் மணலி அவர்களுக்கு ஞாபகப்படுத்துகிறேன்.

[1973 பிப்ரவரி 6

திரு. மணலி சி. கந்தசாமி: புதுச்சேரியில் இருக்கக்கூடிய நிலைமையைப்பற்றி மாண்புமிகு முதல்வர் அவர்கள் குறிப்பிட்டார்கள். சுப்பையா அவர்கள் சொன்னதும் சரிதான். பகிரங்கமாக பேச வேண்டும் என்பதை யாரும் மறுக்கவில்லை. இங்கே விஷயம் வந்து விட்டது. இங்கே தொங்கிக்கொண்டிருக்கிறது அவர்கள் பதிலும்.

மாண்புமிகு டாக்டர் மு. கருணாநிதி: இங்கே விஷயம் வந்து விட்டது. பதிலும் வந்துவிட்டது. அதில் ஏதாவது தவறுகள் இருந்தால் தயவு செய்து கேட்கலாம். பதிலில் என்ன தவறு இருந்தாலும் கேட்கலாம். குளோப் தியேட்டர் பற்றி வந்திருக்கிறது. யார் மறுத்தார்களோ அவர்கள் தீர்மானத்தை ஆதரித்துப் பேசுகிறார்கள். அந்த விவகாரம் பற்றி பகிரங்கமாகப் பேசலாம் இங்கே.

திரு. மணலி சி. கந்தசாமி: காலையிலே பத்திரிகையை புரட்டிப் பார்த்தால் இதைப்பற்றித்தான் பெரிய தலைப்பு இருக்கிறது. உங்கள் கட்சியைச் சேர்ந்தவர்களிடையே கூட மத்திய சர்க்காருக்கு இதற்கு அதிகாரம் உண்டா என்று பேசிக்கொண்டிருக்கிறீர்கள். இதற்கு ஒரு முடிவு காணவேண்டும் என்பதுதான் முக்கியமான கருத்து. இதை நீடித்துக்கொண்டு போவது தமிழ் நாட்டு அரசியலுக்கு ஆரோக்கியமானது அல்ல, அழகு அல்ல. இந்த விஷயத்திற்கு கூடிய விரைவில் ஒரு முடிவு காணக்கூடிய விதத்தில் நீங்கள் சற்று சிந்தித்துப் பார்க்க வேண்டும் என்று கேட்டுக்கொள்கிறேன்.

அடுத்தபடியாக, சோஷலிஸம் என்று நாம் பேசிக்கொண்டிருக்கிறோம். சோஷலிஸம் என்று சொன்னால் மிக அழுத்தமாக, அடிப்படையில் சில விஷயங்கள் உண்டு என்று இந்தச் சந்தர்ப்பத்தில் சுட்டிக்காட்ட விரும்புகிறேன். நான் உங்களை உள்ளபடியே கேட்கிறேன். பஸ்களை தேசீயமயமாக்கவேண்டும் அதிகமான அளவிலே என்று முயற்சி எடுத்துக்கொண்டிருக்கிறீர்கள். இதை யாரும் எதிர்க்க முடியாது. தேசீய உடைமையாக்குவது ரொம்ப நல்லது தான். ஆனால் எதை முதலில் செய்வது என்பதைத்தான் சற்று சிந்தித்துப் பார்த்து செய்யவேண்டும். ஒட்டுமொத்தமாக பார்க்கப் போனால், 4, 4½ கோடி தமிழ் மக்களின் வாழ்க்கையில் புனர் அமைப்பு ஏற்படக்கூடியதற்கு முதலில் என்ன செய்யவேண்டும் என்பதை சரிவர தெரிந்துகொள்ளவில்லை.



1973 பிப்ரவரி 6] [திரு. மணலி சி. கந்தசாமி]

உணவுப் பிரச்னை சம்பந்தப்பட்ட மட்டில் மொத்த உணவு வியாபாரத்தை சர்க்கார் ஏற்று நடத்தவேண்டும் என்ற கொள்கையை பகிரங்கமாக உணவு அமைச்சர்கள் மகாநாட்டில் முடிவு செய்திருக்கிறார்கள். ஆனால் இன்றைக்கு தமிழ்நாட்டில் 20 சதவிகிதம் லெவி வாங்கக்கூடிய அளவுக்குத்தான் உத்தரவு போடப்பட்டிருக்கிறது. நான் கேட்கிறேன். இங்கே மொத்தமாக கொள்முதல் செய்வதற்கு 35 கோடி ரூபாய் ஒதுக்க முடியாதா? இதற்கு சர்க்காரே முழுப் பொறுப்பையும் ஏற்றுக்கொள்ள முடியாதா? அப்படிப்பட்ட விதத்தில் தமிழ்நாடு மற்ற ராஜ்யங்களுக்கு வழி காட்டியாக இருக்கக் கூடாதா? ஏன் அப்படி நடந்து கொள்ளக்கூடாது? மதிப்பிற்குரிய மாண்புமிகு நண்பர் நாராயணசாமி அவர்கள் இன்றைக்கு உணவு அமைச்சராக இருக்கிறார். ரொம்ப அபாயகரமான விஷயத்தில் மாட்டிக்கொண்டிருக்கிறார். பரிதாபத்திற்குரியது. ஆபத்தான விஷயத்தில் மாட்டிக்கொண்டிருக்கிறார். 20 சதவிகிதம் கொள்முதல் செய்தால் விலைவாசி குறைந்துவிடும் என்று சொல்வது சரியல்ல. நாம் பார்த்துக் கொண்டிருக்கிறோம், பல வருடங்களாக, உணவுத் துறையில் தான் பல மந்திரிகளுக்கு, மத்திய சர்க்காரிலும் சரி, மாநில சர்க்காரிலும் சரி, அவக்கேடு ஏற்பட்டிருக்கிறது, மந்திரிசபைக்கு தவறான பெயர் கிடைத்திருக்கிறது. 30, 35 கோடி ரூபாய் ஒதுக்கி உணவு தான்யத்தை ஏகபோகமாக கொள்முதல் செய்து, கொள்ளை லாபம் அடிக்கின்ற, கள்ளப் பணத்தை சேர்த்துவைக்கின்ற திருக் கூட்டத்தை இந்த அரசு நிச்சயம் கட்டுப்படுத்தியிருக்கலாம். அப்படிச் செய்யாதது மிகவும் தவறு.

உணவு வியாபாரத்தை ஏற்றுக்கொள்வதில் என்ன தயக்கம் இருக்கிறது? அதைவிட்டுவிட்டு 2, 3 ஆட்கள் சேர்ந்து ஒரு சில பஸ்களுக்குச் சொந்தக்காரர்கள், 5 பேர்கள் 3 பஸ்களுக்கு சொந்தக்காரர்கள் என்ற நிலைமையில் பஸ்களை முழுவதும் தேசீயமயமாக்கிவிடுவதால் விலைவாசி ஏற்றத்தை கட்டுப்படுத்திவிட முடியாது, பெரும் அளவுக்கு சமுதாயத்திற்கு அது பயன்படுமா என்கின்ற கேள்வி எழுப்பப்படும். உடனே "நீங்கள் இதை எதிர்க்கிறீர்களா" என்று மாண்புமிகு முதல்வர் அவர்கள் கேட்டுவிடுவார்கள். நான் எதிர்க்கவில்லை. சோஷலிஸம் எந்த விதத்தில் வந்தாலும் சரி, அதை ஆதரிக்கிறோம். எதை முதலில் செய்ய வேண்டும்? அதைத்தான் நான் கேட்கிறேன். விலைவாசி ஏறிக்கொண்டிருக்கிறது. திரு. கணபதி அவர்கள் கூட பட்டியலை படித்தார்கள். அந்த அளவுக்கு இது ஒரு அழுத்தமான

காரியம். தமிழ் மாநிலத்தில் நிலைமை எப்படியிருக்கிறது? விலைவாசி எப்படி இருக்கிறது? இங்கே வாழக்கூடிய மக்கள் எவ்வளவு கஷ்டப் பட்டுக்கொண்டிருக்கிறார்கள்? எவ்வளவு போராட்டங்களை நடத்திக்கொண்டிருக்கிறார்கள்? போராட்டத்தை மிக அதிகமாக உந்திவிடக்கூடிய நிலைமை இருக்கிறது என்று கூறலாம். ஆனால் அதற்குரிய அடிப்படை இருக்கத்தான் செய்கிறது. உணவு தான்ய மொத்த வியாபாரத்தை அரசு மேற்கொள்வதில் ஏன் தயக்கம் காட்ட வேண்டும்? அப்படிக் காட்டுவது உங்கள் ஆட்சிக்குத் தான் கெட்ட பெயர் ஏற்படுத்தும். பல ஊழல்கள் இடம் பெறக்கூடிய, உணவு தான்ய உற்பத்தியில் 20 சதவிகிதம் லெவி மூலம் எடுத்துக்கொள்வது என்பது நிச்சயம் அரைக் கிணறு தாண்டுவது போல் தான் ஆகும். அது மிகவும் ஆபத்தானது. நான் இந்த நேரத்தில் மீண்டும் கேட்டுக் கொள்வது என்னவென்றால் உணவு தான்ய வியாபாரத்தை பெரும் பகுதி அளவுக்காவது சர்க்கார் ஏற்றுக்கொண்டு, மார்கெட்டை கண்டிரோல் பண்ணக்கூடிய ஏற்பாடுகள் செய்யவேண்டும். அப்படிச் செய்தால் தமிழ் நாட்டில் ஏற்படக்கூடிய வெள்ளம், புயல் இவைகளை, நம்மை பாதிக்கக்கூடிய இதைப்போன்ற பல்வேறு பிரச்னைகளை ஓரளவுக்கு நாம் சமாளிக்க முடியும்.

போதுமான அளவுக்கு தானிய உற்பத்தி ஏற்பட்டிருக்கிறது. 28,000 ஏக்கரில் முழுவதும், 1,50,000 ஏக்கரில் ஏற்பட்டிருக்கும் பார்ஷியல் வாஸையும் நாம் சமாளிக்கக்கூடிய அளவுக்கு உற்பத்தி பெருகியிருக்கிறது. அதைப்பற்றி நாம் பெருமைப்படவேண்டும். அதிக்கபடியான உற்பத்தி மக்களுக்குப் பயன்படவில்லை. விலைவாசியைக் கட்டுப்படுத்த வேண்டியது அவசியம். சரக்கு இருக்கிறதா, சப்ளை இருக்கிறதா என்பதைப்பற்றி கவலைப்படுவதற்கு தமிழ் நாட்டில் இடம் இல்லை. கேரளா மாநிலத்தில் 12 லட்சம் டன் பற்றுக்குறை இருக்கிறது. அங்கே கூட விலைவாசியைக் கட்டுப்படுத்துவதற்கு வேண்டிய ஏற்பாடுகள் செய்யப்பட்டுவருகின்றன. நம்முடைய நிலைமை என்னவென்றால், இவ்வளவு தான்ய இருப்பை வைத்துக் கொண்டு, வெள்ளத்திற்குப் பிறகும் நாம் சமாளிக்க முடியும் என்று சொல்லக்கூடிய அளவுக்கு ஸ்டாக் வைத்துக்கொண்டு, விலைவாசியை கட்டுப்படுத்த முடியாமல் இருப்பது சரி அல்ல.

எஸ்.டி.ஸி.யின் வேலை என்ன? மாண்புமிகு அமைச்சர் சண்முகம் அவர்கள் தஞ்சையில் பேசும்பொழுது சொன்னார்கள். பருப்பு விநியோகம் செய்வதிலே அது உதவியாக இருக்கிறது என்று சொன்



னார்கள். சென்னையில், கோவையில் மட்டும் அரிசி விநியோகம் செய்வதற்காகவா எஸ்.டி.ஸி.? இந்த மாநிலம் பூராவும் உணவு தான்யத்தை, அத்தியாவசியமான பொருள்களை விநியோகம் செய்யக்கூடிய அளவுக்கு ஏன் எஸ்.டி.ஸி.யைக் கொண்டு போகக்கூடாது? இதையெல்லாம் நீங்கள் கவனித்துச் செய்யவில்லை. எதிர்க்கட்சிக்காரர்கள் குறைகூறுகின்ற அளவுக்கு, எதிர்க்கட்சிக்கு வேலை கொடுக்கக்கூடிய விதத்தில், நீங்கள் நிர்வாகத்தில் பல முக்கியமான விஷயங்களை விட்டு வைத்திருக்கிறீர்கள்.

அடுத்தபடியாக, நில சீர்திருத்தம் பற்றி ரொம்ப நாட்களாக சொல்லிக்கொண்டு வருகிறோம். ஏன் அதைப்பற்றி ஸைலன்ஸ் இருக்கிறது? அதைப்பற்றி பேச்சு மூச்சே கிடையாது. எதையும் தொட்டு விட்டு அரைகுறையாக விட்டுவிடக்கூடாது. நிலச் சீர்திருத்தம் பற்றி போராடத் தயாராக இருக்கிறார்கள், அதை போராட்ட நிலையிலேயே விட்டுவைத்திருக்கக்கூடாது. நிலச் சீர்திருத்தத்தைப் பொறுத்தவரையிலே தடங்கல் செய்வதற்கு யாருக்கும் உரிமை கிடையாது. பணக்காரர்களிடத்தில் விவசாயம் செய்வதற்கு நிலத்தை விட்டுவைப்பதில் பொருள் இல்லை. பணக்காரர்கள் நிலத்தை வைத்துக்கொண்டு, கிராமத்தை ஆட்டிப்படைத்துக் கொண்டிருக்கிறார்கள். குடியானவர்களுக்கு, நிலத்தை உழுபவர்களுக்கு நிலத்திற்குரிய பட்டாக்களை வழங்க வேண்டும். அவர்களிடமிருந்து பணத்தை கொஞ்சம் கொஞ்சமாக வசூல்செய்து சொந்தக்காரர்களுக்கு நஷ்டஈடு கொடுங்கள். நிலத்தில் உழைப்பவர்களுக்கு, உழுபவர்களுக்கு அந்த நிலத்தை பட்டா செய்துகொடுப்பதற்கு தீவிர நடவடிக்கைகள் எடுக்கப்பட வேண்டும்.

அதே போன்று கோவில்களுக்கு லட்சக்கணக்கான ஏக்கர் நிலங்கள் இருக்கின்றன. கோவில் தர்மகர்த்தாவாக வரவேண்டும் என்று உங்கள் கட்சிக்குள்ளேயே ஒருவருக்கொருவர் போட்டி போட்டுக்கொண்டு வருகிறார்கள். கோவில்களுக்கு நிலம் இல்லை என்றால் அந்தப் பிரச்னையே கிடையாது. கடவுள் மீது நம்பிக்கை வைத்திருப்பவர்கள் கோவிலுக்கு வந்து வழிபடட்டும். சர்க்காரிடமிருந்து மான்யம் பெற்று, அல்லது பொது மக்களிடமிருந்து பணம் வசூலித்து வசூலை பெருக்கிக்கொள்ள முடியும். கோவில் நிலங்களை எடுத்துக்கொள்வதில் என்ன ஆட்சேபனை இருக்கிறது?

<u>மாண்புமிகு திரு. ப. உ. சண்முகம்</u>: ஒரு சந்தேகத்தைத் தீர்த்துக் கொள்வதற்குத் தான் கேட்கிறேன். உழுகின்ற குத்தகைக்காரர் களுக்கு நிலத்தைச் சொந்தமாக்க வேண்டும், அவர்களிடமிருந்து பணத்தை வாங்கி சொந்தக்காரர்களுக்கு நஷ்ட ஈடு கொடுங்கள் என்று சொன்னார்கள் என்று கருதுகிறேன். அதைப்போல கோவில் நிலத்தையும் ஏன் கொடுக்கக்கூடாது என்று கேட்டார்கள். அதற்கும் நஷ்ட ஈடு கொடுக்கவேண்டாமா? கோவில் நிலங்களுக்கும் அப்படி நஷ்ட ஈடு கொடுக்கலாமா? சந்தேகத்தைத் தீர்த்துக்கொள்வதற் காகத் தான் கேட்கிறேன். அவர்களுடைய யோசனையை தெரிந்து கொள்ளவேண்டும் என்பதற்காகத் தான் கேட்கிறேன்.

<u>திரு. மணலி சி. கந்தசாமி</u>: இந்திய அரசியலமைப்புச் சட்டப்படி நஷ்ட ஈடு கொடுக்க வேண்டும் என்பது எனக்கும் தெரியும்; உங்களுக்கும் தெரியும். நஷ்ட ஈடு எந்த அடிப்படையில் கொடுக்க வேண்டும் என்பதைப் பின்னால் பேசிக்கொள்ளலாம். முதலிலே அது பற்றிய பேச்சு வார்த்தைக்கு நீங்கள் தயாராக இருக்கிறீர்களா என்பதைத் தெரிவியுங்கள். அப்புறம் அதைப்பற்றி முடிவு செய்யலாம். (குறுக்கீடு).

<u>மாண்புமிகு திரு. ப. உ. சண்முகம்</u>: உங்கள் கட்சியைச் சேர்ந்த திரு. தங்கமணி அவர்கள் உட்கார்ந்துகொண்டே பேசுவது என் காதில் விழுகிறது. அவர்கள் நஷ்ட ஈட்டை இன்னும் குறைத்துக் கொடுக்கலாம் என்று சொல்கிறார்கள். ஏற்கெனவே அரசாங்கம் எந்த அளவுக்கு குறைக்க முடியுமோ அந்த அளவுக்கு பெருவாரியாக குறைந்திருக்கிறோம். நிலச்சுவான்தார்களும் அதிகமாகப் பாதிக்கக் கூடாது. ஆகவே மேலும் இதைக் குறைக்க இயலாது என்பதை தங்கள் கவனத்திற்குக் கொண்டுவருகிறேன்.

<u>திரு. மணலி சி. கந்தசாமி</u>: தகவலுக்கு நன்றி. அடுத்து கோவில் நிலங்களை எடுத்துக்கொள்வோம். முதலிலே கோவிலுக்கு நிலம் இருக்கவேண்டுமா என்பதைச் சற்று சிந்தித்துப் பார்க்க வேண்டும். கோவிலுக்கு நிலம் இருக்கக் கூடாது என்பதுதான் எங்கள் கருத்து.

<u>மாண்புமிகு டாக்டர் மு. கருணாநிதி</u>: கோவில் நிலத்தை எடுத் துக்கொள்ளலாம் என்று சொல்லும்போது, கிறிஸ்தவர் கோவில், முகமதியர் கோவில் நிலங்களையும் சேர்த்து எடுத்துக்கொள்ள





வேண்டுமென்று சொல்லுகிறீர்களா என்று அறிய விரும்புகிறேன். அப்படி கிறிஸ்தவர் கோவில் நிலங்களையும், முகமதியர் கோவில் நிலங்களையும் எடுத்துக்கொள்ள வேண்டுமென்றால் அதற்கு மத்திய அரசின் ஒப்புதல் வேண்டும். அகில இந்திய அடிப்படையிலேதான் அதைச் செய்யமுடியும். அப்படி ஒரு தீர்மானத்தை பாராளுமன்றத் திலே கொடுத்து, அகில இந்திய அடிப்படையில் இந்துக் கோவில், கிறிஸ்தவர் கோவில், முகமதியர் கோவில் ஆகிய எல்லாக் கோயில் கள் சொத்தையும் அரசாங்கம் எடுத்துக்கொள்ள வேண்டுமென்று ஒரு சட்டம் வருமானால் அதைத் தமிழ்நாடு அரசும் மகிழ்ச்சியுடன் வரவேற்கும். அப்படி ஒரு சட்டம் வருவதற்கு கம்யூனிஸ்ட் கட்சி உறுப்பினர்களே பாராளுமன்றத்தில் தீர்மானம் கொண்டுவரலாம்.

<u>திரு. மணலி சி. கந்தசாமி</u>: கோவில்களைப் பற்றி எங்களுக்கும் சில கருத்துக்கள் உண்டு. எங்களைப் பொறுத்தவரையில் இந்துக் கோவில்கள், கிறிஸ்தவர் கோவில்கள், முகமதியர் கோவில்கள் ஆகிய எல்லாக் கோவில் சொத்துக்களையும் எடுத்துக்கொள்ள வேண்டும் என்றுதான் சொல்கிறோம். கோவில்களைப் பொறுத்தவரையில் வேற்றுமை காட்டுவதற்கு இடமில்லை. பாராளுமன்றத்தில் உங்கள் கட்சி அதுபற்றி ஒரு தீர்மானம் கொண்டுவந்தால், எங்கள் கட்சிக் காரர்கள் அதற்கு ஆதரவு கொடுப்பார்கள். எங்கள் கட்சிக்காரர்கள் தான் அதற்கு வாதாட வேண்டும் என்பதில்லை. அங்கே நீங்கள் 27 பேர் இருக்கிறீர்கள். நாங்கள் குறைவாகத்தான் இருக்கிறோம். ஆகவே, நீங்களே அங்கே தீர்மானம் கொண்டு வரலாம்.

<u>மாண்புமிகு டாக்டர் மு. கருணாநிதி</u>: மொத்தமாக பார்த்தால் அங்கே எங்களை விட நீங்கள்தான் அதிகமாக இருக்கிறீர்கள். அதிலும் ஆளும் கட்சிக்கு—பிரதமருக்கு எங்களை விட இப்போது நீங்கள் நெருக்கமாக இருக்கிறீர்கள். ஆகவே, உங்கள் செல்வாக்கைப் பயன் படுத்தி அரசியல் சட்டத்திலே ஒரு திருத்தம் செய்து, அகில இந்திய அடிப்படையிலே சட்டம் கொண்டுவர நீங்கள் முயற்சி செய்யுங்கள்.

<u>திரு. மணலி சி. கந்தசாமி</u>: நாங்கள் நிச்சயமாக முயற்சி செய் கிறோம். இதிலே எந்தக் கட்சி முயற்சி செய்ய வேண்டும் என்பது அல்ல பிரச்சனை. நாங்கள் தீர்மானம் கொண்டு வரும்போது நீங்கள் அதற்கு ஒத்துழைப்புக் கொடுங்கள். முதலமைச்சராகிய நீங்கள் வாதாடுவதிலே மிகவும் திறமைசாலியாக இருக்கிறீர்கள். மற்ற முதலமைச்சர்களை விட அகில இந்தியாவிலே நீங்கள் ஒரு

சிறந்த—முக்கியமான முதலமைச்சராக இருக்கிறீர்கள். எனவே, முதலமைச்சர்கள் மாநாட்டிலே நீங்கள் உங்கள் வாதத்திறமையைப் பயன்படுத்தி, மற்ற முதலமைச்சர்களை உங்கள் பக்கம் இழுத்து, ஒரு தீர்மானத்தை நிறைவேற்றி பிரதமருக்கு அனுப்பி, சட்டமாக நிறைவேற்ற வழி செய்யலாம். அந்த அளவுக்கு இன்றைக்கு அகில இந்தியாவிலே உங்களுக்கு மதிப்பு இருக்கிறது. எல்லோரும் உங்களைப் பாராட்டுகிறார்கள். ஆகவே, நீங்களே இந்திராகாந்தியோடு வாதிடுவதை விட்டுவிட்டு, அந்தப் பொறுப்பை ஏன் என் தலைமேல் கட்டிவிடுகிறீர்கள் (சிரிப்பு).

அடுத்தபடியாக வேலையில்லாத் திண்டாட்டத்தைப்பற்றி என்னுடைய கருத்தைச் சொல்ல விரும்புகிறேன். வேலையில்லாத் திண்டாட்டத்தைப் போக்குவதற்கு நம்மால் முடிந்ததை செய்து வருகிறோம் என்று கவர்னர் உரையிலே குறிப்பிடப்பட்டிருக்கிறது. அதுவும் அனைத்திந்தியப் பிரச்சனை என்று சொல்லப்பட்டிருக்கிறது. இப்படி அனைத்திந்தியப் பிரச்சனை என்று சொல்லும்போது, நீங்களே மத்திய அரசாங்கத்தோடு வாதாடி, உங்கள் திறமையைப் பயன்படுத்தி, தீர்வு காணவேண்டும். அதில் தவறில்லை. எங்கே போய் சண்டை போடவேண்டுமோ அங்கே போய் சண்டை போட வேண்டும். அதிகாரம் எங்கே இருக்கிறதோ அங்கே போய் சண்டைபோட்டு பெறுவதுதான் சரியான மார்க்கம். எனவே, முதலமைச்சர்கள் மாநாட்டிலே இதை நீங்கள் வலியுறுத்தவேண்டும்.

அடுத்தபடியாக, நீங்கள் புதிதாக ஒரு விஷயத்தைக் கண்டுபிடித்திருக்கிறீர்கள். அதாவது இன்கம்டாக்ஸ் பற்றி கவர்னர் உரையில் கூறியிருப்பதைப் பற்றிச் சொல்கிறேன். இது ஒப்புக்கொள்ளக் கூடியதல்ல. மத்தியதர வர்க்கத் தொழில் முனைவர்கள் உருவாகக் கூடிய வகையில் ஒரு இன்கம் டாக்ஸை மாற்றியமைக்க வேண்டும் என்று சொல்லுவது ஒரு புதிய விஷயம்தான். " நாஷனல் டெவலப்மென்ட் கவுன்சிலிலும் " இதைப்பற்றி கூறியிருப்பதாகச் சொல்லப்பட்டிருக்கிறது. மத்திய வர்க்கம் என்று நீங்கள் குறிப்பிடுவது யாரை? உழைக்கக்கூடிய மக்கள் இருக்கிறார்கள். குறைந்த வருவாய் உடையவர்கள் இருக்கிறார்கள். இன்கம் டாக்ஸ் கட்டக்கூடியவர்கள் இருக்கிறார்கள். இதிலே யார் மத்தியதர வர்க்கம் என்று தெரியவில்லை.





<u>மாண்புமிகு திரு. ப. உ. சண்முகம் :</u> வருமானவரி விதிக்கின்ற நேரத்தில் உழைக்கின்றவர்களுக்கும், விவசாயிகளுக்கும் வருமான வரி போட வேண்டுமென்று முடிவு செய்தபோது, மத்தியதர வர்க்கத்தினருக்கு வருமான வரி போடக்கூடாது என்று நீங்கள் சொன்னீர்களே, அவர்கள்தான் இந்த மத்தியதர வர்க்கத்தினர் என்பதைத் தெரிவித்துக்கொள்கிறேன்.

<u>திரு. மணலி சி. கந்தசாமி :</u> சொல்வதைத் தெளிவாகச் சொல்லிவிடுங்கள். 100 ரூபாய், 200 ரூபாய் என்று வருமான வரி கட்டுபவர்கள் இருக்கிறார்கள். 5,000 ரூபாய், 10,000 ரூபாய் வருமான வரி கட்டுபவர்கள் இருக்கிறார்கள். இவர்களிலே யார் நடுத்தர வர்க்கத்தினர் என்று சொல்ல வேண்டும். கள்ளப் பணம் வைத்திருப்பவர்களுக்கும், டாக்ஸ் எவேஷன் செய்கிறவர்களுக்கும், சமுதாயத்தின் மேல் தட்டிலே இருக்கின்ற டாட்டாக்களுக்கும், பிர்லாக்களுக்கும் வரியைக் குறைக்க வேண்டுமென்று சொல்கிறீர்களா?

<u>மாண்புமிகு டாக்டர் மு. கருணாநிதி :</u> மேல் தட்டிலே இருக்கின்ற டாட்டா; பிர்லாக்களுக்கு வரியைக் குறைக்க வேண்டுமென்று நாங்கள் சொல்லவில்லை. வழக்கறிஞர்கள், டாக்டர்கள், இவர்களைப் போன்றவர்கள் இருக்கிறார்கள். அப்படிப்பட்டவர்களைத்தான் நடுத்தர வர்க்கத்தினர் என்று நான் குறிப்பிட்டேன். அவர்களுக்கு அதிகமான வரி போடுவதால், வருமான வரி கட்டாமல் ஏமாற்றக்கூடிய சூழ்நிலை ஏற்படுகிறது. ஆகவே அவர்கள் தொழிலில் முதலீடு செய்யும் வகையில் வருமான வரி அமைப்பை மாற்றி அமைக்க வேண்டுமென்ற கருத்தில்தான் நான் குறிப்பிட்டேன். பெரும் பணக்காரர்களைப் பற்றி நான் குறிப்பிடவில்லை. இன்னும் சொல்வதானால், நான் சொன்னது தொழிலிலே ஈடுபட்டுள்ளவர்கள்— " புரொஃபஷனலிஸ்ட்ஸ் " பற்றி; இன்டஸ்ட்ரியலிஸ்ட்ஸ் பற்றி அல்ல. புரொஃபஷனலிஸ்ட்ஸ், இன்டஸ்ட்ரியலிஸ்ட்ஸ் என்ற இரண்டுக்கும் பெருத்த வேறுபாடு உண்டு.

<u>திரு. மணலி சி. கந்தசாமி :</u> தகவல் தந்ததற்கு நன்றி, டாக்டர்களிலே கூட அடித்தட்டிலே இருப்பவர்களும் உண்டு; மேல் தட்டிலே இருப்பவர்களும் உண்டு. சிலருக்கு 500 ரூபாய், 1,000 ரூபாய் வருமானம் கிடைக்கிறது. சிலருக்கு 2,000, 3,000, 5,000

என்று வருமானம் கிடைக்கிறது. சினிமா நட்சத்திரங்களை எடுத்துக் கொண்டால் (முதலமைச்சர் பக்கம் கையைக் காட்டி) அவர்களுக்கு நன்ருகத் தெரியும்.

மாண்புமிகு டாக்டர் மு. கருணுநிதி : சினிமா நட்சத்திரங்களை எடுத்துக்கொண்டால்—என்று இந்தப் பக்கத்திலே கையைக் காட்டு வதற்கு அர்த்தம் புரியவில்லை (சிரிப்பு).

திரு. மணலி சி. கந்தசாமி : இன்கம் டாக்ஸ் பற்றி பேசும்போது முதலமைச்சரவர்கள் குழப்பத்திற்கு இடம் கொடுக்கக் கூடாது......

மாண்புமிகு டாக்டர் மு. கருணுநிதி : குழப்பத்தை வேண்டு மென்றே சில பத்திரிகைக்காரர்கள் ஏற்படுத்திக்கொண்டிருக்கிருர்கள். பெரியவர் மணலி அவர்களும் அந்தமாதிரி பரபரப்பூட்டும் பத்திரிகை களைப் பார்த்துவிட்டு குழப்பம் அடைந்திருக்கிருர் என்று கருது கிறேன். ஏனென்ருல் என்னுடைய பேச்சு ஆங்கிலத்திலே அச்சடிக் கப்பட்டு, வெளியாகியிருக்கிறது. வேண்டுமென்ருல் அதைப் படித்துப் பாருங்கள். பணக்காரர்களுக்கு வரிச் சலுகை கொடுக்க வேண்டுமென்று நான் சொல்லவில்லை.

திரு. மணலி சி. கந்தசாமி : என்.டி.சி-யில் முதலமைச்சர் என்ன சொன்ஞர் என்பதைத் தெரிந்து கொள்வதற்காக, அவருடைய பேச்சை அச்சிட்டு, இந்த அவையில் வைத்தால் நல்லது என்று கருது கிறேன்.

திருமதி த. ந. அனந்தநாயகி : அது நல்ல ஐடியா.

திரு. மணலி சி. கந்தசாமி : அடுத்தபடியாக, கைத்தறி நெசவாளர் களைப் பற்றியும், தாழ்ந்த நிலையில் இருக்கும் தொழிலாளர்களைப் பற்றியும் எதுவுமே கூறப்படவில்லை. இன்றைக்கு நீங்கள் ஒரு திருப்தி மனப்பான்மையோடு இருக்கிறீர்கள். திருப்தி மனப்பான்மையோடு பல காரியங்களைச் செய்துகொண்டிருக்கிறீர்கள். இப்படி திருப்தி மனப்பான்மையோடு போய்க்கொண்டிருப்பது சரியல்ல. நீங்கள் இப்படித் திருப்தியோடு இருப்பதஞல்தான் எதிர்க்கட்சிக் காரர்கள் குறை சொல்லக்கூடிய அளவிலே சில காரியங்கள் நடைபெறுகின்றன. எதிர்க்கட்சிக்காரர்களுக்கு இடம் கொடுக்காமல் நீங்கள் பணியாற்ற வேண்டும். அதிலே நீங்கள் உஷாராக இருக்க வேண்டும்.



லஞ்சம், ஊழலைப் பற்றிக் குற்றம் சாட்டுவதாகச் சொன்ஞர்கள். எதிர்க்கட்சியிலே இருப்பவர்கள் இப்படிக் குற்றஞ்சாட்டுவதற்குப் பதிலாக உங்கள் கட்சியிலே இருந்து அதற்கு தகுந்த யோசனைகள் வருவது அவசியம். நிர்வாகத்தை ஏற்றிருக்கும் நீங்கள் நன்ருக ஆராய்ந்து ஒரு காரியத்தைச் செய்ய வேண்டும்.

விலைவாசியைக் கட்டுப்படுத்துவதற்கு, ஸ்டேட் ட்ரேடிங் கார்ப்பரேஷனை அரசாங்கமே எடுத்துக்கொள்ள வேண்டும். இப் படிப்பட்ட நடவடிக்கையை கிஞ்சிற்றும் கவலையில்லாமல் எடுத்து, உங்கள் கட்டுப்பாட்டிற்குள்ளே அதைக் கொண்டுவர வேண்டு மென்று இந்தச் சந்தர்ப்பத்திலே தெரிவித்துக்கொள்கிறேன். மேலும் கவர்னர் உரைக்கு நன்றி தெரிவிக்கும் இந்தத் தீர்மானத்தின் மீது நான் குறிப்பிட்ட கருத்துக்களை எல்லாம் கவனத்தில் கொண்டு அரசாங்கம் செயல்பட வேண்டுமென்று கேட்டுக்கொள்கிறேன். நான் சொல்லியிருக்கக்கூடிய விஷயங்களை காழ்ப்பு உணர்ச்சியோடு சொல்லவில்லை. நான் குறிப்பிடுவது பூராவும் இன்றைக்கு ஒரு ஆபத்தான சூழ்நிலை தமிழகத்திலே உருவாகிக் கொண்டிருக்கிறது. எதிர்க் கட்சியினர் கூறுவதை எல்லாம் நீங்கள் குறைத்து மதிப்பிடா தீர்கள். நிச்சயமாக் அவைகளை எல்லாம் புரிந்துகொள்ள முற்படுங் கள். எதிரிகள் சொல்லுவதிலே என்ன அஸ்திவாரம், அடிப்படை இருக்கிறது என்பதை நீங்கள் யோசித்துப்பார்த்தால், நீங்கள் என்ன செய்யவேண்டும் என்பது தெரியும். ஆளுபவர்களின் பலம் அதிகரிக் கும் பொழுது, பொறுப்பும் அதிகரிக்கிறது. அந்த வகையிலே உங்கள் ஆட்சிக்கு பெரும் பொறுப்பு இருக்கிறது. எதிர் தரப்பிலே இருப்பவர்கள் கூறும் சின்னத் தவறை கூட நீக்க . முற்படுவது உங்களுக்கு நல்லது. அதிலே தவறு ஒன்றுமில்லை.

உங்களிடமிருந்து பிரிந்து சென்றவர்கள் கூறக்கூடிய விஷயங்களைக் காது கொடுத்து கேட்டு அவைகளுக்கு பரிகாரம் காணவேண்டும். உங்கள் கட்சியிலே ஒரு தவறை நான் பார்க்கிறேன். சிறு கட்சிகளை அலட்சியப்படுத்துவது என்ற கண்ணேட்டம் தான், மேலோங்கி இருக்கிறது. நீங்கள் பேசும்பொழுது வார்த்தை ஜாலம் இருக்கலாம். ஆனல் அணுகு முறையிலே எதிர்க்கட்சிக்காரர்கள் கூறக்கூடிய கருத் துக்களை சரிவர பரிசிலனை செய்து, அதிலே ஏதாவது உண்மை இருக் கிறதா, அவைகள் திருத்தப்பட வேண்டுமா, நமது கட்சியிலே மேலே இருப்பவர்கள் எப்படி இயங்குகின்ருர்கள் என்பதை எல்லாம் கவனித்து சரியான ஒரு கருத்திற்கு வர தயங்குகிறீர்கள் நீங்கள்.

அதனால் தான் உங்கள் கட்சியிலே ஏற்பட்டிருக்கின்ற இந்தப் பிளவு நிச்சயமாக உங்கள் கட்சியை சீர்திருத்தம் செய்யக்கூடிய அளவிலே இன்றைக்கு நிலைமைகள் உருவாகி இருக்கிறது என்று நான் கருதுகிறேன்.

இந்த அடிப்படையிலே ராஜ்ய சர்க்கார் மொத்த உணவு தான்ய வியாபாரத்தை எடுத்துக்கொள்வது, கள்ளமார்க்கெட் பேர்வழிகளையும் வரி ஏய்ப்பவர்களையும் கண்டுபிடித்து விலைவாசி ஏற்றத்தை தடுப்பது போன்றவைகளிலே நடவடிக்கை எடுப்பது சம்பந்தமாக உங்களுடைய அறிக்கையிலே சுட்டிக்காட்டப்படவில்லை என்று சொல்லிக்கொண்டு, எனது பேச்சை முடித்துக்கொள்கிறேன்.

திரு. கே. ஏ. வகாப் : மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவரவர்களே, ஆளுநர் அவர்களுடைய உரைக்கு நன்றிகூறி, என்னுடைய உரையை துவங்குகின்ற நேரத்திலே, நாம் கடந்த ஆண்டிலே சோகமும் சூழ்ச்சியும் நிறைந்த ஒரு ஆண்டைக் கடந்து இன்றைய தினம் நல்ல ஒரு ஆண்டிலே அடி எடுத்துவைக்கிற நேரத்திலே இந்த உரையை ஆளுநர் அவர்கள் நமக்கு அளித்திருக்கிறார்கள். அவர்களுடைய உரையிலேயுள்ள நல்ல பல கருத்துக்களை பாராட்டுகின்ற நேரத்திலே அந்த உரைக்கு எடுத்துக்காட்டாக இருக்கும் தமிழகத்திலே ஒரு நல்லாட்சியை ஏற்படுத்தி மக்களுக்கு நன்மை செய்ய வேண்டுமென்ற கருத்திலே நல்ல முயற்சிகளை எடுத்து வருகின்ற ஒரு ஆட்சியின் பேரிலே மக்களிடத்திலே அவதூறுகளும் துரோக எண்ணங்களும் பெருகி வரவேண்டிய சூழ்நிலையை கடக்கவேண்டிய கட்டத்திலே நாம் இருந்து கொண்டிருக்கிறோம்.

இங்கே சட்ட மன்றத்தைப் பற்றி எல்லாம் என்னவெல்லாம் வெளியே பேசப்படுகிறது என்று சொன்னார்கள். சட்டமன்றம் செத்துவிட்டது என்று பேசப்படுகிற அளவிலே இந்த நாட்டினுடைய அரசியலிலே அராஜகம் புகுந்துவிட்டது என்று இங்கே இருந்து பேசப்பட்டது. அப்படி பேசியவர்கள் தெரியாத முறையிலே பேசிவிட்டார்கள், புரியாத முறையிலே பேசிவிட்டார்கள். அவர்கள் ஒரு கட்சியை நடத்துகின்ற ஒரு தலைவராக இருந்தாலும் கூட அவர்கள் எந்த பண்போடு பேசவேண்டுமோ அப்படி பேசவில்லை என்பதை ஆளும் கட்சியைச்சேர்ந்தவர்கள் மட்டுமில்லாமல், அவருக்கு தோழமையாக இருக்கின்ற திருமதி அனந்தநாயகி போன்றவர்களும் மதிப்பிற்குரிய கம்யூனிஸ்ட் கட்சியின் தலைவரும் கூட அது



பண்பற்றது என்பதை எடுத்துக்காட்டும் வகையிலே இங்கே பேசினார்கள். சட்ட மன்றம் செத்துவிட்டது என்று கூறுகிறார்கள் இங்கே. உதாரணத்திற்கு சொல்ல வேண்டுமானால் குள்ளநரி ஒன்று திராட்சை பழத்திற்கு ஆசைப்பட்டு அதைப் பறிக்க குதித்து குதித்து பார்த்துவிட்டு, சீ, சீ, இந்தப் பழம் புளிக்கும் என்று சொன்னதைப் போல் அவர்கள்தான் ஒரு குழப்பத்தை இந்த நாட்டிலே ஏற்படுத்த வேண்டுமென்று நினைத்தார்கள். அந்தக் குழப்பம் கை கூடாத நிலையிலே இந்த சட்ட மன்றம் செத்துவிட்டது என்று கூறும் நிலையில் அவர்கள் இருக்கிறார்கள்.

இதைக் கூறும்பொழுது உண்மையிலேயே இன்னும் மக்களின் எதிர்காலம் பிரகாசமாக அமையவேண்டும் என்று பாடுபட்டுக் கொண்டு வருகிற இந்த ஆட்சியின் மீது களங்கம் கற்பிக்கப்பட பிரச்சாரம் நடைபெறுகிறது என்று தான் கூறவேண்டும். அந்த பிரசாரத்தை தூக்கி எறிகின்ற அளவிலே மக்களுக்கு நன்மை செய்ய வேண்டுமென்று பல திட்டங்களை இந்த அரசு நிறைவேற்றி வருகிறது. அவர்கள் செய்கின்ற இந்தக் குழப்பங்கள் எல்லாம் தூங்குகின்ற சிங்கத்தைத் தட்டி எழுப்புகின்ற நிலையிலே இன்று ஆட்சியிலே இருப்பவர்கள் சமுதாயத்தில் இருக்கின்ற தாழ்த்தப்பட்ட ஒடுக்கப்பட்ட மக்களுக்கு நன்மை செய்வதை இன்னும் நல்ல முறையிலே செய்வதற்கு உற்சாகப்படுத்தி இருக்கிறார்கள் என்று தான் நான் கூறுவேன்.

இங்கே எதிர்க்கட்சிகள் இருக்கின்றன; எதிரிக் கட்சிகளும் இருக்கின்றன. நேற்று மாண்புமிகு உறுப்பினர்கள் சொன்னதைப்போல் எதிர் பார்க்கின்ற கட்சிகளும் இருக்கின்றன என்று சொன்னால் நிச்சயமாக இந்த நாட்டை ஆளுகின்ற கட்சி எதிர் பார்க்கின்ற கட்சி தான். மக்களுக்கு நன்மை செய்வதிலே எதிர்பாக்கின்றவர்கள் தான். மக்களுடைய வாழ்க்கைத் தரத்தை உயர்த்த வேண்டுமென்று எதிர் பார்க்கின்றவர்கள் தான். எதிர்க்கட்சிகள் இந்த நாட்டிலே இருக்க வேண்டும். எதிரிக் கட்சிகள் இந்த நாட்டிற்குத் தேவையா என்பதை மக்கள் முடிவு செய்யும் கட்டத்திலே நாடு இருந்துகொண்டிருக்கிறது. இந்த நிலையிலே நாட்டின் எதிர்காலத்தைப் பற்றி எதிர்க்கட்சிகளும், எதிரிக் கட்சிகளும் சிந்திக்க வேண்டும். மக்களுடைய நன்மையிலே அக்கறை கொண்டவர்கள் என்று வாயளவிலே கூறிக்கொண்டிருப்பவர்கள் அந்த மக்களை தூண்டிவிட்டு நாட்டிலே அராஜகத்தையும், குழப்பத்தையும் ஏற்படுத்துகின்ற அந்தத் தன்மையை விட்டு,

அதனால் தான் உங்கள் கட்சியிலே ஏற்பட்டிருக்கின்ற இந்தப் பிளவு நிச்சயமாக உங்கள் கட்சியை சீர்திருத்தம் செய்யக்கூடிய அளவிலே இன்றைக்கு நிலைமைகள் உருவாகி இருக்கிறது என்று நான் கருதுகிறேன்.

இந்த அடிப்படையிலே ராஜ்ய சர்க்கார் மொத்த உணவு தான்ய வியாபாரத்தை எடுத்துக்கொள்வது, கள்ளமார்க்கெட் பேர்வழிகளையும் வரி ஏய்ப்பவர்களையும் கண்டுபிடித்து விலைவாசி ஏற்றத்தை தடுப்பது போன்றவைகளிலே நடவடிக்கை எடுப்பது சம்பந்தமாக உங்களுடைய அறிக்கையிலே சுட்டிக்காட்டப்படவில்லை என்று சொல்லிக்கொண்டு, எனது பேச்சை முடித்துக்கொள்கிறேன்.

திரு. கே. ஏ. வகாப் : மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவரவர்களே, ஆளுநர் அவர்களுடைய உரைக்கு நன்றிகூறி, என்னுடைய உரையை துவங்குகின்ற நேரத்திலே, நாம் கடந்த ஆண்டிலே சோகமும் சூழ்ச்சியும் நிறைந்த ஒரு ஆண்டைக் கடந்து இன்றைய தினம் நல்ல ஒரு ஆண்டிலே அடி எடுத்துவைக்கிற நேரத்திலே இந்த உரையை ஆளுநர் அவர்கள் நமக்கு அளித்திருக்கிறார்கள். அவர்களுடைய உரையிலேயுள்ள நல்ல பல கருத்துக்களை பாராட்டுகின்ற நேரத்திலே அந்த உரைக்கு எடுத்துக்காட்டாக இருக்கும் தமிழகத்திலே ஒரு நல்லாட்சியை ஏற்படுத்தி மக்களுக்கு நன்மை செய்ய வேண்டுமென்ற கருத்திலே நல்ல முயற்சிகளை எடுத்து வருகின்ற ஒரு ஆட்சியின் பேரிலே மக்களிடத்திலே அவதூறுகளும் துரோக எண்ணங்களும் பெருகி வரவேண்டிய சூழ்நிலையை கடக்கவேண்டிய கட்டத்திலே நாம் இருந்து கொண்டிருக்கிறோம்.

இங்கே சட்ட மன்றத்தைப் பற்றி எல்லாம் என்னவெல்லாம் வெளியே பேசப்படுகிறது என்று சொன்னார்கள். சட்டமன்றம் செத்துவிட்டது என்று பேசப்படுகிற அளவிலே இந்த நாட்டினுடைய அரசியலிலே அராஜகம் புகுந்துவிட்டது என்று இங்கே இருந்து பேசப்பட்டது. அப்படி பேசியவர்கள் தெரியாத முறையிலே பேசிவிட்டார்கள், புரியாத முறையிலே பேசிவிட்டார்கள். அவர்கள் ஒரு கட்சியை நடத்துகின்ற ஒரு தலைவராக இருந்தாலும் கூட அவர்கள் எந்த பண்போடு பேசவேண்டுமோ அப்படி பேசவில்லை என்பதை ஆளும் கட்சியைச்சேர்ந்தவர்கள் மட்டுமில்லாமல், அவருக்கு தோழமையாக இருக்கின்ற திருமதி அனந்தநாயகி போன்றவர்களும் மதிப்பிற்குரிய கம்யூனிஸ்ட் கட்சியின் தலைவரும் கூட அது



பண்பற்றது என்பதை எடுத்துக்காட்டும் வகையிலே இங்கே பேசினார்கள். சட்ட மன்றம் செத்துவிட்டது என்று கூறுகிறார்கள் இங்கே. உதாரணத்திற்கு சொல்ல வேண்டுமானால் குள்ளநரி ஒன்று திராட்சை பழத்திற்கு ஆசைப்பட்டு அதைப் பறிக்க குதித்து குதித்து பார்த்து விட்டு, சீ, சீ, இந்தப் பழம் புளிக்கும் என்று சொன்னதைப் போல் அவர்கள்தான் ஒரு குழப்பத்தை இந்த நாட்டிலே ஏற்படுத்த வேண்டுமென்று நினைத்தார்கள். அந்தக் குழப்பம் கை கூடாத நிலையிலே இந்த சட்ட மன்றம் செத்துவிட்டது என்று கூறும் நிலையில் அவர்கள் இருக்கிறார்கள்.

இதைக் கூறும்பொழுது உண்மையிலேயே இன்னும் மக்களின் எதிர்காலம் பிரகாசமாக அமையவேண்டும் என்று பாடுபட்டுக் கொண்டு வருகிற இந்த ஆட்சியின் மீது களங்கம் கற்பிக்கப்பட பிரச்சாரம் நடைபெறுகிறது என்று தான் கூறவேண்டும். அந்த பிரசாரத்தை தூக்கி எறிகின்ற அளவிலே மக்களுக்கு நன்மை செய்ய வேண்டுமென்று பல திட்டங்களை இந்த அரசு நிறைவேற்றி வருகிறது. அவர்கள் செய்கின்ற இந்தக் குழப்பங்கள் எல்லாம் தூங்குகின்ற சிங்கத்தைத் தட்டி எழுப்புகின்ற நிலையிலே இன்று ஆட்சியிலே இருப்பவர்கள் சமுதாயத்தில் இருக்கின்ற தாழ்த்தப்பட்ட ஒடுக்கப்பட்ட மக்களுக்கு நன்மை செய்வதை இன்னும் நல்ல முறையிலே செய்வதற்கு உற்சாகப்படுத்தி இருக்கிறார்கள் என்று தான் நான் கூறுவேன்.

இங்கே எதிர்க்கட்சிகள் இருக்கின்றன; எதிரிக் கட்சிகளும் இருக்கின்றன. நேற்று மாண்புமிகு உறுப்பினர்கள் சொன்னதைப்போல் எதிர் பார்க்கின்ற கட்சிகளும் இருக்கின்றன என்று சொன்னால் நிச்சயமாக இந்த நாட்டை ஆளுகின்ற கட்சி எதிர் பார்க்கின்ற கட்சி தான். மக்களுக்கு நன்மை செய்வதிலே எதிர்பாக்கின்றவர்கள் தான். மக்களுடைய வாழ்க்கைத் தரத்தை உயர்த்த வேண்டுமென்று எதிர் பார்க்கின்றவர்கள் தான். எதிர்க்கட்சிகள் இந்த நாட்டிலே இருக்க வேண்டும். எதிரிக் கட்சிகள் இந்த நாட்டிற்குத் தேவையா என்பதை மக்கள் முடிவு செய்யும் கட்டத்திலே நாடு இருந்துகொண்டிருக்கிறது. இந்த நிலையிலே நாட்டின் எதிர்காலத்தைப் பற்றி எதிர்க்கட்சிகளும், எதிரிக் கட்சிகளும் சிந்திக்க வேண்டும். மக்களுடைய நன்மையிலே அக்கரை கொண்டவர்கள் என்று வாயளவிலே கூறிக்கொண்டிருப்பவர்கள் அந்த மக்களை தூண்டிவிட்டு நாட்டிலே அராஜகத்தையும், குழப்பத்தையும் ஏற்படுத்துகின்ற அந்தத் தன்மையை விட்டு,

[திரு. கே. ஏ. வகாப்] [1973 பிப்ரவரி 6

மக்களிடத்திலே அவர்களுக்கு உண்மையான அக்கரை இருக்குமானால் அரசு மக்களுக்கு நன்மை செய்கின்ற பல நல்ல காரியங்களிலே அரசோடு ஒத்துழைக்கத் தயாராக இருக்க வேண்டுமென்று இந்த நேரத்திலே கூறிக்கொள்ள ஆசைப்படுகிறேன்.

அதுமட்டுமில்லை, உணவுப் பிரச்சினைப் பற்றி இங்கே பேசப்பட்டது. அதிலே ஏற்பட்டிருக்கும் பயங்கரத் தன்மைகளைப் பற்றி எல்லாம் கூட மதிப்பிற்குரிய பெரியவர் திரு. மணலி கந்தசாமி அவர்கள் எடுத்துச்சொன்னார்கள். உண்மையிலேயே உணவுப் பிரச்சினை தமிழகத்திலே மட்டுமில்லை, இந்திய துணைக்கண்டத்திலே மட்டுமில்லை, அகில உலகத்திலேயே பயங்கரமான பிரச்சினையாக இப்பொழுது ஆகிக்கொண்டு வருகிறது. ஐக்கிய நாட்டு உணவு டைரக்டர் ஜெனரல் போர்மா தன்னுடைய அறிக்கையிலே சொல்லியிருக்கிறார்: எதிர்காலத்திலே உலகமெங்கும் இந்த ஆண்டு முடிவிலே உணவுப் பிரச்சினை தட்டுப்பாடு கடுமையாகும்; உரம் கிடைக்காத நிலைமை வந்துசேரும். இதற்குத் தயாராகவேண்டும் என்று சொல்லுகிறார். அந்த அறிக்கையை கருத்திலே கொண்டு தமிழக அரசு உணவுப் பிரச்சினையிலேயும், விலைவாசி உயர்வு பிரச்சினையிலேயும் மிகவும் நல்ல முறையிலே அணுக வேண்டிய ஒரு கட்டமாகவும், ஒரு எச்சரிக்கையாகவும் எடுத்துக்கொள்ள வேண்டுமென்று கேட்டுக்கொள்ளுகிறேன்.

சாதாரணமாக மக்களுக்கு வேண்டிய சாதாரணப் பொருள்களின் விலைகள் எல்லாம் ஏறியிருக்கின்றன. அதைக் கட்டுப்படுத்துவதற்கு மத்திய அரசாங்கத்தின் ஒத்துழைப்போடு காரியங்களை ஆற்ற வேண்டும்.

சர்க்கரை விற்கின்ற விலையைப் பார்க்கும் பொழுது—இன்று கன்ட்ரோல் விலை ரூ. 2-15 என்றால் வெளி மார்க்கட்டிலே 3½ ரூபாய் அல்லது 4 ரூபாய் என்று விற்கும் நிலை இருக்கிறது.

அதுமட்டுமில்லை, ஏழை எளியவர்களுக்கு கிடைக்கும் உரம் மூட்டை 50 ரூபாய் நியாய விலை என்றால், 60 ரூபாய் கொடுத்தாலும் கிடைக்காத நிலைமை இருக்கிறது என்றால் தயவுசெய்து இந்த அரசு அதைப்பற்றி எல்லாம் சிந்திக்கவேண்டும். ஏழை எளியவர்கள், விவசாயிகள் இதனால் பெரிதும் பாதிக்கப்பட்டிருக்கிறார்கள். அவர்களுடைய விவசாயத்திலே இன்று எத்தனையோ துன்பங்கள் வந்து



1973 பிப்ரவரி 6] [திரு. கே. ஏ. வகாப்]

கொண்டிருக்கின்றன. வெள்ளம் வந்தது சமீபத்திலே. இன்று அவர்களுடைய கழனிகளைச் சீர்திருத்தி ஏதோ பயிரிடலாம் என்று முனையும் பொழுது அவர்களுக்கு கொடுக்கப்படுகின்ற மின்சாரத்திற்கு வெட்டு வந்திருக்கிறது. அதே நேரத்திலே ஒரு பக்கம் உரப் பற்றாக்குறை வந்திருக்கிறது. இதை எல்லாம் உடனடியாகத் தீர்ப்பதற்கு அரசு தீவிர நடவடிக்கை எடுக்கவேண்டும் என்று கேட்டுக்கொள்ளுகிறேன்.

உரத்தையும் மற்றும் அத்தியாவசியப் பொருள்களை எல்லாம் பதுக்கி வைப்பவர்கள் யாராக இருந்தாலும் அவர்களின் பேரிலே கடுமையான நடவடிக்கை எடுப்பதற்கு நல்ல தீவிரமான திட்டம் ஏற்படுத்தினால்தான் இந்த நாட்டினுடைய மக்களுக்கு நன்மை ஏற்படும் என்பதை இந்த நேரத்திலே சுட்டிக்காட்ட விரும்புகிறேன்.

அடுத்தபடியாக, இன்றைய தினம் உணவு எப்படி மக்களுக்குத் தேவையோ, உடுக்க உடை மக்களுக்குத் தேவையோ, இருக்க இடம் தேவையோ, அதே அடிப்படையில்தான் இன்றைக்கு மின்சாரமும் வந்துவிட்டது. மின்சாரம் இல்லாத நிலைமையிலே சாதாரண கிராமங்களும் தொழிற்சாலைகளும் இயங்க முடியாது என்ற நிலைமை வந்துவிட்டது. அப்படிப்பட்ட நிலைமையிலே நமக்கு பற்றாக்குறை வந்திருக்கிறது. அதற்கான காரணங்களைச் சொல்லும்பொழுது நமக்குப் போதிய நீர் நீர்த்தேக்கங்களிலே இல்லாத நிலைமையும், மேட்டூர் தேக்கத்திலே தண்ணீர் இல்லாததும், நெய்வேலியிலே போதிய மின்சாரம் கிடைக்காததாலும், கரியைக் கொண்டு இயங்குகின்ற மின்சார நிலையங்களிலே அதற்கு வேண்டிய எரி பொருள்கள் இல்லாத காரணத்தினாலும் இந்த நிலைமை வந்தது. அதே நேரத்திலே ஆளுநர் உரையிலே சில மகிழ்ச்சிகரமான செய்திகளும் அறிவிக்கப்பட்டிருக்கின்றன.

நெய்வேலியிலுள்ள மின்நிலையம் அபிவிருத்தி செய்யப்படும் என்றும், இரண்டாவது சுரங்கம் வெட்டும் நிலைமையை அங்கே ஏற்படுத்த மத்திய அரசாங்கம் தீவிரமாக முயற்சிக்கிறார்கள் என்பதும், அனல் மின்நிலையங்களிலே எண்ணெ மூலமாக மின்சாரத்தை உற்பத்தி செய்யக்கூடிய திட்டம் எல்லாம் அரசு வைத்திருப்பதாகக் கூறினார்கள். இதை எல்லாம் நல்ல முறையிலே பரிசீலித்து உடனடியாக விவசாயிகளுக்கு வேண்டிய மின்சாரத்தைக் குறைக்காமல் கொடுக்கின்ற நிலைமையை செய்யவேண்டும்.

மின்சாரம் சம்பந்தமாகக் கூறப்படும் புள்ளி விவரத்திலே, ஏறத்தாழ 18 சதவிகிதம் டிரான்ஸ்மிஷனிலே—மாற்றிக்கொடுக்கும் பொழுது வீணுவதாகச் சொல்லப்படுகிறது. அந்த மின்சாரத்தை வீணக்காத முறையிலே அதற்கு உரிய சில திட்டங்களை மின்சார வாரியம் தயார் பண்ணவேண்டும். இப்படி 18 சதவிகித மின்சாரம் வீணுவதைத் தடுத்தோமானல், அவைகளை நல்ல முறையிலே விவசாயம் போன்றவற்றிற்கும், தொழிற்சாலைகளுக்கும் தரலாம் என்பதை மின்சார வாரியம் தீவிரமாகச் சிந்திக்க வேண்டிய ஒரு கட்டத்திலே இருக்கிறது. இந்த மின்சாரம் இருந்தால் தான் இந்த நாட்டினுடைய உற்பத்தி அதிகமாகும். மின்சாரத் தட்டுப்பாட்டின் காரணமாக மின் வெட்டு வந்தால், தொழில்கள் பாதிக்கப்படும், விவசாயமும் பாதிக் கப்படும், விலைவாசிகள் ஏறவும் அவை காரணமாக இருக்கும் என்பதை நாம் சிந்திக்க வேண்டியவர்களாக இருக்கிறோம்.

1-00 பி.ப. அதுமட்டுமல்ல—தொழில் துறையில் அரசாங்கத்துறை மட்டுமல்லாமல், தனியார்துறை மட்டுமல்லாமல், கூட்டுத்துறையிலும் பல முன்னேற்றங்கள் ஏற்பட்டாக வேண்டும் என்று கூறுகிற நேரத்தில் என் தொகுதிப் பிரச்னையைப் பற்றிக் கூறுமல் இருக்க முடியாது. இராணிப்பேட்டையில் ஆயிரம் ஏக்கராவுக்கு மேற்பட்ட நிலம் தொழிலுக்காக ஒதுக்கப்பட்டு இன்னும் அங்கே எவ்விதமான தொழிலும் ஏற்படுத்தப்படாமல் இருக்கின்றன. உடனடியாக பொதுத்துறையிலோ, தனியார் துறையிலோ அல்லது அரசாங்கம், தனியார் ஆகிய இருவர்களும் சேர்ந்த கூட்டுத்துறையிலோ அந்த இடத்தில் பல தொழில்களை ஆரம்பித்து அந்தப் பகுதியில் தொழில்வளத்தைப் பெருக்க வேண்டுமென்று இந்த நேரத்தில் கேட்டுக்கொள்ளக் கடமைப்பட்டிருக்கிறேன்.

இந்த அரசு ஏழை மக்களுக்கும், பின்தங்கிய மக்களுக்கும் உதவுகின்ற அரசாக இருக்கிறது. பின்தங்கிய சமுதாயத்தில் ஒரு பெரிய சமுதாயமாக இருக்கிற முஸ்லீம் சமுதாயத்தினரிடையே அனுதாபம் உடையதாகவும் இருக்கிறது. அவர்கள்பால் அக்கறை இருக்கிறது. எங்களுடைய நியாயமான கோரிக்கைகள் அனுத்தாபத்துடன் பரிசிலிக்கப்படும் என்று பலமுறைகளிலும் கூறி வந்திருக்கிறார்கள். எங்களது நீண்டநாளைய கோரிக்கை ஒன்றுக்கு மாண்புமிகு முதல்வர் அவர்கள் சாதகமான பதிலையே கூறி வந்திருக்கிறார். நாங்கள் உருது பேசுகின்ற முஸ்லீம்களைப் பின்தங்கியோர் பட்டியலில் சேர்க்கவேண்டுமென்று பல நாட்களாகக் கேட்டு வருகிறோம். ஆயினும் இதுவரை





அப்படிப்பட்ட அறிவிப்பு வரவில்லை. அப்படிப்பட்ட அறிவிப்பை அடுத்து வருகிற சட்டமன்றத்தில் இஸ்லாமிய சமுதாயத்தினர்களுக்கு அளிக்கின்ற மாபெரும் உதவியாக, அந்த சமுதாயத்தினரின் உரிமையாக அளிக்க வேண்டுமென்று இந்த நேரத்தில் கேட்டுக்கொள்கிறேன். பின்தங்கியோர் பட்டியலில் அவர்கள் சேர்க்கப்பட்டாக வேண்டும் என்று கவிதை பாடியும் கேட்டோம். அப்போது முதல்வர் அவர்கள் கஜானு கனியவில்லை என்று கூறியிருக்கிறார். முதல்வரின் மனது கனிந்தால் கஜானு தானுகக் கனிந்துவிடும். இந்த சமுதாயத்தினரின் நீண்டநாள் கோரிக்கை நிறைவேறும். அவர்களிடையே இந்த அரசைப்பற்றி நல்ல எண்ணமும் ஏற்படும் என்று கூறிக்கொள்ள ஆசைப்படுகிறேன்.

அடுத்து............

மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர் : உங்களுக்கு அளிக்கப்பட்ட நேரம் முடிந்துவிட்டது. மேலும் நீங்கள் 5 நிமிடங்கள் பேசினல் நாளைக்கு உங்கள் கட்சியின் சார்பில் பேசுகின்ற உறுப்பினரின் நேரத்தில்தான் 5 நிமிடங்கள் குறைக்க வேண்டிவரும்.

திரு. கே. ஏ. வகாப் : ஒரே ஒரு விஷயம், போக்குவரத்து வழித்தடங்களை எல்லாம் நாட்டுடைமையாக்குவதில் அரசு தீவிரமாக இருக்கிறது. இது ஒரு நல்ல ஏற்பாடு என்றாலும் இதில் கொஞ்சம் நிதானம் காட்டியாக வேண்டும். அவசரம் அவசரமாக இன்றைக்கு இருக்கிற அமைப்பை மாற்றப்போய் மக்களுக்கு அதிகமான இடையூறுகள் ஏற்படாதிருக்க கவனம் செலுத்த வேண்டும். இதுபற்றி பொறுக்குக் குழுவில் நன்றாகப் பரிசீலனை செய்த பிறகு அரசுடைமையாக்குவதுபற்றி அரசு சிந்திக்க வேண்டும். அதைவிட்டு அரசைக் குறை சொல்கிறவர்களுக்கு இடமளிக்கிற வகையில் எதையும் அவசரம் அவசரமாக தவருக, புதிய இடையூறுகள் ஏற்படுகிற வகையில் செய்துவிடக்கூடாது என்று தெரிவித்துக்கொள்கிறேன்.

நாட்டில் வேலையில்லாதவர்கள் லட்சக்கணக்கில் இருக்கிறார்கள். மக்கள் கஷ்டப்படுகிற வகையில் வசூலிக்கப்படுகிற வரிப் பணத்தில் பல கோடிக் கணக்கான ரூபாய் இன்றைக்கு அதிகாரிகளுக்கு சம்பளமாகவே தரப்படுகிறது. ஆயினும் இப்படி அதிகாரத்தில் இருப்பவர்கள்கூட வேலையில்லாதவர்களின் நலனுக்காக பிரதமர் குறிப்பிடுவது போல ஒரு "செஸ்" நிதியை ஏற்படுத்திக்கொடுக்கிற [illegible]

பான்மையில் முன்வரவில்லை. ஒரு தியாக உணர்ச்சி எல்லோரிடத்திலும் முதலாவதாக வந்தாகவேண்டும். (மணி அடிக்கப் பட்டது.)

மறுபடியும் மறுபடியும் நான் வற்புறுத்திச் சொல்வது ஒன்றுதான். உருது பேசும் இஸ்லாமிய சமுதாயத்தினர்களை பின் தங்கியோர் பட்டியலில் உடனடியாகச் சேர்த்து அந்தச் சமுதாயத் தினரின் நீண்டநாள் கோரிக்கையை நிறைவேற்றித் தரவேண்டும் என்று கேட்டுக்கொண்டு என் உரையை முடித்துக்கொள்கிறேன்.

திரு. தோப்பூர் திருவேங்கடம் : பேரவைத் துணைத் தலைவர் அவர்களே, மேதகு ஆளுநர் அவர்களுடைய உரையின்மீது நடை பெறுகிற விவாதத்தில் நானும் பங்குபெற்று என் கருத்துக்களைக் கூற அனுமதி அளித்ததற்கு என் நன்றியைத் தெரிவித்துக்கொள்கிறேன்.

கவர்னர்பெருமான் உரையை காய்தல், உவத்தலின்றி பார்ப் பவர்கள் அனைவரும் நிச்சயமாகப் பாராட்டுவார்கள் என்று நினைக் கிறேன். மேலெழுந்தவாரியாகவோ உள்ளூரவோ ஆராய்ந்து பார்த் தாலும் அதில் இருக்கிற பல்வேறு அம்சங்களை ஒருவரும் புறக்கணிக்க முடியாது என்று நான் கருதுகிறேன். கவர்னர் பெருமான் தம் உரையிலே குறிப்பிட்டிருக்கிற பல்வேறு முக்கியமான அம்சங்களில் ஒரு சிலவற்றை நான் இந்தப் பேரவையின் கவனத்திற்குக் கொண்டு வர விரும்புகிறேன்.

வெள்ளத்தால் பாதிக்கப்பட்டவர்களுக்கு மத்திய அரசின் அனும தியை எதிர்பார்த்து ரூ. 5 கோடி செலவிடுவதற்கு நமது தமிழக அரசு அனுமதி அளித்துள்ளது என்பதாகக் கவர்னர் அவர்கள் தம் உரையில் குறிப்பிட்டிருப்பது மிகமிக வரவேற்கத்தக்க அம்சம்.

அதுபோல் குடி தண்ணீருக்காக ரூ. 1.25 கோடி செலவில் துயர் தணிப்பு நடவடிக்கைகளை மேற்கொள்ள அரசு அனுமதி அளித் துள்ளது என்பதாகக் கவர்னர் பெருமான் குறிப்பிட்டுள்ளதும் பாராட்டத்தக்க ஒன்றாகும்.

அடுத்து, உழவர்களின் நன்மையைக் கருதி வேளாண்மை மறுநிதி யுதவிக் கழகம், உலக வங்கி இவற்றின் உதவியுடன் கிணறுகள் தோண்டுவதற்கும் குழாய்க் கிணறுகள் இறக்குவதற்குமான சிறந்த



திட்டம் ஒன்றும் அவரது உரையில் அடங்கியிருப்பதற்கு நிச்சயமாக உழவர் பெருங்குடி மக்களும் தமது மகிழ்ச்சியைத் தெரிவித்து வர வேற்பார்கள் என்று நம்புகிறேன்.

நிலத்தடி நீர்வளத்தை அறிவியல் முறையில் கண்டுபிடித்துக் கணக்கிடுவதற்கென 11 கோடி ரூபாய் செலவாகும் திட்டம் ஒன்று வகுக்கப்பட்டு நிதியுதவிக்காக மத்திய அரசுக்கு அனுப்பப்பட்டுள்ளது என்கிற செய்தியினையும் அவர் தந்திருப்பது மிகமிக மகிழ்ச்சிக்குரிய தாகும்.

மத்திய அரசு ஊழியர்களுக்கும், மாநில அரசு ஊழியர்களுக்கும் உள்ள ஊதிய விகித வித்தியாசத்தைப் போக்க வேண்டுமென்று மாநில அரசு வற்புறுத்தியிருப்பதாகக் கவர்னர் பெருமான் அறிவித் திருப்பதை மாநில அரசு ஊழியர்கள் அனைவருமே வரவேற்பார்கள் என்று தெரிவித்துக்கொள்கிறேன்.

மைசூர், தமிழ்நாடு, கேரளம், ஆந்திரப் பிரதேசம் ஆகிய மாநிலங்கள் ஒருங்கிணைந்து இந்த வட்டாரத்தில் கிடைக்கும் நீர் வளத்தைப் பயன்படுத்த திட்டமிடவேண்டும். இதனடிப்படையில் மேற்கு மலைத்தொடர் மேம்பாட்டுக் கழகம் ஒன்றை அமைப்பது என்ற ஒரு அரிய யோசனையை மேதகு கவர்னர் அவர்கள் வெளியிட் டிருப்பது வரவேற்கத்தக்கதாகும். இதனை வரவேற்று பத்திரிகைகள் தலையங்கங்கள்கூடத் தீட்டியிருக்கின்றன. இதுபோன்ற ஒரு திட்டத்தைச் செயல்படுத்த மத்திய அரசும் முன்வரவேண்டும். விலைக அடிக்கடி அழைத்து இவர்களது பிரச்னைகளில் தலையிடாமல் உதவி செய்ய வேண்டியதும் அவசியம் என்பதாக அந்தப் பத்திரிகை களும் குறிப்பிட்டிருக்கின்றன.

வேலை வாய்ப்புகளைப் பெருக்குவதற்கு மத்திய அரசு உதவியுடன் தமிழக அரசு மேற்கொண்டுள்ள நடவடிக்கைகளைக் கவர்னர் தமது உரையில் குறிப்பிட்டிருப்பதும் வரவேற்கத்தக்க ஒன்றாகும். இப்படி பல்வேறு வரவேற்கத்தக்க அம்சங்களை மேதகு கவர்னர் அவர்கள் குறிப்பிட்டிருப்பதும், இந்த அரசாங்கத்தின் பல்வேறு சாதனைகளை மக்கள் அறிந்திருப்பதும் பெருமைப்படக்கூடிய ஒன்றாகும். இருந்தும் ஒவ்வொரு தொகுதியிலும் சில பல பிரச்னைகள் இருக்கத்தான் செய் கின்றன. எங்கள் வடார்க்காடு மாவட்டத்தை எடுத்துக்கொண்டால் எங்கள் தொகுதியில் கீழரசன்பட்டியில் ஒரு அணை கட்டுவதற்கு

வேண்டும் என்று அந்தப்பகுதி மக்களாகிய நாங்கள் கேட்டு வருகிறோம். அந்த அணையைக் கட்டிக்கொடுத்தால் அந்தப் பகுதியில் பாசன வசதிகள் பெருகும். அதுபோலவே அந்த ஆற்றிற்குக் குறுக்கே வர பாலம் இல்லாத காரணத்தினால் கீழரசன்பட்டியில் உள்ள பத்தாயிரத்திற்கும் மேற்பட்ட மக்கள் அவதிப்படுகிறார்கள். அந்தப் பகுதி விளைபொருள்களை எல்லாம் எடுத்துவரவும் சங்கடமாக இருக்கிறது. ஆகவே, அங்கே அந்த ஆற்றில் ஒரு மேம்பாலத்தையும் கட்டித் தரவேண்டுமென்று இந்தத் தமிழக அரசை நான் இந்த நேரத்தில் கேட்டுக்கொள்கிறேன்.

அதைப் போலவே, மேலரசம்பட்டு அணை என்று சொல்லப்படுகிற அணை மிக நீண்ட நாட்களாக எதிர்பார்த்துக் கொண்டிருக்கிற ஒரு திட்டமாகும். அது வேலூருக்கு 30 மைல் தொலைவிலேயுள்ள திட்டமாகும். அந்த திட்டத்தின் மூலம் பல ஆயிரக்கணக்கான ஏக்கர் நிலங்கள் வசதி பெறுகிற வாய்ப்பு இருக்கிறது. கடந்த காலங்களில் எல்லாம், இந்தத் திட்டத்தை நிறைவேற்றவிடாமல் பல அதிகாரிகள் தடுத்து வந்திருக்கிறார்கள். நாம் முயற்சித்தாலொழிய அப்படிப்பட்ட திட்டங்களை நிச்சயமாக நிறைவேற்ற முடியாது.

அடுத்து, பாலாறு சான்றிதழின் காரணமாக, விவசாயிகளுக்கு மின் இணைப்புத் தருகின்ற நேரத்திலே அவர்களுக்குத் தொல்லைகள், சங்கடங்கள் ஏற்படுகின்றன. அப்படித் தொல்லை தருகிற அந்த பாலாறு சான்றிதழை நீக்கிவிடவேண்டுமென்று நான் இந்த நேரத்திலே மெத்த பணிவன்போடு கேட்டுக்கொள்கிறேன்.

அடுத்து, பாலாற்று நீரை விவசாயிகளுக்குப் பயன்படுகின்ற விதத்தில் தேக்கிவைக்கலாம். அந்த முறையிலே ஏதாவது ஒரு திட்டத்தை வகுப்பதற்கு நல்ல நிபுணர் குழுவை அமைக்க வேண்டும் என்று இந்த நேரத்திலே நம்முடைய அரசை மெத்தப் பணிவன்போடு கேட்டுக்கொள்கிறேன்.

அதைப் போலவே, குடியேற்றம் தாலூகாவிலிருந்து பாலாற்றைக் கடந்து வருகிறவர்கள், வேலூருக்கோ, ஆம்பூருக்கோ வருகிறவர்கள் மழைக் காலங்களில் வருவதற்கு, மிகவும் சங்கடமாக இருக்கிறது. கரும்பு ஆலைக்கு கரும்பு வருவது மிகமிகக் கடினமாக இருக்கிறது. மழைக் காலங்களில் போக்குவரத்துக்கு மிகவும் இடைஞ்சலாக இருக்கிறது. பஸ்கள் வந்துபோவதற்கே மழைக் காலங்களில்



மிகவும் தொல்லையாக இருக்கிறது. ஆகையால், ஆயிரக்கணக்கான மக்களுடைய போக்குவரத்துக்காகவும், கரும்பு போன்ற பொருள்களையெல்லாம் வசூலிப்பதற்காகவும் அங்கே மேம்பாலம் அமைக்க, ஆம்பூருக்கருகில் உள்ள தரைப் பாலத்தை மேம்பாலமாக ஆக்கித்தர வேண்டுமென்று இந்த நேரத்திலே நான் மெத்த பணிவன்போடு கேட்டுக்கொள்கிறேன்.

அதைப் போலவே, ஆம்பூரிலிருந்து வேலூருக்குச் செல்கின்ற வழியிலே, சோலூரர், கன்னடிகுப்பம், போன்ற பல்வேறு கிராமங்களில் எல்லாம்கூட தண்ணீர் வசதி மிகவும் குறைவாக இருக்கிறது. குறைவாக இருக்கிறது என்று சொன்னால், குடி தண்ணீர் உப்பு நீராகக் கரிக்கிறது. அதற்குக் காரணம், அதற்கு அருகாமையிலே இருக்கிற, அங்கே இருக்கிற மக்களுக்கு நல்லமுறையிலே நீர் வசதி கொடுக்கப்படவில்லை. அங்கு தோல் பதனிடும் தொழிற்சாலைகளில் செப்டிக் டாங்க் அமைக்காமல் இருப்பதால், அந்த நீர் மற்றப் பகுதிகளிலுள்ள நீரோடு கலந்துவிடுவதால், அந்தப் பகுதி மக்கள் மிகவும் அவதிக்குள்ளாக வேண்டிய நிலையிருக்கிறது. அந்தப் பகுதியிலே செப்டிக் டாங்க் கட்டப்படுமானால்தான் அந்தப் பகுதியிலே இருக்கிற மக்களுக்கெல்லாம் நீர்வசதி நல்லமுறையிலே இருக்கும். இதன் காரணமாக, அந்தப் பகுதியிலுள்ள உழுநிலங்கள் விவசாயத்திற்கு லாயக்கில்லாத நிலங்களாக ஆக்கப்பட்டு வருகின்றன. ஆகவே, அந்த உழுநிலங்களுக்கு நல்ல தண்ணீர் கிடைக்க வழி செய்து, அந்தப் பகுதி மக்களுக்கு நலன்களை உருவாக்கித் தரவேண்டுமென்று நான் இந்த நேரத்திலே மெத்த பணிவன்போடு கேட்டுக்கொள்கிறேன்.

அதைப் போலவே, பல்வேறு அணைகள் கட்டப்பட வேண்டிய சூழ்நிலையிலே எங்களுடைய மாவட்டம் இருக்கிறது. தஞ்சைக்கு அடுத்தாற்போல், மகசூலிலே முன்னிலையிலே இருப்பது எங்களுடைய வடார்க்காடு மாவட்டம் என்பதை நாம் அனைவரும் அறிவோம். இருந்தாலும், நீரைப் பொறுத்தவரையிலே தண்டரை அணை ஒன்று தான் அங்கு இப்பொழுது கட்டப்பட்டு வருகிறது.

அதைப் போலவே, மருதவாணி அணை, மற்ற பத்திரப்பள்ளி குடியாற்றத்திலேயுள்ள மேம்பாலம் இவற்றையெல்லாம் கட்டித்தர வேண்டுமென்று கோரிக்கொண்டு வருகிறார்கள். இந்த திட்டங்கள் எல்லாம் நிறைவேற்றப்பட்டால், அந்தப் பகுதியிலே உள்ள மக்கள்

[திரு. தோப்பூர் திருவேங்கடம்] [1973 பிப்ரவரி 6

பயன் அடைவார்கள். பாசன வசதி கிடைக்கும், விவசாயம் நல்ல முறையிலே செழிப்புற நடைபெறும் என்று இந்த நேரத்திலே பணிவன்போடு தெரிவித்துக்கொள்கிறேன்.

புறநானூறிலே குடபுலவியனார் என்ற ஒரு புலவர் பாண்டியன் தலையாலங்கானத்து செருவென்ற நெடுஞ்செழியனைப் பார்த்து, எல்லா புகழும் புகழல்ல, இம்மைக் கண் ஒரு பேரரசனாய் புகழெய்த வேண்டினும் மறுமையிலும் புகழோடு இருக்க வேண்டினும் நாட்டில் நீர் நிலை பெருக அமைக்க வேண்டும் என்கிறார். எல்லா புகழும் புகழல்ல, இம்மையிலும் மறுமையிலும் புகழை விளைவிக்கக்கூடிய நீரையும், நீர்நிலைகளையும் உருவாக்குவதுதான் புகழ் என்று அந்தப் புலவன் அந்த மன்னனுக்கு அறிவுறுத்தி இருக்கின்றான். ஆதலால், நாம் நம்முடைய காலத்திலே கட்டுகின்ற அணைகளும், நிச்சயமாக என்றென்றும் நிலைத்து நிற்கக் கூடியவை. ஆகவே, இந்த நன்மைகள் மூலம் நாட்டிலே இருக்கிற வறுமையையும், பசியையும், பஞ்சத்தையும் போக்க முடியும் என்பதை தமிழக அரசு நன்றாக உணருகிறது.

கரிகாலன் காலத்திலே கட்டப்பட்ட கல்லணைதான் இன்றைக்கு நீர்ப்பாசனத்திற்கு உகந்ததாகவும் எல்லோராலும் போற்றத்தக்க அளவிலும் இருக்கிறது. அதைப்போல், இப்பொழுது நம் தமிழக முதல்வர் கலைஞர் காலத்திலே கட்டப்படுகிற அணைகள் வருங்காலத்திலே நீர்ப்பாசனத்திற்குப் பயன்படக்கூடிய அளவில் இருக்கவேண்டுமென்று இந்த நேரத்திலே கேட்டுக்கொள்கிறேன்.

வள்ளுவப் பெருமகனார்,

“ நீரின் றமையாது உலகெனின் யார்யார்க்கும்
வான்இன் றமையா தொழுக்கு”

என்று கூறுகிறார். நீர் இல்லாமல் உலகு இல்லை. உலகமே ஒழுங்கு நிலை பெற வேண்டுமானால்கூட, நீர்தான் மிக முக்கியம் என்று கூறுகிறார். நீர் இல்லாமல் பொருள் விளையாது. அதனாலே நாட்டிலே, பசி, பட்டினி, களவு, கொள்ளை முதலியவை எல்லாம் ஏற்படும் என்று வள்ளுவர் மிகத் தெளிவாகத் சொல்கின்றார். ஆகவே, நீர், விவசாயப் பொருள்களை உற்பத்தி செய்வதற்கு மிக அத்தியாவசியமானது என்பதை நான் இந்த நேரத்திலே தெரிவித்து, அதற்கு ஆவன செய்யவேண்டுமென்று விரும்பி, வேண்டி கேட்டுக்



1973 பிப்ரவரி 6] [திரு. தோப்பூர் திருவேங்கடம்]

கொண்டு, கவர்னருடைய உரையில், பல்வேறு விதங்களிலே தமிழகத்திலே வரவேண்டிய நல்ல முறையான திட்டங்கள் பற்றியெல்லாம் கூறப்பட்டிருப்பதை வரவேற்று என்னுடைய உரையை முடித்துக் கொள்கிறேன். வணக்கம்.

திரு. ஏ. பாலையா : துணைத் தலைவர் அவர்களே, இந்த மன்றத்தில் தமிழக ஆளுநர் அவர்கள் ஆற்றியுள்ள உரைமீது ஒரு சில கருத்துக்கள் கூற விரும்புகிறேன்.

ஆளுநர் அவர்கள் ஆற்றியுள்ள இந்த உரையில் தமிழகத்தில், ஏன் இந்தியப் பிரச்னையாக இருக்கிற விலைவாசி ஏற்றம், வேலையில்லா திண்டாட்டம், இன்னும் மின்சார வெட்டினால் இந்த நாட்டிலே இருக்கிற தொழிற்சாலைகள் பாதிக்கப்பட்டிருக்கின்ற நிலைமை, தொழிலாளர்கள் வேலை இழக்கின்ற சூழ்நிலை இவைகள் பற்றியெல்லாம் சொல்லவில்லை. இந்த அரசு, இந்த முக்கிய பிரச்னைகளில் எல்லாம் என்னென்ன முடிவுகள் எடுக்க இருக்கிறது என்பதைபற்றி அந்த உரையிலே சொல்லவில்லை.

தமிழக அரசு 1973-ஆம் ஆண்டு பிப்ரவரி 1-ஆம் தேதியிலிருந்து மின்சாரக் கட்டணத்தை 15 சதவிகிதமாக உயர்த்தியிருக்கிறது. இதைப் போல மின்சார வெட்டை 25 சதவிகிதத்திலிருந்து 40 சதவிகிதமாக அதிகரித்திருக்கிறார்கள். இதனாலே ஆயிரம், ஆயிரம், சிறு தொழில்கள் பாதிக்கப்படுவது மட்டுமல்லாமல், தொழிலாளர்களும் வேலையின்றி தவிக்கின்ற சூழ்நிலையும் உருவாகின்றது.

இதைப் போல மின்சார வெட்டு அதிகம் ஆகியதன் காரணத்தால், விவசாயம் அதிக அளவு பாதிக்கக்கூடிய சூழ்நிலை இன்றையதினம் உருவாகி இருக்கிறது. இந்த மின்சார வெட்டு எதனால் ஏற்பட்டது என்பதை நாம் ஆராய்ந்து பார்க்கின்ற நேரத்திலே தற்பொழுதிருக்கிற மேட்டூர் நீர்மின்சாரத் திட்டத்தின் மின்சார உற்பத்தியில் எந்தவிதமான குறைபாடும் இருப்பதாகத் தெரியவில்லை. அதைப்போல சென்னையில் இருக்கிற பேசின் பிரிட்ஜ் பவர் ஹவுஸ், எண்ணூர் போன்ற எரி பொருள் மின்சார உற்பத்தி நிலையங்களிலும் மின்சார உற்பத்தி குறைந்ததாகத் தெரியவில்லை. இருந்தும் இந்த மின்சார வெட்டு எதனால் ஏற்பட்டது என்பதை பார்க்கின்ற நேரத்தில் இந்த அரசின் தவறான கொள்கையினாலும், அரசு அதிகாரிகளுடைய பொறுப்பற்ற போக்கினாலும், நெய்வேலி அனல் மின்சார நிலையம் சரிவர இயங்க முடியாத சூழ்நிலை ஏற்பட்டது. அந்த நெய்வேலி

[திரு. ஏ. பாலையா] [1973 பிப்ரவரி 6

அனல் மின்சார நிலையம் சரியாக, ஒழுங்காக வேலை செய்திருந்தால், திட்டம் நிறைவேற்றப்பட்டிருக்குமானால் இத்தகைய நெருக்கடியான மின்சார வெட்டு வந்திருக்கக்கூடிய சூழ்நிலை இருக்காது: நெய்வேலி அனல் மின்சார நிலைய வேலையை முடிப்பதற்கு மத்திய அரசோடு இந்த அரசு மிகக் கடுமையாகப் போராடி இருக்கவேண்டும். ஆனால், இந்த அரசு இன்றைய அரசியல் சூழ்நிலையில் மத்திய அரசோடு, எந்தப் பிரச்னையிலும் எதிர்த்துப் போராடுவதற்கு தயங்குகின்றது. மத்திய அரசை எதிர்ப்பதற்கு வலுவற்ற தமிழக அரசின் போக்கினால் இன்றையதினம் நெய்வேலி மின்சார திட்டத்தை நிறைவேற்றமுடியாத ஒரு சூழ்நிலை ஏற்பட்டிருக்கிறது. அதைப்போல, திராவிட முன்னேற்றக் கழகம் ஆட்சிப் பொறுப்பை ஏற்றதற்குப் பின்னால் தமிழகத்திலே எந்தவிதமான மின்சார உற்பத்தி நிலையமும் ஆரம்பிக்கப்படவில்லை யென்பதை இந்த சந்தர்ப்பத்திலே நான் கூற விரும்புகிறேன்.

மேலும் இருக்கிற மின்சார நிலையங்களை விற்கக்கூடிய நிலையிலே இந்த சர்க்கார் நடந்து கொண்டிருக்கிறது. சமயநல்லூர் மின் நிலையத்தை, மின்சார வெட்டு வருகின்ற இந்தத் தருணத்திலே விற்றிருக்கிறார்கள் என்று சொன்னால் இந்த அரசின் மின்சாரக் கொள்கை எந்த அளவுக்குத் தவறாக இருக்கிறது என்பதைப் புரிந்து கொள்ளலாம்.

கன்னியாகுமரி மாவட்டத்தில் 14 கோடி ரூபாய் செலவில் கோதையாறு மின்சார திட்டம் என்ற ஒரு திட்டம் ஆரம்பித்து பல வருடங்களாக நிறைவேற்றப்படாமலேயே இருந்து கொண்டிருக்கிறது. சில மாதங்களுக்கு முன்னால் அது பூர்த்தியாகிவிடும் என்று சொன்னார்கள். ஆனால் இயந்திரக் கோளாறு காரணமாக இன்னும் அந்தத் திட்டம் நிறைவேறாமல் இருந்து கொண்டிருக்கிறது. அந்தத் திட்டத்தை அதிகாரிகள் தவறுதலாக நிறைவேற்றியதன் காரணமாக இப்பொழுது மின்சாரம் உற்பத்தி செய்ய முடியாது என்ற அளவிற்கு அது இருந்து கொண்டிருக்கிறது. மின்சார வெட்டு அதிகப்படியாக இருந்து கொண்டிருக்கின்ற இந்த நேரத்திலே அந்தத் திட்டத்தில் என்ன என்ன குறைகள் இருக்கின்றன என்பதைக் கண்டறிந்து அதைப் பற்றிய ஆக்கப்பூர்வமான முடிவுகளை உடனடியாக அரசு எடுக்க வேண்டுமென்று நான் கேட்டுக்கொள்கிறேன்.



1973 பிப்ரவரி 6] [திரு. ஏ. பாலையா]

கவர்னர் உரையிலே இந்த நாட்டிலே இருக்கின்ற பேருந்து வழித்தடங்கள் எல்லாம் நாட்டுடமையாக்கப்பட இருக்கிறது என்ற கருத்தைச் சொல்லியிருக்கிறார்கள். நாட்டுடமையாக்கப்பட வேண்டும் என்ற கொள்கைக்கு தமிழகத்திலேயுள்ள எந்தக் கட்சியினருக்கும் இரு வேறு கருத்துக்கள் கிடையாது. அதே சமயத்திலே தேசியமயமாக்கப்பட்டதற்குப் பின்னாலே நிர்வாகம் எந்த முறையிலே நடந்து கொண்டு இருக்கிறது என்பதைச் சிந்தித்துப் பார்க்கவேண்டும். பேருந்துகளிலே ஏறி சரிவர பயணம் செய்யமுடியாத நிலைமைதான் இருந்துகொண்டிருக்கிறது. நாகர்கோவிலிலிருந்து சென்னைக்கு பயணம் செய்ய வேண்டுமென்றால் சென்னைக்கு வந்து சேரமுடியுமா என்ற பயங்கரமான நிலைமைதான் இருக்கிறது. இப்படிப்பட்ட நிலைமை ஏன் ஏற்பட்டிருக்கிறது என்பதைப் பார்க்க வேண்டும்.

நாகர்கோவிலிலே 200 பஸ்களுக்கு மேல் ஓடிக்கொண்டிருக்கின்றன. அவற்றில் 40 பஸ்களுக்கு மேல் ஓடாமல் இருந்துகொண்டிருக்கின்றன. அதிகாரிகளைக் கேட்டால் டயர்கள் இல்லை, அதனால் அவற்றை ஒதுக்கி வைத்திருக்கிறோம் என்று சொல்கிறார்கள். டயர்கள் இல்லாமல் பஸ்கள் ஓடாமல் ஒதுக்கிவைக்கப்படுகின்றன என்ற நிலைமை எந்த அரசிலேயும் ஏற்பட்டதில்லை, திராவிட முன்னேற்றக் கழக அரசிலேதான் அந்த நிலைமை ஏற்பட்டிருக்கிறது. ஆகவே இதிலே சர்க்கார் தனிக் கவனம் செலுத்தி டயர்கள் இல்லாமல் ஓட்ட முடியாமல் இருக்கிற பஸ்களை ஓட்டுவதற்கும் மக்களுக்குத் தேவையான வசதிகளைச் செய்து கொடுப்பதற்கும் முயற்சிகளை உடனடியாகச் செய்ய வேண்டுமென்று கேட்டுக்கொள்கிறேன்.

இன்னும் ஒன்றை இந்த நேரத்திலே குறிப்பிட விரும்புகிறேன். அரசு பஸ்கள் மிகவும் மோசமான நிலைமையில் இயங்கிக்கொண்டிருப்பதாக நான் ஏற்கனவே சொன்னேன். பணிமனைகளிலே வேலை செய்யக்கூடியவர்கள் ஒழுங்காக சரிவர வேலை செய்யாததன் காரணமாகவும் இப்படிப்பட்ட நிலைமை ஏற்பட்டிருக்கிறது. இந்தப் பணிமனைகளிலே வேலை செய்கிறவர்கள் முறையான பயிற்சி பெற்றவர்கள் அல்ல, தொழில் நுணுக்கம் சரிவர அறிந்தவர்கள் அல்ல. அதனால் பஸ்கள் சரிவர இயங்கவில்லை. இதைக் கவனிக்க வேண்டும்.

நம்முடைய நாட்டில் உணவு உற்பத்தி உபரியாக இருக்கிறது என்று குறிப்பிட்டார்கள். மிக மகிழ்ச்சியோடு வரவேற்கக்கூடிய ஒன்று. ஆனால் உணவுப் பங்கீட்டில் பலவிதமான ஊழல்கள் நடந்து

இருப்பதாகத் தெரியவருகிறது. கும்பகோணத்திற்குப் பக்கத்தில் நாச்சியார் அம்மன் கோயில் டெப்போவிலே 2,000 மூட்டை நெல் காணமல் போய்விட்டதாகத் தகவல் வந்திருக்கிறது. இந்த நிலைமை உணவுப் பங்கீட்டு இலாகாவில் இருக்கிறது என்று சொன்னல்......

மாண்புமிகு திரு. ப. உ. சண்முகம் : அங்கத்தினர் 2,000 மூட்டை நெல் காணமல் போய்விட்டதாகச் சொல்கிருர்கள். அதைப்பற்றி விவரமான விவரங்கள் இருந்தால் சொல்ல வேண்டும். ஏதோ பத்திரிகைகாரர்கள் போடுவார்கள், படிப்பதற்கு சுவையாக இருக்கும் என்று சொல்லக்கூடாது. அரசாங்கம் நடவடிக்கை எடுக்கவேண்டு மென்ருல் அங்கத்தினர்கள் விவரமாகச் சொல்ல வேண்டும். அப்படிச் சொன்னல் நாளையோ நாளை மறுநாளோ முதலமைச்சர் அவர்கள் பதில் சொல்லும்பொழுது அதற்குப் பதில் சொல்வார்கள். அப்படி யில்லாமல் நாச்சியார்கோவில், 2 ஆயிரம் மூட்டை காணவில்லை என்ற முறையிலே சொல்ல வேண்டாம். எங்கே யார் என்றெல்லாம் விவரமாகச் சொன்னல் நடவடிக்கை எடுக்கலாம்.

திரு. ஏ. பாலையா : நாச்சியார் அம்மன் கோயிலிலே.........

மாண்புமிகு டாக்டர் மு. கருணநிதி : நாச்சியார் அம்மன் கோவில் என்று சொல்கிருர்கள். நாச்சியார்அம்மன் கோவில் என்று ஊரே இல்லை, நாச்சியார்கோவில் என்றுதான் இருக்கிறது. விவரங்களைச் சொன்னல் பதிலளிக்கலாம்.

திரு. ஏ. பாலையா : நாச்சியார் கோவிலிலே அரசாங்கக் கிடங்கில் வைத்திருந்த 2 ஆயிரம் மூட்டை நெல் காணமல் போயிருக்கிறது என்று தகவல் வந்திருக்கிறது. அதைப்பற்றி சரியான முறையிலே விசாரிக்க வேண்டும்...........

மாண்புமிகு டாக்டர் மு. கருணநிதி : நாச்சியார் கோவிலில் அர சாங்கக் கிடங்கு என்று சொல்கிருர்கள். ஆனல் உணவு அமைச்சர் அவர்களோ நாச்சியார்கோவிலில் அரசாங்கக் கிடங்கே இல்லை என்று சொல்கிருர்கள். அவர்கள் சொல்வது சரியா என்பதை விசாரித்து நாளைக்குச் சொல்கிறேன்.

திரு. ஏ. பாலையா : அரசாங்கத்தின் உணவுக் கொள்கையின் காரணமாகத்தான் இந்த நிலைமை ஏற்பட்டிருக்கிறது...........



மாண்புமிகு திரு. ப. உ. சண்முகம் : அரசாங்கக் கிடங்கிலே என்று சொல்கிருர்கள். அரசாங்கக் கிடங்கே அங்கு கிடையாது. தனிப்பட்ட ஏஜென்டிடமிருந்து காணமல் போய்விட்டதைப்பற்றிச் சொல்கிருரோ என்னவோ அல்லது பத்திரிகையிலே ஏதாவது வந்து அதை வைத்துச் சொல்கிருரோ என்னவோ தெரியவில்லை. 1967, 1968, 1969 ஆகிய ஆண்டுகளிலே பல இடங்களிலே ஸ்டாக் வைத் திருந்த நெல்லை சிலர் விற்றிருக்கிருர்கள். அதையெல்லாம் கண்டு பிடித்து வழக்கு போடப்பட்டிருக்கிறது. திண்டுக்கல்லிலே வழக்குப் போட்டிருக்கிறோம். சேலத்திலே நடவடிக்கை எடுக்கப்பட்டிருக் கிறது. தஞ்சையிலே ஒருவர் கைது செய்யப்பட்டிருக்கிருர், வழக்குப் போடப்பட்டிருக்கிறது. சிவில் சப்ளைஸ் டிபார்ட்மெண்டிலே ஸ்டாக் வைத்ததிலிருந்து ஏஜண்டாக இருந்தவர்கள் விற்றிருக்கிருர்கள் என்ருல் அதைப்பற்றி விசாரிக்கலாம். நாச்சியார் கோவில் விஷயம்பற்றி நாளைய தினம் உணவு அமைச்சர் அவர்கள் சொல் வார்கள்.

திரு. ஏ. பாலையா : அரசாங்கத்தின் உணவுக் கொள்கை காரண மாக உணவுப் பண்டங்களின் விலை அதிகமாக ஏறியிருக்கிறது.........

மாண்புமிகு திரு. ப. உ. சண்முகம் : அரசாங்கத்தின் உணவுக் கொள்கை என்று சொன்னல் என்ன கொள்கை, எப்படி என்று விவரமாகச் சொல்ல வேண்டும்.

திரு. ஏ. பாலையா : கன்னியாகுமரி ஒரு சிறிய மாவட்டம். அதிலே நான்கு தாலூக்காக்கள் இருக்கின்றன. நாகர்கோவிலிலிருந்து அடுத்த தாலூகாவிற்கு அரிசி கொண்டுபோக முடியாத நிலைமை இருக்கிறது. அதேபோன்று ஒரு தாலூகாவிலிருந்து அங்கே உள்ள அடுத்த தாலூகாவிற்குக் கொண்டுபோக முடியாது. இதன் காரண மாக நாகர்கோவிலில் ஒரு படி அரிசி ஒன்றே முக்கால் ரூபாய் என்ருல் அதே அரிசி தக்கலையில் 2 ரூபாய்க்கு மேலாக விற்கிறது......

மாண்புமிகு திரு. ப. உ. சண்முகம் : நாகர்கோவிலில் உணவுக் கட்டுப்பாடு கடுமையாக இருக்கவேண்டுமென்று அரசாங்கம் உத்தரவு பிறப்பித்தது. வெளி மாவட்டங்களிலிருந்து கன்னியா குமரி மாவட்டத்திற்கு தாராளமாக அரிசி போகட்டும் என்ற நிலைமை இருந்தபொழுது, திருநெல்வேலி, இராமநாதபுரம் ஆகிய மாவட்டங்

களுக்குத் தேவையான அரிசி எல்லாவற்றையும் கன்னியாகுமரிக்கு எடுத்துக்கொண்டு போனார்கள். ஆனால், அரிசி போகவேண்டிய இடத்திற்குப் போய்விட்டது. ஆகவே, கன்னியாகுமரி மாவட்டம் முழுவதும் உணவுக் கட்டுப்பாடு கொண்டுவரப்பட்டு, இப்பொழுது வட்டத்திற்கு வட்டம் எடுத்துக்கொண்டு போகக்கூடாது என்ற உத்தரவு போடப்பட்டு அமலில் இருக்கிறது. யார் இப்படித் தூண்டி விடுகிறார்கள் என்பது எங்களுக்குத் தெரியும். வியாபாரிகள் பொது வாக நிறையபேர் லைசென்ஸ் பெற்றுக்கொண்டு ஹைகோர்ட்டிலே கேஸ் போட்டிருக்கிறார்கள். உரிமை உள்ளது என்று, அரசாங்கம் கார்டு கொடுத்து அரிசி கொடுப்பதற்கு ஏற்பாடு செய்திருக்கிறது. கார்டின்மூலம் வாங்கினால் விலையேற்றம் இருக்காது, தேவைப்பட்ட அரிசியைக் கொடுப்பதற்குத் தயாராக இருக்கிறது.

திரு. ஏ. சுவாமிதாஸ் : தலைவரவர்களே, நாகர்கோவிலுக்கும் தக்கலைக்கும் பத்து மைல் தூரம் இருக்கிறது. நாகர்கோவிலில் ஒரு ரூபாய் 75 காசுக்கு விற்கும் அரிசியை அங்கேயுள்ள மக்கள் வாங்கிச் சாப்பிட வசதியுள்ளது. அதே நேரத்தில் 10 மைலுக்கு அப்பால் உள்ள மக்கள் ஒரு ரூபாய் கூடுதலாகக் கொடுத்து வாங்க வேண்டிய நிலைமை இருக்கிறது. அரசாங்கம் வியாபாரிகளின்மூலம் அரிசியைக் கொடுப்பதற்கு ஏற்பாடுகள் செய்திருந்தாலும் இங்கேயுள்ள மக்கள் வெளியிலே இருந்து வாங்குவதற்குத்தான் அவர்களுக்கு நிலைமைகள் இருக்கிறதே தவிர வியாபாரிகள்மூலம் வாங்குவதற்குக் கிடைப்ப தில்லை. கட்டுப்படுத்தியிருக்கிற அரசு வியாபாரிகளின்மூலமே தேவை யான அரிசி கிடைக்க ஏற்பாடு செய்திருந்தால் இந்த நிலைமைகள் ஏற்படாது. ஆனால் இன்றைக்கு நாகர்கோவிலுக்கு வந்து 1 ரூபாய் 75 காசுக்கு அரசு நிர்ணயித்திருக்கும் அரிசியை 10 லிட்டர் அரிசி வீதம் வாங்கலாம் என்ற அடிப்படையில் அவர்கள் வாங்கிச் செல் கிறார்களே தவிர மற்றப் பகுதி மக்களுக்கு அந்த வசதி கிடைக்கவில்லை. நாகர்கோவிலில் வசதியிருக்கிறது, ஆனால் பத்துமைல் தொலையில் உள்ள தக்கலைக்கு அந்த வசதி இல்லை, குழித்துறைக்கு அந்த வசதி யில்லை, இரணியலுக்கு அந்த வசதி இல்லை. ஆகவே இந்தப் புகார்களை சட்டமன்றத்தில் அடிக்கடி நாங்கள் எழுப்பிக் கொண்டிருக்கிறோம். 10 லிட்டர் வாங்கிக்கொண்டு செல்லும் நேரத்தில் அதிகாரிகள் தடுத்து நிறுத்திவிடுகிறார்கள். ஜீப்பிலே வந்து பறக்கும் படையினர் எடுத்துச் சென்று விடுகிறார்கள். இந்த நிலைமைகள் பொதுமக்களின்



பிரநிதிகளாகிய எங்களுக்குப் பல துன்பங்களை அளிப்பதாக இருக் கிறது. ஆகவேதான் உணவுக் கொள்கை சரியில்லை, விலைவாசி ஏறிக் கொண்டிருக்கிறது என்று சொல்ல வேண்டிய நிலை ஏற்பட்டிருக்கிறது.

மாண்புமிகு திரு. மன்னை ப. நாராயணசாமி : தலைவரவர்களே, உணவுக்கொள்கை சரியில்லை என்று அவர்கள் சொல்வதற்குச் சில காரணங்கள் இருக்கின்றன. என்ன காரணம் என்றால், உணவுக் கொள்கையை நாங்கள் சரியாக வைத்தாலும் அதை நிறைவேற்று வதிலே திருப்தியில்லாத காரணத்தினாலோ என்னவோ கொள்கை சரியில்லை என்று சொல்கிறார்கள். நேற்று முன்தினம்கூட நான் அங்கே சென்றிருந்தேன். அங்கே கள்ளக்கடத்தல் என்று சொல்லும் அந்த முறையைக் கட்டுப்படுத்த அங்கேயிருக்கும் எல்லைப் பகுதிகளைப் பார்த்தால் அங்கே ஒரே தெருவிலே உள்ள ஒரு வீட்டில் கொல்லைப் புறம் கேரளமாகவும், திண்ணைப் பகுதி நம்முடைய தமிழ்நாடாகவும் இருக்கிறது. இப்படிப்பட்ட நிலைமைகள் இருக்கும்பொழுது நாம் என்னதான் சீர்படுத்தி வைத்தாலும், வாங்குகின்ற மக்களே அவர் களுக்கு நியாய விலையில் கிடைக்கும் அரிசியையே அப்படி விற்றுவிடு கிறார்கள். குறைகளையெல்லாம் நேற்று முன்தினம்கூட என்னிடம் தந்திருக்கிறார்கள். பெல்ட் ஏரியாவில் கார்டு கொடுத்து செய்திருக் கிறோம். மறுபடியும் பரிசீலிக்க கூட்டம்கூட நேற்று நாகர்கோவிலிலே கொண்டு வந்தார்கள். பொதுமக்களின் மத்தியிலே பேசிவிட்டு வந்தேன். தயவு செய்து பொதுமக்களும் மற்றவர்களும் ஒத்துழைக்க வேண்டும். நாம் எவ்வளவுதான் சட்டம்போட்டு கட்டுப்பாடுகளைக் கொண்டு வந்தாலும் நம்முடைய உறுப்பினர்கள் குறைகூறுவதை விட்டு ஒத்துழைப்பு தந்தால் திட்டம் சரியாக இருக்கும். உள்ள படியே இந்தக் கொள்கை அகில இந்தியாவிலேயும் தமிழகத்திலே மிக்க சிறப்பாக இருக்கிறது என்று சொல்லிக்கொள்ள ஆசைப்படு கிறேன்.

மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர் : மாண்புமிகு உறுப்பினர் திரு. பாலையா அவர்கள் தொடர்ந்து நாளைக்குப் பேசலாம். பேரவையின் நிகழ்ச்சிகள் இன்று இத்துடன் முடிவுற்று, பேரவை மீண்டும் நாளைக் காலை 9 மணிக்கு கூடும். வணக்கம்.

பின்னர் பேரவை பிற்பகல் 1-34 மணிக்கு ஒத்தி வைக்கப்பட்டது.

## 8. பேரவையின் முன் வைக்கப்பட்ட ஏடுகள்

### A. *Statutory Rules and Orders.*

22. Notification issued with G.O. Rt. No. 2569, Revenue, dated the 29th November 1972, in regard to exemption from liability to entertainments tax and additional surcharge on entertainments tax to the film show organised by Dr. R. J. Rajasekhar Reddy, Hony. Surgeon, Government Stanley Hospital, Madras at 10 a.m. on 17th December 1972 at Devi Paradise Theatre in connection with raising funds for a Rural Hospital. [Laid on the Table of the House under section 16 (4) of the Tamil Nadu Entertainments Tax Act, 1939 (Tamil Nadu Act X of 1939).]

23. Notification issued with G.O. Rt. No. 2597, Revenue, dated the 4th December 1972, in regard to exemption from liability to entertainments tax and additional surcharge on entertainments tax to the film show organised by N. S. N. Children's school at 10 a.m. on 5th December 1972 at Devi Paradise Theatre for raising funds for providing midday meals, etc., to poor students. [Laid on the Table of the House under section 16 (4) of the Tamil Nadu Entertainments Tax Act, 1939 (Tamil Nadu Act X of 1939).]

24. Notification issued with G.O. Ms. No. 2374, Home, dated the 14th September 1972 in regard to an amendment to the Tamil Nadu Cinemas (Regulation) Rules, 1957. [Laid on the Table of the House under section 10 (3) of the Tamil Nadu Cinemas (Regulation) Act, 1955 (Tamil Nadu Act IX of 1955).]

### B. *Reports, Notifications and Other Papers.*

*Nil.*



## இணைப்பு 1.

[216-ஆம் பக்கத்தில் 29-ஆம் எண்ணுள்ள வெள்ளிக் குறியிட்ட வினாவிற்கு விடையைக் காண்க]

விடை—

(அ) ஆம்.

(இ) (1) சென்னை கால்நடை மருத்துவக் கல்லூரியில் ரூ. 8,44,800 மதிப்பீட்டுச் செலவில் புதிதாகக் கட்டப்பட்ட ஊன் உணவு ஆய்வுக் கூடம் 1972-ஆம் ஆண்டு பிப்ரவரி மாதம் 29-ஆம் தேதி திறக்கப் பட்டது. குளிர் பதன வசதிகள் அக்கட்டடத்தில் இன்னும் ஏற்படுத்தப்படவில்லை. புதிய கட்டடத்தில் ஊன் உணவு ஆய்வுக் கூடம் 1972-ஆம் ஆண்டு மார்ச் மாதம் முதல் தேதி முதல் செயல்பட்டு வருகிறது. தற்போது இறைச்சியைக் குளிர் பதனப் படுத்திப் பாதுகாக்கும் முறையானது, துறையில் இருக்கும் மிகு உறைநிலைப் பெட்டிகளின் உதவியுடன் ஓரளவுக்குச் செய்யப்படுகிறது.

(2) இறைச்சியைச் சோதனை செய்வதற்காகப் புதிதாகக் கட்டப் பட்டுள்ள ஆய்வுக்கூடம் கீழ்க்காணும் நோக்கங்களைக் கொண்டதாகும்:—

( i ) கல்வி.—துப்புரவான முறையிலும், விலங்குகளுக்கு நோவின்றியும் கொல்லுதல், உண்பதற்குகந்த இறைச்சியைப் பக்குவப் படுத்துதல், சிப்பம் செய்தல், எடுத்துச் சென்று மக்களுக்கு வழங்குதல் ஆகிய முறைகள் குறித்து பட்டப்படிப்பு, பட்டமேற்படிப்புக்கும் மாணவர்களுக்கு அறிவியல் வழியில் பயிற்சியளிக்கும் நோக்கத்துடன் இந்த ஊன் உணவு ஆய்வுக்கூடம் கட்டப்பட்டுள்ளது. இறைச்சியைப் பாதுகாத்தல், பக்குவப்படுத்துதல் அதிலிருந்து துணைப்பொருள்களை யும் தயாரித்தல் குறித்து திட்டமிடப்பட்டுள்ளது.

(ii ஆராய்ச்சி.—இறைச்சியைப் பாதுகாத்தல், பதப்படுத்து தல் உட்பட உண்பதற்குகந்த இறைச்சியை அன்றாடம் உற்பத்தி செய்து வழங்குவது குறித்த முக்கியமான பிரச்னைகள் பற்றி பரிசீலித்து நடவடிக்கை எடுக்கத் திட்டமிடப்பட்டுள்ளது.

(iii) வளர்ச்சி.—இறைச்சி வாணிபத் தொழிலில் போதிய அறிவில்லாமலும் படிப்பறிவில்லாமலும் இருப்பவர்களின் மனப் போக்கை செய்முறை விளக்கம் நடத்துவதன் மூலமும் நடைமுறையில் சில எடுத்துக்காட்டுகளைக் காண்பிப்பதன் மூலமும் மாற்றி அவர் களுக்கு அறிவியல் முறைகளைப் புலப்படுத்துவதற்கான அவசியம்

உணரப்பட்டுள்ளது. இதற்காக ஆய்வுக்கூடத்தில் தகுந்த ஏற்பாடுகள் செய்யப்பட்டுள்ளன. இறைச்சியைச் சுகாதார முறையில் வைத்து வருவது பற்றி சுகாதார அதிகாரிகளுக்கும் துப்புரவு ஆய்வாளர் களுக்கும் பயிற்சியளிக்கவும் வகை செய்யப்படுள்ளது.

( iv இறுதியாக, உண்பதற்குகந்த, ஊட்டச்சத்து மிக்க இறைச்சியையும் இறைச்சித் துணைப் பொருள்களையும் தயாரிப்பதில் மற்றவர் நம்மைப் பின்பற்றுவதற்கேற்ற எடுத்துக்காட்டாக அமையும் வகையில் புதிய ஊன் உணவு ஆய்வுக்கூடம் வடிவமைக்கப்பட்டு கட்டப்பட்டுள்ளது.

(3) ஊன் உணவு ஆய்வுக்கூடம் வணிக அடிப்படையில் செயல் படவில்லை. ஆனால், கால்நடை மருத்துவக் கல்லூரியின் ஆராய்ச்சிக் கூடத்தில் தயாரிக்கப்பட்ட பொருட்கள் பயன்துய்ப்போருக்கு ஆதாய மற்ற—விரயமற்ற, அடிப்படையில் அளிக்கப்பெறுகின்றன. சென்னை கால்நடை மருத்துவக் கல்லூரியின் அறிவியல், தொழில்நுட்பப் பணிக்கான தேவைகளுக்கேற்பவும் உற்பத்திப் பொருள்களுக்கு அங்காடியில் நிலவும் விலை வீதங்கள், பொருள்களுக்கான தேவை, வழங்கு நிலை ஆகியவற்றைக் கருத்திற்கொண்டும் இறைச்சிப் பொருள் களின் விற்பனை விலைகள் அவ்வப்போது முடிவு செய்யப்படுகின்றன. ஆராய்ச்சிக் கூடத்தில் தயாரிக்கப்படும் இறைச்சிப் பொருள்களின் தற்போதைய விலை வீதம் பின்வருமாறு:—

| தொடர் எண்ணும் பொருளின் பெயரும். | ஒரு கிலோகிராமுக்கு விலை ரூ. | காசு. |
|---|---|---|
| 1 பன்றி இறைச்சி ... ... ... ... | 5 | 00 |
| 2 பன்றி இறைச்சி (பெரிய இறைச்சித் துண்டுகள்) | 3 | 00 |
| 3 ஆட்டிறைச்சி (சதைத் துண்டுகள்) ... ... | 5 | 00 |
| 4 ஆட்டிறைச்சி (ஓரளவு சதைத் துண்டுகள் உடையவை) ... ... ... ... | 3 | 00 |
| 5 ஆட்டிறைச்சி (பெரிய இறைச்சித் துண்டுகள்) ... | 2 | 00 |
| 6 பக்குவப்படுத்தப்பட்ட கோழி இறைச்சி (வெதுப்பப்பட்டது) ... ... ... | 7 | 00 |
| 7 பக்குவப்படுத்தப்பட்ட கோழி இறைச்சி (சாதாரணமானவை) ... ... ... | 6 | 50 |



| தொடர் எண்ணும் பொருளின் பெயரும். | ஒரு கிலோகிராமுக்கு விலை ரூ. | காசு. |
|---|---|---|
| 8 பன்றியின் துடை இறைச்சி ... ... ... | 8 | 00 |
| 9 பக்குவப்படுத்திய இறைச்சி—பன்றி முதுகு-விலா உப்புக்கண்டம் ... ... | 7 | 00 |
| 10 மசாலையிட்ட பன்றி இறைச்சி ... ... | 7 | 00 |
| 11 பன்றிக் கொழுப்பு ... ... ... | 1 | 00 |
| 12 சீர் செய்வதற்காக வெட்டி எடுத்த பன்றி இறைச்சித் துண்டுகள் கழிவுகள் ... ... | 1 | 00 |

*A.*—(*a*) Yes.

(*b*) (1) The new Meats Laboratory at the Madras Veterinary College which was estimated at a cost of Rs. 8,44,800 was declared open on 29th February 1972 pending provision of cold storage facilities. The Meats Laboratory in the new building is functioning from 1st March 1972. At present the process of preserving and cold storage meat is partially conducted with the help of deep freeze cabinets available in the department.

(2) The Meat Inspection Laboratory has been constructed with the following objectives :—

(i) *Education.*—This Meats Laboratory has been designed and constructed with a view to impart training on scientific lines to both under-graduate and post-graduate students on methods of sanitary and humane slaughter, dressing, packing, transport and distribution of wholesome meat. Methods of preservation and preparation of meat and other by-products have also been planned.

(ii) *Research.*—Problem of importance in day-to-day production and purveyal of wholesome meat including preservation and processing have been planned to be pursued.

(iii) *Extension.*—The necessity for enlightening and changing the attitudes of the ill-informed and illiterate persons in the trade by organising demonstrations and practical illustrations has been felt and suitable measures are provided in the laboratory. A course of training in Meat Hygiene to Health Officers and Sanitary Inspectors has also been envisaged.

[1973 பிப்ரவரி 6

(iv) Finally the new Meats Laboratory has been designed and constructed as a model for others to follow in the production of wholesome and nutritious meat and meat products.

(3) The activity of the Meats Laboratory is not performed on a commercial basis. But the products of research projects of the Madras Veterinary College are made available to consumers on a no-profit no-loss basis. The sale prices of the products are fixed from time to time according to the needs of scientific and technical work of the Madras Veterinary College and also taking into account the prevailing market rates and demand supply position. The prices in vogue at present for the products of research are as follows :—

| *Serial number and name of the product.* | *Price/Kilogram.* | |
|---|---|---|
| (1) | (2) | |
| | RS. | P. |
| 1 Pork ... ... ... ... ... | 5 | 00 |
| 2 Pork (Multilated) ... ... ... ... | 3 | 00 |
| 3 Lamb (Fleshy cuts) ... ... ... ... | 5 | 00 |
| 4 Lamb (Less Fleshy cuts) ... ... ... | 3 | 00 |
| 5 Lamb (Multilated) ... ... ... ... | 2 | 00 |
| 6 Dressed Chicken—Boiled ... ... ... | 7 | 00 |
| 7 Dressed Chicken—Ordinary ... ... | 6 | 50 |
| 8 Ham ... ... ... ... ... | 8 | 00 |
| 9 Bacon ... ... ... ... ... | 7 | 00 |
| 10 Pork Sausages ... ... ... ... | 7 | 00 |
| 11 Pork fat ... ... ... ... ... | 1 | 00 |
| 12 Pork trimmings ... ... ... ... | 1 | 00 |



1973 பிப்ரவரி 6]

## இணைப்பு 2

[281ஆம் பக்கத்திலுள்ள அடிக்குறிப்பைக் காண்க]

[21—8—1972 அன்று 214-ஆம் எண். உடுக்குறியிட்ட வினாவைத் தொடர்ந்து கேட்ட துணை வினாவிற்கு அளித்த விடையைச் சரி செய்து மாண்புமிகு (அரிசன நல) அமைச்சர் அளித்த விவர அறிக்கையைக் காண்க.]

பர்மா அகதிகளின் குடும்பத்தினர் கிராமப்புறப் பகுதிகளிலும் நகர்ப்புறப் பகுதிகளிலும் வீடுகள் கட்டிக்கொள்வதற்காக நிதியுதவி அளிக்கும் திட்டம் ஒன்றுக்கு இந்திய அரசு ஒப்பளிப்பு வழங்கியுள்ளது. இந்திய அரசு ஏற்பளித்துள்ளவாறு, நிதியுதவியளிப்பதற்காக வரையறுக்கப்பட்ட உச்சவரம்புத் தொகைகள் பின்வருமாறு:—

(a) கிராமப் பகுதிகள்

i வீட்டு மனைக்காக ரூ. 200 (கடன்)

ii வீட்டு மனையை மேம்படுத்துவதற்காக (துப்புரவு, உட்புறச் சாலைகளைச் சமன்படுத்துதல், வடிகால் வசதி, சிறு பாலங்கள் குடிநீர் வழங்கல்) ... ரூ. 600 (மானியம்)

iii வீடு கட்டிக்கொள்வதற்காக ரூ. 1,250 (கடன்)

மொத்தம் ரூ. 2,050

ரூ. 1,450 (கடன்)
ரூ. 600 (மானியம்)

(C) நகர்ப்புற பகுதிகள்

i வீட்டு மனைக்காக ரூ. 600 (கடன்)

ii வீட்டு மனையை மேம்படுத்துவதற்காக (துப்புரவு உட்புறச் சாலைகள் சமன்படுத்துதல், வடிகால் வசதி, சிறு பாலங்கள் குடிநீர் வழங்கல்) ரூ. 1,500 (கடன்)

iii வீடு கட்டிக்கொள்வதற்காக ரூ. 2,000 (கடன்)

மொத்தம் ரூ. 4,100 (கடன்)

[1973 பிப்ரவரி 6

கிராமப் பகுதிகளில் வீட்டு நிலத்தை மேம்படுத்துவதற்காக ஒரு குடும்பத்திற்கு மானியமாக ரூ. 600 இந்திய அரசு வழங்குகிறது. இத்தொகை இலவசமாக வழங்கப்படுகிறது. திரும்ப வசூலிக்கப் படுவதில்லை. கிராமப் பகுதிகளிலும், நகர்ப்புறப் பகுதிகளிலும் வீடு கட்டுவதற்காக அகதிகளுக்கு வழங்கப்படும் கடன் தொகை முழுவதை யும் இந்திய அரசு ஏற்கிறது. இத்தொகை அகதிகளிடமிருந்து வசூலிக்கப்படத்தக்கதாகும். தகுதியுடைய விண்ணப்பதாரர்களுக்குக் கடன் வழங்க போதிய நிதி வசதி இல்லாமை காரணமாக இத் திட்டத்தைச் செயல்படுத்துவதில் இடர்பாடு ஏதும் இருப்பதாகத் தகவலேதும் இதுவரை அரசின் நாட்டத்திற்குக் கொண்டுவரப்பட வில்லை.

ஆயினும், தற்போதுள்ள கட்டளைகளின்படி, அகதி ஒருவருக்குக் கொடுக்கப்பட்ட கடன் தொகையை ஏதாவதொரு காரணத்தை முன்னிட்டு வசூலிக்க இயலாதபோது, அந்த விரயத்தை இந்திய அரசும் மாநில அரசும் 3 :1 என்ற வீதத்தில் (இந்திய அரசு 75 சத வீதமும் மாநில அரசு 25 சதவீதமும்) ஏற்றுக்கொள்ளவேண்டும். இத்தகைய நேர்வில் விரயத்தொகை முழுவதையும் ஏற்றுக்கொள்ளு மாறு இந்திய அரசுக்கு இவ்வரசு எழுதியுள்ளது.

The Government of India have sanctioned a scheme for giving financial assistance for construction of house in rural and urban areas by the families of repatriates from Burma. The ceilings fixed for the financial assistance as approved by the Government of India as follows :—

*(a) Rural areas.*

| | | RS. |
|---|---|---|
| (i) For homestead plot (Loan) | ... ... | 200 |
| (ii) For development of homestead land (clearance, levelling internal roads, drains, culverts and water-supply) (Grant) | ... | 600 |
| (iii) For construction of house (Loan) | ... | 1,250 |
| Total | ... | 2,050 |

Loan Rs. 1,450.

Grant Rs. 600.



1973 பிப்ரவரி 6]

*(b) Urban areas.*

| | | RS. Loan |
|---|---|---|
| (i) For homestead plot | ... ... ... | 600 |
| (ii) For development of homestead land (clearance, levelling internal roads, drains, culverts, water supply and street lighting, etc.) | ... ... ... ... ... ... | 1,500 |
| (iii) For construction of house | ... ... | 2,000 |
| Total | ... | 4,100 |

A sum of Rs. 600 per family is sanctioned by the Government of India as grant for development of homestead land in Rural areas. It is granted free and is not recoverable. The entire amount of loan granted to the repatriates for housing purpose in rural and urban areas is met by the Government of India and is recoverable from the repatriates. No difficulty has been brought to notice so far an implementing this scheme for want of adequate funds to provide loan for all the eligible applicants.

However, according to the instructions now available in cases where the recovery of the loan issued to a repatriate is not possible for one reason or other, the loss has to be borne by the Government of India and the State Government in the ratio 3 : 1 (75 per cent by the Government of India and 25 per cent by the State Government). The Government have addressed the Government of India to bear the entire losses in such cases.

## APPENDIX III.

[*Vide foot-notes on page* 281.]

[Address by the Governor of Tamil Nadu.]

Hon'ble Members of the Legislature,

I deem it a pleasant privilege to welcome you all to this joint session of the Legislature.

2. I consider it my duty to refer, at the outset, to the grievous loss suffered by the State in particular and India as a whole, on the demise of Thiru C. Rajagopalachari, affectionately known as

Rajaji. In his passing away, we lost a guide, a philosopher and a prophet of dissent. Over the years, he strode the stage of the world like an intellectual colossus. A great force in the days of the independence movement and after, he led the State as Premier in the pre-independence days and later as Chief Minister. We will not see the like of him for many years. We should consider ourselves privileged that he lived and work amongst us in this State.

3. During the year gone by, the State had more than its share of natural calamities. An unseasonal South-West monsoon threatened us with drought. The delayed rainfall in many areas led to loss of a major part of the groundnut crop and resulted in many districts facing a shortage of drinking-water. Promptly, Government sanctioned relief measures at a cost of Rs. 1.25 crores. Fortunately, with the onset of the North-East monsoon, the effects of drought were got over and the situation ameliorated. No sooner had we recovered from this, than there was a severe cyclonic storm, causing extensive damage to roads, houses, buildings, irrigation dams and fields, in the districts of South Arcot, Coimbatore, Tiruchirappalli, Thanjavur, Nilgiris, Chingleput, North Arcot, Dharmapuri, Salem and Madras. Nearly 180,000 families lost their houses and the paddy crop was damaged totally in 28,000 acres and partly in 170,000 acres. Our estimate of losses, as a result of this cyclonic outburst, runs to Rs. 40 crores. We have made a detailed assessment of the damage and requested Government of India to assist us with loans and grants to the extent of about 25 crores of rupees to repair roads, irrigation works, to help our farmers to reclaim their sand-cast lands and to rebuild their houses. The Government of Tamil Nadu, in anticipation of assistance from the Government of India sanctioned immediately Rs. 5 crores for relief works. The entire administration was geared to help those affected by the floods and should be congratulated for their dedicated work. I am confident that generous assistance will be coming forth from the Central Government, whose team of officials has already inspected the damages and submitted its report.

4. The floods and the drought have affected an otherwise rosy agricultural picture. We have, therefore, to proceed carefully in assessing our marketable surplus. Our general approach is to have a controlling share of the marketable surplus in Government hands, so that the vagaries of trade may not create imbalances in distribution. We have, therefore, decided to impose a levy of 20 per cent on the purchases by dealers in certain areas of the State which contribute largely to the marketable surplus. This will enable us to get sufficient stocks for assisting the distribution system for the benefit of the weaker sections and to fulfil our commitment to the Central Government.



5. The Tamil Nadu Civil Supplies Corporation has made arrangements for procuring pulses from major producing States and has also established a number of retail shops in Madras City and other urban centres of the State. This net-work for direct retail distribution of essential commodities will be extended. At present, the shops are distributing sugar, dhalls, wheat and wheat products, apart from rice in Madras and Coimbatore. The Consumer Co-operative movement is also being revitalised and the managements of the Super markets are being reorganised. This type of controlled distribution is intended to safeguard against the malpractices of trade and curb the tendency to push up prices. The phenomenon of price-rise can be controlled by the State only with the help of Central monetary and fiscal policies.

6. Increase in agricultural production is a condition precedent to attainment of growth with stability. But, this depends on assured supply of water, fertilisers and pesticides. Fertilisers have been very much in short supply. Whereas our requirement is 2.74 lakhs tonnes of nitrogen, we have received only 1.30 lakhs tonnes from the Government of India during 1972-73 as against a supply of 2.14 lakhs tonnes of nitrogen during 1971–72. We have requested the Government of India to take immediate measures to increase indigenous production of fertilisers and to import additional quantities of fertilisers on a fairly long-term basis.

7. Water resources of the State have been almost fully exploited. The recent floods have underlined the imperative need for better maintenance of our irrigation systems. We have to go in for rationalisation and modernisation of these systems. We have, therefore, made proposals for aid from the World Bank for modernisation of the Cauvery irrigation system, through the Government of India who, we hope, will clear them as early as

possible. Simultaneously with better use of surface water, we have to explore proposals for conjoint use of groundwater and surface sources. We have a massive programme for digging open wells and tube-wells with the aid of the Agricultural Refinance Corporation and the World Bank. This programme had faced a few problems in regard to details of implementation. These problems are now in the process of being resolved. Thanks to the helpful attitude of the Agricultural Refinance Corporation in understanding and resolving our difficulties, I am now confident that the programme will gather momentum. We have submitted a proposal costing Rs. 11 crores to the Government of India to locate and estimate our groundwater resources scientifically. I hope this will be cleared and assisted by the Government of India.

8. Planning for utilisation of water resources as well as other natural resources has to be on a regional basis and cannot be confined within a State's boundaries. The States of Mysore, Tamil Nadu, Kerala and Andhra Pradesh have to plan for utilisation of the water resources of the region on an integrated basis. I would suggest for the consideration of all these four States, the formation of a Western Ghat Development Corporation to exploit the untapped water and power resources in this region.

9. During the last year both the Industrial and Agricultural sectors in the State were affected on account of shortage of power. Failure of the South-west monsoon, particularly in the catchment areas, had led to the depletion of storage in the hydel reservoirs in our State as well as in the neighbouring States. With the withdrawal of supply of power that was available from other States, the power supply situation has become very critical. A sharp fall in power generation at Neyveli, due to a variety of reasons, multiplied our difficulties. The cumulative impact of all these difficulties has compelled us to impose a power cut, the adverse effect of which on the economy as a whole is yet to be fully assessed. One thing, however, is clear. Bhabha's famous dictum "No power is as costly as 'no power'" has been brought home to us. The shortage of power is a world-wide phenomenon. But we have to plan ahead, benefiting from the lessons of recent history. As a short-term measure, steps should be taken immediately to improve the production of power at Neyveli. Our representations to the Centre, in this regard, have



not gone in vain. I am happy to report that the management at Neyveli has taken steps to improve the production of lignite and the generation of power. In addition, the conversion to fuel of oil of some of the thermal units at Neyveli, which are lying idle at present for want of sufficient lignite, will improve the position. Clearance has been given by the Government of India for this conversion, which is estimated to take eighteen months.

10. As a long-term measure, we have pressed for a second mine-cut at Neyveli with a view to setting up another thermal complex of 1,000 M.W. capacity. The second mine-cut will take nearly eight years to be completed and the sooner a decision is taken, the better for the future of the State and the country. I would, therefore, request the Government of India to give early clearance for this project. Equally important are the expansion of the capacity of the Kalpakkam Atomic Power Plant and the establishment of two new thermal stations at Mettur and Tuticorin respectively. We are looking forward to early clearance of these proposals.

11. Turning to the industrial sector, the year gone by has been one of consolidation. But, shortage of power and raw material has handicapped all our industrial units. In spite of this many of them have made progress. One important development during the year was the incorporation of Salem Steel Plant Limited as a separate company to undertake the construction of the Steel Plant at Salem. The Managing Director has also been appointed.

12. In regard to revival of sick mills, I am glad to inform you that the Tamil Nadu Textile Corporation has so far taken over thirteen mills, employing 9,962 persons. This includes six units which have been taken over recently. These will be commencing production shortly. I am glad to say that out of the seven units taken over earlier, five are working at a profit.

13. In spite of all that has been done on the agricultural and industrial fronts, the problems of unemployment and under employment and related poverty continue to cause concern. This is an All-India problem. Whatever is possible is being done by the State. We have initiated programmes costing nearly Rs. 10 crores, including the crash scheme for rural employment at a cost of Rs. 3 crores, the rural roads programme at a cost of Rs. [illegible]

crores, the youth service corps scheme at a cost of Rs. 61 lakhs and the drought prone areas programme at a cost of Rs. 1·31 crores. Mention may also be made of the special apprenticeship programme for engineers and loan assistance scheme for craftsmen. These programmes are in addition to the substantial labour intensive schemes included in our normal plan and non-plan investment.

14. For the year 1972–73, the annual plan was fixed at about Rs. 115 crores. The schemes are being implemented and it is expected that the plan for 1972–73 will be fulfilled. During the discussions held between Chief Minister and the Planning Commission, the Plan for 1973–74 has been fixed at Rs. 120 crores. The total five-year outlay will now come to Rs. 534 crores as against Rs. 519 crores earlier approved by the Central Planning Commission.

15. In this context, considerable importance should be attached to the visit of the Sixth Finance Commission to to the State in January 1973. Our views regarding the allocation of resources have been placed before them. I would like to draw your attention to a few important points, urged by us. We have pleaded for restoring the primacy of the Finance Commission as a channel for routing resources to States. Our view is that all the needs of the States both plan and non-plan including the minimum need programmes approved by the National Development Council, should be gone into by the Finance Commission, in consultation with the Planning Commission. The Finnace Commission should recommend grants-in-aid and devolution of taxes taking into account the overall picture. So far as the plan grants are concerned, the Finance Commission should recommend the principles on which grants-in-aid should be given. The Planning Commission should work on the basis of these prnciples from year to year.

16. We have urged that the criteria for central assistance for Plan schemes should be reconsidered in the light of the adoption of a national minimum needs programme. The National Development Council has accepted a minimum needs programme to bring up all areas of the country to specified norms. This means that the plans of various States will include adequate provision for this programme. Once this is done, and the needs of backward tracts of various States have been taken care of through such a programme, there is no justification to adopt other criteria of backwardness such as per capita income either for extending central assistance or for devolving central taxes.



17. We have requested the Finance Commission to consider the need to give adequate debt relief to all States. Considerable outlays obtained as loan from the Centre have to be utilised for provision of infrastructural facilities and no tangible revenue can be expected from such expenditure. Such loan assistance should be treated as grants so that the debt burden on the States can be reduced.

18. Another important point we have raised concerns the need to remove disparity of emoluments between the Central Government employees and the employees of the State Government. The resources of the State are relatively inelastic. We have, therefore, pleaded with the Finance Commission to give a pay equalisation grant to all States to ensure parity between the State and Central emoluments. I do hope that these aspects will be duly taken into account by the Finance Commission. This becomes particularly urgent in view of the forthcoming report of the Central Pay Commission.

19. We are committed to the goals of removal of poverty and unemployment, and eilmination of social and economic backwardness. We have set up a State Planning Commission to draw up a perspective plan for the State for the ten years covering the Fifth and Sixth Plans. A draft Plan frame drawn up by the State Planning Commission has been placed before the Legislature and the public. Active work is going on in regard to the finalisation of the Fifth Five-Year Plan and the perspective plan covering the Fifth and Sixth Plan periods. In this context, I would like to refer to the emphasis laid by the Chief Minister in his speech before the National Development Council on the assurance of adequate supplies of raw materials and power as necessary inputs for implementation of the Plan. Equally important is the suggestion made by him to set up a National Taxation Enquiry Commission to look into the incidence of taxes and provide for incentives to save and invest. I attach particular importance to the idea that people should not look up to Government all the time for jobs. There should be middle class entrepreneurs ready to save and invest. It is with a view to restoring

[1973 பிப்ரவரி 6

the incentives to them to save and invest that Chief Minister has made the suggestion that the income-tax structure be reorganised. This will also enable Government to reduce the evils of unaccounted money.

20. Before I conclude, I would like to refer to the vital question of prices and wages. Price policy has to be settled on the basis of national decisions in regard to monetary and fiscal matters. While we agree on the emphasis laid on food prices, we would like to urge that availability of industrial raw materials, money supply, wage policy and the structure of central taxes have equally important roles to play in determining prices. All these levers should be operated so as to ensure stability of prices. A comprehensive wage-price income policy should be evoled and implemented. In evolving this policy, care has to be taken to ensure that the problems of those who have no jobs are continually kept in mind. The large masses of our people below the poverty line should be kept always in the picture.

21. One of the important bills that are to be considered by this session relates to nationalisation of bus transport. As you are aware, Government of Tamil Nadu have taken a decision to nationalise all bus transport in the State on the basis of a phased programme. This represents yet another step forward in the progress of the State towards socialism. I hope the House will welcome this measure.

22. The path of evolution of democracy does not always run smooth and is strewn with obstacles and difficulties. We should all do our best to get over these difficulties and ensure smoother progress and orderly evolution. I am confident that the Tamil Nadu Legislature in conformity with its long and glorious traditions will continue to conform to the norms of democratic and parliamentary processes and provide demonstrative proof that parliamentary institutions are the best instruments of accelerating the pace of prosperity with justice.

23. We have yet to travel a long way. In these troubled days, if we can be the torchbearer of determined dedication to strengthening of forces of understanding, co-operation and sustained hard work in the service of teeming masses, posterity will bless us. May your efforts and wise counsels be the harbinger of an era of peace and prosperity.

Vanakkam.



1973 பிப்ரவரி 6]

## இணைப்பு 4.

[281-ஆம் பக்கத்திலுள்ள அடிக் குறிப்பைக் காண்க]

(ஆளுநர் பேருரையின் தமிழாக்கம்)

மதிப்பிற்குரிய சட்ட மன்ற உறுப்பினர்களே !

சட்ட மன்றத்தின் இக் கூட்டவைக்கு உங்கள் அனைவரையும் வரவேற்பதில் பெருமகிழ்ச்சியும் பெருமையும் அடைகிறேன்.

2. இராஜாஜி என்று அன்புடன் அழைக்கப்பட்ட திரு. சக்கரவர்த்தி இராஜகோபாலாச்சாரியார் காலஞ்சென்றது, பொதுவாக இந்தியா முழுவதுக்கும், குறிப்பாகத் தமிழ்நாட்டிற்கும் ஏற்பட்ட பேரிழப்பு என்பதை முதற்கண் குறிப்பிடுவது என் கடமையெனக் கருதுகிறேன். நண்பராய், நல் ஆசிரியராய், தான்கொண்ட கருத்தினைத் துணிந்துரைக்கும் வித்தகராய், சிந்தனை மேதையாய், விடுதலைப் போராட்டத்தின் பெரும் சக்தியாய், இம் மாநில முதலமைச்சராய் விளங்கிய அந்த மூதறிஞரின் மறைவு அளவிடற்கரிய நட்டமாகும். ஆண்டுகள் பல கடந்திடினும், அவரைப் போன்ற ஒருவரை நம்மிடைக் காண்பது அரிது. இந்த மாநிலத்தில், அவர் காலத்தில் வாழும் பேறு பெற்றோம் என்பதில் நாம் பெருமை கொள்ளலாம்.

3. கடந்த ஆண்டில் அளவுக்கு அதிகமாகவே இயற்கையின் சீற்றத்துக்கு இம் மாநிலம் ஆட்படவேண்டி வந்தது. தென்மேற்குப் பருவமழை குறைவால் வறட்சி ஏற்படுமோ என்று நாம் அஞ்ச வேண்டி வந்தது. மாநிலத்தின் பற்பல பகுதிகளிலும் பருவமழை காலந் தாழ்த்திப் பெய்ததால் ஏராளமான பரப்பளவில் வேர்க்கடலைப் பயிர் பெரிதும் நாசமடைந்தது. பல மாவட்டங்களில் குடி தண்ணீருக்கும் தட்டுப்பாடு ஏற்பட்டது. உடனடியாக, ரூ. 1.25 கோடி செலவில் துயர் தணிப்பு நடவடிக்கைகளை மேற்கொள்ள அரசு அனுமதி அளித்தது. வடகிழக்குப் பருவமழை பொழிந்ததால், வறட்சியின் வடுக்கள் மறைந்து நிலைமை சீராயிற்று. இத் துன்பத்தின் சுவடு மறைந்தவுடன், பெரும் புயல் அடித்தது. இப்புயல் காரணமாக தென் ஆர்க்காடு, கோயம்புத்தூர், திருச்சிராப்பள்ளி, தஞ்சாவூர் நீலகிரி செங்கற்பட்டு, வட ஆர்க்காடு, தருமபுரி, சேலம், சென்னை ஆகிய மாவட்டங்களில் சாலைகள், வீடுகள், பாசன அணைகள், வயல்கள், ஆகியவற்றிற்குப் பெருத்த சேதம் ஏற்பட்டது. 1,80,000 குடும்பங்கள் தங்கள் வீடுகளை இழந்தன; 28,000 ஏக்கர் [illegible] விளைந்த பயிர் முழுதும் நாசமாயிற்று; 1,70,000 ஏக்கர் [illegible] பயிர் ஓரளவு நாசமடைந்தது. இக் கொடும் புயலின் [illegible]

ரூ. 40 கோடி அளவுக்கு விரயம் ஏற்பட்டிருப்பதாக நாம் மதிப்பிட்டுள்ளோம். நிவாரணப் பணிக்காக ரூ. 25 கோடி அளவில் கடனுகவும், மானியமாகவும் வழங்குமாறு மத்திய அரசை வேண்டியுள்ளோம். பாசனப் பணிகளைச் செப்பனிடவும், சாலைகளைச் சீரமைக்கவும், மணல் மேடிட்ட நிலங்களை மீண்டும் விளை நிலங்களாக்கவும், பாழான வீடுகளைப் புதுப்பித்துக் கட்டிக்கொள்ளவும், நமது உழவர்களுக்கு உறுபொருள் கொடுக்கவும் இத்தொகையினை நாம் பயன்படுத்திக்கொள்வோம். துயர் தணிப்புப் பணிகளுக்குச் செலவிடுவதற்கென, தமிழ்நாடு அரசினர் மத்திய அரசின் நிதி உதவியை எதிர்பார்த்து ரூ. 5 கோடி அனுமதித்தனர். வெள்ளத்தால் பாதிக்கப்பட்டவர்கள் அனைவருக்கும் உதவி செய்ய அரசு நிர்வாகத்தினர் அனைவரும் அயராது சலியாது ஆற்றிய பணிக்காக நாம் அவர்களைப் பாராட்டவேண்டும். இங்கு ஏற்பட்ட சேதம் எவ்வளவு என்பதை நேரில் கண்டு மதிப்பிடுவதற்காக, மத்திய அரசு அதிகாரிகள் இங்கு வந்தனர். அவர்கள் நேரில் மதிப்பிட்ட பின்னர் தங்கள் அறிக்கையைப் பணிந்தனுப்பியுள்ளனர். அந்த அறிக்கையின் அடிப்படையில், மத்திய அரசு தாராளமாக நிதி உதவி செய்யுமென்பதில் எனக்கு முழு நம்பிக்கை இருக்கிறது.

4. நமது வேளாண்மை நிலைமை மன நிறைவளிப்பதாக இருந்தபோதிலும், வெள்ளமும் வறட்சியும் நமது முன்னேற்ற வேகத்தைக் குறைத்துள்ளன. எனவே, நமது தேவை போக உபரியாயுள்ள தானியங்கள் எவ்வளவு இருக்கும் என்பதை நாம் கவனமுடன் மதிப்பிட வேண்டும். விற்பனையாகத்தக்க உபரி தானிய இருப்பில் போதிய அளவு அரசாங்கக் கட்டுப்பாட்டில் இருக்கவேண்டும் என்பதுதான் இதில் நாம் கையாளும் அணுகு முறையாகும். அப்போதுதான், வணிகத்தின் தாறுமாறான போக்கு உணவு தானிய பங்கீட்டைப் பாதிக்காது. அப்படி இருந்தால்தான், சமுதாயத்தில் ஏழை எளியவர்களின் பயனுக்கென உணவு தானியங்களைப் பங்கிட்டுக் கொடுக்கவும், இந்த ஆண்டு மத்திய அரசுக்கு அரிசி கொடுப்பதாக நாம் அளித்துள்ள வாக்குறுதியை நிறைவேற்றவும் போதுமான அரிசி இருப்பு நம்மிடம் இருக்கும். இக் குறிக்கோள் நிறைவேறும் வண்ணம் வணிகரிடமிருந்து 20 சத வீதம் அரிசி கொள்முதல் செய்ய அரசு திட்டமிட்டு, நிறைவேற்றி வருகிறது.

5. தமிழ்நாடு உணவுப் பொருள் வழங்கு கழகம், அதிக அளவில் உற்பத்தி செய்யும் மாநிலங்களிலிருந்து பயறு வகைகளைக் கொள்முதல் செய்ய ஏற்பாடு செய்துள்ளது. சென்னை மாநகரிலும், இம்



மாநிலத்திலுள்ள ஏனைய நகரங்களிலும் சில்லறை விற்பனைக் கடைகள் பலவற்றை அக் கழகம் திறந்துள்ளது. இன்றியமையாப் பொருட்களை இவ்வாறு சில்லறை விற்பனைக் கடைகள் மூலம் பகிர்ந்தளிக்கும் ஏற்பாடு, படிப்படியாகப் பிறபகுதிகளுக்கும் நீட்டிக்கப்படும். இப்போது இக் கடைகள், சர்க்கரை, பருப்பு வகைகள், கோதுமை, கோதுமைப் பொருட்கள் ஆகியவற்றை விற்கின்றன. இவற்றுடன் கூட, சென்னையிலும் கோயம்புத்தூரிலும் இக் கடைகள் வாயிலாக அரிசியும் விற்கப்படுகிறது. இது தவிர, பயன் துய்ப்போர் கூட்டுறவு இயக்கத்துக்குப் புத்துயிர் அளிக்கப்படுகிறது; சிறப்பங்காடிகளின் நிர்வாகங்களும் சீரமைக்கப்பட்டு வருகின்றன. இம்மாதிரியான கட்டுப்பாட்டுடன் பொருள்களைப் பகிர்ந்தளிப்பதால், வணிகர்கள் ஆதாய நோக்குடன் செயல் படுவதையும், விலைகளை ஏற்ற முயல்வதையும் ஓரளவு தடுக்க முடியும். மாநில அரசின் முயற்சிகளால் மட்டுமல்லாது மத்திய நிதி, வரிவிதிப்புக் கொள்கைகளின் உதவியுடன் மட்டுமே விலைவாசியைக் கட்டுப்படுத்த முடியும் என்பதையும் நாம் நினைவில் கொள்ள வேண்டும்.

6. நிலையான பொருளாதார வளர்ச்சியை எய்துவதற்கு வேளாண்மை உற்பத்தி உயர்வு அடிப்படையாகும். வேளாண்மை உற்பத்தி உயர்வுக்கு உறுதியான பாசன வசதியும், உரங்களும் பூச்சி கொல்லி மருந்துகளும் வேண்டும். உரங்கள் கிடைப்பது மிகவும் பற்றுக்குறையாக இருந்து வந்துள்ளது. நமக்கு 1972–73-ல் 2.74 லட்சம் டன் நைட்ரஜன் உரம் தேவையிருக்க, 1.30 லட்சம் டன் உரம் மட்டுமே கிடைத்துள்ளது. 1971–72-இல் நமக்கு 2.14 லட்சம் டன் நைட்ரஜன் உரம் கிடைத்தது என்பது இங்கு ஒப்பு நோக்கத் தக்கதாகும். உள்நாட்டில் உர உற்பத்தியைப் பெருக்கவும், கூடுதல் அளவு உர இறக்குமதிக்கு நீண்ட கால அடிப்படையில் ஏற்பாடு செய்யவும் உடனடி நடவடிக்கைகளை மேற்கொள்ளுமாறு இந்திய அரசை நாம் கேட்டுள்ளோம்.

7. மாநிலத்தின் நீர்வளங்கள், பெரும்பாலும் முழுமையாகப் பயன் படுத்திக்கொள்ளப்பட்டுள்ளன. இருப்பினும், அண்மையில் ஏற்பட்ட வெள்ளப் பெருக்கு, நாம் இன்னும் சிறந்த முறையில் நமது பாசன ஏற்பாடுகளைப் பேண வேண்டும் என்பதைத் தெளிவு படுத்தியுள்ளது. நமது பாசன வசதிகளை நாம் சீரமைக்கவும், காலத்திற்கேற்றவாறு மாற்றியமைக்கவும் வேண்டும். இத் தொடர்பில் காவிரி பாசன ஏற்பாட்டைக் காலத்திற்கேற்றவாறு மாற்றியமைக்க இந்திய அரசு மூலம் உலக வங்கியிடமிருந்து நிதியுதவி பெறும் நமது [illegible]

குறிப்புகள் குறித்து இந்திய அரசு விரைந்து முடிவெடுக்குமென
நம்புகிறோம். மேற்பரப்பு நீர்வளங்களைச் சிறப்பாகப் பயன்படுத்துவ
தோடு, அதற்கிணையாக நிலத்தடி நீரையும் மேற்பரப்பு நீரையும்
ஒருங்கிணைத்துப் பயன்படுத்துவதற்கான முறைகளைக் கண்டறிதல்
வேண்டும். வேளாண்மை மறு நிதியுதவிக் கழகம், உலக வங்கி
இவற்றின் உதவியுடன் கிணறுகள் தோண்டுவதற்கும், குழாய்க்
கிணறுகள் இறக்குவதற்குமான பெருந் திட்டமொன்று நம்மிடம்
உள்ளது. இத் திட்டத்தை நிறைவேற்றுகையில் பிரச்னைகள் பல
எழுந்தன. அவை தற்போது தீர்க்கப்பட்டு வருகின்றன. நமது
பிரச்னைகளைப் புரிந்துகொண்டு அவற்றை அகற்றுவதில் நமக்குப்
பெரிதும் உதவிய வேளாண்மை மறு நிதியுதவிக் கழகத்தின் நட
வடிக்கையின் காரணமாக, இனி இத் திட்டம் விரைந்து செயல்படும்
என்று நம்புகிறேன். நமது நிலத்தடி நீர்வளத்தை அறிவியல்
முறையில் கண்டுபிடித்துக் கணக்கிடுவதற்கென 11 கோடி ரூபாய்
செலவாகும் திட்டம் ஒன்று வகுக்கப்பட்டு, நிதியுதவிக்காக, இந்திய
அரசுக்கு அனுப்பப்பட்டுள்ளது. இதற்கு இசைவு அளித்து மத்திய
அரசு உதவி செய்யும் என நான் நம்புகிறேன்.

8. நீர்வளத்தையும் மற்ற இயற்கை வளங்களையும் பயன்படுத்துவ
தற்கான திட்டங்கள் வட்டார அடிப்படையில் அமைந்திருக்க
வேண்டுமேயல்லாது ஒரு மாநிலத்தின் எல்லைக்குள் அமைத்துவிட
முடியாது. மைசூர், தமிழ்நாடு, கேரளம், ஆந்திரப் பிரதேசம் ஆகிய
மாநிலங்கள் ஒருங்கிணைந்து, இந்த வட்டாரத்தில் கிடைக்கும் நீர்
வளத்தைப் பயன்படுத்துவதற்காக திட்டமிட வேண்டும். இந்த
நான்கு மாநிலங்களின் நீர்வளம், மின் சக்தி, மற்றும் இதர வளங்
களைப் பயன்படுத்துவதற்காக மேற்கு மலைத்தொடர் மேம்பாட்டுக்
கழகம் ஒன்றை அமைப்பது குறித்து இம் மாநிலங்கள் சிந்திக்க
வேண்டுமென நான் கேட்டுக்கொள்கிறேன்.

9. கடந்த ஆண்டில் இம் மாநிலத்தில், மின்சக்தி பற்றுக்குறை
ஏற்பட்டதன் விளைவாக, தொழில் துறையும் வேளாண்மைத் துறையும்
பாதிக்கப்பட்டன. தென்மேற்குப் பருவமழை, குறிப்பாக நீர்கோள்
பகுதிகளில் பெய்யாமற் பொய்த்தது. இதன் விளைவாக, நமது
மாநிலத்திலும் அண்டை மாநிலங்களிலும் உள்ள மின்சக்தி உற்பத்தி
நீர்த்தேக்கங்களில் நீர்மட்டம், பெரிதும் குறைந்தது. ஏனைய
மாநிலங்கள் வழங்கிய மின்சக்தியும் நிறுத்தப்பட்டுவிட்டதால், மின்
சக்திப் பற்றுக்குறை நிலை மிகக் கடுமையாகியது. இதே சமயத்தில்
பல்வேறு காரணங்களால் நெய்வேலியில் மின்சக்தி உற்பத்தியளவும்
பெரிதும் குறைந்திட நேர்ந்ததால், நமது இன்னல்கள் பெருகின.



இதன் காரணமாக, நாம் மின் வெட்டு செய்யவேண்டிய நிலை
ஏற்பட்டு, அதனால் நமது பொருளாதாரம் பெரிதும் பாதிக்கப்
பட்டுள்ளது. "மின்சக்தி இன்மையைவிட எவ்விலையிலேனும் மின்
சக்தி பெறுவதே மேல்" என்று அணு விஞ்ஞானி டாக்டர் ஹோமி
ஜே. பாபா அவர்கள் கூறியதை, இச் சூழ்நிலையில்தான் பூரணமாக
நம்மால் உணர முடிகிறது. மின்சக்தி பற்றுக்குறை உலகமெங்கும்
காணப்படும் நிலையேயாகும். சமீபத்தில் ஏற்பட்ட மின்வெட்டு மறு
முறையும் ஏற்படா வண்ணம், நாம் முன்கூட்டியே திட்டமிட
வேண்டும். உடனடியாக நெய்வேலி மின் உற்பத்தியை அதிகரிக்க
வேண்டும். இது குறித்து மத்திய அரசிடம் நாம் செய்துள்ள முறை
யீடுகள் பயன் தந்துள்ளன. நெய்வேலி பழுப்பு நிலக்கரியை வேண்டிய
அளவு வெட்டி எடுத்துப் பயன்படுத்தி, மின்சாரம் உற்பத்தி செய்
வதற்குச் சுரங்க நிர்வாகிகள் சீரிய முயற்சிகளை மேற்கொண்டுள்ளனர்
என நான் மகிழ்ச்சியுடன் தெரிவித்துக் கொள்கிறேன். நெய்வேலியில்
போதுமான நிலக்கரி கிடைக்காமல் தற்போது செயல்படாமல்
வாளாவிருக்கின்ற அனல் மின்விசை உற்பத்தி நிலையங்கள் சிலவற்றை
வேறு எரிபொருளைக் கொண்டு இயங்கக்கூடியவையாக மாற்றி
யமைத்தால் நிலைமை சீரடையும். இவ்வாறு மாற்றுவதற்கு, மத்திய
அரசு இசைவளித்துள்ளது; மாற்றியமைத்து, உற்பத்தியைத்
தொடங்குவதற்கு 18 மாதங்களாகும் என மதிப்பிடப்பட்டுள்ளது.

10. நீண்ட கால நடவடிக்கையாக, 1,000 மெகாவாட் திறனுள்ள
மற்றொரு அனல் மின் நிலையத்தை அமைக்கும் நோக்கத்துடன், நெய்
வேலியில் இரண்டாவது சுரங்கம் ஒன்றை வெட்ட வேண்டுமென
நாம் வலியுறுத்தி உள்ளோம். இந்த இரண்டாவது சுரங்கம் வெட்டி
முடிக்க ஏறத்தாழ 8 ஆண்டுகள் ஆகும். இவ்வகையில் விரைந்து
முடிவெடுப்பது மாநிலத்திற்கும் நாட்டிற்கும் நன்மை பயக்குமாதலால்
இத் திட்டத்திற்கு விரைந்து அனுமதியளிக்கும்படி நான் மத்திய
அரசைக் கேட்டுக்கொள்கிறேன். கல்பாக்கம், அணு மின் நிலையத்தின்
திறனை உயர்த்துவதும், மேட்டூர், தூத்துக்குடி ஆகிய இடங்களில்
இரண்டு அனல் மின் நிலையங்களை நிறுவுவதும் அவசியமென மத்திய
அரசுக்கு வலியுறுத்தி இருக்கிறோம். இவற்றிற்கு மத்திய அரசின்
அனுமதி விரைவில் கிடைக்குமென நம்புகிறோம்.

11. தொழில் துறையை எடுத்துக்கொண்டோமானால், ஏற்கனவே
உள்ள தொழிற்சாலைகள் மின்சக்தி பற்றுக் குறை, மூலப்பொருள்
பற்றுக்குறை காரணமாக முன்னேற்றத்தில் தடை கண்டாலும்,
சீருடன் இயங்கி வருவது குறிப்பிடத்தக்கது. சேலம் உருக்காலை

நிறுவனம் அமைக்கப்பட்டதைத் தொடர்ந்து, நிர்வாக இயக்குநர் நியமிக்கப்பட்டு, தேவையான முன்னேற்பாடுகள் செய்யப்பட்டு வருவது மகிழ்ச்சிக்குரிய விஷயமாகும்.

12. நொடித்த பஞ்சாலைகளை நல்ல நிலைமைக்குக் கொண்டு வருவதைப் பொறுத்தவரை, தமிழ்நாடு பஞ்சாலைக் கழகம், 9,962 தொழிலாளர் பணிபுரியும் பதின்மூன்று ஆலைகள் இதுவரை எடுத்துக் கொண்டுள்ளது. இதில், அண்மையில் எடுத்துக்கொள்ளப்பட்ட ஆறு ஆலைகளும் அடங்கும், இவை, விரைவில் உற்பத்தியைத் தொடங்கும். ஏற்கெனவே எடுக்கப்பட்ட ஏழு ஆலைகளில், ஐந்து ஆலைகள் தற்போது ஆதாயத்தில் செயல்படுகின்றன என்பதை நான் மகிழ்ச்சியுடன் தெரிவித்துக்கொள்கிறேன்.

13. வேளாண்மை, தொழில் துறைகளில் எவ்வளவோ செய்திருந்த போதிலும், வேலையில்லா பிரச்னையும், வறுமையும் நம்மை எதிர் நோக்கி இருப்பது நீங்கள் அறிந்ததே. இது அனைத்திந்தியப் பிரச்னையாகும். எனினும் நம்மால் முடிந்ததை நாம் செய்து வருகிறோம். ரூ. 3 கோடி செலவிலான கிராம வேலை வாய்ப்பு முனைப்புத் திட்டம், ரூ. 3 கோடி செலவிலான கிராமச் சாலைகள் திட்டம், ரூ. 61 லட்சம் செலவிலான இளைஞர் அணித் திட்டம், ரூ. 1.31 கோடி செலவிலான வறட்சியால் பீடிக்கப்படும் பகுதிகளுக்கு நிவாரணம் அளிக்கும் திட்டம், பொறியாளர்கள் தொழிற் பயிற்சித் திட்டம், தொழிலாளர்கள் கடனுதவித் திட்டம் ஆகிய திட்டங்கள் உட்பட, மொத்தம் சுமார் ரூ. 10 கோடி செலவிலான திட்டங்களை நாம் தொடங்கியுள்ளோம். இவை தவிர, நடைமுறையில் உள்ள பல்வேறு துறையைச் சேர்ந்த திட்டங்களும் ஓரளவிற்கு வேலை வாய்ப்பினை ஏற்படுத்தியுள்ளன.

14. 1972–73-ஆம் ஆண்டுத் திட்டம் சுமார் ரூ. 115 கோடி என்ற அளவில் வரையறுக்கப்பட்டுள்ளது. 1972–73-ஆம் ஆண்டிற்கான திட்டம் திட்டமிட்டப்படி நிறைவேற்றப்படுமென எதிர்பார்க்கப்படுகிறது. முதலமைச்சருக்கும் திட்ட ஆணைக்குழுவிற்குமிடையே நடந்த விவாதங்களின் பயனாக, 1973–74-ஆம் ஆண்டிற்கான திட்டத்திற்கு ரூ. 120 கோடி வரையறுக்கப்பட்டுள்ளது. இதையும் சேர்த்து, நான்காம் ஐந்தாண்டுத் திட்டத்தின் மொத்த நிதி ஒதுக்கம், மத்திய திட்ட ஆணைக்குழு ஏற்கெனவே ஏற்பளித்த தொகையான ரூ. 519 கோடிக்கு மாறாக, தற்போது ரூ. 534 கோடியாக ஆகிறது என்பதை மகிழ்ச்சியுடன் தெரிவித்துக் கொள்கிறேன்.



15. இச்சமயத்தில், ஆறாவது நிதிக்குழுவின் வருகை பற்றிக் குறிப்பிட விரும்புகிறேன். மத்திய அரசிடமிருந்து, மாநில அரசுக்கு நிதி ஒதுக்கீடுகள் குறித்து, அக் குழுவிற்கு நமது கருத்துக்களைச் சமர்ப்பித்துள்ளோம். இது பற்றிய சில முக்கியமான விஷயங்களை, உங்கள் கவனத்திற்குக் கொண்டுவர விரும்புகிறேன். மாநிலங்களுக்கு நிதி வசதிகள் அளிப்பதில், நிதி ஆணைக்குழுவே தலையாய இடம் பெற வேண்டும் என்று வற்புறுத்தியுள்ளோம். தேசிய வளர்ச்சி மன்றம் பரிந்துரைத்துள்ள குறைந்தபட்ச தேவைத் திட்டம் உட்பட, எல்லா திட்டச் செலவுகட்கும், திட்டத்தின் பாற்படாத செலவுகளுக்குமான நிதி உதவி பற்றி நிதி ஆணைக்குழு, திட்டக்குழுவுடன் கலந்தாலோசித்து முடிவு செய்ய வேண்டும் என்பது நமது கொள்கையாகும். மாநிலங்களின் தேவைகளனைத்தையும் ஒரு சேர நோக்கி, மத்திய வரிகளிலிருந்து மாநிலங்களுக்கு நிதி ஒதுக்கப்படும் முறையையும், மத்திய அரசு மானியங்கள் வழங்கும் முறையையும், நிதி ஆணைக் குழுவே பரிந்துரைக்க வேண்டும். ஐந்தாண்டுத் திட்ட மானியங்கள் எந்த அடிப்படையில் வழங்கப்பட வேண்டும் என்று நிதி ஆணைக்குழு வரையறுத்துச் சொல்ல வேண்டும்; திட்டக் குழு அவ் வரையறைக்குட்பட்டு ஆண்டுக்கு ஆண்டு செயல்பட வேண்டும்.

16. திட்டத்திற்கென மாநிலங்களுக்கு மத்திய அரசு நிதி வழங்குவதில் தற்போதுள்ள ஏற்பாட்டை, நாடு முழுவதற்குமான குறைந்த பட்சத் திட்டம் ஏற்கப்பட்டுள்ளதையொட்டி, மறு ஆய்வு செய்ய வேண்டும் என வேண்டியுள்ளோம். நாட்டின் எல்லாப் பகுதிகளையும், குறிப்பிட்ட இலக்குகளுக்கு உயர்த்துவதற்காக குறைந்தபட்சத் திட்டமொன்றை தேசிய வளர்ச்சி மன்றம் ஏற்றுள்ளது. இதன்படி, ஒவ்வொரு மாநிலத்தின் திட்டமும், இந்த இலக்குகளை அடைவதற்குத் தேவையான நிதி ஒதுக்கம் பெற்றிருக்கும். இவ்வாறு, மாநிலங்களிலுள்ள பல்வேறு பிற்பட்ட பகுதிகளின் அடிப்படைத் தேவைகளுக்கு ஏற்பாடு செய்த பிறகு, தனி நபர் சராசரி வருமானமும் போன்ற பல்வேறு குறியீடுகளின் அடிப்படையில் திட்ட நிதி உதவி அளிப்பதும் மத்திய வரிகளில் ஒதுக்கீடு செய்வதும் முறையற்றதாக அமையும்.

17. மாநிலங்கள் அனைத்திற்கும் போதிய கடன் நிவாரணத்தை அளிக்கும் அவசியம் குறித்துப் பரிசீலிக்குமாறு நாம் நிதிக்குழுவிடம் வலியுறுத்தி உள்ளோம். மத்திய அரசிடமிருந்து கடனைப் பெற்ற கணிசமான நிதி ஒதுக்கம், மக்களுக்கு இன்றியமையாத வசதிகள் ஏற்படுத்தப் பயன்படுத்தப்படுகிறது. அவற்றால் வருவாய் எதுவும் இல்லை; கிடைக்கும் எனவும் எதிர்பார்க்க முடியாது. அத்தகைய

கடன் உதவியை மானியமாக மாற்றி மாநில அரசுகளின் கடன் சுமையினைக் குறைப்பதே நியாயமாகும் என்று எடுத்துக் கூறியிருக்கிறோம்.

18. மத்திய அரசு ஊழியர்களுக்கும் மாநில அரசு ஊழியர்களுக்குமிடையே உள்ள ஊதிய வேற்றுமையை அகற்ற வேண்டுமென்று கோரியுள்ளோம். மாநில அரசின் நிதி நிலைமை இதற்கு இடம் தராததன் காரணமாக, மத்திய அரசே இதற்கு வேண்டிய தொகையை ஊதியம் சீர் செய்யும் மானியமாக அளிக்க வேண்டுமெனவும் கேட்டுள்ளோம். மத்திய சம்பளக் குழுவின் அறிக்கை விரைவிலேயே வரவிருப்பதால், உடனடியாக ஆவன செய்யவேண்டுமென்று வற்புறுத்தியுள்ளோம்.

19. வறுமை, வேலையின்மை ஆகியவற்றை ஒழித்து, சமூக, பொருளாதார ஏற்றத்தாழ்வுகளைப் போக்குவதையே முக்கியக் குறிக்கோளாக ஏற்றுக்கொண்டுள்ளோம். அடுத்த பத்தாண்டுகளுக்கு மாநிலத்திற்கான நீண்டகாலத் திட்டமொன்றை வகுப்பதற்காக மாநிலத் திட்டக் குழுவொன்றை அமைத்துள்ளோம். மாநிலத் திட்டக் குழுவால் வகுக்கப்பட்டுள்ள வரைவுத் திட்டத்தின் நகல் ஒன்று சட்ட மன்றத்திலும் மக்கள் முன்னிலையிலும் வைக்கப்பட்டுள்ளது. ஐந்தாவது ஐந்தாண்டுத் திட்டம், நீண்ட காலத் திட்டம் (ஐந்தாவது, ஆறுவது திட்டங்களைக் கொண்டது) சம்பந்தப்பட்ட விரிவான திட்டங்கள் தயாரிப்பதில், மாநிலத் திட்டக் குழு தற்சமயம் தீவிரமாக ஈடுபட்டுள்ளது. தேவையான மூலப் பொருட்கள், மின்சாரம் ஆகியவை தங்கு தடையில்லாமல் கிடைக்க வழி செய்யப்படுவதே, திட்டங்கள் வெற்றியுடன் செயல்படுத்துவதற்கு அடிப்படையாக அமையும் என்று மாண்புமிகு முதலமைச்சர் தேசிய வளர்ச்சி மன்றக் கூட்டத்தில் கூறியிருப்பதை இங்கு குறிப்பிட விரும்புகிறேன். சேமித்து, முதலீடு செய்வதற்கு ஊக்கம் அளிக்கும் வகையில், வரி விதிப்பு முறையை மாற்றியமைப்பதை ஆராய்வதற்கு வரி விசாரணைக்குழு ஒன்றை அமைக்க வேண்டுமென்று அவர் அக்கூட்டத்தில் கூறியதையும் குறிப்பிட விரும்புகின்றேன். எல்லோருமே வேலை வாய்ப்புக்காக அரசாங்கத்தை எதிர்பார்த்திருப்பது நல்லது அல்ல; உடனடி சாத்தியமும் அல்ல. எனவே சேமித்து, தொழிலில் முதலீடு செய்ய மத்தியதர வர்க்கத் தொழில் முனைவர்கள் பலர் உருவாக வேண்டும். அத்தகையோர்கள் அவ்வாறு செயல்பட, தக்க சூழ்நிலையை உருவாக்குவதற்காகவே, வருமான வரி அமைப்பு மாற்றி



யமைக்கப்பட வேண்டும் என முதலமைச்சர் கருத்துத் தெரிவித்தார். இந்தக் கருத்தை ஏற்பதன்மூலம் வரி ஏய்ப்பைத் தவிர்க்கவும், கறுப்புப் பண நடமாட்டத்தைத் தடுக்கவும் வழி வகை காணமுடியும்.

20. நான் உரையை முடிக்கும் முன்னர், விலைவாசிகள், ஊதியங்கள் குறித்தும் சிலவற்றைக் கூற விரும்புகிறேன். தேசிய மட்டத்தில் மேற்கொள்ளப்படும் வரிவிதிப்பு, நிதிக் கொள்கை பற்றிய முடிவுகளையொட்டியே விலைவாசிக் கொள்கை முடிவு செய்யப்பட வேண்டும். விலைவாசி நிலவரம், உணவுப்பொருள்களின் விலைவாசிகளை ஒட்டியே இருக்கும் என்ற கருத்தை நாம் ஏற்றுக்கொள்ளும் அதே நேரத்தில், தொழில் துறைகளுக்குக் கிடைக்கும் மூலப் பொருள்களின் அளவு, பணவசதி, ஊதியக் கொள்கை, மத்திய அரசு வரி விதிப்பு முறை ஆகியவையும் விலைகளை நிர்ணயிப்பதில் முக்கியப் பங்கு வகிக்கின்றன என்பதை நாம் சுட்டிக் காட்ட வேண்டியுள்ளது. விலைவாசியை ஒரு நிலையில் வைத்துக்கொள்வதை உறுதிப்படுத்த வேண்டுமாயின் இந்த விசைகளனைத்தையும் கூட்டாக நாம் இயக்க வேண்டும். ஒருங்கிணைந்த ஊதிய-விலைவாசி-வருமானக் கொள்கை ஒன்றை வகுத்து அதைச் செயற்படுத்த வேண்டும். இந்தக் கொள்கை வகுக்கும் பணியை மேற்கொள்ளும்போது, வேலையற்றிருப்போரின் பிரச்னையையும் நாம் கவனத்தில் வைத்துக்கொள்ளவேண்டும்.

21. வரும் கூட்டத் தொடரில் ஆலோசிக்கப்பட வேண்டிய முக்கியமான சட்ட வரைவுகளில் ஒன்று, பேருந்துப் போக்குவரத்தை நாட்டுடைமையாக்குவது பற்றியதாகும். இம் மாநிலத்திலுள்ள பேருந்துப் போக்குவரத்து முழுவதையும் படிப்படியாக நாட்டுடைமை ஆக்குவதென்று தமிழ்நாடு அரசு முடிவெடுத்துள்ளது உங்கள் அனைவருக்கும் தெரியும். இது இம் மாநிலம் சமதர்மப் பாதையில் கண்டு வரும் மற்றொரு முன்னேற்றமாகும். இப் பேரவை இந்த நடவடிக்கையை வரவேற்குமென நான் நம்புகிறேன்.

22. மக்களாட்சியின் வளர்ச்சிப் பாதையில் அவ்வப்போது இன்னல்களும் இடுக்கண்களும் நேரத்தான் செய்யும். இந்த இன்னல்களையும் இடுக்கண்களையும் களைந்து சீரான முன்னேற்றம் நேரிய வழியில் ஏற்பட நம்மாலானதையெல்லாம் செய்யவேண்டும். தமிழ்நாடு சட்ட மன்றம் நல்மரபு காத்து, ஜனநாயக நேர்மை போற்றி, நாட்டிலே நீதியுடன் நல்வளங் கொழிக்கச் செய்ய ஜனநாயக அமைப்புகளே ஏற்ற கருவிகளாகும் என்பதை மெய்ப்பிக்கும் என்பதில் எனக்குச் சிறிதும் ஐயம் இல்லை.

23. சமதர்ம ஜனநாயகம் நல்ல வகையில் மலர வேண்டுமானால் நாம் இன்னும் நெடுந்தூரம் செல்ல வேண்டும். நாட்டிலே நலிந்திருக்கும் பல்லாயிரக் கணக்கான பாமர மக்களுக்கு, அவர்களது நிலையினை நல்ல வகையில் புரிந்துகொண்டு, அவர்களுக்காக அயராது சலியாது பணிபுரியும் சக்திகளுக்கு நமது ஒத்துழைப்பை நல்குவதிலும், அந்த நோக்கங்களுக்காக உறுதியுடன் பாடுபடுவதிலும் நாம் முன்னோடிகளாக இருப்போமேயானால், நமது சந்ததியினர் அனைவரும் நம்மைப் போற்றிப் புகழ்வார்கள். நாட்டிலே அமைதியும், வளமும் பல்கிப் பெருக உங்களுடைய முயற்சிகளும், அறிவுரைகளும் உறுதுணையாயிருக்கட்டும் என வாழ்த்துகிறேன். வணக்கம்.

## தமிழ்நாடு சட்டப் பேரவை.

---

### புதன்கிழமை, 1973 பிப்ரவரி 7.

சென்னை செயின்ட் ஜார்ஜ் கோட்டையிலுள்ள சட்டப் பேரவை மண்டபத்தில் காலை 9 மணி அளவில் மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர் திரு. பெ. சீனிவாசன் அவர்கள் தலைமையில் பேரவை கூடியது.

### 1. நீத்தார் நினைவுக் குறிப்பு

### சட்டப் பேரவையின் முன்னாள் உறுப்பினர் திரு. பி. வி. ஸ்ரீராமுலு அவர்கள் மறைவு குறித்து

**மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர் :** தருமபுரி மாவட்டம், கிருஷ்ணகிரி தொகுதியிலிருந்து தேர்ந்தெடுக்கப்பட்டு சென்னை மாநில சட்டப் பேரவையில் 1962-ம் ஆண்டிலிருந்து 1967-ம் ஆண்டு வரை உறுப்பினராக இருந்த திரு. பி. வி. ஸ்ரீராமுலு அவர்கள் 5—2—1973 அன்று மறைந்ததைக் குறித்து இப் பேரவையின் இரங்கலையும் ஆழ்ந்த வருத்தத்தையும் அன்னாரை இழந்துவிட்ட குடும்பத்திற்கு நான் தெரிவித்துக் கொள்கிறேன்.

மறைந்தவருக்கு மரியாதை அளிக்கும் வகையில் மாண்புமிகு உறுப்பினர்கள் அனைவரும் எழுந்து ஒரு நிமிடம் மவுனமாக நிற்கும்படி வேண்டிக்கேட்டுக் கொள்கிறேன்.

மாண்புமிகு உறுப்பினர்கள் அனைவரும் எழுந்து ஒரு நிமிடம் மவுனமாக நின்றனர்.

### 2. வினாக்கள்—விடைகள்

### வெள்ளிக் குறியிட்ட வினாக்கள்

*New tenements at Swatantra Nagar*

*41 Q.—Thiru R. R. Munuswamy: Will the Hon. the Chief Minister be pleased to state—

(a) the total number of tenements to be constructed at Swatantra Nagar, Madras, by Tamil Nadu Slum Clearance Board; and

(b) the details as to when these constructions will be completed?

**மாண்புமிகு டாக்டர் மு. கருணாநிதி :** இத்திட்டம் செயல்படுத்தத் தேவைப்படும் நிலம் வக்ஃப் போர்டுக்குச் சொந்தமானது. இந்நிலத்தை தமிழ்நாடு குடிசைப் பகுதி (மேம்பாடு & அகற்றுதல்) சட்டம் 1971-ன் விதியின்கீழ் கையகப்படுத்த அரசு நடவடிக்கை எடுத்திருக்கிறது. இந்நிலத்தை கையகப்படுத்திய பின்னரே இந்த இடத்தில் குடியிருப்புகள் கட்டுவதற்கான திட்டம் தீட்டப்படும்.

**திரு. ரா. ரா. முனுசாமி :** தலைவர் அவர்களே, அப்படிக் கட்டப்படுகிற வீடுகள் குடிசைப் பகுதிகளில் இருப்பவர்களுக்கு மட்டும் தரப்படுமா? அல்லது, பிளாட்பாரங்களில் இருப்பவர்களுக்கும் தர அரசு உத்தேசித்துள்ளதா?

**மாண்புமிகு டாக்டர் மு. கருணாநிதி :** குடிசை மாற்று வாரியத்தினால் கட்டப்படும் வீடுகள் குடிசைப் பகுதியில் இருப்பவர்களுக்காகத்தான் கட்டப்படுகின்றன.

**திரு. என். கிட்டப்பா :** குடிசைப் பகுதி மாற்று வாரியத்தின் பணிகளை ஏனைய முக்கிய நகராட்சிப் பகுதிகளிலும் விஸ்தரிக்க அரசு ஆலோசிக்குமா?

**மாண்புமிகு டாக்டர் மு. கருணாநிதி :** நிதி நிலையைப் பொறுத்து அப்படிப்பட்ட முடிவுகள் பிறகு எடுக்கப்படும்.

**திரு. வா. மை. அப்துல் ஜப்பார் :** வக்ஃப் போர்டுக்குச் சொந்தமான நிலங்களை வேறு காரியங்களுக்குப் பயன்படுத்துவதற்கு முன்பு முஸ்லிம் மக்களுடைய மத உணர்ச்சிகளுக்கு மதிப்பு அளிக்க இந்த அரசு முன்வருமா? இதில் ஏதேனும் ஆட்சேபணை இருக்குமானால் வக்ஃப் போர்டுக்குச் சொந்தமான நிலங்களை எடுப்பதைத் தவிர்க்க அரசு முன்வருமா?

**மாண்புமிகு டாக்டர் மு. கருணாநிதி :** இது சம்பந்தமாக குடிசை மாற்று வாரியம், வக்ஃப் போர்டினிடம் கேட்டிருக்கிறது. அதற்கு வக்ஃப் போர்டு எழுதிய பதிலில் மேற்படி மனைகள் அனைத்தும் எல்லம்மாள், கண்ணபிரான் பிள்ளை ஆகியோருக்கு நிரந்தரக் குத்தகைக்கு விடப்பட்டுள்ளது என்றும் இக் குத்தகையை முடிவு செய்வதற்கு சிட்டி சிவில் கோர்ட்டில் வழக்கு தொடரப்பட்டிருக்கிறது என்றும் கூறியது. வக்ஃப் போர்டுக்குக் கடிதம் எழுதி அதற்குப்பிறகுதான் அது எடுக்கப்படுகிறது.



**திரு. நா. வீராசாமி :** சென்னை நகரத்தில் குடிசையில் வாழ்கிறவர்களுக்கு அழகான கட்டடங்கள் கட்டப்பட்டு வருகின்றன. இதுவரை அம்மாதிரி எத்தனை கட்டடங்கள் கட்டியிருக்கிறார்கள்? மொத்தம் எவ்வளவு தொகை இதற்காக அரசாங்கம் செலவு செய்திருக்கிறது? இப்படிப்பட்ட திட்டம் வேறு மாநிலங்களில் எங்காவது இருக்கிறதா?

**மாண்புமிகு டாக்டர் மு. கருணாநிதி :** இப்பொழுது இந்தத் திட்டத்தின்கீழ் 4,590 குடும்பங்களுக்கு டெனமென்ட்ஸ் கட்டி முடிக்கப்பட்டிருக்கின்றன. பாகி கட்டிய நிலையில் இருக்கின்றன. ஆரம்ப கட்டத்தில் இருக்கும் டெனமென்ட்களின் எண்ணிக்கை 11,296. இப்பொழுது திட்டமிட்டிருக்கின்ற 85 குடிசைப் பகுதிகளில் கிட்டத்தட்ட 28,000 டெனமென்ட்கள் கட்டப்படும்.

**திரு. எஸ். வடிவேலு :** சென்னை நகரில் குடிசைவாழ் மக்களுக்காகக் கட்டிக்கொடுக்கப்படுவதுபோல, கிராமப் புறங்களில் இருக்கக்கூடிய சாதாரண தாழ்த்தப்பட்ட மக்கள், ஏனைய குடியானவர்கள் ஆகியவர்களுக்கு இரண்டு லட்சம் வீடுகளாவது கட்டிக்கொடுத்து சுதந்திரமாக வாழ வகை செய்வார்களா? சுதந்திரமடைந்து 25 ஆண்டுக்காலம் ஆகியும் இன்னும் குடியிருப்பு வசதிகள் சரியான நிலைமையில் இல்லை என்பதைக் கனம் முதல் அமைச்சர் அவர்கள் உணர்வார்களா?

**மாண்புமிகு டாக்டர் மு. கருணாநிதி :** சுதந்திரம் அடைந்து 25 ஆண்டு காலத்திற்குப்பிறகு முதன் முதலாக தஞ்சை மாவட்டத்தில் மாத்திரம் கிட்டத்தட்ட 1,57,000 பேர்களுக்கு குடியிருப்பு மனைகளைச் சொந்தம் ஆக்கிய முதல் அரசு இந்தியாவிலேயே தமிழ்நாட்டிலேயே திராவிட முன்னேற்றக் கழக அரசுதான் என்பதை மாண்புமிகு உறுப்பினரே பல கூட்டங்களில் பாராட்டிப் பேசியிருக்கிறார்கள். ஆகவே, கிராமங்களில் அவர்களுக்கெல்லாம் வீடு கட்டிக் கொடுக்கும் திட்டத்தைப் பற்றி அரசு ஆலோசித்துக் கொண்டிருக்கிறது. உரிய நேரத்தில் அதுபற்றிக் கவனிக்கப்படும்.

**மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர் :** துணைக் கேள்வி ஒரு பேச்சு ஆகிவிடக்கூடாது. 'முதல் அமைச்சர் அவர்கள் உணர்வாரா?' என்று கேள்வி கேட்டிருக்கிறீர்கள். முதல் அமைச்சரவர்களுடைய உணர்ச்சியை இங்கே வெளிப்படுத்தி

[1973 பிப்ரவரி 7

கோருவது கேள்வி-பதில் நேரத்தில் அல்ல. தகவல் தெரிந்து கொள்வதற்காகத்தான் உறுப்பினர் அவர்கள் கேள்வி கேட்க வேண்டும்.

*Joint Civil Services Council*

* 42 Q.—THIRU N. K. PALANISWAMY : Will the Hon. the Chief Minister be pleased to state—

(a) whether there is any proposal to make the existing Joint Civil Services Council as a statutory body capable of enforcing the decisions taken by the Council; and

(b) if so, the details thereof?

**மாண்புமிகு டாக்டர் மு. கருணாநிதி :** (அ) இல்லை.

(ஆ) இவ்வினாவிற்கு இடமில்லை.

**திரு. கே. டி. கே. தங்கமணி :** இப்பொழுதிருக்கக்கூடிய ஜாயின்ட் சிவில் சர்வீஸ் கவுன்சிலினுடைய வேலைமுறைகள் என்ன? அது எந்த அளவுக்கு அமல் படுத்துவதற்கு அதிகாரம் இருக்கிறது?

**மாண்புமிகு டாக்டர் மு. கருணாநிதி :** இப்பொழுதுள்ள அந்தக் கவுன்சிலினுடைய வேலைமுறைகள் பொதுவானவையாகும். இருக்கின்ற பதவிகளை இரண்டு ஆண்டுகளுக்கு மாற்றியமைப்பது, புதிய பதவிகளை உருவாக்குவது என்பதைப்பற்றியெல்லாம் யோசிப்பது இப்பொழுதிருக்கும் அந்தக் குழுவினுடைய வேலை முறையாக இருந்து வருகிறது.

**மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர் :** வினா எண்கள் 43, 44 பிறகு எடுத்துக்கொள்ளப்படும்.

**சென்னை பொது மருத்துவ மனையில் மூட்டு வலி சிகிச்சைப் பிரிவு**

* 45 வினா **திரு. என். கிட்டப்பா :** மாண்புமிகு மக்கள் நல் வாழ்வுத்துறை அமைச்சர் தயவு செய்து கீழ்க்கண்ட வினாவுக்கு விடையளிப்பாரா—

மூட்டு வலி சிகிச்சைப் பிரிவு ஒன்றினை சென்னை ஜெனரல் ஆஸ்பத்திரியில் துவக்கத் திட்டம் ஏதேனும் அரசு பரிசீலனையிலுள்ளதா?



1973 பிப்ரவரி 7]

**மாண்புமிகு திரு. க. அன்பழகன் :** 12 படுக்கைகள் அடங்கிய மூட்டுக்கள் சிகிச்சைப் பிரிவு ஒன்று சென்னை அரசினர் பொது மருத்துவ மனையில் சனவரி 1972-லிருந்து வைக்கப்பட்டுள்ளது.

**திரு. என். கிட்டப்பா :** இந்த மூட்டு வலி சிகிச்சைப் பிரிவு அந்தந்த மாவட்டத் தலைநகர மருத்துவ மனைகளிலும் செயல்பட்டு வருகிறதா? அப்படி இல்லாத மாவட்டத் தலைமை மருத்துவ மனை களில் விரைவில் அந்தப் பிரிவுகளை ஏற்படுத்த அரசு முன்வருமா?

**மாண்புமிகு திரு. க. அன்பழகன் :** தலைவர் அவர்களே, மூட்டு வலி சிகிச்சை என்பது பொதுவாக, எல்லா மருத்துவ மனைகளிலும் பொது நோயாளிகள் பிரிவிலேயே அந்த நோய் சிகிச்சையும் ஓரளவு செய்கிறார்கள். இதற்காகத் தனியாக இப்போது நடை பெற்று வருகிற மருத்துவத்தின் மூலமாக மேலும் சில மருந்து களைப் பயன்படுத்த வாய்ப்பு இருக்கிறதா என்பதைப் பற்றி ஆராய்வதற்காக சென்னை பொது மருத்துவ மனையில் தனிப் பிரிவு ஏற்படுத்தப்பட்டிருக்கிறது. இது ஓரளவு ஆராய்ச்சி, அனுபவத் திற்குப் பயன்பட வேண்டுமென்பது நோக்கம். இதே முறையில் எல்லா மாவட்ட மருத்துவ மனையிலும் ஏற்படுத்துவது என்பது எளிதாக இயலாத காரியம்.

**புற்றுநோய் ஆராய்ச்சிக்குழு**

* 46 வினா—**திரு. என். கிட்டப்பா :** மாண்புமிகு மக்கள் நல் வாழ்வுத்துறை அமைச்சர் தயவு செய்து கீழ்க்கண்ட வினாவுக்கு விடையளிப்பாரா—

புற்றுநோயைக் குணப்படுத்தும் முறைகள் கண்டுபிடிக்க நிபுணர்கள் குழு ஒன்றை அமைக்க ஏதேனும் திட்டம் அரசு பரிசீலனையிலுள்ளதா?

**மாண்புமிகு திரு. க. அன்பழகன் :** சென்னை அரசினர் பொது மருத்துவமனையில் உள்ள பொன்னாடு கதிர் வீச்சு மருத்துவப் பிரிவில் எல்லா வசதிகளுடன் கூடிய புற்றுநோய்ப் பிரிவு ஒன்று செயல்பட்டு வருகிறது. நோயைக் கண்டுபிடித்தல், நோய்க்குறிகளை கண்டறிதல், நோய் சிகிச்சை ஆகியவற்றில் வல்லுநர்களாயுள்ள வர்கள் அடங்கிய குழு ஒன்று இப்பிரிவில் உள்ளது. இது தவிர தனிக்குழு ஒன்று அமைப்பதற்கான செயற்குறிப்பு எதுவும் இல்லை.

[1973 பிப்ரவரி 7

**திரு. என். கிட்டப்பா :** புற்று நோயைக் குணப்படுத்தும் முறையில் அந்தக் குழுவிற்குத் தகுந்த ஆலோசனை கூறுவதற்கு வெளிநாடுகளில் இருந்து யாரேனும் நிபுணர்கள் அழைக்கப் பட்டுள்ளனரா ? அப்படி அழைக்கப்படவில்லை என்றால் இனி யேனும் அழைக்கப்பட்டு அந்தக் குழுவில் இடம் பெற்று அவர் களுடைய ஆலோசனை பெற அரசு ஆவன செய்ய முன்வருமா ?

**மாண்புமிகு திரு. க. அன்பழகன் :** புற்று நோய் சிகிச்சைக்குத் தேவையான கருவிகள் அமைந்த பகுதியாக சென்னையிலுள்ள இந்த பொன்னாடு ரேடியாலஜி இன்ஸ்டிடியூட் இயங்கி வருகிறது. புற்று நோய் சிகிச்சைக்கு உலகம் முழுவதும் பெரிய ஆராய்ச்சிகள் நடைபெற்று அந்த ஆராய்ச்சிகளில் இருந்து பலன் கிடைக்கு மானால் அந்தப் பலனைத் தமிழ்நாட்டில் பயன்படுத்த தேவையான ஆற்றல் பெற்றவர்கள் இருக்கிறார்கள். புதிய முறைகள் கண்டு பிடிக்கப்படுமானால் அதிலே பயிற்சி பெற்று வருவதற்கு தகுந்த ஒருவரை உடனடியாக அனுப்ப முயற்சி எடுத்துக் கொள்ளப்படும்.

**திருமதி ஜோதி வெங்கடாசலம் :** ரீஜினல் கான்சர் இன்ஸ்டிடியூட் தமிழ் நாட்டுக்குக் கொடுக்க வேண்டுமென்று மத்திய அரசின் ஆலோசனையில் இருந்தது என்னவாயிற்று ?

**மாண்புமிகு திரு. க. அன்பழகன் :** அறிஞர் அண்ணா புற்று நோய் சிகிச்சை ஆராய்ச்சி நிலையம் ஒன்று காஞ்சீபுரத்தில் தொடங்கப்பட்டிருக்கிறது. அந்த நிலையம் புற்று நோய் காணப் படக்கூடிய நிலையிலுள்ள மக்களைப் பரிசோதித்து புற்று நோய் காணப்பட்டிருக்குமானால் காணப்படும் விவரத்தைக்காணும் அளவுக்குத்தான் செயலாற்றி வருகிறது. மேலும் அங்கு சிகிச்சைப் பிரிவு ஏற்படுத்தி ஏறத்தாழ தலைமை நிலையமாக அமைத்து அதன் தொடர்பாக பல்வேறு மாவட்ட மருத்துவ மனைகளிலும் புற்று நோய் சிகிச்சைப் பிரிவுகளை அமைக்கலாம் என்ற திட்டம் இருக்கிறது. அது பல ஆண்டுத் திட்டம். அதையே மத்திய அரசு வட்டார புற்று நோய் சிகிச்சை திட்டமாக ஏற்றுக்கொள்ள வேண்டும் என்று கேட்டுக்கொண்டு இருக்கிறோம் இன்னும் மத்திய அரசு முடிவு எடுக்கவில்லை.



1973 பிப்ரவரி 7]

**திரு. த. சோனையா :** மதுரை அரசு மருத்துவ மனையில் புற்று நோய் சிகிச்சைக்காக அமைக்கப்பட்டிருக்கும் ரேடியம் கருவி நீண்ட காலமாக பழுது பார்க்கப்படாமலேயே இருப்பதாகக் கூறப்படுகிறது. அதை உடனடியாகப் பழுது பார்க்க ஏற்பாடு செய்யப்படுமா ?

**மாண்புமிகு திரு. க. அன்பழகன் :** அது பழுதுபட்டிருக்கு மானால் விரைவில் பழுதுபார்ப்பதற்கும் செம்மையாக நடை பெறுவதற்கும் முயற்சி எடுத்துக் கொள்ளப்படும். அதுபற்றி விவரம் இப்போது என்னிடத்தில் இல்லை.

**திரு. நா. வீராசாமி :** அமைச்சர் அவர்கள் பதில் சொல்லும் போது அலபதி முறையில் இருக்கும் மருந்து வகைகளைப் பற்றியும், நோயைக் குணப்படுத்தும் முறை பற்றியும் குறிப்பிட்டார்கள். நம்முடைய தமிழ் நாட்டில் இரண்டாயிரம் ஆண்டுகளாக இந்த நோயை மூலிகை மூலம் குணப்படுத்தியதாக சித்த வைத்தியப் புத்தகங்களில் காணப்படுகிறது. அதைப் பற்றி ஆராய்ச்சி செய்து புற்று நோயைத் தீர்க்க அரசாங்கம் நடவடிக்கை எடுத்துக் கொள்ளுமா ?

**மாண்புமிகு திரு. க. அன்பழகன் :** இன்னும் போதுமான ஆராய்ச்சி நடைபெறவில்லை. புற்று நோயில் பலவகையான தன்மைகள் இருக்கின்றன. சிலவற்றுக்கு சில மூலிகைகளைப் பயன் படுத்தக்கூடும். இது மேலும் ஆராயப்பட வேண்டும்.

**திரு. எஸ். வடிவேல் :** புற்று நோயைத் தடுக்க சித்த வைத்தியத்தில் பல்வேறு முறைகள் இருக்கின்றன. அதிலே உள்ள வல்லுநர்களைக் கொண்ட குழு அமைத்து அந்த வைத்திய முறையைக் கையாள அரசு முன்வருமா ?

**மாண்புமிகு திரு. க. அன்பழகன் :** எனக்குத் தெரிந்த வரையில் சில மருந்துகள் இருக்கக்கூடும் என்பதை ஒப்புக் கொள்கிறேன். புற்று நோய் வரக்கூடிய இடத்தைப் பொறுத்து இந்த மருந்து பயன்படும். இந்த மருந்தை மட்டும் பயன்படுத்துவதால் சில பேர் இறந்து விடுகின்ற நிலைகூட ஏற்படுகிறது. இவற்றில் சில பயன் படுகின்றன, சில பயன்படவில்லை. இந்த இரண்டு மருத்துவ முறையினாலும் கிடைக்கும் மருந்துகளை இணைத்து மேலும் ஆராய்ச்சிகள் நடத்தப்பட வேண்டும்.

[1973 பிப்ரவரி 7

**திரு. கே. என். குமாரசாமி :** புற்று நோய் சிகரெட், புகையிலை போன்றவற்றால் வருகிறது என்று மேல்நாடுகளில் விளம்பரப் படுத்துகிறார்கள். அதுபோன்ற விளம்பரத்தைத் தமிழகத்தில் செய்ய அரசாங்கம் முன்வருமா ?

**மாண்புமிகு திரு. க. அன்பழகன் :** உடலிலுள்ள டிஷ்யூஸ் தன்மை மாறி விடுகிறபோது புற்று நோயாக வளருகிறது என்று சொல்லுகிறார்கள். ஈரந்தாழ்ந்த நிலத்திலிருந்து மழைக்குடை கிளம்புவது போல் உடம்புக்குள் புற்றுகள் பூக்கிற காரணத்தால் புற்றுநோய் என்ற பெயர் வந்திருக்கலாம். சாதாரணமாக புகையிலை, சிகரெட் ஆகியவற்றால் புற்று நோய் ஏற்படுகிறது என்று சொன்னாலும் அவை மட்டும் காரணமல்ல. எதையும் பயன் படுத்தாத ரமண மகரிஷிக்கு அந்த நோய் வந்தது. இயபழக்கமற்ற நல்லவர்களுக்கும் இது வருகின்ற காரணத்தால்தான் சஞ்சலம் ஏற்படுகிறது.

THIRU K. S. KOTHANDARAMIAH: Sir, cancer is a common disease universally found in every country in the world. May I know from the Hon. Minister for Health whether the countries which have made much progress in scientific research, have found out any specific medicine for the cancer disease?

THE HON. THIRU K. ANBAZHAGAN: Some of the Western countries have got their own medicine which is not accepted by other countries. They are co-ordinating it and several costly medicines from different sources are adopted in the Western countries where financial and economic position is far better.

**திரு. கே. ஏ. வகாப் :** புற்று நோயைத் தீர்க்க சித்த வைத்தியத்தில் நல்ல மருந்து இருப்பதாக, சென்னையில் இருக்கிற பலராமையா என்ற டாக்டர் பத்திரிகையில் எழுதியிருக்கிறார். அதைப் பற்றி அரசு ஆராயுமா ?

**மாண்புமிகு திரு. க. அன்பழகன் :** சிறந்த மருந்து இருக்கிறது. அதிகப்படியான நோயாளிகள் இருக்கிறார்கள். இரண்டையும் இணைக்கும் ஆராய்ச்சியும்—ஆற்றலும்தான் இல்லை.



1973 பிப்ரவரி 7]

### திருப்பூர் மருத்துவமனையில் குருதி சேமிப்பு நிலையம்

* 47 வினா—**திரு. சு. துரைசாமி :** மாண்புமிகு மக்கள் நல்வாழ்வுத்துறை அமைச்சர் தயவு செய்து கீழ்க்கண்ட வினாவுக்கு விடையளிப்பாரா—

திருப்பூர் அரசினர் மருத்துவமனையில் "ரத்த சேமிப்பு நிலையம்" அமைக்கும் செயற்குறிப்பு அரசு பரிசீலனையில் உள்ளதா ?

**மாண்புமிகு திரு. க. அன்பழகன் :** தற்போது அத்தகைய செயற்குறிப்பு ஏதும் அரசின் பரிசீலனையில் இல்லை.

**திரு. சு. துரைசாமி :** நோயாளிக்கு உடனடியாக ரத்தம் தேவைப்பட்டால் 35 மைல் தூரத்தில் இருக்கும் கோவைக்குச் செல்ல வேண்டியிருக்கிறது. திருப்பூர் நகரம் 1½ லட்சம் மக்கள் தொகை கொண்ட நகரம். அங்கு ஒரு ரத்த சேமிப்பு நிலையம் ஏற்படுத்த அரசு முன்வருமா ?

**மாண்புமிகு திரு. க. அன்பழகன் :** அங்கு அடிப்படையான மருத்துவ மனையையே பெரிய அளவில் கட்டுவது பற்றி ஆலோசிக்கப்பட்டு வருகிறது. அது கட்டி முடிக்கப்பட்ட பிறகு அதிலே இதுவும் இணைக்கப்படும். இப்போது தனியாக அமைக்க வேண்டுமென்பது பொருத்தமாக இல்லை.

**டாக்டர் ச. மு. பழனியப்பன் :** இந்த ரத்த சேமிப்பு நிலையத்தை எல்லா வட்ட தலைமை மருத்துவ மனைகளிலும் ஆண்டுக்கு மூன்று, ஐந்து என்ற வீதத்தில் ஏற்படுத்த திட்டம் வகுக்கப்படுமா ?

**மாண்புமிகு திரு. க. அன்பழகன் :** இந்தத் திட்டம் இப்போதே ஏற்றுக் கொள்ளப்பட்டிருக்கிறது. ஓராண்டில் பத்து பன்னிரண்டு வட்ட மருத்துவ மனைகளில் தொடங்கப்பட வேண்டுமென்பது திட்டம். அதற்கான கட்டடம் இருக்க வேண்டும். கருவிகள் அமைக்க வேண்டும். பொதுமக்களும் குருதியைக் கொடுக்க ஆர்வம் உடையவர்களாக அமையவேண்டும்.

## மேட்டூர் ரசாயன தொழிற்சாலை கழிவுநீர்

* 48 வினா—திரு. எம். சுரேந்திரன் : மாண்புமிகு மக்கள் நல்வாழ்வுத்துறை அமைச்சர் அவர்கள் கீழ்க்கண்ட வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) மேட்டூர் தாலுகா, பி.என். பட்டி, விராக்கல்புதூர் ஆகிய கிராமங்களில் பல விவசாய கிணறுகள், மேட்டூரில் உள்ள ரசாயன தொழிற்சாலையின் கழிவுநீர் காரணமாக கெட்டிருப்பதும், இதனால் பல விவசாயிகள் பல வருடங்களாக பாதிக்கப்பட்டிருப்பதும் அரசாங்கத்திற்குத் தெரியுமா ?

(இ) அரசாங்கத்திற்கு இது சம்பந்தமாக முறையீடு வந்திருக்கின்றனவா ?

(உ) அப்படி வந்திருந்தால் அது சம்பந்தமாக எடுக்கப்பட்ட நடவடிக்கைகள் என்ன ?

**மாண்புமிகு திரு. க. அன்பழகன் :** (அ) ஆம்.

(இ) ஆம்.

(உ) பாதிக்கப்பட்ட 46 கிணறுகளிலிருந்து மாதிரி தண்ணீர் எடுக்கப்பட்டு முதனிலை பகுப்பாய்வு நடத்தப்பட்டது. அவைகளில் நான்கு கிணறுகளிலுள்ள நீர் விவசாய உபயோகத்திற்கு ஏற்றதாக இருப்பதாக கண்டு பிடிக்கப்பட்டது. மற்றவை உப்புக் கலந்தவை. மீதமுள்ள 42 கிணறுகளின் நீர் அதிக அளவு உப்பு கலந்துள்ள தன்மையினால் விவசாய உபயோகத்திற்கு பயனற்றதாக கண்டு பிடிக்கப்பட்டது. கழிவுப் பொருளை விடுவிப்பதால் ஏறத்தாழ 354 கிணறுகள் அசுத்தமாக்கப்படலாமென்று ஐயுறுவதாக அரசுக்கு அறிக்கை அனுப்பப்பட்டுள்ளது. விரிவான பகுப்பாய்வுக்காக, எல்லா கிணறுகளிலிருந்தும் மாதிரிகளை சேகரிப்பதற்காக தனியான பணியாளர் தொகுதியினை நியமிக்கத் தேவையான நடவடிக்கை எடுக்கப்பட்டு வருகின்றது. பகுப்பாய்வு முடிந்தவுடன் தண்ணீர் கெடுதலின் தன்மையும் எவ்வாறு தண்ணீர் உபயோகத்திற்கு ஏற்றதாக செய்ய இயலும் என்பது பற்றியும் ஆலோசிக்கப்படும்.

**திரு. எம். சுரேந்திரன் :** இந்தப் பிரச்னை பல ஆண்டுகளாக இருந்து கொண்டிருக்கிறது. இதில் தண்ணீர் கெட்ட காரணத்தால் ஏராளமான நிலம் விவசாயம் செய்வதற்கு லாயக்கற்றதாகப்



போயிருக்கிறது. அவர்கள் ஒருவருக்கும் நஷ்டயீடு அளிப்பதற்கோ அல்லது மற்றக் காரியங்கள் செய்வதற்கோ நடவடிக்கைகள் எடுக்கப்படவில்லை. இந்த ஆய்வு எவ்வளவு நாட்களுக்குள் முடியும் ? அந்த ஆய்வு முடிவதற்கு முன்னால் அதற்கான பரிகாரத்தைத் தேடுவதற்கான வழிவகைகள் பற்றி அரசாங்கம் யோசிக்குமா ?

**மாண்புமிகு திரு. க. அன்பழகன் :** இப்படி பல்வேறுவிதமான தொழிற்சாலைகள் ஏற்பட்டு வருவதால் பலயிடங்களில் நீர் நிலைகளின் தரம் மாறுவதால் பொது மக்களுக்குக் கெடுதலாக முடிகிறது என்ற எண்ணம் அரசுக்கு ஏற்பட்டு அண்மையில் நீர்நிலைகள் கெடாமல் இருப்பதற்கு பொதுவாக எந்தவிதமான நடவடிக்கைகள் எடுப்பது என்பதைப் பற்றி நல்ல ஆலோசனைகளை அரசுக்கு வழங்குவதற்காக ஒரு பொறியாளர் தலைமையில் ஒரு குழு அமைக்கப்பட்டிருக்கிறது. அவர்கள் சுறுசுறுப்பாக இதுபற்றி ஆலோசித்து வழங்கும் கருத்துக்களை ஆராய்ந்து தக்க நடவடிக்கைகள் எடுக்க அரசு முயற்சிக்கும்.

**திரு. கே. ஏ. வகாப் :** இப்படி நீர்நிலைகள், காற்று இவற்றை ஆராய்வதற்கு மத்திய அரசிலிருந்து ஒரு குழு வந்ததாக அண்மையில் அறிவிக்கப்பட்டது பத்திரிகைகளில். அவர்கள் ஏதாவது அறிக்கை அனுப்பியிருக்கிறார்களா ? அதன்மூலம் நம் அரசாங்கம் ஏதாவது நடவடிக்கைகள் எடுக்க அல்லது ஆலோசனை கூற எண்ணம் இருக்கிறதா ?

**மாண்புமிகு திரு. க. அன்பழகன் :** மத்திய அரசிலிருந்து எந்தக் குழுவும் வந்ததாக எனக்கு விவரம் இல்லை. ஆனால் தமிழக அரசு இந்த ஆராய்ச்சி பற்றி இயன்ற அளவிற்கு முயற்சி எடுத்துக் கொண்டு வருகிறது.

**திரு. கே. என். குமாரசாமி :** இந்தத் தொழிற்சாலைகளின் கழிவுப் பொருள்களை எங்கே கொண்டுபோய் விடவேண்டுமென்று தொழிற்சாலை கட்டுவதற்கு முன்னாலே நிபுணர் குழுவினால் ஆராய்ச்சி செய்யப்பட்டதா? அப்படி நிபுணர் குழுவினால் ஆராய்ச்சி செய்யப்பட்டு—இந்த இடங்களில் அப்படிப்பட்ட தொழிற்சாலைகள் அமைப்பதன்மூலம் அப்பிரதேசம் முழுதும் கெட்டுக் கிடக்கிறதே—முன்யோசனையோடு நடவடிக்கை எடுக்கப்பட்டதா?

**மாண்புமிகு திரு. க. அன்பழகன் :** இந்தத் தொழிற்சாலைகளுக்கு அனுமதி வழங்கிய காலத்தில் இவைகளால் இவ்வளவு பாதகம் ஏற்படும் என்ற எண்ணம் அப்போதிருந்த அரசுக்கு இருந்ததாக அல்லது அவர்களுக்கு அப்படித் தெரிவிக்கப்பட்டதாக நான் அறியவில்லை. அந்தக் காலச் சூழ்நிலையில் தொழிற்சாலைகள் வந்தால்போதும் என்ற ஆர்வத்தில் அவற்றைத் தொடங்கியிருப்பார்கள். ஆனால் ஏற்படுகிற விளைவுகளை இனிதான் சமாளித்தாக வேண்டும்.

**திரு. எம். சுரேந்திரன் :** இப்படிப் பல கிணறுகள் கெட்டுவிட்டிருக்கின்றன என்று தெரிந்ததற்குப் பின்னால் கெட்டுவிட்ட நிலங்களுக்கு நஷ்டயீடாக அரசாங்கத்திலிருந்து ஏதாவது உதவி செய்யப்பட்டதா? அல்லது அந்தத் தொழிற்சாலை முதலாளிகளால் ஏதாவது உதவி செய்யப்பட்டதா? அதற்கு என்ன வழிவகை செய்யப்பட்டிருக்கிறது?

**மாண்புமிகு திரு. க. அன்பழகன் :** சரியான பரிகாரம் என்ன என்பதை காணவேண்டிய கட்டத்தில் நாம் இருக்கிறோம். உறுப்பினர் அவர்கள், அதில் அக்கறை உள்ளவர்கள், சரியான பரிகாரம் இன்னதுதான் என்று சொன்னால் அல்லது ஒருவேளை தொழிற்சாலையை மூடுவதுதான் சரியான பரிகாரம் என்று சொன்னால் அதையும் அரசாங்கம் பரிசீலித்துப் பதில் சொல்லும்.

### *Wages for employees in Coir industry*

* 49 *Q.*—Thiru S. SANGUMUTHU THEVAR : Will the Hon. the Minister for Labour be pleased to state :

(*a*) whether the Government have revised the wages for the employees of the Coir Industry; and

(*b*) if so, the details thereof?

**மாண்புமிகு திருமதி சத்தியவாணிமுத்து :** (அ) & (இ) விவர அறிக்கை @ ஒன்று பேரவைமுன் வைக்கப்பட்டுள்ளது.

---

@ 491–495-ம் பக்கங்களில் இணைப்பாக அச்சிடப்பட்டுள்ளது.



### *Boat building schemes*

* 50 *Q.*—Thiru N. DENNIS : Will the Hon. the Minister for Harijan Welfare be pleased to state :

(*a*) whether it is a fact that Financial assistance has been secured from the Agricultural Refinance Corporation for starting Boat Building Schemes in the Co-operative sector; and

(*b*) if so, the details thereof?

**மாண்புமிகு திருமதி சத்தியவாணிமுத்து :** (அ) ஆம்.

(இ) வேளாண்மை மறுநிதி உதவிக் கழகம் தரும் நிதியுதவியுடன் திருநெல்வேலி மாவட்டத்தில் மீன்பிடி தொழில் மேம்பாட்டிற்காக ரூ. 78.70 லட்சம் மதிப்பீட்டுச் செலவிலான திட்டமொன்றிற்கு அரசு, 1971-ஆம் ஆண்டு டிசம்பர் மாதம் ஒப்பளிப்பு வழங்கியுள்ளது. இத்திட்டம் தூத்துக்குடியிலுள்ள திருநெல்வேலி மாவட்ட மீனவர் கூட்டுறவுக் கூட்டமைப்பினால் செயல்படுத்தப்படவிருக்கிறது. தூத்துக்குடியில் படகு கட்டும் தளம் ஒன்றை அமைத்து, மூன்றாண்டுக் காலத்தில் 32 அடி நீளமுள்ள 75 மீன்பிடி விசைப்படகுகளை கட்டி வழங்குவதும் இத்திட்டத்தின் பலநோக்கங்களில் ஒரு நோக்கமாகும்.

**திரு. என். டென்னிஸ் :** லாபகரமாகச் செயல்படுவதற்கு கையாளப்பட்டிருக்கும் வழிமுறைகள் யாவை?

**மாண்புமிகு திருமதி சத்தியவாணிமுத்து :** இதில், லாபகரமாகச் செயல்படுவதற்கில்லை. திருநெல்வேலி மாவட்டத்திலிருக்கிற மீனவர்கள் அவர்கள் ஒரு சம்மேளனமாக ஒன்றாகச் சேர்ந்து கூட்டுறவு முறையில் அவர்களுக்கு நிதி உதவி கொடுத்து படகுகள் கட்டி அவர்கள் எடுத்துக்கொள்ளும் திட்டமாகும். இதில் லாப நஷ்டத்திற்கு வழியில்லை.

### வனவாசி பக்கநாடு பகுதியில் நில ஒப்படை

* 51 வினா—**திரு. எம். சுரேந்திரன் :** மாண்புமிகு வருவாய்த் துறை அமைச்சர் தயவுசெய்து கீழ்க்கண்ட வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) சேலம் ஜில்லா, வனவாசி பக்கநாடு பகுதியில் நிலமில்லாதவர்களுக்கு நிலம் வழங்கியதில் அநீதி நடந்திருப்பதாக சம்பந்தப்பட்டவர்களால் உயர்நீதி மன்றத்தில் ஒரு வழக்கு தாக்கல் செய்யப்பட்டிருப்பது உண்மையா?

(இ) மேற்படி பகுதியில் ஏற்கனவே விவசாயம் செய்யாத எவ்வளவு பேருக்கு நிலம் வழங்கப்பட்டது ?

(உ) நிலமில்லாதவர்கள் என்ற பொய்யான தகவலின் பெயரில் பல பேர் நிலம் பெற்றிருப்பதாகக் கூறுவது உண்மையா ?

**மாண்புமிகு திரு. ப. உ. சண்முகம் :** (அ) ஆம்.

(இ) இப்பகுதிகளில் ஏற்கனவே விவசாயம் செய்யாத 582 வெறு நிலமற்ற நில ஒப்படை பெற முழுத் தகுதியுள்ள நபர்களுக்கு பட்டா வழங்கப்பட்டுள்ளது. ஏற்கனவே இப்பகுதியில் ஆக்ரமிப்பு செய்துவந்த ஒப்படை பெற தகுதியுள்ள நிலமற்ற 664 நபர்களுக்குப் பட்டா வழங்கப்பட்டுள்ளது.

(உ) நிலமற்றவர்கள் என்ற பொய்யான தகவலின்பேரில் பலர் நிலம் பெற்றிருக்கிறார்கள் என்பது உண்மையல்ல. இது சம்பந்தமாக பி.என். பட்டி பொதுமக்கள் சார்பில் அரசுக்கு புகார் மனு ஒன்று அனுப்பப்பட்டது. அம்மனுவை ஆராய்ந்து பார்த்ததில், பி.என். பட்டி மக்கள் கூறியுள்ள புகாரில் உண்மை ஏதும் இல்லையென்று தெரியவருகிறது.

**திரு. எம். சுரேந்திரன் :** அந்த நிலத்தில் பட்டா வழங்கப்பட்டவர்கள் அந்த நிலத்தில் பிரவேசிப்பதற்கு முன்னதாகவே அந்த நிலங்களில் பலபேர்கள் விவசாயம் செய்துகொண்டிருந்தார்கள் என்றும் அவர்கள் நீதிமன்றத்தில் இம்மாதிரியாக பட்டா கொடுத்தது தவறு, அவர்கள் நிலத்தில் பிரவேசிக்கக்கூடாது என்பதற்காக தடை ஆணை பெற்றிருப்பதாக தகவல் இருக்கிறது. தடை ஆணை இருக்கும்போது அத்தடை ஆணையை பொருட்படுத்தாமல் போலீஸாரை வைத்து அவர்களை வெளியேற்றி பட்டா யாருக்குக் கொடுக்கப்பட்டதோ அவர்கள் நிலத்தில் பிரவேசிக்க அனுமதிக்கப்பட்டார்கள் என்பது அரசாங்கத்திற்குத் தெரியுமா ? அதற்கான காரணம் என்ன ?

**மாண்புமிகு திரு. ப. உ. சண்முகம் :** ரிட் மனு போட்டு கோர்ட்டில் இருக்கிறது என்பது அரசுக்குத் தெரியும். அந்தப் பகுதியில் ஏற்கனவே உழுதுகொண்டிருந்தவர்கள் அதிகமான நிலத்தை உழுதுகொண்டு வந்திருக்கிறார்கள். அளவிற்கு மீறி அதிகமாக 10, 8, 7, 6 என்று உழுதுகொண்டிருந்தால் அவர்களுக்கெல்லாம் நிலம் கொடுக்கமுடியாது. நிலம்ஒப்படை



செய்ய கலெக்டர் தலைமையில் ஒரு குழு அமைக்கப்பட்டது. ஒப்படை செய்ய எல்லா நடவடிக்கைகளும் எடுக்கப்பட்டு மாண்புமிகு முதல் அமைச்சர் அவர்கள் மேட்டூருக்கு வந்தபோது, அவர்கள் அறிவித்தார்கள் இந்த நிலம் எல்லாம் ஒப்படை செய்யப்படும் என்று. தகுதியானவர்களுக்கு நிலம் ஒப்படை செய்யப்படும் என்று, எந்தளவிற்கு ஒருவருக்கு தகுதி இருக்கிறதோ அந்தளவிற்கு நிலம் ஒப்படை செய்யப்படும் என்று சொன்னார்கள். யார் யாருக்குத் தகுதி இருக்கிறதோ எந்தளவிற்கு தகுதி இருக்கிறதோ அந்தளவிற்கு ஒப்படை செய்யப்பட்டிருக்கிறது. தவறான வழியில் எதுவும் செய்யப்படவில்லை.

**திரு. ஆ. ஆறுமுகம் :** வனவாசி பக்கநாடு பகுதியில் நிலமில்லாத விவசாயிகளுக்கு நம் அரசு நபருக்கு மூன்று ஏக்கர் என்றளவிற்கு வழங்கியுள்ளது. அதற்கு முன்பு சோஷலிஸ்ட் கட்சியைச் சேர்ந்தவர்கள் நாங்கள் பட்டா வாங்கிக்கொடுக்கிறோம் என்று சொல்லி ஒன்றுமறியாத விவசாய மக்களிடமிருந்து ரூ. 300, ரூ. 500 என்று அநீதியான முறையில் பணம் வசூலித்தது அரசாங்கத்திற்குத் தெரியுமா ?

**மாண்புமிகு திரு. ப. உ. சண்முகம் :** நன்செய்யாக இருந்தால் 1½ ஏக்கர், புன்செய்யாக இருந்தால் 3 ஏக்கர் அடமானம் செய்யப்படும் என்பது அரசு வைத்திருக்கிற கொள்கையாகும். ஆனால் அப்பகுதியில் தவறான வகையில் சிலபேர்கள் தப்பாக நடந்து கொண்டார்கள் என்ற செய்தி நான் சேலம், மேட்டூருக்குச் சென்ற போது அத்தகவல் தரப்பட்டது. ஆனால் அரசாங்கத்தினிடம் இப்போது அதுபற்றிய புகார் எதுவும் இல்லை.

**திரு. ஆ. கு. சுப்பையா :** நிலம் இல்லாதவர்கள் என்ற முறையில் அரசு அலுவலர்களாக இருப்பவர்களுக்கும், வேறு . . .

**மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர் :** மூலக்கேள்வி சேலம் ஜில்லா வனவாசி பக்கநாடு பகுதியில் நில ஒப்படை பற்றியது. அமைச்சர் அவர்களின் பதிலிலிருந்து எல்லாம் விவரமாகத் தெரிய வேண்டுமென்று ஆசையிருக்கலாம். ஆனால் உப கேள்வி மூலக் கேள்விக்கு தொடர்புடையதாக இருக்கவேண்டும். மூலக் கேள்வியிலிருந்து போய் வேறு கேள்வி போடுகிறீர்கள். அவற்றிற்கு அமைச்சர்கள் கூட பதில் சொல்வதை நான் விரும்பவில்லை.

(இ) மேற்படி பகுதியில் ஏற்கனவே விவசாயம் செய்யாத எவ்வளவு பேருக்கு நிலம் வழங்கப்பட்டது ?

(உ) நிலமில்லாதவர்கள் என்ற பொய்யான தகவலின் பெயரில் பல பேர் நிலம் பெற்றிருப்பதாகக் கூறுவது உண்மையா ?

**மாண்புமிகு திரு. ப. உ. சண்முகம் :** (அ) ஆம்.

(இ) இப்பகுதிகளில் ஏற்கனவே விவசாயம் செய்யாத 582 வேறு நிலமற்ற நில ஒப்படை பெற முழுத் தகுதியுள்ள நபர்களுக்கு பட்டா வழங்கப்பட்டுள்ளது. ஏற்கனவே இப்பகுதியில் ஆக்ரமிப்பு செய்துவந்த ஒப்படை பெற தகுதியுள்ள நிலமற்ற 664 நபர்களுக்குப் பட்டா வழங்கப்பட்டுள்ளது.

(உ) நிலமற்றவர்கள் என்ற பொய்யான தகவலின்பேரில் பலர் நிலம் பெற்றிருக்கிறார்கள் என்பது உண்மையல்ல. இது சம்பந்தமாக பி.என். பட்டி பொதுமக்கள் சார்பில் அரசுக்கு புகார் மனு ஒன்று அனுப்பப்பட்டது. அம்மனுவை ஆராய்ந்து பார்த்ததில், பி.என். பட்டி மக்கள் கூறியுள்ள புகாரில் உண்மை ஏதும் இல்லையென்று தெரியவருகிறது.

**திரு. எம். சுரேந்திரன் :** அந்த நிலத்தில் பட்டா வழங்கப் பட்டவர்கள் அந்த நிலத்தில் பிரவேசிப்பதற்கு முன்னதாகவே அந்த நிலங்களில் பலபேர்கள் விவசாயம் செய்துகொண்டிருந்தார்கள் என்றும் அவர்கள் நீதிமன்றத்தில் இம்மாதிரியாக பட்டா கொடுத்தது தவறு, அவர்கள் நிலத்தில் பிரவேசிக்கக்கூடாது என்பதற்காக தடை ஆணை பெற்றிருப்பதாக தகவல் இருக்கிறது. தடை ஆணை இருக்கும்போது அத்தடை ஆணையை பொருட்படுத்தாமல் போலீஸாரை வைத்து அவர்களை வெளியேற்றி பட்டா யாருக்குக் கொடுக்கப்பட்டதோ அவர்கள் நிலத்தில் பிரவேசிக்க அனுமதிக்கப்பட்டார்கள் என்பது அரசாங்கத்திற்குத் தெரியுமா ? அதற்கான காரணம் என்ன ?

**மாண்புமிகு திரு. ப. உ. சண்முகம் :** ரிட் மனு போட்டு கோர்ட்டில் இருக்கிறது என்பது அரசுக்குத் தெரியும். அந்தப் பகுதியில் ஏற்கனவே உழுதுகொண்டிருந்தவர்கள் அதிகமான நிலத்தை உழுதுகொண்டு வந்திருக்கிறார்கள். அளவிற்கு மீறி அதிகமாக 10, 8, 7, 6 என்று உழுதுகொண்டிருந்தால் அவர்களுக்கெல்லாம் நிலம் கொடுக்கமுடியாது. நிலம்ஒப்படை





செய்ய கலெக்டர் தலைமையில் ஒரு குழு அமைக்கப்பட்டது. ஒப்படை செய்ய எல்லா நடவடிக்கைகளும் எடுக்கப்பட்டு மாண்புமிகு முதல் அமைச்சர் அவர்கள் மேட்டூருக்கு வந்தபோது, அவர்கள் அறிவித்தார்கள் இந்த நிலம் எல்லாம் ஒப்படை செய்யப் படும் என்று. தகுதியானவர்களுக்கு நிலம் ஒப்படை செய்யப்படும் என்று, எந்தளவிற்கு ஒருவருக்கு தகுதி இருக்கிறதோ அந்தளவிற்கு நிலம் ஒப்படை செய்யப்படும் என்று சொன்னார்கள். யார் யாருக்குத் தகுதி இருக்கிறதோ எந்தளவிற்கு தகுதி இருக்கிறதோ அந்தளவிற்கு ஒப்படை செய்யப்பட்டிருக்கிறது. தவறான வழியில் எதுவும் செய்யப்படவில்லை.

**திரு. ஆ. ஆறுமுகம் :** வனவாசி பக்கநாடு பகுதியில் நிலமில்லாத விவசாயிகளுக்கு நம் அரசு நபருக்கு மூன்று ஏக்கர் என்றளவிற்கு வழங்கியுள்ளது. அதற்கு முன்பு சோஷலிஸ்ட் கட்சியைச் சேர்ந்தவர்கள் நாங்கள் பட்டா வாங்கிக்கொடுக்கிறோம் என்று சொல்லி ஒன்றுமறியாத விவசாய மக்களிடமிருந்து ரூ. 300, ரூ. 500 என்று அநீதியான முறையில் பணம் வசூலித்தது அரசாங்கத்திற்குத் தெரியுமா ?

**மாண்புமிகு திரு. ப. உ. சண்முகம் :** நன்செய்யாக இருந்தால் 1½ ஏக்கர், புன்செய்யாக இருந்தால் 3 ஏக்கர் அடமானம் செய்யப் படும் என்பது அரசு வைத்திருக்கிற கொள்கையாகும். ஆனால் அப்பகுதியில் தவறான வகையில் சிலபேர்கள் நப்பாக நடந்து கொண்டார்கள் என்ற செய்தி நான் சேலம், மேட்டூருக்குச் சென்ற போது அத்தகவல் தரப்பட்டது. ஆனால் அரசாங்கத்தினிடம் இப்போது அதுபற்றிய புகார் எதுவும் இல்லை.

**திரு. ஆ. கு. சுப்பையா :** நிலம் இல்லாதவர்கள் என்ற முறையில் அரசு அலுவலர்களாக இருப்பவர்களுக்கும், வேறு . . .

**மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர் :** மூலக்கேள்வி சேலம் ஜில்லா வனவாசி பக்கநாடு பகுதியில் நில ஒப்படை பற்றியது. அமைச்சர் அவர்களின் பதிலிலிருந்து எல்லாம் விவரமாகத் தெரிய வேண்டுமென்று ஆசையிருக்கலாம். ஆனால் உப கேள்வி மூலக் கேள்விக்கு தொடர்புடையதாக இருக்கவேண்டும். மூலக் கேள்வி யிலிருந்து போய் வேறு கேள்வி போடுகிறீர்கள். அவற்றிற்கு அமைச்சர்கள் கூட பதில் சொல்வதை நான் விரும்பவில்லை.

துணைக் கேள்விகள் ஓரளவிற்கு, கூடியவரையில் மூலக் கேள்விக்கு சம்பந்தமுள்ளதாக இருக்கவேண்டும். ஆறுமுகம் அந்தப் பகுதியைச் சேர்ந்தவர், ஆகவே அவர்கள் அதுபற்றி கேள்வி கேட்டார்கள்.

**திரு. எம். சுரேந்திரன் :** அமைச்சர் அவர்கள் கூறுகிறபோது முதல் அமைச்சர் அவர்கள் பட்டா வழங்க ஒப்புதல் அளித்தார்கள் என்று சொன்னார்கள். அந்தப் பட்டா வழங்கிய நிலம் வேறு, நான் குறிப்பிட்டது வேறு. அது தனி பக்கத்தில் ஆயிரம் ஏக்கரா நிலம் இல்லாதவர்களுக்கு வழங்குவது என்று முடிவு எடுத்து நிலம் இல்லாதவர்களுக்கு என வழங்கப்பட்டது. அப்படி நிலம் வழங்கப்பட்டவர்களில் பல பேர் நிலம் உள்ளவர்கள் என்பதன் அடிப்படையில் கோர்ட்டுக்குச் செல்லப்பட்டது. ஏற்கனவே விவசாயம் செய்துகொண்டிருந்தவர்கள் நிலத்திலிருந்து வெளி யேற்றப்படக்கூடாது என்பது தடை ஆணை. பட்டா பெற்றவர்கள் நிலத்தை வாங்கும்போது ஆக்குபை செய்துகொண்டிருக்கிறோம் என்று எழுதிக்கொடுத்திருக்கிறார்கள். நான் சொல்வது தடை
மு.ப. ஆணையைப் பொருட்படுத்தாமல் சில பேர்களை போலீஸை வைத்து
9-30 நிலத்தில் இருந்து வெளியேற்றியது அரசாங்கத்திற்குத் தெரியுமா?

**மாண்புமிகு திரு. ப. உ. சண்முகம் :** பயங்கரமான ஒரு குற்றச்சாட்டைச் சொல்கிறார்கள். நீதிமன்றத்தில் விதிக்கப்பட்ட தடையை மீறி அரசாங்கம் போலீசை வைத்து அப்புறப் படுத்தினார்கள் என்பது உண்மைக்குப் புறம்பான ஒன்று. சரியான தகவல் அல்ல. நான் பதில் சொல்லும்போது சொன்னேன், யார் யாருக்கு நிலம் பெறத் தகுதி இருக்கிறதோ அவருக்கு நிலம் கொடுத்து இருக்கிறோம். புகார் மனு வந்தது. விசாரித்தோம். புகார் மனுவில் இருப்பது உண்மையல்ல, உண்மைக்குப் புறம்பானது என்று நாசுக்குத் தெரியவந்தது. ஆகவே, புகார் மனு தள்ளப்பட்டது.

**திரு. ஆ. கு. சுப்பையா :** தலைவரவர்களே, மூலக்கேள்வியை ஒட்டித்தான் என்னுடைய கேள்வி இருந்தது. நிலம் இல்லாதவர் களுக்கு நிலம் வழங்கப்படும் என்று விதி முறை இருக்கிறது. அதை சாக்காக வைத்துக் கொண்டு உழவுத் தொழில் தெரியாத வர்கள் கூட மனு செய்து நிலம் பெற்று விடுகிறார்கள். அது ஒரு பெரிய குறைபாடாக இருக்கிறது. ஆகவே, அந்த விதி முறை





மாற்றி உழுபவர்களுக்கே—அதாவது நேரடியாக நிலத்தில் உழுபவர்களுக்கே—நிலம் வழங்குவதற்கு அரசாங்கம் முன் வருமா ?

**மாண்புமிகு திரு. ப. உ. சண்முகம் :** நிலம் அற்ற விவசாயி களுக்கு நிலம் கொடுப்பது என்று கொள்கை வகுத்திருக்கிறோம். அப்படி யார் யாருக்குப் பட்டா கொடுப்பது என்று விதி முறை வைத்திருக்கிறோம். கனம் அங்கத்தினர் கூறுவது போல் எங்காவது, ஏதாவது கிராமத்தில் நடந்து இருந்தால்—அது அரசாங்கத்தின் கவனத்திற்குக் கொண்டு வரப்பட்டால், அப்படி தவறாகக் கொடுக்கப்பட்டிருக்கிறது என்று தெரிந்தால்—அது ரத்து செய்யப்படும்.

**திரு. நா. வீராசாமி :** தலைவரவர்களே, இந்த அரசாங்கம் லட்சக்கணக்கான ஏழை ஹரிஜனங்களுக்கு நிலப்பட்டா கொடுத்து வருகிறது. அதை சகித்துக்கொள்ள முடியாதவர்கள், ஏதாவது குறைபாடு சொல்லிக் கொண்டே இருக்கிறார்கள். குறிப்பாக, எதிர்க்கட்சிக்காரர்கள் சொல்லி வருகிறார்கள். அதைப் போக்க யார் யாருக்கு பட்டா கொடுத்தோம் என்ற பட்டியலை எல்லா அரசியல் கட்சித் தலைவர்களுக்குக் கொடுக்கப்படுமா ?

**மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர் :** நீங்கள் எதிர்க் கட்சி மீது புகார் சொல்வது போல் சொல்கிறீர்கள். பிறகு அவர்கள் அதற்கு பதில் சொல்வது போல் அரசாங்கம் சொல்வது உண்மை யல்ல என்று சொல்வார்கள். இப்படி மூலக்கேள்விக்கு சம்பந்த மில்லாமல் கேள்விகள் கேட்டுக்கொண்டே இருந்தால், This will lead to discussion. This is question hour. திரு. சுப்பையா அவர்கள் சொன்ன கருத்து, திரு. சுரேந்திரன், அவர்கள் இரண்டா வதாக கேட்ட கருத்து ஆகியவற்றை கவர்னர் உரைமீது பேசுகிற போது சொல்லலாம். கேள்வி நேரத்தில் தகவல் கோரும் முறையில்தான் வினாக்கள் இருக்கவேண்டும். விவாதத்திற்குரிய பிரச்னைகளைப் பற்றி கவர்னர் உரை மீது பேசுகிறபோது பேசுங்கள்.

**திரு. நா. வீராசாமி :** எதிர்க்கட்சிகளுக்கு உரிமையிருக்கிற போது ஆளும் கட்சிக்காரர்களுக்கு கேட்பதற்கு உரிமையில்லையா ? ஆச்சர்யமாக இருக்கிறது.

**மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர் :** கேளுங்கள்.

**திரு. நா. வீராசாமி :** தலைவரவர்களே, நான் அமைச்சரிடத்தில் கேள்வி கேட்டது, இப்படி லட்சக்கணக்கான ஏழைகளுக்குப் பட்டா கொடுத்து இருக்கிறோமே, அப்படி பட்டா கொடுத்திருக்கிற போது, எதிர்க்கட்சிக்காரர்கள் தவறான பிரச்சாரத்தைச் செய்து வருகிறார்களே, அதைப் போக்குகின்ற வகையில் பட்டா கொடுத்தவர்களின் பட்டியலை—ஒவ்வொரு மாவட்டத்திலும் மாவட்ட ஆட்சித் தலைவர்கள் பட்டியல் கொடுக்கிறார்கள்—எல்லா உறுப்பினர்களுக்கும், இப்படி குறை சொல்கிற கட்சித் தலைவர் களுக்கும், மற்ற தலைவர்களுக்கும் அனுப்பி வைக்கப்படுமா என்பதாகும்.

**மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர் :** சரி பதில் சொல்லுங்கள்.

**மாண்புமிகு திரு. ப. உ. சண்முகம் :** எல்லா மாவட்டங்களிலு முள்ள மாவட்ட ஆட்சித் தலைவர்கள் இப்படி ஒரு பட்டியலைக் கொடுக்கிறார்கள் என்று கருதுகிறேன். நிலம் ஏற்கனவே வைத்து இருப்பவர்களுக்கு பட்டா கொடுக்க முடியாது. யாருக்கு நிலம் கொடுத்து இருக்கிறோம் என்றால், யாருக்கு நிலம் பெறத் தகுதி யிருக்கிறதோ அவர்களுக்குத்தான் கொடுத்து இருக்கிறோம். நிலம் பெறத் தகுதியற்றவர்களுக்கு கொடுப்பதற்கு இல்லை என்பது அரசு தரப்பிலிருந்து சொல்லும் பதிலாகும். ஏற்கனவே பயிர் செய்து வந்தவர்களுக்கு பட்டா கொடுக்கவில்லை என்று சொன்னார்கள். ஏற்கனவே பயிர் செய்து வந்தவர்கள் என்பதற்காக பட்டா அவர்களுக்கு கொடுக்க முடியாது—பெறத்தகுதியற்றவர் களாக இருந்தால் கொடுக்கமுடியாது. பெறத் தகுதியுள்ள வேறு பலருக்கு கொடுக்கப்பட்டிருக்கிறது.

**திரு. த. சோலையா :** தலைவரவர்களே, அரசு அலுவல்களில் இருப்பவர்கள் மனைவியின் பேரிலும், மகன் பேரிலும் நிலப்பட்டா அசைன்மெண்ட் வாங்கியிருக்கிறார்கள். நிலத்தை சொந்தமாக்கிக் கொண்டிருக்கிறார்கள். அப்படிப்பட்ட பட்டாக்களை ரத்து செய் வதற்கு அரசாங்கம் முற்படுமா?

**மாண்புமிகு திரு. ப. உ. சண்முகம் :** நான் முதலிலேயே சொன்னேன். அப்படி எங்காவது நடந்து இருந்தால், தகவல் தந்தால், அரசு நிச்சயம் நடவடிக்கை எடுத்து ரத்து செய்யும்.



**திரு. கே. என். குமாரசாமி :** பட்டா கொடுக்கிற விஷயத்தில், ஆரம்பத்தில் விவசாயம் செய்தார்களா இல்லையா என்பதை அரசு மறுபரிசீலனை செய்ய அதிகாரிகளை நியமித்து, அப்படிப்பட்டவர் களுக்கு பட்டா கொடுக்கப்படுமா?

**மாண்புமிகு திரு. ப. உ. சண்முகம் :** ஆரம்பத்தில் விவசாயம் செய்தார்கள் என்ற காரணத்திற்காக, அவர்களுக்கு எந்த அளவுக்கு நிலம் பெறத் தகுதியிருக்கிறதோ, அதற்கு மேல் கொடுக்க அரசாங்கத்தால் இயலாது. கொடுக்கவும் முடியாது.

THIRU K. S. KOTHANDARAMIAH : Sir, there is a general complaint that agriculturists who are cultivating lands since many years have not been given pattas. No doubt the Government have been giving pattas but the revenue officials are not giving details and consequently only a small number of people get pattas and others do not get it. So will the Hon. Minister be pleased to take steps to see that all the people who are cultivating lands get pattas?

**மாண்புமிகு திரு. ப. உ. சண்முகம் :** எங்கே தவறு நடந்து இருந்தாலும் சரி, சட்டமன்ற உறுப்பினர்களின் தொகுதியில் நடந்து இருந்தாலும் சரி, அவர்கள் தெரிவித்தால், அப்படிப்பட்ட பட்டாக்களை ரத்து செய்வதற்கு அரசாங்கம் நிச்சயமாக நடவடிக்கை எடுக்கும்.

**திரு. தி. பொன்னுமலை :** தலைவரவர்களே, மேட்டூர் பகுதியில் வனவாசி, பக்கநாடு போன்ற இடங்களில் ஏதோ தவறு நடந்து விட்டதாக மாண்புமிகு உறுப்பினர் சுரேந்திரன் அவர்கள் சொன்னார்கள். அந்தப் பகுதியில் பட்டா கொடுப்பதற்காக அரசாங்கம் நியமித்துள்ள கமிட்டியில் மாண்புமிகு உறுப்பினர் அங்கம் வகிக்கிறாரா என்பதை அறிய விரும்புகிறேன்.

**மாண்புமிகு திரு. ப. உ. சண்முகம் :** திரு. எம். சுரேந்திரன் அவர்கள் இருக்கிறார்களா இல்லையா என்பதை அவர்களே சொல்வார்கள்.

**திரு. எம். சுரேந்திரன் :** நான் சொன்ன விஷயத்திற்கும், இந்தக் கேள்வியில் இருக்கின்ற விஷயத்திற்கும், அவர்கள் கற்பனை செய்து கொண்டிருக்கும் விஷயத்திற்கும் மிகவும் மாறாக இருக்கிறது. ஏற்கனவே முதலமைச்சர் அவர்கள் முடிவு செய்து,

[1973 பிப்ரவரி 7

அதற்காக மாவட்ட ஆட்சித் தலைவர் ஒரு குழு அமைத்து, அங்கே பட்டா வழங்கப்பட்டது. அதற்கும் இதற்கும் சம்பந்தமில்லை. அங்கே பட்டா வழங்கப்பட்டு, பின்னால் மிச்ச நிலம் இருந்தது. மிச்ச நிலத்தை நிலம் இல்லாதவர்களுக்கு வழங்குவது என்று முடிவு செய்யப்பட்டது. அப்படி வழங்கப்பட்ட நிலத்தில், வாங்கியவர் அந்த நிலத்தில் இல்லை, வேறு ஆட்கள் விவசாயம் செய்கிறார்கள் என்ற காரணத்தினால், அந்த நிலத்தையும் நிலம் இல்லாதவர்களுக்கு எடுத்துக்கொடுத்து விட்டார்கள். அவர்களுக்கும் நிலம் இல்லாதவர்கள் என்ற அடிப்படையில் தகுதியிருக்கிறது. அந்த முறையில் சொன்னேனே தவிர மாண்புமிகு ஆறுமுகம் அவர்கள் சொன்னதைப் போலவோ, அல்லது அருமை நண்பர் பொன்னுமலை சொன்னதைப் போலவே இல்லை. அமைச்சர் அவர்கள் கருதி இருக்கும் விஷயமும் அல்ல என்று நான் சொல்லிக் கொள்கிறேன்.

**மாண்புமிகு திரு. ப. உ. சண்முகம் :** கேள்வி நேரத்தில் ஒரு சின்ன பிரசங்கத்தையே செய்து விட்டார்கள். அவர் சொன்னதை ஒப்புக் கொள்கிறேன். காட்டு நிலங்களை ஒதுக்கி, ஆங்காங்கு பட்டா கொடுக்கப்பட்டிருக்கிறது. அவர்கள் சொன்னது போல் மாவட்ட ஆட்சித் தலைவர் அமைத்துள்ள கமிட்டியில் திரு. சுரேந்திரன் அவர்கள் உறுப்பினராக இருக்கிறார்கள் என்பது உண்மை. உழுது கொண்டிருப்பவர்களுக்கு பட்டா கொடுக்கவில்லை என்று சொல்கிறார்கள். அப்படி உழுதுகொண்டிருப்பவர்களில் யார் யாருக்கு பட்டா பெறத் தகுதியிருக்கிறதோ—அவர்கள் 250–300 சம்பளம் வாங்கிக் கொண்டிருப்பார்கள், அல்லது வேறு ஒருவரிடத்தில் வேலை செய்து கொண்டு இருப்பார்கள், அவர்களெல்லாம் தகுதியற்றவர்கள். அதை விளக்கவேண்டுமென்று விரும்புகிறார்கள், அதைச் சொல்லி விடுகிறேன்—அவர்களுக்குக் கொடுக்கப்பட்டிருக்கிறது. தகுதியற்றவர்களுக்கு கொடுக்கவேண்டுமென்று சொல்வது முறையல்ல. கொடுக்கவும் முடியாது.

**திரு. ஜே. ஜேம்ஸ் :** தலைவரவர்களே, கன்னியாகுமரி ஜில்லாவில் இதுவரையில் பட்டா வழங்கப்படவில்லை. அதற்குக் காரணம் அங்கே நோடிபிகேஷன் அரசாங்கம் செய்யவில்லை என்று சொல்கிறார்கள். அந்த நோடிபிகேஷனை அரசாங்கம் காலதாமதம் இல்லாமல் வெளியிட்டு, விரைவில் பட்டா வழங்க நடவடிக்கை மேற்கொள்ளுமா ?



1973 பிப்ரவரி 7]

**மாண்புமிகு திரு. ப. உ. சண்முகம் :** கூடிய சீக்கிரத்தில் கன்னியாகுமரி மாவட்டத்தில் முதலமைச்சர் அவர்களின் திருக்கரத்தால் பட்டா வழங்கப்படும். கனம் அங்கத்தினர் அவர்களும் அந்த விழாவிற்கு வருவார்கள் என்று நம்புகிறேன்.

(திரு. கே. எ. வகாப் எழுந்தார்)

**மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர் :** நீங்கள் என்ன வடாற்காடு மாவட்டத்தைப் பற்றி கேட்கப்போகிறீர்களா ?

**திரு. கே. எ. வகாப் :** அரசாங்க அதிகாரிகள் ஓய்வு பெற்றபின் விவசாயம் செய்ய விரும்பினால் அவர்கள் விஷயத்தில் அனுதாபம் காட்டி, அரசு அவர்களுக்கு பட்டா வழங்க முன்வருமா ?

**மாண்புமிகு திரு. ப. உ. சண்முகம் :** நிலம் யார் யாருக்கு ஒப்படை செய்யலாம் என்பதற்கு விதி வகுத்து இருக்கிறோம். அந்த விதியின்படி ஒப்படை செய்யப்படும்.

**திரு. கு. காமாட்சி :** கெசட் பதிவில்லாத அரசாங்க ஊழியர்கள் தங்களுடைய ஓய்வு நேரத்தில், அவர்களுக்குக் கிடைக்கக் கூடிய ரூ. 4,000–5,000-க்கொண்டு—விவசாயத்தில் ஈடுபடுகிறபோது அவர்களுக்கு ஒரு ஏக்கர், இரண்டு ஏக்கர் என்ற அளவில் நிலம் கொடுப்பதற்கு அரசாங்கம் முன்வருமா ?

**மாண்புமிகு திரு. ப. உ. சண்முகம் :** அரசாங்க ஊழியர்கள் அப்படி பட்டா செய்து கொள்ளக்கூடாது என்று சுற்றறிக்கை விட்டிருக்கிறோம்.

**திரு. கே. கந்தசாமி :** தலைவரவர்களே, நிலப்பட்டா இல்லாதவர்களுக்கு நிலம் வழங்கப்படுவதாக அமைச்சர் அவர்கள் சொன்னார்கள். மதுரை மாவட்டத்தில் ஆண்டிப்பட்டி பகுதியில் வருஷநாடு என்ற இடத்தில் நூற்றுக்கணக்கான ஏக்கர் நிலங்கள் தனிப்பட்ட மிராசுதார் ஒருவருக்கு முன்பிருந்த அரசால் வழங்கப்பட்டிருக்கிறது என்று அறிகிறேன். அது சம்பந்தமாக நம்முடைய அரசு எடுத்து இருக்கும் நடவடிக்கை என்ன ? அந்த நிலத்தை நிலம் இல்லாதவர்களுக்கு பட்டா செய்து கொடுக்க அரசு நடவடிக்கை மேற்கொள்ளுமா ?

**மாண்புமிகு திரு. ப. உ. சண்முகம் :** அது குறித்து நடவடிக்கைகள் எல்லாம் மேற்கொள்ளப்பட்டு, அந்த நிலத்தை நிலம் இல்லாதவர்களுக்கு பட்டா செய்து கொடுத்துக்கொண்டிருக்கிறார்கள் என்று நினைக்கிறேன். அந்தப் பகுதியில் பட்டா வழங்குவது சீக்கிரத்தில் பூர்த்தியாகிவிடும்.

**திரு. எஸ். நல்லசாமி :** தலைவர் அவர்களே, சர்க்கார் ஊழியர்கள். குறிப்பாக ரெவின்யூ டிபார்ட்மெண்டில் இருக்கக்கூடிய ஊழியர்களுக்கு நில அடமானம் செய்திருப்பதாக பரவலாகத் தெரிகிறது. அப்படிச் செய்து கொண்டிருப்பவர்கள் 10, 15 வருஷங்களாக நிலத்தைச் சுற்றியே அங்கேயே வந்துகொண்டிருக்கிறார்கள் என்பதை சர்க்கார் அறியுமா?

**மாண்புமிகு திரு. ப. உ. சண்முகம் :** யார் நிலத்தை உழுகிறார்களோ அவர்களுக்குத் தான் அரசாங்கம் நில அடமானம் செய்து கொண்டுவருகிறது. மீண்டும் கேட்டுக்கொள்கிறேன், அப்படி ஏதாவது தவறு நடந்திருந்தால் அரசாங்கத்தின் கவனத்திற்குக் கொண்டு வரவேண்டும். தவறாக பட்டா கொடுக்கப்பட்டிருந்தால், அதை ரத்து செய்வதற்கு சர்க்காருக்கு அதிகாரம் இருக்கிறது.

**திரு. ப. முத்துசாமி :** பட்டா வழங்குகின்ற நல்ல காரியத்தில் பல இடங்களில் சில குறைகள் இருக்கிற காரணத்தினால் அப்படிப்பட்ட குறைகளை நிவர்த்தி செய்கின்ற வகையில் தாலுகா அளவில் பொது மக்கள் பிரதிநிதிகள் கொண்ட ஒரு கமிட்டி அமைத்து ஏற்பாடு செய்ய சர்க்கார் முன்வருமா?

**மாண்புமிகு திரு. ப. உ. சண்முகம் :** தேவையில்லை. யாருக்கு எந்த முறையில் பட்டா கொடுப்பது என்பதற்கு விதிமுறைகளை அரசு வகுத்திருக்கிறது. அந்த விதிமுறைகள் படி தான் பட்டாக்கள் வழங்கப்படுகின்றன. அதில் தவறுகள் நடக்கவில்லை என்று அரசாங்கம் கருதுகிறது.

**திரு. என். கிட்டப்பா :** கோவில்கள், மடங்கள் இவற்றிற்குச் சொந்தமான உபரி நிலங்களைப் பொறுத்தவரையில் அவற்றை உழுது பயிரிடும் விவசாயிகளுக்கு பட்டா செய்து தர அரசு ஏதாவது நடவடிக்கை எடுக்க முன்வருமா?



**மாண்புமிகு திரு. ப. உ. சண்முகம் :** இதைப்பற்றி நேற்றைய தினம் கம்யூனிஸ்டு கட்சித் தலைவர் மாண்புமிகு மணலி கந்தசாமி அவர்கள் பேசியபொழுது, மாண்புமிகு முதல்வர் அவர்கள் பதில் சொல்லியிருக்கிறார்கள.

**மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர் :** இன்று வேண்டுமென்றே இவ்வளவு துணைக் கேள்விகள் அனுமதித்தேன். இப்பொழுது கேட்கப்பட்ட துணைக் கேள்விகளில் இரண்டு கேள்விகளைத் தவிர மற்ற கேள்விகளுக்கும் மூலக்கேள்விக்கும் சம்பந்தம் எதுவும் இல்லை. இந்த முறையை கனம் உறுப்பினர்கள் தவிர்க்க வேண்டும் என்பதற்காகத் தான் இவ்வளவு நேரம் பொறுமையோடு இவ்வளவு துணைக் கேள்விகளையும் அனுமதித்தேன். இதைப் பேரவையும் கவனித்துக் கொண்டிருக்கிறது. மூலகேள்விக்கு சம்பந்தமில்லாதது மட்டுமல்ல. முதலில் ஒரு உறுப்பினர் கேட்ட கேள்வியையே அடுத்த உறுப்பினர் திரும்பவும் கேட்கிறார். அதனால் முதலில் கேட்கப்பட்ட கேள்விகள் பதில்களை உறுப்பினர்கள் கவனிக்கவில்லை என்பதைக் காட்டிக்கொள்கிறார்கள். இது மிகவும் தவறான முறை, விரும்பத்தகாத முறை யாருக்கும் பலன் இல்லாத முறை. மீண்டும் உறுப்பினர்களுக்கு உரிமையோடும், அன்போடும் தெரிவித்துக்கொள்கிறேன். மூலக் கேள்விக்கு தொடர்பு உள்ள, சம்பந்தம் உள்ள துணைக் கேள்விகளைத்தான் உறுப்பினர்கள் கேட்க வேண்டும் என்று அத்துணை உறுப்பினர்களையும் கேட்டுக் கொள்கிறேன். இந்த முறையை இன்னொரு முறை நான் அனுமதிக்கப்போவதில்லை என்பதையும் தெரிவித்துக் கொள்கிறேன்.

*Railway lines to Kanyakumari*

* 52 *Q.*—Thiru N. DENNIS : Will the Hon. the Minister for Public Works be pleased to state :

(*a*) whether the Government are aware that the Union Planning Commission has cleared the Railway Projects to Kanyakumari ;

(*b*) if so the details thereof; and

(*c*) the steps taken by the Government to expedite this project by the Union Government?

**மாண்புமிகு திரு. எஸ். ஜே. சாதிக்பாட்சா :**

(a) (b) & (c) The State Government recommended the scheme for formation of a new railway line from Tirunelveli to Trivandrum *via* Nagercoil with a branch line from Nagercoil to Kanyakumari to be taken up under the IV Five-Year Plan. The Government of India have sanctioned the scheme and the work has been taken up.

**திரு. என். டென்னிஸ் :** இந்த ரயில் பாதையில் குளச்சல் துறைமுகம் தொடர்பு படுத்தப்படாமல் இருக்கிறது. குளச்சல் துறைமுகத்தையும் இந்த ரயில் பாதையோடு இணைப்பதற்கான அவசியத்தை, மக்களின் வேண்டுகோளை மத்திய சர்க்காருக்கு மாநில சர்க்கார் அறிவிக்குமா?

**மாண்புமிகு திரு. எஸ். ஜே. சாதிக் பாட்சா :** இந்த விவரம் இப்பொழுது என்னிடம் இல்லை. எனக்கு ரயில் இலாகாவிலிருந்து கொடுக்கப்பட்டிருக்கிற பதிலில் நான் சொல்லிய விவரங்கள் இருக்கின்றன. மற்ற விவரங்கள் என்னிடம் இல்லை. இந்த விவரம் வேண்டுமானால் ரயில்வே இலாகாவிற்குத் தெரிவிக்கப்படும்.

**திரு. ஏ. ஆர். சுப்பையா :** வேலைகளை யூனிட் யூனிட்டாகப் பிரித்து ரூ. 15 லட்சம் அளவுக்கு டெண்டர்கள் கூப்பிடுகிறார்கள். சாதாரணமாக ஆட்கள் எடுப்பதற்கு வழியில்லை. மகாராஷ்டிராவில் பஞ்சப் பிரதேசம் என்ற காரணத்தினால் ரயில்வே வேலைகளை சாதாரண மக்களுக்கு வழங்கவேண்டுமென்று சிறு சிறு யூனிட்டுகளாக வைத்து, டெண்டர்கள் அழைப்பதன் மூலம் சாதாரண மக்களுக்கு வேலை வாய்ப்புகள் கொடுப்பதுபோல், இங்கேயும் கொடுப்பதற்கு சர்க்கார் வழி செய்யுமா ?

**மாண்புமிகு திரு. எஸ். ஜே. சாதிக் பாட்சா :** இது மத்திய சர்க்கார் செய்யவேண்டிய வேலை. நம்முடைய சர்க்காரைப் பொறுத்தவரையில் ஒன்றும் செய்ய முடியாது.

**திரு. எ. சுவாமிதாஸ் :** இந்த ரயில்வே லைன் அமைப்பதற்கு லாண்டு அக்விசிஷன் செய்யக்கூடிய பணியில் ஈடுபடுவதற்கு நமது ரெவின்யூ இலாகாவிலிருந்து நமது ஊழியர்களை விட்டுக் கொடுத்திருக்கிறோம். அந்த வேலையை ஆற்றுகின்ற அவர்களுக்கு ஸ்பெஷல் அலவன்ஸ்—அவர்கள் காடுமேடுகளில் அலைந்தெடுத்து வேலை செய்யவேண்டியிருப்பதால், சம்பளத்தோடு சேர்த்து



ஸ்பெஷல் அலவன்ஸ் கொடுப்பதற்கு இந்த அரசு ரயில்வே இலாகாவைக் கேட்டுக்கொள்ளுமா என்று அறிய விரும்புகிறேன்.

**மாண்புமிகு திரு. எஸ். ஜே. சாதிக் பாட்சா :** லாண்டு அக்விசிஷனுக்கு இப்பொழுது necessary staff has been sanctioned to attend to the work of land acquisition. நம்முடைய மாநிலத்தைப் பொறுத்தவரையிலே நில ஆர்ஜிதம் செய்வதற்கு எந்த வழிவகைகளை நாம் கடைப்பிடிக்கிறோமோ அதே வழிவகைகளைத் தான் நாம் கடைப்பிடிக்க முடியுமே தவிர, இதற்காக தனிப்பட்ட முறையில் சலுகைகள் கேட்பதற்கு இடமில்லை.

### கும்பகோணத்தில் புதிய இரயில்வே மேம்பாலம்

*** 53 வினா—திரு. என். கிட்டப்பா :** மாண்புமிகு பொதுப்பணித் துறை அமைச்சர் தயவு செய்து கீழ்க்கண்ட வினாவுக்கு விடையளிப்பாரா—

கும்பகோணத்தில் இரயில்வே மேம்பாலம் கட்டும் பணி எப்போது துவங்கப்படவிருக்கிறது?

**மாண்புமிகு திரு. எஸ். ஜே. சாதிக் பாட்சா :** ஒப்பந்த புள்ளிகள் முடிவாகி வேலை துரித நிலையில் இருக்கிறது.

**திரு. என். கிட்டப்பா :** கும்பகோணத்தில் அமைக்கப்பட்டு வருகிற ரயில்வே பாலத்திற்கு உள்ள எஸ்டிமேட் தொகை எவ்வளவு என்பதனையும், அது எப்பொழுது கட்டி முடிக்கப்படும் என்பதனையும் அறிவிக்க இயலுமா?

**மாண்புமிகு திரு. எஸ். ஜே. சாதிக் பாட்சா :** ரூ. 15 லட்சத் திற்கு எஸ்டிமேட் தயார் செய்யப்பட்டு அனுமதிக்கப்பட்டிருக் கிறது. டெக்னிகல் சாங்ஷன் ரூ. 14,50,000-க்குக் கொடுக்கப் பட்டிருக்கிறது. இப்பொழுது இந்த வேலைகளுக்கு 9—2—1972-ல் காண்டிராக்ட் ஒப்படைக்கப்பட்டு, அந்த வேலைகள் நடைபெற்றுக் கொண்டிருக்கின்றன. அந்த வேலைகள் நடைபெறுவதிலே ரயில்வே இலாகாவில் சில பிரச்னைகள் இருந்தன. அந்தப் பிரச்னைகளை நம்முடைய தலைமைப் பொறியாளர் தலையிட்டு, முடித்துவைத்து, இப்பொழுது வேலைகள் துரிதமாக நடைபெற்றுக்கொண்டிருக் கின்றன.

[1973 பிப்ரவரி 7

## மேற்பார்வை பொறியாளர் அலுவலகங்கள்

* 54 வினா—திரு. பி. எஸ். மணியன் : மாண்புமிகு பொதுப் பணித்துறை அமைச்சர் தயவுசெய்து கீழ்க்கண்ட வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) நெடுஞ்சாலைத் துறையில் மேற்பார்வைப் பொறியாளர் அலுவலகம் மதுரை மாவட்டத்துக்குத் திருச்சியிலும், இராமநாதபுரம் மாவட்டத்துக்குத் திருநெல்வேலியிலும் அமைக்கப் பட்டுள்ளதா?

(இ) ஆம் எனில், இவ்விரு மாவட்டங்களுக்கும் பொதுவாக அவைகளை மதுரையில் ஏற்படுத்தும் செயற்குறிப்பு அரசின் பரிசீலனையில் உள்ளதா?

**மாண்புமிகு திரு. எஸ். ஜே. சாதிக் பாட்சா :** (அ) ஆம்.

(இ) இல்லை.

**திரு. பி. எஸ். மணியன் :** இந்த நெடுஞ்சாலைத் துறையில் ஒவ்வொரு மாவட்டத்திற்கும் ஒரு மேற்பார்வைப் பொறியாளர் நியமிக்கும் உத்தேசம் அரசுக்கு உண்டா?

**மாண்புமிகு திரு. எஸ். ஜே. சாதிக் பாட்சா :** ஒவ்வொரு மாவட்டத்திற்கும் ஒரு மேற்பார்வைப் பொறியாளர் நியமிக்கின்ற குறிப்பு எதுவும் அரசின் பரிசீலனையில் இப்பொழுது இல்லை.

## மாம்பழ ஏற்றுமதி

* 55 வினா—திரு. என். கிட்டப்பா : மாண்புமிகு வேளாண்மைத் துறை அமைச்சர் தயவுசெய்து கீழ்க்கண்ட வினாவுக்கு விடையளிப்பாரா—

1971-72-ல் தமிழ்நாட்டிலிருந்து இங்கிலாந்திற்கு ஏற்றுமதி செய்யப்பட்ட மாம்பழத்தின் மதிப்பு என்ன?

**மாண்புமிகு திரு. அ. பெ. தர்மலிங்கம் :** 1971-72 ஆம் ஆண்டில் 31—5—1971-ல் ஒரே ஒரு முறை தான் 584 கிலோ கிராம் எடையுள்ள மாங்கனி சென்னையிலிருந்து விமானமூலம் இலண்டன் மாநகருக்குச் சோதனைக்காக மாநில வர்த்தகக் கழகத்தின் மூலம் அனுப்பப்பட்டது. இதன் மதிப்பு ரூ. 2,246-63 ஆகும். இம் மாங்கனிகள் ஆந்திர மாநிலத்தில் விளைந்தவையாகும்.



1973 பிப்ரவரி 7]

**திரு. என். கிட்டப்பா :** தலைவர் அவர்களே, மாம்பழத்தின் ருசியினை . . .

**மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர் :** கேள்வியைக் கேளுங்கள்.

**திரு. என். கிட்டப்பா :** குறுக்கீடு இருக்கிறது. அங்கத்தினர் என்னைப் பார்த்துப் பேசுகிறார். . .

**மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர் :** கேள்வியைக் கேளுங்கள்.

**திரு. என். கிட்டப்பா :** நான் கேட்கவில்லை.

**திரு. கே. டி. கே. தங்கமணி :** இந்தியாவிலிருந்து இன்டோனேசியா போன்ற நாடுகளுக்கு மாம்பழம் ஏற்றுமதி ஆகிறது. வெளி நாடுகளுக்கு ஏற்றுமதியாவது பம்பாயிலுள்ள அல்பங்கா மாம்பழம் தான் அதிகமாக இருக்கிறது என்று சொல்லப்படுகிறது. சேலத்திலுண்டு மாம்பழம் அதிகமாக உற்பத்தி செய்து வெளிநாடுகளுக்கு ஏற்றுமதி செய்வதற்கு அரசுக்கு நோக்கம் இருக்கிறதா?

**மாண்புமிகு திரு. அ. பெ. தர்மலிங்கம் :** இந்த மாநிலத்தில் உற்பத்தி ஆகும் மாம்பழங்கள் வெளிநாடுகளுக்கு ஏற்றுமதி செய்யும் அளவுக்கு அதிகமாக இல்லை. இருப்பினும், மாம்பழப் பருவத்தில் மாம்பழங்கள் பம்பாய், டெல்லி, கல்கத்தா போன்ற முக்கிய நகரங்களுக்கு மட்டும் அனுப்பப்படுகின்றன. இதற்குத் தனியாக எந்தத் திட்டமும் இல்லை. பழ அபிவிருத்தித் திட்டத்தின் கீழ் (தோட்டக் கலை அபிவிருத்தித் திட்டம்) திராட்சை பயிரிட, ஒரு ஏக்கருக்கு ரூ. 1,500 வீதம் ஒரு நபருக்கு ரூ. 6,000-க்கு மேற்படாமலும், மற்றப் பழங்கள் பயிரிட, ஏக்கர் ஒன்றுக்கு ரூ. 300 வீதம் ஒரு நபருக்கு ரூ. 2,000-க்கு மேற்படாமலும் நீண்ட காலக் கடன்கள் வழங்கப்படுகின்றன. 1970-71-ம் ஆண்டில் ரூ. 7.12 லட்சம் நீண்டகாலக் கடனை இந்தத் திட்டத்திற்கு வழங்கப் பட்டிருக்கிறது.

**திரு. மா. சுப்பிரமணியன் :** மாம்பழச் சார் டின்களில் பாக் செய்யப்பட்டு வெளி நாடுகளுக்கு ஏற்றுமதி செய்யப்படுகிறதா?

[1973 பிப்ரவரி 7

**மாண்புமிகு திரு. அ. பெ. தர்மலிங்கம் :** மாம்பழச் சார் ரஷ்யா, மடகாஸ்கருக்கு அனுப்பப்படுகிறது. மாம்பழத் தூள் அமெரிக்காவில் நியூயார்க் நகரத்திற்கு அனுப்பப்படுகிறது. மாம்பழத் துண்டுகள் (ஸ்லைஸஸ்) இங்கிலாந்துக்கு அனுப்பப்படுகிறது.

**திரு. கா. வேழவேந்தன் :** நம்முடைய நாடு வெப்ப நாடு. நம்முடைய நாட்டில் வெனிற்காலத்தில் பழுக்கும் மாங்கனிகளுக்குக் குளிர் நாடுகளில் மிகுந்த வரவேற்பு இருக்கிறது. காஷ்மீரில் அரசாங்கம் இதற்காக ஒரு சிறப்புத் திட்டம் வகுத்து மேலைநாடுகளுக்கு அனுப்புகிறார்கள். நாமும் அதைப் போலவே அனுப்புவதற்குத் தமிழ் நாட்டில் ஒரு சிறப்புத் திட்டம் உருவாக்க அரசு முன் வருமா ?

**மாண்புமிகு திரு. அ. பெ. தர்மலிங்கம் :** தற்பொழுது இல்லை.

**திருமதி ஜோதி வெங்கடாசலம் :** தலைவர் அவர்களே, மாம்பழங்கள் அயல்நாடுகளில் அதிகப்படியாகத் தேவைப்படுகின்றன. அதனால் நமக்கும் வெளிநாட்டு செலாவணி அதிகமாகக் கிடைக்கும் என்ற நம்பிக்கையும் இருக்கிறது. காலப்பாடு மாம்பழம் வேலூரில் அதிகமாக விளைகிறது. அது நல்ல ருசியுள்ள பழமாக இருப்பதினால், அதிகப்படியாக தேவைப்படுகிறது. அது மாத்திரம் அல்ல. அல்பங்கா பழம் கன்யாகுமாரியிலுள்ள ஃப்ரூட் ரிசர்ச் ஃபார்மில் ரிசர்ச் செய்யப்பட்டு, அதிகப்படியாக நம்முடைய நாட்டில் உற்பத்தி செய்து, ஆந்திராவிலிருந்து மட்டுமல்லாமல், நம்முடைய மாநிலத்திலிருந்து மாம்பழங்களை அதிகமாக ஏற்றுமதி செய்வதற்கு அரசு முன் வருமா?

**மாண்புமிகு திரு. அ. பெ. தர்மலிங்கம் :** கன்யாகுமரியில் 3,329 ஏக்கரில் மாம்பழம் பயிரிடப்படுகிறது. பல்வேறு பழங்களை ஒட்டுச்சேர்த்து இப்பொழுது பரிசிலனை செய்யப்படுகிறது. இஸ்ரேல், அமெரிக்க ஐக்கிய நாடுகள், பார்மோசா, ஆஸ்திரேலியா ஆகிய நாடுகளிலிருந்து மாம்பழம் மிகுந்த அளவில் லண்டன் மார்க்கெட்டுக்குக் கொண்டுவரப்படுகின்றன. அதனால் அங்கு நிறைய போட்டி உள்ளது. வெளிநாட்டு வியாபாரிகள் பழத்திற்குரிய தொகையை பழத்தை வாங்குவோர்களுக்கு விற்றபின்பே செலுத்துவதால், அந்நாடுகளுக்கு அனுப்பப்படும் மாம்பழங்களுக்கு உரிய தொகையும் ஏற்றுமதிச் செலவும் முற்றும் கிடைக்கும் என்ற நம்பிக்கை இப்பொழுது இல்லை.



1973 பிப்ரவரி 7]

THIRU B. VENKATASWAMY : Sir, the Hon. Minister has stated that there is no Horticulture Department in Tamil Nadu. In the Mysore State, they are having a separate Horticulture Department and consequently they are developing Horticulture in their State. So, may I know whether this Government will constitute a separate Horticulture Department so that we can produce more fruits in our State and export them to other countries?

**மாண்புமிகு திரு. அ. பெ. தர்மலிங்கம் :** தலைவரவர்களே, தனியாகத் தொடங்குவதற்குத் திட்டம் இல்லை. பழவகைகள் பயிரிடுவதை ஊக்குவிக்கும் பொருட்டு, தமிழ்நாட்டில் எல்லா மாவட்டங்களிலும் ஆக 29,846 ஹெக்டேர்கள் பரப்பில் பயிரிடப்பட்டு வருகின்றன. அவர்களுக்குக் கடன் உதவி செய்யப்படுகிறது.

**திரு. கே. ஏ. வகாப் :** வடார்க்காடு மாவட்டத்திலும் சேலம் மாவட்டத்திலும் இப்போது மாம்பழம் பற்றுக்குறையாக இருக்கிறது. அதனால் வேலூரிலுள்ள பழம் பதனிடும் ஆலை செயல்படவில்லை. இப்போது அரசாங்கம் இந்த பழங்கள் பயிரிடுகிறவர்களுக்குக் கொடுக்கின்ற கடன் தொகை குறைவாக இருக்கிறது. பழம் பயிரிடுவோரை ஊக்குவிக்கும் வகையில், ஒவ்வொருவருக்கும் ஆயிரம் ரூபாய் அளவில் கடனாகவும், மானியமாகவும் கொடுத்து, இந்தத் திட்டத்தைத் தீவிரப்படுத்தி பழங்களை ஏற்றுமதி செய்து அந்நியச் செலாவணியும் ஈட்ட அரசாங்கம் முன்வருமா ?

**மாண்புமிகு திரு. அ. பெ. தர்மலிங்கம் :** வடார்க்காடு மாவட்டத்தில் 4,483 ஹெக்டேர்களில் இந்த மரங்கள் பயிரிடப்பட்டு, பழங்கள் கிடைக்கின்றன. கனம் உறுப்பினர் அவர்கள் சொன்னது போல பழம் பதனிடும் ஆலை நிறுத்தப்பட்டதற்குக் காரணம் போதிய பழம் கிடைக்காததால் அல்ல ; தொழில் நுட்ப உதவியாளர்கள் கிடைக்காததால் தான் என்பதைத் தெரிவித்துக் கொள்கிறேன்.

THIRU K. S. KOTHANDARAMIAH : Sir, the Hon. Minister for Agriculture has stated that we are exporting a lot of mangoes to foreign countries. May I know whether the foreign countries purchase mangoes for daily consumption, that is for eating, or for extraction of juice on a commercial basis?

**மாண்புமிகு திரு. அ. பெ. தர்மலிங்கம் :** தலைவரவர்களே, நம்முடைய நாட்டைப் பொறுத்தவரையிலே, பழமாக ஏற்றுமதி செய்யப்படுகிறது. நான் முதலிலே சொன்னமாதிரி, வெளிநாடுகளுக்கு—ரஷியாவுக்கு மாம்பழ ரசம் தான் அனுப்பப்படுகிறது.

**திருமதி த. ந. அனந்தநாயகி :** வெலூரிலே இருக்கின்ற பழம் பதனிடும் ஆலைக்குப் பழம் நிறையக் கிடைக்கிறது, வேறு ஏதோ ஒன்றுதான் கிடைக்கவில்லை என்று அமைச்சரவர்கள் சொன்னார்கள். அது என்ன என்று விளக்குவார்களா?

**மாண்புமிகு திரு. அ. பெ. தர்மலிங்கம் :** தொழில் நுட்ப உதவியாளர்கள் என்று சொன்னேன். அவர்களுக்குப் புரியும்படி ஆங்கிலத்தில் சொல்வதானால் 'டெக்கனிக்கல் அசிஸ்டன்ட்ஸ்' என்பதாகும்.

**திருமதி ஜோதி வெங்கடாசலம் :** சார், கவர்ன்மென்ட் ஆஃப் இந்தியா ஃபுட் மார்க்கெட்டிங் டெக்கனிக்கல் லைனில் Prescribed qualification தேர்ச்சி பெற்றவர்கள் இருக்கிறார்கள். நம்முடைய தமிழ்நாட்டுக்கு அவர்களுடைய சேவையை lend செய்யும்படி இந்த அரசாங்கம் கோருமா?

**மாண்புமிகு திரு. அ. பெ. தர்மலிங்கம் :** அதுபற்றிப் பரிசீலிக்கலாம்.

### *Fair Price Shops*

*56 *Q.*—THIRU N. K. PALANISWAMY : Will the Hon. the Minister for Food be pleased to state the number of fair price shops opened during 1972 in Madras and in Coimbatore?

**மாண்புமிகு திரு. மன்னை ப. நாராயணசாமி :**

| | |
|---|---|
| சென்னை மாநகர் | 541 |
| கோயம்புத்தூர் | 229 |

(வழக்கமாக அரிசி வழங்கப்பட்டு வரும் கோயம்புத்தூர், சிங்காநல்லூர் நகராட்சிப் பகுதிகள், பேரூர் ஊராட்சி ஒன்றியப் பகுதி உட்பட)





**திரு. என். கே. பழனிசாமி :** தலைவரவர்களே, கோவையிலும், சென்னையிலும் இந்தக் கடைகள் திறக்கப்பட்டிருப்பதுபோல எல்லா மாவட்டங்களிலும் இந்தமாதிரி நிவாரணக் கடைகளைத் திறக்க அரசாங்கம் முன்வருமா? அப்படிச் செய்தால் வெளி வியாபாரிகள் அதிக விலைக்கு விற்கமாட்டார்கள். ஏழை மக்களுக்கு அரிசி நியாயவிலையில் கிடைக்கும். அதற்கு ஆவன செய்வார்களா?

**மாண்புமிகு திரு. மன்னை ப. நாராயணசாமி :** இப்போது வெளி மார்க்கெட்டில் கனம் உறுப்பினர் அவர்கள் கருதுவதுபோல் அரிசி விலை உயரவில்லை. ஆகையால் ஒவ்வொரு மாவட்டத்திலும் நியாயவிலைக் கடைகளைத் திறக்கவேண்டியது அவசியமில்லை என்று கருதுகிறேன்.

**திரு. வி. கிருஷ்ணமூர்த்தி :** அரிசி விலை அதிகமாக உயரவில்லையே தவிர, விற்கின்ற நெல் விலைக்குத் தகுந்தாற்போல் அரிசி விலை இல்லை. நெல் விலை குறைவாக இருக்கிறது. அரிசி விலை அதிகமாக இருக்கிறது. நம்முடைய அரசாங்கம். . .

**மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர் :** விளக்கம் வேண்டாம். கேள்வியைக் கேளுங்கள்.

**திரு. வி. கிருஷ்ணமூர்த்தி :** நம்முடைய அரசாங்கம் 25 சதவிதம் லெவி கொள்முதல் செய்வதால்தான் அரிசி விலை ஏறுகிறது என்று தெரிகிறது. ஆகவே, லெவி கொள்முதல் முறையை விட்டு விட்டு (மணியடிக்கப்பட்டது) ஃபேர் பிரைஸ் ஷாப்புகளிலும், ஓப்பன் மார்க்கெட்டிலும் அரிசி. . (மணியடிக்கப்பட்டது).

**மாண்புமிகு திரு. மன்னை ப. நாராயணசாமி :** தலைவரவர்களே, லெவி போட்டிருப்பதன் மூலம் அரசே கொள்முதல் செய்து, ஏழை எளிய மக்களுக்கு நியாயவிலையில் அரிசி கிடைக்கச் செய்யப் படுகிறது. லெவி முறையை அகற்றிவிட்டால், வியாபாரிகள் அதிக ஏதோ விலைக்கு விற்கக்கூடும். இப்போது இருக்கும் முறையில், கூட்டிக் ஒரு சில இடங்களில் சில சமயங்களில் கொஞ்சம் நாட்கள் குறைத்து விற்கப்படலாம். அதுவும் இரண்டு, மூன்று தொடங்கிவிடுகிறார்கள். பார்த்துவிட்டு, பழைய விலைக்கே விற்கத் நல்லதல்ல ஆகவே, இப்போது இருக்கும் முறையை மாற்றுவது என்று கருதுகிறேன்.

**மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர் :** மாண்புமிகு அமைச்சர்களுக்கும், உறுப்பினர்களுக்கும் மீண்டும் நினைவுபடுத்துகிறேன். சம்பந்தமில்லாமல் கேள்வியும் கேட்கக்கூடாது; சம்பந்தமில்லாத கேள்விக்கு அமைச்சர்கள் விளக்கமாகப் பதிலும் அளிக்க வேண்டாம்.

THIRU V. KRISHNAMOORTHY : Sir, my submission is that it relates to the main question.

MR. DEPUTY SPEAKER : The hon. Member should put a question and he should not make a statement. For formality's sake he is putting the question.

THIRU V. KRISHNAMOORTHY : My question relates to the opening of fair price shops.

MR. DEPUTY SPEAKER : Yours is not a question at all.

**திரு. ஜே. ஜேம்ஸ் :** தலைவரவர்களே, நாகர்கோயிலிலிருந்து அரிசி நியாய விலைக்கு வாங்கிக்கொண்டுபோய் கல்குளம், விளவங்கோடு தாலுக்காக்களில் அநியாய விலைக்கு விற்கிறார்கள்.

**மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர் :** நீங்கள் கேள்வியைக் கேளுங்கள். விளக்கவேண்டாம். நீங்கள் சொல்லப்போவது என்ன என்பது பேரவைக்குத் தெரியும். ஆகவே, அதைப்பற்றிச் சொல்ல வேண்டாம். பேரவைக்குத் தெரியாததை, உங்களுக்கும் தெரியாததை நீங்கள் கேள்வியாகக் கேளுங்கள்.

**திரு. வி. கிருஷ்ணமூர்த்தி :** மாம்பழத்தைப் பற்றிய கேள்விக்கு எவ்வளவு நேரம் அனுமதித்தீர்கள். அதைப்போல ஃபேர் பிரைஸ் ஷாப்பிற்கும் அனுமதித்தால் என்ன?

**மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர் :** கேள்வி நேரத்தின் போது விளக்கம் தேவையில்லை. மற்ற நேரத்தில் விளக்கமாகப் பேசுங்கள்.

**திரு. ஜே. ஜேம்ஸ் :** நியாயவிலைக் கடைகளிலிருந்து விற்கப்படும் அரிசி, நியாய விலைக்குத்தான் விற்கப்பட வேண்டுமென்று அரசாங்கம் நிபந்தனை விதிக்குமா என்று அறிய விரும்புகிறேன்.

**மாண்புமிகு திரு. ப. உ. சண்முகம் :** தலைவரவர்களே, அரிசியைப் பொறுத்தமட்டில், நெல் வாங்கப்படும் விலையோடு சேர்த்து, அரைவைக்கும், போக்குவரத்துச் செலவுக்கும் ஆகும்





செலவையும் சேர்த்து அரிசி விலை நிர்ணயிக்கப்படுகிறதே அல்லாமல் இதிலே லாப நட்டக் கணக்குப் பார்க்கப்படவில்லை. அரிசி விலைக்கும், நெல் விலைக்கும் இந்தச் சிறு வித்தியாசம் தான் இருக்கிறது.

**திரு. ஜே. ஜேம்ஸ் :** தலைவரவர்களே, அரிசி வியாபாரிகள் கல் நாகர்கோவிலில் 1½ ரூபாய்க்கு ஒரு படி அரிசியை வாங்கி, குளம், விளவங்கோடு தாலுக்காவில் கொண்டுபோய் 2½ ரூபாய்க்கு விற்கிறார்கள். அரசாங்கம் இந்த நிலையைத் தடை செய்யுமா ?

**மாண்புமிகு திரு. மன்னை ப. நாராயணசாமி :** தலைவரவர்கள் கேள்வியையும் அனுமதித்துவிட்டு, பதில் சொல்வதற்கு கட்டுப் பாடும் விதிக்கிறார்கள். எனவே சுருக்கமாகச் சொல்கிறேன். நாகர்கோவிலிலிருந்து அரிசியை வாங்கிச்சென்று அதிக விலைக்கு விற்பதாகச் சொன்னார்கள். நான் நேரிலே சென்று கூட விசாரித்துப் பார்த்தேன், லிட்டர் ஒன்றுக்கு ரூ. 1.13, 1.14 என்று தான் அங்கே அரிசி விற்கப்படுகிறது, ஒரு குறிப்பிட்ட இடத்தில் அரிசி அதிக விலைக்கு விற்கப்படுவதற்கான காரணம் கனம் உறுப்பினர் அவர்களுக்கும் தெரியும் என்று கருதுகிறேன். அந்தப் பகுதி கேரளா பார்டரில் இருப்பதால், அங்கிருந்து அரிசியை வாங்கி, அவர்கள் சாப்பிடாமல்கூட கேரளத்தில் கொண்டுபோய் அதிக விலைக்கு விற்றுவிடுவதாக மக்கள் சொன்னார்கள். மற்றபடி சர்க்கார் கார்டு கொடுத்திருக்கும் பகுதியிலும், ஓப்பன் மார்க் கெட்டிலும் உள்ள விலையில் கிட்டத்தட்ட 3 பைசா அளவில் தான் வித்தியாசம் இருப்பதாகத் தெரிகிறது.

**திருமதி த. ந. அனந்தநாயகி :** 25 லட்சம் மக்கள் வாழ்கின்ற சென்னையில் 541 நியாயவிலைக் கடைகள் தான் திறக்கப்பட்டிருக் கின்றன. மக்கள் தொகைக்கு ஏற்ற அளவில் நியாயவிலைக் கடைகள் இல்லாததால், விலை உயர்ந்துகொண்டே போகிறது. ஆகையால் இன்னும் அதிகமான நியாயவிலைக் கடைகளைத் திறக்க அரசாங்கம் நடவடிக்கை எடுக்குமா?

**மாண்புமிகு திரு. மன்னை ப. நாராயணசாமி :** கொடுக்கப் பட்டிருக்கின்ற கார்டுகளின் அடிப்படையில் 541 கடைகள் திறக்கப்பட்டிருக்கின்றன. இன்னும் அதிகமான கடைகளைத் திறப்பதாக இருந்தால், நியாய விலைக் கடை நடத்துபவர்களுக்குக்

கட்டுபடியாகாது. அவர்களும் கடை வாடகை, கூலி, ஊழியர்க் சம்பளம் முதலியவை கொடுக்க வேண்டும். இப்போது ஒரு கடைக்குச் சுமார் 500 அல்லது 600 கார்டுகள்தான் வழங்கப் பட்டிருக்கின்றன. இன்னும் அதிகக் கடைகளைத் திறப்பதானால் 300, 400 கார்டுகள் என்றுதான் வழங்கவேண்டும். அது அவர்களுக்கு கட்டுப்படியாகாது. அம்மையார் அவர்கள் ஒரு கடைக்காக என்னிடத்தில் கேட்டபோது கூட நான் இந்தப் பதிலைத் தான் சொன்னேன் என்பது அவர்களுக்கு நினைவிருக்கும் என்று கருதுகிறேன். ஆகவே, மேற்கொண்டும் கடைகளைத் திறப்பது சாத்தியமில்லை என்று தெரிவித்துக் கொள்கிறேன்.

**மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர் :** பேரவையின் அனுமதியோடு கேள்வி நேரத்தை இன்னும் கொஞ்ச நேரத்திற்கு நீட்டித்து, மற்ற கேள்விகளை எடுத்துக்கொள்கிறேன்.

DR. H. V. HANDE : Are the Government aware of the fact that in spite of the assurance given by the Hon. Minister Thiru P. U. Shanmugam that the rice through these fair price shops will be routed only through co-operatives, about six months ago, number of private people were given permits completely overriding the requests of co-operatives and if I remember right ......

MR. DEPUTY SPEAKER : You do not want to put the question. You are giving clarification.

DR. H. V. HANDE : It is a straightforward question. You must understand the importance of the situation. If you do not want us to put questions, the entire opposition can boycott the Assembly. I am putting in a question form. The Chair can go through the questions that have been put so far. Have I not the right . . .

MR. DEPUTY SPEAKER : You are not supposed to argue with the Chair. The way in which you are arguing...

DR. H. V. HANDE : I protest against the manner in which you are treating us. I am putting the question, because you are sitting in that seat, can you say anything ...

THE HON. THIRU K. ANBAZHAGAN : Sir, I object ...

DR. H. V. HANDE : Are you raising any privilege?





THE HON. THIRU K. ANBAZHAGAN : I take it as privilege. The hon. Member has no right to comment on the Chair.

DR. H. V. HANDE : Have you got the guts to do it ? If you want you can throw me out.

**மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர் :** டாக்டர் ஹாண்டே. அவர்கள் தயவு செய்து உட்காரவேண்டும்.

**டாக்டர் எச். வி. ஹாண்டே :** தயவு செய்து என்று சொல்லுங்கள். (இருக்கையில் அமர்ந்தார்.)

**மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர் :** பேரவையில் இருக்கிற எந்த உறுப்பினராக இருந்தாலும். எந்தக் கட்சியைச் சேர்ந்தவராக இருந்தாலும் எல்லோருக்கும் சம உரிமை உண்டு. டாக்டர் ஹாண்டே அவர்கள் சட்டப்பேரவை, சட்ட மன்ற நடவடிக்கைகளை என்னைப் படித்துப் பார்க்கச் சொல்கிறார். இந்தப் பேரவையில் நான் கொஞ்ச நேரத்திற்கு முன்புதான் ஓர் உறுப்பினர் கேள்வி போட்ட நேரத்தில் சொன்னேன். உறுப்பினர்கள் கேட்கிற கேள்வி மூலக்கேள்விக்கு ஒட்டியதாக, சுருக்கமானதாக, முன்னுரை எதுவும் இல்லாததாக இருக்கவேண்டும் என்று சொன்னேன்.

**டாக்டர் எச். வி. ஹாண்டே :** நான் இன்று கேள்வியே கேட்க வேண்டாம் என்று நினைத்தேன். . .

(ஆளும் கட்சியில் இருந்து திரு. கு. காமாட்சி, திரு. வி. கிருஷ்ணமூர்த்தி ஆகியவர்கள் குறுக்கீடு.)

**மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர் :** யாராக இருந்தாலும் உட்கார்ந்து பேசுவது நல்லதல்ல. ஆளும் கட்சியில் உள்ளவர்களுக்கு முன்னால் அமைச்சர்கள் இருக்கிறார்கள். அவர்கள் என்ன சொல்ல வேண்டுமென்று விரும்பினாலும் அமைச்சர்களிடத்தில் சொல்லலாம்.

இந்தப் பேரவைக்கு மிக்க பணிவோடும், உரிமையோடும் நான் தெரிவித்துக்கொள்கிறேன். டாக்டர் ஹாண்டே அவர்கள் குறிப்பிட்டவைகள் வரவேற்கத்தக்கவை அல்ல. பேரவைத் தலைவரைக் குறை சொன்னதும் சரியானது அல்ல. மேலவை நடவடிக்கைக் குறிப்புகளையும் நமது பேரவை நடவடிக்கைக் குறிப்புகளையும் என்னைப் படித்துப் பார்க்கச் சொன்ன அவரே அவற்றை நன்றாகப் படித்துப் பார்க்கலாம். கேள்வி நேரத்தில் போடப்படுகிற [illegible]

கேள்விகள் எவ்வாறு இருக்க வேண்டும் என்பதற்கு எனக்கு முன்னால் இருந்த பேரவைத் தலைவர்கள் எல்லாம் அளித்திருக்கிற ஆணைகள் இருக்கின்றன. மே அவர்களின் பார்லிமெண்டரி ப்ராக்டிஸ் குறிப்புகளிலும் இருக்கின்றன. திரு. கிருஷ்ணமூர்த்தி, திரு. ஜேம்ஸ் ஆகியவர்கள் துணைக் கேள்வி போட்ட நேரத்தில்—துணைக் கேள்வி நீண்டதாய் இருக்கக் கூடாது, முன்னுரை எதுவும் இன்றி நேரிடையாக கேள்வியைப் போட வேண்டும் என்று சொல்லியிருக்கிறேன். அரசாங்க நிர்வாகத்தைப் பற்றிய தகவல்களை மாண்புமிகு அமைச்சர்களிடத்தில் இருந்து பெறுவதற்காகத்தான் கேள்விகள் போடப்படுகின்றன. வாதங்கள், ஊகங்கள், குற்றங்குறை சாட்டுகள், கேலிக்குத்தல்கள், அமைச்சர்களை மடக்க வேண்டும் என்பதற்காகவெல்லாம் கேள்விகளைப் போடுவது என்றால் அவற்றைப் பேரவைத் தலைவர் அனுமதிக்க முடியாது.

**டாக்டர் எச். வி. ஹாண்டே :** நான் மடக்குவதற்காகத்தான் சொல்கிறேன்.

THIRU R. PONNAPPA NADAR : Let us not talk across the table. Let us have some patience.

**மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர் :** இந்தப் பேரவையில் யாராக இருந்தாலும்—உறுப்பினர்கள் எல்லோருக்கும் சம உரிமை உண்டு. ஒரு கட்சி உறுப்பினர்களுக்குள்ள உரிமை மற்றக் கட்சி உறுப்பினர்களுக்கும் உண்டு. தாம் என்ன சொன்னாலும் அதை மற்றவர்கள் கேட்கவேண்டும் என்று டாக்டர் ஹாண்டே அவர்கள் நினைப்பது சரியல்ல. அந்த அடிப்படையில் அவர்கள் பேசிய பேச்சுகள் அனைத்தும் மிகக் கடுமையாகக் கண்டிக்கத் தக்கதுதான். வரவேற்கக்கூடியது அல்ல. என்னைப்பற்றி, என் வயதைப்பற்றி இல்லை. இந்த நாற்காலியில் யார் உட்கார்ந்தாலும் சரி இந்த நாற்காலியைப் பார்த்து டாக்டர் ஹாண்டே அவர்கள் பேசியது போலப் பேசுவது சரியல்ல. நாள்தோறும் நானும் கவனித்து வருகிறேன். டாக்டர் ஹாண்டே அவர்கள் இந்த நாற்காலிக்கு அளிக்க வேண்டிய மரியாதையை அளிக்கத் தவறி வருகிறார்கள். "நான் அப்படித்தான் நடந்து கொள்வேன், பேரவையில் இருந்து வெளியேற்றுங்கள்" என்று அவர் சொல்கிறார். சர்வாதிகாரம் அல்ல. பேரவையின் நிகழ்ச்சிகளை





அமைதியாக, ஒழுங்காக, சட்டப் பேரவையின் மரபுகளை, பண்புகளை காப்பாற்றும் வகையில் நடத்திச் செல்லவேண்டிய பொறுப்பு பேரவைத் தலைவருக்கு இருக்கிறது. 'என்னை வேண்டுமானால் வெளியேற்றுங்கள்' என்றால் டாக்டர் ஹாண்டே அவர்களை வெளியேற்றுவதற்கு நிரம்ப நேரம் ஆகாது. இராணுவத்தை வரவழைக்க வேண்டியதில்லை. நமது தமிழ்நாடு சட்டப் பேரவையில் அது போல இதுவரைக்கும் நடந்ததில்லை. நான் அதனைச் செய்ய வேண்டுமென்று அவர் விரும்புகிறாரா? அவர் விரும்பினாலும் நான் அதைச் செய்யத் தயாராய் இல்லை.

முன்னுரையில்லாமல், சுருக்கமாக, நேரிடையாக கேள்வி போட விரும்பினால் டாக்டர் எச். வி. ஹாண்டே அவர்கள் கேள்வி போடலாம்.

THIRU K. T. K. THANGAMANI : உறுப்பினர்கள் துணைக் கேள்வி போடுவதே is not only for the purpose of eliciting information but also for the purpose of compelling the Ministers to take certain action. What Dr. Hande wanted to impress is this. Government have opened number of fair price shops. He wanted to compel them not to open fair price shops here after route the thing through co-operatives. That was perfectly within his......right. It arises directly from the answer to original question.

MR. DEPUTY SPEAKER : How long can one take to put a supplementary question?

THIRU K. T.K. THANGAMANI : If the question is of such a nature supplementaries have to be put. If necessary half an hour discussion may be allowed. In the Lok Sabha, whenever Members have not exhausted supplementaries to a particular question, half-hour discussion is allowed. Such half-an hour discussion may be allowed here also.

## புலி இனப் பெருக்கம்

* 57 வினா—திரு. பெ. சௌந்தரபாண்டியன் : மாண்புமிகு மின்சாரத்துறை அமைச்சர் தயவு செய்து கீழ்க்கண்ட வினாவுக்கு விடையளிப்பாரா—

புலிகள் வாழும் காடுகள் தமிழகத்தில் எங்கெங்கு உள்ளன?

**மாண்புமிகு திரு. ஓ. பி. இராமன்** : புலிகள் வாழும் காடுகள் தமிழ் நாட்டில் கீழ்க்கண்ட வனக் கோட்டங்களில் உள்ளன :—

(1) ஓசூர்.

(2) தர்மபுரி

(3) கோயம்புத்தூர் வடக்கு

(4) மத்தியக் கோயம்புத்தூர்

(5) கோயம்புத்தூர் தெற்கு

(6) நீலகிரி வடக்கு

(7) நீலகிரி தெற்கு

(8) மதுரை தெற்கு

(9) மதுரை வடக்கு

(10) இராமநாதபுரம் (ஸ்ரீவில்லிப்புத்தூர் சரகம்)

(11) திருநெல்வேலி வடக்கு

(12) திருநெல்வேலி தெற்கு

இவற்றைத்தவிர நீலகிரி மாவட்டத்திலுள்ள முதுமலை வனவிலங்கு உய்விடத்திலும், திருநெல்வேலி மாவட்டத்திலுள்ள புலிகள் உய்விடத்திலும் புலிகள் காணப்படுகின்றன.

* 58 Q.—THIRU N. DENNIS : Will the Hon. the Minister for Electricity be pleased to state :

(a) whether it is a fact that an officer of the State Government has been deputed to Dehra Dun for training in tiger breeding and census; and

(b) if so, the details thereof?

**மாண்புமிகு திரு. ஓ. பி. இராமன்** : (அ) ஆம்.

(இ) இந்திய அரசு எல்லா மாநில அரசுகளுக்கும் விடுத்த வேண்டுகோளுக்கிணங்க, மாநில வன விலங்கு அலுவலர் திரு. மஹமது பஷீரை, டேராடூனிலுள்ள வன ஆராய்ச்சி நிலையம், மற்றும் கல்லூரியில், புலிகளின் கணக்கெடுப்பு சம்பந்தமான பயிற்சி பெறுவதற்காக, தமிழ்நாடு அரசு சென்ற மார்ச் திங்களில் அனுப்பிவைத்தது. பயிற்சிக் காலம் 3—3—1972 முதல் 12—3—1972 முடிய. மாநிலத்தில் சென்ற மே மாதம் நடைபெற்ற





புலிகளின் கணக்கெடுப்பு சம்பந்தமான பணிகளை மேற்கொள்ளவும், இந்திய அரசுக்குத் தகவல்களை அனுப்புவது பற்றியும், அவருக்கு அங்கு பயிற்சி அளிக்கப்பட்டது.

**மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர்** : ஹாண்டே தம் கேள்வியைப் போட விரும்பவில்லை. ஆகவே அடுத்த கேள்விகள் 57, 58 ஆகிய இரண்டையும் சேர்த்து எடுத்துக்கொள்கிறேன்.

**திரு. என். கிட்டப்பா** : திரு. சௌந்தரபாண்டியன் கேட்டிருக்கிற புலிகள் வாழ் காடுகளில் எத்தனை புலிகள் இருக்கின்றன என்று அறிவிக்க இயலுமா?

**மாண்புமிகு திரு. ஓ. பி. இராமன்** : இப்போதைய கணக்கு புலிகள் 29, சிறுத்தைப் புலிகள் 28.

*Crash programme for transport service.*

* 59 Q.—THIRU N. K. PALANISWAMY : Will the Hon. the Minister for Transport be pleased to state :

(a) whether the Government have drawn up a crash programme for the city transport service and express bus service; and

(b) if so, the details of the same?

**மாண்புமிகு திரு. ச. இராமச்சந்திரன்** : (அ) ஆம்.

(இ) மாநகரப் பேருந்துப் பணியினை மேம்படுத்த, 23 பேருந்துகள் புதிதாகச் சேர்க்கப்பட்டன. தவிரவும் நெரிசல் நேரத்தில் பேருந்துகளை அதிக எண்ணிக்கையில் விடுவது, நெரிசல் நேரத்தின்போது பேருந்து (நிலையத்தில்) நிற்கும் நேரத்தைக் குறைப்பதன் மூலம் கால அட்டவணைகளை மாற்றி அமைப்பது ஆகிய நடவடிக்கைகளும் மேற்கொள்ளப்பட்டன.

விரைவுப் பேருந்துகளைப் பொறுத்தவரை, 1971 அக்டோபர் முதல் 1971 டிசம்பர் வரை உள்ள கால அளவில் விரைவுத் திட்டத்தின்கீழ் 75 பேருந்துகள் கட்டப்பட்டன. இவற்றில், 17 பேருந்துகள் புதிய வழித்தடங்களில் விடுவதற்காகவும், 58 பேருந்துகள் பழுதடைந்த பேருந்துகளுக்குப் பதிலாகவும் கட்டப்பட்டன.

**திரு. என். கே. பழனிசாமி :** சார், மாலை நேரங்களில் பஸ்களில் ஏற்படக் கூடிய நெரிசலைத் தவிர்க்க மற்ற ரூட்களில் பஸ்களை விடுவதற்கு ஏதாவது ஏற்பாடு செய்யப்பட்டிருக்கின்றதா? ஆமெனில், என்ன நடவடிக்கை எடுக்கப்பட்டிருக்கிறது.

**மாண்புமிகு திரு. ச. இராமச்சந்திரன் :** பொதுவாக நெரிசல் நேரங்களில், கூடுதலான பஸ்களை விடுவதன் மூலமும் மாற்று வழித் தடங்களை விடுவதன்மூலமும் அதேபோல் விரைவுப் பேருந்துகளை மாநகரத்திற்குள்ளே விடுவதன் மூலமும் ஓரளவுக்கு நெரிசலைக் குறைக்கலாம் என்று திட்டமிடப்பட்டிருக்கிறது.

**திரு. ஆர். பொன்னப்ப நாடார் :** தலைவர் அவர்களே, பட்டினத்திலிருக்கிற நெரிசலைத் தவிர்ப்பதற்கு ஒரு சிறப்பான திட்டத்தை புரபொசர் ஐயாசாமி அவர்கள் தந்திருந்தார்களே அது சம்பந்தமாக ஏதாவது நடவடிக்கை மேற்கொண்டிருக்கிறார்களா? அது எப்பொழுது அமுலுக்கு வரும் என்ற விவரத்தை அமைச்சர் அவர்கள் சொல்வார்களா?

**மாண்புமிகு திரு. ச. இராமச்சந்திரன் :** மாண்புமிகு எதிர்க் கட்சித் தலைவர் திரு. பொன்னப்ப நாடார் அவர்களை உள்ளடக்கிய போக்குவரத்து ஆலோசனைக் குழுவிலே அவை பரிசீலிக்கப்பட்டு, சில பரிந்துரைகள் ஏற்று கொள்ளப்பட்டிருக்கின்றன. விரைவிலே இந்த திட்டத்தை அமுல்படுத்துவதற்கான நடவடிக்கை மேற்கொள்ளப்படும்.

**திரு. கே. டி. கே. தங்கமணி :** சென்னை நகரைப் பொறுத்த வரையில், விரிவான முறையிலே பேராசிரியர் ஐயாசாமி கொடுத்த திட்டத்திலே இந்த ஒரு பகுதி எப்பொழுது அமுலுக்கு வரும் என்று அமைச்சர் அவர்கள் பதில் சொல்வார்களா?

**மாண்புமிகு திரு. ச. இராமச்சந்திரன் :** தலைவர் அவர்களே, நான் ஏற்கனவே தெரிவித்ததைப் போல, விரைவில் என்று சொன்னால், மே மாதத்திலிருந்து எடுத்துக்கொள்ளலாம் என்கிற நிலைமையிருக்கிறது.

**திருமதி த. ந. அனந்தநாயகி :** தனியார் பஸ்களிலே ஒருவர் அதிகமானால்கூட, ஓவர்லோடு என்று நடவடிக்கை எடுக்கிறோம். ஆனால் அரசாங்க பஸ்களிலே ஒன்றுக்கு மூன்று பங்கு ஆட்கள்



ஏறி, வெளியே எல்லாம் தொங்கிக் கொண்டு போகிறார்கள். இப்படி ஓவர்லோடு இருக்கிற அரசாங்க பஸ்களின்மீது நடவடிக்கை எடுப்பதில்லையா? அல்லது அரசாங்க பஸ்களில் எத்தனை பேர் வேண்டுமானாலும் ஏறலாம் என்பது சட்டமா என்பதை அமைச்சர் அவர்கள் தெரிவிப்பார்களா?

**மாண்புமிகு திரு. ச. இராமச்சந்திரன் :** தலைவர் அவர்களே, ஓவர்லோடு ஏறுவது தவிர்க்கப்படவேண்டுமென்பதுதான் அரசாங்கத்தினுடைய கொள்கை. குறிப்பாக, சென்னை போன்ற பெரிய நகரங்களில் நம்முடைய நாட்டிலே மட்டுமல்லாமல், உலகெங்கும் இந்நிலைமை இருக்கிறது. இதைத் தவிர்க்க ஒரு சிறந்த வழி என்னவென்றால், அண்டர்கிரவுண்டு டிரெயின்-ராப்பிட் டிரான்சிட் சிஸ்டம் போடுவதுதான். ஆகையினாலே அதுவரையிலே நெரிசல் நேரங்களிலே கஷ்டம்தான் இருக்கும். கூடுதலான பஸ்களை விட்டுவிடலாம். ஆனால், அதனால் போக்குவரத்திலே நெரிசல் ஏற்படலாம். அந்த நேரங்களில், பஸ்கள் ஒன்றன்பின் ஒன்றாக நிற்கக்கூடிய சூழ்நிலை கூட ஏற்படலாம். ஆகவே, இதையெல்லாம் விரிவாக ஆராய்ந்து மத்திய அரசும் சேர்ந்து நடவடிக்கை எடுக்க வேண்டிய பிரச்சினை இது. இது சம்பந்தமாக மத்திய அரசாங்கத்திடம் சென்னைக்கு ஒரு ராப்பிட் டிரான்சிட் சிஸ்டம் அமைய வேண்டுமென்று கேட்டிருக்கிறோம். இது ஒன்றுதான் இதற்கு சிறந்த வழியாக அமையும்.

*Special buses for school children.*

* 60 *Q.*—Thiru R. R. MUNUSWAMY : Will the Hon. the Minister for Transport be pleased to state—

(*a*) whether there are proposals under the consideration of the Transport Corporation in Madras City and elsewhere to run childrens' specials; and

(*b*) if so, the details thereof?

**மாண்புமிகு திரு. ச. இராமச்சந்திரன் :** (அ) & (இ) ஆம். 10—7—1972 முதல், சென்னை மாநகரின் பல்வேறு பகுதிகளிலிருந்து (எட்டாம் வகுப்பிலும் அதற்குக் கீழும் படிக்கின்ற) பள்ளிக் குழந்தைகளுக்காக மட்டும் காலை, மாலை ஆகிய இரு வேளைகளிலும் வேளைக்கு 15 பயணத் தடவைகளில் சிறப்புப் பேருந்துகளைச் சோதனை முறையில் பல்லவா போக்குவரத்துக் கழகம் இயக்கி வருகின்றது.

**திரு. ரா. ரா. முனுசாமி :** தலைவர் அவர்களே, சென்னையிலே சிறுவர் பேருந்துகளை விட்டதைப்போல, மதுரை, கோயம்புத்தூர் போன்ற பெரிய நகரங்களிலே, அங்கும் பக்கத்திலேயிருக்கிற சிறுவர்கள் வருவதற்கு பேருந்துகள் விட தமிழக அரசு முன் வருமா என்று அறிய விரும்புகிறேன்.

**மாண்புமிகு திரு. ச. இராமச்சந்திரன் :** சென்னையைப்போன்ற நெரிசல் நேரங்கள் கோயம்புத்தூரிலும், மதுரையிலும் ஏற்படவில்லை. ஆகையினால் இந்தப் பிரச்சினை இன்னும் அங்கு எழவில்லை.

### பேராசிரியர்கள் சம்பள விகிதம்

* 43 வினா—**திரு. என். கிட்டப்பா :** மாண்புமிகு கல்வி-உள்ளாட்சித்துறை அமைச்சர் தயவு செய்து கீழ்க்கண்ட வினாவுக்கு விடையளிப்பாரா—

அரசு கல்லூரிகளில் ஆங்கில, தமிழ் பேராசிரியர்களுக்கு சம்பள விகிதம் ஒரே அளவுக்கு உள்ளதா?

**மாண்புமிகு டாக்டர் இரா. நெடுஞ்செழியன் :** ஆம்.

THIRU K. S. KOTHANDARAMIAH: Sir, may I know from the Hon. Minister for Education whether the scales of pay paid to the Professors and Lectures in Tamil and English are also paid to the Professors and Lecturers in minority languages?

**மாண்புமிகு டாக்டர் இரா. நெடுஞ்செழியன் :** தலைவர் அவர்களே, எல்லா மொழியைச் சேர்ந்த பேராசிரியர்களுக்கும் ஒரே விகிதமான சம்பளம்தான் தரப்படுகிறது.

### மாயூரம் ஒன்றியப் பகுதியில் உயர்நிலைப்பள்ளிகள்

* 44 வினா—**திரு. என். கிட்டப்பா :** மாண்புமிகு கல்வி-உள்ளாட்சித்துறை அமைச்சர் தயவு செய்து கீழ்க்கண்ட வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) மாயூரம் பஞ்சாயத்து யூனியன் பகுதியில் ஜனத் தொகைக்கு போதுமான உயர்நிலைப் பள்ளிகள் தற்போது திறக்கப் பட்டுள்ளனவா?

(இ) இல்லையெனில், புதிய உயர்நிலைப்பள்ளிகள் திறக்க அரசு எடுத்துக்கொண்ட நடவடிக்கை என்ன?



**மாண்புமிகு டாக்டர் இரா. நெடுஞ்செழியன் :** (அ) ஆம்.

(இ) இக்கேள்விக்கு இடமில்லை.

**திரு. என். கிட்டப்பா :** தலைவர் அவர்களே, மாயூரம் ஊராட்சி ஒன்றியத்தினைச் சேர்ந்த பகுதியில் தற்போதுள்ள ஜனத்தொகை விகிதாசாரப்படி போதுமான அளவுக்கு உயர்நிலைப் பள்ளிகள் இல்லையென்று அங்கு கூறப்படுகிறது. எனவே, அதை மீண்டும் பரிசீலித்து அத்தகைய உயர்நிலைப்பள்ளி மேலும் ஒன்றினை அந்த ஊராட்சி ஒன்றியப் பகுதியில் ஏற்படுத்த அரசு ஆவன செய்ய, உதவி செய்ய முன்வருமா என்று அறிய விரும்புகிறேன்.

**மாண்புமிகு டாக்டர் இரா. நெடுஞ்செழியன் :** தலைவர் அவர்களே, மாயூரம் ஊராட்சி ஒன்றியப் பகுதியில் 4 பெரிய பள்ளிகள் இருக்கின்றன. அரசு உயர்நிலைப்பள்ளி, மணல்மேடு—1,173 மாணவர்கள் ; உமர் பெண்கள் உயர்நிலைப்பள்ளி, திருச்சிற்றம்பலம் —54 மாணவர்கள் ; திரு. குருஞானசம்பந்தர் உயர்நிலைப் பள்ளி, தர்மபுரம்—153 மாணவர்கள் ; அரசு உயர்நிலைப் பள்ளி திருமங்கலம் —191 மாணவர்கள். மணல்மேட்டிலுள்ள அரசு உயர்நிலைப் பள்ளியைத் தவிர மற்ற மூன்றிலும் போதுமான அளவுக்கு இடங்கள் இருக்கின்றன. இந்த இடங்கள் எல்லாம் நிரம்பிய தற்குப் பிறகு, மாணவர்களைச் சேர்ப்பதற்கு நெருக்கடி ஏற்படு மானால் உறுப்பினர் சொல்வதைக் கவனிக்கலாம். இப்பொழுது போதுமான அளவுக்கு உயர்நிலைப்பள்ளிகள் இருக்கின்றன.

**மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர் :** வினாக்கள்—விடைகள் முடிவுற்றன.

[குறிப்பு :—ஓர் உரையின் தொடக்கத்தில் வெள்ளிக்குறி (*) இடப்பட்டிருந்தால் அவ்வுரை உறுப்பினரால் சரிபார்க்கப் பட்டது என்பதைக் குறிக்கும்.]

## 3. ஒத்திவைப்புத் தீர்மானம்

### மின் வெட்டினால் தொழில், வேளாண்மை, வீட்டுப் பகுதிகளில் ஏற்பட்டுள்ள நெருக்கடி நிலை

**மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர் :** அடுத்து ஒத்தி வைப்பு தீர்மானங்கள். திரு. கே. டி. கே. தங்கமணி, திருமதி த. ந. அனந்தநாயகி, டாக்டர் ஹாண்டே, திரு. பொன்னப்ப

[மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர்] [1973 பிப்ரவரி 7

நாடார், திரு. கே. என். குமாரசாமி ஆகியோர் ஒரு ஒத்திவைப்புத் தீர்மானம் கொடுத்திருக்கிறார்கள். அதாவது--

'The serious situation arising in the State in the industrial, agricultural and domestic sector due to the power cut'

என்று கொடுத்திருக்கிறார்கள். இது எப்படி, சபை நடவடிக்கைகளை ஒத்திவைத்து விவாதிக்கவேண்டிய அளவு முக்கியமானது என்பதைச் சுருக்கமாக விளக்கவேண்டுமென்று திரு. தங்கமணி அவர்களைக் கேட்டுக்கொள்கிறேன்.

**திரு. கே. டி. கே. தங்கமணி :** தலைவர் அவர்களே, நமது தமிழ் நாட்டிலே மின்சார வெட்டே இருக்காது என்று சென்ற ஆண்டு நமக்கெல்லாம் வாக்குறுதி கொடுக்கப்பட்டது. அப்படி இருந்தும் கூட, அக்டோபர் மாதத்தில் 25 சதவிகிதம் மின்சார வெட்டு வந்தது ; இந்த மாதம் முதற்கொண்டு 40 சதவிகிதம் மின்சார வெட்டு என்று அறிவிக்கப்பட்டு இதன் பலனாக தினசரி எங்களுக்கு 10 அல்லது 20 தந்திகள் வந்து கொண்டே இருக்கின்றன. அந்த நிலைமைகளையெல்லாம் பார்த்தால், அதிகமாக விவசாயிகளுக்கு ஒரு நாளைக்கு ஒரு மணி நேரம் கூட பம்ப் செட்டுக்கு மின்சாரம் கிடைப்பதில்லை என்ற கருத்தில் கிட்டத்தட்ட எல்லா மாவட்டங்களிலிருந்தும் தந்திகள் வந்திருக்கின்றன. அதே மாதிரியாக தென்னாற்காடு மாவட்டத்திலே பல தொழிற்சாலைகள் இன்றைக்கு வேலை செய்யாமல் இருக்கின்றன என்று தெரிய வருகிறது. சென்ற மாதம், மதுரையில், ஸ்டேட் லேபர் அட்வைசரி கமிட்டி நடந்தபோது, இந்த மின்சார வெட்டினால் தொழிலாளர்கள் பாதிக்கப்பட்டு, அதனால் அவர்கள் அதிருப்தி அடையவேண்டிய சூழ்நிலை ஏற்படும், இந்த மின்சார வெட்டினால் அவர்கள் பாதிக்கப் படாத அளவுக்குச் செய்யவேண்டுமென்று கேட்டுக்கொண்டார்கள். ஆகவே, இது நாட்டிலே இருக்கக்கூடிய மிகமிக முக்கியமான பிரச்சினையாகப் போய்விட்டது.

மின்சாரத்தைப் பொறுத்தவரையில் மின்சாரம் இல்லாமல் இருப்பதுதான் அதிகமான நமக்கு கால்ட்லியாக இருக்கும் என்று கவர்னர் அவர்களும் சொல்லியிருக்கிறார்கள். ஆகவே, இன்றைக்கு மின்சார வெட்டுவந்ததற்கு, அதுவும் இந்த வருஷத்திலே அதிகமான மழை பெய்தும்கூட மின்சார வெட்டு



[திரு. கே. டி. கே. தங்கமணி]

வந்ததனுடைய காரணம் என்ன ? எங்களுடைய குற்றச்சாட்டு என்னவென்றால் அரசாங்கத்தினுடைய நடவடிக்கைகள், அதன் கொள்கை இவைதான் இதற்கு காரணமாக இருக்கின்றன. ஆதலால், இன்றைக்கு இது விவசாயிகள் மத்தியிலே, தொழிலாளிகள் மத்தியிலே அதிருப்தியை உண்டாக்கி இருக்கிறது. நகரத்தில் வேண்டுமானால் வெளிச்சத்தைக் குறைக்க ஏற்பாடு செய்யலாமேயொழிய எக்காரணத்தைக்கொண்டும் விவசாயிகளுக்கும், தொழிற்சாலையிலே பணியாற்றுகின்ற தொழிலாளர்களுக்கும் பாதகம் இல்லாத முறையிலே அரசு நடவடிக்கை எடுக்கத் தவறி விட்டது என்ற முறையிலேதான் இந்த ஒத்திவைப்பு தீர்மானத்தைக் கொண்டு வந்திருக்கிறோம்.

இது மிகமிக முக்கியமான பிரச்சினையாக இருக்கிறது. இதில் சகல கட்சியைச் சேர்ந்தவர்களுடைய கருத்து தெரியுமானால், எப்படி இந்த மின்சார பற்றாக்குறையை ஈடுகட்டுவது என்றும், உடனடியாக எடுக்கவேண்டிய நடவடிக்கை என்ன என்பதும் தெரிவதற்கு வாய்ப்பு இருக்கும் என்ற காரணத்தினால், இன்றைக்கு இதன்பேரில் இரண்டு மணிநேரம் விவாதம் நடந்தால் உதவிகரமாக இருக்கும் என்ற நிலைமையில் இந்த ஒத்திவைப்பு தீர்மானத்தை வற்புறுத்துகிறேன்.

**திரு. ஆர். பொன்னப்ப நாடார் :** பேரவைத் துணைத் தலைவரவர்களே, இது அவசர முக்கியத்துவமான ஒரு பிரச்சினை என்ற காரணத்தினால் இந்த அவையின் நடவடிக்கையை ஒத்திவைக்க வேண்டுமென்று கோரி ஓரிரு கருத்துக்களை மட்டும் சுருக்கமாகக் கூறவிரும்புகிறேன். ஏனென்றால், இன்று தமிழ் நாட்டிலே எல்லாப் பகுதிகளிலேயும் மின்சார வெட்டினால் மக்கள் பெரிதும் பாதிக்கப்பட்டிருக்கிறார்கள். 25 சதவிகித வெட்டாக இருந்தது இப்பொழுது 40 சதவிகிதம் என்று அறிவிக்கப்பட்டிருக்கிறது. விவசாயிகள் மட்டுமில்லாமல் தொழிற் துறையிலே ஈடுபட்டிருப்பவர்களும் பாதிக்கப்பட்டிருக்கிறார்கள். இலட்சக் கணக்கான தொழிலாளர்களுக்கு வேலையில்லாத் திண்டாட்டம் இதனால் ஏற்படும் என்ற நிலைமை இருக்கிறது. இவற்றைப் பார்க்கின்ற பொழுது இப்பொழுது பல இடங்களிலே இருந்து விவசாய சங்கங்களின் சார்பாக எனக்கு டெலகிராம் வந்து கொண்டே இருக்கிறது. குறிப்பாக, தர்மபுரி மாவட்டத்திலே இருந்தும், சேலம்

மாவட்டத்திலே இருந்தும், வட ஆற்காடு மாவட்டத்திலே இருந்தும், ஏனைய மாவட்டங்களிலே இருந்தும் பயிர்கள் வாடும் நிலைமை குறித்தும், விவசாயிகளின் கஷ்டங்களைக் குறித்தும் தந்திகள் வந்து கொண்டிருக்கின்றன. அவற்றை எல்லாம் நான் இங்கே விரிவாகச் சொல்ல விரும்பவில்லை, காரணம், இது பொது விவாதம் இல்லை. குறிப்பாக, ஒட்டன்சத்திரத்திலே இருந்து விவசாய சங்கம் சார்பாக எனக்குத் தெரிவித்திருக்கிறார்கள், பிப்ரவரி மாதம் 1-ஆம் தேதியிலே இருந்து மின்சாரம் சரியாக கொடுக்கப்படாததால் அங்கிருக்கும் பயிர்கள் எல்லாம் வாடி வதங்கிக் கொண்டிருக்கிறது என்று தெரிவித்திருக்கிறார்கள். இது போன்ற பல இக்கட்டான சூழ்நிலைமை எங்கு பார்த்தாலும் இருக்கிறது.

விவசாயத்திற்கு மின்சாரத்தை இரவு நேரங்களிலே சில இடங்களிலே கொடுக்கிறார்கள். அதைத் தவிர்த்து, பகல் நேரங்களிலே தான் மின்சாரத்தைக் கொடுக்கவேண்டும். விவசாயிகள் தெரிவிக்கிறார்கள், புஞ்சைப் பயிர்களுக்கு பகல் நேரத்திலே தண்ணீர் பாய்ச்சுவதுதான் பொருத்தமாக இருக்கும் என்று. அத்தோடு விவசாயிகள் வயல்களுக்கு இரவு நேரங்களிலே போய் தண்ணீர் பாய்ச்சுவதிலே கஷ்டம் இருக்கிறது, காரணம் பாம்பு போன்றவைகளின் தொந்தரவுதான். எனவே, இதைப் பற்றி எல்லாம் பலரும் எழுத்து மூலமாகத் தெரிவித்திருக்கிறார்கள். இந்த மின்சார வெட்டிற்குக் காரணமாக இருப்பது என்ன என்பதை விரிவாக சிந்திக்க வேண்டும். எங்கள் பகுதியிலே 100 மெகாவாட் மின்சாரத்தை உற்பத்தி செய்யக்கூடிய கோதையாறு திட்டம் இருக்கிறது. ஆனால், அது முழு அளவிலே அந்த மின்சாரத்தை உற்பத்தி செய்ய முடியவில்லை. 40 மெகாவாட் தான் இப்பொழுது உற்பத்தி செய்து கொண்டிருக்கிறார்கள். இதைக் கமிஷன் செய்யாமல், அந்த மெஷினரி எல்லாம் அப்படியே சும்மா இருக்கிறது என்று தகவல்கள் எனக்கு வந்தவண்ணம் இருக்கிறது. இந்த மாதிரியான நிலைமை இருக்கும் பொழுது நிச்சயமாக அரசாங்கம் அதற்கு வேண்டிய நடவடிக்கைகளை மேற்கொள்ளவேண்டும்.

நமக்கு இன்றிருக்கிற மின்சார பாலிசியானது எந்த முறையிலே உருவாக்கப்பட வேண்டும் என்பதை நாம் கவனத்திலே கொள்ளவேண்டும். தூத்துக்குடியிலே துவங்கப்படவேண்டிய



மின்சாரத்திட்டம் ஏன் துவங்கப்படவில்லை, எண்ணூர் பகுதியிலே இருக்கக் கூடிய மின்சாரத் திட்டம் ஏன் துவங்கப்படவில்லை என்று நிலையில் இன்று இருக்கும் மின்சாரத் தட்டுப்பாட்டை சரிகட்ட கேரளாவிலே இருந்து நாம் கொஞ்சம் பவர் வாங்கினால் பொருத்தமாக இருக்கும் என்று கருதுகிறேன். அவர்களுக்கு மிகுதியான பவர் இருப்பதாக நான் கருதுகிறேன். எனவே, அரசாங்கத் தரப்பிலே நாம் அணுக வேண்டிய வழிவகைகளைச் செய்ய வேண்டும். இந்த மாதிரி இவ்வளவு அவசர முக்கியத்துவம் வாய்ந்த பிரச்சினையிலே விவசாயிகளுக்கும், பஞ்சாலைத் தொழிலிலே ஈடுபட்டிருக்கும் தொழிலாளர்களுக்கும் பாதகம் ஏற்பட்டு, தமிழகமே பஞ்சத்தினால் வாடும் நிலைமை உருவாகி இருப்பதால், இதைப் பற்றி விவாதிக்க இந்தச் சபையின் நடவடிக்கைகளை ஒத்திவைக்க வேண்டுமென்று கோரி, எனது வார்த்தையை முடித்துக்கொள்கிறேன்.

DR. H. V. HANDE: Mr. Deputy Speaker, Sir, I have given notice that the business of the House be adjourned to discuss a matter of urgent public importance viz. the progressive power-cut in Tamil Nadu. I also request the Deputy Speaker at the outset to give me some five minutes more since I want to give some constructive suggestions to the Chief Minister for his examination so that he can try to do the needful in this matter.

The present problem does not belong to one party alone. It is a problem affecting the public. There is no point in trying to be complacent over this matter. Let me tell the Hon. Chief Minister that the present situation is serious and is a matter of grave concern to all of us. My contention is that the Electricity Board ought to have apprised the Government of the real situation six months earlier and taken remedial measures. The matter has not been tackled properly and now because of this serious situation, the industries have been affected. We know that. I need not dwell at length on that.

In the agricultural front, Thiru K. T. K. Thangamani and Thiru Ponnappa Nadar have drawn attention to the present deteriorating situation. My friend Mr. Venkatasami has now given me a chit saying that there has been no current for the past three days for agricultural pumpsets in Denkanikotta and

Hosur. Similarly, I have received number of telegrams from so many places, Pudukkottai, Srirangam, Mudukalathur etc., complaining of withering of crops. In Krishnagiri taluk I have received telegram that crops are withering away. From Salem also the same is the case. Number of telegrams from Nachiarkoil, North Arcot and South Arcot, I have received. All point out to the withering of crops. If this were to last for another three months, we are likely to pass from one crisis to a very serious crisis. So, we have to do something about it.

Coming to industries, small-scale industries and large-scale industries and medium-industries are facing acute difficulties. Industrial production is at a low ebb. Workers are fearing closure of factories and loss of employment. Every M.L.A. will be concerned with this when he goes back to his constituency. I would like to talk about it afterwards. In North Arcot district, the whole leather industry is completely affected. That is the information I have received. Tanning industry is in great jeopardy.

It is said that there is 35 to 45 per cent transmission loss. I have been saying about it since last time. But no heed was paid to me. It is now said that ' line loss ' is 17 per cent but if you actually work it out, it will be 35 per cent.

I come to constructive suggestions. It is said there are 10.5 million watt capacity in thermal and 10 million capacity in hydro-electric fields. So far as hydel field is concerned, I agree we have reached the end. But so far as thermal is concerned, we are producing only 6.5 to 7 million. Nearly 3 million we can still produce provided we have coal. Ultimately it comes to having coal. There is the Andhra problem and there is difficulty in getting coal through railways. For generating 10.5 million thermal capacity, we want 3.5 thousand tonnes of coal. But we are getting only 1.5 to 2.5 thousand. So we are deficient in coal. How are we to get more coal ? Singareni, we cannot depend too much since Andhra is going to have their thermal station. So, we have to get it from Calcutta region. But I want to draw the attention of the Chief Minister to an important thing. Ships with only 7,000 tonnes or less can go on Hugli river since it has



no deep draft there. 15,000 and 20,000 wt. ships cannot go there. So I would request the Hon. Chief Minister to take the sentiment of the House and discuss the matter with Central Government. If necessary we can pass a resolution urging the State Government to take up the matter with the Centre. There is no question of party in this. We are all concerned with this. The one ship that is allotted is ricketty and is no good at all. We want at least more ships immediately. So, let the Hon. Chief Minister take up the matter with the Centre and talk to the Prime Minister and Minister of Shipping to get us more ships so that more coal could be brought here and we could step up our thermal production.

They may tell us that the Andhra problem is serious. But at least in our case if they can give us coal we can solve the problem. We have got a peaceful atmosphere unlike in Andhra. In this connection, I want to point out that the South Indian Shipping Corporation is carrying coal from America to Japan whereas we have not got ships to carry coal from Calcutta to Madras and that is the tragic situation. Therefore, I suggest that the Hon. Chief Minister and his Cabinet should urge the Central Government to release at least three ships and place them at the disposal of the Tamil Nadu State.

Another point is that the Basin Bridge Power House is in a very bad shape. They have no coal. So far as Ennore Thermal Station is concerned, they did not have water-supply but they had coal and now the problem is solved. So coal must be brought to Madras. Also, special trains should be run at least four times a week to carry coal to Madras. If that is not done, I think the situation will become very serious.

I once again reiterate that so far as the Electricity Board is concerned there has been rank inefficiency, gross mismanagement, utter lack of realisation of the fact that a serious and tragic situation would arise and the whole of the State would be in total chaos. Also, the whole industrial sector will be completely jeopardised and we will be having a serious law and order problem within two or three months. If the other business of the House

is adjourned now I will give more details and I hope and trust the Deputy Speaker will be gracious enough to adjourn the House. I also hope the Government will do something about it.

**திருமதி த. ந. அனந்தநாயகி :** கனம் உதவி சபாநாயகர் அவர்களே, இந்த மின்சார வெட்டைக் குறித்து கொண்டு வந்திருக்கின்ற ஒத்திவைப்புத் தீர்மானத்தை ஆதரித்து என்னுடைய கருத்துக்களைச் சொல்ல விரும்புகிறேன்.

இந்தப் பிரச்னை மிகவும் முக்கியமான பிரச்னை. ஆகவே, இதைப் பற்றி ஆலோசிப்பதற்காக ஒரு மணி நேரமாவது இந்த அவையின் பிற அலுவல்களை ஒத்திவைப்பது அவசியம் மாத்திரம் அல்ல, அவசரமும்கூட. எனக்கு முன்னாலே பேசிய டாக்டர் ஹாண்டே அவர்கள் மின்சார வெட்டிற்கு அரசாங்கம் மாத்திரம் பொறுப்பு அல்ல என்று சொன்னார்கள். ஆனால் நான் சொல்லிக்கொள்ள விரும்புகிறேன், இதற்கு முழுக்க முழுக்க அரசாங்கம்தான் பொறுப்பு என்பதைச் சொல்லிக்கொள்ள கடமைப்பட்டிருக்கிறேன். ஏதோ ஒரு முறை மழை பெய்யாத காரணத்தினாலே வெட்டு இந்த அளவிற்கு வந்துவிட்டது என்று சொல்லிவிட முடியாது. நீங்கள் எல்லாம் ஒளிவிளக்கு, ஒளிவிளக்கு என்று சொல்லி பூர்த்திவிழாக்களை நடத்தியதால்தான் இன்றைக்கு நாடே ஒளியிழந்து இரண்டு நாட்களிலே இருளடைந்து விடுமோ என்று பயந்துகொண்டிருக்கக்கூடிய சூழ்நிலை ஏற்பட்டிருக்கிறது. Power must be with the powerful Minister இன்றைக்கு மின்சாரத் துறை பொறுப்பை ஏற்றுக்கொண்டிருப்பவர்—அந்தப் பொறுப்பை மூத்த மந்திரிக்குக் கொடுத்திருக்கலாம்—ஜூனியர் மந்திரிக்கு அந்தப் பொறுப்பைக் கொடுத்துவிட்டார்கள். இந்த வெட்டுக்கு முதல் காரணமே நிர்வாகத்திலே திட்டங்கள் சரிவரத் தீட்டப்படாமல், அவற்றை நிறைவேற்றுவதிலே போதுமான அக்கறை காட்டாமல் இருந்ததால்தான் இன்றைக்கு எல்லா மாநிலங்களுக்கும் வழிகாட்டியாக இருந்த நம்முடைய மாநிலம் இன்றைக்கு அந்த நிலையை இழந்து தவிக்கக்கூடிய நிலைமை ஏற்பட்டிருக்கிறது. முன்னாலே எல்லாம் 10 சதவீதம் மின்வெட்டு வந்தாலே நாம் எல்லாம் பதறிப்போய்விடக் கூடிய நிலைமை இருந்தது. ஆனால் இன்றைக்கு 40 சதவீதம் அளவிற்கு மின்சார வெட்டு வந்து



விட்டது. போகிற நிலைமையைப் பார்த்தால் செண்ட் பெர்சண்ட் வெட்டு வந்தால்கூட இந்த அரசாங்கம் கவலைப்படாது போல் இருக்கிறது. மின்சார வெட்டு ஏற்பட்டு. எல்லா தொழிற்சாலைகளையும் இழுத்து மூடுகின்ற நிலைமை ஏற்பட்டு, வீடுகளில் எல்லாம் விளக்குகள் எரியாமல் இருளடைந்துபோகக்கூடிய நிலைமை ஏற்பட்டு, விளைந்த நெல் எல்லாம் கருகிப்போய்விடக்கூடிய நிலைமை ஏற்பட்டு, விவசாயத்திற்கு தண்ணீர் கொடுக்கமுடியாத நிலைமை ஏற்பட்டு, பம்புசெட்டுகளுக்கு மின்சாரம் இல்லாத நிலைமை ஏற்பட்டு, அதன்காரணமாக பம்புசெட்டுகள் ஓடமுடியாமல் விவசாயிகள் பதறிப்போய் இருக்கின்றார்கள். நாமோ உணவு நெருக்கடியிலே இருந்துகொண்டு இருக்கிறோம். உணவு, உடை நமக்கு எவ்வளவு முக்கியமோ அவ்வளவு முக்கியமானது மின்சாரமும்கூட.

முன்னால் 1967 ஆம் ஆண்டிற்கு முன்னால் நாங்கள் போட்டு வைத்த திட்டங்களைக்கூட நீங்கள் உருப்படியாகச் செய்யாமல் இருக்கிறீர்கள். இன்றைக்கு ஹைட்ரோ எலக்ட்ரிக் ஸ்கீம்கள் மூலமாக 3,494 மெகாவாட் மின்சாரம் உற்பத்தி செய்யக்கூடிய வாய்ப்பு இருந்தாலும், 1224 மெகாவாட் தான் உற்பத்தி செய்கிறோம். ஏற்கனவே இருந்த அரசாங்கம் ஹொகேனக்கல் திட்டம் தீட்டி வைத்திருக்கிறது. அதைப்போன்று இன்னும் பல திட்டங்களை எல்லாம் தீட்டிவைத்திருந்தது. ஆனால் அவற்றை நிறைவேற்றுவதற்கு நீங்கள் நடவடிக்கை எதுவும் எடுக்கவில்லை. டெல்லிபோய் இதைப்பற்றி விவரமாக எடுத்துச்சொல்லி உடனடியாக அக்கறை காட்டியிருந்தால் அந்த முறையிலே இதைப்பற்றியெல்லாம் வலியுறுத்திச் சொல்வதற்கு அமைச்சர் பவர்புல் ஆக இருந்திருந்தால் அல்லது சீப் மினிஸ்டராவது இதிலே அக்கறை காட்டியிருந்தால் செய்திருக்க முடியும். அதையும் செய்யவில்லை.

தெர்மல் ஸ்டேஷனை எடுத்துக்கொண்டால் 947 யூனிட் மின்சாரம் தான் உற்பத்தி செய்யப்படுகிறது. இன்னும் அதிகமாக உற்பத்திசெய்யலாம். அதையும் செய்யவில்லை. நெய்வேலியில் இரண்டாவது சுரங்கத்தை சீக்கிரமாக வேலை செய்யக்கூடிய அளவில் துரிதப்படுத்துவதற்கு அக்கறையோடு இவர்கள் மத்திய அரசாங்கத்திடம் சொல்லியிருந்தால் உற்பத்தி அதிகமாக ஆகியிருக்கும், அதையும் இவர்கள் செய்யவில்லை.

[திருமதி த. ந. அனந்தநாயகி] [1973 பிப்ரவரி 7

1954 ஆம் ஆண்டிலே சமய நல்லூரிலே காங்கிரஸ்காரர்கள் ஏற்படுத்திய தெர்மல் ஸ்டேஷனை பெயர்த்து விற்றுவிட்டார்கள், அதுதான் இவர்கள் செய்திருப்பது. காரணம் கேட்டால் அரசாங்கம் நஷ்டத்தை ஏற்கவேண்டுமா என்று அமைச்சர் அவர்கள் சொன்னார்கள். திட்டம் தீட்டப்பட்டால் என்ன என்ன காரணத்தினால் நஷ்டம் ஏற்படுகிறது, எப்படி அதைத் திருத்துவது என்று எல்லாம் பார்க்காமல், அக்கு வேறு, ஆணி வேறு என்று பிரித்து விற்றுவிட்டார்கள். இன்னொரு தெர்மல் ஸ்டேஷனை, அனல் மின் நிலையத்தை ஏற்படுத்தவேண்டுமென்றால் குறைந்தது ஐந்து ஆண்டுகளாவது ஆகும். இந்த நிலையில் இருந்த மின்நிலையத்தையும் பஞ்சாப் எலக்ட்ரிசிடி ஸிஸ்டத்திற்கு விற்று விட்டார்கள் என்றால் மின்சாரப் பற்றாக்குறை வராமல் என்ன செய்யும்? கேட்டால் பதில் சொல்லலாம். உங்களுக்கு எண்ணிக்கை இருக்கிறது, எதுவும் சொல்லலாம்.

எங்கள் தொகுதியில் அரிசிக் கடை வேண்டுமென்று கேட்டால் உடனே அமைச்சர் இடத்தில் வந்தார்கள், அம்மையார் கேட்டார்கள் என்று சொல்கிறார்கள். தொகுதிக்காக செய்யவேண்டிய காரியங்களைச் செய்யுங்கள் என்றுகூட சொல்லக்கூடாதா?

போலீஸ் பாதுகாப்புக் கேட்டு முதலமைச்சரைச் சந்தித்தார்கள் என்று சொல்கிறார்கள். போலீஸ் பாதுகாப்பு கொடுக்க வேண்டியது உங்களுடைய கடமை; அதை நீங்கள் செய்தால் செய்யுங்கள், செய்யாவிட்டால் விட்டுவிடுங்கள். அதை விட்டுவிட்டு சலுகை கேட்டார்கள் என்ற முறையிலே சொல்வது சரியல்ல. நீங்கள் எல்லாம் எதிர்க்கட்சியிலே, இருந்தபொழுது எங்கள் மந்திரிகளை போய்ப் பார்க்கவில்லையா? . . .

**திரு. கு. காமாட்சி :** அம்மையார் அவர்கள் ஒற்றிவைப்புத் தீர்மானத்தின் மீது பேசுகிறார்களா அல்லது வேறு. . .

**திருமதி த. ந. அனந்தநாயகி :** என்னுடைய பாயின்டை விளக்கமாக எடுத்துச் சொல்வதற்காக நான் இதைச் சொல்கிறேன். . .

**திரு. கு. காமாட்சி :** பாயின்ட் ஆப் ஆர்டர் சார், இங்கே இப்பொழுது நடப்பது மின்சாரவெட்டைப்பற்றி ஒற்றிவைப்புத் தீர்மானம் ஆகும். ஆனால் இங்கே அம்மையார் அவர்கள்



1973 பிப்ரவரி 7] [திரு. கு. காமாட்சி]

அமைச்சர் பதவியேற்பதற்கு வயது வரம்பு வேண்டும், மூத்த மந்திரி, பவர்புல் மந்திரி என்றெல்லாம் சொல்கிறார்கள். இது எந்த வகையிலே இங்கே இப்பொழுது பொருந்தும் என்பதை அறிய விரும்புகிறேன், அது இந்தப் பிரச்னை சம்பந்தப்பட்ட பிரச்னையா?

**திருமதி த. ந. அனந்தநாயகி :** சமய நல்லூர் தெர்மல் ஸ்டேஷனை ஏன் விற்றார்கள் என்று கேட்டேன். . .

**திரு. கு. காமாட்சி :** நான் கேட்பது, அமைச்சராகப் பொறுப்பு ஏற்றுக்கொள்வதற்கு வயது வரம்பு ஏதாவது உண்டு என்று சொல்கிறார்களா? ஜூனியர் மந்திரி, பவர்புல் மந்திரி என்றெல்லாம் சொன்னார்கள், அது இங்கே தேவைதானா?

**திருமதி த. ந. அனந்தநாயகி :** வயது மட்டுமல்ல, அனுபவம் இவையெல்லாம் தேவைப்படுகிறது. . .

**திரு. கு. காமாட்சி :** ஏற்கனவே அவர்கள் கிட்டத்தட்ட ஐந்தாண்டுக்காலம் மந்திரியாக இருக்கிறார்கள். நல்ல முறையிலே பணிகளை ஆற்றிவருகிறார்கள். திட்டங்களைத் தீட்டிவருகிறார்கள். ஆகவே அனுபவம் உள்ளவராகத்தான் இருக்கிறார்கள்.

**மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர் :** அமைச்சரவர்களைப் பற்றித் தனிப்பட்ட முறையில் குறை சொல்லக்கூடாது. நிர்வாகத்தைப்பற்றி குறை சொல்லலாம், அதில் தவறு இல்லை. அதேநேரத்தில் இந்த ஒற்றிவைப்புப் பிரச்னையைப்பற்றி, இருக்கின்ற மின்சார வெட்டைப்பற்றிப் பேசாமல் வீட்டிற்குப் போய் விட்டீர்களே?

**திருமதி த. ந. அனந்தநாயகி :** அதிலேதான் பேசுகிறேன். Why can't you have a powerful Minister? என்று கேட்கிறேன். ஆகையால் தெர்மல் ஸ்டேஷன் சமய நல்லூரிலே அந்த நிலைக்காளானது.

எதற்குச் சொல்கிறேன் என்றால், போலீஸ் இலாக்கா முதலமைச்சரிடத்திலே இருக்கிறது. அம்மாதிரி மின்சாரத் துறையும் அவர்களிடத்திலே இருந்தால் பவர்ஃபுல்லாக இருக்கலாம். ஆகவே சில இலாக்காக்கள் இப்படித்தான் இருக்கவேண்டும்.

ஆகவே தனிப்பட்ட முறையில் யாரையும் குறை சொல்வதற்காகச் சொல்லவில்லை. ஜனநாயகத்திலே சில காரியங்கள் சில சக்தியோடு தான் இயங்க வேண்டும். அந்த வகையில் தெர்மல் ஸ்டேஷன் இப்படிப் போகிறது.

எண்ணூரிலே தண்ணீரை இறைப்பதற்குப் பதிலாக மணலை இறைக்கிறது குழாய். இதைச் சரி செய்வதற்கு அவசரமான நடவடிக்கை எடுக்கவில்லை. கேட்டால் தண்ணீருக்குப் பதிலாக மணல் வருகிறது என்று சொல்கிறார்கள். என்னதான் செய்தாலும் தண்ணீருக்குப் பதில் மணலைத்தான் இறைக்கிறது. இது மிகவும் முக்கியமான பிரச்னை. ஏன் இந்த நான்கிலிருந்து ஆண்டுகளில் சீர்படுத்தத் தவறினீர்கள்? டெக்னிக்கல் அதிகாரிகளாக உள்ளவர்களிடம் திறமையில்லையா? எனவே, எண்ணூரிலே நாம் எதிர்பார்த்த அளவில் இல்லை.

ஆப்பரேஷன், எஃபிசியன்ஸி, மெயின்டனென்ஸ் மிகவும் குறைச்சலாக இருக்கிறது. அடிக்கடி மின்சாரம் நின்றுவிடுகிறது. அந்த வகையிலே எவ்வளவு மின்சாரம் தேவை, எவ்வளவு நிலக்கரி தேவை என்று கணக்குப் போட்டீர்களா? முழுவதும் நிலக்கரியையே பயன்படுத்துவது என்றால் வருகின்ற நிலக்கரியில் இரயில்வே வேகன்களில் பாதியை அதற்கே கொடுக்க வேண்டியிருக்கும். ஆகவே அதற்கு எரி எண்ணெயை உபயோகப்படுத்த முடியுமா என்று ஆராய்ச்சி செய்து பார்த்திருக்கவேண்டும். அவ்வாறு செய்தீர்களா? அப்படிச் செய்யவில்லை. கிராமத்திற்குக் கிராமம் மின்சாரம் கொடுக்கும்பொழுது லோடு எவ்வளவு, சப்ளை எவ்வளவு, ஜெனரேஷன் எவ்வளவு என்று பார்த்தீர்களா? பூர்த்தி விழாக்களுக்காக, விளம்பரத்திற்காகத் தேவைப்படுகிறது என்று, கணக்குப் போடாமல், சிந்திக்காமல் செய்ததன் காரணமாக ஏற்பட்டதற்கு 'சவுத் வெஸ்ட் மான்சூன் ஃபெய்லியர்' என்று கண்ணை மூடிக்கொண்டு சொன்னால் சரியாகிவிடாது என்று கடுமையாக எடுத்துச் சொல்வதற்கு ஆசைப்படுகிறேன்.

அதுமட்டுமல்லாமல், 'வாட்டர் ஸ்டோரேஜ் லெவலை' ஹையாக வைத்திருந்தால் இவ்வளவு மோசமாக ஆயிருக்காது. மின்சார வெட்டு வரும் என்று எதிர் பார்த்து அதைத் தவிர்ப்பதற்கு முயற்சியெடுத்து, என்னென்ன குறைகள் இருக்கின்றன என்று பார்த்து சரி செய்து வைத்திருந்



தால் நன்றாக இருந்திருக்கும். இது போதும் என்று நினைத்து ஊருக்கு ஊர் மின்சாரத்தைக் கொடுத்து பூர்த்தி விழா என்று நடத்தினீர்களே தவிர, டிமாண்ட் எவ்வளவு, விவசாயத்திற்கு எவ்வளவு தேவைப்படும் என்று பார்த்தீர்களா?

**மாண்புமிகு பேரவைத் துணைத்தலைவர் :** விவாதத்திலேயே இறங்கி விட்டீர்களே?

**திருமதி த. ந. அனந்தநாயகி :** நீங்கள் பிறகு 'அலவ்' பண்ணப் போவதில்லை. ஆகவே இப்பொழுதே சொல்லிவிடுகிறேன். நீங்கள் யார் யாருக்கு 'பிரையாரிட்டி' கொடுக்கிறீர்கள்? மேஜர் இன்ஸ்டிடியூஷன்ஸ், சினிமா இவைகளுக்கு. அதைவிட முக்கியம் ஸ்மால் ஸ்கேல் இன்டஸ்ட்ரீஸ். இப்படிப்பட்ட அக்ரிகல்சர், ஸ்மால் ஸ்கேல் இண்டஸ்ட்ரிஸ் போன்றவைகளுக்கு அதிகமாகக் கொடுக்க முடியுமா என்று பார்ப்பது நல்லது. இதற்காக, துரிதமாக, இப்பொழுதே முயற்சி செய்ய வேண்டும். தூத்துக்குடியிலுள்ள தெர்மல் ஸ்டேஷன், கல்பாக்கம் அணு மின்சார நிலையத்தில் இருக்கும் தெர்மல் ஸ்டேஷன் போன்ற எல்லா தெர்மல் ஸ்டேஷன்களிலும் 'ஃபுல் கெபாசிட்டி' இருப்பதற்காக ஆராய்ந்து பார்த்து அதற்கான திட்டங்களைத் திறமையாகத் தீட்டுவதை விட்டுவிட்டு, 67-ஆம் ஆண்டிலிருந்து 72-ம் ஆண்டு வரையிலும் அதற்கான முயற்சியில் ஈடுபடாமல் இருந்ததினால், இன்றைக்குத் தமிழகமே இருளிலே சூழ்ந்திருக்கக்கூடிய அவலநிலைக்கு ஆளாகியிருக்கிறது என்ற குற்றச்சாட்டைச் சாட்டி, அதற்காக ஒரு மணி நேரம் இந்த அவையை ஒத்திவைத்து விவாதித்து, உடனடியாக இதைத் தீர்ப்பதற்கு என்ன வழி என்று ஆராய்ந்து பார்ப்பது அவசியம் என்று கூறி முடித்துக் கொள்கிறேன்.

Dr. H. V. HANDE : On a point of personal explanation. The Hon. Member referred as though I had said that Government was not completely responsible. I have maintained throughout that Government is mainly responsible for it. Referring to gross-mismanagement, etc., I did say that Government had not realised the seriousness of the situation and I did say that Government is fully responsible for the present power crisis. I have maintained that stand throughout.

THIRU M. A. LATHEEF: Just to get a clarification on an important point, I want to say something. The hon. Lady Member had referred in her speech some one as 'Junior Minister'.

MR. DEPUTY SPEAKER: No explanation now. The hon. Member is not entitled to get an explanation.

THIRU M. A. LATHEEF: What the hon. Member had said had been permitted and it has gone on record. So I am entitled . . .

MR. DEPUTY SPEAKER: You can raise it after I give my ruling on this adjournment motion.

THIRU M. A. LATHEEF: That is no good.

MR. DEPUTY SPEAKER: You are not directly concerned.

THIRU M. A. LATHEEF: As a Member of the House, I am concerned. The hon. Lady Member should not comment on another Member like that.

THIRUMATHI T. N. ANANDANAYAKI: Yesterday I wanted to talk on the adjournment motion on 'textile problem' but you did not permit me to speak. How can you permit the hon. Member Thiru M. A. Latheef to speak?

THIRU M. A. LATHEEF: On a point of Order, Sir. I have been here for the past two years and I have still not known any one as 'Junior Minister'. So far as this Ministry is concerned, I think there are no Deputy Ministers and there are no Ministers of State. There are only Cabinet Ministers and they are all equal in rank.

**மாண்புமிகு டாக்டர் மு. கருணாநிதி :** தலைவரவர்களே, அம்மையார் அவர்கள் ஜூனியர் என்று சொன்னது அந்தஸ்தை வைத்து அல்ல, உருவத்தைப் பார்த்துச் சொல்லியிருப்பார்கள் என்று கருதுகிறேன், அவ்வளவுதான்.

THIRUMATHI T. N. ANANDANAYAKI: Yesterday when I wanted to speak on an adjournment motion, you refused permission for me. Now Thiru M. A. Latheef has been allowed to speak. This is not proper.



(THIRU M. A. LATHEEF: Allowing Mrs. Anandanayaki is perhaps always proper.)

**திரு. நா. வீராசாமி :** பாயிண்ட் ஆப் ஆர்டர் சார்.

**மாண்புமிகு பேரவைத் துணைத்தலைவர் :** இந்த விவகாரமே இன்னும் முடியவில்லை. முதலில் இந்தப் பிரச்னையைப் பார்த்து விடலாம்.

THIRU M. A. LATHEEF: The Chief Minister has given an explanation that there are no junior and senior Ministers. In his reply he has indicated that. So far as we are concerned all Cabinet Ministers are with equal rank and with equal status. I wanted to get a clarification from the Chief Minister whether there are junior and senior Ministers in the Cabinet. He has said 'No' and I am satisfied with the reply.

MR. DEPUTY SPEAKER: So far as I am concerned, there is no point of order.

**திரு. நா. வீராசாமி :** என்னுடைய பாயிண்ட் ஆஃப் ஆர்டர் என்னவென்றால் திரு. லத்தீப் அவர்கள் ஒரு பாயிண்ட் ஆஃப் ஆர்டரை எழுப்பினார்கள். அதற்கு ரூலிங் கொடுக்க வேண்டியது டெபுடி ஸ்பீக்கர். ஆனால் திருமதி அனந்தநாயகி அம்மையார் அவர்கள் எழுந்திருந்து உங்களை 'இன்புளுயன்ஸ்' பண்ணுவது மாதிரி அலவ் செய்யக்கூடாது என்று சொல்வது முறையா?

**மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர் :** இது பாயிண்ட் ஆஃப் ஆர்டர் அல்ல.

DR. H. V. HANDE: While saying certain things on an adjournment motion, the hon. Mrs. Anandanayaki has said that 'power' has been allotted to a junior Minister. It is up to the Chief Minister to say that it is not allotted to a junior or senior Minister. Again there is a convention that the Chief Minister sits first, then the Senior Ministers sit in an order. We have that convention. Probably, the lady Member wanted that the portfolio of 'power' should be transferred to a Senior Minister. I have also mentioned when Mr. Annadurai was Chief Minister, that the portfolio of 'health' should be transferred to a Senior Minister.

So that right to say so is there for a member and it is up to the Chief Minister to reply that there is no such distinction as Junior and Senior. That is the point I want to submit.

THIRU M. A. LATHEEF : In this House we must maintain an order and we have to function within the limits of our rules. Speaking on an adjournment motion, one Member should not try to attack another Member on the basis of presumption.

**திரு. என். கிட்டப்பா** :* * *

**மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர்** : அந்த மாதிரிப் பேசக்கூடாது. அது நல்லதல்ல. அவர் பேசியதற்கு நோக்கம் கற்பிப்பது நல்லதல்ல.

**திருமதி த. ந. அனந்தநாயகி** : Sir, I take strong objection to the hon. Member imputing motives நான் சொன்னது 'ராங்கிங்' முறை இருப்பதைப் பற்றியாகும். அதைத் தவறாகத் திரித்துக் கூறுவது சரியல்ல.

**மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர்** : எதற்காக இந்த ஆசனத்தை உயரமாகப் போட்டிருக்கிறார்கள்? எல்லோருமே பிரசைடிங் ஆபீசர்களாக ஆகிவிட்டால் எப்படி அவை நடக்கும்? கிட்டப்பா சொன்ன வார்த்தைகள் சரியல்ல என்று நானே கூறி விட்டேன். திரு. கிட்டப்பா அவர்கள் சொன்ன அந்த் வார்த்தைகள் அவை நடவடிக்கைக் குறிப்பிலிருந்து நீக்கப்பட வேண்டுமென்று உத்தரவிடுகிறேன்.

திரு. லத்தீப் அவர்களுக்கு ஏற்கனவே பதில் சொல்லிவிட்டேன். அமைச்சர்களைப்பற்றிக் குறை சொல்ல உரிமை இருக்கிறது. அதற்குப் பதில் சொல்ல முதல் அமைச்சருக்கும் மற்ற அமைச்சர்களுக்கும் வாய்ப்பு நேரம் இருக்கிறது.

**மாண்புமிகு திரு. ஓ. பி. இராமன்** : துணைத் தலைவர் அவர்களே, இந்த ஆண்டு தென்மேற்குப் பருவ மழை பொய்த்ததாலும், நெய்வேலியில் குறைந்த அளவே மின் உற்பத்தி

* மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவரின் ஆணைக்கிணங்க அகற்றப்பட்டது.



செய்யப்பட்டதாலும், அண்டை மாநிலங்களில் இருந்து கிடைத்து வந்த மின்சக்தி நிறுத்தப்பட்டு விட்டதாலும் இந்த ஆண்டு மின் சக்திப் பற்றாக்குறை ஏற்பட்டது. இதனால் 1972 அக்டோபர் முதல் 1973-ம் ஆண்டு மே திங்கள் வரை நமக்கு 5,530 மில்லியன் யூனிட் மின்சக்தி தேவையாயிருக்க சுமார் 1,300 மில்லியன் யூனிட் மின் சக்தி பற்றாக்குறை நிலவுகிறது என மதிப்பிடப்பட்டது. எனவே, 1—10—72 முதல் மின்சக்தி பயன்படுத்துவதில் 25 சதவீத வெட்டினை அரசு கொண்டு வரவேண்டியதாயிற்று. நீர் மின் சக்திக்காக உள்ள நீர்த் தேக்கங்களில் நீர் குறைந்து விட்டதன் காரணமாக அரசு 1—2—73 முதல் மின்சார வெட்டினை 25 சத வீதத்திலிருந்து 40 சதவீதமாக உயர்த்த வேண்டிய கட்டாயத்துக்கு வரவேண்டியதாயிற்று. ஆயினும் குறைவழுத்த மின்சக்தி பயன்படுத்தும் தொழிற்சாலைகளைப் பொறுத்தமட்டில் 2,000 யூனிட்டுக்குக் குறைவாக மின்சக்தி பயன்படுத்துவதில் 25 சதவீதம் மின்வெட்டு செயலுக்குக் கொண்டு வரப்பட்டுள்ளது. செய்தித்தாள் நிறுவனங்களுக்கு 10 சதவீதம் மின்வெட்டு விதிக்கப்பட்டுள்ளது. இன்றியமையாப் பணிகளுக்கும் வீடுகளில் 100 யூனிட்டுகளுக்கும் குறைவாக மின்சக்தி பயன்படுத்து வோருக்கும் இந்த மின்சார வெட்டிலிருந்து விலக்கு அளிக்கப் பட்டுள்ளது. மின்சக்தி பயன்படுத்துவோர் ஏனையோர்க்கும் வணிக நிறுவனங்களுக்கும் 25 சதவீதம் மின்வெட்டு விதிக்கப் பட்டுள்ளது. வேளாண்மை விசையேற்றங்களுக்கு இந்த மின்சார வெட்டிலிருந்து விலக்கு அளிக்கப்பட்டுள்ளது. ஆனால் இந்த விசையேற்றங்கள் அனைத்துத் தொகுதிகளாகச் சேர்க்கப்பட்டு ஒவ்வொரு தொகுதிக்கும் பகல் நேரத்தில் 6 மணி நேரத்திற்கு மின்சக்தி வழங்கப்படுகிறது.

ஆந்திர மாநிலத்தில் போராட்டம் நடைபெறுவதனால், நிலக்கரிப் போக்குவரத்து தடைப்பட்டிருக்கிறது. இதன் விளைவாக எண்ணூர், பேசின்பிரிட்ஜ் ஆகிய இடங்களில் உள்ள மின் உற்பத்தி நிலையங்களிலும் மின் உற்பத்தி அண்மையில் பாதிக்கப்பட்டிருக்கிறது. இதனால் வங்காளம், பீஹார், ஆகிய மாநிலங்களிலிருந்து கப்பல் மூலமாக நிலக்கரி கொண்டு வரவும் மின்சார வாரியம் ஏற்பாடு செய்துள்ளது.

[திரு. ஓ. பி. இராமன்] [1973 பிப்ரவரி 7

தற்போதுள்ள மின் உற்பத்தித் திறன் 850 மெகாவாட் மட்டுமேயாகும். இந்தக் கட்டுப்பாடுகள் இருந்தும் நமக்கு சுமார் 1,200 மெகாவாட் மின்சக்தி தேவைப்படுகிறது. இதன் விளைவாக பயன்படுத்தும் மின்சக்தியின் அளவு கிடைக்கக்கூடிய மின் சக்தியின் அளவைப் பொறுத்துக் குறைக்கப்பட வேண்டும். மின் சக்தி தேவை குறைக்கப்படாவிடின் மின்னலைலை வேறுபடும் அளவு (frequency) குறைந்துவிடும். மின் அலை வேறுபாட்டு அளவு 49.5 சைக்கிள்களுக்குக் குறைவாக இருந்தால், அனல் மின் உற்பத்தி நிலையங்களைப் பாதுகாப்புடன் இயக்க இயலாது. அதோடு இதற்குக் கேரள மாநிலமும் மறுப்புத் தெரிவிக்கிறது. எனவே, பயன்படுத்தும் மின்சக்தியின் அளவைக் குறைப்பது தவிர்க்க முடியாததாகும்.

இந்த மின்சார வெட்டு தமிழ்நாட்டிற்கு மட்டும் உரியதல்ல. ஆந்திரப் பிரதேசம், மைசூர், மகாராட்டிரம், குஜராத், உத்திரப் பிரதேசம், ஹரியானா, பஞ்சாப், மேற்கு வங்காளம் ஆகிய மாநிலங்களிலும் மின்சார வெட்டு செயலில் இருக்கிறது. இத்தகைய நெருக்கடியான நிலையில் நாடு முழுவதும் மின்சாரப் பற்றாக் குறையை எதிர்நோக்கி இருக்கும்போது சிக்கன முறைகளை நாம் கண்டிப்பாக மேற்கொள்ள வேண்டும். மக்களின் முழு ஒத்துழைப்புடன் மட்டுமே இதனை நாம் மேற்கொள்ள முடியும்.

மின்சார உற்பத்தியை ஓரளவு பெருக்க வேண்டுமென்றால், இரண்டு காரியங்கள் நிறைவேற்றப்பட வேண்டும். ஒன்று தண்ணீர் இருக்க வேண்டும். இரண்டாவது நிலக்கரி இருக்க வேண்டும். மழை பெய்யாததால் தண்ணீர் இல்லை. அதற்கு ஒன்றும் செய்ய முடியாது என்று டாக்டர் ஹாண்டே அவர்களே கூடக் குறிப்பிட்டார்கள். இரண்டாவது நிலக்கரி. ஆந்திரப் பிரதேசத்தில் சிங்கரேணியில் இருந்து 10,000 டன் வாகனில் ஏற்றப்பட்டிருக்கிறது. ரயில் போக்குவரத்து தொடர்ந்து தடைப்பட்டிருப்பதன் காரணமாக நிலக்கரி வந்து சேர முடியவில்லை. டாக்டர் ஹாண்டே அவர்கள் குறிப்பிட்டார்கள். உடனடியாக கப்பல் துறையிடத்தில் தொடர்புகொண்டு நிலக்கரியைக் கப்பல் மூலம் கொண்டுவர ஏற்பாடு செய்ய வேண்டுமென்று சொன்னார்கள். மூன்று கப்பல்கள் மூலமாக 7,000 டன் ஏற்றி வருவதற்கு ஒப்பந்தமாகி இருக்கிறது.



1973 பிப்ரவரி 7] [திரு. ஓ. பி. இராமன்]

அம்மையார் அவர்கள் பேசும்போது சில கருத்துக்களைச் சொன்னார்கள். எண்ணூரில் தண்ணீர் இறைப்பதற்காக அமைக்கப்பட்ட குழாய்களை மண் இறைப்பதற்காகப் பயன்படுத்தினார்கள் என்று விவரம் சரியாகத் தெரியாமல் சொன்னார்கள். மணலை இறைக்கத்தான் அந்தக் குழாய்களே போடப்பட்டன. தண்ணீர் இறைப்பதற்காக அந்தக் குழாய்கள் போடப்படவில்லை என்பதை அவர்கள் தெரிந்து கொள்ள வேண்டும்.

**டாக்டர் எச். வி. ஹாண்டே :** முதலில் டிபிகல்டி இருந்தது. டிரான்ஸ்போர்ட் மினிஸ்டர் கூடச் சொன்னார்கள். After we had represented the matter to the Government the difficulty was got over.

THIRUMATHI T. N. ANANDANAYAKI: Sir, still the difficulties have not been got over. I got information that it will take Rs. 4 crores to rectify the defect. Atleast they must get spare parts from foreign ciuntries. All these things have to be done on an emergent scale.

**மாண்புமிகு திரு. ஓ. பி. இராமன் :** டிபிகல்டிஸ் பற்றி சொன்னதற்காகச் சொல்லவில்லை. குழாய்கள் தண்ணீர் இறைப்பதற்காகப் போடப்படவில்லை, மணல் இறைப்பதற்காகத்தான் போடப்பட்டன என்பதைத் தெரிவித்தேன். எந்த ஒரு இயந்திரமும் முதலிலேயே சரியாக இயங்கிவிடும் என்று சொல்லிவிட முடியாது. அந்த இயந்திரத்தில் முதலிலே சில ரிப்பேர்கள் இருந்தன. அவை உடனடியாக நிவர்த்திக்கப்பட்டு விட்டன.

சினிமாக்களுக்கெல்லாம் மின்சாரத்தைக் குறைக்கக்கூடாதா என்று கேட்டார்கள். எல்லோரும் சேர்ந்து சொன்னால் சினிமாக்களுக்கும் குறைக்கத் தயாராக இருக்கிறோம். இதிலே அரசியலைப் பயன்படுத்தக்கூடாது. முன்பு சினிமாக்களுக்குக் குறைத்தபோது சினிமாக்களுக்கெல்லாம் மின்சாரத்தை நிறுத்தி விட்டார்களே என்றார்கள். கட்சிக் கண்ணோட்டத்தில் இப்படி எல்லாம் சொல்லுவது சரியல்ல. சினிமாக்களுக்கும் ஓரளவு குறைக்கப்பட்டுத்தான் இருக்கிறது. 33-1/3 சதவிகிதம் இப்போது குறைக்கப்

பட்டிருக்கிறது. மேலும் சினிமாக்களுக்குக் குறைக்க வேண்டுமென்ற ஏகோபித்த கருத்தைக் கூறினால், அரசு அதைச் செய்யத் தயங்காது என்று இந்த நேரத்தில் தெரிவித்துக் கொள்கிறேன்.

இப்போது இருக்கிற சூழ்நிலையில் அரசு எந்த அளவுக்கு நடவடிக்கை எடுக்க வேண்டுமோ, அந்த அளவுக்கு நடவடிக்கை எடுத்திருக்கிறது. தவிர்க்க முடியாத காரணங்களால்தான் மின்சாரத் தட்டுப்பாடு ஏற்பட்டிருக்கிறது. மழை இல்லை. நெய்வேலி சரியாக இயங்கவில்லை. நிலக்கரி சரிவர வந்து சேரவில்லை.

எரி எண்ணெய் பயன்படுத்துவதைப் பற்றிச் சொன்னார்கள். அதைப் பற்றிச் சரியாகத் தெரிந்து கொள்ளாமல் சொன்னார்கள். ஏற்கனவே 25 சதவிகிதம் அந்த பர்னஸ் ஆயில் பயன்படுத்தப் பட்டிருக்கிறது.

Dr. H. V. HANDE : Actually fuel oil should not be used and that is against the rules of the Government of India. So I want to know whether it is in order for the Government to use fuel oil in the Basin Bridge Power House instead of coal if so how much?

**திருமதி த. ந. அனந்தநாயகி :** தெரியாமல் சொன்னார் என்று ஒவ்வொன்றுக்கும் சொல்லுவது சரியல்ல. நிலக்கரி இடைக்கவில்லை என்றால், அதற்கு பதிலாக ஃப்யூவல் ஆயிலைப் பயன்படுத்தக் கூடாதா என்ற ஒரு யோசனையைக் கூறினேன். உடனே தெரியாமல் சொல்லிவிட்டார் என்றால் என்ன அர்த்தம்? நாங்கள் என்ன டெக்னிகல் எஞ்சினியரா? அதாரிடியுடன் சொல்லுவதற்கு?

You consult the technical department whether it can be done

மு.ப. 11-00 or not.

**மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர் :** விவாதம் பண்ணுகிறீர்கள்.

**மாண்புமிகு திரு. ஓ. பி. இராமன் :** தலைவர் அவர்களே, ஃப்யூவல் ஆயிலை உபயோகப்படுத்துவது சட்டத்திற்கு மாறுபட்டதாகும் என்று டாக்டர் ஹாண்டே அவர்கள் கூறினார்கள்



ஆனால் மத்திய அமைச்சர் டாக்டர் கே. எல். ராவ் அவர்கள் ஃப்யூவல் ஆயில் உபயோகிப்பது நல்லது என்று ஆலோசனை சொல்லியிருக்கிறார்கள். அதை ஏற்றுக்கொண்டு செய்திருக்கிறோம்.

ஒரு நிலையத்தைக் கட்டும்போது ஆபத்தான சமயத்தில் ஃப்யூவல் ஆயில் உபயோகிப்பதற்கு தக்கமுறையில் டிசைன் செய்து கட்டப்பட்டது. எனவே அரசாங்கமோ அல்லது அதிகாரிகளோ ஏதோ தவறு செய்துவிட்டதாகக் கருத வேண்டாம். உண்மையைச் சொல்லவேண்டுமென்று சொன்னால், நாலைந்து ஆண்டுகளாகவே தமிழ்நாட்டில் மின்சாரப் பற்றாக்குறை இருந்து வந்தது என்பது பலருக்குத் தெரியாமல் இருந்திருக்கலாம். நாம் மைசூரிலிருந்தும் கேரளாவிலிருந்தும் மின்சாரம் வாங்கித்தான் நிறைவு செய்து வந்தோம். இந்த ஆண்டு அங்கும் மழை இல்லாததால் அவர்களால் கொடுக்கமுடியவில்லை. எனவே இந்த மின்சார வெட்டு வந்தது. ஆறு பவர் ஹவுஸ்ஸை முழுமையாக ஓட்டமுடியவில்லை. அண்டை மாநிலங்களிலிருந்தும் நமக்கு கிடைக்கவில்லை. எதிர்பாராத சூழ்நிலை காரணமாக நமக்கு இந்த ஆண்டு இந்த மின்சாரப் பற்றாக்குறை ஏற்பட்டிருக்கிறது. அவையை ஒத்திவைத்து என்னென்ன பேசவேண்டுமோ அவைகளையெல்லாம் . . .

Dr. H. V. HANDE : May I know whether we have received at least one shipment of coal? One is no good at all. When are we going to receive it? Is the Hon. Chief Minister going to take up the issue at the Prime Minister's level or leave the matter as it is? I want to know the Government responsibility in this matter. The Chief Minister is keeping silent as though the Government is not connected at all with this thing. In spite of our taking up so much time of the House, we have not heard anything from the Chief Minister. Has the Government realised the seriousness of the situation? Is there going to be high level discussion among the Chief Minister and Prime Minister over this? That is the point I want to know.

**மாண்புமிகு திரு. ஓ. பி. இராமன் :** 18-ம் தேதி அன்று முதல் கப்பலில் ஏற்றிவிடுவதாகச் சொல்லியிருக்கிறார்கள். அதுபற்றி அந்தக் கம்பெனியுடன் பேசியிருக்கிறோம். தொழிலாளர் சிக்கல்

வேறு இருந்தது. ஏழு ரூபாய் இருந்தது. இப்போது 21 ரூபாய் கூலி கேட்கிறார்கள். அதிகமென்று இருந்தாலும் பரவாயில்லை என்று சுமுகமாகப் பேசி எடுக்கவேண்டிய முயற்சிகள் முறைப்படி எடுக்கப்பட்டிருக்கின்றன. திடீரென்று பல பகுதிகளில் நின்று விடுகிறது என்று சொன்னார்கள். சைக்கிளுக்குக் கீழ் குறைந்தால் எண்ணூறாக இருந்தாலும் சரி, தொள்ளாயிரமாக இருந்தாலும் சரி மின் நிலையமே உடைந்துவிடும். 49.5 சைக்கிளுக்குக் குறைந்தால் டிஸ்கனெக்ட் செய்யவேண்டிய நிலையில் இருக்கிறது. விவசாயிகளுக்கு குறைந்தது ஆறு மணி நேரம் கொடுக்கவேண்டுமென்று உத்தரவாதம் தரும் அளவில் அதிகாரிகள் கேட்டுக்கொள்ளப் பட்டிருக்கிறார்கள்.

THIRU R. PONNAPPA NADAR: Is there any difficulty in commissioning Kodayar Hydel project? The machinery is ready and what is the difficulty in commissioning that project ?

**மாண்புமிகு திரு. ஓ. பி. இராமன்:** ஏற்கனவே ஓடிக் கொண்டிருந்தது. ஒரு பின் பழுதடைந்திருக்கிறது. ஸ்விட்சர்லாந்திலிருந்து நிபுணர்கள் வந்து பார்த்துக் கொண்டிருக்கிறார்கள். இன்னும் இரண்டு மூன்று நாட்களில் சரியாகிவிடும். மிகக் குறைவான அளவிற்குத்தான் அங்கு மின்சாரம் எடுக்கமுடியும். ஆக, சபையை ஒத்திவைத்து விவாதிப்பதற்கான தேவை இல்லை என்று தெரிவித்துக் கொள்கிறேன்.

**மாண்புமிகு திரு. செ. மாதவன்:** தலைவர் அவர்களே, தமிழ் நாட்டில் மின்சாரப் பற்றாக்குறை ஏற்பட்டிருப்பதுபற்றி எதிர்க் கட்சித் தலைவர்கள் இங்கு எடுத்துச்சொன்னார்கள். மாநில அரசு இதில் மிகுந்த அக்கறை காட்டுகிறது என்பதற்கு எந்தெந்தக் கருத்துக்கள் இங்கு விவாதத்திற்கு வைக்கப்பட்டனவோ, எந்தெந்த ஆலோசனைகள் இங்கு கூறப்பட்டனவோ அத்தனை யையும் இந்த மாநில அரசு ஏற்கனவே பரிசீலித்து என்னென்ன முயற்சிகள் எல்லாம் எடுக்கப்பட்டிருக்கின்றன என்ற செய்தி களும் வந்துள்ளன. இப்போது கொடுக்கப்படுகிற தகவல்களை வைத்துக்கொண்டு இன்னும் விரைவாக மின்சாரக் கட்டுப்பாட்டை எப்படிச் சமாளிப்பது என்பதைப் பரிசீலிப்பதற்கு ஆட்சேபணை யில்லை என்பதைத் தெரிவித்துக்கொள்கிறேன்.



இப்போது அமைச்சர்கள் அளவில் எல்லோரும் சேர்ந்து பேசி நடவடிக்கைகள் எடுக்கப்பட்டிருக்கின்றன. அதிகாரிகள் அளவில் தலைமைச் செயலாளர் இதில் தலையிட்டு மின்சார வாரியத்தினரையும், பல்வேறு துறைகளைச் சேர்ந்தவர்களையும் கலந்து விவாதித்து முடிவு எடுக்கவும் ஏற்பாடு செய்யப் பட்டிருக்கிறது. இக்கட்டான நிலைமையை நாம் எப்படிச் சமாளிப்பது என்பது வேறு, இதை வைத்து ஒரு அரசாங்கத்தை எப்படி குறை கூறுவது என்பது வேறாகும்.

இந்த விவாதத்தில் சமயநல்லூர் இழுக்கப்பட்டது. ஏற்கனவே இங்கு பதில் சொல்லப்பட்டிருக்கிறது. டாக்டர் ஹாண்டே அவர்கள் உட்கார்ந்துகொண்டே பதில் சொன்னார்கள். அனந்த நாயகி அவர்களுக்கு, உண்மையை உணர்ந்ததற்குப் பாராட்டு கிறேன். சமயநல்லூரில் மின்சார உற்பத்தி செய்வதில் அதிக உற்பத்திச் செலவாகிறது. அது தேவையில்லாத மின்சார நிலையம் என்று ஒரு நிபுணர் குழு சொன்னதற்கும் இப்போது ஏற்பட்டிருக்கும் மின்சாரப் பற்றாக்குறையையும் சேர்த்து அபவாதத்தைக் கிளப்புவது சரியல்ல. அதேபோல் மின்சார உற்பத்தியில் நம் மாநிலம் ரொம்பமோசம் என்று குறை கூறி மின்சார வாரியமே மோசமானது என்று முடிவு கட்டுவது தவறான தாகும்.

இந்திய நாட்டிலேயே தமிழ்நாட்டு மின்சார வாரியம் மிக உயர்ந்த பெயரை எடுத்திருக்கிறது. நம் தமிழ்நாட்டு மின்சார வாரியம் நல்லமுறையில் செயல்பட்டு வருகிறது என்பதை யாரும் மறுத்துவிட முடியாது. ஏதோ மின்சாரப் பற்றாக்குறை தமிழ் நாட்டுக்கு மட்டும் வந்துவிட்டது என்று ஊகித்து நம்மை நாமே தாழ்த்திக் கொள்வது தவறு. இந்தியா முழுவதிலும் மின்சாரப் பற்றாக்குறை ஏற்பட்டிருக்கிறது. மத்திய அரசும் அதை ஏற்றுக் கொண்டு எப்படி அதைச் சமாளிப்பது என்ற முயற்சியில் மத்திய அரசு ஈடுபட்டிருக்கிறது. ஏதோ தமிழகத்தில், திராவிட முன்னேற்றக் கழக ஆட்சியில் வந்து விட்டதாக ஊகித்துக்கொண்டு பேசுவது பொருத்தமற்றது.

மின்சாரப் பற்றாக்குறை என்று சொல்கிறார்கள். அருமையான பான், நல்ல காற்று, நல்ல வெளிச்சம் இவை கிடைக்கிறது இங்கு. பஞ்சாபில் சென்று பார்த்தால், நான் சென்று பார்த்தேன்,

தொழிற்சாலைகள் மூடப்பட்டுக் கிடக்கும் காட்சியைப் பார்த்தேன். வீதிகளில் விளக்குகள் எரியாத காட்சியைப் பார்த்தேன். அரசாங்க அலுவலகங்களில் பான் ஓடாத காட்சியைப் பார்த்தேன். ஆக, ஏதோ தமிழ்நாட்டில் மட்டும் மின்சாரப் பற்றாக்குறை வந்து விட்டதாகக் கருதுவது தவறு. இதற்குக் காரணம் என்ன? நம் அரசாங்கம் எடுக்கவேண்டிய நடவடிக்கைகளை எடுக்கவில்லை, அது காரணமா அல்லது மத்திய அரசு திட்டங்களில் தவறி விட்டது அது காரணமா என்பதைத் தெளிவாகப் புரிந்துகொள்வார்களானால், இந்தச் சர்ச்சைக்கே இடமிருக்காது.

தமிழ்நாட்டிலுள்ள ஹைடல் பவர், தண்ணீரைக் கொண்டு பவர் உற்பத்தி செய்வதற்கு அத்தனை நடவடிக்கைகளையும் எடுத்திருக்கிறோம். இன்னும் எங்கேயாவது சிறிய சிறிய அளவில் தண்ணீரைப் பயன்படுத்தி ஹைடல் பவரை உற்பத்தி செய்ய வாய்ப்பிருக்கிறதோ, அந்த வாய்ப்புகளை எல்லாம் மத்திய அரசிடம் எடுத்துக்கூறி நம் திட்டக்குழு, நம் அரசு சார்பில் இந்தத் திட்டங்களுக்கு உடனடியாக அனுமதி தரவேண்டுமென்று வற்புறுத்தியிருக்கிறோம். அது பத்திரிகைகளிலும் வந்திருக்கிறது. திருமதி அனந்தநாயகி அவர்கள் கொஞ்ச நேரம் குறை சொல்லலாம், இரண்டு மூன்று நிமிடங்கள் சொல்லிவிட்டு இம்மாநிலத்தின் சார்பில் இவ்வளவு பவர் ப்ராஜக்ட்ஸ்க்கு அனுமதி கோரப்பட்டிருக்கிறது, அதுகுறித்து மத்திய அரசு தயங்குவது தவறு என்று தமிழக மக்கள் சார்பில் வாதாடுகிறேன் என்று சொல்லியிருந்தால், சிறிது மகிழ்ச்சி ஏற்பட்டிருக்கும். எங்கள் கரங்கள் வலுப்பட்டிருக்கும். நாலரைக் கோடி தமிழ் நாட்டு மக்கள் சார்பில் வாதாடினார்கள் என்ற நிலை ஏற்பட்டிருக்கும். ஆனால் இந்த அரசு செய்யும் எந்தக் காரியத்தையும் அல்லது எந்தப் பிரச்னையையும் அரசியல் நோக்கோடு எந்தப் பிரச்னையைப் பற்றியும் பேசும் வாய்ப்பை உருவாக்கிக் கொண்டிருக்கிறார்கள். இதை மாற்றிக் கொள்ளவேண்டும்.

அடுத்து, தர்மல் பவர் பற்றியும் தெளிவாகச் சொல்லியிருக்கிறோம். நெய்வேலியில் நாம் எவ்வளவு மெகாவாட்ஸ் உற்பத்தி செய்ய வேண்டுமென்று திட்டமிட்டோமோ, அதில் பாதி அளவிற்குக் குறைந்திருக்கிறது. இதற்கு யார் பொறுப்பு? நாம்





மத்திய சர்க்காரை குறை சொல்லவேண்டாம், கோபப்படுவார்கள். நான் சொல்லமாட்டேன். நெய்வேலியில் இரண்டாவது சுரங்கம் வெட்டப்பட்டால்தான் இதற்குப் பரிகாரம். அப்போதுதான் நெய்வேலியில் அதிக மின்சாரம் உற்பத்தி செய்வதற்கு ஒரு வாய்ப்பு ஏற்படும் என்ற இந்த அரசின் சார்பில் முதல் அமைச்சர் அவர்கள் தேசீய அபிவிருத்தி மன்றத்தில் எடுத்து வாதாடியது எல்லோருக்கும் தெரியும். அந்தத் துறை அமைச்சர் தமிழ்நாட்டைச் சார்ந்தவர். அவரைக் குற்றம் சொல்லமாட்டேன். அவர்களிடம் நேரடியாக பக்கத்தில் அமர்ந்து பலமணி நேரம் நெய்வேலி பற்றி அதிகக் கவனம் செலுத்தவேண்டுமென்று வாதாடி இரண்டாம் சுரங்கம் வந்தாலொழிய இந்தப் பிரச்னை தீராது என்று எடுத்துச் சொல்லியிருக்கிறோம்.

ஏதோ இயந்திரம் மண் வாறுவதற்கு என்றார்கள், மண் வாறத்தான் அது இருக்கிறது. இயந்திரக் கோளாறு காரணமாக உற்பத்தி குறைந்துள்ளது என்பதையும் மத்திய அரசுக்குத் தெரிவித்திருக்கிறோம். சில முயற்சிகள் எடுக்கப்பட்டு முன்னால் இருந்ததைவிடக் கொஞ்சம் கூடுதல் உற்பத்தியாகிறது. நெய்வேலியில் ஏற்பட்ட இழப்புதான் இதற்கு மூலகாரணம்.

ஹைடல் பவரைப் பொறுத்தவரையில், மராட்டியத்திற்கு அடுத்தபடியாக தமிழகத்தில்தான் தொழிற்சாலைகளுக்காக அதிகமாகப் பயன்படுத்துகிறோம். அதை நாம் எப்படிச் சரிக்கட்டுவது என்பதுதான் பிரச்னையாக இருக்கிறது. மைசூரிலிருந்தும், கேரளாவிலிருந்தும் நாம் அதிகமான மின்சாரத்தை வாங்கி அதை சரிக்கட்டி வந்தோம். மைசூரில் ஏற்பட்டுள்ள வறட்சியின் காரணமாக, அவர்கள் கொடுக்கின்ற பவரைக் குறைத்து விட்டார்கள். கேரளாவிலிருந்து அவ்வளவாக மின்சாரம் வரவில்லை. தமிழ்நாட்டில் ஏராளமாக மழைபெய்து இருந்தாலும், நமக்கு எங்கே கேட்ச்மெண்ட் ஏரியா இருக்கிறதோ, அங்கே சரியானபடி மழை பெய்யவில்லை. குந்தா பிராஜக்ட்க்கு அதிகமான அளவுக்கு தண்ணீர் வரவில்லை. இப்படி பலவித எதிர்பாராத காரணங்களால், தமிழ்நாட்டில் பற்றாக்குறை ஏற்பட்டிருக்கிறது. அதை நாம் எப்படிச் சரிக் கட்டுவது என்பதைப் பார்க்கவேண்டும். மேட்டூரிலுள்ள தண்ணீரை வைத்துக்கொண்டு அதிகமான மின்சாரத்தை தற்போது உற்பத்தி செய்யலாம் என்றாலும்,

[திரு. செ. மாதவன்] [1973 பிப்ரவரி 7

மூன்று மாதம் கழித்து மிகவும் பயங்கரமான ஒரு சூழ்நிலையை நாம் எதிர்நோக்க வேண்டியிருக்கும். இது இயற்கையாக ஏற்பட்ட நிலைதான். அதை மாற்றியமைக்க நம்மாலான எல்லா நடவடிக்கைகளையும் மேற்கொண்டு வருகிறோம்.

கோலை வைத்து மின்சாரம் உற்பத்தி செய்யலாமே என்று கன்ஸ்டிரக்டிவ் சஜஷன் சொன்னார்கள். அதிலே கூட நம்முடைய அரசு முன் எச்சரிக்கையாக இருந்து நடவடிக்கைகளை மேற்கொண்டிருக்கிறது. இங்கேயிருந்து மின்சார வாரியத் தலைவர் டெல்லிக்கு அனுப்பப்பட்டு, அங்கே ஷிப்பிங் இலாகாவோடு தொடர்பு கொண்டு, எப்படி உடனடியாக கோல் கொண்டு வரலாம் என்பதற்கான ஏற்பாடுகளைச் செய்து வந்திருக்கிறார். கோல் வந்திருக்கிறது. கோல் இல்லை என்று சொல்லக் கூடாது. மத்திய அரசாங்கத்தைக் குறை சொன்னால் [illegible] அவர்கள் சேர்ந்து கொள்வார்கள். அதற்கு அவர்கள் மட்டும் காரணம் அல்ல. அவர்கள் ஓரளவுக்கு உதவி செய்திருக்கிறார்கள். ஆந்திராவில் ஏற்பட்டுள்ள கலவரத்தின் காரணமாக, ரயில்கள் வராத காரணத்தால், இங்கே கோல் வருவது கால தாமதமாயிற்று. ஆகவே, அந்தக் கோல் கப்பல் மூலமாகக் அந்தக் கோல் வந்தால்கூட தற்போதுள்ள பற்றாக்குறையைச் சமாளிக்க முடியாது. இந்தப் பற்றாக்குறை இன்னும் சில மாதங்களுக்கு இருக்கும். அதை விரைவாகத் தடுப்பதற்கான முயற்சிகளை நாம் மேற்கொண்டு வருகிறோம். முதலமைச்சர் உள்பட, தமிழ்நாட்டு அமைச்சர்கள் அத்தனை பேரும்—சீனியர் அமைச்சர், ஜூனியர் அமைச்சர் என்று சொன்னாலும்—சேர்ந்து முயற்சிகளை மேற்கொண்டு வருகிறோம். முதலமைச்சர் கூட, உடனடியாக இது பற்றி நீங்களே மின்சார அமைச்சருடன் கலந்து நடவடிக்கை எடுங்கள் என்று சொன்னார்கள். இவ்வளவு நடவடிக்கைகளை நாங்கள் எடுத்த பிறகும், நாங்கள் அலட்சியம் காட்டுகிறோம் என்று கருதுவது சரியல்ல என்று சொல்லிக் கொள்ள ஆசைப்படுகிறேன்.

இப்போது நமக்கு ஏற்பட்டிருக்கிற பிரச்னையெல்லாம், இத்தகைய பற்றாக்குறை ஏற்பட்ட பின்னாலே, எந்தெந்தத் தொழிற்சாலைகளுக்கு இன்னும் கொஞ்சம் மின்சாரம் குறைக்கலாம், சிறு தொழில்களுக்கு எந்த அளவுக்கு அதிக வாய்ப்பு அளிக்கலாம்,



1973 பிப்ரவரி 7] [திரு. செ. மாதவன்]

விவசாயிகளைப் பொறுத்தவரையில் எந்த அளவுக்குத் தடங்கல் வராமல் அவர்களுக்கு மின்சாரம் அளிக்கலாம் என்பதில் மின்சார வாரியம் அதிக அக்கறை காட்டிவருகிறது என்னென்ன வழிகளில் இந்தப் பற்றாக்குறையைத் தீர்க்கலாம் என்பதில் அரசு அதிக கவனம் செலுத்தி வருகிறது என்பதை அரசு தரப்பில் சொல்லிக்கொள்கிறேன். நான் என்னதான் சொன்னாலும், நீங்கள் என்னதான் பேசினாலும், பற்றாக்குறை இருப்பது உண்மை, நம்மிடமுள்ள மின்சார சக்தியைச் சரியாக விநியோகிப்பதன் மூலம்தான் நாம் அதில் ஓரளவுக்கு வெற்றி காண முடியும் என்று கூறிக்கொள்ள ஆசைப்படுகிறேன்.

**திரு. கே. டி. கே. தங்கமணி :** சமயநல்லூர் மின் நிலையம் உற்பத்திச் செலவு அதிகமானது என்ற ஒரே காரணத்தினால்தான் மூடப்பட்டதா என்று அறிய விரும்புகிறேன்.

**மாண்புமிகு திரு. செ. மாதவன் :** அதைப்பற்றி ஏற்கனவே சொல்லப்பட்டிருக்கிறது. என்னென்ன காரணங்கள் அந்தப் பொருளாதார நிபுணர்கள் அதற்குக் கூறினார்கள் என்பதும் அந்த அறிக்கையில் கூறப்பட்டிருக்கிறது என்று சொல்லிக் கொள்கிறேன். அதற்கும் இதற்கும் சம்பந்தம் இல்லை. இது வேறு பிரச்னை, அது வேறு பிரச்னை.

**திருமதி த. ந. அனந்தநாயகி :** மத்திய அரசாங்கத்திற்கு எடுத்துக் சொல்லியிருக்கிறோம் என்று சொன்னால் மட்டும் போதாது. அதோடு வேலை முடிந்து விட்டது என்று எண்ணி விடக் கூடாது. எடுத்துச் சொன்னதில் எத்தனை திட்டங்கள் நிறைவேற்ற முடியும் என்பதைப் பார்க்க வேண்டும்.

**மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர் :** கிளாரிபிகேஷன் கேளுங்கள். வாதத்திற்குப் போகக் கூடாது.

**திருமதி த. ந. அனந்தநாயகி :** எதைக் கேட்டாலும், மத்திய அரசாங்கத்திற்கு எடுத்துச் சொல்லியிருக்கிறோம் என்று சொல்லி குறை சொல்கிறார்கள். எடுத்துச் சொல்வதில் பிரயோசனம் இல்லை. காரியத்தில் வெற்றி பெறுவதில்தான் சமார்த்தியத்தை எடுத்துக் காட்ட வேண்டும். யார் வேண்டுமானாலும் எடுத்துச் சொல்லலாம். நாங்கள் கூடத்தான் அரசாங்கத்திற்கு எவ்வளவோ

எடுத்துச் சொல்கிறோம். எப்படி எடுத்துச் சொன்னதில் எவற்றில் வெற்றி பெற்றிருக்கிறோம் என்று பார்ப்பதில்தான் சாமர்த்தியம் இருக்கிறது.

Sixty-five per cent of the Hydro-Electric resources are still to be exploited. There are many schemes like the Hogenakal Scheme which are pending. அந்த ஸ்கீமை எல்லாம் எடுத்துச் சொல்லியிருந்தால், இன்னும் நன்றாக இருந்திருக்கும். மத்திய அரசிடம் எடுத்துச்சொல்லியிருந்தால் அதற்கு அனுமதி வழங்க இரண்டு வருடத்திற்கு கால தாமதம் ஆகலாம். 67-ல் சொல்லியிருந்தால் 69-ல் வந்திருக்கும். தூத்துக்குடி அனல் மின்சார நிலையம் வந்திருக்கும். (மணியடிக்கப்பட்டது.)

**மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர் :** உறுப்பினர்களுக்கு கொடுக்கப்படும் உரிமையை தவறாகப் பயன்படுத்தக் கூடாது. அதையே கிளாரிபிகேஷனாகக் கேட்கலாம். நீங்கள் சொன்ன கருத்தை கிளாரிபிகேஷனாகக் கேட்டு வெளிப்படுத்தியிருக்கலாம். ஒரு வாதமாக, ஒரு சிம்போசியமாக மாற்றியதனால், அட்ஜார்ன்மென்ட் மோஷனுக்கு அனுமதி இல்லாமலேயே, சபை 1½ மணி நேரம் இதுபற்றி விவாதிக்க வேண்டிய நிலைமைக்கு வந்துவிட்டது.

THIRUMATHI T. N. ANANDANAYAKI : I did not want any clarification. I wanted to offer my personal explanation.

MR. DEPUTY SPEAKER : This is not a personal explanation. உங்களைப் பற்றி தனிப்பட்ட முறையில் அமைச்சர் சொன்னால் பர்சனல் எக்ஸ்பிளனேஷன் என்று சொல்லி இருக்கலாம். நீங்கள் சொல்வது பாலிஸி மேட்டர். அரசாங்கத்தின் நடவடிக்கையைக் குறித்து பர்சனல் எக்ஸ்பிளனேஷன் கொடுக்கக் கூடாது.

**மாண்புமிகு திரு. செ. மாதவன் :** திட்டங்களைப் பற்றிச் சொன்னார்கள். பேசிக்கொண்டே இருக்கக்கூடாது, வெற்றி கிட்டுமா என்று பார்க்கவேண்டுமென்று சொன்னார்கள். இந்த அரசாங்கம் வந்ததற்குப் பின்னாலேதான் 20 ஆண்டு காலமாக வராதிருந்த சேலம் இரும்பாலைத் திட்டம் வந்தது. நெய்வேலியில் செகன்ட் கட்டிங் நாங்கள் வந்ததற்குப் பின்னாலேதான் உடனடியாகப் பரிசீலிக்கப்படும், 5-வது ஐந்தாண்டு திட்டத்தில் கொண்டு வருவது பற்றி கவனத்தில் கொள்ளப்படும் என்ற உறுதியைப் பெற்று இருக்கிறோம். தூத்துக்குடி அனல் மின் நிலையத்தைத் தொடங்குவதற்கு ஒப்புக்கொண்டிருக்கிறார்கள். கல்பாக்கத்தில் இருக்கக்கூடிய அனல் மின்சார நிலயத்தை அதிகப்படுத்த வேண்டுமென்று கேட்டோம். சமீபத்தில் மத்திய அமைச்சரோடு கூட இதுபற்றி எடுத்துச் சொல்லியிருக்கிறோம். அவர்கள் அதைப் பரிசீலித்துக் கொண்டிருக்கிறார்கள். நாங்கள் வெற்றி மேல் வெற்றி, வெற்றி மேல் வெற்றி பெற்றுக்கொண்டு தான் இருக்கிறோம். எங்கள் வெற்றியைக் கண்டு மலைக்க வேண்டாம்.



**திருமதி த. ந. அனந்தநாயகி :** வெற்றி பெறுகிறோம் என்று சொல்கிறீர்கள். பின் எதற்காக மத்திய அரசாங்கத்தைக் குறை சொல்ல வேண்டும்? வெற்றி பெறுகிறோம் என்றும் சொல்கிறீர்கள், மத்திய அரசாங்கத்தின்மீது குறையும் சொல்கிறீர்கள். You are blowing hot and cold and I cannot understand it.

DR. H. V. HANDE : Sir, the Hon. Minister has stated that they have taken anticipatory measures to prevent the power crisis. Did not the department caution the Government about the serious coal shortage and the need to have buffer-stock of coal? If they had done so, what prevented the Government from having enough coal as buffer-stock earlier? If they had buffer-stock the power crisis would have been reduced. So, I still maintain that the Government are entirely responsible for not having buffer-stock of coal.

**மாண்புமிகு திரு. செ. மாதவன் :** பஃப்பர் ஸ்டாக் இல்லை என்று யாரும் சொல்லவில்லை. பஃப்பர் ஸ்டாக் வைத்துக் கொண்டிருக்கிறோம். மத்திய அரசாங்கத்திலிருந்து ஒவ்வொரு மாநிலத்திற்கும் ஒரு குறிப்பிட்ட அளவு கோல் தர்மல் ஸ்கீமிற்கு என்று ஒதுக்கியிருக்கிறார்கள். எண்ணூர் தெர்மல் ஸ்டேஷனுக்கு வர வேண்டிய கோல் ஆந்திராவில் ஏற்பட்டுள்ள சூழ்நிலையின் காரணமாக தடைபட்டிருக்கிறது. அந்த வேறு மார்க்கத்தில் கொண்டு வரலாமா என்று ஆலோசித்து, கப்பல் மூலமாகக்

கொண்டுவருவதற்கான ஏற்பாடு செய்திருக்கிறோம். பஃப்பர் ஸ்டாக் இல்லை, அதன் காரணமாக பற்றுக்குறை என்று முடிவு கட்டுவது தவறு.

டாக்டர் எச். வி. ஹாண்டே : 3 மாதத்திற்கு முன்னாலேயே காட்ச்மெண்ட் ஏரியாவில் தண்ணீர் இல்லை என்பது தெரியும். அப்போதே இந்த நடவடிக்கைகளை மேற்கொண்டிருந்தால் இன்னும் நன்றாக இருந்திருக்கும். If the Department had caution the Government, we could have got much more coal earlier. Now only there is trouble in the movement of rail traffic. If only the Department had worked up and told the Government that there was no possibility of getting more power from hydro-electric projects and that they could only get it from thermal stations, they could have increased the Power from thermal stations.

**மாண்புமிகு திரு. செ. மாதவன் :** அதைத்தான் திருப்பித் திருப்பிச் சொன்னேன். ஹைடல் பவருக்கும் இதற்கும் சம்பந்தம் கிடையாது. எண்ணூர் தெர்மல் ஸ்டேஷனுக்குத்தான் ஒவ்வொரு ஆண்டிற்கும் இவ்வளவு கோல் என்று ஒதுக்குகிறார்கள். ஆந்திராவில் இருக்கிற நிலைமையின் காரணமாகத்தான் இந்தத் தகராறு ஏற்பட்டது. தெர்மல் பவருக்குத் தேவையான கோல் கொண்டுவருவதற்கு வேண்டிய எல்லா முயற்சிகளும் எடுக்கப்பட்டிருக்கின்றன. பஃப்பர் ஸ்டாக் இல்லை என்று சொல்வது தவறு. ஆந்திராவில் கலகம் வரும் என்று எப்படி எதிர்பார்க்க முடியும்? ஹைடல் பவருக்கும் இதற்கும் சம்பந்தம் கிடையாது. நம்மைப் பொறுத்த அளவிலே மொத்தமாக இத்தனை மாதங்களுக்கு ஸ்டாக் வைக்கவேண்டும் என்று இருக்கிறது. அத்தனை மாதங்களுக்கான ஸ்டாக் வைத்திருக்கிறோம். பின்னாலே வருவது தாமதமாயிற்று ரயில்வே போக்குவரத்து சரிவர இல்லாததனால்.

**மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர் :** மாண்புமிகு அமைச்சர் அவர்களின் விளக்கத்திற்குப் பிறகு இந்த ஒத்திவைப்புத் தீர்மானத்திற்கு அவசியமில்லை என்று கருதுகிறேன். எனவே, இதற்கான அனுமதி மறுக்கப்படுகிறது.



## 4. அறிக்கை அளித்தல்

**செய்தி-விளம்பரத்துறை பற்றிய மதிப்பீட்டுக் குழுவின் அறிக்கையில் கண்டுள்ள பரிந்துரைகள் மீது அரசு எடுத்த நடவடிக்கைகள் மீதான அறிக்கை.**

**மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர் :** மதிப்பீட்டுக் குழுவின் அறிக்கையை இப்பொழுது அதன் தலைவர் திரு. பழனிவேல் ராஜன் அவர்கள் அளிப்பார்கள்.

THIRU PALANIVEL RAJAN : Sir, I rise to present the Report of the Committee on Estimates on the action taken by Government on the recommendations of the Committee with regard to the report on ' Information and Publicity Department '.

## 5. ஆளுநர் பேரவைக்கு நன்றி கூறும் தீர்மானத்தின் மீதான விவாதம்—தொடர்ச்சி

**மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர் :** மாண்புமிகு உறுப்பினர்கள் இப்பொழுது ஆளுநர் பேருரைக்கு நன்றி கூறும் தீர்மானத்தின் பேரில் திருத்தங்களை முன்மொழிவார்கள்.

THIRU R. PONNAPPA NADAR : Sir, I move the following amendment :—

*Add* at the end, the following :—

" but regret to note that no mention is made about, (i) the steps taken to arrest the spiralling prices (ii) the measures taken to solve the mounting unemployment (iii) the serious repercussions caused by the forty per cent power cut on Industries, (iv) the pitiable plight of the handloom weavers consequent on the rise in prices of yarn; and (v) the lawlessness that prevailed in Tamil Nadu since October 1972".

The amendment was duly seconded.

THIRU K. T. K. THANGAMANI : Sir, I move the following amendment :—

*Add* at the end, the following :—

**I. ' but regret to note that there is no reference to the unrest among the students resulting in closure of schools and colleges for nearly three months'**

2. 'but regret to note that there is no reference to the demand of the Primary School Teachers for take over by the Government and setting up of the Board as decided in their conference at Coimbatore on 21st January 1973.'

Sir, I shal now move No. 3 to this amendment which item has not yet been circulated. It is as follows :—

3. 'but regret to note that there is no reference to charges and reply of Government laid on the table of the House on 15th December 1972.'

The amendments were duly seconded.

**திரு. நா. வீராசாமி :** ஆன் எ பாயிண்டு ஆப் ஆர்டர், ஸார். எங்களுக்கெல்லாம் கொடுக்கப்பட்டிருக்கிற சுற்றறிக்கையிலே திரு. கே. டி. கே. தங்கமணி அவர்கள் பெயரில் இரண்டு திருத்தங்கள்தான் இருக்கின்றன. மூன்றாவது திருத்தம் இங்கே இல்லை. இல்லாத ஒன்றை இந்த மன்றத்தில் படிப்பது முறை தானா என்பதற்கு தயவுசெய்து தாங்கள் ரூலிங் கொடுக்க வேண்டும்.

**மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர் :** நான் அதை அட்மிட் பண்ணியிருக்கிறேன். அது பின்னால் உறுப்பினர்களுக்கு வரும். அதற்காகத்தான் அதை படிக்கச் சொல்லியிருக்கிறேன். கனம் உறுப்பினர் அவர்கள் அதைக் கேட்டால் சரியாகப் போய்விடும். தயவுசெய்து உட்காருங்கள்.

**திரு. நா. வீராசாமி :** இந்த மன்றத்தைப் பொறுத்த வரையில் துணைச் சபாநாயகர் அவர்களின் அனுமதியைப் பெற்று இங்கே அனுமதிக்கப்பட்ட திருத்தங்கள் இரண்டு தான். மூன்றாவது திருத்தத்தை திரு. கே. டி. கே. தங்கமணி அவர்கள் இப்பொழுது படிக்கிறார்கள். இல்லாத ஒன்றை இந்த மன்றத்தில் படிப்பது முறைதானா? அதுதான் என்னுடைய பாயிண்டு ஆப் ஆர்டர்.

**மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர் :** மூன்றாவது திருத்தத்திற்கும் பேரவைத் துணைத் தலைவர் அனுமதி கொடுத்திருக்கிறார் என்றுதான் அர்த்தம். அதனால்தான் அதை





நான் அவர்களைப் படிக்கச் சொன்னேன். உங்களுக்கு இன்னும் அது சர்குலேட் பண்ணப்படவில்லை. அது எனக்குத் தெரியும். There is no point of order. You have raised a point of order and I have given my ruling. Please resume your seat.

பேரவைத் துணைத் தலைவர் அனுமதி கொடுத்திருக்கிறார். அது இன்னும் உறுப்பினர்களுக்கு சர்குலேட் ஆகவில்லை என்பதற்காகத்தான் அதை மாத்திரம் படிக்கச் சொன்னேன். இன்னொரு முறை அதைப் படித்துவிடும்படியாக திரு. தங்கமணி அவர்களைக் கேட்டுக்கொள்கிறேன்.

THIRU K. T. K. THANGAMANI : I will again read that amendment.

3. 'but regret to note that there is no reference to charges and reply of Government laid on the table of the House on 15th December 1972.'.

Sir, I shall also read the other amendment.

**மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர் :** இன்னொருவரை படிக்கச் சொல்லுங்கள். திரு. மருதாசலம் அவர்கள் மூன்றாவது திருத்தத்தை முன்மொழியலாம்.

**திரு. என். மருதாசலம் :** நான் என் பெயரிலுள்ள கீழ்க்கண்ட திருத்தத்தை முன்மொழிகின்றேன்.

"*Add* at the end, the following :—

(1) 'but regret to note that there is no reference to the attack on the students in Bodinayakanoor'.

(2) 'but regret to note that there is no reference to the plight of Handloom Weavers demanding full employment and supply of yarn at reasonable price to all the weavers.'

(3) 'but regret to note that there is no reference to Government taking over whole-sale trade in food grains as per the directive of the Government of India'.

(4) 'but regret to note that there is no reference to the taking over of mutt lands and lands belonging to religious institutions.'

[திரு. என். மருதாசலம்] [1973 பிப்ரவரி 7

(5) ‘ but regret to note that there is no reference to the closing of the existing Thermal Plant at Samayanallur ’.

The amendment was duly seconded.

DR. H. V. HANDE : Sir, I move the following amendment :—

*Add* at the end, the following :—

(1) ‘ but regret to note that no mention has been made about the law and order situation, rising prices, growing unemployment, industrial stagnation, labour unrest, re-opening of the closed colleges, improving the efficiency of the nationalised bus transport and violence unleashed by a group of persons in Alangudi, Dindigul and Gingee and the need to transfer the D.I.G., Collector and R.D.O. of Tiruchy before the commencement of enquiry, regarding the Tiruchy Clive Hostel incident.’

(2) ‘ but regret to note that no mention has been made regarding the steps to be taken by the Government to solve the serious problem of power shortage and the consequent hardship caused to agriculturists, tanners, industrialists and domestic consumers.’

The amendment was duly seconded.

**திரு. ஏ. ஆர். மாரிமுத்து :** என்னுடைய பெயரில் உள்ள திருத்தத் தீர்மானத்தை முன்மொழிகின்றேன் :—

“ இறுதியில் கீழ்க்காணும் திருத்தங்களைச் சேர்த்துக் கொள்ளவும் :—

(1) ஆனால், அத்தியாவசிய உணவுப் பொருள்களை அரசு வர்த்தகத்தில் எடுக்கப்படும் என்பதுபற்றிக் குறிப்பிடாதது வருந்தத்தக்கது.

(2) ஆனால், சிறிய நீர்ப்பாசனத் திட்டங்களை எடுப்பது குறித்து விவரமாகக் குறிப்பிடாதது வருந்தத்தக்கது.

(3) ஆனால், படித்த இளைஞர்களிடையே நிலவும் வேலையின்மைப் பிரச்சினையைத் தீர்ப்பதுபற்றிக் குறிப்பிடாதது வருந்தத்தக்கது.



1973 பிப்ரவரி 7] [திரு. ஏ. ஆர். மாரிமுத்து]

(4) ஆனால், நிலச்சீர்திருத்தத்தை முழுமையாக ஆக்கும் வகையில் விலக்களிக்கப்பட்டிருக்கும் நிலங்களையும், மடம், கோவில்களுக்குச் சொந்தமான நிலங்களையும் நிலச்சீர்திருத்தச் சட்டத்தின் உள்ளாக்குவதுபற்றிக் குறிப்பிடாதது வருந்தத் தக்கது.”

THIRUMATHI T. N. ANANDANAYAKI : Sir, I second the amendment. I now move the following amendment :—

*Add* at the end, the following :—

‘ But regret to note that no mention has been made about—

(1) the spiralling rise in prices of essential articles and the steps taken by the Government to control them;

(2) the steps taken by the Government to connect Cauvery with Godavari river;

(3) the sorrowful plight of the weavers in Tamil Nadu due to non-availability of yarn at controlled price; and

(4) the closure of educational institutions for number of months continuously due to the unrest in student community and the steps taken by the Government to solve the said problem. ’

The amendment was duly seconded.

**திரு. எம். சுரேந்திரன் :** நான் என் பெயரில் கொடுக்கப்பட்டிருக்கும் திருத்தங்களை முன்மொழிகிறேன் :—

“ இறுதியில் கீழ்க்காணும் திருத்தங்களைச் சேர்த்துக் கொள்ளவும் :—

(1) ஆனால், நாட்டில் ஏற்பட்டிருக்கும் மின்சாரத் தட்டுப்பாட்டை நிவர்த்திப்பதற்கு உடனடியாகத் தெளிவான நடவடிக்கை எடுப்பதுபற்றிக் குறிப்பிடாதது வருந்தத்தக்கது ;

(2) ஆனால், நாட்டில் நூல் விலையேற்றத்தினால் பாதிக்கப்பட்டுள்ள நெசவாளர்களின் சிரமங்களைப் போக்குவதுபற்றிக் குறிப்பிடாதது வருந்தத்தக்கது ;

(3) ஆனால், நாட்டில் இப்போதுள்ள கல்வி முறையை மாற்றியமைப்பதுபற்றிக் குறிப்பிடாதது வருந்தத்தக்கது.”

**திரு. கே. என். குமாரசாமி:** நான் அதை வழிமொழிகிறேன்.

**மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர்:** திரு. என். கணபதி அவர்கள் முன்மொழிந்த தீர்மானமும், மற்றும் முன்மொழியப் பட்ட திருத்தத் தீர்மானங்களும் இப்பொழுது அவையின் விவாதத்திற்கு வைக்கப்படுகின்றன. நேற்று தன்னுடைய பேச்சை முடிக்காமல் இருந்த திரு. பாலையா அவர்கள் இப்பொழுது தன்னுடைய பேச்சைத் தொடர்வார்கள். நேற்று 15 நிமிடங்கள் அவர் பேசிவிட்டார். இன்னும் ஐந்து நிமிடங்கள் இன்று பேசலாம்.

***திரு. ஏ. பாலையா:** பேரவைத் துணைத் தலைவர் அவர்களே, இந்த அவையிலே உணவு அமைச்சர் அவர்கள் கேள்வி நேரத்தின் பொழுது குமரி மாவட்டத்திலுள்ள மக்கள் தாங்கள் உண்மையிலேயே உணவுப் பண்டங்களைக் கேரளத்திற்குக் கடத்து வதாகக் குறிப்பிட்டார்கள். உண்மையிலே குமரி மாவட்டத்து மக்கள் நிரபராதிகள். அங்கே நடப்பது என்ன என்பதை இந்த அவை அறிந்துகொள்வதற்காகச் சொல்கிறேன். குமரி மாவட்டத்திலிருந்து உணவுப் பண்டங்கள் ஆளும் கட்சியைச் சார்ந்தவர்களால்தான் திட்டமிட்டுக் கடத்தப்படுகின்றன என் பதை இந்த அவையின்மூலம் நான் தெரிவித்துக்கொள்கிறேன். ஏனென்று சொன்னால், குமரி மாவட்டத்தில். . . .

**மாண்புமிகு திரு. ப. உ. சண்முகம்:** தலைவர் அவர்களே, அங்கத்தினர் அவர்கள் சரியாகச் சொல்லவேண்டும். ஆளும் கட்சியினர் கடத்துகிறார்கள் என்றுதான் சொல்லுகிறார் என்று கருதுகிறேன். தயவுசெய்து திரும்பிச் சொல்லுமாறு கேட்டுக் கொள்கிறேன்.

**திரு. ஏ. பாலையா:** கேள்வி நேரத்தின்போது உணவு அமைச்சர் அவர்கள் பதில் சொல்கின்ற நேரத்தில் குமரி மாவட்டத்தில் இருக்கிற மக்கள் தாங்கள் உண்மையிலே உணவுப் பண்டங்களைக் கேரளத்திற்கு கடத்துவதாகப் பதில் சொன்னார்கள். ஆனால், அங்கு இருக்கிற உண்மை நிலை என்ன என்பதை இந்த அவையிலே சொல்ல நான் கடமைப்பட்டிருக்கிறேன். பொதுவாக குமரி மாவட்டத்தில் ஏராளமான நியாய விலைக் கடைகளுக்கு





லைசென்ஸ் வழங்கப்பட்டிருக்கிறது. அதில் 99 சதமானம் நியாய விலைக் கடைகள் லைசென்ஸ் பெற்றிருப்பது ஆளும் கட்சியைச் சார்ந்தவர்கள் என்பதைத் திட்டவட்டமாகச் சொல்ல முடியும்.

**மாண்புமிகு திரு. ப. உ. சண்முகம்:** தவறான வாதத்தைச் சொல்கிறார்கள். ஆளும் கட்சியினர்கள் என்பது இல்லை. ஏற்கனவே லைசென்ஸ் இருந்தது. மாவட்ட ஆட்சித் தலைவர் கேட்டவர்களுக்கு லைசென்ஸ் கொடுத்தார். ரத்து செய்ய வேண்டியதை அரசாங்கம் ரத்து செய்தது. நீதி மன்றத்திற்குச் சென்றார்கள். ஸ்டே இருக்கிறது. ஆளும் கட்சியைச் சார்ந்தவர்கள் என்று யாரையும் விட்டுவிடுவதற்குமில்லை. ஆளும் கட்சியினர் என்பதற்காக லைசென்ஸ் கொடுப்பதற்குமில்லை.

**திரு. ஆர். பொன்னப்ப நாடார்:** இந்தப் பகுதியிலிருக்கிற நிலைமை, எனது தொகுதியில் வெகுவாகக் கஷ்டங்கள் இருக்கின்றன. இந்தக் கஷ்டங்களுக்கெல்லாம் காரணம் யார் என்று சொன்னால்—தனிப்பட்ட முறையில். நான் யாரையும் குற்றம் சாட்டிச் சொல்லவில்லை—பலரும் இதில் சதி செய்து கொண்டிருந்தார்கள். கேரள அரசாங்கத்தின் ஏஜெண்டுகளாகப் பலரும் இருந்து கொண்டிருந்தார்கள் என்று நான் பொறுப்புணர்ச்சியோடு கூறிக்கொள்ளக் கடமைப்பட்டிருக்கிறேன். இதிலே ஈடுபட்டிருக்கிறவர்கள் எந்தக் கட்சியைச் சார்ந்தவர்கள் என்ற விவரங்களையெல்லாம் இந்த மன்றத்தில் நான் கூற வேண்டும் என்று நினைக்கவில்லை. எல்லாக் கட்சியைச் சார்ந்தவர் களும் இருக்கிறார்கள். பெரும்பான்மையாக ஒரு குறிப்பிட்ட கட்சியைச் சார்ந்தவர்கள் என்ற குற்றச்சாட்டினை நான் பொறுப்புணர்ச்சியோடு கூறி, அதைப் பொறுப்போடு ஏற்றுக் கொள்ளத் தயாராக இருக்கிறேன், என்பதை அமைச்சர் அவர்களுக்குத் தெரிவித்துக்கொள்கிறேன்.

**மாண்புமிகு திரு. மன்னை ப. நாராயணசாமி:** கனம் உறுப்பினர் அவர்கள் ஏதோ கட்சியைச் சார்ந்தவர்கள் என்று சொல்கிறார்கள். இந்த வியாபாரம் தொடர்ந்து நீண்ட பல ஆண்டுகளாக அந்தப் பகுதியிலே நடப்பதை எந்தக் கட்சியினர்கள் அனுமதித்தார்கள் என்பதெல்லாம் நமக்குத் தெரியும். பழக்க வழக்கங்களை மாற்ற முடியவில்லை. ஒன்று அங்கிருந்து வருபவர்கள் நான் கேட்கும்

பொழுதெல்லாம் சொல்லிக்கொண்டிருக்கிறார்கள். நான் பல முறை ஆங்காங்கு சென்று அதைப்பற்றிக் கேட்டிருக்கிறேன். பொதுக் கூட்டத்தில்கூட அதைப்பற்றி அங்கு இருக்கிற மக்களிடம் நான் கேட்டேன். 'நீங்கள் தைரியமாக யார் செய்கிறார்கள் என்ற நிலைமைகளைச் சொல்லுங்கள்' என்று கூடக் நான் கேட்டேன். ஆகவே, இது ஒரு கட்சியினர்கள் என்ற நிலைமையில் இல்லை. செல்வாக்குள்ளவர்கள் பரம்பரையாகப் பல ஆண்டுகளாக இந்தத் தொழிலைச் செய்தார்கள்.

(திரு. நா. வீராசாமி தலைமை)

இப்பொழுது மீண்டும் அதைச் செய்கிறார்கள். நாம் முயற்சி செய்து கிட்டத்தட்ட ஒரு ஆண்டில் கூட பாதிக்கு மேலே அதைக் குறைத்திருக்கிறோம். மேலும் அதைக் குறைப்பதற்கு கனம் உறுப்பினர்கள் சாதகமாக இருக்கலாம். அல்லது, யார் செய்கிறார்கள் என்பதைத் தயவுசெய்து இரண்டு உறுப்பினர்களும் எனக்குத் தனியாகச் சொல்வார்களேயானால், நிச்சயம் அதன் பேரில் நாங்கள் நடவடிக்கை எடுப்போம். வேண்டுமென்று பழி சுமத்தவேண்டும் என்ற ஒரே காரணத்திற்காக இந்தச் சட்ட சபையில் மட்டும் இதைச் சொல்வது வேண்டும் என்றே குற்றம் சாட்டுவது என்று நான் கருதுகிறேன். ஆகவே, மீண்டும் இந்தப் பிரச்சினையில் நீங்கள் அதிக அக்கறை கொள்ளவேண்டும் என்று உறுப்பினர்களைக் கேட்டுக்கொள்கிறேன்.

11-30 மு.ப. **திரு. ஆர். பொன்னப்ப நாடார்:** நானே இதைப்பற்றி மாவட்ட வளர்ச்சி மன்றக் கூட்டத்தில் கலெக்டர் அவர்களின் கவனத்திற்குக் கொண்டுவந்திருக்கிறேன். அங்கு இருப்பவர்களில் யார் யாரெல்லாம் இதற்கு உடந்தையாக இருக்கிறார்கள் என்பதைப் பலரும் கண்காணித்துக் கொண்டிருக்கிறார்கள். ஆகையால் இது விஷயமாகத் தீவிர நடவடிக்கை எடுக்க வேண்டும். அது இல்லாமல் ஏழை எளியவர்கள் 5 லிட்டர், 2 லிட்டர் என்று எடுத்துச் செல்லும் அரிசியை பறித்துக் கொண்டு போகிறார்கள். அதற்குக் கணக்கும் கிடையாது. அரிசி எடுத்துச் சென்றவர்களுக்கு அதற்குரிய விலையும் கொடுப்பது கிடையாது. இதையெல்லாம் கண்காணித்து, ஏழை





மக்கள் பாதிக்கப்படாதவகையில் தீவிர நடவடிக்கை எடுக்க வேண்டியது அரசாங்கத்தின் கடமை என்பதைத் தெரிவித்துக் கொள்கிறேன்.

**மாண்புமிகு மாற்றுத் தலைவர் (திரு. நா. வீராசாமி):** அமைச்சரவர்கள் நடவடிக்கை எடுப்பதாகத் தெரிவித்து விட்டார்கள்.

**மாண்புமிகு திரு. மன்னை ப. நாராயணசாமி:** ஏழை மக்கள் கொண்டு செல்லும் அரிசியைப் பறித்துச் செல்கிறார்கள் என்று கனம் உறுப்பினர் அவர்கள் சொன்னார்கள். அவர்களுக்கு ஒன்றைச் சொல்லிக்கொள்கிறேன். அந்த ஏழை மக்கள் யார் என்பதையும் பார்க்க வேண்டும். அவர்களைப் பிடித்தவுடன் தங்கள் சொத்தையே விட்டுவிட்டு ஓடி விடுகிறார்கள். அவர்கள் சாப்பாட்டிற்காக அரிசி வாங்கிச் செல்லவில்லை. பரம்பரையாக கள்ள வியாபாரம் செய்பவர்களுக்கு உடந்தையாக அவர்கள் இருக்கிறார்கள். அவர்கள் கேரளத்தில் இருந்து இங்கு வருவதாகச் சொல்லப்படுகிறது. சம்பளத்திற்காக அந்த வேலையைச் செய்கிறார்கள். ஒரு நான்கு நாள்களுக்கு முன்னாலே கூட நான் அங்கு சென்றிருந்தேன். பிடிபட்டவர்களைக் கேட்ட போது, அவர்கள் "எங்களைக் குத்தி விடுவார்கள், வெட்டி-விடுவார்கள்" என்று சொல்லிப் பயந்துகொண்டிருந்தார்கள். நீங்கள் பயப்படாதீர்கள், எங்கள் அதிகாரிகளை வைத்துப் பார்த்துக்கொள்கிறோம் என்று சொல்லி, தனியாக விசாரித்தோம். சில்லரையாக எடுத்துச் செல்லும் அரிசியைக் கொண்டுபோய் சேமித்து வைத்து, மூட்டைகளாக்கி, கேரளத்திற்கு அனுப்பிவிடுவதாகத் தெரியவந்தது. பெர்மிட் வைத்திருப்பவர்கள்கூட அதிகமாக லாபம் சம்பாதிக்க வேண்டும் என்பதற்காக இப்படிச் செய்யலாம் என்று கருதி, இப்போது இவ்வளவுதான் ஸ்டாக் வைக்கலாம் என்று ஒரு உத்தரவைப் போட்டோம். அந்த உத்தரவு செல்லாது என்று ஹைகோர்ட்டில் பலர் வழக்குத் தொடர்ந்திருக்கிறார்கள் என்பது கனம் உறுப்பினர் அவர்களுக்குத் தெரியாது என்று கருதுகிறேன்.

அரசாங்கம் மட்டும் நடவடிக்கை எடுத்தால் போதாது. எல்லோரும் இதில் ஒத்துழைக்க வேண்டும். அப்போதுதான் கள்ள வியாபாரத்தைத் தடுக்க முடியும். கன்னியாகுமரி

[திரு. மன்னை ப. நாராயணசாமி] [1973 பிப்ரவரி 7

மாவட்டத்தைப் பொறுத்தவரையில் அங்கே விளைகின்ற நெல் அங்குள்ள மக்களுக்குப் போய், சர்ப்பிளஸ் கூட வரும். இதற்கு மேல் திருநெல்வேலி மாவட்டத்திலிருந்தும், தஞ்சை மாவட்டத்தி லிருந்தும் அங்கு அரிசி அனுப்புகிறோம். அப்படியும் அங்கே பற்றாக்குறை இருக்கிறதென்றால் அதற்கு என்ன காரணம் என்பதை எண்ணிப்பார்க்க வேண்டும். பார்டர் ஏரியாவிலே கிட்டத்தட்ட 600-க்கு மேற்பட்ட கடைகள் வைத்திருக்கிறார்கள். இருப்பினும் அங்கே அரிசி கிடைக்கவில்லை அல்லது அதிக விலைக்கு விற்கப்படுகிறது என்றால், எல்லாம் கேரளத்திற்குக் கடத்தப் படுகிறது என்றுதான் பொருள். அந்தத் தவறை செய்பவர்கள் யாராக இருந்தாலும் எந்தக் கட்சியைச் சேர்ந்தவர்களாக இருந்தாலும் அவர்கள் மேல் கண்டிப்பாக நடவடிக்கை எடுக்கப் படும். எனவே, மாண்புமிகு உறுப்பினர்களும் இதில் ஒத்துழைக்க வேண்டுமென்று கேட்டுக்கொள்கிறேன்.

(திரு. ஏ. பாலையா எழுந்தார்)

**மாண்புமிகு மாற்றுத் தலைவர் (திரு. நா. வீராசாமி) :** நீங்கள் நேற்றும் பேசியிருக்கிறீர்கள்.

**திரு. ஏ. பாலையா :** நான் நேற்று 5 நிமிடம்தான் பேசினேன்.

**மாண்புமிகு மாற்றுத் தலைவர் (திரு. நா. வீராசாமி) :** நீங்கள் எவ்வளவு நேரம் பேசினீர்கள் என்பதைக் குறித்து வைத்திருக் கிறோம். நேற்று 12 நிமிடம் நீங்கள் பேசியிருக்கிறீர்கள். ஆகவே, சுருக்கமாகப் பேசி முடித்துவிடுங்கள்.

**திரு. ஏ. பாலையா :** நான் அரசாங்கத்தைக் குறை கூற வேண்டுமென்ற நோக்கத்தோடு சொல்லவில்லை. அங்கே நடைபெறுகின்ற நிகழ்ச்சிகளைப் பார்க்கின்றபோது, லைசென்ஸ் கொடுத்திருக்கிறார்கள், ஆனால் கடைகள் கிடையாது. லைசென்ஸ் இருக்கிறது. அரிசி வாங்கப்படுகிறது. ஆனால் கடைகள் இல்லை. இதைப்பற்றி நான் பல தடவை மாவட்ட ஆட்சித் தலைவரிடத்தில் சொல்லியிருக்கிறேன். இதுவரையில் எந்தவிதமான நடவடிக்கையும் எடுக்கப்படவில்லை. அதனால்தான் இந்தப் பிரச்சினையை இந்த மன்றத்தின் கவனத்திற்குக் கொண்டு வருகிறேன்.



1973 பிப்ரவரி 7] [திரு. ஏ. பாலையா]

அடுத்தபடியாக விவசாயிகளுக்கு போதுமான ரசாயன உரங்கள் கடந்த அறுவடைக் காலத்திலிருந்தே போதிய அளவு கிடைக்காத நிலை இருந்து கொண்டு வருகிறது. ரசாயன உரம்—யூரியா ஒரு மூட்டைக்கு 50 ரூபாய் என்று இருந்தது, கள்ள மார்க்கெட்டில் 75 ரூபாயாக விற்கப்பட்டது. எனவே, விவசாயிகள் ஒரு மூட்டைக்கு 25 ரூபாய் அதிக விலை கொடுத்து வாங்கி நிலங்களுக்குப் போடுவது என்றால் அவர்களுக்கு கட்டுப்படியாகாத சூழ்நிலை ஏற்படுகிறது. ஆகவே, அரசாங்கம் நிர்ணயித்த விலையில் விவசாயிகளுக்கு ரசாயன உரங்கள் கிடைக்க இந்த அரசாங்கம் உடனடியாக நடவடிக்கை எடுக்க வேண்டுமென்று கேட்டுக்கொள்கிறேன்.

அடுத்தபடியாக இம்மாநிலத்தின் நீர் வளங்களை எல்லாம் இந்த அரசு பயன்படுத்தி இருப்பதாக ஆளுநர் உரையில் சொல்லப் பட்டிருக்கிறது. ஆனால் அது எந்த அளவுக்கு உண்மை என்பது தெரியவில்லை. எங்கள் மாவட்டத்தில் வள்ளியாற்று நீர் வீணாக கடலிலே சென்று கலக்கிறது. அதை விவசாயத்திற்குப் பயன்படுத்த வேண்டும் என்ற ஒரு திட்டத்தை இந்த அவையிலே பல சந்தர்ப்பங்களிலே நான் தெரிவித்திருக்கிறேன். இது வரையிலும் அதுபற்றி நடவடிக்கை எடுக்கப்படவில்லை. இனி மேலாவது அந்தத் திட்டத்தை அரசாங்கம் பரிசீலிக்கும் என்று நம்புகிறேன். வள்ளியாற்றிலிருந்து லிப்டின் மூலம் தண்ணீரை இறைத்து விவசாயத்திற்குப் பயன்படுத்துவதாக இருந்தால், பல ஆயிரக்கணக்கான நிலங்களில் விவசாயம் செய்ய முடியும். ஆகவே, அரசாங்கம் உடனடியாக அதற்கு ஆவன செய்ய வேண்டுமென்று இந்தச் சந்தர்ப்பத்திலே தெரிவித்துக் கொள்கிறேன்.

அடுத்தபடியாக மத்திய அரசு ஊழியர்களுக்கும், மாநில அரசு ஊழியர்களுக்கும் உள்ள ஊதிய வேற்றுமை அகற்றப்பட வேண்டுமென்று ஆளுநர் உரையில் சொல்லப்பட்டிருக்கிறது. ஆனால் மாநில அரசு ஊழியர்களிடையே இருக்கின்ற ஊதிய வேற்றுமையை களைவதற்கு இந்த அரசால் எந்தவிதமான நடவடிக்கையும் எடுக்கப்படவில்லை. இரண்டாவது ஊதியக் குழுவின் அறிக்கைப்படி மொழி ஆசிரியர்களுக்கு—தமிழ், மலையாளம், தெலுங்கு மொழி ஆசிரியர்களுக்கு தேர்வுநிலை

கொடுக்க வேண்டுமென்று ஊதியக் குழுவின் அறிக்கை தெரிவிக்கிறது. ஆனல், 1971 ஜனவரியில் கொடுக்க வேண்டிய தேர்வுநிலை இதுவரையில் கொடுக்கப்படவில்லை, அரசுப் பள்ளிகளில் பணியாற்றும் ஆசிரியர்களுக்கு. அதே நேரத்தில் தனியார் பள்ளிகளிலே பணிபுரிகின்ற மொழி ஆசிரியர்களுக்கு தேர்வுநிலை (செலக்ஷன் கிரேடு) கொடுக்கப்பட்டிருக்கிறது. அதைப்போல, கேரளப் பல்கலைக்கழகத்தில் பட்டம் பெற்ற இரண்டாம் நிலை மொழி ஆசிரியர்களுக்கும் அரசாங்கப் பள்ளிகளில் முதன் நிலைத் தகுதி கொடுக்கப்படவில்லை; ஆனல் தனியார் பள்ளிகளில் பணியாற்றுபவர்களுக்குக் கொடுக்கப் பட்டிருக்கிறது. ஆகவே, இந்த அரசு இதிலே தனிக் கவனம் செலுத்த வேண்டுமென்று இந்தச் சந்தர்ப்பத்திலே தெரிவித்துக் கொள்கிறேன்.

அதேபோன்று, மொழி ஆசிரியர்களுக்கு ஊதியக் குழு அறிக்கைபடி வழங்க வேண்டிய சில சலுகைகளை தனியார் பள்ளிகளில் பணிபுரியும் முதல் நிலை, இரண்டாம் நிலை மொழி ஆசிரியர்கள் பெற்று வருகிறார்கள். ஆனல் அரசுப் பள்ளிகளில் பணிபுரிகின்றவர்களுக்குக் கிடைக்கவில்லை. இது மிகவும் வருந்தத் தக்கது. அவர்கள் ரிட்டயர்ட் ஆகக்கூடிய நிலையில் இருக்கிறார்கள். ஆகவே, அவர்கள் ரிட்டயர் ஆவதற்கு முன்னல் இந்தச் சலுகைகள் வழங்கப்பட்டால் மிகவும் நலமாக இருக்கும். அதற்கு அரசு ஆவன செய்யவேண்டுமென்று கேட்டுக்கொள்கிறேன்.

அடுத்தபடியாக, பி.ஏ., பி.டி. படித்த முதல்நிலை மொழி ஆசிரியர்களுக்கு தலைமை ஆசிரியர் பதவி கொடுக்கப்படுவதாக அரசு ஆணை இருந்தும் இதுவரையிலும் அவர்களுக்கு அந்தச் சலுகை அளிக்கப்பட்டதாகத் தெரியவில்லை. கன்னியாகுமரி மாவட்டத்தில் படித்துவிட்டு ஆசிரியர் பயிற்சிபெற்ற ஆசிரியர்கள் வேலை கிடைக்காமல் வெகுவாகப் பாதிக்கப்பட்டிருக்கிறார்கள். ஆசிரியர் பயிற்சி பெற்றும் வேலை கிடைக்காத ஆசிரியர்கள் இனி என்ன செய்வது என்று தெரியாமல் மனம் நொந்து கொண்டிருக்கிறார்கள். சமீபத்திலே அவர்கள் மாவட்ட ஆட்சித் தலைவர் அலுவலகத்தின் முன்னல் தங்கள் நியாயமான கோரிக்கையை வலியுறுத்தி, அதற்காக அவர்கள் உண்ணவிரதம் இருந்துகொண்டிருக்கிற நிலைமை ஏற்பட்டிருக்கிறது. பலருடைய



உயிர் ஊசலாடிக் கொண்டிருக்கிறது. மருத்துவ மனையிலே அவர்களில் பலர் அனுமதிக்கப்பட்டிருக்கிறார்கள். இருந்தும் அந்த உண்ணவிரதம் இன்னும தொடர்ந்து நடைபெற்றுக் கொண்டிருக்கிறது. இப்படி ஒரு நியாயமான கோரிக்கைக்காக உண்ணவிரதம் இருந்து கொண்டிருக்கிற அவர்களுடைய பிரச்சினைக்கு இந்த அரசு இதுவரையிலும் எந்தவிதமான நடவடிக்கையும் எடுத்துக்கொள்ளவில்லை. இதற்கு முன்னல், இந்த வேலையில்லா ஆசிரியர்கள் பல தடவை உண்ணவிரதம் இருந்தார்கள். அப்படி இருந்த நேரத்திலே மாவட்ட ஆட்சித் தலைவர் அவர்களும், திருநெல்வேலி முதன்மை கல்வி அதிகாரி, மாவட்ட கல்வி அதிகாரி போன்றவர்கள் எல்லாம் அவர்களை அழைத்து வைத்து நியாயமாகப் பேசி உங்களுக்கு உடனடியாக வேலைவாய்ப்பு தரப்படும் என்று உறுதி அளித்ததன் பேரில் அவர்கள் இரண்டு மூன்று தடவை தங்களுடைய போராட்டத்தை வாபஸ் பெற்றுக்கொண்டார்கள். ஆனல், அவர்களுடைய உறுதியளிப்பின்படி இன்னும் அந்த வேலையற்றோர்களுக்கு வேலை வாய்ப்பு கொடுக்கப்படவில்லை. பள்ளிகளிலே ஏராளமான இடங்கள் காலியாக இருந்து கொண்டிருக்கின்றன. அந்த இடங்களிலே ஆசிரியர்களை நியமிக்க வேண்டியதற்கான அரசு உத்தரவு இன்னமும் வழங்கப்படவில்லை. அப்படி அரசு உடனடியாக உத்தரவிட்டால் அவர்கள் வேலைவாய்ப்புப் பெற ஒரு வசதியாகவும், வாய்ப்பாகவும் அது அமையும், எனவே, உடனே இந்த அரசு இதிலே தனி கவனம் செலுத்தி இதற்கு வேண்டிய உத்தரவினை அளிக்க வேண்டுமென்று கேட்டுக் கொள்ளுகிறேன்.

அடுத்து, ஒன்மேன் சம்பளக் கமிஷன் சிபாரிசுபடி பட்டதாரி ஆசிரியர்களுக்கு ரூ. 275, 300 என்ற விகிதத்திலே சம்பளம் கொடுக்கப்பட வேண்டும் என்று சொல்லப்பட்டிருக்கிறது. அதை பட்டதாரி ஆசிரியர்கள் பெற்று வருகிறார்கள் இப்பொழுது. அதே போல் அந்த உத்தரவில் காவல்துறையிலுள்ள துணை ஆய்வாளர்களுக்கும் அதே சம்பள விகிதம் வழங்கப்பட வேண்டுமென்று சொல்லப்பட்டிருக்கிறது. ஆனல், காவல் துறையினர் அந்தச் சம்பள ஆணையை அமுலில் கொண்டு வராமல் இருந்து கொண்டிருக்கிறார்கள். எனவே, உடனடியாக அரசு

இதிலே தனிக் கவனம் செலுத்தி, அவர்களுக்கு அந்த சம்பள விகிதத்தைத் தர வழிவகைகளை செய்ய வேண்டுமென்று கேட்டு, எனது பேச்சை முடித்துக்கொள்கிறேன்.

**திரு. சு. துரைசாமி:** பேரவைத் தலைவரவர்களே, இந்த மன்றத்திலே ஆளுநர் அவர்களுடைய உரையை ஆதரித்து எனது சில கருத்துக்களைத் தெரிவிக்க விரும்புகிறேன்.

இந்த மன்றத்தில் ஆளுநர் அவர்கள் தமது உரையில் மிகத் தெளிவாக குறிப்பிட்டிருக்கிறார்கள். [illegible] ஐந்தாண்டுத் திட்டக் காலத்திற்காக மத்திய அரசாங்கம் நம் மாநிலத்திற்கு ஏற்கனவே ஒப்பளிக்கப்பட்ட தொகை 519 கோடி என்றும்; ஆனால் முதலமைச்சர் எடுத்துக்கொண்ட முயற்சியின் காரணமாக அது 539 கோடியாக உயர்ந்திருப்பதைப் பார்க்கிறோம். நம்முடைய முதலமைச்சர் முயற்சி காரணமாக தமிழ் நாட்டிற்கு கூடுதலாக நிதி வழங்கியதற்காக இந்த அரசாங்கத்திற்கும், மத்திய அரசாங்கத்திற்கும் எனது பாராட்டுதல்களைத் தெரிவித்துக் கொள்கிறேன்.

அடுத்து, அண்மையில் ஏற்பட்ட புயலாலும், வெள்ளத்தாலும் தமிழகத்தின் பல பகுதிகளிலே குறிப்பாக தென்னாற்காடு, கோவை, திருச்சி, சேலம் போன்ற மாவட்டங்களிலே உள்ள பயிர்களுக்கு சேதம் ஏற்பட்டு, மக்கள் எல்லாம் அவதிப்படும் நிலைமைகள் ஏற்பட்டது. அவர்களுக்கெல்லாம் நிவாரணம் அளிக்கின்ற வகையிலே இந்த அரசாங்கம் அதிலே மிகுந்த அக்கறை எடுத்துக்கொண்டு, மிக வேகமாகவும், துரிதமாகவும் நிவாரணம் கொடுக்கப்பட்டிருப்பதை நாம் மிகத் தெளிவாகப் பார்க்கிறோம். நிவாரணத்திற்காக தமிழ் நாட்டு அரசாங்கம் ஏறத்தாழ 5 கோடி ரூபாய் ஒதுக்கி இன்றைக்கு நிவாரணப் பணிகளிலே ஈடுபட்டிருக்கிறது. இந்தப் பணியை, தமிழ் நாடு அரசாங்கத்தின் இந்த முயற்சியினை பாராட்டக் கடமைப் பட்டிருக்கிறோம்.

தமிழ் நாட்டிலே 1951–52 ஆம் ஆண்டிலே பெரும் புயல் அடித்து, தஞ்சை, திருச்சி போன்ற மாவட்டங்கள் பாதிக்கப் பட்டபொழுது அன்றைக்கு ஆளும் பொறுப்பிலே இருந்த காங்கிரஸ் அரசாங்கம் நிவாரணப் பணிக்கு எடுத்துக் கொண்ட முயற்சியோடு இன்று தமிழக அரசு எடுத்திருக்கிற முயற்சி



களையும், நிவாரணப் பணிகளையும் ஒப்பிட்டுப் பார்த்தால், இன்றைய தமிழ் நாட்டு அரசாங்கம் நாட்டு மக்களுக்காக எந்த அளவு வேகமாகவும் துரிதமாகவும் காரியங்களைச் செய்து வருகிறது என்பது தெரியும். இதற்காக நான் என்னுடைய பாராட்டுதல்களை இந்த அரசாங்கத்திற்குத் தெரிவித்துக் கொள்கிறேன்.

அடுத்து, நம்முடைய ஆளுநர் அவர்களுடைய உரையிலே மிகத் தெளிவாகக் குறிப்பிட்டிருக்கிறார்கள், மத்திய அரசாங்க மாநில அரசாங்க ஊழியர்களுக்கிடையே சம்பளத்திலே வேறுபாடு இருக்கக் கூடாது என்று. இந்தத் தமிழ் நாட்டு அரசாங்கத்தின் கொள்கையே அதுதான். ஆனால், இங்கே இருக்கும் நிதிப் பற்றுக்குறை காரணமாக இந்த வேறுபாட்டைப் போக்க முடியவில்லை. எனவே, நம்முடைய அரசாங்கத்தின் சார்பிலே மத்திய அரசிற்கு கருத்து தெரிவித்திருக்கிறோம், கூடுதலாக மாநில அரசிற்கு நிதி கொடுக்க வேண்டும் என்று. மத்திய அரசாங்க ஊழியர்களுக்கும், மாநில அரசாங்க ஊழியர் களுக்கும் சம்பளத்திலே வேறுபாடு இருக்கக்கூடாது என்ற கொள்கை குறிப்பிடத்தக்கது. எனவே. இதை நான் மனமாற வரவேற்கிறேன்.

அதேபோல், இந்த அரசாங்கத்தைப் பொறுத்தவரையில் இது முற்போக்கு அரசு என்பதைக் காட்டக்கூடிய வகையிலே இந்த, நாட்டிலே பஸ்ஸை தேசியவுடமை ஆக்கியிருக்கிறோம். இந்த அரசு ஐந்தாண்டு காலத்திற்குள்ளே தனியார் பஸ்ஸை எல்லாம் நாட்டுடமை ஆக்குகின்ற ஒரு காரியத்தை செய்திருக்கிறது. இன்றைய தினம் இருக்கும் சர்க்கார் இதை மட்டும் செய்யவில்லை, 1967 ஆம் ஆண்டில் 75 மைலுக்கு அப்பால் ஓடுகின்ற பஸ் தடங்களிலே இருக்கின்ற பஸ்ஸை எல்லாம் நாட்டுடமை ஆக்கியது ; பிறகு 50-க்கு மேற்பட்ட பஸ்களை யாராவது வைத்திருந்தால் அதை எல்லாம் அரசாங்க உடமையாக்கும் காரியத்தை செய்தது ; அத்தோடு 10 பஸ்ஸுக்கு மேல் வைத்துக் கொள்ளக்கூடாது என்ற உச்சவரம்பைக் கொண்டு வந்து இருக்கிறது. இவ்வாறு 5 ஆண்டு காலத்திற்குள்ளே பூரா பஸ்ஸையும் நாட்டுடமை ஆக்க வேண்டுமென்ற முற்போக்கான

காரியத்தை தமிழக அரசு நிறைவேற்றியிருக்கிறது. அதற்கு என்னுடைய பாராட்டுதல்களை இந்த அரசாங்கத்திற்குத் தெரிவித்துக்கொள்கிறேன்.

அடுத்து, கவர்னர் உரையிலே தெளிவாகக் குறிப்பிட்டிருக்கிறார்கள், தமிழ் நாட்டிலே பாதிக்கப்பட்ட பஞ்சாலைத் தொழிலாளர்களுக்காக மூடிய பஞ்சாலைகளை குறிப்பாக 13 ஆலைகளை அரசாங்கமே ஏற்று நடத்துகிறது. ஏறத்தாழ அதிலே வேலைவாய்ப்பை இழந்த 10,000 தொழிலாளர்கள் வாழ்வு பெற்றிருக்கிறார்கள்.

இந்திய துணைக் கண்டத்திலே பல்வேறு மாநிலங்களிலே அப்படி தொழிற்சாலைகள் மூடப்பட்டன; ஆமதாபாத்திலேகூட மூடிய பல மில்கள் திறக்கப்படவில்லை. வேறு மாநிலங்களிலேயும் மூடிய மில்கள் திறக்கப்படாத தன்மையைத்தான் பார்க்கின்றோம். ஆனால், தமிழ் நாட்டிலே எல்லாப் பஞ்சாலைகளும் திறக்கப்பட்டு, அதிலே பணியாற்றிய தொழிலாளர்களுக்கு வேலைவாய்ப்பை கொடுத்திருக்கிறார்கள் என்ற முற்போக்கான காரியத்தை பார்க்கிறோம்.

அதுமட்டுமில்லாமல் இந்திய துணைக் கண்டத்திலே தமிழக அரசுதான் இ.எஸ்.ஐ. தொழிலாளர்களுக்காக பணம் செலவழிக்கிறது. மதிப்பீட்டுக் குழுவைச் சேர்ந்த பல்வேறு உறுப்பினர்கள் இந்தியா பூராவிலும் சுற்றுப்பயணம் செய்தோம். நாங்கள் பம்பாய்க்கு சென்று அங்கே இருந்த மதிப்பீட்டுக் குழு உறுப்பினர்களோடும் அதிகாரிகளோடும் பேசும்பொழுது ஒன்றை கேட்டோம். அங்கே இருக்கும் மாநில அரசு இ.எஸ்.ஐ. தொழிலாளர்களுக்காக ஏதாவது செலவழிக்கிறதா என்று கேட்டோம். அதற்கு அங்கே இருக்கிற அதிகாரிகள் தெரிவித்தார்கள், மாநில அரசாங்கத்தின் சார்பாக நாங்கள் ஒரு பைசா கூட செலவழிக்கவில்லை என்று சொன்னார்கள். அந்தச் சந்தர்ப்பத்திலே இந்த மன்றத்திலே இருக்கிற உறுப்பினர்களான சுப்புவும், மற்றைய காங்கிரஸ் உறுப்பினர்களும் இருந்தார்கள். அப்பொழுது அவர்களிடத்திலே நான் தெரிவித்தேன், இந்தத் தமிழக சர்க்காரை தொழிலாளர் விரோத சர்க்கார் என்று சொல்லுகிறீர்களே, அகில இந்தியாவிலேயே எந்த மாநிலத்தின் சார்பிலேயும் இ.எஸ்.ஐ. தொழிலாளர் நலனுக்காக பணம்





செலவழிக்கவில்லை; ஆனால் தமிழ் நாட்டு அரசாங்கம் மாத்திரம்தான் அந்த இ.எஸ்.ஐ. தொழிலாளர்களுக்காக 1½ கோடி ரூபாய் கூடுதலாக செலவழித்துக் கொண்டிருக்கிறது என்று சொன்னேன். அந்த வகையிலே இந்த அரசு நல்ல பணிகளை ஆற்றுகிறது.

அடுத்து, ஆளுநர் அறிக்கையிலே மிகத் தெளிவாக அறிவித்திருக்கிறார்கள் கிராமப்புறச் சாலைகள் செப்பனிட 3 கோடி ரூபாய் ஒதுக்கியிருக்கிறோம் என்று. 1947-லே விடுதலை பெற்றவுடனே கிராம ராஜ்யத்தை உருவாக்க வேண்டுமென்று காந்தியார் அவர்கள் கூறினார்கள். அவரைச் சார்ந்த காங்கிரஸ் சர்க்கார் கூட இங்கே கிராமப்புற சீரமைப்பிற்காக எந்தவிதமான திட்டத்தையும் கொண்டுவரவில்லை. ஆனால் இன்றைய தமிழக சர்க்கார் கிராமப்புறச் சாலைகளை மேம்படுத்த மூன்று கோடி ரூபாய் செலவழித்திருப்பதைப் பார்க்கிறோம். இப்படியேதான் பல திட்டங்களுக்காக ஏராளமான ரூபாயை ஒதுக்கி நல்ல காரியங்களைச் செய்து வருகிறது என்பதைப் பார்க்கிறோம். பஸ் ஓடுகின்ற பாதைகளை எல்லாம் அரசாங்கப் பாதையாக இந்த சர்க்கார் எடுத்துக்கொண்டு வருகிறார்கள். காங்கிரஸ் ஆட்சியிலே 300 மைல்கள் இப்படி ஒரு ஆண்டிற்கு எடுத்துக்கொண்டார்கள் என்றால், இன்றைக்கு இந்த ஆட்சியிலே ஒரு ஆண்டிற்கு 1,000 மைல்கள் எடுத்துக்கொள்கிறார்கள். அப்படி என்றாலும் கூட, அதற்கு இன்னமும் அதிகப் பணம் ஒதுக்கப்பட வேண்டுமென்ற கருத்தையும் இங்கே தெரிவித்துக்கொள்கிறேன்.

அடுத்து, இன்னொரு கருத்தை மிகத் தெளிவாக ஆளுநர் உரையிலே சொல்லியிருக்கிறார்கள். அதாவது மைசூர், தமிழ் நாடு, கேரளம், ஆந்திரம் ஆகிய மாநிலங்களை ஒருங்கிணைந்து மேற்கு மலைத்தொடர் மேம்பாட்டுக் கழகம் என்ற ஒன்றை அமைப்பது குறித்து சிந்தித்து, அந்த மாநிலங்களின் நீர்வளம், மின்சக்தி, மற்றும் இதர வளங்களைப் பயன்படுத்திக்கொள்ள வேண்டுமென்று கூறியிருக்கிறார்கள். இதை நான் மனமார வரவேற்கிறேன்.

1967 ஆம் ஆண்டிற்குப் பிறகு உணவு உற்பத்தியைப் பெருக்கி இருக்கிறோம்; அதன் மூலம் நம்முடைய உணவுப் பற்றாக் குறையைப் போக்கி இருக்கிறோம். உணவு தானியம் இன்றைக்கு மக்களுக்கு தாராளமாகக் கிடைக்கும் ஒரு நிலைமையை ஏற்படுத்தி இருக்கிறோம். ஆனால், 1971-72-லே தமிழ் நாட்டிற்கு ஒதுக்கப்

[திரு. சு. துரைசாமி] [1973 பிப்ரவரி 7

பட்டிருக்கும் நைட்ரஜன் உரம் 2.14 இலட்சம் டன்; இந்த ஆண்டு ஒதுக்கப்பட்டிருப்பது 2.74 இலட்சம் டன் ஆகும். ஆனால் நமக்குக் கிடைத்திருக்கிற உரமோ 1.30 இலட்சம் டன் என்றிருப் பதைப் பார்க்கிறோம். நாம் உணவு உற்பத்தியைப் பெருக்க முயற்சி எடுத்துக் கொண்டாலும் கூட, மத்திய அரசாங்கத்திலே இருந்து தேவையான உரம் நமக்குக் கிடைக்காததால்தான் இன்னும் உணவு உற்பத்தியைப் பெருக்க முடியவில்லை. எனவே, நமது அரசாங்கம் மத்திய அரசாங்கத்தை வற்புறுத்தி, பெறவேண்டிய உரத்தைப் பெறவேண்டுமென்று கேட்டுக்கொள்ளு கிறேன். இன்றைக்கு கோவை மாவட்டத்தை எடுத்துக் கொண்டால் யூரியா, பெர்ட்டிலைசர் கிடைப்பதில்லை. எனவே, அவைகள் எல்லாம் தாராளமாக மக்களுக்குக் கிடைக்க இந்த அரசு முயற்சி எடுத்துக்கொள்ள வேண்டுமென்று கேட்டுக் கொள்கிறேன்.

இன்னொன்று என்னவென்றால், நம்முடைய சர்க்கார் வந்ததும் இன்றைக்கு ஹரிஜன மக்களுக்காக வீட்டு மனைப் பட்டா வழங்கி இருக்கிறோம். அதற்காக நாம் இன்னும் அதிகமாக பணத்தை ஒதுக்கி 3 அல்லது 5 ஆண்டுகளுக்குள்ளே எல்லா தாழ்த்தப்பட்ட மக்களுக்கும் வீட்டு மனை பட்டா கிடைக்க ஆவன செய்ய வேண்டும். தஞ்சை மாவட்டத்திலே கொண்டு வரப்பட்டிருக்கிற இத்திட்டம் தமிழ்நாடு முழுவதிலும் உள்ள மற்றைய மாவட்ட விவசாய ஹரிஜன மக்களுக்கும் வீட்டு மனைப்பட்டா கிடைக்கக் கூடிய ஒரு காரியத்தை செய்யவேண்டுமென்று கேட்டுக்கொள்ளு கிறேன். கிராமப்புறத்திலே மட்டுமல்லாமல், நகர்ப்புறத்திலே இருக்கும் ஹரிஜன மக்களுக்கும் இத்திட்டத்தினால் பயன் பெற ஆவன செய்யவேண்டும்.

அதே போல், குடிசைமாற்று வாரியத்தின் திட்டம் ஒரு இலட்சம் மக்கள் வாழும் இடங்களுக்கெல்லாம் கொண்டுவரப்பட வேண்டுமென்று கேட்டுக்கொள்ளுகிறேன். பல்லடம் போன்ற இடங்களிலே புதிய கிணறு வெட்ட பணம் கடனாக அரசு கொடுப்ப தில்லை. பல்லடம் வட்டத்திலே அப்படி கிணறுகளை வெட்டக் கூடாது என்று சொல்லுகிறார்கள். அந்தக் குறைபாட்டையும் போக்கி, எல்லா இடங்களிலேயுள்ள விவசாயிகளுக்கும் கடன் கிடைக்க ஆவன செய்யவேண்டுமென்று சொல்லி முடித்துக் கொள்கிறேன்.



1973 பிப்ரவரி 7]

**திரு. என். கே. பழனிசாமி:** பேரவைத் தலைவர் அவர்களே, ஆளுநர் அவர்களது அறிக்கையில் உணவு உற்பத்தி செய்யக் கூடிய விவசாயிகள், தொழிலாளர்கள், கைத்தறி நெசவுத் தொழி லாளர்கள், மற்றும் பல தொழில்களில் உள்ள தொழிலாளர்கள் ஆகியவர்களுடைய சக்தியைப்பற்றி ஒன்றும் பேசாமல் விட்டு விட்டார்கள். அவர்களது உரையில் இன்றையதினம் கேந்திரமாக இருக்கக்கூடிய உற்பத்தி சக்திகள், அவர்களுக்கு

(திரு. நா. வீராசாமி—தலைமை)

ஊக்கம் கொடுக்கக்கூடிய முறைகள் பற்றி எதுவும் இல்லை. அதற்குப் பதிலாக, மின்சார வெட்டு, விலைவாசியேற்றம், வேலை யில்லாத் திண்டாட்டம் போன்றவற்றுக்கு மத்திய சர்க்கார் பொறுப்பு என்பதுபோல, மத்திய சர்க்காருக்கு எதிரான அறிக்கைபோல இதைத் தந்திருக்கிறார்கள். விலைவாசிகள் மிக அதிகமாக ஏறி வருகின்றன என்றால் அதைத் தடுப்பதற்கு இந்தச் சர்க்கார் கொண்டுள்ள கொள்கை என்ன என்பதைப்பற்றி எதுவுமே சொல்லவில்லை. வேலையில்லாத் திண்டாட்டம் பற்றி இந்தச் சர்க்காரின் கொள்கை என்ன? அதேமாதிரி மின்சார வெட்டு, மின்சாரவெட்டினால் தொழில்கள் வெகுவாகப் பாதிக்கப் படாதிருக்க இந்த அரசாங்கம் எடுத்திருக்கிற நடவடிக்கைகள் என்ன? அதைப்பற்றியெல்லாம் ஒன்றுமே இல்லை. உணவுப் பொருள்களை எடுத்துக்கொண்டாலும், மற்ற மற்ற பொருள்களை எடுத்துக்கொண்டாலும் இந்த ஒரு வாரத்தில் மட்டும் பல மடங்குகள் உயர்ந்திருக்கின்றன.

With your permission, I will read an extract—

'The costs and prices have increased to "staggering pro- portions" according to price indices and charges under various groups It seems to be more a sequel to hoarding and profiteering, a process about which the Government has done nothing. The cost of living in Tamil Nadu was fractionally lower than in upcountry centres until December last year. But now, things have changed and Tamil Nadu is ahead of other States.

விலைவாசிப் புள்ளி விவரத்தை எடுத்துக்கொண்டால்

| | 1949 இல் | 1972 இல் |
|---|---|---|
| தானிய பருப்பு வகைகள் | 235 | 1,233 |
| கெரோசின் | 170 | 453 |
| டெக்ஸ்டைல் | 325 | 898 |
| பருப்பு வகைகள் | 512 | 1,537 |
| எண்ணெய் வகைகள் | 711 | 1,811 |
| சர்க்கரை, வெல்லம் | 416 | 1,238 |

இப்படி ஒன்றுக்கு இரண்டு மடங்காக ஏறியிருக்கின்றன. 52-ம் வருஷத்தில் உணவுதானிய உற்பத்தி 33 லட்சம் டன் என்றால் இப்போது 63 லட்சம் டன் உற்பத்தி செய்கிறோம். இவ்வாண்டு 70 லட்சமாக உயர்த்தப்போகிறோம். விவசாயிகளிடம் இருந்து வாங்கும் நெல்லுக்கு நாம் அப்போது கொடுத்த விலையைவிட 10 சதவிகிதம்தான் அதிகமாக இப்போது கொடுக்கிறோம். ஆனால் மக்கள் வியாபாரிகளிடம் இருந்து வாங்குகிற உணவுப்பொருள்களுக்கு முன்பு கொடுத்த விலையைப்போல ஒண்ணரை மடங்கு, இரண்டு மடங்கு அதிக விலை கொடுக்கிறார்கள். நம்முடைய உணவுத்தேவை 60 லட்சம் டன்தான். நாம் உற்பத்தி செய்கிற தானியத்தில் நம் தேவை போக பாக்கியை நாம் வெளியில் கொடுக்கலாம். என்றாலும் ஆந்திராவில் இருந்து சென்னைக்கு ஏராளமாக நெல்லூர் அரிசி வருகிறது. இரண்டு கலம் கொண்ட ஒரு மூட்டை நெல் 60 ரூபாய் என்றால் டிரான்ஸ்போர்ட் சார்ஜ், ப்ராபிட் வைத்தாலும் ரூ. 66-க்கு வியாபாரி விற்கவேண்டும். ஆனால் வாங்கிச் சாப்பிடுகிற மக்களிடத்தில் வியாபாரிகள் மூட்டை ரூ 125 ரூபாய்க்கு விற்கிறார்கள். இப்படி இந்த அரசாங்கத்தின் தவறான கொள்கையினால் உற்பத்தி செய்கிற விவசாயிகளும் பயன் அடையவில்லை. வாங்கிச் சாப்பிடுகிற மக்களும் பயன் அடையவில்லை. இடையில் உள்ள வியாபாரிகள்தான் கொள்ளை கொள்ளையாக லாபம் அடிக்கிற நிலை இருக்கிறது. அதை இந்தச் சர்க்கார் கண்டிரோல் செய்யத் தவறியிருக்கிறது.

மத்திய சர்க்காரே உணவுப்பொருள் வியாபாரத்தை எடுத்துக் கொள்ளவேண்டும் என்று அறிக்கைவிட்டும் சர்க்கார் எவ்வித நடவடிக்கையும் எடுக்காததற்குக் காரணம் என்ன என்பதை அறியவிரும்புகிறேன். எல்லா இடங்களிலும் நியாயவிலைக்





கடைகளை வைத்து, விவசாயிகளிடம் இருந்து அவர்களுக்குக் கட்டுபடியாகக் கூடிய அளவில் உணவு தானியங்களை வாங்கிச் சாப்பிடுகிற மக்களின் சக்திக்குத் தகுந்தபடியாக நியாயமான விலையில் விற்றாலே அரசுக்கு நல்ல லாபம் வரும்.

இன்றைக்கு சர்க்கரையை எடுத்துக்கொண்டாலும் கிராமப்புற ஜனங்களுக்கு சர்க்கரையே கிடைப்பதில்லை. கிராமங்களில் உள்ள க்ரெடிட் சொஸைடி மூலம்தான் விநியோகம் செய்கிறோம் என்று சொல்லிக்கொள்கிறார்களே தவிர க்ரெடிட் சொஸைடிகளிடம் சர்க்கரை எடுக்க பணம் இல்லை. ஒரு தனிப்பட்டவர் பணம் கட்டி மூட்டைகளை க்ரெடிட் சொஸைடி மூலம் எடுத்து மூட்டைக்கு 100 ரூபாய் லாபம் வைத்து ஹோல்சேல் வியாபாரிகளிடமே மூட்டையைக் கொடுத்துவிடுகிறார். இப்படி அரசாங்கக் கொள்கையினால் இடையில் உள்ளவர்கள்தான் கொள்ளை அடிக்க இடமேற்படுகிறது. இன்றையதினம் வெளிமாநிலங்களில் கரும்புக்கு ரூ. 90-இல் இருந்து ரூ. 110 வரை நிர்ணயித்துக் கொடுக்கிறார்கள். ஆனால் நமது மாநிலத்தில் ரூ. 80 தான் கொடுக்கிறோம். ஆனால் இன்றைய தினம் சர்க்கரை மில்கள் ஒரு கிலோவுக்கு 20 பைசா உயர்த்தியிருக்கிறார்கள். மூட்டைக்கு 20 ரூபாய் லாபம் கிடைக்கும். இப்படி சர்க்கரை மில்காரர்கள் கொள்ளை லாபம் அடிக்கிறார்களே தவிர கரும்பு சாகுபடி செய்கிற விவசாயிகளுக்கும் கட்டுப்படியாகக் கூடிய விலை கொடுப்பதில்லை. சர்க்கரையை வாங்கி உபயோகிக்கிற மக்களுக்கும் நியாயவிலையில் கொடுப்பதில்லை. இந்த சர்க்கரை மில்களை எல்லாம் அரசாங்கமே எடுத்துக்கொண்டால் கரும்பு சாகுபடியாளர்களும், மக்களும் பயன் அடைய முடியும். இந்த விஷயத்திலும் அரசாங்கம் சரியானதொரு கொள்கையை வகுத்துக்கொள்ளவில்லை.

அடுத்தபடியாக மின்சாரத்தை எடுத்துக்கொண்டால்— இரண்டு வருஷங்களுக்கு முன்பாக இனி மின்சாரவெட்டே வராது என்றார்கள். 1972-க்குள் எல்லாக் கிராமங்களுக்கும் மின்சக்தி விஸ்தரிக்கப்படும் என்றார்கள். திட்டம் நல்லதுதான், ஆனால் இன்றையதினம் கடுமையான மின்சாரவெட்டினால் நமது மாநிலம் வெகுவாகப் பாதிக்கப்பட்டிருக்கிறது. 1972-க்குள்

எல்லாக் கிராமங்களுக்கும் மின்சாரத்தை விஸ்தரிக்க திட்டம் போட்டோமே தவிர மின்சார உற்பத்தியை அதிகப்படுத்த திட்டமிடவில்லை. பெரிய பெரிய மில் அதிபர்கள் கட்டாயமாக அவர்களது மில்களில் ஜெனரேட்டர்கள் வைத்துக் கொண்டிருக்க வேண்டும். இன்றைய தினம் டிரான்ஸ்மிஷனில் 17½ சதவிகிதத்துக்கு மேல் மின்சார இழப்பு ஏற்படுகிறது என்று தென்னிந்திய வர்த்தக சபைத் தலைவர் சொன்னார். திருட்டு நிறையப்போகிறது. 35-இல் இருந்து 50 சதம் போகிறது. ஸ்டேட் ப்ளானிங் கமிட்டி மெம்பர் ஆதிசேஷையா இன்னும் ஐந்து வருஷத்தில் இப்போதுள்ளதைப்போல 2 மடங்கு அதிகமாக நமக்கு மின்சாரம் தேவைப்படும் என்று சொல்லியிருக்கிறார்.

நாம் நெய்வேலி மின்திட்டத்தை இரண்டாண்டு முன்பே கொண்டுவந்திருக்கவேண்டும். தர்மல் ஸ்டேஷன் மூலமாகவும் அதிக அளவு மின் உற்பத்தியைப் பெருக்க நடவடிக்கை எடுத்துக் கொண்டிருக்க வேண்டும். மூசிறிக்குப் பக்கத்தில் யுரேனியம் அதிக அளவில் கிடைக்கிறது. மற்ற நாடுகளில் கிடைக்கிற தோரியத்தை யுரேனியமாக மாற்றி மின் உற்பத்தி செய்கிறார்கள். ஆனால் இங்கே யுரேனியமாகவே மூசிறிக்கு அருகில் கோடிக் கணக்கான டன் கிடைக்கிற காரணத்தினால் அங்கே ஒரு மின் சக்தி உற்பத்தி நிலையத்தை ஏற்படுத்தவேண்டும். நெய்வேலி மின்சார நிலையத்தில் 10 கோடி செலவானாலும் மாநில சர்க்காரே நமது நிதி ஆதாரங்களைக் கொண்டாவது அணுசக்தி மின் உற்பத்தி நிலையத்தை அமைத்தாக வேண்டும். ஆக, மின் உற்பத்தியைப் பெருக்க இந்த அரசு முன்கூட்டியே தக்க நடவடிக்கைகளை எடுத்திருந்தால் மின்வெட்டைத் தவிர்த்திருக்க முடியும். இல்லையென்றாலும் இனியாகிலும் உடனடியாக இவற்றில் கவனம் செலுத்தவில்லை என்றால் நம் மாநில தொழில்கள் பெரிதும்
ந.ப. 12-00 பாதிக்கப்படக்கூடிய நிலைதான் வளர்ந்து விடும். (நண்பகல் மணி அடிக்கப்பட்டது.)

* **திரு. கு. அ. பொம்மன்:** பேரவை மாற்றுத் தலைவர் அவர்களே, நமது மேதகு ஆளுநர் அவர்கள் இந்த அவையில் ஆற்றிய உரையின்மீது என்னுடைய கருத்துக்களைச் சொல்ல விரும்புகிறேன்.





ஆளுநர் தனது உரையில் அண்மையில் ஏற்பட்ட புயலினால் இந்த மாநிலத்திலுள்ள எல்லா மாவட்டங்களும் பாதிக்கப்பட்டிருக்கின்றன என்று குறிப்பிட்டிருக்கிறார். அதனால் சாலைகளும், குடிநீர் வசதிகளும், மற்றும் வயல்களும் பாதிக்கப்பட்டிருக்கின்றன என்று சொல்லி இருக்கிறார்கள். எங்களுடைய, மலைப்பிரதேசமாகிய, நீலகிரி மாவட்டம் இதற்கு விதிவிலக்கு இல்லை. அங்கு புயலும் அடித்திருக்கிறது, 10, 15 பேர் உயிரிழந்திருக்கிறார்கள். ஒரு குழந்தை தவிர, ஒரு குடும்பமே அழிந்திருக்கிறது.

எங்கள் பகுதியிலே அதிகமாகப் பயிராக்கப்படும் உருளைக் கிழங்கு இந்தப் பெரிய மழையின் காரணமாகப் பாதிக்கப்பட்டிருக்கிறது. இதனால் விவசாயிகளுக்குப் பல கஷ்டங்கள் ஏற்பட்டிருக்கின்றன. இது தவிர, 1960-ம் ஆண்டு முதற்கொண்டு இருக்கிற பூஷண நோய் இன்னும் தீர்க்கப்படவில்லை. இதனால் பயிர்கள் ஆண்டுதோறும் பெரிதும் பாதிக்கப்படுகின்றன. இதனால் விவசாயிகளுக்குப் பெரிய துன்பங்கள் ஏற்பட்டிருக்கின்றன. அவர்கள் கூட்டுறவு சங்கங்களின் மூலமாக வாங்கிய கடன்களைக் கொடுக்கமுடியாத நிலையில் வந்திருக்கிறார்கள். நமது அரசு, விவசாயிகள் அரசு, தொழிலாளர் அரசு என்று சொல்லப்படுவதனால் விவசாயிகளுக்கு நிவாரணம் தருவது இந்த அரசினுடைய கடமை என்று தெரிவித்துக்கொள்கிறேன். இந்த நிவாரணம் என்ன என்பதற்கு நான் இரண்டொரு குறிப்புகளை அவையின் முன் வைக்க விரும்புகிறேன்.

கூட்டுறவுச் சங்கம் மூலமாகக் கொடுத்த கடன்களின் வட்டியை வஜா செய்வது ஒன்று. அசல் தொகையை தவணை முறையில் செலுத்தலாம் என்று ஏற்பாடு செய்வது இரண்டாவது. அடுத்த போகத்திற்கு கூட்டுறவு சங்கங்களின்மூலம்தான் விளைச்சலைப் பெருக்க வாய்ப்பு இருக்கும். இது மூன்றாவது. கடன் கொடுக்காவிட்டால், அவர்கள் விவசாயம் செய்ய இயலாது. தற்பொழுது வசூல்களைத் தற்காலிகமாக நிறுத்தி வைக்கவேண்டுமென்று மிகப் பணிவன்போடு கேட்டுக் கொள்கிறேன்.

மின்சாரத்தைப் பற்றி, ஒத்தி வைப்புத் தீர்மானம் மூலமாகப் பல கட்சித் தலைவர்கள் வெகு விளக்கமாக விவசாயிகளுக்கு என்ன என்ன பாதகம் ஏற்படுகிறது, தொழிலாளிகளுக்கு என்ன

பாதகம் ஏற்படுகிறது, தொழிற்சாலைகளுக்கு என்ன பாதகம் ஏற்படுகிறது என்று சொல்லியிருக்கிறார்கள். சர்க்கார் தரப்பிலிருந்து மின்சாரக் கட்டுப்பாடு ஏற்பட்டதன் காரணங்களை வெகு விளக்கமாகச் சொல்லியிருக்கிறார்கள். தொழிலமைச்சர் எந்தெந்த தொழில்களுக்கு மின்சார வெட்டிலிருந்து விதிவிலக்கு அளிப்பதென்று அமைச்சரவையிலே ஆலோசனை செய்து கொண்டிருக்கிறோம், அதன்பிறகு அதைச்செய்வோம் என்று சொன்னார்கள். எங்கள் நீலகிரி ஜில்லாவில் தேயிலைத் தோட்டங்கள் நிறைய இருக்கின்றன. எட்டு கூட்டுறவுத் தொழிற்சாலைகள் இருக்கின்றன. அந்தத் தொழிற்சாலைகளுக்கு மின் வெட்டு ஏற்படுத்தியிருப்பதால், மிகவும் பாதகம் ஏற்பட்டிருக்கிறது. மற்ற உணவுப் பொருள்களைப் போல் அல்ல தேயிலை. மற்ற தொழில்களைப் போல் தேக்கிவைத்து, பிறகு மின் வெட்டு நீங்கியதும் வேலைகளைச் செய்ய முடியாது தேயிலையைப்பொறுத்த வரையில், பச்சைத் தேயிலையைப் பறித்தவுடன் பண்படுத்தாவிட்டால், அது பயனற்றுப் போய் விடும் அழுகும் பொருள் இனத்தை சேர்ந்தது. ஆதலால் இந்தக் கூட்டுறவுத் தொழிற்சாலைகளுக்கு மின்சார வெட்டிலிருந்து விதிவிலக்குக் கொடுக்கவேண்டுமென்று கேட்டுக் கொள்கிறேன்.

அவசரச் சட்டம் ஒன்றின் மூலமாக, நீலகிரி மாவட்டத்தி லுள்ள அத்தனை பேருந்துகளையும் அரசுடைமையாக்கியிருக் கிறார்கள். சர்க்காருடைய நோக்கம் படிப்படியாக அரசுடைமை யாக்குவது என்பதுதான். அந்த வகையில் கவர்னருடைய அவசரச் சட்டம் மூலமாகப் பஸ்களை அரசு எடுத்துக் கொண் டிருக்கிறது. இது தவறு என்று சொல்வதற்கில்லை. ஆனால், அதே சமயத்தில் பஸ்களை வைத்திருந்தவர்கள் பெரிய முதலாளிகள் அல்ல. ஏதோ ஒரு பஸ், இரண்டு பஸ் வைத்து நடத்திக் கொண்டிருந்தார்கள். அவர்களுக்குப் பாதகம் ஏற்பட்டிருக்கிறது. அவர்களுக்கு நஷ்ட ஈட்டை வருட அடிப்படையில் கொடுப்பது தவறு. அந்தந்த பஸ்களை எடுக்கும் போது அவைகளுடைய நிலைமை என்ன என்ற அடிப்படையில் நஷ்ட ஈடு கொடுப்பதுதான் நியாயம். 1954-ம் வருடத்திலே ரிஜிஸ்தர் பண்ணியிருந்தால், அதற்குப் பிறகு இப்பொழுது புது உபகரணங்களைப் போட்டிருக்கலாம். ஆகவே, 1954-ம்





வருடத்தைக் கணக்கில் எடுத்துக்கொண்டு நஷ்ட ஈடு கொடுக்க கூடாது. அன்றையதினம் எந்த நிலைமையில் அந்த பஸ்களை எடுத்துக்கொண்டார்களோ அந்த நிலைமையில் எப்படி இருக்கிறது என்பதைப் பார்த்து, வல்லுனர்களைப் போட்டு ஆலோசனை செய்து அவர்களுக்கு நஷ்ட ஈடு கொடுக்கவேண்டுமென்று மிகப் பணிவன்போடு கேட்டுக்கொள்கிறேன்.

அடுத்தபடியாக, மலைத் தோட்டங்களில் ஆதிவாசிகள் வேலை செய்கிறார்கள். அவர்கள் மற்ற தொழிலாளர்களுடன் இருப் பதற்குப் பிரியப் படுவதில்லை. இதற்கு காரணம் அவர்களின் பழக்கவழக்கங்கள்; அவர்கள் தனியாக இருக்கப் பிரியப்படு கிறார்கள். ஆகையால். அவர்களுக்குத் தனியாக இருக்க குடியிருப்பு வசதி செய்ய வேண்டுமென்று, அரசு தேவையான உதவியைச் செய்ய வேண்டுமென்று தோட்ட முதலளிகளுக்கு பணிக்க வேண்டும் என்று மிகப் பணிவன்போடு கேட்டுக் கொள் கிறேன்.

அடுத்தபடியாக கூடலூர்—அப்பகுதியில் குடிதண்ணீர் தொட்டி சரியாக இருப்பதில்லை. கூடலூர் தாலுகாவில், மேபீல்ட் எஸ்டேட்டில், அவுந்தேல் என்ற பகுதியில் ஒரு தண்ணீர்த் தொட்டி இருக்கிறது. அங்கு மழைக் காலத்திலே, சருகுகளும், மணலும் சேர்ந்து இருப்பதாலே, அதையே மக்கள் குடிக்க வேண்டிய நிலை இருப்பதாலே, அவர்கள் பல நோய்களுக்கு ஆளாகிறார்கள். அமைச்சர்கள் அப்பகுதிக்குச் சுற்றுப்பயணம் செய்யும்போது, அந்த இடத்தைப் பார்த்தால் தெரியும். ஆகையால், சம்பந்தப்பட்ட துறைக்கு அரசின் மூலமாக தாக்கீது அனுப்பி தொழிலாளர்களுக்குச் சுகாதார வசதிகள் செய்து கொடுக்க வேண்டுமென்று கேட்டுக்கொண்டு என் வாக்கியத்தை முடித்துக்கொள்கிறேன். வணக்கம்.

**திரு. கு. காமாட்சி** : மாண்புமிகு தலைவரவர்களே, ஆளுநர் தனது உரையில் இந்த அரசு மக்களுக்குப் பயனுள்ள எவ்வளவு நல்ல காரியங்களை யெல்லாம் செய்திருக்கிறது என்பதைப் பற்றியும் செய்ய இருக்கிறது என்பதைப் பற்றியும் மிகத் தெளிவாக எடுத்துக் கூறியிருக்கிறார்கள். வேளாண்மையிலேயும் விவசாயத் தொழிலாளர்களுடைய அக்கறையிலேயும் தொழில் வளர்ச்சியிலேயும் தொழிலாளர்கள், அரசு ஊழியர்கள்,

இவர்களிடத்திலேயும் இந்த அரசு எவ்வளவு அக்கறை காட்டியிருக்கிறது என்பதை இந்த உரையிலே நாம் காணமுடிகிறது. வறட்சி நிலைமை ஏற்பட்டபொழுது, அரசு எவ்வளவு தீவிரமாக அந்த வறட்சியைச் சமாளித்தது என்பதை நாம் இந்த உரையிலே காண்கிறோம். பெரும் புயல் அடித்தபொழுது இந்த அரசு விவசாயிகளுக்காக எடுத்துக்கொண்ட உடனடி நடவடிக்கைகளின் காரணமாக இன்றைக்கு விவசாயிகள் எவ்வளவு மகிழ்ச்சியோடு இருக்கிறார்கள் என்பதையெல்லாம் நாம் அறிகிறோம்.

புயலின் காரணமாக மூடப்பட்ட நஞ்சை நிலங்களெல்லாம் உடனடியாக அரசு பொறுப்பிலேயே வெட்டித் தரப்படும் என்று முதலமைச்சரவர்கள் உத்தரவிட்டு அதற்கான பணிகள் மிக வேகமாக நடந்து கொண்டிருப்பது வரவேற்கத்தக்கது என்பதை நான் தெரிவித்துக்கொள்கிறேன்.

அதேபோல், இன்றைக்கு வேளாண்மையிலே நம்முடைய அரசு மிகத் தீவிரமாக கவனம் செலுத்தியதன் காரணமாகத்தான் இன்றைக்கு உணவுப் பிரச்சினையிலே நாம் தன்னிறைவு பெற்றிருக்கிறோம். சென்ற ஆண்டு உரத் தட்டுப்பாடு ஓரளவு ஏற்பட்டது. 1972-73-ல் நாம் கேட்ட நைட்ரஜன் உரம் ஏறத்தாழ 2-3/4 லட்சம் டன். ஆனால் கிடைத்தது 1-1/2 லட்சம் டன்தான். இனி அடுத்த ஆண்டு இந்த நிலை ஏற்படக்கூடாது என்பதை நான் இந்த நேரத்திலே எடுத்துச் சொல்ல கடமைப்பட்டிருக்கிறேன். உரத் தட்டுப்பாடு ஏற்பட்ட காரணத்தினாலேதான் சிறு விவசாயிகளுக்குக் கொடுக்க வேண்டிய உரத்தைக் கூட, அதிக விலை கிடைக்கும் என்ற காரணத்தினால் கள்ளச்சந்தைக்காரர்களிடம் விற்கக்கூடிய சூழ்நிலையெல்லாம் ஏற்பட்டது. சில கள்ளச் சந்தைக்காரர்களைக் கூட அரசு தஞ்சை போன்ற மாவட்டங்களில் கைது செய்திருக்கிறது. இந்த ஆண்டு இதில் தீவிர நடவடிக்கை எடுத்துக்கொள்ள வேண்டுமென்று நான் பணிவன்போடு கேட்டுக் கொள்கிறேன்.

நீர் வளத்தைப் பொறுத்தவரையில் நாம் நல்லமுறையிலே நீர் வளத்தைப் பயன்படுத்திக் கொண்டிருக்கிறோம். இன்னும் நீர் பெறமுடியாத நிலங்களெல்லாம் நிறைய இருக்கின்றன. கூட்டுறவு





முறையின் காரணமாக லிப்ட் இரிகேஷன் என்ற அளவில் ஒரு திட்டத்தைச் செயல்படுத்தி வருகிறோம். அதைக் கூட நான் இன்னும் சொல்வேன், அரசாங்கமே அதை எடுத்துக்கொண்டு 10 ஏக்கர், 20 ஏக்கருக்கு ஒரு பக்கத்திலே குழாய்க் கிணறு அமைத்து, அதிலிருந்து வருகிற நீரை ஒரு ஏக்கரா, இரண்டு ஏக்கரா வைத்திருக்கின்ற சிறிய உழவர்களுக்குக் கொடுப்பதன் வாயிலாகவும் தண்ணீர் தீர்வை ஏற்படுத்துவதன் வாயிலாகவும் இன்றைக்கு நம் நாட்டிலிருக்கிற லட்சக்கணக்கான ஏக்கர்களை விவசாயத்திற்குக் கொண்டு வரமுடியும் என்பதை நான் இங்கே சொல்ல விரும்புகிறேன். அரசு அதைப் பரிசீலிக்க வேண்டும் என்று நான் கேட்டுக்கொள்கிறேன்.

காவிரிப் பாசன ஏற்பாட்டை நாம் ஒழுங்குபடுத்தவேண்டிய அளவிலே இருக்கிறோம். இன்றைக்கு கடைமடைப் பகுதியில் காவிரியினுடைய பாசனம் சரியாகக் கிடைப்பதில்லை. ஆனால், அதே நேரத்தில் இடையிலே அந்த நீர் மிகவும் அதிகமாக வீணாகிறது என்பதையும் நான் இங்கே சொல்ல வேண்டிய நிலையிலே இருக்கிறேன். ஆகவே, வீணாகிற நீரை வீணாகாமல் கடைமடைப் பகுதிகளுக்கும் கிடைக்கக்கூடிய அளவில் கால்வாய்களையெல்லாம் ரீமாடலிங், மறுசீரமைப்பு செய்ய வேண்டுமென்று கேட்டுக்கொள்கிறேன்.

தொழில் வளம் நல்ல முறையில் பெருகிய காரணத்தினால் இன்றைக்கு நம் நாட்டிலே சேலம் இரும்பாலையை நம்முடைய அரசு தீவிர முயற்சிகள் எடுத்து, கொண்டு வந்திருக்கிறது. பஞ்சாலைகளை எல்லாம் நாம் எடுத்து நடத்திவருகிறோம் என்று நண்பர்கள் எல்லாம் சொன்னார்கள்.

வேலைவாய்ப்புத் திட்டத்தைப் பொறுத்தவரையில் கிராமப் புறங்களில் வேலைவாய்ப்பை ஏற்படுத்த கிராஷ் புரோகிராம் என்ற அளவிலே ஏற்படுத்தி சாலை வசதிகளையெல்லாம் செய்து வருகிறோம், அதேபோன்று பிச்சைக்காரர் மறுவாழ்வுத் திட்டத்தையும் நல்லமுறையிலே செயல்படுத்திவருகிறோம்.

மின்சாரக் கட்டுப்பாடுபற்றிச் சொல்லப்பட்டது. மின்சாரக் கட்டுப்பாடு என்பது இன்றையதினம் தமிழ் நாட்டுக்கு மாத்திரம் ஏற்பட்டிருப்பது அல்ல என்று அமைச்சர் அவர்கள் எடுத்துச்

சொல்லியிருக்கிறார்கள். இந்திரா காங்கிரஸ் கட்சி ஆளுகின்ற மாநிலங்களில் கூட மின்சார வெட்டு இருக்கிறது என்று அந்தக் கட்சிக்காரர்களுக்குத் தெரியுமோ, தெரியாதோ தெரியவில்லை. இங்கே இருக்கின்ற மின்சார அமைச்சருக்கு திறமையே கிடையாது என்று சொன்னார்கள். அப்படியென்றால் அந்தந்த மாநிலங்களில் எல்லாம், மின்சார வெட்டு இருக்கிற மாநிலங்களில் எல்லாம் இருக்கிற அந்தத் துறை அமைச்சர்கள் எல்லாம் திறமையற்றவர்கள் என்று அவர்கள் கருதுகிறார்களா?

**திருமதி த. ந. அனந்தநாயகி :** ஆன் எ பாயின்ட் ஆப் கிளாரிபிகேஷன் சார். திறமையற்ற மந்திரி என்று நான் சொல்லாததை சொன்னதாகச் சொல்கிறார்கள். நான் ஜூனியர் மந்திரி என்றுதான் சொன்னேன்.

**மாண்புமிகு மாற்றுத் தலைவர் (திரு. நா. வீராசாமி) :** அந்த அம்மையார் அவர்களே அதைச் சொல்லவில்லை என்று சொன்னார்கள். அதை விட்டு விட்டு பேச்சை தொடருங்கள்.

**திரு. கு. காமாட்சி :** பவர்புல் மினிஸ்டரிடம் அந்தத் துறையைக் கொடுக்கவில்லை என்று சொன்னார்கள். அப்படியென்றால் இருக்கிற மினிஸ்டர் பவர் இல்லாத மினிஸ்டர் என்றுதான் அர்த்தம் ஆகிறது. பவர்புல் மினிஸ்டரிடம் அந்தத் துறையைக் கொடுக்கவேண்டுமென்று சொன்னதால்தான் நான் சொல்லக்கூடிய நிலைமை ஏற்பட்டது.

இந்தியாவிலே உள்ள பல மாநிலங்களிலே இன்றைக்கு மின்சார வெட்டு இருக்கிறது. நாம் நல்ல முறையிலே சமாளித்து வருகிறோம் என்று தெளிவாக எடுத்துச் சொல்லி வருகிறோம். இப்படிப் பயன் உள்ள நல்ல காரியங்களையெல்லாம் மக்களுக்காக இந்த அரசு செய்து வருகிறநேரத்திலே இந்த அமைச்சரவை ராஜிநாமா செய்யவேண்டும் என்று சொல்கிறார்கள். இந்த அமைச்சரவை ராஜிநாமா செய்யவேண்டுமென்று (மணியடிக்கப்பட்டது) இன்னும் கருத்துக்களைச் சொல்லவேண்டியிருக்கிறது.

**மாண்புமிகு மாற்றுத் தலைவர் (திரு. நா. வீராசாமி) :** 20 உறுப்பினர்கள் பேசுவதற்கு பெயர்கள் கொடுத்திருக்கிறார்கள். ஒவ்வொரு உறுப்பினரும் 6 நிமிடங்கள்தான் எடுத்துக்கொள்ள வேண்டும். நீங்கள் சீக்கிரம் முடித்துவிடுங்கள்.



**திரு. கு. காமாட்சி :** கிட்டத்தட்ட 185 உறுப்பினர்களுக்கு மேற்பட்டவர்கள் ஆதரிக்கக்கூடிய இந்த அமைச்சரவை ராஜிநாமா செய்யவேண்டுமென்று எதற்காகச் சொல்கிறார்கள் என்பது எனக்குப் புரியவில்லை. இந்த அமைச்சரவை ராஜிநாமா செய்யவேண்டுமென்று காங்கிரஸ்காரர்கள் கூறலாம், இந்திரா காங்கிரஸ்காரர்கள், எல்லா மாநிலங்களிலும் நாங்கள் ஆளுகிறோம், இந்த மாநிலத்தையும் நாங்கள் ஆளவேண்டுமென்ற முறையிலே சொல்லலாம். ஆனால், கம்யூனிஸ்ட் கட்சிக்காரர்கள் எதற்காக சொல்கிறார்கள் என்பது புரியவில்லை. அவர்கள் சொல்வதையெல்லாம் இந்த ஆட்சி செய்துவருகிறது. ஏழை எளிய மக்கள் வாழ வேண்டும் என்ற முறையிலே அவர்களுக்காக பல திட்டங்களை அக்கறையோடு போட்டு நிறைவேற்றி வருகிறோம். இந்த நிலையில் அவர்களும், அவர்களோடு சேர்ந்து கொண்டு இந்த அமைச்சரவை ராஜிநாமா செய்யவேண்டுமென்று சொல்வதிலே அர்த்தம் இல்லை.

திரு. மணலி அவர்கள் பேசும்பொழுது குறிப்பிட்டார்கள், ஆளும் கட்சியிலே பிளவு ஏற்பட்டுவிட்டது, கலவரங்கள் ஏற்பட்டிருக்கின்றன என்று சொன்னார்கள். ஆளுங்கட்சியிலே பிளவு ஏற்பட்டது என்று சொன்னார்கள், நாங்கள், இல்லை என்று சொல்லியிருக்கிறோம். என்னுடைய வீட்டில் ஒரு தகராறு நடந்தது என்று வைத்துக்கொள்வோம். என்னுடைய பிள்ளையை நான் வீட்டைவிட்டு வெளியே அனுப்பிவிட்டேன். வீட்டைவிட்டு வெளியேறியவன் தாயையும் தந்தையையும் பார்த்துத் திட்டுகிறான் என்றால், பார்க்கிறவர்கள், ஏன் திட்டுகிறாய் வீட்டுக்குப் போ என்று சொல்வார்கள். அப்படியில்லாமல் அவனை அழைத்து வைத்துக்கொண்டு நீ நன்றாகத் திட்டவேண்டுமென்று சொல்வதைப்போல் கம்யூனிஸ்ட் கட்சி நண்பர்கள் செயல்படுகிறார்கள் என்றால் அது எந்த வகை அரசியல் நாகரிகம். . . .

(திரு. கே. டி. கே. தங்கமணி எழுந்தார்.)

**மாண்புமிகு மாற்றுத் தலைவர் (திரு. நா. வீராசாமி) :** நீங்கள் பேசுகின்ற நேரம் இருக்கிறது. அப்பொழுது சொல்லுங்கள்.

**திரு. கே. டி. கே. தங்கமணி :** அரசியல் நாகரிகம் பற்றிச் சொல்கிறார்கள். அரசியல் நாகரிகம் கம்யூனிஸ்ட் கட்சியைப் பொறுத்தவரையில். . . .

**மாண்புமிகு மாற்றுத் தலைவர் (திரு. நா. வீராசாமி) :** உட்காருங்கள்.

**திரு. எம். சுரேந்திரன் :** தற்காலிகத் தலைவர் அவர்களே, ஆண்டு முடிவதற்குள் நடக்க வேண்டிய காரியங்களைப் பற்றி ஆளுநர் உரையிலே சொல்லப்படும் என்று எதிர்பார்த்துக் கொண்டிருந்தேன். ஆனால் ஆளுநர் உரையானது ஏதோ நடந்து விட்ட சில நிகழ்ச்சிகளைக் கூறி, சில விவரங்களைக் கூறி ஒரு விவரப் பட்டியல் போன்று கோர்வைப்படுத்தப்பட்ட ஒழுங்குபடுத்தப் பட்ட பட்டியலைப் போன்று இருக்கிறதே ஒழிய அரசாங்கத்தின் திட்டங்களைச் சொல்கின்ற ஒரு தஸ்தாவேஜுவாக இல்லை என்பது மிகவும் பெரிய ஏமாற்றத்தை அளிக்கிறது. இந்த நேரத்திலே —சூழ்நிலையிலே ஆளுநர் மூலமாக அம்மாதிரியான திட்டங்களை யெல்லாம் அறிவிப்பதைவிட அமைச்சரவை மூலமாக, முதல் அமைச்சர் மூலமாக அம்மாதிரி விஷயங்களை—திட்டங்களை அறிவிக்கலாம் என்று நினைத்து, அடுத்த பட்ஜெட்டிலே அறிவிக்கலாம் என்று ஒத்திவைத்திருக்கக்கூடும். என்று கருதுகிறேன். நான் இப்படிக் குறிப்பிடுவதற்குக் காரணம் இந்த மாநிலத்திலே ஏற்பட்டிருக்கின்ற அரசியல் சூழ்நிலையாகும்.

ஆளுநர் உரையிலே இருக்கின்ற விஷயங்களைப் பற்றிச் சொல்வதற்கு முன்னால் ஆளுநர் உரைக்கு நன்றி தெரிவிக்கும் தீர்மானத்தைக் கொண்டு வந்து உறுப்பினர் திரு. கணபதி அவர்கள் பேசும்பொழுது மத்திய அமைச்சர்கள் பற்றிக் குறிப்பிட்டார்கள். மாண்புமிகு உறுப்பினருக்கு மத்திய அமைச்சர்கள் கூறுவது எல்லாம் கோபத்தையும் ஆத்திரத்தையும் உண்டாக்கியிருக்கிறது என்பதை அவர்களுடைய பேச்சிலிருந்து நாம் தெரிந்து கொள்ளலாம். முதலில், மத்திய அமைச்சர்கள் இந்த மாநிலத்தைச் சேர்ந்தவர்கள், அடுத்ததாக, இந்திய தேசிய காங்கிரஸில் உள்ளவர்கள். அடுத்ததாக அவர்கள் இந்திய அரசிலே அமைச்சர்களாக உள்ளவர்கள் என்பதை கருத்தில் கொண்டால், மாநிலத்திலே நடக்கும் விஷயங்களிலே அவர்கள் அக்கறை கொள்வதும், எதிர்க்கட்சிகளைப்பற்றி விமர்சிப்



பதும் மத்திய அரசிடமிருந்து மாநிலத்திற்கு அளிக்கப்படுகிற பணம் சரியான முறையிலே செலவழிக்கப்படுகின்றதா என்பதில் கவலைகொள்வதும் அவர்களது இயல்பான கடமை ஆகும். இந்த முறையில் கடமையாற்றுகின்ற விஷயங்கள், வாதங்கள் எல்லாம் இந்த மாநிலத்திலே உள்ளவர்களுக்கு ஏன் ஆத்திரத்தை உண்டாக்க வேண்டும்? கடமை தவறியவர்களுக்கு ஆத்திரம் வருவது இயல்பு.

**மாண்புமிகு திரு. க. அன்பழகன் :** தமிழ்நாட்டில் வரவு—செலவு சரியாக நடைபெறுகிறதா என்பதைப் பார்ப்பதற்கு பப்ளிக் அக்கவுண்ட்ஸ் கமிட்டியும், அதற்குத் தலைவராக எதிர்க் கட்சித் தலைவரும் இருக்கின்ற முறை இருக்கின்றது. மத்திய அரசாங்க அமைச்சர்கள் மாநில அரசாங்கத்தின் கணக்குகளைப் பார்க்க எப்பொழுதும் உரிமை பெற்றவர்கள் அல்ல. ஆனால் அந்த அதிகாரம் பெற்றிருக்கிற உறுப்பினர் ஒருவேளை தனக்கு அந்த அதிகாரம் வேண்டாம் என்று நினைக்கிறாரா என்பதை அறிய விரும்புகிறேன்.

**திரு. எம். சுரேந்திரன் :** அமைச்சரவர்கள் அளித்த விளக்கத்திற்கு நன்றி கூறிக்கொண்டு, அதேநேரத்திலே வரவு செலவுக் கணக்கைப் பார்ப்பதற்கு மத்திய சர்க்கார் விரும்புகிறார்கள் என்றோ அல்லது அந்தக் கணக்கைப்பற்றித் தான் குறிப்பிடுகிறேன் என்றோ கருதியிருந்தால் அது சரியானது அல்ல. மத்திய சர்க்காரிலிருந்து மாநில அரசின் மூலம்தான் மக்களுக்குச் செய்ய வேண்டிய காரியங்களுக்காகப் பணம் ஒதுக்கப்படுகிறது. அந்தப் பணம் சரியாக மக்களுக்குப் போகிறதா இல்லையா என்று கவலை கொள்வது நியாயம் என்று மட்டும் கூறினேனே தவிர இங்குள்ள வரவு செலவுக் கணக்கைப் பற்றி நான் சொல்லவில்லை. அந்த பப்ளிக் அக்கவுண்ட்ஸ் கமிட்டியிலே நானும் ஒரு அங்கத்தினராக இருக்கிறேன். அந்த வரவு செலவுக் கணக்கில் எவ்வளவு ஊழல்கள் இருக்கின்றன என்பது எனக்குப் புரியும். அது வேறு விஷயம். அந்த இடத்திற்குச் செல்ல நான் விரும்பவில்லை. நான் ஏன் இதைக் குறிப்பிடுகிறேன் என்றால் கடந்த வறட்சிக்காலத்திலே பணம் கொடுக்கப்பட்டதாகவும், அது சரியாகச் செலவிடப்படவில்லை என்றும் ஒரு புகார் எழுந்திருப்பதை இந்தச் சபையின் கவனத்திற்கு நினைவூட்ட விரும்புகிறேன்.

**மாண்புமிகு திரு. ப. உ. சண்முகம்:** தலைவரவர்களே, பொதுவாக இப்படிக் குற்றஞ்சாட்டிவிட்டுப் போகக்கூடாது. வறட்சி நிவாரணத்திற்காக கொடுக்கப்பட்டது சரியாகச் செலவு செய்யப்படவில்லை என்று சொன்னார்கள். அவர்கள் எந்த வறட்சியைப்பற்றிக் குறிப்பிடுகிறார்கள் என்று எனக்கு தெரிந்தாக வேண்டும். எந்த வேலைக்கு, என்ன பணம் கொடுக்கப்பட்டு அது சரியாகச் செலவு செய்யப்படவில்லை? ஏதோ போயிருக்கிற புதிய கட்சிக்கு வெண்சாமரம் வீச வேண்டுமென்பதற்காக இங்குள்ள ஆளுங்கட்சியின்மீது குறை கூறுவது சரியல்ல என்பதைத் தெரிவித்துக்கொள்கிறேன்.

**திரு. எம். சுரேந்திரன்:** விளக்கம் சொன்னதற்கு நன்றி தெரிவித்துக்கொள்கிறேன். குற்றச்சாட்டுகளும், அதற்கான பதில்களும் சமர்ப்பிக்கப்பட்டிருக்கின்றன. இந்த விஷயத்திலேயும் அடங்கியிருக்கிறது. ஆகவே, நாங்கள் ஏதும் சொல்வதைக் கேட்டு ஆத்திரம் கொள்ளாமல் இருக்கின்ற நியாயத்தை எண்ணிப் பார்க்க வேண்டுமென்று அமைச்சர்களுக்கு நான் பணிவன்போடு சொல்லிக்கொள்ள விரும்புகிறேன்.

**மாண்புமிகு திரு. ப. உ. சண்முகம்:** தலைவரவர்களே, குற்றச்சாட்டைச் சொன்னார்கள், பணம் கொடுத்தார்கள், அதைச் சரியாகச் செலவு செய்யவில்லை என்று சொன்னார்கள். சாதாரணமாக, பொறுப்புள்ள அங்கத்தினர்கள் சட்டமன்றத்திலே பேசும்பொழுது—பொதுக் கூட்டங்களிலே எப்படியும் பேசலாம், ஆனால் சட்டமன்றத்தில்—பொறுப்போடு சொல்ல வேண்டும். யாருக்குக் கொடுத்தார்கள், என்ன தவறுகள் நடந்தன என்று அவர்களுக்கு விவரம் தெரிந்தால் சொல்லட்டும், தெரியாவிட்டால் பரவாயில்லை, . பேசிவிட்டுப் போங்கள்.

**திரு. எம். சுரேந்திரன்:** பொறுப்பற்ற முறையில் பேசுவதாகக் கருதக்கூடாது. பொறுப்புணர்ந்து பேசுவதுதான் ஒவ்வொரு உறுப்பினரின் கடமையுமாகும். பொறுப்பற்ற முறையில் பேசும் உறுப்பினராக என்னைக் கருதிக் கொள்ளக்கூடாது. ஏனென்றால் இந்த மாநிலத்திலே உங்கள்மீது ஒரு குற்றச்சாட்டு சுமத்தப்பட்டிருக்கிறது.





**மாண்புமிகு திரு. ப. உ. சண்முகம்:** தலைவரவர்களே, வறட்சியைப் பற்றிச் சொன்னார்கள். எந்த வறட்சிக்கு, எந்தப் பணம் சரியாகச் செலவு செய்யப்படவில்லை என்று கேட்டேன். அதற்குப் பதில் சொல்லாமல் அதை விட்டுவிட்டு வேறொன்றுக்குப் போகிறார்கள். அதைப்பற்றி விவாதிக்க வேண்டுமானால் இந்த மன்றத்திலே விவாதிப்பதற்கு உரிமையிருக்கிறது. வறட்சிக்குப் பணம், மத்திய சர்க்கார் கொடுத்தது, சரியாகச் செலவு செய்யவில்லை, ஊழல் இருக்கிறது என்று மொத்தமாகச் சொல்லிவிட்டுப் போகக் கூடாது. சாட்டுகின்ற குற்றச்சாட்டுகளை விவரமாகச் சாட்டினால் பதில் சொல்வதற்குக் கடமைப்பட்டிருக்கிறோம்.

**திரு. எம். சுரேந்திரன்:** சொல்வதைப் பொறுப்போடுதான் சொல்கிறேன். மத்திய சர்க்காரிலுள்ள அமைச்சர்கள் மாநிலத்தைப் பற்றிக் கூறுவதைப் பற்றி திரு. கணபதி அவர்கள் குறிப்பிட்டிருக்கிறார்கள்.

**மாண்புமிகு திரு. ப. உ. சண்முகம்:** மத்திய சர்க்காரிலுள்ள அமைச்சர்கள் மாநிலங்களிலுள்ள அமைச்சர்களைப்பற்றிப் பேசும் பொழுது பொறுப்போடு பேசவேண்டும். அவர்களுக்கும் இது பொருந்தும்.

**திரு. எம். சுரேந்திரன்:** நான் இப்பொழுதும் சொல்கிறேன். பொறுப்போடு பேசுவது எல்லோருக்கும் சமம். பொறுப்பு என்பது ஒருவருக்கு மட்டும் உரியதல்ல. அவ்வளவு பேருக்கும் பொறுப்போடு பேச வேண்டுமென்ற அக்கறை இருக்க வேண்டும், அப்படி நடக்க வேண்டும் என்பதில் சந்தேகமில்லை. இன்றைக்கு திரு. கணபதி அவர்கள் இன்னொன்றைக் கூறியிருக்கிறார்கள். அரசாங்கத்தின்மீது விசாரணைக் கமிஷன் வைப்பதற்கு மத்திய அரசுக்கு அதிகாரம் இருக்கிறதா இல்லையா, அப்படிச் சொல்லலாமா என்று கேட்டிருக்கிறார்கள். மத்திய சர்க்காருக்கு அதிகாரம் இருக்கிறதா இல்லையா என்பதை நிர்ணயிப்பது நாம் அல்ல.

**மாண்புமிகு திரு. ப. உ. சண்முகம்:** தலைவரவர்களே, நான் இதிலிருந்து தெரிந்துகொள்வது என்னவென்றால், வறட்சியைப் பற்றி அவர்கள் சொன்னதற்கு நான் கேட்ட கேள்விக்குப் பதில் சொல்லவில்லை, எனவே, அவர்கள் தெரியாத விவரத்தைச் சொல்லிவிட்டார்கள் என்பதைப் புரிந்து கொண்டேன்.

**திரு. எம். சுரேந்திரன் :** உங்களுடைய தஸ்தாவேஜிலேயே இருக்கிறது. 17 கோடி ரூபாய் கொடுத்தார்கள், சரியாகச் செலவு செய்யப்படவில்லை என்று இருக்கிறது.

**மாண்புமிகு திரு. ப. உ. சண்முகம் :** 17 கோடி ரூபாய் கொடுத்தார்கள், சரியாகச் செலவு செய்யவில்லை என்று தஸ்தாவேஜில் இருக்கிறதா ? எந்த தஸ்தாவேஜில் ?

**திரு. எம். சுரேந்திரன் :** குற்றச்சாட்டுகளுக்குப் பதில் கொடுத்த தஸ்தாவேஜில்.

**மாண்புமிகு திரு. ப. உ. சண்முகம் :** நாங்கள் கொடுத்த பதிலில், நாங்கள் சரியாகச் செலவு செய்யவில்லை என்று இருக்கிறதா ? அப்படியானால் அதைத் தாங்கள் ரொம்பவும் படித்திருக்கிறீர்கள். தமிழையாவது சரியாகப் படிக்க வேண்டும்.

**திரு. எம். சுரேந்திரன் :** மிக்க நன்றி. இனிமேல் அதிகமாகப் படிப்பதற்கு முயற்சி செய்கிறேன். இப்பொழுது சொல்லப்பட்ட விஷயம், இம்மாதிரிக் குற்றச்சாட்டுகள் இருந்துகொண்டிருக்கிற நிலையிலே இந்த அரசு இன்னும் அதிகமான தவறான நடவடிக்கைகளைச் செய்யாது என்ற உறுதி ஆளுநர் உரையில் இல்லை. இங்கு பேசிய திரு. கணபதி அவர்கள் மாநில அரசின் மீது விசாரணைக் கமிஷன் அமைக்க அதிகாரம் இருக்கிறதா என்று கேட்டுள்ளார்கள். மாநில அரசின்மீது விசாரணை வேண்டும் என்று கேட்கவில்லை. மாநில அரசின்மீது விசாரணைக் கமிஷன் அமைக்க அதிகாரம் இருக்கிறதா இல்லையா என்பது அல்ல பிரச்னை. ஆனால் மாநிலத்தை ஆளுகின்ற அமைச்சர்கள் பலரின் மீது குற்றச்சாட்டுகள் இருக்கின்றன. அவற்றை விசாரிப்பதற்கு மத்திய சர்க்காருக்கு முழு அதிகாரம் இருக்கிறது.

**மாண்புமிகு திரு. க. அன்பழகன் :** தலைவர்களே, இந்த அமைச்சர்கள் மாநில அரசினுடைய ஒரு அங்கமாகும். இந்த மாநில அரசுக்கென்று தனியாக ஏதேனும் உரிமைகள் மதிப்பு அரசியல் சட்டத்திலேயிருந்தால் அந்த உரிமையும், மதிப்பும் இந்த அமைச்சர்களுக்கும் உண்டு. இந்த மாநில அமைச்சர்களின் மீது எந்தக் குற்றச்சாட்டையும் அங்கத்தினர்கள் பொறுப்போடு சொல்லலாம். மத்திய அரசில் உள்ளவர்கள் மாநில அரசின்



மீது விசாரணை செய்ய வேண்டுமென்று எண்ணுவது மாநில அரசுக்கு விதிக்கப்பட்டிருக்கின்ற உரிமைகளிலே தலையிடுவதாக ஆகும். அந்தக் கருத்தைப் பற்றிச் சொல்லும்பொழுது அமைச்சர்களை அரசிலிருந்து பிரித்துப் பேசுவது அரசியல் சட்டப்படி ஒத்து வராது.

**திரு. எம். சுரேந்திரன் :** உங்களுக்கு ஏற்பட்ட சந்தேகத்தைப் பற்றி இன்னொன்றைச் சொல்லிக்கொள்ள விரும்புகிறேன். மாநில சுயாட்சி வேண்டுமென்ற வாதத்திற்கு வலியூட்டுவதற்காக இராஜமன்னார் குழு அறிக்கை சமர்ப்பிக்கப்பட்டிருக்கிறது. அதிலே மத்திய அரசுக்கு இன்னின்ன அதிகாரங்கள், மாநில அரசுக்கு எந்தெந்த அதிகாரங்கள் இருக்க வேண்டுமென்று கூறப்பட்டிருக்கிறது. அதிலே இதுபற்றித் தெளிவாக விளக்கியிருக்கிறது என்று கருதுகிறேன். ஆனால் இப்பொழுது அந்தப் பிரச்னை இல்லை. திரு. கணபதி அவர்கள் மத்திய சர்க்கார் மாநில சர்க்கார் மீது கமிஷன் போடுவதைப்பற்றிக் கூறியிருப்பதால் நான் கூற வேண்டியிருக்கிறது.

**THIRU M. A. LATHEEF :** தலைவர்களே, அரசியல் சட்டப்படி ஒரு மாநில அரசு is a constitutional body. It derives its powers from the Constitution. Similarly the Central Government derives its powers from the same Constitution and the powers of both Central and State Governments have been enumerated in the Constitution and they should not make inroads and trespass into the fields which have been assigned by the Constitution to the respective Governments both Central as well as State Governments. The argument of my learned friend is, if charges are levelled against State Government, then the Central Government is competent to appoint an Enquiry Commission. Then the question arises if similar charges are levelled against the Central Government, who is the authority to ask for the appointment of Enquiry Commission against the Central Government? If there is no provision to bind the Central Government or if there is no higher authority which can appoint an Enquiry Commission against the Central Government, how can they claim similar power is vested in Central Government to appoint an Enquiry Commission against State Government?

There is no provision whatever in the Constitution empowering the Central Government to appoint Enquiry Commission against a properly constituted State Government. Such a thing is against the letter and spirit of the Constitution and opposed to the concept of democracy and also the provisions and soul of the Constitution, from which we all derive our rights. It is from this legislature the duties and obligations are passed on to the executive and they have to be discharged by the Ministry which is responsible to this House. This House alone is competent to censure or go into the conduct of the Ministry and no one else has the right. No power on earth can appoint an Enquiry Commission against the State Government.

THIRU K. SUPPU : On a point of order, Sir. Is there no limit to this? The member goes on talking. It is a point of order or clarification? What is the use of allowing such talks.

MR. DEPUTY SPEAKER : There is a limit. The hon. Member must sit down when the Chair is on its legs. First, the hon. Member must understand his own limitation. Under no circumsances, any Member need 'advise' the Chair. That is the first point. The hon. Member must understand it.

He never raised the point of order. He only asked the permission of the hon. Member and he yielded and then only he rose to speak. So this is not a point of order.

THIRUMATHI T. N. ANANDANAYAKI : An hon. Member could interrupt only through a point of order. If an hon. Member wants information, he can speak only at the end. But you allowed him to speak but he did not raise a point of order.

*மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர் :* முதலிலே நீங்கள் ஒன்றைத் தெரிந்துகொள்ள வேண்டும். நான் நின்று கொண்டிருக்கும்போது வேறு யாரும் எழுந்து நிற்கக்கூடாது. நான் விரும்பினால் எந்த நேரத்திலும் யாரை வேண்டுமானாலும் பேச அழைக்கலாம். எந்தக் காரணத்தைக் கொண்டும் ஸ்பீக்கருக்கு அட்வைஸ் கொடுக்கும் முறை சரியல்ல. சஜ்ஜெஷன்ஸ் கொடுக்கலாம். அட்வைஸ் கொடுப்பது சரியல்ல.





*திரு. எம். சுரேந்திரன் :* மதிப்பிற்குரிய உதவி சபாநாயகர் அவர்களே, என்னுடைய பேச்சு ஒரு சட்ட நுணுக்க விவாதத்திற்கு உரியதாக இருக்கலாம். ஆனால் அந்தச் சட்ட நுணுக்க வாதங்களைச் சட்டசபையில் செய்வதில்லை. இங்கு ஜனங்களின் பிரதிநிதி என்ற வகையிலேதான் பேசுகின்றேனே தவிர, சட்ட நுணுக்கங்களை அறிந்து கொண்டு வாதம் செய்ய வரவில்லை. அதற்கு வேறு இடம் இருக்கிறது. ஊழலை விசாரிக்க கமிஷன் போட வேண்டுமென்ற நிலைமை மாநிலத்தில் பரவலாக இருக்கிறது. இந்த மாநிலத்தில் அப்படிப்பட்ட ஒரு நிலைமை இல்லையென்று மறுத்துவிட முடியாது. இப்போது இருக்கும் நிலைமையைப் பார்க்கும்போது உண்மைக்கும், சட்டங்களுக்கும் இடையே வெகுதூரம் இடைவெளி இருக்கிறது. அந்த இடைவெளி ஒன்றோடொன்று பொருந்தாமல் போய்க்கொண்டிருக்கிறது. அந்த இடைவெளி அதிகப்பட்டுக் கொண்டே போகிறது.

இந்த மாநிலத்தில் இருக்கும் எல்லா அரசியல் கட்சிகளும், வேண்டுமானால், பெருவாரியான அரசியல் கட்சிகள் இந்த அரசாங்கத்தின்மீது குற்றம் சாட்டி எல்லா இடங்களிலும் பேசியிருக்கிறார்கள். இங்கும் பல நேரங்களிலும் பேசியிருக்கிறார்கள். அப்படிச் சட்ட மன்றத்தில் பேசும்போதெல்லாம் "ஆதாரம் எங்கே? எங்கே?" என்று கேட்கப்படுகிறது. இப்போது இந்த அமைச்சரவையில் இருப்பவர்கள்மீது கொடுக்கப்பட்ட குற்றச்சாட்டுகளுக்கு ஆதாரம் இல்லை என்று இந்த அமைச்சரவை இந்தச் சபையில் ஒரு விளக்கத்தை வைத்து அதை மத்திய அரசுக்கு அனுப்பி இருக்கிறார்கள். மத்திய அரசுக்கு விசாரணைக் கமிஷன் அமைக்க அதிகாரம் இல்லையென்றே வைத்துக் கொள்ளுங்கள். அதிகாரம் இல்லையென்று சொல்லி விட்டு ஏன் மத்திய அரசுக்குப் பதில் அனுப்ப வேண்டுமென்று புரியவில்லை. இப்படி ஒன்றுக்கொன்று முரண்பட்ட நிலையில் இந்த அரசாங்கத்தின் அமைச்சர்களும் சரி, ஆட்சியில் இருக்கும் கட்சியின் அங்கத்தினர்களும் சரி பேசிக் கொண்டு வருவது இந்த மாநிலத்தின் அரசியலுக்கு நல்லதல்ல என்று சொல்ல ஆசைப்படுகிறேன்.

சாட்டப்பட்ட குற்றச்சாட்டுகள் சரியானதா இல்லையா என்பது சபையில் தீர்க்கப்படக்கூடிய விஷயம் அல்ல. கோர்ட்டுக்குச் சென்றால் கோர்ட்டில் இருக்கும் நிலைமையில்

சாட்சிகளை விசாரித்துத் தீர்மானிக்கப்பட வேண்டுமே தவிர, ஒருவரே வாதியாகவும், பிரதி வாதியாகவும் இருந்து கொண்டு குற்றமே இல்லையென்று சொல்லுவது சரியல்ல. குற்றம் இருக்கிறது என்று மாநிலத்திலுள்ள பெருவாரியான மக்கள் சொல்லுகின்ற நிலைமை வளர்ந்து கொண்டிருக்கிறது. ஆகவே, இந்த அரசு ஜனநாயகத்தில் நம்பிக்கையுள்ள அரசு என்று சொல்லும்போது ஜனநாயகத்திற்குப் பொருந்திய முறையில் தீர்த்துக் கொள்ளுவதற்கான முயற்சியில் ஈடுபடுவதுதான் நியாயம் என்று சொல்ல ஆசைப்படுகிறேன்.

இதிலே ஒன்று மத்திய அரசு விசாரணைக் கமிஷன் நியமிக்க வேண்டும் அல்லது தாங்களே ஒரு விசாரணைக் கமிஷனுக்குத் தயாராக இருக்கிறோம் என்று சொல்ல வேண்டும். இதிலே எந்த வழி என்று மிக விரைவில் தீர்மானத்திற்கு வரவேண்டுமென்பது தான் மாநிலத்தில் இருந்து கொண்டிருக்கும் சூழ்நிலையாகும்.

உண்மைக்கும் சட்டங்களுக்கும் சரியான தொடர்பு இல்லை, இடைவெளி மிக அதிகமாக இருக்கிறது. இங்கிருக்கும் திராவிட முன்னேற்றக் கழக அரசை மாநிலத்திலுள்ள பெருவாரியான மக்கள் ஆதரித்து தேர்ந்தெடுத்து அமைச்சரவையில் உட்கார வைத்தார்கள் என்பது உண்மை. இன்றைக்கு இருக்கும் நிலைமையில் இந்த மாநில அமைச்சரவையின்மீது மிகப் பெருவாரியானவர்கள் நம்பிக்கை இழந்து விட்டார்கள் என்பது உண்மையாக இருந்தாலும் இங்கிருக்கும் சட்டசபையிலே 172 பேர் பலம் இருக்கிறது. ஆகவே, உண்மைக்கும் சட்டத்திற்கும் சம்பந்தம் இல்லாத சூழ்நிலை உருவாகி இருக்கிறது. இப்படிப் பட்ட அனுபவத்தினால்தான் ஒவ்வொரு சட்டமும் படிப்படியாக மாறி வந்திருக்கின்றன.

இவர்கள் ஜனநாயகத்தைப் பற்றி மிகவும் பெருமையாகச் சொல்லிக் கொள்ளுகிறார்கள். ஆனால் டிசம்பர் 2-ம் தேதி நடந்த நிகழ்ச்சிகள் பற்றி எல்லோருக்கும் தெரியும். அதிலும் உண்மைக்கும் சட்டத்திற்கும் மாறுபட்ட நிலைமை இருக்கிறது. அன்று இங்கு நடந்த நிகழ்ச்சிகளுக்கும் சட்டசபை நிகழ்ச்சிக் குறிப்பில் ஏறி இருக்கும் விஷயங்களுக்கும் சம்பந்தமே இல்லை. அதற்கும் சட்டம் உதவியாக இருக்கிறது. சட்டமும் உண்மையும் சரியாகப் போனால்தான், ஒத்துப் போனால்தான்,



பொருந்திப் போனால்தான் ஜனநாயகம் சரியாக இயங்க முடியுமே தவிர அது இல்லாவிட்டால் ஜனநாயகம் சரியாக இயங்க முடியாது என்பதுதான் கடந்த கால சரித்திரத்தில் இருந்து புரிந்து கொள்ளுகிற நிலைமையாகும். (மணி அடிக்கப்பட்டது) ஆளுநர் உரை மீது இரண்டொரு விஷயத்தை மட்டும் கூறி என்னுடைய உரையை முடித்துக் கொள்கிறேன்.

முதலமைச்சர் அவர்கள் சமீபத்தில் வருமான வரிக்காரர்களுக்குச் சலுகை அளிக்க வேண்டுமென்ற விஷயத்தைப் பற்றிக் கூறியிருக்கிறார்கள். வருமான வரிக்காரர்களுக்குச் சலுகை அளிப்பதன் மூலம் தொழிலில் மூலதனம் போடுவது பெருகும் என்ற கருத்தைச் சொல்லியிருக்கிறார்கள். அதைப் பார்க்கும் போது சமுதாய மாற்றத்திற்குச் சரியான குறிக்கோள், நோக்கம் எதுவும் இல்லை என்பது வெளிப்படுகிறது. இன்றைக்கு இருக்கும் நிலைமையில் சோஷலிசத்தை ஏற்றுக் கொண்டவர்கள் என்ன செய்திருக்க வேண்டுமென்று சொன்னால் குறிப்பிட்ட வருமான அளவுக்கு வரம்பை நிர்ணயிக்க வேண்டும். பத்தாயிரம் ரூபாய் வரையிலும் ஒவ்வொருவரும் வைத்துக் கொள்ளலாம், அதற்கு மேல் பணம் வைத்துக் கொள்ளக்கூடாது, மிச்சமிருக்கும் பணத்தைத் தொழிலில் போட வேண்டும் அல்லது பாங்கில் போட வேண்டுமென்று முதலமைச்சர் அவர்கள் ஆலோசனை கூறி இருந்தார் என்றால் சிறப்பானதாக இருக்கும், சோஷலிசத்திற்குப் பொருந்தியதாக இருக்கும். வருமான வரிக் காரர்களுக்குச் சலுகை கொடுக்க வேண்டும் என்ற வகையில் அவருடைய மன ஓட்டம் இருக்கிறது என்றால், சிந்தனை போக்கு இருக்கிறது என்றால் அது சோஷலிசக் கொள்கைக்கு உகந்தது அல்ல என்று சொல்லிக்கொள்ள ஆசைப்படுகிறேன். (மணி அடிக்கப்பட்டது)

பஸ்களைத் தேசிய மயமாக்குவது பற்றிச் சொல்லி யிருக்கிறார்கள். ஏற்கனவே அவசரச் சட்டம் பிறப்பித்து பஸ்களை எடுத்துக் கொள்வது என்று முடிவுக்கு வந்த பிறகு உடனே மாநிலம் முழுவதும் அவ்வாறு எடுத்துக்கொள்ளாமல் மாநிலத்தின் ஒரு பகுதியில் மட்டும் எடுத்துக் கொண்டு மற்றவற்றுக்குப் பிறகு சட்டம் வரும் என்று கூறுகிறார்கள். அந்த ஒரு மாவட்டத்தில் மட்டும் ஏன் எடுத்துக் கொள்ளுகிறது என்று கேட்கத் தோன்றுகிறது. இம்மாதிரிக் காரியங்கள்

செய்யும்போது திடீரென்று செய்ய வேண்டும். இல்லாவிட்டால் பல்வேறு விதமான சந்தேகங்கள், பல்வேறு விதமான கஷ்டங்கள், பல்வேறு விதமான சிரமங்களுக்கெல்லாம் ஆளாக வேண்டிய நிலைமை ஏற்படும் என்பது இந்த அரசாங்கத்திற்குத் தெரிந்திருக்க வேண்டும். அதைத் தெரிந்து கொள்ளவில்லை என்று இந்தச் சந்தர்ப்பத்தில் கூறிக் கொள்ள ஆசைப்படுகிறேன்.

இந்த அரசாங்கத்தின் கொள்கையைப் பற்றி ஏற்கனவே ஒரு சந்தர்ப்பத்தில் 1968-ம் வருஷம் நான் பேசும்போது குறிப்பிட்டேன். திராவிட முன்னேற்றக் கழகம் தங்களுடைய லட்சியத்தை சோஷலிசமாக வைத்துக் கொள்ள வேண்டுமென்று பேசினேன். அப்போது இங்கிருந்த மாண்புமிகு அமைச்சர் முத்துசாமி அவர்கள் என்னிடத்தில் 'திராவிட முன்னேற்றக் கழகத்திற்கு லட்சியம் இல்லையென்று கருதுகிறீர்களா?' என்று கேட்டார்கள். லட்சியம் இருக்கிறதா இல்லையா என்பது ஆராய்ச்சி அல்ல, அதை நீங்கள் வைத்துக் கொள்வது நல்லது என்று கூறினேன். இன்றைக்குக் கூட அதே நிலைமைதான் இருக்கிறது. நான் கூறியது மிகவும் சரியானது என்பது பல காரணங்களால் உறுதிப்படுத்தப்பட்டிருக்கிறது. (மணி அடிக்கப் பட்டது) எங்காவது செல்ல வேண்டுமென்று சொன்னால் ஒரு லட்சியம் வேண்டும். இன்ன இடத்திற்குச் செல்லுகிறோம், இன்ன வழியில் செல்லுகிறோம், இன்ன வகைகளில் செல்லுகிறோம் என்று திட்டமிட்டுச் செல்ல வேண்டும். லட்சியம் இல்லாத அரசாங்க அமைப்பில் வந்ததால் பலவற்றை நிர்ணயிக்கும் அவசியமில்லாமல் போய்விட்டது. அதன் காரணமாக அவர்களுக்குள்ளேயே போட்டியும், தவறாக வசதிகளைப் பெருக்கிக் கொள்ளும் உணர்வுகளும் ஏற்பட வாய்ப்பு ஏற்படுகிறது. (மணி அடிக்கப்பட்டது) இந்தக் கருத்துக்களை எல்லாம் கூறி என்னுடைய உரையை முடித்துக் கொள்கிறேன். வணக்கம்.

**திரு. ஏ. ஆர். சுப்பையா :** தலைவர் அவர்களே, ஆளுநர் அவர்களின் உரையின்மீது நான் சில கருத்துக்களைச் சொல்ல விரும்புகிறேன்.

இன்றையதினம் விலைவாசிக் கட்டுப்பாடு சம்பந்தமாக சூப்பர் மார்க்கெட்ஸ் மூலமாகவும், கன்ஸ்யூமர் கோஆப்பரேட்டிவ் மூவ்மென்ட் வழியாக புத்துயிர் கொடுக்கப்பட்டுள்ளதாகச்



சொல்லப்பட்டிருக்கிறது. அது வரவேற்கத்தக்கதுதான். ஆனால் அது மட்டும் விலைவாசியைக் கட்டுப்படுத்த முடியாது. காரணம், பெர்டிலைஸர்ஸ், இரும்பு, சிமெண்ட் போன்றவைகளின் விலைகள் ஆண்டுக்காண்டு ஏறுமுகமாக இருந்து கொண்டிருக்கிறது. அவற்றின் விலைகளைக் கட்டுப்படுத்தும் நிலை ஏற்பட்டால்தான் நாம் விலைவாசியைக் கட்டுப்படுத்த வழி ஏற்படும். எஸ்.டி.வி. மூலம் சர்க்கார் கொள்முதல் செய்யவேண்டுமென்று பரவலாக பேச்சு பேசப்பட்டு வருகிறது. மத்திய அரசும் அதற்கு அதிக முக்கியத்துவம் கொடுப்பதாகத் தெரிகிறது. அதுபற்றி நம் அரசு யோசித்துக்கொண்டிருப்பதாக தெரிகிறது. சர்க்கார் கொள்முதல் செய்வது என்று வரும்போது அதில் பல கஷ்டங்கள் ஏற்படுகின்றன. அன்றாட வாழ்க்கைக்குத் தேவையான நெல் போன்றவற்றை சர்க்கார் கொள்முதல் செய்வதை பற்றி யோசிக்க வேண்டும்.

உர விநியோகம் சம்பந்தமாக இப்போது நம் தேவைக்கு பாதிதான் இருக்கிறது. 72—73-ல் 2.74 லட்சம் டன் தேவை என்று சொல்லப்படுகிறது. ஆனால் 1.30 லட்சம் டன்தான் விநியோகத்திற்குக் கொடுக்கப்பட்டிருக்கிறது. விநியோகத்திலும் பல குறைபாடுகள் உள்ளன. எனவே நன்கு விநியோகம் செய்வதற்கு தக்க வழிவகைகள் வகுக்கப்பட வேண்டும். மார்க்கெட்டிங் சொசைட்டிகளுக்குக் கொடுக்கப்படுகிறது. ப்ளாக் லெவலிலும் கொடுக்கப்படுகிறது. அதில் பல ஊழல்கள் ஏற்பட வழி இருக்கிறது. தங்கள் இஷ்டம் போல் கொடுக்கக்கூடிய வாய்ப்புகள் உள்ளன. எனவே கார்ட் ஸிஸ்டம் மூலம் கொடுக்க வேண்டும். மார்க்கெட்டிங் சொஸைட்டிகளுக்கும் பொறுப்பு கொடுக்கலாம். கார்ட் ஸிஸ்டப்படி பி.டி.ஓ. மூலம் அல்லது அக்ரிகல்ச்சரல் எக்ஸ்டென்ஷன் ஆபிஸர் மூலமும் கொடுக்கக் கூடிய நிலை இருந்தால் உரம் சர்க்கார் விலைக்குக் கிடைக்க வாய்ப்பு ஏற்படும். யூரியாவை எடுத்துக்கொண்டால் 50-ல் இருந்து 75 சதவிகித உயர்வாக இருக்கிறது, அதைக் குறைக்க வழி ஏற்படும்.

நீர் வழங்கல் சம்பந்தமாக புதுமுறைகள் கையாளப்பட்டு வருகின்றன. ராஷனலைசேஷன் அண்ட் மாடர்னைஸேஷன்-க்காக திட்டம் வரவேற்க கூடியது, காவேரி திட்டம் குறித்து திட்டம்

[திரு. எ. ஆர். சுப்பையா] [1973 பிப்ரவரி 7

வகுக்கப்பட்டுள்ளது. நிலத்தடி நீர்வளத்தை கணக்கிட 11 கோடி ரூபாய்க்கு ஒரு திட்டம் வகுக்கப்பட்டுள்ளது மத்திய அரசின் ஒப்புதல் கிடைப்பதில் உள்ள தாமதத்தினால் அந்த நல்ல காரியம் செயல்முறைக்கு வர தாமதம் ஏற்படுகிறது என்று தெரிகிறது. ப்ளானிங் கமிஷனில் இது குறித்து அழுத்தமாகச் சொல்லியிருக்கிறார்கள். பாசன வசதிகளை சீரமைத்து காலத்திற்கேற்றவாறு மாற்றியமைப்பதால் எல்லோருக்கும் நன்மை கிடைக்கும்.

நம் மாநிலத்தில் கடானா, ராம நதித் திட்டம் இவை முடிவடையும் தருவாயில் இருக்கின்றன. கருப்பா நதித் திட்டம் நடந்து கொண்டிருக்கிறது இவைகளுக்கும் புதுதிட்டத்தை விரிவு படுத்தலாம். மேற்கு மலைத் தொடர் மேம்பாட்டுக் கழகம் அமைப்பது குறித்து சிந்திக்கவேண்டுமென கேட்டுக் கொள்ளப்பட்டிருக்கிறது. இது வரவேற்கத்தக்கதோரு திட்டம். இதை கேரளாவும் வரவேற்கிறார்கள். அப்படி வைப்பது நல்லது என்று நினைக்கிறார்கள். அப்படிச் செய்தால் மேற்கு மலைத் தொடரிலிருந்து கிடைக்கும் நீரை நன்கு விநியோகிக்க முடியும்.

அடுத்தபடியாக, மின்சாரம் பற்றி அமைச்சர் அவர்கள் விரிவாகச் சொல்லிவிட்டார்கள். கவலை தரக்கூடிய விஷயம்தான் நான் மந்தவெளியில் பார்த்தேன், ஒரு டென்னிஸ் கோர்ட்டுக்கு ப்ளட் லைட்போட்டு நடத்திக் கொண்டிருக்கிறார்கள். அதே போல் நாலைந்து தினங்களுக்கு முன் திருச்சியில் உள்ள முனிசிபல் கட்டடத்தில் ப்ளட் லைட் போடப்பட்டு இரவு நிலவு இருக்கும் போது ப்ளட் லைட் போட்டு மின்சாரத்தை விரையம் செய்கிறார்கள். நகர் புறங்களில் நிலைமை இப்படியிருக்க கிராமங்களில் மின்சாரம் கிடைப்பதில்லை. நகரங்களில் அலங்காரத்திற்காக ப்ளட் லைட் போட்டுக் கொண்டிருக்கிறார்கள். இதைக் குறைப்பதற்கு அபராதம் போடலாம். பிழுசை எடுக்கலாம் நலம் சர்க்கார் கட்டடங்களிலாவது கட்டுப்பாடு செய்யலாம்.

திருச்சி முனிஸிபல் ஆபீஸ் சர்க்கார் கட்டடம், அதற்கு முனிஸிபல் கமிஷனர் இருக்கிறார். அவர் கூட தன் பொறுப்பை சரியாகச் செய்யாவிட்டால் யாரைத்தான் சொல்வது? ஆகவே



1973 பிப்ரவரி 7] [திரு. எ. ஆர். சுப்பையா]

சர்க்கார் கட்டடங்களிலாவது இம்மாதிரி மின்சாரத்தை அதிகமாகச் செலவு செய்வதைக் கட்டுப்படுத்த வழிவகை செய்ய வேண்டுமென்று கேட்டுக்கொள்கிறேன்.

விவசாயிகளுக்கு மின்சாரம் சப்ளை செய்வது திருப்திகரமாக இல்லை. ஆறு மணி நேரம் கொடுக்க வேண்டுமென்று திட்டம் வகுத்துக் கொண்டிருப்பதாகச் சொல்கிறார்கள். விவசாயிகளுக்கு கட்டுப்பாடு இல்லாது கொடுப்பதாக அறிக்கைகள் வந்து கொண்டிருக்கின்றன. ஆனால் கிராமத்தில் விவசாயத்திற்கு மின்சாரம் இல்லாது அவதிப்பட்டுக்கொண்டிருக்கிறார்கள். பத்துப் பதினைந்து ஆண்டுகளாக மழை இல்லாமல் இந்த ஆண்டு மழை பெய்து கிணறுகளில் எல்லாம் தண்ணீர் வந்திருக்கிறது. 6 மணி நேரம் கொடுக்கப்படும் என்று சொல்கிறார்களே அதையாவது அதிகாரிகள் ஒழுங்காகச் செயல்படுத்தவேண்டும். காலை 5 மணிக்கே நிறுத்தி விடுகிறார்கள், 7 மணி வரை கிடையாது. காலை நேரத்தில் தான் ஹாஸ்டல் மாணவர்கள் எழுந்து குளித்து தங்கள் நடைமுறைவேலைகளைச் செய்யவேண்டியிருக்கிறது. ஆனால் காலையில் நிறுத்திவிடுகிறார்கள். லோட் டெஸ்பாச் சென்டர் ஈரோடு, டி சென்ட்ரலைஸ் செய்யும் இந்தக் காலத்தில் செண்ட்ரலைஸ் செய்து ஈரோட்டில் வைத்திருக்கிறார்கள், அவர்கள் தங்கள் இஷ்டப்படி செய்து கொண்டிருக்கிறார்கள். ஆகவே எந்த இடத்திற்கு அவசியம், எந்த இடத்திற்கு பொருத்தமாக இருக்கும், எதை எதை எப்படிச் செய்ய வேண்டுமென்று வழிவகுத்தால் நலமாகயிருக்கும்.

கோவாப்பரேட்டிவ் மில்க் சொஸைட்டீஸ் தனியாக இயங்கிக் கொண்டிருந்தன. கிரெடிட் சொஸைட்டிஸ்க்கும் அதற்கும் சம்பந்தம் இல்லை. டயரி டெவலப்மென்ட் கார்ப்பரேஷன் என்று தனியாக உருவாக்கப்பட்டிருக்கிறது. சமீபத்தில் ரிசர்வ் பாங்கிலிருந்து ஒரு உத்தரவு போட்டிருக்கிறார்கள். க்ரெடிட் சொஸைட்டீஸ் மூலம் கோவாப்பரேட்டிவ் மில்க் சொஸைட்டிகளுக்கு கடன் கொடுக்கவேண்டுமென்று உத்தரவு போடப்பட்டிருக்கிறது. மில்க் கமிஷனர் சிபார்சின்பேரில் சென்ட்ரல் பாங்க் கடன் கொடுத்துக்கொண்டிருக்கிறது. பால் இங்கே வாங்கிக்கொள், கடன் கொடுப்பது மட்டும் க்ரெடிட் சொஸைட்டீஸ்

கொடுக்கவேண்டுமென்று புது உத்தரவு போட்டிருக்கிருர்கள். அதன் காரணமாக பல மில்க் சொஸைட்டிகள் செயல்பட முடியாமல் இருக்கின்றன.

மதுரைப் பகுதியில் 35 லட்சம் ரூபாய்க்கு இன்று கடன் மனுக்கள் இருந்துகொண்டிருக்கின்றன. ஆனால் சென்ட்ரல் பாங்கில் உள்ளவர்கள் கடன் கொடுக்க தயங்கிக் கொண்டிருக்கிருர்கள். ஆகவே மில்க் சொஸைட்டிகள் ஸ்தம்பித்திருக்கின்றன. மின்சாரம் விஷயமாக நாலேந்தாண்டுகளாக எச்சரிக்கை செய்து கொண்டிருந்தோம்.

நெய்வேலியில் உள்ள குறைபாடு குறித்து மத்திய அரசு தலையிட்டிருந்தால் இன்றைய குறைபாடு போக்கப்பட்டிருக்கலாம். அப்படிப்பட்டதொரு நிலைமை கோவாப்பரேட்டிவ் மில்க் சொஸைட்டீஸ்க்கு ஏற்பட்டுவிடக்கூடாது. ரிசர்வ் பாங்கின் உத்தரவு காரணமாக மில்க் சொஸைட்டீஸ் ஸ்தம்பித்திருக்கின்றன. எனவே அரசாங்கம் உடனடியாக தலையிட்டு அவற்றை நன்கு செயல் முறைக்குகொண்டு வரவேண்டுமென்று கேட்டு என் பேச்சை முடித்துக்கொள்கிறேன்.

**திரு. கே. கந்தசாமி:** பேரவைத் துணைத் தலைவரவர்களே, சபையின் முன் வைக்கப்பட்டுள்ள கவர்னர் பெருமான் உரையை வரவேற்று பார்வார்டு பிளாக் கட்சியின் சார்பாக என்னுடைய கருத்துக்களைத் தெரிவிக்கிறேன்

குறிப்பாக, தமிழகத்தைப் பொறுத்தவரையில் மனிதனுக்கு அத்தியாவசியமாகத் தேவையானது உணவு. இதிலே தன்னிறைவு பெறுவதற்கு, அதற்குரிய முயற்சிகளைத் தகுந்த முறையில் தகுந்த காலத்தில் எடுத்ததற்காக அரசை நான் மிகவும் பாராட்டுகிறேன். அதே நேரத்தில் உணவு உற்பத்திக்கு—கிரீன் ரெவல்யூஷன், ஒயிட் ரெவல்யூஷன்—பசுமைப் புரட்சி, வெண்மைப் புரட்சி வேண்டுமென்று சொல்லி, அதற்கான முயற்சிகளை அரசு எடுத்துக் கொள்கிற நேரத்தில் விவசாயிகளுக்கு பயிர்களுக்குத் தேவையான பெர்டிலைசர் ரகங்களையும், அவைகளுக்கு ஏற்படக்கூடிய நோய்களையும் தடுப்பதற்கு வேண்டிய மருந்து வகைகள், பெஸ்டிசைட்ஸ் ஆகியவைகளையும் அவ்வப்போது கொடுப்பதற்கு முயற்சிகளை



எடுக்கவேண்டுமென்று தெரிவித்துக்கொள்கிறேன். சிலயிடங்களில் தனிப்பட்ட சிலர், சமுதாய விரோதிகள் சிலர், அதிக விலைக்கு விற்று பணம் சம்பாதிக்கிருர்கள். என்பதை அறிகிருேம் அதைத் தடுக்க அரசு நடவடிக்கை எடுக்கவேண்டும். உதாரணமாக ஹென்டின் என்ற மருந்து பருத்திக்குத் தேவைப்படுகிறது. பாலிடால் என்ற மருந்து நெல்லுக்குத் தேவைப்படுகிறது. அது பி.டி.ஆ. ஆபீசில் கிடைக்கவில்லை. ஆனால் வெளிமார்க்கெட்டில் அதிக விலைக்குக் கிடைக்கிறது. அப்படிப்பட்டவர்களைப் பற்றி விசாரிக்கும்போது அவர்கள் சிக்காமல் தப்பித்துக்கொண்டு விடுகிருர்கள். அதற்குக் காரணம் அரசு என்று சொல்லவில்லை. தக்க நேரத்தில் விவசாயிகளுக்குத் தேவையான மருந்துகளைத் தருவதற்கு அரசாங்கம் நடவடிக்கை எடுக்கவேண்டும். அவர்களை இப்படி ஊக்குவிப்பதன் மூலமாகத்தான் உணவு உற்பத்தி பெருக்கமுடியும் என்று தெரிவித்துக்கொள்கிறேன்.

மத்திய அரசு, வங்காள தேச யுத்தத்தின் காரணமாக அமெரிக்காவிலிருந்து இறக்குமதி செய்து கொண்டிருந்த உரவகைகளை நிறுத்தி விட்டார்கள். அதைப் பாராட்டுகிறேன். இருப்பினும் அதற்கு மாற்ருக ஏதாவது நடவடிக்கைகளை எடுத்திருந்தால் நல்லது. இனியாவது எடுக்கும் என்று நம்புகிறேன்.

மின்சாரத்தைப்பற்றி அமைச்சரவர்கள் மிகத்தெளிவாக தெரிவித்தார்கள். பற்ருக்குறை இருந்தபோதிலும், விவசாய உற்பத்திக்கு பாதகம் இல்லாத வகையில் மின்சார சப்ளை செய்ய வேண்டுமென்று கேட்டுக்கொள்கிறேன். குறிப்பாக, மதுரை மாவட்டத்தில் மழை இல்லாத காரணத்தால் பஞ்சப் பிரதேசமாக இருக்கிறது. அந்த இடத்திற்கு முன்னிடம் அளித்து மின்சாரம் சப்ளை செய்யவேண்டுமென்று கேட்டுக்கொள்கிறேன். மழை பெய்யாத காரணத்தால் பஞ்சப்பிரதேசமாக இருந்தாலும், விவசாயம் நல்ல முறையில் இருக்கிறது. அது பாழாகி விடாமல் நல்லமுறையில் விளைந்து வருவதற்கு வேண்டிய அளவுக்கு மின்சாரம் சப்ளை செய்யவேண்டுமென்று கேட்டுக்கொள்கிறேன். பல உறுப்பினர்கள் மின்சார பற்ருக்குறையைப் பற்றி எடுத்துச் சொன்ஞர்கள். இந்த நேரத்தில் நான் ஒரு ஆலோசனையைக் கூற விரும்புகிறேன். ஆளும் கட்சி, ஆளாத கட்சி என்று பார்க்காமல், கூட்டுக்கட்சி, வேண்டாத கட்சி என்று கருதாமல், அத்தனைக்

கட்சித் தலைவர்களும் ஒன்று சேர்ந்து, இந்த தமாஷா என்று சொல்கிறார்களே, சினிமா போன்றவற்றிற்கு டிராமா போன்றவற்றிற்குக் கொடுக்கப்படும் மின்சாரத்தைத் துண்டித்து, விவசாய உற்பத்திக்கு, தொழிற்சாலைக்கு அந்த மின்சாரத்தைக் கொடுத்தால் நன்றாக இருக்கும். இதை ஒரு கூட்டு அறிக்கையாக எதிர்க்கட்சித் தலைவர்கள் எல்லாம் சேர்ந்து மாண்புமிகு முதலமைச்சர் அவர்களிடத்தில் ஒரு ஒப்பந்தமாக, ஒரு வேண்டுகோளாக கொடுத்தால் நல்லது என்று கருதுகிறேன்.

மனிதனுக்குத் தேவை உண்ண உணவும், உடுக்க உடையும், இருக்க இடமும் தான். பின்னர் தான் லக்சுரி வரும். மனிதனுக்கு வேண்டிய சௌகர்யம் பிறகு தான். சினிமா என்பது ஒரு லக்சுரி தான். சினிமாத் தொழிலில் இருப்பவர்கள் அரசுக்கு வேண்டாதவர்கள் என்ற காரணத்திற்காக அதைத் துண்டித்தார்கள் என்று சொல்வார்கள், அதற்காக அரசியல் பிரசாரம் வரும் என்று மாண்புமிகு மின்சார அமைச்சர் அவர்கள் கூறினார்கள். அதை ஏற்றுக்கொள்ளமுடியாது என்று தெரிவித்துக் கொள்கிறேன். மக்களைக் காப்பாற்றத்தான் அரசு இருக்கிறது. ஆகவே, சினிமா, நாடகம் போன்ற நிகழ்ச்சிகளுக்கு மின்சாரம் சப்ளை செய்வதை நிறுத்தி, தொழிற்சாலைகளுக்கு தருவது, விவசாயிகளுக்குத் தருவது நல்லது என்று சொல்லிக்கொள்கிறேன்.

அரசு செய்கிற நல்ல பல சாதனைகளை, நன்மைகளைப்பற்றி எதிர்க்கட்சி உறுப்பினர்கள், மாண்புமிகு உறுப்பினர்கள் குறை கூறுவதற்கு உரிமையிருக்கிறது. சில நண்பர்கள் சொன்னார்கள், ஏதோ எதிர்க்கட்சியில் நாங்கள் தான் ஒரு சிலர் இருக்கிறோம், எதிர்க்கிறோம், அரசைக் கண்டிக்கிறோம் என்று சொல்கிறார்கள். மற்ற எல்லாக் கட்சிகளும் அதை ஆதரித்துக் கொண்டிருக்கிறது என்று மாண்புமிகு திரு. கே. டி. கே. தங்கமணி அவர்கள் நேற்று பேசுகிற போது சொன்னதாகக் கேள்விப்பட்டேன் போற்றுவதைப் போற்றுவதற்கும், தூற்றுவதைத் தூற்றுவதற்கும் மனிதத் தன்மை வேண்டும். அந்த ஜனநாயகப் பண்பு இருக்கவேண்டும். வேண்டாதவர்கள் ஆளுகிறார்கள் என்பதற்காக அவர்கள் செய்கிற நல்ல காரியங்களைத் திரித்துக் கூறுவது அரசியல் மரபாக இருக்க முடியாது என்று சொல்லிக்கொள்கிறேன். எங்களுடைய பண்பு நல்லதைப் போற்றுவதும், தகாதவற்றிற்கு கண்டனம் எழுப்பு-



வதும் தான். நாங்கள் அந்தப் பாரம்பரியத்தில் வந்தவர்கள். அது தான் எங்கள் தலைவர் தேவரின் பண்பு. நேதாஜி அவர்களின் கொள்கை. அந்தப் பண்பின் அடிப்படையில் நாங்கள் செயல்பட்டு வருகிறோம். இன்றைக்கு கலைஞர் அரசு மக்களுக்கு நன்மைகளைச் செய்து வருகிறது. ஆகவே, அதைப் பாராட்டுகிறோம்.

இன்றைக்கு இந்த அரசு பஸ்களை தேசியமயமாக்கி இருக்கிறது. அதைப்பற்றி குறிப்பிடுகிறபோது திரு சுரேந்திரன் அவர்கள் சொன்னார்கள். ஏதோ ஒரு மாவட்டத்தில் மட்டும் தேசியமயமாக்கிவிட்டால் போதாது. மற்ற மாவட்டத்தில் அதை அமுல்படுத்துவதற்கு ஏன் காலதாமதம் என்று கேட்டார்கள். ரூ. 10,000 தான் பணம் வைத்துக்கொள்ளலாம் என்பதற்கும் உச்சவரம்புச் சட்டம் கொண்டு வந்தால் நல்லது என்று சொன்னார்கள். அது நல்ல கருத்துதான்; ஏற்றுக்கொள்கிறேன். அப்படிப்பட்ட கருத்துக்களை அவர்களுடைய தலைவரிடத்தில் புதிதாகச் சேர்ந்திருக்கிற கட்சியின் தலைவரிடத்தில் சொல்லி, வலியுறுத்தி, அவர்கள் ஆளுகிற மாநிலத்தில் சட்டமாக கொண்டுவந்தால் அது ஒரு முன்மாதிரியாக இருக்கும். அதை அவர்கள் செய்யவேண்டுமென்று கேட்டுக்கொள்கிறேன்.

**திரு. ஏ. ஆர். மாரிமுத்து:** மாண்புமிகு உறுப்பினர் சுரேந்திரன் அவர்கள் குறிப்பிட்டது நேஷனல் டெவலப்மெண்ட் கவுன்சிலில் அந்தக் கருத்தை முதலமைச்சர் அவர்கள் சொல்லியிருக்கலாம் என்பதாகும். இந்த அரசே அதைச் செய்ய வேண்டுமென்று கூறவில்லை.

**திரு. கே. கந்தசாமி:** அப்படியானால் நான் அதைப் பாராட்டுகிறேன். இந்தச் சந்தர்ப்பத்தில் நான் கூறிக்கொள்வது, தமிழக அரசு இந்த மாநிலத்தில் தனது லட்சியம் சோசலிசம் அடைவது என்ற குறிக்கோள் என்று சொல்லியிருக்கிறது. அதை அரசியல் இலக்காகக்கொண்டிருக்கும் மத்திய அரசை விட, தன்னுடைய குறிக்கோளின் முதல் படியாக தமிழக அரசு பஸ் தேசியமயக் கொள்கையை அமல் படுத்தியிருக்கிறது. அதைப் பாராட்ட வேண்டும். இதில் மாற்றுக்கட்சி, எதிர்க்கட்சி என்று சொல்லக் கூடாது என்று மாண்புமிகு உறுப்பினர்களைக் கேட்டுக்கொள்கிறேன்.

எதிர்ப்பது என்ற பெயரால் இங்கே வருகிற எல்லாவற்றையும் எதிர்ப்பது என்பது நல்லதல்ல. இந்த அரசு நாத்திகப் பிரசாரம் செய்கிறது என்று சொன்னார்கள். எங்களைப் பொறுத்தவரையில் நாங்கள் ஆஸ்திகர்கள் தான். மீனாட்சி கோவிலில் கடைகள் கட்ட வேண்டுமென்ற பிரச்னை எழுந்தபோது நாங்கள் அதை ஆதரிக்க வில்லை. அது ஆஸ்திகர்களை மிகவும் பாதிக்கும் என்று எடுத்துக் கூறினோம். அதை நிறுத்தவேண்டுமென்று அறிக்கை விட்டோம். எங்கெங்கே அவசியம் என்று தெரிகிறதோ, அந்தச் சந்தர்ப்பத்தில் எல்லாம் நாங்கள் எங்கள் ஆலோசனைகளை, அறிவுரைகளை சொல்லிக் கொண்டிருக்கிறோம். அதில் பார்வார்ட் பிளாக் கட்சி தவறியது இல்லை. அந்த அளவுக்கு பிளாண்ட் சப்போர்ட்டர்ஸ் இல்லை என்று தெரிவித்துக்கொள்கிறேன்.

அடுத்தபடியாக, உசிலம்பட்டி எனது தொகுதியிலுள்ளது. அதைப்பற்றி எற்கனவே இந்த மாமன்றத்தில் பல தடவை சொல்லியிருக்கிறேன். வெகு காலமாக அது 'லாங் நெக்லெக்டெட் அண்டு இக்நோர்டு எரியா' என்ற அளவில் ரொம்ப காலமாக புறக்கணிக்கப்பட்ட, நிர்தாட்சண்யப்படுத்தப்பட்ட பகுதி, அங்கே தொழில் வளம் எதுவும் கிடையாது. அங்கே தொழிற்சாலை எதுவும் கிடையாது. அங்கே தொழிற்சாலைகளை ஏற்படுத்துவதற்கு சில மூலப்பொருள்கள், தாதுப்பொருள்கள் இருப்பதாக வல்லு நர்கள் கூறுகிறார்கள். அப்படிப்பட்ட நிலை இருக்கும்பொழுது—முன்னாள் அரசு அதை வேண்டுமென்றே புறக்கணித்துவிட்டிருக் கிறது, அதற்கு அரசியல் காரணம் இருக்கிறது—இன்றையதினம் நமது தமிழக அரசு, ஏழை எளியவர்களுக்காக இருக்கிற அரசு, சமுதாயத்தில் புறக்கணிக்கப்பட்ட பிச்சைக்காரர்களை தேடிப் போய் உதவுகின்ற அரசு, உசிலம்பட்டியை ஏன் பிற்பட்ட பகுதி என்று கூறவில்லை என்று ஆச்சரியமாக இருக்கிறது. ஆகவே, தொழில் அமைச்சர் அவர்கள் கருணை கூர்ந்து உசிலம்பட்டிப் பகுதியை தொழில் வளர்ச்சி இல்லாத பிற்பட்ட பகுதி என்று சலுகைகள் கிடைப்பதற்கு வழிவகைகள் ஏற்படும். அங்கே சில சலுகைகள் கிடைப்பதற்கு வழிவகைகள் ஏற்படும் அங்கே சில தொழிற்சாலைகள் ஏற்படவேண்டும்.



அடுத்தபடியாக. அங்கே டி. பி. ஆஸ்பத்திரி ஒன்று ஏற்படுத்த வேண்டும். சில பகுதிகளில் பல மக்கள் அந்த வியாதியினால் பாதிக்கப்படுகிறார்கள். அவர்களுக்கு அப்படிப்பட்ட ஒரு ஆஸ்பத்திரி ஏற்படவேண்டும் என்பது நீண்ட நாளையக் கோரிக்கை. அதை நிறைவேற்றித்தர வேண்டும் என்று கேட்டுக்கொள்கிறேன்.

தண்ணீரைப் பொறுத்த அளவுக்கு அங்கே கிடைக்கவேண்டிய தண்ணீர் கிடைக்கவில்லை. வைகை டாமிலிருந்து நியாயமாகக் கிடைக்கவேண்டிய தண்ணீர் கிடைக்கவில்லை. முடிந்த அளவுக்கு மாடர்னைஸேஷன் ஸ்கீம் மூலம் சர்பிளஸ் வாட்டர்ஸ் கிடைக்கும் என்று கருதுகிறேன். அப்படிப்பட்ட தண்ணீரைக்கொண்டு இப்படி விட்டுப்போன பகுதிகளுக்கு தண்ணீர் கொடுத்து உதவ வேண்டும் என்று கேட்டுக்கொள்கிறேன்.

அங்கே மக்கள் வாழ்கின்ற பகுதிகளில் பெரும்பாலும் மதுரை, திருநெல்வேலி, இராமநாதபுரம் மாவட்டங்களில் மிகப் பிற்படுத்தப் பட்ட மக்கள் வாழ்கிறார்கள். நம்முடைய அரசு கலைஞர் அவர்கள் வந்ததற்குப் பின்னால் பிற்பட்ட மக்களுக்கு என்று ஒரு துறையை ஏற்படுத்தி, ஒரு அமைச்சரைப் போட்டு, அவர்களுடைய நலனில் மிக அக்கரை கொண்டு, அவர்களுடைய வாழ்க்கையை முன் னேற்றம் அடையச் செய்வதற்கு வழிவகைள் செய்திருக்கிறார்கள் என்பதை நான் மிகவும் பாராட்டுகிறேன். நான் இதை இங்கே சொல்வதற்குக் காரணம் அங்கே உள்ள தாழ்த்தப்பட்ட மக்களுடைய குறைகளை சொல்வதற்கு ஆள் இல்லை. அதைச் சொல்லாமல் இருந்த காரணத்தினால் தான், அந்தப் பகுதி மக்கள் புறக்கணிக்கப்பட்டிருக்கிறார்கள். அங்கே இருக்கக்கூடிய, குறிப் பாக முக்குலத்தோர், கள்ளர், அகமுடியார், தேவர்மார்கள் மிகவும் பெரும்பாலானவர்கள் பிற்பட்ட நிலையில் இருக்கிறார்கள். பாதிக்கு மேல் இருக்கிறார்கள். அவர் கொடுக்கக்கூடிய உத்தியோகங்களில், அவர்களுக்கு ரெப்ரெஸென்டேஷன் இல்லை. அவர்களைப் பொறுத்த வரையில் ஏறக்குறைய 1½ கோடி மக்கள் இருக்கிறார்கள், கணக்கெடுத்துப் பார்த்ததில் பிற்பட்டவர்கள் 200 ஜாதியினர்கள் அங்கே இருக்கிறார்கள் என்று கணக்கிடப்பட்டிருக்கிறது. 200 ஜாதியினர் இருந்தாலும் கூட, முக்குலத்தோர் பாதிக்கு மேற்பட்ட பேர்கள் அதில் எண்ணிக்கையில் இருக்கிறார்கள். உதாரணமாக 500 கெஜெடெட் போஸ்டுக்கு செலக்ஷன் வருகிறது என்று

வைத்துக்கொண்டால், பிற்பட்டவர்களுக்கென்று 10 போஸ்டுகள் ரிசர்வ் செய்யப்பட்டிருந்தால், அதில் 5 இடங்களாவது அவர்களுக்குக் கிடைக்கவேண்டும். இதுவரையில் அம்மாதிரி நியாயம் கிடைக்கவில்லை. குறிப்பாக, எம்.பி.பி.எஸ்., என்ஜினியரிங் படிப்பு சம்பந்தமாகவும் இப்படி ரிசர்வேஷன் செய்து பிற்பட்டவர்களுக்கு, சமுதாயத்தில் பிற்பட்ட நிலையில் இருப்பவர்களுக்கு உதவ வேண்டும். அப்படிச் செய்தால் தான் பொருளாதாரத் துறையில் மக்களிடையே உள்ள ஏற்றத் தாழ்வை நீக்க முடியும். நமது கலைஞர் அரசு மக்களுடைய நியாயமான கோரிக்கைகளை கவனிக்கும் அரசு. 'அன்ரெப்ரெசென்டெட் அண்டு அண்டர் ரெப்ரெசென்டெட்' என்று சொல்லலாம். அப்படிப்பட்ட குறைகளை நீக்குவதற்கு ஆவன செய்யவேண்டும் என்று நான் கேட்டுக்கொண்டு, பிற்பட்ட மக்களின் சார்பாக, தாழ்த்தப்பட்ட மக்களின் சார்பாக இந்த வேண்டுகோளை விடுத்து, அமர்கிறேன். வணக்கம்.

**திரு. எம். ஏ. லத்தீப் :** தலைவர் அவர்களே, சில கருத்துக்களை தாங்கள் சொல்லிய காரணத்தினால் உண்மை நிலையை, தாங்கள் தலைமை ஏற்றிருக்கிற தலைமையினுடைய சிறப்பை உத்தேசித்து நான் சில விளக்கங்களை சுருக்கமாகச் சொல்லிக்கொள்ள ஆசைப்படுகிறேன்.

உறுப்பினர்கள் பேசும்பொழுது சில விளக்கங்களை தலைவர் அவர்களே கொடுக்க முடியாது, சில விளக்க உரைகளை, சில கருத்துக்களை தலைவர் அவர்களே கொடுக்க முடியாத காரணத்தினால், ஏதாவது விளக்க உரைகள், கருத்துக்கள் கொடுக்க வேண்டிய அவசியம் ஏற்பட்டால், இந்த அவையே அதை கவனத்தில் கொள்ளவேண்டும் என்ற ஒரு நிலை இருக்கிற காரணத்தினால், யார் பேசும்பொழுதும் மற்றொருவர் குறுக்கிட்டுப் பேசுவது என்பது பார்லிமெண்டரி ஜனநாயகத்தில் ஒப்புக்கொள்ளப்பட்டிருக்கிற ஒரு முறையாகும். நீதிபதிகள் தீர்ப்புச் சொல்கிறார்கள். வக்கீல்களின் ஆர்குமெண்டைக் கேட்ட பிறகு தான் நீதிபதி தீர்ப்புச் சொல்வது என்ற ஒரு நிலை இருக்கிறது. அதனாலேயே அவர்களுடைய ஆர்குமெண்டைக் கேட்டபிறகு தான் நீதிபதிக்கு சட்டம் தெரிகிறது என்ற பொருளில் ஆர்குமெண்டு செய்யப்படுவதில்லை. அப்படி ஆர்குமெண்டைக் கேட்ட பிறகு தான் தீர்ப்புச் சொல்வது என்பது ஒரு முறையாக



இருக்கின்ற காரணத்தினால், அந்த முறை கையாளப்படுகிறது. இங்கே ஏதோ தலைவருக்குப் போதிக்கும் வகையில், எஜுகேட் செய்யும் வகையில் சிலர் பேசுகிறார்கள் என்ற வாசகங்கள் தங்களால் பயன்படுத்தப்பட்டிருப்பதன் காரணமாக நான் இந்த விளக்கத்தைக் கூறிக்கொள்ள விரும்புகிறேன். இங்கே அப்படி யாரும், நானோ, மற்றவர்களோ, இந்த அவையிலே உள்ள எந்த உறுப்பினரும் அத்தகைய முறையில் எந்த ஒரு வார்த்தையையும் பயன்படுத்தமாட்டோம் என்பதை தங்களுக்குச் சொல்லிக் கொள்கிறேன்.

மேலும், எதையும் ஒருவரே தெரிந்திருக்கிறார்கள், தனக்குத் தான் எல்லாம் தெரியும் என்று சிலர் பேசுகிறார்கள் என்று தாங்கள் சொன்னது நல்ல எண்ணத்தில் சொல்லியிருந்தாலும், தவறான கருத்து சிலருக்கு ஏற்படலாம்--என்னிடம் கூட சிலர் இதைப்பற்றிப் பேசினார்கள்—அப்படி தவறான கருத்துக்கு இடம் கொடுக்காமல் தாங்கள் இதைப்பற்றி இந்தப் பேரவையிலே விளக்கிவிட்டால் நல்லது என்று கருதுகிறேன். என்னைப் பொறுத்தவரையிலே தாங்கள் குறுக்கிட வேண்டாம் என்று சொன்னால் நான் குறுக்கிடவே மாட்டேன். வேண்டுமானால் நான் பேசுவதையே நிறுத்திவிடுகிறேன். தலைவர் அவர்களே, நாங்கள் தங்களுக்கு மிகுந்த மரியாதை வைத்திருக்கிறோம். தங்களுடைய அறிவிலும், ஆற்றலிலும் எங்களுக்கு மிகுந்த மரியாதை உண்டு. தயவுசெய்து தவறான கருத்துகளுக்கு இடம் ஏற்படாத வண்ணம் தாங்கள் இதற்கான விளக்க உரையை இங்கே தந்துவிடவேண்டும் என்று கேட்டுக்கொள்கிறேன்.

**மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர் :** திரு லத்தீப் அவர்கள் எழுந்து பேசுகிறார்கள் என்றால், நான் அனுமதி கொடுத்திருக்கிறேன் என்ற முறையில் தான் பேசுகிறார்கள். அவர் பேசுகிறபொழுது, எதற்காகப் பேசுகிறார் என்று இன்னொருவர் கேட்கிறார். நான் பேச அனுமதித்ததற்குப் பின்னால்தான் பேசுகிறார் என்று அர்த்தம். நான் உட்கார்ந்திருக்கிறேன். அவர் எழுந்து பேசுகிறார். உடனே சுப்பு அவர்கள் எழுந்து அவர் பாயிண்டு ஆப் ஆர்டரில் பேசுகிறாரா, அல்லது பாயிண்டு ஆப் கிளாரிபிகேஷன் என்று பேசுகிறாரா என்று கேட்கிறார். பாயிண்டு

ஆப் ஆர்டர் இருக்கிறதா, இல்லையா என்று தான் தீர்ப்புக் கொடுக்கவேண்டும். ஒரு உறுப்பினர் தலைவரின் அனுமதியோடு பேசிக்கொண்டிருக்கும்பொழுது, இன்னொருவர் அப்படிக் கேட்டால் தலைவரின் அனுமதியோடு அவர்கள் முரண்படுகிறார்கள் என்று தான் கூறவேண்டும். அதனால் தான் நான் சொன்னேன். அவர் பேசியதில் பாயிண்டு ஆப் ஆர்டர் இருக்கிறதா, இல்லையா என்று தீர்ப்பு அளிப்பதற்கு தலைவர் என்ற முறையில் நான் சபையில் இருக்கிறேன். அதில் பாயிண்டு ஆப் ஆர்டர் இல்லை அல்லது இருக்கிறது என்று நான் ஒரு முடிவு சொன்னதற்குப் பின்னாலே, அதிலிருந்து மாறுபட்டுச் சொல்வதற்குக் கூட உறுப்பினர்களுக்கு உரிமை இல்லை என்று நான் சொல்லமாட்டேன்.

நாம் இங்கே பாராளுமன்ற ஜனநாயகத்தைப் புரிந்துகொள்ளும் முறையில்—நான் இங்கே அத்தனை பேர்களுக்கும் ஞானியர் என்பதை ஒத்துக்கொள்வதில் தவறு இல்லை—நண்பர் லத்தீப் போன்றவர்கள் சில ஆலோசனைகளைச் சொல்லவேண்டும் என்று தான் நான் எதிர்பார்க்கிறேன். அதனால் எனக்கு எந்தவிதமான வருத்தமோ, கோபமோ வரப்போவது இல்லை. ஆனால், அட்வைஸ் பண்ணுகிற மாதிரி, அப்படிக் கூட தொனிக்கின்ற மாதிரி இங்கே சொன்னால் அதை நிச்சயம் யாரும் பொறுத்துக்கொள்ள மாட்டார்கள், விரும்பமாட்டார்கள். ஒரு உறுப்பினர் இந்தப்பக்கம் ஒரு கருத்தைச் சொல்கிறார். அதற்கு எதிரான கருத்தை, உரத்த குரலில், கோபமான குரலில் இன்னொரு பக்கத்தில் மற்றொரு உறுப்பினர் எழுந்து பேசிக்கொண்டிருக்கிறார். அப்படிச் செய்வது உண்மையிலேயே அந்த உறுப்பினரை அவமதிப்பதாகும் என்று நான் கருதுகிறேன். இம்மாதிரி ஆலோசனைகள் சொல்லவேண்டுமென்றால், அமைதியாக ஒருவர் ஒருவராக எழுந்து கூறவேண்டும். அப்படிச் செய்தால் இன்றைக்கு பூராவும் பேசலாம், நாளைக்கும் பேசலாம், வாரம் பூராவும் பேசலாம். பலரும் ஒரே சமயத்தில் எழுந்து பேசுவது என்பது முறையல்ல. சபையினுடைய நடவடிக்கைகளுக்கு உதவியான கருத்துக்களைச் சொல்ல விரும்புகிறவர்கள், ஒருவர் ஒருவராக எழுந்து, ஒருவர் பேசி முடித்ததற்குப் பின்னாலே, அந்த உறுப்பினருக்கு முழு உரிமையையும் அனுமதித்த



பிறகு, மற்றொருவர் எழுந்து அமைதியாகப் பேசினால், எனக்குக் கூட முடிவு சொல்வதற்கு ஒரு நல்ல வாய்ப்பாக இருக்கும் அப்படிச் செய்வது.

ஏதோ நான் இங்கே தலைவராக உட்கார்ந்திருக்கிறேன் என்றால், தலைவர் என்ற பாவனையில் உட்கார்ந்திருக்கிறேன், தலைவருக்குக் கட்டுப்பட்டு இங்கே நடக்கவேண்டும் என்ற முறை இருக்கிறது. தலைவர் என்றால் ஏதோ ஒரு இயந்திர துப்பாக்கியை வைத்துக் கொண்டு, பீரங்கி நாற்காலியில் இங்கே உட்கார்ந்திருக்கிறேன் என்பதாகக் கொண்டு யாரும் பயந்துக்கொண்டிருக்கவேண்டிய தில்லை. நானும் இங்கே இந்தப் பேரவையில் ஒரு உறுப்பினர் என்ற முறையில் பாவனையாக தலைவராக இருக்கிறேன். இங்கு இருக்கும் தலைவரை மதிக்கவேண்டும் என்ற ஒரு பாவனையை வைத்துக் கொண்டு, அதற்காக ஒரு முறையை வைத்துக்கொண்டிருக்கிறோம். அந்த அடிப்படையில் எனக்கு இருக்கிற, நீங்கள் கொடுத்திருக்கிற, அந்த உரிமையை வைத்துத்தான் நான் இங்கே பேசுகிறேனே தவிர, வேறு ஒன்றுமில்லை. பேரவையின் ஒவர்ஆல் கண்டிரோலுக்காக நான் இங்கே இருக்கிறேன். இந்தப் பிரச்னையைக் கிளப்பியதற்காக லத்தீப் அவர்களுக்கு நான் நன்றி தெரிவித்துக்கொள்கிறேன்.

**திரு. ஓ. என். சுந்தரம் :** சட்டப்பேரவை துணைத் தலைவர் அவர்களே, ஆளுநர் உரையின் மீதான விவாதத்தில் கலந்து கொண்டு என்னுடைய கட்சியின் சார்பாக என்னுடைய கருத்துக்களைச் சொல்ல இதை ஒரு வாய்ப்பாகக் கருதுகிறேன்.

பொதுவாக, ஆளுனர் அவர்கள் படித்த அறிக்கையில் மேலெழுந்தவாரியாகப் பார்க்கும்பொழுது வேலையில்லாத் திண்டாட்டம், விலைவாசி உயர்வு போன்ற பிரச்னைகளுக்கு நீண்ட காலத் திட்டங்களைச் சொல்லியிருக்கிறார்களே தவிர, அவசரமாக அக்கறை எடுத்துக்கொள்ளப்பட்டிருப்பதாக நான் கருத முடியவில்லை. அது மட்டுமல்ல. இன்றையதினம் தொழிற்சாலைகளிலுள்ள அமைதியின்மை, சீர்குலைவுகள், சட்டம் ஒழுங்கு சீர்குலைவுகள், மாணவர்கள் படு மோசமாக தாக்கப்படுகின்ற நிலைமைகள் இவற்றைப்பற்றியெல்லாம் கவர்னர் அவர்களின் உரையில் ஒரு சிறிய அளவாவது கருத்துத் தெரிவிக்கவில்லை என்பதையும்

முக்கியமாக நான் சொல்லிக் கொள்ள விரும்புகிறேன். இப்படிப்பட்ட நிலைமையில் சர்க்கார், தி. மு.க. அரசானது ஏற்கனவே கொடுத்த பல வாக்குறுதிகளை நிறைவேற்றவில்லை என்பது என்னுடைய குற்றச்சாட்டு. அப்படிச் சொல்கிறபொழுது இந்தத் தி.மு.க. அரசானது சென்ற ஆறு ஆண்டு காலம் பதவியிலிருந்தும் கூட 1968-ல் தமிழகம் பூராவும் மேதினப் பரிசாக படி அரிசித் திட்டம் கொண்டுவருகிறோம் என்று சொன்னார்கள். படிப்படியாக அதைக் கைவிட்டு, 1972-ம் ஆண்டில் 10--12--1971-ல் அப்படிப்பட்ட பிரச்சினை கவர்னர் உரையின் போது, 82-வது விதியின்படி, பாது காப்புச் சட்டம் என்ற பெயரால் பாகிஸ்தான், பங்களாதேஷ் பிரச்சினை என்ற பெயரால் கைகழுவி விடப்பட்டது என்று சொன்னால், எவ்வளவு பெரிய மோசமான நிலைமையை இந்த சர்க்கார் அனுசரித்து வருகிறது என்பதைச் சுட்டிக்காட்ட விரும்புகிறேன்.

பொதுவாக, கொடுக்கக்கூடிய வாக்குறுதிகளைக் கூட உங்களால் நிறைவேற்ற முடியவில்லை. குறிப்பாகச் சொல்ல வேண்டுமானால், அண்மையில் கோவையில் நடைபெற்ற தொடக்கப் பள்ளி ஆசிரியர்கள் மாநாட்டில் கலந்து கொள்ள உறுதியளித்த ஆளுநரும் சரி, கல்வி அமைச்சரும் சரி, முதலமைச்சரும் சரி—என்ன காரணத்தினாலோ யாரும் அந்த மாநாட்டில் கலந்துகொள்ள வில்லை. அவர்கள் கலந்துகொள்ளவில்லை என்று சொல்லும்போது ஆசிரியர் சமுதாயத்தை அவர்கள் புறக்கணித்து விட்டார்கள் என்ற குற்றச்சாட்டை நான் சுட்டிக்காட்ட கடமைப்பட்டிருக் கிறேன்.

அடுத்தபடியாக, வேலையில்லாத் திண்டாட்டத்தைப் பார்க்கின்றபோது இன்று படித்த மாணவர்களிடையே--பட்டம் பெற்றவர்களிடையே—ஒரு கொந்தளிப்பு ஏற்பட்டிருக்கிறது. படித்தவர்களுக்கு வேலைவாய்ப்பு இல்லை என்ற நிலை தொடர்ந்து ஏற்படுமானால். அதிலே அரசாங்கம் கவனம் செலுத்தத் தவறு மானால், நாட்டிலே கொந்தளிப்பு ஏற்படும். அது அரசாங்கத்திற்கு உபத்திரவமாக இருக்கும் என்பதைத் தெரிவித்துக்கொள்கிறேன்.

அடுத்தபடியாக, விலைவாசிப் பிரச்னையைப் பார்ப்போமானால், ஏழை எளிய மக்கள், நடுத்தர வர்க்க மக்கள் பொருட்களை வாங்க முடியாத அளவுக்கு விலை ஏற்றத்தினால் கஷ்டப்பட்டுக்



கொண்டிருக்கிறார்கள். நான் சென்ற ஆண்டு பேசும்போது இருந்த விலைவாசியை விட 300 சதவீதம், 200 சதவீதம் இப்போது உயர்ந்திருக்கிறது என்பதை இந்த மன்றத்தின் கவனத்திற்குக் கொண்டு வர விரும்புகிறேன். அன்றாடம் உபயோகப்படுகின்ற பால் விலை முன்னைவிட இப்போது லிட்டர் 20 பைசா உயர்ந்திருக்கிறது. உயர்ந்துவிட்டதைப்பற்றி நான் குறை கூறவில்லை. ஏனென்றால், கால்நடைகள் தீவனம் விலை அந்த அளவுக்கு உயர்ந்திருக்கிறது. அதையும் நாம் கவனத்தில் கொள்ள வேண்டும். சாதாரணமாக, 70 கிலோ கொண்ட ஒரு மூட்டை பிண்ணாக்கு 35 ரூபாய்க்கு விற்றது இன்றைக்கு 100 ரூபாய்க்கு மேல் விற்கிறது. நானும் வியாபாரம் செய்வதால் எனக்கு விலை வாசியைப் பற்றி நன்றாகத் தெரியும். பருத்திக்கொட்டை விலை குவின்டால் ஒன்றுக்கு 30 ரூபாயாக இருந்தது, இன்று 96 ரூபாயாக இருக்கிறது.

அதுமட்டுமல்ல, அன்றாட உபயோகப்படும் பருப்பு வகைகளின் விலையும் உயர்ந்துவிட்டது, எண்ணெய் விலையும் உயர்ந்துவிட்டது. முன்பெல்லாம் எண்ணெய் தேய்த்து குளிப்பதென்றால், தலை நிறைய, வழிய வழிய எண்ணெய் தேய்த்துக் குளிப்பார்கள். இப்போது விற்கின்ற எண்ணெய் விலையில், தலைக்குத் தேய்ப்பதற்கு கூட எண்ணெய் வாங்க முடியாமல் இருக்கும்போது தேய்த்து குளிப்பதற்கு எங்கே வாங்க முடிகிறது. அதனால் தலையிலே ஒரு பொட்டு எண்ணெய் பெயரளவுக்கு வைத்துக் குளிக்கக் கூடிய நிலைமை ஏற்பட்டிருக்கிறது. அப்பளத்தை எண்ணெயில் பொரித்து சாப்பிட்ட காலம் போய் இப்போது அடுப்பில் வாட்டி பப்படமாகச் சாப்பிடும் நிலை வந்திருக்கிறது. இப்படி எல்லாப் பொருள்களும்—உளுத்தம்பருப்பு, துவரம்பருப்பு, மற்ற பருப்பு வகைகள் எல்லாம் விலையேறிவிட்டன. இப்படிப்பட்ட நிலையில் சாதாரண மக்கள் எப்படி வாழ்க்கை நடத்த முடியும் என்பதை இந்த அரசாங்கம் எண்ணிப்பார்த்து, விலைவாசியைக் குறைக்க தக்க நடவடிக்கை எடுக்க வேண்டுமென்று கேட்டுக்கொள்கிறேன்.

திராவிட முன்னேற்றக் கழகத்தினர் 1964லே விலைவாசி ஏற்ற மறியல் போராட்டம் நடத்தினார்கள். இன்று அதைவிட அதிகமான அளவில்—எக்கச்சக்கமாக விலைவாசி உயர்ந்திருக்கிறது. இப்படி விலைவாசி உயர்வும், வேலையில்லாத் திண்டாட்டமும் பெருகிக்

[திரு. ஓ. என். சுந்தரம்] [1973 பிப்ரவரி 7

கொண்டே வந்தால் மக்கள் போராட்டம் நடத்தக்கூடிய அளவுக்கு துணிந்து விடுவார்கள். போராட்டம் என்றால் நான் குறிப்பிடுவது 'கிடு கிடுப் போராட்டம்' அல்ல; சாத்வீகமான போராட்டம் ஏற்பட்டுவிடும் என்று அரசாங்கத்தை எச்சரிக்க விரும்புகிறேன்.

இப்போது திராவிட முன்னேற்றக் கழகத்தினர் சொத்துக் கணக்கைப் பார்த்துக்கொண்டிருக்கிறார்கள். ஆனால் மக்கள் சோற்றுக் கணக்கைப் பார்த்துக் கொண்டிருக்கிறார்கள். ஆகவே, நீங்கள் அந்த சோற்றுப் பிரச்னையைத் தீர்ப்பதிலே அதிகக் கவனம் செலுத்த வேண்டும். மத்திய சர்க்காரைக் கலந்து பேசியோ அல்லது மற்ற வகைகளினாலோ—எப்படியும் நாட்டு மக்களுக்கு நியாய விலையில் பொருட்கள் கிடைக்கச் செய்ய வேண்டும்.

பிண்ணாக்கு விலை 100 ரூபாய்க்கு மேல் விற்கிறது. உரங்கள் மூட்டை 40 ரூபாய், 50 ரூபாயாக இருந்தது இன்று 120 ரூபாய்க்கு மேல் விற்கிறது. ஆக, விவசாயத்திற்குத் தேவைப்படும் அத்தியாவசியப் பொருட்கள் எல்லாம் விலையேறிவிட்ட பிறகு, நெல் விலை மட்டும் எப்படி குறையும்? விவசாயிகளுக்கு கட்டுப் படியான விலையில் உரங்களும் மற்றப் பொருட்களும் கிடைத்தால் தான் நெல் விலையும், அரிசி விலையும் குறைய முடியும் என்பதை அரசாங்கத்தின் கவனத்திற்குக் கொண்டுவர விரும்புகிறேன்.

இப்படிப்பட்ட நெருக்கடியில் கள்ள மார்க்கெட்காரர்களால் மேலும் பொருட்களின் விலை உயர்ந்துவிடுகிறது. கள்ள மார்க்கெட் காரர்கள், பதுக்கல்காரர்கள் என்று சொல்லும்போது நம்முடைய உணவு அமைச்சரவர்கள் புள்ளிவிவரம் வேண்டுமென்று சொல் வார்கள். சென்ற மாதம் மதுரையிலுள்ள ஒரு கூட்டுறவுச் சங்கத்தின் கிடங்கிலிருந்த 3,000 ரூபாய் பெறுமானமுள்ள உரங்கள் கள்ளத்தனமாக விற்கப்பட்டது என்றும், களவாடப் பட்டது என்றும், அங்கே இருந்த குமாஸ்தா தலைமறைவாகி விட்டார் என்றும் வந்த செய்தியை அமைச்சரவர்களும் அறிந்திருப்பார்கள் என்று நினைக்கிறேன். இதுபோல் ஏராளமான தவறுகள் நடைபெற்றுக் கொண்டிருக்கின்றன. இவைகளை எல்லாம் இந்த மன்றத்திலே நான் தெரிவிப்பதற்குக் காரணம், அரசாங்கம் இதிலே தக்க கவனம் செலுத்த வேண்டும் என்பதற்காகத்தான்.



1973 பிப்ரவரி 7] [திரு. ஓ. என். சுந்தரம்]

சீனி, ரவை, மைதா போன்ற பொருட்கள் மார்க்கெட்டுக்கு வந்தவுடனே விற்றுவிட்டது; ஸ்டாக் இல்லை என்று சொல்லி விடுகிறார்கள். இப்போது நான் கூட்டுறவுச் சங்கங்களைப் பற்றிச் சொல்லவில்லை; ஓப்பன் மார்க்கெட்டைப் பற்றிச் சொல்கிறேன். எவ்வளவு சீனி வருகிறதோ அவ்வளவும் உடனே விற்று விட்டதாகச் சொல்கிறார்கள். அதைப் போன்றுதான் மைதா, ரவை எல்லாம். மைதா மூட்டை 100 ரூபாய்க்கு வாங்கி 180 ரூபாய்க்கு விற்கிறார்கள். நாம் கேட்டால் ஸ்டாக் இல்லை, சேமியா செய்வதற்கு வாங்கிப்போய் விட்டார்கள் என்று சொல்கிறார்கள். இவைகளுக் கெல்லாம் புள்ளிவிவரம் உண்டா என்று கேட்டால் உண்டு. எங்களை விட ஆளும் கட்சியிலே இருப்பவர்கள் புனர் விசாரணையின் மூலம் தெளிவாக இதைத் தெரிந்துகொள்ளலாம்.

அடுத்தபடியாக மின்சாரத்தைப் பற்றிச் சொல்லப்பட்டிருக் கிறது. காங்கிரஸ் ஆட்சிக் காலத்தில் 15 சதவீதம் மின்சார வெட்டு செய்யப்பட்டிருந்தது. இன்றைக்கு திராவிட முன்னேற்றக் கழக ஆட்சியில் 40 சதவீதம் மின்சார வெட்டு செய்யப்பட்டிருக்கிறது. விவசாயத்திற்கும் தொழிற்சாலைகளுக்கும் போதுமான அளவு மின்சாரம் கிடைக்காததால் இன்றைக்கு பெருமளவில் உற்பத்தி குறைந்திருக்கிறது. பழனி தாலூகாவிலிருந்தும், திண்டுக்கல் தாலூகாவிலிருந்தும் எங்களுக்கு தந்தி வந்திருக்கிறது. இருபது லட்சம், முப்பது லட்சம் ரூபாய்க்கு பெறுமானமுள்ள பயிர்கள் தீய்ந்து போய்க்கொண்டிருக்கின்றன என்று தந்தி வந்திருக்கிறது. மின்சாரப் பற்றாக்குறையினால் போதிய அளவில் தண்ணீர் இறைக்க முடியாததே இதற்குக் காரணம். எனவே, விவசாயக் காரியங்களுக்கு உடனடியாக போதிய அளவு மின்சாரம் கிடைக்கச் செய்ய வேண்டுமென்று இந்தச் சந்தர்ப்பத்திலே தெரிவித்துக்கொள்கிறேன்.

அடுத்தபடியாக, நாம் எல்லாம் மக்களை சந்திக்க வேண்டிய நிலையில் இருக்கிறோம். ஏனென்றால் எங்கள் பகுதியில் தேர்தல் வர இருக்கிறது. அங்கே வாக்காளர் பட்டியல் 10 சதவீதத்திலிருந்து 13 சதவீதம் வரை உயர்ந்திருப்பதாகச் சொல்கிறார்கள். அது எப்படி உயர்ந்தது என்று எல்லாக் கட்சிக்காரர்களும் பார்த்துக் கொண்டிருக்கிறார்கள். திராவிட முன்னேற்றக் கழகத்தைச் சேர்ந்தவர்கள் ஒவ்வொரு தொகுதியிலும் 5 சதவீதம் வாக்காளர் களைச் சேர்ப்பதற்கு முயற்சி செய்துகொண்டிருக்கிறார்கள்.

அதற்கான தகவல் என்னிடம் இருக்கிறது. புள்ளி விவரமும் இருக்கிறது. இவையெல்லாம் சரியா, தப்பா என்பதைப்பற்றி அரசாங்கமே முடிவு செய்துகொள்ளட்டும். ஏற்கெனவே அதிகாரிகள் 10 அல்லது 13 சதவிகிதம் வாக்காளர்களைச் சேர்த்திருப்பதாகவும், ஆளும் கட்சியைச் சேர்ந்தவர்கள் ஒவ்வொரு தொகுதியிலும் 5 சதவீதம் வரை வாக்காளர்களைச் சேர்க்க முயற்சி எடுத்து வருவதாகவும் இருந்தால் அதிலே எவ்வளவு தவறுகள் நடைபெற்றிருக்கும் என்பதோ அல்லது நடைபெறப்போகிறது என்பதோ நமக்குத் தெரியாது. யார் தவறு செய்தாலும், அவர்கள் உங்கள் கட்சியைச் சேர்ந்தவர்களாக இருந்தாலும், எங்கள் கட்சியைச் சேர்ந்தவர்களாக இருந்தாலும் தண்டிக்கப்பட வேண்டும் என்று அதிகாரிகளுக்கு அரசாங்கம் உத்தரவிட வேண்டும், என்று வலியுறுத்திக் கூற விரும்புகிறேன். வெற்றி தோல்வியைப்பற்றி கவலையில்லை. யார் வேண்டுமானாலும் வெற்றி பெறட்டும். அதைப்பற்றி கவலைப்படவில்லை.

**மாண்புமிகு திரு. க. அன்பழகன் :** வாக்காளர்கள் சேருகிறார்கள் என்பது அந்தப் பகுதியிலே வாழ்கின்ற அந்த மக்களின் அடிப்படை உரிமை. அப்படி அவர்கள் தவறான முறையில் சேருவார்களேயானால்; யார் தவறாகச் சேருகின்றார்கள் என்பதை கட்சி மனப்பான்மை இல்லாமல், பொதுநல மனப்பான்மையோடு அங்கேயுள்ள அதிகாரிகளுக்குத் தெரிவித்தால் அதைப் பரிசீலிக்கலாம். வாக்காளர்களை சேர்க்கிறார்களே என்று அதை ஒரு குறையாக உறுப்பினர் அவர்கள் சொல்ல முடியாது. அந்த நிர்ணயிக்கப்பட்ட கடைசி நாள் வரையில் யார் வேண்டுமானாலும் சேர உரிமை இருக்கிறது.

**திரு. ஓ. என். சுந்தரம் :** நான் சொல்லுவதெல்லாம் 2-ஆம் தேதி வரையில் அரசு சார்பிலே அதிகாரிகளை நியமித்து வாக்காளர் பட்டியலை சீர்படுத்தி 10 அல்லது 15 சதவிகித வாக்காளரை சேர்த்துவிட்டப் பிறகு, அடுத்த 15 தினத்திற்குள் இன்னும் 5 சதவிகிதம் புதிதாக சேருகிறார்கள் என்றால், அப்படி 3,000 முதல் 5,000 வாக்காளர்களை சேர்க்க முயற்சிக்கிறார்கள் என்று தான் சொல்லுகிறேன். அதிலேயும் குறிப்பாக இப்படி கிராமப் புறங்களிலே முயற்சிக்கிறார்கள் என்றால், அதை இந்த அரசு கண்காணிக்க வேண்டுமென்று குறிப்பிடத் தான் சொல்லுகிறேன்.



**மாண்புமிகு திரு. ப. உ. சண்முகம் :** நான் உறுப்பினரிடத்திலே தெரிந்துகொள்ள விரும்புவது, 21 வயது நிரம்பாதவர்களை வாக்காளர்களாக சேர்க்கிறார்களா, அல்லது பட்டியலிலே இருக்கின்றவர்களையே வாக்காளர்களாக சேர்க்கிறார்களா என்பது தான். வயது வந்தவர்கள் யாராக இருந்தாலும் சேர்க்கப்பட வேண்டியவர்களாக இருந்தால் சேர்க்கத் தான் வேண்டும். அந்த இடத்திலே இருப்பவராக இருந்தால் சேர்க்கத் தான் வேண்டும். ஐந்து சதவிகிதம் அல்லது 10 சதவிகிதம் சேர்த்துவிட்டார்கள் என்பதெல்லாம் பிரச்சினை இல்லை. ஒருவரை சேர்ப்பதற்கு முன்னால் அவரைப் பற்றி விசாரித்து அதற்குப் பிறகு தான் சேர்க்கிறார்கள். அப்படி யாராவது ஆட்சேபனை மனு கொடுப்பார்களேயானால் அதை எல்லாம் பரிசீலித்துத் தான் சேர்க்கிறார்கள். உடனுக்குடன் கண்காணித்து இது பொய், உண்மைக்கு முரணானது என்று உறுப்பினர் அவர்களுடைய கட்சிக்காரர்கள் அதைச் சொல்ல வேண்டும். அதைவிட்டுவிட்டு, தி.மு. கழகத்தைச் சேர்ந்தவர்களைச் சேர்த்துவிட்டார்கள் என்று சொல்லுவது எல்லாம் வேடிக்கையாக இருக்கிறது. அப்படிச் சொல்லுவது முறையல்ல என்று சொல்லிக் கொள்கிறேன்.

**திரு. ஓ. என். சுந்தரம் :** சேர்ப்பதற்கு உரிமை இருக்கிறது என்று சொன்னால், எதற்காக நான் சட்ட மன்றத்திலே அமைச்சர்கள் முன்னாலே சொல்லுகிறேன். அவர்கள் அப்படி சேர்ப்பதை கண்காணிக்கவேண்டும் என்பதற்காகத் தான். தி.மு. கழக அரசு அதிகாரிகள் தான் இம்மாதிரியான வேலைகளை செய்து கொண்டிருக்கிறார்கள்.

**மாண்புமிகு திரு. ப. உ. சண்முகம் :** தி.மு. கழக அதிகாரிகள் இல்லை ; தமிழக அதிகாரிகள்.

**திரு. ஓ. என். சுந்தரம் :** தி.மு. கழக அரசின் அதிகாரிகள் என்று தான் சொன்னேன். எதற்காக நான் இதைச் சொல்லு கிறேன் என்றால், நீங்கள் ஒரு வாக்காளர் பட்டியலை தயாரித்து விட்ட பிறகு, நீங்கள் சொல்லுகிறபடி. விட்டுப்போன வாக்காளர்களை சேர்ப்பது 15 நாளைக்குள்ளே 5 சதவீதம் என்றால், 3,000 அல்லது 4,000 பேரை சேர்க்கப்படுகிற நிலைமை ஏற்பட்டிருக்கிறது. இதைப் பரிசீலிக்க வேண்டும் என்று தான்

சொல்லுகிறேன். அதற்கெல்லாம் வழிமுறைகள் இருக்கின்றன. அதை கண்காணிக்கவில்லை என்றாலும் கூட, எலெக்ஷன் ரூல்படி—ரெப்ரசண்டேஷன் ஆஃப் பீப்பில்ஸ் ஆக்ட் படி அந்தக் கால வரம்பு முடிந்ததற்குப் பிறகு அதற்கு வேண்டிய மனுக்களை தயாரித்து அதைத் திருத்தும் நிலைமையில் முறையாக காரியங்களைச் செய்ய முடியும். ஆனாலும் கூட, அவ்வளவு தூரம் போகவேண்டாம் என்பதற்காக நான் இதை உங்களுக்கு ஞாபகப்படுத்துகிறேன். இப்படிப்பட்ட குறைபாடுகளைச் சரியாக கண்காணிக்க வேண்டுமென்று கேட்டு, எனக்கு ஆளுநர் உரையின் மீது பேச வாய்ப்பளித்த தலைவருக்கு நன்றி கூறி, எனது பேச்சை முடித்துக் கொள்கிறேன்.

**திரு. நா. வீராசாமி :** 21 வயது நிரம்பியவர்கள் வாக்காளர் பட்டியலிலே தங்களுடைய பெயர்களை முறையோடு சேர்த்துக் கொள்கிறார்கள். இப்படிப்பட்ட பழக்கம் தி.மு. கழகம் ஆட்சிக்கு வந்ததற்குப் பிறகு தான் ஏற்பட்டிருக்கிறது என்று உறுப்பினர் அவர்கள் கூறுகிறார்களா ? அல்லது 1947-க்கு பிறகு இப்படி நடக்கவே இல்லை என்கிறார்களா ?

**திரு. ஓ. என். சுந்தரம் :** வாக்காளர் சேர்ந்துகொள்வதற்கான தகுதியையும் உரிமையையும் தான் சொல்லுகிறீர்களே தவிர, நான் சொல்லுவதை நீங்கள் புரிந்துகொள்ளமாட்டேன் என்கிறீர்கள். நான் சொல்லுவதெல்லாம் 15 தினங்களுக்குள் திடீரென்று இவ்வளவு பேர் புதிதாக சேர முடியுமா என்பது தான்.

**மாண்புமிகு திரு. க. அன்பழகன் :** வாக்காளர் பட்டியலை சீரமைப்பது என்பது இருக்கிற பட்டியலில் உள்ளவர்கள் உயிரோடு இருக்கிறார்களா இல்லையா, அவர் ஆணா, பெண்ணா, அவர்கள் குறித்த வயது சரிதானா என்று தான் பார்ப்பதாகும். தவிர, அந்த அதிகாரிகளே யாரையும் சேர்க்க மாட்டார்கள். யார் சேர வேண்டும் என்று விரும்புகிறார்களோ, அவர்கள் விண்ணப்பித்தால் தான் சேர்க்கப்படுவார்கள். அந்தக் குறிப்பிட்ட காலம் வரும்பொழுது அவர்கள் விண்ணப்பித்துக்கொள்கிறார்கள். ஒருவரைச் சேர்த்தது தவறு என்று விசாரணைக்கு வராமே தவிர, பட்டியலைத் தயாரித்த பின்னர் விட்டுப் போனவர்களை அவர்களாக சேர்ப்பதற்கான மரபு எப்பொழுதுமே இருந்ததில்லை என்பதை உறுப்பினர் அவர்கள் தெரிந்து கொள்ளவேண்டும்.



**திரு. ஓ. என். சுந்தரம் :** ஒவ்வொரு வீடாகச் சென்று தான் பட்டியலை தயாரிக்கிறார்கள். ஒரு குறிப்பிட்ட வீட்டிலே எத்தனை வாக்காளர்கள் இருக்கிறார்கள் என்று தெரிந்து தான் முதலிலே சேர்க்கிறார்கள். ஏற்கனவே உள்ள பட்டியலை சீரமைப்பதில்லை. ஏதோ கொஞ்சம் வாக்காளர்கள் இருந்தால் அவர்களையும் சேர்த்துக் கொள்கிறார்கள் என்பது தான் இன்றைக்கு நடைமுறையில் இருக்கிறது. இது உங்களுக்கு தெரிந்திருக்கும் என்று நினைக்கிறேன்.

**மாண்புமிகு திரு. ப. உ. சண்முகம் :** வாக்காளர் பட்டியலைத் தயாரிப்பது எலெக்ஷன் கமிஷன். அந்தக் கமிஷனிலே இருக்கும் அதிகாரிகள் அந்தக் காரியத்தை செய்கிறார்கள். யாராவது விடப்பட்டிருந்தால் அவர்கள் ஒரு தேதி நிர்ணயித்து அவர்கள் எல்லாம் சேர்ந்து கொள்ளலாம் என்கிறார்கள். அப்படி ஒருவர் சேர்வதற்கு சில யோக்கியதாம்சங்கள் இருக்கின்றன. அப்படிப்பட்டவருக்கு 21 வயது பூர்த்தியாக வேண்டும். அவர் உயிரோடு இருக்க வேண்டும். என்று இப்படி பல. அப்படி இருந்தால் அவர் வாக்காளராகச் சேரலாம். அதைத் தடுக்க யாருக்கும் உரிமை கிடையாது. அப்படிச் சேராமல் ஏற்கனவே நிறையப் பேர் விடப்பட்டிருந்தால் அதற்குக் காரணம் என்னவென்று வாக்காளர்களைக் கேளுங்கள். அதிகாரிகள் பார்ப்பதெல்லாம் அவருக்கு 21 வயது நிரம்பியிருக்கிறதா, அவர் உயிரோடு இருக்கிறாரா என்பது தான். சேர்ப்பது எலெக்ஷன் கமிஷன் உத்தரவுப்படி செய்கிறார்கள். இதிலே தமிழக அரசையும், தி.மு. கழகத்தையும் இழுக்க வேண்டாம் என்று கேட்டுக்கொள்ளுகிறேன். புதிதாக சேர்க்க விரும்பியவர்களை அந்தந்த கட்சிக்காரர்கள் கொண்டு போய் சேர்ப்பது தான் முறை. எல்லா கட்சிக்காரர்களும் இதைத் தான் செய்கிறார்கள். தேர்தல் வந்துவிட்டால் பத்திரிகைகளிலே விளம்பரம் போடுகிறோம் தொண்டர்களே வாக்காளர் பட்டியலிலே சேருங்கள் என்று. ஒவ்வொரு கட்சிக்காரர்களும் சேருகிறார்கள். அதை அதிகாரிகள் 'வெரிபை' பண்ணுகிறார்கள். ஒருவருக்கு 21 வயது இல்லை என்றால், அவர் பெயரை அடித்து விடுகிறார்கள் ; அந்த ஊரிலே அவர் இல்லை என்றால் அவரை நீக்கி விடுகிறார்கள். அவர் உயிரோடு இல்லை என்றால் நீக்கிவிடுகிறார்கள். இது தான் சட்டம். இதிலே கட்சிப்பாகுபாடு கிடையாது என்று சொல்லிக்கொள்கிறேன்.

**திரு. ஓ. என். சுந்தரம் :** நான் சொல்லுவதெல்லாம், இப்படி அதிகமாக வாக்காளர்களை சேர்க்கும் பொழுது அதிலே தவறு ஏதாவது ஏற்பட்டுவிடக்கூடாதே என்பதற்குத் தான். எனவே, அதைக் கண்காணிக்க வேண்டுமென்று தான் சொல்லுகிறேன்.

**மாண்புமிகு திரு. ப. உ. சண்முகம் :** கண்காணிப்பதிலே ஒரு கட்சிக்காரருக்கு இன்னொரு கட்சிக்காரர் பின்வாங்குவதில்லை. உஷாராகத் தான் இருக்கிறார்கள். காங்கிரஸ்காரர்கள் வாக்காளர்களைப் புதிதாக சேர்த்தால், திராவிட முன்னேற்றக் கழகத்தினர் கண்காணிக்கின்றனர் ; கம்யூனிஸ்ட் கட்சி சேர்த்தால் சுதந்திராக் கட்சியினர் கண்காணிக்கின்றனர். எனவே, இதிலே ஒன்றும் ஒரு கட்சிக்கு இன்னொரு கட்சி பின் வாங்குவது கிடையாது.

**திரு. ஆர். பொன்னப்ப நாடார் :** இந்த வாக்காளர் பட்டியல் எப்படித் தயாரிக்க வேண்டும் என்றிருக்கிறது. கிளேம்ஸ் அன்ட் அப்ஜக்ஷன்ஸ் கேட்கப்பட்டு, அதற்கு காலவரையறை நிர்ணயித்திருக்கிறார்கள். புதிதாக யாராவது சேர்க்கப்பட்டால், அதைப் பற்றி தகுந்த இடங்களிலே பிரசுரம் செய்தால் தான், யாரை சேர்க்க வேண்டும் யாரை அபத்தமாக சேர்த்திருக்கிறார்கள் என்ற விவரங்கள் எல்லாம் வரும். இந்த கிளேய்ம்ஸ் அன்ட் அப்ஜக்ஷன்ஸ் கொடுப்பதிலே, சரியான கால வரையறையைத் தந்து அது சரியான முறையிலே இருக்கிறதா என்று பார்த்துக்கொள்ள வேண்டும். இதற்காக சரியான தாக்கீது அரசாங்கம் கொடுக்குமானால் இது மாதிரி புகாருக்கு இடம் வராது என்று சொல்லிக் கொள்கிறேன்.

**மாண்புமிகு திரு. ப. உ. சண்முகம் :** எலெக்ஷன் கமிஷன் தாக்கீது தரவேண்டும். அவர்கள் அப்படி தாக்கீது தருகிறார்கள். தவறான வகையிலே வாக்காளர்கள் வாக்காளர் பட்டியலிலே இடம் பெறாமல் இருப்பதற்கு சர்வ கட்சியினரும் முயற்சித்து அதைத் தடுக்க வேண்டும்.

**திரு. கு. காமாட்சி :** இப்படி அதிகமான அளவிலே தி.மு.க. உறுப்பினர்களை வாக்காளர் பட்டியலிலே சேர்க்கிறார்கள் என்று சொல்லுவதன் மூலம் உறுப்பினர் அவர்கள் திண்டுக்கல் தேர்தலிலே தி.மு. கழக உறுப்பினர் வெற்றிபெற்றுவிடுவார் என்பதை உறுதி செய்கிறாரா ?



**திரு. சொ. காவேரிமணியம் :** தலைவரவர்களே, நமது ஆளுநர் அவர்கள் இந்த மன்றத்திலே இரண்டாம் தேதி ஆற்றிய உரையை வரவேற்று, அதன் மீது சில கருத்துக்களை சொல்ல விரும்புகிறேன். அவர்கள் ஆற்றிய உரையில் தமிழகத்தின் மூதறிஞர் மறைந்த இராஜாஜி அவர்களுக்கு அஞ்சலி செலுத்தும் முகத்தான் அவர் ஆற்றிய தொண்டுகள் பற்றியும், அவருடைய சிறப்புகள் பற்றியும் முதலிலே ஆரம்பித்து, அதற்கு அடுத்தாற்போல் தமிழக அரசு செய்திருக்கக் கூடிய திட்டங்கள் பற்றியும், அதுபோல் மத்திய அரசு ஆற்றவேண்டிய கடமை பற்றியும் இதிலே குறிப்பிடப்பட்டிருக்கிறது என்று தெரிவித்துக்கொள்கிறேன்.

**மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர் :** திரு. காவேரிமணியம் அவர்கள் தொடர்ந்து நாளை பேசலாம். இந்தப் பேரவையின் அலுவல்கள் இன்று இத்துடன் முடிவுற்று, பேரவை மீண்டும் நாளைக் காலை 9 மணி அளவில் கூடும். வணக்கம்.

*பின்னர் பேரவை 1-30 மணி அளவில் ஒத்திவைக்கப்பட்டது.*

### 6. பேரவை முன் வைக்கப்பட்ட ஏடுகள்.

#### A. Statutory Rules and Orders.

25. Notification issued with G.O. Ms. No. 2363, Rural Development and Local Administration, dated the 9th November 1972 in regard to alteration of the name of 'Palayam Panchayat Union' as the 'Guziliamparai Panchayat Union'. [Laid on the Table of the House under section 199(2) of the Tamil Nadu Panchayats Act, 1958 (Tamil Nadu Act XXX of 1958).]

26. Notification issued with G.O. Ms. No. 2191, Rural Development and Local Administration, dated the 19th October 1972, in regard to draft amendments to the rules relating to the personal conduct of officers and servants of municipal councils. [Laid on the Table of the House under section 304(d) of the Tamil Ndau District Municipalities Act 1920 (Tamil Nadu Act V of 1920).

27. Notification issued with G.O. Ms. No. 3405, Revenue, dated the 15th December 1972 in regard to reduction in the rate of sales tax on the sale of Polyster staple fibre manufactured by the Indian

Organic Chemicals Limited, Madras. [Laid on the table of the House under section 53(5) of the Tamil Nadu General Sales Tax Act, 1959 (Tamil Nadu Act 1 of 1959).]

B. Reports, Notifications and Other papers.

14. Report of the Committee on Estimates on the action taken by the Government on the recommendations of the Committee contained in the report on Information and Publicity Department.

*15. Memoranda presented to the President of India by Thiruvalargal M. G. Ramachandran, M. Kalyanasundaram and others and the reply of the Government thereon sent to the Prime Minister of India (Tamil).

* Circulated to Members on 5th Februray 1973.



## இணைப்பு.

[366ம் பக்கத்தில் 49-ஆம் எண்ணுள்ள வெள்ளிக் குறியிட்ட வினாவிற்குரிய விடையைக் காண்க.]

(அ) ஆம்.

(இ) 7—7—1972-இல் செயலுக்கு வந்த திருத்தியமைக்கப்பட்ட குறைந்த அளவு ஊதிய வீதங்கள் பின் வருமாறு :—

### தென்னங்கயிற்றுத் தொழிற்சாலை ஒன்றில் வேலை.

| | தொழிலாளர் வகை. (1) | குறைந்த அளவு ஊதிய வீதங்கள். (2) |
|---|---|---|
| 1. | தேங்காய் மட்டைகளை உரித்தல், நனைக்கும் இடத்திற்குக் கொண்டுபோதல், அவற்றைக் குட்டைகளில் ஊறவைத்தல். | ஒவ்வொரு 1,000 மட்டைகளுக்கும் ரூ. 6·25. |
| 2. | தேங்காய் மட்டைகளை எண்ணுதல். | 1,000 மட்டைகளுக்கு ரூ. 1.00. |
| 3. | உரித்த மட்டைகளை குட்டைகளிலிருந்து அகற்றுதல். | 1,000 மட்டைகளுக்கு அல்லது 8,000 உரித்த மட்டைகளுக்கு ரூ. 1·75. |
| 4. | நனைத்த மட்டைகளை அடித்தல். | நனைக்கப்பட்ட மட்டைகள் 100-க்கு அல்லது 800 உரித்த மட்டைகளுக்கு ரூ. 1·60. |

5. முப்பிரிக் கயிறு (முறுக்குதல்)—

| | ரூ. |
|---|---|
| (அ) 10 பாகம்—100 கயிறுகள் கொண்ட கட்டு ஒன்று. | 10·00 |
| (ஆ) 12 பாகம்—100 கயிறுகள் கொண்ட கட்டு ஒன்று. | 10·00 |
| (இ) 16 பாகம்—100 கயிறுகள் கொண்ட கட்டு ஒன்று. | 14·00 |
| (ஈ) 20 பாகம்—100 கயிறுகள் கொண்ட கட்டு ஒன்று. | 18·00 |
| (உ) 24 பாகம்—100 கயிறுகள் கொண்ட கட்டு ஒன்று. | 22·00 |

இயந்திரத்தால் தூய்மையாய் செய்யப்பட்ட நார் வழங்கப்படுமிடத்து குறைந்த அளவு ஊதிய வீதங்கள் பின்வருமாறு இருக்கவேண்டும் :—

| | ரூ. |
|---|---|
| (அ) 10 பாகம்—100 கயிறுகள் கொண்ட கட்டு ஒன்று. | 8·00 |

5 முப்பிரி கயிறு (முறுக்குதல்)—தொடர்ச்சி.

| தொழிலாளர் வகை. (1) | குறைந்த அளவு ஊதிய வீதங்கள். (2) |
|---|---|
| | ரூ. |
| (ஆ) 12 பாகம்—100 கயிறுகள் கொண்ட கட்டு ஒன்று. | 8·00 |
| (இ) 16 பாகம்—100 கயிறுகள் கொண்ட கட்டு ஒன்று. | 11·25 |
| (ஈ) 20 பாகம்—100 கயிறுகள் கொண்ட கட்டு ஒன்று. | 14·50 |
| (உ) 24 பாகம்—100 கயிறுகள் கொண்ட கட்டு ஒன்று. | 17·50 |

குறிப்பு.—பாகம் என்பது நீளவாட்டில் விரிக்கப்பட்ட இரு கைகளின் அளவைக் குறிக்கும்.

6. கயிறு திரித்தல்—

72 ராத்தல் அல்லது 32·66 கிலோ கிராம் எடையுள்ள நாரைப் பின் வருமாறு மாற்றுவதற்கு :—

| | ரூ. |
|---|---|
| 1¾" அல்லது 4·50 செ.மீ. கயிறுகள் .. | 7·75 |
| 2" அல்லது 5·00 செ.மீ. கயிறுகள் .. | 7·00 |
| 4" அல்லது 10·00 செ.மீ. கயிறுகள் .. | 6·00 |
| 1½" அல்லது 3·80 செ.மீ. கயிறுகள் .. | 8·00 |

7. மிதியடி தயாரித்தல்—

| | ரூ. |
|---|---|
| தரம் I—நாள் ஒன்றுக்கு .. .. | 3·00 |
| தரம் II—நாள் ஒன்றுக்கு .. .. | 2·50 |

8. கட்டாகக் கட்டுதல்—

| | |
|---|---|
| நாள் ஒன்றுக்கு .. .. | 3·00 |

ஆனால் செய்த வேலை அளவுக்கேற்ப ஊதியம் பெறும் தொழிலாளர் களுக்குக் கொடுக்கப்பட வேண்டிய குறைந்த அளவு நாள் ஊதியம் 8 மணி நேரங்கொண்ட நாள் ஒன்றுக்கு I-ஆம் தரத் தொழிலாளருக்கு ரூ. 2·50-க்கும், II-ஆம் தரத் தொழிலாளருக்கு ரூ. 2·00-க்கும் குறையக் கூடாது.

குறிப்பு. (1) உடல் வலிமை, திறமை, தேர்ச்சி, செய்து முடிக்கும் பணி அளவு ஆகியவற்றின் அடிப்படையில் தொழிலாளர்கள் I, II தரங்களாகப் பிரிக்கப்படுகிறார்கள்.



(2) ஊதியம் வழங்கும் கால அளவுகள் வார. இரு வார, அல்லது திங்கள் கால அளவுகளாக முடிவு செய்யப்படுமிடங்களில், அந்தந்தக் காலத்திற்கு உரிய குறைந்த அளவு கூலி வீதங்கள் மேலே முடிவு செய்யப்பட்ட நாள் ஊதிய வீதத்தை அந்தக் காலத்திற்குரிய வார ஓய்வு நாட்கள் உள்பட நேர்வுக்கேற்ப வாரத்தில், இரு வாரத்தில் அல்லது திங்களில் உள்ள மொத்த நாட்களைக் கொண்டு பெருக்குவதன் மூலம் கணக்கிடப்படவேண்டும்.

(3) இளைஞர்களுக்கும் பெண் தொழிலாளர்களுக்கும் மேலே முடிவு செய்யப்பட்ட வீதங்களில் ஊதியம் கொடுக்கப்படவேண்டும். சிறுவர்கள் பணிக்கமர்த்தப்படும் இடங்களில் அவர்களுக்கு மேலே முடிவு செய்யப்பட்ட ஊதிய வீதங்களில் பாதி கொடுக்கப்பட வேண்டும்.

*Answer.*—(*a*) Yes.

(*b*) The revised minimum rates of wages which came into force on 7th July 1972 are as follows :—

EMPLOYMENT IN ANY COIR MANUFACTORY.

| Class of employees. (1) | Minimum rates of wages. (2) |
|---|---|
| | RS. |
| 1. Splitting, transporting of husks to retting yard and putting it into pits or soaking. | 6.25 per 1,000 husks. |
| 2. Counting of husks ... ... ... | 1.00 per 1,000 husks |
| 3. Removal of seers (split husks) from the pits. | 1.75 per 1,000 husks or 8,000 seers. |
| 4. Beating of retted husks ... ... | 1.60 per 100 retted husks or 800 seers. |

5. *Muppiri coir (twisting).*

| | RS. |
|---|---|
| (*a*) 10 bagams-one bundle of 100 coir each. | 10.00 |
| (*b*) 12 bagams-one bundle of 100 coir each. | 10.00 |

| Class of employees. | Minimum rates of wages. |
|---|---|
| (1) | (2) |
| 5. ***Muppiri coir (twisting)***—cont. | |
| (c) 16 bagams-one bundle of 100 coir each. | 14.00 |
| (d) 20 bagams-one bundle of 100 coir each. | 18.00 |
| (e) 24 bagams-one bundle of 100 coir each. | 22.00 |

Where machine cleaned fibre are supplied, the minimum rates of wages shall be as follows:—

| | |
|---|---|
| (a) 10 bagams-one bundle of 100 coir each. | 8.00 |
| (b) 12 bagams-one bundle of 100 coir each. | 8.00 |
| (c) 16 bagams-one bundle of 100 coir each. | 11.25 |
| (d) 20 bagams-one bundle of 100 coir each. | 14.50 |
| (e) 24 bagams-one bundle of 100 coir each. | 17.50 |

6. *Rope making :*

For converting 72 lbs or 32.66 kilograms of fibre into

| | RS. |
|---|---|
| $1\frac{3}{4}''$ or 4.50 cm. ropes ... ... | 7.75 |
| 2″ or 5.00 cm. ropes ... ... | 7.00 |
| 4″ or 10.00 cm. ropes ... ... | 6.00 |
| $1\frac{1}{2}''$ or 3.80 cm. ropes ... ... | 8.00 |



| Class of employees. | Minimum rates of wages. |
|---|---|
| (1) | (2) |
| 7. Mat making—Grade I ... ... | 3.00 per day. |
| Mat making—Grade II ... ... | 2.50 per day |
| 8. Bundling ... ... ... ... | 3.00 per day |

Provided that the daily minimum wages payable for the piece rate workers shall not be less than Rs. 2.50 for Grade I workers and Rs. 2 for Grade II workers per day of eight hours.

NOTE.—(1) Classification of employees into Grades I and II is based on physical capacity, skill, efficiency and outturn of work.

(2) Wherever wage periods are fixed as weekly, fortnightly or monthly the rates of minimum wages for such period shall be calculated by multiplying the daily rates of wages fixed above by the total number of days in the week, fortnight or month as the case may be including the weekly days of rest during the period.

(3) Adolescents and women employees shall be paid the same rates of wages fixed above. Children wherever employed shall be paid half of the rates fixed above.

# தமிழ்நாடு சட்டப் பேரவை

---

## வியாழக்கிழமை, 1973 பிப்ரவரி 8.

சென்னை செயின்ட் ஜார்ஜ் கோட்டையிலுள்ள சட்டப் பேரவை மண்டபத்தில் காலை 9 மணி அளவில் மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர் திரு. பெ. சீனிவாசன் அவர்கள் தலைமையில் பேரவை கூடியது.

### 1. வினாக்கள்—விடைகள்.

### வெள்ளிக்குறியிட்ட வினாக்கள்.

மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர் : வினா எண்கள் 61 முதல் 65 வரை பின்னர் எடுத்துக்கொள்ளப்படும். வினா எண்கள் 66, 67, 68 மாண்புமிகு அமைச்சரவர்களின் வேண்டுகோளுக்கிணங்க தள்ளிவைக்கப்படுகின்றன. இப்பொழுது வினா எண் 69 எடுத்துக்கொள்ளப்படுகிறது.

### மதுபானங்கள் விற்க அனுமதி

* 69. வினா—திரு. என். கிட்டப்பா : மாண்புமிகு வருவாய்த் துறை அமைச்சர் தயவு செய்து கீழ்க்கண்ட வினாவுக்கு விடையளிப்பாரா—

தமிழ்நாட்டில் ஒயின், பிராந்தி போன்ற உயர்தர மதுபானக் கடைகள் நடத்த தற்போது எத்தனை பேருக்கு லைசென்சு வழங்கப்பட்டுள்ளது?

மாண்புமிகு திரு. ப. உ. சண்முகம் : 1972-73-ல் இதுவரை 808 பேருக்கு உரிமங்கள் அளிக்கப்பட்டுள்ளன.

திரு. நா. வீராசாமி : தலைவர் அவர்களே, அப்படி உரிமங்கள் வழங்குவதில் ஒரு நகர மன்றத்திற்கு இத்தனை உரிமங்கள்தான் வழங்கப்படும் என்ற முறை ஏதாவது இருக்கிறதா? இல்லையென்றால், மக்கள் அடிப்படையை வைத்துக் கொண்டு, 1973-74-ம் ஆண்டிலிருந்து நகர மன்றத்திற்கு இத்தனை உரிமங்கள் தான் வழங்கப்படும் என்று ஏதாவது முறை வகுக்கப்படுமா?

மாண்புமிகு திரு. ப. உ. சண்முகம் : அப்படி முறை வகுப்பது சரியல்ல என்று கருதுகிறேன். யார் யாருக்குத் தேவையோ, அவர்களெல்லாம் மாவட்ட ஆட்சித் தலைவருக்கு மனுச் செய்ய வேண்டும். மாவட்ட ஆட்சித் தலைவர், சட்டத்திற்கு உட்பட்டு, உரிமம் வழங்குவார்.

திரு. ஆர். பொன்னப்ப நாடார் : இந்த உரிமங்களுக்காக எவ்வளவு பணம் அரசாங்கத்திற்கு வந்திருக்கிறது? அதன் விவரங்களை அமைச்சரவர்கள் தெரிவிப்பார்களா?

**மாண்புமிகு திரு. ப. உ. சண்முகம்:** உரிமம் ஒன்றுக்கு ஆண்டொன்றுக்கு ரூ. 5,000 வசூலிக்கிறோம். ரூ. 1,000 டெபாசிட் கேட்கிறோம். மொத்தம் 1971-72-ல் இதுவரை 899 பேர்களுக்கு உரிமங்கள் வழங்கப்பட்டதில் 808 பேர்கள் ரூ. 40,40,000 உரிமக் கட்டணம் செலுத்தி 1972-73-ஆம் ஆண்டில் 1—12—1972 வரை உரிமங்களைப் புதுப்பித்திருக்கின்றனர்.

**திரு. த. சோணையா:** மது பானக் கடை உரிமங்கள் வழங்கியும் சிலர் கடைகளை நடத்த முடியாத அளவுக்குப் போய்விட்டதே, அப்படிப்பட்டவர்களுக்கு அரசாங்கம் விசேஷ சலுகை அளிக்க முன்வருமா?

**மாண்புமிகு திரு. ப. உ. சண்முகம்:** என்ன சலுகை என்று சொல்லவில்லையே.

**திரு. கே. எ. வகாப்:** இந்த மதுபானக் கடைகளை வைப்பவர்கள் அதிகமாக லாபம் சம்பாதிக்கிறார்கள் என்பதைக் கருதி, ரூ. 5,000 என்றிருக்கும் கட்டணத்தை ரூ. 10,000 ஆக உயர்த்துவது குறித்து அரசு ஆலோசனை செய்யுமா?

**மாண்புமிகு திரு. ப. உ. சண்முகம்:** ஐயாயிரம் ரூபாயே அதிகம் என்று அவர்கள் சொல்லிக்கொண்டிருக்கிறார்கள். அதைக் குறைப்பதாக உத்தேசம் இல்லை.

**திரு. வை. பாலசுந்தரம்:** லைசென்ஸ் எந்தெந்த தகுதியின் அடிப்படையில் வழங்கப்படுகிறது?

**மாண்புமிகு திரு. ப. உ. சண்முகம்:** மாவட்ட ஆட்சித் தலைவருக்கு அனுமதி கோரி மனு போட வேண்டும். பள்ளிகள், கல்லூரிகள், கோவில்கள், மாதா கோவில்கள், மசூதிகள் ஆகியவை இருக்கும் இடங்களுக்கு அருகாமையில் இத்தகைய கடைகளை வைக்காத வண்ணம் மாவட்ட ஆட்சித் தலைவர் கண்காணித்து அனுமதி அளிக்கிறார்.

THIRU B. VENKATASWAMY: Sir, I may I know from the Hon. Minister whether these shop-holders are importing costly liquors from foreign countries?

**மாண்புமிகு திரு. ப. உ. சண்முகம்:** இண்டியன் மேட் ஃபாரின் லிக்கர் தான் விற்கிறார்கள்.

**திரு. கே. என். குமாரசாமி:** மது பானக் கடைகள் வைப்பதற்கு லைசன்ஸ் வழங்கும்போது சில விதிகளைக் கடைப்பிடிப்பதாக அமைச்சர் அவர்கள் சொன்னார்கள். ஆனால், அந்த விதிகளையெல்லாம் தாண்டி, பள்ளிக்கூடங்கள், கோவில்கள் இருக்கும் இடங்களுக்கு அருகாமையில் சாராயக் கடைகளும் கள்ளுக் கடைகளும் வைக்கப்பட்டிருக்கின்றன. அதுகுறித்து மாவட்ட ஆட்சித் தலைவரிடத்தில் சொன்னாலும், அது கவனிக்கப்படாத நிலைமையிலேயே இருக்கிறது. அப்படிப்பட்ட புகார் அரசாங்கத்திற்கு வந்திருக்கிறதா? அது சம்பந்தமாக அரசாங்கம் என்ன நடவடிக்கை எடுத்திருக்கிறது?



**மாண்புமிகு திரு. ப. உ. சண்முகம்:** கேள்வி, மது பானக் கடையைப் பற்றியது. அங்கத்தினர் சொல்வது சாராயக் கடைகள், கள்ளுக் கடைகள் பற்றியது. அதுபற்றி ஏதாவது தகவல் இருந்து அங்கத்தினர் எழுதியனுப்பினால் நிச்சயமாக அரசு பரிசீலித்து, தக்க நடவடிக்கை எடுக்கும்.

THIRU K. S. KOTHANDARAMIAH: Sir, the earnest idea of this Government seems to be to do away with the evils of drink. May I know from the Hon. Minister whether they will take steps to reduce the number of licensee so that gradually it is given up?

**மாண்புமிகு திரு. ப. உ. சண்முகம்:** மது பானத்தை அருந்தக் கூடாது என்பதுதான் அரசாங்கத்தின் கொள்கை. மற்ற மாநிலங்களில் அது இருக்கும் காரணத்தால் இங்கும் மதுவிலக்குத் திட்டத்தை எடுக்க வேண்டிய அவசியம் ஏற்பட்டது. ஆனால், கடைகளின் எண்ணிக்கையைக் குறைப்பதன்மூலம் குடிக்கின்றவர்களின் எண்ணிக்கையைக் குறைத்துவிட முடியும் என்று சொல்ல முடியாது. குடிக்கின்றவர்களின் எண்ணிக்கையைக் குறைக்க பிரசாரம் செய்யலாம்.

**திரு. நா. வீராசாமி:** ஐயாயிரம் ரூபாய் கட்டணம் கொடுக்கும் யாருக்கும் மதுக் கடை வைப்பதற்கு அனுமதி வழங்கப்படும் என்று அமைச்சர் அவர்கள் சொன்னார்கள். ஆனால், டெல்லிக்குச் சென்று ஒரு மர்மப் பேழையில் புகார் வைத்துக் கொடுத்தபோது, ஏதோ மயிலாப்பூரில் உள்ள ஒரு மதுக் கடைக்கு முதல் அமைச்சர் அவர்கள் தம்முடைய அதிகாரத்தைப் பயன்படுத்தி அனுமதி கொடுத்தார் என்று தவறான தகவல் கொடுத்தார்களா? அப்படித் தவறான தகவல் கொடுத்தவர்கள்மீது அரசாங்கம் நடவடிக்கை எடுக்குமா?

**மாண்புமிகு திரு. ப. உ. சண்முகம்:** அரசுக்குக் கிடைத்திருக்கும் தகவலின்படி, 'மயிலாப்பூர் ஒயின்ஸ்' என்ற கடையே இல்லை.

**திரு. கே. டி. கே. தங்கமணி:** மதுக் கடையிலேயே குடிப்பதற்கு ஏற்பாடுகள் செய்யப்பட்டிருப்பதாகச் சொல்கிறார்களே, அப்படியானால், அம்மாதிரி நடக்காமலிருக்க அரசு தக்க நடவடிக்கை எடுக்குமா?

[1973 பிப்ரவரி 8

மாண்புமிகு திரு. ப. உ. சண்முகம் : கடைகளில் குடிப்பதற்கு சில்லறையில் விற்கக்கூடாது என்று அரசு ஆணை பிறப்பித்திருக்கிறது. எங்காவது அப்படித் தவறான முறையில் கடையிலேயே குடிக்க அனுமதிப்பது குறித்து அரசின் கவனத்திற்குக் கொண்டுவந்தால், உடனடியாக நடவடிக்கை எடுத்து, லைசன்ஸை ரத்து செய்ய முடியும்.

## பென்னலூர்பேட்டைத் துணை வட்டத்தில் அபிவிருத்தி வரி

* 70 வினா—திரு. கா. வேழவேந்தன் : மாண்புமிகு வருவாய்த் துறை அமைச்சர் தயவு செய்து கீழ்க்கண்ட வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) பென்னலூர்பேட்டைத் துணை வட்டத்திலுள்ள பல கிராமங்களுக்கு, சுருட்டப்பள்ளிக் கால்வாயின் நீர் பாயாத இடங்களுக்கும், தனித்தீர்வை Betterment Levy போட்டிருப்பது குறித்து மனு ஏதும் அண்மையில் வந்துள்ளதா ?

(இ) ஆம் எனில், அதன் மீது எடுக்கப்பட்ட நடவடிக்கை என்ன ?

மாண்புமிகு திரு. ப. உ. சண்முகம் : (அ) அபிவிருத்தி வரி Levy of Betterment Contribution விதிப்பது குறித்து இப்பகுதியிலுள்ள கிராமத்திலிருந்து மனு ஏதும் அண்மையில் வரவில்லை.

(இ) கேள்விக்கு இடமில்லை.

## *Seats in House of the People*

* 61 Q.—THIRU N. K. PALANISWAMY :
THIRU P. SOUNDARAPANDIAN : Will the Hon. the Chief Minister be pleased to state whether the Government have represented to the Centre that the number of seats in the Lok Sabha should continue to be on the basis of the 1951 census?

மாண்புமிகு டாக்டர் மு. கருணாநிதி : 1951 மக்கட் தொகைக் கணக்கெடுப்புக்குப் பிறகு மக்கட் சபையில் மாநிலங்களுக்கு ஒதுக்கப்பட்ட இடங்கள் அப்படியே இருக்க வேண்டும் என்று இவ்வரசு ஏற்கனவே மத்திய அரசைக் கேட்டுக்கொண்டது. மத்திய அரசு இவ்வரசின் கருத்தை ஏற்கவில்லை. இருப்பினும் கூடிய சீக்கிரத்தில் அமைக்கப்படவிருக்கும் தொகுதி எல்லை வரையறுக்கும் குழுவிடம், மறுபடியும் மேற்கண்ட கருத்துக்களை விண்ணப்பிக்க தமிழக அரசு உத்தேசித்திருக்கிறது.

திரு. என். கே. பழனிசாமி : மக்கட் சபையில் மாநிலங்களுக்கு ஒதுக்கப்பட்ட இடங்களை அதிகரிக்கவும் போவதில்லை, குறைக்கவும் போவதில்லை என்று



1973 பிப்ரவரி 8]

எண்ணிக்கை அதிகம் ஆகியும், மக்கட் சபை உறுப்பினர்களின் எண்ணிக்கை அதிகமாகாது என்று சொன்னாலும், சட்டசபைத் தொகுதியாவது அதிகரிக்கப்படுமா? அல்லது, அதுவும் அதே அளவில் இருக்குமா?

மாண்புமிகு டாக்டர் மு. கருணாநிதி : நாடாளுமன்ற இடங்கள் அதிகரிக்கப்படுமா, அல்லது குறைக்கப்படுமா, அல்லது இப்படியே இருக்குமா என்பதை அடிப்படையாக வைத்துத்தான் சட்டமன்ற இடங்களைப்பற்றி நாம் யோசிக்க வேண்டும்.

திரு. கே. எ. வகாப் : தமிழகத்தில் தீவிரமாக குடும்பக் கட்டுப்பாடு திட்டத்தை அமல்படுத்துவதன் காரணத்தினால்தான் நாடாளுமன்ற உறுப்பினர் எண்ணிக்கை குறைகிற நிலையிருக்கிறது என்பதை மத்திய சர்க்காருக்கு வற்புறுத்தி, இதுபோல குறையாமல் இருப்பதற்கு [illegible] செய்ய வேண்டுமென்ற யோசனையை தமிழக அரசு [illegible] ?

மாண்புமிகு டாக்டர் மு. கருணாநிதி : நாடாளு மன்றத்தில் [illegible]டைய மாநிலத்திற்குச் சரியான பிரதிநிதித்து[illegible] வேண்டும், இருக்கிற எண்[illegible]கை குறையக்கூடாது என்பதை எவ்வளவு [illegible]மை உணர்ச்சியுடன் வற்[illegible]தக் கடமைப்பட்டிருக்கிறோமோ அந்த அ[illegible]க்கு ஒரு தேசியத் திட்[illegible]கிய குடும்பக் கட்டுப்பாட்டுத் திட்டத்தையும் [illegible]கே நல்லமுறையில் செ[illegible]டுத்த வற்புறுத்தக் கடமைப்பட்டிருக்கிறோம். அ[illegible]க இதை விட்டுவிடு[illegible] என்பதில்லை, நம்முடைய கோரிக்கையை மத்திய அ[illegible] தொடர்ந்து வற்புறுத்துவோம்.

திரு. ஆர். பொன்னப்ப நாடார் : நாடாளு மன்றத்திற்கு அதிகபட்சமாக [illegible]து மாநிலத்திற்கு எவ்வளவு சீட் வேண்டுமென்று கேட்டிருக்கிறார்கள்? அது சம்பந்தமாக என்ன ஆட்சேபணை மத்திய சர்க்காரிடம் இருந்து வந்திருக்கிறது என்பதை அமைச்சர் அவர்கள் தெரிவிப்பார்களா ?

மாண்புமிகு டாக்டர் மு. கருணாநிதி : தமிழ்நாட்டைப் பொறுத்த வரை 1956 இல் இருந்து பாராளுமன்றத்திற்கு 41 இடங்கள் இருந்தன. 1961 ஆம் ஆண்டுக்குப் பின்னால் மக்கள் தொகை கணக்கின்படி நமது தமிழகத்திற்கு ஒதுக்கப்பட்ட இடங்கள் 39. 1971 ஆம் ஆண்டு மக்கள் தொகை கணக்கின்படி, பாராளுமன்றத்தில் 500 இடங்கள் என்கிற அடிப்படையில் பார்த்தால் இந்த 39 கூட 38 ஆகக் குறைந்துவிடக்கூடிய நிலை இருக்கிறது. ஆகவேதான், 1951 ஆம் ஆண்டு மக்கள் தொகைக் கணக்கீட்டின்படியே மாநிலங்களின் பாராளுமன்ற இட எண்ணிக்கையை அப்படியே வைத்துக்கொள்ள வேண்டுமென்று நமது அரசு கேட்டுக்கொண்டிருக்கிறது.

மத்திய அரசு நம்முடைய கோரிக்கையை ஏற்றுக்கொள்ள முடியாது என்பதற்குக் கூறியுள்ள காரணங்களில் ஒன்று. மக்கள் தொகை குறைந்து வருவதன் காரணம் குடும்ப நலத் திட்டம் மட்டும்தான் என்பது அல்ல. மக்கள் இடம் பெயர்ந்து வந்து குடியேறுவதும் இருக்கலாம். இரண்டாவது 1951-ம் ஆண்டு மக்கள் தொகைக் கணக்கீட்டையே அடிப்படையாக வைத்துக்கொள்ள வேண்டும் என்பது சிறந்த யோசனை அல்ல. காரணம் 1971-ம் ஆண்டு கணக்குப்படி பார்க்கும்போது சிலருக்கு அனுகூலமும், சிலருக்குப் பிரதிகூலமும் ஏற்படக்கூடும். மூன்றாவது, 1951 கணக்கைமட்டும் எடுத்துக்கொள்ள வேண்டுமென்றால், படிப்படியாக சில மாநிலங்களுக்கு மட்டும் அதிகப்படியான அனுகூலம் ஏற்படக்கூடும் என்று குறிப்பிட்டிருப்பதாகும். இந்தக் காரணங்கள் சரியானவை அல்ல என்கிற அடிப்படையில் நாம் மேலும் மேலும் நம் கருத்தை வற்புறுத்திக்கொண்டு வருகிறோம்.

திரு. கே. டி. கே. தங்கமணி : இப்போதுள்ள 39 சீட்டுக்கும் குறைவு ஏற்படும் என்பதாகப் பத்திரிகையில் ஒரு செய்தி வந்திருக்கிறது. மற்ற மாநிலங்களுக்கு இட எண்ணிக்கை கூடாமல் இருக்கும்போது நமது 39 ஆகவும், மற்ற மாநிலங்களுக்குக் கூடுகிறபோது நமக்கும் இடம் கூடும்படியாகவும் இருக்க வேண்டும் என்பதை நமது அரசு வற்புறுத்துமா?

மாண்புமிகு டாக்டர் மு. கருணாநிதி : பாராளுமன்றத்தில் மொத்தம் உள்ள எண்ணிக்கை 500. இதை 550 ஆக உயர்த்தக்கூடிய ஒரு ஆலோசனை இருக்கிறது. அதுபோல 550 ஆக உயருமானால் நமக்கும் நிச்சயம் ஒன்றிரண்டு இடங்கள் உயரக்கூடும். இப்போதுள்ள நிலையில் 1971-ம் ஆண்டு மக்கள் தொகைக் கணக்குப்படி இந்தியா முழுவதும் 54,79,49,809 ஆகும். இந்திய யூனியன் ஆட்சியின் கீழ் இருக்கிற 8 மாநிலங்கள் பேர்க பாக்கியுள்ள மாநிலங்களின் ஜனத்தொகை 54,16,08,758. பாராளுமன்றத்தில் மாநிலங்களுக்கு உள்ள மொத்த இட எண்ணிக்கை 500 என்றால் இந்த 54,16,08,758 ஐ 500 ஆல் வகுத்தால் ஒரு இடத்திற்கு உள்ள மக்கள் தொகை எண்ணிக்கை 10,83,217 ஆகிறது. 1971-ம் ஆண்டு கணக்குப்படி தமிழ்நாட்டு மக்கள் தொகை 4,11,99,168. இதை பாராளுமன்ற ஒரு இடத்திற்கான மக்கள் தொகை 10,83,217 ஆல் வகுத்தால் நமது தமிழகத்திற்குக் கிடைக்கிற இடம் 38 ஆகிறது. முன்பு உள்ள 39 இல் இருந்து இது ஒன்று குறைவு. நமக்கு உள்ளதும் போச்சு என்கிற நிலைமை ஏற்பட்டுவிடக்கூடாது என்பதாகத்தான் நாம் 1951-ம் ஆண்டு கணக்கையே நிரந்தரமாகக் கொள்ளவேண்டும் என்று வற்புறுத்துகிறோம். அவர்கள் பாராளுமன்ற மாநிலங்களின் சீட்டை 550 ஆக உயர்த்தினால் நிச்சயம் நமக்கும் ஒன்றிரண்டு இடங்கள் அதிகப்பட வாய்ப்பு இருக்கிறது.



திரு. அ. பரந்தாமன் : மக்கள் தொகை அடிப்படையில் கணக்கு எடுக்கிற நேரத்தில் புதியதாக வந்திருக்கிற அகதிகளும் சேர்த்துக்கொள்ளப்படுவார்களா என்று அறிய விரும்புகிறேன்.

மாண்புமிகு டாக்டர் மு. கருணாநிதி : ஒவ்வொரு மாநிலத்திலும் தனித்தனியாகக் கணக்கில் எடுத்துக்கொள்ள மாட்டார்கள். அது உத்தரப் பிரதேசம் சம்பந்தப்பட்ட விவகாரம். ஆகவே அகதிகளைத் திரும்ப அனுப்பவும் கூடும்.'

THIRU B. VENKATASAMI : May I know from the Hon. Chief Minister whether any M.L.A. seats will be enhanced at the time of delimitation which will be shortly coming?

மாண்புமிகு டாக்டர் மு. கருணாநிதி : அது வரும்போது யோசிக்கப்பட வேண்டிய விஷயம்.

திரு. நா. வீராசாமி : மத்திய அரசாங்கம் புதியதாக எடுக்கப்பட்டிருக்கிற மக்கள் அடிப்படையில் இந்த இடங்கள் ஒதுக்கப்பட வேண்டும் என்கிற கருத்துக்கொண்டிருக்கிறது. நமது கோரிக்கையாக நமக்கு பழைய கணக்குப்படி ஒதுக்கப்பட்டிருந்த 41 இடங்களை பிக்சட் ஆக—மக்கள் தொகை கூடினாலும், குறைந்தாலும்—எப்போதும் இருக்க வேண்டுமென்று நமது அரசாங்கம் வற்புறுத்துமா என்று அறிய விரும்புகிறேன்.

மாண்புமிகு டாக்டர் மு. கருணாநிதி : இதுதான் நல்ல யோசனை என்று இந்த அரசாங்கமும் கருதுகிறது. திரு. வகாப் அவர்கள் தெரிவித்ததைப் போல மக்கள் தொகை அடிப்படையில் கூடிக் குறைவது என்றால் ஏன் குடும்பக் கட்டுப்பாடு திட்டத்தைத் தீவிரமாகச் செயல்படுத்தி நமது மாநில பிரதிநிதித்துவத்தை இழக்கவேண்டுமென்ற சலிப்புக்கு ஆளாக நேரிடலாம். நமக்கு 41 என்ற அளவில் மற்ற மாநிலங்களுக்கும் இந்த 1951-ம் ஆண்டு கணக்குப்படி இருப்பது நல்லது என்பதுதான் தமிழக அரசின் யோசனையாகும்.

திரு. எம். முத்தையா : இப்போது இருக்கக்கூடிய எம்.பி. க்களில் ஹரிஜன எம்.பி.க்கள் எத்தனை பேர் என்று அறிவிப்பார்களா?

மாண்புமிகு டாக்டர் மு. கருணாநிதி : இது மொத்தமாக எவ்வளவு இடங்கள் வருகின்றன என்பதைப்பற்றிய கேள்வி. மாண்புமிகு உறுப்பினர் தனியாகக் கேள்வி போட்டால் பதில் அளிக்கலாம்.

THIRU K. S. KOTHANDARAMIAH : It seems the previous Chief Election Commissioner Shri Sen Verma has recommended to the Central Government to increase the number of seats in Lok Sabha and that the present Chief Election Commissioner has asked

the Central Government not to increase it on the basis of 1971 census since it will lead to complications in the administration and also in regard to delimitation. May I know from the Hon. Chief Minister whether this Government know all these things and whether they have given thought to this?

**மாண்புமிகு டாக்டர் மு. கருணாநிதி:** அந்த இரண்டு தேர்தல் அதிகாரி கருதுடைய அபிப்பிராயத்தை வைத்து முடிவு எடுக்க வேண்டியது மத்திய அரசாங்கத்தின் விவகாரம்.

*Pension of Ex-Indian National Army Members*

* 62 Q.—DR. H. V. HANDE : Will the Hon. the Chief Minister be pleased to state—

(*a*) the quantum of pension given to the Ex-Indian National Army Members;

(b) whether the Government has any proposal to increase the amount ; and

(*c*) if so, the details thereof?

**மாண்புமிகு டாக்டர் மு. கருணாநிதி:** (அ) முன்னாள் இந்திய தேசிய ராணுவத்தினர் உட்பட விடுதலைப் போராட்ட வீரர் ஒவ்வொருவருக்கும் அளிக்கப்படும் விடுதலை வீரர் ஓய்வூதியம் திங்கள் ஒன்றுக்கு ரூ. 50 ஆக இருந்தது. இதனை இந்தியா சுதந்திரமடைந்த 25-ந்தாவது ஆண்டு நிறைவு விழாவின் நினைவாக 15—8—1972லிருந்து ரூ. 75 ஆக உயர்த்தப்பட்டுள்ளது.

(இ) இல்லை.

(உ) இதற்கு இடமில்லை.

**திரு. கே. கந்தசாமி:** பேரவைத் தலைவர் அவர்களே, இந்திய விடுதலைக்காக உடல், பொருள், ஆவி அனைத்தையும் சர்வபரித்தியாகம் செய்த ஐ.என்.ஏ. வீரர்களை சுதந்திரப் போராட்ட வீரர்களாகக் கருதி அவர்களுக்கு அளிக்கப் பட்டுவரும் ஓய்வூதியத்தை உயர்த்தித்தரவேண்டுமென்று, முதல்வர் அவர்கள் மதுரைக்கு வந்தபோது, வேண்டுகோள் விடுத்தார்கள். அதைக் கனிவோடு இந்த அரசாங்கம் பரிசீலனை செய்து உடனடியாக உயர்த்திக்கொடுக்க முன் வருமா?

**மாண்புமிகு டாக்டர் மு. கருணாநிதி:** கடந்த சில மாதங்களுக்கு முன்பு தான் 50 ரூபாயாக இருந்த அவர்களது ஓய்வூதியத்தை ரூ. 75 ஆக உயர்த்தி யிருக்கிறோம். ஆண்டு ஒன்றுக்கு முன்பு ரூ. 43,96,800 செலவாயிற்று என்றால்,



இப்போது அதிகப்படி ரூ. 27,48,000 ஆகிறது. கிட்டத்தட்ட மொத்தத்தில் 70 லட்சம் ரூபாய் ஆகிறது. இப்போதுள்ள நிதி நிலையை உத்தேசித்து மாண்புமிகு உறுப்பினர் கோரிய முடிவினை உடனடியாக மேற்கொள்வதற்கில்லை.

**திரு. கே. டி. கே. தங்கமணி:** ஐ.என்.ஏ. வீரர்கள் எத்தனை பேர்களுக்கு நமது அரசு பென்ஷன் கொடுக்கிறதென்றும், இவர்களையும் 'ஃப்ரீடம் பைட்டர்ஸ்' என்கிற லிஸ்டில் சேர்த்து மத்திய அரசாங்கத்தின் உதவி கிடைக்கும் வகையில் நமது அரசு வற்புறுத்த யோசனை கூறுமா?

**மாண்புமிகு டாக்டர் மு. கருணாநிதி:** இவர்களும் விடுதலை வீரர்களோடு தான் ஏற்கனவே இணைக்கப்பட்டிருக்கிறார்கள். இப்போது தமிழ்நாட்டில் 7,542 விடுதலை வீரர்களுக்குப் பென்ஷன் அளிக்கப்படுகிறது என்றால், இவர்களில் 2,530 பேர்களாவது ஐ.என்.ஏ. வீரர்கள் இருப்பார்கள்.

**திரு. வை. பாலசுந்தரம்:** முன்னாள் இராணு வீரர்களுக்கு நமது அரசு அளிக்கிற சலுகைகளைப்போல மற்ற மாநிலங்களும் அளிக்கிறதா? அதே நேரத்தில் முன்னாள் இராணுவ வீரர்களை நல்ல சமுதாயப் பணிகளில் பயன் படுத்திக்கொள்கிற திட்டம் நமது அரசினிடம் இருக்கிறதா என்று அறிய விரும்புகிறேன்.

**மாண்புமிகு டாக்டர் மு. கருணாநிதி:** மற்ற மாநிலங்களைப்பற்றி தெரியாது. மத்திய அரசு ஐ.என்.ஏ.-வீரர்களுக்கும் ஆவன செய்வதாகத்தான் தகவல். இவர்களை நல்ல சமுதாயப் பணிகளில் ஈடுபடுத்திக்கொள்வதற்கு அரசுக்கு எவ்வித ஆட்சேபணையும் இல்லை.

**திரு. செ. கந்தப்பன்:** தலைவர் அவர்களே, முன்னாள் இராணுவ வீரர்கள், தேசத் தியாகிகள் அணியில் முதியோருக்கும் நமது அரசு ஊதியம் வழங்கு கிறது. அகில இந்திய ரீதியிலே இவை மக்கள் நல அரசினுடைய நல்ல கொள்கைகள் என்று ஏற்றுக்கொள்ளப்பட்டுள்ள கொள்கைகளாகும். எனவே, அந்த அடிப்படையில் மத்திய அரசு இதற்கு ஏதாவது உதவி அளிக்கிறதா, அல்லது, மத்திய அரசு உதவி அளிக்க வேண்டுமென்று மாநில அரசு வற்புறுத் துமா என்று அறிய விரும்புகிறேன்.

**மாண்புமிகு டாக்டர் மு. கருணாநிதி:** மத்திய அரசு விடுதலை வீரர்களைப் பொறுத்தவரையில் இந்த ஆண்டிலிருந்து 6 மாதம் சிறைச்சாலையிலிருந்து நற்சான்றிதழ்களைப் பெற்றிருந்தவர்களுக்கு ரூ. 200 ஓய்வூதியம் அளிப்பது என்று முடிவெடுத்திருக்கிறது. அந்த ரூ. 200-ல், மாநில அரசு கொடுக்கிற ரூ. 75-ஐ கழித்துக்கொண்டு மீதி ரூ. 125 தான் அவர்களுக்கு அளிப்பார்கள் என்று தெரிகிறது.

**திரு. கு. காமாட்சி :** தலைவர் அவர்களே, விடுதலைப் போராட்டத்தில் கலந்துகொண்டவர்களுக்கு அளிக்கப்படும் உதவித் தொகையைப் போல மொழிப் போராட்டத்திலே கலந்து கொண்டவர்களுக்கு எதனையும் அளிக்க அரசு உத்தேசித்துள்ளதா ?

**மாண்புமிகு டாக்டர் மு. கருணாநிதி :** மொழிப் போராட்டத்திலே கலந்து கொண்டு உயிர் நீத்தவர்கள், தீக்குளித்தவர்கள் ஆகியோருக்கு அரசு மானியம் வழங்குகின்ற முறையை மேற்கொண்டு கடந்த சில மாதங்களாக அது வழங்கப்பட்டு வருகிறது.

**திரு. எஸ். வடிவேல் :** ஆட்டிப் படைத்த ஆங்கில ஏகாதிபத்தியத்தை ஓட்டிப் படைத்த முன்னாள் இந்திய தேசிய வீரர்களில் இன்னும் பலருக்கு இந்த உதவி அளிக்கப்படாமல் இருப்பதாக நான் அறிகிறேன். அவர்களுக்கும் விரைவிலே இந்த உதவி கிடைக்க அரசு ஆவன செய்ய முன் வருமா என்று அறிய விரும்புகிறேன்.

**மாண்புமிகு டாக்டர் மு. கருணாநிதி :** நிதி நிலை நம்மை வாட்டிப் படைக்கிற காரணத்தால், அதிகமாக நாம் வழங்குவதற்கில்லை. யாராவது விடுபட்டிருப்பார்களானால், அதுபற்றி கவனம் ஊட்டப்படுமானால் அதுபற்றி யோசிக்கப்படும்.

**திரு. எ. சுவாமிதாஸ் :** மொழிப் போராட்டத்தின்போது உயிர் நீத்தவர்களுக்கு மானியம் வழங்கியதாக முதலமைச்சர் அவர்கள் குறிப்பிட்டார்கள். அதேபோல், மொழிவாரி அடிப்படையிலே தனித் தமிழ் நாடு அமைப்பதற்காக கன்னியாகுமரி மாவட்டம் தமிழ்நாட்டுடன் சேரப் போராடி உயிர் நீத்தவர்கள் குடும்பத்திற்கும் தியாகிகளுடைய குடும்பத்திற்கும் உதவி அளிக்கப்படுமா என்று அறிய விரும்புகிறேன்.

**மாண்புமிகு டாக்டர் மு. கருணாநிதி :** நான் ஏற்கனவே, இப்படி ஒரு கேள்வி எழுந்தபோது பதில் சொல்லியிருக்கிறேன். மொழிப் போராட்டத்திலே தீக்குளித்தவர்களுடைய குடும்பங்களுக்கு மானியம் வழங்கியது மாத்திரம் அல்ல, துப்பாக்கிச் சூட்டில் உயிரிழந்தவர்களுடைய 52 குடும்பங்களுக்கு 1965-ம் ஆண்டிலிருந்து எந்தவிதமான உதவியும் வழங்கப்படவில்லை. அந்த 52 குடும்பங்களுக்கும் ரூ. 2,000 விதம் கடந்த 2 மாதங்களுக்கு முன்பிருந்து அந்த நிதி உதவி வழங்கப்பட்டு வருகிறது.

அதைப்போல் குமரி மாவட்டம் தாய்த் தமிழகத்தோடு இணைய வேண்டுமென்று போராட்டம் நடத்தியவர்களுடைய விவரங்கள் கேட்கப்பட்டிருக்கின்றன. ஆகவே, அதுவும் விரைவிலே கவனிக்கப்படும்.



**திரு. அ. தேவேந்திரன் :** தலைவர் அவர்களே, இந்தியத் துணைக் கண்டத்தில் எங்குமில்லாத அளவுக்கு நாம் தியாகிகளுக்கு ரூ. 75 தந்து கொண்டிருக்கிறோம். ஆனால், மத்திய அரசு அவர்கள் அளிக்கும் ரூ. 200-ல் இந்த ரூ. 75-ஐ கழித்துக்கொண்டு மீதத்தைத்தான் தருவார்கள்போல் தெரிவதாக மாண்புமிகு முதலமைச்சர் அவர்கள் சொன்னார்கள். மாநில அரசு தாங்கள் கொடுக்கின்ற ரூ. 75-ம் அப்படியே இருக்கவேண்டும், நீங்கள் கொடுக்கின்ற ரூ. 200-ஐ சேர்த்து கொடுக்க வேண்டும் என்று மத்திய அரசை கேட்குமா என்று அறிய விரும்புகிறேன்.

**மாண்புமிகு டாக்டர் மு. கருணாநிதி :** அதை ஒரு யோசனையாக வேண்டுமானால் அரசுக்குச் சொல்லலாம். மத்திய அரசுக்கு வேண்டுமானால், அந்த உதவித் தொகையைப் பெறுகின்றவர்களின் சார்பிலே விண்ணப்பித்துக் கொள்ளலாம். விடுதலை வீரத் தியாகிகள் தாங்கள் 6 மாதம் சிறை சென்றிருந்தாலும் மாநில அரசிடமிருந்து ரூ. 75 தான் பெறமுடிகிறது. நீங்கள் தருகின்ற ரூ. 200-ஐத் தனியாகத் தரவேண்டுமென்று கேட்டு அவர்கள் விண்ணப்பித்துக் கொள்வது நலம்.

**திரு. ஆ. பாத்தாமன் :** தலைவர் அவர்களே, முன்னாள் இராணுவ வீரர்களுக்கு இந்த உதவித் தொகை மட்டுமல்லாமல், தமிழக அரசு நிலப்பட்டா தந்திருக்கிறது என்று சொல்கிறார்களே, அது உண்மையா என்று அறிய விரும்புகிறேன்.

**மாண்புமிகு டாக்டர் மு. கருணாநிதி :** சொல்கிறார்களா என்று சந்தேகப்பட வேண்டியதில்லை, உண்மைதான்.

## *Educational Institutions in Kanyakumari district*

* 63 Q.—THIRU N. DENNIS : Will the Hon. the Minister for Education and Local Administration be pleased to state the names of places where Arts and Science Colleges are to be opened for men and women respectively in Kanyakumari district?

**மாண்புமிகு டாக்டர் இரா. நெடுஞ்செழியன் :** தலைவர் அவர்களே, ஓரிடத்தில் கல்லூரி திறக்க அரசுக்கு கோரிக்கை வந்தால், அதனை நிறைவேற்ற அப்பகுதியிலுள்ள பொதுமக்கள் ரூ. 5 லட்சம் அரசுக்கு நன்கொடையாக செலுத்த வேண்டும். குறைந்தது 40 ஏக்கர் நிலம் கட்டிடத்திற்கும் விளையாட்டு மைதான வசதிக்கும் அரசுக்கு வழங்க வேண்டும். மேலும் நிரந்தரமாக கட்டிடம் கட்டும்வரை தற்காலிக வகுப்புகள் நடத்த வசதிகள் செய்து தரவேண்டும். இந்த நிபந்தனைகளைக் கூட கல்லூரி அமைக்க வேண்டிய

அவசியம் என்று ஏற்பட்டால், அந்த இடத்தில் கல்லூரி அமைப்பது குறித்து அரசு பரிசீலிக்கும். மேலும் 1972-73-ல் கன்னியாகுமரி மாவட்டத்தில் ஆண்களுக்கோ, பெண்களுக்கோ தனியார் துறையில் கல்லூரிகள் அமைப்பது பற்றிய தகவல் ஒன்றுமில்லை.

**திரு. என். டென்னிஸ் :** அரசுக் கல்லூரி எதுவுமே இல்லாத அந்த மாவட்டத்தில் அரசு கல்லூரி ஏற்படுத்த அரசு முன்வருமா என்பதை அறிய விரும்புகிறேன்.

**மாண்புமிகு டாக்டர் இரா. நெடுஞ்செழியன் :** தலைவர் அவர்களே, மற்றைய மாநிலங்களோடு ஒப்பிட்டுப் பார்க்கும்போது அங்கு நிறைய கல்லூரிகள் இருக்கின்றன. தனியார் துறையிலே கூட 2 கல்லூரிகள் வேண்டுமென்று மதுரைப் பல்கலைக் கழகத்திற்கு சென்ற ஆண்டு விண்ணப்பம் வந்தது. ஆனால் அங்கே போதுமான அளவுக்கு கல்லூரிகள் இருப்பதாலும், இருக்கின்ற இடங்களைப் பெருக்கிக்கொள்ளலாம் என்ற அளவுக்கு மதுரைப் பல்கலைக் கழகம் அவற்றை நிறுத்தி வைத்திருக்கிறது. நான் சொன்ன நிபந்தனைகள் எல்லாம் நிறைவேறுகின்ற சூழ்நிலை இருந்தால் அதுபற்றி பரிசீலிக்கலாம்.

**திரு. ஜே. ஜேம்ஸ் :** தலைவர் அவர்களே, அரசுக் கல்லூரி அமைப்பதற்கு ஆலோசனை இல்லையென்று சொன்னாலும் கூட, நாகர்கோவிலில் மகளிர் கல்லூரிக்குத் தேவையிருக்கிற காரணத்தால் தனியார் துறையில் யாராவது துவக்க முன்வந்தால், அதற்கு அரசாங்கம் அனுமதி தருமா என்று அறிய விரும்புகிறேன்.

**மாண்புமிகு டாக்டர் இரா. நெடுஞ்செழியன் :** தலைவர் அவர்களே, நான் ஏற்கனவே சொன்னதுபோல அந்த இரண்டு மனுக்களில் ஒரு மகளிர் கல்லூரிக்கும் ஒரு ஆண்கள் கல்லூரிக்கும் விண்ணப்பித்திருக்கிறார்கள். சென்ற ஆண்டு இருந்த நிலவரத்தைக்கொண்டு மதுரைப் பல்கலைக் கழகத்தினர் அதை நிறுத்தி வைத்திருக்கிறார்கள். இந்த ஆண்டினுடைய நிலைமைக்கு ஏற்றபடி அதைப் பற்றி முடிவெடுக்கலாம்.

**திரு. ஆர். பொன்னப்ப நாடார் :** தலைவர் அவர்களே, முன்பு ஸகாட் கிருத்தவக் கல்லூரி இயங்கிக்கொண்டிருந்தது. இன்று அது மூடப்பட்டிருக்கிறதே, அதிலே மகளிர் கல்லூரி அமைக்க வேண்டுமென்று அந்த நிர்வாகத்திலே இருக்கின்றவர்கள் அரசாங்கத்திற்கும் பல்கலைக் கழகத்திற்கும் மனு கொடுத்திருக்கிறார்கள். அந்தப் பகுதியிலே பெண்கள் கல்லூரிக்கு மிகவும் தேவை இருக்கிற காரணத்தால், அதைப்பற்றி அரசாங்கம் புனர் பரிசீலனை செய்யுமா என்று அறிய விரும்புகிறேன்.



**மாண்புமிகு டாக்டர் இரா. நெடுஞ்செழியன் :** தலைவர் அவர்களே, மதுரைப் பல்கலைக் கழகம் அதைப்பற்றி ஆராய்ந்து அறிந்து அரசாங்கத்திற்கு அறிவிக்குமானால் அது தொடர்பாக அரசாங்கம் தக்க முயற்சிகள் மேற்கொள்ளலாம். நெய்யூர் என்ற ஊரிலே நாடார் எடுக்கேஷனல் டிரஸ்ட் பெண்கள் கல்லூரி வைக்க வேண்டுமென்று விண்ணப்பம் செய்திருந்தார்கள். தாசன் என்பவர் குழித்துறையில் ஓர் ஆண்கள் கல்லூரி வைக்கவேண்டுமென்று விண்ணப்பம் செய்திருந்தார். அந்த இரண்டும் போன ஆண்டு மதுரைப் பல்கலைக் கழகத்தினால் பரிசீலிக்கப்பட்டு நிறுத்தி வைக்கப்பட்டிருக்கின்றன. இட வசதி இருக்கிறது என்று சென்ற ஆண்டு தெரிவித்தார்கள். இந்த ஆண்டு அவர்கள் பல்கலைக் கழகத்திற்கு விண்ணப்பிப்பார்களானால், பல்கலைக் கழகக் கருத்தை அறிந்து தக்க நடவடிக்கை மேற்கொள்ளலாம்.

THIRU K. S. KOTHANDARAMIAH : Sir, may I know from the Hon. Minister whether with regard to backward areas where there are no colleges, the Government would relax the conditions and show consideration. ?

**மாண்புமிகு டாக்டர் இரா. நெடுஞ்செழியன் :** தலைவர் அவர்களே, அப்படிப் பட்ட உத்தேசம் இல்லை.

**திரு. கு. காமாட்சி :** தலைவர் அவர்களே, அரசாங்க கல்லூரிகளில் ஏழை எளிய மாணவர்களுக்குக் கொடுக்கப்படும் சலுகைகளைப்போல தனியார் கல்லூரிகளிலே கொடுக்கப்படுவதில்லை. ஆகவே தனியார் கல்லூரிகளை ஏற்கும் செயற்குறிப்பு அரசாங்கத்திடம் இருக்கிறதா என்று அறிய விரும்புகிறேன்?

**மாண்புமிகு டாக்டர் இரா. நெடுஞ்செழியன் :** அப்படிப்பட்ட யோசனை இல்லை.

* 64 Q.—THIRU N. DENNIS : Will the Hon. the Minister for Education and Local Administration be pleased to state—

(a) whether the student-teacher ratio is being maintained in the Primary Educational Institutions run by the Government in Kanyakumari District ; and

(b) if not, the action taken thereon?

**மாண்புமிகு டாக்டர் இரா. நெடுஞ்செழியன் :** (அ) ஆசிரியர்-மாணவர் விகிதம் அரசினால் வருடாவருடம் ஒப்பளிக்கப்படும் ஆசிரியர் பதவிகளைப் பொறுத்து கன்னியாகுமரி மாவட்டத்தில் நிர்வகிக்கப்படுகிறது.

(ஆ) வினாவுக்கு இடமில்லை.

திரு. என். டென்னிஸ்: தலைவர் அவர்களே, அங்கு ஆசிரியர் பயிற்சி பெற்ற பல ஆசிரியர்கள் வயது வரம்பை தாண்டிவிட்டார்கள். பலர் வயது வரம்பை தாண்டும் நிலையிலிருக்கிறார்கள். அவர்கள் தங்களுடைய கோரிக்கையை அரசின் கவனத்திற்குக் கொண்டு வரும் நோக்கத்துடன் கடந்த 23 நாட்களாக உண்ணாவிரதம் இருக்கிறார்கள். பலரின் நிலை கவலைக்கிடமாக இருக்கிறது. அவர்களுடைய பீதியைப் போக்க வயது வரம்பிலிருந்து விலக்கு அளித்து அவர்களுக்கு வேலை அளிக்க அரசு முன் வருமா என்று அறிய விரும்புகிறேன்.

மாண்புமிகு டாக்டர் இரா. நெடுஞ்செழியன்: அந்த நிலைமை உள்ளபடியே, பயிற்சி பெற்றிருந்தாலும் வயதைக் காரணம் காட்டி அவர்களுக்கு வேலை இல்லையென்று மறுக்கும் நோக்கம் இல்லை. வயது வரம்பு காரணமாக, வேலை இழக்கும் சூழ்நிலை ஏற்பட்டால், அதை ஆராய வேண்டுமென்று கல்வித் துறையைக் கேட்டிருக்கிறேன். மாவட்ட ஆட்சித் தலைவரோடு கலந்து கல்வித் துறை அதை ஆராய்ந்து கொண்டிருக்கிறது. மாவட்ட ஆட்சித் தலைவரோடு கல்விச் செயலாளர் அவர்கள் இதுபற்றி பேச்சு வார்த்தை நடத்திக்கொண்டிருக்கிறார்கள். அந்தப் பேச்சு வார்த்தை விரைவிலே முடிந்ததற்குப் பிறகு தக்க நடவடிக்கை எடுக்கப்படும்.

திரு. ஜே. ஜேம்ஸ்: தலைவர் அவர்களே, வேலை வாய்ப்பை அதிகரிப்பதற்கு மாணவர்-ஆசிரியர் விகிதத்தைக் குறைத்தால் வாய்ப்பு ஏற்படுமே, அதற்கு அரசு ஆவன செய்யுமா?

மாண்புமிகு டாக்டர் இரா. நெடுஞ்செழியன்: தலைவர் அவர்களே, வேலை வாய்ப்பை அதிகரிக்க முடியாது என்பதல்ல. நிதிவசதி இடம் தரவில்லை என்பதுதான் இப்போது இருக்கிற சங்கடம். வேலை வாய்ப்பை அதிகரிக்கக் கூடாது என்பதல்ல. அதற்கு வழிவகைகள் இருக்கின்றன. ஆண்டொன்றுக்கு பட்ஜெட்டிலே 3,000, 2,000 ஆசிரியர்கள் என்று ஒதுக்கிறார்கள். அதைப் பகிர்ந்தளிக்கின்ற சூழ்நிலை ஏற்படும்போதுதான் சங்கடங்கள் ஏற்படுகின்றன. ஆண்டொன்றுக்கு 6,000 ஆசிரியர்களைத் தருகின்ற சூழ்நிலை ஏற்பட்டால் அப்பொழுது நிலைமை சரியாக இருக்கும். அதையெல்லாம் பொறுத்துத்தான் இப்பொழுது பேச்சுவார்த்தை நடத்தப்பட்டு வருகிறது. எந்த அளவுக்கு அதிகமாக ஆக்கமுடியும் என்பதைப்பற்றித்தான் அரசு ஆலோசித்துக் கொண்டு வருகிறது.

திரு. ஆர். பொன்னப்ப நாடார்: தலைவர் அவர்களே, ரீஎம்ப்ளாய்மெண்ட், எக்ஸ்டென்ஷன் போன்றவற்றைத் தவிர்ப்பதற்கு கல்வி இலாகாவிற்கு அரசாங்கம் தகுந்த தாக்கீது நல்குமா என்பதை அறிய விரும்புகிறேன்.



மாண்புமிகு டாக்டர் இரா. நெடுஞ்செழியன்: தலைவர் அவர்களே, பெரும்பாலும் இப்பொழுது எக்ஸ்டென்ஷன் தருவதில்லை, ரீஎம்ப்ளாய்மெண்ட்டும் தருவதில்லை. அரசினர் பள்ளிகளில் பணியாற்றுகின்றவர்களுக்கு ஓய்வுபெறும் வயது 58 ஆக கடைப்பிடிக்கப்பட்டு வருகிறது. அரசினர் பள்ளிகளிலே பணியாற்றியவர்கள், அதற்குப் பிறகு தனியார் பள்ளிகளிலே 60 வயது வரையிலோ அதற்கு மேலோ பணியாற்றக்கூடிய நிலைமை இருக்கிறது. எனவே தனியார் பள்ளிகளிலும் 58 வயதாக நிர்ணயிக்கக் கூடிய ஏற்பாட்டை அரசாங்கம் பரிசீலித்து வருகிறது. அப்படிப்பட்ட நிலைமை ஏற்பட்டால் நிலைமை ஓரளவுக்கு சௌகரியமாக இருக்கும் என்று எதிர்பார்க்கப்படுகிறது.

### மாயூரம் பெண்கள் கல்லூரி

* 65 விஞ—திரு. என். கிட்டப்பா: மாண்புமிகு கல்வி-உள்ளாட்சித்துறை அமைச்சர் தயவு செய்து கீழ்க்கண்ட விஞவுக்கு விடையளிப்பாரா—

மாயூரம் அரசினர் பெண்கள் கல்லூரியில் பட்டப்படிப்புக்கான வகுப்புகள் எப்போது துவக்கப்பட இருக்கின்றன?

மாண்புமிகு டாக்டர் இரா. நெடுஞ்செழியன்: மாயூரம் அரசினர் மகளிர் கல்லூரியில் சரித்திரப் பாடத்தில் பி.ஏ. பட்ட வகுப்பு 1971-72-ம் ஆண்டே துவக்கப் பட்டுள்ளது. இட வசதியின்மை காரணமாக மற்ற பட்ட வகுப்புகள் துவக்க இயலவில்லை.

### நெல்லை மாவட்டத்தில் கனிவளங்கள்

71 விஞ—திரு. கி. சி. அ. சிவப்பிரகாசம்: மாண்புமிகு தொழில் துறை அமைச்சர் தயவு செய்து கீழ்க்கண்ட விஞக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) திருநெல்வேலி மாவட்டத்தில் எந்தெந்த இடங்களில் என்னென்ன கனிவளங்கள் கிடைக்கின்றன என்று ஆராய்ச்சி செய்யப்பட்டுள்ளதா?

(இ) ஆம் எனில், அதன் விவரங்கள் யாவை?

மாண்புமிகு திரு. செ. மாதவன்: விவர அறிக்கை ஒன்று@ அவை முன் வைக்கப்பட்டுள்ளது.

### நீலகிரி மலையில் கிடைக்கும் கனிப்பொருள்கள்

* 72 விஞ—திரு. பெ. சௌந்தரபாண்டியன்: மாண்புமிகு தொழில் துறை அமைச்சர் தயவு செய்து கீழ்க்கண்ட விஞக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) நீலகிரி மலைகளில் கிடைக்கும் முக்கிய கனிப்பொருட்கள் தற்போது எவை எவை?

---

@ 602 ஆம் பக்கத்தில் இணைப்பாக அச்சிடப்பட்டுள்ளது.

(இ) இவைகளை வெட்டி எடுத்துப் பயன்படுத்த அரசு மேற்கொண்ட நடவடிக்கைகள் யாவை?

**மாண்புமிகு திரு. செ. மாதவன்:** (அ) & (இ) நீலகிரி மலையில் இரும்பு மாக்சைட், தங்கம், காக்காய்ப் பொன், சீனக்களிமண் ஆகிய தாதுப்பொருட்கள் கிடைக்கின்றன. இப்பகுதியில் கிடைக்கும் இரும்புத் தாதுவை வெட்டி எடுக்க இரண்டு உரிமமும், பாக்சைட் தாதுவை வெட்டி எடுக்க ஒரு உரிமமும், காக்காய்ப்பொன் தாதுவை வெட்டி எடுக்க ஐந்து உரிமமும் வழங்கப் பட்டுள்ளன. அவை தனி நபர்களால் வெட்டியெடுக்கப்படுகின்றன. இப் பகுதியில் கிடைக்கும் கனிவளங்கள் மிக சொற்ப அளவில் இருப்பதால், இதை சிக்கனமான முறையில் வெட்டியெடுத்து தொழிற்சாலை அமைக்க இயலாது.

*Sale price of Arasu Cement*

* 73 *Q*.—Thiru N. DENNIS: Will the Hon. the Minister for Industries be pleased to state—

(*a*) whether it is a fact that the sale price of Arasu Cement has gone appreciably high during the years 1970–71–72; and

(*b*) if so, the reasons therefor?

**மாண்புமிகு திரு. செ. மாதவன்:** (அ) ஆம்.

(இ) புதுடில்லியில் உள்ள சிமிட்டி கட்டுப்பாட்டு அதிகாரி 1967-ஆம் ஆண்டு சிமிட்டி கட்டுப்பாட்டு ஆணையின்கீழ் சிமிட்டி விலை, சிப்பச் செலவுகள், ஆயத்தீர்வை ஆகியவற்றைத் திருத்தியமைத்ததே, அரசு சிமிட்டி உட்பட எல்லா ரக சிமிட்டியின் விலை உயர்ந்ததற்குக் காரணமாகும்.

**திரு. ஆர். பொன்னப்ப நாடார்:** தலைவர் அவர்களே, சிமிண்ட் விலையானது 14 ரூபாய் ஒரு மூட்டைக்குக் கேட்டுக் கொண்டிருக்கிறார்கள். இது நிர்ணயித்த விலைக்குக் கூடுதலாக இருக்கிறது. இதைக் கண்காணிக்க அரசாங்கம் என்ன நடவடிக்கைகளை மேற்கொண்டிருக்கிறார்கள்?

**மாண்புமிகு திரு. செ. மாதவன்:** சிமிண்ட் விலையை மத்திய அரசாங்கத்தான் நிர்ணயிக்கிறது. மூன்று மாதத்திற்கு ஒரு முறை சிமிண்ட் விலை, பேக்கிங் சார்சஸ், எக்ஸைஸ் வரி இவற்றையெல்லாம் கணக்கிலெடுத்துக் கொண்டு நிர்ணயிருக்கிறார்கள். 31—12—1972 வரை ஒரு டன் 21277 ரூபாய் என்று நிர்ணயித்திருக்கிறார்கள். இதை மீறி யாராவது விற்றார்கள் என்று தகவல் கொடுத்தால் நடவடிக்கை எடுக்கலாம்.





Thiru B. VENKATASAMI: Contractors are finding it difficult so as to carry on their work because of increase in cement rate. May I know from the Hon. Chief Minister whether they are going to enhance the rate for contractors in the National Highways and Public Works Departments?

**மாண்புமிகு திரு. செ. மாதவன்:** இது பொதுப்பணித் துறையிலே கேட்கப் படவேண்டும்.

**திரு. கே. எ. வகாப்:** தலைவர் அவர்களே, சிமிண்ட் விலை அதிகமாக உண்மையிலேயே வெளிமார்க்கட்டிலே, கள்ளமார்க்கட்டிலே விற்கப்படுகிறது. அதை அரசு கண்காணிக்கவேண்டும். மின்சாரப் பற்றுக்குறை இருப்பதன் காரணமாக இப்படியிருப்பதாகச் சொல்லப்படுகிறது. இந்த நிலையில் வெளி மாநிலங்களிலிருந்து சிமிண்ட் வரவழைத்து நியாயமான விலையில் கொடுக்க அரசாங்கம் முன்வருமா?

**மாண்புமிகு திரு. செ. மாதவன்:** சிமிண்ட்டை பொறுத்தவரையில் நாம் தான் அதிகமாக உற்பத்திசெய்கிறோம். வட மாநிலங்களுக்கு நாம் கொடுக்கவேண்டுமா என்பதுதான் இப்பொழுது கேள்வி. மாண்புமிகு உறுப்பி னர் அவர்கள் சொன்னதைப்போன்று இடைக்கால சங்கடங்கள் ஏற்பட்டு இருக் கின்றன. விலை கூட விற்கிறார்கள் என்று தகவல்கள் தந்தால் அதைப்பற்றி மத்திய அரசாங்கத்திற்கு நாம் தெரிவிக்கலாம்.

**திருமதி ஜோதி வெங்கடாசலம்:** தலைவர் அவர்களே, சிமிண்ட் விலை கூட்டி விற்கிறார்கள் அது மட்டுமல்ல, கலப்படம் செய்கிறார்களே, அதைத் தடுப்பதற்கு அரசு என்ன நடவடிக்கை எடுக்கப்போகிறார்கள் என்பதை அறிய விரும்பு கிறேன்.

**மாண்புமிகு திரு. செ. மாதவன்:** அப்படித் தகவல் என்னிடத்தில் இல்லை. இருப்பதாகத் தெரிவித்தால் நடவடிக்கை எடுக்கத் தயங்கமாட்டோம்.

**அரக்கோணம் நிலவள வங்கி.**

* 74 வினா—திரு. எ. வகாப்: மாண்புமிகு கூட்டுறவுத் துறை அமைச்சர் தயவுசெய்து கீழ்க்கண்ட வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) அரக்கோணத்தில் உள்ள கூட்டுறவு நிலவள வங்கியின் நிர்வாக சபை கலைக்கப்பட்டுள்ளதா?

(இ) ஆம் எனில், அதன் காரணம் என்ன?

**மாண்புமிகு திரு. சி. பா. ஆதித்தனார்:** (அ) ஆம்.

(இ) நிர்வாகம் செவ்வனே நடைபெறவில்லை என்பது காரணம்.

திரு. கே. எ. வகாப் : தலைவர் அவர்களே, இப்படி பொதுவாக நிர்வாகம் சரியாக நடக்காத வங்கிகளையும் ஓவர்டியூ இருக்கிற வங்கிகளையும் கலைக்கிருர்கள் என்று சொல்லப்படுகிறது. நிர்வாகம் சரியில்லாத வங்கிகளில் வேறு நிர்வாகம் அமைக்க ஏற்பாடு செய்யப்படுகிறதா என்பதை அறிய விரும்புகிறேன்.

மாண்புமிகு திரு. சி. பா. ஆதித்தனுர் : நிர்வாகம் சரியில்லாத காரணத்திஞல் 3—7—1971 அன்று கலைக்கப்பட்டு தனி அதிகாரி நியமிக்கப்பட்டார். தனி அதிகாரி நியமிக்கப்பட்டது தொடங்கி அவ்வங்கி சற்றுச் சீராக நடைபெற்று வருகிறது. அதற்கு நான்காண்டுகளுக்குள்ளாக மறு தேர்தல் நடத்தி மறுபடியும் நிர்வாக கமிட்டி அமைக்கப்படும்.

திருமதி த. ந. அனந்தநாயகி : நிர்வாகம் சரியில்லை என்ருல், சில வங்கிகளுக்கு உங்கள் ஆபீசர்களைக் கொடுத்து வசூல் செய்கிறீர்கள். அப்படி இதற்குக் கொடுக்கப்பட்டதா ? மறு தேர்தல் நடத்த நான்கு ஆண்டுகள் ஆகும் என்று சொன்னுர்கள். நான்காண்டுக் காலம் ஏன் ஆகும் என்பதையும் சொல்வார்களா ?

மாண்புமிகு திரு. சி. பா. ஆதித்தனுர் : தலைவர் அவர்களே, இது தனியாக மானேஜர் போட்டு நிர்வாகக் கமிட்டியை அப்படி வைத்துக் கொண்டு நடத்தப்படுகிற வங்கியாக இல்லை. நிர்வாகம் சரியில்லை. அதனுல்தான் கலைக்கப்பட்டு தனி அதிகாரி பொறுப்பில் நடைபெற்று வருகிறது. நான்கு வருடங்கள் ஏன் என்று கேட்டார்கள். சட்டத்திலே 72-வது விதியைத் திருப்பிப் பார்த்தால் தெரியும், நான்கு வருடம் என்று இருக்கிறது.

THIRUMATHI T. N. ANANDANAYAKI : That is the maximum period allowed. He can still form the Board earlier within that period. Will the Government take steps to do that?

மாண்புமிகு திரு. சி. பா. ஆதித்தனுர் : நான்கு வருடத்திற்கு உள்ளாகச் சீரடைந்துவிட்டால் அதற்குள்ளேயே செய்யலாம்.

திரு. நா. வீராசாமி : நிர்வாகம் சரியில்லை என்று சொன்னுர்கள். நிர்வாகம் சரியில்லை, தவறுகள் நடந்தன என்று. பத்திரிகையிலேயெல்லாம் செய்திகள் வந்தன. என்ன என்ன தவறுகள் நடந்தன, யார் யார் தவறு செய்தார்கள். ஏதாவது கிரிமினல் வழக்குப் போடப்பட்டு இருக்கிறதா ? இல்லையென்ருல் போடப்படுமா ?



கிரிமினல் வழக்கு போடப்பட
மாண்புமிகு திரு. சி. பா. ஆதித்தனுர் : ... நடைபெற்றுயில்லை. 1965-வது வருடத்திலிருந்து தொடர்ந்து நஷ்டத்திலே நடைபெறுகிறது என்பதே தவறு வருகிறது. தொடர்ந்து நஷ்டத்திலே நடைபெறுகிறது ... நீக்கப்படவில்லை. தான். தணிக்கை அதிகாரிகள் சுட்டிக்காட்டிய தவறுகள் ... ரிசர்வ் பாங்கி விதியை தலைவர் தவறிய கடன் 15% க்கு மீறக்கூடாது என்ற ... மீறினுர்கள்.

## *Thanjavur District Co-operative Central Bank*

* 75 Q.—THIRU K. T. K. THANGAMANI : Will the Hon. the Minister for Co-operation be pleased to state—

(a) whether it is a fact that there are charges against the Chairman of the Thanjavur District Central Co-operative Bank ; and

(b) if so, the action taken thereon?

மாண்புமிகு திரு. சி. பா. ஆதித்தனுர் : (அ) ஆம் .

(இ) மேல் நடவடிக்கை எடுக்கப் படுவதற்குக் காவல் துறையிடம் ஒப்படைக்கப்பட்டுள்ளது.

திரு. கே. டி. கே. தங்கமணி : இந்தத் தஞ்சை மாவட்ட மத்திய கூட்டுறவு வங்கியிலே குறைவான தொகை 2 லட்சம் ரூபாய் என்று சொல்கிருர்களே, இம் மாதிரி மற்ற வங்கிகளில் ஏற்படாமல் இருக்க என்ன நடவடிக்கை எடுக்கப் பட்டிருக்கிறது ?

மாண்புமிகு திரு. சி. பா. ஆதித்தனுர் : கையாடல் செய்யப்பட்டு வராமல் இருப்பது சுமார் 2 லட்சம் அல்ல, 2 லட்சத்து 4 ஆயிரம் ரூபாய் மத்திய வங்கி ... கொடுத்ததாகக் கணக்கு எழுதப்பட்டிருந்து, கிராம நாணய சங்கத்திற்குக் ... 50 ஆயிரம் ரூபாய் திரும்பப் பெறப்பட்டிருக்கிறது. அதில் ஏறத்தாழ 1 லட்சத்து 50 ஆயிரம் ரூபாய் பாக்கியிருக்கிறது. ஏறத்தாழ இன்னும் 50 ஆயிரம் ரூபாய் ... இப்படிப்பட்ட தவறுகள் நடைபெருமல் இருப்பதற்காக வங்கிகளின் விதிகள் திருத்தப்பட இருக்கின்றன.

திரு. ஆர். பொன்னப்ப நாடார் : இந்த வங்கியிலே சேர்மன் மீது தான் குற்றச்சாட்டு உள்ளதா ? அல்லது ஊழியர்கள் மீதும் குற்றச்சாட்டுகள் உள்ளதா ? விசாரணை எந்த நிலைமையில் இருக்கிறது என்பதை அமைச்சர் அவர்கள் தெரிவிப்பார்களா ?

மாண்புமிகு திரு. சி. பா. ஆதித்தனுர் : சேர்மன் மட்டுமல்ல அதற்குப் பொறுப்பு. ஆறு பேர்கள் கைது செய்யப்பட்டுள்ளார்கள், இதைபொட்டி,

மாணிக்கவாசகம், கண்ணையன், ரிஷபதாஸ், சந்தானராமன், மோசஸ், ராஜ் தாஸ் ஆகியவர்கள். அதிலே இப்பொழுதிருக்கும் விதிகளின்படி அதிலேயிருக்கும் செக்ரட்டரியாக இருப்பவர் மீது குற்றம் சொல்வதற்கில்லை. ஆனால் சூப்பர்வைசரெல்லாம் அகப்பட்டுக்கொண்டு இருக்கிறார்கள். அவர்கள்மீது ஒழுங்கான முறையில் நடவடிக்கை எடுக்கப்பட்டு வருகிறது.

**திரு. ஆர். பொன்னப்ப நாடார்:** தலைவரவர்களே, யாராவது பதவிநீக்கம் செய்யப்பட்டிருக்கிறார்களா, யாராவது சஸ்பென்ஷன் செய்யப்பட்டிருக்கிறார்களா? யாராவது இன்னும் கைது செய்யப்படாமல் ஒளிந்து கொண்டிருக்றார்களா?. என்று அறிய விரும்புகிறேன்.

**மாண்புமிகு திரு. சி. பா. ஆதித்தனார்:** தலைவரவர்களே, சம்பந்தப்பட்ட அதிகாரிகள் கந்தர்வகோட்டை யூனியன் மேனேஜர், சூப்பர்வைசர், அதிலே ஒருவர் சீனியர் சூப்பர்வைசர், ஒருவர் ஜூனியர் சூப்பர்வைசர், இன்னொருவர் மத்திய வங்கியின் பிராஞ்ச் மானேஜர், கைது செய்யப்பட்டது மட்டுமல்லாமல், வேலை நீக்கமும் செய்யப்பட்டிருக்கிறார்கள்.

**திருமதி த. ந. அனந்தநாயகி:** திருவாரூர் கூட்டுறவு வங்கியின்மீது பல குற்றச்சாட்டுகள் சொல்லப்பட்டிருக்கின்றன. அங்கு என்ன நடவடிக்கை எடுத்தார்கள்? இங்கே ஏன் இவ்வளவு துரிதமாக எடுக்க வேண்டும்? இதில் ஏதேனும் வித்தியாசம் உண்டா?

**மாண்புமிகு திரு. சி. பா. ஆதித்தனார்:** தலைவரவர்களே, திருவாரூரில் மத்திய வங்கி இல்லை. கூட்டுறவு வங்கிகளில் பல இருக்கின்றன. கூட்டுறவு வங்கிகளில் எட்டு வகை உண்டு. இதில் மத்திய வங்கியும் ஒன்று. திருவாரூரில் இருப்பது அர்பன் பாங்க். அது தன் காலில் நிற்பது. அதற்கு அரச கடன் உதவியோ, பங்கு உதவியோ செய்யவில்லை. ஆனால் அவைகளையும் கண்காணிக்கின்ற பொறுப்பு அரசுக்கு இருக்கிறது

**திருமதி ஜோதி வெங்கடாசலம்:** தலைவரவர்களே, இந்தக் கூட்டுறவு வங்கியிலே தவறு செய்தவர்கள் பற்றிய சில 'ஃபைல்கள்' காணமல் போனது என்று தெரிகிறது. அது உண்மையா?

**மாண்புமிகு திரு. சி. பா. ஆதித்தனார்:** தலைவரவர்களே, எந்த பைல் காணமல் போனது?' இப்படிப்பட்ட புகார்களை ஆதாரமில்லாமல் சொல்வதை நீங்கள் அனுமதிக்கக்கூடாது. பைல்கள், அரசின் கைவசமிருக்கும் பைல்களில் எந்த பைலும் காணமல் போனது என்று சொல்ல முடியாது.



**திருமதி ஜோதி வெங்கடாசலம்:** தலைவர் அவர்களே, கனம் அமைச்சரவர்களுக்கு இவ்வளவு கோபம் வரவேண்டிய அவசியம் இல்லை. நான் அரசின் பைல்கள் என்று சொல்லவில்லை. சம்பந்தப்பட்ட கூட்டுறவு வங்கியில் பைல்கள் காணமல்போனது உண்மையா என்று கேட்டேனே தவிர, அரசினுடைய பைல் காணமல் போனதா, காணமல் போகவில்லையா என்பதைப்பற்றிக் கவலையில்லை.

**மாண்புமிகு திரு. சி. பா. ஆதித்தனார்:** போலீசிலிருந்து இதுவரையில் எந்த பைலும் காணமல் போனதாகத் தகவல் வரவில்லை.

THIRU K. S. KOTHANDARAMIAH : Sir, the rules and regulations of these societies have been revised and revised since last 50 years, but yet the corruption as also mis-appropriation is rampant. May I know from the Hon. Minister if he will take drastic steps to eradicate the fundamental mistakes and prevent such things happening and take measures to rectify them?

THE HON. THIRU SI. PA. ADITANAR: Sir, the fundamental reasons are analysed and remedial measures are taken. If the hon. Member would wait for one or two weeks, the details of the changes which are being proposed will be known.

**திரு. அ. பரந்தாமன்:** தலைவரவர்களே, ஐந்தாண்டுகளுக்கு முன்னால் பலர்மீது குற்றஞ்சாட்டப்பட்டு இதுபோன்ற தவறுகள் செய்தார்கள் என்பதால் வழக்குகள் பதிவாகியிருக்கின்றன. அந்த வழக்குகளைத் தொடர்ந்து நமது அரசு விசாரணை செய்யுமா என்று அறிவதோடு, உதாரணத்திற்கு.....

**மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர்:** உதாரணம் சொல்ல வேண்டாம். கேள்வியைக் கேளுங்கள்.

**திரு. அ. பரந்தாமன்:** வடார்க்காடு மாவட்டத்தின் தணிகைப்போளூரில் பழம்பெரும் காங்கிரஸ்காரரான சிந்தலநாயுடு என்பவர் ஏறத்தாழ இரண்டு இலட்சம் ரூபாய் மோசடி செய்தார் என்பதற்காக வழக்கு பதிவாகியிருக்கிறதா? அதைப்பற்றித் தொடர்ந்து விசாரணை செய்யுமா என்று அறிய விரும்புகிறேன்.

**மாண்புமிகு திரு. சி. பா. ஆதித்தனார்:** தலைவரவர்களே, ஏறத்தாழ 350 பேர்கள்மீது போலீசார் தொடர்ந்த வழக்குகள் பல நிலைமைகளில், பல கட்டங்களில் இருக்கின்றன. சில விசாரணையில் இருக்கின்றன, சில வழக்குகள் கோர்ட்டிலே குற்றம் தாக்கல் செய்யப்பட்ட நிலையில் இருக்கின்றன. சில

வழக்குகளில் தீர்ப்பாகி இருக்கின்றன. உறுப்பினரவர்கள் சொல்லுகின்ற இந்தக் குறிப்பிட்ட வழக்கைப்பற்றி என்ன நிலைமை என்பதற்குத் தனியாகக் கேள்வி போட்டால் பதில் சொல்ல முடியும்.

**திரு. இரா. இராமலிங்கம் :** தலைவரவர்களே, இத்தகைய கூட்டுறவு வங்கிகளில் செக்கில் கையெழுத்திடுகின்ற அதிகாரம் தலைவருக்கு இருக்கிறதா அல்லது நிர்வாக அதிகாரிகளுக்கு இருக்கிறதா ?

**மாண்புமிகு திரு. சி. பா. ஆதித்தனர் :** தலைவரவர்களே, இன்றைக்கு செக்கிலே கையெழுத்துப் போட்டு பணம் எடுக்கும் அதிகாரங்கள் துணை விதிகளின்படி, பைலாவின்படி தலைவரிடம் இருக்கிறது. தலைவர்கள்தான் சொத்துக்களுக்கு, பணத்திற்குப் பொறுப்பு என்று இருக்கிறது. ஆனால் சில தலைவர்கள் தாங்களாகவே முன்வந்து இந்த அதிகாரத்தை, செக்கிலே கையெழுத்திடும் அதிகாரத்தைத் தாங்கள் வைத்துக்கொண்டிருப்பதால் பல குற்றச்சாட்டுகளும் அனாவசியமாக வருகின்றது என்று கருதி செக்கிலே கையெழுத்துப் போடும் அந்த அதிகாரத்தை செயலாளரிடம் கொடுத்துத் திருக்கிறார்கள்.

### உணவுப் பொருள் வழங்குதுறை பணியாளர்கள்

*** 76. வினா—திரு. க. சுப்பு :** மாண்புமிகு உணவுத்துறை அமைச்சர் தயவு செய்து கீழ்க்கண்ட வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) உணவுப் பொருள் வழங்கு துறையில் 1964-ம் ஆண்டு முதல் தற்காலிகமாகப் பணிக்கு நியமிக்கப்பட்டவர்களின் பணி இதுவரை முறைப் படுத்தப்படவில்லை என்பது உண்மையா ?

(இ) ஆமெனில், அதற்கான காரணங்கள் யாவை ?

**மாண்புமிகு திரு. மன்னை ப. நாராயணசாமி :** (அ) & (இ) உணவுப் பொருள் வழங்கு ஆணையில் உள்ள பதவிகளுக்குப் பணிவிதிகள் எதுவுமில்லை. பணி நிலைமைகள் உணவுத்துறையின் 16—4—1947 நாளிட்ட 449-ம் எண் அரசு ஆணையில் பிறப்பிக்கப்பட்ட நிர்வாகக் கட்டளைகளினால் முறைப்படுத்தப்படுகின்றன. இத்துறையில் தற்காலிகமாக நியமிக்கப்படுபவர்களின் பணியை முறைப்படுத்துவதென்னும் பிரச்சினைக்கு இடமில்லை.

**திரு. கே. டி. கே. தங்கமணி :** சார், இந்தக் கேள்வி, இதுவரையிலும் அந்த சிவில் சப்ளைஸ் இலாக்காவிலே பணியாற்றும் பல சிப்பந்திகள் 8, 9 வருஷங்களாகியும் ரெகுலரைஸ் செய்யப்படாமல் இருக்கிறார்கள் என்று சொல்லப்படுகிறது, அது உண்மையா ? அப்படியிருந்தால் அவர்கள் எத்தனைபேர் ?



**மாண்புமிகு திரு. மன்னை ப. நாராயணசாமி :** தலைவரவர்களே, கிட்டத்தட்ட 60 சதவிகிதம் பேர் அடுத்த துறையிலிருந்து டெபுடேஷனில் வந்தவர்களாக இருக்கிறார்கள். 40 சதவிகிதத்தினரை நேரிடையாகத் தேர்ந்தெடுக்கப்பட்டிருக்கிறது. அவர்களுக்கு எல்லாச் சலுகைகளும் கொடுக்கப்பட்டிருக்கின்றன என்றாலும் அவர்கள் நிரந்தரமாக்கப்படாமல் இருப்பதற்குக் காரணம் இந்தத் துறையே நிரந்தரமாக இல்லாமல் இருந்ததால் இதுவரையிலே நிரந்தரமாக்க ஏற்பாடு செய்யப்படவில்லை என்றாலும் ஒரு ஆண்டு முடிந்த பிறகு மற்ற அலுவலர்களுக்கு என்னென்ன சலுகைகள் உண்டோ அது அவர்களுக்கும் கொடுக்கப்பட்டிருந்தது. ஆகவே, இந்தச் சர்க்கார் இந்தத் துறையை நிரந்தரமாகப் பண்ணினாலும், பண்ணாவிட்டாலும் இந்த ஊழியர்கள் பல ஆண்டுகள் வேலை செய்ததால் அவர்களை நிரந்தரம் செய்ய வேண்டுமென்ற ஒரு குறிப்பு தயார் செய்து மேலே அனுப்பப்பட்டிருக்கிறது. விரைவிலே அவர்களுக்குச் சாதகமாகும் என்று கருதுகிறோம்.

### *Soap Factories*

* 77 *Q.*—THIRU P. SOUNDARAPANDIAN : Will the Hon. the Minister for Food be pleased to state—

(*a*) whether there is any proposal under the consideration of the Government to establish a Soap Factory in every development block ; and

(*b*) if so, the present stage of the proposal?

**மாண்புமிகு திரு. மன்னை ப. நாராயணசாமி :** (அ) & (இ) வளர்ச்சி வட்டாரம் ஒவ்வொன்றிலும் சோப்பு தயாரிப்புத் தொழிற்சாலை ஒன்றை ஏற்படுத்துவதற்கான செயற்குறிப்பு ஏதும் இல்லை. தற்போது இம்மாநிலத்தில் கதர்-கிராமத் தொழில்கள் வாரியத்தின் கீழ் 29 சோப்பு தயாரிப்புத் தொழிற்சாலைகள் செயல்பட்டு வருகின்றன. இவைகள் மட்டுமின்றி, மேலும் நான்கு சோப்புத் தயாரிப்புத் தொழிற்சாலைகளைத் தொடங்குவதற்கு அனுமதி வழங்கப்பட்டுள்ளது. ஆனால் அவைகள் இன்னும் ஆரம்பிக்கப்படவில்லை. மேலும் 50 சோப்பு தயாரிப்புத் தொழிற்சாலைகளை ஏற்படுத்துவதற்கான செயற்குறிப்பு பரிசீலனையில் உள்ளது. இந்தக் கூடுதல் தொழிற்சாலைகளுக்கு தேவைப்படும் நிதி உதவியைப் பெறுவதற்காக இது குறித்த திட்ட அறிக்கை இந்திய அரசுக்கு அனுப்பப்பட்டுள்ளது. அவர்களின் இசைவு இன்னும் எதிர்பார்க்கப்படுகிறது.

**திருமதி த. ந. அனந்தநாயகி :** சார், கதர்-கிராமக் கைத்தொழிலுக்குக் கொடுக்கப்பட்டிருக்கும் சோப் பேக்டரிகள் எல்லாமே வாஷிங் சோப்பிற்கா மட்டுந்தானா அல்லது பேத்திங் சோப்பிற்கும் திட்டம் இருக்கிறதா ? இன்னும்

பெரிய அளவிலே சோப்புத் தொழிற்சாலையை உற்பத்தி செய்ய மத்திய அரசிடம் திட்டம் கொடுத்திருக்கிறீர்கள், அது எந்த சோப்பிற்கான திட்டம்? கிராமக் கைத்தொழில் அடிப்படையிலா அல்லது பெரிய தொழிற்சாலை அடிப்படையிலா?

**மாண்புமிகு திரு. மன்னை ப. நாராயணசாமி:** தலைவர்களே, 29 சோப்பு தயாரிப்புத் தொழிற்சாலைகள் இதுவரையில் இருக்கின்றன. அதிலே இப்பொழுது 3 புதிதாகத் திட்டமிட்டு துவங்குவதற்கு ஏற்பாடு நடந்து வருகிறது. இன்னும் 50 சோப் கம்பெனிகள் புதிதாக ஏற்படுத்துவதற்குத் திட்டமாகத் தான் இந்திய சர்க்காரிடம் அனுமதி கேட்டிருக்கிறது. அதற்கான ஏற்பாடுகளெல்லாம் நடைமுறையிலே அதற்கு எந்தெந்த அளவிலே இப்பொழுதிருக்கும் அதே தொழிற்சாலையிலேயே 'எக்ஸ்டெண்ட்' பண்ணுவதா? அல்லது புதிதாக வேறிடத்தில் ஆரம்பிப்பதா? எதிலே லாபம் இருக்கும் என்று ஆராய்ச்சி செய்யப்படுகிறது. மேலும் 50 தொழிற்சாலைகளை ஏற்படுத்தி தனியாக வைப்பதா அல்லது இருக்கின்ற ஓர்க்ஷாப்புகளையே விரிவுபடுத்துவதா என்ற திட்டம் பொருளாதாரத் துறையிலே நிபுணர்கள் ஆராய்ந்து வருகிறார்கள். இந்த 29-ம், புதிதாக ஆரம்பிக்கவிருக்கும் 3-ம் துணி துவைக்கின்ற சோப்புக்கு. ஒரேயொரு சோப்பு கம்பெனி, வாசனை சோப்பு கம்பெனி ஒன்று, நம்முடைய வாசனை சோப்பு தயாரிக்கும் தொழிற்சாலை செங்கல்பட்டு மாவட்டத்திலே பூண்டியிலே நிறுவப்பட்டிருக்கிறது.

### நெய்வேலி அனல் மின் நிலையம்

*78 வினா—**திரு. பெ. சௌந்தரபாண்டியன்:** மாண்புமிகு மின்சாரத் துறை அமைச்சர் தயவுசெய்து கீழ்க்கண்ட வினாவுக்கு விடையளிப்பாரா—

நெய்வேலியில் இரண்டாவது சுரங்கம் வெட்டும் திட்டம் தற்போது எந்த நிலையில் உள்ளது?

**மாண்புமிகு திரு. ஓ. பி. இராமன்:** நெய்வேலியில் உள்ள நிலக்கரியைப் பயன்படுத்தி இரண்டாவது அனல் மின்சக்தி நிலையத்தை ஏற்படுத்த நடவடிக்கை எடுக்குமாறும், இதன் இறுதி உற்பத்தித் திறன் 1000 மெகாவாட் ஆக இருக்கலாமென்றும், ஒவ்வொன்றும் 200 மெகாவாட் உற்பத்தித் திறன் கொண்ட ஐந்து நிலையங்கள் நிறுவப்படலாமென்றும் அவற்றில் ஒவ்வொன்றும் 200 மெகாவாட் உற்பத்தித்திறன் கொண்ட இரண்டு நிலையங்கள் முதற்கண் நிறுவப்படலாமென்றும், ஒவ்வொன்றும் 200 மெகாவாட் உற்பத்தித்திறன் கொண்ட எஞ்சிய மூன்று நிலையங்களும் படிப்படியாக நிறுவப்படலாமென்றும் இம்மாநில அரசு 1972 ஜூன் திங்களில் இந்திய அரசுக்குக் கடிதம் எழுதியுள்ளது. இந்திய அரசின் பதில் எதிர்பார்க்கப்படுகிறது.



**திரு. ஆர். பொன்னப்ப நாடார்:** இந்த செகண்ட் மைன் கட் எப்போது ஆரம்பமாகும் என்று திட்டவட்டமாக மத்திய அரசாங்கம் கடிதம் மூலம் தெரிவித்திருக்கிறதா? விவரங்களை அமைச்சர் அவர்கள் கூறுவார்களா?

**மாண்புமிகு திரு. ஓ. பி. இராமன்:** கடிதம் மூலம் பதில் வரவில்லை. மாண்புமிகு தொழிலமைச்சர் அவர்கள் கூறியதுபோல் பரிசீலிப்பதாகச் சொல்லியிருக்கிறார்கள்.

**திரு. வா. மை. அப்துல் ஜப்பார்:** தற்போதுள்ள சுரங்கத்தில் மழைக் காலத்தில் அதிகமாக ஊறும் நீரை வெளியேற்ற தற்போதுள்ள நீரேற்று அமைப்புகள் போதுமானதாக இல்லை என்ற காரணத்தால் எடுக்கப்படும் நிலக்கரியின் அளவு குறைந்து மின்சார உற்பத்தி பாதிக்கப்படுகிறது என்பது உண்மையா? இதைப் போக்க அதிகமான நீரேற்று விசைகளை அமைக்க மத்திய அரசை இந்த அரசு வற்புறுத்துமா?

**மாண்புமிகு திரு. ஓ. பி. இராமன்:** இந்த ஆண்டில் எதிர்பாராது கனத்த மழை பெய்த காரணத்தால் தண்ணீர் சுரங்கத்தில் இறங்கிவிட்டது. அதனால் சற்றுக் காலதாமதம் ஏற்பட்டது என்பது உண்மையே. போதுமான அளவுக்கு தண்ணீரை இறைப்பதற்கான இயந்திரங்களை ஏற்கனவே வைத்திருக்கிறார்கள்.

DR. H. V. HANDE : May I know whether the present quantity of lignite that is being produced in Neyveli is sufficient for the amount of electricity that was originally ear-marked? May I know whether it is sufficient? In case, it is not so, how much it is deficient, what is the difference between the actual production and what has been targetted? How much is the actual difference?

**மாண்புமிகு திரு. ஓ. பி. இராமன்:** எவ்வளவு நிலக்கரி என்ற குறிப்பு இல்லை. 600 மெகாவாட் உற்பத்தி செய்ய வேண்டியதிருக்க 250 மெகாவாட் அளவுக்கு உற்பத்தி செய்வதற்குத்தான் நிலக்கரி கிடைக்கிறது.

**மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர்:** நேற்றும் முன்தினமும் இதைப் பற்றி விரிவாக விவாதித்தாகி விட்டது. நேற்று 1½ மணி நேரத்திற்கு மேல் விவாதம் சென்றது.

THIRU M. A. LATHEEF : From the answer of the Hon. Minister we know that the request has already been sent to Central Government about the essentiality of starting the second

mine cut in Neyveli project. I would like to know from the Hon. Minister what is the date on which such request was sent to the Central Government? If the Central Government has not so far sent any reply to the request of the State Government, what is the safety method that is being adopted by the State Government to expedite the matter to prevail upon the Central Government about the essentiality of starting the same as soon as possible?

**மாண்புமிகு திரு. ஓ. பி. இராமன் :** எப்போது என்ற விவரம் இல்லை. பலமுறை எழுதப்பட்டிருக்கிறது. தனியாகக் கேள்வி போட்டால் எந்தெந்தத் தேதிகளில் கடிதம் எழுதப்பட்டிருக்கிறது என்ற விவரத்தைச் சொல்ல முடியும். மாண்புமிகு முதலமைச்சர் அவர்கள் ஒவ்வொரு முறையும் டில்லிக்குச் செல்லும்போது இதைப்பற்றி எடுத்துச் சொல்லி வருகிறார்கள்.

### சிமிட்டி கற்கலவைத் தூண்கள் தயாரிப்பு

* 79 **வினா—திரு. கே. ஏ. வகாப் :** மாண்புமிகு மின்சாரத் துறை அமைச்சர் தயவுசெய்து கீழ்க்கண்ட வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) மின்சாரத் துறைக்கு வேண்டிய கான்கிரீட் கம்பங்கள் மின்சாரத் துறையிலேயே உற்பத்தி செய்யப்படுகிறதா?

(இ) ஆம் எனில், ஓராண்டிற்கு அது உற்பத்தி செய்யும் கம்பங்கள் எத்தனை?

**மாண்புமிகு திரு. ஓ. பி. இராமன் :** (அ) ஆம்.

(இ) 1971-72 முடிய கடந்த 5 ஆண்டுகளில் ஆண்டொன்றுக்கு துறையின் வார்ப்படக்கூடங்களில் கீழ்க்கண்ட சிமண்ட் கற்கலவைத் தூண்கள் தயாரிக்கப் பட்டுள்ளன.

1967–68—1,88,624.

1968–69—2,08,881.

1969–70—2,10,185.

1970–71—2,68,635.

1971–72—3,51,028.

**திரு. நா. வீராசாமி :** நம்முடைய அரசு இந்த ஆண்டுக்குள்ளாக தமிழகம் எங்கும் மின்சாரத்தை விஸ்தரிக்க வேண்டுமென்ற திட்டத்தை வைத்திருக்கும் நேரத்தில் மின்சார இலாகா இன்னும் நிறைய இப்படிப்பட்ட கம்பங்களைத் தயாரிக்க வேண்டிய நிலையில் அந்த இலாகாவுக்கு கம்பிகள் கிடைக்காத



காரணத்தால் அந்தப் பணியின் வேகம் குறைவாக இருக்கிறது. ஆகவே, மத்திய அரசாங்கத்திடம் எடுத்துக்கூறி கம்பிகள் தேவையான அளவு கிடைப்பதற்கு நடவடிக்கை எடுப்பார்களா?

**மாண்புமிகு திரு. ஓ. பி. இராமன் :** இதற்காக அதிகமான இரும்பு ஒதுக்க வேண்டுமென்று அரசின் மூலம் கேட்கப்பட்டிருக்கிறது.

**திரு. சோ. அழகர்சாமி :** இந்த மின்சாரத் துறைக்குத் தேவையான கான்கிரீட் கம்பங்களை துறையே உற்பத்தி செய்வதாகச் சொன்னார்கள். அதுவே போதுமானதாக இருக்கிறதா அல்லது வெளியே காண்டிராக்டர்களிடமிருந்தும் வாங்கப்படுகிறதா? அப்படி வெளியே வாங்கப்படுவதாக இருந்தால் எத்தனை சதவிகிதம் வாங்கப்படுகிறது?

**மாண்புமிகு திரு. ஓ. பி. இராமன் :** துறை உற்பத்தி செய்வது போதாமல் டெண்டர் மூலம் வெளியாருக்கும் விடப்பட்டது. முதலில் 3,08,095 கம்பங்களைத் தயாரிக்கவும், அடுத்து 1,08,000 கம்பங்களைத் தயாரிக்கவும் தனியார் துறைக்கு விடப்பட்டது. இரும்பு விலை அதிகமான காரணத்தால் அவர்கள் தொகையை ஏற்றித் தர வேண்டுமென்று சொன்னார்கள். அதை போர்டு ஏற்றுக் கொள்ளாமல் இப்போது வாரியமே வேண்டிய கம்பங்களைத் தயாரிக்க ஏற்பாடு நடைபெற்று வருகிறது.

**திரு. வா. மை. அப்துல் ஜப்பார் :** நாட்டில் இன்னும் சில பகுதிகளில் கான்க்ரீட் கம்பங்களுக்குப் பதிலாக சவுக்கு மரக் கம்பங்கள் நடப்பெற்றுள்ளன. பத்தாண்டுக் காலத்தில் அவை இற்று விழக்கூடிய அபாயம் இருக்கின்ற காரணத்தால் எல்லா இடங்களிலும் கான்கிரிட் கம்பங்களை மட்டும்தான் பயன்படுத்த வேண்டுமென்று உத்தரவிட்டு அதற்குத் தக்க ஏற்பாடு செய்ய முன்வருவார்களா?

**மாண்புமிகு திரு. ஓ. பி. இராமன் :** இப்போது மரக் கம்பங்களை நடுவது கிடையாது. முன்னால் நடப்பெற்ற மரக் கம்பங்கள் பழுதடைந்து விட்டிருக்குமானால் அவற்றுக்குப் பதிலாக கான்கிரீட் கம்பங்கள் நடப்படுகின்றன.

**திருமதி த. ந. அனந்தநாயகி :** அமைச்சர் அவர்கள் பதிலிலிருந்து பாதிக்குப் பாதி கம்பங்கள் போதவில்லை என்பது புரிகிறது. இன்னும் மூன்று லட்சம் கம்பங்களைத் தயாரிப்பதற்கு திட்டம் தீட்டப்பட்டிருக்கிறது. ஆனால் இதிலே காலதாமதம் ஏற்படுகின்ற காரணத்தால் ஆங்காங்கே கம்பங்கள் விழுந்து விடும் அளவுக்கு மோசமான நிலைமை ஏற்பட்டுக் கொண்டிருக்கிறது. ஆகவே, இதற்காக துரிதத் திட்டத்தை மேற்கொள்ள முன்வருமா?

**மாண்புமிகு திரு. ஓ. பி. இராமன் :** பாதிக்குப் பாதி போதவில்லை என்று சொல்லவில்லை. கான்கிரீட் கம்பங்களைத் தயாரிக்க ஒப்பந்தக்காரர்கள் முன் வராத காரணத்தால் போர்டே அந்தக் கம்பங்களைத் தயாரிக்கும் முயற்சியில் ஈடுபட்டிருக்கிறது. தயாரிக்கும் ஏற்பாடுகள் ஓரளவு முடிந்து போதுமான அளவு உற்பத்தியும் செய்திருக்கிறார்கள்.

### வனத்துறை நிலங்களில் பருப்புவகை பயிரிடுதல்

* 80 வினா—**திரு. பெ. சௌந்தரபாண்டியன் :** மாண்புமிகு மின்சாரத் துறை அமைச்சர் தயவுசெய்து கீழ்க்கண்ட வினாக்களுக்கு விடையளிப் பாரா—

(அ) தஞ்சை மாவட்டத்திலுள்ள வனத்துறை நிலங்களில் துவரை, கொள்ளு பயிரிடும் திட்டம் ஏதேனும் அரசின் பரிசீலனையில் உள்ளதா?

(இ) ஆம் எனில், எத்தனை ஏக்கர் நிலங்களில் பயிரிடத் திட்டமிடப் பட்டுள்ளது?

**மாண்புமிகு திரு. ஓ. பி. இராமன் :** (அ) தஞ்சாவூர் மாவட்டத்தில் வனத் துறையின் முந்திரித் தோட்டங்களின் இடைவெளியில் துவரை, கொள்ளு ஆகிய பருப்பு வகைகளைப் பயிரிட உத்தேசிக்கப்பட்டுள்ளது.

(இ) 1972-73-ம் ஆண்டு சுமார் 200 ஏக்கர்களில் முந்திரி தோட்டங்களின் இடைவெளியில் துவரை, கொள்ளு முதலியன பயிரிடப்படும்.

**மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர் :** வினாக்கள்-விடைகள் முடிவுற்றன.

[குறிப்பு—ஓர் உரையின் தொடக்கத்தில் வெள்ளிக்குறி (*) இடப்பட்டிருந் தால் அவ்வுரை உறுப்பினரால் சரிபார்க்கப்பட்டது என்பதைக் குறிக்கும்].

### 2. ஒத்திவைப்புத் தீர்மானம்

### சென்னை விம்கோ தீப்பெட்டித் தொழிற்சாலை மூடப்பட்டதும், தொழிலாளரின் அல்லலும்

**மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர் :** பேரவை விதி 42-இன் கீழ் திரு. என். கே. பழனிசாமி அவர்கள் கீழ்க்கண்ட ஒத்திவைப்புத் தீர்மானத்தைக் கொண்டு வந்திருக்கிறார்கள்—

"the serious situation caused by the inaction of the Government in the WIMCO Match Factory, Madras and failure of the Government to arrange to lift the lock-out causing undue hardship to thousands of workers".



இது எப்படி ஒத்திவைப்புத் தீர்மானமாக வரும் என்பதை மட்டும் விளக்க வேண்டுகிறேன்.

**திரு. என். கே. பழனிசாமி :** துணைத் தலைவர் அவர்களே, இந்த விம்கோ மாச் பாக்டரியில் இரண்டாயிரத்திற்கும் அதிகமான தொழிலாளர்கள் வேலை செய்கிறார்கள். நல்ல முறையில் உற்பத்தி செய்கிறார்கள். ஆனால் அங்கிருக்கும் மானேஜ்மென்டார் அடிக்கடி அவர்களைத் தொந்தரவு செய்து இந்தமாதிரி வேலை நிறுத்தத்திற்கு நிர்ப்பந்தமான நிலைமைகளுக்குக் கொண்டு வந்த காரணத்தால் மாதங்களாக அது மூடப்பட்டிருக்கிறது. சர்க்கார் தலையிட்டு சமாச ஏற்பாடு செய்து அந்தத் தொழிற்சாலையைத் திறப்பதற்கான ஏற்பாடு களைச் செய்ய வேண்டுமென்று கேட்டுக்கொள்கிறேன்.

* **மாண்புமிகு திரு. என். வி. நடராசன் :** தலைவர் அவர்களே, திருவொற்றி யூர் விம்கோ தொழிற்சாலையில் சுமார் 1,700 தொழிலாளர்கள் பணியாற்று கிறார்கள். ஊதிய உயர்வு, அகவிலைப் படி உயர்வு, பிற படிகள், போனஸ் திட்டம், தொழிலாளர் சங்கக் கட்டடத்திற்கு 50,000 ரூபாய் மானியம் அளிக்க வேண்டுமென்ற கோரிக்கை உள்ளிட்ட பல கோரிக்கைகளுக்கு ஆதரவாக வேலைநிறுத்த அறிவிப்பு ஒன்றை 19—10—1972 அன்று விம்கோ தொழிலாளர் சங்கம் கொடுத்தது. சங்க அறிவிப்பின்படி 4—11—1972-க்குப் பிறகு வேலை நிறுத்தம் நடைபெறுவதாக இருந்தது. ஆனால் 4—10—1972-ல் தீப்பெட்டி லேபிள் ஒட்டும் பிரிவு வேலை நிறுத்தத்தில் ஈடுபட்டது. ஒரே டிபார்ட்மெண்டில் உள்ள இரண்டு இயந்திரங்களை இயக்குவதில் ஏற்பட்ட தகராறின் காரணமாக அந்த வேலைநிறுத்தம் நடைபெற்றது. இதைத் தொடர்ந்து பணி நிறுத்தப் பட்டதன் காரணமாக மற்றத் தொழிலாளர்களுக்கும் வேலையின்றி 'லே ஆப்' செய்யப்பட்டது. 14—11—1972 முதல் வேலை நிறுத்தமாக ஆரம்பித்தனர், சங்கத்தின் கோரிக்கைகளும், ஏற்கெனவே ஏற்பட்ட உடன்பாடுகளைச் செயல் படுத்த சங்கம் தவறிவிட்டது என்ற நிர்வாகத்தின் முறையீடும் அடங்கிய முழுப் பிரச்சினையும் வேலை நிறுத்தம் தொடருவதற்கு முன்னாலேயே சென்னை தொழிலாளர் நல அதிகாரி அவர்களின் விசாரணைக்கு அனுப்பப்பட்டது. அவருடைய யோசனையை அவர்கள் ஏற்றுக்கொள்ள மறுத்தார்கள். அதற்குப் பிறகு தொழிலாளர் நல ஆணையாளருக்கு இது விசாரணைக்கு அனுப்பப் பட்டது. அவர் சொன்ன யோசனையையும் தொழிலாளர்கள் ஏற்றுக்கொள்ள வில்லை. இதிலுள்ள முக்கிய விஷயம்—தொழிற்சங்கமோ அல்லது தொழில் நிர்வாகிகளோ எங்களிடத்தில் அதிகாரபூர்வமாக இதுவரை அணுகவில்லை என் பதைத் தெரிவித்துக்கொள்கிறேன். சில தொழிலாளர்கள் திருவொற்றியூர் சட்டமன்ற உறுப்பினர் திரு. நாராயணசாமி அவர்களை அழைத்து வந்து விவரங்களைக் கூறினார்கள். அதற்குப் பிறகு லேபர் கமிஷனர் மூலமாக விசாரணை நடைபெற்று வருகிறது.

விசாரணை நிர்ந்தவுடன் இதில் மேற்கொண்டு நடவடிக்கை எடுக்கப்படும் என்று தெரிவித்துக் கொள்கிறேன். ஆகவே, பேரவை நிகழ்ச்சிகளை ஒத்திவைத்து இதை விவாதிக்க வேண்டிய அவசியமில்லை என்று தெரிவித்துக்கொள்கிறேன்.

மு. ப. 10-00 **மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர்:** அமைச்சர் அவர்களின் விளக்கத்திற்குப் பிறகு இந்த ஒத்திவைப்புத் தீர்மானத்திற்கு அவசியம் இல்லையென்று கருதி இதற்கான அனுமதி மறுக்கப்படுகிறது.

### 3. அறிக்கை அளித்தல்

### வேளாண்மைத் துறை பற்றிய அறிக்கையில் அடங்கியுள்ள பரிந்துரைகளின் பேரில் அரசு எடுத்த நடவடிக்கைகள் மீதான மதிப்பீட்டுக் குழுவின் அறிக்கை.

THIRU PALANIVEL RAJAN : Sir, I rise to present the Report of the Committee on Estimates on the action taken by the Government on the recommendations of the Committee contained in the report on Agriculture Department.

### 4. ஆளுநர் பேருரைக்கு நன்றி கூறும் தீர்மானத்தின் மீது விவாதம் (தொடர்ச்சி)

**மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர்:** அடுத்து, ஆளுநர் பேருரைக்கு நன்றி கூறும் தீர்மானத்தின் மீது விவாதம் தொடங்கும். திரு. காவேரிமணியம் அவர்கள், அவர்களது பேச்சைத் தொடருவார்கள். உறுப்பினர்கள் ஏழு நிமிடங்களில் முடித்துக்கொள்ளும்படி க் கேட்டுக்கொள்கிறேன்.

### 5. அரை மணி நேர விவாதம் அனுமதிப்பது குறித்து.

THIRU K. T. K. THANGAMANI : Sir, yesterday when a question was asked, I also said that the question may be referred, under Rule 40 of our Assembly Rules, for a half-hour discussion. The rule says that it has to be raised in the House and then the Deputy Speaker should give his ruling. I raised it, but I do not know if it was recorded. Now, I want to raise it and I make a formal request that a half-hour discussion may be allowed under Rule 40 on that question.

**மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர்:** நேற்றே சொல்லியிருக்கலாம். கவர்னர் அவர்களது உரைமீது விரிவாகப் பேசலாமே.



THIRU K. T. K. THANGAMANI : There is a specific provision in the Rules that if a particular question has not been fully answered or if the Deputy Speaker thinks that fuller information has to come, a half-hour discussion will arise and whoever raises it can make a statement and the Hon. Minister concerned will reply and those who want to speak should inform the Deputy Speaker in advance. There will be no voting. In that way on a particular subject, half-hour discussion is set apart. That procedure I thought can be invoked in the light of the importance of the question. That question pertained to opening of Fair-price shops.

MR. DEPUTY SPEAKER : I think the reply to that question was exhaustive and yesterday itself the hon. Member might have raised the question.

THIRU K. T. K. THANGAMANI : I did raise it, Sir, and I found in some newspaper, I think it is ' Express ' in which it was reported, but I do not know whether it is in the official record. The rule provides that I should raise it before the Deputy Speaker gives his ruling.

MR. DEPUTY SPEAKER : I think you just made a passing remark, but you did not stress upon the point that a half-hour discussion might be allowed on that question. Any way, I think it is not necessary now. Hon. Members may express their views in the " Governor's Address " discussion.

### 4. ஆளுநர் பேருரைக்கு நன்றி கூறும் தீர்மானத்தின் மீது விவாதம்— தொடர்ச்சி.

**திரு. சொ. காவேரிமணியம்:** பேரவைத் துணைத் தலைவர் அவர்களே, நேற்றையதினம் நான் குறிப்பிட்டதைப் போல் இந்த மாநில அரசின் கடமைகள் பற்றியும், அதேபோல் மத்திய அரசின் பொறுப்புகள் பற்றியும் ஆளுநர் அவர்களின் உரையில் மிகத் தெளிவாகக் குறிப்பிடப்பட்டுள்ளது என்பதைச் சுட்டிக் காட்டினேன்.

அதேபோன்று கடமை என்று கூறுகிற நேரத்தில், நம்முடைய மாநில அரசு சமீபத்தில் அடித்த புயல் காரணமாக தஞ்சை, திருச்சி, வட ஆர்க்காடு, தென் ஆர்க்காடு, சேலம், தர்மபுரி போன்ற மாவட்டங்களில் ஏற்பட்ட சேதங்களை எல்லாம் பற்றி விவரங்கள் சேகரித்து தக்க நிவாரண நடவடிக்கைகள் எடுத்து

அவற்றிற்குத் தக்க உதவிகளைச் செய்திருக்கிறது. அதற்காக நாம் நம் மாநில அரசைப் பாராட்டக் கடமைப்பட்டிருக்கிறோம். அதேபோன்ற பொறுப்புகள் மத்திய அரசுக்கும் உள்ளன என்பதும் தெளிவாகச் சுட்டிக்காட்டப்பட்டுள்ளதால் அதற்கு என்ன பொறுப்புகள் உள்ளன என்பதை இந்த மாநில அரசு தக்க முறையில் வலியுறுத்தியிருக்கிறது என்பதைப்பற்றியெல்லாம் அவை உறுப்பினர்கள் குறிப்பிட்டுச் சொன்னார்கள்.

அதேபோன்று, கடமை உணர்வில் நம் மாநில அரசு மத்திய அரசுக்கு அரிசி கொடுப்பதற்கு ஏற்கெனவே ஒரு ப்ராமிஸை செய்திருக்கிறது. அந்த வாக்குறுதியை நிறைவேற்றும்பொருட்டு தீவிரமானதொரு திட்டத்தை வகுத்து ஏறத்தாழ 20 சதவீதம் அளவிற்குக் கொள்முதல் செய்து தேக்கி வைத்து மத்திய அரசுக்கு அரிசி கொடுக்கக்கூடிய ஒரு திட்டத்தையும் இங்கு நம் அரசு உருவாக்கியுள்ளது. அதற்காகவும் நாம் நம் அரசைப் பாராட்டக் கடமைப்பட்டிருக்கிறோம்.

இன்னும் நம் அரசு, எந்த நடவடிக்கையானாலும் சரி, அதைத் துரிதமாக எடுத்து மக்களுக்கு நல்லமுறையில் சேவை செய்து வருகிறது. அதேநேரத்தில் நான் இன்னொன்றையும் இங்கு குறிப்பிட விரும்புகிறேன். குறிப்பாக நம் அண்டை மாநிலங்களானாலும் சரி, அல்லது வெளிமாநிலங்களானாலும் சரி, கிடைக்கக்கூடிய உபரியான உணவு தானியங்களை உணவு வழங்கும் கழகம் மூலம் பெற்று அந்தக் கழகத்தின் மூலம் மாநிலத்தில் இருக்கக்கூடிய பெரு நகரங்களுக்கு நியாயவிலைக் கடைகள் மூலம் விநியோகம் செய்யப்படுகின்றது. அவ்வாறு விநியோகிக்கப்படும் காரணத்தால் நல்ல பொருள்களை, தரமான பொருள்களை சாதாரணமாக அழுத்தப்பட்டிருக்கக்கூடிய ஏழை எளிய மக்கள் பெறும் அளவிற்கு ஒரு வாய்ப்பு ஏற்படுத்தப்பட்டிருக்கிறது. அது மட்டுமல்ல, வணிகர்களிடம் பரவி இருக்கக்கூடிய சமுதாயத்திற்குப் புறம்பான செய்கைகள் எல்லாம் அதன்மூலம் தடுக்கப்படுகிறது என்பதையும் நான் இங்கு குறிப்பிட்டுச் சொல்ல விரும்புகிறேன்.

இந்த நேரத்தில் இன்னொரு விஷயத்தையும் குறிப்பிட விரும்புகிறேன். குறிப்பாக, தமிழகத்தைப் பொறுத்தவரையில் விவசாயத் துறையை அதிகமாக நம்பியிருக்கும் பகுதியாகும். விவசாயத் துறை என்றால் பொதுவாக, விவசாய, வேளாண்மைத் துறை முன்னேற வேண்டுமென்றால் நிரந்தரமான பாசன வசதி தேவைப்படுகிறது. அதே நேரத்தில் உர வசதியும் தேவைப்படுகிறது. உர வசதி மட்டும் போதாது. பயிர் வளருகிற நேரத்தில் அதற்குத் தீங்கு இழைக்கப் படுகிற நேரத்தில், அதற்குத் தொந்தரவு ஏற்படுகிற நேரத்தில் பூச்சிக் கொல்லி மருந்தும் தேவைப்படுகிறது. ஆக, விவசாய அபிவிருத்திக்கு இந்த மூன்றும்





தேவை. குறிப்பாக 1971-72-ம் ஆண்டுக்கு நமக்கு 2.14 லட்சம் டன் உரம் கிடைத்தது. 1972-73-ல் நமது தேவை, நாம் கேட்டது 2.74 லட்சம் டன்; ஆனால் 1.30 லட்சம் டன் உரம் மட்டுமே நமக்குக் கிடைத்துள்ளது. கொடுக்கப் பட்ட உரம் கூட்டுறவு சொஸைட்டிகள் மூலமாகவும், ஊராட்சி ஒன்றியங்கள் மூலமாகவும் ஆங்காங்குள்ள விவசாயிகளுக்குப் பகிர்ந்தளிக்கப்பட்டிருக்கிறது. இவ்வாறு பொது மக்களுக்கு, விவசாய மக்களுக்கு அளிக்கப்படுகிற நேரத்தில் இவை அனைத்தும் ஒழுங்காக விநியோகம் செய்யப்படுகிறதா என்று பார்த்தால் பல இடங்களில் அவற்றை எந்த நோக்கத்தோடு நாம் அளித்தோமோ அந்த நோக்கம் பல இடங்களில் நிறைவேறவில்லை என்பதைக் காண்கிறோம். குறிப்பாக, கூட்டுறவு சொஸைட்டிகள் மூலம் விநியோகிக்கப்படுகிற நேரத்தில் அந்த சொஸைட்டிகளில் உறுப்பினர்களாக இருக்கக்கூடிய விவசாயப் பெருங் குடி மக்களுக்குத்தான் கிடைக்கிறது. ஒன்றியங்களின் மூலம் விநியோகிக்கப் படுகிற நேரத்தில் ஊராட்சி மன்றத் தலைவர்களாக இருக்கக்கூடியவர்களிடத்தில் அவை ஒப்படைக்கப்படுகிறது. அவ்வாறு ஒப்படைக்கப்படுகிறபோது உர மூட்டைகள் ஒழுங்காகப் போய்ச் சேருகின்றனவா என்று பார்த்தால் நூற்றுக்கு நூறு சரியாகப் போய்ச் சேருவதாக எடுத்துச் சொல்ல முடியாது. எனவே, இந்தக் குறைபாட்டினைப் போக்குவதற்கு ஒரு திட்டத்தை நான் பணிவன்புடன் தெரிவித்துக் கொள்ள விரும்புகிறேன்.

நம் அரசு விவசாயிகளுக்கு பாஸ்போர்ட் புத்தகங்கள் கொடுக்க வேண்டுமென்ற அந்தக் கருத்தினை ஏற்று அதைச் செயல்படுத்திக் கொடுத்தும் வருகிறது. அதேபோன்று ஒவ்வொரு விவசாயிக்கும் ஒரு பாஸ்போர்ட் புத்தகம் மாதிரி வழங்க வேண்டும். ஒவ்வொரு விவசாயியும் எவ்வளவு நிலம் உழுகிறார், அல்லது எவ்வளவு சொந்தமாக வைத்துக்கொண்டிருக்கிறார், அவர்கள் குடும்பத்தில் எத்தனை பேர்கள் என்பன போன்ற எல்லா விவரங்களையும் வைத்திருக்கக்கூடிய முறையில் சம்பந்தப்பட்ட தாலுகா ஆபீஸ் மூலம் அல்லது பி.டி.ஓ. மூலம் ஒவ்வொரு விவசாயிக்கும் ஒவ்வொரு பாஸ்போர்ட் புத்தகம் மாதிரி ஒரு புத்தகத்தைக் கொடுக்க வேண்டும். அதற்கு வேண்டிய வழிவகைகளை இந்த அரசு செய்ய வேண்டுமென்று பணிவன்போடு கேட்டுக் கொள்கிறேன்.

அடுத்து, நம் நாட்டில் இன்றைய தினம் நிலவிவரும் மின்சாரப் பற்றாக் குறை பற்றி இங்கு பல உறுப்பினர்கள் கருத்து தெரிவித்தார்கள். அமைச்சர் அவர்களும் அதற்கான காரணங்களை எல்லாம் தெளிவாகச் சுட்டிக் காட்டினார்கள். நம் நீர்வளத்தை அதிகமாக, நன்கு பயன்படுத்த சிறந்த அறிவுரை இந்தப் பேருரையிலேயே தெளிவாகக் குறிப்பிடப்பட்டுள்ளது. நம் தமிழகம் மட்டுமல்ல, ஆந்திரா, மைசூர், கேரளா ஆகிய இந்த நான்கு

மாநிலங்களும் சேர்ந்து, கிடைக்கக்கூடிய நீர்வளத்தைப் பயன்படுத்த மேற்கு மலைத்தொடர் மேம்பாட்டுக் கழகம் ஒன்றை அமைப்பது குறித்து, அதன் அவசியம் குறித்து இந்த உரையில் தெளிவாகச் சுட்டிக்காட்டப்பட்டுள்ளது. அவ்வாறு ஒரு கழகம் அமைக்கப்படுமானால் நீர்வளம், மின்சாரம் இவற்றை நல்ல முறையில் பயன்படுத்திக் கொள்ளலாம். ஒரு மாநிலத்திற்கு உபரியாக இருக்கக் கூடிய மின்சாரத்தை அப்போது நாம் நம் மாநிலத்திற்குப் பெறக் கூடிய ஒரு வாய்ப்பு ஏற்படும் என்றும் சுட்டிக்காட்டப்பட்டுள்ளது. உண்மையாகவே அந்தக் கருத்தை மற்ற மாநிலங்களுக்குப் பரப்புவதற்கு முன்னால் இங்கேயிருக்கும் மாண்புமிகு உறுப்பினர்கள் அந்த கருத்தை வரவேற்றிருக்கிறார்கள். தன்னிறைவு பெறுவது என்பது நம்முடைய மாநிலத்தைப் பொறுத்த வரையில் மட்டுமல்ல. நம்முடைய மாண்புமிகு அமைச்சர் அவர்கள் கூடச் சொன்னார்கள். மின்சாரப் பற்றாக்குறை கடந்த ஆண்டோ, அதற்கு முந்திய ஆண்டோ ஏற்பட்டது அல்ல. பல ஆண்டுகளாகத் தொடர்ந்து இருக்கிறது. அவ்வாறு மின்சாரப் பற்றாக்குறையைப் போக்குவதற்கு அண்டை மாநிலங்களான மைசூரிலிருந்தும், கேரளாவிலிருந்தும் மின்சாரத்தைப் பெற்றுக்கொண்டிருந்தோம் என்று தெளிவாகச் சுட்டிக்காட்டினார்கள். இம்மாதிரியாக தொடர்ந்து இருக்கிற பற்றாக்குறையைப் போக்குகின்ற வகையில் தான், மேற்கு மலைத்தொடர் மேம்பாட்டுக் கழகம் என்று ஒன்று ஆரம்பித்து, அங்கேயிருக்கும் நீர் வளம், கனிவளம் ஆகியவற்றைப் பயன்படுத்தினால், அந்தந்த மாநிலங்கள் முன்னேறுவதற்கு ஒரு நல்ல வாய்ப்பாக இருக்கும் என்று தெளிவாகச் சுட்டிக் காட்டினார்கள்.

மத்திய அரசிடம் நமக்குத் தேவையான திட்டங்களைத் தட்டிக் கேட்பதைப் பற்றியும் சுட்டிக்காட்டினார்கள். நமக்கு எத்தனை அனல் மின்சார நிலையங்கள் தேவை, எத்தனை நீரால் உற்பத்தி செய்யும் மின்சார நிலையங்கள் தேவை, தூத்துக்குடியில் அனல் மின்சார நிலையம் தேவை என்பதைக் காலாகாலத்தில் எடுத்துச் சொல்லி வற்புறுத்தப்பட்டிருக்கிறது என்று சொன்னார்கள்.

(திரு. நா. வீராசாமி தலைமை)

இந்த நாட்டு மக்களின் எண்ணங்களையும், விருப்பங்களையும் தெளிவாக எடுத்துக் காட்டக்கூடிய ஒரு காலக் கண்ணாடியாக இந்த ஆளுநர் அவர்களின் உரை அமைந்து இருக்கிறது என்று இந்த நேரத்தில் சுட்டிக்காட்ட விரும்புகிறேன். நம்முடைய தமிழக அரசு எந்த அளவுக்குப் பொதுமக்களின் கோரிக்கைகளையும், அவர்களுடைய விருப்பங்களையும் ஏற்று செயல்படுகிறது என்பதற்குப் பல உதாரணங்களை இதன்மூலம் சுட்டிக்காட்ட விரும்புகிறேன். இந்த



நாட்டிலுள்ள வறுமையைப் போக்குவதற்கும், வேலையில்லாத் திண்டாட்டத்தைப் போக்குவதற்கும் நல்ல பல திட்டங்களைக் கடந்த ஆண்டு உருவாக்கியிருக்கிறது. உதாரணத்திற்குச் சொல்ல வேண்டுமானால், கிராமப்புறத்தில் வேலை வாய்ப்பை அதிகரிக்கும் ஒரு முனைப்புத் திட்டத்தை உருவாக்கி, அந்தத் திட்டத்திற்காக ஏறத்தாழ ரூ. 3 கோடி ஒதுக்கியிருக்கிறார்கள். கிராமப்புறத்தில் இருக்கும் சாலைகளைப் பழுது பார்ப்பதற்கும், தொடர்பு ஏற்படுத்துவதற்கும் ஏறத்தாழ ரூ. 3 கோடி ஒதுக்கப்பட்டிருக்கிறது. படித்து விட்டு வேலை கிடைக்காத இளைஞர்களுக்குக் குறைந்த அளவு ஒரு இரண்டாண்டுக் காலம் வேலை கொடுத்து, பயிற்சி பெறுகின்ற அந்த நேரத்திலேயே வேறு இடத்தில் வேலை தேடிக்கொள்வதற்கும் வாய்ப்பாக 'இளைஞர் அணி' (யூத் கோர்) என்று ஏற்படுத்தி அதற்காக ஏறத்தாழ ரூ. 60.70 லட்சம் செலவு செய்யப்பட்டிருக்கிறது. இப்படிப் பல விதமான திட்டங்களை, அதிகமாக கிராமப்புற மக்கள் பயன்பெறுகிற திட்டங்களை, படித்த இளைஞர்கள் பயன்பெறுகிற திட்டங்களை ஏற்படுத்தியிருக்கிறது என்று சுட்டிக்காட்ட விரும்புகிறேன்.

இது போல் பல திட்டங்கள் இந்த உரையிலே வலியுறுத்திக் கூறப்பட்டிருக்கின்றன. குறிப்பாக மத்திய சர்க்காரை நல்ல முறையீட்டின் மூலமாகத் தட்டிக் கேட்கப்பட்டிருக்கிறது. உதாரணத்திற்குச் சொல்ல வேண்டுமானால், மத்திய அரசு ஊழியர்கள்—மாநில அரசு ஊழியர்கள் ஊதிய வேறுபாட்டைப் போக்குவதற்காக மத்திய அரசு மானியமாக அந்த சம்பள வேறுபாட்டுத் தொகையை அளிக்க வேண்டுமென்ற கருத்தையும் இங்கே அழகாக வலியுறுத்தியிருக்கிறார்கள். விலைவாசி உயர்வைக் குறைக்க வேண்டுமானால், தமிழக அரசு முயற்சியால் மட்டும் அது முடியாது, மத்திய அரசின் வரி விதிப்புக் கொள்கை, வருமானம், மற்றும் சில அடிப்படைக் காரணங்கள் ஆகியவற்றையும் ஒன்றாக இணைத்துப் பார்த்தால்தான் அந்த விலைவாசி ஏற்றத்தைக் குறைக்க முடியும் என்ற கருத்தும் வலியுறுத்தப்பட்டிருக்கிறது. ஆகவே, இந்த ஆளுநர் அவர்களுடைய உரை நாம் ஒவ்வொருவரும் நல்ல விதத்தில் பாராட்டுகிற வகையில் இருக்கிறது, நாட்டு மக்களின் எண்ணங்களைப் பிரதிபலிப்பதாக இருக்கிறது, நல்ல பல திட்டங்களை உள்ளடக்கியதாக இருக்கிறது. நமக்குத் தேவையான பல திட்டங்களைக் குறித்து மத்திய அரசிடத்தில் வற்புறுத்தியிருக்கிறது என்று தெரிவித்துக் கொள்கிறேன். (மணியடிக்கப்பட்டது) ஒரு செகண்டில் முடித்து விடுகிறேன். நேற்றைக்கே அரைகுறையாக விட்டேன். 'அப்ர்ப்டா'க இருக்க வேண்டாம்.

தமிழக அரசு பேருந்துகளையெல்லாம் நாட்டுடைமையாக்கும்' திட்டத்தை அறிவித்திருக்கிறது. அது போல் சினிமாக் கொட்டகைகளையும் நாட்டுடைமையாக்க வேண்டுமென்ற வேண்டுகோளைக் கூறி, குறிப்பாக பெரும் நகரங்களில்

இருக்கும் சினிமாக் கொட்டகைகளை நாட்டுடைமையாக்க வேண்டும். அது கலைஞர் அவர்களால்தான் முடியும் என்று கூறி, என்னுடைய உரையை முடித்துக் கொள்கிறேன், வணக்கம்.

*. திரு. வா. மை. அப்துல் ஜப்பார் : மாண்புமிகு மாற்றுத் தலைவரவர்களே, மேதகு ஆளுநர் அவர்கள் ஆற்றிய உரைக்கும் நன்றி தெரிவிக்க எழுந்து நிற்கின்ற இந்த நேரத்தில், என்னுடைய ஏமாற்றத்தை நான் குறிப்பிட்டுத் தான் ஆகவேண்டும். மைசூர் மாநிலத்தோடு காவேரி நதி நீர்ப் பிரிவினை சம்பந்தமாக இருக்கிற தகராறு குறித்து இந்த ஆளுநர் உரையில் ஒன்றும் சொல்லப்படவில்லை. அது எப்படி எனக்குத் தனிப்பட்ட முறையில் வருத்தம் தருகிறது என்றால், என்னுடைய தொகுதியில் அந்த ஒப்பந்தத்தின் அடிப்படையில்தான் தக்கதொரு பாசன வசதி ஏற்படும். என்னுடைய தொகுதியின் அபிவிருத்திக்காக நொய்யலாறு, குடவனாறு திட்டங்கள் ஏட்டளவில் நின்று கொண்டிருக்கின்றன. கடந்த 25 ஆண்டுகளாக அந்தத் திட்டங்கள் நிறைவேற்றப்படாமல் இருக்கின்றன. என்னுடைய தொகுதி மக்கள் எவ்விதப் பாசன வசதியும் இல்லாமல் மிகுந்த அவதிப்பட்டுக்கொண்டிருக்கிறார்கள். இதற்கான காரணங்களைக் கேட்கிறபோது, மைசூர் மாநிலத்தோடு ஒரு ஒப்பந்தம் ஏற்பட்டால் தான், காவிரி நதியின் உப நதியான நொய்யலாற்றில் அணை கட்ட முடியும் என்று சொல்கிறார்கள். மைசூர் மாநிலத்தோடு ஒரு ஒப்பந்தம் ஏற்படுத்திக்கொண்டு, அந்த ஆறுகளின் மூலம் அந்தத் தொகுதி மக்களுக்கு நல்ல பாசன வசதி ஏற்படுத்திக் கொடுக்க இந்த அரசு தீவிர நடவடிக்கை எடுக்க வேண்டுமென்று மிகப் பணிவோடு நான் கேட்டுக்கொள்கிறேன்.

சமீப காலமாக வக்ப் போர்ட்டுக்குச் சொந்தமான நிலங்களை, ஹரிஜன காலனிகளுக்காகவும், குடிசை மாற்று வாரியத்திற்காகவும், மற்ற ஏழைகளுக்காகவும் ஒதுக்கப்படும் தன்மை இருக்கிறது. வழுதாவூரில் ஒரு தர்க்காவிற்குச் சொந்தமான நிலத்தை ஒரு ஹரிஜன காலனிக்கு ஒதுக்கப்பட்டிருக்கிறது என்று நான் அறிகிறேன். நான் ஹரிஜனங்கள் மீது மிகுந்த அன்பும், பாசமும் கொண்டவன். அதற்காக தர்க்காவிற்குச் சொந்தமான, முஸ்லீம் மக்களுக்குச் சொந்தமான—அவர்கள் மத காரியங்களுக்காக ஒதுக்கி வைத்திருக்கின்ற—நிலங்களை அபகரித்தல் நல்லதல்ல. அது மிகுந்த மதமாச்சர்யங்களை உண்டு பண்ணும் என்று மிகுந்த பணிவன்போடு தெரிவித்துக்கொள்கிறேன்.

அண்மையில் வெள்ளத்தால் சேதம் அடைந்த பகுதிகளில்—சேலம், ஜம்பை போன்ற பகுதிகளில்—குறிப்பாக முஸ்லீம் மக்கள் வாழும் பகுதிகளில்—மிகவும் சேதம் அடைந்து, அவர்கள் அகதிகளாக மாறிவிட்டார்கள்—அம்





மக்களுக்கு அரசு தக்க சமயத்தில் நல்ல உதவி செய்து, வீடு கட்டிக் கொள்வதற்குக் கடன் தொகை ஒதுக்கியிருப்பதைக் கண்டு நான் மிகவும் சந்தோஷப்படுகிறேன். அரசின் இந்த நல்ல செயலுக்கு என்னுடைய பாராட்டுதல்களைத் தெரிவித்துக்கொள்கிறேன்.

மாநிலத்திலுள்ள நீர் வளங்கள் எல்லாம் முழுமையாகப் பயன்படுத்தப் பட்டிருக்கிறது என்று மேதகு ஆளுநர் அவர்களுடைய உரையில் குறிப்பிடப் பட்டிருக்கிறது. என் சம்பந்தப்பட்ட வரையில் அது உண்மையல்ல. இன்னும் என்னுடைய தொகுதியிலுள்ள குடவனாறு, நொய்யலாறு ஆற்று நீர்ப் பாசனத்திற்காகப் போதுமான அளவுக்கு உபயோகிக்கப்படவில்லை. அந்த சிறு பாசனத் திட்டங்களையும் நிறைவேற்றும்போதுதான் அது முழுமையாகப் பயன்படுத்தப் பட்டது என்ற வாதத்தில் அர்த்தம் இருக்கும் என்று கூறிக்கொள்கிறேன்.

அண்மைக் காலமாக மச்ச-மாமிச விலைகள் கூடி விட்டன. முன்பெல்லாம் மச்ச-மாமிசம் உண்பவர்கள், உண்ணாதவர்கள் என்று இருந்தார்கள். எவ்விதப் பிரசாரமும் இல்லாமல், மச்ச-மாமிசம் உண்ணாதவர்களும் உண்பவர்களாக மாறி விட்டார்கள். அதைப் போக்குவதற்காக என்னுடைய தொகுதியில் இரண்டொரு ஆடுவளர்ப்புப் பண்ணை ஆரம்பிக்க வேண்டுமென்று கேட்டுக்கொள்கிறேன். இதை அரசு விரைவில் கவனிக்க வேண்டுமென்றும் கேட்டுக்கொள்கிறேன்.

அரசின் கொள்கை காரணமாக மதுவிலக்கு ரத்து செய்யப்பட்டு விட்டது. நாங்களும் பெரும்பான்மை அபிப்பிராயத்திற்குக் கட்டுப்பட்டாக வேண்டிய நிர்ப்பந்தத்திற்கு ஆளாகிவிட்டோம். அப்படியிருந்தபோதிலும் சில இடங்களில் அதன் தீமைகளைத் தவிர்க்க வேண்டுமென்று கேட்டுக்கொள்கிறேன்.

மசூதிகளுக்கும், கோவில்களுக்கும் அருகாமையில் இருக்கக்கூடிய மதுக் கடைகள் நீக்கப்படுவதற்கு இந்த அரசு உடனடியாக நடவடிக்கை எடுக்க வேண்டும். கும்பகோணத்தில் இம்மாதிரி ஒரு வணக்க ஸ்தலத்திற்குப் பக்கத்திலுள்ள மதுக்கடையை அந்த இடத்தை விட்டு அகற்ற வேண்டும் என்று இரண்டு ஆண்டு காலமாகப் போராட்டம் நடத்திவருகிறார்கள். ஆனால் இதுவரையில் அகற்றப்படவில்லை. மதுக்கடை அதிபர் பல லட்சக்கணக்கான ரூபாய்க்குச் சொந்தக்காரர். அங்கு உள்ள அதிகாரிகளின் மீது ஆதிக்கம் செலுத்தி, அந்தக் கடையை அந்த இடத்தை விட்டு நகரவிடாமல் செய்திருப்பது வேதனை தரக்கூடிய செய்தியாகும். மது இருக்கத்தான் வேண்டும், அது தான் அரசாங்கத்தின் கொள்கை, மக்கள் அதைத்தான் விரும்புகிறார்கள் என்று சொன்னால், நாங்கள் சரி என்று ஒதுங்கிக்கொள்கிறோம். ஆனால், குறைந்த பட்சம் வணக்க ஸ்தலங்களுக்கு அருகாமையில் மதுக் கடைகள் இருக்கக்

[திரு. வா. மை. அப்துல் ஜப்பார்] [1973 பிப்ரவரி 8

கூடாது. சென்னை நகரத்தில்தான் இருக்கவேண்டும் என்ற கொள்கையை ஏற்றுக்கொண்டு வணக்க ஸ்தலங்களுக்கு அருகாமையில் இருக்கக்கூடிய மக்களையெல்லாம், 100 கெஜம், 200 கெஜம் அருகாமையில் இருக்கக்கூடிய மக்களையெல்லாம் கண்டிப்பாக அப்புறப்படுத்த வேண்டும் என்று என் மாவட்ட ஆட்சித் தலைவர்களுக்கு அரசாங்கம் உத்தரவு போடக்கூடாதா? இதில் அரசாங்கம் சற்று கவனம் செலுத்த வேண்டும் என்று பணிவன்போடு கேட்டுக்கொள்கிறேன்.

பஸ் போக்குவரத்தை தேசியமயமாக்கியதைப்பற்றி ஒரு சில கருத்துக்கள். என்னுடைய முஸ்லிம் லீக் கட்சி பஸ் போக்குவரத்தை தேசியமயமாக்குவதை முழுமையாக வரவேற்கிறது. ஆனால், அதே நேரத்தில் அதில் உள்ள சில சிக்கல்கள், சில சங்கடங்களை இந்த அரசு கவனிக்க வேண்டும் என்று பணிவன்போடு கேட்டுக்கொள்கிறேன். முன்பு 10 பஸ்களுக்கு அதிகமாக உள்ளதை தேசியமயமாக்கியபோது மார்க்கெட் வால்யூ அடிப்படையிலே அந்த பஸ்களை எடுத்துக்கொண்டார்கள். ஆனால், இப்பொழுது 1962-ம் ஆண்டு பஸ்களுக்கு ரூ. 4,000 கொடுக்கப்படும் என்று சொல்கிறார்கள். அந்த நிலைமையில் அதன் சொந்தக்காரர்கள் மிகவும் நஷ்டம் அடைவார்கள். சமுதாயத்தில் ஒரு பகுதியினருக்கு மட்டும் இத்தனை பெரிய சங்கடம் விளைவிப்பது நியாயத்தின் அடிப்படையில் இருக்காது. மேலும், இந்தத் தொழிலை நம்பியிருக்கும் ஏராளமான உபதொழில்கள் பாதிக்கப்பட்டிருக்கின்றன. டிங்கர்ஸ், பெயிண்டர்ஸ், பழைய இரும்பு வியாபாரிகள் போன்ற பல தொழிலாளர்கள் பாதிக்கப்பட்டிருக்கிறார்கள். இதை நம்பியிருந்த பல உபதொழில்கள் பாதிக்கப்பட்டிருக்கின்றன. இவர்களுக்கெல்லாம் மாற்றுத் திட்டத்தை இந்த அரசு ஏற்படுத்தவேண்டும். ஒன்றிரண்டு பஸ்களுக்கு மாத்திரம் சொந்தக்காரர்கள், அதை நம்பிப் பிழைப்பு நடத்திவந்தவர்களுக்கு அவர்கள் வாழ்க்கை முறையை அழித்துவிடாமல், அவர்கள் தொடர்ந்து வாழ்க்கை நடத்தக்கூடிய வகையில், ஆங்காங்கு உள்ள டெப்போக்களுக்கு அதிகாரிகளாக அவர்களைப் பொறுப்பேற்க வைத்து, அப்படிப்பட்ட பணிகளில் அவர்களை சேர்த்து, அவர்களுக்கு பிழைப்புக்கு வழிவகைகள் செய்ய வேண்டும் என்று நான் பணிவன்புடன் கேட்டுக்கொள்கிறேன். (மணி அடிக்கப்பட்டது).

ஒன்றிரண்டு நிமிடங்களில் முடித்துவிடுகிறேன். குடிசை மாற்று வாரியம் ஒன்றிரண்டு வருடங்களுக்குள் ஏழை எளிய மக்களுக்கு ஆயிரக்கணக்கான வீடுகளைக் கட்டிக்கொடுக்கிறது என்பது மிக்க மகிழ்ச்சிக்குரிய செய்தியாகும். ஆனால், குடிசை மாற்று வாரியம் ஏழை முஸ்லிம்களுக்கும் ஒரு சில வீடுகள் ஒதுக்கியிருக்க வேண்டும், கொடுத்திருக்க வேண்டும். ஆனால், இதுவரையில்



1973 பிப்ரவரி 8] [திரு. வா. மை. அப்துல் ஜப்பார்]

கொடுக்கப்படவில்லை என்பதை அறிந்து வருத்தப்படுகிறேன். இனிமேலாவது குடிசை மாற்று வாரியம் குடிசையில் வாழக்கூடிய ஏழை முஸ்லிம் மக்களுக்கும் ஒரு சில வீடுகளாவது ஒதுக்கிக் கொடுக்க வேண்டும். இதைப் பற்றி எங்களைத் தவிர வேறு யாரும் சொல்ல மாட்டார்கள். ஆகவேதான் நான் சொல்கிறேன். அரசு இதைக் கவனிக்க வேண்டும் என்று கேட்டுக் கொள்கிறேன்.

**மாண்புமிகு டாக்டர் இரா. நெடுஞ்செழியன் :** இப்பொழுது எந்தெந்த இடங்களில் குடிசைகளில் இருக்கின்றார்களோ, அங்கே யார் வாழ்கின்றார்களோ அவர்களுக்கு அங்கேயே கட்டடங்கள் கட்டித்தரப்படுகின்றன. வட சென்னையில் 642 வீடுகள் கட்டப்பட்டு, அங்கேயே வாழ்ந்துகொண்டிருந்த முஸ்லிம்களுக்கு அதே இடங்கள் கொடுக்கப்பட்டிருக்கின்றன. அங்கு வாழ்பவர்கள் கிறிஸ்தவர்கள், இந்துக்கள், முஸ்லிம்கள், அரிஜனங்கள் யாராக இருந்தாலும், அங்கே குடிசைகளில் வாழ்பவர்களுக்கு அப்படியே வீடுகள் கட்டிக்கொடுக்கப்பட்டு வருகின்றன. அவர்களுடைய போட்டோக்கள் எடுக்கப்பட்டு அவர்களுக்கே அப்படிக் கட்டப்பட்ட வீடுகள் ஒதுக்கப்படுகின்றன. அந்த வகையில் அங்கே வாழ்ந்த ஏழை முஸ்லிம்களுக்கும் அங்கேயே வீடு கட்டிக்கொடுக்கப்பட்டிருக்கிறது என்பதைத் தெரிவித்துக்கொள்கிறேன்.

**திரு. வா. மை. அப்துல் ஜப்பார் :** அமைச்சர் அவர்களின் விளக்கத்திற்கு நன்றி. இப்பொழுது சேலத்தில் குடிசை மாற்று வாரியத்தினால் கட்டப்படக் கூடிய வீடுகளில் அங்குள்ள முஸ்லிம்களுக்கும் இடம் அளிக்கப்படும் என்ற நம்பிக்கையைத் தெரிவித்துக்கொள்கிறேன்.

உருது உயர்நிலைப் பள்ளிகளில் தமிழ் போதனை வேண்டும் என்று மக்கள் கேட்கிறார்கள். காரணம், உருதுவைத் தாய் மொழியாகக் கொண்டவர்கள் உருதுவை மாத்திரம் படித்துவிட்டு அரசாங்க உத்தியோகங்களைப் பெற முடியாது. அமைச்சர் அவர்கள் கூட உருது உயர்நிலைப் பள்ளிகளில் பள்ளி நேரத்திற்கு வெளியே, ஒரு தமிழ் ஆசிரியரை நியமித்து அங்கு படிக்கும் மாணவர்களுக்குத் தமிழ் போதிக்க ஏற்பாடு செய்வதாக வாக்களித்திருந்தார்கள். இதுவரையில் மதராஸிலேயே அலீஜும் போன்ற பள்ளிகளில் தமிழ் போதிப்பதற்கு ஆசிரியர்கள் நியமிக்கப்படவில்லை. எத்தனையோ முறைகள் அரசாங்கத்திற்குக் கடிதம் போட்டும் கூட, தமிழ் ஆசிரியர்கள் இன்னும் நியமிக்கப்படாதது வருந்தத்தக்கது. ஆகவே, உருது உயர்நிலைப் பள்ளிகளில் பள்ளி நேரம் முடிந்த பிறகு தமிழ் போதிப்பதற்கு ஆசிரியர்களை நியமிக்க வேண்டும் என்று வற்புறுத்திக் கேட்டுக்கொள்கிறேன். (மணி அடிக்கப்பட்டது.) ஒன்றிரண்டு முக்கியமான விஷயங்களை மட்டும் கூறிவிடுகிறேன்.

**மாண்புமிகு மாற்றுத் தலைவர் (திரு. நா. வீராசாமி):** ஒவ்வொரு உறுப்பினருக்கும் கொடுத்திருக்கிற நேரம் 7 நிமிடங்கள். 10 நிமிடங்கள் ஆகிவிட்டன. அதற்கு மேலும் உறுப்பினர்கள் ஒத்துழைக்கவில்லை என்றால் என்ன செய்ய முடியும்? மீதி உள்ள விஷயங்களை அடுத்துப் பேச இருக்கின்ற உங்கள் கட்சி உறுப்பினர் அவர்களிடம் கொடுங்கள். இப்பொழுது திரு. சுவாமிதாஸ் அவர்கள் பேசுவார்கள்.

* **திரு. எ. சுவாமிதாஸ்:** சட்டப்பேரவை மாற்றுத் தலைவர் அவர்களே, கவர்னர் அவர்களின் பேருரையின்மீது ஒரு சில கருத்துக்களைக் கூற நான் முற்படுகிறேன்.

ஜனநாயக அமைப்பில் ஆளும் கட்சியும், எதிர்க்கட்சியும் இரண்டு கண்கள் போன்றவை. ஆனால் இன்று இருக்கிற நடைமுறையைப் பார்த்தால் எதிர்க்கட்சி பிரதிநிதித்துவம் வகிக்கின்ற தொகுதிகளுக்குக் கிடைக்கக்கூடிய நியாயமான உரிமைகள் கிடைக்கவில்லை என்பதை நான் இங்கே சொல்லிக்கொள்ள ஆசைப்படுகிறேன். பொதுவாக இருக்கிற எந்தக் காரியங்களுக்கு—எங்கள் தொகுதிகளில் ரோடுகள் வேண்டும், பள்ளிகள் வேண்டும், குடிதண்ணீர் வசதி வேண்டும், பாலங்கள் கட்டவேண்டும் என்று கேட்டால், நாங்கள் கேட்பவை அங்கே நடைபெறுவதில்லை. மாவட்ட அளவிலும் நடைபெறுவதில்லை. மாநில அளவிலும் கூட நடைபெறுவது இல்லை. எதிர்க்கட்சியினருக்குக் கொடுக்க வேண்டிய சலுகைகள் கொடுக்கப்படவில்லை, அவர்கள் எதிரிகளாகக் கருதப்படுகிறார்கள். இந்த அரசு இந்த நாட்டிலிருக்கிற எல்லா மக்களுக்கும் பொதுவானது என்ற அடிப்படையில் நியாயமாக எங்களுடைய கோரிக்கைகளின் மீது அவ்வப்பொழுது கவனம் செலுத்தி, எங்கள் தொகுதிகளைக் கண்காணித்து, அங்குள்ள மக்களுக்குக் கிடைக்கவேண்டிய உரிமைகளும், சலுகைகளும் கிடைக்க வேண்டும். ஆனால், அப்படிக் கிடைப்பதில்லை. இதற்குப் பல சான்றுகள் உண்டு, கலெக்டர் ஆபீசில் சொன்னால்கூட எங்களுக்கு நியாயம் கிடைக்கவில்லை. நாங்களும் ஆளும்கட்சி எம்.எல்.ஏக்களிடம் சொல்லி காரியங்களை நடத்த முடியுமா என்றுதான் பார்க்கிறோம். அது மாத்திரம் அல்ல, எதிர்க்கட்சியைச் சேர்ந்தவர்களிடத்தில் அரசாங்க அதிகாரிகள் பேசுவதற்குக் கூட பயப்படுகிறார்கள், நடுங்குகிறார்கள், ஏன் என்று தெரியவில்லை. இந்த நிலைமை நீடித்துக்கொண்டிருக்கிறது. இந்த நிலைமையை மாற்றி, எதிர்க்கட்சியினருக்கும், அவர்களைச் சார்ந்த அந்தப் பகுதிகளுக்கும் கொடுக்கப்பட வேண்டிய உரிமைகளும், சலுகைகளும் அளிக்கப்பட வேண்டும், அந்தப் பகுதிகளும் மதிக்கப்பட வேண்டும் என்ற நிலையை உருவாக்கி தரவேண்டும் என்று நான் இந்த அரசைக் கேட்டுக்கொள்கிறேன்.





சட்டம், ஒழுங்கைப் பொறுத்த அளவில், நாம் போற்றக்கூடிய அளவில் இந்த நாட்டில் நிலைமை இல்லை. அச்சம்தான் பொது மக்களிடம் குடிகொண் டிருக்கிறது. சென்ற சில மாதங்களாக நடந்துவருவதையெல்லாம் நான் இங்கே சுட்டிக்காட்ட விரும்பவில்லை. இருந்தாலும், ஒன்றிரண்டு சம்பவங்களை மாத்திரம் குறிப்பிடுகிறேன். வீட்டிலிருந்து வெளியே போய்த் திரும்ப வர முடியுமா என்ற அச்ச நிலை இருக்கிறது. டிசம்பர் மாதம் நான் மதுரை-கோவை துரித வண்டியில் பயணம் செய்துகொண்டிருந்தேன். பஸ் சோழவந்தான் அருகில் வந்தபொழுது ஒரு கிராமத்திற்குப் பக்கத்தில் அந்தக் கிராமத்தைச் சேர்ந்த ஒரு சில இளைஞர்கள் சாலையின் குறுக்கே நின்றுகொண்டு வண்டியைத் தடுத்து நிறுத்தச் சொன்னார்கள். பயணிகள் எல்லாம் பயந்தோம். 'வண்டியை நிறுத்தங்கள்', 'நிறுத்தங்கள்' என்று சொன்னார்கள். ரோடுக்குக் குறுக்கே நின்றுகொண்டிருந்தார்கள். டிரைவர் வண்டியை நிறுத்தினார். வண்டியை நிறுத்தியவுடன், 'கதவைத் திறவுங்கள்' என்று சொன்னார்கள். கதவு திறக்கப் பட்டது. உள்ளே வந்து 'காசு கொடுங்கள்' அண்ணா தி.மு.க. கொடி ஏற்றப் போகிறோம்' என்று கேட்டார்கள். நாங்கள் எல்லாம் டிரைவரைக் கேட்டோம், 'ஏன் வண்டியை நிறுத்தினீர்கள்' என்று. கண்டக்டரை 'ஏன் கதவைத் திறந்தீர்கள்?' என்று கேட்டோம். அதற்கு அவர் பதில் சொன்னார்: "நாங்கள் அப்படிச் செய்யாவிட்டால், வன்முறையில் ஈடுபடுவார்கள், கல்லை விட்டு எறி வார்கள். உங்களுக்கும், எங்களுக்கும் ஆபத்து, தீ வைப்பார்கள்" என்றார்கள். இந்த நிலைமை மாறவேண்டும். இதற்கான நடவடிக்கை எடுக்க வேண்டும். பயணிகளிடம் அச்சம் ஏற்படுகிறது. பொதுமக்கள் பயப்படுகிறார்கள். வெளியே சென்று வீட்டிற்குத் திரும்ப முடியுமா என்று அச்சப்படுகிறார்கள்.

**மாண்புமிகு திரு. ப. உ. சண்முகம்:** இது போன்று வன்முறைச் செயல் களில் ஈடுபடுவோர்கள் மீது வழக்குகள் போட்டால் பொய் வழக்குகள் போடு வதாகப் பழி சுமத்தப்படுகிறது, அடக்குமுறை கையாளப்படுகிறது என்று கூறுகிறார்கள். அப்படிப்பட்டவர்களுக்கெல்லாம் அங்கத்தினர்கள் ஆதரவு கொடுக்கக் கூடாது. இது போன்று பயணிகளை, பஸ்களை வழி மறித்து, மக்களை இதுபோன்ற துன்பத்திற்கு ஆளாக்குபவர்கள் மீது அரசாங்கம் கடுமை யாக நடவடிக்கை எடுப்பதற்கு உங்களைப்போன்ற அங்கத்தினர்கள் ஒத்துழைக்க வேண்டும்.

**திரு. எ. சுவாமிதாஸ்:** இம்மாதிரி செயல்களைப் பொறுத்து நியாயமாக அரசு எடுக்கக்கூடிய எந்த நடவடிக்கையாக இருந்தாலும், அதற்கு நாங்கள், எதிர்க் கட்சியினர், ஆதரவு தருவதற்குக் கடமைப்பட்டிருக்கிறோம்.

திருச்சி கிளைவ் ஹாஸ்டலில் நடந்த நிகழ்ச்சிகளைப்பற்றி நீதி விசாரணைக்கு அரசு ஏற்பாடு செய்திருக்கிறது. ஆனால், அந்த நிகழ்ச்சியில் சம்பந்தப்பட்ட அதிகாரிகளை அங்கிருந்து இன்னும் மாற்றவில்லை. சாட்சியம் சொல்வதற்குக் கூட பொதுமக்கள் அஞ்சக்கூடிய நிலையில் சம்பந்தப்பட்ட அதிகாரிகள் அங்கேயே இருந்துகொண்டிருக்கிறார்கள். அவர்களை அந்த இடத்தைவிட்டு மாற்றி, நியாயமான முறையிலும், நேர்மையான முறையிலும் நீதி விசாரணை நடப்பதற்கு வழிவகுத்துக் கொடுக்கவேண்டும் என்று இந்த நேரத்தில் நான் வற்புறுத்திக் கேட்டுக்கொள்கிறேன்.

விவசாயத்தைப்பற்றி ஒன்றிரண்டு கருத்துக்கள் கூற விரும்புகிறேன். விவசாயத்திற்குத் தேவையான மின்சாரம் எடுத்துக்கொள்வதற்கு நேரம் குறிப்பிடப்பட்டிருக்கிறது. விவசாயிகள் 3, 4 மாத காலத்திற்குள் விளையும் பயிர் செய்து பிறகு அறுவடை செய்கிறார்கள். அவர்களுக்கு வேண்டிய மின்சாரத்திற்கு நேரம் குறிப்பிடுவது, சமயம் குறிப்பிடுவது என்பது தகுதி அல்ல, 6 மணி நேரம் மின்சாரம் கொடுத்திருக்கிறார்கள் என்று சொல்கிறார்கள். அதனால் போதிய தண்ணீர் கிடைப்பதில்லை.

நான் ஒரு கருத்தைச் சொல்கிறேன். ஒரு சில மாதங்களுக்கு, விவசாயிகள் பயிர்களை அறுவடை செய்யும் வரையில், சினிமா தியேட்டர்களில் மூன்று காட்சிகள் காட்டுவதை நிறுத்தி, ஒரு காட்சி மட்டும் காட்டினால் போதும் என்ற நிலையை ஏற்படுத்தி, அதிலிருந்து கிடைக்கின்ற மின்சாரத்தைச் சேகரித்து விவசாயிகளுக்குக் கொடுத்து உதவினால், மிகவும் பயனுள்ளதாக இருக்கும்.

விவசாயிகள் வாங்கக்கூடிய முக்கியப் பொருள்கள்—பிண்ணாக்கு, பருத்தி விதை போன்றவையும் மாட்டுத் தீவனங்களும், உர வகைகளும் 'நாளொரு
மு.ப. 10–30 மேனியும், பொழுதொரு வண்ணமும்' என்ற நிலையில் விலையேறிக்கொண்டே இருக்கின்றது. அதனால் ஏழை விவசாயிகள் அந்தப் பொருள்களை வாங்கும் சக்தியற்றவர்களாக இருக்கிறார்கள். நேற்று கூட இதைப்பற்றி இங்கே சொன்னார்கள். ஆகவே, விவசாயிகள் வாங்கக்கூடிய பொருட்களை நியாய விலைக் கடைகள் மூலமாக, நியாயமான விலைக்கு விற்கவேண்டும் என்று தெரிவித்துக் கொள்கிறேன்.

ரசாயன உரங்கள் இப்போது மார்க்கெட்டில் கிடைப்பதே அரிதாக இருக்கிறது. ஆனால் பிளாக் மார்க்கெட்டில் தாராளமாகக் கிடைக்கிறது. கருஞ்சந்தைக்கு எப்படி உரங்கள் போகின்றன என்பதுதான் தெரியவில்லை. அதை அரசாங்கம் கண்காணிக்க வேண்டும். இதிலே என்னுடைய யோசனையாக ஒன்றைத் தெரிவிக்க விரும்புகிறேன். எல்லா விவசாயிகளுக்கும் அவர்களுக்கு என்னென்ன உரங்கள், எவ்வளவு தேவைப்படும் என்பதை அறிந்து வை



கார்டிலே குறித்துக் கொடுத்துவிட வேண்டும். அவர்கள் அந்தக் கார்டைக் காட்டி, நியாயவிலைக் கடைகளில் தட்டுப்பாடில்லாமல் உரங்களைப் பெற்றுக் கொள்வதற்கு வழி செய்ய வேண்டும். அப்படிச் செய்தால் இந்தப் பிரச்சினை தீர்ந்துவிடும். நான் கூட இப்போது கருஞ்சந்தையில்தான் உரவகைகளை வாங்கி வருகிறேன். 'கோவாப்பரேட்டிவ் ஸ்டோரில்' கிடைக்கவில்லை. ஆகவே, இந்தக் கார்டு முறையை அமுல்படுத்த வேண்டுமென்று கேட்டுக்கொள்கிறேன்.

**மாண்புமிகு திரு. அ. பெ. தர்மலிங்கம்:** கனம் அங்கத்தினர் அவர்கள் குறிப்பிட்ட கருத்து இப்போது நடைமுறையில் செயல்படுத்தப்பட்டு வருகிறது. இப்போது தென்னார்க்காடு மாவட்டத்தில் விவசாயிகளுக்கு கார்டு வழங்கப்பட்டிருக்கிறது. விரைவில் அம்முறை எல்லா மாவட்டங்களுக்கும் விஸ்தரிக்கப்படக்கூடிய திட்டம் ஒன்று இருக்கிறது.

**திரு. எ. சுவாமிதாஸ்:** அமைச்சரவர்கள் அளித்த விவரத்திற்கு நன்றி தெரிவித்துக்கொள்கிறேன்.

அடுத்து, மின்சாரத் துறையை எடுத்துக்கொள்வோமானால் இப்போது அந்தத் துறையில் பணியாற்ற போதிய அலுவலர்கள் இல்லை என்று சொல்லப்படுகிறது. கன்னியாகுமரி மாவட்டத்திலே சுமார் மூன்று மாதங்களாக மின் கட்டணத்தை வசூலிக்கக்கூடிய கிளார்க்குகள் இல்லாததால் மின்சாரக் கட்டணம் செலுத்த முடியவில்லை. கட்டணம் செலுத்தச் சென்றவர்கள், வசூலிப்பவர்கள் இல்லாததால் திரும்பி வந்துவிட்டார்கள். இப்போது அவர்களுக்கு 'ஃபைன்' போட்டு, கட்டணத்தை வசூலித்துக்கொண்டிருக்கிறார்கள். காரணம் கேட்டால், வேலை செய்வதற்குப் போதிய ஆள் இல்லை என்றும், அரசாங்கம் ஆட்களை நியமனம் செய்யவில்லை என்றும் சொல்கிறார்கள். இதை உடனடியாகக் கவனிக்க வேண்டுமென்று கேட்டுக்கொள்கிறேன்.

முன்பு மின் கட்டணம் வீட்டுக்கு குறைந்த அளவு இரண்டு ரூபாய், கடைகளுக்கு நான்கு ரூபாய் என்றிருந்தது. இப்போது கடைகளுக்கு 6 ரூபாய் என்று போட்டிருக்கிறார்கள். வெற்றிலை பாக்கு வியாபாரம் செய்யக்கூடிய கடைக்காரர்களுக்கு ஒரு நாளைக்கு 5 அல்லது 6 ரூபாய்க்குத்தான் வியாபாரம் நடக்கும். அப்படிப்பட்ட கடைக்காரர்களுக்கும் குறைந்த கட்டணம் 6 ரூபாய் என்று போட்டிருப்பதால் அவர்கள் மிகவும் கஷ்டப்படுகிறார்கள். அதை மாற்றி, குறைத்துக் கொடுக்க வேண்டுமென்று கேட்டுக்கொள்கிறேன். (மணி அடிக்கப்பட்டது). கன்னியாகுமரி மாவட்டத்தைப்பற்றி இன்னும் ஒரு சில பிரச்சினைகளைச் சொல்லிவிட்டு முடித்துவிடுகிறேன்.

நீர்ப்பாசன இலாகா மிகவும் பொறுப்பு வாய்ந்த ஒரு இலாகா. அதிலே பணியாற்றக்கூடிய அதிகாரிகளும் பொறுப்பு வாய்ந்தவர்களாக இருக்க வேண்டும். ஆனால் கன்னியாகுமரி மாவட்டத்திலே இருக்கக்கூடிய தலைமை நிர்வாகப் பொறியாளர் (எக்ஸிகியூட்டிவ் எஞ்சினீயர்) கவலையற்றவராக, பொறுப்பற்றவராக இருக்கிறார். இது ஒரு குற்றச்சாட்டாக இருந்தாலும் எதிர்க்கட்சிக்காரர்கள் சொல்கிறார்களே என்று பார்க்காமல், இதைப் பரிசீலிக்க வேண்டும் என்று கேட்டுக்கொள்கிறேன். அந்த நிர்வாகப் பொறியாளரைப் பொறுத்தவரையில், அவர் ' அனுபவி ராஜா அனுபவி ' என்ற நிலையில்தான் இருந்துகொண்டிருக்கிறார். சென்ற கார் காலத்தில் கூட அணைகளில் எல்லாம் தண்ணீர் வழிந்தோடியது. அவருடைய கவலையின்மையினால் பின்னால் தண்ணீர்த் தட்டுப்பாடு ஏற்பட்டது. ஆயிரக்கணக்கான எக்கர் நிலங்களில் போதிய தண்ணீர் இல்லாமையால் விளைச்சல் குறைந்துபோய்விட்டது. இந்த ஆண்டும் அதைப்போலதான் ஆகும் நிலை இருக்கிறது. அவர் தன்னுடைய கடமையை சரிவரச் செய்யாமல் இருக்கிறார். ஆகவே, அவரை மாற்றிவிட்டு, அங்கே ஒரு திறமையான பொறியாளரைப் போட வேண்டுமென்று கேட்டுக் கொள்கிறேன். (மணியடிக்கப்பட்டது). இன்னும் இரண்டொரு பிரச்சனைகளைச் சொல்லிவிட்டு முடித்துவிடுகிறேன்.

சுதந்திர தின வெள்ளிவிழாவை ஒட்டி, 32 லட்சம் ரூபாய் செலவில் கிராம சீரமைப்புப் பணிகளைச் செய்வதற்கான ஒரு திட்டம் நிறைவேற்றப்படுவதாக இருக்கிறது. அந்தத் தொகை கன்னியாகுமரி மாவட்டத்திற்கா அல்லது மாநிலம் முழுவதற்குமா என்பது தெரியவில்லை. பத்திரிகைச் செய்தியை வைத்துச் சொல்கிறேன். எங்கள் மாவட்டத்திலுள்ள 9 பஞ்சாயத்து யூனியன் களிலிருந்தும் ஒன்பது கிராமங்கள் இந்தத் திட்டத்தின்கீழ் தேர்ந்தெடுக்கப் பட்டன. தக்கலை பஞ்சாயத்து யூனியனிலிருந்து தச்சம்பறம்பு என்ற கிராமம் தேர்ந்தெடுக்கப்பட்டது. அது ஒரு கிராமம் கூட அல்ல. நெய்யூர் என்ற கிராமத்தின் ஒரு பகுதிதான். அங்குள்ள மொத்த ஜனத்தொகை 700-க்கு மேல் இல்லை. மொத்த வாக்காளர்கள் 362 தான். அது கிட்டத்தட்ட 15 ஏக்கர் நிலப்பரப்பைக் கொண்டது. அங்கே ஒரு போலீஸ் ஸ்டேஷன் இருக் கிறது ; சப்-ரிஜிஸ்ட்ரார் ஆபீஸ் இருக்கிறது ; சப்-மாஜிஸ்ட்ரேட் கோர்ட் இருக் கிறது ; போஸ்டாபீஸ் இருக்கிறது ; பி.டபிள்யூ.டி. செக்ஷன் ஆபீஸ் இருக்கிறது . எலக்ட்ரிசிட்டி ஜூனியர் எஞ்சினீயர் ஆபீஸ் இருக்கிறது. அங்கே இருப்பவர்கள் தொழிலாளர்களோ, ஏழைகளோ அல்ல. எல்லோரும் நல்ல பணக்காரர்கள். அப்படிப்பட்ட ஒரு கிராமத்திற்கு சுமார் 3½ லட்சம் ரூபாய் ஒதுக்கியிருக்கிறார்கள். அது எந்த அடிப்படையிலே ஒதுக்கப்பட்டது என்பது தெரியவில்லை. ஏழை எளிய மக்கள் நிறைந்த, சீரமைப்புப் பணி செய்யப்பட





வேண்டிய கிராமங்கள் எத்தனையோ இருந்தும், இந்தக் கிராமத்தைத் தேர்ந் தெடுத்திருக்கிறார்கள்.

**மாண்புமிகு டாக்டர் இரா. நெடுஞ்செழியன் :** கனம் உறுப்பினர் அவர்கள் இதுபற்றிய விவரங்களை மாவட்ட வளர்ச்சி மன்றக் கூட்டத்தின்போது மாவட்ட ஆட்சித் தலைவரிடம் தெரிவித்திருக்கலாம். எந்த அடிப்படையில் கிராமங்கள் தேர்ந்தெடுக்கப்படுகின்றன என்று கேட்டால் மாவட்ட ஆட்சித் தலைவர் அதற்குத் தகுந்த பதில் கொடுப்பார்.. அவரிடம் வாதிட்டு, ஏற்ற பரிகாரம் காண வழிவகை இருக்கிறது.

**திரு. எ. சுவாமிதாஸ் :** மாவட்ட ஆட்சித் தலைவரிடமும் பலமுறை இதுபற்றி தெரிவித்திருக்கிறேன். எதிர்க்கட்சியினர் சொன்னது அவருடைய காதில் ஏறியதாகவே தெரியவில்லை. எங்களைக் கண்டாலே பயப்படுகிறார். எதிர்க் கட்சிக்காரர்கள் என்றாலே அதிகாரிகள் எல்லாம் பயப்படுகிறார்கள். மாவட்ட வளர்ச்சி மன்றக் கூட்டத்திலும் தெரிவித்தாகிவிட்டது. அதற்கெல்லாம் பதிலே இல்லை. ஆகையினால்தான் இந்த மன்றத்தின் மூலமாக அமைச்சரவர்களின் கவனத்திற்குக் கொண்டு வருகிறேன்.

அந்தக் கிராமத்திற்கு ஏற்கனவே 42,000 ரூபாய் செலவழித்து விட்டதாகத் தெரிகிறது. தெருக்களுக்கு எல்லாம் சிமிண்ட் போடுகிறார்கள். இதற்கெல்லாம் ஓரே ஒரு காரணம், அந்தக் கிராமத்தில் ஆளும் கட்சியைச் சேர்ந்த பஞ்சா யத்து யூனியன் தலைவர் தலைவராக இருக்கிறார் என்பதால்தான். நான் ஏற்கெனவே குறிப்பிட்டதுபோல ஆளும் கட்சிக்காரர்கள் எதிர்க்கட்சிக்காரர்கள் என்று பார்க்காமல் காரியங்கள் செய்யப்பட வேண்டும். இந்த அரசாங்கம் எல்லாக் கட்சிக்காரர்களுக்கும் பொதுவான அரசாங்கம் தான்.

**மாண்புமிகு டாக்டர் மு. கருணாநிதி :** இதுபோன்ற புதுப் பணிகளில் ஆளும் கட்சியினர், எதிர்க்கட்சியினர் என்ற கண்ணோட்டம் இல்லாமல் செயல்பட வேண்டும் என்பதை நான் முழுக்க முழுக்க ஏற்றுக்கொள்கிறேன். அதே நேரத்தில் எதிர்க்கட்சியினருக்கும் இதிலே பொறுப்பு இருக்கிறது என்பதை மறந்துவிடக்கூடாது. தவறு ஏற்படும்போது, உடனடியாக அதைச் சுட்டிக் காட்ட வேண்டும். அனுமதி அளித்து, செயல்படத் தொடங்கிய பிறகு, குற்றச் சாட்டாகச் சொல்வது நல்லதல்ல. அதனால் குற்றஞ்சாட்டக் கூடாது என்றும் நான் சொல்லவில்லை. இப்போது 42,000 ரூபாய் தவறான முறையில் செல வழித்து விட்டதாக திரு. பொன்னப்ப நாடார் அவர்கள் கூட என்னிடம் சொன் னார்கள். தவறு நடப்பதாகத் தெரிந்தவுடன், பணம் ஒதுக்கப்பட்டவுடன்

சம்பந்தப்பட்ட அமைச்சரிடமோ அல்லது என்னிடமோ தெரிவித்திருந்தால் உடனடியாக நடவடிக்கை எடுத்து, அதைத் தடுத்திருக்க முடியும். எனவே, இப்படிப்பட்ட பணிகள் நிறைவேற்றப்படும்போது, நடந்துமுடிந்த பின்னால் குற்றஞ்சாட்டுவதை விட, நடப்பதற்கு முன்னால் தவற்றை எடுத்துச் சொல்வதற்கு முன்வர வேண்டும். இதிலே எதிர்க்கட்சியினர், ஆளும் கட்சியினர் என்ற வேறுபாடு கிடையாது என்று சொல்லிக்கொள்ள விரும்புகிறேன்.

திரு. எ. சுவாமிதாஸ் : மாவட்ட வளர்ச்சி மன்றத்திலேகூடத் தெரிவித்திருக்கிறோம். மாவட்ட ஆட்சித் தலைவரிடமும் இதுபற்றிப் பலமுறை எடுத்துச் சொல்லி இருக்கிறோம். ஆனால் நாங்கள் எதிர்க்கட்சிக்காரர்கள் என்ற காரணத்தினால், நாங்கள் சொல்வது ஒன்றும் எடுபடவில்லை. காரியங்கள் நடப்பதற்கு முன்னால் தெரிவிக்க வேண்டும் என்று முதலமைச்சரவர்கள் சொன்னார்கள். வேலைகள் நடக்கும்போதுதான், டெண்டர்கள் போட்டு முடிந்த பின்னால்தான் எங்களுக்குத் தெரிய வருகிறது. அதற்கு முன்னால் தெரிவதற்குள்ள வாய்ப்பு இல்லாமல் போய்விடுகிறது. ஆகவே, குறைகளை எடுத்துச் சொல்லும்போது எதிர்க்கட்சிக்காரர்கள் என்று பார்க்காமல், அதற்குப் பரிகாரம் காண்பதற்கு அரசாங்கம் கட்சிக் கண்ணோட்டமற்ற முறையில் ஆவன செய்ய வேண்டுமென்று கேட்டு முடித்துக்கொள்கிறேன்.

திரு. வி. கிருஷ்ணமூர்த்தி (நெல்லிக்குப்பம்) : மதிப்பிற்குரிய தலைவரவர்களே, கவர்னர் அவர்களுடைய உரைக்கு நன்றி அறிவிக்கின்ற தீர்மானத்தை நான் ஆதரித்து உரையாற்ற விரும்புகிறேன்.

தமிழகத்தில் அண்மையிலே அடித்த புயல் எவ்வளவு பேர்களைப் பாதித்தது; 2, 3 மாவட்டங்களிலேயுள்ள ஆயிரக்கணக்கான மக்கள் வீடு இழந்தும், நிலம் இழந்தும், மீண்டும் விவசாயத்தைச் செய்யக்கூடிய வசதிகளை இழந்தும் இருக்கக்கூடிய நிலை இருந்தது. நம்முடைய தமிழகத்தின் முதல்வர் அவர்கள் தான் வெள்ளம் பாதிக்கப்பட்ட பகுதிகளுக்கு ஓடோடி வந்து உடனடியாக, மத்திய அரசாங்கத்தை எதிர்பார்க்காமலேயே செலவுகளைச் செய்தார்கள். இது வரை 5 கோடி ரூபாய்வரை செலவு செய்திருப்பதாக நாம் பார்க்கின்றோம். ஆனால், ஏறக்குறைய இரண்டு மாதங்கள் ஆகியும் மத்திய அரசாங்கத்தில் இருக்கிறவர்கள் வெள்ள நிவாரணப் பணிக்காக ஏதாவது உருப்படியான காரியங்களைச் செய்திருக்கிறார்களா என்பதைத்தான் தமிழகத்திலேயுள்ள மக்களும், நாட்டு மக்களும் அறிய ஆவலாக இருக்கிறார்கள்.

ஏற்கனவே நம் தமிழகத்தில் பஞ்சம் ஏற்பட்ட சமயத்திலே பிரதம மந்திரி அவர்கள் ஓடோடி வந்தார்கள். விமானத்திலே வந்தார்கள். காரில் ஏறி





நாளிலே எல்லா இடங்களையும் பார்வை இட்டார்கள். நாம் 10 கோடி என்று கேட்டால், உனக்கு 20 கோடி ரூபாய் தருகிறேன் என்று சொன்னார்கள். ஆனால், இன்றைய தினம் வெள்ளம் அடித்து ஆயிரக்கணக்கான மக்கள் வேதனைப்படும் சமயத்திலே அந்த பிரதம மந்திரிதான் இருக்கிறார்களா அல்லது வேறு பிரதம மந்திரி இருக்கிறார்களா என்று தெரியவில்லை. ஏதோ கிணற்றிலே கல்லைப் போட்டதைப்போல், மத்திய அரசாங்கத்தின் உதவி கடனாகக் கொடுக்கிறார்களா, அல்லது மானியமாகக் கொடுக்கிறார்களா என்று இன்னமும் தெரியவில்லை. ஒரு வேளை தி.மு.கழகத்தின் ஆதரவினால் அன்றைக்குப் பிரதம மந்திரியாக இருக்க வேண்டிய சூழ்நிலையில்தான் உதவினார்களா, இன்றைக்குச் செல்வாக்கு தனக்கு வந்துவிட்டது என்றதால் இந்தத் தமிழகத்திலேயும் தன்னுடைய ஆட்சி இருக்க வேண்டும் என்பதால் இப்படிப் பேசாமல், இந்த 'டபில் ஸ்டாண்டர்டு' கடைப்பிடிக்கிறார்களா என்பதை அறிய விரும்புகிறேன். எனவே, மத்திய அரசாங்கம் இதிலே சுணக்கம் காட்டுவதை நான் மிகவும் வன்மையாக கண்டிக்கிறேன்.

உணவு நிலைமைபற்றி கவர்னர் உரையிலே சொல்லியிருக்கிறார்கள். எதிர்க்கட்சியிலே இருக்கக்கூடிய சிலர்கூட இங்கே அதுபற்றிப் பேசினார்கள். உணவுப் பொருள்களின் விலை விஷம்போல் ஏறுகிறது என்றும், இவைகளை எல்லாம் இந்த அரசாங்கம் பரிசிலனை செய்ய வேண்டுமென்றும் சொன்னார்கள். தமிழகத்தில் இந்த விலை ஏற்றம், உற்பத்தியிலே இருக்கும் கோளாறினால் இல்லை. ஆனால் வியாபாரிகள், வியாபாரிகளை உள்ளடக்கிய மற்றும் சில காரணங்களினால் தான் இந்த "ஏராட்டிக் ட்ரென்ட்ஸ்"—அடிக்கடி விலைகள் ஏறுவது; திடீரென்று இறங்குவது போன்றவைக் காணப்படுகின்றன. மணிலா விலை ஏன் ஏறுகிறது? பிண்ணாக்கு கிடைக்கவில்லை. பிண்ணாக்கை "டிஆயில்டு கேக்காக" மாற்றுவதற்கு லைசென்ஸ் கொடுத்து விட்டதால், மத்திய அரசாங்கம் சிலருக்கு "இம்போர்ட் என்டைட்டில்மென்ட்" கொடுத்து விட்டதால், தமிழகத்திலேயுள்ள பிண்ணாக்கு எல்லாம் பம்பாய்க்குச் சென்று "டீஆயில்" செய்து— அதாவது பவுடராகச் செய்து அவை அங்கிருந்து ஈஸ்ட் இரோப்பியன் கன்ட்டிரிக்கு ஏற்றுமதி செய்கிறார்கள். எனவே, இங்கே உரம் கிடைக்கவில்லை. பிண்ணாக்கு மூட்டை 50 ரூபாய், 100 ரூபாய் என்று விற்றால் யார்தான் அதை வாங்கி நிலத்திலே போட்டுப் பயிரிட முடியும்? மத்திய அரசாங்கத்தின் கொள்கை மாநிலத்தைப் பாதிக்கிறது. உணவு நிலைமையிலே இங்கே பஞ்சம் வந்துவிடவில்லை. ஆனால், பஞ்சத்தை உருவாக்குகிறார்கள்.

நேற்றுக்கூட நான் கேள்வி நேரத்தின் பொழுது சொன்னேன், நம்முடைய அரசாங்கத்தின் கொள்கையிலே "லெவி" சிஸ்டம் இருக்கிறது. நெல் வாங்குவதற்கு ஆள் இல்லை. தஞ்சாவூரிலேயும், மற்ற சில மாவட்டங்களிலேயும்,

எங்களுடைய மாவட்டத்தின் சில தாலுக்காக்களிலும் நெல்லை வாங்க ஆள் இல்லை என்று விவசாயிகள் சொல்லுகிறார்கள். ஆனால் அரசாங்கம் நிர்ணயித்த விலையிலே நெல் வாங்கப்படவில்லை என்றால், "லெவி" எதற்காகப் போட வேண்டும்? வேண்டுமானால் சிவில் சப்ளைஸ் கார்ப்பரேஷன் நேரடியாகக் கொள் முதல் செய்யட்டும். அவர்கள் போய் போர்ட் ஆப் ரெவின்யூவிலே உட்கார்ந்து விடுவார்கள், யாராவது வாங்கிக் கொடுத்து விடுவார்கள் என் ல் அதற்கு எதற்கு சிவில் சப்ளைஸ் கார்ப்பரேஷன் என்ற ஒன்று? நாம் விலை ஏறும் பொழுதுதான் 'லெவி' வைக்க வேண்டுமேதவிர, மற்ற சமயங்களிலே வைக்கக் கூடாது. அப்பொழுதுதான் அரிசி விலை ஏற்றத்தைக் கட்டுப்படுத்த உதவிகரமாக இருக்கும். ஏற்கனவே வியாபாரிகள் போய் நெல்லை வாங்குவ தில்லை. இப்பொழுது 20 பர்சன்ட் லெவி என்று வைத்துவிட்டதால், ஒரு வியாபாரி வாங்கி ஒரு ஹோல்சேல் வியாபாரியிடம் கொடுத்துவிட்டு ரசீது பெற்ற பிறகுதான் அவர் அதை டிரான்ஸ்போர்ட் செய்ய முடியும். இல்லை என்றால், வழியிலேயே அது பறிமுதல் செய்யப்படும். அதனால் யாரும் நெல்லை வாங்குவதில்லை. அதனாலே நெல் விலை குறைகிறது. வாங்குவதிலே தேக்கம் ஏற்படுவதால், அரசி விலை ஏறுகிறது. ஆகவேதான் நெல் விலைக்கும், அரிசி விலைக்கும் "எ கிரேட் புரபோர்ஷன்"-ல் ஏற்றத்தாழ்வு இருக்கிறது. அது ஒழிய வேண்டுமானால் "லெவியை" எடுக்க வேண்டும். நெல் வாங்கக் கூடிய நிலைமை அதிகமாக இருக்கும்பொழுதுதான் "லெவி" இருக்க வேண்டும். எனவே, அது இப்பொழுது தேவையில்லை என்று சொல்லிக்கொள்கிறேன்.

மற்றும், பிற அத்தியாவசிய உணவுப் பொருட்களின் விலைகள் ஏறாமல் இருக்க சிவில் சப்ளைஸ் அதிகாரிகள் ஏனைய பிற நடவடிக்கைகளை எடுக்க வேண்டு மென்று கேட்டுக்கொள்ளுகிறேன். இல்லை என்றால் நெல்லுக்கு "ஹோல்சேல் புராக்கியூர்மென்ட்" செய்து விடுங்கள். நெல் உற்பத்தி செய்தால் அந்த நெல்லை அரசாங்கம்தவிர வேறு யாரும் வாங்கக் கூடாது. அதை வாங்கி ஒரு இடத்திலே கொடுத்து, அரிசியை விற்பனை செய்வதற்கு வேண்டிய ரெகுலேஷன் செய்யலாம். எல்லா நெல்லையும் அரசாங்கமே கொள்முதல் செய்யலாம் என்ற நிலை இருந்தால் அரிசி விலை குறிப்பிட்ட விலைக்கு மேல் ஏறாது. இப்பொழுது நெல்லை சிவில் சப்ளைஸ் கார்ப்பரேஷன் வாங்குகிறது, அதற்குப் பிறகு வியாபாரி களும் வாங்குகிறார்கள் என்ற நிலை இருப்பதால் நெல், அரிசி விலையில் ஏற்றத் தாழ்வு ஏற்படுகிறது. அதனாலே ஏறக்குறைய 80 சதவிகித மக்கள் பாதிக்கப் பட்டிருக்கிறார்கள். ஆகையால், ஒன்று நெல்லை அரசாங்கமே பூராவும் வாங்கக் கூடிய நிலைமை இருக்க வேண்டும். அப்படி இல்லை என்றால், 'லெவி' தேவை யில்லை. இப்படிப்பட்ட தன்மையிலே அரிசி விலையைக் கட்டுப்படுத்தக்கூடிய வகைகளை மேற்கொள்ளலாம் என்று சொல்லிக்கொள்கிறேன்.





மூன்றாவதாக, மின்சார இலாக்காவைப்பற்றி நேற்று எல்லாம் சொன் னார்கள். அதிலே நிறைய குறைபாடுகள் இருப்பதாகச் சொன்னார்கள். அந்தக் குறைபாடுகள் எங்கே இருக்கின்றன என்பதைத்தான் நான் சுட்டிக்காட்ட விரும்புகிறேன். அந்தக் குறைபாடுகள் மாகாண அரசாங்கத்திடம் இல்லை. மத்திய அரசாங்கத்திடம் இருக்கிறது.

கல்பாக்கம் அணு மின் நிலையம் மத்திய அரசாங்கத் திட்டம். அதேபோல் நெய்வேலி மின் நிலையத் திட்டம் மத்திய அரசாங்கத் திட்டம். இவர்கள் இரண்டு பேரும் சப்ளை செய்வார்கள் என்று எதிர்பார்த்துத்தான் நாம் திட்டங்களைப் போட்டோம். பல இடங்களிலே மின்சார கனெக்ஷன் கொடுத்தோம். அது தப்பா? இப்பொழுது கல்பாக்கம் மின் நிலையத் திட்டம் இயங்கவில்லை என்றால், மத்திய அரசாங்கத்தை இடிக்க வேண்டியவர்கள் மாகாண அரசாங்கத்தை இடித்தால் என்ன ஆவது? உடனே மத்திய அரசாங்கத்தைக் கேட்கவேண்டும், நான்காவது ஐந்தாண்டுத் திட்டத்திலே நிறைவேற்றப்பட வேண்டிய கல்பாக்கம் திட்டம் ஏன் ஐந்தாவது திட்டத்திற்குப் போனது? ஏன் நெய்வேலியிலே சரி யாக மின் திட்டம் இயங்கவில்லை? என்று.

நெய்வேலியிலே இரண்டாவது சுரங்க வெட்டுப் பிரச்சினையைப்பற்றி எல்லாம் கூட இங்கே உறுப்பினர்கள் பேசினார்கள். மத்திய அரசாங்கத்திலே இருக்கக் கூடியவர்கள் எவ்வளவு திறமையற்ற, எவ்வளவு மோசமான திட்டங்களைப் போடுகிறார்கள் என்பதற்கு ஒரு உதாரணத்தை நான் காட்ட விரும்புகிறேன். நான் பாராளுமன்ற உறுப்பினராக இருந்தபொழுது, "இரண்டாவது மைன் கட்" தேவை என்று சொன்னேன். காரணம், இந்த மத்திய அரசாங்கத் திட்டத்திலே எங்களுக்கு நம்பிக்கை இல்லை. 600 மெகாவாட் மின்சாரத்தை இவர்கள் இரண்டாவது சுரங்க வெட்டுச் செய்யாமல் நமக்கு எப்படி உற்பத்தி செய்து கொடுப்பார்கள் என்பதிலே எங்களுக்கு சந்தேகம் உண்டு. இவர்கள் சேலம் உருக்காலைக்கு வேண்டிய கரியைக் கொடுக்க மாட்டார்கள் என்பதும் தெரியும். ஆகவே, இரண்டாவது சுரங்கம் வெட்டும் திட்டத்தை மேற்கொள்ள வேண்டும் என்று கேட்ட சமயத்திலே, கன்சல்ட்டேட்டிவ் கமிட்டியிலே ஒரு அறிக்கையைக் கொடுத்தார்கள் மத்திய அரசாங்கம். அதிலே கூறுகிறார்கள்:

The entire Neyveli Lignite Project, under implementation, is for the mining of 6.3 million tonnes of lignite per annum to be utilised as follows :—

4.2 million tonnes—for producing 600 MW of electricity.

0.6 million tonnes—for producing 152,000 tonnes of Nitrogenous fertilisers in the form of urea.

**மாண்புமிகு மாற்றுத்தலைவர் (திரு. நா. வீராசாமி)**: சீக்கிரம் முடித்துக் கொள்ளுங்கள். அவைகளை எல்லாம் படித்துக் கொண்டிருக்க வேண்டாம்.

THIRU V. KRISHNAMOORTHI : 1.5 million tonnes—for producing 3,80,000 tonnes of carbonised lignite briguettes.

The entire requirement of 6.3 million tonnes per annum for the above mentioned schemes are estimated to be met from the existing mine cut. As such, there is no immediate need to open a second mine cut particularly to cater to the requirements of the lignite consuming units.

That is the point, I want to refer to. ஆகையால் இரண்டாவது
சுரங்க வெட்டு அவசியம் இல்லை என்று சொல்லிவிட்டார்கள். இது
எங்களுடைய குற்றமில்லை. நாங்கள் அதை வற்புறுத்தவில்லை என்று சொல்லக்
கூடாது. இப்பொழுதும் வற்புறுத்துகிறோம். இரண்டாவது மைன் வெட்ட
வேண்டுமென்று மத்திய அரசாங்கத்திற்கு எதிராகச் சர்வ கட்சியினரும்
போராட்டம் நடத்தட்டும். அதை யாரும் வேண்டாம் என்று சொல்லவில்லை.
ஆனால், தயவுசெய்து இந்த அரசாங்கத்தின்மீது பழி சுமத்தாதீர்கள். 1971-லே
அவர்கள் சொன்னார்கள், 'பவர் அண்ட் எனர்ஜி' அதாவது மின்சாரம்
தெற்கே டெபிசிட்டாக இருக்கிறது என்று சொல்லும்போது ராஜ்ய சபையில்
கேட்ட கேள்விக்குப் பதிலாகச் சொன்னார்கள்.

"There would be a deficit of 584 MW in the Southern Region, the deficit being 249 MW in Madras State by 1970–71. The shortage would arise because of the fact that the Kalpakkam (Nuclear) Power Station, which was earlier scheduled to be commissioned by 1970–71 is now expected to be commissioned during the Fifth Plan period."

ஆகையால் அவர்களை எதிர்பார்த்து இங்கே மின்சார
இலாக்கா பணியாற்றுகிறது. அப்படிப் பணியாற்றுவதாலும், அவர்கள்
போட்ட திட்டங்களை ஒழுங்காக நிறைவேற்றாததாலும், இரண்டாவது சுரங்க
வெட்டு நெய்வேலியிலே வெட்ட வேண்டிய அவசியமில்லை என்று சொன்ன
காரணத்தினாலும், இன்றைய தினம் இங்கே மின்சாரத்திற்குப் பற்றாக்குறை
வந்துவிட்டது. இருக்கிற மின்சாரத்தை எப்படி எப்படிச் சிக்கனமாகப் பயன்
படுத்திப் பிரச்சினையை நிவர்த்தி செய்யலாம் என்று சொல்லுவதுதான்
நியாயம். ஆகவே, எதிர்க்கட்சி உறுப்பினர்கள் இந்த அரசாங்கத்தின்மீது
குறைப்பட்டுக்கொள்வதிலே பிரயோசனம் இல்லை.



1962-லே நான் இந்தச் சட்ட மன்றத்திலே இருந்திருக்கிறேன். அப்பொழுது
திரு. ராமய்யா, திரு. வெங்கட்ராமன் போன்ற காங்கிரஸ் அமைச்சர்கள் சொன்
னார்கள், ஒகனேக்கல்லிலே நீர் மின் நிலையம் கட்டவிருக்கிறோம். அதன் மூலம்
800 மெகாவாட் மின்சாரம் கிடைக்கும். அதிலே ஒரு பங்கு மைசூருக்குப்
போனாலும், மற்றொரு பங்கு நமக்குக் கிடைக்கும் என்று சொன்னார்கள்.
அப்படிப் பேசிவிட்டுப் போய்விட்டார்கள். ஒகனேக்கல் அங்கேயே இருக்
கிறது. ஆனால் அந்தத் திட்டம் என்ன ஆனது? அதைப்பற்றிப் பரிசீலனை
செய்ய வேண்டும். கடலூரிலேயும், தூத்துக்குடியிலேயும் அனல் மின் நிலையம்
ஏற்படுத்த வேண்டுமென்று வெகு நாட்களாகச் சொல்லிக்கொண்டு வருகிறோம்.
ஆனால், மத்திய அரசு அத்திட்டங்களை நிறைவேற்றவில்லை. இவைகள் எல்லாம்
நிறைவேற்றப்படாமல் இருப்பதால், தொடர்ந்து இந்த மின்சாரத் தட்டுப்பாடு
4, 5 ஆண்டுகளுக்கு இருந்துதான் தீரும். நெய்வேலியிலே இருக்கும் மின்
திட்டத்தினால் நமக்குப் பயனில்லை. அதையும் திருத்தியாக வேண்டும். ஆகவே,
கடலூரிலேயும், தூத்துக்குடியிலேயும் அனல் மின் நிலையங்களை உடனே
ஏற்படுத்தும் நடவடிக்கைகளை மத்திய அரசு எடுக்க வேண்டுமென்று நான்
கேட்டுக்கொள்ளுகிறேன்.

ஊழலைப்பற்றி ஒரு விஷயம். ஊழல், ஊழல் என்று சொன்னார்களே, எங்கே
ஊழல் வந்துவிட்டது? அப்படிச் சொன்னவர்கள் எங்கே இருக்கிறார்கள்? சட்ட
மன்றத்திற்கு ஏன் வரவில்லை? சட்டமன்றமே செத்துவிட்டது என்றார்களே,
துஞ்சினார் செத்தாரையொப்பர் என்று சொன்னதற்கொப்ப—சட்டசபைக்கு
வராமல் ஸ்டுடியோவில் தூங்கிக்கொண்டிருக்கிறார்களே, அவர்கள்தான் செத்த
வர்கள் என்று அர்த்தம். அவர்கள் ஏன் இங்கே வந்து சொல்லக் கூடாது?
பங்களா தேஷுக்கு செவன்த் ப்ளீட் வருகிறது, வருகிறது என்று எண்ணித்
தவம் செய்தவர்களைப் போல—விசாரணைக் கமிஷன் வருகிறது, வருகிறது, வரு
கிறது என்று ஸ்டுடியோவில் இருந்து தவம் செய்கிறார்கள். இந்த அரசு
இப்போது பஸ்களை எல்லாம் தேசியமயமாக்கியிருக்கிறது. இந்தத் திட்டத்தினால்
ஊழல் ஒழிக்கப்படுமா, இல்லையா? பஸ் ரூட் பர்மிட் கொடுப்பது என்கிற
போதுதான்—அப்பீல் செய்கிறவர் எந்தக் கட்சியாக இருந்தாலும் ஊழல்
மார்க்கத்தில் போகப்பார்க்கிறார்கள். எல்லா பஸ்களையுமே தேசியமாக்குகிற
நோக்கில் தனியாருக்கு பஸ் ரூட்டே கிடையாது. அதனால் ஏற்படுகிற லஞ்சம்
கிடையாது. இது ஒரு பெரிய லஞ்ச ஒழிப்பு நடவடிக்கை இல்லையா? ஊழலை
ஒழிக்க வேண்டும், ஊழலை ஒழிக்கவேண்டும் என்கிறவர்கள் ஏன் இங்கே வந்து
இதைப் பாராட்டவில்லை?

இதுமட்டும் போதாது. சென்னை நகரத்தில் ஒருவருக்கு 70 வீடுகள்கூட
இருக்கின்றன. எம்.ஜி.ஆர்.க்கு 40 வீடுகள் பல பெயர்களில் இருக்கின்றன.

எம்.ஆர். ராதாவுக்கு 70 வீடுகள் இருக்கின்றன. ஏ.எல். முதலியாருக்கு 71 வீடுகள் இருப்பதாகக் கேள்வி. நூறு ஏக்கராவுக்கும் மேற்பட்ட இடத்தில் முத்தையா செட்டியார் பங்களா இருக்கிறது. ஏன் இப்படி? ஆகவே சென்னை நகரத்தில் எந்தத் தனி மனிதனுக்கும் இரண்டு அல்லது மூன்று க்ரவுண்டுக்கு மேல் நிலம் இருக்கக்கூடாது, ஒரு வீட்டுக்கு மேல் இருக்கக்கூடாது, ஒரு லட்சம் ரூபாய் மதிப்புக்குமேல் வீடு இருக்கக்கூடாது என்கிற ஒரு புரட்சிகரமான, சோஷலிசச் சட்டத்தை இந்தச் சட்டமன்றத்திலேயே நாங்கள் இயற்ற தயாராய் இருக்கிறோம். ஊழல், ஊழல் என்று சொல்லி எங்களை விலக்கிவிட்டு, ஊழலை வளர்க்கிறவர்களுக்கு உதவி செய்யக்கூடாது என்று எதிர்க்கட்சிக்காரர்களுக்குச் சொல்ல விரும்புகிறேன்.

எங்களுடைய குறைபாடுகளை மிகப் பெரியதாகக் காட்டி, எங்கள் அரசாங்கத்தைப்பற்றிக் கண்டபடி எல்லாம் பேசி இந்திரா காங்கிரஸ் கட்சி ஒருநாளும் வளர்ந்துவிட முடியாது. அந்த மனப்பால் குடிக்கக் கூடாது. திண்டுக்கல் தொகுதியில் எம்.ஜி.ஆர். ஐ நிறுத்திவைத்து எங்களைத் தோற்கடிக்கலாமா என்று பார்க்கிறார்களேதவிர, தனித்து நிற்க எங்கே தைரியம் இருக்கிறது? வெள்ள நிவாரணத்திற்காகக் கொடுக்கக்கூடிய உதவியைக் கொடுக்காது வைப்பதனாலோ, எந்த எந்தத் திட்டங்களின்மூலம் தமிழகத்திற்குக் கெடுதல் உண்டாக்கலாம் என்று யோசிப்பதனாலோ எவ்விதப் பயனும் ஏற்படப்போவதில்லை. இங்கே சட்டம் ஒழுங்கு கெட்டுவிட்டது என்கிறார்களே. ஆந்திராவின் நிலைமை என்ன? எங்கே அங்கே சட்டம் இருக்கிறது? ஏன் அதைப்பற்றி வாயே திறக்கவில்லை?

(மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர்—தலைமை)

தயவுசெய்து அப்பேர்ப்பட்ட முறையில் ஈடுபடவேண்டாம், சோஷலிச முறைகளுக்கு மாறாக நாங்கள் எந்தக் காரியம் செய்தாலும் கண்டியுங்கள். மக்கள் நலனுக்காக நாங்கள் பாடுபட்டுக்கொண்டிருக்கும்போது எங்களை ஆதரிக்க வேண்டும் என்று கூறி, என் உரையை முடித்துக்கொள்கிறேன். வணக்கம்.

திரு. என். மருதாசலம்: மாண்புமிகு உதவி சபாநாயகர் அவர்களே, இன்று ஆளுநர் உரையின்மீது என் கருத்துக்களைக் கூற விரும்புகிறேன்.

ஏற்கனவே ஆளுநர் உரைக்கு நன்றிதெரிவிக்கும் தீர்மானத்திற்கு நான் ஒரு ஐந்து அம்ச திருத்தத்தைக் கொடுத்திருக்கிறேன். எனக்கு முன்னே பேசியவர் மின்சாரத்தைப்பற்றி சாங்கோபாங்கமாகப் பேசினார். அது எல்லாம் இன்றுள்ள மின்சார வெட்டினால் ஏற்பட்டிருக்கிற அவதிகளை அதிகப்படுத்தக் கூடியதாகத்தான் இருக்கும். ஆளுநர் அவர்கள் தம் உரையில் குறிப்பாக சமய





நல்லூர் அனல் மின்சார திட்டத்தைப்பற்றி—அதை மூடிவிட்டது பற்றி—ஒன்றும் குறிப்பிடவில்லை. மேலும் மத்திய சர்க்கார் உணவு தானிய மொத்த வியாபாரத்தை முழுக்கவும் ஏற்று நடத்த வேண்டும் என்பதுபற்றியும் ஆளுநர் உரையில் ஒன்றும் கூறவில்லை. இதுபோல ஐந்து விஷயங்களை நான் என் திருத்தத்தில் குறிப்பிட்டிருக்கிறேன்.

ஆளுநர் அவர்கள் மில்களை அரசாங்கமே எடுத்து நடத்துவதுபற்றி குறிப்பிட்டிருக்கிறார். குறிப்பாக, இன்றைக்கு முருகன் மில்லை அரசாங்கமே எடுத்து நடத்துகிறது. ஆனால் முன்பு அந்த மில்லில் எந்த எந்த ஆட்கள் வேலை செய்துகொண்டிருந்தார்களோ அவர்களை எல்லாம் வேலையில் இருந்து தள்ளிவிட்டு, புதிய ஆட்களைப் போட்டு நடத்துகிறார்கள். இதுபற்றி கமிஷனர் ரிப்போர்ட்டும் கொடுத்திருக்கிறார். முன்னே வேலை செய்து கொண்டிருந்த ஆட்களுக்கு முதலில் வேலை கொடுக்க வேண்டும். அதுபோல அரசாங்கம் எடுத்து நடத்துகிற மில்களிலேயே இல்லை என்றால் தனியார் மில்களில் எப்படி நடத்துவார்கள்? ஆகவே தள்ளப்பட்ட ஆட்களை உடனடியாக வேலைக்கு எடுத்துக் கொள்ள வேண்டும் என்பதாக அரசாங்கம் உத்தரவு போடவேண்டும் என்பதாகத் தெரிவித்துக்கொள்கிறேன்.

அடுத்தபடியாக, இந்தத் தமிழ்நாட்டில் தாழ்த்தப்பட்ட மக்கள் இன்றைய தினம் முனிசிபாலிட்டிகளில் மிகவும் அருவருக்கத்தக்க வேலைகளைச் செய்து கொண்டிருக்கிறார்கள். நகரங்களின் சுகாதாரத்தையே பாதுகாக்கின்றவர்கள் இவர்கள்தான். மக்களின் சுகாதாரத்தைப் பேணிக் காக்கின்ற லட்சக்கணக்கான தாழ்த்தப்பட்ட மக்கள் இன்றையதினம் முனிசிபாலிட்டிகளில் எந்தவிதமான நிலையில் இருந்துகொண்டிருக்கிறார்கள் என்பதை இந்த அரசாங்கம் கொஞ்சம் கவனிக்க வேண்டும். பிச்சைக்காசு போல அவர்களது மாதச் சம்பளம் பதினைந்து ரூபாய், 50 காசுதான். அலவன்சோடு சேர்த்து 120 ரூபாய் வரலாம். அவர்களது அடிப்படைச் சம்பளத்தை உயர்த்தவேண்டும் என்று நான் முன்பு இருந்த சட்டமன்றத்திலும் பலமுறை சொல்லிவந்திருக்கிறேன். இப்போது சொல்லி வருகிறேன். எந்தவிதமான விமோசனமும் இதுவரை ஏற்படவில்லை. முனிசிபல் நகர சுத்தித் தொழிலாளர்களாகிய அந்தத் தாழ்த்தப்பட்ட மக்கள் அனைவரும் கூட தங்களுக்கு இன்ஷூரன்ஸ் வேண்டும், பிராவிடெண்ட் பண்டு வேண்டும், அடிப்படைச் சம்பளம் 50 ஆகவாவது [illegible] வேண்டும் என்று கோரியிருக்கிறார்கள். மில் தொழிலாளர்களுக்கு இருப்பதுபோல அவர்களுக்கு வைத்திய வசதி எதுவும் கிடையாது. ஆகவே [illegible] இந்த அரசு தாழ்த்தப்பட்ட, ஹரிஜன மக்களிடத்தில் கருணை வைத்து அந்தத் தொழிலாளர்களது கோரிக்கைகளை உடனடியாக நிறைவேற்றித் தர முன்வரவேண்டும்.

இன்றையதினம் அந்த மக்கள் மட்ட ரோடில் குடிசைகல் சட்டிபானைகளை வைத்துக்கொண்டு வாழ்கிறார்கள். அவர்களுக்கு வீடுகள் கட்டிக்கொள்ள மனைக்கட்டுகள் வழங்கவேண்டும்.

இன்று இருக்கக்கூடிய நிலையில் மாதம் ஒன்றுக்கு ஒரு ரூபாய் வீதம் போனஸ் பண்டு என்று அவர்களிடம் வாங்குகிறார்கள். வேலை போனால் அவர்களுக்கு அதில் இருந்து 200 ரூபாய் கொடுக்கிறார்கள். அதுவும் முனிசிபாலிட்டிக்கு நடையாய் நடந்து, அவர்கள் மேலே அனுப்பியிருப்பதாகச் சொல்லி, மேலே இருந்து வருவதற்குள் இவர்கள் மேலே போய்விடுகிறார்கள். அப்படியின்றி அந்தப் பணத்தை உடனடியாக முனிசிபாலிட்டிகளே கொடுக்கத் தக்க ஏற்பாட்டைச் செய்யவேண்டும்.

இன்றைக்கு இந்த சுகாதாரத் துறையிலே ஒருசில பாகுபாடுகள் இருக்கின்றன. அதாவது சுகாதாரத் துறையில் சுகாதார இன்ஸ்பெக்டர்கள் இருக்கிறார்கள். 1968-ம் ஆண்டிலே சுகாதார இன்ஸ்பெக்டர்களாக இருந்தவர்களாக இருந்தால் அவர்கள் கலப்படக் கேஸ்களைப் பிடித்தால் அது செல்லுபடியாகும். 1968-க்கு பின்னாலே சுகாதார இன்ஸ்பெக்டர்களாக சேர்ந்திருந்து அவர்கள் கலப்படக் கேஸ்களைப் பிடித்தால் அது செல்லுபடியாகாது. ஒரே துறையிலே ஒரு பிரிவினர் பிடித்தால் செல்லுபடியாகும், மற்றொரு பிரிவினர் பிடித்தால் செல்லுபடியாகாது. இதனால் கலப்படம் செய்பவர்கள் தப்பித்துக்கொள்வதற்கு வாய்ப்பிருக்கிறது. ஆகவே, எப்பிரிவினர் பிடித்தாலும் செல்லுபடியாகும் என்று அரசு சட்டத்திலே திருத்தம் கொண்டு வரவேண்டுமென்று கேட்டுக் கொள்கிறேன்.

அடுத்தபடியாக, உபாத்தியாயர்கள் மாநாடு கோவையிலே கூடியது. கோவையில் கூடியிருந்தபொழுது முதலமைச்சர் அவர்களும் கல்வியமைச்சர் அவர்களும் மாநாட்டிற்கு வருவார்கள் என்று பெரிய விளம்பரப்படுத்தியிருந்தார்கள். ஆனால், அமைச்சர்கள் வராததனால் அவர்கள் மிகவும் ஏமாந்து விட்டார்கள். ஏனென்றால், உபாத்தியாயர்கள் தங்களுடைய குறைகளை, கோரிக்கைகளைச் சொல்வதற்குத் தான் அமைச்சர்களைக் கூப்பிட்டனர். குறைகளை முறையிடுவதற்கும், தீர்ப்பதற்கும்தான் அவர்கள் அமைச்சர்களைக் கூப்பிட்டனரே தவிர வேறொன்றுமல்ல. ஆனால், அமைச்சர்கள் அந்த மாநாட்டிற்கு வரவே இல்லை. காரணம், என்னவோ தெரியவில்லை. வந்திருந்தால் உபாத்தியாயர்களுக்குச் சட்டம் கொண்டுவரப்போகிறோம் என்று சொல்வார்கள். சட்டம் கொண்டு வரப்போவதில் ஏதாவது ஓட்டை இருக்குமோ



என்ற சந்தேகத்தினால் ஒருவேளை வராமல் இருந்தார்களோ என்னவோ தெரியவில்லை. யார் கூப்பிட்டாலும் வந்து, நீங்கள் உங்களுடைய கருத்தைச் சொல்வதிலே எந்தவிதமான ஆட்சேபணையும் இல்லை என்று கூறவிரும்புகிறேன்.

அன்றைக்கு விவசாயப் போராட்டத்தின்போது 12 அம்ச கோரிக்கை ஒன்றை உங்கள் முன்னால் வைத்தோம். அதில் மின்சார அம்சம் மட்டும்தான் அன்றைக்குப் பேசி முடிக்கப்பட்டது. மற்ற அம்சங்கள் பற்றி விவாதிக்கவும், பேசவும் செய்தார்கள். அவற்றின்மீது அரசு நடவடிக்கை எடுக்கவில்லையென்று கூறவிரும்புகிறேன்.

**மாண்புமிகு டாக்டர் மு. கருணாநிதி:** தலைவர் அவர்களே, என்னென்ன கோரிக்கைகள் வைக்கப்பட்டன, என்னென்ன முடிவுகள் எடுக்கப்பட்டன, எவை எவை தீர்க்கப்படவில்லையென்பதை உறுப்பினர் அவர்கள் விவரமாகச் சொல்லவேண்டுமென்று விரும்புகிறேன்.

**திரு. கே. டி. கே. தங்கமணி:** 11 அம்ச கோரிக்கைகள் என்ன என்ன என்பது ஆட்சியாளர்களுக்கே தெரியும். சமீபத்திலே அந்த விவசாயப் போராட்டக் குழுவினுடைய கன்வீனராக இருந்தவர் என்னென்ன கோரிக்கைகள் இன்னும் அமுல் நடத்தப்படவில்லை என்பதைப் பத்திரிகைகளிலே அறிக்கைவிட்டு தெரிவித்திருக்கிறார்கள்.

**மாண்புமிகு டாக்டர் மு. கருணாநிதி:** அதைத்தான் நான் தெளிவாக சொல்ல விரும்புகிறேன். மாண்புமிகு உறுப்பினர் மருதாசலம் அவர்கள், மின் சட்டணம் பற்றிய முடிவு செயல்பட்டதே தவிர வேறு எந்தக் கோரிக்கையுமே நிறைவேற்றப்படவில்லையென்று சொன்னார்கள். இது பத்திரிகையிலே வரும். இவைதான் பத்திரிகையிலே செய்திகளாக வந்திருக்கின்றன.

முன்பே நான் சட்டசபையிலே சொல்லியிருக்கிறேன், எவை எவை நிறைவேற்றப்பட்டிருக்கின்றன என்று. மாண்புமிகு உறுப்பினர் கே. டி. கே. தங்கமணி அவர்கள் எடுத்துக் காட்டியதைப் போல, மாநிலப் போராட்டக் குழுவினுடைய தலைவர் அவர்கள் என்னைக் கடந்த வாரம் வந்து சந்தித்தார்கள். நான் அவர்களிடத்திலே பேசும்போது முடிவு எடுக்கப்பட்டு இவை, இவை நிறைவேற்றப்படவில்லை என்று சொன்னார்கள். ஒவ்வொன்றாகச் சொன்னார்கள். நான் ஒவ்வொன்றிலும் என்ன முடிவு எடுக்கப்பட்டது, ஒவ்வொன்றிலும் எந்த வகையிலே அரசு நடவடிக்கைகள் எடுக்கப்பட்டிருக்கின்றன என்று கூறினேன். நான் எல்லாவற்றிற்கும் பதில் கூறினேன். அவர்கள் பத்திரிகையிலே விடுத்த அறிக்கையிலேகூட பெரும்பான்மையானவைகள் நிறைவேற்றப்பட்டு, நிறைவேறாமலிருக்கிற ஒருசிலவற்றைப்பற்றி முதலமைச்சரோடு நான் பேசி இருக்கிறேன் என்று கூறியிருக்கிறார். அந்த ஒருசில என்ன என்ன என்று

கேட்டால், பயிர் இன்ஷூரன்ஸ், ஒன்று. அது மாநில அரசு செய்து முடிக்கக் கூடிய காரியம் அல்ல. மத்திய அரசும் அதில் உதவி செய்ய வேண்டும். அதைப்போலவே விவசாயத் தொழிலாளர்களுடைய நலநிதிக்கு அரசு ஒதுக்கீடு செய்வது, இரண்டாவது. அன்றைக்குப் பேசப்பட்ட நேரத்திலே பிரதிநிதிகள் என்னிடத்திலே ஒத்துக்கொண்டது என்னவென்றால், விவசாயத் தொழிலாளர்களிடத்திலே அந்தச் சங்கம் பணத்தை வசூலிப்பது என்றும், அப்படி வசூலித்த பிறகு அதற்கு ஈடாக அரசு ஒரு தொகையைக் கொடுப்பது என்றும்தான் முடிவு எடுக்கப்பட்டது. ஆனால் இதுவரையில் அந்தச் சங்கம் அந்த நிதியை வசூலிக்காத காரணத்தால் நாங்கள் எதுவும் கொடுக்க இயலவில்லை. அப்படிப்பட்ட விஷயங்கள் தவிர வேறு எந்தப் பெரிய கோரிக்கையும் இப்பொழுது நிறைவேறாமல் இல்லை. எல்லா பெரும்பான்மையான கோரிக்கைகளும் நிறைவேற்றப்பட்டிருக்கின்றன. நிறைவேறாத ஒன்றிரண்டு கோரிக்கைகளில் இருக்கிற சங்கடங்கள் அவை மத்திய அரசோடு கலந்து செய்யவேண்டுமென்று விளக்கிக் கூறப்பட்டிருக்கிறது. அதையே அவர்கள் அறிக்கையாகத் தந்திருக்கிறார்கள்.

**டாக்டர் எச். வி. ஹாண்டே:** மாநில விவசாயிகள் சங்கத்தின் சார்பாகப் பணம் திரட்டி, உயிர் இறந்தவர்களுடைய குடும்பத்திற்கு ரூ. 1,000 விதம் அண்மையிலே கோவையிலே கொடுக்கப்பட்டது என்பதைத் தெரிவித்துக் கொள்கிறேன்.

**மாண்புமிகு டாக்டர் மு. கருணாநிதி:** ஹாண்டே அவர்கள், சொன்ன கோரிக்கை என்ன, எடுக்கப்பட்ட முடிவு என்ன என்பதைத் தயவுசெய்து மறுபடியும் அந்தக் கோரிக்கைகளை எடுத்துப்பார்த்தால் புரியமுடியும். எனக்கே அதைப் பார்த்தால்தான் புரியமுடியும். இறந்துபோன குடும்பங்களுக்கு ரூ. 1,000 கொடுத்ததாகச் சொன்னார்கள். அதை விவசாயிகள் சங்கச் சார்பாகக் கொடுத்ததாகச் சொன்னார்கள். இறந்துபோன குடும்பங்களைப் பொறுத்தவரையில், இதுவரை எந்த சர்க்காரும் செய்யாத அளவுக்கு தலா ரூ. 5,000 ஒவ்வொரு குடும்பத்திற்கும் இந்த அரசு கொடுத்திருக்கிறது. இப்பொழுது ரூ. 1,000 ஒரு குடும்பத்திற்குக் கொடுக்கப்பட்ட செய்தி பத்திரிகையிலே வந்திருக்கிறது. அங்கே இருக்கிற விவசாயிகள் சங்கச் சார்பிலே கொடுத்திருக்கிறார்கள்.

வைக்கப்பட்ட 11 கோரிக்கைகளிலே முக்கியமான ஒன்று விவசாயத் தொழிலாளர்களுக்கு நல நிதி திரட்டுவது என்பதாகும். அந்த நிதியை விவசாயத் தொழிலாளர் சங்கம் திரட்டியான பிறகு அரசு அதற்கு ஈட்டுத்தொகை தர வேண்டும். அவர்கள் அந்த முயற்சியில் ஈடுபடவில்லை. அதிலே ஈடுபட்டு





கணிசமான தொகையைத் திரட்டுவார்களானால் அதற்கு ஈடாகக் கொடுப்பதற்கு அரசு என்றைக்கும் தயாராக இருக்கிறது.

**திரு. கே. டி. கே. தங்கமணி:** விவசாய உற்பத்திப் பொருள்களுக்கு நியாயமான விலை நிர்ணயிக்கப்படவேண்டும். இம்மாதிரி சில மாநிலங்களிலே செய்திருக்கிறார்கள். இந்த ஓர் அம்சமும் அதிலே இருந்தது. அதைப்பற்றி அரசு என்ன நடவடிக்கை எடுத்தது என்பதை அறிய விரும்புகிறேன்.

**மாண்புமிகு டாக்டர் மு. கருணாநிதி:** இதற்காக இரண்டு குழுக்கள் அமைப்பது என்று அப்போது முடிவு எடுக்கப்பட்டது. ஒரு குழு விவசாயத் தொழிலாளர்களுக்கான கூலி நிர்ணயம் செய்வது பற்றியது. அந்தக் குழு அமைக்கப்பட்டுள்ளது. இந்த சங்கத்தினுடைய தலைவரே கூட ஒரு உறுப்பினராக நியமிக்கப்பட்டிருக்கிறார். மற்றொரு குழு, விவசாயப் பொருள்களுக்கான விலை நிர்ணயிப்பதைப் பற்றியது. இதைப்பற்றி அரசு பரிசீலித்துக்கொண்டிருக்கிறது.

**திரு. கே. என். குமாரசாமி:** துணைத் தலைவர் அவர்களே, அந்த விவசாயத் தொழிலாளிகளுக்கு வீடு கட்டிக்கொடுக்கின்ற திட்டத்தையும் தாங்கள் ஏற்றுக் கொண்டிருக்கிறீர்கள். அதற்கான அமைப்பை ஏற்படுத்தி இருக்கிறீர்களா? மாநில சர்க்காரும் மத்திய சர்க்காரும் சேர்ந்து சில கோரிக்கைகளைத் தீர்க்க வேண்டுமென்று சொன்னார்கள். அது விஷயங்களில் மத்திய சர்க்காரோடு கலந்து ஆலோசனை செய்யப்பட்டதா என்று அறியவிரும்புகிறேன்.

**மாண்புமிகு டாக்டர் மு. கருணாநிதி:** தலைவர் அவர்களே, இந்தத் தவறான தகவலை வெளியிலே கொடுத்தால் பிரசாரத்திற்குப் பயன்படலாம். சட்டசபையிலே சொல்வது நல்லதல்ல. வீடுகட்டித் தருவதாக ஒப்பந்தத்திலே ஒத்துக் கொள்ளவில்லை. ஒப்பந்தம் பத்திரிகை நிருபர்கள் முன்னிலையிலே அனைத்துக் கட்சியினர் கூடியிருந்த கூட்டத்தில் படிக்கப்பட்டு நிருபர்கள் அதை வெளியிட்டிருக்கிறார்கள். ஒப்பந்தமானது ஒவ்வொருவருக்கும் டைப் செய்து கொடுக்கப்பட்டது. மாண்புமிகு உறுப்பினர் அவர்கள் இவ்வாறு கேள்வி கேட்பது நல்லதல்ல. அதிலே அப்படி ஒன்றுமில்லை.

**திரு. என். மருதாசலம்:** முதலமைச்சர் அவர்கள் விளக்கம் தந்ததற்கு நன்றி. இன்று வீட்டு வசதி வாரியம் சம்பந்தமாக ஒருசில கூற விரும்புகிறேன். கோவையிலே வீட்டுவசதி வாரிய யூனிட் ஒன்று நடைபெறுகிறது. அதிலே சேரி ஒழிப்பு திட்டத்தின் அடிப்படையிலே வீடுகள் கட்டப்படுகின்றன. அந்த இடத்திலிருப்பவர்களை அகற்றிவிட்டு அங்கு வீடுகள்

கட்டிய பிறகு வீடு கொடுக்கப்படும் என்று கூறி, கார்டு கொடுக்கிறார்கள். அப்படி கார்டு பெற்ற பலர் ஒரு வருடம், இரண்டு வருடம் ஆகியும் வீடு பெறவில்லை. ஆனால் சிலருக்கு உடனடியாக வீடு கொடுக்கப்பட்டிருக்கின்றது. அதாவது, வட்டம், மாவட்டம், எம். எல். ஏ-க்கள் லிஸ்ட் கொடுத்தால் அவர்களுக்கு வீடு கொடுத்து விடுகிறார்கள். வருஷக் கணக்கிலே கார்டு பெற்றவர்கள் தங்களுக்கு வீடில்லையென்று எங்களிடம் தெரிவித்திருக்கிறார்கள். அந்த முறையிலே கோவையிலே நிலைமை இருக்கிறது. அமைச்சரே நேரிலே பார்த்தால் நிலைமை தெரியும்.

**திரு. இராம அரங்கண்ணல்:** தலைவர் அவர்களே, புகைப்படம் எடுக்கப்பட்டு, வரிசைப்படி வீடுகள் கொடுக்கின்ற முறைதான் வீட்டு வசதி வாரியத்தாலே கோயம்புத்தூரைப் பொறுத்தவரையிலே கடைபிடிக்கப்பட்டு வருகிறது. மாண்புமிகு உறுப்பினர் அவர்கள் ஏதேனும் தனித் தகவல் வைத்திருப்பாரானால் அதை வீட்டு வசதி வாரியத் தலைவரவர்களிடத்திலே கொடுப்பார்களேயானால் நடவடிக்கை எடுக்கலாம். அதில், கட்சி, ஆசை, அல்லது வேண்டியவர்களுக்குக் கொடுக்கப்படுகிற முறை கடைபிடிக்கப்படவில்லையென்பதை மட்டும் தெரிவித்துக்கொள்கிறேன்.

**திரு. என். மருதாசலம்:** தலைவர் அவர்களே, அதை நான் விவரமாகக் கொடுக்கத் தயாராக இருக்கிறேன். இன்று, ஒரு வருடம், இரண்டு வருடம் கார்டு வாங்கியவர்கள், புகைப்படம் பிடிக்கப்பட்டவர்கள் வீடு வாங்காமல் இருக்கிறார்கள். புகைப்படம் பிடிக்கப்படாமல் லிஸ்டில் இருப்பவர்களுக்கு வீடு கிடைத்திருக்கிறது. இதைப்பற்றி விவரம் தரத் தயாராக இருக்கிறேன். ஆகவே, எல்லோருக்கும் முறைப்படி வீடு கொடுத்தால் தான் நல்லது என்று கூறி முடிக்கிறேன்.

**திரு. வை. பாலசுந்தரம்:** மதிப்பிற்குரிய துணைத் தலைவர் அவர்களே, இன்றைய தினம், ஆளுநர் ஆற்றிய உரைக்கு நன்றி தெரிவிக்கும் மூகத்தான் ஒருசில கருத்துக்களைச் சொல்லலாம் என்று நினைக்கிறேன்.

எவ்வளவோ இடுக்கண்கள் வந்தாலும் நிதானத்தோடு செயல்படுகிற தமிழக அரசு கடந்த ஆண்டு இயற்கையின் சீற்றத்தால் ஏற்பட்ட கொடுமைகளை, ஏற்பட்ட வறட்சியை சமாளிக்க நிதானத்தோடு செயலாற்றியது என்பதைப் பார்க்கிறபோது, தமிழக மக்களுடைய பாதிக்கப்பட்ட தன்மையை உடனடியாக உணர்ந்து அவர்களுக்கு ஒன்றேகால் கோடி ரூபாய் அளித்து உடனடியாக நிவாரணம் தந்து தமிழக மக்களின் பாதிக்கப்பட்ட தன்மையை உணர்ந்து அவர்களுடைய கண்ணீரைத் துடைத்தது இந்த அரசு என்பதை





நாட்டு மக்கள் உணராமல் இல்லை. பாதிக்கப்பட்ட மக்களுக்குப் பரிகாரம் காணுகின்ற நிலைமையிலே தமிழகத்திற்கு வருகைதந்த பொறியாளர் குழு நிலைமைகளைப் பார்த்துவிட்டுச் சென்றார்களே ஒழிய எந்தவிதமான நடவடிக்கையும் எடுக்கவில்லை என்பது வருந்தத்தக்கதாக இருக்கிறது. பாதிக்கப்பட்ட மக்களுக்கு ஆறுதல் கூறுகிற வகையிலேதான் தமிழக அரசு முனைந்து செயலாற்றிக்கொண்டிருக்கிற நிலையில், மத்திய அரசு மாற்றாந்தாய் மனப்பான்மையோடுதான் இன்னும் நடந்துகொண்டிருக்கிறது என்பதை மக்கள் உணர்ந்திருக்கிறார்கள்.

வரலாறு காணாத அளவிலே ஏறக்குறைய 40 கோடி ரூபாய் அளவுக்கு பாழ்பட்டிருக்கின்றது என்ற நிலைமையை உணர்ந்து ஆறுதல் கூறுகிற வகையிலே தமிழக அரசு செயலாற்றி வருகிறது. ஆனால் பத்திரிகையிலே இரண்டு நாட்களுக்கு முன்பாகப் பார்த்தேன். மைசூர் மாநிலத்தில் ஏற்பட்டிருக்கின்ற வறட்சி நிலைமைகளைப் பார்க்க இந்திரா அம்மையார் நேரடியாகவே வந்திருக்கிறார்கள் என்ற பரிவை அங்கே பார்க்க முடிகிறது. இப்படி ஆளுங்கட்சிக்காரர்கள் ஆளுகிற மாநிலங்களுக்கெல்லாம் ஒரு சலுகை, எதிர்க்கட்சி ஆளும் மாநிலத்திற்கு ஒரு சலுகை என்ற நிலைமை ஏற்படுமானால் ஒருமைப்பாடு எப்படி வளரும் என்பதை அவர்கள் சீர்தூக்கிப் பார்க்க வேண்டும். இருக்கிற நிலைமைகளைப் பார்த்து பாதிக்கப்பட்ட மக்களுக்கு உதவ தமிழக அரசு உடனடியாக முன்வந்திருக்கிறது. 40 கோடி ரூபாய் இழப்பை எப்படி எப்படியெல்லாம் சரிசெய்ய வேண்டுமென்று மாநில அரசு தந்திருக்கிற தாக்கீதை உணர்ந்து மத்திய அரசு உடனடியாகச் செயல்பட வேண்டுமென்று நான் இந்த நேரத்திலே வற்புறுத்த கடமைப்பட்டு இருக்கிறேன்.

தமிழக மக்களுக்கு இன்றைய தினம் அவர்களுடைய கவனத்தை ஈர்க்கக் கூடிய பிரச்னையாக இருக்கின்ற பிரச்னை, மின்சக்தி பற்றாக்குறை ஆகும். இது உலகெங்கும் இருக்கிற ஒரு பிரச்னையாகும். தமிழகத்திலே மட்டும் ஏதோ இன்றைக்கு இந்தப் பிரச்னை விஸ்வரூபம் எடுத்து இருக்கிறதா என்று பார்த்தால் இப்பிரச்னைக்கு எத்தனையோ முறைகள் தமிழகம் ஆளாகியிருக்கிறது என்ற நிலைமையைப் பார்த்திருக்கிறோம். இன்றைக்கு இருக்கின்ற மின் சூழ்நிலையைப் பெரிதுபடுத்தி எதிர்க்கட்சி நண்பர்கள் பேசி வருகிறார்கள். மின் சக்தியைப் பொறுத்தவரையிலே இங்கே ஏற்பட்டிருக்கின்ற வளர்ச்சியை எண்ணிப் பார்க்கிறபோது 50 ஆயிரம் கிராமங்களுக்கு நாம் மின் வசதியை ஏற்படுத்தித் தந்திருக்கிறோம். அழுது கண்ணீர் வடித்துக் கொண்டிருந்த விவசாயக் குடும்பங்கள் உள்ளம் குளிரத்தக்க வகையிலே லட்சக்கணக்கான மின் இணைப்புகள் கொடுத்திருக்கிறது இந்த அரசு. சொல்லப்போனால்,

அதிகமாக உற்பத்திசெய்கிற மைசூர் மாநிலமும், கேரள மாநிலமும் இன்றைய தினம் தமிழக அரசு மக்களுக்குச் செய்துவருகிற சேவையைப் பார்க்கிறபோது அவை தமிழக மாநிலத்திற்குப் பின்னாலேதான் இருக்கின்றன என்பதைத் தெளிவாகப் பார்க்கிறோம். எங்கெங்கெல்லாம் குறைபாடுகள் எப்படியெப்படியெல்லாம் இருக்கின்றனவோ அவற்றையெல்லாம் களைந்தெறிய வேண்டுமென்ற முறையிலே தமிழக அரசு முயற்சிகளைச் செய்து வருகிறது. விவசாயத் துறையிலே தமிழகம் தன்னிறைவு பெற்றிருக்கிறது என்று எப்படி நாம் அகில உலகத்திற்கு அறிவித்துக் காட்டினோமோ அதைப்போன்றே மின்சக்தி உற்பத்தியிலும் தமிழகம் தன்னிறைவு பெற்றுவிட்டது என்பதை உலகத்திற்கு உணர்த்திக்காட்ட தமிழக அரசு தீவிரமாக ஈடுபடவேண்டுமென்று கேட்டுக்கொள்கிறேன்.

சோஷலிசம் சோஷலிசம் என்று உதட்டளவிலே பேசிக்கொண்டிருந்த நிலைமையை மாற்றி பொதுவுடைமைப் பூங்கா மலர வேண்டுமென்ற தத்துவத்தை உள்ளத்திலே ஏற்று, இன்றைக்கு பஸ்களை எல்லாம் தேசியமயமாக்கி உலகத்திற்கே வழிகாட்டியாகத் திகழ்ந்துகொண்டிருக்கிறது நம்முடைய அரசு என்பதை யாரும் மறுப்பதற்கில்லை. இப்படிப்பட்ட புனிதத் தன்மையைக் காணப் பொறுக்காதவர்கள், பார்க்கச் சகிக்காதவர்கள்தான் இன்றைக்கு இந்த மாமன்றம் செத்துவிட்டது என்று கூப்பாடு போடுகிறார்கள். இதை நினைக்கும் பொழுது எனக்கு ஒரு சிறு கதை ஞாபகத்திற்கு வருகிறது. பூனை கண்ணை மூடிக்கொண்டால் பூலோகமே இருண்டுவிட்டது என்று கருதிக் கொள்ளுமாம். அதைப் போன்று சில பெரிய மனிதர்கள் கண்ணை மூடிக்கொண்டாலே திராவிட முன்னேற்றக் கழகம் அஸ்தமித்துவிடும் என்று கருதுகிறார்கள். ஏதோ எட்டுப் பேர்கள் சட்டசபைக்கு வராததால் நாட்டிலே ஜனநாயகப் பாரம்பரியம் குழிதோண்டிப் புதைந்துவிடும் என்று கருதினார்களானால் உண்மையிலேயே அவர்கள் ஜனநாயகத் தன்மையைத் தெரிந்துகொள்ளாதவர்கள் என்பதை உலகுக்கு அறிவிக்கிறார்கள் என்பதுதான் பொருளாகும். நாம் என்ன தான் சொன்னாலும் அந்தப் பெரியவருக்கு நாம் சொல்வதெல்லாம் செவிடன் காதில் ஊதிய சங்காகத்தான் தெரிகிறது. நான் டாக்டர் ஹாண்டே அவர்களுக்கும், திரு. தங்கமணி அவர்களுக்கும் சொல்வதெல்லாம், அந்தப் பெரியவருக்கு அவர்கள் புத்திமதி சொல்லி, தெருவிலே நின்று கூப்பாடுபோடவேண்டாம், பிரச்னையை இங்கே வந்து பேசுங்கள் என்று அறிவுறுத்தவேண்டுமென்று கேட்டுக் கொண்டு எனக்குப் பேச வாய்ப்பைத் தந்த துணைத் தலைவர் அவர்களுக்கு நன்றியைத் தெரிவித்து முடித்துக்கொள்கிறேன், வணக்கம்.





* திரு. கு. இராசமாணிக்கம்: தலைவர் அவர்களே, ஆளுநர் அவர்களின் உரைக்கு நன்றி தெரிவித்து என்னுடைய கருத்துக்களைத் தெரிவிக்க விரும்புகிறேன்.

ஆளுநர் உரையிலே வேளாண்மை வளர்ச்சிபற்றியும் அதே நோக்கிலே வறட்சியைப்பற்றியும் குறிப்பிட்டிருப்பதோடு குறைகளைப் போக்குவதற்கு எடுக்கப்பட்டிருக்கின்ற நடவடிக்கைகளைப்பற்றியும் குறிப்பிட்டிருக்கிறார்கள். அதைப்பற்றிப் பேரவையிலே பேசப்பட்டு இருந்தாலும், இரண்டு நாட்களாக உரத் தட்டுப்பாடு, மின்சாரப் பற்றாக்குறை, தண்ணீர் வசதிகள் பற்றியெல்லாம் ஆதரித்தும், எதிர்த்தும் உறுப்பினர்கள் பேசிவந்தார்கள். இன்றைய தினம் விவசாயத்தை எடுத்துக்கொண்டால் உரத் தட்டுப்பாடு ஏன் ஏற்பட்டது என்பதையெல்லாம் எனக்கு முன்னாலே பேசிய திரு. கிருஷ்ணமூர்த்தி அவர்கள் தெளிவாக எடுத்துக் கூறினார்கள். அதற்கு மாநில அரசு மட்டும் பொறுப்பல்ல, மத்திய அரசின் குறைபாடு காரணமாகத்தான் ஏற்பட்டது என்று சொன்னார்கள். உரம் சரியான முறையிலே விநியோகிக்கப்படவில்லை என்று சிலர் சொன்னார்கள். 1967-க்கு முன்னாலே இருந்த குறைபாடு அது. இப்பொழுது அந்தக் குறைபாடு இல்லாமல் முழுக்க அந்தக் குறைபாடு நீக்கப்பட்டிருக்கிறது. இப்பொழுது தட்டுப்பாடு இல்லையா என்றால், இருக்கிறது. அதற்குக் காரணம் என்ன? இப்பொழுது இரண்டுபோக சாகுபடி நிலங்கள் ஏராளமாக இருக்கின்றன, அதுமட்டுமல்ல குறுகிய காலத்தில் அதிகமான பயன் தரக்கூடிய கருணை, கண்ணகி, கரிகாலன் போன்ற குறுவைப் பயிர்கள் வந்திருக்கின்றன. இதைத்தவிர, தாளடிக்கு, பொன்னி, ஐ.ஆர் 20 போன்ற குட்டைப் பயிர்களும் வந்திருக்கின்றன. இதைத்தவிர பூச்சிகொல்லி மருந்துகள் ஒன்றிற்கு இரண்டு மடங்கு தேவைப்படுகிறது. இப்படிப்பட்ட நிலைமையில் தட்டுப்பாடு இருக்கலாமே ஒழிய, நிர்வாகக் குறைபாடுகள் இல்லை என்பதைக் காணலாம். இல்லையென்றால் இன்றைக்கு இந்த அளவிற்கு உணவுத் தேவையில் எப்படி நிறைவுபெற முடியும் என்பதைக் கவனித்துப் பார்க்க வேண்டும்.

காடு, காம்பு நிலங்களையெல்லாம் விளை நிலங்களாக ஆக்கியும், ஒரு போகம் விளையக்கூடிய நிலங்களை இருபோகம், மூன்று போகம் விளையக்கூடிய நிலங்களாக மாற்றவும் முயற்சியெடுத்துக்கொண்டும், குறுகிய காலக்கடன், நீண்டகாலக்கடன் என்றும், பூச்சி மருந்து, உரம் முதலியவைகளை உபயோகப்படுத்தவும், விசையேற்றங்கள், மின்சார பம்பு செட்டுகள் போன்றவைகளை அதிகமாகப் பயன்படுத்தவும் முயற்சியெடுத்துக்கொண்டிருக்கிறது. இவைகள் மட்டுமல்லாமல், ஆற்று நீர் தஞ்சை மாவட்டத்திற்கு அதிகமாகத் தேவைப்படுகிறது, அதற்கும், காவிரியை நவீனப்படுத்தி தண்ணீரை முழுவதும் பயன்படுத்த

வேண்டுமென்று தேசிய வளர்ச்சிக் கூட்டத்தில் நமது முதல்வர் கலைஞர் அவர்கள் பேசி, உலக வங்கியின்மூலம் வருகிற ஆண்டுகளில் காவிரி ஆற்றின் பாசனவசதியைச் செப்பனிட முயற்சி எடுத்திருப்பதை ஆளுநர் அவர்களின் உரையில் காண்கிறோம். ஆகவே இந்த உரை முழுக்க முழுக்க வரவேற்கத் தக்க உரை.

இதேபோன்று விவசாயிகளுக்கான பாதுகாப்பெல்லாம் கழக அரசில்தான் நடைபெறுகிறது. முன்பெல்லாம் விவசாயத்திற்கும் விவசாயிகளுக்கும் பாதுகாப்பு கிடையாது. இந்த வருஷம் குத்தகை வைத்திருந்தால் அடுத்த வருஷத்தில் வெளியேற்றப் பட்டுவிடுவார்கள். பொய் வழக்குகள் இப்பொழுது போடப் படுகின்றன என்று பேசுகிறார்கள். அது 1967-ம் ஆண்டுக்கு முன்னால்தான் உருவாக்கப்பட்டது. பினாமி என்று கொடுத்திருப்பார்கள், நெல் அளந்தால் அவர்களுக்கு மிராசுதார்கள் ரசீது கொடுக்க மாட்டார்கள். மிராசுதார்களின் பக்கம் தான் கர்ணம் இருப்பார்கள். ஒரு வருஷம் விவசாயி விவசாயம் செய்தால் அடுத்த வருஷம் கூலியாக மாறிவிடுவார். அப்படிப் பொய் வழக்குகளை 1967-ம் ஆண்டுக்கு முன்னாலே போட்டார்கள். ஆனால் 1971-72-ல் குத்தகை நிலங்களைப் பதிவு செய்து கொள்ள வேண்டுமென்று செய்திருப்பதால் அவர்கள் பதிவு செய்து கொண்டு விடுகிறார்கள். ஆகவே, இப்பொழுது பொய் வழக்குகள் போட முடியாது. மேலும், அதிகமாக நிலங்களை வைத்திருந்தால் அவைகளை எடுத்து நிலமற்ற எல்லா விவசாயிகளுக்கும் பகிர்ந்தளித்திருப்பது இந்தக் கழக அரசில்தான். இந்த அரசை சமுதாயத்தில் மேம்பட்டவர்கள், பத்திரிகை வசதி படைத்தவர்கள் கண்டிக்கிறார்கள். வாயில்லாப் பூச்சிகளான விவசாயிகளுக்கு இந்த அரசு, அரசை நடத்திச் செல்கின்ற முதலமைச்சர் கலைஞர் அவர்கள் மனமார நன்மைகளைச் செய்கிறார்கள். அதைச் சொல்ல வழியில்லாமல் போகிறது.

இந்த அரசில்தான் பஸ்கள் தேசியமயமாக்கப்பட்டன என்றால் அந்த பஸ்களை வைத்திருந்தவர்கள் கலைஞர் அரசைப் பாராட்டப் போவதில்லை. நிலச் சொந்தக்காரர்கள் இந்த அரசை கலைஞரை எதிர்க்கிறார்கள். 7, 8 ஆண்டுக் காலம் பாக்கி வைத்திருந்த குத்தகைப் பாக்கிகளைத் தள்ளுபடி செய்ய வேண்டுமென்று கலைஞர் அவர்கள் செய்த காரணத்தால் மிகப் பெரிய சாபத்திற்கு திராவிட முன்னேற்றக் கழக அரசு ஆளாகியிருக்கிறது. இங்கிருக்கும் நிலச் சொந்தக்காரர்கள் இந்த அரசைத் தங்கள் வாயார, மனதாரத் திட்டுகிறார்களே தவிர, பாராட்டவில்லை. இப்படிப்பட்ட சில நிலச்சொந்தக்காரர்கள் நினைப்பது பேசுவது விளம்பரமாகப் பத்திரிகையிலே வருகிறது, ஆனால் விவசாயிகள் பாராட்டுவது காதில் விழுவதில்லை. ஆகவே, நல்லது செய்யும் நேரத்தில் இப்படிப்பட்ட சில குறைபாடுகளுக்கும் ஆளாக வேண்டியிருக்கிறது.



இப்பொழுதுகூட, 1381-ம் பசலி குத்தகை பாக்கி கெடு 11—2—1973-ம் தேதியோடு முடிகிறது. நான் இப்பொழுது கலைஞர் அவர்களிடத்தில் எழுதிக் கொடுத்திருக்கிறேன். இன்னும் தாளடி அறுவடை முடியவில்லை. மார்ச் மாதக் கடைசியிலேதான் முடியும். எனவே இவ்வளவு தூரம் நன்மை செய்த நீங்கள், ஏப்ரல் மாதம் இவ்வளவு நிலச் சொந்தக்காரர்களிடத்திலும் அவர்களுடைய மன எரிச்சலை ஏற்படுத்திக்கொண்ட, நீங்கள், வாயில்லாத பூச்சிகளான விவசாயிகளுக்கு 2, 3 மாத காலம் மேலும் ஒற்றிவைக்க வேண்டுமென்று கேட்டுக்கொண்டிருக்கிறேன். விவசாயிகளும் நேரடியாக விண்ணப்பித்திருக்கிறார்கள். ஆகவே, இவ்வளவு பெரிய உள்ளம் படைத்த கலைஞர் அவர்கள் 11—2—1973-ம் தேதியோடு முடிகின்ற இந்தக் கால அளவை இன்னும் கொஞ்சம் நீடித்து, 3 மாத காலம் தள்ளிக் கொடுக்க வேண்டுமென்று பேரவையின்மூலம் வேண்டிக்கொள்கிறேன்.

அதேபோல் மனைப்பட்டாக்கள். சமீபத்தில் கும்பகோணத்திற்கு வந்து மனைப்பட்டாக்கள் வழங்கியிருக்கிறார்கள். அந்த மனையை வைத்திருந்தவர்கள் எப்படி இந்த அரசைப் பாராட்டுவார்கள்? அவர்கள் மிகக் கடுமையாகப் பேசுவது அவர்களுக்குத் தெரிகிறது. எங்களுக்கும் தெரிகிறது. மனைப்பட்டா கொடுப்பது ஏழைகளுக்குச் செய்கின்ற தருமமாகும். அப்படியிருந்தாலும் கிராமங்களில் கொடுக்கின்ற அதிகாரம் அங்கிருக்கின்ற கர்ணத்திற்கும், சர்வேயர்களுக்கும் இருக்கிறது. சட்டத்தில் குடியிருப்பவர்கள் எவ்வளவு அனுபவத்தில் வைத்திருக்கிறார்களோ அவ்வளவும் கொடுக்கலாம் என்றிருந்தாலும் அங்கிருக்கின்ற கர்ணம் அல்லது அதிகாரிகள் சிலருக்கு வீடு அளவிற்கும் கொடுக்கிறார்கள், சிலருக்கு கொல்லைப்பக்கத்தில் உள்ளதைமட்டும் கொடுக்கிறார்கள். அது அவர்களின் மனோபாவத்தைப் பொறுத்து நடக்கிறது. இப்படிச் சில சிக்கல்கள் இருக்கின்றன. இப்படியாக ஒருவருக்கு 10 செண்ட் என்றும், சிலருக்கு 2 செண்ட் என்றும் இருக்கிறது. அப்படியில்லாமல் அவர்கள் எவ்வளவு வைத்திருந்தார்களோ அவ்வளவும் கொடுக்க வேண்டுமென்று வழிவகை செய்யவேண்டும்.

மேலும், இந்தக் குடியிருப்பு மனைகளைப் பட்டா செய்து கொடுக்கும் பொழுது சில கிராமங்களில் 100 பேர்கள் இருந்தால் 80, 90 பேர்களுக்குக் கொடுக்கப்பட்டுவிட்டது. மீதியுள்ள 10, அல்லது 20 பேர்களுக்குக் கொடுக்க முடியாமலிருக்கிறது. அதற்கு ஏதாவது காரணம் சொல்லப்படுகிறது. அதைச் சரி செய்யவேண்டும். பக்கத்து வீட்டிலே இருப்பவருக்குப் பட்டா செய்யும்பொழுது அதற்குப் பக்கத்திலே இருப்பவர்களுக்குச் செய்யாமல் இருந்தால் அவருக்குச் சங்கடமாக இருக்கிறது. ஆகவே, இந்த நிலைமையைப் பொறுத்தவரையில் மார்ச் மாதம் வரையில்தான் காலம் இருக்கிறது என்று

சொல்லப்படுகிறது., இந்தப் பிரச்சினைகளைத் தீர்ப்பதற்கு 73-ம் ஆண்டு கடைசிவரையிலே அந்த இலாக்கா வேலை செய்யும்படி அரசாங்கம் உத்தரவு இட்டு, இன்னும் அந்தக் கிராமப்பகுதியில் யார் யாருக்கு மனைப்பட்டா கிடைக்கவில்லையோ, முறைப்படி கிடைக்க வேண்டியது கிடைக்கவில்லையோ அரசாங்கத்தின் சட்டத்தின் மூலம் கொடுக்கப்பட வேண்டியது யார்யாருக்குக் கொடுக்கப்படாமல் இருக்கிறதோ அவர்களுக்குக் கிடைக்கச் செய்யவேண்டும்.

இன்னும் சிலபேர்களை விவசாயிகள் அல்ல என்று ஒதுக்கியிருக்கிறார்கள். தச்சு வேலை, மண்பாண்டம் செய்கின்ற வேலை, கொத்துவேலை போன்ற வேலைகளைக் கொஞ்ச நாள் செய்துவிட்டு மீதிக்காலத்தில் அவர்கள் விவசாயத்தை மேற்கொள்ளுகின்றார்கள். அவர்களுக்கும் குடியிருப்பு மனைகளைப் பட்டா செய்து கொடுக்க வேண்டுமென்று மிகவும் பணிவன்போடு தெரிவித்துக்கொள்கிறேன்.

காவிரியைப் பொறுத்தவரையில் அந்தக்காலத்திலே கரிகாலச்சோழன் காவிரியை வெட்டினான், கரை எடுத்தான், கல்லணையைக் கட்டினான் என்று சொல்கிறார்கள். அதற்குப் பிறகு எவ்வளவோ பெரிய ஆட்சிகள் வந்திருக்கின்றன. ஆனால் அவைகள் காவிரியைப்பற்றி நினைத்துப் பார்க்கக்கூட இல்லை. ஆனால் நம்முடைய கலைஞர் அவர்கள் பொதுப்பணித் துறை அமைச்சராக இருந்தபொழுது காவிரியிலிருந்து பிரிகின்ற மண்ணியாற்றைப் பொறுத்தவரையில் அந்த ஆற்றிலுள்ள மணலை எடுத்தால் நல்ல முறையில் தண்ணீர் வரும் என்று செய்தார்கள். காவிரியை எடுத்துக்கொண்டால் அதை முழுமையாகப் பயன்படுத்த வேண்டும். தஞ்சை மாவட்டத்தில் இருக்கும் விவசாயிகளைப் பொறுத்தவரையில் ஒரு குறிப்பிட்ட அளவிற்குச் சில பகுதிகளிலே மேட்டிலுள்ள ஏறுமடைப் பகுதிகளில் தாராளமாகத் தண்ணீர் கிடைப்பதற்கு ஏற்பாடுகள் செய்தால் கொஞ்சம் கொஞ்சம் கட்டுப்பாடாக இருக்கும் பிரச்னைகளும் தீர்க்கப்பட்டுவிடும் என்று சொல்லிக்கொள்ள விரும்புகிறேன்.

மேலூர் ஊராட்சிகளிலுள்ள சாலைகளைப் போடுவதற்கு ஊராட்சிகளிடம் பண வசதி இல்லாத காரணத்தினால் ஊராட்சி ஒன்றியங்கள் சாலைகளை எடுத்துக்கொள்வதற்கான வழிவகைகளைக் காண வேண்டுமென்று கேட்டுக்கொள்கிறேன். அங்குள்ள ரோடுகள் மண் ரோடுகளாகவும், சகதி ரோடுகளாகவும் இருக்கின்றன. பஞ்சாயத்துக்களுக்கே ஐந்தாண்டுகளுக்கு ஒருமுறை என்று இருப்பதைவிட ஒவ்வொரு ஆண்டிலேயும் மானியம் கொடுத்துவிட்டால், பஞ்சாயத்து ரோடுகளுக்கு பஞ்சாயத்து யூனியனிலிருந்து மானியம் கொடுத்துவிட்டால், பஞ்சாயத்து நிதி நிலைமையிலிருந்தே கப்பி போட்டுக் கொடுப்பதற்கான வசதிகளைச் செய்து கொடுக்க வேண்டுமென்று கேட்டுக்கொள்கிறேன்.



வேளாண்மையைப் பொறுத்தவரையில் மின்விசையேற்றங்களுக்கு நிலவள வங்கிகளே கிராமங்களுக்குச் சென்று கடன் வசதி செய்து தருகிறார்கள். குத்தகை விவசாயிகளுக்குப் பம்பு செட்டுகள் கிடைக்கவும், 4, 5 ஏக்கரா வைத்துக் கொண்டிருப்பவர்களுக்கு நீண்ட காலக் கடன் வசதி கிடைக்கவும் வழி செய்திருக்கிறார்கள். அதற்காக என்னுடைய பாராட்டுதலைத் தெரிவித்துக் கொண்டு இத்துடன் என்னுடைய உரையை முடித்துக்கொள்கிறேன்.

* திரு. கே. ஏ. குமாரசாமி: உதவித் தலைவரவர்களே, கவர்னர் பேருரையின்பேரிலே சில வார்த்தைகள் எங்கள் கட்சியின் சார்பில் சொல்வதற்குக் கடமைப்பட்டிருக்கிறேன்.

தமிழகத்திலே மிகப்பயங்கரமான மின்சார வெட்டின் காரணமாக விவசாயமும், தொழிலும் மிகவும் பாதிக்கின்ற அளவில் நிலைமைகள் போய்விட்டன. அரசாங்கம் 40 சதவிகிதம் மின்சார வெட்டை அமல் படுத்தியிருக்கிறது என்று அறிவித்தார்கள். ஆனால் இன்றைக்கு அமலில் இருக்கும் அளவில் இல்லாமல் 60 சதவிகிதமாகத்தான் மின்சார வெட்டு அமல்படுத்தப்படுகிறது என்ற அளவில்தான் இருக்கிறது. காரணம், 4 மணி நேரம் விவசாயிகளுக்கு கரண்ட் சப்ளை செய்யப்படவில்லையென்றால், தொழில்களுக்கு 8 மணி நேரம்தான் கிடைக்கின்ற அளவில் அரை மணிநேரம், 1 மணி நேரம் இடையில் நிறுத்தினால் அவைகள் சீராக இயங்க முடியாமல் இருக்கிறது. இப்படிப்பட்ட பயங்கரமான விளைவுகளுக்கு என்ன காரணம் என்று ஆராய்ந்து அவைகளைப் போக்கி செம்மையாகச் செயல்படுத்த அரசாங்கம் ஏதாவது ஒரு தீவிரமான நடவடிக்கை எடுப்பதுதான் இதற்கு வழி, அதற்கான திட்டத்தை உருவாக்க வேண்டுமென்று கேட்டுக்கொள்கிறேன்.

இதனால் இன்றைக்கு விவசாயிகள் நிலைமை பாதிக்கப்படுகின்ற அளவுக்கு நிலைமை போய்விட்டது. அரசாங்கம் சில ஆண்டுகளுக்கு முன்னாலேயே இதிலே முழுக் கவனம் செலுத்தியிருந்தால் இந்தப் பிரச்சினையை ஓரளவு தவிர்த்திருக்க முடியும். அனல் மின்சார நிலையத்தின் மூலம் உற்பத்திச் செலவு ஜல மின் நிலையத்தை விட அதிகமாக இருந்ததால் அரசாங்கம் அதிலே அக்கறை செலுத்தாமல் இருந்தது. இதன் காரணமாக மாநிலத்தில் இருக்கும் விவசாயிகளுக்கும், தொழில்களுக்கும் இக்கட்டான நிலைமை ஏற்பட்டிருக்கிறது. ஜல மின்சாரத் திட்டமான சோலையாறு திட்டம், மோயாறு திட்டம், ஊட்டியில் இருக்கும் நடுவட்டத் திட்டம் ஏற்கனவே போடப்பட்டிருந்தும் இதுவரை அதைச் செயற்படுத்த எந்தவித நடவடிக்கையும் எடுத்துக்கொள்ளப்படவில்லை.

அனல் மின்சாரத் திட்டத்தை அமைக்க மத்திய சர்க்காரில் இருந்து அனுமதி கிடைக்கவில்லை என்று சொல்லித் தப்பித்துக் கொள்ளுவதில் பொருள் இல்லை. இருக்கின்ற நீர் மின் திட்டங்களை நிறைவேற்ற உடனடியாக நடவடிக்கை எடுத்துக்கொள்ள வேண்டும். ஏற்கனவே வறட்சிப் பகுதிகளாக இருந்து இந்த ஆண்டு ஓரளவு மழை பெய்த காரணத்தால் ஓரளவு விவசாயம் செய்ய முடியும் என்ற நிலையில் விவசாயிகளுக்கும் பாதகமான நிலையில் மின் வெட்டு வந்திருக்கிறது. அரசாங்கம் விவசாயிகளுடைய கோரிக்கைகளை. . .

**மாண்புமிகு திரு. ப. உ. சண்முகம்:** தங்கள் மூலமாக அங்கத்தினர் அவர்களிடம் இருந்து தெரிந்து கொள்ள விரும்புகிறேன். விவசாயிக்கு மோட்டாருக்கு மின்விசை கொடுத்தால் எத்தனை மணி நேரம் ஒரு சாதாரண விவசாயி தண்ணீர் இறைக்கப் பயன்படுத்த முடியும் என்ற விவரம் அங்கத்தினர் அவர்களுக்குத் தெரிந்தால் சொல்லட்டும்.

**திரு. கே. என். குமாரசாமி:** சில இடங்களில் மோட்டார் 3 மணி நேரம் ஓடினால் கூடப் போதுமானது.

**மாண்புமிகு திரு. ப. உ. சண்முகம்:** சாதாரண காலங்களில் ஒரு விவசாயி மோட்டாரை எத்தனை மணி நேரம் ஓட்டுகிறான் என்ற விவரம் தெரிந்திருந்தால் சொல்லட்டும்.

**திரு. கே. என். குமாரசாமி:** காலையில் ஒரு மணி நேரம். மத்தியானம் ஒரு மணி நேரம், பிறகு மாலை 6 மணி வரை ஓட்டுகிறார்கள்.

**மாண்புமிகு திரு. ப. உ. சண்முகம்:** 12 மணி நேரம் விவசாயி பம்ப் செட் மோட்டாரை ஓட்டுவதாகச் சொன்னார்கள். எந்த விவசாயியும் நிச்சயமாகப் 12 மணி நேரம் ஓட்ட முடியாது.

**திரு. கே. என். குமாரசாமி:** நிச்சயமாக முடியும் என்று சொல்லுகிறேன். 18 மணி நேரம் ஓடுகின்ற இடங்கள்கூட எங்கள் மாவட்டத்தில் இருக்கின்றன. வட ஆற்காடு, தென்னாற்காடு மாவட்டம் போல் அல்ல எங்கள் பகுதி. 12 மணி நேரம், 18 மணி நேரம் வரை கூட ஓட்டுகிறார்கள். விவசாயிகளுக்கு மின்சாரம் 6 மணி நேரம் கொடுப்பதைப் பகலில் கொடுப்பதற்கு வழிவகை செய்ய வேண்டுமென்று கேட்டுக் கொள்கிறேன்.

அடுத்து, உர விநியோகத்தை எடுத்துக் கொண்டால் போதுமான அளவுக்கு விவசாயிகளுக்கு உரம் கிடைப்பதில்லை. யூனியன் மூலமாகக் கொடுக்கும் போது போதுமான நிதி பொது நிதியில் இல்லாத காரணத்தால் போதுமான



அளவுக்கு உரத்தை வாங்கி விநியோகிக்க முடியாமல் இருக்கிறார்கள் அம்மோனியா, சல்பேட், பூச்சி மருந்துகள் என்டரின், கந்தகம் போன்றவை விவசாயிகளுக்கு அவசியமானவை இந்த ஆண்டு முழுவதும் அரசாங்கம் இந்தப் பொருள்களை யூனியன் மூலமாக விநியோகிக்காமல் செய்து விட்டார்கள். விவசாயிகள் திண்டாடுகிறார்கள். உரம் சம்பந்தப்பட்டவரை பிளாக்கில் அதிகமாக தனியார்கள் கடை மூலம் விற்கும் நிலைமை இருக்கிறது. இதனால் கண்டரோல் விலைக்கு மேல் 20, 25 ரூபாய் அதிகமாகக் கொடுத்து விவசாயிகள் உரத்தை வாங்க வேண்டியிருக்கிறது. தனியார் மூலம் உரத்தை விநியோகிக்காமல் அரசாங்கமே நேரடியாக விவசாயிகளுக்குக் கொடுக்க ஏற்பாடு செய்யவேண்டும்.

(திரு. நா. வீராசாமி—தலைமை)

அடுத்து, கைத்தறியாளர்களுக்கு சரியான நேரங்களில் நூல் கொடுக்காமல் காலதாமதம் செய்து வருகிறார்கள். அரசாங்கக் கூட்டுறவு மில்கள் அல்லது கார்ப்பரேஷன்கள் மூலம் நடத்தப்படும் மில்களில் இருந்து பெறும் நூல்களும் முழுவதையும் 5 சதவிகிதம் லாபம் வைத்துக் கொண்டு நெசவாளர்களுக்கு விநியோகம் செய்தால் கிளர்ச்சிகள் வராது. சேலம் போன்ற இடங்களில் கைத்தறியாளர்கள் பாதிக்கப்பட்டிருக்கிறார்கள். அவர்கள் கைது செய்யப்பட்டு சிறையில் கூட வைக்கப்பட்டிருக்கிறார்கள். தங்களுடைய வாழ்வுப் பிரச்சினைக்காகப் போராடிய அவர்களைக் கைது செய்வது நியாயமல்ல. பேச்சு வார்த்தை நடத்தி அரசாங்கம் முடிவு செய்யும் என்று அமைச்சர் அவர்கள் சொன்னார்கள். அந்தப் பேச்சு வார்த்தைக்குப் பிறகு அவர்களுக்குத் தேவையான முழு அளவு நூல் கொடுக்க ஏற்பாடு செய்ய வேண்டும்.

கேரளத்தோடு பேச்சு வார்த்தை நடத்தி பாண்டியாறு புன்னம்புழா திட்டத்தை நிறைவேற்றினால் கோவை வறட்சிப் பகுதியில் இரண்டு லட்சம் ஏக்கர்களுக்குப் பாசன வசதி ஏற்படும். இதற்குச் சென்ற சட்டமன்றக் கூட்டத்தில் உத்தரவாதம் அளித்தார்கள். இந்தத் திட்டம் என்னவாயிற்று என்று தெரியவில்லை. தமிழ்நாட்டு அரசாங்கம் நீர்ப்பாசனத் திட்டம் முழுவதையும் பூர்த்தி செய்து விட்டதாகச் சொல்ல முடியாது. இருக்கின்ற சில திட்டங்களை நிறைவேற்ற முன்வந்தால் விவசாயிகளுக்கு நல்ல சூழ்நிலை உதயமாகும்.

நகரப் புறங்களைச் சுற்றிச் சுற்றித்தான் குடிசைகளுக்குப் பதிலாக மாடி வீடுகளைக் கட்டிக் கொண்டிருக்கிறார்கள். கிராமப் புறங்களை அரசு கவனிப்பதே இல்லை. கிராமப் புறங்களில் வீடுகள் கட்டிக் கொடுப்பது, கிராமப் பொருளாதாரத்தை வளர்ப்பது மூலமாகத்தான் மக்களுக்கு நன்மை கிடைக்க

வழி ஏற்படும். குறிப்பாக, அரிசனங்களுக்கு வீட்டு நிலம் வாங்கிக் கொடுக்க வேண்டுமென்று கேட்டால் அதைக் கூடச் செய்வதில்லை. கடந்த நாலைந்து ஆண்டுகளாக இதிலே அரசாங்கம் தவறி இருக்கிறது. கிராமப் புறங்களில் வாழும் ஏழை எளிய மக்களின் வாழ்க்கையை முன்னேற்றாது நகரப் புறங்களிலேயே அரசு கவனம் செலுத்திக் கொண்டிருக்கிறது. விவசாயக் கூலிகள் ஒரு நாளைக்கு இரண்டு ரூபாய்தான் வாங்குகிறார்கள். அவர்களுக்கு வீடு கட்டிக் கொடுக்கும் திட்டம் இல்லை. அரசாங்கம் கிராமப் புறங்களை முன்னேற்றுவதிலே கவனம் செலுத்தி கிராம அபிவிருத்திக்குப் பணியாற்ற வேண்டுமென்று கேட்டுக் கொள்கிறேன்.

சென்னையிலிருந்து உளுந்தூர்பேட்டை வரை சென்றால் வழியில் உள்ள எல்லாப் பாலங்களையும் பிடுங்கி எறிந்து விட்டு அபிவிருத்தி பண்ணிக் கொண்டிருக்கிறார்கள். ஆனால், கிராமப் புறங்களில் ரோடு வசதியே இல்லை.

சென்னையிலுள்ள டன்லப் தொழிற்சாலையில் 18 தொழிலாளர்கள் அரசியல் கண்ணோட்டத்துடன் பழி வாங்கப்பட்டிருக்கிறார்கள். அமைச்சர் அவர்கள், தொழிலாளர்களை வேலைக்குப் போங்கள், பிரச்சினையைத் தீர்த்துக் கொள்ளலாம் என்று சொன்னார்கள். அவர்கள் வேலைக்குப் போகிறார்கள். ஆனால் அந்த மேனேச்மெண்ட் 18 தொழிலாளர்களை பழி வாங்கியுள்ளது. இதை அரசு கவனித்து உடனடியாக அவர்களுக்கு வேலை வாய்ப்புக் கொடுக்க வேலைக்கு எடுத்துக்கொள்ள ஆவன செய்யுமாறு கேட்டுக் கொள்கிறேன்.

**மாண்புமிகு திரு. என். வி. நடராசன் :** பழிவாங்கப்பட்டதாக உறுப்பினர் அவர்கள் கூறுவது தவறு. அதைப் பற்றி பரிசீலனையில் இருக்கிறது என்பதைத் தெரிவித்துக்கொள்கிறேன்.

**திரு. சௌடி எஸ். சுந்தரபாரதி :** பேரவை மாற்றுத் தலைவர் அவர்களே, மேதகு ஆளுநர் அவர்களின் உரையை நான் வரவேற்று அவர்கள் சொல்லியுள்ள கருத்துக்கள் மீது நான் பணிவான சில கருத்துக்களைச் சொல்லிக் கொள்ள விழைகிறேன்.

இயற்கையின் சீற்றத்தால் பெருமழை பெய்தபோதும், அதேபோல் புயல் அடித்தபோதும் நமது தமிழக அரசு, கடந்த ஆண்டு பட்ட துயரைச் சமாளிக்க எடுத்துக் கொண்ட நடவடிக்கைகளைப் பாராட்டுவதோடு இந்த நேரத்தில் நான் ஒரு சில வேண்டுகோள்களையும் இங்கு விட ஆசைப்படுகிறேன். சுமார் 28,000 ஏக்கர் நிலங்களில் பயிர் பூராவும் பாழாகிவிட்டது. அதேபோல 1,70,000 ஏக்கர் நிலங்களில் பயிர்கள் ஓரளவிற்கு நாசமாகிவிட்டது என்பதும் ஏற்றுக்கொள்ளக் கூடிய விஷயம். இந்த நிலங்களை எந்த விவசாயி இருந்து பயிரிட்டாரோ அந்த விவசாயிக்கு வரி பூராவும் தள்ளுபடி செய்யப்பட வேண்டும். அதேபோல்



அவர்கள், அந்த விவசாயிகள் சர்க்காருக்கு கடன் கொடுக்க வேண்டியிருந்தால் அந்தக் கடன்களைத் தள்ளுபடி செய்ய வேண்டும். அவர்கள் குறுகிய காலக் கடன்களைக் கொடுக்க வேண்டியிருந்தால் அதை நீண்ட காலக் கடன்களாக மாற்றி அவர்களுக்கு உதவி செய்வதன் மூலம் அவர்களது துயரில் நாமும் ஓரளவிற்கு பங்கு கொள்ள முடியும் என்று எடுத்துக் கூற விரும்புகிறேன். அதே நேரத்தில் அவர்கள் மறுபடியும் தங்கள் வாழ்க்கை நிலையினை சீராக அமைத்துக் கொள்வதற்காக அவர்களுக்கு சுலபமாக கடன் உதவி அளிக்கக்கூடிய ஒரு ஏற்பாட்டையும் நம் அரசாங்கம் செய்து கொடுக்கவேண்டுமென்று இந்த நேரத்தில் பணிவன்போடு கேட்டுக்கொள்கிறேன். சாதாரணமாக, ஒரு விவசாயி தான் போட்ட பயிர் விளையவில்லை என்றால் அந்தப் பயிரினால் ஏற்பட்ட நஷ்டத்தை ஈடுகட்ட ஒரு வருடம் அல்லது இரண்டு வருடங்கள் கூட ஆகும். அந்த நிலையில் உள்ள விவசாயிகளுக்கு நாம் இப்படிப்பட்ட சலுகைகளை இந்த நேரத்தில் எவ்வளவு அதிகமாகச் செய்ய முடியுமோ அந்த அளவிற்குச் செய்வதன் மூலம் அந்த விவசாயிகளுக்கு நாம் ஒரு ஆறுதல் அளிக்க முடியும். எனவே அதற்கான நடவடிக்கைகளை அரசாங்கம் உடனடியாக எடுக்க வேண்டுமென்றும் கேட்டுக் கொள்கிறேன். நம் வேளாண்மை உற்பத்தியைப் பொறுத்தவரையில் நமக்கு இப்போது ஏற்பட்டிருக்கக்கூடிய ஒரு சங்கடமான நிலைமை என்னவெனில் விவசாயத்திற்கு தேவையான உரம் போதுமான அளவில் கிடைக்கவில்லை என்பதுதான். உரத்தைப் பொறுத்தவரையில் தமிழகம் மட்டுமல்ல, அகில இந்தியாவிலுள்ள உர உற்பத்தித் தொழிற்சாலைகள் தனியார் துறையில் இருந்தாலும் கூட அவற்றின் மேல் ஒரு கண்ட்ரோல், ஸ்டேட் கண்ட்ரோல் வேண்டும். அதேபோல் உர உற்பத்தித் தொழிலை தேசியமயமாக்க வேண்டுமென்று நம் மாநில அரசு மத்திய அரசிடம் கேட்டுக்கொள்ள வேண்டுமென்றும் இந்த நேரத்தில் நான் தெரிவித்துக் கொள்ள விரும்புகிறேன்.

பொதுவாக, ஒவ்வொரு மாவட்டத்திலும், ஒவ்வொரு வட்டத்திலும், ஒவ்வொரு ப்ளாக்கிலும் உள்ள நிலங்கள் எந்தத் தரத்தைச் சேர்ந்தவை, அவற்றில் எந்தெந்தப் பயிர்கள் பயிரிடப்படுகின்றன, அந்தப் பயிர்கள் எந்த அளவில் எந்தக் காலத்தில் பயிரிடப்படுகின்றன என்பதைப் பொறுத்து ஒரு கணக்கு எடுக்க வேண்டும். அப்படிப்பட்ட ஒரு கணக்கு அல்லது சர்வே எடுக்கப்படுவதன் மூலம் எந்தெந்த ப்ளாக்கிற்கு, எந்தெந்த இடத்திற்கு என்னென்ன உரம் எவ்வளவு எவ்வளவு தேவைப்படும் என்ற ஒரு கணக்கை நாம் எடுத்து வைத்துக்கொள்ள முடியும். அப்படி எடுத்து வைத்துக்கொள்வதன்மூலம், ஒவ்வொரு மாவட்டத்திலும், ஒவ்வொரு வட்டத்திலும், ஒவ்வொரு பிளாக்கிலும் எந்தப் பயிர் அதிகமாக விளைகிறது என்பதைத் தெரிந்து வைத்துக்கொண்டால் அந்தப் பயிருக்கு வேண்டிய உரத்தினை அந்த வட்டத்திற்கு

அல்லது அந்த இடத்திற்கு சப்ளை செய்ய உதவிகரமாக இருக்கும். அப்படி ஒரு சர்வே செய்யப்பட்டால் அந்தந்தப் பகுதிகளில் என்னென்ன உற்பத்தி செய்யப்படுகின்றன, எந்தளவிற்குச் செய்யப்படுகின்றன, எந்தளவிற்கு என்ன உரம் வேண்டும் என்பதை நாம் நிச்சயித்துக்கொள்ள முடியும். அந்நிலையில் அந்தந்தப் பகுதிகளுக்கு வேண்டிய அந்த அந்த உரத்தை நாம் அனுப்பி வைக்க முடியும். அதற்குப் பதிலாக எல்லா இடங்களுக்கும் எல்லாப் ப்ளாக்குகளுக்கும், எல்லா மாவட்டங்களுக்கும் எல்லா உரங்களும் அனுப்பப்படுமானால் தேவையில்லாத உரம் ஒரு வட்டத்தில் அதிகமாகவும், தேவைப்படும் உரம் வேண்டிய அளவிற்கு இல்லாத அளவிலும் இருக்கக்கூடிய ஒரு நிலையில், அவசியமில்லாத சில இடங்களில் சில உரங்கள் தேங்கிக் கிடக்கக்கூடிய நிலை இருக்கிறது. குறிப்பிட்ட உரம் எங்கு வேண்டுமோ அங்கு இல்லாத நிலையும், தேவைப்படாத இடத்தில் இருக்கிற நிலையும் இருக்கிறது. இந்த நிலை போக்கப்படவேண்டும். எனவே சர்வே செய்து ஒரு கணக்கு வைத்துக்கொண்டால் இனிமேலாவது வருங்காலத்தில் இந்த இந்தப் பயிர்கள் இந்த இந்த இடத்தில் செய்கிறார்கள், இந்த இந்த இடங்களில் இன்னின்ன உரங்கள் தேவைப்படுகின்றன என்று நிச்சயித்துக் கொண்டு அதற்கான ஏற்பாடுகளைச் செய்ய முடியும். நிலத்தடி நீர் பற்றி இங்கு குறிப்பிடப்பட்டுள்ளதை நான் வரவேற்கிறேன். அதுகுறித்து ஒரு யோசனை சொல்லவும் விரும்புகிறேன். நிலத்தடி நீரைப் பொதுச் சொத்தாக நேஷனல் வேல்த்தாக எடுத்துக் கொள்ளவேண்டும். பணக்கார விவசாயியாக இருந்தால் நிலத்தடி நீரை போர்வெல்ஸ் போட்டு பயன்படுத்திக் கொள்ள முடியும். பக்கத்திலுள்ள விவசாயி எவ்வளவு கடன் பெற்றாலும்கூட போர்வெல்ஸ் போட்டு விவசாயம் செய்ய முடியாத ஒரு நிலை இருக்கிறது. நமக்கு ஏற்பட்டுள்ள நெருக்கடியை உணர்ந்து நிலத்தடி நீரை தேசிய சொத்தாகக் கருதி அரசின் கண்ட்ரோலில் எடுத்துக்கொள்ளும் முயற்சியை அரசு எடுத்துக்கொள்ள வேண்டும். அரசு தன் பொறுப்பில் நிலத்தடி நீரை எடுத்துக்கொண்டு விவசாயிகளுக்கு தண்ணீர் கொடுப்பதன் மூலம் வாட்டர் செஸ் என்று ஏதாவது நிர்ணயித்துக் கொண்டு விவசாயிகளுக்கு தண்ணீர் சப்ளை செய்தால் ஓரளவு தண்ணீர் எல்லோருக்கும் கிடைக்கக்கூடிய நிலை ஏற்படும். சோஷலிஸ சமுதாயம் ஏற்படுவதற்கு ஒரு வழியாகவும் அமையும். எனவே, நிலத்தடி நீர் என்பது யாருக்கும் சொந்தம் என்ற நிலையில்லாமல் தேசிய சொத்தாக கணக்கில் எடுத்துக்கொள்ள தக்க நடவடிக்கைகளை அரசாங்கம் மேற்கொள்ள வேண்டுமென்று பணிவன்புடன் தெரிவித்துக் கொள்கிறேன். (மணியடிக்கப்பட்டது.) இன்னொரு விஷயம். அண்மையில் ஏற்பட்ட வெள்ளப் பெருக்கு நாம் இன்னும் சிறந்த முறையில் நமது பாசன ஏற்பாடுகளைப் பேண வேண்டும் என்பதைத் தெளிவுபடுத்தியுள்ளது என்று குறிப்பிடப்பட்டிருக்கிறது.





கிழக்கு ராமநாதபுரத்தைப் பொறுத்தவரையில் க்ரதமால் நதித் திட்டம் என்ற ஒரு திட்டம் இருக்கிறது. நதியாக இருந்தாலும் அது ஒரு பாசனக் கால்வாய்தான். இதன் மூலம் ஆயிரக்கணக்கான கண்மாய்கள் அப்பகுதியில் தண்ணீர் வசதி பெறமுடியும். ஒரு கண்மாயில் இருக்கும் தண்ணீர் அடுத்த கண்மாய்க்குப் போகிறது. சங்கிலித் தொடர்போல் இத்திட்டம் மூலம் ஆயிரக்கணக்கான கண்மாய்கள் பயன்படும் நிலையில் உள்ளன. இதுபற்றி பல ஆண்டுகளாக எடுத்துச் சொல்லியும்கூட அத்திட்டம் செயல்படுத்தப்படாமல் இருக்கிறது. சமீபத்தில் ஏற்பட்ட மழை காரணமாக தண்ணீர் நிறைய வந்தது. ஆனால் அத்தண்ணீரைப் பயன்படுத்த முடியாத நிலைதான் இருக்கிறது. எனவே சீக்கிரத்தில் அந்தத் திட்டத்தை நிறைவேற்றித் தரும்படிக் கேட்டுக்கொள்கிறேன்.

அடுத்து, கைத்தறியைப் பொறுத்தவரையில் இது தினம் தினம் செத்துப் பிழைக்கும் ஒரு தொழிலாகத்தான் இருந்துகொண்டிருக்கிறது என்பதை யாரும் மறுக்க முடியாது. இதற்கு ஒரே ஒரு பரிகாரம்தான் உண்டு. கைத்தறியாளர்களுக்கு வேண்டிய மூலப்பொருள்களை, நூல்கள் அல்லது பைபர், கெமிக்கல்ஸ் போன்றவற்றை சர்க்காரே கொள்முதல் செய்து கைத்தறியாளர்களுக்குக் கொடுக்கக்கூடிய ஒரு நிலையை ஏற்படுத்தினால்தான் இவற்றின் விலைகளைக் கட்டுப்படுத்த முடியும். இவற்றினால் ஏற்படக்கூடிய கஷ்டங்களைத் தவிர்க்க முடியும். எனவே அதற்கு வேண்டிய நடவடிக்கைகளை அரசு எடுக்க வேண்டுமென்று கேட்டுக்கொள்கிறேன்.

அதேபோல் இந்த விலைவாசி ஏற்றம் இருக்கிறதே, நம் நாட்டில் எவ்வளவு வளர்ச்சி ஏற்பட்டபோதிலும் அந்த வளர்ச்சியின் பயன் மக்களுக்கு எட்ட முடியாத அளவிற்கு விலைவாசி ஏற்றம் இருக்கிறது. அத்தியாவசியப் பொருள்கள் உள்ளனவே, எஸென்ஷியல் கமாடிட்டீஸ். இந்த எஸென்ஷியல் கமாடிட்டீஸை அரசே ப்ரொக்யூர் செய்து, அரசே விநியோகம் செய்வதற்கு வேண்டிய நடவடிக்கைகளை எடுக்க வேண்டுமென்றும் கேட்டுக்கொண்டு என் வார்த்தைகளை முடித்துக்கொள்கிறேன்.

* திருமதி ஜோதி வெங்கடாசலம்: தலைவரவர்களே, மேதகு ஆளுநர் அவர்களின் உரை மீது விவாதம் நடந்து கொண்டிருக்கின்ற இந்த நேரத்தில், அதில் கலந்து கொண்டு உரையாற்றும் வாய்ப்பு எனக்கு கொடுத்தமைக்காக தங்களுக்கு என்னுடைய நன்றியைத் தெரிவித்துக்கொள்கிறேன்.

மேதகு ஆளுநர் அவர்களுடைய உரையின் ஆரம்பத்திலேயே நம்முடைய பெருமதிப்பிற்குரிய [illegible] அவர்கள் மறைந்ததைப் பற்றிக் கூறி அவர்க்

இருந்த காலத்தில் நாம் வாழும் பேறு பெற்றோம் என்று கூறியிருக்கிறார்கள். அதிலும் ஒரு படி அதிகமாகச் சொல்லவேண்டுமானால், நான் அவரோடு சேர்ந்து பல ஆண்டுகள் பழகி, அவர்களுடைய தலைமையில் இயங்கிய அமைச்சரவையில் பங்கு பெற்ற பெருமையையும் நான் பெற்று இருக்கிறேன் என்று கூறிக்கொள்ள விரும்புகிறேன். அதோடு மாத்திரமல்ல அவருக்கு மிகவும் உயிருக்கு உயிரான பாலிசியாக இருந்த மதுவிலக்குப் பற்றி இங்கே குறிப்பிடாமல் இருக்க முடியாது. காரணம், அந்த மது விலக்குத் திட்டத்தை அவர் முதலமைச்சராக இருந்தபோது கொண்டுவந்து, என்னிடத்தில் அவர் அந்தப் பொறுப்பை ஒப்படைத்தது என்னுடைய ஞாபகத்திற்கு வருகிறது. அந்தப் பொறுப்பை ஏற்றுக்கொண்ட மறுதினமே நான் அவரிடத்தில் சென்று ஒரு அன்-பிளசன்ட் போர்ட் போலியோவை என்னிடத்தில் கொடுத்து இருக்கிறீர்கள், அதில் நான் எப்படிப் பணியாற்றுவது என்று கேட்டேன். அதற்கு அவர்கள் சொன்னார்கள், அது ஹரிஜன மக்களுக்கும், பிற்பட்ட மக்களுக்கும் பெருவாரியாக நன்மை தரும் திட்டம் என்ற காரணத்தால்தான் உங்களை நம்பி அதை ஒப்படைத்தேன் என்று சொன்னார்கள்.

I am confident that this subject in your hands will prove effective அவருடைய நம்பிக்கைக்குப் பாத்திரமாக இருந்தேனோ இல்லை அது வேறு விஷயம். ஆனால் இன்றைக்கு 50 கோடி ரூபாய் அதில் வருமானம் வருகிறது என்ற காரணத்தால் அதை இப்போது ரத்து செய்து மறுபடியும் குடிப் பழக்கத்தைக் கொண்டு வந்திருக்கிறோம் என்பதைப் பார்க்கிறபோது மிகவும் வருத்தத்தைத் தருகிறது. ஏறத்தாழ 4½ கோடி மக்கள் இருக்கிற நாட்டிலே, 50 கோடி ரூபாய் வருமானம் வருகிறது என்ற காரணத்திற்காக ஏழை எளிய மக்கள் கஷ்டப்படவேண்டுமா என்பதைப் பார்க்கிறபோது, அதை நம்முடைய முதலமைச்சர் அவர்கள் மறுபரிசீலனை செய்ய வேண்டுமென்று கேட்டுக்கொள்கிறேன். மத்திய அரசையோ, மற்ற மாநிலங்களையோ சுட்டிக் காட்டாமல், நம்முடைய நாட்டிற்கு எது உகந்தது, நம்முடைய நாட்டு மக்களுக்கு எது நன்மை தரத்தக்கது நம்முடைய நாட்டு மக்களின் நலனை கருதித்தான் ஆட்சி நடத்துகிறோம் என்பதைச் சொல்லிக் கொண்டிருக்கிறபோது, அந்த ஆட்சியில் இருக்கும் மக்கள் நல்வாழ்வு வாழ்வதற்காக இதைக் கண்டிப்பாக மதிப்புக்குரிய முதலமைச்சர் அவர்கள் மறுபரிசீலனை செய்து, ரத்து செய்ய வேண்டுமென்று கேட்டுக்கொள்கிறேன்.

மதுவிலக்குத் திட்டத்தைக் கொண்டு வந்த காரணத்தால் அப்போது தமிழ் நாட்டுக்கு வரக்கூடிய வருமானம் குறைந்தது 4-5 கோடி இருக்கும். அதைச் சரிக்கட்டவேண்டுமென்பதற்காக விற்பனை வரியை மதிப்பிற்குரிய ராஜாஜி அவர்கள் கொண்டு வந்தார்கள். அந்த வரியைக் கொண்டு வந்தபோது, அவர்கள்



சட்டசபையில் கூறிய வார்த்தைகளை, தலைவரவர்களே, உங்களுடைய அனுமதியின் பேரில் வாசிக்க விரும்புகிறேன்.

"The financial implications of the programmes have to be extricated. The financial loss that would be incurred by the Government is to the extent of Rs. 4 or 5 crores, the drink revenue is Rs. 4 crores net. That has to be extricated from the people. We have therefore to levy new taxes, we have to get new money.

என்று சொல்லித்தான் அந்த விற்பனை வரியைக் கொண்டு வந்தார்கள். இன்றைக்கு மது விலக்கை ரத்து செய்து விட்டு, அதன் மூலமாக வருகின்ற வருவாயையும் வைத்துக்கொண்டு, விற்பனை வரியையும் வைத்துக்கொண்டு இருப்பது நியாயமா என்று நான் அறிய விரும்புகிறேன். இன்றைக்கு விற்பனை வரி 3½ சதவீதம் ஆக உயர்த்தப்பட்டிருக்கிறது. அந்த வரி உயர்த்தப்பட்ட காரணத்தால், அதைக் கலெக்ட் செய்கிற முறையில் சில தவறுகள் இருக்கின்றன. தவறுகள் நடந்து இருக்கின்றன என்று சொல்கிற நேரத்தில் ஒன்றைக் குறிப்பிட விரும்புகிறேன். இன்று காலை கேள்வி நேரத்தில் கூட்டுறவு அமைச்சர் அவர்களுக்குக் கூட ஆத்திரம் வந்தது. ஆதாரம் இல்லாமல் புகார்கள் சொல்லக்கூடாது என்று சொன்னார்கள். நான் சாதாரணமான எம்.எல்.ஏ.வாக பணியாற்றுவதில் எவ்வளவு பொறுப்பு இருக்கின்றதோ அதைவிட அதிகப்படியான பொறுப்பு எனக்கு இருக்கின்றது என்பதை உணர்ந்துதான் இந்தச் சபையில் பேசுகிறேன். ஆதாரம் அற்ற புகாரோ, உண்மைக்குப் புறம்பான ஒன்றையோ நான் என்றுமே சொல்லமாட்டேன் என்பதைத் தெரிவித்துக் கொள்கிறேன்.

நாம் மின்சார வெட்டைப் பற்றிப் பேசிக்கொண்டிருக்கிறோம். மின்சார வெட்டின் காரணத்தால் பல தொழிற்சாலைகள் பாதிக்கப்பட்டிருக்கின்றன. பல தொழிற்சாலைகள் எல்லாம் மூடப்பட்டிருக்கின்றன. நெய்வேலியில் மூன்றாவது கட்டிங் வந்தால், மின்சாரம் அதிகமாகும் என்று அமைச்சர் அவர்கள் கூறியிருக்கிறார்கள். அதை நான் ஒப்புக்கொள்கிறேன். தற்போது கிராமங்களுக்கு எல்லாம் மின்சாரம் கொடுக்கவேண்டுமென்ற அடிப்படையில், பல கிராமங்களில் போஸ்ட் அமைத்து இருக்கிறார்கள். நமக்கு அதிகப்படியான மின்சாரம் எப்போது வரும் என்று நம்மால் நிச்சயமாகச் சொல்ல முடியாது. அப்படியிருக்கிற நிலையில் இப்படி பல கிராமங்களிலும் போஸ்ட் அமைத்துக்கொண்டு வந்தால், மின்சாரம் வருவதற்குள்ளாக அந்தப் போஸ்ட்கள் பாழாகி விடும் என்று கூறிக்கொள்கிறேன். ஆகவே, நாம் எப்போது மின்சாரம் கிராமங்களுக்குக் கொடுக்க இயலும் என்று அறிகிறோமோ, அதற்குக் கொஞ்ச காலத்திற்கு முன்னால் அந்த போஸ்ட்கள் அமைத்தால் போதும். கிராமத்தில் இருக்கிற

மக்களுக்கு வசதி செய்து கொடுக்கிறோம் என்ற அளவில், வெறும் போஸ்ட்கள் மாத்திரம் அமைத்தால் போதாது, அவை பாழாகி விடும் என்று இந்த நேரத்தில் கூறிக்கொள்கிறேன்.

இந்த மது விலக்கைப் பற்றி பூண்டி புஷ்பம் கல்லூரி மாணவர்கள் ஒரு "சோசியோ எகனமிக்" சர்வே' செய்தார்கள். அவர்கள் என்ன அந்த அறிக்கையில் கூறியிருக்கிறார்கள் என்றால்,

Regarding prohibition the findings of the survey was that 74 percentage of Harijans supported prohibition and wanted it to continue. They felt that prohibition contributed to the peaceful domestic life and helped them save money and improve their standards of living. They found that lifting of prohibition would cause a deterioration in their living conditions.

இந்த அறிக்கை 1971 அக்டோபர் 5-ம் தேதி 'இண்டியன் எக்ஸ்பிரஸ்' பத்திரிகையில் வெளிவந்திருக்கிறது. இந்தக் கருத்தை நான் மிகவும் வலியுறுத்தி, மாண்புமிகு முதலமைச்சர் அவர்கள் அதை மறுபரிசீலனை செய்ய வேண்டுமென்று கேட்டுக்கொள்கிறேன்.

காலம்சென்ற நம்முடைய மதிப்பிற்குரிய இராஜாஜி அவர்களுக்கு ஞாபகச் சின்னம் அமைப்பதற்காக கிண்டியில் ஜனாதிபதி அவர்களைக் கொண்டு கல் நாட்டு விழா நடத்தி ஏற்பாடுகள் செய்து வருவதை வரவேற்கின்ற அதே நேரத்தில், இராஜாஜி அவர்களுக்குப் பிடித்தமான, மிகவும் பிடித்தமான பாலிசியான புரொகிபிஷன் கொண்டு வந்தால், அது அவர்களுக்குச் செய்யக் கூடிய ஒரு நல்ல ஞாபகச் சின்னமாகும். இராஜாஜி அவர்கள் நோய்வாய்ப்பட்டு இருந்த போது மதிப்புக்குறிய முதலமைச்சர் அவர்கள் அவரிடத்தில் கூறியதை இங்கு கூறியதாவது, அவர் கையைப் பிடித்துக்கொண்டு, 'நாங்கள் உங்களைக் கைவிட மாட்டோம்' என்று கூறியது எனக்கு ஞாபகம் இருக்கிறது. அவர் நம்மைக் கைவிட்டுப் போய்விட்டாலும், அவர்மீது நாம் வைத்திருக்கும் மரியாதைக்கும், மதிப்பிற்கும் உகந்த வகையில் புரொகிபிஷனை திரும்பவும் கொண்டு வந்து அவர் பாலிஸி என்ற முறையில் அதைக் கைவிடாமல் அமுல் செய்ய வேண்டுமென்று வற்புறுத்திக் கூற விரும்புகிறேன்.

மேதகு ஆளுநர் அவர்களுடைய உரையிலே இன்றைக்கு ஆசிரியர்கள் படும் அவஸ்தையைப் பற்றியும், மாணவர்களிடத்திலே இருக்கும் அன்-ரஸ்ட் பற்றியும், நெசவாளர்களுக்கு நாம் என்ன செய்யப்போகிறோம் என்பதைப் பற்றியும் எதுவும் கூறவில்லை. நெசவாளர்களைப் பற்றி எனக்கு முன்பு பேசிய மாண்புமிகு அங்கத்தினர் அவர்கள் எடுத்துச்சொன்னார்கள். அவர்களுடைய





தொல்லையைப் போக்குவதற்காக நூல் வினியோகம் செய்கிறபோது, அதிலே எந்த விதமான அரசியல் கண்ணோட்டமும் இல்லாமல், எந்தவிதமான குற்றச் சாட்டும் வராமல், வினியோகம் செய்யவேண்டுமென்று கேட்டுக் கொள்கிறேன். அவர்கள் தினந்தோறும் செத்துப் பிழைத்துக்கொண்டு இருக்கிறார்கள். ஆகவே, அவர்களுக்கு உதவி செய்யும் வகையில், நூல் வினியோகம் செய்வது அரசின் முதல் கடமையாகும் என்று சொல்லிக்கொள்கிறேன்.

வேலையில்லாத் திண்டாட்டத்தைப் போக்குவதற்கு ரூ. 18 கோடி ஒதுக்கப் பட்டிருக்கிறது என்று கூறப்பட்டிருக்கிறது. அன்எம்ப்லாய்மெண்டு பிராப்ளத்தைப் போக்குவதற்கு ஸ்பெஸிஃபிக்காக எந்தெந்தத் துறையிலே எப்படி சரிக்கட்டப் போகிறோம் என்று குறிப்பிடப்படவில்லை. நான் ஒன்று கூறிக் கொள்ள விரும்புகிறேன். There is unemployment problem among the educated people and graduates ஊட்டியில் சமீபத்தில் பாலக்களாவா என்ற இடத்தில் குடிதண்ணீர் கொடுக்கும் வேலையில் பப்ளிக் ஹெல்த் என்ஜினியரிங் துறையைச் சார்ந்த ஆபீசர் ஒரு ரிபோர்ட் கொடுத்திருக்கிறார். ஒரு 25 வயது பிஸிக்ஸ் கிராஜுவேட் காங் வொர்க்காராக நீலகிரியில் வேலை செய்வதாகத் தெரிகிறது. இப்படி காங் வொர்க்காராக வேலை செய்யக்கூடிய துணிவு வேறு வேலை கிடைக்காத காரணம். பட்டம் பெற்ற பட்டதாரிகள் வேலையில்லாமல் நம்மிடையே எவ்வளவு பேர்கள் இருக்கிறார்கள்? என்ஜினியர்ஸ் பொறுத்தமட்டில் நான் ஒன்று கூற விரும்புகிறேன். There are various branches of engineering Mechanical, Civil, Electrical என்றெல்லாம் இருக்கிறது. இவர்களையெல்லாம் பூல் செய்து ஒரு பெர்செண்டேஜ், இந்த ஆண்டு இவ்வளவு பேர், 50 பேர், 30 பேர் என்று எடுத்து, ஒரு தனிப்பட்ட துறையில் அவர்களுக்கென்று காண்டிராக்ட்கள் வழங்கினால் பயனுள்ளதாக இருக்கும். அரசாங்கம் கொடுக்கின்ற சிறிய காண்டிராக்ட்களுக்கு டெண்டர் கால்பார் செய்யவேண்டாம். பெரிய பி.டபிள்யூ.டி. தனிப்பட்ட காண்டிராக்ட் வொர்க் ஒருவர் செய்து கொண்டிருந்தால், அதைப் பற்றி நான் கூறவில்லை. ஆனால், சிறிய காண்டிராக்ட்களை எல்லாம் small schemes இப்படிப்பட்ட வேலையில்லாமல் இருக்கிற என்ஜினியர்களுக்குக் கொடுத்தால், அவர்களுக்கு வேலை வாய்ப்பு கொடுத்தமாதிரியும் இருக்கும், அவர்கள் தொழிலை விருத்தி செய்துகொள்வதற்கும் வாய்ப்பு ஏற்படும். அப்படி விருத்தி செய்து அரசாங்க காண்டிராக்டை எடுத்து நடத்திய பெருமை அவர்களுக்கு வந்த பிறகு தாங்களாகவே பல காண்டிராக்ட்கள் எடுத்து, பிழைப்பதற்கு வழி ஏற்படும். அந்த அளவுக்கு அவர்களை ஊக்குவிப்பதற்கும், அவர்களுக்கு வாய்ப்பு ஏற்படுத்துவதற்கும் வழிவகைகள் செய்ய வேண்டும். நாம் ஏதோ அவர்களுக்கு ரூ. [illegible]

கொடுக்கிறோம் என்றால், அவர்களுக்கு ஆயுள் பூராவும் நாம் அம்மாதிரி கொடுக்கப் போவதில்லை. ரூ. 175 கொடுப்பதினால் அரசாங்கத்திற்கு அதிகப் படியான செலவு ஏற்படுகிறது. ஆகவே, அவர்களை ஒழுங்காக வாழ வைக்க வேண்டும், அவர்கள் வாழ்க்கையிலே முன்னேற வேண்டும் என்றால் நான் சொல்லியதை அரசு கவனத்தில் வைத்து ஆராய்ந்து செய்யவேண்டும் என்று கேட்டுக்கொள்கிறேன்.

தமிழ்நாட்டைப் பொறுத்தமட்டில் அன்எம்ப்ளாய்மெண்டு பிராப்ளத்தைப் பற்றி லோக் சபாவில் கொடுத்த தகவலில் unemployed persons in Tamil Nadu என்று கூறுகிற பொழுது 29 லட்சம் என்று பதில் உரைத்தார்கள். 29 லட்சம் பேர்கள் நம்முடைய நாட்டிலே வேலையில்லாமல் இருக்கிறார்கள். லாஸ்டு கிரேடு ஊழியர்கள் இருக்கிறார்கள். பியூன்கள் இருக்கிறார்கள். மற்றபடி டெக்னிகலி குவாலிஃபைடு பேர்கள் இருக்கிறார்கள். பாலிடெக்னிக்குகளை ஆரம்பித்து இம்மாதிரி நிறைய பேர்களை உற்பத்தி செய்துவிட்டோம். ஆனால் அவ்வளவு பேர்களுக்கும் வேலைவாய்ப்பு கிடைக்கவில்லை. எல்லா அங்கத்தினர்களுக்கும் கூட இந்த அனுபவம் இருக்கலாம். வேலை வேண்டும் என்று நிறைய பேர்கள் வந்து அங்கத்தினர்களுக்கு தொந்தரவு கொடுக்கிறார்கள். ஆகவே, வேலை வாய்ப்பு கொடுப்பதற்காக எந்தெந்த ஸப்ஜெக்டில் அவர்கள் தேறியிருக்கிறார்களோ அவர்களுக்கு ஏற்றவாறு ஒரு குழுவை வைத்து, அதை ஆராய்ந்து பார்த்து வேலை வாய்ப்பு இல்லாத நிலைமையை ஒழிப்பதற்கு அரசு முன்வரவேண்டும் என்று கேட்டுக்கொள்ள விரும்புகிறேன்.

பேருந்துகளை யெல்லாம், போக்குவரத்து பேருந்துகளை நாட்டுடைமையாக்குவது பற்றி எந்தக் கட்சிக்கும் வேற்று மனப்பான்மை கிடையாது. ஆனால், கனம் போக்குவரத்துத் துறை அமைச்சர் அவர்கள் கூறும்பொழுது பல பஸ்கள், பேருந்துகள் எல்லாம் டயர்கள் இல்லாமல், பழுது பார்க்க முடியாமல் இருக்கின்றன, டயர்கள் கிடைக்கவில்லை என்று சொன்னார்கள். டயர் மாத்திரம் அல்ல. ஃபுட்ஸ்டஃப்ஸ், தின்பண்டங்கள், சிமெண்டு, இரும்பு மற்றும் முக்கியமான பொருள்களை எடுத்துக்கொண்டாலும் கூட, இவைகளையெல்லாம் ஒளித்து வைத்து, பிளாக் மார்க்கெட்டில் விற்கின்ற பழக்கம் ஏற்பட்டிருக்கிறது. பிளாக் மார்கெட்டில் கிடைக்கக்கூடிய அளவுக்கு பொருள்கள் இருக்கும்பொழுது, அவைகளை ஓபன் மார்க்கெட்டுக்குக் கொண்டு வருவதற்கு அரசு முயற்சி செய்யவேண்டும். இதற்கு சென்டிரல் விஜிலன்ஸ், ஸ்டேட் விஜிலன்ஸ் இவைகளெல்லாம் தேவையில்லை. பிளாக் மார்க்கெட்டில் விற்பதற்கென்று பொருள்களை வைத்துக்கொண்டிருப்பவர்களை ஆராய்ந்து



பார்த்து எந்தெந்தப் பொருள்கள் பிளாக் மார்க்கெட்டில் கிடைக்கின்றன, வாங்கப்படுகின்றன என்பதைப் பார்க்கவேண்டும். அவர்கள் எங்கிருந்து வாங்குகிறார்கள் என்பதையும் ஆராயவேண்டும். கிடைக்காத ஒரு பொருள், ஒருவருக்குக் கிடைக்காத ஒரு பொருள் மற்றவருக்குக் கிடைக்கிறது என்றால், பணம் அதிகப்படியாகக் கொடுத்து பிளாக் மார்க்கெட்டில் வாங்கவேண்டிய அவசியம் ஏற்பட்டுவிடுகிறது.

ஆகவே பொதுமக்களும் இந்த பிளாக் மார்கெட்டை என்கரேஜ் பண்ணுவது தவறு. பிளாக் மார்க்கெட்டில் விற்கக்கூடியவர்களை கண்டு பிடிப்பதற்கு என்று 'எபவ் போர்டு' இருக்கக்கூடியவர்களைக் கொண்ட ஒரு குழுவை நியமித்து கவர்ன்மெண்டு அபிஷியல்ஸ் அதற்குத் தேவையில்லை, நான்-அபிஷியல்ஸ் அதிலே போட்டு, இப்படிப்பட்டவர்களையெல்லாம் கண்டு பிடித்துக் கொடுப்பதற்கு அரசு முன்வரவேண்டும் என்று நான் இந்த சந்தர்ப்பத்தில் கேட்டுக்கொள்ள விரும்புகிறேன்.

விலைவாசியைப் பற்றி அமைச்சர் அவர்களுக்கு நன்றாகத் தெரியும். எப்படி விலைவாசி ஏறிக்கொண்டே போகிறது என்பது நன்றாகத் தெரியும். ஸ்டேட் டிரேடிங் கார்ப்பரேஷன் மூலமாக எல்லா ஃபுட்ஸ்டப்களையும் எடுத்துக்கொண்டு விநியோகம் செய்யவேண்டும் என்று பலர் ஆலோசனை கூறியிருக்கிறார்கள். அரசு எடுத்துக்கொண்டு அதை விநியோகம் செய்தால் ஒரு ஃபிக்ஸட் ரேட், பேர் பிரைஸ் போட்டு, அதைச் செய்யவேண்டியது அத்தியாவசியம். சர்க்கரை ரேஷனிலும் கொடுக்கிறார்கள், வெளி மார்க்கெட்டிலும் கொடுக்கிறார்கள். ரேஷன் சர்க்கரையில் ரவை கலப்படம் செய்யப்பட்டிருக்கிறது. பொதுவாக, எல்லாப் பொருள்களிலும் கலப்படம் செய்யப்படுகிறது. மதிப்பிற்குரிய சுகாதார அமைச்சர் அவர்களிடத்தில் இந்தச் சந்தர்ப்பத்தில் கூறிக்கொள்ள விரும்புகிறேன். கலப்படம் ஆங்காங்கு அதிகப்படியாக ஆகிக்கொண்டே போகிறது. ஆகவே, அவர்கள் இதில் அக்கரை எடுத்து கவனிக்கவேண்டும் என்று கேட்டுக்கொள்கிறேன். (மணி அடிக்கப்பட்டது).

என்னுடைய தொகுதியைப்பற்றி ஒரு சில வார்த்தைகள் கூறிக்கொள்ள விரும்புகிறேன். பிச்சாண்டார்கோவில் என்ற கிராமத்தில் வசிக்கும் மக்கள் அருகிலே ஒரு டோல் கேட் இருக்கிறது. அந்த டோல் கேட்டிற்கு சமீபத்தில் பிச்சாண்டார் கோவிலில் இருக்கக்கூடிய ஏழை மக்கள் வியாபாரம் செய்து கொண்டு வருகிறார்கள் சாலை ஓரங்களில். சாலை விஸ்தரிப்புத் திட்டம் என்ற காரணத்தை வைத்து, அசிஸ்டெண்டு என்ஜினியர், ஹைவேஸ், அவர்களால்

நோட்டீஸ் இஷ்யூ செய்யப்பட்டிருக்கிறது. அகதிகளுக்கு வாழ்வு அளிக்கக்கூடிய இந்த அரசு, அகதிகளுக்கு மான்யம் கொடுத்து வியாபாரம் செய்ய வேண்டும் என்று உதவி அளிக்கக்கூடிய இந்த அரசு இவர்களை அகதிகளாக ஆக்கிவிடவேண்டாம் என்று தான் நான் கேட்டுக்கொள்கிறேன். காரணம் அவர்கள் அங்கே இருந்துகொண்டு ஏறத்தாழ 40 ஆண்டுகளாக வியாபாரம் செய்துகொண்டு வருகிறார்கள். ஹைவேஸ்க்கு தேவைப்படுகிற சாலை விஸ்தரிப்பு 20 அடி, 25 அடி என்று நினைக்கிறேன். இதற்காக எல்லோரையும் அங்கேயிருந்து அகற்றவேண்டும் என்றால் அது மிகவும் கஷ்டமாக இருக்கும். அவர்கள் உண்மையாகவே அகதிகள் ஆகிவிடுவார்கள். அந்த நிலைமை அவர்களுக்கு ஏற்படாமல் இருப்பதற்கு அவர்களுக்கு தக்க உதவி அளிக்கவேண்டும் என்று அரசைக் கேட்டுக்கொள்கிறேன்.

மற்றொன்று, கூட்டுறவு பால் விநியோக சங்கம் பழுவூர் கிராமத்தில் இருக்கிறது. அங்குள்ள 100 அரிசனங்கள் அதில் அங்கத்தினர்களாக சேர்ந்து, அரசுக்கு மான்யம், கடன் கொடுப்பதற்கு வேண்டி எழுதியிருக்கிறார்கள். அந்தத் துறை அமைச்சர் அவர்கள் அதில் பங்கு எடுத்து, அவர்களுக்கு மான்யமும், கடனும் வழங்கவேண்டும் என்று கேட்டுக்கொண்டு, எனக்கு பேசுவதற்கு சந்தர்ப்பம் அளித்தமைக்கு தலைவர் அவர்களுக்கு நன்றி கூறி, அமர்கிறேன். வணக்கம்.

**திரு. பூ. எட்டியப்பன் :** மேதகு ஆளுநர் அவர்களுடைய உரையை மனமார வரவேற்று, ஒரு சில கருத்துக்களைக் கூற விரும்புகிறேன். பொதுவாக திராவிட முன்னேற்றக் கழகம் பதவி ஏற்ற பிறகு, நமது மாண்புமிகு டாக்டர் கலைஞர் அவர்களால் தயாரிக்கப்பட்டு அறிவிக்கப்பட்டது தொழு நோய் பிச்சைக்காரர்கள் புனர்வாழ்வுத் திட்டம். குறிப்பாக ரயில்வே ஸ்டேஷன்களுக்குப் போனாலும், பஸ் ஸ்டாண்டுகளுக்குப் போனாலும், பெருவாரியாக மக்கள் கூடுகின்ற இடங்களிலெல்லாம் அவர்கள் நமக்குத் தொல்லை கொடுத்து, அவர்களுடைய நோயானது பிறருக்குப் பாவக்கூடிய அளவில் அவர்கள் நடமாடிக்கொண்டிருந்தார்கள். அவர்களையெல்லாம் ஒரு இடத்தில் வைக்க, அதற்கு என்று கட்டடம் கட்டிக்கொடுத்து, அவர்களுக்கு நல்வாழ்வு அளிக்கக்கூடிய இந்தத் திட்டத்தை யாரும் பாராட்டாமல் இருக்க முடியாது. அதே முறையில் காலமெல்லாம் கிராமப்புறங்களில் தாங்கள் வாழ்கின்ற கிராமத்தைத் தவிர வேறு ஒரு கிராமமும் தெரியாத அளவில், பெரியோர்களும், தாய்மார்களும், ஏனையோரும், நிலங்களில் பாடுபட்டு கண் தெரியாமல் குக்கிராமங்களில் மங்கிக் கிடந்தவர்களுக்கெல்லாம் கண்ஒளி வழங்கும் திட்டத்தின் கீழ், முகாமிட்டு அந்த முகாமில் அப்படிப்பட்டவர்கள் கண் ஒளி பெற்று,



அவர்கள் மகிழ்ச்சி அடைந்து பாராட்டக்கூடிய காட்சியை நாம் நேரிலே காண்கிறோம். அவர்கள் கண்ணொளி தந்த தெய்வம் என்று முதல்வர் அவர்களைப் போற்றுகிறார்கள். அந்த ஏழை எளிய பாட்டாளி மக்கள் எல்லாம் இந்த அரசைப் பாராட்டிக்கொண்டிருக்கிறார்கள். இப்படிப்பட்ட ஒரு நல்ல ஆட்சி இன்றைக்கு நடந்துகொண்டிருக்கிறது. அதிலே ஏதாவது ஒரு சிறிய குறை இருந்தால் கூட எதிர்க்கட்சிகாரர்கள் அதை எடுத்துச்சொல்வதில் நியாயம் இருக்கிறது. ஆனால் குறிப்பிட்டுச் சொல்லாமல் பொதுப்படையாக லஞ்சம், ஊழல், புகார் என்று சொல்லிக்கொண்டிருக்கக் கூடிய ஒரு நிலைதான் இன்று இருந்துகொண்டிருக்கிறது. அது ஒரு அருவருக்கக்கூடிய காரியம் என்று நான் தெரிவித்துக்கொள்கிறேன்.

முன்பெல்லாம் நகரப்புறங்களிலேதான் சாலை வசதிகள், சுகாதார வசதிகள் எல்லாம் இருக்கும். இப்போது 1,500 மக்களை கொண்ட ஒரு கிராமமாக இருந்தாலும் சரி, அல்லது 1,000 மக்கள் தொகையைக் கொண்ட ஒரு கிராமமாக இருந்தாலும் சரி, அங்கெல்லாம் இணைப்புச் சாலைகள் போடப்பட்டு வருகின்றன. இந்நிலை முன்பு இல்லை. கிராமப்புறங்கள் நல்லமுறையிலே முன்பெல்லாம் பராமரிக்கப்படாமல் இருந்தன. சாலை வசதிகள் இல்லாமல் இடைஞ்சலாக இருந்தன. இப்போது சாலை வசதிகள் செய்யப்பட்டு, நல்லமுறையிலே பராமரிக்கப்படுகின்றன. சாலை வசதிகள் செய்து கொடுக்கப் பட்டதால், பல பஸ் முதலாளிகள், அந்த ரோட்டிலே பஸ் விடுவதற்கு அனுமதி வாங்கித் தாருங்கள், நாங்கள் பஸ் விடுகிறோம் என்று போட்டிப்போட்டுக் கொண்டு வருகிறார்கள். இந்த நல்ல சூழ்நிலையை உருவாக்கியது நம்முடைய கழக அரசு என்பதை எடுத்துக்கூறக் கடமைப்பட்டிருக்கிறேன்.

நாட்டின் முதுகெலும்பு விவசாயம் என்று சொல்லப்படுகிறது. உணவுப் பொருள் உற்பத்தியில் நம்முடைய தமிழகம் தன்னிறைவு பெற்றிருப்பது குறித்து நாம் பெருமைப்படுகிறோம். அப்படித் தன்னிறைவு பெற்றிருந்தாலும் விவசாயம் செய்வதிலே இன்னும் பல சிக்கல்கள் இருந்துகொண்டிருக்கின்றன. குறிப்பாக கிராமங்களில் நிலங்களுக்கு தண்ணீர் மதகு வழியாகப் பாய்ந்து, சிறு வாய்க்கால்கள் மூலமாகச் செல்கிறது. அங்கே செல்வந்தர்கள் நிலமும் இருக்கும். சிறு விவசாயி, ஏழை விவசாயிகள் நிலமும் இருக்கும். சில சமயங்களில் செல்வந்தர்களின் நிலங்கள் பக்கமாகச் செல்லும் வாய்க்கால்களை அவர்கள் அடைத்து, அடுத்த நிலக்காரர்களுக்கு தண்ணீர் கிடைக்காமல் செய்து விடுகிறார்கள். அதனால் தகராறுகள் ஏற்படுகின்றன. கிராமங்களிலே ஏற்படுகின்ற சண்டைகளுக்கு பெரும்பாலும் தண்ணீர் பாய்ச்சுவதிலே ஏற்படுகின்ற தகராறுதான் காரணமாக இருக்கின்றன. மடை திருப்பும்போது என் நிலத்திற்குத்தான் முதலில் என்று ஒருவனும், என் நிலத்திற்குத்தான் முதலில்

என்று மற்றொருவனும், இப்படி நான், நீ என்று போட்டிப்போடுவதிலே தான் சண்டைகள் ஏற்படுகின்றன. அதுபற்றி அதிகாரிகளிடத்திலே எடுத்துச் சொன்னாலும், கிராம மணியக்காரர், கணக்குப் பிள்ளையிடம் சொல்லித் தீர்த்துக்கொள்ளுங்கள் என்று சொல்லிவிடுகிறார்கள். ஆகவே, இந்தமாதிரியான சிக்கல்கள் ஏற்படாமல் இருக்க, தக்கப் பரிகாரம் காண்பதற்கு அரசாங்கம் ஆவன செய்ய வேண்டுமென்று கேட்டுக்கொள்கிறேன்.

இந்த ஆண்டு பெய்த பெருமழையினால் செய்யாற்றில் உடைப்பெடுத்தது. அதனால் பல கிராமங்கள் பாழானது மாத்திரமல்ல, ஆயிரக்கணக்கான ஏக்கர் நிலங்கள் மண்மேடிட்டுப் போய்விட்டன. அது மட்டுமல்ல. சாலைகள் துண்டிக்கப்பட்டுள்ளதால் போக்குவரத்திற்கு இடைஞ்சல் ஏற்பட்டுள்ளது. மின்சார கம்பங்கள் சாய்ந்துவிட்டன. ஏற்கெனவே நான் இரண்டு ஆண்டுக் காலமாக இந்த மாமன்றத்திலே செய்யாற்றுத் தண்ணீரை நல்ல முறையில் பயன்படுத்துவதைப்பற்றி சொல்லிக்கொண்டிருக்கிறேன். செய்யாற்றிலே வீணாகச் செல்லும் தண்ணீரை விண்ணமங்கலத்தில் தடுத்து, விவசாயத்திற்குப் பயன்படுத்துவதாக இருந்தால், அந்தப் பகுதியிலுள்ள ஏரிகள் எல்லாம் நிரம்பி, அதனால் பல ஆயிரக்கணக்கான ஏக்கர் நிலங்கள் பயன்பெறும். இந்த ஆண்டு நல்ல மழை பெய்திருந்தாலும், அந்தப் பகுதியிலுள்ள 70 சதவீதம் ஏரிகள் நிரம்பவில்லை. இப்போது இருக்கக்கூடிய தண்ணீர் 10, 15 நாட்களுக்குத் தான் போதுமானதாகும். நான் ஏற்கெனவே தெரிவித்த திட்டத்தை அரசாங்கம் நிறைவேற்றியிருந்தால் இந்தக் கஷ்டங்கள் எல்லாம் இருக்க முடியாது. அதற்கு மாறாக அந்தப் பகுதி நிலங்கள் எல்லாம் முப்போகம் விளைந்திருக்கும். இப்போது 42.5 லட்சம் ரூபாய் மதிப்பில் அதுபற்றி ஒரு திட்டம் தீட்டப்பட்டு, அரசாங்கத்தில் பெண்டிங்காக இருப்பதாகத் தெரிகிறது. அதை இந்தாண்டாகிலும் எடுத்து, நிறைவேற்ற வேண்டும் என்று கேட்டுக்கொள்கிறேன்.

விவசாயத்திற்கு மின்சாரம் அளிக்கப்படுவது பற்றி நேற்று விரிவாக நம்முடைய மின்சாரத் துறை அமைச்சரவர்கள் எடுத்துச் சொன்னார்கள். விவசாயத்திற்கு அளிக்கப்படும் மின்சாரம் குறைக்கப்படவில்லை என்று சொன்னார்கள். ஆறு மணி நேரம் மின்சாரம் வழங்கப்படுவதாகச் சொன்னார்கள். ஆறு மணி நேரம் கொடுக்கும் மின்சாரத்தை காலையில் 4 முதல் 8 வரையில் 4 மணி நேரமோ அல்லது 5 முதல் 9 வரை 4 மணி நேரமோ கொடுத்து விட்டு, மீதி இரண்டு மணி நேரத்தை மாலையில் 4 முதல் 6 வரை கொடுக்கவேண்டுமென்று கேட்டுக்கொள்கிறேன். அப்படிக்கொடுத்தால் தான் காலையில் ஏர் பிடிப்பதற்கும், வரப்பு வெட்டுவதற்கும், நடுவதற்கும், கிணற்றில் தண்ணீர் பெறுவதற்கும்



தாராளமாக இறைப்பதற்கும் வசதியாக இருக்கும். அது அல்லாமல் முற்பகலில் பாதி, பிற்பகலில் பாதி என்று கொடுத்தால் அதனால் விவசாயத்திற்கு பயன்கிடையாது. ஆகவே, உடனடியாக நான் தெரிவித்தபடி காலையிலும், மாலையிலும் மின்சாரம் வழங்க ஏற்பாடு செய்ய வேண்டுமென்று கேட்டுக்கொள்கிறேன்.

இப்போது சினிமாவுக்கு 1/3 பாகம் மின்சாரம் வெட்டு செய்திருப்பதாகச் சொன்னார்கள். சினிமாவுக்கு அளிக்கப்படும் மின்சாரத்தை முழுவதுமாக நிறுத்திவிடலாம். வேண்டுமானால் அவர்களை ஜெனரேட்டர் வைத்து படம் காட்டச் சொல்லலாம். மின்சாரத்தினால்தான் சினிமா காட்டப்பட வேண்டும் என்றில்லை. சினிமா காட்டப்படாமல் இருந்தாலும் அதனால் ஒன்றும் கெடுதல் இல்லை. ஆனால் விவசாயத்திற்கு மின்சாரம் வழங்கப்படவில்லையானால் உணவு பொருள் உற்பத்திக் குறைந்து அதனால் கடும் விளைவுகள் ஏற்படும். எனவே சினிமா காட்சிக்கு வழங்கப்படும் மின்சாரத்தை மிச்சப்படுத்தி மற்றக் காரியங்களுக்கு பயன்படுத்தலாம் என்ற என்னுடைய கருத்தை இங்கே தெரிவித்துக் கொள்கிறேன்.

என்னுடைய தொகுதியில் இருப்பவர்கள் முழுக்க, முழுக்க விவசாயத்தில் ஈடுபட்டிருக்கிறார்கள் என்றே சொல்லலாம். அதற்கு அடுத்தபடியாக நெசவுத் தொழிலில் ஈடுபட்டிருக்கிறார்கள். தற்போதுள்ள நூல் விலை ஏற்றத்தினால், அவர்கள் நூல் வாங்கி நெசவுத் தொழிலைச் செய்யமுடியாமல் மிகவும் கஷ்டப்பட்டுக்கொண்டிருக்கிறார்கள். ஒருசிலர் தான் நூல் தறி வைத்திருக்கிறார்கள். எல்லோரும் நூல் தறி வைத்துக்கொள்வதற்கு வசதியற்றவர்களாய், மிகவும் ஏழைகளாய் இருக்கிறார்கள். ஆகவே, நெசவாளர்களுக்கு நியாய விலையில் நூல் கிடைக்கச் செய்வதற்கு தாலுக்கா அளவிலோ அல்லது ரெவின்யூ டிவிஷன் அளவிலோ ஒரு அமைப்பை ஏற்படுத்தி அதன் மூலம் நியாய விலையில் தாராளமாக நூல் வழங்க ஏற்பாடு செய்யவேண்டும். நான் சென்ற ஆண்டில் கூட இதைப்பற்றிச் சொல்லியிருக்கிறேன். (மணியடிக்கப்பட்டது). நெசவுத் தொழிலையே நம்பி அவர்கள் ஜீவனம் நடத்துவதால் அரசாங்கம் அவர்களுக்கு இந்த உதவியைச் செய்யவேண்டுமென்று கேட்டுக்கொள்கிறேன். அவர்களுக்கு எல்லாம் போதுமான அளவு கடன் வசதியும் செய்ய வேண்டும். (மணியடிக்கப்பட்டு, அடுத்த உறுப்பினர் அழைக்கப்பட்டார்).

THIRU B. VENKATASWAMY: Hon. Mr. Chairman, Sir, I thank you for giving me this opportunity to speak a few words about the Governor's Address presented to us on the 2nd February 1978.

In the beginning of his address, His Excellency the Governor has mentioned about our great leader Thiru C. Rajagopalachariar who was a great politician and a reformer of our nation. I am very thankful and grateful also to the excellent speech made by our hon. Member Thirumathi Jothi Venkatachellam about our Revered Rajaji and about his policy of prohibition. I hope our Hon. Chief Minister will implement and consider our request to have p o-hibition. On the 15th of next month, when a great memorial is to be started for our Rajaji, I hope that will be done. I had an opportunity to meet the great Rajaji once. When the Krishnagiri Parliamentary Bye-election came I went to him because it was our Swathanthra seat and we had to put up a candidate there. When I went to him, he asked me not to worry about the Parliamentary Election, but think of prohibition which was about to be scrapped in Tamil Nadu and an Ordinance also had been issued. He asked me to file a writ also. Accordingly I did so. That shows how he was interested in 'upliftment of lower classes' suffering on account of scrapping prohibition. So, I request this Government to consider this request, viz., introduction of prohibition, so that the economic conditions of lower strata people may be improved. Our Hon. Chief Minister has also declared that the house in Thorapalli, where Rajaji was born, would be purchased and there would be a memorial for him there. Recently we have settled the house also for Rs. 8,200 and we hope that the Hon. Chief Minister will also start an Arts College at Hosur as a fitting memorial to Rajaji, whose birth-place is Hosur taluk. I have represented this matter to the Hon. Chief and Education Minister through the College Committee, Hosur.

Eighty per cent of our people depend on agriculture and due to power-cut they are all suffering. Due to poor fertilizer supply and power-cut, the crops have withered away. The ryots have to purchase fertilizers in black-market. I request Government to think of this. If we are deficit in chemical fertilizers, why can't we think of increasing natural manures like cow-dung, green mannure and sunnhemp. It is said that continued application of chemical manures would ruin the fertility of the soil. Let us have more cow-dung and green manure. Let the panchayat Unions concentrates on this and let them be given more funds for that



But, nothing has been done so far in that direction. My crop is like my own child and parents will not like their children to suffer. If my crop withers, I suffer. Every ryot in our State feels like that. Agriculture is not like industry. There, if the mechine stops there is no loss to the proprietor. But agriculture is not like that. If we do not irrigate the crop in time, the entire crop will be spoiled. We have been requesting Central Government to have second mine cut in Neyveli. But it is said that it would take 8 years to complete the second mine cut. Why can't we take up Hogenekal Project in right earnest? No use of showing hands at Central Government always. Both of you are having responsibility to look after the people. A cart cannot run with one wheel. Centre and State are the two wheels of a cart. So both the wheels should function to run the cart. W have to protect the standing crops. I request the Government to issue orders to Panchayat Union Councils to purchase oil engines and let the unions lend them on hire to the agriculturists. This may be done immediately as a temporary measure. I also want that in our Assembly we must have 50 per cent power-cut .

(Thiru N. Veerasami)

*இங்கே மின்சார வெட்டு பற்றி உறுப்பினர் அவர்கள் கூறுகிறார்கள். இங்கே லைட் இல்லை என்றால் மெம்பர்கள் எல்லாம் உட்காரக்கூட முடியாது என்பதை அவர் புரிந்துகொள்ளவேண்டும்.*

THIRU B. VENKATASWAMY : I want half cut and not a full cut. That is only to show to outside world that we are conserving electricity. Coming to rural roads, I want my area to be developed. They are forest areas and recently I had been there and seen elephants. The villagers said to me that if roads are laid there, it would be just like giving eyes to blind man. So roads may be laid in Anchetty-Urgaon, Anchetty-Hogenekal, Salivasu-Billigundlu, Jaualagiri to Anchetty (via) Sholakunta and Madappal. I have been mentioning these for the past six years. Nothing has been done. This time at least I request the Hon. Minister to do something in the matter of rural roads. Small anicuts like Doddapalla, Mukkattumaduva, etc., could be developed. Kelavapalli anicut also could be developed.

Now we have the Land Development Banks. But recently State Bank has also opened a branch in my place. But they are not giving loans for digging wells and for pumpsets, let the Hon. Minister for Co-operation use his influence and see that this State Bank also gives loans for digging wells and for pumpsets, then agriculturists can take advantage of these two bodies, viz., Land Development Banks and State Bank.

Regarding nationalisation of buses, I want to point out that while welcoming it Mr. Krishnamoorthi has said how State Government was putting an end to corruption there. That means corruption is already there.

We find some officers have in foodgrain smuggling in Hosur and Denkanikotta taluks. That means fence is eating the garden. Such officers should be punished. I came to understand from the local collector that he had a talk with the Hon. Food. Minister and he also promised to give military protection in Mysore border Check-posts. I request the Hon. Minister to send the Military protection soon.

**மாண்புமிகு திரு. மன்னை பா. நாராயணசாமி:** தலைவா வர்களே, உறுப்பினர் அவர்கள் சொல்லியதைப் போல், மிலிடெரியை வைத்து அதைப் பாதுகாக்க ஏற்பாடு செய்து, மத்திய சர்க்காரும் மிலிடெரி அனுப்புவதாக ஒத்துக் கொண்டிருந்தார்கள். ஆனால், ஆந்திர மாநிலத்திலே இப்பொழுது நெருக்கடி நிலைமை இருப்பதால், மிலிடெரி அனுப்புவதற்கு தாமதம் ஆகும் என்று சென்ற வாரம் அவர்களிடமிருந்து தபால் வந்திருக்கிறது. இருந்தாலும், அதுபற்றி நடவடிக்கை எடுத்து, ஆவன செய்யப்படும்.

THIRU B. VENKATASAMI : I thank the Hon. Minister for that. During the time of Thiru P. U. Shanmugam, he went in disguise and caught some people. I suppose the present Minister also will do like that. Thank you.

**திரு. ந. சோமசுந்தரம்:** பேரவைத் தலைவர் அவர்களே, மேதகு ஆளுநர் அவர்களுடைய உரையின் மீது நன்றி தெரிவித்து ஒருசில வார்த்தைகளைச் சொல்ல விரும்புகிறேன்.

நம்முடைய ஆளுநர் அவர்கள் தம் உரையில் பல புரட்சிகரமான திட்டங்களைச் சொல்லியிருக்கிறார்கள். மலைத் தொடர் . . . . மேம்பாட்டுக் கழகம், மத்திய அரசு ஊழியர்களுடைய சம்பளத்திற்கு ஏற்றவகையில் மாநில அரசு



ஊழியர்களுடைய சம்பளத்தை சரிப்படுத்துவது, உரம் இறக்குமதி போன்றவற்றை நீண்டகால அடிப்படையில் ஏற்பாடு செய்வது போன்ற பல நல்ல திட்டங்களை அவரது உரையில் நாம் பார்த்தோம்.

இன்றைக்கு கிராமப்புறங்களில் அதுவும் தஞ்சை மாவட்டத்தில் இருக்கிற சிறு நில விவசாயிகள் தங்களுடைய விவசாயத்திற்கு வேண்டிய மூலப் பொருள்களை, விதை, உரம், பூச்சி மருந்து போன்றவற்றை மிக அதிகவிலை கொடுத்து வாங்கவேண்டியதாக இருக்கிறது. அதேபோன்று உழுவதற்குரிய டிராக்டர்களின் விலை கூலி எல்லாம் அதிகமாகியிருக்கிறது, அதேபோல விவசாயிகளின் கூலிகளை எடுத்துக்கொண்டாலும் மற்ற எல்லா இடங்களிலும் இல்லாத அளவுக்கு தஞ்சை மாவட்டத்தில் அதிகமான அளவு விவசாயிகளுக்கு அரசாங்கமே கூலி நிர்ணயம் செய்திருக்கிறது. நாலு ஏக்கரா, ஐந்து ஏக்கரா சாகுபடி செய்கிற சாதாரண விவசாயி குத்தகையை அளந்தது போக பாக்கியுள்ளவற்றைக்கொண்டு விலைவாசிகள் எக்கச்சக்கமாக ஏறியிருக்கிற காரணத்தினால், குடும்பத்தையே நடத்த முடியாத நிலையில் அவதிப்படுகிறார்கள். ஆகவே, நெல்லுக்கு அரசு சென்ற ஆண்டு உயர்த்திக் கொடுத்த தொகை அவர்களுக்கு கொஞ்சம் ஆதரவாக இருந்ததே தவிர, உழைப்புக்கேற்ற ஊதியமாக இல்லை. ஆகவே அரசாங்கம் மூட்டை ஒன்றுக்கு 40 ரூபாய் என்ற அளவுக்காவது நெல் விலையை உயர்த்திக் கொடுத்தால்தான் மிகவும் உதவியாக இருக்கும் என்று தெரிவித்துக்கொள்கிறேன்.

அதேபோல குடியிருப்புக்காக விவசாயிகளுக்கு இன்றையதினம் மனைக்கட்டுகள் வழங்கப்பட்டு வருகின்றன. ஆயினும் குக்கிராமங்களில் இந்தத் திட்டத்தைச் செயல்படுத்துகிறார்களே தவிர, பேரூராட்சிகளை எல்லாம் நகரங்கள் என்ற அளவில் விலக்கிவிடுகிறார்கள். அங்குள்ள விவசாயிகளுக்கும் இது போல மனைக்கட்டுகள் வழங்க தக்க நடவடிக்கை எடுத்துக்கொள்ள வேண்டுமென்று கேட்டுக்கொள்கிறேன். அதோடு ஒரு நபருக்கு 2 சென்ட் வீதம் வீடுகட்டிக்கொள்ள விவசாயிகளுக்கு நிலம் வழங்கி வருகிறார்கள். இந்த 2 சென்டில் அவர்கள் வீடுதான் கட்டலாம். ஒரு ஜோடி காளைமாடு வைத்திருந்தால் கூட அவனுக்கு அந்த மாட்டைக்கட்ட இடமிருக்காது. ஆகவே குறைந்தது 5 சென்ட் நிலமாவது வழங்க வேண்டும். இதுபற்றி மத்திய சர்க்காருக்கு எழுதியிருப்பதாகச் சொல்கிறார்கள். எப்படியோ அந்த ஏழை விவசாயிகளுக்கு 5 சென்ட் நிலமாவது வீட்டுமனைக்காக ஒதுக்கித்தர இந்த அரசு ஆவன செய்யவேண்டும் என்று கேட்டுக்கொள்கிறேன். அப்போதுதான் வீட்டுவசதி திட்டம் நல்லமுறையில் அமையும் என்று எடுத்துச் சொல்ல விரும்புகிறேன்.

(மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர் தலைமை)

தஞ்சை மாவட்டத்தை எடுத்துக்கொண்டால் கீழ் தஞ்சையில் கூலி நிர்ணய சட்டத்தை ஏற்படுத்தியிருக்கிறோம். கீழ் தஞ்சையில் சாகுபடி காலங்களில் எவ்விதத் தகாராறும் இல்லாத நேரத்தில் மேல் தஞ்சையில் அடிக்கடி தகாராறு ஏற்படுகிறது என்கிற காரணத்தினால், அந்தச் சட்டத்தை மேல் தஞ்சைக்கும் கொண்டுவரவேண்டுகிறேன். அங்கே சட்டம் இல்லாத காரணத்தினால் இப்போது அங்கங்கே மேல் தஞ்சையிலும் தகாராறுகள் ஏற்பட்டு வருகின்றன. ஆகவே அந்தச் சட்டத்தை அந்த மாவட்டம் முழுவதற்கும் பொருந்தும்படியாகச் செய்யவேண்டும் என்று கேட்டுக்கொள்கிறேன்.

அடுத்து, இன்னொன்றையும் இந்த நேரத்தில் தெரிவித்துக்கொள்ள விரும்புகிறேன். தாழ்த்தப்பட்டவர்களுக்காக இந்த அரசு எண்ணற்ற பல காரியங்களைச் செய்து வருகிறது. சென்ற பட்ஜெட்டில் கூட ஆதித் திராவிட மக்களை அறங்காவலர்களாக நியமிக்க சட்டத்தைக் கொண்டுவந்தோம்.

அந்தச் சட்டத்தின்படி 5 பேர்கள், 3 பேர்கள் அறங்காவலர்களாக இருக்கிற ஆலயங்களில் எல்லாம் ஒரு ஆதித்திராவிடரையும் கட்டாயமாக ஒரு அறங்காவலராக நியமிக்காது, இப்போது போட்டிருக்கிற உத்தரவுப்படி ஆதித்திராவிடர்களில் இருந்து யாரும் மனுச்செய்யவில்லை என்றால் வேறு சாதிக்காரரை அறங்காவலராகப் போடலாம் என்று செய்திருக்கிறார்கள். கிராமப்புறங்களில் பெரும் பணக்காரர்களிடையே வேலை செய்து வருகின்ற நிலையில் பெரும்பாலான ஆதித்திராவிடர்கள் இருக்கிற காரணத்தினால், அவர்களாகவே யாரும் அறங்காவலராக இருக்க மனுச் செய்துகொள்வார்கள் என்று நினைப்பது சரியாகாது. ஆகவே அவர்கள் மனுச் செய்யவில்லை என்றாலும் 5 பேர்கள், 3 பேர்கள் அறங்காவலர்களாக இருக்கிற கோயில்களுக்கு ஒரு ஆதித்திராவிடரையும் கண்டிப்பாக அறங்காவலராக நியமிக்க வேண்டும் என்பதாக ஒரு சட்டத்தையே Reserved புதியதாகக் கொண்டு வரவேண்டும் என்று தெரிவித்துக்கொள்கிறேன்.

**மாண்புமிகு திரு. மு. கண்ணப்பன்:** மாண்புமிகு உறுப்பினர் ஒரு புதிய சட்டத்தையே கொண்டுவரவேண்டும் என்று சொல்கிறார். நாம் கொண்டு வந்திருக்கிற சட்டத்திலேயே 5 பேர்கள், 9 பேர்கள் அறங்காவலர்களாக இருக்கிற இடங்களில் ஒரு தாழ்த்தப்பட்ட சமூகத்தைச் சேர்ந்தவரையும் கட்டாயமாக அறங்காவலராக நியமிக்கவேண்டும் என்பதாகத்தான் இருக்கிறது என்று தெரிவித்துக்கொள்கிறேன்.





**திரு. ந. சோமசுந்தரம்:** இப்போது புதியதாக கமிஷனர் போட்டிருக்கிற உத்தரவைத்தான் நான் சொன்னேன். ஆதித்திராவிடர்கள் யாரிடம் இருந்தும் மனு வராவிட்டால் வேறுசாதிக்காரரை நியமிக்கலாம் என்பதாக அவர் போட்டிருக்கிற உத்தரவுப்படி இப்போது எங்கள் மாவட்டத்தில் பல ஆலயங்களில் வேறு சாதிக்காரர்களை நியமித்து வருகிறார்கள்.

**மாண்புமிகு திரு. மு. கண்ணப்பன்:** சட்டத்தை உறுப்பினர் அவர்கள் நன்றாகப் பார்க்கவேண்டும். 5 பேர், 3 பேர் அறங்காவலர்களாக இருக்கக் கூடிய இடங்களில் தாழ்த்தப்பட்ட சமூகத்தைச் சேர்ந்தவர் ஒருவரையும் கண்டிப்பாக அறங்காவலராக நியமிக்கவேண்டும் என்றுதான் சட்டம் இருக்கிறது. தாழ்த்தப்பட்ட சமூகத்தைச் சேர்ந்தவர் யாரும் மனுச்செய்து கொள்ளவில்லை என்றால், அந்த ஒரு இடத்திற்கு வேறு சாதிக்காரரைப் போடலாம் என்பதுதான் சட்டம். சட்டப்படியான உத்தரவைத்தான் கமிஷனர் அறிக்கை மூலம் அறிவித்திருக்கிறார்.

**திரு. ந. சோமசுந்தரம்:** கிராமப்புறங்களில் ஆதித்திராவிட மக்களை யாரும் மனுப்போடவே விடமாட்டார்கள் . . . .

**மாண்புமிகு திரு. மு. கண்ணப்பன்:** தாழ்த்தப்பட்ட மக்கள் மனுப் போட்டு அவர்களை எடுக்காது மற்ற சாதிக்காரர்களையே அறங்காவலர்களாகப் போட்டார்கள் என்பது இதுவரை எந்தக் கோயிலிலும் இல்லை. இனிமேலும் அப்படி நிச்சயமாக விடமாட்டார்கள் என்கிற உத்தரவாதத்தை நான் தெரிவித்துக்கொள்கிறேன்.

**திரு. ந. சோமசுந்தரம்:** அமைச்சர் அவர்கள் தெரிவித்த விளக்கத்திற்கு நன்றி தெரிவித்து, இந்த அளவோடு நான் என் உரையை முடித்துக் கொள்கிறேன்.

**திரு. எஸ். கே. சுப்பிரமணியம்:** பேரவைத் துணைத் தலைவர் அவர்களே, சட்டமன்றக் கூட்டு அவையில் தமிழக ஆளுநர் அவர்கள் ஆற்றிய உரையின் மீது என்னுடைய சில கருத்துக்களைச் சொல்லிக்கொள்ள விரும்புகிறேன்.

ஆளுநர் அவர்கள் தம் உரையின் ஆரம்பத்திலேயே நம்முடைய மதிப்பிற்குரிய இராஜகோபாலாச்சாரியார் மறைவு குறித்துக் குறிப்பிட்டு, அவரது சேவைகளைப்பற்றி பலபடியாகப் பாராட்டிக் கூறியிருக்கிறார்கள். இந்த நேரத்தில் கடைசிக் காலத்தில் இந்தத் தமிழக அரசுக்கு எதிராக இராஜகோபாலாச்சாரியார் இருந்தார்கள் என்றாலும், அவர் நோய்வாய்ப்பட்டு மருத்துவ

மனையில் மிகவும் கவலைக்கிடமாக இருக்கிறார்கள் என்று கேள்விப்பட்டவுடன் மாண்புமிகு முதல்வர் அவர்கள் தம்முடைய பயணத்தை எல்லாம் ரத்து செய்துவிட்டு மருத்துவ மனையில் இருந்து கடைசி வரைக்கும் இருந்தார்கள் என்பதை ஜனநாயக உள்ளம் படைத்தவர்கள் எல்லாம் பாராட்டிக் கொண்டிருக்கிறார்கள் என்பதை இந்த நேரத்தில் சொல்லிக்கொள்ளக் கடமைப் பட்டிருக்கிறேன்.

அடுத்து, எங்களை எல்லாம் ஆளாக்கிய அண்ணன் எங்களுக்கு எதையும் தாங்கும் இதயம் வேண்டும் என்று சொன்னார்கள். எந்த நேரத்தில் அத்தகைய பொன்மொழியைச் சொன்னாரோ—நாங்கள் எதிர்க் கட்சியில் இருந்த நேரத்திலும் சரி, இன்றைக்கு ஆளும் கட்சியாக இருக்கிற நேரத்திலும் சரி நாங்கள் எல்லாவகையான எதிர்ப்புகளையும் தாங்கிக்கொண்டிருக்கிற சூழ்நிலையில்தான் இருந்துகொண்டிருக்கிறோம். அரசியலில் ஏற்படுகிற நிலையிலும் சரி, புயல், மழை, வறட்சி என்பதாக இயற்கையினால் ஏற்படுகிற நிலையிலும் சரி—நாங்கள் எங்களை எதிர்நோக்குகிற சவாலை சமாளிக்க—எதையும் தாங்கும் இதயம் படைத்தவர்களாகவே இருக்க வேண்டியிருக்கிறது. சென்ற ஆண்டு நாட்டில் மழை இல்லாமல் வறட்சி நிலை ஏற்பட்டு வறட்சி நிவாரணத்திற்காக 1¼ கோடி இந்த அரசு செலவிட்டிருக்கிற நிலையில் இவ்வாண்டு வெள்ளத்தாலும், புயலாலும் ஏற்பட்டிருக்கிற சோதனைகளை நாம் அறிவோம். அதிலும் குறிப்பாக என்னுடைய தொகுதியில் இலவமறை கிராமத்தில், சிற்றூர்கள் முழுமையுமே ஊரே இல்லையென்ற அளவுக்கு வெள்ளத்தால் அழித்துச் செல்லப்பட்ட கொடுமை நடந்திருக்கிறது. அந்த வெள்ளக் கொடுமையில் இலவமறை என்ற ஒரு பகுதியில் மட்டும் 400 பேர், அதாவது அத்தனை ஆண்களும் பெண்களும் சிறுவர்களும் ஒரே ஒரு மாடி வீட்டில் தஞ்சம் புகுந்து மணிக்கணக்கில் அங்கேயே இருந்து, பின்னர் காவல் துறையினரால் மீட்கப்பட்டார்கள். அப்படி அவர்களை உயிரோடு மீட்ட காவல் துறையினருக்கு இந்த நேரத்திலே நன்றி சொல்ல கடமைப்பட்டிருக்கிறேன். அப்படி வெள்ளத்தால் பாதிக்கப்பட்டவர்களுக்கு இந்த அரசாங்கம் உடனடியாக உதவியது என்பதை நாம் மறந்து விடுவதற்கில்லை. யாருமே கேட்காமல், நம்முடைய முதல்வர் டாக்டர் கலைஞர் அவர்கள், வெள்ளத்தால் பாதிக்கப் பட்டவர்களுக்கு உதவுகின்ற ரூ. 40 உதவித் தொகையை ரூ. 80 ஆக அறிவித்தது நாம் இன்றைக்கு வரவேற்கத் தக்கதாகும். அதே நேரத்தில் அந்த அளவோடு நின்று விடாமல் ரூ. 80 உதவித் தொகை கொடுத்து, வீடுகளை திரும்பக் கட்டிக் கொள்வதற்கு ரூ. 200 கடனாகவும் கால்நடைகள் வாங்குவதற்காக ரூ. 2,000 கொடுக்கவும் இவ்வளவு ஏற்பாடுகளையும் செய்தது மட்டுமல்லாமல் வெள்ளத்தால் பாதிக்கப்பட்ட வயல்வெளிகளை சீர்செய்ய



புல்டோசர்களை அனுப்பி, அதற்கான செலவினையும் இந்த அரசாங்கமே ஏற்று அந்தப் பணிகளை செய்தது என்பதை இந்த நேரத்திலே நன்றி உணர்வோடு குறிப்பிடக் கடமைப்பட்டிருக்கிறேன்.

அதேபோல் இந்த வெள்ளச் சேதத்தால் ஏற்பட்ட கொடுமைகளுக்கு இந்த அரசு எப்படி விரைந்து செயல்பட்டு உதவி செய்ததோ, அதேபோல் விவசாயப் பெருங்குடிமக்களுக்கு இன்னல் ஏற்பட்டால் அதைத் துடைப்பதற்கு முயற்சி எடுக்கிறது என்பதை எல்லோரும் அறிவார்கள்.

உரத்தைப் பற்றியெல்லாம் சொன்னார்கள். விவசாயிகளுக்குப் போதுமான உரம் நம்முடைய நாட்டில் கிடைப்பதில்லை. நாம் கேட்பதில் சரிபாதிதான் நம்முடைய நாட்டிற்குக் கிடைக்கிறது. இப்படிப்பட்ட நிலைமைகள் மாறி, நம்முடைய தேவைகளுக்கேற்றாற்போல் கிடைக்கிற, அதிகமாக கிடைக்கிற அளவுக்கு தமிழ் நாட்டிலேயே உர உற்பத்தி செய்கின்ற நிறுவனங்களை ஏற்படுத்துவதற்கு இந்த அரசு முனைந்து செயல்பட வேண்டுமென்று இந்த நேரத்திலே கேட்டுக்கொள்கிறேன்.

அடுத்து, மின்சாரத்தைப் பொறுத்தவரையில் மின்சாரப் பற்றாக்குறையால் எல்லா துறைகளும் அவதிப்படுவதை நாம் அறிவோம். சினிமாக்களுக்கு மின்சாரம் தரப்படுவதைப் பற்றியும் சொன்னார்கள். இந்த நேரத்திலே என்னுடைய கருத்தாக ஒன்றைச் சொல்ல விரும்புகிறேன். கலை நிகழ்ச்சிகளுக்கும் கண்காட்சிகளுக்கும் தருகின்ற மின்சாரத்தைக் குறைத்திட வேண்டுமென்று இந்த நேரத்திலே கூற ஆசைப்படுகிறேன்.

அதேபோல், கூட்டுறவு நூற்பாலைகளுக்கு இந்த மின்சாரக் குறைப்பிலிருந்து விதிவிலக்கு தந்து உற்பத்தியினைப் பெருக்குவதற்கு ஆவன செய்ய வேண்டுமென்று இந்த நேரத்திலே கூற ஆசைப்படுகிறேன்.

மேதகு ஆளுநர் அவர்களின் உரையிலே மத்திய அரசு ஊழியர்களுக்கும் மாநில அரசு ஊழியர்களுக்கும் உள்ள ஊதிய வேற்றுமைகளைப் போக்குவதற்கான வழிமுறைகளைச் சொன்னதற்காக தமிழ் நாட்டிலுள்ள அரசு ஊழியர்கள் ஆளுநர் உரையைக் கண்டு பூரித்திருக்கிறார்கள் என்பதை சொல்ல கடமைப்பட்டிருக்கிறேன்.

கைத்தறி நெசவாளர்களின் துயர் துடைப்பதற்காக ஆளும் கட்சிப் பொறுப்பில் இல்லாத காலத்திலேயே நம்முடைய மறைந்த மாமேதை அறிஞர் அண்ணா அவர்களின் தலைமையின்கீழ், இங்கு மூன் வரிசையில்

இருக்கிற முன்னணித் தலைவர்கள் தோளின்மீது கைத்தறித் துணிகளைச் சுமந்து தெருத் தெருவாகக் கைத்தறி துணியை விற்று, கைத்தறி துணிக்கு வரவேற்புத் தந்ததை நல்லிதயம் கொண்டவர்கள் மறந்து விடமுடியாது. நெசவாளப் பெருங்குடி மக்கள் அதை மறந்தார் இல்லை. அத்தோடு விட்டு விடாமல் ஆளும் பொறுப்பிலே இருக்கிறோம் என்று இப்பொழுது விட்டு விடாமல் மக்களுக்கு அந்தத் துணிகளை வாங்குகின்ற எண்ணத்தை உண்டு பண்ணுகின்ற அளவுக்கு அவர்கள் திட்டங்கள் செயல்படுத்துவதினை நாம் பாராட்டக் கடமைப்பட்டிருக்கிறோம்.

அதோடு மட்டும் நின்றுவிடாமல் சமீபத்திலே நூல் பற்றுக்குறை ஏற்பட்டு, விவசாயிகளுக்குத் தொல்லை ஏற்பட்ட நேரத்தில் இந்த அரசு ஒதுங்கி இருந்துவிடாமல் இருக்கிறது. இந்தத் தமிழகத்திலேதான் கிட்டத் தட்ட 200 நூற்பாலைகள் இருக்கின்றன. இந்தியத் துணைக்கண்டத்திலேயே அதிகமாக நூற்பாலைகள் இருக்கிற மாநிலம் தமிழக மாநிலம்தான். இந்த மாநிலத்திலேதான் நூல் பற்றுக்குறை இருக்கிறது. எனவே, இதைப் போக்குவதற்காக உடனடியாக மத்திய அரசு நடவடிக்கை எடுத்தாக வேண்டும். எந்த அளவுக்கு நூல் கிடைக்கவேண்டுமென்றும் மத்திய அரசு அதற்கு வழிவகை செய்ய வேண்டுமென்றும் தமிழக முதல்வர் டாக்டர் கலைஞர் அவர்கள் மத்திய அரசுக்கு கடிதம் எழுதியிருக்கிறார்கள் என்பதை நாம் எல்லோரும் அறிவோம். அதோடு மட்டுமல்லாமல் தறிகளுக்கு கார்டு முறை ஏற்படுத்தி நூல் விநியோகிப்பதற்கான ஏற்பாடுகளை இந்த அரசு செயல்படுத்தி வருகிறது. இந்த நேரத்திலேதான் சேலத்தில் நூல் பற்றுக் குறை காரணத்தால் போராட்டம் நடத்தப்பட்டு அதிலே சில வன்முறைகள் நடைபெற்றிருக்கின்றன.

பெரியவர் மாண்புமிகு உறுப்பினர் மணலி கந்தசாமி அவர்கள் குறிப்பிட்டார்கள். மேதகு ஆளுநர் உரையிலே, இன்றிருக்கிற அரசியல் சூழ்நிலையைப்பற்றி எடுத்துச் சொல்லவில்லையென்று கூறினார்கள். ஆனால், அதில் கடைசியாக மேதகு ஆளுநர் அவர்கள் குறிப்பிடுகிற நேரத்தில், '...... இந்த இன்னல்களையும் இடுக்கண்களையும் களைந்து சீரான முன்னேற்றம் நேரிய வழியில் ஏற்பட நம்மாலானதையெல்லாம் செய்யவேண்டும். . தமிழ்நாடு சட்டமன்றம் நல்மரபை காத்து, ஜனநாயக நேர்மைபோற்றி, நாட்டிலே நீதியுடன் நல்வளங் கொழிக்கச் செய்ய ஜனநாயக அமைப்புகளே ஏற்ற கருவிகளாகும் .....' என்று கூறியுள்ளார். இப்படி ஜனநாயகப் பண்புகளை போற்றிப் பாராட்ட வேண்டிய இந்தநேரத்தில் வன்முறைகளுக்கு இந்த நாட்டிலே இடம் அளிப்பது என்பது நல்லதல்ல. இந்த நாட்டில் இன்றைக்கு



நமக்கு மட்டுமல்ல, நம்முடைய பின் சந்ததியினருக்கும் அது நல்லதைத் தாராது. வன்முறைகளைக் கண்டிக்கவேண்டிய நேரத்தில் சட்டமன்றம் செத்து விட்டது என்று பேசுபவர்களுக்கு இங்கே பரிந்து பேசுபவர்களைத்தான் பார்க்கிறோம். இன்றைய 'தினமணி' பத்திரிகையிலே சேலத்தில் நடந்த வன்முறையைப்பற்றி ஒரு தலையங்கத்திலே குறிப்பிட்டிருக்கிறார்கள். '.... சேலம் நிகழ்ச்சிகள் வருந்தத்தக்கவை என்றாலும், அதன் விளைவாக நூல் சப்ளைப் பிரச்னையில் உடனடியாக சட்டசபையையும் அரசும் கவனம் செலுத்த முற்பட்டதை வரவேற்கிறோம்...' என்று இன்றைய தினமணி செய்தித் தாளிலே தலையங்கத்திலே கருத்து தெரிவித்திருக்கிறார்கள். சேலம் நிகழ்ச்சிக்குப் பிறகுதான் அரசு இதற்கான நடவடிக்கைகளை எடுத்த தைப் போலவும் அதற்கு முன்னால் மாநில அரசு நடவடிக்கை எடுக்கவில்லை என்பது போலவும் கருத்துப்படுகின்ற முறையிலே எடுத்து தெரிவித்திருக்கி றார்கள். இப்பிரச்னையில் இவ்வரசு எவ்வளவு முக்கியத்துவம் . கொடுத்து நடவடிக்கை எடுத்திருக்கிறது என்பதை இந்த நாடு அறிந்திருக்கிறது. ஆனாலும் வன்முறையைக் கண்டிக்க வேண்டிய நேரத்தில், வன்முறையை ஆதரிப்பது போன்ற கருத்துக்களைச் செய்தித்தாள்களும் எழுதாமல் இருக்க வேண்டுமென்று மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர் அவர்களே, உங்கள் மூலமாக நான் கேட்டுக்கொள்ள ஆசைப்படுகிறேன்.

அதே நேரத்திலே, இன்றையதினம் நாட்டிலே ஏற்படுகின்ற எந்தப் பிரச்னையாக இருந்தாலும் உடனடியாக தீர்வு காண்பதற்கு இந்த அரசு முனைந்து செயலாற்றுவதற்கு மாற்றுக் கட்சி நண்பர்களெல்லாம், எதிர்க்கட்சி உறுப்பினர்களெல்லாம் உறுதுணை புரியவேண்டுமென்று இந்த நேரத்திலே கேட்டுக்கொண்டு என்னுடைய உரையை முடித்துக்கொள்கிறேன்.

திரு. என். டென்னிஸ்: தலைவர் அவர்களே, ஆளுநர் உரையின்மீது சில கருத்துக்களைக் கூறவிரும்புகிறேன். ஆளுநர் உரையில் இந்த அரசின் சாதனைகளை விளக்க முயற்சி எடுக்கப்பட்டிருக்கிறதே தவிர, அடுத்த ஆண்டில் இந்த அரசு செய்யப் போகும் செயல் திட்டங்கள் பற்றி குறிப்பிடப் பட்டிருப்பதாகத் தெரியவில்லை. ஆளுநர் உரையில் மாநிலத்திலுள்ள பொது மக்களைப் பாதிக்கக்கூடிய பெரிய பிரச்சினைகள் அவைகளை தீர்த்து வைக்கும் முறைகள் குறிப்பிடப்படவில்லை. மாநிலத்தில் அமைதியின்மை பெருகி யிருப்பதைப்பற்றி ஆளுநர் உரையில் குறிப்பிடவில்லை. அத்தியாவசிய பண்டங்களின் விலை கூடி இருப்பதைக்குறித்து ஆளுநர் உரையில் ஒன்றும் குறிப்பிடப்படவில்லை. அதற்குப் பரிகாரம் காணக்கூடிய திட்டங்கள் எதுவும் அவ்வுரையில் இல்லை. வேலையில்லாத் திண்டாட்டம் என்றுமில்லாத

அளவுக்கு பெருகியிருக்கிறது. லட்சக்கணக்கான படித்தவர்கள், படிக்காதவர்கள் எல்லோரும் வேலையில்லாமல் திண்டாடுகிறார்கள். அந்த மாபெரும் பிரச்சினையைப் போக்குவதற்கு வழிவகைகள் ஆளுநர் உரையில் எதுவும் எடுத்துக்கூறப்பட்டதாகத் தெரியவில்லை. தொழில் துறையில் ஏற்பட்டிருக்கக் கூடிய மந்தமான நிலையைப் போக்குவதற்கான வழிவகைகள் பற்றி ஆளுநர் உரையில் எடுத்துக் கூறப்படவில்லை. இன்னும் விவசாயிகளுக்கு இருக்கக் கூடிய துன்பங்கள், துயரங்கள் இவற்றைப் போக்குவதற்கான வழிவகைகள் ஆளுநர் உரையில் குறிப்பிடவில்லை. இன்னும் பள்ளிகள், கலாசாலைகள் அடைக்கப்பட்டிருந்த அந்த குறையைப்போக்குவதற்கு அதன்மூலம் படிப்பு பாதிக்கப்பட்டிருப்பதான நிலையைப் போக்குவதற்கான வழிவகைகள் ஆளுநர் உரையில் எடுத்துக்கூறப்படவில்லை. நெசவாளர்கள் துயரைப் போக்குவதற்கான வழிவகைகள் ஆளுநர் உரையில் காணோம்.

இன்னும் ஆசிரியர்கள் பிரச்னை, என்.ஜி.ஓ. பிரச்னை முதலிய பிரச்னைகளுக்கு பரிகாரம் காணக்கூடிய வழிவகைகளைப்பற்றி ஆளுநர் உரையிலே குறிப்பிடவில்லை. இவ்வாறு மிக முக்கியமான பிரச்னைகள் ஆளுநர் உரையிலே இடம்பெறவில்லை. முற்போக்கான சட்டங்கள் பல சரிவர இந்த அரசால் நிறைவேற்றப்படவில்லை.

உதாரணமாகச் சொன்னால், நிலச் சீர்திருத்தச் சட்டம், இனும் ஒழிப்புச் சட்டம் போன்ற சட்டங்கள் எல்லாம் எந்த நோக்கத்தோடு எந்த மக்கள் பயனடைய வேண்டும் என்று சொல்லி நிறைவேற்றப்பட்டனவோ, அவையெல்லாம் சரியாக அமல்படுத்தப்படாத நிலையில் அந்த மக்கள் எல்லாம் பயன் அடையாமல் இருக்கிறார்கள். சில கவர்ன்மெண்ட் ஜி.ஓ. க்கள் மூலமாக நிர்வாகம் நடத்தப்படுகின்றது. உதாரணமாகச் சொல்லவேண்டுமானால், பஞ்சாயத்து நிர்வாகத்திற்காக சில ஆணைகள் பிறப்பிக்கப்படுகின்றன. பஞ்சாயத்து ஆக்டிலே இந்த ஆணைகள் இடம் பெறாத காரணத்தினாலே சரியாக அந்த ஆணைகள் செயல்படமுடியாத நிலைமை இருக்கிறது. எனவே அந்த ஆணைகள் எல்லாம் சட்டத்திலே இடம்பெற வழிவகை செய்ய வேண்டுமென்று கேட்டுக்கொள்கிறேன்.

விலைவாசிகள் என்றும் இல்லாத அளவில் ஏறிக்கொண்டே போகின்றன. காங்கிரஸ் ஆட்சி இருந்த நேரத்திலே விலைவாசி ஏற்றத்திற்கு மாநில அரசு தான் பொறுப்பு என்று சொன்னார்கள். ஆனால் இன்றைக்கு மத்திய அரசு தான் பொறுப்பு என்று சொல்கிறார்கள். மத்திய அரசு மாநில அரசு நிதியை சரியாகப் பயன்படுத்தாததன் காரணமாகத்தான் விலைவாசி ஏறியிருக்கிறது என்று கூறுகிறது. மாநில அரசும், மத்திய அரசும் விலைவாசி ஏற்றத்தினை



தடுப்பதற்குக் கடமைப்பட்டுள்ளார்கள், தங்களுடைய கடமைகளை மாநில அரசும் மத்திய அரசும் தட்டிக் கழித்தால் அதனால் பொதுமக்கள்தான் பாதிக்கப்படுகிறார்கள். இன்னும் விலைவாசி ஏற்றத்தைக் குறைப்பதற்கு மக்கள் வாங்கும் சக்திக்கு ஏற்றாற்போல் ஜனப்பெருக்கத்திற்கு ஏற்றம் போல் உற்பத்தியைப் பெருக்கவேண்டியது அவசியமாகும். விநியோக முறையில் உள்ள கோளாறும் விலைவாசியேற்றத்திற்குக் காரணமாக ஆகிறது. பதுக்கல் பேர்வழிகளைத் தடுப்பது அரசின் கடமையாகும். வரிவிதிப்பும் கூட விலைவாசியேற்றத்திற்குக் காரணமாகிறது. மூலப்பொருட்களுக்கு வரிவிதிக்கிற காரணத்தினாலே உற்பத்திச் செலவு அதிகமாகிறது. ஆகவே, விலைவாசி அதிகமாகிறது. அத்தியாவசியப் பொருட்களை உற்பத்தி செய்யும் நிறுவனங்களை அதிகமாக ஏற்படுத்த வேண்டும்.

உணவுப் பொருட்களின் விலைகூட உயர்ந்திருக்கிறது. இந்த மாநிலத்தின் எல்லை இடமான விளவன்கோடு · தாலுகாவை எடுத்துக் கொண்டால், அரிசி விலை மிகவும் உயர்ந்திருக்கிறது. பொதுமக்கள் மிகவும் கஷ்டப்பட்டிருக்கிறார்கள், பாதிக்கப்பட்டிருக்கிறார்கள். கோளாவின் எல்லையிலிருந்து ஏகதேசம் 25 மைலுக்கு அப்பால் சுங்கான் கோட்டை என்ற இடத்தில் 25 மைல்களுக்கு அப்பால் செக் போஸ்ட் வைக்கப்பட்டிருக்கிறது. பெல்ட் ஏரியாவுக்கு 15 மைல்களுக்கு அப்பால் இதுபோன்ற செக் போஸ்ட் இருப்பதால் உணவுக்காகக் கொண்டு போகக்கூடிய அரிசியைக்கூட தடைப்படுத்துகிறார்கள். உணவுக்காகக் கொண்டு போகப்படுகிற அரிசியைப் பறிமுதல் செய்கிறார்கள். இதனால் பெல்ட் ஏரியாவிலே அரசியின் விலை அதிகமாக ஏறியிருக்கிறது. இதனால் உணவுக்காக அரிசி கொண்டுபோவதைத் தடுக்காமல் இருப்பது அவசியம். எல்லைப்புறத்தில் மாத்திரம் செக்போஸ்ட்டுகளை அதிகம் வைத்துக் கொள்ளலாம். வைத்தால் நல்லது. விளவன்கோடு கோளாவின் ஒரு பகுதி எனக் கருதி அங்கே அரிசி கொண்டு போவதைத் தடுப்பதால் அந்தத் தாலுகா மக்களுக்குப் மிக கஷ்டமாக இருக்கிறது. பெல்ட் ஏரியாவுக்கு வெளியே உணவுக்காக அரிசிகொண்டு போவதைத் தடுப்பது எல்லைபுறத்து மக்களுக்குக் கஷ்டம் கொடுக்கக் கூடியதாக இருக்கிறது. விளவன்கோடு தாலுகாவிலே அரிசியின் விலை மிகவும் அதிகமாக உயர்ந்திருக்கின்றது. நாகர்கோவிலில் அரிசியின் விலை ஒரு மடங்குக்கு மேல் அதிகமாக உயர்ந்திருக்கிறது. பொதுமக்கள் மிகவும் கஷ்டப்படுகிறார்கள். விநியோகிப்பதற்கு அங்கீகாரம் பெற்ற கடைக்காரர்கள் சரியாக விநியோகம் செய்வதில்லை. அவர்கள் தங்களுக்குக் கிடைக்கக்கூடிய அரிசியை கள்ளச் சந்தையிலே விற்கிறார்கள். இதைத் தடுப்பதற்கு குடும்ப கார்டு முறை

ஏற்படுத்தினால் விநியோகம் சரியான முறையிலே நடக்கும், கள்ளச் சந்தையையும் தடுக்கலாம். பெல்ட் ஏரியாவிலே கொடுக்கக்கூடிய அரிசியின் குவாண்டிட்டி அளவு குறைவாக இருக்கிறது, அங்கே உள்ள மக்களுக்குப் போதுமானதாக இல்லை. அதோடு கூட அரிசியின் தரம் மிகவும் படுமோசமாக இருப்பதால் விளவன்கோடு தாலுகாவில் உள்ள மக்கள் பல நோய்களுக்கு ஆளாகக்கூடிய நிலைமை இருக்கிறது. கடத்தல் நடக்கிறது என்றால் அதைத் தடுக்கவேண்டிய அவசியம் இருக்கிறது. எல்லையில் அதிகமான செக்போஸ்ட்டுகள் போட்டு தடுக்கலாம். ஆனால் பெல்ட் ஏரியாவிலே உள்ள மக்களுக்காக உணவுக்காகக் கொண்டுபோவதைத் தடுப்பதை நிறுத்த வேண்டும்.

வேலையில்லாத் திண்டாட்டம் பெரும் அளவிலே என்றும் இல்லாத அளவிலே பெருகியிருக்கிறது. எனக்கு முன்னால் பேசிய ஜோதி அம்மாள் அவர்கள் கூறியதைப்போல் 25 லட்சத்திற்கு மேற்பட்டவர்கள் வேலையில்லாமல் இருக்கிறார்கள். கன்னியாகுமரி மாவட்டத்திலே மிக அதிகமானவர்கள் வேலையில்லாமல் இருக்கிறார்கள். இந்த மாபெரும் பிரச்னைக்கு வழிவகை காணுகின்ற முறையிலே எதுவும் ஆளுநர் உரையிலே சொல்லப்படவில்லை.

ஆசிரியர் பயிற்சி பெற்றவர்கள் அதிக அளவில் வேலையில்லாமல் இருக்கிறார்கள். பல ஆண்டுகளாக வேலைக் கிடைக்கவில்லையென்ற காரணத்தால், தங்களுடைய வயது வரம்பு தாண்டிவிடுகிறது என்ற காரணத்தினால், அவர்களுக்கு வேலைவாய்ப்பே கிடைக்காத காரணத்தினால் கன்னியாகுமரி மாவட்டத்திலே கடந்த இருபத்தி மூன்று நாட்களாக கலெக்டர் அலுவலகத்திற்கு முன்னாலே உண்ணாவிரதம் இருக்கிறார்கள். அவர்களிலே சிலரின் நிலைமை கவலைக்கிடமாகக்கூட இருக்கிறது என்பதை நான் இந்தச் சந்தர்ப்பத்திலே தெரிவித்துக்கொள்ளக் கடமைப்பட்டிருக்கிறேன். எனவே, படித்த அந்த ஆசிரியர்களுக்கு வேலை வாய்ப்பு ஏற்படுத்திக் கொடுக்கவேண்டும். பட்டதாரி ஆசிரியர்களை எடுத்துக் கொண்டால், அப்ரன்டிஸ் ஆசிரியர்கள் என்ற முறையிலே போட்டு அவர்களுக்கு ரூ. 175 தான் சம்பளம் கொடுக்கிறார்கள். ஆனால் மற்ற பட்டதாரி ஆசிரியர்களுக்கு 340 ரூபாய் சம்பளம் கிடைக்கிறது. அவர்கள் 2, 3 ஆண்டுகளாக அப்ரன்டிஸ் ஆகவே இருக்கிறார்கள். இந்த நிலைமையை மாற்றி அவர்களையும் மற்ற ஆசிரியர்களைப்போன்று நியமித்து நல்ல முறையிலே அந்த சம்பளம் கிடைக்கக்கூடிய நிலைமையை ஏற்படுத்த வேண்டும்.



இந்த மாநிலத்திலே சட்டமும் ஒழுங்கும் பெரும் அளவிலே பாதிக்கப்பட்டிருக்கிறது. சட்டசபையிலேயே சரித்திரம் காணாத அளவிலே நடவடிக்கைகள் மேற்கொள்ளப்பட்டிருக்கின்றன. சட்டத்தையும் ஒழுங்கையும் பாதுகாக்கக்கூடிய நாமே இங்கே சட்டத்தையும் ஒழுங்கையும் பரிபாலிக்கவில்லையென்றால், வெளியே எப்படி சட்டத்தையும் ஒழுங்கையும் நிலைநிறுத்த முடியும் என்பதைச் சிந்தித்துப் பார்க்கவேண்டும்.

சென்னை நகரத்தில் கடந்த ஆண்டில் மட்டும் 60 நாட்களைத் தவிர எல்லா நாட்களிலும் போலீஸ் தடை உத்தரவு இருந்ததாகக் கூறப்படுகிறது. இப்படிப்பட்ட நிலைமை தலைநகரத்திலேயே இருந்தால் வேறு மற்ற இடங்களில் பெருமளவில் சட்டம், ஒழுங்கு பாதிக்கப்பட்டிருக்கிறது என்பதை அறிய முடியும். 1972-ம் ஆண்டில் நடத்தப்பட்ட போலீஸ் தடியடிப் பிரயோகமும், துப்பாக்கிச் சூடுகளும், கண்ணீர்ப்புகைப் பிரயோகமும் ஆகிய இவைகளை பார்க்கும்பொழுது இந்த மாநிலத்தில் என்றுமில்லாத அளவிற்கு 'ரிகார்ட்' ஏற்படுத்தும் அளவில் நடந்திருக்கிறது என்பதை நான் சுட்டிக்காட்ட விரும்புகிறேன். மாணவர்கள், தொழிலாளர்கள், விவசாயிகள், ஆசிரியர்கள் போன்று எல்லா துறையிலே இருப்பவர்களாக இருந்தாலும் போலீஸ் அடக்கு முறையிலிருந்து விடுவிக்கப்படவில்லை.

அடுத்து, எங்கள் மாவட்டப் பிரச்னையாக ஒன்றிரண்டு காரியங்களைச் சொல்லலாம் என்று கருதுகிறேன். பட்டணங்கால் திட்டம் இன்றையதினம் முடியும் தறுவாயில் இருக்கிறது. தண்ணீர் விநியோகிக்கப்படுகின்ற முறை மோசமாக இருக்கிறது, ஒழுங்கற்றதாக இருக்கிறது. 'டேமில்' தண்ணீர் இருந்தும் விவசாயிகளுக்கு விநியோகிக்கக்கூடிய முறை ஒழுங்கற்றிருக்கிறது. தண்ணீர்த் தட்டுப்பாடு ஏற்பட்டிருக்கிறது என்பதை இங்கே கூறிக்கொள்ள விரும்புகிறேன். பல பொது கிளைக் கால்வாய்கள் அமைக்க வேண்டியிருக்கிறது. அதிகாரிகளிடம் இதுபற்றி விண்ணப்பங்கள் கொடுத்தும் பயனில்லை. பல மடைகள் அமைக்க வேண்டியுள்ளது. இன்னும் பட்டணங்காலில் 0/5 அண்ட் 6, பாலியாறு ஃப்ளும் முதலியவைகளில் கெபாசிட்டி குறைந்திருப்பதால் சரியாக விநியோகிக்க முடியாத நிலைமை இருக்கிறது. தொடர்ந்து எப்பொழுதும் அதனால் சரிவு ஏற்பட்டுக் கொண்டிருக்கிறது. ஆகவே, இந்த 0/5 அண்ட் 6, எல்லா சீசன்களிலும் அப்படியிருக்கிறது. ஆகவே, இந்த 0/5 அண்ட் 6, பாளியாறு ஃப்ளும் ஆகியவற்றின் கெபாசிட்டியைக் கூட்டுவதற்கு நடவடிக்கை எடுக்க வேண்டுமென்று கேட்டுக்கொள்கிறேன்.

இன்னும் ஆளுநர் அவர்களின் உரையில் நெசவாளர்களின் அவல்நிலையைப் போக்குவதற்கு அரசு என்ன நடவடிக்கைகளை எடுக்கும் என்பதுபற்றி இடம்

பெறவில்லை. 40 இலட்சம் தொழிலாளர்கள் நெசவுத்தொழிலில் ஈடுபட்டிருக்கிறார்கள். இவர்களுடைய அவலநிலையைப் போக்குவதற்கு என்ன நடவடிக்கை கைக்கொள்ளப்பட்டிருக்கிறது என்பது கவர்னர் உரையில் காணப்படவில்லை.

எனக்கு முன்னால் பேசியவர்கள் எலக்ட்ரிசிட்டி கட்டுப்பாட்டைப்பற்றி விரிவாகக் கூறினார்கள். எலக்ட்ரிசிட்டி விநியோகத்தை அதிகமாகத்தான் செய்ய வேண்டும். ஆனால் எலக்ட்ரிசிட்டியின் உற்பத்தியைப் பெருக்குவதற்கான வழிவகைகள் என்னென்ன என்பதைச் செய்யாமல் விநியோகத்தில் மாத்திரம் செயல்பட்டுக்கொண்டிருக்கிறது, மின் உற்பத்தியைப் பெருக்குவதற்குத் தகுந்த நடவடிக்கைகளை எடுக்கவில்லை என்பதைக் கூறிக்கொண்டு என்னுடைய சிற்றுரையை முடித்துக்கொள்கிறேன், வணக்கம்.

* திரு. டி. கணபதி: மாண்புமிகு சட்டப் பேரவைத் துணைத் தலைவரவர்களே, மேதகு ஆளுநர் உரைக்கு நன்றி தெரிவித்துப் பேச ஆரம்பிக்கிறேன். மதிப்பிற்குரிய பெரியவர் மணலி கந்தசாமி அவர்கள் நாட்டின் நடப்பைப்பற்றி, தற்கால அரசியலைப்பற்றி மேதகு ஆளுநர் உரையில் குறிப்பிடவில்லை என்று கூறினார்கள். அதையே வலியுறுத்தி திருத்தங்களை எதிர்க்கட்சியிலுள்ளவர்கள் கொடுத்ததுமன்றி, எனக்கு முன் பேசிய மாண்புமிகு உறுப்பினர் திரு. டென்னிஸ் முதலியவர்களும் இதே கருத்தைத் தெரிவித்திருக்கிறார்கள். நான் ஒரு சந்தர்ப்பத்தைக் கூற விரும்புகிறேன். அமைதியின்மை எப்படி ஏற்பட்டது? யார் இதற்கு உடந்தையாக இருந்தார்கள் என்பதையெல்லாம் சரித்திரத்திலிருந்து தெரிந்துகொள்ளலாம். நானும், உறுப்பினர் திரு. ஜேம்ஸ் அவர்களும் நவம்பர் மாதம் 15-ம் தேதி அரசுப் பேருந்தில் நாகர்கோவில் போய்க்கொண்டிருந்தோம். அதிகாலையில் திருநெல்வேலியிலுள்ள தச்சநல்லூர் பக்கத்தில் சிலர் கல்லையெறிந்தார்கள். அந்தக் கல், கண்ணாடியை உடைத்து, கைக்குழந்தையுடன் இருந்த ஒரு பெண்ணின் தலையில்பட்டு இரத்தம் ஒழுகி, பிறகு அவர் ஆஸ்பத்திரியில் சேர்க்கப்பட்டார். ஆனால் திரு. ஜேம்ஸ் அவர்கள் அவர்களுக்கே உரிய குமரித்தமிழில், "வே உம்மை தலையிலே படாமபோச்சே" என்று சொன்னார்கள். கண்டிக்க வருந்த மனமில்லை. அடிக்கடி திரு. எட்மண்ட் அவர்கள் தச்சநல்லூரிலே கேம்ப் செய்வதின் விளைவே இது. கல்லை எறிந்தவர்கள், பஸ்களைக் கொளுத்தியவர்கள், கோஷங்களை எழுதியவர்கள், பொதுக் கூட்டங்களை கலைப்பவர்கள் அமைச்சர்களோடு மோதிப்பார்ப்பது போன்ற காரியங்கள், இவைகளைச் செய்வது யார்? தங்களுடைய பேச்சாலும், நடத்தையாலும் எதிர்க்கட்சியிலிருக்கின்றவர்கள் மறைமுகமாக ஆதரவு கொடுத்தார்கள் என்பதை உலகம் அறியும். இதை உணர்ந்து தான் 1,700 மைல்களுக்கு



அப்பாலிருந்து வந்திருக்கின்ற மேதகு ஆளுநர் அவர்கள் தன்னுடைய உரையில் இவைகளைப்பற்றிக் குறிப்பிடாமல், தமிழகத்தை, தமிழ்ப் பண்பாட்டைக் காப்பாற்றி, இடுக்கணும் இடைஞ்சலும் இல்லாத முறையில் நாடு முன்னேற வேண்டுமென்று கூறியிருக்கிறார்கள். நான் ஆணையிட்டால் என்று நாடோடி மன்னனைப்போன்று தமிழினத்தைக் காட்டிக்கொடுக்கவில்லை. ஆகவே, ஆளுநர் அவர்கள் பண்பாக, பக்குவமாக இருக்க வேண்டுமென்று எடுத்துச் சொல்லியிருக்கிற பேருரையைப் பாராட்டக் கடமைப்பட்டிருக்கிறோம்.

இங்குள்ள எதிர்க்கட்சிகளின் நிலைமை என்ன? எம்.ஜி.ஆர். அவர்களை, அவருடைய கட்சியை அப்பாவியாக ஆக்குவதற்காக, அவருக்குத் தெரிந்த தமிழ் செத்து விட்டது என்பது தான் என்று சர்ட்டிபிகேட் கொடுத்திருக்கிறீர்கள். அந்த அப்பாவியை மன்னிப்போம், மறப்போம் என்று சொல்லி அவர்களை நட்டாற்றில் விடுகின்ற நடவடிக்கையை எடுத்திருக்கிறார்கள். அது எப்படி இருக்கிறது? கண்ணனின் குழலோசையால் கோபிகாஸ்திரிகள் பின்னால் சென்றார்கள் என்று அறிந்திருக்கிறோம். ஆனால் மதிப்பிற்குரிய எதிர்க்கட்சி நண்பர்களில் பலர் என்னுடைய பழைய நண்பர்கள், இந்த அவல நிலைக்கு வந்துவிட்டார்களே என்ற வருத்தம் எனக்கிருக்கிறது. குரங்கு சூடான பதார்த்தத்தைச் சாப்பிடுவதற்கு முன்னால் தன்னுடைய கையை வைத்துப் பதம் பார்க்காது, தன்னுடைய குட்டியின் கையை வைத்துப் பதம் பார்க்கும். அந்த முறையில் நமது எதிர்க்கட்சி நண்பர்களெல்லாம் அப்பாவி எம்.ஜி.ஆரை விட்டு ஆழம் பார்த்து அவர்களைச் சாக அடித்துவிட்டு இங்கே சட்ட சபைக்கு வாராமல் செய்து இவர்கள் மட்டும் இம்மாதிரி அரசியலை நடத்துகிறார்கள் என்றால் அரசியல் என்பது கழைக்கூத்தாடி செய்யும் (Street) வேலையல்ல.

திரு. க. சுப்பு: பேரவைத் துணைத் தலைவரவர்களே, திரு. எம். ஜி. ஆர். அவர்கள் இந்த மன்றத்தின் உறுப்பினர். அவரை அப்பாவி எம். ஜி. ஆர். என்று அழைப்பது சரியா? நாடோடி மன்னன், தமிழ் இனத்தைக் காட்டிக் கொடுத்தார் என்று சொல்கிறார்கள். அது சரியா? அது குறிப்பில் இருக்க வேண்டுமா? அவர்கள் அப்படிச் சொன்னது திரு. எம். ஜி. ஆரைத்தானா? அதையாவது தெளிவாகச் சொல்ல வேண்டும்? அப்படியானால் எந்த அடிப்படையில் காட்டிக்கொடுத்தார் என்று சொல்ல வேண்டும்.

திருமதி த. ந. அனந்தநாயகி: அப்பாவி அப்பாவி என்று சொல்கிறார். இத்தனை நாள் உங்கள் பக்கத்தில்தானே இருந்தார்? அப்பொழுது சூரதி சூராக இருந்தவர் இப்பொழுது அப்பாவியாகிவிட்டாரா?

மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர்: அப்பாவி என்று சொல்லலாம். பாவி என்றுதான் சொல்லக்கூடாது.

திரு. டி. கணபதி: தலைவரவர்களே, அவர்கள் அப்பாவிப்போல் சென்று விட்டார்களே என்றுதான் சொன்னேன். உங்களைச் சொல்லவில்லை, அரசியல் என்பது கழைக்கூத்தாடி செய்யும் ஸ்டண்ட் அல்ல. நாகரிகமாக, பண்பாக, நல்ல அரசியல் வரம்பிற்குள்ளேயிருந்து சட்டசபைக்குள்ளேயிருந்து என்ன செய்ய வேண்டுமோ, அதை விட்டுவிட்டு வன்முறையை நடத்தையாலும், பேச்சாலும் செய்வதை விட்டு ஒத்துழைக்க வேண்டுமென்று கேட்டுக்கொள்கிறேன்.

ஆளுநர் உரையில் பல அம்சங்கள் பொதிந்திருக்கின்றன. "உழவினார் கைம்மடங்கின் இல்லை விழைவதூஉம் விட்டேமென் பார்க்கு நிலை" என்று வள்ளுவர் கூறியிருக்கிறார். வேளாண்மைக்குத் தக்கமுறையில், உணவு உற்பத்திக்குத் தக்க முறையில் நீர்ப்பாசனம், மின்சார வசதி, உரம் முதலியவைகளுக்கு முயற்சியெடுக்க வேண்டும். அதற்கான முன்னேற்றத்திற்கான வழி வகைகளை அரசு செய்கிறது, சாதனையைச் செய்கிறது என்று கூறியிருக்கிறார்கள்.

நான் நீர்ப்பாசனத்தைப்பற்றி மட்டும் ஒன்றிரண்டு கருத்துக்களைச் சொல்ல விரும்புகிறேன். புயலாலும், வெள்ளத்தாலும் நமது மாநிலத்திலிருக்கின்ற வட மாவட்டங்களில் சேதம் அதிகமாகி 5 கோடி ரூபாய் உடனடியாகச் செலவழித்திருக்கிறார்கள். மேலும் 25 கோடி ரூபாயை மத்திய அரசிலிருந்து வாங்கி செலவழிப்பதற்குத் திட்டமிட்டிருக்கிறார்கள். நாங்கள் அதைப் பாராட்டுகிறோம். ஆனால் தென் கோடியிலுள்ள நெல்லை மாவட்டத்தில் நாங்குநேரி, இராதாபுரம் சட்டமன்றத் தொகுதிகள் இப்பொழுதும் பஞ்சத்தால் பாதிக்கப்பட்டிருக்கிறது. இப்பொழுது இந்த வருஷத்திலேயும் மழை சிறிதளவுதான் பெய்தமையால் இப்பொழுது அங்குள்ள கிணறுகளில் தண்ணீர் இல்லை. குடி தண்ணீருக்கே ஆளாய் பறக்கிறார்கள்.

ஆனால் நிவாரணம் இருக்கிறதா என்றால் இல்லை. ஆண்டுதோறும் அங்குள்ள ஒவ்வொரு விவசாயும் கிணற்றை ஆழப்படுத்த 2,000, 3,000 ரூபாய் செலவிட வேண்டியிருக்கிறது. எனவே வருடாவருடம் செத்துபிழைக்கின்றான். மின்சாரம் தாராளமாகக் கிடைத்த காலத்திலேயே அங்கே கிணற்றிலே தண்ணீர் கிடையாது. அதைப் போக்க ஒரு வழி இருக்கிறது. அதற்கு நம்முடைய கன்னியாகுமரி சட்டமன்ற உறுப்பினர்கள் எல்லாம் ஒத்துழைக்கத் தயாராயிருக்கிறார்கள். கன்னியாகுமரியிலுள்ள தண்ணீர் ஜூன், ஜூலை, அக்டோபர், நவம்பர் மாதங்களில் வீணாகக் கடலில் போய்க் கலக்கிறது. அந்தத் தண்ணீரை அந்தக் காலங்களில் ராதாபுரம், வள்ளியூர் பக்கம் திருப்பிவிட்டால் அந்தப் பஞ்சப் பிரதேசம், வறண்ட பிரதேசம் செழிப்புற வழி பிறக்கும். அறுத்தலியாறு அணையை 17 லட்சம் ரூபாயில் நிறைவேற்றுவதற்கு கன்னியாகுமரி





கலெக்டர் காலந் தாழ்த்து 6—1—73-ல் தான் அரசுக்கு அனுப்பியிருக்கிறார்கள். அதை உடனடியாக நிறைவேற்றித் தரவேண்டும். அதன் மூலம் வள்ளியூர் யூனியன், வடக்கன்குளம், பணகுடி, காவல் கிணறு ஆகிய பகுதிகளில் தண்ணீர் கிடைக்க வழி ஏற்படும். கிணற்றில் தண்ணீர் மட்டம் உயர வழி ஏற்படும். இதைப் பற்றி மாண்புமிகு பொதுப்பணித் துறை அமைச்சர் அவர்களும் முதல்வரும் கவனித்து உடனடியாக நடவடிக்கை எடுக்க வேண்டுமென்று கேட்டுக்கொள்கிறேன்.

பச்சையாற்றில் இரண்டு அணை இருந்தால் நாங்குநேரி வட்டாரத்திற்குத் தண்ணீர் கிடைத்து நல்ல மாதிரி விளைச்சல் செய்ய முடியும். குளமாடி அணையைக் கட்டினால் தாராளமாக விளைச்சலைப் பெருக்க முடியும். எஸ்டிமேட் எடுப்பதைத் துரிதப்படுத்தி ஆவன செய்து தர அரசை கேட்க கடமைப்பட்டிருக்கிறேன்.

வாய்க்கால்களைப் பொறுத்தவரையில் ரெகுலர் டாங்க், ஸ்பெஷல் டாங்க், ரிசர்வ் டாங்க் என்று வைத்து அரிசனங்களுக்கான டாங்கை அன்று இருந்த காங்கிரஸ் அரசாங்கம் ஸ்பெஷல் டாங்கில் சேர்த்து வைத்திருக்கிறது. முதல் குளமாயிருந்தும் தண்ணீர் விடப்படுவதில்லை. இரண்டாவது குளத்திலிருந்து மூன்றாவது குளத்திற்குத் தண்ணீர் பாய விடுவதில்லை. தென்னவனேரி குளமும் வெங்கட்டராயபுரமும் இவ்விதம் சொல்லி தண்ணீர் பாய முடியாது. 100, 200 ஏக்கர் பயிர்கள் தண்ணீர் இருந்தும் தீய்ந்து கொண்டிருக்கிறது. தண்ணீர் பாய வழி செய்ய வேண்டும். கால்வாய் சீரமைப்பு செய்து காலத்திற்கேற்ப மாற்றி அமைக்க திட்டம் தீட்டி இருக்கிற வகையில் எல்லாக் குளங்களுக்கும் தண்ணீர் விட தனிக் கால்வாய் வெட்ட வேண்டும். எனவே, நேரடியாக சிங்கிகுளம் பக்கமுள்ள அரிஜனங்களுக்கு மட்டும் சொந்தமான சின்னபுதுக்குளத்தை நீர்ப்பாசன சீரமைப்பால், முதல் குளமாக இருப்பதை ரெகுலர் டாங்க் லிஸ்டில் சேர்த்து தண்ணீர் விட கேட்டுக்கொண்டு என்னுடைய உரையை முடித்துக்கொள்கிறேன்.

திரு. ஜே. ஜேம்ஸ்: தலைவர் அவர்களே, மாண்புமிகு உறுப்பினர் கணபதி அவர்கள் கன்னியாகுமரி ஜில்லா சட்டமன்ற உறுப்பினர்கள் அவர்கள் கூறிய திட்டங்களை அமல்படுத்த ஒத்துழைக்க வேண்டுமென்று சொன்னார்கள். நாங்கள் தாராளமாக ஒத்துழைக்கத் தயாராக இருக்கிறோம். ஆனால் அங்கத்தினர் அவர்கள் சார்ந்திருக்கிற இந்த அரசுதான் இந்தத் திட்டங்களை அமல் செய்யாமல் வைத்திருக்கிறது என்பதை ஞாபகப்படுத்த விரும்புகிறேன்.

திரு. டி. கணபதி: அரசு உடனடியாக அவற்றை நிறைவேற்றுவதற்கான எல்லா ஏற்பாட்டையும் செய்து கொண்டிருக்கிறது. குமரி மாவட்ட உறுப்பினரை

தண்ணீரைத்தான் நாங்கள் கேட்கிறோம். அந்தத் திட்டங்கள் நடைமுறைக்கு வரும் கட்டத்தில் ஒத்துழைப்புத் தரவேண்டுமென்று கேட்டுக் கொள்கிறேன். அதற்காக நன்றி தெரிவித்துக் கொள்கிறேன். வணக்கம்.

* THIRU K. S. KOTHANDARAMIAH : I rise to say a few words on the Governor's Address and also to support the motion moved by Hon. Thiru N. Ganapathy.

I wish to say that we have an excellent Governor, a man possessed with rich administrative experience not only in administrative experience but he seems to be a great and sound scholar. He has also been trying to do his best to improve the cultural aspects of our State. Recently in a function held at Madras he referred to the affinities between Sanskrit and Dravidian languages. He has stated that from the southern part of India, civilisation flowed to the rest of India and this southern part showed the way to the rest of India.

I thank His Excellency for his reference to revered Rajaji. But he has not mentioned the way in which Government is going to remember Rajaji. The Hon.Chief Minister was kind enough to mention that he has got plans to have a memorials for Rajaji one at Madras and another at Hosur, his birthplace. If these things had been mentioned in the Governor's Address, that would have been more meaningful and satisfactory. (In spite of that, I thank His Excellency for making a reference to Rajaji's demise.

His Excellency has got full knowledge of all the situations in the State. He has mentioned about the late setting of South West Monsoon and also the cyclone outburst that has affected so many areas of our State. He has stated that damage had been done to South Arcot district, Coimbatore, etc. He has also included Dharmapuri district. Till some time, it has been the custom to omit Dharmapuri. For the last two years Government has been giving some consideration to Dharmapuri. I am glad of it. On account of late rains and the unseasonal South-West Monsoon, he has said that ground-nut crop has been affected. But he has not mentioned that Gingelly crop has also failed. Gingelly is also a commercial crop in our State and it fetches nearly Rs. 2 crores. It is being cultivated in about 50,000 acres in Dharmapuri district. That is not mentioned here in the address. That shows that the entire picture of crop situation in the State has not been made out.





Quite a number of fair-price shops have been opened in the Cities of Coimbatore and Madras. These shops should be opened in border areas of our State, that is, in Dharmapuri district. There is a great need for opening such shops in the belt areas where people suffer a lot.

Government have stated that an account of paucity of water, they have proposed a ' Western Ghat Development Corporation to tap untapped water resources. When State and Central Governments formulated Five-Year Plans, they did not provide plans on regional basis or geographical basis but on political basis. Political boundaries formed the basis. Further, I do not know how this Government have forgotten about the Ganga-Cauveri link propounded by Dr. K. L. Rao, long ago. What the Governor has stated, is not that, but about " Western Ghat Development Corporation ". In the Ganga-Cauveri link, water channel comes up to Srisailam in Andhra, which is on Mysore table land. Then the proposal is to take water straight to Mettur Dam (via) Chingleput district. That means they have forgotten completely Dharmapuri and North Arcot districts. Dharmapuri and Hosur area are in Mysore table land and so also is Srisailam in Andhra is also in that same Mysore table land. Moreover Hogenakal is only 15 miles from Mettur. Cauvery water from Srisailam could be brought to Mettur (via) Hosur taluk, since Cauvery flows at the southern border of Hosur taluk, close to Hogenakal falls.

Instead of doing this, they want to bring the channel to a lower level in Chingleput and then to Mettur which is at an upper level, 2,000 feet high. That will involve a lot of money and waste of time. I suggest that if they could consider the scheme I have suggested and recommended the same to the Government of India, it will be very useful. Some people may think it is a fantastic scheme. When executing the scheme they should remember Dharmapuri, North Arcot and Coimbatore districts and these districts also should get the benefits of the scheme.

About State borders, I hear a lot of smuggling is going on in Hosur border. Hon. Member Venkataswamy also referred to this. The Hon. Minister also gave an assurance that he would try to get the assistance of Military personnel. Whatever is done, they must post honest and efficient officers who will not

stoop to corruption and they should also be given protection so that they can act with boldness. Unless some drastic action is taken, every day hundreds of cart-loads, lorry loads of grain are going to other States and that should be stopped. There is a big public scandal about it also.

Regarding Salem Steel Plant, as the English proverb, 'conceived, conceived, but brought forth nothing', we have been hearing of this project since many many years, but nothing has taken shape. The Central Ministers are making statements every now and then and we do not know when it is going to take a concrete shape and when people will get the benefits of the plant. Instead of making statements to suit the political conditions, it is better some concrete steps are taken whether it is the Central Ministers or State Ministers. Wherever you go, whether it is Salem or Hospet or Vizag plant, for every State they are saying the same thing.

Another thing is about emoluments of State and Central Government employees. There is now great disparity between the emoluments of these employees. I do not know why this should be so. After all they are doing the same work, stay in similar offices and have the same responsibilities and whether one is a State Government employee or a Central Government employee, the difficulties experienced are the same. Why then this disparity? It is better that concrete action is taken to remove this disparity.

Next thing is about fertilisers. They are not available now. No doubt our Government have been very efficient and doing their best. This should be looked into. There is no electric power. But what is the use? This is like opening schools without children. The agriculturists have purchased pumpsets, but they are lying idle. They have taken loans from Co-operative Societies and the officers of these societies do not give time to the agriculturists to repay the loans at easy instalments. Government should do something to improve the position.

Regarding electricity, it is very clear that the Government have failed to supply adequate electricity to all the people to meet their needs. Therefore, industries and agriculture are suffering. We all know that modern civilization depends much on electricity and if electricity fails, it is very, very difficult for



people to carry on their normal activities. In the Neyveli Project also there are difficulties. It is impossible to get sufficient and adequate power from that. Our Governments are tapping small projects. There is the Jog Falls in Mysore State. It is capable of, if properly harnessed, supplying the power for the entire south and north also to some extent. Some experts say that Brahmaputhra falls also should be tapped. We often experience failure of South-West monsoon; when monsoon fails, there is no water and without water, there is no power. Therefore instead of depending on unreliable sources, we must have some national schemes which will meet our electricity needs completely in adequate quantities. A rosy picture of agriculture was presented, at the start but now there is a gloomy picture with late monsoons and excessive storms, etc. We must, therefore, find out ways and means of supplying electricity in some other ways. Otherwise, it is impossible to improve agriculture or carry on industries.

Next thing is bus nationalisation. We welcome it. But the difficulties are in respect of poor bus owners, though it is all right with regard to rich bus owners. These poor bus owners somehow take loans and manage to keep on some buses and eke out their livelihood. Therefore, in their cases Government should consider to take the buses only when the permits expire and also to think of giving them a little more compensation and give them some time to adjust themselves and repay their loans and adjust their family circumstances. Otherwise, they will be hit hard.

Lastly, I wish to point out that Governor after Governor who came to his State have been forgetting the question of linguistic minorities in the State. The previous Governor was not particular about it. I thought that the present Governor who is a great scholar would remember the linguistic minorities, but he also has forgotten. One-fifth of the population is covered by the linguistic minorities. They have got their own language and their own culture; they want facilities to protect and develop them. Of course, we are glad that the Government are doing much for development of Tamil. But there are other languages also and they also should grow along with Tamil so that the minority people also may develop their language and culture and live happily in the State. Therefore, I think His Excellency, though he has forgotten it now, will consider this important aspect of the question and at least hereafter should bestow his attention to this

question. The Government no doubt is doing something for us but we have got many difficulties and I hope all these things will be considered by the Government.

With these words I close my speech.

**திரு. இ. எஸ். தியாகராசன் :** பேரவைத் துணைத் தலைவர் அவர்களே, மேதகு ஆளுநர் அவர்களின் உரைக்கு நன்றி தெரிவிக்கும் தீர்மானத்தை ஆதரித்து என்னுடைய கருத்துக்கள் சிலவற்றைக் குறிப்பிட ஆசைப்படுகிறேன்.

இன்றைய தினம் அதிக மழை காரணமாக நாட்டிலே பெருவெள்ளம் வந்து அதன் பயனாக வெள்ளக்கேடு பல தோன்றியிருக்கிறது. குறிப்பாக பல மாவட்டங்களிலும் அதைத் தடுப்பதற்காக நம் அரசு இன்றைய தினம் ஐந்து கோடி ரூபாய் ஒதுக்கி அதற்காக ஆவன செய்வதற்கு முன்வந்ததற்காக நம் அரசுக்கு நான் நன்றி செலுத்தக் கடமைப்பட்டிருக்கிறேன். ஆனால் நம் ஆளுநர் அவர்களது உரையில் குறிப்பிட்டுள்ளதைப் போல் 40 கோடி ரூபாய் நஷ்டப்பட்டிருக்கிற நம் மாநிலத்திற்கு இப்போது ஐந்து கோடி ரூபாய் மட்டும் நிவாரண வேலைகளுக்காகச் செலவு செய்யப்படுமானால், அதனால் உண்மையிலே எந்தவிதமான நற்பயனும் ஏற்படாது என்பதை இந்த நேரத்தில் நான் சுட்டிக் காட்ட விரும்புகிறேன். ஆனால் நமக்கு மத்திய அரசு தருவதாக வாக்களித்திருக்கிற நிதி இதுவரையிலும் தரப்படாததன் விளைவாக பாதிக்கப்பட்டிருக்கிற மக்களுக்கு செய்யப்பட வேண்டிய நிவாரண வேலைகள் தாமதப்படுகிறது. அப்படி தாமதப்படுவதன் காரணமாக வெள்ளத்தால் பாதிக்கப்பட்டுள்ள மக்கள் மிகவும் வேதனைப்பட்டுக்கொண்டிருக்கிறார்கள். அவர்களுக்கு விரைவில், நம் அரசு தக்க நடவடிக்கைகளை எடுத்து மத்திய அரசிடமிருந்து நிதி பெற்று ஆவன செய்ய வேண்டுமென்று இந்த நேரத்தில் நினைவுபடுத்த கடமைப்பட்டிருக்கிறேன். அடுத்து, வேளாண்மைத் துறை நம் நாடு போற்றும் வகையில் நல்ல வளர்ச்சியினைப் பெற்றிருக்கிறது. அதன் பயனாக நாட்டில் உணவுப் பஞ்சம் நீங்கி இன்று நாம் அதிக உணவைப் பெற்று மற்ற மாநிலங்களுக்கு நாம் உணவு அளிக்கிற அளவிற்கு நம் உற்பத்தியைப் பெருக்கியிருப்பதற்காக உண்மையிலேயே வேளாண்மைத் துறையைப் பாராட்டக் கடமைப்பட்டிருக்கிறேன். அவர்களுக்கு இந்த நேரத்தில் அதற்காக நன்றி செலுத்தவும் கடமைப்பட்டிருக்கிறேன்.

அடுத்தபடியாக, விலைவாசியைக் குறைப்பதற்காக எடுக்கப்பட்டிருக்கின்ற நடவடிக்கைகளை நான் பாராட்டுவதோடு, இன்னும் அவைகள் அதிகமாக உயராமல் கட்டுப்படுத்துவதற்காக நடவடிக்கைகளை மேற்கொள்ள வேண்டுமென்று கேட்டுக்கொள்கிறேன்.





**மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர் :** பேரவையின் இன்றைய அலுவல்கள் இத்துடன் முடிவுற்று, நாளை காலை 9 மணிக்கு பேரவை மீண்டும் கூடும். திரு. இ. எஸ். தியாகராசன் அவர்கள் தொடர்ந்து நாளை பேசுவார்.

பின்னர் பேரவை 1.31 மணிக்கு ஒத்திவைக்கப்பட்டது.

## 6. பேரவை முன் வைக்கப்பட்ட ஏடுகள்

### A. *Statutory Rules and Orders.*

28. Notification issued with G. O. Ms. No. 3362, Revenue, dated the 13th December 1972, in regard to an amendment to the Tamil Nadu Agricultural Income-tax Rules, 1955. [Laid on the Table of the House under section 61 (3) of the Tamil Nadu Agricultural Income-tax Act, 1955 (Tamil Nadu Act V of 1955).]

29. Notification issued with G. O. Ms. No. 3426, Revenue, dated the 19th December 1972, in regard to an amendment to the Religious Institutions (Custody) Investments and lending or Borrowing of Moneys Rules, 1963. [Laid on the Table of the House under section 116 (3) of the Tamil Nadu Hindu Religious and Charitable Endowments Act, 1959 (Tamil Nadu Act 22 of 1959).]

30. Notification issued with G.O. Ms. No. 2393, Home, dated the 16th September 1972, in regard to an amendment to Rule 5 of the Tamil Nadu Motor Vehicles Rules, 1940. [Laid on the Table of the House under section 133 (3) of the Motor Vehicles Act, 1939 (Central Act IV of 1939).]

31. Notification issued with G. O. Ms. No. 20, Transport, dated the 14th January 1973 making the Tamil Nadu Stage Carriages and Contract Carriages (Acquisition) Rules, 1973. [Laid on the Table of the House under section 32 (4) of the Tamil Nadu Stage Crriages and Contract Carriages (Acquisition) Ordinance, 1973 (Tamil Nadu Ordinance I of 1973).]

### B. *Reports, Notifications and Other Papers.*

16. Report of the Committee on Estimates on the action taken by the Government on the recommendations of the Committee contained in the report on Agriculture Department.

## இணைப்பு

[511-ம் பக்கத்தில் 71-ம் எண்ணுள்ள வெள்ளி குறியிட்ட வினாவிற்குரிய விடையைக் காண்க.]

**விடை :** அ, (இ) பொருளாதார முக்கியத்துவம் வாய்ந்த கீழ்க்கண்ட கனிப்பொருட்கள் திருநெல்வேலி மாவட்டத்தில் காணப்படுகின்றன.

1. திருநெல்வேலி வட்டம், தாழையூத்து, நாங்குனேரி வட்டம், திசையன் விளை, வள்ளியூர், கோவில்பட்டி வட்டத்திலுள்ள கயத்தாறு, வள்ளிநாயகபுரம், கடலை சங்கரன்கோவில் வட்டத்திலுள்ள ஊத்துமலை ஜமீந்தாரி, பந்தப்புளி ஆகியவிடங்களில் காணப்படும் சுண்ணும்புக்கல் (Limestone) தூத்துக் குடியின் வடகிழக்கிலுள்ள தீவுப்பகுதிகளில் காணப்படும் கிளிஞ்சல் சுண்ணும்பு.

2. இம் மாவட்டத்தில் கடல்குடி, விளாத்திக்குளம், வேப்பலோடை, மைப் பாறை ஆகியவிடங்களுக்கருகில் கடலோரம் பகுதிகளில் காணப்படும் களிக்கல் (Gypsum).

3. திசையன்விளையைச் சுற்றிலும் நாங்குனேரி வட்டத்திலுள்ள கடலோரப் பகுதிகளில் காணப்படும் களிமண் (Clays)

4. நாங்குனேரி வட்டம் நாவலடி ஓவரி பகுதியிலும், கோவில்பட்டி வட்டம் வேம்பார்-கல்லாறு பகுதியில் காணப்படும் பளிங்கு போன்ற ஒருவகைக் கனிப்பொருள் (Garment) இல்மெனைட் (Ilmenite) மணல் வகைகளைக் கொண்ட கடற்கரை மணல்.

பொருளாதார வகையில் ஆதாயமில்லாத பிற கனிப்பொருட்கள் பற்றிய விவரம் பின்வருமாறு :

சங்கரன்கோவில் வட்டத்தில் குரிஞ்சான்குளத்திற்கருகில் காணப்படும் கிராபைட் (Graphite) தென்காசி வட்டம் நெட்டூர், சிங்காத்தகுறிசி ஆகியவிடங்களில் காணப்படும் வெர்மிகுலைட் (Vermiculite), கடயத்திற்கருகில் காணப்படும் இரும்புக்கனி, நாங்குனேரி, திருச்செந்தூர் வட்டங்களின் சில பகுதிகளில் காணப்படும் கங்கர் (Kankar)

இம்மாவட்டத்தில் காணப்படுவதாகக் கூறப்படும் பிற கனிப்பொருட்கள் பின்வருமாறு :

பனகுடிக்கு அருகிலும், களக்காடு பாபநாசம், தெற்கு வீரநல்லூர், ஒதக் காடு ஆகியவிடங்களில் சில பகுதிகளிலும், மீனவன் குளத்திலும் காணப்படும் கிராபைட் (Graphite துறையூர், விக்கிரமசிங்கபுரம் ஆகியவிடங்களுக் கருகில் காணப்படும் மைக்கா (Mica), மூன்றடைப்பு, பத்தாங்காடு ஆகிய விடங்களுக்கருகில் காணப்படும் செம்பும் பிற சல்பைடுகளும் (Sulphides) **இந்தக் கனிப்பொருட்களில் எதுவும் பொருளாதார வகையில் மதிப்பு வாய்ந்த தல்ல.**



# HOW TO USE THE INDEX

The Index is arranged alphabetically. The Main Headings are printed from the margin and the sub-headings are indented from the main headings.

Under every Main Heading including various names, entries pertaining to proceedings other than questions are indicated by printing immediately after the subject matter within brackets, e.g., (M) for Motion, (C.A.) for Calling Attention, (R) for Resolution, (St.) for Statement, etc. An entry without any such indication will mean that it pertains to a question, except in the case of Bills and Financial Business, the entry in which cases will be self-explanatory.

All the Bills are alphabetically arranged under the main heading 'Bill(s)'.

Various bodies like Committees, Councils, Boards, Corporations, etc., are consolidated under the said Main Headings, i.e. 'Committee(s)', 'Council(s)', 'Corporation(s)', etc.

Various subjects like Schools, Colleges, Conferences, Ports, Temples and similar other broad subjects are shown in alphabetical order under these very Main Headings.

All the Papers laid on the Table of the House are indexed only under the Main Heading "Papers laid on the Table".

Rulings and Observations from the Chair are indexed under the Main Heading "Chair".

A list of abbreviations used in the Index is given below :—

| | | |
|---|---|---|
| A.M./Ad. Motion | ... | Adjournment Motion. |
| Ann. | ... | Announcement. |
| B.O.H. | ... | Business of the House. |
| C.A. | ... | Calling Attention to a Matter of Urgent Public Importance. |
| C.A. St. | ... | Calling Attention Statement. |

| | |
|---|---|
| Consid. | ... Consideration stage of a Bill. This stage includes : (i) Motion to refer to Select /Joint Select Committee. (ii) Amendment to refer to Select Joint Select Committee. (iii) Amendment to circulate. (iv) Motion to consider as reported by Select/Joint Select Committee. (v) Amendment to recommit to Select/Joint Select Committee, etc. |
| Consid. Cl. . | ... Consideration of clauses of a Bill. |
| D.E.E. | ... Demands for Excess Expenditure. |
| Dis. S.D. or D.S.D. | ... Discussion for Short Duration on an urgent matter of Administration. |
| D.S.G. | ... Demands for Supplementary Grants. |
| G.A. | ... Governor's Address. |
| G.D. | ... General Discussion. |
| H.A.H. Dis./H.H.D. | ... Half-hour Discussion. |
| Int. | Introduction stage of a Bill. |
| L.A. | ... Legislative Assembly. |
| L.C. | ... Legislative Council. |
| M. | Motion. |
| P.M. | ... Privilege Motion. |
| R./Res. | ... Resolution. |
| St. | ... Statement. |

# Index to Tamil Nadu Legislative Assembly Debates.

SEVENTH SESSION OF THE FIFTH LEGISLATIVE ASSEMBLY UNDER THE CONSTITUTION OF INDIA.

*3rd, 5th to 8th February 1973.*

VOLUME XXX (Nos. 1 TO 5).


PAGES

A.

ABDUL JABBAR, THIRU V. M.—
Governor's Address (M) ... ... ... ... 532–535

ACCIDENTS—
Hit and run accidents, prevention ... ... ... 229–230

AGRICULTURE—
Chillies, export ... ... ... ... ... 70–71
Sun-flower cultivation ... ... ... ... 68–69

ANANDANAYAKI, THIRUMATHI T. N.—
Deputy Speaker, removal from office (R) ... 135–140, 141, 161, 164, 168, 172, 175, 177, 176–177, 179

PAGES

A.—cont.

ANANDANAYAKI, THIRUMATHI, T. N.—cont.

Governor's Address (M) ... ... ... ... 431

Reported remarks of Thiru M. G. Ramachandran, M.L.A., that the "House is dead" (Privilege matter) ... ... ... ... .. 262–264

Serious situation due to power cut (A.M.) ... .. 404–409, 410, 423, 424

ANBAZHAGAN, THIRU K.—

Governor's Address (M.) ... ... ... ... 457, 460–461, 484, 486

ARCHAEOLOGY—

Archaeological Department, Tamil Research Wing. 209

B.

BALASUNDARAM, THIRU V.—

Governor's Address (M) ... ... ... 554–556

BOARD(S)—

Electricity—, R.C.C. Poles, manufacture ... .. 522–524

BOMMAN, THIRU K. H.—

Governor's Address (M) ... ... ... .. 448–451

BRIDGES AND CULVERTS—

Across Pamban, construction ... ... .. 213–214

Kumbakonam, construction of overbridge across railway line ... ... ...... ... .. 379

C.

CEMENT—

Arasu Cement, price rise ... ... ... ... 512–513



PAGES

C.—cont.

CHAIR—

Announcements— 79

B.O.H. ... ... ... ... ... ... 80

Non-taking up of adjournment motions ... ... 80

Panel of Chairmen ... ... ... ... ...

Walk-out by certain Members before Governor's Address ... ... ... ... ... 78–79

Rulings and observations—

*Adjournment motions—*

*Critical situation created by cut in electricity in the industrial, agricultural and domestic sectors*

Consent was withheld on the ground that there was no need for the motion in the light of the statement made by the Minister ... ... ... ... ... 426

*Grave situation prevailing in Tiruppur, Coimbatore and Salem, due to sudden increase in the price of yarn.*

Consent was withheld on the ground that there was no need for the motion in the light of the statement made by the Minister for Industries and the Chief Minister ... 267–280

*Scope of discussion.*

At the stage of giving consent to an adjournment motion, Members should not enter into a debate as that would tantamount to a discussion on it without leave ... ... 424

*Serious situation caused by the lock-out in the WIMCO Match Factory, Madras.*

Consent was withheld on the ground that there was no need for the motion in the light of the statement made by the Minister ... ... ... ... ... 526

CHAIR—*cont.*

*Allegations*—

While allegations about matters of administration were admissible, reference to Ministers individually were not in order ... ... 407

*Amendments*—

*Permission to move amendment to Motion of Thanks for the Governor's Address on the day when the Motion of Thanks was moved.*

With reference to a request by a Member that he might be permitted to move his amendment immediately after the Motion of Thanks for the Governor's Address was moved so that the members could speak on both the Motion of Thanks and the amendments, the Deputy Speaker observed that it could not be done all of a sudden as the amendments must be scrutinised first ... 282–283

*Breach of order*—

On 6th February 1973 the Deputy Speaker *suo motu* referred to the Committee of Privileges the matter relating to the walk-out staged by some Leaders of Parties after making a short speech, with their party Members on 2nd February 1973 just before the Governor commenced his Address to the joint session of the Legislature.

The Deputy Speaker declined the request of some leaders of parties to allow any discussion on the matter as they would have ample opportunity to give expression to their views in the Committee of Privileges and as he did not wish to set up a bad precedent of re-opening a matter on which he had given his ruling ... ... ... ... ... 240–250



CHAIR—*cont.*

*Rulings and observations*—cont.

*Debate*—

*Comments by Advocate on the proceedings of the House.*

In the course of the discussion on the resolution for the removal of the Deputy Speaker, the Leader of the Communist Party referred to certain observations made by the Advocate engaged by Government against Thiru K. A. Mathialagan in the Writ Petition filed by Thiru K. A. Mathialagan and stated that as it called in question the proceedings of the House, there was a *prima facie* case of breach of privilege.

While endorsing the view that the proceedings in the House should not be commented upon outside, the Chair held that inasmuch as a Writ Petition had been filed in the Court of Law, lawyers have to appear to defend the other side. Just as the Members enjoyed certain privileges in the House, the lawyers too, who appeared on behalf of the Chief Minister or others enjoyed equal rights to express their views to defend their clients and they had no authority to snatch away that privilege from them ... ... ... ... ... 104–105

***Motives.***

Attribution of motive to a Member was not in order ... ... ... ... 412

*Reference to Officers of the Assembly.*

On 5th February 1973, in the course of the debate on the resolution for the removal of the Deputy Speaker from office, the Leader of the Communist Party alleged that on the day when the motion for the removal of the Speaker was tabled on 2nd

CHAIR—*cont.*

*Rulings and observations*—cont.

*Debate*—cont.

Reference to Officers of the Assembly—*cont.*

December 1972, the Secretary who was responsible for affording protection and support to the Members had suddenly become the Chief Minister's Secretary. The Chair observed: "I particularly appeal to the hon. Member not to make remarks against the staff for the simple reason that they have no right to reply. After all, they are all silent witnesses to what is happening in the Assembly. I would invite the attention of the hon. Member to the fact that though they are under the administrative control of the Speaker they are the servants of the House. As a matter of fact, the hon. Member Thiru Thangamani knows that the Secretary in the British Parliament is called 'Clerk of the House'. So, I would request the hon. Member only to refer to the Deputy Speaker and other persons who have got the right of reply." The Member stated that he would then state that the Deputy Speaker had made the Secretary function as Secretary to the Chief Minister. Another Member stated that it amounted to casting aspersion against the officer who was responsible for the executive activities of the House and hence the remark should be expunged

The Chair however held that the remarks need not be expunged as the Member had been permitted to make an indirect reference for the reason that the Deputy Speaker and the Leader of the House would reply to the debate ... ... ... 107-110

The Chair can call upon anyone to speak at anytime ... ... ... ... ... 469







CHAIR—*cont.*

*Rulings and observations*—cont.

*Decorum*—

*Advice to Chair.*

While suggestions might be made to the Chair, on no account should any Member advise the Chair ... ... ... ... 462

*Argument.*

Members should not argue with the Chair ... 388

It was indecorous for Members to pass any remark against the Presiding Officer from their seats. Though he heard such remarks, they were not recorded as they were not made through the mike. Nevertheless it was not a sound practice ... 250

When the Chair was on its feet, Members must resume their seats. Members should obey the Chair ... ... ... ... 81

When the Chair was on its legs, other members should not stand ... ... ... 462

*Expressions used in the House*—

"I protest against the manner in which you are treating us.

Because you are sitting in that seat, can you say anything...........

Have you got the guts to do it?

If you want, you can throw me out."

Deprecating these remarks made by a Member against the Chair, the Chair observed that it was highly reprehensible that the member failed to give due respect to the Chair. It was enjoined on the Chair to conduct the proceedings in a dignified and orderly manner reflecting the high traditions and conventions ... ... ... ... 388-391

CHAIR—*cont.*

*Rulings and observations*—cont.

*Expression used in the House*—cont.

*Governor's Address*—

*Walk-out by some Members.*

With regard to the statements made and walk-out staged by leaders of some parties accompanied by the members of their parties on 2nd February 1973 when the Governor rose to address the members of both the Houses, the Chair announced that the matter would be taken up on 6th February 1973 ... ... ... ... 78-79

*Half-hour debate*—

On 8th February 1973 a Member reiterated the request that he made the previous day for a half-hour debate on a subject on which some questions were answered. The Chair observed that the Member just made a passing remark and did not stress for it and added that inasmuch as the reply to that question had been exhaustive and the Members could express their views in the discussion on the Governor's Address, there was no need for a half-hour discussion ... ... ... ... 526-527

*Matters sub-judice*—

Matters under judicial enquiry should not be discussed ... ... ... ... ... 300

*Personal explanations*—

Members cannot offer personal explanation on a policy decision of the Government. Only when a Member had been personally referred to, he could rise to offer personal explanation 424







CHAIR—*cont.*

*Rulings and observations*—cont.

*Point of Information*—

*Notice of Motions*—

Information about notices of privilege and other motions given by Members should be sought in the Speaker's chamber and not in the House. 90

*Points of Order*—

A Member rising on a point of order enquired whether the action of the Members belonging to the party headed by Thiru M. G. Ramachandran which supported the resolution for the removal of the Deputy Speaker from his office in having gone out of the House as soon as the discussion commenced, amounted to a 'walk-out'.

The Chair ruled that it was not a point of order 95-96

*Change of Presiding Officer when the resolution for the removal of the Deputy Speaker was under discussion*—

When the resolution for the removal of the Deputy Speaker from his office was under discussion, the person who was nominated from amongst the panel of Chairmen by the Deputy Speaker and was presiding over the House, nominated another Member from the Panel who occupied the Chair.

A Member rising on a point of order enquired whether there could be such frequent changes.

The Chair observed that it was in order and quoted Rule 6 of the Assembly Rules, which empowered the Chairman presiding to nominate one from among the panel. 116-117

PAGES.

CHAIR—*cont.*

*Rulings and observations*—cont.

*Points of Order*—cont.

*Deputy Speaker's participation in the debate on a Resolution for his removal.*

The Leader of an opposition party quoting Article 181 (2) of the Constitution of India enquired whether the Deputy Speaker also had the constitutional right to participate in the proceedings while a resolution for his removal from office was under discussion.

The Chair observed that though there was reference only to Speaker in Article 181 (2) whereas the Speaker was not normally entitled to participate in the proceedings, the Deputy Speaker was entitled to participate in it as a Member of the House. So, the Deputy Speaker, if not for any reason, by way of personal explanation was entitled to participate in the debate. 96

Every Member was entitled to raise a point of order. 96

If a Member raised a point of order about something in the speech of the Member speaking, he might be allowed to raise the point of order, in order to enable the Member to exercise his democratic right. 109

On a Member objecting to another Member interrupting the speech of a Member under the pretext of raising a point of order while he did not actually raise a point of order on the ground that it was against the rules to seek such clarification in the middle of a Member's speech, and a Member's speech could be interrupted only on a point of order, the Chair observed that the Member did not raise a point of order and only after getting the permission of the Member who held the floor and only when he yielded he rose to speak. So there was no point of order. 462





PAGES

CHAIR—*cont.*

*Rulings and observations*—cont.

*Points of order*—cont.

When a Member pointed out that another Member went on speaking under the pretext of point of order or clarification the Chair observed that under no circumstances the Chair should be advised by a Member. He also added that the Member spoke after getting permission from the Chair and he never raised a point of order ... ... ... 462

*Privilege Matter.*

Alleged remarks by Thiru M. G. Ramachandran that the House was 'dead'.

On 6th February 1973, a Member of the D.M.K. raised a matter of privilege against another member Thiru M. G. Ramachandran for his alleged remark outside the House that the 'Legislature was dead'. House Quoting from May's Parliamentary Practice, the Member contended that inasmuch as it was a reflection on the Members whether or not they are named or otherwise indicated were equivalent to reflections on the House and hence it constituted a breach of privilege and sought leave to refer the matter to the Committee of Privileges.

In the discussion that ensued, views were expressed in favour of reference of the matter to the Committee of Privileges and also against it.

Some Members and also the Chief Minister were of the view that though the statement made by Thiru M. G. Ramachandran was not in order, they might drop the matter adopting the noble policy of forget and forgive.

PAGES.

CHAIR—*cont.*

*Rulings and observations*—cont.

*Privilege Matter*—cont.

The Chair observed that though he was of the view that the statement alleged to have been made by Thiru M. G. Ramachandran amounted to saying that 'Democracy was dead and it was a matter of breach of privilege, in accordance with the views expressed by the Chief Minister and some other Members he dropped the matter while at the same time strongly condemning the attitude of Thiru M. G. Ramachandran. 250–266

Questions and answers—

*Supplementary questions*—

Members should only put questions and not make statements. 386

Members should put the supplementaries direct without any illustrations. 517

*Relevancy*—

After allowing a large number of supplementary questions on a question, the Chair observed that he had deliberately allowed it as his repeated appeal to Members not to put questions which did not relate to the main question had been of no avail. When Members repeated the same irrelevant questions they only exhibited their inattentiveness. He deprecated such practice which would not be allowed by him in future. 377

Supplementary questions must be relevant to the main question 73, 212

The Deputy Speaker observed that he did not like the Minister answering questions which did not relate to the main question. 369, 370, 371, 386



PAGES.

CHAIR—*Cont.*

*Rulings and observations*—cont.

*Questions and answers*—cont.

*Supplementary questions*—cont.

*Relevancy*—cont.

When the Chair observed that a Member was not putting a question but giving clarification, the Member maintained that this was a straightforward question. Thereupon the Chair observed that he should not argue with the Chair. The Member protested against the observation of the Chair and remarked that if the Chair wanted, he could throw him out.

The Chairman strongly deprecated the tenor of the observation of the Member and observed that he should put short and direct supplementaries. 388–391

Supplementary questions should be put only for the purpose of eliciting information and such questions which contained arguments, inferences, accusations, insinuations intended to outwit the Ministers would be disallowed 389, 390

Supplementary questions should not become 'speeches'. Question hour was intended to seek information about a particular matter and it was not intended to find out the feelings of the Ministers. 357–358

*Removal of Deputy Speaker*— —

*Procedure for consideration of resolution for*—

*Chair's Appeal*—

On 5th February 1973, before the resolution for the removal of the Deputy Speaker was taken up, the Chair drew the attention of the Members to rule 67 relating to the norms to be followed on a debate and appealed to the members to help in conducting the debate at a high level. [illegible]

CHAIR—*cont.*

*Rulings and observations*—cont.

*Removal of Deputy Speaker*—cont.

On 5th February 1973, a Member from the Panel of Chairman (Thiru Palanivel Rajan) announced to the House the receipt of the following resolution from Hon. member Thiru K. T. K. Thangamani—

"This House resolves to remove the Deputy Speaker of the Assembly from his office, for his undemocratic and unconstitutional acts on 2nd December, 1972"—

When, as per Rule 54 of the Assembly Rules, 35 members rose in their seats and signified their support in favour of consent being given for the motion, the Chair announced that the Resolution would be taken up for consideration. 91

*Use of mike and information about the person who would preside.*

As soon as the Deputy Speaker announced that the next item on the agenda was the resolution for the removal of the Deputy Speaker, points of order were raised as to whether an assurance would be given that the mikes would not be switched off during the discussion on the resolution and information was sought as to who would preside during the discussion.

After a short discussion in which some leaders of parties and two Ministers participated, the Chair observed that according to article 181 of the Constitution and Rule 54 of the Assembly Rules as a member from among the Panel of Chairmen had to preside on such



CHAIR—*cont.*

*Rulings and observations*—cont.

*Removal of Deputy Speaker*—cont.

*Use of mike and information about the person who would preside*—cont.

Occasions, he has nominated Thiru Palanivel Rajan to preside over the House and conduct the proceedings.

As for the mike, though the operator operated the mike, the Presiding Officer controlled and regulated the use of the mike. When the Chair was speaking, even the mikes in front of Ministers would not work.

In order to enable the House to hear the speech of one member at a time, the present practice has been followed in the House by successive Presiding Officers in the State, whatever be the practice followed elsewhere. 80–88

***Resolution—***

*Identical Resolutions*—

The Chair observed that as according to Rule 72 of the Assembly Rules, only one resolution on the same subject could be taken up in a session, he was allowing one resolution for the removal of the Deputy Speaker given notice of by Thiru K.T.K. Thangamani to be moved and was refusing his consent to the other resolution given notice of by Thiru A. R. Marimuthu ... ... ... ... 92

***Rulings—***

It was for the Chair to give a ruling on any matter and if everyone were to act as a Presiding Officer, the conduct of the business of the House would become very difficult ... 412

COLLEGE(S)—

Meat Laboratory in Veterinary College, Madras, details ... ... ... ... ... ... 216

PAGES.

COLLEGE(S)—*cont.*

New—, Kanyakumari district ... ... ... 507–509
Professors (English and Tamil), pay scales ... ... 396
Women's College, Mayuram, degree courses ... 511

COMMITTEE(S)—

Estimates :

*Presentation of reports*—

'Agriculture Department' ... ... ... 526
'Information and Publicity Department' ... 427

CO-OPERATION—

Arkonam Co-operative Land Development Bank's Board of Directors, dissolution ... ... .. 513–515
Central House Mortgage Society, loan from L.I.C. 223–225
Thanjavur District Co-operative Central Bank, charges against Chairman ... ... ... ... 515–518

## D

DENNIS, THIRU N.—

Arasu cement, price rise ... ... ... ... 512–513
Boat Building Schemes, financial assistance from A.R.C. ... ... ... ... ... ... 367
Governor's Address (M) ... ... ... .. 587–592
New colleges, Kanyakumari district ... ... ... 507–509
Railway lines to Kanyakumari ... ... ... 377–379
Rice bran oil mill at Tiruvarur, working ... ... 221–223
Student-teacher ratio, Kanyakumari district ... 509–511
Technical institutions, new courses of study ... 52–54
Tiger breeding, deputation of officer to Dehra Dun for training in ... ... ... ... ... 392–393





PAGES.

DENNIS, THIRU N.—*cont.*

Tourism Development Corporation, tours to hill stations ... ... ... ... ... ... 71–72

DEPUTY SPEAKER, MR.—

Obituary reference :

Rajagopalachari, Thiru C., and Gopal, Thiru P, M.L.A. (R) ... ... ... ... ... 42–43
Removal from office of—(R) ... ... ... ... 176–182

DISEASES—

Cancer, constitution of research committee ... 359–362
Tuberculosis, financial assistance to poor patients ... 60–61

DIVERSION—

Deputy Speaker, removal from office (R) ... ... 191–197

DORAISAMY, THIRU S.—

Blood bank for Government Hospital, Tiruppur ... 363
Central House Mortgage Society, loan from L.I.C. 223–225
Governor's Address (M) ... ... ... ... 440–444
Physically handicapped, assistance to ... ... 217–219
Ponds, formation in Tiruppur panchayat union ... 219–221

DRAINAGE—

Scheme for Tiruvottiyur ... ... ... ... 207

## E

ELECTRICITY—

—Board rules, cases of violation ... ... ... 74–75
Electrification of villages, in North Arcot district ... 73–74
Madras Aluminium factory, power supply ... ... 225–228
Neyveli Thermal Power Station, second mine cutting ... ... ... ... ... ... 520–522

E.—cont.

PAGES.

ELECTRICITY—*cont.*

South Madras Electricity Supply Corporation, nationalisation ... ... ... ... ... 228–229

Sub-station at Periapalayam, upgrading ... ... 75

ETTIAPPAN, Thiru P.—

Governor's Address (M) ... ... ... ... 574–577

EXCISE—

Liquor sales, licensees ... ... ... ... 497–500

EXPUNCTION

Serious situation due to power cut (A.M.) ... ... 412

F

FACTORIES—

Soap, establishment ... ... ... ... ... 519–520

FAMINE—

Drought relief measures ... ... ... ... 63–65

FISHERIES—

Boat Building Schemes, financial assistance from A.R.C. ... ... ... ... ... ... 367

Mechanised boats, allotment for Kanyakumari district ... ... ... ... ... ... 62–63

FOODGRAINS—

Grams, cultivation in forest lands ... ... ... 524

Fair Price Shops, number ... ... ... ... 384–391

FRUITS—

Mangoes, export ... ... ... ... ... 380–384



G

PAGES

GANAPATHY, Thiru N.—

Deputy Speaker, removal from office (R) ... ... 140–147

Governor's Address (M) ... ... ... ... 281, 283–297

GANAPATHY, Thiru T.—

Governor's Address (M) ... ... ... ... 592–596

GANESAN, Thiru S.—

Panchayat Union Dispensaries in Thanjavur district, take-over by Government ... ... ... ... 59–60

H

HALF-HOUR DEBATE—

Opening of fair price shops ... ... ... 526–527

HANDE, Dr. H. V.—

Deputy Speaker, removal from office (R) ... ... 155–159, 165, 172, 174

Drainage scheme for Tiruvottiyur ... ... ... 207

Ex-Indian National Army Members, pension ... 504–507

Governor's Address (M) ... ... ... ... 430

Obituary reference :

Rajagopalachari, Thiru C., and Gopal, Thiru P., M.L.A. (R) ... ... ... ... ... 25–32

Reported remarks of Thiru M. G. Ramachandran, M.L.A., that the "House is dead" (Privilege Matter) ... ... ... ... ... 254–257, 258

Resolution for removal of Deputy Speaker (Point of order) ... ... ... ... ... ... 80, 81, 85, 86, 89

School syllabi, new scheme ... ... ... ... 49–52

PAGES

H.—*cont.*

HANDE, DR. H. V.—*cont.*

Serious situation due to power cut (A.M.) ... ... 401–404, 409, 411–412, 416, 417, 425, 426

Yarn, rise in price and consequent hardship to weavers in Tiruppur, Coimbatore and Salem (A.M.) ... ... ... ... ... ... 267–268, 278

HANDICAPPED—

Physically handicapped persons, assistance to ... 217–219

HOSPITALS AND DISPENSARIES—

Arthritis Unit, in Madras General Hospital, opening ... ... ... ... ... ... ... 358–359

Blood bank for Government Hospital, Tiruppur ... 363

Children's—, Egmore, particulars ... ... ... 214–215

Children's—, establishment at Vellore ... ... 215–216

General Hospital, Madras, out-patient department. 57–59

Headquarters Hospital, Tiruchirappalli, additional buildings ... ... ... ... ... ... 216

Panchayat union dispensaries in Thanjavur district, take over by Government ... ... ... ... 59–60

Stanley Hospital, Madras, expansion of wards ... 56–57

HOUSING—

Tenements, construction at Swatantra Nagar ... 355–358

INDUSTRIES—

Rice bran oil mill at Tiruvarur, working ... ... 221–223

IRRIGATION—

Betterment levy, Pennalurpet sub-taluk ... ... 500

Odaperi Canal, reservoir across ... ... ... 67

Wells in certain villages of Mettur taluk, pollution. 364–366



PAGES

J

JAIL(S)—

Central jail, Madurai, extension of buildings ... 217

JAMES, THIRU J.—

Deputy Speaker, removal from office (R) ... ... 147–152

Resolution for removal of Deputy Speaker (Point of Order) ... ... ... ... ... ... 88–89

JOTHI VENCATACHELLUM, THIRUMATHI—

Governor's Address (M) ... ... ... ... 567–574

JUDICIARY—

Honorary Magistrates, particulars ... ... ... 65–66

K

KAMATCHI, THIRU K.—

Governor's Address (M) ... ... ... ... 451–455

KANDASAMI, THIRU MANALI C.—

Governor's Address (M) ... ... ... ... 297–312

KANDASAMY, THIRU K.—

Governor's Address (M) ... ... ... ... 470–476

KANNAPPAN, THIRU M.—

Governor's Address (M) ... ... ... ... 583

KARUNANIDHI, DR. M.—

Deputy Speaker, removal from office (R) ... ... 177, 188

Governor's Address (M) ... ... ... ... 298, 301, 302, 306–307, 309, 310, 541–549, 551–553

Obituary reference:

Rajagopalachari, Thiru C. and Gopal, Thiru P., M.L.A. (R) ... ... ... ... ... ... 36–42

PAGES

K.—*cont.*

KARUNANIDHI, DR. M.—*cont.*

Reported remarks of Thiru M. G. Ramachandran, M.L.A., that the "House is dead" (Privilege Matter) ... ... ... ... ... ... 260–262
Yarn, rise in price and consequent hardship to weavers in Tiruppur, Coimbatore and Salem ... 279

KAVERIMANIAM, THIRU C.—

Governor's Address (M) ... ... ... ... 489, 527–532

KITTAPPA, THIRU N.—

Archaeological Department, Tamil Research Wing. 209
Arthritis Unit in General Hospital, opening ... 358–359
Cancer, constitution of research committee ... 359–362
Chillies, export ... ... ... ... ... 70–71
Drought relief measures ... ... ... ... 63–65
General Hospital, Madras, out-patient department. 57–59
High schools in Mayuram union area, opening ... 396–397
Liquor sales, licensees ... ... ... ... ... 497–500
Mangoes, export ... ... ... ... ... 380–384
Overbridge across railway line at Kumbakonam, construction ... ... ... ... ... ... 379
Professors (English and Tamil), pay scales ... ... 396
Women's College, Mayuram, degree courses ... 511

KOTHANDARAMIAH, THIRU K. S.—

Governor's Address (M) ... ... ... ... 596–600

KRISHNAMOORTHI, THIRU V.—

Governor's Address (M) ... ... ... ... 542–548
Reported remarks of Thiru M. G. Ramachandran, M.L.A., that the "House is dead" (Privilege Matter) ... ... ... ... ... ... 257



PAGES

K.—*cont.*

KUMARASAMI, THIRU K. N.—

Governor's Address (M) ... ... ... ... ... 561–564
Serious situation due to power cut (A.M.) ... ... 397–398
Yarn, rise in price and consequent hardship to weavers in Tiruppur, Coimbatore and Salem ... 279–280

L

LABOUR—

Coir industry, wages of employees ... ... ... 366

LANDS—

Assignment in Vanavasi Pakkanadu areas ... ... 366–377

LATHEEF, THIRU M. A.—

Deputy Speaker, removal from office (R) ... ... 109–110, 129–135, 189–190, 191
Governor's Address (M) ... ... ... ... 461–462, 476–477
Reported remarks of Thiru M. G. Ramachandran, M.L.A., that the "House is dead" (Privilege Matter) ... ... ... ... ... ... 264–265

LAW AND ORDER—

Thefts in city ... ... ... ... ... ... 207–209

LOK SABHA—

Seats, representation ... ... ... ... ... 500–504

M

MADHAVAN, THIRU S.—

Deputy Speaker, removal from office (R) ... ... 169
Resolution for removal of Deputy Speaker (Point of Order) ... ... ... ... ... ... 86–87

PAGES

*M*.—cont.

MADHAVAN, THIRU S.—*cont.*

Serious situation due to power cut (A.M.) ... ... 418–426

Yarn, rise in price and consequent hardship to weavers in Tiruppur, Coimbatore and Salem ... 273–278, 280

MANIYAN, THIRU P. S.—

S.Es. offices (Madurai and Ramanathapuram), location ... ... ... ... ... ... ... 380

MARIMUTHU, THIRU A. R.—

Deputy Speaker, removal from office (R) ... ... 110–116

Governor's Address (M) ... ... ... ... 430–431

Obituary reference :

Rajagopalachari, Thiru C. and Gopal, Thiru P., M.L.A. (R) ... ... ... ... ... 32–35

Yarn, rise in price and consequent hardship to weavers in Tiruppur, Coimbatore and Salem ... 270–272

MARUDACHALAM, THIRU N.—

Governor's Address (M) ... ... ... ... 429–430, 548–551, 553–554

MINES AND MINERALS—

Mineral deposits in Nilgiri hills, utilisation ... ... 511–512

Mineral deposits in Tirunelveli district, particulars. 511

MOHIDEEN, THIRUPPUR, THIRU A. M.—

Obituary reference :

Rajagopalachari, Thiru C. and Gopal, Thiru P. (R) ... ... ... ... ... ... 20–25

MOTION(S)—

Adjournment Motions :

Closure of WIMCO match factory, causing hardship to workers ... ... ... ... ... 524–526



PAGES

*M*.—cont.

MOTIONS—*cont.*

*Adjournment Motions*—cont.

Serious situation due to power cut ... ... ... 397–426

Yarn, rise in price and consequent hardship to weavers in Tiruppur, Coimbatore and Salem ... 267–280, 281,

Governor's Address, Motion of Thanks ... ... 283–329, 427–489, 527–600

MUNUSAMI, THIRU R. R.—

Children's specials, running ... ... ... ... 395–396

Meat laboratory at Veterinary College, Madras, details ... ... ... ... ... 216

Tenements, construction at Swatantra Nagar ... 355–358

Thefts, in city ... ... ... ... ... ... 207–209

N

NARAYANASAMY, THIRU MANNAI P.—

Governor's Address (M) ... ... ... 329, 433–434, 435–436

NATARAJAN, THIRU N. V.—

Closure of WIMCO match factory, causing hardship to workers (A.M.) ... ... ... ... ... 525–526

NEDUNCHEZHIYAN, DR. V. R.—

Deputy Speaker, removal from office (R) ... ... 159–175, 187

Governor's Address (M) ... ... ... ... 535

Obituary reference :

Rajagopalachari, Thiru C., and Gopal, Thiru P., M.L.A. (R) ... ... ... ... 2–10

PAGES

## O

OBITUARY REFERENCE—
Arunachalam, Thiru T. S., former M.L.A. ... ... 1-2
Lakshmi Ammal, Thirumathi V., former M.L.A. 1-2
Rajagopalachari, Thiru C., Gopal, Thiru P., M.L.A. (R) ... ... ... ... ... ... 2-43
Sadayan, Thiru M., former M.L.A. ... ... ... 1-2
Sriramulu, Thiru P. V., ex-M.L.A. ... ... ... 355
OFFICE(S)—
Superintendent Engineer's offices (Madurai and Ramanathapuram), location ... ... ... 380

## P

PALANISAMY, THIRU N. K.—
Closure of WIMCO match factory causing hardship to workers (A.M.) ... ... ... ... ... 525
Elementary schools, recruitment of teachers ... 209-213
Fair price shops, number ... ... ... ... 384-391
Governor's Address (M) ... ... ... ... 445-448
Joint Civil Services Council, functions ... ... 358
Lok Sabha seats, representation ... ... ... 500-504
Madras Aluminium Factory, power supply ... ... 225-228
Sunflower cultivation ... ... ... ... ... 68-69
Transport service, crash programme ... ... ... 393-395
PALANIVEL RAJAN, THIRU—
Estimates committee :
Report on Agriculture Department, presentation. 526
Report on "Information and Publicity Department", presentation ... ... ... ... 427
PAPERS LAID ON THE TABLE—
Administrative Reforms Commission's report ... 199
Agricultural Income-tax Act, 1955, notification ... 601



PAGES

P.—*cont.*

PAPERS LAID ON THE TABLE—*cont.*
Agricultural Produce Markets Act, 1959, notification ... ... ... ... ... ... ... 46
Bricks (Control of Price and Supply) Order 1966, notification ... ... ... ... ... 46
Cinemas (Regulation) Act, 1955, notifications ... 198, 330
Co-operative Land Development Banks Act, 1934, notification ... ... ... ... ... ... 44
District Municipalities Act, 1920, notifications ... 43, 44, 489
Entertainments Tax Act, 1939, notifications ... 45, 330
Estimates Committee, action taken by Government on the recommendation of the Committee's report on I & P. Department, report ... ... ... 490
Estimates Committee's report on Agriculture Department ... ... ... ... ... ... ... 601
Excise Act, 1971, notification ... ... ... 45
General Sales Tax Act, 1955, notifications ... ... 45, 489-490
Governor's Address to the Members of the Legislature (English and Tamil) ... ... ... ... 47
Hindu Religious and Charitable Endowments Act, 1959, notification ... ... ... ... ... 601
Inam Estates (Abolition and Conversion into Ryotwari) Act, 1963, notification ... ... ... 44
Indian Stamp Act, 1899, notifications ... ... 46, 47, 199
Khadi and Village Industries Board Act, 1959, notification ... ... ... ... ... 43
Labour Welfare Fund Act, 1972, notification ... 198,
Memoranda presented to President of India by Thiruvalargal M. G. Ramachandran and M. Kalyanasundaram and others and the reply of Government thereon sent to Prime Minister (Tamil) ... ... ... ... ... ... 490

PAGES.

*P.*—cont.

PAPERS LAID ON THE TABLE—*cont.*

Motor Vehicles Act, 1939, notification ... ... 601
Motor Vehicles Taxation Act, 1931, notifications ... 44, 45
Panchayats Act, 1958, notifications ... ... ... 45, 489
Proprietary Estates Village Service and Heriditary Village Officers (Repeal) Act, 1968, notification ... 46
Public Service Commission Regulations, 1954, notifications ... ... ... ... ... 44, 198, 199
Revenue Department Notification II-1 No. 2901 of 1972, notification ... ... ... ... ... 46
Societies Registration Bill, 1972 ... ... ... 47
Stage Carriages and Contract Carriages (Acquisitiou) Ordinance, 1973 ... ... ... ... ... 47
Stage Carriages and Contract Carriages (Acquisition) Ordinance, 1973, notification ... ... ... 601
Table of fees, notifications ... ... ... ... 46, 47
(Transferred Territory) Ryotwari Settlement Act, 1964, notification ... ... ... ... ... 198
Vigilance Commission fifth annual report ... ... 47
Warehouses Act, 1951, notification ... ... ... 46

PAULIAH, THIRU A.—
Governor's Address (M) ... ... ... ... 323–328 432–440

PENSION—
Indian National Army Members ... ... ... 504–507

PERUMAL, THIRU A. R.—
Deputy Speaker, removal from office (R) ... ... 152–155
Obituary reference :
Rajagopalachari, Thiru C., and Gopal, Thiru P., M.L.A. (R) ... ... ... ... ... 16–20



PAGES.

*P.*—cont.

PONDS—
Ponds, formation in Tiruppur Panchayat Union ... 219–221

PONNAPPA NADAR, THIRU R.—
Deputy Speaker, removal from office (R) ... ... 121–128, 169, 178.
Governor's Address (M) ... ... ... ... 427, 433, 434–435, 488
Obituary reference—Rajagopalachari, Thiru C. and Gopal, Thiru P., M.L.A. (R) ... ... ... 10–12
Reported remarks of Thiru M. G. Ramachandran, M.L.A., that the "House is dead" (Privilege Matter) ... ... ... ... ... ... 258–259
Resolution for removal of Deputy Speaker (Point of order) ... ... ... ... ... ... 82, 89
Serious situation due to power cut (A.M.) ... ... 399–401
Walk-out by certain Members before Governor's Address (Privilege Matter) ... ... ... ... 248–249
Yarn, rise in price and consequent hardship to weavers in Tiruppur, Coimbatore and Salem (A.M.) ... ... ... ... ... ... 268–270

PRIVILEGE MATTER—
Reported remarks of Thiru M. G. Ramachandran, M.L.A., that the "House is dead" ... ... 250–266
Walk-out by certain Members before Governor's Address ... ... ... ... ... ... 240–250

R

RAILWAYS—
Extension to Kanyakumari ... ... ... ... 377–379

RAJAMANICKAM, THIRU A.—
East Coast Road, road alignment ... ... ... 67–68

PAGES.

*R.*—cont.

RAJAMANICKAM, THIRU K.—
Governor's Address (M) ... ... .. ... 557-561

RAJARAM, THIRU K.—
Resolution for removal of Deputy Speaker (Point of order) ... ... ... ... ... ... 83-84

RAMAN, THIRU O. P.—
Serious situation due to power cut (A.M.) ... ... 412-418

REPATRIATES—
Reply to question on 21st August 1972 (Burma repatriates), correction (St.) ... ... 281

RESOLUTION—
Deputy Speaker, removal from office ... ... 91-198

ROAD(S)—
East Coast—, road alignment ... ... ... 67-68
Hosur and Denkanikota taluk, laying ... ... 54-55

S

SANGUMUTHU THEVAR, THIRU S.—
Coir industry, wages of employees ... .. ... 366
Hit and run accidents, prevent ... ... ... 229-230
Temples, refund of deposits of executive officers ... 237-240

SATHYAVANIMUTHU, THIRUMATHI—
Reply to question on 21st August 1972 (Burma repatriates), correction (St.) ... ... 281

SCHOOLS—
Elementary—, recruitment of teachers ... ... 209-219
Mayuram Union area, opening of High Schools ... 396-397
Student-teacher ratio, Kanyakumari district ... 509-511
Syllabi, new scheme ... ... ... ... ... 49-52



PAGES.

*S.*—cont.

SERVICES—
Civil Supplies department staff, regularisation ... 518-519
Joint Civil Services Council, functions ... ... 358
Statistical Inspectors, selection ... ... ... 61-62

SHANMUGAM, THIRU P. U.—
Governor's Address (M) ... ... ... ... 306, 309, 326, 327-328, 433, 458, 459, 460, 485, 487, 488

SIVAPRAKASAM, THIRU D. S. A.—
Drought relief, measures ... ... ... ... 63-65
Mineral deposits in Tirunelveli district, particulars. 511
Tuberculosis, financial assistance to poor patients ... 60-61

SOMASUNDARAM, THIRU N.—
Governor's Address (M) ... ... ... ... 580-583

SOUNDARAPANDIAN, THIRU P.—
Central jail, Madurai, extension of buildings ... 217
Grams, cultivation in forest lands ... ... ... 524
Headquarters hospital, Tiruchirappalli, additional buildings ... ... ... ... ... ... 216
Lok Sabha seats, ... ... ... ... ... 500-504
Mineral deposits in Nilgiri hills, utilisation ... ... 511-512
Neyveli Thermal Power Station, second mine cutting ... ... ... ... ... ... 520-522
Soap factories, establishment ... ... ... ... 519-520
South Madras Electricity Supply Corporation, nationalisation ... ... ... ... ... 228-229
Tiger breeding, deputation of officer to Dehra Dun for training in— ... ... ... ... ... 391-392

PAGES.

*S.*—cont.

SUBBIAH, Thiru A. R.—
Governor's Address (M) ... ... ... ... 466–470

SUBRAMANIAM, Thiru S. K.—
Governor's Address (M) ... ... ... ... 583–587

SUNDARABARATHI, Thiru Sowdi S.—
Governor's Address (M) ... ... ... ... 564–567

SUNDARAM, Thiru O. N.—
Governor's Address (M) ... ... ... ... 479–486, 487.

SUPPU, Thiru K.—
Civil Supplies department staff, regularisation ... 518–519

SURENDRAN, Thiru M.—
Governor's Address (M) ... ... ... ... 431, 456–461, 463–466.
Irrigation wells in certain villages of Mettur taluk, pollution ... ... ... ... ... ... 364–366
Lands in Vanavasi-Pakkanadu areas, assignment 367–377

SWAMIDHAS, Thiru A.—
Governor's Address (M) ... ... ... ... 328–329, 536–542.
Mechanised boats, allotment for Kanyakumari district ... ... ... ... ... ... 62–63

T

TECHNOLOGY—
New courses of study ... ... ... ... ... 52–54

TEMPLES—
Executive officers, refund of deposits ... ... 237–240
Idols, theft ... ... ... ... ... ... 75–78



PAGES.

*T.*—cont.

THANGAMANI, Thiru K. T. K.—
Deputy Speaker, removal from office (R) .. ... 93–110, 169, 182–190
Drought relief, measures ... ... ... ... ... 63–65
Governor's Address (M) ... ... ... ... ... 427–428
Opening of fair price shops, half hour discussion, request for ... ... ... ... ... ... 526–527
Idols, theft ... ... ... ... ... ... 75–78
Obituary reference :
Rajagopalachari, Thiru C. and Gopal, Thiru P., M.L.A. (R) ... ... ... ... ... 12–15
Reported remarks of Thiru M. G. Ramachandran, M.L.A., that the "House is dead" (Privilege Matter) ... .. ... ... ... ... 259–260
Resolution for removal of Deputy Speaker (Point of order) ... ... ... ... ... ... 81, 82, 83, 84, 85, 90
Serious situation due to power cut (A.M.) ... ... 398–399
Thanjavur District Co-operative Central Bank, charges against Chairman ... ... ... ... 515–518
Walk-out by certain Members before Governor's Address (Privilege Matter) ... ... ... ... 241–242, 243, 247, 248
Yarn, rise in price and consequent hardship to weavers (A.M.) ... ... ... ... ... 272–273

THIRUVENGADAM, Thiru Thoppur—
Governor's Address (M) ... ... ... ... 318–323

THYAGARAJAN, Thiru E. S.—
Governor's Address (M) ... ... ... ... 600
Obituary reference :
Rajagopalachari, Thiru C. and Gopal, Thiru P., M.L.A. (R) ... ... ... ... [illegible]

T.—*cont.*

TIGERS—

*See* Wild Life

TOURISM—

Tourism Development Corporation tours to hill stations ... ... ... ... ... ... 71–72

TRANSPORT AND COMMUNICATIONS—

Children's specials, running ... ... ... ... 395–396

City and Express bus service, crash programme ... 393–395

Express buses, new colour scheme ... ... ... 230–237

## V

VEERASWAMY, THIRU N.—

Reported remarks of Thiru M. G. Ramachandran, M.L.A., that the "House is dead" (Privilege Matter) ... ... ... ... ... ... 251–254

Resolution for removal of Deputy Speaker (Point of order) ... ... ... ... ... ... 83

VENKATASWAMY, THIRU B.—

Governor's Address (M) ... ... ... ... 577–580

Roads, laying in Hosur and Denkanikota taluk ... 54–55

VEZHAVENDAN, THIRU KA.—

Betterment levy, Pennalurpet sub-taluk ... ... 500

Deputy Speaker, removal from office (R) ... ... 116–121

Electricity sub-station, Periyapalayam upgrading ... 75

Odaperi Canal, reservoir across— ... 67





## W

WAHAB, THIRU K. A.—

Arkonam Co-operative Land Development Bank's Board of Directors, dissolution ... ... ... 513–515

Bridge across Pamban ... ... ... ... ... 213–214

Children's Hospital, Egmore, particulars ... ... 214–215

Children's Hospital, establishment at Vellore ... 215–216

Electricity Board, R.C.C. poles manufacture ... 522–524

Electricity Board Rules, violation ... ... ... 74–75

Electrification of villages, in North Arcot district ... 73–74

Express buses, new colour scheme ... ... ... 230–237

Governor's Address (M) ... ... ... ... 312–318

Honorary Magistrates, particulars ... ... ... 65–66

Stanley Hospital, Madras, expansion of wards ... 56–57

Statistical Inspectors, selection ... ... ... 61–62

WILD LIFE—

Tigers' breeding, deputation of officer to [illegible] Dum for training in ... ... ... ... 331–3[illegible]

61590

D

V211,31 N73

31N73-3032

## LIST OF AGENTS FOR THE SALE OF TAMIL NADU GOVERNMENT PUBLICATIONS.

### IN MADRAS CITY.

Messrs. Account Test Institute, Egmore, Madras-8.
The City Book Co., Mylapore, Madras-4.
Messrs. Higginbothams (Private) Limited, Madras-2.
Messrs. New Century Book House (Private) Limited, Madras-2.
Messrs. P. Varadachari & Co., Madras-1.
Messrs. C. Subbiah Chetty & Sons., Madras-5.
Sri S. S. Srinivasaraghavan, Royapettah, Madras-14.
The Educational Agencies, Book-sellers, Madras-1.
The Universal Book House, Moore Market, Madras-3.
Messrs. C. Sitaraman & Co., Madras-14.
Messrs. Mohan Pathipagam and Book Depot, Madras-5.

### IN MUFASSAL OF TAMIL NADU.

Sri E. M. Gopalakrishna Kone, Madurai, Madurai district.
Sri A. Venkatasubban, Vellore, North Arcot district.
Messrs. Bharatha Matha Book Depot, Thanjavur, Thanjavur district.
Messrs. P. V. Nathan & Co., Kumbakonam, Thanjavur district.
Messrs. Appar Book Stall, Thanjavur.
Messrs. P. N. Swaminathasivam & Co., Pudukkottai, Tiruchirappalli district.
Messrs. S. Krishnaswami & Co., Tiruchirappalli district.
Messrs. Palaniappa Brothers, Tiruchirappalli district.
Sri S. R. Subramania Pillai, Tirunelveli, Tirunelveli district.
Messrs. Nellai Puthaga Nilayam, Book-sellers, 10, Thana Musa Buildings, Tirunelveli Junction.
Sri B. Aruldoss, Villupuram Town, South Arcot district.
Sri V. B. Ganesan, Villupuram, South Arcot district.
Messrs. Vasantham Stores, Book-sellers, Cross Cut Road, Coimbatore.
Messrs. Mercury Book Company, 223, Raja Street, Coimbatore.
Sri S. M. Jagannathan, Book-sellers and Publishers, Nagercoil, Kanyakumari.
Messrs. A. K. Chandriah Chettiar and Sons, Salem-1.
Messrs. Meenakshi Pathippagam, Pudukkottai.
Messrs. K. V. Narayana Iyer and Sons, Dindigul, Madurai district.
Messrs. Balaji Book House, Vellore, North Arcot district.
Messrs. Jayakumari Stores, Nagercoil, Kanyakumari district.
Messrs. Baby Stores, Book-sellers, Villupuram, South Arcot district
Messrs. Dinamani Stores, Coimbatore-18.
Messrs. Bharathi Puthaga Nilayam, Publishers and Book-sellers, 1-B, Town Hall Road, Madurai-1.

### IN OTHER STATES.

Messrs. Jain Book Agencies, New Delhi-1.
Messrs. International Book House, Trivandrum.
Messrs. Firma K. L. Mukhopadhyay, Calcutta-12.
Messrs. Book Links Corporation, Narayanaguda, Hyderabad-29.
Messrs. The Book Syndicate, Hyderabad-1.
Messrs. Labour Law Publications, Hyderabad.

PUBLISHED UNDER RULES 234 AND 267 OF THE TAMIL NADU LEGISLATIVE ASSEMBLY RULES AND PRINTED BY THE DIRECTOR OF STATIONERY AND PRINTING, MADRAS.